# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

SECOND SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**6th, 7th, 8th, 9th, 11th and 12th March 1963.**

**Volume IX (Nos. 1 to 6).**

TABLE OF CONTENTS.


*Wednesday, 6th March 1963.*

| | | PAGES |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. | 1–20<br>100–112 |
| II | Calling attention to the plight of goldsmiths due to Gold Control Regulations .. .. .. | 20–23 |
| III | Point of Information re: State Administration Report and the Budget of the State Electricity Board .. | 22–23 |
| IV | General Discussion on the Budget for 1963–64—*cont.* | 23–98 |
| V | Papers laid on the table of the House .. .. .. | 99 |

*Thursday, 7th March 1963.*

| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. | 113–135 |
| II | General Discussion on the Budget for 1963–64—*cont.* | 135–220 |
| III | Papers laid on the table of the House .. .. .. | 220 |

*Friday, 8th March 1963.*

| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. | 221–244 |
| II | Presentation of the Report of the Committee on Estimates .. .. .. .. .. .. | 244 |
| III | General Discussion on the Budget for 1963–64—*cont.* | 245–327 |
| IV | Papers laid on the table of the House .. .. .. | 328 |

*Saturday, 9th March 1963.*

| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. | 329–347 |
| II | Voting on Demands for Grants for 1963–64— | |
| | (1) Demand VI—State Legislature .. .. | 347–411 |
| | (2) Demand VII—Elections .. .. .. | |
| | (3) Demand VIII—Head of State, Ministers and Headquarters staff .. .. | |
| | (4) Demand XXXII—Pensions .. .. .. .. | |
| III | Papers laid on the table of the House.. .. .. | 412 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 6th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### பாடப் புத்தகங்கள் (வெளியீடு)

*133 கேள்வி.—**திரு. ஆர் அப்துல் கலீல்:** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61, 1961-62-ம் ஆண்டுகளில் அரசினரால் வெளியிடப்பட்ட ஆங்கில பாட புத்தகத்திற்காக செலவுத் தொகை எவ்வளவு?

(இ) விற்பனை மூலமாக கிடைத்த தொகை எவ்வளவு?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ) 1960-61-ல் ரூ. 2,61,049-80 ந. பை. 1961-62-ல் ரூ. 2,79,176-11 ந.பை.

(இ) 1960-61-ல் ரூ. 2,30,327-04 ந. பை. 1961-62-ல் ரூ. 3,27,309-17 ந. பை.

*134 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சர்க்காரால் வெளியிடப்படும் பள்ளிக்கூடத்திற்கான பாட புத்தகங்கள் சர்க்கார் அச்சகமன்னியில் வேறு தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுகின்றனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes some books for the S.S.L.C. Standard.

**திரு. கே. மூக்கையா தேவர்:** அரசாங்கம் அச்சடிக்கும் பாடப் புத்தகங்கள் மிகவும் காலதாமதமாகக் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த ஆண்டிலாவது புத்தகங்களைக் காலதாமதம் இல்லாமல் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதற்கு முன்பு காலதாமதமாகக் கொடுக்கப்பட்டது என்ற தகவல் என்னிடம் இல்லை. இந்த ஆண்டு தாமதம் இன்றிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

PAGES

*Monday, 11th March 1963.*

| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. | 415–433 |
| II | Privilege Matter *re*: a Report in the 'Viduthalai' .. | 433–437 |
| III | Calling attention to plight of handloom weavers .. | 437–439 |
| IV | Voting on Demands for Grants for 1963-64—*cont.* | |
| | (1) Demand XVI—Agriculture .. .. ..<br>(2) Demand XVIII—Animal Husbandry .. ..<br>(3) Demand XXXIX—Capital Outlay on Agriculture<br>(4) Demand XLVI—Capital Outlay on Schemes of Government Trading .. .. .. .. | 439–500 |
| V | Papers laid on the table of the House .. .. .. | 500–501 |

*Tuesday, 12th March 1963.*

| | | |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. | 503–516 |
| II | Privilege Matter *re*: Report in the 'Viduthalai' .. .. | 516–518 |
| III | Announcements—Business of the House .. .. .. | 518 |
| IV | Voting on Demands for Grants for 1963-64—*cont.*<br>Demand XII—Police .. .. .. .. .. | 518–580 |
| V | Papers laid on the table of the House .. .. .. | 580–581 |


132881 D N21,3'1968 A1637

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A. M./Ad. Motion .. .. .. | Adjournment Motion. |
| Ann. .. .. .. .. | Announcement. |
| B.O.H. .. .. .. .. | Business of the House. |
| C.A. .. .. .. .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. .. .. .. .. | Calling Attention Statement. |
| Consid. .. .. .. .. | Consideration stage of a Bill.<br>This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. .. .. .. . | Consideration of clauses of a Bill. |
| D.E.E. .. .. .. .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. .. .. .. .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. .. .. .. .. | Demands for Supplementary Grants. |
| G.A. .. .. .. .. | Governor's Address. |
| G.D. .. .. .. .. | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. .. .. | Half-hour Discussion. |
| Int. .. .. .. .. | Introduction stage of a Bill. |
| L.A. .. .. .. .. | Legislative Assembly. |
| L.C. .. .. .. .. | Legislative Council. |
| M. .. .. .. .. | Motion. |
| P.M. .. .. .. .. | Privilege Motion. |
| R/Res. .. .. .. .. | Resolution. |
| St. .. .. .. .. | Statement. |

[6th March 1963

**திரு. வீ. எஸ். எஸ். மணி :** சார், '1942-43' என்ற தலைப்பில் சர்க்கார் வெளியீடு ஒன்று வெளியிட்டிருக்கிறதா ? அதிலே ஆளும் கட்சியாரின் முன்கால வன் செயல் நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் கூறப்பட்டிருப்பதன் காரணமாக அதைத் தடை செய்ய உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடம் ஒன்றும் தகவல் இல்லை. அதிலே என்ன எழுதியிருக்கிறது என்பதைப் படித்துப் பார்த்தால்தான் அதைப் பற்றிச் சொல்ல முடியும்.

**திரு. கே. மூக்கையாத் தேவர் :** சர்க்காரே பாடப் புத்தகங்களை அச்சிட்டுக் கொடுப்பது லாபகரமாக இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** லாபகரமாக இருக்கவேண்டுமென்று அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. அதற்காக அரசாங்கம் நஷ்டப்படவும்கூடாது. மாணவர்களுக்குப் புத்தகங்கள் நயமாகக் கிடைக்க வேண்டுமென்பதுதான் நோக்கம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இப்போது ஆங்கிலத்தில் மட்டும் பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளியாகின்றன. மற்ற எல்லாப் பாடப் புத்தகங்களையும் அரசாங்கமே அச்சிட்டு தனிப்பட்ட கம்பெனிக்காரர்கள் ஏமாற்றுவதைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ்ப் பாடப் புத்தகங்கள் கூட அரசாங்கத்தால் அச்சிடப்பட்டு வருகின்றன.

**திரு. எம். எஸ். மணி :** சென்ற ஆண்டில் அரசாங்கம் அச்சிட்ட பாடப் புத்தகங்களில் நிறைய அச்சுப் பிழைகள் இருந்தன என்ற புகார் அரசாங்கத்துக்கு வந்துள்ளதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, அரசாங்கம் பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதற்கு எந்த முறை வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒவ்வொரு பாடத்தைப் பற்றியும் எழுதத் தனிப்பட்டவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் எழுதிக் கொடுத்த பிறகு மேற்கொண்டு பரிசீலனை செய்யப்படுகிறது. இதற்குமேல் மற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது பற்றிய விவரங்கள் வேண்டுமானால் தனியாக கேள்வி கேட்டால் விவரங்கள் தருகிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அரசாங்கத்தார் அச்சிடும் பாடப் புத்தகங்களில் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிய விளக்கத்தை மாணவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளியிடப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தற்போது பாடப் புத்தகங்கள் தான் சர்க்காரால் அச்சிடப்பட்டு வருகிறது. சரித்திரம் அச்சடிக்கப்படும்போது சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிய விவரங்கள் இடம் பெறும்.



6th March 1963]

**திரு. கே. ஏ. மதியழகன் :** கடந்த ஆண்டு சர்க்காரால் வெளியிடப்பட்ட பாடப் புத்தகங்கள் பல மாதங்கள் மாணவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று கூறப்பட்டது. அந்தக் குறையைப் போக்க இந்த ஆண்டு என்ன திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். **பக்தவத்சலம் :** இதைப் பற்றி முன்பே ஒரு உப கேள்விக்கு விடையளித்தேன். போன ஆண்டு புத்தகம் வெளிவரத் தாமதமாயிற்று என்ற தகவல் இல்லை. இப்போது தாமதமின்றி வழங்குவதற்கு முன்னதாகவே அச்சிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** இந்தப் புத்தகங்கள் யார் மூலம் ஒவ்வொரு நகரத்திலும் விற்பனை செய்யப்படுகிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சர்க்கார் அச்சிடும் புத்தகங்களை விற்பனை செய்வதற்காக டெண்டர்கள் கோரப்படுகின்றன. யார் குறைந்த கமிஷனைப் பெற்றுக்கொண்டு விற்பனை செய்ய முன் வருகிறார்களோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. கே. மூக்கையாத் தேவர் :** சர்க்கார் அச்சிடும் புத்தகங்களை ஏஜெண்டுகள் மூலமாக விற்பனை செய்வதன் காரணமாகக் கால தாமதமாவதோடு விலையும் அதிகமாகிவிடுகிறது. ஆகவே, இந்தப் புத்தகங்களை விற்பனை செய்யும்போது நேரடியாகப் பணத்தை வாங்கிக்கொண்டோ அல்லது கல்வி இலாகாவில் உள்ள டெபுடி இன்ஸ்பெக்டர், கல்வி அதிகாரி மூலமாகவோ கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** என்னுடைய விருப்பம் அவ்வாறு செய்யவேண்டுமென்பதுதான். கல்வி அதிகாரிகள் மூலமாகக் கொடுப்பது பற்றிப் பரிசீலித்ததில் அதிலே மேலும் கால தாமதமும், சிரமங்களும் ஏற்படும் என்ற காரணத்தால் கைவிடப்பட்டது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அரசாங்கம் அச்சடிக்கும் பாடப் புத்தகங்கள் பள்ளிக்கூடங்களில் சரியானபடி விநியோகிக்கப்படவில்லை என்ற புகார் இருக்கும் காரணத்தால், அரசாங்கத்தின் கொள்கைப்படி பாடப் புத்தகங்களை அச்சிடுவதில் லாபம் அடையும் நோக்கம் இல்லையென்ற காரணத்தால் பாடப் புத்தகங்களை அச்சிடத் தனிப்பட்டவர்களுக்கே உரிமை கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கத்தின் கருத்தையும், கொள்கையையும் நிறைவேற்ற அரசாங்கம் இப்போது கையாளும் முறையே சிறந்ததாக இருக்கிறது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தனியார் பாடப் புத்தகங்களை அச்சிடுவதன் காரணமாக, ஒவ்வொரு பள்ளியிலும் ஒரே வகுப்புக்கு

வேறு வேறு பாடப் புத்தகங்கள் இருப்பதன் காரணமாக, அரசாங்கமே எல்லாப் பாடப் புத்தகங்களையும் அச்சிட முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் பாடப் புத்தகங்களை அச்சிட்டு வழங்க முன்வந்ததற்கு அதுவும் ஒரு காரணமாகும்.

**புலவர் கா. கோவிந்தன் :** புத்தகம் எழுதும் ஆசிரியர்களுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது? வெளி அச்சகத்தில் அச்சிடக் கொடுத்த நேரத்தில் முதல் ஆயிரத்திற்கு ஒரு பாரத்திற்கு எவ்வளவு அச்சுக் கூலி கொடுக்கப்பட்டது? காகிதத்தை அரசாங்கம் கொடுத்திருந்தால் அப்போது அச்சுக் கூலி எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இங்கிலீஷ் ரீடர், 5-வது ஸ்டாண்டர்டு—'ரெம்யூனரேஷன் டு தி ஆதர்' 1,000 ரூபாய் ஆர்டிஸ்டு 485 ரூபாய். இங்கிலீஷ் ரீடர் 6-வது ஸ்டாண்டர்டு—'ரெம்யூனரேஷன் டு தி ஆதர்' 1,000 ரூபாய். ஆர்டிஸ்டுக்கு 235 ரூபாய். இதுதான் என்னிடம் இருக்கும் தகவல்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்தப் பாடப் புத்தகங்களை அச்சிட ஸ்வீடன் நாட்டிலிருந்து 12 லட்சம் டன் காகிதம் இலவசமாகக் கிடைப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறதே. அந்தக் காகிதங்கள் வரத் தொடங்கிவிட்டதா ?

**கனம். திரு. எம். பக்தவத்சலம் :** அந்தக் காகிதத்தில் ஓரளவு பங்கு இந்த மாகாணத்துக்கும் கிடைக்கும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பாடப் புத்தகங்களைச் சர்க்கார் அச்சகங்களில் அச்சிடுவதோடு வேறு தனியார் அச்சகங்களிலும் அச்சிடுவதாகக் கூறினார்கள். அப்படி அச்சிடுவதற்குக் காரணம் சர்க்கார் அச்சகத்தில் வசதி இல்லாதது காரணமா? அல்லது தனியார் அச்சகங்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற நோக்கமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சர்க்கார் அச்சகத்தில் அதிக வேலை இருக்கிறது. இப்போதுகூட சர்க்கார் அச்சகத்தில் பாடப் புத்தகங்களை அச்சடிக்க முடியாது என்றுதான் சொன்னார்கள். நான்தான் வற்புறுத்தி சர்க்கார் அச்சகத்தில்தான் அச்சடிக்க வேண்டுமென்றுகூறி குறித்த காலத்தில் வெளிவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயினும் எல்லாப் பாடப் புத்தகங்களையும் சர்க்கார் அச்சுக் கூடத்திலேயே அச்சடிக்க வேண்டுமென்றால் காலதாமதம் ஏற்படுமாதலால், தனியார் அச்சகங்களிலே அச்சிடக் கொடுக்கப்படுகிறது. இப்போதுகூட 'நான் டீடெயில்டு' புத்தகங்கள்—'கம்பானியன் டு தி இங்கிலீஷ் டெக்ஸ்ட் புக் ஃபார் தி எஸ். எஸ். எல். சி. எக்ஸாமினேஷன்' என்பது தனியார் அச்சகத்திலே அச்சடிக்கப்பட்டிருக்கிறது. தனியார் அச்சகத்திற்கு வேலை கொடுக்கவேண்டுமென்ற அக்கறை இந்த அரசாங்கத்துக்கு இல்லை.



**திரு. கே. ஏ. மதியழகன் :** நம் அச்சகத்தை விரிவுபடுத்தி, வருகிற ஆண்டுகளில் நாமே செய்யுமாறு நிலைமையை ஏற்படுத்தக் கூடாதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அச்சகத்தை எவ்வளவு தூரம் விரிவு படுத்தமுடியுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது. வேண்டிய இயந்திரங்கள் எல்லாம் கிடைப்பது அரிதாயிருக்கிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** சர்க்காரால் வெளியிடப்படும் பாட புத்தகங்களை ஏஜெண்டுகள்மூலம் விற்பனை செய்து அவர்களுக்கு கமிஷன் கொடுப்பதற்குப்பதில் பள்ளிகளுக்கே நேராக அனுப்பி அதன்மூலம் கிடைக்கும் லாபத்தை மதிய உணவிற்கு பயன் படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சர்க்காரே நேராக விற்பனை செய்வது என்றாலும் அதற்கும் செலவாகும். முன்பு ஒரு உப கேள்விக்கு விடையளித்தேன். ஏஜெண்டுகளுக்குக் கொடுக்காமல் நாமே விற்கலாம் என்பதுதான் என் விருப்பமும். அதிலும் தாமதம் ஆகலாம். ஆகவே ஏஜெண்ட்கள் மூலம் கொடுப்பது நலம் என்று கருதி அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று முன்பே கூறினேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** தனியார் துறைக்கு இப் பாடப் புத்தகங்களை அச்சிட ஒதுக்கும்போது, கோவை போன்ற மாவட்டங்களில் கூட்டுறவு அச்சகங்கள் செம்மையாக நடைபெறுகின்றன. இந்தக் கூட்டுறவு அச்சகங்களுக்கு மட்டும் தனிச் சலுகை கொடுத்தால் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கூட்டுறவு அச்சகம் எங்கேயோ ஒரு இடத்தில் கோவையில் இருக்கிறது என்றால் அவர்களுக்கு எவ்வளவு வேலைகள் இருக்கின்றன, இதை அச்சிட முடியுமா, அச்சு இருக்கிறதா, இயந்திரங்கள் இருக்கின்றனவா என்றெல்லாம் பார்க்க வேண்டும்.

**திரு. ஏ. ஆறுமுகம் :** வருங்கால மன்னர்களாகிய மாணவர்கள் நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டி, அவர்களுக்கு தேசத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை சரித்திரப் பாடப் புத்தகங்களாக எழுத அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சரித்திரம் எழுதுகிறபோது அதையெல்லாம் பார்த்துக்கொள்ளலாம்.

**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** ஏழை மாணவர்களுக்கு புத்தகங்களை இலவசமாக வழங்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஸ்வீடன் நாட்டிலிருந்து காகிதம் இலவசமாக வருகிறது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், ஒரு கேள்வியில். அப்படி இலவசமாக வருகிற காகிதத்தை வைத்துக்கொண்டு ஓரளவு இலவசமாக ஏழை மாணவர்களுக்கு வழங்குவது என்பதுதான் கருத்து.

[6th March 1963

*Package Scheme*

*135 Q.—SRI N. RAJANGAM (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the details of the "Package Scheme" in force in the district of Thanjavur;

(b) what are the achievements in agricultural production as a result of the scheme; and

(c) whether there is any proposal to extend the scheme to any other district?

THE HON. SRI P. KAKKAN: (a) to (c) A paper * is placed on the table of the House.

SRI C. CHIRANJEEVALU NAIDU: In reply to clause (c) of the question it is stated that there is no proposal at present to extend the package scheme to other districts? May I know what are the reasons for the same?

THE HON. SRI P. KAKKAN: On account of emergency, sir.

**திரு. நா. ராஜாங்கம்:** கடலை போட்டு பயிராக்கும் முறை இந்த மாதத்திலே ஆரம்பமாக இருக்கிறது. ஆகவே பாக்கேஜ் திட்டமும் இந்த மாதமே ஆரம்பமாகுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** தனிக் கேள்வி வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன்:** தஞ்சை தீவிர சாகுபடித் திட்டத்தைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் அளித்த விடையையொட்டி பத்திரிகைகள் அந்தத் திட்டத்தை ஆதரிக்காது தலையங்கங்கள் எழுத, இத்துறை டயரக்டர் அவர்கள் கனம் அமைச்சர் அவர்கள் இம்மன்றத்தில் கொடுத்த புள்ளிவிவரம் சரியானது அல்ல என்றும், ஆகவே அதை வைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை எதிர்க்க வேண்டாமென்று ஒரு இடத்தில் பேசியிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரம் தவறு அல்லது டயரக்டர் அவர்கள் கொடுத்த ஸ்டேட்மென்ட் தவறு என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகிற புள்ளிவிவரத்தைத்தான் கனம் அமைச்சர் இந்த மன்றத்தில் சொல்வார்கள். சில பத்திரிகைகளுக்கு சில சட்டங்கள் பிடிக்காது, புள்ளிவிவரங்கள் தெரியாது, ஆகவே அதைப் பொருட் படுத்துவதற்கில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** இத்திட்டத்தின்கீழ் ஏக்கருக்கு ரூ. 125 கொடுக்கப்பட்டு வருவதை மேலும் உயர்த்திக் கொடுக்க உத்தேசம் இருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** இப்போது அந்த யோசனை இல்லை.

* Printed as Appendix I on pages 100-107



6th March 1963]

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** பாக்கேஜ் திட்டத்தை வட ஆற்காடு மாவட்டம் வரை விஸ்தரிக்க எண்ணம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்:** வட ஆற்காடு இதிலே வரவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன்:** தஞ்சை தீவிர சாகுபடித் திட்டம் சம்பந்தமாக நேற்றைய தினம் உணவு இலாகாவினர் அமெரிக்க போர்ட் நிறுவன நிபுணர்களிடம் நடத்திய விவாதத்தின் சுருக்கத்தை கனம் அமைச்சர் அவர்கள் தரமுடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** நேற்று அவர்களிடம் நடத்திய விவாதத்தின் சாராம்சம் எனக்கு வரவில்லை. வந்த பின்னர்தான் தெரியும்.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** இத்திட்டம் மூலம் 25 சதவிகிதம் விளைச்சல் அதிகரிக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த விகிதாசாரப்படி இப்போது உயர்ந்திருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** 1960-61-ல் 1377 பவுண்டு, ஒரு ஏக்கருக்கு உற்பத்தியாகி இருக்கிறது. 1961-62-ல் 1699. பர்சென்டேஜ் பார்க்கிறபோது 23.4 ஆகிறது. இதர நான்-இன்டென்ஸிவ் ஏரியா கண்ட்ரோல் ஏரியாவில் அதிக விளைச்சல் வர இருக்கிறது.

**திரு. கோ. சி. மணி:** இத்திட்டத்தின் கீழ் தருகிற கடனுக்கு விவசாயிகள் மனுப் போடுகிறபோது அவர்களிடம் அந்நேரத்தில் குத்தகைச் சீட்டு இல்லை என்றால் அதனால் கடன் கொடுப்பதற்கில்லை என்று அதிகாரிகள் நிராகரிக்கிறார்களே. குத்தகை சீட்டு இன்றி, அரசாங்கம் விசாரணை செய்து கொடுக்கும் அதிகாரத்தை அங்குள்ள அதிகாரிகளுக்கு வழங்க உத்தேசமுண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்:** தனிக் கேள்வி வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன்:** அமைச்சர் அவர்கள் விடை அளிக்கிறபோது பத்திரிகைகள் தவறாக புள்ளிவிவரம் தரும் என்று சொன்னார்கள். டைரக்டர் அவர்கள் மன்றத்தில் கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரம் சரியானது அல்லவென்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் சொல்கிறேன். அவர்கள் சொன்னது தவறு அல்லது கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரம் தவறு என்பதைத் தெளிவாக்க வேண்டும்.

**கனம் திரு. பூ. கக்கன்:** அதிகாரிகள் கொடுக்கும் புள்ளிவிவரத்தைத்தான் கனம் மந்திரி இந்த சபையில் சொல்வார்கள்.

**புலவர் கா. கோவிந்தன்:** அதிகாரிகள் கொடுக்கும் புள்ளிவிவரத்தைத்தான் கனம் அமைச்சர் அவர்கள் இங்கு சொல்வதாகச் சொல்லுகிறார்கள். அவர்களே தந்து விட்டு அமைச்சர் அவர்கள் இங்கு சொன்ன பிறகு இந்த மன்றத்தில் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரம் சரியானது அல்ல என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**கனம் சபாநாயகர்:** பத்திரிகைக்காரர் தப்பாக போட்டிருப்பார் என்று சொல்கிறார்கள்.

**புலவர் கா. கோவிந்தன் :** அந்தச் செய்தியாவது தவறு என்று கூறட்டும்.

**கனம் திரு. கு. காமராஜ் :** தனிக் கேள்வி போட்டால் எந்த அதிகாரி என்ன சொன்னார் என்று பரிசீலனை செய்து அப்புறம் சொல்வார்கள்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்தத் தீவிர உற்பத்தித் திட்டத்தை காவேரி நதி பாய்கிற டெல்டா ஏரியா பூராவிற்கும் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா? அப்படியானால் சிதம்பரம் தாலுகாவிற்கு இத்திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** காவேரி நதி பாயும் பகுதி பூராவும் அல்ல. தஞ்சையை பொறுத்தவரையில் தஞ்சை ஜில்லா பூராவும் இதை விஸ்தரிக்க ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** நெல்லுக்கு பாக்கேஜ் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். மணிலாக்கொட்டை, கரும்பு இவைகளுக்கு பாக்கேஜ் திட்டம் இருக்கிறது. நீலகிரி ஜில்லாவில் உருளைக்கிழங்கு நசித்து வரும் நிலையில் இருப்பதால் உருளைக் கிழங்கிற்கு அவசர அவசியமாக இந்த பாக்கேஜ் திட்டத்தை கொண்டு வர இந்த ஆண்டே பரிசீலிப்பார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** உருளைக்கிழங்கு உற்பத்தி பாக்கேஜ் திட்டத்தின் கீழ் வரவில்லை. உருளைக்கிழங்கு உற்பத்திக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ, உரம் கொடுப்பது, மருந்து கொடுப்பது போன்றவற்றைக் கொடுத்து அதற்காக எவ்வளவு செய்ய முடியுமோ அதை அரசாங்கம் செய்யும்.

**திரு. கோ. சி. மணி :** இன்று விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கி அது அடைபடாமல் இருந்தால் இத்திட்டத்தின் கீழ் கொடுக்கிற கடன், அந்தத் தொகையை அடைத்த பிறகு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அத் தொகையை கொடுக்க இருக்கிற கடனில் பிடித்துக் கொண்டு மீதியைக் கொடுக்க சட்டத்தில் வகை இருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** சட்டத்தில் அதற்கு வகை இருக்கிறதா என்ற தகவல் என்னிடம் இல்லை. கடன் வாங்கும்போது இருக்கிற கடனைக்கட்டி விட்டு பின்னர் வாங்குவதுதான் நல்லது. இல்லாவிடில் கடன் ஏறி விடும். அதைக் கட்டமுடியாது.

**திரு. மு. கருணாநிதி :** இசை மூலம் விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றம் காணலாம் என்ற ஆராய்ச்சியின் முடிவு அண்மையில் வெளி வந்திருக்கிறது. அதுகுறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்த ஆராய்ச்சியை நான் பார்க்கவில்லை.

**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** ஸார், தீவிர சாகுபடித் திட்டம் அமல் இல்லாத சேலம் மாவட்டத்தில் 4,000 பவுண்ட் நெல் விளைவிக்கப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?





**கனம் சபாநாயகர் :** நிறைய அரிசி சாப்பிட்டவர் போல் கனம் அங்கத்தினர் உரக்க சொல்லவில்லையே. உரக்கச் சொல்ல வேண்டும்.

**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** தீவிர சாகுபடித் திட்டம் அமல் செய்யப்படாத சேலம் மாவட்டத்தில் 4,000 பவுண்ட் நெல் விளைவிக்கப்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** சில திறமையான விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்து பெருமளவில் நெல் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே. சீமைச்சாமி :** ஸார், இந்தத் திட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு 1,320 பவுண்ட் நெல் விளைந்தது. இப்போது இந்தத் திட்டம் வந்ததற்குப் பின்னால் 25 சதவிகிதம் அதிகரிக்க வேண்டும் என்றும், அதாவது 1,650 பவுண்ட் நெல் விளைய வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி 330 பவுண்ட் அதிகரிக்க எவ்வளவு செலவு செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் கேட்டு தனியாகக் கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கலாம்.

**திரு. டி. கர்ச்சா கவுடர் :** இசை மூலமாக பயிர் விளைச்சலை அதிகரிக்க முடியும் என்று சொல்லப்பட்டு வருகிறது. இவ்விதம் இசையை பயன்படுத்தும்போது, கர்நாடக இசையை மட்டும் பயன்படுத்துவதற்கும் சினிமா இசையை பயன்படுத்தக்கூடாது என்பதற்கும் கனம் அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்வார்களா?

(பதில் இல்லை.)

## *State Scholarships*

*146 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of State Scholarships awarded to the Backward community in the academic year 1961–62; and

(b) the amount distributed in that year?

THE HON. SRI P. KAKKAN : (a) 23,046.

(b) Rs. 47,40,902

**திரு. எஸ். மாதவன் :** ஸார், இப்போது இந்த உதவித் தொகையை ஜாதி அடிப்படையில் கொடுப்பதை நிறுத்தி, பொருளாதார அடிப்படையில் கொடுக்கவேண்டும் என்று மத்திய சர்க்காரிடத்திலிருந்து மாநில சர்க்காருக்கு ஏதாவது ஆலோசனைகள் கூறப்பட்டிருக்கிறதா? நம்முடைய அரசாங்கத்திற்கு இது பற்றி என்ன கருத்து இருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ஜே. மாதா கவுடர்** : பின்னிலை வகுப்பினர்களுக்கு கொடுக்கப்படும் உதவித் தொகை மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால் அடுத்த ஆண்டிலிருந்தாவது அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினிடத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்** : தொகையை திடீரென்று அதிகரிக்க முடியாது. ஆனால் ஆண்டுதோறும் உதவித் தொகை பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆகவே ஒரு குறிப்பிட்ட மாணவர்களின் உதவித் தொகையை மட்டும் அதிகரிப்பதற்கில்லை.

**புலவர் கா. கோவிந்தன்** : மாணவர்கள் பணம் இல்லாத காரணத்தினால்தான் இம்மாதிரிப்பட்ட உதவித்தொகைக்காக மனு செய்து கொள்கிறார்கள். ஆனால் மனு செய்து கொள்ளுகின்ற ஆண்டு முடிவடைந்த நிலையிலும் அவர்கள் கையில் பணம் கிடைப்பதில்லை. ஆகவே, உடனடியாக அவர்கள் கையில் பணம் கிடைப்பதற்குள்ள வழிவகைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : சாதாரணமாக இந்த உதவித் தொகை துரிதமாக கொடுக்கப்பட்டு வருகிறது. அதாவது ஷெட்யூல்ட் வகுப்பினர் மாணவர்கள் 100-க்கு 50 மார்க் வாங்கியிருக்கவேண்டும் என்றும், மிகவும் பிற்பட்ட மாணவர்கள் 100-க்கு 45 மார்க் வாங்கியிருக்கவேண்டும் என்றும் இருக்கிறது. இதற்கு குறைவாக மார்க் வாங்கியிருக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைப்பதில் காலதாமதமாகியிருக்கலாம். மற்றபடி நிர்ணயிக்கப்பட்டிருக்கும் மார்க்குகள் வாங்கியிருப்பவர்களுக்கு உடனடியாக உதவித் தொகை கிடைத்து விடும்.

**திரு. எஸ். சின்னையன்** : கனம் தலைவர் அவர்களே, இன்னும் சில பிற்பட்ட வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**கனம் திரு. பூ. கக்கன்** : ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 50 மார்க்கும், மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 45 மார்க் எடுக்கவேண்டும் என்றும் இருக்கிறது. இந்த விதியின்படி எடுக்காத மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைப்பதில் சில கஷ்டங்கள் இருக்கலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்** : கனம் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தால் மாநில அரசாங்கத்திற்கு இந்த உதவித் தொகைக்காக அளிக்கப்படுகின்ற பணம் எவ்வளவு? இத்தொகை ஆண்டுதோறும் எவ்வளவு பெருகியிருக்கின்றது என்பதை தெரிவிக்கக் கோருகின்றேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : மாநில சர்க்கார் இந்த உதவித் தொகை கொடுப்பது ஆண்டு தோறும் உயர்ந்துகொண்டே போகிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து ஆண்டு தோறும் 14 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் வந்து கொண்டிருக்கிறது.



**திரு. எம். எஸ். மணி** : ஸார், அரசாங்கம் பின்னிலை வகுப்பினருக்கு உதவித் தொகை அளிக்கப்படுவதில் பாரபட்சமும் காலதாமதமும் காட்டப்படுகிறது என்பது உண்மையா?

**கனம் திரு. பூ. கக்கன்** : பாரபட்சம் காட்டுகின்ற அரசாங்கம் இந்த அரசாங்கமல்ல, சர்க்கார் சில விதிகளை வைத்திருக்கிறார்கள். அதன்படி மனுச்செய்து கொள்பவர்களுக்கு காலதாமதமில்லாமல் உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது.

**திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்**: கனம் தலைவர் அவர்களே, இந்திய சர்க்காரால் கொடுக்கப்படுகிற ஸ்காலர்ஷிப் மார்க்கின் அடிப்படையில் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்டேட்ஸ்காலர்ஷிப்பும் மார்க்குகள் அடிப்படையில் வைத்தால் குறிப்பிட்ட மார்க்குக்கு குறைவாக வாங்குகின்ற சில ஏழை மாணவர்கள் இந்த உதவித் தொகை பெற முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே அப்பேர்ப்பட்ட மாணவர்களுக்கு ஐந்து மார்க்குகள் குறைவாக இருந்தாலும் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று விதிகளை திருத்த கனம் அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : ஐந்து மார்க்குகள் குறைக்கவேண்டுமா வேண்டாமா என்பது பிரச்னை அல்ல. இம்மாதிரி மாணவர்களுக்கும் கொடுப்பதற்கு வழி இருக்கிறது. 10 சதவிகிதம் அங்கங்கு இருக்கக்கூடிய அரிஜன நல இலாகா அதிகாரி அவர்களுடைய டிஸ்க்ரீஷன்படி தேர்ந்தெடுக்கலாம் என்றும் இருக்கிறது.

**திரு. கே. பி. பழனிசாமி**: கனம் தலைவர் அவர்களே, இப்போது ஆஸ்டலில் தங்கும் மாணவர்களில் பிற்பட்ட மாணவர்களுக்கும், ஷெட்யூல்ட் மாணவர்களுக்கும் கொடுக்கின்ற உதவித்தொகையின் ரேட்டில் வித்தியாசமிருக்கிறது இதை மாற்றி ஒரே விதமான ரேட்டில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்** : அந்தவிதமான உத்தேசமில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன்** : ஸ்காலர்ஷிப்-க்கு என்று ஒதுக்கப்பட்ட தொகை கடந்த வருடம் வழங்கப்படாமல் மீண்டும் கஜானாவுக்கு திருப்பப்பட்டது என்று சொல்வது உண்மையா? அப்படியானால் அதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. பூ. கக்கன்** : ஒதுக்கப்பட்ட பணத்தை விட கூடுதலாகத்தான் பின்தங்கிய மாணவர்களுக்கு பைனான்ஸ் டிப்பார்ட்மெண்டிலிருந்து ஒதுக்கி வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே பணம் ஸரண்டர் செய்யப்பட்டது என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி** : பல இடங்களில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டு இரண்டு மாதங்கள் ஆகியும் இதுவரையிலும் அந்தப்

[6th March 1963

பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகைப் போய்ச் சேரவில்லை. இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆரம்பக்கட்டத்தில் சில கஷ்டங்கள் ஏற்படும். அதாவது அந்தந்த பள்ளிகளின் முதல்வர் மூலமாக பெட்டிஷன் அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படும் பெட்டிஷன்களில் ஏதாவது தப்பிதம் இருந்தால் அவைகளை திரும்பி அனுப்பி தப்பிதம் இல்லாமல் அனுப்பப்படவேண்டும். இதில் காலதாமதம் ஏற்படும் என்றால் முதல் தவணையாகவும், இரண்டாவது தவணையாகவும் பணம் கொடுக்கப்படுகிறது. ரெனியுவல் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதில்லை.

**திரு. ஜே. மாதாகவுடர் :** இந்த ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் விவசாயம் மிகவும் கெட்டுப்போய்விட்டதால், அந்தப் பகுதியிலுள்ள எல்லா பின்னிலையிலுள்ள மாணவர்களுக்கும் மார்க் அடிப்படையில் இல்லாது இந்த உதவித் தொகையை கொடுப்பதற்கு சர்க்கார் உத்தரவிடுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** மார்க் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லிவிட்டு, இப்போது அப்படி வேண்டாம் என்று சொல்வது சரியல்ல. அங்கங்கே இருக்கக்கூடிய கலெக்டர் அவர்களும், அரிஜன நல இலாகா அதிகாரிகளும் 10 சதவிகிதம் பேர்களுக்கு கொடுக்கலாம். அதன் மூலம் இம்மாதிரி நிலையிலுள்ள மாணவர்களும் உதவித் தொகையை பெறுவதற்கு அவரவர்கள் முயற்சி செய்யலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** வருவாயின் அடிப்படையில் ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கம் நமது அரசாங்கத்திற்கு சொல்லியிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார். அம்மாதிரியிருந்தால் மார்க்குகள் அதிகமாக வாங்கக் கூடிய, சில குறிப்பிட்ட மாணவர்கள் தகுதியுடையவர்கள் ஆகிவிடுவார்கள். இதன் காரணமாக பின்தங்கிய மாணவர்கள் ஸ்காலர்ஷிப் வாங்கும் தகுதியே இல்லாமல் ஆகிவிடுவார்கள் என்று அஞ்சுகிறேன். இதை நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதற்காகத்தான் அரசாங்கம் இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் :** பின்னிலையில் உள்ள வகுப்பினர் என்று சொல்லும்போது, முதலியார் என்று போட்டால் சலுகை கிடைப்பதில்லை. அதே வகுப்பைச் சேர்ந்தவர்களே, கைக்கோளர் என்று போட்டால் சலுகைகள் கிடைக்கின்றன. இப்படித்தான் எங்கள் பகுதியில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதை மாற்றி அமைக்கும் உத்தேசமுண்டா? இரண்டு விதமாக சொல்லப்படுபவர்களுக்கும் சலுகை கொடுப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?



6th March 1963]

**கனம் திரு. பி. கக்கன் :** முதலியார் வகுப்பில் கைக்கோள முதலியார் என்ற இனத்தவருக்கு சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் :** முதலியார் வகுப்பிலே கைக்கோளர் என்பது வேறு வகுப்பினர் அல்ல. இரண்டும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். முதலியார் என்று தப்பித் தவறி எழுதிவிட்டால் சலுகைகள் கிடைக்காது, கைக்கோளர் என்று போட்டால் சலுகை கிடைக்கிறது. இதை மாற்றி அமைக்க முடியுமா என்றுதான் கேட்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** தப்பித்தவறிக்கூட அப்படி எழுதக்கூடாது என்று அவர்களிடத்தில் கனம் அங்கத்தினர் சொல்லலாம்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அவ்விதம் மாற்றி அமைக்க இப்போது உத்தேசமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. காஞ்சி மணிமொழியார் :** ஸார், இப்போது விலைவாசி ஏற்றத்தினால் குடும்பச் செலவு மிகவும் அதிகரித்திருக்கிறது. ஆகையால் இப்போது பிற்பட்ட வகுப்பினருக்கு உபகாரச் சம்பளச் சலுகை கொடுப்பதற்கு ரூ. 1,500-க்குள் வருட வருமானம் இருக்கவேண்டும் என்றிருப்பதை ரூ. 2,000 என்று உயர்த்துவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது உயர்த்துவதற்கு இல்லை. இருந்தாலும் அதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** மாநில ஸ்காலர்ஷிப்புக்கு கடந்த வருஷம் ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்ட பிறகு அதில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு மத்திய ஸ்காலர்ஷிப் கிடைத்த காரணத்தினால் அந்த ஸ்காலர்ஷிப்பைக் கொடுத்து விட்டு, இந்த மாநிலத்திலிருந்து ஸ்காலர்ஷிப் யாருக்கும் கொடுக்கப்படாமல் திரும்பி வந்து விட்டது என்பது உண்மை தானா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இப்போது இல்லை.

**திரு. ஆர். ரங்கசாமி :** ஸார், எஸ். எஸ். எல். ஸி. படித்து விட்டுச் சென்றால் தான் பாலிடெக்னிக்குகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. பி.யூ.ஸி. படித்து விட்டுச் சென்றவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடையாது என்று ஜி.ஓ. இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பி.யூ.ஸி. படித்தவர்கள் ஸ்காலர்ஷிப் இல்லாமல் கஷ்டப்படுவதால் அந்த உத்திரவை மாற்றுவதற்கு அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்த மாதிரித் தகவல் என்னிடத்தில் இல்லை.

*Sanskrit students and pandits (High schools)*

*137 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the total number of students studying Sanskrit in all the High Schools of our State;

(b) the number of Sanskrit Pandits who are employed for the purpose in all the High Schools of our State: and

(c) total expenditure incurred on behalf of Sanskrit Pandits in all the schools of our State in 1961-62?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 14,896.

(b) 189.

(c) Rs. 3,42,728.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், இதே மாதிரியான அக்கறை நம்முடைய அண்டை மாநில மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளின் மீதும் செலுத்தி, மும்மொழித் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்ய சர்க்கார் என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: யார் யார் எந்த மொழிகளில் கற்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதற்கு வேண்டிய சலுகைகளையும், அதற்கு வேண்டிய வசதிகளையும் அளித்து வருகிறோம். இந்த மாநிலத்திலே ஏழு மொழிகள்—ஆங்கிலம், தமிழ் உட்பட ஏழு மொழிகள்—போதனு மொழியாக அமைக்கப்பட்டு அதற்கு வேண்டிய வசதிகள் உயர்நிலைப் பள்ளிகளில் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. கருணாநிதி: சமஸ்கிருத மாணவர்களில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களே இருக்கிறார்களா? அல்லது எல்லா வகுப்பினரும் இருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு குறிப்பிட்ட வகுப்பினரே இருக்கிறார்கள் என்பது சரியல்ல.

புலவர் கா. கோவிந்தன்: சமஸ்கிருதத்தைப் பேச்சு மொழியாகக் கொண்ட இடமோ, மக்களோ எங்காவது தனியாக இருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பேச்சு மொழியைத்தான் படிக்க வேண்டும் என்பது அல்ல. அதுவும் புலவர் கேட்கக் கூடிய கேள்வி அல்ல இது. (சிரிப்பு).

திரு. கே. மூக்கையா தேவர்: தற்போது இருக்கிற பாடத் திட்டப்படி இரண்டாவது பாட மொழியாக இந்திக்கு பதில் சமஸ்கிருதம் என்று இருக்கிற காரணத்தினால் சமஸ்கிருதம் படிக்கும் மாணவர்கள் குறைந்து வருகிறார்கள். முன்னால் இருந்த மாதிரி சிறப்புத் தமிழ் அல்லது சமஸ்கிருதம் என்று இருந்தால்தான் அதிக மாணவர்கள் சேருவார்கள். அம்மாதிரி மாற்றி அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தப் பிரச்னை மாநில கல்வி ஆலோசனைக் குழுவில் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ் கற்பதற்கு எந்த விதத்திலும் பாதகம் ஏற்படக் கூடிய அளவில், அதற்குப் பதிலாக சமஸ்கிருதத்தை வைப்பதை ஆதரிக்கவில்லை—



ஆதரிக்க முடியாது. ஆனால் வேறு பாடங்களுக்கு பதில் சமஸ்கிருதத்தை வைத்து வசதி அளிக்கலாம் என்பது என்னுடைய யோசனை.

*High schools (Re-introduction of Forms)*

* 138 Q.—SRI C. CHIRANJEEVALU NAIDU (on behalf of SRI V. SANKARAN): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to abolish the Standards and re-introduce Forms in High Schools; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

***Adult schools***

* 139 Q.—PULAVAR K. GOVINDAN (on behalf of SRI R. S. VEERAPPA CHETTIAR): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any teachers are being trained for handling adult schools;

(b) if so, the number trained and the amount of subsidy paid to each;

(c) the places where adult schools are functioning now; and

(d) the places where such schools are proposed to be opened during the year 1962?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A paper* is placed on the Table of the House.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், இங்கு மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் சென்னை நகரத்தில் இந்த முதியோர் பள்ளிகளில் ஒரு பள்ளி கூட இல்லை. மற்ற மாவட்டங்களில் நிறைய அமைந்திருக்கின்றன. இப்போது பரிசீலனையில் இருக்கிற கல்விக் கொள்கை தீர்மானம் ஆகிய பிறகு முதியோர் கல்வி வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி வரும்போது சென்னையிலும் முதியோர் பள்ளிகள் அமைக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சமீபத்தில் இதைப் பற்றி ஆராய்ந்தார்கள். இப்போது முதியோர் கல்வியைப் பரப்புவது நிறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பிடப்பட்டிருக்கிற 500 சென்டர்கள்தான் இருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 20 லட்சம் ரூபாய் இதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்கு அப்பாலும் நிதி உதவி அளிக்கிறோம். முதியோர் கல்வித் திட்டத்தைப் பரப்பவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். வருகிற ஆண்டிலே 300 அடல்ட் எஜுகேஷன் சென்டர்களை அமைப்பது என்பது யோசனை. அவ்வாறு

* Printed as Appendix II on pages 108-112

அமைப்பதில் 11 வயதுக்கு மேல் 30 வயதுக்குள் உள்ளவர்களுக்கு கல்வி போதனை அளிக்கப்படும். அதற்கு மேற்பட்டவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதில் பலன் இருக்காது. இப்படி இதில் கவனம் செலுத்தலாம் என்பது யோசனை. அவ்வாறு கவனம் செலுத்துவதில், இந்த சென்டர்களில் நகரப் பிராந்தியங்களில் பாதி அமைக்கப்படும். கிராமங்களில் பாதி அமைக்கப்படும். தொழிலாளர் வசிக்கும் இடங்களில் பள்ளிக்குப் போகாதவர்களுக்கு, 11 வயது முதல் 30 வயது வரையில் உள்ளவர்களுக்கு முதியோர் கல்வியை பரப்பலாம் என்பது யோசனை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** முதியோர் கல்விப் பள்ளிகளில் எவ்வளவு மாணவர்கள் வருகிறார்கள்? நாளுக்கு நாள் அதிகம் வருகிறார்களா? அவர்களுள் எவ்வளவு பேர்கள் பாஸ் செய்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பாஸ் செய்து பட்டம் பெறுவது என்பதல்ல. எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது தான் இந்தத் திட்டம். மற்ற புள்ளி விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** முதியோர் பள்ளிகளில் பெண்களும் சேர்ந்து படிப்பதாக அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் உண்டா? இல்லையென்றால் பெண்களுக்குத் தனியாக பள்ளிகளை அமைக்கும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பெண்களும் படிக்கிறார்கள். தனியாக அவர்களுக்கென்று ஆரம்பிக்கலாம் என்பதுதான் அரசாங்கத்தின் யோசனை.

### *Former District Board High schools*

* 140 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of High Schools taken over by the Government from the former District Boards;

(b) the present arrangement to administer these High Schools; and

(c) the details as to the future administrative set-up proposed for these High Schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The number of District Board Schools on 1st October 1961 was 744.

(b) & (c) By a Special Notification under section 13 (vi) (c) of the Madras Panchayats Act, 1958, the administration of the Board High Schools was vested with the Collectors. The Government have decided to appoint Special Educational Officers to administer these schools, under the overall control of the D.P.I.



**திரு. வி. எஸ். எஸ். மணி:** ஸார், அரசினர் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் தனியார் நடத்தும் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் விதிகள் நிபந்தனைகள் ஒன்றாக இருந்தாலும் கூட, கண்காணிக்கும் அதிகாரிகள் தனியார் நடத்தும் உயர் நிலைப் பள்ளிகளைக் கெடுபிடியாகவும் கண்டிப்பாகவும் நடத்துகிறார்கள் அந்த சமயத்தில் அரசினர் நடத்தும் பள்ளிகள் விஷயத்தில் கண்டிப்பாக இருப்பதில்லை. அது மட்டுமல்லாமல் கிராண்ட் கொடுப்பதில் தனியார் பள்ளிகளுக்கு உடனடியாகக் கொடுப்பதில்லை. அதனால் அதில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்குக் குறித்த காலத்தில் சம்பளம் கிடைப்பதில்லை. இதைத் தவிர்க்க ஏதாவது அரசாங்கம் வழி வகை செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அரசினர் நடத்தும் பள்ளிகளை விட, தனியார் நடத்தும் பள்ளிகளிலும் தவறுகள் அதிகமாக நடக்கலாம் என்ற காரணத்தினால்தான் அதிக கெடுபிடி இருக்கிறது. அரசாங்கமே ஆசிரியர்களுக்கு நேரத்தில் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. தனியார் பள்ளியை நடத்துவதற்குப் பொறுப்பை எடுத்துக்கொண்டவர்கள், இதிலும் பொறுப்பு எடுத்துக்கொண்டு, மான்யம் வருவதற்குத் தாமதம் ஆனாலும், அவர்களே கொடுக்க முன் வரவேண்டும்.

**திரு. கரு. சீமைச்சாமி:** மாவட்ட போர்டுகளின் வாரிசுகளான பஞ்சாயத்து யூனியன்களிடம் போர்டு உயர் நிலைப் பள்ளிகளை ஒப்புவிக்க அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது பற்றி முன்பு ஆராயப்பட்டது. பஞ்சாயத்து யூனியன்களிடத்தில் உயர் நிலைப் பள்ளிகளை ஒப்புவிப்பதாக இல்லை.

**திரு. மு. கருணாநிதி:** தஞ்சை மாவட்டத்தில் திருவாரூரிலுள்ள உயர் நிலைப் பள்ளியை அரசினர் எடுத்துக்கொண்டார்களா? இல்லை என்றால் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஒரு பள்ளி தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்களெல்லாம் சொல்லலாம்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** பொது மக்களுடைய உதவியுடன் உயர் நிலைப் பள்ளிக்கு கட்டிடங்களைக் கட்டி ஜில்லா போர்டுக்குக் கொடுத்து விட்டோம். இப்போது ஜில்லா போர்டு இல்லாத காரணத்தினால் பள்ளிக் கட்டிடத்தை விஸ்தரிக்க வேண்டுமென்றால் யார் விஸ்தரிப்பது என்று யாருக்கும் புரியாமல் இருக்கிறது. கலெக்டர் அவர்கள் இதைச் செய்வாரா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** உயர் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் ஜில்லா போர்டு பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கட்டிடங்களைப் பொறுத்தமட்டில், ஸ்தலங்களில் இருக்கும் மக்களும் முன் வரவேண்டும்.

SRI C. CHIRANJEEVALU NAIDU: May I know whether there is any proposal to reconsider the decision now taken and bring secondary education under the Control of the District

Development Councils and under the immediate supervision of the Collectors instead of under the Special Officers to be appointed for this purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I may tell the hon. Member that the District Development Council is not an executive body but is only an advisory body. There is no proposal that the high schools should be placed under the District Development Council.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** ஸ்பெஷல் ஆபீசருக்கு அனுசரணையாக ஒரு ஆலோசனைக் கமிட்டி நிறுவும் யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறதா? அப்படியானால், அது எப்பொழுது அமுலுக்குக் கொண்டு வரப்படும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** டெவலப்மெண்டு கவுன்சிலில் ஒரு கல்வி ஆலோசனைக் குழு இருக்கிறது. ஒரு ரெவின்யூ மாவட்டத்தில் இரண்டு டெவலப்மெண்டு கவுன்சில்கள் இருந்தால, இரண்டு கல்வி ஆலோசனைக் குழுக்கள் இருக்கின்றன. இந்த இரண்டு கல்வி ஆலோசனைக் குழுக்களும் சேர்ந்து உயர் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் ஆலோசனைக் குழுவாக விளங்கும்.

**திரு. காஞ்சி மணிமொழியார்:** கோடம்பாக்கத்தில் ஒரு அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்கப்படுவதாகக் கேள்விப்பட்டேன். அது அடுத்த கல்வி ஆண்டிலாவது துவக்கப்படுவதற்கான முயற்சி நடைபெறுகிறதா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

MR. SPEAKER: Not very much related to this question.

**கனம். திரு. எம். பக்தவத்சலம்:** அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** பொது மக்கள் முன்வந்தாலும் கூட, இப்பொழுது கட்டிடம் கட்டுவதற்கு யாரிடத்தில் உதவித் தொகையைக் கொடுப்பது என்று புரியாமல், கட்டிடம் கட்டுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. கலெக்டரிடம் கொடுத்தால் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வாரா? இதைப்பற்றி அடுத்த கல்வி ஆண்டு ஆரம்பிக்கும் முன்பே ஒரு விளக்கமான அறிக்கையை சர்க்கார் வெளியிடுவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கலெக்டரிடம் கேட்டால், எல்லா விவரங்களையும் அவர்கள் தெரிவிப்பார்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** ஸ்பெஷல் ஆபீஸர்களை நியமிப்பதிலே எல்லா ஜில்லாக்களுக்கும் தனியாக ஸ்பெஷல் ஆபீஸர் நியமிக்கப்படவில்லை. வட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு மாற்றப்படுவார்களோ என்று ஆசிரியர்களிடத்திலே பயம் இருக்கிறது. இதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.





**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மாற்றப்படுவதற்கு ஆசிரியர்கள் தயாராகத்தான் இருக்கிறார்கள்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** ஜில்லா டெவலப்மெண்டு எஜுகேஷன் சப்-கமிட்டி மெம்பர்களைத் தவிர, வெளியிலிருந்து கல்வியில் விசேஷ ஞானம் உள்ள சிலரை சேர்த்துக்கொள்ளும் அளவுக்கு விதிகள் செய்யப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதற்கு அவசியம் இல்லை. அவ்வாறு செய்வதாக உத்தேசமும் இல்லை.

*Co-operative Printing Press (Ramanathapuram district)*

* 141 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal to start Co-operative Printing Presses in Ramanathapuram district during 1962; and

(b) if so, where they will be started?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (a) & (b) There is a proposal to start Co-operative Printing Press at Karaikudi during this year.

**திரு. எஸ். மாதவன்:** 1962-ம் ஆண்டில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் 1963-ம் ஆண்டில் வந்திருக்கிறது. இந்த ஆண்டிலாவது இந்த அச்சகம் நிறுவப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** இந்த ஆண்டில் இப்பொழுது ஷேர் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். சுமார் 4,000 ரூபாய்க்கு ஷேர் சேர்ந்திருக்கிறது. இன்னும் ரூ. 5,000-க்கு ஷேர் சேர்த்துக்கொடுத்தால், உடனடியாக ரிஜிஸ்டர் செய்து கொடுப்பார்கள்.

**கனம் சபாநாயகர்:** ஷேர் சேர்க்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசுவாமி:** வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு அச்சகம் லாபத்தில் நடக்கிறதா அல்லது நஷ்டத்தில் நடக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** இப்பொழுது என்னிடம் அதைப்பற்றிய கணக்கு இல்லை.

*Secondary education*

* 142 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any proposal is under consideration for the appointment of a Committee of experts for examining the present pattern of syllabus for Secondary Education; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

[6th March 1963

**புலவர் கா. கோவிந்தன் :** பட்டப் படிப்பை சர்வகலாசாலையிடம் ஒப்படைத்திருப்பதுபோல், எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் உள்ள படிப்புத் துறையை ஒரு தனி அமைப்பு அமைத்து அதனிடம் ஒப்படைக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது அரசாங்கத்தினால் ஆராயப்பட்டு, அவ்வாறு செய்வது அவசியம் இல்லை என்று அரசாங்கத்தினால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : Questions are over.

[*Note*—An asterisk (*) at the Commencement of a speech indicates revision by the Member.]

## II.—CALLING ATTENTION TO THE PLIGHT OF GOLDSMITHS DUE TO GOLD CONTROL REGULATIONS.

* **திரு. எஸ். மாதவன் :** கனம் சபாநாயகர் அவர்களே, அண்மையில் மத்திய சர்க்காரால் கொண்டுவரப்பட்ட தங்கக்கட்டுப்பாடு விதிகளினால், இந்த மாநிலத்தில் லட்சக்கணக்கான பொற்கொல்லர்கள் வேலையின்றி தவிக்கின்றார்கள். அவர்களுடைய எதிர்கால வேலைக்கும் ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. சர்க்கார் பொற்கொல்லர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கும், எதிர்காலத்தில் அவர்களுடைய வேலைக்கு பாதுகாப்பு தருவதற்கும் கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்ற பிரச்னையை இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் கனம் நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Gold Control Order and the rules framed thereunder which came into force from January 1963 prohibits the manufacture or sale of ornaments containing gold of a purity exceeding 14 carats, 30 days after the commencement of the order. This order has brought ornament manufacture in this State and presumably in the country to a standstill. Representations have been made to the Government of India by the Jewellery Associations to the effect that it is impossible to produce easily jewellery which will be acceptable to the general public using 14 carats gold. Among other representations, the associations have stated that the sale of a minimum quantity of 22 carat gold should be allowed for special functions such as marriages. As jewellers are not quite certain as to the reply the Government of India would give on their representation, they have apparently stopped manufacture of jewellery. Therefore there is a sudden lull in the activities of goldsmiths all over the country.

It may be reasonable to presume that the jewellers would have necessarily to work with 14 carat gold. As soon as the position becomes clear, the jewellers are likely to resume their functions placing for sale 14 carat gold ornaments. Working on 14 carats may present some initial difficulties, but so long as there



6th March 1963] [Sri M. Bhaktavatsalam]

is demand for jewellery in this country, the goldsmith unemployment problem may be purely temporary and remediable state of affairs.

The reception that may be given by the general public to gold ornaments cannot be predicted. Current trend indicates that the jewellers may soon resume manufacture of jewels of 14 carat gold fineness and that bulk of the employees will resume their occupation. The precise number of goldsmiths who will be rendered unemployed is not available. Goldsmiths who feel that they could seek alternative employment have been advised to register themselves with the local Employment Exchanges. The Director of Industries and Commerce had been asked to examine the question of rehabilitating the goldsmiths in other suitable industries. He has also been asked to suggest a short-term programme of training which would enable the displaced goldsmiths to get employment in suitable industrial undertakings. After a correct assessment of the unemployment is made, the Government will endeavour to afford goldsmiths the necessary training facilities so that they may be fitted into suitable trades in industries.

A proposal for organising industrial co-operatives in important towns for goldsmiths is under active consideration of the Government and a decision will be reached soon.

அதோடு கூட எம்ப்ளாய்மெண்டு எக்சேஞ்சில் பொற்கொல்லர்கள் பதிவு செய்துகொண்டால், அவர்களுக்கு முதல் நம்பர், பிரையாரிடி, கொடுக்கலாம் என்று இப்பொழுது விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்பொழுது இருக்கும் நிலையை ஒட்டி எல்லோரையும்விட பொற்கொல்லர்களுக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும், டாப் பிரையாரிடி கொடுக்கவேண்டுமென்றும் இப்பொழுது உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

(திரு. கே. ஏ. மதியழகன் எழுந்திருந்தார்.)

**கனம் சபாநாயகர் :** இப்பொழுது கேள்விகள் போடக்கூடாது.

SRI K. A. MATHIALAGAN : I want a clarification, Sr.

MR. SPEAKER : Clarification can be in the form of question a, only. Let the hon. Member raise it. Let me see.

**திரு. கே. ஏ. மதியழகன் :** வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் பொற்கொல்லர்களுக்கு முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார். சென்னையைப் பொறுத்தவரையில் 3,000, 4,000 பேர்கள் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும்கூட, இதுவரையில் 10 பேர்களுக்குத் தான் வேலை கிடைத்திருக்கிறது என்று தெரிகிறது. இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வேலைத் தேடித்தரும் ஸ்தாபனம் என்பதல்ல, இருக்கிற வேலையை பகிர்ந்து கொடுக்கிற ஸ்தாபனம் அது. வேலை இருக்கிறவரையிலும் வேலை கொடுக்க முடியும்.

[திரு. எம். பக்தவத்சலம்] [6th March 1963

10 பேர்களுக்கு ஏற்கனவே வேலை கொடுத்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் வேலை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். அதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். மேலும் குறிப்பிட்ட வேலைக்கு ஒருவர் லாயக்கா என்று பார்த்து அவருக்குத் தகுதியான வேலையைக் கொடுக்கவேண்டும். அது தான் கவனிக்கப்பட்டு வருகிறது.

(திரு. மு. கருணாநிதி எழுந்திருந்தார்.)

**கனம் சபாநாயகர் :** This has become a debate.

**திரு. மு. கருணாநிதி :** ஒரு சந்தேகம் கேட்க விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** This is not the time for it. சந்தேகம் கொஞ்சம் நேரம் கழித்துக் கேட்கலாம். 'Not now'

## III.—POINT OF INFORMATION *re* STATE ADMINISTRATION REPORT AND THE BUDGET OF THE STATE ELECTRICITY BOARD.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே விளக்கம் ஒன்று பெறவேண்டுமென்பதற்காக ஒரு பிரச்னையை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1961-வது ஆண்டுக்கான ஸ்டேட் அட்மினிஸ்டிரேஷன் ரிபோர்ட் 1962-லே இந்த மன்றத்தின் முன் வைத்திருக்கவேண்டும். இன்னும் அந்த ரிப்போர்ட் இந்த மன்றத்தின் முன் வைக்கப்படவில்லை. அது எப்பொழுது வைக்கப்படும் என்று விளக்கம் தர வேண்டுகிறேன்.

அதோடு எலக்டிரிஸிடி போர்டு ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரித் திங்களில் அரசினருக்கு அறிக்கை சமர்பிக்கவேண்டும் என்றும், அப்படி சமர்ப்பித்த உடனேயே அந்த அறிக்கை சட்டமன்றத்தின் முன் வைக்கப்படவேண்டுமென்றும், பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை ஏற்று, தக்க நடவடிக்கை எடுக்க மின்சார போர்டு முன் வரவேண்டும் என்றும் மின்சார போர்டு சட்டத்தின் 61-வது விதியின் கீழ் கூறப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை சட்ட மன்றத்தின் முன் காலாகாலத்தில் வைக்கப்படுவதற்கான முயற்சி எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, மின்சார போர்டு கணக்குகள் சம்பந்தமாக இருக்கிற விதி கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவது போல இல்லை. நான் அந்த விதியைப் படிக்கிறேன்.

"In February of each year the Board shall submit to the State Government a statement in the prescribed form of the estimated Capital and revenue receipts and expenditure in the ensuing year".

இது செய்யப்பட்டுவிட்டது. அடுத்தபடியாக என்ன சொல்லியிருக்கிறது என்றால்.—

"The said statement shall include a statement of salaries of members, etc.



6th March 1963] [திரு. ஆர். வெங்கட்ராமன்]

*Clause* 3.—The State Government shall as soon as may be after the receipt of the said statement cause it to be liad on the Table of the House. . . . ."

"As soon as may be" என்று சொன்னால், சர்க்கார் அதைப் பரிசிலனை செய்து எப்பொழுது வைக்க வேண்டுமோ, அப்பொழுது தான் வைக்க முடியும். ஆகவே, மார்ச் 31-ம் தேதிக்குள் வைக்க வேண்டுமென்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது சரியல்ல.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மார்ச் 31-ம் தேதிக்குள் வைக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது என்று நான் சொல்லவில்லை. "As soon as may be" என்று சொல்லியிருக்கிற காரணத்தால், அது சில நாட்கள் அல்லது சில வாரங்களாகத் தான் இருக்க முடியுமே தவிர, சில மாதங்களாக இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொது நிர்வாக அறிக்கையைப் பொறுத்த வரையில் அது சில ஆண்டுகளாக வேகமாகவே தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறது. 1961-ம் ஆண்டு அறிக்கை என்று சொன்னால், அந்த ஆண்டு முடிந்த பிறகு அந்த அறிக்கையைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. தயாரிக்கப்பட்ட பிறகு அதை சர்க்கார் பரிசீலிக்க வேண்டும். அரசாங்கம் அதை அங்கீகரித்த பிறகு இங்கே சமர்ப்பிக்க வேண்டும். கொஞ்சம் தவிர்க்க முடியாத கால் தாமதம் ஏற்படுகிறது. கூடிய சீக்கிரத்திலே சட்டமன்றத்தின் முன்பு சமர்ப்பிக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

## IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1963-64—*cont.*

***கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டை வரியே போடாத பட்ஜெட் என்று சொல்லுகிறார்கள். இவ்வளவு வரிகள் எங்கிருந்து வந்தன என்பதை யோசிக்க வேண்டும். வரி போடாத பட்ஜெட் என்று சொல்லுவது, முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைப்பது போல இருக்கிறது. 4, 5 தினங்களுக்கு முன்புதான் இந்த மன்றத்திலே நிலவரி, தண்ணீர் தீர்வை வரி உயர்த்தப்பட்டது. இந்த வருடம் மத்திய சர்க்கார் ஏராளமான வரிகள் போட்டிருக்கிறார்கள். அதனால் நமது மகாணத்தில் இருக்கிற ஏழை எளியவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். வரிப் பளுவைத் தாங்க முடியாமல் எல்லோரும் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அன்றாடம் தேவைப்படும் அத்தியாவசியப் பொருள்களின் விலை மத்திய வரி விதிப்பின் காரணமாக அதிக அளவுக்கு ஏறி, மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் மீது எத்தனை முனை வரிகள் போடப்பட்டிருக்கின்றன என்பதை நாம் யோசிக்க வேண்டும். விவசாயிகளுக்கு நிலவரி, தண்ணீர் வரி, கல்வி வரி, ரோட்டு வரி, பஞ்சாயத்து வரி, பஞ்சாயத்து யூனியன் வரி, விவசாய வருமான வரி, மாண வரி, இப்பொழுது பற்றுக் குறைக்கு கட்டாய சேமிப்பு

[6th March 1963

[திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

வரி என்று வரிக்கு மேல் வரி போடப்பட்டிருக்கிறது. மொத்தம் 9 முனைகளிலே, நவக்கிரஹங்கள் மாதிரி விவசாயிகளின் மீது வரி போடப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்பொழுது, நமது ராஜ்யத்திலே இருக்கிற 9 மந்திரிகளும், விவசாயிகளின் மீது கோபித்துக் கொண்டு 9 முனைகளிலே வரி போட்டிருக்கிறார்களோ என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. இந்த தேசத்தில் இத்தனை முனை வரிகள் வேறு எந்த தொழிலுக்காவது போட்டிருக்கிறார்களா என்று கேட்கிறேன். விவசாயிக்கு மட்டும் ஏன் இத்தனை வரிகளை விதிக்க வேண்டும்? விவசாயி இந்த நாட்டிலே இருக்கிற மனிதர்களுக்கு மட்டுமல்லாமல், மற்ற ஜீவராசிகள் அத்தனைக்கும் உயிர்ப் பிச்சை அளிக்கிறான் என்ற காரணத்தினாலா இத்தனை வரிகளையும் போட்டிருக்கிறார்கள்? விவசாயிக்கு மட்டும் தான் இந்த நாட்டிலே உச்ச வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. எத்தனை மில்களை வேண்டுமானாலும் ஒரு முதலாளி வைத்துக் கொள்ளலாம். எத்தனை சினிமாக் கொட்டகைகளை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம், எத்தனை பஸ்களை வேண்டுமானாலும் ஓட்டலாம், எத்தனை கோடிக்கணக்கான திரவியங்களை வேண்டுமானாலும் மறைத்து வைத்துக் கொள்ளலாம். அவைகளுக்கு எல்லாம் உச்ச வரம்பு கிடையாது. இதுதானா ஆட்சியாளர்களின் சோஷலிஸம் என்று நான் கேட்கிறேன். இத்தனை வரிகள் போட்டு விவசாயிகளை வாட்டி எடுப்பதற்காகவா நாம் ஜமீன்தார்களை ஒழித்தோம்? இப்பொழுது பார்க்கும்பொழுது பழைய ஜமீன்தார்களே நல்லவர்கள் என்று தோன்றுகிறது. விவசாயிகள் கஷ்டப்படும்பொழுது வாரி வாரிக் கொடுத்தார்கள். ஆனால் இப்பொழுதுள்ள காங்கிரஸ் ஜமீன்தார்களோ விவசாய மக்களை வரிகள் போட்டு வாட்டி வதைக்கிறார்கள்.

எங்கள் சுதந்திரக் கட்சி தலைவர் ராஜாஜி அவர்களைப் பற்றி பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் கூறியதைப் பற்றி இந்த மன்றத்திலே பேசப்பட்டது. நான் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பாகிஸ்தான் பிரிவதற்கு பண்டித நேரு அவர்கள்தான் காரணமாக இருந்தார் என்று காலஞ் சென்ற காங்கிரஸ் தலைவர் ஆஸாத் அவர்களே ஒரு புத்தகத்திலே எழுதியிருக்கிறார். நமது தேசத்திலே இருக்கிற பெரும் தலைவர்களைப் பற்றி இப்படி கண்டபடி பேசுவது நல்லதல்ல. அதற்கு நாங்கள் பதில் சொன்னால் இது, அம்பட்டன் குப்பையைக் கிண்டினால் என்ன கிளம்புமோ அதைப்போலத்தான் இருக்கும். ராஜாஜியை பற்றி சொன்னதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்துவிட்டார்களே. (சிரிப்பு.)

**திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** அந்த முறையிலே ஆளுங் கட்சியிலுள்ள தலைவர்கள் பலரை அலசிப் பார்த்து ஏதாவது நாங்கள் சொல்ல வேண்டிய நிலையை ஆட்சியாளர்கள் ஏன் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்கிறேன். இதுதானா நமது தமிழ்நாட்டின் பண்பு? மாபெரும் தலைவர்களைப்



6th March 1963]

[திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

பற்றி இப்படி பேசுவது அவ்வளவு நன்றாக இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ராஜாஜி அவர்களை ஜெயிலில் போடவேண்டுமென்று திரு. மாதா கவுடர் அவர்கள் சொன்னார். அவருக்கு வேண்டுமானால் ஜெயில் வாசம் பயமாக இருக்கலாம். ஜெயிலையே பார்த்திருக்காத திடீர் காங்கிரஸ்காரரோ அவர் என்று நான் நினைக்கிறேன். ஆனால் எங்கள் தலைவர் ராஜாஜி அவர்கள் எத்தனையோ தடவை ஜெயிலுக்குப் போயிருக்கிறார்.

**கனம் சபாநாயகர்:** பட்ஜெட் விவாதத்திற்கு வாருங்கள். இந்த 10 நிமிஷ நேரமும் உங்கள் தலைவரைப் பற்றியே பேசிக் கொண்டு இருக்கப் போகிறீர்களா? போன தடவை பட்ஜெட்டின் போது நான் பேச விடவில்லை என்று என் மீது கோபித்துக் கொண்டீர்கள். நேற்று கூட நான் இதைக் கண்டித்தேன். திரும்பத் திரும்ப நீங்கள் இதைப்பற்றி பேசுவதாக இருந்தால் இன்றைக்கு பூராவும் மற்ற அங்கத்தினர்களும் இதைப்பற்றித் தான் பேசுவார்கள், எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

**திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** கனம் சபாநாயகர் அவர்கள் ராஜாஜி அவர்களைப்பற்றி பேசியவர்களை கண்டித்ததைப்பற்றி நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதிக வரிகள் போடுவதைப் பற்றியும், குறிப்பாக விவசாயிகள் மீது அதிக வரிப்பளுவைச் சுமத்துவது பற்றியும், தங்கக் கட்டுப்பாடு பற்றியும் சில காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசினார்கள். அவர்கள் இந்த மன்றத்திலே பேசுவதைக் காட்டிலும், தங்களுடைய கட்சியிலே இருக்கிற அமைச்சர்களிடம் இதையெல்லாம் எடுத்துக் கூறி இந்த வரிகளைப் போடவிடாமல் செய்திருந்தால் நன்றாக இருக்கும். மக்கள் மீது வரி போட்டுவிட்டு இந்த சட்டசபையிலே அந்த வரி விதிப்பை எதிர்த்துப் பேசுவதைப் பார்க்கும்போது மக்களை ஏமாற்றுவதற்காக இப்படிப் பேசுகிறார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே அவர்களுக்கு அக்கறை இருந்தால், தைரியமாக அமைச்சர்களிடம் எடுத்துக் கூறி வரிகளைக் குறைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாய அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. காவேரி தண்ணீர் திட்டத்தையும், மேல் பெரியாறு திட்டத்தையும் எங்கள் கிழக்கு ராமனாதபுரம் போன்ற வரண்ட பகுதிகளுக்கு விஸ்தரித்தால் மிகவும் நல்ல முறையில் விவசாயம் செய்யமுடியும். விவசாய அபிவிருத்திக்கு ரொம்பவும் அத்தியாவசியமானது தண்ணீர்தான். காவேரித் திட்டத்தைப் பற்றிக் கேட்டால், மைசூர் சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், மேல் பெரியாறு திட்டத்தைப் பற்றிக் கேட்டால் கேரள சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே நமது தேசத்தில் இருக்கக்கூடிய ஜீவ நதிகளையெல்லாம் பொதுவாக ஆக்கி விட்டால் இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்காது என்று நான் நினைக்கிறேன். இதற்கு வேண்டி சட்டத்தை மாற்றுவதாக இருந்தாலும் அதை மாற்றி அமைத்துக்கொள்ள

[6th March 1963

[திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம்]

அப்படி இல்லையென்றால், கிராமங்களிலுள்ள ஒருபகுதி புறம்போக்கு நிலங்களை பசுந்தாள் உரம் பயிரிடுவதற்கு என்று ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால், அவைகளை காலா காலத்தில் அறுத்துகொண்டுபோய் நிலத்தில் போட்டு விவசாயம் செய்வதற்கு விவசாயிகளுக்கு சௌகர்யமாக இருக்கும் என்றும் சொல்லிக் கொள்ளுகிறேன். எனக்குப் பேசுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்கு கனம் சபாநாயகருக்கு என் நன்றியை தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*** திரு. அ. அப்பாவு தேவர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த 1963-64-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகளைக் கூற ஆசைப்படுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் நெல் விலைவாசிகள் குறைந்து இருக்கின்றன. துரதிருஷ்டவசத்தினால் இந்த வருஷம் தஞ்சை ஜில்லாவில் எலி வெட்டினாலும் காலத்தில் பெய்யாமல் பிற்பட்டு மழை பெய்ததாலும் விளைச்சல் கம்மியாக இருக்கின்றது. விளைந்திருக்கக் கூடிய விளைச்சலை வியாபாரிகளிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்தாலும் அவற்றிற்கு வியாபாரிகள் உடனடியாகப் பணம் கொடுக்காமலும் இருக்கிறார்கள். விளைந்த தானியங்களை நல்ல விலைக்கு விற்க முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகளுக்கு பணம் கொடுத்தாலும் சீக்கிரமாகக் கொடுப்பதாக இல்லை. அதனால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் சர்க்காருக்குக் கட்ட வேண்டிய கிஸ்தி முதலியவைகளையும் அவர்களால் உடனடியாகக் கட்ட முடியவில்லை. இதன் காரணமாக தஞ்சை ஜில்லாவில் மேற்கொண்டும் கூட்டுறவு மார்கெட்டிங் பெடரேஷன் மூலமாகவும் கோவாப்ரேடிவ் சொசைடிகள் மூலமாகவும் விவசாயிகள் தங்களுடைய தானியங்களை விற்க நல்ல கோடவுன்களை அமைத்துக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். பல கோடவுன்களை வைத்து விவசாயிகளுக்குக் கடன் கொடுத்ததும் பண உதவி செய்து கொடுக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்தால் சிறிய விவசாயிகளுக்கு அது மிகவும் நன்மையாக இருக்கும் என்று அரசாங்கத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதுவும் இல்லாமல் சிறிய கிராமங்களில் சாமான்களின் விலைகள் மிகவும் ஏறிக் கொண்டிருக்கின்றன. அதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அப்படி விலைவாசிகள் ஏறிக் கொண்டிருப்பதால் சாமான்களைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தால் அது சௌகர்யமாக இருக்கும் என்பதை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கால்நடைகளுக்கு அவசியமாக இருக்கக்கூடிய தீவனம், பருத்தி விதை, கடலைப் பிண்ணாக்கு முதலியவற்றின் விலை மிகவும் ஜாஸ்தியாக இருக்கிறது. அவைகளின் விலையைக் குறைத்துக் கொடுத்தால் ஏழை விவசாயிகளுக்கு எவ்வளவோ சௌகரியமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

தஞ்சை ஜில்லாவில் பாபநாசம் தாலுகாவில் உள்ள சில பகுதிகளில் ஹரிஜனங்களுக்கு வீட்டு வசதி, ரோடு வசதி, விளக்கு வசதி, குடி தண்ணீர் வசதி முதலியவைகள் இல்லாமலிருக்கின்றன. இதை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து ஆவன செய்தால் சௌகரியமாக இருக்கும் என்று நான் சிபார்சு செய்கின்றேன்.

சில இடங்களில் ஹரிஜனங்கள் வசித்துக் கொண்டிருக்கும் இடங்களைவிட்டுப் போகும்படியாகச் சொல்வதாக எனக்குப் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவர்கள் தற்போது இருக்கும் இடங்களிலேயே தொடர்ந்து இருக்கும்படி அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கும்படியாக நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தஞ்சை ஜில்லா, பாபநாசம் தாலுக்காவில் சில வடிகால் வசதி இல்லாமல் பெருத்த கஷ்டம் ஏற்பட்டு, விளைச்சல் மிகக் கம்மியாகி இருக்கிறது. பாக்கேஜ் ஸ்கீமில் அந்த ஜில்லா எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறபடியால், வடிகால் வசதிக்கும் ஆவன செய்தால் நெல் உற்பத்தி அதிகமாகும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். வடிகால் வசதிகளைச் செய்து தரவேண்டுமென்றும் நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முதியோர் பென்ஷன்கள் எல்லொருக்கும் இன்னும் நியாயமாக வழங்கப்படவில்லை என்று சில புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதையும் அரசாங்கம் கவனித்து, எது நியாயமோ அதை அவர்களுக்குக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கின்றேன். எங்கள் ஜில்லாவில், பாபநாசம் தாலுக்காவில் உக்கடை கிராமத்தில், 61 வயதுள்ள ஒரு கிழவிக்கு உற்றார் ஒருவரும் இல்லை. வோட்டர் லிஸ்டில் அந்தக் கிழவிக்கு வயது 40 என்று போட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி, அந்தக் கிழவிக்கு இன்னும் பென்ஷன் கொடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி சம்பவங்கள் நேராமல் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ரூரல் டிஸ்பன்சரியிலும், மெடர்னடி சென்டரிலும் மருந்துக்கள் கிடைக்காமல், ஏழை ஜனங்களிடத்திலிருந்து அங்குள்ள டாக்டர்கள் ஊதியம் வாங்கிக் கொண்டு, வைத்தியம் செய்ததாகச் சில தகவல்கள் வந்திருக்கின்றன. இந்த நிலை இல்லாமல், ஏழை மக்களுக்கு இனாமாக வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமப்புறங்களில் டாக்டர்கள் ஆஸ்பத்திரிக்குச் சரியான நேரத்தில் வராமல் இஷ்டப்படி வருவதாகத் தெரிகிறது. அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

தஞ்சை ஜில்லாவில் பொற்கொல்லர்கள் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வேலை தரவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புத் தந்த கனம் உதவி சபாநாயகருக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

*திரு. கே. பி. பழனிசாமி: கனம் உதவித் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1963-64-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து நான் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம் நாடு சுதந்திரம் அடைந்திருக்கும் இந்தப் பதினைந்து ஆண்டுகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று நாம் கூறுவதற்கில்லை. முன்னேற்றம் கண்டிருக்கிறோம் என்பதை யாரும் மறைக்க முடியாது. சுதந்திரம் அடைவதற்கு முன்பு நாட்டில் 17 சத விகிதத்தினர் படித்தவர்களாக இருந்தார்கள். ஆனால், சுதந்திரம், அடைந்ததற்குப் பிறகு, இந்த பதினைந்து ஆண்டுகளில், 30 சத விகிதத்தினர் படித்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. நம் நாட்டிலுள்ள பல தொல்லைகள் நீங்கி, பல திட்டங்களை உருவாக்கி நம் நாட்டின் முன்னேற்றத்திற்கான பல காரியங்களை நாம் செய்திருக்கிறோம்.

ரெவினியூக் கணக்கில் வரவு 124 கோடியே 45 லட்சம் ரூபாய் என்றும், செலவு 127 கோடியே 19 லட்சம் ரூபாய் என்றும் மதிப்பிட்டு, ரெவினியூக் கணக்கில் 2 கோடியே 74 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் துண்டு விழும் தொகையைச் சரிகட்டுவதற்கு இப்பொழுது வரி விதித்திருக்கும் திட்டத்தின் பிரகாரம், அடுத்த வருஷம் துண்டு விழுவதையும் சரிக்கட்ட முடியுமென குறிப்பிடப்படுகிறது. யுத்தகால அவசர நிலைமையின் காரணமாகத் திட்டங்கள் குறைந்துவிடுமோ என்று பயப்பட்டோம். ஆனால், அத்தகைய நிலை இல்லாமல், திட்டத்திற்கு எந்தவிதமான குந்தகமும் இல்லாமல், நாட்டின் திட்ட வேலைகளை அப்படியே நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. நம் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் தொல்லைகளைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கு மாத்திரந்தான் என்று நாம் நினைக்காமல், மாநில சர்க்காருக்கும் கடமை இருக்கிறது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். அதற்காக எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டில் வரி அதிகமாக இருக்கிறது என்று சிலர் சொல்கிறார்கள். வரி இல்லாமல் திட்டமிட்டப்படி காரியங்களைச் செய்ய முடியாது; எந்தச் சர்க்காராக இருந்தாலும், பொது மக்களிடமிருந்து வரியைப் பெற்றுத்தான் ஆக வேண்டும். அப்படிச் செய்யும்போது, சக்தியுடையவர்களிடமிருந்து வரி வாங்கி, சக்தி இல்லாத ஏழைகளுக்குப் பயன் ஏற்படும்படி காரியங்கள் செய்யப்படுகின்றன. அதன் காரணமாக ஒருசில இடங்களில் ஒருசில குறைகள் இருக்கலாம். அவற்றைப் பொருட்படுத்தாமல் நம்முடைய நாட்டுக்கு வேண்டிய நல்ல திட்டங்களை உருவாக்குவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம் நாட்டின் ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்கு ஹரிஜன மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்றால், அவர்கள் நல்ல முறையில் கல்வி வசதிப்பெற்று



முன்னேற்றம் அடைவதோடு கூட, அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைவதற்காகப் பல தொழில்களைக் கூட்டுறவு முறையில் அவர்களுக்குச் செய்து கொடுப்பது சர்க்காரின் கடமையாகும்.

தமிழ்நாட்டில், மாத்திரம் 14,000 கிராமங்களுக்கு மின்சார வசதி விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. பம்ப் செட்களுக்கும், மற்றவற்றிற்கும் மின்சாரம் கொடுப்பதன் காரணமாக கிராமங்கள் முன்னேற்றம் அடைவதோடு உணவு உற்பத்தியும் பெருகியிருக்கிறது. இருந்தாலும் சில இடங்களில் வேலை கிடைக்காத நிலைமையும் இருக்கிறது. பொற்கொல்லர்களுக்கு இப்பொழுது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கஷ்டத்தை நாம் எல்லோரும் சொல்கிறோம். அதேமாதிரி, நம் நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள், ஹரிஜன மக்களில் ஒரு பகுதியினர் கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் பறிகள் பட்டுப்போய் வேலை இல்லாமல் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு போய்க் கொண்டிருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று சேலம், கோவை போன்ற இடங்களிலிருந்து தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டாயமாக உதவி செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன். விவசாயிகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பு போன்றவர்கள். விவசாயத்திற்கே தூண் போன்றவர்கள் அவர்கள். அத்தகைய ஹரிஜன மக்களுக்கு அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கோவை ஜில்லா 33 லட்சம் ஜனத்தொகை கொண்டது. குறிப்பாக, கோவை நகரத்தில் ஏறத்தாழ நான்கு லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. 25, 30 ஆண்டுகளுக்கு முன்பு கோவை நகரத்தில் 30,000 ஜனத்தொகை இருந்த கணக்கை வைத்துக்கொண்டு அப்பொழுது அதற்கேற்ற வகையில் ரிசர்வாயர் முதலியவற்றைக் கட்டினார்கள். கோவை நகரத்தை அடுத்துள்ள ரூரல் பகுதிகளும் அத்துடன் குடி தண்ணீர் வசதிக்காக இணைக்கப்பட்டிருக்கின்றன. பெருகி வந்திருக்கும் ஜனத்தொகைக்கேற்ப குடி தண்ணீர் வசதி செய்யும் பொருட்டு, இப்பொழுதுள்ள ரிசர்வாயரை அகலப்படுத்துவதோடு ஆழப்படுத்தவும் வேண்டும். கேரள அரசாங்கத்துடன் நம்முடைய சர்க்கார் நல்ல முறையில் பேச்சு வார்த்தை நடத்தி, குடி தண்ணீர்த் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதுபற்றி ஒவ்வொரு ஆண்டும் நான் சொல்லி வருகிறேன். ரூரல் பகுதியில் பெரிய பஞ்சாலைகளும், இரும்புச் சாமான்களும் செய்யக்கூடிய ஆலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்படி முன்னேற்றம் அடைந்துள்ள பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இந்த யோசனையை சென்ற பட்ஜெட்டின் போதும் குறிப்பிட்டிருக்கிறேன். சிறுவாணியிலிருந்து கிடைக்கும் தண்ணீர் போதவில்லையென்றால், மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்யவேண்டும். பவானி 22 மைல் தூரத்தில் இருக்கிறது. மேட்டுப்பாளையத்திற்கும் கோயமுத்தூருக்கும் இடையில் பெரியநாய்க்கன்பாளையத்

[திரு. கே. பி. பழனிசாமி] [6th March 1963

தில் ஒரு ப்ரெஸ் இருக்கிறது. அதற்குச் சுமார் 7 லட்ச ரூபாய் செலவிட்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்குப் பவானியாற்றிலிருந்து தண்ணீர் சப்ளை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைக் கோவை வரையில் விரிவுபடுத்த வேண்டும். பப்ளிக் காண்ட்ரிப்யூஷனோடு சர்க்காரும் பணம் கொடுத்து, நல்ல முறையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், கோவை நகரத்திற்கும் அடுத்துள்ள ரூரல் பகுதிக்கும் குடிதண்ணீர் கிடைக்கும். ரூரல் ஏரியாவில் பஞ்சாயத்துக்களில் 35,000 ஜனத்தொகை இருக்கிறது. அந்தப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும் நல்ல முறையில் குடிதண்ணீர் வசதி செய்யவேண்டுமென்று நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடு கூட தற்காலிகமாகக் கோவையை அடுத்த குறிச்சி முனிசிபாலிடியாக இருந்தது, பஞ்சாயத்தாக இருக்கிறது. முப்பத்தைந்தாயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ள இடம். குடிதண்ணீர் வசதியே இல்லாத இடம். குடிதண்ணீர் வசதி எவ்வாறு செய்துகொடுக்கலாம் என்பதை இன்வெஸ்டிகேஷன் செய்வதற்கு 670 ரூபாய் டெபாசிட் செய்திருக்கிறோம். நொய்யல் நதியில் இருந்து கோவைக்குத் தென்புறம் உள்ள இடத்தில் போர் குழாய்கள் மூலம் தண்ணீர் சப்ளை செய்ய வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமாத்திரம் அன்று. ஹரிஜனங்களுக்குப் பல சலுகைகள் செய்து வருகிறோம். விவசாயக் கடன் மானியம் கொடுக்கிறோம். உழவு மாடு வாங்கக் கடன் ரூ. 400 கொடுக்கிறோம். இவை எல்லாம் இப்போது இனாமாக கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் 1953-54-ல் கடனாகக் கொடுத்தார்கள். அந்தக் கடனை இப்போது திருப்பி வசூலிக்கிறார்கள். ஹரிஜனங்களோ திரும்பக் கொடுக்கும் நிலையில் இல்லை. இனாமாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள், ஆனால் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள், அது கடனாக என்று இப்பொழுது விவசாயிகள் கேட்கிறார்கள். சில கிராமத்தில் அந்தக் கடனை வசூலிக்க ஜப்தி நடவடிக்கை கூட எடுக்கப்படுகிறது. தயவு செய்து அந்தக் கடனை ரைட் ஆப் செய்துவிட வேண்டும். அதனால் ஐந்து அல்லது பத்து லட்சம் வரலாம். நாம் இப்போது இனாமாகத்தான் கொடுக்கிறோம். அதைப்போலவே அந்தப் பழைய கடனையும் ரத்து செய்தால் தான் ஹரிஜனங்களுக்குச் சங்கடம் இல்லாமல் இருக்கும். ஹரிஜனங்கள் விஷயத்தில் இந்த உதவியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கோவை நகரம் தொழில் பிராந்தியமாக வளர்ந்துவிட்டது. ஜனத்தொகை நெருக்கம் வேறு. ஹவுஸிங் போர்டில் கூட அந்த நகரத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுவதாக அறிகிறேன். விளைச்சல் அதிகமாக இல்லாத டிரை லாண்டுகளில் வீடுகள் கட்டிக் கொடுக்க முதலில் ரோடு வசதியும், தண்ணீர் வசதியும் செய்து கொடுத்துவிட்டால் போதும். மக்கள் தாமாகவே அங்கு போவார்கள் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



6th March 1963]

* திரு. கோ. சி. மணி: மன்ற உதவித் தலைவர் அவர்களே, இங்கே நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையின் மீது இன்றைய தினம் பொது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த அன்றைய தினம்—அவர் தம் உரையை இந்த அவையில் 65 நிமிட நேரம் நிகழ்த்த, இறுதியில் புதிய வரிகள் எதுவும் இல்லாத அறிக்கை இது என்று அவர் குறிப்பிட்ட போது சபையில் இருந்த ஆளும் கட்சியினர் கைத்தட்டி அறிக்கையை வரவேற்று மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்தார்கள். அப்படித் தெரிவித்ததைக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, சபையை விட்டு வெளியேறியவுடனே, புதிய வரிகள் எதுவும் அரசாங்கம் போடவில்லை என்ற நிறைவுடனே வீதிக்குச் சென்று, கடைக்குச் சென்று சிகரெட்டு கேட்டால் 3 புதுக் காசுகள் விற்ற சிகரெட்டு 4 புதுகாசாகவும், ஐந்து காசு விற்றது ஆறு காசாகவும், காசைக் கொடுத்தாலாவது தருவாயா என்றால் கொஞ்சம் பொருத்திருந்து பாருங்கள் என்று கூறும் நிலைமைக்கு வந்துவிட்டது இந்த சிகரெட். சிகரெட் தான் போகட்டும். சிகரெட் குடிப்பவர்கள் அதை நிறுத்திக்கொண்டால் நல்லது தானே என்று கேட்கலாம். கிராமங்களில் மண்ணெண்ணெய்—சுத்தம் செய்யப்படாதது 7 சதவிகிதம் என்றும், சுத்தம் செய்யப்பட்டது 10 சதவிகிதம் என்று விலை கூட்டப்பட்டதனால் பத்துப் புதுகாசுகள் ஒரு பாட்டில் தலையில் விழுந்திருக்கிறது. கேட்டால் இந்த மந்திரி சபைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லையென்று சொல்லலாம். இந்த மந்திரி சபை அந்த வரிகளைப் போடாது இருக்கலாம். ஆயினும் வரி யார் போட்டதாக இருந்தாலும் அந்த வரியைக் கட்டுகிற மக்கள் நம் மாநில மக்கள் தான். மத்திய அரசு விதிக்கிற வரி என்பதனால் யாரோ எங்கோ இருக்கிற மக்கள் அதைக் கொடுக்கப் போவதில்லை. நம்முடைய அரசியல் அமைப்பு இவ்வாறு அமைந்திருக்கிறது. ஆகவே தான் இதைப்பற்றி வெளியிலும் பலவேளைகளில் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம், இப்படிப்பட்ட அரசியலமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென்று; இவ்வாண்டு வரிகள் எதுவுமே விதிக்கவில்லை என்று இந்த அரசு சொன்னாலும் மத்திய அரசு விதிக்கிற வரி இந்த மாநில மக்களையே பாதித்திருக்கிறது. அதோடு இந்த அரசு வரியே விதிக்கவில்லையென்று சொல்லவும் முடியாது. சென்ற மாதம் 27-ம் தேதி பட்ஜெட் வருவதற்கு முன் கூட்டியே நிலத்திற்கும், தண்ணீர்க்கும் இவர்கள் வரி விதிக்கக்கூடிய சட்டத்தை இயற்றினார்கள். சென்ற ஆண்டு நிறைவேற்றப்படவேண்டிய சட்டம் என்றாலும் சென்ற ஆண்டு தொகையும் சேர்த்து இவ்வாண்டு அந்த வரி விதிக்கப்பட இருக்கிறது. ஆகவே புதிய வரிகள் இல்லாமல் இல்லை. இன்னும் ஒரு சில வரிகள் இடைக்காலத்தில் வந்தாலும் வரலாம் என்பது சூசகமாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. வரி போடவில்லை என்று சொல்கிற அரசாங்கம் மத்திய அரசின் வரிகள் எதுவும் இந்த மாநிலத்தில் வசூலிக்கப்படமாட்டாது என்றாவது விலக்கு பெற்றிருந்தால் ஓரளவு இவர்கள் கூற்று உண்மையாகும். அப்படிச் சொல்ல நமக்கு அதிகாரம் இல்லை. ஆகவே அவதிப்படுகிறவர்கள் நம் மாநில மக்கள் தான். ஒன்று சொல்ல விரும்புகிறேன். எத்தனையோ காரியங்களுக்கு யோசனை கேட்கிறவர்கள் இந்த ஒரு

[திரு. கோ. சி. மணி] [6th March 1963

விஷயத்தில் எதிர்க் கட்சிக்காரர்களோடு கலந்து கொண்டிருந்தால் என்ன ? ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் வருகிறது என்றால் மக்கள் நடுங்குகிறார்கள். மார்ச் மாதம் எப்போது வரப் போகிறது என்று வியாபாரிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் என்ன ? மார்ச் மாதம் வந்தால் நிதி நிலை அறிக்கை வரும், நிதி நிலை அறிக்கை வந்தால் புது வரிகள் விதிக்கப்படும். வரியினால் பொருள்களின் விலை கூடும். பொருள்களுக்கு கிராக்கி ஏற்படும். கிராக்கி வந்தால் எப்பொருளை, எப்படி வேண்டுமானாலும் விற்கலாம் என்று எண்ணியே வியாபாரிகள் பண்டங்களைப் பதுக்கல் செய்ய ஆரம்பிக்கிறார்கள். இப்படிப் பதுக்கல் வியாபாரத்தை வளர்த்துவிட்டது அரசாங்கமே தவிர வியாபாரிகள் அல்ல என்று நிச்சயமாகக் கூற விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் புது வரிகள் என்று போடுகிற காரணத்தால் தான் வியாபாரிகளை இந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது அரசாங்கம்.

இன்னும் நிதி நிலை அறிக்கையில் விவசாய அபிவிருத்திக்கும், ஹரிஜன அபிவிருத்திக்கும், பாதை அபிவிருத்திக்கும் இந்த நெருக்கடி நேரத்திலும் தொகை ஒதுக்கிச் செலவிட்டு வருகிறோம் என்றும் அது காரணமாக இரண்டு கோடி இருபத்து நான்கு லட்சம் துண்டு விழுகிறது என்றும் இருந்தும் துணிவோடு, திறனோடு இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எப்படியிருந்தாலும் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ஒவ்வொரு இனத்திலும் போதாததுதான். ஹரிஜன அபிவிருத்தி என்று எடுத்துக் கொண்டால் இன்றைக்குப் பெரும்பாலும் ஹரிஜனங்கள் வயல் வெளிகளில் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு ரோடு வசதி இல்லை, விளக்கு வசதி இல்லை, மேலும் இன்னொருவருக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருக்கிறார்கள். நினைத்தால் எந்த நேரத்திலும் அவர்களை வெளியே அப்புறப்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. குடிசைகளிலிருந்து ஹரி
10-00 a.m. ஜனங்களை அப்புறப்படுத்தக் கூடாது என்பதற்காகத் தனியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இணைப்புச் சாலைகளைப் பற்றிக் கூற விரும்புகிறேன். ஆதித் திராவிட மக்கள் வசிக்கும் தெருவுக்கும், பொதுச் சாலைக்கும் இடை வெளியாக நஞ்சை நிலங்களும், புஞ்சை நிலங்களும் தான் இருக்கின்றன. அவர்கள் வரப்பின் வழியாகத்தான் நடந்து வர வேண்டியிருக்கிறது. என்னுடைய தொகுதியில், இப்படிப்பட்ட நிலையில் சுமார் அறுபது கிராமங்கள் இருக்கின்றன. ஹரிஜன நல இலாகாவில் இருக்கும் அதிகாரிகள் இந்தக் கிராமங்களுக்கு வந்து பரிசீலனை செய்து இணைப்புச் சாலைகள் இல்லாமல் இருக்கும் பகுதிகளில் சாலைகளை அமைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நடக்கின்ற மனிதர்கள் செல்லத்தான் பாதை வசதி இல்லையென்றால் பிரேதங்களுக்குக் கூட,—பிரேதங்களை மயானத்துக்குச் சுமந்து செல்லக் கூட—பாட்டை வசதி இல்லை. தற்போது ஜாதி இந்துக்களுக்கு



6th March 1963] [திரு. கோ. சி. மணி]

உரிமையான நிலங்களின் வழியாகத்தான் மயானத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள், அந்தப் பாதை வழியாகப் பிரேதத்தைச் சுமந்து செல்ல அனுமதியளிக்கிறார்கள். ஒரு சமயம் மறுத்து விடுகிறார்கள். இதன் காரணமாக சௌஜன்யமான நிலைமை மாறி, கலகம் ஏற்பட்டு போலீசார் வந்து அதைத் தீர்க்கக் கூடிய நிலைமைகள் உருவாகின்றன. என் தொகுதியில் குணதலப்பாடி என்ற சிற்றூரில் ஜாதி இந்துக்களின் நிலத்தின் வழியாக பிரேதங்களை எடுத்துச் செல்வதைத் தடுத்ததன் காரணமாகப் பெரிய கலகம் உண்டாகி, போலீசார் வந்து அதைத் தடுத்து நிறுத்தினார்கள். ஒரு குணதலப்பாடி அல்ல, பல கிராமங்களில் இந்த நிலைமை உண்டாகி சமரசம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆதித் திராவிட மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து இணைப்புப் பாதைகளை அமைத்துக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத் திட்டத்தைப் பற்றி பெருமையாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டம் நல்ல வளமான பகுதி என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அங்கே அபிவிருத்தித் திட்டம் சரியாக அமல் செய்யப்படவில்லை. எண்ணெய் வித்துக்கள், பருத்தி போன்றவைகளை இடையிடையே மகசூலில் சேர்த்துப் பயிரிடுவதைக் கட்டாயமாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். விவசாய இலாகாவில் டெமான்ஸ்ட்ரேட்டர்கள், மேஸ்திரிகள் ஃபீல்டு மேன்கள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஐந்தாண்டுக் காலமாக அவர்கள் வேலை பார்த்து வந்தும் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்களை இப்போது திடீரென்று நீக்கி விட்டால் அவர்கள் வேறு வேலைக்குக் கூடப் போக முடியாத நிலைமையில் அவர்களுக்கு வயது 30 ஆகிவிட்டது. 25 வயதிலேயே அவர்கள் வேலைக்குச் சேர்ந்தவர்கள். அவர்களை நிரந்தரமாக்குவதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் இந்த அறிக்கையிலே உர வகைகளைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 31 லட்சம் டன் அளவுக்குக் கிராமக் குழி வளம் உற்பத்தியாகுமென்று எதிர்பார்ப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. பசுந்தாள் உர விநியோகம் 3,000 டன் வரை உயரும் என்று எதிர்பார்க்கிறார்கள். அமைச்சர்கள் இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் மனதிலே வைத்து சிந்திக்க வேண்டும். கிராமங்களிலே உரக் குழிகள் வெட்டப்பட்டிருக்கின்றனவே தவிர அவற்றில் உரம் இல்லை. இதற்காகச் செலவழிக்கும் பணம் அத்தனையும் வீரயமாகிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சிந்தித்து, வீண் விரயத்தைத் தடுத்து, விவசாயம் பெருக ஊக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நாட்டின் நெருக்கடியான நிலைமையில் பொறுப்பு அதிகமாக இருந்தும் கூட, அதன் காரண

மாகச் செலவு அதிகமாக இருந்தும் கூட, புது வரிகளைப் போடாமல் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருப்பதற்காக என் தொகுதி மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி இருந்தும் கூட, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், 'வரி போட ஒன்றுமே இல்லை, எல்லா வரிகளையும் அரசாங்கம் ஏற்கனவே போட்டு விட்டது' என்று பேசியிருக்கிறார்கள். மற்றும் அரசாங்கம் செய்து வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களைப்பற்றியும் குறை கூறினார்கள். எதிர்க் கட்சியில் இருக்கக் கூடிய காரணத்தால் எல்லாவற்றையும் எதிர்த்துப் பேசிக் கொண்டே இருக்க வேண்டுமென்ற காரணத்தால் குறை கூறிக் கொண்டிருக்கிறார்களே தவிர, நன்றாக அவர்கள் ஆலோசித்துப் பார்த்தால் அவர்கள் அரசாங்கத்தை மெச்சத்தான் வேண்டியிருக்கும்.

முக்கியமாக இந்த பட்ஜெட்டில் கல்விக்காக 29 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் கல்வி அறிவு பெற்றிருந்த மக்களின் எண்ணிக்கையையும், இப்போது கல்வி கற்று வரும் மக்களின் எண்ணிக்கையின் பர்சன்டேஜையும் கணக்கிட்டுப் பார்த்தால், எந்த அளவுக்கு கல்வியில் மக்கள் முன்னேற்றம் அடையவேண்டுமென்பதற்காக முயற்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது என்பது தெரியும். அது போற்றத்தக்கதாகும். பொதுக் கல்வியுடன் டெக்னிகல் கல்வியிலும் முன்னேற்றம் கண்டு வருகிறோம். இந்தத் துறையில் மேலும் அரசாங்கம் நல்ல பணி புரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் நல்ல வெற்றி கண்டிருப்பது எலக்ட்ரிசிடி உற்பத்தியைப் பொறுத்ததாகும். அதற்காக முன்பு இருந்த அமைச்சரையும், டிப்பார்ட்மெண்டையும், இப்போதிருக்கும் அமைச்சரையும் நாம் போற்றத்தான் வேண்டும். பொருளாதார அடிப்படையில் உண்டான வளர்ச்சிக்கு முக்கியமாக உள்ள டிப்பார்ட்மெண்ட் எலக்ட்ரிசிடி டிப்பார்ட்மென்ட். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மக்களின் சராசரி மின்சாரச் செலவு ஏழு யூனிட். இப்போது அது 70-ல் இருந்து 75 வரை உயர்ந்திருக்கிறது. இந்த நிலை மிகவும் போற்றத்தக்கது. விவசாயத் தொழில், பெரிய தொழில், சிறிய தொழில், குடிசைத் தொழில் எல்லாவற்றுக்கும் இப்பொழுது எலக்ட்ரிசிடி உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வளவு தூரம் உயர்ந்திருந்தும்கூட மின்சாரத்தைப் பொறுத்த வரை நாம் இன்னும் பற்றாக்குறையில்தான் இருந்து கொண்டிருக்கிறோம். இது எதைக் காட்டுகிறது என்றால் பொருளாதார வளர்ச்சியைத்தான் சுட்டிக் காட்டுகிறது. இன்னும் இரண்டு பெரிய ஸ்கீம்களை எடுத்துக்கொள்ள எலக்ட்ரிசிடி டிப்பார்ட்மென்ட் பரிசீலனை செய்து வருகிறது. அதுவும் அல்லாமல் மகாபலிபுரத்துக் கருகில் அணு மின்சக்தி நிலையம் ஒன்று அமைப்பது பற்றியும் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அமைப்பதில் மேலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இப்போது 'இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட்' டைப் பார்த்தால் பிரமிக்கத்தக்கதாக இருக்கிறது. மற்ற டிப்பார்ட்மெண்டுகளின் வளர்ச்சியினைப்பற்றிப் புள்ளி விவரங்கள் கொடுத்திருப்பதைப் போல் இந்த டிப்பார்ட்மெண்டின் வளர்ச்சியைப் பற்றியும்—ஒவ்வொரு வருஷத்திலும் பெரிய தொழிற்சாலைகள், சிறிய தொழிற்சாலைகள், நடுத்தரத் தொழிற்சாலைகள், குடிசைத் தொழில்கள், எந்த அளவுக்கு மாகாணத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் துவங்கப்பட்டன, அவற்றின் முதலீடு என்ன என்பதற்கான புள்ளி விவரங்களைக் கொடுத்தால் அதன் மூலம் தொழில் வளர்ச்சியில் எந்த் அளவுக்கு அபிவிருத்தியடைந்திருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். அந்த விவரங்களையெல்லாம் அரசாங்கம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது நம் முன் ஒரு முக்கிய பிரச்னை இருந்து வருகிறது. நாட்டின் நலனுக்காகத் தங்கக் கட்டுப்பாடு கொண்டு வந்தாலும் கூட அதில் வேலை செய்து வந்த "கோல்ட்ஸ்மித்கள்" இன்று லட்சக்கணக்கானவர்கள் வேலை இன்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் கவர்னர் உரைமீது பேசுகின்ற நேரத்தில், அவர்களின் நிலையை சீர்திருத்தி அமைக்க அரசாங்கம் முன்வர வேண்டும், அதில் அரசாங்கம் போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். அத் தொழிலில் ஈடுபட்டிருந்த லட்சக்கணக்கானவர் இன்று வேலை இன்றித் திரிந்து வருவதைப் பார்க்கும்போது பயங்கரமாகவும், வருத்தப்படும் நிலையில் இருக்கிறது. அவர்கள் நல் வழி காண, அவர்கள் அடைந்து வந்த அதே வருமானத்தை அவர்கள் அடைய, வேண்டிய வழிவகைகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, சென்ட்ரல் பட்ஜெட்டைப் பற்றி இச் சபை முன்பு விவாதிப்பது தவறு என்றாலும் அவர்கள் போட்டிருக்கிற வரிகளினால் நம் ஸ்டேட் பாதிக்கப்பட்டிருக்கிறது. கார்ப்பரேட் டாக்ஸ் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் நடுத்தரத் தொழில்கள், சிறிய தொழில்கள் அமைக்க கஷ்டப்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதோடு அல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வரக் கூடிய முதலீடுகள் அதிகமாக வருமோ வாராதோ என்ற பயம் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு 8 அணா கொடுத்தது போக மீதியுள்ள வருமானத்தில் 6 சதவிகித வட்டி சொந்த முதலீட்டிற்குப் போட்டு அதைக் கழித்து மீதியுள்ளதில் இரண்டு ஸ்லாப்களாக டாக்ஸ் போடுகிறார்கள். இது சிக்கலான பிரச்னை. இதற்குப் பதிலாக ஒரேயடியாக 8 அணாவிற்குப் பதில் 10 அணா என்று டாக்ஸ் போட்டால் இந்தச் சிக்கலான பிரச்னைகள் எல்லாம் தீர்ந்து விடும். அதனால் காப்பிடல் பார்மேஷனும் அதிகமாக ஏற்படும். வெளிநாடுகளிலிருந்து அங்குள்ளவர்கள் இங்கு வியாபாரத்திற்காகப் பணம் கொண்டு வரும் கஷ்டநிலையும் நீங்கி அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

[கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப்] [6th March 1963

பின்னர் மதராஸ் சிட்டியில் ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் நல்ல முறையில் நடந்தாலும் அதில் சில கஷ்டங்களும், சிக்கலான பிரச்னைகளும் இருந்து வருகின்றன. பேவ்மென்ட் ட்வெல்லர்ஸ் என்று இருக்கிறார்கள். அவர்களை நகர்புறத்திலிருந்து இரண்டு மூன்று மைல்களுக்கு அப்பால் கொண்டு போய் வசதியான இடத்தில் இருக்க வைத்தாலும் அவர்கள் அங்கு 15 நாட்கள், ஒரு மாதம் இருந்து விட்டு பின்னர் அங்கு வேறு ஆள்களை வாடகைக்கு வைத்து விட்டு திரும்பப் பழைய இடத்திற்கே வந்து விடுகிறார்கள். அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஒரு இடத்திலிருந்து காலி செய்து விட்டு வேறு ஒரு இடத்திற்கு அப்புறப்படுத்தி விட்டால் அவர்கள் அப்புறப்படுத்தப்பட்ட இடங்களில் இருக்க வேண்டுமே தவிர பழைய இடத்திற்கு அவர்கள் திரும்ப வாராதபடி அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த ஸ்லம் இம்ப்ரூவ்மென்டை வெகு சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் நகரப்புறங்களில் இந்த ஸ்லம்ஸ் இருப்பதைப் பார்த்தால் பயங்கரமாக இருக்கிறது. நன்கு வாழக் கூடியவர்களுக்குக் கூட இந்த ஸ்லம்ஸ் தீங்கு விளைவிக்குமோ என்ற பயம் இருக்கிறது. அப்படியிருக்கும்போது இந்த ஸ்லம் இம்ப்ரூவ்மென்டுக்கு முக்கியத்துவம் அளித்து அவைகளைச் சீர்திருத்தியமைத்து அந்த மக்களுக்கும் நல் வாழ்க்கை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பின்னர் ஹெல்த் டிப்பார்ட்மென்டுக்காக ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். லான்ஜிவிட்டி அதிகமாகி மார்டாலிட்டி ரேட் குறைந்திருந்தாலும் கூட நகரங்களில், டவுன்களில் தொத்து நோய் உள்ளவர்கள் அதிகமாக இருந்து வருகிறார்கள். அப்படித் தொத்து நோய் உள்ளவர்களை மக்களிடை வாராமல் தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அராங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. பி. பழனி: மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து வரவேற்று நன்றியுரையாக ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்கிற வாய்ப்பு கிடைத்தமைக் குறித்து நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். ஒரு நல்ல நாட்டிற்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர்,

> "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேராதியல்வது நாடு."

என்று அழகாகச் சொல்லியிருக்கிறார். அதேபோல் நம் அரசாங்கம் மக்களுக்குள்ள பசியைப் போக்கி, பிணியைப் போக்கி நமக்கு ஏற்பட்டுள்ள பகையை அழிக்கக்கூடிய அளவிற்கு அருமையான திட்டங்களைக் கொண்டு இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பல்வேறு சிறப்பான அம்சங்களைக் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டிருக்கிறது. திட்டத்தைத் தீவிரப்படுத்தல், பாதுகாப்புப் பணியை பலப்படுத்தல், மத்திய அரசாங்கத்தின் நிதிநிலைமையை அனுசரித்துத் திட்டங்களைத் தயாரித்தல் போன்ற மூன்று வகை முக்கிய



6th March 1963] [திரு. கே. பி. பழனி]

கருத்துக்களின் பின்னணியில் நம் திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். அடுத்தபடியாக பல அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டியதுபோல், மத்திய அரசாங்கம் விதித்திருக்கும் வரிப் பளுவைத் தாங்குவதற்கு மக்கள் கஷ்டப்படும் இச் சூழ்நிலையில் நம் பட்ஜெட் வாயிலாக நம் நிதி அமைச்சர் அவர்கள் மூவிங் ஸ்பேஸ் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் பட்ஜட்டின் ஒரு சிறப்பான அம்சமாகும். சீன நாட்டு ஆக்கிரமிப்புக் குறித்து பல்வேறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.. அதில் ஒன்று நம் திட்டங்களைக் குலைக்க வேண்டும் என்பதாகும். உலகில் சர்வாதிகார நாடுகளில்தான் திட்டமிட்ட பொருளாதாரம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் ஜனநாயக நாடுகளிலும் திட்டமிட்ட பொருளாதாரம் வெற்றி பெறும் என்ற புதிய ஒரு தத்துவத்தை உலகத்திற்கு அளித்த நாடு நம் நாடு. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் பார்க்கும் நேரத்தில் திட்டத்தின் அடிப்படையில் நம் தேசீய வருமானமானது 13 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் தேசீய வருமானமானது 29 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டால் நம் தேசீய வருமானமானது 42 சத விகிதம் உயரும் என்று நம்பப்படுகிறது. நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இந்திய நாடு பொருளாதாரத் துறையில் எவ்வாறு இருக்கும் என்பதைப்பற்றி ஒரு பொருளாதார மேதை கீழ்க்கண்டவாறு அழகாக எழுதுகிறார் :

'After the completion of the Fourth Plan, the problem of India would not be the problem of poverty but of plenty.'

நான்காவது திட்டம் நல்லமுறையில் நிறைவேற்றப்பட்டு செயல்பட்டு விட்டால் இந்தியாவில் இருக்கக்கூடிய பிரச்னை வறுமையின் அடிப்படையில் உள்ள பிரச்னையாக இருக்காது, அபிவிருத்தியின் அடிப்படையில் உள்ள பிரச்னையாக இருக்கும் என்று சொல்கிறார். இப்படி ஒரு ஜனநாயக நாட்டில் திட்டமிட்ட பொருளாதாரத்தை வெற்றிகரமாக நடத்திவரும் இந்தியாவின் திட்டத்தைக் குலைக்க வேண்டுமென்று சீன நாடு போர்க் கோலம் பூண்டு இருக்கிறது என்று ஒரு சில அரசியல் சிந்தனையாளர்கள் எண்ணுகிறார்கள். இச்சூழ்நிலையினால் நம் நாட்டில் இருக்கக்கூடிய ஒரு சில அரசியல் தலைவர்கள் பல நாட்களாகவே திட்டம் தேவையற்றது, திட்டம் வெட்டப்பட வேண்டும் என்றெல்லாம் பேசி வருகிற நேரத்தில் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்தக்கூடிய அளவிற்கு நம் அரசாங்கம் உருவாக்கியிருப்பது பாராட்டத் தக்க தொன்றாகும்.

அடுத்தபடியாக, இப்போது பாதுகாப்புப் பணியைப் பலப்படுத்த, விசேஷ ஆயுதப்படை, மாணவ ராணுவப் பயிற்சி போன்ற பாதுகாப்புப் பணிகளுக்குக் கணிசமான அளவுத் தொகை ஒதுக்கி இருப்பது உண்மையிலே பாராட்டத்தக்க செய்தியாகும். இந்த

[திரு. கே. பி. பழனி] [6th March 1963

நெருக்கடி நேரத்தில்கூட டெவலப்மெண்ட் ப்ரோக்ராம் என்று சொல்லக்கூடிய அபிவிருத்தி வேலைகளைக் குடி தண்ணீர், இணைப்புச் சாலை அமைப்பு, புதிய பள்ளிகளை கட்டுதல் போன்ற அம்சங்களைத் திட்டத்தில் எடுத்துக் கொண்டிருப்பது உண்மையிலே வரவேற்கத் தக்கதொன்றாகும். நம் அரசாங்கம் வெல்பேர் ஸ்டேட் என்று சொல்லக்கூடிய க்ஷேம நல அரசாங்கம் ஆகும். அதை வலியுறுத்துவது போல முதியோர் பென்ஷன், ஏழை மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுத்தல் போன்ற காரியங்களுக்காக கணிசமான அளவு தொகை திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது உண்மையிலே பாராட்டத்தக்க தொன்றாகும்.

கல்வித் துறையில் நாடு அடைந்துள்ள கணிசமான முன்னேற்றத்தைப் பற்றி பல மதிப்புக்குரிய அங்கத்தினர்களும் எடுத்துச் சொன்னார்கள். சங்க காலத்தில் கல்விக்கு இல்லாத சிறப்பு—முடியுடை மூவேந்தர்கள் கொடி கட்டிக் கோலோச்சிய அந்த நாளில் கல்விக்கு இல்லாத சிறப்புகூட—இன்று நம் அரசாங்கத்தில் கல்வித் துறையில் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அந்த நாளில், பொற்காலம் என்று சரித்திர வரலாற்றிலே எழுதப்படுகிற அந்த நாளில்—

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல்நன்றே"

என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினார் புலவர். ஆனால் இன்று அரசாங்கத்தின் கல்விக் கொள்கையைப் பார்க்கின்ற நேரத்தில்—

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்பித்தல் நன்றே

என்று சொல்லக் கூடிய நிலையில் இன்று மாணவர்களைத் தேடிச் சொல்கின்ற பொறுப்பினை அரசாங்கமே மேற்கொண்டு மாணவர்களுக்குக் கல்விச் சலுகை அளித்து வருகிறது என்ற நிலைமையை கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்காத நிலையில் எதிர்க்கட்சி அன்பர்கள் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை இந்த மாமன்றம் உணரும்.

அடுத்தபடியாக, நம் மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள், வரி வசூல் செய்பவர் மட்டுமல்ல, நாட்டினுடைய உற்பத்தியைப் பெருக்குபவர், நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடுபவர் என்ற நிலைமையை இந்த பட்ஜெட்டின் வாயிலாக இந்த மாமன்றத்திற்கு எடுத்துக்காட்டியிருக்கிறார்.

அடுத்தபடியாகப் பல அன்பர்கள் எடுத்துச் சொல்லியதைப் போல நம்முடைய பாதுகாப்புப் பணி உண்மையிலேயே பலம்பெற வேண்டுமென்று சொன்னால், மூர்க்கத்தனமான எதிரி நம் மண்ணிலிருந்து விரட்டப்பட வேண்டுமென்று சொன்னால் நாம் நம்முடைய உற்பத்தியைப் பெருக்க வேண்டும். உலக வரலாறுகளைப் பார்க்கின்ற நேரத்தில் எந்த ஒரு நாடு இக்கனமிக் ஸ்டெபிலிட்டி என்று சொல்லுகிற பொருளாதார வலுவைப் பெற்றிருக்



6th March 1963] [திரு. கே. பி. பழனி]

கிறதோ அந்த நாடுகளே வென்றதாக கடந்த இரண்டு உலகப் போர்களும் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. பல அன்பர்கள் அழகாக திருவள்ளுவர் கூறியதைக் கூட எடுத்துச் சொன்னார்கள்.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃதனிற் கூரியது இல்—

என்று அழகாகச் சொன்னார்கள். அதே கருத்தைத் தான் நமது ஒப்பற்ற தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் "உழவர்களும், தொழிலாளர்களும் உடையணியாத சிப்பாய்கள்" என்று சொன்னார்கள். நம்முடைய சென்னை மாநில முதலமைச்சர் அவர்கள், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் படைத்த அவர்கள் அன்றொரு நாள் தஞ்சையில் "வெற்றி—போர் முனையில் இல்லை—ஏர் முனையில் இருக்கிறது" என்று அழகாக எடுத்துச் சொன்னார்கள். நாட்டுப் பாதுகாப்புப் பணி பலம் பெற வேண்டுமென்று சொன்னால் உற்பத்திப் பெருக்கமானது இன்றியமையாதது என்ற உண்மையை உணர்ந்து, இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய நாம் அத்தனை பேரும் நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கும், உற்பத்திப் பெருக்கத்திற்கும் நம்மால் ஆன பங்கினை—பணியினை—செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்று வரிப்பளு அதிகமாகியிருக்கிறது என்று அன்பர்கள் பலர் பேசினார்கள். அதைப்போலத் தங்கக் கட்டுப்பாடு குறித்தும் அன்பர்கள் பலவாறாகக் கண்டித்துப் பேசினார்கள். இங்கிலாந்து நாட்டினுடைய வரலாற்றை நாம் பார்க்கின்ற நேரத்தில், போர் நேரங்களில் அந்த நாட்டு மக்கள் எத்தகைய தியாகத்திற்கும் தயாராகியிருந்தார்கள் என்பதை வரலாறுகளை ஊன்றிப் படிப்பவர்கள் உணருவார்கள். இங்கிலாந்து நாட்டின் தட்ப-வெட்ப நிலைக்கு கோட்டும், சூட்டும் இன்றியமையாத இடம் பெறுகிறது. இரண்டாவது உலகப் பெரும் போர் நேரத்தில் இங்கிலாந்திலே வாழும் மக்கள் அணிந்திருக்கும் கோட்டில் உள்ளேயுள்ள சட்டையில் முன்புறத்தில் மட்டும் துணி இருக்கும். பின் புறத்தில் சட்டையில் துணி இருக்காது. அவர்களுடைய சிக்கனத்திற்கு, அவர்களுடைய தியாக சிந்தனைக்கு, நாடு போரிலே வெற்றி பெறவேண்டுமென்ற தேசப் பற்றுக்கு இஃதோர் எடுத்துக்காட்டு. அந்த அளவுக்கு அவர்கள் அணிகின்ற உடையிலே கூட ஒரு பகுதியை தேசியப் பாதுகாப்புத் திருப்பணிக்காகத் தியாகம் செய்துள்ள நேரத்தில், நம்முடைய நாட்டில் தங்கக் கட்டுப்பாடு குறித்தெல்லாம் அன்பர்கள் வருத்தம் தெரிவிக்கிறார்கள், கண்டிக்கிறார்கள் என்பது உண்மையிலேயே வருந்தத் தக்க ஒன்று ஆகும். இந்த நேரத்தில் நாடு பொருளாதாரத் துறையில் வெற்றி பெறுவதற்கும், அந்நிய ஏகாதிபத்திய மூர்க்கத் தனமான எதிரியை விரட்டியடிப்பதற்கும் எல்லா வகையான தியாகத்திற்கும் மக்கள் தயாராக, தேச பக்தி மக்கள் மத்தியிலே உருவாவதற்கு, நம் மாமன்றத்தில் இருக்கிற அங்கத்தினர்கள் அத்தனை பேரும் பொறுப்பு எடுத்து செயல்பட வேண்டுமென்று

கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் அழகாக உருவாக்கியுள்ள இந்த பட்ஜெட்டை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை வழங்க வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

10-20 p.m. திரு. எஸ். எஸ். ராஜேந்திரன்: மதிப்புக்குரிய சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் வைத்துள்ள 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பற்றி இந்த மன்றத்திலே பல அங்கத்தினர்கள் தங்களின் மேலான கருத்துக்களைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள். குறிப்பாக, ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள், தங்களது கருத்தைத் துவங்குகிற நேரத்திலேயே எதிர்க் கட்சிக்காரர்களை ஜாடையாகச் சிலர் கண்டித்தும், வன்மையாகச் சிலர் கண்டித்தும் உரையைத் துவக்கி, பிறகு இந்த அறிக்கையை பலமாக ஆதரிப்பது போல கருத்துக்களைச் சொல்லி, முடிக்கின்ற நேரத்திலே தங்களது குறைகளையும் சொல்லி முடித்திருக்கின்றார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அவர்கள் வைத்த கருத்துக்களிலே திட்ட வட்டமான சொற்களையும், புள்ளிவிவரத்தோடுகூடிய ஆதாரங்களையும் சுட்டிக் காட்டி இங்கே கூறியிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் ஒருவர் நேற்று பேசுகிற நேரத்தில், திராவிடமே மூச்சு என்று கூறியவர்கள் மூச்சை விட்டு விட்டார்கள். ஆனால் இந்த அறிக்கையை பலமாக எதிர்க்கிறார்கள். நெருக்கடியான நேரத்தில் இப்படி எதிர்க்கிறார்களே என்று மெத்த வருத்தப்பட்டுக் கொண்டார். நெருக்கடி என்கிற வார்த்தையை எது, எதற்குத்தான் உபயோகப் படுத்துவார்களோ, எனக்குத் தெரியவில்லை. சட்ட மன்றத்தைக் கூட்டிவைத்து, இது போன்ற நீண்ட அறிக்கையைப் படித்து, விவாதத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் தந்து, பிறகு இதைப் பற்றி குறைகூறுவதைக் கண்டிப்பது ஒரு புது விதமான ஜனநாயகம் போலும்.

அடுத்து, இன்னொரு கனம் அங்கத்தினர், எதிர்க் கட்சித் தலைவர் நெடுஞ்செழியனை பாராட்டி விட்டார், நன்றி தெரிவித்து விட்டார், ஆனால் மற்றவர்கள் எதிர்க்கிறார்களே என்று வருத்தம் தெரிவித்துக்கொண்டார். இந்த வகையில் வரியில்லாத அறிக்கையை எதிர்க் கட்சித் தலைவரோடு நானும் சேர்ந்து பாராட்டுகிறேன், நன்றி தெரிவிக்கின்றேன். எப்படி நன்றி என்றால், எத்தகைய பாராட்டு என்றால், டில்லி அமைச்சர் தாங்க முடியாத அளவுக்கு வரியைச் சுமத்தி விட்டபோது, நாங்கள் வரி போடவில்லை என்று சொன்னால் அதை அந்த அளவுக்குப் பாராட்டவேண்டியதுதான். உதாரணமாக, டில்லி வரி கழுத்தைப் பிடித்து பலமாகத் திருகிக் கொண்டிருக்கிற நேரத்தில், கண்ணைக் குத்தாமல் விட்டு விட்டேன் பார்த்தீர்களா என்று சொன்னால் அந்த அளவுக்குப் பாராட்ட வேண்டியதுதான். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கழுத்தை நெரித்த பிறகு கண்ணைக் குத்துவதனால் என்ன பிரயோசனம்?) அதனால்தான் விட்டு விட்டீர்களா—மக்கள் சாகவில்லை—குற்றுயிரும் குலையுயிருமாக இருக்கிறார்கள்.



மதுரை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட தொகுதி தேனி தொகுதியாகும். தேனி நகரத்திலே, நிதி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில், ஒரு தொழிற்பேட்டையைத் துவக்க இருப்பதாகக் கூறினார்கள். அதற்காக எனது தொகுதி மக்கள் சார்பாக எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத்திற்காக, அந்தத் திட்டங்களுக்காக, ஒதுக்கியிருக்கிற பணம் போதாது என்று கனம் அங்கத்தினர்கள் சொல்லிக் குறைபட்டுக் கொண்டார்கள். உண்மையிலேயே நானும் வற்புறுத்திக்கொள்ளும் அவசியத்தில் இருக்கிறேன். தேனி வட்டாரத்தில் இருக்கும் விவசாய மக்கள் நல்ல உடல் உறுதி, நல்ல உள்ள உறுதி, உழைக்கும் தகுதி பெற்றவர்களாக இருந்தாலும் நில வசதி, நீர் வசதி இல்லாது வறுமையை அணைத்துக்கொண்டு வாழுகின்ற துர்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள்.

ஆழமான கிணறுகளாக இருக்கின்ற காரணத்தால் நீர் எடுக்க முடியாத நிலைமையில் அங்குள்ள விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். கோடை காலத்தில் தண்ணீர் மிகவும் வற்றி விடுகிறது. இதன் காரணமாக அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மேலும் கிணறுகளை வெட்டுவதற்கு அரசாங்கம் ஏராளமான பணம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 10-30 a.m.

இந்த நெருக்கடியான நேரத்தில் மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்தக் கூடாது என்பதையும், மின்சாரக் கட்டுப்பாடு அவசியம் என்பதையும் எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் விவசாயத்தைப் பெருக்குவதற்கு இன்றைய நிலைமையில் மின்சாரம் மிகவும் தேவையாக இருக்கிறது. ஆகவே கிணற்றுப் பாசனம் மூலம் விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதே நேரத்தில் உரங்கள் கொடுப்பதிலும், சரியான நேரத்தில், சரியான தருணத்தில் இப்போது விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதில்லை. ஆகவே சட்டத்திற்கு விரோதமாக நடத்தப்படுகின்ற முறைகளை எல்லாம் அடக்கி, விவசாயப் பெருங்குடி மக்கள் பலன் பெறுகின்ற வகையில் நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேனித் தொகுதியைப் பொறுத்தவரையில் சின்னமனூருக்குத் தெற்கே பெரியாற்றுப் பாசனத்திலிருந்து தேனித் தொகுதியின் மத்தியப் பகுதிக்கு வருமாறு கால்வாய்த் திட்டம் அமைக்க வேண்டும் ஏற்கனவே அரசினரால் ஆராயப்பட்டு அரைகுறையாக நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த வேலையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் வைகை அணைத் திட்டத்தால், பாதிக்கப்பட்ட குன்னூர் கிராம மக்கள் வேதனை அடைந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் வேறு இடத்தில் குடிபெயர்ந்து செல்ல வேண்டிய

*[திரு. எஸ். எஸ். ராஜேந்திரன்]* [6th March 1963

நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையிலும் நஷ்ட ஈடு தரப்படவில்லை. ஆகவே இவர்களுக்கு உடனடியாகச் சரியான நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரைக்கு மேற்கே பெரிய குளம் தாலுகாவில் அதாவது தேனீ வட்டாரத்தில் பெரிய ஆசுபத்திரி எதுவும் கிடையாது. அங்கிருந்து ஏழை மக்கள் ஆசுபத்திரிக்கு வரவேண்டும் என்றால் மதுரைக்குத்தான் வரவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே பெரிய குளம் தாலுகாவில் அதாவது தேனி வட்டாரத்திற்கு பயன்படும் முறையில் ஒரு பெரிய ஆசுபத்திரியை தேனியில் நிறுவ வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் மதுரைக்கு மேற்கு திசையில் இருக்கின்ற எங்கள் தொகுதியில் எந்தவிதமான ஆசிரியர் பயிற்சி பள்ளியும் இல்லை. ஆகவே இந்தப் பகுதியில் ஒரு ஆசிரியப் பயிற்சி பள்ளி ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனீ நகரத்தைப் பொறுத்தவரையில் காமராஜ் காலனி என்ற ஒரு காலனியை இப்போது அப்புறப்படுத்த முயற்சிகள் நடந்து வருகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட இந்த காலனியில் சுமார் 85 வீடுகள் இருக்கின்றன. இப்போது டௌன் பிளானிங் கமிட்டியில் இருக்கின்ற சில பெரியவர்கள் முயற்சியால், இந்த காலனியில் இருக்கின்றவர்கள் கடந்த தேர்தல் காலத்தில் ஆளும் கட்சிக்கு விரோதமாக இருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்தார்கள் என்ற காரணத்திற்காக, இப்போது இந்த காமராஜ் காலனியைக் காலி செய்துவிட்டு, அதில் பாதை அமைக்கும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் காமராஜ் காலனியில் இருக்கின்ற மக்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்து கொண்டிருக்கிறது. மகன் போனாலும் பரவாயில்லை, மருமகள் விதவையாக இருக்க வேண்டும் என்ற கருணை உள்ளம் படைத்த மாமியார்களைப் போன்று இருக்கின்ற சில பெரியவர்கள் காமராஜர் காலனியை அழிக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். எண்பத்தைந்து வீடுகள் அழிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டால் இதன் மூலம் வெளியேற்றப்படுகின்ற மக்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டிய பொறுப்பு, தெருவில் நிற்கும் இந்த மக்களை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, முத்துத்தேவன்பட்டி என்கிற கிராமத்தில் நஞ்சை நிலம் கிடையாது. புஞ்சை நிலங்கள்தான் உண்டு. ஒவ்வொருவருக்கும் 1 ஏக்கர், 2 ஏக்கர், 4 ஏக்கர் இவ்விதம்தான் இருக்கின்றன. இந்த நிலங்களைக் கொண்டு அங்குள்ள ஏழை மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்த கிராமத்திலுள்ளவர்களுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம், போஜராஜ் மில் கட்ட வேண்டும் என்பதற்காக அரசாங்கமே நிலத்தை ஆர்ஜிதம் செய்து மில் சொந்தக்காரர்களுக்கு ஒப்படைக்கிறது. இதன் காரணமாக நிலத்தை நம்பி வாழ்ந்தவர்கள் இன்று கஷ்ட



6th March 1963] *[திரு. எஸ். எஸ். ராஜேந்திரன்]*

திசையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதோடு நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுத்தும்கூட, இதுவரையிலும் இதற்கான நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக அங்குள்ள கிராம மக்கள் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகத் தேய்ந்து கொண்டிருக்கிறார்கள். இடி விழுந்த மக்கள் போல் நிலைகுலைந்து இன்று பிச்சைக்காரர்களாகத் தெருவில் அலையக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என்னால் முடிந்த அளவுக்கு விடிழுந்த அந்த மக்களுக்கு உதவிசெய்து கொடுத்திருக்கிறேன். எந்தத் தனிப்பட்ட மனிதர்களும் நிச்சயமாகப் பொதுவான குறைகளைத் தீர்க்க முடியாது. ஆகவே முக்கியமாக அவர்களுக்கு உடனடியாகக் கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும் நஷ்டஈடு கொடுப்பதில் சர்க்கார் ஒரு ரேட்டை வைத்திருக்கிறது. அந்த ரேட்டை மட்டும் பார்க்காமல், உண்மையிலேயே அந்தப் பகுதியில் நிலங்களுக்கு என்ன விலை இருக்கிறது என்று பார்த்து அதற்குத் தகுந்தவாறு நஷ்ட ஈட்டை கொடுக்கவோ அல்லது, அதற்கு தகுந்தமாதிரி வேறு இடத்தில் நிலங்கள் வாங்கிக் கொடுக்கவோ செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கலை உலகைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழ்நாட்டில் நாடகக் கலை என்பது மிகவும் உன்னதமான கலை, சிறந்த கலை என்பதை ஆளும் கட்சியில் இருக்கின்றவர்களும் ஒத்துக்கொள்வார்கள். இதைக் கண்டிக்க முன் வரமாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அந்தத் தமிழ் நாட்டு நாடகக் கலைக்கு இப்போது ஆபத்து வந்திருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆளும் கட்சியில் இருக்கின்ற பலர் நல்ல கலா ரசிகர்கள் என்பது எனக்கு வெகு காலமாகத் தெரியும். அப்படிப்பட்ட இந்தத் தமிழ்நாட்டு நாடகக் கலைக்கு ஆபத்து வந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. கடந்த ஆண்டுகளில் எல்லாம் இந்த நாடகக் குழுவினர் எங்கேயாவது நாடகத்திற்காகச் செல்லவேண்டுமென்றால் கன்செஷன் டிக்கட் அதாவது ரயிலில் அரை சார்ஜ் கொடுத்தால் போதும் என்ற முறை இருந்தது வந்தது. இப்போது நெருக்கடி காலம் என்பதற்காக அந்தச் சலுகைகளை அரசாங்கம் ரத்து செய்து விட்டது. இதன் காரணமாக நாடகக் கம்பெனி வைத்திருக்கின்ற என்போன்றவர்கள் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படாவிட்டாலும், நடுத்தரத்தில் நாடக கம்பெனியை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாடகக்கலை மூலம் மக்களிடத்தில் நல்ல பிரசாரம் செய்ய முடியும். இந்த யுத்த நெருக்கடி காலத்தில் நாடகக்கலை சிறந்த பிரசார சாதனமாகப் பயன்படக்கூடியது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே முன்னால் கொடுத்து வந்த கன்செஷன் முறையை இப்போதும் அமல் நடத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் நமது கலாசாரம் என்பது மிகவும் உயர்ந்தது, மிகவும் சிறந்தது, பிற நாட்டினராலும் பாராட்டப்படுவது; உதாரண

மாக மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட சினிமா சென்ஸார் போர்ட் ஒன்று இருக்கிறது. தமிழில் ஒரு படத்தை எடுக்கிறோம். அதே படத்தை, அதே வசனத்தோடு இந்தியிலும் எடுக்கிறோம். அப்படி எடுத்து சென்ஸார் போர்டுக்குப் போகின்ற நேரத்தில் இந்தி படத்தில் எதையும் வெட்டிவிடுவதில்லை. ஆனால் தமிழ் படத்தில் பல பகுதிகளை வெட்டிவிடுகிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று சம்பந்தப்பட்ட சென்ஸார் போர்ட் அதிகாரிகளைக் கேட்டபோது, இந்த நாட்டினுடைய கலாசாரம் வேறு. அந்த நாட்டினுடைய கலாசாரம் வேறு என்று சொல்லிவிட்டார்கள். இந்த முறையில் கலாசாரத்தை காப்பாற்றுகின்ற முயற்சியில் சென்ஸார் போர்டு அதிகாரிகளை நான் பாராட்டுகிறேன். அதை நான் கண்டிக்கவில்லை. இருந்தாலும் அத்தகைய ஒரு கலை உலகத்தை வளர வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக மற்ற நாடுகளில் எல்லாம் இருப்பதைப் போன்று நம் நாட்டிலும் "கலைமந்திரி" என்று ஒருவரை நியமிக்க வேண்டும் என்று ஆசையோடு கேட்டுக்கொள்கிறேன். மந்திரியாக வேண்டும் என்ற ஆசையோடு நான் சொல்வதாக எடுத்துக் கொள்ளவேண்டாம். நாடகத்திலும் சினிமாவிலும் ராஜா வேடம் போட்டு, மந்திரி வேடம் போட்டு அலுத்துவிட்டது. ஆக நீங்களே மந்திரியாக இருங்கள். கலைமந்திரி என்று ஒருவரை இப்போது இல்லாவிட்டாலும் நெருக்கடி காலம் கழிந்த பின்னராவது ஏற்படுத்துவதற்கு என்னுடைய ஆலோசனை பயன்படவேண்டும் என்ற கருத்தை இங்கே தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. சி. பொன்னுசாமி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் 1963-64-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த அறிக்கையை வரவேற்று ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக நாம் எந்தெந்த வகையில் முன்னேறிக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக சில புள்ளிவிவரங்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், அகில இந்திய சராசரியை எடுத்துப் பார்த்தால் ஒரு ஏக்கர் நிலத்தில் 1961-62 அரிசி வெள்ளாமை 900 ராத்தலாக இருந்தது. இப்போது நம்முடைய மாநிலத்தில் அரிசியின் வெள்ளாமையை எடுத்துக் கொண்டால் ஒரு ஏக்கருக்கு 1351 ராத்தலாக உயர்ந்திருக்கின்றது. சோளம் 399 ராத்தலாக இருந்தது, நம்முடைய ராஜ்யத்தில் 694 ராத்தலாக இருக்கிறது. கேழ்வரகு 390 ராத்தலாக இருந்தது, நம்முடைய ராஜ்யத்தில் 565 ராத்தலாக இருக்கிறது. நிலக்கடலை 562 ராத்தலாக இருந்தது; நம்முடைய ராஜ்யத்தில் 1083 ராத்தலாக இருக்கிறது. ஆகவே, விவசாயத் துறையிலே நாம் வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறோம் என்று சொன்னால், அது மிகையாகாது. அதே சமயத்தில் நாம் அபிவிருத்தித் திட்டத்திற்காகச் செலவழிக்கும் சதவிகிதத்தைப் பார்ப்போமானால், அபிவிருத்தித் திட்டங்களுக்காக மத்திய சர்க்கார் செலவு செய்வது 59 சத





விகிதம். மற்ற எல்லா மாகாணங்களும் செலவழிப்பது 45 சத விகிதம். ஆனால், நம்முடைய சென்னை மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக 66 சதவிகிதம் செலவழிக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த நிதி நிலை அறிக்கையைப்பற்றி நேற்று வந்த பத்திரிகையிலே பிளானிங் கமிஷன் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். 'எல்லா மாகாணங்களின் நிதி நிலை அறிக்கைகளையும் பார்வையிட்டோம். குறிப்பாகச் சென்னை மாகாண நிதி நிலை அறிக்கையில் புதியதாக வரி ஒன்றும் போடாமலேயே நிதி நல்ல நிலைமையில் இருக்கிறது என்பதை நாங்கள் அறிகிறோம்' என்று பிளானிங் கமிஷன் சொல்லுகிறார்கள். ஆகவே, இந்த நிதி நிலை அறிக்கையை நாம் போற்றாமல் இருக்க முடியாது. குறிப்பாக விவசாயத் துறையிலே இப்பொழுது முன்னேறிக் கொண்டு வரும் ரேஷியோப்படி பார்த்தால், 2 லட்சம் டன் தான் வருடம் ஒன்றுக்கு அதிகப்படியான வெள்ளாமை செய்திருக்கிறோம். நம்முடைய டார்ஜெட் என்னவென்றால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும்போது 17 லட்சம் டன் நமக்கு வேண்டும். ஆகவே, இன்னும் கொஞ்சம் அதிகப்படியாக உற்பத்தி செய்தால் தான் நாம் குறிப்பிட்ட டார்ஜெட்டை எட்ட முடியும் என்று நமக்குத் தெரிகிறது. ஆகவே, மின்சார வகையானாலும் சரி, நீர்ப்பாசன வகையானாலும் சரி, இன்னும் மற்ற உர விநியோகம் ஆனாலும் சரி, விதை விநியோகம் ஆனாலும் சரி, நாம் வேகமாக முன்னேறிக் கொண்டு வருகிறோம். இருந்தாலும் அந்த ரேஷியோ சரியாக வரவேண்டுமானால், அதுபற்றி என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய விவசாயத் துறை அறிக்கைப்படி பார்ப்போமானால், நம்முடைய மாகாணத்தில் 20 லட்சம் ஏகர் நிலம் விவசாயம் செய்வதற்கு வசதி உள்ள நிலமாக இருக்கிறது என்பதைக் காண்கிறோம். இருபது லட்சம் ஏகர் நிலம் விவசாயம் செய்ய வசதி உள்ளதாக இருக்குமானால், அந்த நிலத்தில் விவசாயம் செய்வதாக ஒரு திட்டம் போட்டு, மூன்று ஆண்டுகளுக்கு உள்ளாக ஏறக்குறைய 5 லட்சம் டன் வெள்ளாமை செய்யக்கூடிய முறையில் ஒரு திட்டம் வகுத்து, அதை நிறைவேற்றுவோமானால், நம்முடைய டார்ஜெட்டை எட்டுவதற்கு ஏதுவாக இருக்கும்.

விவசாயத் துறையில் நாம் முன்னேறிக்கொண்டு போகும் பொழுது, நெல் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கஷ்டம் வந்திருக்கிறது என்று பல நண்பர்கள் சொல்லுகிறார்கள். விலை குறைந்திருக்கிறது என்பதை நாம் அறிகிறோம். அவர்கள் வருமானத்தையும், விலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, விசேஷமாக விலை குறைந்து அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுமானால், அவர்களைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்களுக்கு அம்மாதிரி கஷ்டம் வரும்பொழுது நாம் என்ன செய்ய வேண்டுமென்பதற்கு என்னுடைய சிறிய யோசனையைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்களுடைய செலவுக்கும், வாழ்க்கை வசதிக்கும் வருமானம் உள்ள நிலைமையில், ஒரு விலையை நிர்ணயம் செய்து,

[திரு. சி. பொன்னுசாமி] [6th March 1963

ஸ்டேட் டிரேடிங் கார்பரேஷன் மூலமாகவோ அல்லது சர்க்கார் தங்களுடைய மற்ற இலாகாக்களின் மூலமாகவோ நெல்லை வாங்கி வியாபாரிகளுக்கும, ரைஸ் சொந்தக்காரர்களுக்கும் அந்த விலைக்கு விற்றால், விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏறபடாது என்று நான சொலலிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அபபடியில்லையானல், கைத்தறித் துணிக்கும், கதருக்கும் ரிபேட் கொடுக்கிறோம். அதே போன்று விவசாயத துறையில் ரிபேட் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அபபடிச் செய்தால், விவசாயிகளுக்கு நல்ல பாதுகாப்பு இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயத் துறையில் நாம் முன்னேறிக் கொண்டு போகும் பொழுது, மற்றவகையிலும் நாம் முன்னேறிக்கொண்டு வருவதைப் பார்க்கிறோம். கிராம மக்களுடைய வாழ்க்கையைப்பற்றி நேற்று எங்கள் தலைவர் அவர்கள் மிகவும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். 1947-ஆம் ஆண்டுக்கு முன்னால் கிராமப் பகுதிகளில் மக்கள் தலையில் எண்ணெய்யின்றி, நல்ல ஆடையின்றி வாட்ட முகத்தோடு காட்சி அளித்ததை நாம் கண்டோம். ஆனால் இன்று கிராமச் சாலைகளிலே நாம் செல்லும்பொழுது மக்களை எந்த ரீதியில் பார்க்கிறோம் என்று சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். கிராமங்களில் உள்ள மக்கள், குறிப்பாக பெண்கள் கூட, கணவன் சைகிள் ஓட்ட, மனைவி பின்னால் உட்கார்ந்துக்கொண்டு "மிஸ்டர் அண்டு மிஸஸாக" சைகிளில் சேர்ந்து போவதை நாம் பல இடங்களில் பார்கிறோம். அதுமட்டுமல்ல, கிராமச் சாலைகளில் செல்லும் பொழுது, 1947-ஆம் வருஷத்திற்கு முன்னால் பார்த்தோமானால், ஆண் குழந்தைகளாக இருந்தாலும் சரி, பெண் குழந்தைகளாக இருந்தாலும் சரி, கிழிந்த அழுக்குத் துணியை உடுத்திக்கொண்டு, கையிலே ஒரு கோலை ஏந்திக்கொண்டு, ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த காட்சியைக் கண்டோம். ஆனால், இன்று கிராமச் சாலையில் செல்லும்பொழுது, ஆண் குழந்தைகள் காக்கி டிரௌசரை அணிந்து கொண்டு, வெள்ளை பனியனை அணிந்துகொண்டு, கையிலே புத்தகத்தை ஏந்திக்கொண்டு நம்முடைய கார் போகும் பொழுது "பிளீஸ் ஹோல்டு ஆன்" என்று காரை நிறுத்துகிறார்கள். காரில் ஏறிக்கொண்டு காட்டேரியில் இறக்க முடியுமா என்று கேட்கிறார்கள். காரில் ஏற்றிக்கொண்டு காட்டேரியில் இறக்கிவிட்ட பின் 'தாங் யூ ஸார்' என்று சொல்லுகிறார்கள். இதுபோன்றுள்ள வளர்ச்சி நிலையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்படியெல்லாம் நாடு முன்னேறிக்கொண்டு வரும் பொழுது, புது வரி போடாமல் உள்ள ஒரு நிதி நிலை அறிக்கையை நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். மற்ற மாகாணங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, எல்லாத் துறைகளிலும் நம் மாகாணங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, எல்லாத் துறைகளிலும் நம் மகாணம் வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வளவு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்களைப் பற்றி மதிப்பிற்குரிய ஒரு அங்கத்தினர் சொல்லும்பொழுது, நமது முதல் அமைச்சர் அவர்கள் ஐந்தாண்டு



6th March 1963] [திரு. சி. பொன்னுசாமி]

எப்பொழுது முடியும், எப்பொழுது தேர்தல் வரும் என்ற எண்ணத்திலே இருக்கிறார்களே தவிர, திட்டங்களைப் பற்றி அவருக்கு அக்கறை இல்லை என்ற அர்த்தத்தோடு பேசினார். அது பற்றி நான் மிகவும் வருந்துகிறேன். அவருக்குச் சட்டம் தெரிந்திருக்கலாம், பட்டம் பெற்றிருக்கலாம், ஆனால் அவர் திட்டத்தை அலசிப் பார்க்க மறந்துவிட்டாரே என்பதை நினைத்துதான் நான் மிகவும் வருந்துகிறேன். அதோடுமட்டுமல்லாமல், இதுபோன்ற ஒரு நல்ல நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம் நடக்கும் பொழுது, மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி நண்பர் ஒருவர் பேசும் பொழுது இந்த நிதி நிலை அறிக்கை ஒரு சதித் திட்டம் என்று பேசினார்கள். அவர் சதி என்ற வார்த்தைக்குச் சரியான அர்த்தத்தை புரிந்து கொள்ளாமல், தமிழ் நாட்டில் உள்ள ஒரு தமிழ் அன்பர், மதி நுட்பம் உடையவர் என்று நினைக்கக்கூடிய நண்பர் ஒருவர் இப்படிப் பேசினார்கள் என்று நினைக்கும்பொழுது, நமக்க வருத்தம் தான் ஏற்படுகிறது.

**திரு. மு. கருணாநிதி:** சதி, பதி என்று கூறுவார்கள். மத்திய சர்க்காரை பதியாகவும், மாநில சர்க்காரை சதியாகவும், வைத்து, மனைவிமாருடன் கூடிப் போடப்பட்ட திட்டம் இது என்று அர்த்தத்தில் திரு. மதியழகன் கூறியிருக்கலாம்.

**திரு. சி. பொன்னுசாமி:** நான் நண்பர் அவர்கள் கூறியதை வரவேற்கிறேன். இன்னொரு வகையிலும் கருணாநிதி அவர்கள் கூறியதை வரவேற்று அவருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது மாகாண சர்க்காரை பூனையாக வைத்துக்கொண்டு, அது 4 குட்டிகளைப் போட்டால் இரண்டை விழுங்கிவிடுகிறது என்று சொல்லப்படுகிறது. நம்முடைய சர்க்கார் கொள்கையை எடுத்துக் கொண்டால், 4 குட்டிகள் என்று சொல்லும்பொழுது, மகாராஜாக்களும், ஜமீன்தார்களும் இரண்டு குட்டிகளாகவும், விவசாயிகளும், தொழிலாளர்களும் இரண்டு குட்டிகளாகவும் வைத்துக்கொண்டு, மகாராஜாக்களையும், ஜமீன்தாரர்களையும் ஒழித்துவிட்டோம் என்று எடுத்துக்கொண்டால், நமது நண்பர் சொன்னது பொருந்தும் என்று நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மின்சாரத்தை எடுத்துக் கொண்டால், மின்சாரத்தை இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்வதற்கு நமக்கு சில குறிகள் கிடைத்திருக்கின்றன. நேற்று பேப்பரில் பார்க்கும்பொழுது, ஹொகனகல் திட்டத்தை மைசூர் முதல் அமைச்சர் அவர்கள் ஆதரித்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. 12 லட்சம் கிலோவாட் மின்சாரம் கிடைக்கக்கூடிய வகையிலே ரூ. 80 கோடி செலவில் இந்தத் திட்டத்தை அமைக்க வேண்டுமென்றும் இதிலே சென்னை மாகாணத்திற்கு எவ்வளவு நின்று நிர்ணயிக்க வேண்டிய நிலையில் இருப்பதாகவும் அந்த அறிக்கையிலிருந்து தெரிகிறது. இதை வரவேற்கிறோம். நம்முடைய மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு இது ஒரு நல்ல அறிகுறியாகத் தோன்றுகிறது. அதுமட்டுமல்ல. இன்னும் கிருஷ்ணா நதித் தண்ணீரை நம்முடைய சென்னை நகரில் குடிதண்ணீர்க் கஷ்டத்தைப் போக்குவதற்குக் கொண்டு வருவ

[திரு. சி. பொன்னுசாமி] [6th March 1963

தாக இருக்கிறார்கள். அந்தத் தண்ணீர் சீக்கிரத்திலேயே கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆந்திர மாகாணத்தின் முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்ற நற்செய்தியைப் படிக்கும்பொழுது, நம்முடைய மாகாண சர்க்கார் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் எவ்வளவு வெற்றிகரமாக நடந்து வருகின்றன என்பது புலனாகும். ஆகவே இவ்வளவு நல்ல அம்சங்கள் கொண்ட இந்த பட்ஜெட்டை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. வி. எல்லம்ம நாயுடு: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்தச் சபை முன்பு கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ளார்கள். இந்த அறிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஆண்டு ரூ. 2 கோடியே 74 லட்சம் துண்டு விழுந்த போதிலும் மக்கள் மீது புதிதாக எந்த வரியையும் விதிக்க வேண்டாம் என்ற நோக்கத்தோடு இந்த பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் கூட, எதிர்க்கட்சியிலுள்ள நண்பர்கள், அவர்கள் சொல்லுகிற பாணியிலே, காங்கிரஸ்காரர்களுக்கு இதை எதிர்க்க வேண்டுமென்ற எண்ணம் இருந்த போதிலும், ஆதரிக்க வேண்டும் என்பதற்காக இதை ஆதரிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதே முறையில் பார்க்கும் பொழுது மனமார இந்த பட்ஜெட்டை ஆதரிக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தாலும், எதிர்க்கட்சியினர் என்ற முறையிலேதான் எதிர்க்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். முதல் நாள் பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள், எனக்கு முன் பேசிய நண்பர் சொன்னமாதிரி, இந்த பட்ஜெட்டை எதிர்க்கிறோம், என்று சொன்னதோடு நிற்கவில்லை. தமிழ் நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களின் சார்பிலே இந்த பட்ஜெட்டை நிராகரிப்பதாகச் சொன்னார்கள். இந்தச் சபை முன்பு வைக்கப்பட்டுள்ள கனம் நிதி அமைச்சர் அவர்களுடைய பட்ஜெட்டை நிராகரிப்பதற்கு நாம் யார்? கோடிக்கணக்கான மக்களின் சார்பிலே நான் இதை நிராகரிக்கிறேன் என்று அவர் சொன்னால் அந்தக் கோடிக்கணக்கான மக்களின் சார்பிலேதான் இந்த பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சட்ட மன்றத்திலே நமது கருத்துக்களை விரிவாகச் சொல்லுவதற்கு இந்தச் சபையை அமைத்துக் கொடுத்து, நமக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். நிராகரிப்பதற்கு இங்கே இடமில்லாமல் இருந்தும், இதை நிராகரிக்கிறோம் என்று சொல்லும் அளவுக்குப் பேசுகின்றனர். அவர்கள், நாங்கள் பேசும்போது எதிர்க் கட்சிக்காரர்களை வேண்டுமென்றே தாக்கிப் பேசுகிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் நல்ல நோக்கத்தோடு பேசுவதை நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் தலைவர்களைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றியும் ஏதாவது பேசும்பொழுது மற்றவர்களும் பேசத்தான் செய்வார்கள்.



6th March 1963] [திரு. வி. எல்லம்ம நாயுடு]

திட்டமிட்ட பொருளாதார அமைப்பை உண்டாக்க முனைந்துள்ள நாம் வரிகளைப் போடுவதோ, அல்லது போடாமல் இருப்பதோ அவ்வப்போதுள்ள சந்தர்ப்பத்தைப் பொருத்தது. நடைமுறை ஆண்டிலே போலீஸ் இலாகாவிற்காக அதிகமான தொகையைச் செலவிடப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி போலீஸ் இலாகாவிற்குச் செலவிடும் தொகையானது இந்த நெருக்கடி காலத்தில் மிகவும் அத்தியாவசியமானதுதான். அதே சமயத்தில் அந்தப் போலீஸ் இலாகாவினர் செய்யும் பணிகளையும், அரசாங்கச் சாதனைகளையும் நமது நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதற்குப் போதுமான விளம்பர வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. மக்கள் நல்ல முறையிலே நடந்து கொள்வதற்கும், குற்றங்கள் அதிகமாகப் புரியாமல் இருப்பதற்கும் ஓரளவுக்கு விளம்பரம் செய்தால் நன்றாக இருக்கும். இப்பொழுது விளம்பரத்திற்குச் செலவழிக்கப்படும் தொகை குறைந்த காரணத்தினாலோ என்னமோ, விளம்பர இலாகாவிலே போதுமான வசதிகள் இல்லை என்று கேள்விபடுகிறேன். ஆகவே நல்ல முறையில் விளம்பரம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய அபிவிருத்திக்காக அதிகமான அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை உடனடியாக அமுலாக்க வேண்டும். சிறிய பாசனத் திட்டங்களை உடனடியாக அமுல் செய்வதற்கு, தகுதியான இடங்களைத் தேர்ந்தெடுத்து, சீக்கிரத்தில் சர்வே செய்து, வருகிற நிதி ஆண்டிலேயே இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போலத்தான் நடுத்தரத் திட்டங்களும். இந்த மாகாணத்திலே பெரிய பெரிய ஆறுகளில் எல்லாம் நீர்த் தேக்கங்களைக் கட்டிவிட்டார்கள். மேலும் பெரிய அணைகளைக் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லப்படுகிறது. என்னுடைய கோவை ஜில்லாவிலே மேல் பவானித் திட்டத்தை அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல் பவானியிலே பில்லூருக்கு அருகே ஒரு அணையைக் கட்டி அவனாசி தாலூக்காவிற்குப் பாசன வசதி செய்து கொடுப்பதற்கு முயற்சி எடுத்து வருவதை நான் வரவேற்கிறேன். அவனாசி, கோவை, பல்லடம் போன்ற தாலூக்காகளையும் சேர்த்துக் கொண்டு, என்னுடைய தொகுதியாகிய தொண்டமுத்தூர் தொகுதி, சூலூர், பல்லட்டு போன்ற பகுதிகளுக்கும் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்களையும், விவசாய அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நடுத்தரப் பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில், கோயம்புத்தூருக்கு மேற்கே 18-வது மைலில் நொய்யலாற்றில் ஒரு அணை கட்டி விவசாயத்திற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே ஒரு திட்டம் போடப்பட்டு இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. இதை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். நெய்யலாறு பாசனத் திட்டம் நிறைவேறினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்

புன்செய் நிலங்கள் நன்செய்யாக மாறுவதற்கு வழி ஏற்படும்.
ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய சிறிய பாசன ஆதாரங்களைப் பற்றி நான் சென்ற ஆண்டு
நிதி நிலை அறிக்கையின் விவாதத்தின்போது குறிப்பிட்டுள்ளேன்.
அவைகளையெல்லாம் சர்வே செய்து இந்த ஆண்டிலாவது சேர்த்
துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சிறு சிறு
காட்டாறுகளிலே மழை பெய்து வெள்ளம் ஏற்படும்பொழுது,
பக்கத்து கிராமங்களில் உள்ள விளைச்சல் நிலங்களை
அழித்து விடுகிறது. அந்தத் தண்ணீரைத் தேக்கி விவசாயத்
திற்குப் பயன் படுத்தலாம். இந்த வசதிகளை உடனடியாகச்
செய்து கொடுக்க வேண்டும். விவசாயத் துறையில் அதிகமான
அளவுக்கு உரம், குழிஉரம் இவைகளை உற்பத்திச் செய்வதற்குப்
பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அதே
நேரத்தில் பஞ்சாயத்துக்களிலிருக்கும் புறம்போக்கு நிலங்களைப்
பற்றி பேசாமல் இருக்க முடியாது. இந்தப் புறம்போக்கு நிலங்
களைப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்த
பிறகு அங்கேயுள்ள பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு வேண்டாதவர்
களாக இருந்தால் அவர்களை அப்புறப்படுத்துகிறார்கள் என்று
சொன்னார்கள். இது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத்
தெரியவில்லை. ஓரிரு இடங்களில் அப்படி நடந்திருந்தால், அதற்
காக அந்த அதிகாரத்தையே எடுத்துவிட வேண்டுமா என்பதை
நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது உள்ள
நிலையில் ஜில்லாக் கலெக்டர்கள், பஞ்சாயத்துக்களின் மேலதிகாரி
களாக இருப்பதால், அப்படி ஏற்படும் தவறுகளைத் திருத்திக்
கொள்ளலாம். ஆகையால் அரசாங்கம் எல்லாப்புறம் போக்கு
நிலங்களையும் பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கக் கேட்டுக்
கொள்கிறேன். கலெக்டருக்கு சில நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன.
கலெக்டரால் இந்தப் புறம்போக்கு நிலங்களைக் கொடுக்க முடிய
வில்லை. அந்த முறையில் சட்டம் அமைந்திருக்கிறது. எல்லாப்
11-30 a.m. புறம்போக்குகளையும் பஞ்சாயத்துக்களுக்கு பஞ்சாயத்து யூனியன்
களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் சட்டத்தை மாற்றி
அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அரிஜனங்களுக்கு மனைக்கட்டுகளைக் கொடுக்க
வேண்டுமென்ற கொள்கை அரசாங்கத்தினிடம் பல ஆண்டு கால
மாக இருந்தாலும்கூட இப்பொழுது அவசர காலமானதால்
நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று அறிவித்து அரி
ஜனங்களுக்கு மனைக்கட்டுகளை வழங்கக்கூடிய கொள்கையை
அதிகாரிகள் நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படு
கிறது. அவசர நிலைமை நீடித்திருந்தாலும் அரிஜனங்களுக்கு
மனைக்கட்டுகளை வழங்கும் கொள்கையை உடனடியாக அமுலுக்கு
கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு
வேண்டிய ஏற்பாடும் செய்ய வேண்டும். அடுத்து வரும் ஆண்டி
லாவது அல்லது அதற்கு முன்னமேயோ மனைக்கட்டுகளை வாங்கி
அரிஜனங்களுக்கு வழங்குவதற்கு உதவ வேண்டும் என்று





கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த முறையில் அரசாங்கம் நடவடிக்
கை எடுத்துக்கொள்ளும் என்றும் நான் நம்புகிறேன். சுகாதாரம்
பற்றி . . . . (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. என். சின்ன முனுசாமி செட்டி** : கனம் உதவி சபாநாயகர்
அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப்பற்றி
நான் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இதற்கு முன் இச்
சபையின் முன் வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்கள் எல்லாம்
ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றியதாக இருந்தன. இந்த ஆண்டில்
சைனாவின் ஆக்கிரமிப்பினால் அவசரமான நெருக்கடியின் காரண
மாக நிதிநிலை அறிக்கை மிகப் பரிவுடன் கொடுக்கப்பட்டிருக்
கிறது. அதைக் கண்டு மக்கள் வேதனைப்படுகிறார்கள். அனேக
மாக வரி போடாத பொருள்களே இல்லை. ஆனால் இரண்டு
பொருள்கள் மட்டும் தான் பாக்கி. அதாவது, ஜனவரி, பிப்ரவரி
(சிரிப்பு). அதற்கு மேல் நான் சொல்லத் தேவை இல்லை. பொது
வாக எல்லா விஷயங்களைப்பற்றியெல்லாம் பேசி விட்டார்கள்.
இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய கருத்தையும் சில விஷயங்
களையும் கூற ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதி தெலுங்கு
ராஜ்யத்திலும் தமிழ் ராஜ்யத்திலும் சேராமல் நடுவில் இருக்கிறது.
என்னுடைய தொகுதியில் சிறு நீர்ப் பாசனங்களையும் மின்சார
வசதிகளையும் எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு
கிறேன். என் தொகுதியை அரசாங்கம் இன்னும் கவனிக்காமல்
இருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் கூறுகிறேன். என்னுடைய
தொகுதியில் வாழும் மக்கள் மழையை நம்பி வாழ்ந்து கொண்
டிருக்கிறார்கள். பருவ காலத்தில் மழை தவறி விட்டால் அவர்
களுடைய வாழ்க்கை மிகவும் கஷ்டமாகப் போய் விடுகிறது என்
பதை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதி
யில் கிராம வாசிகள் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். ஆயிரம் இரண்
டாயிரம் ஜனத்தொகை இருக்கக்கூடிய கிராமங்கள் கிடையாது.
கணக்கிட்டுப் பார்த்தால் 500 அல்லது 600 கிராமங்களுக்கு மேல்
ஜனத்தொகை ஆயிரத்திற்குக் குறைவானதாக இருக்கும். இன்
றைக்கு அரசாங்கம் செய்திருக்கக்கூடிய மின்சார வசதிகளை
எடுத்துப் பார்த்தால் அவைகள் எல்லாம் 100-க்கு 50 சதவிகிதம்
கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் எங்கள் பகுதி
யை எடுத்துக்கொண்டால் அங்கு ஐந்து சத விகிதம் கூட எடுத்து
முடிக்கவில்லை. இதைக் கண்டு வருத்தப்பட வேண்டியதாக இருக்
கிறது. என் பகுதியில் பெரிய பாசனத் திட்டங்களை எடுத்துச்
செய்ய முடியாது. ஆகவே சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை
எடுத்து முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு
கிறேன்.

மின்சாரம் சம்பந்தமாகச் சொல்லும்போது மூன்று ஆர்ஸ் பவர்,
நான்கு ஆர்ஸ் பவர், ஐந்து ஆர்ஸ் பவர் வைத்துக் கொண்டிருப்ப
வர்கள் 70 ரூபாய் அட்வான்ஸ் கட்ட வேண்டியதாக இருக்கிறது.
வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் மின்சார மீட்டர் ஒன்றுக்கு
20 ரூபாய் கட்ட வேண்டியதாக இருக்கிறது. இப்படி அட்வான்சு
பணம் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அப்படி இல்லாமல்
வீடுகளுக்கு எரிய விடக் கூடிய விளக்குகளுக்கு என்று கட்ட

[திரு. என். சின்ன முனுசாமி செட்டி] [6th March 1963

வேண்டிய அட்வான்சு பணத்தைக் கட்டாமல் தள்ளுபடி செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்குச் சலுகை காட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி எங்களுடைய பகுதியிலுள்ள மக்களுக்கு இன்னும் அதிகப்படியான சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தோரதம் என்ற ஒரு இடத்திலிருந்து ஒரு பாதை போடுவதற்கு என்று நான்கு வருடங்களுக்கு முன்பு சர்வே செய்யப்பட்டது. அதற்கு என்று 12½ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இது வரைக்கும் அது என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. அதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் எனது தொகுதியில் வாழும் மக்கள் எந்த விதமான வசதியும் இது வரைக்கும் அடையாமல் இருப்பதற்குக் காரணம் நான் நினைப்பது என்னவென்றால் அந்தப் பகுதி ஷோகுர் பகுதியில் இருக்கிறது. அது ஒருகால் ஆந்திராவுக்குப் போய் விடுமோ என்ற காரணத்தால் அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்யாமல் இருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. அப்படி இல்லாமல் மேலும் அந்தப் பகுதியிலுள்ள ஏழை வாழ் மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து அந்தப் பகுதி முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுத்த கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட்டை ஆதரித்துத்தான் பேசுகிறேன். (சிரிப்பு). ஆனால் அமைச்சர் அவர்களுடைய திறமை இந்த பட்ஜெட்டில் இருக்கிறது. கனம் பக்தவத்சலம் அவர்கள் பழுத்த நிர்வாகத் திறமையுடையவர் என்பதை இந்த பட்ஜெட்டில் நன்றாகக் காட்டி இருக்கிறார். இதை ஒரு டெபிசிட் பட்ஜெட் என்று சொல்ல முடியாது. இது ஒரு சர்ப்ளஸ் பட்ஜெட் என்று தான் சொல்லாம். ஏன் அரசாங்கம் இதை ஒரு டெபிசிட் பட்ஜெட்டாகக் காட்டி இருக்கிறது என்பது தான் தெரியவில்லை. அரபன் லாண்ட் டாக்ஸ் என்ற ஒரு டாக்ஸ் இப்பொழுது போடப்பட்டிருக்கிறது. அது செலக்ட் கமிட்டிக்குப் போயிருக்கிறது. அரை பர்சென்ட் அப் தி வாலியூ என்று போடப்பட்டிருக்கிறது. அரை பர்சென்ட் அல்லது 1—3 அப் தி அவுஸ் ரெண்ட் என்று போடப்பட்டிருக்கிறது. அந்த முறையில் இப்பொழுது நாற்பது முனிசிபாலிட்டிகள் இருக்கின்றன. அதற்கு மேலும் இருக்கலாம். அதன் மூலம் ஐந்து கோடியிலிருந்து ஏழு கோடி ரூபாய் வரைக்கும் கட்டாயம் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கும். அதை அரசாங்கம் கணக்கிற்குக் கொண்டு வரவில்லை. அதை எடுத்துக் கொண்டால் மேலும் வருமானம் வரும். இப்பொழுது க்ரௌண்டுகளை எடுத்துக் கொண்டால் ஐந்தாயிரம் ரூபாய்க்குக் குறைவாக விற்கப்படவில்லை. பத்தா



6th March 1963] [திரு. கே. டி. கோசல்ராம்]

யிரம் என்று கூட விற்கப்படுவதாக இருக்கிறது. இதைப்பற்றி கனம் வெங்கட்டராமன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் அவுசிங் போர்ட் சேர்மனாக இருப்பதால் க்ரௌண்டு என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்பதெல்லாம் அவருக்கு நன்றாக தெரியும். ஐந்தாயிரம் விற்ற தெல்லாம் இப்பொழுது பத்தாயிரத்திற்குக் கிடைக்கவில்லை. பதினைந்தாயிரம் ரூபாய்க்குக் கூட விற்கப்படுகிறது. இந்த முறையில் நிலங்கள் அதிகமாக விற்கப்படுகிறது. இந்த விகிதத்தில் வரி போட்டால் ஐந்து கோடியிலிருந்து ஏழு கோடி ரூபாய் வரையில் பணம் தாராளமாக வரும். இதைப்பற்றி இந்த பட்ஜெட்டில் சொல்லவில்லை. அதற்கு அவசியம் இல்லை என்று நினைக்கலாம். அதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். அதனால்தான் இது டெபிசிட் பட்ஜெட் இல்லை என்று சொல்லுகிறேன். இது சர்ப்ளஸ் பட்ஜெட் தான். இன்னும் நில வரி மற்றும் எவ்வளவோ வரிகள் இருக்கின்றன. யுத்த காலத்தில் நெருக்கடி காலத்தில் இப்படிப்பட்ட ஒரு பட்ஜெட்டைத்தான் கொண்டு வரமுடியும். ஆனால் வருவாயை அதிகப்படுத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய திறமையைக் காட்டுவாரானால் மக்கள் நிச்சயமாக அவரைப் பாராட்டுவார்கள்.

தூத்துக்குடி அங்கத்தினர் அவர்கள் எவ்வளவோ புள்ளி விவரங்களை எடுத்துக் கூறி, அரசாங்கத்தின் சாதனைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் கூறியது அத்தனையும் நூற்றுக்கு நூறு உண்மை. மற்ற இராஜ்யங்களை விட நம் இராஜ்யம் தொழில் துறையிலும், இன்னும் மற்றெல்லாத் துறைகளிலும் நன்றாக முன்னேறியிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளாதவர்கள் இருக்க முடியாது என்பது நிச்சயமான ஒரு உண்மையாகும். அந்த உண்மை, நிர்வாக இயந்திரம் செயல்படக்கூடிய தன்மையில் தான் மக்களுக்குப் புலப்படும் என்று நான் பல முறை எடுத்துக் கூறி இருக்கிறேன்.

பொதுத் துறை அமைச்சர் கனம் திரு. ராமையா அவர்கள் இப்பொழுது இங்கு இல்லை. அவர்கள் ரெவின்யூ அமைச்சர் என்ற முறையில் திடீர் திடீர் என்று தாலூகா ஆபீஸ்களுக்குப் போய்ப் பார்வையிட்டு வந்தார்கள். ரெவின்யூ இலாக்கா என்பது ஸ்தம்பித்துப் போயிருந்த ஒரு இலாகாவாக இருந்தது. அதைத் தீவிரமாகச் செயல்படுத்தும்படியாகச் செய்த பெருமை கனம் திரு. ராமையா அவர்களைச் சாரும். திடீர், திடீர் என்று அவ்விலாகா காரியலாயங்களுக்கு அவர்கள் செல்வதால், கட்டிடங்களை வெள்ளையடித்து வைத்திருப்பதோடு, ஃபைல்களையும் நன்றாக அடுக்கி வைத்திருக்கக்கூடிய காட்சி இருந்ததோடு, வேலைகளும் ஓரளவு நன்றாக நடந்து வருகிறது. இந்தக் காரியத்தை நிதி அமைச்சர் கனம் திரு. பக்தவத்சலம் அவர்களும் செய்யவேண்டும் என்பது என்னுடைய ஆசை. மந்திரி அவர்கள் நேரடியாகப் பல காரியாலயங்களுக்குச் சென்று பார்த்தால், மக்களும் அவர்களை வந்து பார்த்து தங்களுடைய குறைகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். அம்மாதிரி ஒரு 'சிஸ்டத்'தை நமது நிதி அமைச்சர் அவர்களும் கையாண்டால் மற்றவர்களுக்கு அது விழிப்புணர்ச்சியை

ஏற்படுத்துவதாக இருக்கும். இலாக்காவில் உள்ளவர்கள் 'டைனமிக்' ஆக காரியத்தைக் செய்யக்கூடிய அளவுக்கு அட்மினிஸ்ட்ரேஷனை டோன் அப் செய்தால் ரொம்ப நன்றாக இருக்கும். அட்மினிஸ்ட்ரேஷன் வர வர 'டீரியோரேட்' ஆகிக் கொண்டிருக்கிறது. தரம் குறைந்து கொண்டு வருகிறது என்று சொல்கிற அந்த நிலைமையை நம் ராஜ்யத்தில் பார்த்துக்கொண்டு வருகிறோம். நிர்வாகத்தில் நல்ல பழுத்த அனுபவம் வாய்ந்த கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் நிதி இலாக்காப் பொறுப்பை வகிக்கும் இந்தத் தருணத்தில் இதிலே கவனம் செலுத்துவது மிகவும் பயனளிப்பதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மத்திய அரசாங்கத்திற்கும் ராஜ்ய அரசாங்கத்திற்கும் தொன்று தொட்டு வித்தியாசம் இருந்துகொண்டே இருக்கிறது என்பதைப் பல முறை இந்தச் சபையில் நாம் பேசியிருக்கிறோம். எல்லோருக்கும் தெரியும். மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு சம்பளம், ராஜ்ய அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு சம்பளம் என்ற நிலை இருக்கிறது. இந்த விதமான பாகுபாடு, பாரபட்சம் இருப்பது தவறு என்று பல முறை இடித்துக் காட்டியிருக்கிறார்கள். பிரதம மந்திரி அவர்கள்கூட, ஒரு சந்தர்ப்பத்தில், 'இம்மாதிரி பாரபட்சம் காட்டுவது தவறு' என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். 'டிஸ்க்ரிமினேஷன் இருக்கக் கூடாது' என்று அவரே ஒத்துக் கொண்டிருக்கிறார். அப்படி ஒத்துக்கொண்டு பிரதம மந்திரி அவர்களே பேசியிருக்கும்போது, பாரபட்சம் எத்தனையோ வகையில் அதிகப்பட்டுக் கொண்டே போவதைப் பார்க்கும்போது உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது.

மத்திய அரசாங்கத்திலுள்ள ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58 ஆக்கிவிட்டார்கள். நமது ராஜ்யத்திலிருக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் பொறுத்தும், அப்படி 58 வயது வரை உயர்த்துவதை ராஜ்ய அரசாங்கமும், ஒத்துக் கொண்டுள்ளதாகச் சொல்லிவிட்டது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் திறமையை நான் குறைத்துப் பேச விரும்பவில்லை. ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் தங்கள் கீழ் பல காலமாக வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்கள் செய்வதை வைத்துக் கொண்டுதான் வேலை செய்கிறார்கள் என்பதையும் நாம் நன்றாக அறிவோம். அமைச்சரும் நன்றாக அறிவார்கள். மத்திய அரசாங்கத்தில் இருக்கும் ஒரு சாதாரண கிளார்க்கும் 58 வயது வரை உத்தியோகத்தில் இருக்கலாம் என்று செய்திருக்கிறார்கள் ஆனால், ராஜ்ய அரசாங்கத்தில் இருக்கும் அத்தகையவர்கள் 55 வயதோடு வேலையை விட்டு நின்றுவிட வேண்டும் என்று சொல்லப்படுகிறார்கள். மத்திய அரசாங்கத்தில் இருக்கும் ஊழியர்களுக்கு ஏற்கனவே சம்பளம் அதிகமாக இருக்கிறது. ஆனால், ராஜ்ய அரசாங்கத்தில் உள்ளவர்களின் சம்பள விகிதம் குறைவாக இருக்கிறது. இந்தப் பாரபட்சம் ஏன் இருக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. பிரிவு மனப்பான்மையைத் தடுக்க வேண்டும் என்பதில் தேசபக்தர்கள் எல்லோரும் இரவும் பகலும் பாடுபடுகிறார்கள். அதைப் பற்றியே பேசுகிறார்கள். வேற்றுமை மனப்பான்மையை 'கர்ட்' பண்ண வேண்டுமானால், வேற்றுமை எண்ணத்திற்கும், அதற்கான





இயக்கத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமானால், பாரபட்சம் இல்லாத நிலையைத் தோற்றுவிக்க வகை செய்ய வேண்டாமா? அதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டாமா? பிரதம மந்திரி அவர்களுடைய எண்ணம் உத்தமமான எண்ணம் தான் என்றாலும், அது நடைமுறையில் பிரதிபலிக்கவேண்டும் என்பதை நமது ராஜ்ய அரசாங்கம் எடுத்துச்சொல்வதற்குத் தவறுகிறதா என்று எனக்குப் புரியவில்லை. இம்மாதிரி செய்வது நல்லதல்ல. ஒரே வீட்டில் மனைவி ராஜ்ய சர்க்காரிலும், புருஷன் மத்திய சர்க்காரிலும் வேலை பார்க்கக்கூடிய நிலையில், மனைவி 55-வது வயதில் ரிடையராகி, புருஷன் மேலும் வேலை பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை ஏற்படும். அப்படியானால், மனைவி புருஷனைவிட முதியவள் என்று சொல்லமுடியுமா? இம்மாதிரி வித்தியாசம் இல்லாமலிருப்பதற்கு எந்த அளவில் காரியங்கள் செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மத்திய அரசாங்க நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள், "ஏழு ராஜ்யங்கள் ஓவர்ட்ராஃப்ட் வாங்கிய பணத்தை ரிசர்வ் பாங்குக்குக் கொடுக்க வில்லை" என்று எச்சரித்து, அதனால் மத்திய அரசாங்கத்திலிருந்து எழுபது கோடி ரூபாய் கொடுத்துச் சரிகட்ட வேண்டியிருந்தது என்று சொல்லியிருக்கிறார். அந்த ஏழு ராஜ்யங்களில் நம்முடைய சென்னை ராஜ்யமும் சேர்ந்ததா என்று தெரியவில்லை. நமது நிதி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில், 'வேஸ் அண்டு மீன்ஸ் பொஸிஷன் சரியாக இல்லை, நடைமுறை வரவு செலவைச் சரிக்கட்டுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார். அவர் அப்படிச் சொல்லியிருப்பதிலிருந்து, நமது ராஜ்ய அரசாங்கமும் அம்மாதிரி ஓவர்ட்ராஃப்ட் வாங்கி பணத்தைத் திருப்பிக் கொடுக்காத அரசாங்கங்களில் ஒன்றாக இருக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. சென்னை அரசாங்கம் அதில் சேரவில்லையானால், அது பெருமைப்படத்தக்கதாக இருக்கும். ஆகவே, நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இதுபோலவே, மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டிய பணத்தை ஒழுங்காகக் கொடுத்துக்கொண்டிருந்தால் கஷ்டம் இருக்காது.

**திரு. கே. டி. கோசல்ராம்:** அவர்கள் கொடுக்க வேண்டிய பணத்தை வாங்க வேண்டும் என்றுதான் பலமுறை இந்தச்சபையில் சொல்லியிருக்கிறோம். மற்ற ராஜ்யங்களைப்பற்றிச் சொல்லும் போது, அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுவார்கள். சென்னை ராஜ்யத்தில் நம்முடைய அதிகாரிகள் 100 கோடி ரூபாய் வேண்டுமென்று கேட்டு அவர்கள் 78 கோடி ரூபாய்தான் கொடுப்பதாகச் சொன்னாலும், அதை வாங்கிவிட்டால் போதும் என்ற மனப்பான்மை இந்த ராஜ்யத்தில் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து நமது ராஜ்ய அரசாங்கத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியதைக் கேட்டுப் பெறவேண்டும்.

[6th March 1963

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** நான் சொன்னதை கனம் அங்கத்தினர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. 'சென்ட்ரல் அசிஸ்டென்ஸ்'-ஐ காலாகாலத்தில் அவர்கள் 'ரிலீஸ்' செய்துவிட்டால், எந்தவிதமான குறைபாடும், தட்டுப்பாடும் இருக்காது.

**திரு. கே. டி. கோசல்ராம்:** சென்ட்ரல் அசிஸ்டன்ஸை அவர்கள் கொடுக்க வேண்டிய காலத்தில் கொடுக்காமலிருந்து, திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் அவ்வாறு எச்சரிக்கக்கூடிய அளவில் ராஜ்ய சர்க்கார் விட்டிருக்கலாமா என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், எச்சரிக்கை ஒன்றும் இங்கு வரவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட மற்ற விஷயங்களுக்கு நான் கடைசியில் அளிக்கும் பதிலில் குறிப்பிடுகின்றேன்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** நமது அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள், குறிப்பாக ஸ்ரீமான் பக்தவத்சலம், ஸ்ரீமான் வெங்கட்டராமன் போன்றவர்கள் மிகுந்த பழுத்த அனுபவம் உள்ளவர்கள் என்று அவர்களுக்கு நான் முன்பே 'ட்ரிப்யூட்' கொடுத்து விட்டேன். நமது ராஜ்ய அரசாங்கமும் கொடுக்க வேண்டியதை பாக்கி வைக்கும் அளவுக்கு ஒருபொழுதும் நடக்க முடியாது என்பது தனிப்பட்ட முறையில் எங்களுக்குத் தெரியும்.

கல்வி இலாக்காவில் ஒரு 'லகூனா' இருப்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நிதி அமைச்சரே கல்வி அமைச்சராக இருக்கிறார். அதனால், இப்பொழுது அதைப்பற்றி குறிப்பிடுகிறேன். ஒரு பஞ்சாயத்து போர்டு 'பள்ளிக்கூடம் வேண்டும்' என்று சொன்னால், 'பள்ளிக்கூடம் வேண்டாம்' என்று பஞ்சாயத்து யூனியன் சொல்கிறது. ஸ்தலத்திலே இருக்கிறவர்கள் பஞ்சாயத்து போர்டார். டைரக்ட் எலெக்ஷன் மூலம் பஞ்சாயத்து போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பஞ்சாயத்து யூனியன் அப்படி அல்ல. கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 'பள்ளிக்கூடம் வேண்டும்' என்று சொல்லும்போது, பஞ்சாயத்து யூனியன் 'அது வேண்டாம்' என்று சொல்வதற்குக் காரணம் இல்லை. அரசாங்க உத்தரவு எண் 1718 (19—6—1962)-இல் பஞ்சாயத்து போர்டுக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஜி.ஓ. ஒழுங்காக அமுல் நடத்தப்படவேண்டாமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஆரம்பப் படிப்பை பொறுத்தமட்டில், ஜி.ஓ. மாத்திரமல்ல, இங்கே இயற்றப்பட்டிருக்கும் சட்டத்தின்படியும் பஞ்சாயத்து யூனியனுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது.

**திரு. கே. டி. கோசல்ராம்:** பஞ்சாயத்து போர்டுக்கு அதிகாரம் இருப்பதாக இந்த ஜி.ஓ.-வில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஜி.ஓ. தவறு என்பதை அமைச்சர் அவர்கள் பின்னால் சொல்வாரா?



6th March 1963] [திரு. கே. டி. கோசல்ராம்]

தவறு என்று சொல்லிவிட்டால் அதைப்பற்றி நான் 'க்ளாரிபிகேஷன்' தெரிந்துகொள்கிறேன். ஜி.ஓ.-வில் ஸ்பெஸிபிக்காகச் சொல்லப்பட்டிருப்பதாவது— "It has been suggested in this connection that the local panchayat should be consulted." 'Should be consulted' என்று சொல்லியிருக்கிறதேயொழிய, 'may be consulted' என்று சொல்லவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** 'Should be consulted' என்று போட்டதில் தவறு இல்லை. 'Consulted' என்ற வார்த்தைதான் இருக்கிறது.

**திரு. கே. டி. கோசல்ராம்:** பஞ்சாயத்து போர்டு தீர்மானம் போட்டு அனுப்பியிருப்பதை பஞ்சாயத்து யூனியன் 'ஓவர்-ரூல்' பண்ணலாமா? பஞ்சாயத்து யூனியனுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்று சொல்லிவிட்டால், போதும். எனக்கு 'க்ளாரிபிகேஷன்' தான் வேண்டும். மொத்தத்தில் ஜனநாயகத்தின் அடிப்படையில் உருவானது பஞ்சாயத்து போர்டு. அதன் பின்னர் வருவதுதான் பஞ்சாயத்து யூனியன். 'டைரக்ட் எலெக்ஷன்'இல் வருவது பஞ்சாயத்து. 'இன்டைரக்ட் எலெக்ஷன்'-இல் வருவது பஞ்சாயத்து யூனியன். தேர்தல் மூலமாக வந்த பஞ்சாயத்தின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வது சிறந்த ஜனநாயக அடிப்படையில் அமைந்ததாக இருக்கும். இந்தவிதமாகத்தான் ஜனநாயகத்தை வளர்க்க முடியும் என்று நான் நினைக்கிறேன். மகாத்மா காந்தியடிகள் பஞ்சாயத்து சுயாட்சி வேண்டுமென்று சொன்னாரேயல்லாது, பஞ்சாயத்து யூனியன் சுயாட்சி வேண்டுமென்று சொல்லவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

***திரு. ந. சுப்பிரமணிய செட்டியார்:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, 1963-64-ஆம் வருஷத்திய நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நமது மாகாணத்திலே பல துறைகளிலும் உற்பத்தி பெருகியிருக்கிறது. தொழில்துறை, கல்வித் துறை ஆகியவற்றில் எல்லாம் எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் எவ்விதமான புது வரிகளும் போடாமல் நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் பட்ஜெட்டை முழு மனதுடன் ஆதரிக்கவேண்டும்.

என்னுடைய தொகுதி ஸ்ரீரங்கம். 1962-63-ஆம் ஆண்டு பட்ஜெட் உரையிலேயே நான் சொன்னேன். அங்கே செயலாற்றிக்கொண்டிருக்கும் 'சவுத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் கார்ப்பரேஷன்' சரியான முறையில் விஸ்தரிப்புச் செய்யவில்லையென்பதால் அதை மெட்ராஸ் எலெக்ட்ரிஸிடி போர்டே எடுத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டாலும் இப்போது இருக்கிற வரையில் அவர்களிடம் இருக்கட்டும், மேற்கொண்டு செய்யப்படுகிற அபிவிருத்தி வேலைகளை எல்லாம் மின்சார போர்டே செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தொகுதியில் உள்ள இன்னும் சில கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப்படாமலேயே

இருக்கிறது. திருவட்சோலை, உத்தமசேரி பகுதிகள் வளர்ச்சி அடையாமல் இருக்கின்றன. உடனடியாக அந்தத் தொகுதியில் இன் வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டி இருக்கிறது. அதன் மேற்கு பாகங்களில் கோயிலைச் சுற்றியிருக்கும் பிரதேசத்தில் ஓரளவு குடிதண்ணீர் வசதி இருக்கிறது. ஆனால் திருவானைக்காவல் பகுதியில் ஓவர்ஹெட் டாங்க் போன்று எதுவும் கட்டி குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்கப்படவில்லை. உடனடியாக அந்த வசதியைச் செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சியில் பாய்லர் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்காக நிலமும், பணமும் ஒதுக்கிக் கொடுத்திருப்பதற்காக மகிழ்ச்சி தெரிவிக்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு புறம்போக்கு நிலங்களை அடமானம் செய்வதிலும், வீடு கட்டிக்கொடுப்பதிலும் தாமதம் ஏற்பட்டால், உடனடியாக அவர்களுக்கு நிலத்தையாவது வாங்கிக்கொடுத்தால் துரிதமாக எல்லா வேலைகளையும் செய்ய முடியும். அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தை நீக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

11-20 a.m. *திரு. வி. ஆர். பெரியண்ணன்: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கையின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உணவு உற்பத்திக்காக, விவசாயத் துறையில் நிறைய தொகை ஒதுக்கியிருப்பதைக் காண்கிறோம். முக்கியமாக விவசாயிகளுக்கு மிகவும் பயன்படக்கூடிய தண்ணீர் வசதிக்காக அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியில் நிறைய ஏரிகள் இருக்கின்றன. ஆனால் அந்த ஏரிகளுக்கு எப்போதுமே தண்ணீர் வருவது இல்லை. மழை பெய்கின்ற காலத்தில் சில காட்டாறுகளின் வழியே தண்ணீர் வரும். மழை இல்லாத காரணத்தினால் நீண்டகாலமாகப் பல ஏரிகள் நிரம்பாமல் இருக்கின்றன. சேந்தமங்கலம் தொகுதியில் இருந்து பதினைந்து மைலில் காவேரி இருக்கிறது. ஆகவே காவேரியில் இருந்து ஒரு கால்வாய் மூலமாகவாவது ஆண்டுக்கு ஒரு முறை தண்ணீர் கொண்டுவந்து இந்த ஏரிகளை நிரப்பித்தா வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் நாச்சிபுதூர் என்ற கிராமத்தில் புதியகுளம் என்ற ஏரி இருக்கிறது. அதற்கு கொல்லிமலையில் இருந்து தண்ணீர் வரவேண்டும். கொல்லிமலையில் இருந்து தண்ணீர் வரக்கூடிய ஏரிகள் பல இருந்தாலும் இந்த ஏரிக்கு இப்போது கொல்லிமலையில் இருந்து வந்த தண்ணீர் தடைப்பட்டு விட்டது. அதற்காக பாண்டியாற்றை வறட்டாற்றில் திருப்பி, அதன்மூலம் புதுக்குளம் நிரம்பும்படியாகச் செய்யவேண்டும்.



அப்படி நிரம்பச் செய்தால் நூற்றுக்கணக்கான ஏக்கரா நல்ல முறையில் பயன்பெறும். அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று மீண்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் உபயோகப்படுத்தக்கூடிய மின்சாரத்திற்கு, நாட்டின் நெருக்கடியை முன்னிட்டு 5 ஹார்ஸ் பவர் சக்திக்கு கீழ் உள்ள மோட்டாருக்குதான் சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கிறார்கள். மிக ஆழமான கிணற்றில் இருந்து 5 ஹார்ஸ் பவர் மோட்டாரை வைத்துக்கொண்டு மட்டும் இறைக்க முடிய வில்லை. ஆகவே விவசாயிகளுக்கு 7 ஹார்ஸ் பவர் அல்லது பத்து ஹார்ஸ் பவர் வரையிலுமாவது சர்வீஸ் கொடுக்க அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கூடுமான வரையில் பகல் நேரத்தில் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டும்.

பம்பு செட்டுகள் வைக்க பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் பணம் கொடுக்கப்படுகிறது. இப்படி கொடுக்கப்படுகிற பணத்தை 5 ஆண்டுத் தவணையில் கட்டவேண்டும் என்கிறார்கள். இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய், மூவாயிரம் என்று வாங்கிய பணத்தை ஐந்தாண்டுகளில் கட்டுவது விவசாயிகளுக்கு மிகவும் சிரமமாக இருக்கும். ஆகவே முன் போல பத்தாண்டுத் தவணையில் கட்டுவதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பல ஆண்டுகள் மழை இல்லாமல் இருந்து இவ்வாண்டு மழை பெய்த காரணத்தினால் இந்த ஆண்டு நிறை நெல் பயிர் செய்திருந்தார்கள். ஆனால் ஒரு வகை நோய் பயிர்களுக்கு வந்து விட்டது. விவசாய இலாகா அதிகாரிகளிடத்தில் போய்க் கேட்டால் இப்போது ஒன்றும் செய்ய முடியாது, முன்பே மருந்து தெளித்திருக்கவேண்டும் என்கிறார்கள். எந்தக்காலத்தில் எந்த மருந்து தெளிக்கவேண்டும் என்பது பற்றி விவசாயிகளுக்குப் போதுமான அளவு விளக்கம் கொடுக்கப்படுவதில்லை. நல்ல அனுபவம் மிக்க விவசாய இலாகா அதிகாரிகளைக் கொண்டு விவசாயிகளுக்கு காலாகாலத்தில் தக்க விளக்கம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்னொன்று, இவ்வாண்டு பருத்திக்கு ஒரு நோய் வந்திருக்கிறது. அதை அதிகாரிகளிடம் சொன்னபோது அவர்கள் ஒரு பருத்திச் செடியைப் பிடுங்கிக்கொண்டுவரச் சொன்னார்கள். அதை கோவை விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி, அந்த நோயைப் போக்க எந்த மருந்து தெளிக்கலாம் என்று கேட்டார்கள். இதுவரையில் அதற்குப் பதில் கிடைக்கவில்லை. அவர்களுக்கே என்ன மருந்து தெளிப்பது என்று தெரியவில்லை. நோய் விழுந்த செடிகளைப் பிடுங்கி எறியச் சொல்கிறார்கள். அப்படிப் பிடுங்கி எறிந்தாலும் கூட அந்த நோய் தொத்து நோய் போல எல்லாச் செடிகளுக்கும் பரவிக்கொண்டிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம். இந்த நோய் விழாமல் இருக்க இனி அடுத்த ஆண்டு முதலாவது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் புதிய கிணறுகள் வெட்ட விவசாயிகளுக்கு இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். வறண்ட பிரதேசத்தில் அந்த இரண்டாயிரம் ரூபாயைக் கொண்டு கிணறு வெட்ட முடிவதில்லை. கிணறு வெட்டி தண்ணீர் காட்டவேண்டும் என்கிறார்கள். அது தான் அக்ரிமெண்டு. இரண்டாயிரம் வாங்கி கிணற்றை வெட்டி தண்ணீரைக் காண முடியாது போகும்போது தண்ணீர் காட்டுவதற்காக மேலும் கடன் வாங்க வெளியில் சென்றால் ஏற்கனவே அந்த நிலத்தை அரசாங்கத்திடம் அடமானம் வைத்து இரண்டாயிரம் வாங்கியிருப்பதால் அவர்கள் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே ஒரு தடவையாகவே 2,000 தான் என்று இல்லாமல் கிணறு வெட்டித் தண்ணீர் காணும்மட்டும் எவ்வளவு செலவாகிறதோ அந்தத் தொகையைக் கடனாக வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காளப்பநாயகன்பட்டி, புதுச்சத்திரம் ஆகிய இடங்களில் உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிக்க கடந்த ஆண்டே பணம் கட்டியும் இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. அங்கு உள்ள காங்கிரஸ்காரர்கள் நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்கு அளித்தீர்கள், ஆகவே அனுமதி வழங்க முடியாது என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். அங்கே போனால் மக்கள் நீங்கள் அமைச்சரிடம் சொல்லிப் பாருங்கள், அவர் அத்தகைய மனப்பான்மை உடையவர் அல்லவே என்கிறார்கள். இது பற்றி கல்வி அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து விசாரித்துப் பார்த்து உடனடியாக என்னுடைய தொகுதியிலிருக்கும் புதுச்சத்திரம், காளப்பநாயகன்பட்டி ஆகிய இரு இடங்களிலும் உயர்நிலைப் பள்ளி ஏற்பட அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்

11-30 a.m. கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலுள்ள கொல்லிமலைப் பகுதி பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அதை டிரைபல் பிளாக்காக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கடந்த ஆண்டு மாவட்டக் கலெக்டர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறோம். இதுவரை அதுபற்றி எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. பஞ்சாயத்து யூனியன்கள் அமைத்து பல அலுவலர்களை அமைந்தாலும்கூட, ஒவ்வொரு ஊரையும் இணைக்கும் ரோடுகள் இல்லாதிருப்பதன் காரணமாக கொல்லிமலைப் பகுதி சீர்திருத்தம் அடைய முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இதிலே அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. மீ. அழகர்சாமி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்புக்குரிய நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் நிதி நிலை அறிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக, இது வரவேற்கப்பட வேண்டிய பட்ஜெட். இந்த பட்ஜெட்டிலே புதிய வரிகள் ஒன்றும் இல்லை. ஆயினும் மத்திய சர்க்கார் சில வரிகளைப் போட்டிருக்கிறது. அவற்றில் மண்ணெண்ணை வரியைத் தவிர மற்றவையெல்லாம் சாதாரண மக்களைப் பாதிக்கக் கூடிய வரிகள் அல்ல. மற்றைய



வரிகளால் பாதிக்கப்படக் கூடிய முதலாளிகள்கூட, அந்த வரிகளின் காரணமாகக் கடைசியாகப் பாதிக்கப்படக் கூடியவர்கள் சாதாரண மக்கள்தான் என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம், நம்முடைய நாட்டில் பெரும்பகுதியினர் சாதாரண மக்களாகவும், ஏழைகளாகவுந்தான் இருக்கிறார்கள். ஆகவேதான் நம்முடைய நாட்டில் எந்த வரியைப் போட்டாலும் அது சாதாரண மக்களை பாதிக்கிறதெனக்கூறி அவர்கள் ஆதரவைப் பெற முயற்சிக்கிறார்கள். இன்று இருக்கக் கூடிய நெருக்கடி நிலைமையில் இந்த பட்ஜெட்டை 'யுத்த கால பட்ஜெட்' என்றுகூடச் சொல்லலாம். நம்முடைய நாட்டு மக்கள் பெரிய தியாகத்தைச் செய்ய வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே, இந்த நெருக்கடி நிலையில் அதிகமான நிதியை அரசாங்கம் பெற எந்த வரியைப் போட்டாலும் அதை நாம் மனமாறக் கொடுக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

விவசாயத்தைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் பேசினார்கள். விவசாயத்துறையிலிருந்துதான் நம்முடைய தேசிய வருமானத்திற்கு 50 சதவிகிதம் கிடைக்கிறது. விவசாயத்தைப் பொறுத்துத் தான் மற்றப் பல தொழில்களும் வளரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்கள் விலை இறங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கடந்த பல வருஷங்களாக மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் திட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டதன் காரணமாக, நாட்டிலே விவசாயத் துறையிலே உற்பத்தி அதிகமாகப் பெருகியிருக்கிறது. விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருள்களுக்குக் குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்யக்கூடிய அளவுக்குக்கூட விவசாயத் துறையில் உற்பத்தி பெருகியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். விவசாயி களுடைய உற்சாகம் குறைந்துவிடக் கூடிய அளவுக்கு விளை பொருள்களின் விலை குறைந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எங்களுடைய பகுதியான கொடைக்கானல், கீழ் பழனி மலைப் பகுதியில் கடந்த 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு 'லூஸ் ஜாக்கெட் ஆரஞ்சு' இனிப்பான ஆரஞ்சு பரந்த அளவில் பயிர் செய்யப் பட்டு வந்தது. இப்போது தடுக்க முடியாத அளவுக்கு ஒரு நோய் பரவியதன் காரணமாக, பழத்தோட்டங்களில் பெரும்பகுதி அழிந்துவிட்டன. இப்பொழுது இருக்கும் பழத் தோட்டங்கள் முன்பு இருந்ததில் 10 சதவிகிதம்கூட இருக்காது. சமீப காலத்தில் ஒருவித மருந்தைத் தெளிப்பதன் காரணமாக பலன் ஏற்பட்டு வருகிறது. ஆனால் அந்த மருந்தின் விலை சாதாரண விவசாயிகள் வாங்கக் கூடிய அளவில் இல்லை. ஆகவே, அந்த மருந்து பாதி விலைக்கு விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய ஏற்பாட்டைச் செய்தால் ஆரஞ்சுப் பழ உற்பத்தி அதிக அளவு பெருக வழிவகைகள் ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியிலே, பெரியகுளம் நகரைச் சுற்றிலும் ஏராளமான நஞ்சை வயல்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி மலையடிவாரத்தில் இருக்கும் காரணத்தினால் நகரைச்

சுற்றிப் பல கண்மாய்கள் இருந்தும்கூட மண்மேடிட்டு விடுவதால் ஒரு போகத்திற்குக்கூட அந்தப் பகுதியில் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. அந்த நகருக்கு அருகாமையில் மலை மீது சோத்துப்பாறை, குப்பன்பாறை ஆகிய இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றினால் அவை நடுத்தர திட்டத்தின்கீழ் வருமோ அல்லது சிறு பாசனத் திட்டத்தின்கீழ் வருமோ, எனக்குத் தெரியாது—புதிய ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் வசதி கொடுப்பதாக இல்லாவிட்டாலும், இருக்கக்கூடிய ஆயக்கட்டுகள் ஸ்திரமடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மலைப் பிரதேசங்களில் மண் அரிப்புத் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மலைப் பகுதிகள் அல்லாத மற்றையப் பகுதிகளில் மண் அரிப்புத் தடுப்பைக் குறைந்த செலவில் செய்துவிட முடியும். ஆனால் மலைப் பகுதிகளில் அதற்கு அதிகச் செலவாகும். இப்போது மலைப் பிராந்தியங்களில் மண்ணரிப்பைத் தடுக்க ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் கொடுக்கிறார்கள். அங்கெல்லாம் கற்கோட்டைச் சுவர் கட்டுவதன் மூலந்தான் மண்ணரிப்பைத் தடுக்க முடியும். ஒரு ஏக்கருக்கு 300 ரூபாயில் கற்கோட்டை கட்டுவது முடியாத காரியம். ஆகவே, குறைந்த பட்சம் ஒரு ஏக்கருக்கு 600 ரூபாயாவது மண்ணரிப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மன்றத்திலே பேசிய அங்கத்தினர் ஒருவர் நகர்புறங்களின் அருகாமையில் இருக்கக்கூடிய இடங்களில் வீடுகள் கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்வதைப் பற்றிச் சொன்னார். அந்தமாதிரி இடங்களை நிச்சயமாக ஆர்ஜிதம் செய்ய வேண்டும். நகர்புறங்களில் அப்பர் மிடில் க்ளாஸைச் சேர்ந்தவர்கள், நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கென ஒரு வீடுகூடக் கட்டிக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் சென்ட் விலை 1,000, 1,500 ரூபாய் என்று இருக்கிறது. நகர்புறங்களில் மட்டும் அல்ல. நகரத்திற்கு அருகாமையில் 1 மைல் 1½ மைல் தூரத்தில் இருக்கக் கூடிய இடங்களில்கூட சென்ட் விலை ரூ. 1,000, 1,500 என்று இருக்கிறது. இப்படி விலை உயர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆக, நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்கள் கூட தங்களுக்கு ஒரு வீடு கட்டிக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். நில ஆர்ஜிதம் செய்யத்தான் போகிறோம் என்று சர்க்கார் அறிவித்திருக்கிறார்கள். தொடர்ந்து மதுரை போன்ற நகரங்களிலும் நில ஆர்ஜிதத்தை கண்டிப்பாக அமுல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர்** : கௌரவம் மிக்க உதவி சபாநாயகர் அவர்களே, பழுத்த நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த 1963-64-ம் ஆண்டு பட்ஜெட்டை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நெருக்கடியான இந்த சந்தர்ப்பத்தில் நமது நிதியமைச்சர் அவர்களால் இந்த பட்ஜெட் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நம் நாட்டின் சுதந்திரத்தைப் பறிப்பதற்கு விடாதபடி நம் சுதந்திரத்தை காப்ப





தற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்காக நம் திட்டங்களை வெற்றி அடையச் செய்ய வேண்டும். இப்போது நாம் ஒன்றுபட்ட நிலையில் அரசியல் வித்தியாசங்களை எல்லாம் மறந்து நாம் ஒன்று, நாம் இந்தியர்கள், இந்த நாட்டின் சுதந்திரத்தை பறிக்க நாம் விட மாட்டோம், இந்த நாட்டின் சுதந்திரத்தை நாம் உயிரைக் கொடுத்துக் காப்போம் என்பதைக் காண்பித்து விட்டோம். அந்நிலையில் 2 கோடி 74 லட்சம் ரூபாய் துண்டு விழுவதாக இருந்தாலும், வரி ஒன்றும் விதிக்காது இந்த பட்ஜெட் அனுபவசாலியான நம் அன்புமிக்க நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நமக்கு பொறுப்பு இருக்கிறது. இந்த மாநில அரசாங்கம் வரி ஒன்றும் விதிக்காவிடினும் மத்திய சர்க்கார் வரி விதித்திருக்கிறதே, அதைத் தாங்க முடியவில்லை என்று நாட்டின் தற்போதைய அவசர நிலையை சற்றும் கவனியாது மக்களிடையே பிரசாரம் செய்வது வருந்தத் தக்கதாகும். ஆம், வரி போட்டு அதன்மூலம் நாட்டைப் பாதுகாக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நம் நாட்டின் பாதுகாப்பிற்காக நாம் எல்லாவிதமான தியாகங்களை செய்யவும் முன்வரவேண்டும். மக்களுக்கு கஷ்டம் இருக்கத்தான் செய்யும். மண்ணெண்ணை விலை உயர்ந்து விட்டது. அதற்கு வரி விதிக்கு முன்னரே வியாபாரிகள் விலையைக் கூட்டி விடுகிறார்கள். நம் ப்ளானிங் கமிட்டியார் டிபென்ஸ் மெஷர்ஸின் கீழ் விலை அதிகமாக உயர்வதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறார்கள், அப்படி தக்க நடவடிக்கைகளை எடுப்பார்கள் அரசாங்கம், என்ற நம்பிக்கையும் இருக்கிறது. விறகு விலை ஏறாமல் இருக்க பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் புறம்போக்கு நிலங்களில் அந்தந்த கிராமங்களின் தேவைக்கேற்ப பழத்தோட்டங்கள், மரங்கள் போன்றவை வளர்த்து விறகு விலை ஏறிவிடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹோம் கார்ட்ஸ். பாதுகாப்பு நிதிக்காக ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஏராளமான பணத்தை முதல் அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள், முதல் அமைச்சர் அவர்களின் திருநெல்வேலி விஜயத்தின்போது. கிராமங்களில் இருக்கும் மக்களிடையே பாதுகாப்பு நிலை பற்றி அறிவித்து, பள்ளி மாணவர்கள், என்.ஸி.ஸி.-யைச் சேர்ந்தவர்கள் மார்ச் செய்து மக்களிடை தேசீய விழிப்பை ஏற்படுத்த அவர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இந்த ஹோம் கார்ட் படை பற்றிய சட்டம் நிறைவேறியிருக்கிறது. அதை நல்ல முறையில் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். எல்லோரும் அதற்கு வேண்டிய ஒத்துழைப்பு அளிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, விவசாயத்தில் நமது டார்கெட் 17 லட்சம் டன். நம் நாட்டில் விவசாயம் அபிவிருத்தி அடைந்து கொண்டுதான் வருகிறது. சென்ற மாதம் கனம் ராமையா அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு விஜயம் செய்தபோது, என்ஜினியர்களை அழைத்து அங்கு என்னென்ன நீர்ப்பாசன வசதிகளைச் செய்ய

[திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர்] [6th March 1963

வேண்டும், என்னென்ன செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் விவாதித்து அங்கு வேறு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று கேட்டு அவைகளை நீக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். அது ஒரு சரியான வழிகாட்டியாகும். டிப்பார்ட்மெண்ட் வேலைகள் நல்லமுறையில் நடைபெறவில்லை என்று மக்கள் சொல்லும் ஆவலாதிகள் நீக்கப் பெறுவதற்கு இது ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கும். என் தொகுதி செழிப்பான ஒரு தொகுதி. மணிமுத்தாறு, பாபநாசம் போன்ற அணைகள் இருக்கின்றன. எங்கள் தொகுதியில் இன்னும் 80,000 ஏக்கர்களுக்கு, உபரி நீர்பாசன வசதி செய்து கொடுக்க பாபநாசத்தின் அருகில் இருக்கக்கூடிய சேர்வராயன் அணைக்கட்டுத் திட்டத்தையும் செய்து முடித்தால் அங்குள்ள விவசாயிகள் தங்கள் நீர்த் தேவையைக் குறைவின்றிப் பெற முடியும். ஆகவே, அதை விரைவில் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விக்கிரமசிங்கபுரம் தொழிலாளர்கள் நிறைந்த பிரதேசம். “Water, water everywhere, but not a drop of water to drink” என்று சொல்வது போல் தாம்பிரபரணிக் கரையில் இருந்தபோதிலும் விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம், கல்லிடைகுறிச்சி, சேர்மாதேவி போன்ற இடங்கள் கன்னடியன்கால் கரையிலிருந்தும் குடி தண்ணிர் வசதி இன்றி அங்குள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அங்குள்ள தண்ணீரைக் குடிப்பதால் தொத்து நோய்கள் பரவுகிறது என்றும், குடி தண்ணீர் திட்டம் வேண்டுமென்றும், அதற்காக 20 ஆண்டுகளுக்கு முன்பாக திட்டம் போட்டும் விக்கிரமசிங்கபுரத்தில் குடிநீர் திட்டம் இன்னும் அமுலாகவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதைக் கவனித்து அந்த தொழிலாளர்கள் கஷ்டப்படாதபடி இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நிதியமைச்சர் அவர்களை குறிப்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன்.

மாஞ்சோலை பஞ்சாயத்து யூனியன் மணிமுத்தாறு டவுன்ஷிப் கமிட்டியாக அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு 5,000-க்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நாலுமுக்கு, வெட்டு என்ற இடங்களில் ஏழெட்டு மைல்கள் தூரத்தில் தொழிலர்ளர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் வெளி உலகத்திற்கு வர, அம்பாசமுத்திரத்திற்கு வர 20 மைல் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. நல்ல ரோடுகள் இருக்கின்றன. ஆகவே அங்கு பஸ்கள் விடலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தும், அத்தோட்டத் தொழிலாளர்களுக்கு அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி போன்ற இடங்களுக்கு வர வசதி செய்து கொடுக்கக் கூடாது என்று மறுப்பதாக இருந்தால், இந்த டவுன்ஷிப் கமிட்டி அமைக்கும் காலத்திலேயே இப்படி இருந்தால் அந்த டவுன்ஷிப் கமிட்டியிடம் இருந்து தொழிலாளர்கள் என்ன நன்மை பெறமுடியும் என்று நினைத்து வருத்தப்படுகிறார்கள். அதையும் கவனித்து அங்கு பஸ் விட வேண்டிய வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



6th March 1963] [திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர்]

அடுத்தபடியாக, முதியோர் பென்ஷன் திட்டம். அது மிகவும் போற்றத் தக்கது. அத்திட்டம் சென்ற ஆண்டு அமுல் செய்யப்பட்டு இப்போது அதற்காக ஒரு கோடியே 22 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் அடிமையாக இருந்து கோடிக்கணக்கானவர்கள் கண்ணீர் விட்டு இறந்தார்கள். இப்போது சுதந்திரத்தை கண்ணால் கண்டிருக்கும் வயது முதிர்ந்தவர்கள் நம் அரசாங்கத்திற்கு ஆசி கூறுகிறார்கள். நாம் சாகக் கூடிய சமயத்தில் நமக்கு அரசாங்கத்திலிருந்து 20 ரூபாய் பென்ஷன் வருகிறது என்ற ஆர்வத்தோடு சாகச் செல்கிறார்கள். அத்திட்டத்தை இன்னும் நல்ல முறையில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஒரு வேண்டுகோள். ஹையர் செகண்டரி ஸ்கூல் டீச்சர்ஸ், செகண்டரி ஸ்கூல் டீச்சர்ஸ்ஸாக இருந்து பென்ஷன் ஆனவர்கள் இன்று 5, 7, 10 ரூபாய் என்று தான் பென்ஷன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேல் கிடைப்பதில்லை. அவர்கள் நம் அரசாங்கத்திற்கு வேண்டுகோள், பெட்டிஷன் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, சொல்லிக் கொடுத்து இன்று வறுமையால் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

(கனம் சபாநாயகர் தலைமை)

தங்களுக்கு அந்த பென்ஷனைக் கொஞ்சம் அதிகமாக—ஓல்ட் ஏஜ் பென்ஷன் தொகை அளவாவது--கொடுக்க வேண்டும் என்றும், அதைக் கருணையோடு அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்றும் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அதையும் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த பட்ஜெட்டில் யார் எத்தகைய குறைகளைச் சொன்னாலும் கூட மக்களுக்குச் சரியான முறையில் பயன்படத் தக்க அளவில், அவசர கால நிலையையொட்டி தயாரிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல முறையில் நிறைவேற்றுகிறோமோ அதற்குத் தகுந்தபடி நாட்டின் பாதுகாப்பு இருக்கும் என்ற முறையில் அமைக்கப்பட்டிருப்பதற்காக இந்த பட்ஜெட்டை நான் பாராட்டி, கனம் நிதி அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்—ஜெய் ஹிந்த்.

* **திரு. எம். எஸ். மணி :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நிதி அமைச்சர் அவர்கள் 1963-64-ம் ஆண்டுக்குரிய பட்ஜெட்டைச் சமர்ப்பித்து மன்றத்தின் ஆலோசனைகளையும், ஒப்புதலையும் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் சமர்ப்பித்திருக்கிற இந்த பட்ஜெட்டிலே 2 கோடி 7¼ லட்சம் ரூபாய் துண்டு விழுவதாகக் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக, தனிப்பட்ட ஒருவர் பட்ஜெட் தயாரிப்பது என்று சொன்னால், தன்னுடைய வருமானத்திற்கு ஏற்பத்தான் செலவினத்தை செய்வான். ஒருவருக்கு 100 ரூபாய் வருமானம் என்று சொன்னால், அந்த 100 ரூபாய்க்குள் செலவு செய்யும் நிலைமையைப் பார்க்கிறோம். அரசாங்க பட்ஜெட் என்று சொல்லும்போது அதற்கு நேர்மாறாக இருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். எவ்வளவு செலவினங்கள் வருகின்றதோ

அதையொட்டி வரவினங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதில் 2 கோடியே 74 லட்சம் ரூபாய் துண்டு விழுந்தாலும் கூட, சரிக்கட்டுவதற்கு ஜாடையாக வழியும் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இதைப் பற்றிப் பேசுகிறபோது, இங்கே பேசிய காங்கிரஸ் அங்கத்தினர்கள் வரி போடவில்லை என்று பெருமைப்பட்டார்கள். உள்ளபடியே நிதி அமைச்சருடைய சாமர்த்தியத்தை இது காட்டுகிறது. வரி போடவில்லை என்று இங்கே சொல்லி விட்டு வெளியிலே போகிற போது அங்கே சந்திக்கிற பொதுமக்களைப் பார்த்து வரி போடவில்லை என்று சொன்னால் உள்ளபடியே அவர்கள் சிரிக்கிறார்கள். நாம் போடவில்லை என்றால் நம் மத்திய சர்க்கார் போட்டிருக்கிறார்கள். நமக்கும் அதற்கும் தொடர்பு இல்லை என்று சொல்ல முடியாது. இங்கேயும் காங்கிரஸ் கட்சிதான் ஆளுகிறது. அதேபோல மத்திய சர்க்காரிலும் காங்கிரஸ் கட்சிதான் ஆளுகிறது. நமக்கும் அதிலிருந்து பங்கு கிடைக்கிற காரணத்தினால் நமக்கும் அதோடு சொந்தம் இருக்கிறது, பந்தம் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே வரி போடாததைக் குறித்து நம்முடைய மதிப்புக்குரிய நண்பர் மாதா கவுடர் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள்—இந்த பட்ஜெட் ஒரு அல்வாத் துண்டு போல் இருக்கிறது—என்று. உள்ளபடியே இதைப் பார்த்து, சென்ற வாரம் இங்கே வந்து போன விவசாயிகளைப் பார்த்து நான் கேட்கிற போது, விவசாயத் திட்டத்திலே நிலங்களுக்கு வரி போட்ட அந்த நிலைமையையொட்டி அவர்கள் குறிப்பிட்டார்கள். நிலவரியைக் கேட்டவுடனே எங்கள் நிலைமையெல்லாம் எப்படி இருந்தது என்றால், அது அல்வா சாப்பிட்டது போல இல்லை, அதற்கு மாறாக ஒரு சுக பேதி அல்வா சாப்பிட்ட மாதிரி இருந்தது என்று குறிப்பிட்டார்கள் . . . .

**கனம் சபாநாயகர் :** அப்போதும் கனம் அங்கத்தினர் அல்வாவை விடவில்லையே.

**திரு. எம். எஸ். மணி :** வயிற்றைக் கலக்குகிறது என்று சொன்னார்கள் . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அல்வா சாப்பிடுவதை விட, உடல் நலத்துக்கு இரண்டாவது சொன்னது தான் நல்லது.

**திரு. எம். எஸ். மணி :** இந்த நிலை தொடர்ந்து இருக்கக் கூடாது. மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் பெற வேண்டியது 35 கோடியே 40 லட்சம் ரூபாய் என்று அவர்கள் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பார்ப்பது 31 கோடியே 30 லட்சம் ரூபாய் என்று சொல்லுகிறார்கள். நிதி அமைச்சர் ஏன் குறைவாக எதிர்பார்க்கவேண்டும் என்று உள்ளபடியே எனக்குப் புரியவில்லை. இதில் 4 கோடியே 10 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. ஆனால் இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் சொல்லியிருக்கிறார் "நெருக்கடியை முன்னிட்டு திட்டத்தைக் குறைக்க மாட்டோம்" என்று. அத்தகைய உத்திரவாதத்தைக் கொடுத்திருக்கிறார் அவர்.



அப்படியிருக்கும்போது 4 கோடியே 10 லட்சம் ரூபாய் குறைகிறது என்று நம் நிதி அமைச்சர் அவர்கள் எதற்காகச் சொல்ல வேண்டும் என்று நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்லாமல், பக்கத்திற்குப் பக்கம், பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கும் நிலைமையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாதுகாப்பைப் பொறுத்த வரையில் இன்றைய தினம் ஊர்க் காவல் படைக்கும், போலீசுக்கும் நாம் செலவு செய்கிறோமே தவிர, வேறு பெரிய பாதுகாப்புத் திட்டம் நம் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நாம் என்ன செய்கிறோம் என்று எனக்குப் புரியவில்லை.

அடுத்து, அவருடைய அறிக்கையில் சொல்லும்போது பால் வழங்கும் திட்டம் பற்றிச் சொல்லியிருக்கிறார். கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களுக்கு மாடுகளை வாங்க 37 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதனால் கூடுதல் பால் கிடைக்கும் என்று நிதி அமைச்சர் அவர்கள் எதிர்ப்பார்க்கிறாரா என்று கேட்க விரும்புகிறேன். கூட்டுறவு சங்கங்களுக்குக் கடனைக் கொடுக்கிறார்கள். அந்தச் சங்கம் இந்தத் தொகையை தனிப்பட்டவர்களுக்கு 200 ரூபாய் அல்லது 300 ரூபாய் என்ற முறையில் மாடு வாங்க கடனைக் கொடுக்கிறது. கடனை வாங்கக் கூடிய தனிப்பட்ட நபர் மாட்டை எங்கே வாங்குகிறார் என்றால் அடுத்த தெருவில் இருக்கும் முனியனிடம் வாங்குகிறார். இவர் கடன் வாங்கி மாட்டை வாங்கினாலும், வாங்காவிட்டாலும் அந்த மாடு அந்த ஊரில் தான் பால் கறக்கிறது. இதனால் அதிகமாக பால் வரக் கூடும் என்று என்னால் நம்ப முடியவில்லை. வேண்டுமானால் கொடுக்கும் கடனை அவர்களுக்கு பணமாகக் கொடுக்காமல் வெளி நாட்டிலிருந்து நல்ல தரமான பசுக்களை வரவழைத்து, 4-5 படிகள் கறக்கக் கூடிய மாடுகளைக் கொண்டு வந்து கொடுத்தால் இந்தத் திட்டத்தினால் உள்ளபடியே பலன் கிடைக்க, பால் பெருக உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, அவர்கள் அறிக்கையில் கூட்டுறவு சம்பந்தப்பட்ட ஒரு பகுதியில் வசூலாகாத கடனுக்காக ஒதுக்கிய தொகை 22 லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கடன் கொடுக்கும் போதே வசூலாகாது என்று ஏன் எதிர்பார்க்க வேண்டும்? அப்படியானால் கடன் கொடுக்கக்கூடிய நிர்வாகிகள் தவறான வழியில் கொடுப்பதாகத் தானே அர்த்தமாகும்? பல பகுதிகளில் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி, சில அதிகாரிகளை கைக்குள் போட்டுக்கொண்டு கடனை வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்று கேள்விப்படுகிறோம். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் போது பணமாகக் கொடுப்பதற்கு பதிலாக விதைகளையும், மற்ற சாமான்களையும் கொடுத்து அறுவடை நடக்கும் நேரத்தில் தானியங்களாகப் பெற்று, தானியத்தை கூட்டுறவு முறையில் அங்கே வைத்து விற்பனை செய்யலாம். அதன் மூலமாகச் சரியான விலையும் நிலவும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் இரும்பு, நெயவேலி நிலக்கரி என்று ஒவ்வொரு ஆண்டு அறிக்கையிலும் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது உள்ளபடியே வர

வேற்கத்தக்கது. ஆனால் சென்ற 2-3 தினங்களுக்கு முன் நம் அமைச்சர் கனம் வெங்கட்டராமன் அவர்கள் குறிப்பிடும்போது, இரும்பு தாதுவில் கனிப் பொருள் 30 சத விகிதம் தான் இருக்கிறது, குறைவாக இருக்கிறது, செலவுக்கு கட்டுபடியாகுமா என்று தெரிவித்தார்கள். அத் திட்டத்தைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிடுகிறபோது வெளி நாடுகளில் நடத்திய சோதனைகளிலிருந்து இத் திட்டம் சாத்திய மானது, இது பலன் தரும், திருப்தி தரும் என்று சொல்லியிருக்கிறார். இப்படி இரண்டு பேர்களுக்குள் முரணான கருத்துக்கள் இருக்கின்றன. எப்படி இருந்தாலும் நம்மைப் பொறுத்த வரையில் இந்தத் திட்டம் துரிதமாகச் செயல்பட நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல அணு மின்சாரத் திட்டம் மார்க்கண்டேயனைப் போல இருந்து கொண்டிருக்கிறதே தவிர; விரைவில் அது செயல் பட நம் நிதி அமைச்சர் அவர்கள் முயல வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சைக்கிள் இணைப்புத் தொழிற்சாலை பற்றிக் குறிப்பிட்டு, "வேலூரிலும், தஞ்சாவூரிலும் உள்ள சைக்கிள் இணைப்புத் தொழிற்கூடங்கள் இரண்டிலும் வேலை வெற்றிகரமாக நடந்து வருகின்றது" என்று கூறி "கிருஷ்ணகிரியிலும், தூத்துக்
12-00 noon. குடியிலும் இது போன்ற இன்னும் இரண்டு புதிய சைக்கிள் இணைப்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவிருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இணைப்பதற்கு ஒரு தொழிற்சாலை தேவையா? கடைத் தெருவில் இருக்கும் சைக்கிள் ஷாப்பில் எல்லா பாகங்களையும் வாங்கிக் கொடுத்து விட்டால் தானே சைக்கிள் பூட்டிவிடுவான். இதைப் போய் ஒரு தொழிற்சாலை என்று பெயர் வைத்தால் உள்ளபடியே நல்லதல்ல. பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முயலவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாலு ஷூ, சுடர் தீப்பெட்டி, செங்கல் சூளை என்று இவைகளையெல்லாம் தொழில்கள் என்று ஆரம்பித்திருக்கிறார்கள். சுடர் தீப்பெட்டி என்ன ஆனது? திவாலாகி பூட்டப்பட்டு இருக்கிறது. இன்று வெளியில் தீப்பெட்டி வரவில்லை. கட்டடம் பூட்டியிருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். ஆகவே தான் நமக்கு தேவைப்படுகின்ற காகிதத்தை நாம் வெளியிலிருந்து வாங்கி வருகிறோம். அதோடு இப்போது சேஷஸாயி-பிரதர்ஸ் போன்றவர்களுக்கு காகிதம் தயாரிப்பதற்கு அனுமதி கொடுப்பதற்குப் பதிலாக சர்க்காரே அதை மேற்கொண்டு நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, தங்கக் கட்டுப்பாடுபற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நகைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் திருச்சி நகரத்தில் மட்டும் 15 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அதோடு இதன் உப தொழிலாக இருக்கின்ற செயற்கை வைரத் தொழில்கள் போன்றவைற்றில் ஈடுபட்டிருப்பவர்கள் 30 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அத்தனை பேரும் இன்று பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அத்தனை





பேரும் சென்ற நான்காம் தேதி திருச்சியில் உண்ணாவிரதம் இருந்ததை அமைச்சர் அவர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். இல்லையென்றால் அதை இப்போது அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்களுக்கு இன்றையதினம் நாம் ஏதாவது செய்ய வேண்டாமா என்பதைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 14 காரட் தங்கத்தைப் பற்றி இப்போது எல்லோரும் பேசிவருகிறார்கள். இதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, நாங்கள் அதிகமாக நகைகள் அணிவதில்லை. ஆனால் இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் பெண்ணைப்பார்த்து "பத்தரைமாற்று பசும்பொன்னே" என்று வர்ணிப்பது வழக்கம். இனிமேல் "14 காரட்டே" என்று தான் நாம் வர்ணிக்கவேண்டும். (சிரிப்பு) இனிமேல் பத்தரைமாற்றுப் பசும்பொன் கிடைக்காது. அடுத்து நம் நாட்டில் பொன்னுக்குவீங்கி என்ற கன்னத்தில் வரும் நோய்க்கு தங்கத்திலான செயினை கழுத்தில் போட்டால் அந்த வீக்கம் போய்விடும் என்பதை கிராமத்திலுள்ள எல்லா பெரியவர்களும் அறிவார்கள். ஆனால் இப்போது அப்படிப்பட்ட நகை கிடையாது, ஆகவே இந்த 14 காரட்டில் செய்த நகையைப் போட்டால், வீக்கம் இறங்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதையும் கவனித்தாகவேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களுக்கு நாம் ஏதாவது உதவி செய்தாகவேண்டும். இந்தியா ஒன்று என்று பேசப்படுகிற இந்த அரசாங்கத்தில் இதுவரை அவர்களுக்கு ஒன்றும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. நமது பக்கத்திலுள்ள கேரள ராஜ்யத்தில் இவர்களுக்கு 2 படி அரிசி அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிறது. தமிழகத்திலும், பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்தப் பொற்கொல்லர்களுக்கு அதே போன்று நிவாரணம் அளிக்க முயல வேண்டும். இல்லையென்று சொன்னால், தற்காலிகக் கடனாகக் கொடுக்க முயல வேண்டும். அவர்கள் வேலைக்குப் போனவுடன் இந்தக்கடனை தவணைகளாக திருப்பச் செலுத்தக்கூடிய வகையில் அவர்கள் பேரில் அக்கறை செலுத்தி இக்கடனைக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இன்றைய தினம் அந்தத் தொழிலாளர்கள் நமது அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி, திருச்சி கலெக்டர் அவர்களிடம் ஒரு மகஜரை கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அவர்கள் இதன் நகலை அங்குள்ள வேலை தேடித்தரும் ஸ்தாபனத்திடத்திலும் கொடுக்கும்படியாக சொன்னார்கள். அதே போன்று கனம் அமைச்சர் ஆர். வி. அவர்கள் வந்தபோதும் இதைத் தெரிவித்து, பக்கம் பக்கமாக பெயர்கள், விலாசங்கள் இவைகளை எல்லாம் எழுதி வேலை வேண்டும் என்று கேட்டு வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் கொண்டு போய்க்கொடுத்திருக்கிறார்கள். இப்போது இங்கே பொற்கொல்லர்கள் தூதுகோஷ்டியாக வந்திருக்கிறார்கள். இதைப் பற்றி அவர்களிடம் விசாரித்ததில், அங்கேயுள்ள எம்ப்ளாய்மென்ட் எக்ச்சேஞ்ச் ஆபீஸர், உங்களுக்கு எல்லாம் உடனடியாக வேலை கொடுக்க வேண்டும் என்று எங்களுக்கு அரசாங்கத்தினிடத்திலிருந்து எந்தவிதமான உத்தரவும் வரவில்லை, உங்கள் ரிக்கார்டு எல்லாம் நல்லபடியாக இருக்கிறது, அரசாங்கத்திலிருந்து இதற்

கான அனுமதியை வாங்கி வாருங்கள் என்று சொல்லி அனுப்பியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அண்மையில் ஆரம்பிக்கப்பட விருக்கும் கொதிகலன் தொழிற்சாலையில் இந்தத் தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் வேலை கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய பிரதமர் அவர்கள் யாரும் யுத்த நிதிக்காக நிர்ப்பந்தமாக் வசூல் செய்யக்கூடாது, அப்படி வசூல் செய்த பணத்தை கடலில் தூக்கி எறியுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் திருச்சியில் உள்ள கோர்ட்டுகளில் இதற்காக ஒரு உண்டியல் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோர்ட்டில் விசாரிக்க கப்படுன்ற வழக்குகளில் யாராவது தவறு செய்து, அதன் பேரில் 100 ரூபாய் அபராதம் என்று போட்டால் அங்கே 105 ரூபாய் கொண்டு வந்து செலுத்தவேண்டும். அதாவது 100 ரூபாய் அபராதம் செலுத்திவிட்டு, 5 ரூபாய் உண்டியலில் போட வேண்டும். இவ்விதம் நிர்ப்பந்தமாக வசூல் செய்யப்படுகிறது. இதைப்பற்றி பலர் என்னிடம் புகார் செய்திருக்கிறார்கள். இதில் நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** அபராதத்தோடு கொடுக்கச் சொல்லுகிறார்களா, அல்லது தனியாகப் போடச் சொல்லுகிறார்களா ?

**திரு. எம். எஸ். மணி :** அபராதம் 100 ரூபாய் என்று தனியாக செலுத்தச் சொல்லுகிறார்கள். அங்கேயுள்ள அதிகாரிகள் தனியாக 5 ரூபாய் உண்டியலில் போடவேண்டுமென்று நிர்பந்தமாக வசூல் செய்கிறார்கள் என்று புகார்கள் வருகின்றன. இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அளவில் எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ். ராமலிங்கம் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிறார்கள். இதைப்பார்க்கும் போது உள்ளபடியே ஆளும் கட்சியைச் சேர்ந்த என்னைப்போன்றவர்களுக்கு இரட்டை சந்தோஷமாக இருக்கிறது. தேசிய நெருக்கடி இருக்கின்ற இந்த நேரத்தில் நாம் எல்லோரும், ஆடம்பரப் பொருட்கள் போன்றவைகளுக்காவது ஏதாவது வரிகள் இருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் வரிகள் ஒன்றும் போடாமல், அதே நேரத்தில் 2 கோடி 74 லட்சம் ரூபாய் துண்டு விழுந்தாலும் அதைப்பற்றி பொருட்படுத்தாது, நமது அனுபவமிக்க நிதி அமைச்சர் அவர்கள் நம் நாட்டு மக்களுடைய மனப்போக்கை அறிந்து, மக்களுடைய உணர்ச்சியை அறிந்து அதற்குத் தகுந்தவாறு இந்த அறிக்கையை தயார் செய்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் . . . .

**கனம் சபாநாயகர் :** உங்கள் தொகுதியைப்பற்றி ஏதாவது சொல்லுங்கள் . . . வரிபோடாமல் தயாரித்திருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் வரியை மறைத்து இதைத் தயார் செய்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியே 206 அங்கத்தினர்களும் பேசிக்கொண்டேயிருந்தால், தங்கள் தொகுதியைப்பற்றி விஷயங்களைப் பேசுவதற்கு நேரம் கிடைக்காது. ஆகவே இதை விட்டு விட்டு கனம் அங்கத்தினர் வேறு ஏதாவது பேசலாம்.



**திரு. எஸ். ராமலிங்கம் :** இந்தவிதத்தில் தயாரிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையை நாம் ஒரு முனையாக ஆதரிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். விவசாயத் தொழில் அபிவிருத்தியில் முக்கியமாக இந்த அரசாங்கம் அக்கரை காட்டியிருக்கிறது. இதற்காக 12 கோடி 80 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. சிறுபாசனத் துறையிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த சிறுபாசனத் துறையில் நடைபெறுகிற வேலைகளை எல்லாம் சர்க்காரே நேரடியாக நிர்வகித்தால் நல்லபடியாக அமல் செய்யமுடியும். அதற்கு மாறாக பஞ்சாயத்துக்களின் கையிலோ அல்லது பஞ்சாயத்து யூனியன்களின் கையிலோ இந்த வேலைகளை ஒப்படைத்தால் வீண் தகராறுகள்தான் வளரும். இதன் காரணமாக இப்போது ஓரளவுக்கு ஒற்றுமையாக நடந்து வரும் பஞ்சாயத்துக்களில் எல்லாம் தகராறு ஏற்பட்டு, அதன் காரணமாக நிர்வாகமே ஸ்தம்பித்துவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடும். மேலும் இதன் காரணமாக நீர்ப்பாசன வேலைகள் தாமதப் படுத்தப்பட்டால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆகவே சர்க்காரே இந்த வேலைகளை நேரடியாக ஏற்றுக்கொண்டு நடத்துவது சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த இடத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முசிரி தாலுகாவைப் பொறுத்தமட்டில், ஒரு நடுத்தரத் திட்டமாக, ஜேடர்பாளையம் என்ற திட்டத்தைப் பற்றி சொல்லிவந்தார்கள். இந்தத்திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இதன்மூலம் விவசாயம் அதிக அளவில் அபிவிருத்தி அடைய முடியும். ஆகவே நான்காவது திட்டத்திலாவது இதைச் சேர்ப்பதற்கு முயற்சி எடுத்து, விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலைத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றாலும், இந்தத் திட்டத்தின் வேலைகள் இன்னும் நடக்கவில்லை. ஆகவே இந்த ஆண்டிலாவது இதனுடைய வேலையை நடத்தவேண்டும், அதற்கான பரிசீலனையை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடைகளைப்பற்றி பேசும்போது, கால்நடைகளுக்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக திருச்சி, தஞ்சைப் பகுதிகளில் மேய்ச்சல் நிலம் அதிகமாக இல்லாத காரணத்தினால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பெரும்பாலான இடங்களும் நஞ்சை நிலங்களாக இருக்கின்றன. இதன் காரணமாக மேய்சல் நிலம் அதிகமாகக் கிடைப்பதில்லை. ஆகவே கால் நடைகளுக்குத் தேவையான நிலத்தை பஞ்சாயத்துக்களின் பொறுப்பிலேயே ஏற்றெடுத்து, கால்நடைகளுக்கு தீவனத்திற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தத்திட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்திற்காக 8½ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்த்து நான் மகிழ்சி அடைகிறேன். நாம் சாதாரணமாக கோழிவளர்ப்பில் அக்கறை காட்டுவதில்லை. குறிப்பாக கிராமங்கள் அதிகமுள்ள நமது நாட்டில் கோழி அபிவிருத்தியை முக்கியமாக எடுத்துக்கொள்ளவேண்டும். இஸ்ரேல் போன்ற நாடுகளில் கோழி அபிவிருத்தியின் மூலமாக தேசீய வருமானத்தையே பெருக்கிக் கொள்ளுகின்ற திட்டங்கள் இருக்கின்றன. கோழி அபிவிருத்தியின் மூலமாக நாட்டினுடைய பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளலாம். ஒரு குடிசைத் தொழிலாகவும், ஒரு பொழுது போக்குத் தொழிலாகவும் இதை எடுத்துக்கொள்ளலாம். இதில் சர்க்கார் அதிக அக்கறை காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையில் மிகவும் அதிகமான அளவில் கண்காணிப்பு இருக்கவேண்டும். காரணம் நாம் 80 சதமானம் மக்களை கூட்டுறவு சங்கத்தின் கீழ் உறுப்பினர்களாகக் கொண்டு வரவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். முக்கியமாக கிரெடிட் சொஸைட்டிகளில் அதிகமான அளவில் அரசாங்கத்திலிருந்து பணம் கொடுக்கப்படுகிறது. இதில் நாம் கவனம் செலுத்தாமல் இருந்து விட்டால், அங்கே பலவிதமான ஊழல்கள் ஏற்பட்டுவிடும், பணத்தைக் கொடுக்கும்போது எப்போதுமே மிகவும் கண்காணிப்புடன் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொற்கொல்லர்கள் விஷயமாக, அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குகின்ற முறையில் ஏதாவது வழிவகை செய்ய வேண்டும். எதிர்கட்சிக்காரர்கள் பொற்கொல்லர்கள் விஷயத்தில் மிகவும் அக்கறை காட்டுவதாகச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நாம் வழிவகை செய்யவேண்டும். இல்லையென்று சொன்னால், பொற்கொல்லர்களை போர்க்கொல்லர்களாக ஆக்கிவிட்டார்கள் சர்க்கார் என்றெல்லாம் அவர்கள் சொல்லுவதற்கு இடம் ஏற்பட்டுவிடும். மத்திய சர்க்கார் ஏதாவது திட்டம் கொண்டுவருவதற்கு நாம்தான் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். நாம்தான் அவர்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும். நாம்தான் பொற் கொல்லர்களுக்கு ஆறுதலான வாத்தைகளைச் சொல்லவேண்டும். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வழிவகைகள் செய்து, அவர்களுக்கு மாற்றுத் தொழிலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த சந்தர்ப்பத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விடை பெற்றுக்கொள்கிறேன்.

**திரு. வி. அருணாசலம்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்பொழுது, என்னைப்போன்ற ஏழை மக்களுக்கும் விவசாய பெருங்குடி மக்களுக்கும் பெரிய அச்சம் உண்டாகிறது. காரணம் என்னவென்றால், டெல்லி சர்க்கார் ஏராளமாக வரியை



விதித்திருக்கிறது. மண்ணெண்ணெய் போன்ற சாதாரண ஏழை மக்கள் அன்றாடம் உபயோகப்படுத்துகிற பொருள்களுக்கும் டெல்லி சர்க்கார் வரி விதித்திருக்கிறது. மேலும் இந்தத் தமிழ் நாட்டு அரசாங்கம் என்ன வரிகளை விதிக்கிறார்களோ என்று அச்சப்பட்டுக்கொண்டுதான் இருந்தோம். இருந்தாலும், இந்த ஆண்டில் வரிவிதிப்பு இல்லை. வரிவிதிப்பு இல்லாத நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்ததற்காக என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்தில், எல்லா அங்கத்தினர்களும் விவசாயத்தில் இருக்கிற குறைபாடுகளையெல்லாம் நல்ல முறையில் எடுத்து விளக்கிக் காட்டினார்கள். விவசாயிகளுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது, விவசாயிகள் ஒரு ஏகருக்கு எவ்வளவுதான் நெல் விளைவிக்க முடியும் என்ற புள்ளிவிவரக் கணக்குகளைத்தான் இங்கே எடுத்துக் காட்டினார்கள். இன்றையதினம் எந்தக் கோணத்தில் பார்த்தாலும், மிகக் கஷ்டமான நிலையில்தான், கஷ்டப்பட்டு தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிற நிலையில்தான் நாம் விவசாயிகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற எல்லாச் சலுகைகளும் அவர்களுக்கு நேரடியாகப் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால், உண்மையிலேயே என் போன்றவர்களுக்கு அங்கே அனுபவம் இருப்பதால், நேரடியாக விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அவர்களுக்குப் போய்ச் சேருவது கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலவரி, நீர்வரியினால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உற்பத்தியான நெல்லை குறைந்த விலைக்கு விற்றால், தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால், கொள்முதல் செய்யும் மில் முதலாளிகள் எந்த அளவுக்கு விலையைக் குறைக்கவேண்டுமோ அந்த அளவுக்கு விலையை குறைத்துத்தான் நெல்லை வாங்கிக்கொள்கிறார்கள். ஏனென்றால், நிலைமை அப்படி இருக்கிறது. விவசாயிகள் நிலத் தீர்வை அல்லது தண்ணீர் தீர்வை கட்ட வேண்டுமென்றால், கையிலே பொருள் கிடையாது. தங்கம் கையில் இருந்தாலும் அதை அடகு வைத்து கட்டலாம் என்ற நிலைமை இருந்தது. அந்த நிலைமையும் இப்பொழுது கிடையாது. எனவே, நெல்லை எந்த அளவுக்குக் குறைந்த விலைக்கு கேட்டாலும், அந்த விலைக்கு விற்றுவிட்டு வரியைக் கட்டவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில்தான் விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகிறார்கள். உணவு உற்பத்தி பெருக வேண்டும், விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும், உணவு உற்பத்தி பெருகினால்தான் நாடு முன்னேற முடியும் என்ற குறிக்கோளுடன் இந்த பட்ஜெட்டில் அநேகமாக எங்கு நோக்கினாலும், புள்ளிவிவரங்கள் சேகரித்து நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். என்போன்றவர்கள் அந்த புள்ளிவிவரங்களைப் பார்க்கும்பொழுது, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களின் நிர்வாகத்தை அங்கேயிருந்து நாங்கள் பார்த்திருக்கும்பொழுது, புள்ளிவிவரங்கள் தவறாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் நிச்சயமாகக் கூறமுடியும். குழி உரம் என்று நிதிநிலை அறிக்கையில் காணப்படுகிறது; 37 லட்ச ரூபாய்க்கு குழி உரம் உற்பத்தி செய்ய

முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லுகிற நேரத்தில், பஞ்சாயத்துகளிலோ அல்லது கிராமங்களிலோ, குழி வெட்டப்படுகிறதே தவிர, அந்த அளவுக்கு அதிலிருந்து உரம் கிடைக்கிறதா என்று பார்த்தால், நிச்சயம் கிடைக்கவில்லை என்று தான் சொல்லவேண்டும். கிராம சேவக்குகள், இன்னும் அரசாங் கத்தினுடைய அத்தனை அதிகாரிகளும் சென்று பார்த்தாலும் கூட அந்தத் திட்டத்தை சரிவர நிறைவேற்றுவது கிடையாது. பஞ்சாயத்து தலைவர்களிடத்திலோ அல்லது மற்றவர்களிடத்திலோ " 25 குழிகள் வெட்டியதாக கணக்குக் கொடுங்கள், அதற்காக நாங்கள் உதவித் தொகை கொடுக்கிறோம்" என்று தான் சொல்லப் படுகிறது. அந்தப் பணத்தை விவசாயிகளுக்கு பலன் அளிக்காத வகையிலே செலவழித்துவிடுகிறார்கள். எனவேதான் இந்தத் திட்டங்களின் பலன் விவசாயிகள், தொழிலாளர்களுக்குக் கிடைக் கும் வகையில், அந்த மான்யங்கள் விவசாயிகளுக்கு நேரிடையாக பயன்படத்தக்க வகையில் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்திற்கு சென்ற சில மாதங் களுக்கு முன்பு அகில இந்திய காயர் போர்டு தலைவர் வந்திருந்த பொழுது அவர்கள் சொன்னதைக் கூற விரும்புகிறேன். தென்னை வளர்ச்சியை அவர் சுற்றிப்பார்த்துவிட்டு, தென்னை வளர்ச்சியி லிருந்து இவ்வளவு வருமானம் வரக்கூடுமானால், அங்கே அதற்கு ஆதரவு கொடுப்பதற்கு ஒரு தொழிற்சாலை இல்லாமல் இருக்கிறதே என்று சொன்னார். நெல் முக்கியமான விவசாயப் பொருளாக இருந்தாலும், அதற்கு அடுத்தபடியாக தென்னை ஒரு விவசாயிக்கு நல்ல வருமானம் தரக்கூடிய ஒரு பொருளாக இருக்கிறது. தென்னையிலிருந்து ஏகர் ஒன்றுக்கு 2,500 காய், 3,000 காய் கிடைக் கக் கூடும். அப்படிப்பட்ட ஒரு பொக்கிஷம் அது. எனவே தான் தஞ்சை மாவட்டத்தில் அதற்காக ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேங்காய் நாரிலிருந்து பல நூதனமான பொருள்களைச் செய்ய லாம். தஞ்சை மாவட்டத்தில் இப்பொழுது ஒன்றும் தொழிற் சாலை கிடையாது. தேங்காய் உற்பத்தியிலிருந்து நல்ல பலன் தரத்தக்க வகையிலாவது அங்கே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இங்கே பேச சந்தர்ப் பம் அளித்ததற்காக சட்டமன்றத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சி. கோதண்டராம பாகவதர்:** கனம் சபாநாயகர் அவர் களே,, இந்த பட்ஜெட்டை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

வட ஆற்காடு ஜில்லா ஆரணி தாலுகாவில் தனியார் துறை யிலே நடத்த ஒரு ஸ்பின்னிங் மில்லை அனுமதிக்கக் கோருகிறேன்.

வட ஆற்காடு ஜில்லாவில் ஆரணி தாலுகாவில் 1½ லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. அதைச் சுற்றி செய்யாறு, போளூர், திருவண்ணாமலை, வந்தவாசி போன்ற தாலுக்காக்கள் உண்டு.



அங்குள்ள மாணவர்களின் சௌகரியத்தை அனுசரித்து, ஆரணி யில் ஒரு கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

ஆரணி முனிசிபாலிடியில் 45,000 ஜனத்தொகை உண்டு. அங்கே கடலைக்காய், நெல் போன்ற பொருள்கள் வியாபாரம் செய்யப்படுகின்றன. அது ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக இருக்கிறது. அங்கே ஒரு ரெயில்வே நிலையம் ஏற்படுத்தும்படி மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரணியில் பட்டு நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கு ஒரு ஜரிகைத் தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி தாலுகாவில் தேவிகாபுரத்தில் சர்க்கார் ஆஸ்பத்திரி ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்று கோருகிறேன்.

இப்பொழுது என்.ஜி.ஓ.க்களுக்கு தீபாவளி போன்ற பண்டிகை களுக்கு ரூ. 120 அட்வான்ஸ் கொடுக்கிறார்கள். அதை ரூ. 150 ஆக உயர்த்தவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள் கிறேன். அதுபோலவே சர்க்காரில் உள்ள பியூன்களுக்குக்கூட ரூ. 75 தான் அட்வான்ஸ் கொடுக்கிறார்கள், அதை ரூ. 100 ஆக உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். முத்துலிங்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் நான் எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். நம் நாட்டில் இருக்கும் விவசாய மக்கள் தங்கக்கட்டுப்பாட்டினாலும், நெல் விலை குறைந்திருக்கிற காரணத் தினாலும், நெல் விவசாயம் செய்வதற்கே விருப்பம் இல்லாத நிலை யில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த வகையிலே கடன்களைக் கொடுத்து, விவசாய அபிவிருத்தி யில் அக்கறை காட்டவேண்டும் என்று அரசினரைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியைப் பொறுத்தவரையில், அதிகமான அளவுக்கு மின்சாரம் வழங்கி, எலக்டிரிக் மோட்டார் போன்ற கருவிகளைக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்தால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விவசாயத்திற்கு கொண்டு வந்து உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டத்திற்கு ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்த வேண்டும் என்ற முறையில் திட்டம் போட்டு, வட ஆற்காடு மாவட் டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நூற்பு ஆலையை வந்தவாசியிலே அமைப்பதற்கு திட்டம் போடப்பட்டது. இதற்காக ஒரு போர்டு அமைத்து பங்குத் தொகை கூட வசூலிக்கப்பட்டிருக்கிறது. இதை இப்பொழுது வேறு இடத்திலே நிறுவுவதாகத் தெரிகிறது. வந்தவாசி மக்கள் காங்கிரஸ் கட்சிக்குக் கை கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக, வந்தவாசியிலே அமைக்கப்படவிருந்த இந்த நூற்பு ஆலை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது என்று

[திரு. எஸ். முத்துலிங்கம்] [6th March 1963

பொதுமக்கள் சொல்கிறார்கள். அதற்கு இடம் கொடுக்காமல், இந்த நூற்பு ஆலையை வந்தவாசியிலேயே அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் வந்தவாசி தொகுதியிலே உள்ள அம்மயப்பட்டு, பொன்னூர், கீழ் கொடுங்காலூர், கொட்டை, வழூர், சித்தருகாவூர், குண்ணக்கம், பூண்டி ஆகிய கிராமங்களிலே நெசவாளர்கள் ஏராளமாக வாழ்கிறார்கள். ஆகவே நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதியாகிய வந்தவாசியில் இந்த நூற்பு ஆலையை அமைப்பது தான் பொருத்தமாக இருக்கும். வட ஆற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கியது. அதிலும் வந்தவாசி, செய்யாறு, ஆரணி ஆகிய தாலுக்காக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. அங்கே எந்த திட்ட வேலையும் நடக்கவில்லை. ஆகவே இந்த நூற்பு ஆலையையாவது வந்தவாசியிலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடி தண்ணீர் வசதியை எடுத்துக் கொண்டால், வந்தவாசியிலும், சுற்றுப்புறங்களிலும் குடி தண்ணீர் இல்லாமல், மக்கள் நரம்புச் சிலந்தி, யானைக் கால் போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறார்கள். குடி தண்ணீர் விஷயமாக சென்ற 10 ஆண்டுகளாக சர்க்காரிடம் முறையிட்டும், இதுவரையில் எங்கள் தொகுதியில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே இது விஷயமாக சர்க்கார் உடனடியாகக் கவனித்து குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்காக காலனி விஸ்தரிப்பு திட்டம் சர்க்காரால் அமல் நடத்தப்பட்டு வருகிறது. என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில் இந்தத் திட்டம் சென்ற 5 அல்லது 6 வருஷங்களாக அமல் நடத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே, இது விஷயமாக துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி தாலுக்காவிலுள்ள மின்சார இலாகாவில் ஒரு உதவி இன்ஜினியரும், டிஸ்டிரிபியூஷன் சூபர்வைஸரும் இருந்த போதிலும் மின்சாரம் வழங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். மேலும் வந்தவாசி டவுனில் 250 மின்சார விளக்குகள் இருக்கின்றன. இவைகளில் 20 மின்சார விளக்குகளைத் தவிர, மற்ற விளக்குகள் சென்ற 6 மாத காலமாக எரியாமல் இருக்கின்றன. ஏன் அவைகள் எரியவில்லை என்று கேட்டால், பல்புகள் ஃப்யூஸ் ஆகிவிட்டன, பல்புகள் சப்ளை செய்து தரப்படவில்லை என்று சாக்குப்போக்கு சொல்லப்படுகிறது. விளக்குகள் எரியாத காரணத்தால் அப்பகுதியிலுள்ள மக்கள் இரவு நேரங்களிலே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, சர்க்கார் . . .

**கனம் சபாநாயகர் :** பல்புகளை யார் போட வேண்டும் ?

**திரு எஸ். முத்துலிங்கம் :** அரசாங்கம்தான் போட வேண்டும்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் பகுதியில் **பஞ்சாயத்து யூனியனே கிடையாதா ?**



6th March 1963]

**திரு. எஸ். முத்துலிங்கம் :** பஞ்சாயத்து யூனியன் மின்சார இலாகாவிடம் சொல்ல வேண்டியிருக்கிறது. மின்சார இலாகா தான் பல்புகள் போடுகிறார்கள். தெருக்களிலே போடுகிற மின்சார விளக்குகளுக்கும், வீடுகளிலே போடுகிற விளக்குகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அரசாங்கத்திலே போடுகிற விளக்குகளுக்கு ஒரு திருகு இருக்கிறது. வீடுகளிலே போடுகிற விளக்குகளுக்கு அந்த மாதிரி திருகு கிடையாது. இந்த மாதிரி பல்புகள் ஸ்டாக் இல்லை என்று சொல்கிறார்கள். இந்த விஷயத்தைப் பற்றி வேலூரில் நடந்த ஜில்லா டெவலப்மெண்ட் கமிட்டி கூட்டத்தில் எடுத்துச் சொல்லியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, இதை உடனடியாகக் கவனித்து, அங்கே உள்ள அதிகாரிகளுக்கு சீக்கிரமாக உத்தரவு அனுப்பித்து இந்த விளக்குகளை எரியச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இங்கே பேசுவதற்கு அனுமதி அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. செ. சீனிவாசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய மதிப்பு மிக்க ஒரு அங்கத்தினர் இந்த பட்ஜெட்டிலே வரி போடாவிட்டால் என்ன, மொரார்ஜி தேசாய் அவர்கள் ஏராளமாக வரி போட்டிருக்கிறாரே என்று கவலைப்பட்டார். இதைப் பார்க்கும்போது எனக்கு சிறு வயதிலே படித்த ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது, ஓநாய்—ஆட்டுக்குட்டி கதைதான். " நீ வையாவிட்டாலும், உன் பாட்டனார் வைதிருப்பார் " என்று சொல்லி ஓநாய் ஆட்டுக்குட்டியைத் தின்று விட்டதாம். அதே மாதிரி மாகாண அரசாங்கம் வரி போடாவிட்டால் என்ன, மத்திய அரசாங்கம் போட்டிருக்கிறார்களே, என்று குறை சொல்ல வேண்டுமென்ற காரணத்திற்காக இதையெல்லாம் எதிர்க் கட்சி அங்கத்தினர் சொன்னார்கள். இந்த பட்ஜெட் தான் நம் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றித்தான் பேசவேண்டும் என்று சிலர் நினைக்கவில்லை. மேலும் ஒரு அங்கத்தினர் மூன்று சட்டங்களைப் போட்டு மூன்று ஆசைகளைப் போக்கடித்து விட்டதினால் எல்லோரையும் சன்னியாசியாக ஆக்கிவிட்டார்கள் என்று சொன்னார். இந்த மூன்று சட்டங்களினால் மக்கள் சன்னியாசிகளாக ஆனார்களோ, இல்லையோ, நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாதிரி மூன்று பட்ஜெட்டுகள் கொண்டு வந்தால் நிச்சயமாக அரசியலிலிருந்து சன்னியாசியாக ஆகி விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. (சிரிப்பு).

இப்படிப் பேசிக்கொண்டே போகலாம். இனி என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். "Introduction to Budget" என்ற புத்தகம் கனம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு ராமநாதபுரம் தொகுதியைப் பற்றிச் சொல்லும்பொழுது, பெருமைப்படக்கூடிய அளவுக்கு, வரி பாக்கிகள் இருக்கின்றன என்று உதாரணத்திற்காக காட்டியிருக்கிறார்கள். (சிரிப்பு), வேறு விதமாகச் சொல்ல முடியாது. இந்த மாதிரி ஒரு நிலைமை ஏற்படுவதற்குக்

[திரு. செ. சீனிவாசன்] [6th March 1963

காரணம் என்னவென்றால், அது ஜமீன்தார்கள் நிறைந்த பிரதேசமாக இருந்தது. வானத்தை எதிர்பார்க்கும் பிரதேசங்கள். ஓரளவுக்கு வைகை திட்டத்தினுல் கொஞ்ச நிலங்கள் பயன் அடையக் கூடிய நிலைமையில் இருந்தன. போன பட்ஜெட் அறிக்கையிலே, வைகை சீரமைப்புத் திட்டத்திற்காக ரூ. 265 லட்சம் சாங்ஷன் ஆகி, மூன்ருவது திட்டத்திலே சேர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனுல் நடப்பு ஆண்டு அறிக்கையிலே பார்க்கும்பொழுது, மஞ்சளாறுத் திட்டத்திற்கும், கோமுகி நதித் திட்டத்திற்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர, வைகை சீரமைப்புத் திட்டத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ரொம்பவும் முக்கியமான திட்டம் இது. அப்படி முக்கியத்துவம் வாய்ந்த இந்த வைகைக் கால்வாய்கள் சீரமைப்புத் திட்டத்தை ஏன் விட்டுவிட்டார்கள் என்பது தெரியவில்லை. பரமக்குடியிலே வைகைக் கால்வாய் பிரிவு அலுவலகம் ஒன்று இருக்கிறது. அங்கே போய்க் கேட்டால், இரண்டு மூன்று அணைக் கட்டுகளைக் கட்டப்போவதாகச் சொன்ஞர்களே ஒழிய, பூர்வாங்க அமைப்பு என்ன என்பது விவரமாகத் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். மதுரையில் இருக்கிற எஞ்சினியர் ஆபீசில் கேட்டால்தான் தெரியும் என்று சொல்லிவிட்டார்கள். இம்மாதிரி இந்த திட்டங்களை எடுத்து நடத்துகிறவர்கள்
12-30 p.m. இப்படிச் சொன்ஞல் என்ன செய்வது. இப்படி பதில் சொன்ஞல் எப்படி பெருமைக்குரியதாக இருக்கும். இது சம்பந்தமாக ஏற்கெனவே கூட நான் கேள்வி கேட்டேன். அப்படிக் கேள்விகள் பதிலைத் தெரிந்து கொண்டாவது அங்குள்ள மக்களுக்குத் தெரியப்படுத்தலாம் என்பதற்காகத்தான் கேள்வி கேட்டேன். ஆகவே இது சம்பந்தமாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கனம் பொது மராமத்துத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பரமக்குடியில் 1952-ம் ஆண்டிலிருந்து ஒரு ஆஸ்பத்திரி வேண்டும் என்று ஒரு நீண்ட கால வேண்டுகோள் இருந்து வருகிறது. அதற்கு என்று ஆறு அல்லது ஏழு லட்சம் ரூபாய் கூட சாங்க்ஷன் ஆகி இருக்கிறது. சவுத் மெட்ருஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்பொரேஷனை சர்க்கார் எடுத்துக்கொண்டவுடனேயே அந்தக் கட்டிடத்தில் இந்த ஆஸ்பத்திரியை வைக்கலாம் என்று சொல்லப்பட்டது. அது சம்பந்தமாக ஏழு லட்சம் ரூபாய் கூட சாங்க்ஷன் ஆகி இருக்கிறது. இதற்கு நில ஆர்ஜிதமும் செய்யப்பட்டிருக்கிறது. ஆனுல் ஆஸ்பத்திரி வரக்கூடிய நிலைமை அப்படியேதான் இருக்கிறது. அது லோகல் பண்ட் ஆஸ்பத்திரியாகத்தான் இருக்கிறது. ஆனுல் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி என்று பெயரைத்தான் போட்டுக்கொண்டிருக்கிருர்கள். எந்த விதமான அபிவிருத்தியும் ஏற்படவில்லை. சாதாரணமாக வக்கீல் என்ற முறையில் பார்த்தாலும் கூட அது இடைஞ்சலாகத்தான் இருக்கிறது. 324,325 ஐ.பீ.ஸி. கேஸ்களாக இருந்தால் அவர்களை ராமனுதபுரத்திலுள்ள ஜில்லா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேண்டியதாக இருக்கிறது. அதற்குள் அவைகள் 302 ஐ.பீ.ஸி. ஆக மாறி அதற்கு பதில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அங்கு அவுட்பேஷண்ட்களைத்தான் வைத்துக்கொள்ளுகிருர்கள். இன் பேஷண்ட்களை வைத்துக்கொள்வதாக இல்லை. ஆகவே அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்குமபடியாக பணிவனபுடன் கேட்டுக்கொள்கிறேன். எந்த விதமான வசதியும் இல்லாமல் ரொம்பவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. ஆகவே சர்க்கார் இதையெல்லாம் கவனித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



6th March 1963] [திரு. செ. சீனிவாசன்]

அடுத்தபடியாக, செக்யூரிட்டி வொர்க்ஸ். இது சம்பந்தமாக வரும்போது பரமக்குடி தொகுதிதான் இதற்குக் காரணமாக இருந்தது. நாலைந்து வருடஙகளுக்கு முன்னதாக ஏறபட்ட ஜாதிக் கலவரத்தினுல் கிழக்கு ராமனுதபுரம் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டது. அப்பொழுது பரமக்குடி பெயா ரொம்பவும் அடிபட்டது. அதன் காரணமாக அங்கு செக்யூரிட்டி வொர்க்ஸ் ஆரம்பிக்கப்பட்டன. முக்கியமாக மூன்று தாலுகாக்களுக்கு நல்ல ரோடுகள் போட வேண்டுமென்ற வேண்டுகோள் வந்தன. கனம் மாராமத்து அமைச்சர் அவர்கள மின்சார அமைச்சராக இருந்தபோது அந்தப் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அப்பொழுது பல இடங்களுக்கு அவர் சென்று பார்வையிட்டார். சுமார் ஒரு வாரம் சுற்றுப் பிரயாணம் செய்தார். பல விதமான பாதைகளில் சென்றிருக்கிருர். ஆகவே ரோடுகளை அமைக்கக் கூடிய பலவிதமான திட்டங்களைப் பற்றி அவருக்கு நன்ருகத் தெரியும். நல்ல ரோடுகளாக இருந்திருந்தால் அவர் ஒரு வாரம் சுற்றிய இடங்களை ஒரே நாளில் முடித்திருக்கலாம். பல விதமான ரோடுகளைப்பற்றியும் திட்டங்களைப்பற்றியும் அவருக்கு நன்ருகத் தெரியும். பல ரோடுகளை அமைத்துக் கொடுத்தால் அங்குள்ள விவசாயிகளுக்கு ரொம்பவும் வசதியாக இருக்கும். அவற்றில் இரண்டு ரோடுகள் ரொம்பவும் முக்கியமானவைகள். நயினர் கோவிலிலிருந்து தேவிப்பட்டணம் போகக்கூடிய ஆனந்தூர் ரோடு ஒன்று; ஆருந்தூரிலிருந்து பரமக்குடி வழியாக இராமனுதபுரம் அருகிலுள்ள காவனூர் போகக்கூடிய ரோடு. இந்த இரண்டு ரோடுகளும் மிகவும் முக்கியமான ரோடுகள். அவைகளைப் போட்டுக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். வேறு நல்ல ரோடுகளை அமைக்க முடியாவிட்டாலும் அங்கு "க்ராவல்" கூடப் போட வேண்டியதில்லை. ரோடை அமைத்துக் கொடுத்தால் மட்டும் போதும். அதனுல் அந்தப் பகுதி விவசாயிகள் எவ்வளவோ சௌகரியமடைவார்கள். அங்கு போக்குவரத்துக்கு நல்ல வசதி ஏற்படும். ஆகவே இந்த வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பல அபிவிருத்தி திட்டங்களை மனதில் கொண்டு இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பல திட்டங்கள் பரிசிலனை செய்யாமல் விட்டுவிடப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் இந்த மந்திரி சபை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அநேகம் மேஜர் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளுக்கு வருமானம் குறைவாக இருக்கிறது. அதைத் தீர்ப்பதற்கு ஒரு யோசனை இருக்கிறது. சினிமாவின் மூலம் கிடைக்கக்கூடிய வரியை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கலாம். பல பஞ்சாயத்துக்கள் பணம் இல்லாத நிலையில் இருப்பதால்

சினிமாவின் மூலமாக வரக்கூடிய வரிப்பணத்தை அவைகளுக்குக் கொடுக்கலாம். மற்றும் கடன் உதவி வேறு கொடுத்து உதவலாம். சினிமாக் கொட்டகைகளை நடத்த அனுமதியளிக்கும் அதிகாரத்தை கொடுத்தால் அவர்களுக்கு அதன் மூலமாக நிரந்தரமான ஒரு வருமானம் கிடைக்கும். அதற்கு அது ஏதுவாகயிருக்கும். இதை நான் மந்திரி சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய என் தொகுதி அங்கத்தினர்கள் பல திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். நீண்டகாலத்திற்கு முன்னால் ஒரு விஷயத்தைப்பற்றி நான் பேப்பரில் படித்தேன். அதாவது தேசத்திலுள்ள ஆறுகளுடைய நிர்வாகத்தை செண்ட்ரல் சப்ஜெக்டாக வைத்தால் நலமாக இருக்கும் என்று. இப்பொழுது தேசிய ஒருமைப்பாடு இருக்க வேண்டும் என்று சொல்லக் கூடிய நோத்தில் ஒற்றுமைப்பற்றி எழுதிக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது அந்த பேப்பரில் எழுதியது இப்பொழுது என் ஞாபகத்திற்கு வருகிறது. தேசீய ஒருமைப்பாடு வேண்டும் என்று சொல்லுகிற இந்த நேரத்தில் ஆறுகள் சம்பந்தமாக பல அரசாங்கத்தினிடம் செல்வதைக் காட்டிலும் அதை ஒரு செண்ட்ரல் சப்ஜெக்டாக வைத்து விட்டால் எவ்வளவோ நலமாக இருக்கும். இதை ஸ்டேட் சப்ஜெக்டாக வைத்துக்கொள்ளக்கூடாது. ஆகவே இதை நல்ல முறையில் பரிசீலித்து ஆறுகளையெல்லாம் செண்ட்ரல் சப்ஜெக்டாக வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை இந்த மந்திரி சபை பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு கனம் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. ர. சம்பங்கி:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1963-64-க்கான நிதி நிலை அறிக்கையைப்பற்றி நடைபெறுகிற இந்தப் பொது விவாதத்தில் நான் என்னுடைய கருத்தினைச் சொல்ல மகிழ்ச்சி அடைகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய நிதி நிலை அறிக்கையை பாராட்ட வேண்டிய கடமைப்பட்டு ஆளும் கட்சி அங்கத்தினர்கள் பட்ஜெட்டைப் பாராட்டிப் பேசினார்கள். அவர்களுடைய பாராட்டு சரியோ தப்போ அதில் நான் இறங்கவில்லை. பட்ஜெட்டை பாராட்டவேண்டுமென்பதற்காக எங்கள் மீது பாய வேண்டியதில்லை. அந்த முடிவுக்கு வரவேண்டிய அவசியமும் இல்லை. நேற்றைய முன் தினம் பேசிய ஆளும் கட்சி கனம் அம்மையார் அவர்கள் பேசும்போது நமது கனம் நிதி அமைச்சர் அவர்களால் புதிய முறையில் இந்த பட்ஜெட் உருவாக்கப்பட்டிருப்பதைத் தெரிவித்தார். அதனால் எதிர்க்கட்சியிலுள்ள கனம் அங்கத்தினர்களுக்கு அவல் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார். எங்களுக்கு இருக்கிற எண்ணமெல்லாம் இந்த பட்ஜெட்டில் அவல் கிடைக்கா விட்டாலும் நாட்டில் ஏற்பட்டிருக்கிற





அவலம் தீரவில்லை என்பதுதான். கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பட்ஜெட் உரையில் விவசாயிகளைப்பற்றி சுட்டிக் காட்டி அவர்களுடைய நிலைமைகளையும் எடுத்து உரைத்து "பாருங்கள், பாருங்கள்" என்று எவ்வளவோ தெள்ளத் தெளிவாக காட்டியிருக்கிறார். உற்பத்தியைப் பெருக்குவதற்கு எவ்வளவோ சாதனைகளைச் செய்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். இதற்கு வேண்டிய வழிவகைகளையும் செய்திருப்பதாகச் சொல்லி இருக்கிறார். அவர் மிகுந்த அனுபவசாலி என்பதை மன்றத்தில் யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். எல்லா உறுப்பினர்களும் அறிவார்கள். அதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் நடைமுறையில் நடக்கிறது என்ன என்பதைப் பார்க்கும்போது வருங்காலத்தில் நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு விவசாயத்தில் என்ன வருமானம் கிடைக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். தேசீய வருமானத்தில் பாதி வருமானம் விவசாயத்தின் மூலமாக வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. கனம் நிதி அமைச்சர் அவர்களும் அப்படியே குறிப்பிட்டிருக்கிறார். தற்போதைய நிலைமையில் விவசாயத் துறையில் உற்பத்தியை பெருக்குவதில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்றும் சொல்லி இருக்கிறார். தேசீய வருமானத்தில் விவசாயத்தின் மூலமாக வரக்கூடிய வருமானம் பாதியாகும். இதையே மதிப்பிற்குரிய கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். அதைக் கண்டு பெருமைப்பட வேண்டியதுதான். விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய மக்கள் நாட்டில் சுமார் 70 சதவிகிதம் இருக்கிறார்கள் என்று பொருளாதார நிபுணர்கள் தான் இப்படி கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த எழுபது சத விகிதத்தினர்களுடைய வருமானம் சுமார் ஐம்பது சத விகிதம் என்றால் மற்ற வருமானம் அடையக் கூடியவர்களையும் கணக்கிட்டால் இவர்கள் எவ்வளவு தூரம் தாழ்ந்திருக்கிறார்கள் என்பது தெரிய வரும். அவர்களுடைய வாழ்கை எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும். "பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்பதைப் போன்று இந்த விவசாய பெருங்குடி மக்கள் பின்அடைந்து வருகிறார்கள். அவர்களுக்கு கடன் பளு அதிகமாகிக்கொண்டு வருகிறது. வரிச் சுமை அதிகமாகிக்கொண்டு வருகிறது. மேலும் மேலும் அவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு வகைகளில் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது நம் முன் இருப்பது மத்திய சர்க்காரால் போடப்பட்டிருக்கும் புதிய வரிகள். அதைப் பற்றி இந்த மன்றத்தில் பேசுவதற்கு உரிமை இல்லாவிட்டாலும் இந்த புதிய வரிகள் எவ்வளவு தூரம் இந்த விவசாயிகளை பாதிக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியது அவசியமாக இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருள்களின் விலையோ குறைந்து கொண்டு வருகிறது. விலை குறைவுக்காக போராடி தழும்புகளை ஏற்ற மாபெரும் இயக்கத்தைச் சேர்ந்தவன் ஒருவன் என்ற காரணத்தால் இதைப்

பற்றிச் சொல்கிறேன். அதனால் தான் நான் இந்த விலைவாசி குறைவைக் கேட்டு வரவேற்கிறேன். உணவு பொருள்களின் விலை மட்டுமே குறைந்திருக்கிறது. மற்ற பொருள்களின் விலை குறையவில்லை. இதைப் பார்க்கும்போது வருங்காலத்தில் விவசாய பெருங்குடி மக்களுடைய நிலை எப்படி இருக்கும் என்பதை இங்குள்ளவர்கள் உணர வேண்டும். அதை உணருவார்கள் என்றும் நம்புகிறேன். உற்பத்தி செய்யக்கூடிய உணவுத் தானியங்களின் விலை குறைந்துவரும் நிலையில், மூன்றாவது திட்டத்தின் உச்ச அளவான 17 லட்சம் டன் உணவு உற்பத்தியை அடைய முடியும் என்று எப்படிக் கணக்கிட்டிருக்கிறார்கள்? போடப்படும் கணக்கு நடைமுறைக்கு ஒத்துவருமா என்று நான் கேட்கின்றேன். உணவுத் தானியங்களின் விலை குறைவதால், அவற்றை அதிகமாகப் பயிர் செய்வதை விட்டு, அதிக வருவாய் தரக்கூடிய மற்ற விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யலாம் என்ற எண்ணம் விவசாயிகளுக்கு வராது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், 17 லட்சம் டன் இலக்கை எப்படி அடைய முடியும்? நாட்டின் முதுகெலும்பு போன்ற விவசாயிகள் இப்படி அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் போது பொருளாதார வளர்ச்சி ஏற்படப்போகிறது என்று "பார் பார் பட்ஜெட்டைப்பார்" என்று கூறுகிறார்கள்.

அடுத்து, "கூட்டுறவு சங்கங்களிலிருந்து நிலத்தை ஈடு காட்டக்கூடிய நிலைமையுள்ள விவசாயிகளுக்கு மாத்திரமல்லாமல், விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள எல்லோருக்குமே படிப்படியாக் கடன் வசதி கிட்டும்படியாக நாம் செய்யவேண்டும்" என்று மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'செய்யவேண்டும்' என்றால் அதற்கு என்ன அர்த்தம்? எப்படிச் செய்யப் போகிறார்கள் என்பதற்கான விளக்கம் இல்லை. யார் யாருக்கு கடன் தருவதாக இருக்கிறார்கள்? குத்தகைகாரர்களுக்கா? நிலத்தை வாரமாக உழுபவர்களுக்கா? விவசாயக் கூலி ஆட்களுக்கா? யாருக்கு எப்படித் தரப் போகிறார்கள்? இதில் இன்னும் கொஞ்சம் விளக்கம் தந்திருந்தால் நலமாக இருந்திருக்கும்.

இதிலே ஒரு வேடிக்கையைச் சொல்கிறேன். விவசாய உற்பத்தி பெருக வேண்டும் என்று சொல்லப்படுகிற இந்த நேரத்தில், "சோழவரம் ஏரி, புழலேரி இவற்றின் கீழ் 7,500 ஏக்கர் நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்வதன் மூலம் மிகுதிப்படும் தண்ணீரை ஆவடி பாதுகாப்பு சாதனத் தொழில் திட்டத்திற்கும் மற்றும் பல திட்டங்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்துள்ளது" என்று குறிப்பிட்டிருக்கிறார் தனது பட்ஜெட் உரையில் ஒரு பக்கத்தில் விவசாயத்தைப் பெருக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு, மறு பக்கத்தில் பாசன வசதியைக் கட்டுப்படுத்தி, விளைச்சல் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதன் மூலம் எப்படி விவசாய உற்பத்தி பெருகும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய நோக்கம் நல்லதுதான். அதை நான் மனமார பாராட்டுகிறேன். ஆனால், வேறு வழி இல்லையா, நீண்ட காலமாக பேசப்பட்டு வருகிற கோதாவரி நீர்த் திட்டம் என்ன ஆய்விட்டது என்று



இந்த மன்றத்தில் நான் கேட்க விரும்புகிறேன். விளைச்சல் நிலங்களை இம்மாதிரி செய்யக்கூடாது என்று தெரிவித்துக்கொண்டு, அதற்கான வேறு திட்டம் ஏதாவது இருந்தால் அதை இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுபோன்ற திட்டங்கள் நெருக்கடியான இந்த காலத்தில் வரவேற்கத்தக்கதல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு பேசிய பல கனம் அங்கத்தினர்கள், "இந்த பட்ஜெட்டில் வரி இல்லை, வரி இல்லை" என்று குறிப்பிட்டார்கள். நில வரியும் நீர் வரியும் இதற்கு முன்பே அறிமுகப்பட்டவைதான் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னாலும், இந்த பட்ஜெட்டில்தான் அது சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியதாக இருக்கிறது என்றால் அது மிகையாகாது.

நேற்றையதினம் பேசிய என்னுடைய கட்சி உறுப்பினர் திரு. வடிவேலு அவர்கள், பஞ்சாயத்து யூனியனில் உரக்குழி எப்படி எப்படிப் பாழ்படுத்தப்படுகிறது என்ற புள்ளி விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். அவரே பஞ்சாயத்து யூனியனுக்குச் சேர்மனாக இருக்கும் காரணத்தால்தான் அந்த விவரத்தைச் சட்ட மன்றத்தில் ஒழுங்காகத் தர முடிந்தது. அதற்குப் பதிலளிக்கும் வகையில் பேசிய, அனுபவம் மிகுந்த உயர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், "இந்த மன்றத்தில் ஒரு பஞ்சாயத்து யூனியன் சேர்மன் இதைப் பேசுவது?" என்று குறிப்பிட்டார்கள். திரு. வடிவேலு அவர்கள் சேர்மனாகக் கொண்டிருக்கிற ஆலங்காயம் பஞ்சாயத்து யூனியன் நல்லபடியாகச் செயல் பட்டு வருகிறது என்பதை நான் அறிவேன். எந்த வகையில் அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமோ அந்த வகையிலே, ஒழுங்காகப் புள்ளி விவரத்தையும் சொல்லி, காக்காய் கணக்கையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை அரசாங்கம் உணர்ந்து, மேற்கொண்டும் அம்மாதிரி வீணான செலவுகள் ஏற்படக்கூடாது என்பதற்காகத் தான், மக்கள் பிரதிநிதி என்ற முறையில் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள் என்பதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த 1963-64-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நான் முழு மனதுடன் ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் நம்பியூர் பஞ்சாயத்து யூனியன், கோவை மாவட்டக் கிழக்கு அபிவிருத்திக் கவுன்சிலில் உள்ளது, யூனியன்களை, ஏ, பி, ஸி, டி என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். யூனியனின் வரும்படியைப் பொறுத்து இப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு யூனியன்கள்தான் 'D' பிரிவில் இருக்கின்றன. இதில் 85 சத விகிதச் செலவை அரசாங்கம் கொடுக்கிறார்கள். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நம்பியூர் பஞ்சாயத்து யூனியன் 'ஸி' பிரிவில் இருக்கிறது. இதில் 70 சத

[திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்] [6th March 1963

விகிதம் வரையில்தான் அரசாங்கம் கொடுக்கின்றார்கள். அது மிகவும் வரண்ட பிரதேசம். சிறு பாசனத் திட்டங்களுக்காக, குறிப்பாக பத்து பள்ளங்களுக்குக் குளம் கட்டுவதற்கு எஸ்டிமேட் அனுப்பி நான்கு வருஷங்கள் ஆகின்றன. அதில் ஒரே ஒரு குளம் கட்டத்தான் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. இதுபற்றி விசாரித்ததில் ஒரு டன் விளைச்சலுக்கு 3,500 ரூபாய்தான் செலவு செய்ய முடியும் என்று இருக்கிறது. எங்கள் ஜில்லாவைப்போல் உள்ள ஜில்லாவில், 5,000 ரூபாய் வரைக்கும் செலவு செய்தால்தான் குளங்கள் கட்ட முடியும் என்று சொல்கிறார்கள். அதனால், சாங்ஷனுக்கு அனுப்பப்பட்டுள்ள பாக்கி பத்து பள்ளங்கள் வேலை நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. குளம் கட்டினால் சாதாரணமாக 150 கிணறுகளுக்கு மேல் தண்ணீர் வரும். அந்த தண்ணீர் வருவதால், வருஷத்தில் இரண்டுபோகம் எடுக்கலாம். கருந்தானியம் சுமார் ஐந்து பொதி கிடைக்கும். மூன்றாவது போகத்தில் புகையிலை போடலாம். இப்படி மூன்று போகம் பயிர் செய்யலாம். இப்படிப் புகையிலை வைத்து விவசாயம் எடுப்பதன் மூலம் சென்ட்ரல் எக்ஸைஸ் வரி சுமார் 850 ரூபாய் வரையிலும் கிடைக்கும். இம்மாதிரி என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நம்பியூர் பஞ்சாயத்து யூனியனில் சுமார் 30,000 ஏக்கருக்குச் சிறுபாசனத் திட்டங்கள் அமைத்துக்கொடுத்தால், கிணறுகளில் எல்லாம் தண்ணீர் நிறைய வர முடியும்; அதனால் விவசாயம் பெருக முடியும்.

எனக்கு முன்னால் பேசிய தொண்டமுத்தூர் தொகுதி அங்கத்தினர் அவர்கள் அவினாசி தாலுக்காவுக்கு அணை கட்டி வாய்க்கால் கொண்டுபோவதுபற்றிச் சொன்னார்கள். அதன் மூலம் சுமார் முப்பதாயிரம் ஏக்கருக்குத்தான் பாசனம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறபடி இப்படிக் குளம் கட்டி, நான்கைந்து தொகுதிகளுக்கு வாய்க்கால் பிரித்துத் தண்ணீர் கொடுத்து, அந்தக் குளங்களை நிரப்பினால் சுமார் இரண்டு லட்சம் முதல் மூன்று லட்சம் ஏக்கர்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். அதனால் அதிக வரும்படி வரும். ஆகவே, நான்கைந்து பிரிவாக வாய்க்கால்களைப் பிரித்துத் தண்ணீர் கொடுக்கும்படி பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களையும் மற்றுமுள்ள அமைச்சர்களையும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதுவரையில் அரசாங்கத்திலுள்ள ரெவினியூ இலாகா, கைத்தொழில் இலாகா, விவசாய இலாகா இவைகள் மூலமும் கூட்டுறவு இயக்கங்கள் மூலமும் கிராமத்தில் விவசாயிகளுக்கும், தொழில் செய்பவர்களுக்கும் கடன் கிடைத்து வந்தது. பல துறைகளில் கொடுப்பதற்குப் பதிலாக, ஒரே துறையில் கொடுப்பதுதான் சிறந்த முறை என்று நமது அரசினர் கருதி இப்பொழுது முழுக் கடன் திட்டம் ஆரம்பித்து, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அந்தத் திட்டம் அமுலில் இருந்து வருகிறது. அதனால் வேறு துறைகளில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு இப்பொழுது பணம் கிடைப்பதில்லை. அதனால் விவசாயிகளுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. ஏற்கனவே உச்ச அளவிற்கு ஒவ்வொரு சொஸைட்டியும் ஜில்லா மத்திய பாங்கில் இருந்து கடன் வாங்கிவிட்டார்கள். அதற்கு



6th March 1963] [திரு. ஏ. கூ. காளியப்ப கவுண்டர்]

மேல் இப்போது கொடுக்கப் பணம் இல்லையென்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ராஜ்ய பாங்கும், ரிசர்வ் பாங்கும் போதிய அளவு கடன் கொடுப்பதில்லை.

இரண்டாவது, ரிசர்வ் பாங்கில் இருந்து ராஜ்ய பாங்க் 3 சதவிகிதம் வட்டி வீதத்தில் கடன் வாங்குகிறது. ராஜ்ய பாங்க் ஜில்லா மத்திய பாங்குகளுக்கு 4½ சதவிகிதம் வட்டிக்கு கொடுக்கிறது. அவர்கள் கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு 5½ சதவிகிதம், 6 சத வீதத்திற்குக் கடன் கொடுக்கிறார்கள். ராஜ்ய மத்திய பாங்கில் இருந்து விவசாயிகளுக்கு நேரிடையாகக் கடன் கொடுத்தால கம்மி வட்டிக்குக் கிடைக்கும், பணமும் சீக்கிரம் கிடைக்கும். இப்போது அமைந்துள்ள முழுக் கடன் திட்டத்தின்படி சரியான முறையில் பணம் கிடைப்பதாகத் தெரியவில்லை. ஆகவே நமது ராஜ்ய மத்திய பாங்கில் இருந்தே கடன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லோயர் பாவானியில் ஒரு போகத்திற்கு நான்கு மாதத்திற்குத் தண்ணீர் விடுகிறார்கள். லோயர் பவானி ஏரியா விவசாயிகள் ஒரு மாதத்திற்கு முன்பே நாற்றுவிட்டு நடவு செய்துவிடுகிறார்கள். மறுபடியும் அந்த நான்கு மாதத்திற்குள் அறுவடை செய்து மறுபடியும் இரண்டாம் போகம் பதினைந்து நாளைக்கு முன்பே நடவு செய்து விடுகிறார்கள். இதனால் அவர்களுக்கு இரண்டுபோகத் தீர்வை விதிக்கப்படுகிறது. ஆகவே ஒரு போக வரி விதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லோயர் பவானி பயிர்களுக்கு எல்லாம் ஒருமுக வரியாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது விவசாயிகளுக்கு ரொம்பத் தொல்லைகள் ஏற்படுகின்றன. அதனால் அதை ஒருமுக வரியாக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

லோயர் பவானியில் இருந்து வரும் கழிநீரை ஆங்காங்கே தேக்கி பாசனத்திற்குக் கொடுத்தால், தேசிய நெருக்கடி உள்ள நிலைமையில் உணவு உற்பத்தி அதிகம் செய்ய முடியும். இப்போது விவசாயிகளுக்கு மின்சாரம் இரவில் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். பகல் நேரத்திலேயே அவர்களுக்குக் கொடுத்தால் நலம். அதை அரசாங்கம் பார்த்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோழி வளர்ப்புத் திட்டத்திற்காக சுமார் 8½ லட்சம் ரூபாய் வரை செலவு செய்வதாக இருக்கிறது. நல்ல தீனி கிடைத்தால்தான் கோழி வளர்ப்புத் திட்டம் வெற்றியடையும். நல்ல தீனி இப்போது குறைச்சலாக இருக்கிறது. ஆகவே குறைந்த செலவில் நல்ல கலப்புத் தீனி கொடுக்க சர்க்கார் தக்க ஏற்பாடு செய்து அதற்கு மான்யமும் கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். உரம் போன்றவைகள் கிடைப்பதற்கு I. M. S. லோன் வாங்க வேண்டுமென்றால், முதலில் கர்ணத்திடம் சென்று 7 பாரங்களைப் பூர்த்தி செய்து அவர்களிடம் சர்டிபிகேட் வாங்கவேண்டும். இதற்கு குறைந்தது ஒரு வாரத்திற்கு விவசாயிகள் தினமும் கர்ணத்திடம் பலதடவைகள் செல்லவேண்டி இருக்கிறது. பின்பு அவரிடம் சர்டிபிகேட் வாங்கின பிற்பாடு கிராம

சேவகர்களிடம் சென்று அத்தாட்சி பெற வேண்டும், அதற்கும் குறைந்தது நாலைந்து நாட்களாகின்றன. அப்படி அத்தாட்சி பெற்ற பிறகு யூனியன் ஆபிசில் சென்று கமிஷனரிடமிருந்து பர்மிட் வாங்கவேண்டும். அங்கும் இரண்டு மூன்று தடவை செல்ல வேண்டியிருக்கிறது. அப்புறம் சேல்ஸ் சொஸைட்டியில் வாங்க வேண்டியிருக்கிறது. இதனால் பல கஷ்டங்கள் விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. கடன் கேட்பவர்களுக்குத்தான் I. M. S. லோன் கொடுக்க வேண்டுமென்றும் மற்றவர்களுக்கு I. M. S. லோன் கொடுக்காமல் உரம் ரொக்கத்திற்குக் கொடுக்கவேண்டுமென்றும் இந்த சமயத்தில் அரசினரை ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **திரு. பி. முருகையன்: கனம் தலைவர் அவர்களே,** இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிற நிதி நிலை அறிக்கையைப்பற்றிய விவசாயத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். மத்திய சர்க்கார் அதிகமாக வரி போட்ட பின்பு நாமும் இவ்வாண்டு வரி போட்டால் நிலைமை என்ன ஆகுமோ என்று அஞ்சியோ என்னவோ கனம் அமைச்சர் அவர்கள் இவ்வாண்டு நிதி நிலை அறிக்கையில் எவ்வித வரியும் போடத் துணியவில்லை என்று நான் கருதுகிறேன். வரி போடுவது கூடாது என்று சொல்லவில்லை. வரி போடுவது என்றால் வரியைத் தாங்கக் கூடிய மக்களுக்குப் போடவேண்டும், வரியைத் தாங்க இயலாத மக்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும். இத்தகைய ஒரு பொருளாதாரத் தத்துவத்தை - இந்தச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சமதர்ம சர்க்கார் என்று நம்முடைய சர்க்காரைக் கூறிக் கொண்டிருக்கிற நேரத்திலே அது சமதர்மமா அல்லது சமய தர்மமா என்று உள்ளபடியே என்ன என்று எனக்குப் புரியவில்லை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாட்டின் நெருக்கடியான இந்த நேரத்திலே நம் நாட்டுக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுவது உணவுப்பொருள். உணவுப்பொருளைப் பெருக்குவதற்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் மிகவும் அவசியம். உணவு உற்பத்தி, நீர்ப்பாசனத் திட்டம் என்ற இனத்தில் சர்க்கார் அதிகமாகப் பணம் ஒதுக்கியிருந்தாலும் புதுக்கோட்டைப் பகுதிக்கு நல்லதொரு திட்டத்தை உருவாக்க நிதி ஒதுக்காதது வருந்தத் தக்கதாகும். புதுக்கோட்டை பைரவமன்னர் காலத்தில் காவேரித் தண்ணீர் வெள்ளாங் குளத்தூர், விராலிமலை, கீரனூர் நார்த்தாமலை வழியாக புதுக்கோட்டைக்குக் கொண்டுவந்து அங்குள்ள கவினாட்டுக்குளத்தில் தண்ணீரைத் தேக்கி அங்கிருந்து அறந்தாங்கி, பட்டுக்கோட்டை பகுதிகளுக்கு காவிரித் தண்ணீரை அனுப்புவது என்றும் பரிசீலிக்கப்பட்டது. அதில் அரசருக்கும், அப்போதிருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கும் உடன்பாடு வராததனால் தஞ்சை வழியாக பட்டுக்கோட்டைக்கு கொண்டுசெல்லப்பட்டது என்றும் முன்பு இருந்த என்ஜினியர் ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் கனம் மாமத்து அமைச்சர் அவர்களும் இது பற்றிப் பரிசீலித்து புதுக்கோட்டைப்





பகுதிக்குத் தேவைப்படுகின்ற சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவோடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புதுக்கோட்டை பகுதியில் அக்கினியாறு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தைப் பற்றிப் பரிசீலனை 1.00 p.m.
செய்யப்பட்டு மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்றும் மதிப்பீட்டுத்தொகை 17 லட்சத்து 20 ஆயிரம் என்றும் மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்தில் நான் ஒரு கேள்வி கேட்டபோது கலெக்டர் அவர்கள் பதில் சொன்னார்கள். இங்கு சமர்ப்பிக்கப் பட்ட அறிக்கையில் அந்தத் திட்டம் சேர்க்கப்படவில்லை. அந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போகிறார்களா? இல்லையா? என்பது சந்தேகத்தைத் தருவதாகவே இருக்கிறது.

அடுத்தபடியாக, கல்வியினுடைய நிலையை எடுத்துக் கொண்டால் கல்வியின் தரம் மிகவும் கீழ் நிலையிலேயே போய்க் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் தலைமை ஆசிரியர்களும், மற்ற ஆசிரியர்களுந்தான். என்னுடைய தொகுதியான கரம்பக் குடி உயர்நிலைப் பள்ளியில் வகுப்புத் தேர்வு நடந்து கொண்டிருந்தபோது, ஒரு மாணவன் விடைத்தாளில் 'நல்லாப் படிச்சவங்க நாலு பேரு சொன்னாங்க' என்று எழுதிவிட்டு அதற்குக் கீழே ஆசிரியருடைய உருவத்தை வரைந்து கொண்டிருந்தானாம். இது என்னுடைய கவனத்திற்கு வந்தபோது, அந்த மாணவன் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் தலைமை ஆசிரியரிடத்தில் கூறியும்கூட அந்த மாணவன் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் சும்மாவே விட்டு விட்டார்கள். மாணவர்கள் தவறு செய்கின்றபோது தக்க நடவடிக்கை எடுக்காதிருப்பதன் காரணமாகத்தான் கல்வியின் தரம் குறைந்து விடுகிறது. இதனைத் தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் உணர்ந்து மாணவர்கள் தவறு செய்கின்ற போது தக்க நடவடிக்கைகள் எடுத்து மாணவர்களைத் திருத்தவேண்டும்.

அடுத்தபடியாக, முதியோர்களுக்கு அளிப்பதற்கான பென்ஷன் தொகைக்காக இந்த ஆண்டு நிதி அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அவர்களுக்குப் பென்ஷன் தொகை அளிப்பது அவர்கள் கஷ்டப்படாமல் இருப்பதற்கா, அல்லது கஷ்டப்படுவதற்கா என்று எனக்குப் புரியவில்லை. என்னுடைய தொகுதியில் ஒரு முதியவருக்கு இரண்டு மாதங்கள் அதாவது செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பென்ஷன் தொகை மாதம் 20 ரூபாய் வீதம் 40 ரூபாய் வந்தது. செப்டம்பருக்குப் பிறகு நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மூன்று மாதங்களுக்கு இன்னும் பென்ஷன் தொகை வந்து சேரவில்லை. தாலூகா அலுவலகத்தில் போய்க் கேட்டால் இன்னும் இரண்டு மூன்று தினங்களில் வந்து விடும் என்று சொல்கிறார்களே தவிர, இது வரை அந்தத் தொகை வழங்கப்படவில்லை. இந்த நிலைமைகள் எல்லாம் இல்லாமல் நல்ல முறையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பி. முருகையன்] [6th March 1963

அடுத்து, நேற்றைய தினம் பேசிய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், பேசும்போது, 'ஈறும் பேனும் இல்லை இந்தக் காங்கிரஸ் ஆட்சியில்' என்று சொன்னார்கள். அமைச்சர்களாக இருப்பவர்களும், மற்றவர்களும் என்னுடன் சென்னை நகரத்தில் உள்ள ராயபுரம் கடற்கரைப் பகுதிக்கு வந்தால், அந்தப் பகுதியில் வாழும் மக்களைப் பார்த்து விட்டு உள்ளபடியே 'ஈறும் பேனும்' இருக்கிறதா இல்லையா என்பதை உணர்ந்து கொள்வார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, முன்பு ஜனங்கள் எப்படி இருந்தார்கள், இப்போது எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள் என்பதைப் பொதுவாகப் பார்க்க வேண்டுமே தவிர, ஒரு ஊரில் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு குறிப்பிடுவது நல்லதல்ல.

**திரு. பி. முருகையன் :** நன்றி. உதாரணத்திற்காக நான் சென்னை நகரத்தைக் குறிப்பிட்டேனே தவிர, கிராமப் புறங்களில் கூட இந்த நிலைமை ஏராளமாக இருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குவதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. ஆனால் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுவதில்லை. வீடு கட்டும் திட்டமானது சென்னை போன்ற நகரங்களில் சொசைடிகள் மூலமாக எப்படி நடைபெற்று வருகிறதோ அந்த முறையிலே மற்ற இடங்களில் வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கவேண்டுமென்று கூறிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் புதிய வரிகளை விதித்து வந்தார்கள். இந்த ஆண்டு வரி இல்லாமல் பட்ஜெட்டை நமது நிதியமைச்சர் அவர்கள் தயாரித்திருக்கிறார்கள். நன்றாகக் கணித்து, கிரகங்களையெல்லாம் அந்த அந்த இடங்களில் அமர்த்தி, சாதகமான முறையில் இந்த ஆண்டு பட்ஜெட்டைத் தயாரித்திருப்பதற்காக கோயில்பாளையும் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சர்க்கார் சில வரிகளை விதிக்க முடிவு செய்திருக்கிறது. நமது நாட்டிலே இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியான நிலைமையை உத்தேசித்துத்தான் அந்த வரிகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன. பாதுகாப்புக்கு வேண்டிய தளவாடங்கள் வாங்குவது, போக்குவரத்துச் சாதனங்களைப் பெருக்குவது, போலீஸ் படைகளைப் பலப்படுத்துவது ஆகியவற்றுக்காக அதிக நிதி தேவைப்படுகிற காரணத்தினால்தான் இந்த வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆகவே, நாம் இவற்றைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



6th March 1963] [திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 291 கோடி ரூபாய் செலவு செய்ய நமது மாநில அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதில், முக்கியமாக, விவசாயம், தொழில் வளர்ச்சி, பாசனத் திட்டங்கள், தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றுக்கு மாத்திரம் 195 கோடி ரூபாய் செலவிடுவது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை நாம் பாராட்ட வேண்டியதுதான்.

விவசாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் 100-க்கு 95 பேர் விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள். இன்று விவசாயிகளின் நிலைமை சில வகைகளில் சீர்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதி அநேகமாக மானாவாரி பூமியாகத்தான் இருக்கிறது. ஆற்றுப்பாசன வசதி கிடையாது. இருந்தாலும் கிணறுகள் வெட்டி, பம்பு செட்டுகள் வைத்து தண்ணீர் இறைத்து விவசாயம் செய்து வருகிறார்கள். கிணறு வெட்டுவதற்காக அரசாங்கம் மானியமாகவும், கடனாகவும், உதவி செய்து வருகிறது. மானியம், கடன் கொடுப்பதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. கிணறு வெட்டுவதற்காக மானியம் கோரி விண்ணப்பம் செய்தால், சாதாரணமாக ரூபாய் கிடைப்பதற்கு ஆறு மாதம் அல்லது ஒரு வருஷம் ஆகிவிடுகிறது. விவசாயிகள் பம்பு செட்டு வைக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்தால், ஒரு வருஷம் கழித்துத் தான் உதவித் தொகை கிடைக்கிறது. காலாகாலத்தில் கிடைப்பதில்லை. இதைப் பற்றி இதற்கு முன்பே நான் இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். பம்பு செட்டு வாங்கக் கொடுக்கும் கடனை மூன்று ஆண்டுக் கெடுவில் கொடுக்கிறார்கள். இதைப் பத்து வருஷ காலத்தில் திருப்பிக் கொடுப்பதற்கான வழியைச் செய்ய வேண்டுமென்று நான் இதற்கு முன்பே கூறியிருக்கிறேன். ஆனால், அது பற்றி இது வரை எந்தத் தகவலும் இல்லை.

விவசாயிகளுக்கு நல்ல பல சலுகைகள் செய்து வருகின்றது அரசாங்கம். மான்யங்கள் கொடுக்கிறார்கள், கடன் கொடுக்கிறார்கள், கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். இவையெல்லாம் உண்மையே. ஆனால் விவசாயிகளின் நிலை எப்படியிருக்கிறது என்று கேட்டால், சாந்தமான நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். பெரிய ஒரு வியாதிக்கு சிறிய மருந்தைக் கொடுத்தால் எப்படி அந்த வியாதி சிறிது தற்சமயத்திற்கு குணமடைந்து, பூர்ணமாக குணம் அடையாமல் இருக்கிறதோ அதே போல்தான் இருக்கிறது விவசாயிகளின் நிலையும். உரத்திற்காக விவசாயி விண்ணப்பித்திருந்தால், அவன் புரட்டாசி மாதத்தில் விண்ணப்பித்திருந்தால் அவனுக்கு உரம் வேண்டியது ஐப்பசியில். ஆனால், மாவட்ட கலெக்டர் அல்லது பஞ்சாயத்து யூனியன் தலைவர் மூலமாகக் கொடுப்பதாக இருந்தாலும் அவனுக்கு உரம் கிடைப்பது மாசி மாதத்தில்தான் கிடைக்கிறது. அப்போது அவனுக்கு உரம் கிடைத்து என்ன பலன்? அதை அடுத்த ஆண்டுக்குத்தான்

[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

வைத்துக் கொள்ள முடியும். உரம் வாங்குவதற்காகக் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. வெளியில் வசதி உள்ளவர்களிடம் போய் 2, 3 வட்டிக்கு கடன் வாங்குகிறான். அதுவும் 150 ரூபாய்க்கு எழுதிக் கொடுத்துவிட்டு 100 ரூபாய் வாங்குகிறான். ஆக எந்த வகையிலும் அவனுக்கு நிவர்த்தியே இல்லை. கூட்டுறவு சொஸைட்டி மூலம் கடன் கொடுக்கிறோம், பம்ப் செட்ஸ் வாங்க கடன் கொடுக்கிறோம், நில அடமான பாங்க் மூலம் கடன் கொடுக்கிறோம் என்றெல்லாம் சொன்னாலும்கூட விவசாயிகளுக்கு அடிக்கடி பெரிய ஆபத்துக்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. ஒரு விவசாயியிடம் ஒரு லட்சம் பெறுமானமுள்ள நிலம் இருந்தால் தான் அவருக்கு 10,000 ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். 50 ஆண்டுகளுக்கு முன்பு அவன் பாட்டன் வாங்கிய காலத்தில் இருந்த விலையை அனுசரித்துத்தான் கொடுக்கிறார்கள். இவ்வளவுதான் உன் நிலத்திற்கு மதிப்பு, இதற்கு மேல் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். விவசாயி எங்கும் ஓடிப்போய் விடப்போவதில்லை. உச்சவரம்பிற்கு மேல் உள்ளதைக் கொடுத்துவிடு என்றால் கொடுத்துவிடுகிறான். விவசாயிகளுக்கு ஏராளமாக கடன் கொடுக்கவேண்டும். அவர்கள் வெளியில் சென்று கடன் கேட்கும் நிலை இருக்கக்கூடாது. இந்த நிலச் சட்டம் வந்திருக்கிறதே, கடன் கொடுத்தால் என்னவாகுமோ, கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்குமோ என்றெல்லாம் நினைக்கிறார்கள். ஆக இன்றைய நிலையில் விவசாயி மிகவும் கஷ்டப்பட்டுத்தான் ஜீவிக்க வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்கு அரசாங்கம் நன்மை செய்ததை, செய்து வருவதை நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு அரசாங்கம் எவ்வளவோ நன்மைகள் செய்திருக்கிறார்கள். அதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். இன்று கிராமங்களில் அரசாங்கம், குடிதண்ணீர் வசதி, ரோடு வசதி, மின்சார வசதி போன்ற பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள்; கிராமங்களுக்கு ரேடியோ வழங்கியிருக்கிறார்கள். வாசகசாலை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இவையெல்லாம் பாராட்டத்தக்க காரியங்களாகும். பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போலவா இருக்கிறது கிராமங்கள் இன்று? இன்று கிராமங்களிலும் மின்சார விசிறிகள் ஓடுகின்றன. எவ்வளவோ வளர்ச்சி அடைந்துள்ளன. ஆனால், இன்று நிலைமை எப்படி இருக்கிறது என்றால் பெரிய பெரிய ஆபீஸர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. இன்று ஆபீஸர்களை அணுகி அவர்களிடம் அடிமைகள் போல் சென்று நிற்கவேண்டியிருக்கிறது. கூடிய விரைவில் செய்து கொடுக்க வேண்டுமென்பதுதான் பெரிய ஆபீசர்களின் ஆர்வம். ஆனால் சிறிய அதிகாரிகள் செய்யக் கூடிய நிர்பந்தங்களைப் பார்க்கும்போது, நிலைமை மோசமாக இருக்கிறது. எவ்வளவு தடவைகள்தான் அவர்களிடம் நடப்பது? அப்படி நடந்தும் ஒன்றும் கிடைப்பதில்லை. பம்ப் செட்டுக்காக லோன் போட்டு கலக்டர் ஆபீசுக்கும் பஞ்சாயத்து யூனியன் ஆபீசுக்கும் ஓட வேண்டியிருக்கிறது. அப்படி ஓடி ஒரு ஆண்டுக்குள் அதை வாங்கி வைத்தாலும் அதற்கு சூப்பரண்டெண்டிங் என்ஜினியரிடம்



]திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்[

சென்று ஆர்டர் வாங்க வேண்டியிருக்கிறது. என் கிராமத்திலிருந்து 20, 25 மைல்கள் சென்று அவரைப் பார்க்கப் போனால் அவர் அங்கிருப்பதில்லை, அப்படிப் பார்க்க முடிந்தாலும் நீங்கள் போங்கள், உத்தரவு அனுப்பி விடுகிறேன் என்கிறார். பின்னர் பொள்ளாச்சிக்குச் சென்று அஸிஸ்டெண்ட் என்ஜினியரைப் பார்த்துக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. இப்படியெல்லாம் செய்தும் சர்வீஸ் கொடுக்க 3, 4 மாதங்கள் ஆகின்றன. ஆக விவசாயிகளின் நிலையைச் சற்று சிந்தித்துப் பார்த்தால், அவர்கள் நிலை கஷ்டமாக இருப்பது தெரியவரும். அவர்கள் பத்து பேர்களிடம் கெஞ்சி 100 ரூபாய் கடனுக்கு 150 ரூபாய்க்கு நோட் எழுதிக் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது, அத்துடன் 3, 4 வட்டியும் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதோடு அவர்கள் முன்கூட்டியே வட்டியை எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். ஆக, விவசாயிகளின் நிலையை உணர்ந்து அவர்களுக்கு நன்மை பயக்கும் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்த சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. கு. சின்னராஜி கவுண்டர்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில், உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று, சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் நிலைநிலையை அதிகமாக ஒதுக்கி இருப்பதை வரவேற்று எனது செங்கம் தொகுதியில் சில பகுதிகளில் உள்ள குறைபாடுகளைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். செங்கம் தொகுதியில் பல கிராமங்களில் இந்த ஆண்டு நல்ல மழை பெய்தும் ஏரிகளில் நீர் வராமல் ஏரிகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. ஏரிகளில் நீர் வராத காரணத்தினால் விளைச்சல் இல்லாமல் அப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் வாட்டமடைந்திருக்கிறார்கள். ஆகவே சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் செங்கம் பகுதியில் உள்ள ஏரிகளைச் சீர்திருத்தம் செய்து ஏரிகளுக்கு வரும் கால்வாய்களை சுத்தம் செய்துகொடுத்து ஏரிகளில் நீர் வருவதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செங்கம் பகுதியில் சில இடங்களில் இந்த ஆண்டு மழை இல்லாததால் இப்போது அங்கு இரண்டாம் முறையாக விவசாயம் செய்ய முடியாமல் அவர்கள் வானம் பார்த்து கடலைக்காயை விதைக்க இருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு ஏரிகளில் தண்ணீர் வருவதற்கான வசதி செய்து கொடுக்கும்படி மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். திருப்பத்தூர் நகரில் குடிதண்ணீர் வசதிக்காக மூன்றாவது திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கு குடிதண்ணீர் திட்டத்தை உடனடியாக அமலுக்குக் கொண்டு வரும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சென்ற மாதம் நிதி அமைச்சர்

[திரு. சி. கு. சின்னராஜி கவுண்டர்] [6th March 1963

அவர்கள் திருப்பத்தூருக்கு வந்திருந்தபோது திருப்பத்தூர் நகரசபை ஒரு வரவேற்பு கொடுத்து இந்த குடி-தண்ணீர் திட்டத்தைப் பற்றி மிகவும் வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். திருப்பத்தூர் நகரம் சுமார் 40,000 மக்கள் தொகை கொண்டது. குடி தண்ணீர் இன்றி அங்கு மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே அங்கு உடனடியாக இந்த குடி-தண்ணீர் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடி-தண்ணீர் திட்டத்திற்காக திருப்பத்தூர், வாணியம்பாடி பகுதிக்குக்கூட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே குடிதண்ணீர் திட்டத்தை வாணியம்பாடிக்கும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருப்பத்தூரை அடுத்த ஜவ்வாது மலையில் மூங்கில் விளைச்சல் அதிகமாக இருக்கிறது. அங்கு சந்தன உற்பத்தியும் அதிகமாக இருக்கிறது. ஆகவே செங்கம், திருப்பத்தூரில் ஒரு காகித தொழிற்சாலை அல்லது சந்தன பாக்டரியையாவது ஏற்படுத்திக் கொடுக்கும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருப்பத்தூர் நகரத்திற்கு ஒரு சப் கோர்ட் வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் முறையிட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அங்கு நாங்கள் மட்டுமல்ல, திருப்பத்தூரைச் சேர்ந்த வக்கீல்களும் அங்கு ஒரு சப் கோர்ட் ஏற்படுத்திக் கொடுக்கும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து செய்வதாகவும் வார்த்தை சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் அதை அவர்களிடம் எடுத்துச் சொல்ல நினைக்கிறேன் திருப்பத்தூரில் ஒரு சப் கோர்ட் அமைத்துக்கொடுக்கும்படி. அதோடு செங்கத்தில் ஒரு பெண் ஹை ஸ்கூலும் நிறுவித் தரும்படி கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. ஏ. ஆறுமுகம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 1963-64-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வாக்கியத்தின்படி, இந்த மாதிரியான ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருக்கும் நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற முறையில், நானும் என் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் புதிய சட்டமன்ற அங்கத்தினர்களாக வந்திருக்கின்ற என்போன்றவர்கள் எங்கள் தொகுதிக்கு பல நன்மைகள் செய்யவேண்டும் என்று துடித்துக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், தொகுதிகளைப்பற்றி அதிகமாகப் பேசுங்கள் என்ற அருமையான ஆலோசனையை அளித்தமைக்காக தங்களுக்கும் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.



6th March 1963] [திரு. ஏ. ஆறுமுகம்

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இவ்வாண்டு நிதி நிலை அறிக்கையானது, மற்ற மாநில நிதி அமைச்சர்கள் கொண்டு வந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கைகளைப் பார்க்கின்ற நேரத்தில், மைசூர் மாநில நிதிநிலை அறிக்கையைத் தவிர மற்ற மாநில நிதி அமைச்சர்கள் கொண்டு வந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கைகள், புதிய வரிகள் உள்ள நிதிநிலை அறிக்கைகளைத்தான் கொண்டுவந்திருக்கிறார்கள். நாம் எல்லாக் காரியங்களிலும் மற்ற மாநிலங்களுக்கு உதாரணமாகவும், எடுத்துக்காட்டாகவும் இருப்பது போல் இந்தத் துறையிலும்கூட மற்ற மாநிலங்களுக்கு நம்முடைய நிதி அமைச்சர் கொண்டு வந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையானது அவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்ற முறையில் இருக்கிறது. அதே நேரத்தில் திட்ட காரியங்களை நிறைவேற்றுவதில் ஏதாவது குறைத்திருக்கிறார்களா என்று பார்த்தால், இந்த நெருக்கடியான நேரத்திலும், எல்லா இலாகாக்களிலும், சிறந்த முறையில் வேலைகள் நடக்கின்ற முறையில் எந்தவிதமான திட்டத்தையும் குறைக்காமல், அதிகமான அளவில் பணத்தையும் ஒதுக்கி, நம்மை ஆனந்தக் கடலில் மூழ்க வைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நாம் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

என்னுடைய தானிப்பாடி தொகுதியில் பல நல்ல காரியங்கள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக சிறு பாசனத்திட்டத்தின் மூலம் பல ஏரிகள் தூர் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக இப்போது தனியாக ஒரு இலாகாவை ஏற்படுத்தி அதாவது தனியாக மைனர் இரிகேஷன் (பிளானிங்) என்று ஏற்படுத்தி, வேலைகள் நடந்து வருகின்றன. குறிப்பாக தானிப்பாடி தொகுதியில், பாம்பாறு என்ற ஒரு சிற்றாறு ஓடுகிறது. எங்கள் ஜில்லாவில் இருக்கின்ற பாலாற்றில் தண்ணீர் ஓடினாலும் ஓடாவிட்டாலும், அடிக்கடி இந்த பாம்பாற்றில் தண்ணீர் ஓடுகிறது. இந்த ஆற்றில் ஒரு சிறிய அணையை பீமரப்பட்டி அருகில் கட்டினால் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு மிகவும் நன்மையாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான ஒரு அணையைக் கட்டுவதற்காக பீமரப்பட்டி அருகில் கட்டலாம் என்ற பரிசீலனை நடந்தது. ஆகவே அதை உடனடியாக துவக்குவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டம் என்னுடைய தொகுதியில்தான் இருக்கிறது. இதன் மூலமாக 25 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலமாக மாறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மேலும் இதன் மூலமாக மணிலாக்கொட்டை அதிகமான அளவில் விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்கு திட்டம் 1964-65-ல் கொண்டு வருவதாக சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக சர்க்காருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னால் பல இடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் ஏற்பட்டிருக்கின்றன. முக்கியமாக எங்களுடைய வடாற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கிய

மாவட்டம், செங்கம் தாலூகா மிகவும் பின்தங்கிய பிரதேசம். 1949-ல் நான் பத்தாவது படித்துக்கொண்டிருந்த காலத்தில் செங்கத்தில் மட்டும்தான் ஒரு உயர்நிலைப்பள்ளி இருந்தது. இப்போது இந்த பத்து ஆண்டு காலத்தில் பத்து உயர்நிலைப்பள்ளிகள் வந்திருக்கின்றன. திருவண்ணாமலை, போளூர், செஞ்சி, திருக்கோவிலூர் போன்ற இடங்களுக்கெல்லாம் உயர்நிலைப்பள்ளிகள் வந்திருக்கின்றன. இந்த இடங்களுக்கெல்லாம் மத்தியில் அமைந்திருக்கின்ற திருவண்ணாமலை மிகவும் முக்கியமான இடம். உலகத்திலேயே முக்கியத்துவம் பெற்ற அருணாசலேஸ்வரர் கோவில் இருக்கிறது. ரமணமகரிஷி இருந்த இடம். பல அரசியல் தலைவர்கள் இருந்த இடம். காலஞ்சென்ற அண்ணாமலைப் பிள்ளை போன்ற பல அரசியல் தலைவர்கள் வாழ்ந்த இடம். இப்பேர்ப்பட்ட இந்த இடத்தில் ஒரு (ஆர்ட்ஸ் காலேஜ்) கலைக் கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் பெண்கள் கல்வியில் மிகவும் உற்சாகம் காட்டி வரக்கூடியவர். பெண்களின் கல்வி வளரவேண்டும் என்பதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் இந்த வருடத்திலேயே கும்பகோணத்தில் பெண்களுக்கென்று ஒரு கல்லூரி திறப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். அதே போன்று இருக்கின்ற திருவண்ணாமலையிலும் அரசாங்கத் துறையிலிருந்தே ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி நான் முன்பு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டபோது, தனியார்கள் யாராவது பணம் போட்டு ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்யுங்கள், அரசாங்கம் அதற்கு வேண்டிய ஆதரவைத் தரும் என்று சொன்னார்கள். அதைக் கேட்டுக்கொண்டு, நான் பல பெரிய ஆட்களிடத்தில் போனபோது, வேண்டிய அளவில் உதவி செய்வதற்கு முன்வரவில்லை. அவர்களிடத்தில் பணம் இருந்தாலும், அவர்கள் பெயரிலேயே நடத்தலாம் என்று சொன்னாலும்கூட, யாரும் முன் வரவில்லை. எங்கள் பக்கத்தில் பல கோவில் பணிகளை நாட்டுக்கோட்டை செட்டியார்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களிடத்திலும் போய், உங்களைப்போன்றவர்களின் உதவியினால் தான் சிதம்பரத்தில் அண்ணாமலை யூனிவர்சிடி போன்றவைகள் வந்திருக்கின்றன, அதே போன்று இதற்கும் உதவி செய்ய முன்வருமாறு கேட்டுக்கொண்டேன். இதைப்பற்றி நான் விசாரிக்கின்ற நேரத்தில் சில பெரியவர்களின் மூலமாக கேட்டதில், திருவண்ணாமலையில் தான் அண்ணாமலை யூனிவர்ஸிடி ஆரம்பமாவதற்கு இருந்தது, பின் பல காரணங்களால் சிதம்பரத்திற்கு மாற்றப்பட்டது என்பதைத் தெரிந்துகொண்டேன். ஆகவே இப்போது உடனடியாக தனியார்களுடைய உதவி எதுவும் இல்லாத காரணத்தால் அரசாங்க சார்பிலேயே ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்தவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவில் ஜவ்வாது மலை இருக்கிறது, அது எங்களுக்கு ஒரு பெரிய பாக்கியம் என்றே சொல்லவேண்டும். அது ஒரு வரப்பிரசாதமாக இருந்துகொண்டிருக்கிறது, அங்கே



60, 70 கிராமங்கள் இருக்கின்றன. அங்கே வசிக்கின்ற மலையாளிகள் நல்ல முறையில வாழவில்லை. நான் மலையாளிகள் என்று குறிப்பிடுவது அங்கே வசிக்கின்ற மலைவாசிகளைத்தான். தமிழ் நாட்டில் மலையாளிகளும் இருக்கிறார்களா என்று முன்பு ஒரு தடவை கேட்கப்பட்டது. எங்கள் பக்கத்தில் அவர்களை மலையாளிகள் என்று தான் சொல்வார்கள். இவர்கள் கீழேயிருக்கின்ற நகரங்களுக்கு, அதாவது செங்கத்திற்கோ, அல்லது ஆலங்காயத்திற்கோ, வாணியம்பாடிக்கோ, திருப்பத்தூருக்கோ வரவேண்டுமென்றால் கால்நடையாக நடந்துதான் வரவேண்டும், அல்லது மலையிலிருந்து மூங்கில்கள் ஏற்றி வருகின்ற லாரிகள் மூலம் தான் வரவேண்டும். லாரிச் சொந்தக்காரர்கள் இதற்காக அதிகமான பணம் வசூல் செய்கிறார்கள். நம்முடைய நாட்டுக்கு சுதந்திரம் வந்தும்கூட, நாங்கள் இந்த நிலையில்தானா இருக்கவேண்டும், எங்களுக்கு ஒரு விமோசனமே கிடையாதா என்று கேட்கிறார்கள். அவர்கள் நிர்வாகம் செய்கின்ற பொறுப்பும் காட்டு இலாகா அதிகாரிகளிடத்தில்தான் இருக்கிறது. இந்தக் காரணங்களினால் இந்த இடத்தில் நல்லதொரு ரோடு போடுவதற்கு முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதனால் தாங்கள் மகசூல்களை, தங்களுடைய தானியங்களை கீழே கொண்டு வந்து நகரங்களில் விற்பதற்கு பல தடங்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் இவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற முறையில் இவர்கள் வசிக்கின்ற இடத்தை ஒரு டிரைபல் பிளாக் என்ற முறையில் ஆக்குவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 15 தினங்களுக்கு முன்னால் டெல்லியிலிருந்து ஷெட்யூல்ட் கமிஷனிலிருந்து ஒரு தனி ஆபீஸர் வந்திருந்தார். அவர் அந்த இடத்திற்கெல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவர்கள், இந்த இடத்தை டிரைபல் பிளாக்காக அமைப்பதற்கு உங்கள் அமைச்சர்கள் மூலமாக மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்தால் நிச்சயமாக பல உதவிகள் கிடைக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதில் கனம் நிதி அமைச்சர் அவர்களும் கனம் முதல் அமைச்சர் அவர்களும் ஊக்கம் காட்டி சிபாரிசு செய்தால் டிரைபல் பிளாக்காக இது ஆக்கப்படும். இதன்படி மத்திய அரசாங்கத்திலிருந்து சுமார் 15 லட்சம் ரூபாய் கொடுக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார். இம்மாதிரி தொகை கிடைக்குமானால் இந்த மலைவாசிகளுக்கு பல நன்மைகளை நம்மால் செய்து கொடுக்க முடியும் என்று நம்புகிறேன். ஆகவே இதற்கு அமைச்சர் அவர்கள் வேண்டிய கவனம் 1-30 p.m. செலுத்தி ஜவ்வாது மலைப்பிரதேசத்தை ஒரு டிரைபல் பிளாக்காக ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு இலாகாவின் மூலம் பல நல்ல காரியங்கள் நடைபெற்றுவருகின்றன என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. குறிப்பாக கிராமங்களை எடுத்துக்கொண்டால் செல்வாக்குள்ள சில குடும்பங்கள் மட்டுமே, மாமன், மச்சான் என்று தங்களுக்குள்ளேயே கூட்டுறவு சங்கங்களை அமைத்துக்கொண்டு, அதன் மூலம் பல நன்மைகளைப் பெற்று வருகிறார்களே தவிர

[திரு. வ. ஆறுமுகம்] [6th March 1963

ஏழை மக்களுக்கு, அரிஜன மக்களுக்கு, பின் தங்கிய மக்களுக்கு இதனால் எந்தவிதமான நன்மையும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக 80 சதவிகிதத்தினர் கூட்டுறவில் பங்கு கொள்ளவேண்டும் என்று நாம் திட்டமிட்டிருக்கிறோம். அதை நான் பாராட்டுகின்றேன். அதே சமயத்தில் 80 சதவிகிதத்தினரும் நான் கூறியதுபோல் வசதிபடைத்த சிலர் மட்டும் கையில் வைத்துக்கொண்டால் எந்தவிதமான பலனும் கிடைக்காமல் போகும். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். இந்த முறையை மாற்றி, எல்லோரும் கூட்டுறவின் மூலமாகப் பயன்பெறுவதற்கான வழியில் சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே கிராமங்களில் வசிக்கும் குடும்பங்களில் 80 சத விகிதக் குடும்பத்தினர் கூட்டுறவு இயக்கங்களில் சேர்ந்து நன்மை பெற வாய்ப்பு இருக்கவேண்டும்.

அடுத்தபடியாக, செங்கம் தாலூகாவிலே, செங்கத்திலே ஒரு உயர் நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கு ஒரு பெண்கள் உயர் நிலைப் பள்ளி வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை செய்துகொண்டிருக்கிறோம். அங்குள்ள மக்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அங்கு பணக்காரர்களோ, பஸ் முதலாளியோ அல்லது 25—30 ஏக்கர் நிலம் வைத்துள்ள நிலச்சுவான்தார்களோ கிடையாது. அப்படியிருந்தாலும், அங்கே ஒரு பெண்கள் உயர் நிலைப் பள்ளி வேண்டுமென்று 2,000 ரூபாய் வசூல் செய்து கலெக்டரிடம் கொடுத்து, அவர்களும் சிபாரிசு செய்து இப்போது சர்க்காரிடம் வந்திருக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்—எனக்குத் தெரியும் பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்கு 4,000 ரூபாய் முன் பணம் தேவை இல்லை என்று இருந்தது. பெண்கள் உயர் நிலைப் பள்ளி வேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகமாகி விட்ட காரணத்தினாலோ என்னவோ, இப்போது அவர்களுக்கும் முன் பணம் கட்ட வேண்டிய நிலைமை இருந்து வருகிறது. பெண்களின் சார்பாக நான் குறிப்பிடுகிறேன், அவர்களும் இன்றைய தினம் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள்—சமுதாயத்திலும் சரி, கல்வியிலும் சரி, அரசியலிலும் சரி ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் சலுகையைப் போல, எல்லாப் பெண்களும் நன்மை பெற அவர்களுக்கு இந்தச் சலுகையைக் கொடுத்து, 4,000 ரூபாய் கட்ட வேண்டிய கண்டிஷனை-நிர்பந்தத்தை-தளர்த்தி, அந்தப்பணம் கட்ட வேண்டியதில்லை, அவசியமும் இல்லை, உயர் நிலைப் பள்ளி திறப்போம் என்ற நிலைமையைக் கொண்டு வந்து, செங்கத்தில் ஒரு பெண்கள் உயர் நிலைப் பள்ளி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

1-33 p.m. MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

**The house then adjourned.**



6th March 1963]

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

108. *Notification issued with G.O. Ms. No. 745, Industries, Labour and Co-operation, dated the 6th February 1963 amending the Madras Money-lenders Rules, 1959, the same having been previously published as required by sub-section (1) of section 22 of the Madras Money-lenders Act, 1957 (Madras Act XXVI of 1957).* [*Laid on the Table of the House under section 22 (3) of the Madras Money-lenders Act, 1957 (Madras Act XXVI of 1957)*].

### B. Reports, Notifications and other papers.

*Nil.*

[6th March 1963

APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 135 on page 6.]

A.—(*a*) The details of the Package Scheme in force in the district of Thanjavur. In how many districts the scheme is being implemented.

The Intensive Agricultural District Programme (Package Programme) was first introduced in 1960-61 in seven districts in India of which Thanjavur district is one.

*Object of the scheme*

The Intensive Agricultural District Programme (Package Programme) is an integral part of the extension programme that has been drawn up for implementation in selected Districts in the country. Its objectives are :—

(1) To demonstrate in pilot districts the most effective ways of expanding agricultural production in the country by a co-operative effort between the Central and State Governments, District and Block Organization, Village and the individual cultivator.

(2) To increase the income of the cultivator and his family.

(3) To increase the economic resources and potential of the villages.

(4) To provide an adequate agricultural base for more rapid economic development and social betterment.

In addition to the above objectives the programme has certain other broad following objectives in keeping with the traditions of the District noted for its progressive type of farmers :—

(i) To provide the farmers in the fullest measure with the knowledge of scientific principles of farm management with a view to running their farms as paying business propositions.

(ii) To enlarge the Co-operative system the function of which is largely credit at present so that all needs of the farm both credit as well as supplies are made available in time and in a convenient manner.

(iii) To examine the sense of appreciation of the advantages of mixed farming with a view to developing a system of balanced cultivation, growing cash crops wherever possible and providing employment all the year round to the farmer.

***Facilities in Thanjavur district***

This district amply fulfils the criteria set for selection under Intensive Agricultural District Programme, viz., assured water-supply, freedom from natural hazards such as floods, droughts, etc., production of the main foodgrains consumed in the tract,



6th March 1963]

existence of a well-developed co-operative and panchayat organizations and maximum potentialities for increasing agricultural production in a comparatively short time.

Before the introduction of the Intensive Agricultural District Programme, the production of paddy in the district in terms of rice was 1,320 lb. per acre and total district production was 777,000 tons. Through the Intensive Agricultural District Programme, it is proposed to raise the yield by at least 25 per cent, i.e., to 1,650 lb. per acre and the total production of the district to 971,250 tons by 1965-66.

*Organization of intensive Agricultural District Programme*

The Intensive Agricultural District Programme is officially entrusted to the Department of Agricultures, but the co-operation of other Departments of the Government like the Rural Development and Local Administration, the Industries, Labour and Co-operation and the Public Works is vital for achieving success in the scheme. The Collector of the District is co-ordinating the programme at the district level. He is in overall charge of the programme. He is assisted in this work by the Joint Director of Agriculture. The Joint Director of Agriculture is assisted by six District Agricultural Officers. The Joint Registrar of Co-operative Societies organizes the co-operative side of the programme. He is assisted by six Deputy Registrars. There are also six Revenue Divisional Officers and the jurisdiction of the Revenue Divisional Officer, the District Agricultural Officer and the Deputy Registrars of Co-operative Societies are co-terminus. At the State level this co-ordination is the task of the State Co-ordination Committee for the Intensive Agricultural District Programme presided over by the Commissioner of Food Production.

*Area to be covered*

One-fifth of the total cultivated area, in terms of whole villages in 23 Blocks was selected in the first year. A total area of 2·24 lakhs acres under paddy in 317 villages was thus selected for this purpose. During the next five years, the remaining blocks of the district will also come under Intensive Agricultural District Programme and at the end of the fifth year 65 per cent of the total cultivated area of the district will be covered. The phased programme for the selection of the cultivated area to be covered is as follows :—

| | | |
|---|---|---|
| First year (1960-61) | ... | 20 per cent. |
| Second year (1961-62) | ... | 30 do. |
| Third year (1961-63) | ... | 40 do. |
| Fourth year (1963-64) | ... | 50 do. |
| Fifth year (1964-65) | ... | 65 do. |

The balance of 35 per cent of the cultivated area is left on the assumption that this area will be influenced by the programme implemented in the 65 per cent area.

In the first year, paddy was the only crop considered under the Intensive Agricultural District Programme. Though the total cultivated area comes to 2·29 lakhs acres in 317 villages, the area under paddy alone comes to 2·24 lakhs acres in 1960–61. For 1961–62 the scheme was extended to three more blocks and an additional 147 villages with an area of 1·14 lakhs acres was included, thus making a total of 3·43 lakhs acres (net area sown) spread over 464 villages. The scheme was extended to other crops, viz., plantains, sugarcane, coconuts, groundnut, millets, vegetables and cotton in 1961–62. As a result of this extension, an additional area of 21,806 acres in all the 26 blocks will have the benefit of the Programme.

*Farm Production Plans*

The scheme envisages intensification of agricultural production in selected area on a pilot basis for five years. The essential feature of the scheme is that individual farm production plans will be prepared to supply the full requirements of each farm and thus enhance its production. In other words, each farmer will be helped to draw up a Plan of increasing food production in respect of his farm and achieve the planned target by providing technical guidance and timely credit and supplies required under his farm Plan. The scheme will be financed partly by the Ford Foundation and partly by the Central and State Governments. A provision of Rs. 150 lakhs has been made in the State Third Five-Year Plan for the purpose.

*Detais of working*

The programme is expected to provide the following important elements to farmers at the appropriate time :—

(i) Adequate and timely supplies of good suitable strains of seeds, fertilizers, improved implements, pesticides, etc., through the Co-operatives.

(ii) Adequate and timely supply of credit to enable the farmers to purchase in full, their cultivation requirements. This credit will be given through Co-operative Credit Societies on the basis of individual Farm Production Plans. The Societies will be helped with certain guarantees in respect of writing off genuine losses;

(iii) Linking of credit with marketing;

(iv) Intensive education of the farmers in better farming techniques, through demonstrations and personal talks;

(v) Strengthening of transport arrangements to ensure mobility of staff and supplies;

(vi) Increased storage space for storing essential supplies grains, etc., within bullock cart distances of the farms;





(vii) Special schemes for dealing with local problems such as drainage, alkalinity and salinity in soils and desilting of channels; and

(viii) Strengthening the existing marketing organization and building it up for enhancing the bargaining power of the farmer.

*Resources and Production Bench Mark Survey.*

One special Statistical Officer with supporting staff has been appointed for survey and evaluation work and is responsible for the collection of necessary data as well as its compilation.

The Survey work is being done in (1) intensive areas, (2) non-intensive areas and (3) control areas. The control areas outside the district are selected for carrying out similar surveys which will form a basis for comparison of the progress in the areas covered by the Programme. (Control areas are selected outside the district, as non-intensive areas in the same district will get the benefit of the programme in the adjoining intensive areas.) Estimates of production is determined based on the crop cutting experiments.

(b) 23·4 per cent is the increase in yield per acre in terms of rice in 1961–62 over 1960–61.

(c) There is no such proposal.

பதில்.—(அ) தீவிர விவசாய மாவட்டத் திட்டம் (தீவிரச் சாகுபடித் திட்டம்) (Package Programme) முதன்முதலாக 1960-61-ல் இந்தியாவில் ஏழு மாவட்டங்களில் கொண்டுவரப்பட்டது. அவற்றில் தஞ்சாவூர் மாவட்டமும் ஒன்ருகும்.

திட்டத்தின் நோக்கம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட தீவிர விவசாய மாவட்டத் திட்டம் (தீவிரச் சாகுபடித் திட்டம்) இந்த நாட்டில் தேர்ந்தெடுத்த சில மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்கு உருவான வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பாகமாகும். அதன் நோக்கங்கள் கீழ்க்கண்டவையாகும் :—

(1) மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையிலும், மாவட்ட, வட்டார அமைப்புகளுக்கிடையிலும், இராம அளவிலும், தனிப்பட்ட விவசாயிக்கும் உள்ள கூட்டுறவு முயற்சியைப் பயன்படுத்தி நாட்டின் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான மிகப் பலனுள்ள வழிகளை முன்னோடி வட்டாரங்களில் நடத்திக்காட்டுதல்;

(2) குடியானவரின் வருமானத்தையும் அவரது குடும்பத்தினரின் வருமானத்தையும் அதிகரித்தல்;

(3) இராமங்களின் பொருளாதார ஆதாரங்களையும் சக்திகளையும் ஆராய்தல்;

(4) பொருளாதார வளர்ச்சியையும் சமூக வளர்ச்சியையும் இன்னும் விரைவில் சாதிப்பதற்கான, போதிய விவசாய அடிப்படையை ஏற்படுத்துதல்.

[6th March 1963

தஞ்சாவூர் மாவட்டம் நெடுங்காலமாகவே விவசாயத் துறையில் முன்னணியில் நிற்பதாலும் முன்னேற்றக் கருத்துக்கள் கொண்ட விவசாயிகள் அங்கு இருப்பதாலும் மேற்சொன்ன நோக்கங்களுடன் தஞ்சாவூர்த் திட்டம் பின்வரும் நோக்கங்களையும் கொண்டுள்ளது :—

(i) குடியானவர்கள் தங்களுடைய பண்ணைகளை லாபந்தரும் வகையில் நடத்துவதற்காக, பண்ணை நிர்வாகம் சம்பந்தப்பட்ட கோட்பாடுகளை அவர்களுக்கு நன்றாக விளக்கிச் சொல்லுதல் ;

(ii) தற்போது பெரும்பாலும் கடன் தருவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ள கூட்டுறவு முறையின் நோக்கங்களை விரிவுபடுத்தி பண்ணைக்கு வேண்டிய எல்லா விதைகளையும் கடனுக்கும் ரொக்கத்திற்கும் உரிய காலத்தில் வசதியான முறையில் கிடைக்கச் செய்வது ;

(iii) கலப்புப் பண்ணையின் அனுகூலங்களை விவசாயிகள் உணர்கிறார்களா என்பதை ஆராய்ந்து சீரான சாகுபடி முறையை அபிவிருத்தி செய்து, முடிந்த இடங்களில் பணப் பயிர்களைப் பயிரிட்டு ஆண்டு முழுவதும் குடியானவருக்கு வேலை வாய்ப்பு அளித்தல். இந்த மாவட்டத்தின் பெரும் பகுதியில் இப்போது நெல் ஒரு பயிர் மட்டுமே பயிரிடப்படுவதால், இது அவசியமாகிறது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிர விவசாய மாவட்டத் திட்டம்.

இத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கான எல்லாத் தகுதிகளையும் இம் மாவட்டம் பெற்றுள்ளது. இங்கே தண்ணீர் வசதி நிச்சயமாய் கிடைக்கின்றது. வெள்ளம், மழையின்மை போன்ற இயற்கையான அபாயங்கள் இங்கே கிடையாது. முக்கிய உணவுத் தானியங்கள் இங்கே பயிராகின்றன. நன்றாக அபிவிருத்தியடைந்த கூட்டுறவு அமைப்புக்களும் பஞ்சாயத்து அமைப்புக்களும் இங்கு உள்ளன. குறுகிய காலத்தில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இங்கே நிறைய இருக்கின்றன.

இத் திட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்பாக, இம் மாவட்டத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 1,320 பவுண்டு (அரிசிக் கணக்கில்) நெல் விளைந்தது. மாவட்டம் முழுவதிலும் உற்பத்தி அளவு 777,000 டன்களாக இருந்தது. இத் திட்டத்தின் மூலம், 1965–66-க்குள் இந்த விளைச்சலைக் குறைந்தது 25 சதவீதமாவது அதிகரிக்க உத்தேசிக்கிறோம். அதாவது, உற்பத்தி அளவை ஏக்கர் ஒன்றுக்கு 1,650 பவுண்டாகவும், மாவட்ட மொத்த உற்பத்தி அளவை 971,250 டன்களாகவும் அதிகரிக்க உத்தேசித்துள்ளது.

### தீவிர விவசாய மாவட்டத் திட்ட அமைப்பு.

இத் திட்டம் அதிகாரபூர்வமாக விவசாயத் துறையினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால், இத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற கிராம அபிவிருத்தி–தல நிர்வாகத் துறை, தொழில்–தொழிலாளர்–கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை போன்ற இதர அரசாங்கத் துறைகளின் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். மாவட்ட அளவில் வேலைத் திட்டத்தை மாவட்டக் கலெக்டர் ஒருமுகப்படுத்தி வருகிறார். இந்த வேலைத் திட்டம் சம்பந்தமாக மாவட்டக் கலெக்டர் முழுப் பொறுப்பு வகிப்பார். விவசாயத் துறை இணை நெறியாளர் இவ் வேலையில் இவருக்குத் துணைபுரிவார். மாநில அளவில் மாநில ஒருங்கிணைப்புக் குழு ஒன்று இந்த ஒருங்கிணைப்பு வேலையைச் செய்யும். உணவு உற்பத்தித் துறை ஆணையாளர் இக் குழுவின் தலைவராவார். மாவட்ட அளவில் விவசாயத் துறை இணை ஆணையாளரும் (இரு தாலுகாக்களுக்கு ஒருவர் என்ற முறையில்) ஆறு மாவட்ட விவசாய அலுவலர்களும் ஒருங்கிணைப்பு வேலையைச் செய்வர். கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் இந்த வேலைத் திட்டத்தின் கூட்டுறவுப் பகுதியைக் கவனித்துக் கொள்வார். இரண்டு தாலுகாக்களுக்கு ஒருவர் என்ற முறையில் ஆறு துணைப் பதிவாளர்கள் அவருக்கு உதவுவார்கள். ஆறு ரெவின்யு



6th March 1963]

டிவிஷனல் அதிகாரிகளும் உள்ளனர். கிராம அபிவிருத்தி அலுவலர், மாவட்ட விவசாய அலுவலர், கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர்கள் ஆகியோர் ஒரே அதிகார வரம்பைக் கொண்டிருப்பார்கள்.

### திட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய பகுதி.

இருபத்திமூன்று வட்டாரங்களிலும் முழுக் கிராம அடிப்படையில், மொத்தச் சாகுபடி 1/5 பகுதியில் முதலாவது ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டது. இது காரியத்திற்காக, 317 கிராமங்களில் நெல் சாகுபடியின்கீழ் உள்ள 2·24 லட்சம் ஏக்கர் மொத்தச் சாகுபடிப் பகுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அடுத்த ஐந்தாண்டுகளில், மாவட்டத்தின் எஞ்சியுள்ள வட்டாரங்கள் இத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்படும். ஐந்தாவது ஆண்டின் முடிவில் மாவட்டத்தின் மொத்த சாகுபடிப் பகுதியில் 65 சதவீதப் பகுதி அளவில் இத் திட்டம் நிறைவேற்றப்படும் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாகுபடிப் பகுதியைத் தேர்ந்தெடுப்பதற்கென்று படிப்படியாகக் கீழ்க்கண்ட திட்டம் அனுசரிக்கப்படும் :—

| ஆண்டு. | | | திட்டம் நிறைவேற்றப்படும் பகுதி. |
|---|---|---|---|
| (1) | | | (2) |
| | | | சதவீதம். |
| முதல் ஆண்டு | (1960–61) | .. | 20 |
| இரண்டாவது ஆண்டு | (1961–62) | .. | 30 |
| மூன்றாவது ஆண்டு | (1962–63) | .. | 40 |
| நான்காவது ஆண்டு | (1963–64) | ... | 50 |
| ஐந்தாவது ஆண்டு | (1964–65) | .. | 65 |

சாகுபடிப் பகுதியில் எஞ்சியுள்ள 35 சதவீதப் பரப்பளவு விட்டுவிடப்பட்டது. அறுபத்தைந்து சதவீதப் பகுதியில் நிறைவேற்றிய வேலைத் திட்டம் இந்த 35 சதவீதப் பகுதிக்கும் பலன் தரும் என்று எதிர்பார்த்தே அவ்வாறு விட்டுவிடப்பட்டது.

முதல் ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் நெற்பயிரைப் பற்றித்தான் சிந்திக்கப்பட்டது. 1960–61-ம் ஆண்டில் 317 கிராமங்களில் மொத்த சாகுபடிப் பகுதி 2·29 லட்சம் ஏக்கராவாக இருந்தபோதிலும், அதில் 2·24 லட்சம் ஏக்கராவில் நெல் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது. 1961–62-ம் ஆண்டில் 147 கிராமங்களில் 1·14 லட்சம் ஏக்கரா சாகுபடியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு சாகுபடி செய்த மொத்த நிலப்பரப்பு (விதைக்கப்பட்ட நிகர பரப்பளவு) 464 கிராமங்களில் பரவலாக 3·43 லட்சம் ஏக்கரா என்று ஆகியது. இத் திட்டம் வாழை, கரும்பு, தென்னை, நிலக்கடலை, தினைவகைகள், காய்கறிகள், பருத்தி, போன்ற மற்றப் பயிர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இதன் விளைவாக 26 வட்டாரங்களிலும் 21,806 ஏக்கரா கூடுதலான நிலப்பரப்பு இந்த வேலைத் திட்டத்தால் பலனடையும்.

### பண்ணை உற்பத்தி திட்டங்கள்.

குறித்த ஒரு பகுதியில் பரீட்சார்த்த ரீதியில் ஐந்தாண்டுக் காலத்துக்குத் தீவிரமாக விவசாய உற்பத்தி செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று, ஒவ்வொரு பண்ணையின் எல்லாத் தேவைகளையும் வழங்குவதற்காகத் தனிப்பட்ட பண்ணை உற்பத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படும். அதனால் ஒவ்வொரு பண்ணையின் உற்பத்தியும் அதிகரிக்கும். அதாவது, ஒவ்வொரு விவசாயியும் தனது பண்ணை சம்பந்தமாக உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு உதவி அளிக்கப்பெறுவார். அத்துடன் திட்டமிட்ட இலக்கை அந்த விவசாயி அடைவதற்கேற்ற தொழில் நுட்ப உதவியும் உரிய காலத்தில் கடன் உதவியும் இதர உதவிகளும் அவருக்கு

வழங்கப்படும். இத் திட்டத்திற்காக ஃபோர்டு ஸ்தாபனத்தினரும் (Ford Foundation) மத்திய, மாநில அரசினரும் ஓரளவு நிதி உதவி அளிப்பார். இதற்கென மாநில மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 150 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### திட்டத்தை நிறைவேற்றுதல் குறித்த விவரங்கள்.

விவசாயிகளுக்கு உரிய காலங்களில் கீழ்க்கண்டவற்றை வழங்க இத திட்டம் வகை செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது:—

(i) நல்ல பொருத்தமான விதை வகைகளையும், உரங்களையும், தரம் உயர்ந்த கருவிகளையும், பூச்சிநாசினிகளையும், மற்ற பொருள்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் போதிய அளவுக்கு உரிய காலங்களில் வழங்குதல் ;

(ii) விவசாயிகள் தங்கள் சாகுபடித் தேவைகளையெல்லாம் வாங்குவதைச் சாத்தியமாக்குவதற்காக போதிய கடனை உரிய காலத்தில் அளித்தல். இந்தக் கடன், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாகத் தனிப்பட்ட பண்ணை உற்பத்தித் திட்டங்களின் அடிப்படையில் வழங்கப்படும். உண்மையாகவே ஏற்படும் நஷ்டங்களைக் கணக்கிலிருந்து அடித்துவிடுவது சம்பந்தமாக, இந்தச் சங்கங்களுக்குச் சில உத்திரவாதங்கள் அளிக்கப்படும் ;

(iii) கடன் வசதியை விற்பனை வசதியுடன் இணைத்தல் ;

(iv) செய்முறைக் காட்சிகள் மூலமாகவும் நேரில் தரும் விளக்கங்கள் மூலமாகவும் முன்னேற்ற விவசாய முறைகள் குறித்து விவசாயிகளுக்குத் தீவிரமாக அறிவித்தல் ;

(v) பணியாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் செல்லவும், பொருள்களை எடுத்துச் சென்று வழங்கவும் சாத்தியமாயிருக்கும்பொருட்டு போக்குவரத்து வசதிகளை அதிகரித்தல் ;

(vi) முக்கியமான உணவுத் தானியங்கள் முதலியவற்றைச் சேமித்து வைப்பதற்காக பண்ணைகளிலிருந்து மாட்டுவண்டிகளில் அவற்றை எடுத்துச் செல்லும் தூரத்திற்குள் 'இடவசதியை' அதிகரித்தல் ;

(vii) வடிகால் வசதி, மண்ணின் உப்புச்சத்து, கால்வாய்களில் தூர் எடுப்பது போன்ற உள்ளூர்ப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான விசேஷத் திட்டங்கள் ;

(viii) விவசாயி தனது விளைபொருள்களை நல்ல லாபத்திற்கு விற்பது சாத்தியமாயிருக்க தற்போதுள்ள விற்பனை அமைப்பைப் பலப்படுத்தி அபிவிருத்தி செய்தல்.

### ஆதாரங்களும் உற்பத்தியும்—பெஞ்ச் மார்க் சர்வே.

ஒரு விசேஷப் புள்ளி விவர அலுவலரும் அவருக்குத் துணையான பணியாளரும் இத் திட்டம் சம்பந்தமான சர்வே வேலைக்காகவும் மதிப்பீட்டு வேலைக்காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத் திட்டத்திற்கு அவசியமான புள்ளிவிவரங்களைச் சேகரித்துத் தொகுக்க அந்த அலுவலர் பொறுப்பாளியாவார்.

(1) தீவிர திட்டப்பகுதிகளிலும் (Intensive areas), (2) மற்றப் பகுதிகளிலும் (Non-intensive areas), (3) கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் (Control areas) சர்வே வேலை நடைபெறுகிறது. மாவட்டத்திற்கு வெளியிலுள்ள கட்டுப்பாட்டுப்பகுதிகள் அதேமாதிரியான சர்வேக்களை நடத்த தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இத் திட்டம் நிறைவேற்றப்படுகிற பகுதிகளின் முன்னேற்றத்தை ஒப்பிட்டுப்பார்க்க அந்த சர்வேக்கள் அடிப்படையாக இருக்கும்.





(அதே மாவட்டத்திலுள்ள மற்றப் பகுதிகள் அவற்றின் அண்டையிலுள்ள தீவிரத் திட்டப்பகுதிகளில் இத் திட்டத்தின்மூலம் ஏற்படும் அனுகூலங்களைப் பெறுவதால் கட்டுப்பாட்டுப் பகுதிகளை மாவட்டத்திற்கு வெளியே தேர்ந்தெடுக்கிறார்கள்.) பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் அடிப்படையில் உற்பத்தி மதிப்பீடுகள் தீர்மானிக்கப்படும்.

(இ) 1960–61-ம் ஆண்டைக் காட்டிலும் 1961–62ம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கான விளைச்சல் (அரிசி அளவில்) 23·4 சத வீதம் அதிகமாயிருக்கும்.

(உ) இத் திட்டத்தை 1962–63-ல் வேறு எந்த மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் கிடையாது.

## APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 139 on page 15 ]

Teachers are being trained for handling adult schools. A batch of 40 teachers is given training for a period of six weeks. Seven such batches undergo training in a year. Each trainee is paid a stipend of Rs. 22-50 nP. per mensem. The places where adult literacy schools are functioning now are shown in the annexure. Pending revision of syllabus for adult education and pending policy decision in this regard, no new adult literacy schools are being opened at present.

### ANNEXURE.

### ADULT LITERACY SCHOOLS.

*Chingleput North Educational district.*

1 Adigathur.
2 Melnallathur.
3 Kadambathur.
4 Voyalur.
5 Venmanambudur.
6 Karanai Naizan pet.
7 Placepalayam.
8 Pandur.
9 Vellathukottai.
10 Tirupachur.
11 Ikkadu.
12 124 Punnapakkam.
13 Thozhur.
14 Ramapuram.

*Chingleput South Educational district.*

1 Rundrankoil.
2 Kuppam.
3 Veerapuram.
4 Sooradimangalam.
5 Vittalapuram.
6 P. V. Kalathur.
7 Pandur.
8 Mudaiyur.
9 Melaipakkam.
10 Anoor
11 Thandarai (Women),
12 Melmanambedu.

*Dindigul Educational district.*

1 Nagalapuram (Men).
2 Kariyappakoundanpatti.
3 Rasingapuram.
4 B. Meenakshipuram.
5 Kondangipatti.
6 Koolampatti (Men).
7 Koolampatti (Women).
8 Chinnalapatti (Men).
9 Chinnalapatti (Women).
10 Kovilur.

*Madurai Educational district.*

1 Vilangudy.
2 Mangulam.
3 Rajakkur.
4 T. Pudupatti.
5 Sithakur.

*Madurai Educational district—cont.*

6 Karuppayurani.
7 Nonoikoilpatti.
8 Kottagudi.
9 Vei padappu.
10 Urangampatti.
11 Semminipatti.
12 Melacottai.
13 K. Vellakulam.
14 P. Chettiapatti.
15 V. Rediapatti.
16 Kudipatti.
17 Panamoopanpatti
18 Patlupatti.
19 S. Meenakshipuram.
20 Sathangudy.
21 Anaipatti.
22 Kalladipatti.
23 Meenakshipuram.
24 Kanunilaichatram.
25 Pallapatti.
26 T. Vadipatti.
27 Thathampatti.
28 Kadupatti.
29 Mannadimangalam.
30 M. Pudupatti.
31 Kumaram.
32 Kuravankulam.
33 Valasai.

*Ramanathapuram East.*

1 Paralai.
2 Emaneswaram.

*Ramanathapuram Central.*

1 Pilliaditharamam.

*Ramanathapuram West.*

1 Kammapatti.
2 Unjampatti.
3 Puthur.
4 Punelveli.
5 Melavaragunaramapuram.
6 Keelavaragunaramapuram.
7 Muthugudi.
8 Pattakulam,
9 Melavallampatti.



*Tirunelveli North.*

1 Mellathattaparai.
2 Devarkulam T.D.T.A.
3 Mooviru thali.
4 North Panavadali.
5 Mela Illandaikulam.
6 Ilandaikulam
7 Melaneelidanallur.
8 V. Reddiapatti.
9 Vellalangulam.
10 Chintamaud XIII Ward Men.
11 do. XIV do.
12 do. Subbaraya.
13 Parugapuram Swami.
14 Duraisamipuram, Saravanabananda.
15 Malayadikurichi Shunmugananda.
16 Puliangudi Ramalingam.
17 Puliangudi Main Bazar.
18 Rayagiri Balakrishna.
19 Thenmalai Ramananda.
20 Vasudevanallur Pt. Union.
21 Chintamani XIII Ward.
22 do. Sernapackam.
23 do. Gandhiji.
24 Viswanathaperi Nehru.
25 West Alangunatchiarpuram.
26 Avaniconendal Shanmugiah.
27 Alaguneri Men.
28 Alaguneri Women.
29 Malaipatti.
30 Naluvasankottai.
31 Vagaikulam Women.
32 Kuruvikulam Govt. Basic Trainining School.
33 Sankarankoil Ram Chandhra.
34 Solaiseri.
35 Malayadipatti.
36 K. Paraipatti.
37 Pillairkulam.
38 K. Rengasamudram.
39 Veerarapuram.
40 Rengasamudram (Men).
41 do. (Women).
42 Veerasigamoney.
43 Vetrampatti.
44 Punnaivanam.
45 Illuppaiurani.
46 Thonugal.
47 Valampatti.
48 Kovilpatti Kankam.
49 Erachi.
50 Thuraiyur.
51 Naduvirpatti (Men).
52 do. (Women).
53 Ettayapuram T.B.M.
54 Theethampatti.
55 Keela Iral (Men).
56 do. (Women).
57 Semmapudur.
58 Uthupatti.
59 Chatharapatti.
60 Suraikaipetti.
61 Villiseri.
62 Idaiseval.
63 Nallatinputhur.

*Tirunelveli Central.*

1 Kolumadai.
2 Thambirappatcheri.
3 Panthamil Palli Viravanallur.
4 Thirugnanasambandar.

*Tirunelveli Central—cont.*

5 Kothankulam.
6 Kilakulam.
7 Ellavadi St. Veeravanallur.
8 Kamaraj.
9 Nainar Street.
10 Reddiapuram.
11 Koilkulam Krishna.
12 Sandaimadam.
13 Uppuvanimuthur.
14 Melakkallur.

*Tirunelveli South.*

1 Irukkandurai.
2 Kuvalkinar.
3 Kacobpuram.
4 Chettikulampannai.
5 Kuttam.
6 K. Puthur.
7 Thoppuvillai.
8 Valliammaipuram.
9 Oothady.
10 Kallikulam.
11 Kudangulam.
12 Radhapuram South.
13 do. Sandaiyoor.
14 Thiruvambalapuram.

*The Nilgiris.*

1 Thummapatty.
2 Kambatty.
3 Ebbanad.
4 Kattery.

*Vellore.*

1 Sambasivapuram.
2 Agaravaram.
3 Seekarajapurammottur.
4 Erukanthotti.
5 Kukundi.
6 Pudupadi.
7 Athithangal.
8 Poonai Pudur.

*Tirupattur.*

1 Sethuvandai.
2 Mohammedpuram.
3 Devarishikuppam.
4 Kanguppam.
5 Pazumathur.
6 Kelkavanur.
7 KV. Kuppam.
8 Nagal.
9 Devanambut.
10 Edakrishnapuram.
11 Alanganderi.
12 Malagapattu.
13 Veppanganeri.
14 Melmankpuppam.
15 Kavasambut.
16 Augarankuppam.
17 Kambatham.
18 Kilmatturam.
19 Melmoil.

*Tiruvannamalai.*

1 Morappanthangal.
2 Vadugasathur.
3 Peranamallur.

*Tiruvannamalai*—cont.

4 Alampoondi,
5 Royaakuppam.
6 Vadamathimangalam.
7 Thippanandal.
8 R ja ho e
9 Valath langunam.
10 Avoor.
11 Somasipadi.
12 Rajanthangal.
13 Arpakkam.
14 Saday nodai.
15 Boodamang lam.
16 Karungali uppam.
17 Keeranur.
18 Vayalore.
19 Sanipoondi.

*Cuddalore.*

1 Kolakudi.
2 Kothandaramapuram.
3 Mool kuppam.
4 Poondiya kuppam,
5 Taerkamelur.
6 Vazhapal am.
7 Vinayar mmatt kuppam.
8 Ve udayamattu.
9 Vellachiku pam.
10 Velavinayagarkuppam.
11 Kambil m du.
12 Annap a pettai,
13 Meenakshipettai.
14 Betha kuppam.
15 K lyal att cheri.
16 Ellappanpettai.
17 Mezhandikuppam.
18 Nathum
19 Keelakollai.
20 Mutharasankunpam.
21 Anguchettiplayam.
22 Manjakollai.
23 Veeramu 'ayantham.
24 Vadakkupa ayam.
25 Solathirampodaiyur.
26 C. Santhamangalam.
27 Paralore.
28 Ayyanur Vikkaramangalam.
29 Siluvaipuram.
30 Vazhaikollai.
31 T. Nedunjeri.
32 K Adoor.
33 Kal'akurichi.
34 Karunapuram.
35 Emappeir.
36 Malaikettalam.
37 Vilambar.
38 Siruvangur.
39 Peruvangur.
40 Thandalai.
41 Thandalai colony.
42 Madur.
43 Parunangalam.
44 Madhavachari.
45 Ammapet.
46 Vadakkanandal.
47 Kachirapalayam.
48 Venkitammapet.
49 Kadatpur.
50 Mettupalayam.
51 Kural.

*Cuddalore*—cont.

52 Ammayagaram.
53 Pethasan u ram.
54 Pakambadi,

*Villupuram.*

1 Anjamangalam.
2 Kan a am.
3 Murukkanthangal.
4 Melacheri.
5 Kad li.
6 V. lathi.
7 Ku 'uvampoondi.
8 Gingee.
9 Sakka apuram.
10 Pakkam.
11 Odappa kuppam.
12 Kalathur.
13 East Marudur.
14 Sendanadu.
15 Pudu,
16 Perumpakkam.
17 Mutnianur.
18 Se-Pudur.

*Salem.*

1 Thandrayapuram.
2 M ttur.
3 Mullaivadi, Attur P.O.
4 Kothambadi.
5 Chokka ath puram.
6 Oldpet, Attur P.O.
7 Kottavadi.
8 Yethapur.
9 Olaip adi.
10 Pendanaickenpalayam.
11 Sendaraipatti East.
12 Sendar patti West.
13 Pe iyeri.
14 Aragalore.
15 Kottukottai.
16 Si uvachur.
17 Govindampalayam.

*Dharmapuri.*

1 Agraharam.
2 Boganapalli.
3 Kod athur.
4 Pennagaram.
5 Dinnur.

*Thanjavur East.*

1 Karpaganatharkulam.
2 Melappermuzhai.
3 Vadiakkadu.
4 Idaiyur.
5 Karpaganatharkulam South.
6 Keelaperumazhai.
7 Chidambaranathapuram.
8 Pudupatinam.
9 Tharkas.
10 Tha davankulam.
11 Varisapathu.
12 Manalkarom.
13 Talvag rajapuram.
14 Thiruchit ambalam.
15 A mayappan.
16 Rasankulam.
17 Arivalur.



*Thanjavur East*—cont.

18 Thalaikadu.
19 Ponnirai.
20 Vittukatti.
21 Vellapallam.
22 Pazhankallimedu.
23 Thimmappa Naicken Kuthagai.
24 Kariapattinam.

*Thanjavur West.*

1 Andakudy.
2 Adut urai Perumakoil
3 Ramanujapuram.
4 Alangudy.
5 Me'a Amarapatty.
6 Manakkun lu.
7 Anjappan et.
8 Jamb gapuram.
9 Kovilur.
10 Baburajapuram.
11 Dura uram.
12 Devanjeri.
13 Gopinathaperumalkoil.
14 Nad vakkarai.
15 Koranattuparuppur.
16 Pambanad j ur.
17 Patteswaram.
18 Sho'ap ram.
19 Swamimalai.
20 Thennampadugai.
21 Thillaiyambur.
22 Mimisal.
23 B yamar yanendal.
24 Vadakku Ammapattinam.
25 Parayakottai.
26 Pa chanatt ikottai.
27 Thondarampet.
28 Vadaseri.
29 Nattuchalai.
30 Karambayam.
31 Pall kond n.
32 Chidambaranathapuram.
33 Kottur.
34 M zhaiyur.
35 Sembiavarambal.

*Tiruchirappalli.*

1 Mttupa'ayam.
2 M. Karuppampatty.
3 Pulivalam.
4 Maruppatty.
5 Puthanampatti.
6 Manamedu.
7 Thalam lapatty.
8 Sitilarai.
9 Perur.
10 Tholayanatham.
11 Andipatti.
12 Urakkarai.
13 Thathiengarpet.
14 Konappampatti.
15 Perumalappalayam.

*Pudukottai.*

1 Alangudi.
2 Alang du.
3 Arasadipatti.
4 Ayerpatti.
5 Tirumalarayasamundram.
6 Vellaikollai.

*Pudukottai*—cont.

7 Sembattur.
8 Vad va am.
9 Tautasi kodumbu.
10 Chinnadarapuram.

*Ariyalur.*

1 Mullal.
2 Thirumalapadi.
3 Anukkur.
4 Pe ia napalayam.
5 V. Ke athur.
6 Anukkurkudikadu.
7 Ve bavur.
8 Nerkonam.
9 Vij vapuram.
10 Venganur.
11 Neikuppai.

*Coimbatore.*

1 Nag m apudur.
2 Sok ampalayam.
3 So nm udampalayam.
4 Pichandampalayam.
5 Avinashi Li th ward.
6 Vo'andi alayam.
7 Avinashilingampalayam.
8 Pancha'ingan palayam.
9 Mariandan palayam.
10 Thali jipa'ayam.
11 U pilipalayam.
12 Vanjipalayam.
13 Kamanaickenpalayam.
14 Sundapalayam.

*Pallachi.*

1 Sed alayam.
2 Rargasamuthiram.
3 Sakthi Kalvi Nilayam, Pal'adam.
4 Ma lengounden alayam.
5 Venguttapuram.
6 Karadn avi.
7 Golde et.
8 Karadivavipudhur.
9 Kombuika tu udhur.
10 Anuppapatti.
11 Puliamr thupalayam.
12 V. Chandrapuram.
13 Pacharpalayam.
14 Lakshminaickenpalayam.
15 Senjer puthur.
16 Kolathupalayam.
17 S.P. Vadu apalayam.
18 A' kan ckenpalayam.
19 Kallapa'ayam.
20 Kanaampalayam.
21 M. Rayarpal vam.
22 Sinniampalayam.
23 Pee ampallai.
24 Thottampatti.
25 Kall mettupalayam.
26 Kathanur.
27 Manasipalayam.
28 Manjappur.
29 Singannur.
30 Annuparpalayam.
31 Nallu.
32 Vavipalayam.
33 Iduvai.
34 Pattambalayam.

*Erode.*

1 Mudalithattam.
2 Vairapalayam.
3 Kaspapettai.
4 Mukasi Anumanpalli.
5 Vemandampalayam.
6 E. Velampalayam.
7 Ponnampalayam.
8 Kuttipalayam.
9 Mullampatti.
10 Pandiampalayam.
11 Gnanipalayam.
12 Uppilipalayam.
13 D. Kalipalayam.
14 Alangium.
15 Edakkalpadi.
16 Kollapalu.
17 Oddarpalayam.
18 Kallaipatti
19 Kondayampalayam.
20 K. Ganapathipalayam.
21 Kangayam.
22 Porayagoundenvalasu.
23 Keeranur.

*Erode—cont.*

24 Dhasanaickanpatti.
25 Vellakoil.
26 Senapathipalayam.
27 Sathipalayam.
28 Illuppaikinar.
29 Velampalayam.
30 Velappanaickanvalasu.
31 Kulalipalayam.
32 Chettipalayam.
33 Gudakkarai.
34 Kadathur.
35 Kettupullampalayam.
36 Nagaranai.
37 Andipalayam.
38 Sadhumughai.
39 Thalavadi.
40 Arulvadi.
41 Hongalavadi.
42 Kallipalayam.
43 Manurpalayam.
44 Odakkalpalayam.
45 Periakoumarapalayam.
46 Pudumavakombu.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Thursday, 7th March 1933.

The House met in the Assembly Chamber, *Fort St. George*, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

**பள்ளிச்சீருடை வழங்கல்**

*143 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:* கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியில் இம்மாதம் கனம் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட பள்ளிச்சீருடை வழங்கும் நிகழ்ச்சியில் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சீருடைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு?

(இ) அதற்கு அரசாங்கத்தின் நிதி உதவி எவ்வளவு?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ) தோராயமாக ரூ. 1,36,165 என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

(இ) அரசாங்க உதவி இல்லை.

(*a*) The value has been estimated at Rs. 1,36,165 approximately.

(*b*) Nil.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளிலுள்ள மாணவர்களுக்கும் ஒரேவிதமான சீருடைய ஏற்படுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தனியார் ஏதாவது ஒரு திட்டம் தயாரித்து அதற்கு உதவி அளிப்பதற்கு முன்வந்தால், அவ்வாறு சீருடை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப்பொழுது இது விஷயத்தில் அரசினர் ஒன்றும் உதவுவதாக இல்லை. கூடியவரையில் மாணவர்கள் ஒரேமாதிரி ஆடை அணியவேண்டும் என்பதுதான் திட்டம். அந்தந்தப் பள்ளியிலாவது ஒரேமாதிரியான உடை அணியவேண்டும் என்று திட்டம் நடைபெறுகிறது. ஒரு பள்ளியைப் பார்த்து அதேமாதிரி மற்றொரு பள்ளியும் பின்பற்றிக்கொண்டு வருகிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** நீதிபதிகள், வழக்கறிஞர்கள், காவல் துறையினர் போன்றவர்களுக்குத் தனியாகச் சீருடை வழங்கப்பட்டு மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதைப்

[7th March 1963

போன்று, மாணவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட ஆசிரியர்களுக்கு என்று தனியாக சீருடை வழங்குவதற்குத் திட்டம் அரசினரிடத்தில் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி அரசினரிடத்தில் திட்டம் ஒன்றும் இல்லை. ஆனால் இப்பொழுது அரசாங்க அதிகாரிகள் அம்மாதிரி செய்யவேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள். அவ்வாறு மக்களுடைய உதவியைக் கொண்டு ஆசிரியர்களும் இப்பொழுது சீருடை அணிந்துகொண்டு வருகிறார்கள். எல்லா ஆசிரியர்களும் குறிப்பிட்ட ஒரு சீருடையை அணிய ஏற்பாடு செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

**திரு. சி. பொன்னுசாமி :** பள்ளி மாணவர்களுக்கு அந்த யூனிபாரம் உடையில் இந்திய யூனியன் கொடியின் சின்னத்தை குத்துவதற்கு ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சின்னத்தை உடையிலே குத்திக்கொண்டால்மட்டும் போதாது. அவரவர்கள் மனதிலும் இருக்கவேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் நமது நாட்டினுடைய தேசீய கீதம் நல்ல முறையில் பாடப்படவேண்டும். அதை நன்றாகச் சொல்லிக்கொடுக்கவேண்டும். நாட்டைப்பற்றி பள்ளிப் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். அதெல்லாம் இப்பொழுது கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சீருடை வழங்கும் திட்டத்திற்கு அரசாங்கம் ஏதாவது பணம் செலவழிக்கிறதா ? அப்படியில்லை என்றால், அரசாங்கம் பணம் செலவு செய்து பள்ளிக்கூடம் போகும் எல்லாப் பிள்ளைகளும் ஓரேமாதிரியான உடை அணிவதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பே விடை அளித்தேன். இப்பொழுது அரசாங்கம் ஒன்றும் உதவி அளிப்பதற்கில்லை. அரசாங்க உதவி இல்லாமல் இதை எவ்வளவு தூரம் பரவச் செய்யவேண்டுமோ அவ்வாறு பரவச் செய்யவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

*Sri Renganathar temple, Srirangam*

* 144. Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon the Minister for Finance be pleased to state—

(a) the total annual income for 1961–62 of Sri Renganathar temple, Srirangam; and

(b) the total expenditure for the year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Rs. 5,68,344 during Fasli 1371 i.e., from 1st July 1961 to 30th June 1962.

**(b) Rs. 4,50,913 during Fasli 1371 i.e., from 1st July 1961 to 30th June 1962.**



7th March 1963]

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** திருவரங்கம் கோவிலின் வருமானத்தைக் கொண்டு மருத்துவ மனை, கல்விச் சாலை ஏற்படுத்துவது போன்ற பொதுநலப் பணிகள் எவையேனும் நடைபெறுகின்றனவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திருவரங்கம் கோவிலைப் பொறுத்தமட்டில், வரவுக்கு மேலே செலவு ஆகிறது, ஆனால், வேறு உப கோவில்கள், அதாவது அதைச் சார்ந்த கோவில்களின் வருமானத்தைக் கொண்டு செலவு சரிகட்டப்படுகிறது. இதிலே யும் சில தருமங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஆலயம் பெரிய ஆலயம். அதனுடைய நிர்வாகத்திற்கே போதிய வருமானம் இல்லை. வருவாயை அதிகப்படுத்துவதில் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** திருவரங்கம் கோவிலின் வருமானத்திலிருந்து இந்த ஆண்டில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பது, எலக்டிரிக் விளக்குகள் போடுவது, இன்னும் சத்திரங்களை சீரமைப்பது போன்ற இனங்களுக்கு எவ்வளவு செலவு ஆகியிருக்கும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை. இதெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு. மு. கருணாநிதி :** தீ விபத்து இந்த ஆலயத்தில் ஏற்பட்ட பிறகு வருமானம் ஏதாவது குறைந்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வருமானம் இப்பொழுது அதிகரித்திருக்கிறது.

**திரு. கே. மூக்கையா தேவர் :** ஸ்ரீரங்கம் கோவில் வருமானத்திலிருந்து கோவில் சீர்திருத்த வேலை ஏதாவது நடைபெறுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கோவில் கட்டிடம் பழுது பார்க்கும் வேலை நடந்துகொண்டு வருகிறது. ஆனால், கோவில் வருமானத்தில் மிச்சம் ஆகிறது என்று சொல்லுவதற்கில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கோவில்களிலுமிருந்துப் வருகிற வருமானத்தில் செலவு போக மிச்சம் எவ்வளவு உண்டோ அதைக் கொண்டு கல்விப் பணிக்கு உதவி செய்ய முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எல்லாக் கோவில்களையும் சேர்த்துப் பார்த்தால், மிச்சம் இருக்காது, டெபிஸிட்தான் இருக்கும். சில ஆலயங்களின் சார்பாக புதிய பள்ளிகள்கூட அமைக்கப்பட்டு, நடந்துக்கொண்டு வருகின்றன.

**திரு. முனு ஆதி :** ஸ்ரீரங்கம் கோவிலில் பூஜாரி வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறதா ? அல்லது அவர்கள் காணிக்கையாகச் சம்பளம் பெறுகிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்கள் இரண்டும் பெறுகிறார்கள்.

[7th March 1963

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஸ்ரீரங்கம் கோவிலில் 22 காரட் தங்கம் எவ்வளவு இருக்கிறது? கடவுள் 22 காரட் தங்கம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறாரா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸ்ரீரங்கம் கோவிலிலிருந்து இப்பு காலத்தில் பல கோமேதகங்கள், வைரங்கள் காணாமல் போனதாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது அங்கிருக்கிற மொத்த நகைகள், வைரங்கள், வைடூரியங்கள் இவைகளுக்கான மதிப்பீட்டை எடுப்புதற்கு ஏதாவது முயற்சி செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்போதைக்கப்போது இவைகள் மதிப்பிடப்படுகின்றன. இவைகளைப்பற்றிய ஜாபிதா இருக்கிறது. கனம் அங்கத்தினரை நான் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், அவர் ஒருமுறை ஆலயத்திற்கு வந்தால் நான்கூட வந்து எல்லாவற்றையும் அவருக்குக் காட்டுகிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தமிழகத்தில் இருக்கிற பல ரெங்கநாதர்கள் வருகிற வருமானத்தைக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது இந்த ரங்கநாதருக்கு மட்டும் பணம் இல்லை என்று பற்றாக்குறை ஏற்படுகிறது. அவரைக் கொஞ்சம் சிக்கனமாக வாழ விடக் கூடாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினருக்கு நான் சொல்ல விரும்புவது, எல்லாக் கிருஷ்ணமூர்த்திகளும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை என்பதுதான்.

**திரு. இரா. நாராயணன் :** திட்டக்குடியில் கோவில் தேர் ஏலம் போடுவதற்கு வந்திருக்கிறது. வருமானம் இல்லாத காரணத்தினலா இப்படி வந்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சில தேர்கள் பழுது பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறது. பழுது பார்க்க முடியவில்லை என்றால், அதில் நல்ல வேலைப்பாடுள்ள சித்திரங்கள் இருக்கின்றன. மரங்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் ஏலம் போடப்பட்டு அந்தத் தேர்கை ஆலயத்தின் நிதியோடு சேர்க்கப்பட்டு வருகிறது.

**திரு. மு. கருணாநிதி :** சென்ற முறை இந்தத் தேர் ஏலம் போடுவதுபற்றிய விவரத்தை அமைச்சர் அவர்களுக்கு இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்வதுபற்றி எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. அற நிலைய இலாகா அதிகாரிகளோடு இதுபற்றிப் பேசியிருக்கிறேன். இதுபற்றி நன்றாகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



7th March 1963]

**திரு. சி. பொன்னுசாமி :** கோவில்களில் அதிகப்படியாக இருக்கும் பணத்திலிருந்து ஏழை மாணவ மாணவிகளுக்கு இலவச உணவு கொடுப்பதற்கும், ஆடை வழங்குவதற்கும் உதவி செய்வதற்குச் சர்க்காருக்கு எண்ணம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது ஓரளவுக்கு இப்பொழுது கவனிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ம. கமலநாதன் :** தமிழ் நாட்டில் எந்தக் கடவுளுக்கு அதிக வருமானம் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பழனியில் வீற்றிருக்கிற முருகப் பெருமானுக்குத்தான் அதிக வருமானம்.

**திரு. மா. இராசாங்கம் :** மதுரை மீனாட்சி கோவில் செப்பனிடும் வேலை யாருடைய செலவில் நடக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்தத் தேவஸ்தானம் ஒரு சிறிய அளவிற்கு உதவி அளித்திருக்கிறது. பொதுமக்கள் தாராளமாக நன்கொடை அளித்திருக்கிறார்கள். வேறு சில தேவஸ்தானங்களும் நன்கொடை அளித்திருக்கின்றன. அதையெல்லாம் வைத்துக்கொண்டு சிறந்த முறையில் அந்தத் திருப்பணி நடந்து கொண்டு வருகிறது.

**திரு. எம். டி. தியாகராஜப் பிள்ளை :** தமிழ் நாட்டில் ஸ்ரீரங்கம் மிக பிரபல க்ஷேத்திரமாக இருப்பதால், அதற்கு சர்க்காரிலிருந்து அதிகமான கான்டிரிபியூஷன் தொகை கொடுத்து, பக்தர்களுக்கு சௌகரியம் செய்துகொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யாத்திரிகர்களுக்கு பல சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. வருவாயை அதிகப்படுத்துவதிலே இப்பொழுது தர்மகர்த்தாக்கள் முழு கவனம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** தமிழ் நாட்டு ஆலயங்களிலே நகைகள் அன்றி, தங்கக்கட்டிகள் இருக்கின்றனவா ? அவைகள் இந்தக் கட்டுப்பாட்டு சட்டத்திற்கு உட்பட்டு சர்க்காருக்கு அளிக்கப்பட்டுவிட்டனவா என்று அறியவிரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தங்களிடம் இருப்பதையெல்லாம் பற்றி அவர்கள் டிக்ளரேஷன் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் அல்லாமல் தனியாகத் தங்கம் இருப்பதற்கெல்லாம் அநேகமாக கோல்டு பாண்டு வாங்கியிருக்கிறார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** மதுரை மீனாட்சி அம்மன் திருப்பணி வேலை எப்பொழுது முடியும் ? எப்பொழுது கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்று அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. ஜூன் மாதம் 28-ம் தேதி கும்பாபிஷேகம்,

[7th March 1963

**திரு. எம். தண்டாயுதபாணி :** இந்து மத ஆலயங்களுக்கு இருப்பதுபோன்ற கட்டுப்பாடுகள் கிருஸ்தவ, இஸ்லாமிய மதக் கோவில்களுக்கு உண்டா ? அதைப் பரிசீலிக்கும் பொறுப்பு யாரிடத்தில் இருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது அதற்கு சட்டம் இருக்கிறது, வரம்பு இருக்கிறது, கட்டுப்பாடு இருக்கிறது. முஸ்லீம் ஸ்தாபனங்களைப் பொறுத்தவரையில் முஸ்லீம் வாக்ஃப் போர்டு கவனித்துக் கொண்டுவருகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** வெள்ளைக்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடைபெற்ற சண்டையில் பிரெஞ்சுக்காரர்கள் ஸ்ரீரங்கம் கோவிலையும், வெள்ளைக்காரர்கள் திருச்சிக் கோவிலையும் உபயோகித்தார்கள் என்று தெரிகிறது. இப்பொழுது இருக்கிற நெருக்கடியில் ராணுவத்திற்காக ஸ்ரீரங்கம் கோவிலைப் பயன்படுத்தும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பழைய ராணுவம் மாதிரி இல்லை, இப்பொழுதிருக்கிற ராணுவம். ஆகவே ஸ்ரீரங்கம் கோவில் தேவையில்லை.

**திரு. சா. கணேசன் :** ஸ்ரீரங்கம் கோவிலிலே முறைப்படி 5-மணிக்கு நடக்கவேண்டிய திருப்பள்ளி எழுச்சி 7-மணிக்கு மேல் தான் நடக்கிறது என்பது கனம் அமைச்சர் அல்லது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கெல்லாம் அந்தந்த ஆலயங்களிலே வழக்கம் இருக்கிறது. அந்த வழக்கப்படி நடைபெற்று வருகிறது. இதிலே எல்லாம் புகுந்து மாற்றுவது என்றால், கஷ்டமாக இருக்கும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தமிழ்நாட்டிலே உள்ள சில கோவில்களில் தங்க ஓடுகளும், கூரைகளும் இருக்கின்றன. அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கத்துக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றி நடவடிக்கை ஒன்றும் எடுக்க வேண்டியதில்லை. தங்கக் கட்டுப்பாடு உத்தரவுப்படிகூட நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை.

**திரு. அ. துரைசாமி :** ஸ்ரீரங்கம் கோவிலிலே ஹரிஜன தர்மகர்த்தாக்கள் போடப்பட்டிருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்கு ஞாபகமில்லை. போட்டிருப்பதாகத்தான் நினைக்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஸ்ரீரங்கம் கோவிலிலே பக்தர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறதா, அல்லது குறைந்து வருகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்னமேயே சொன்னேன், அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது.



7th March 1963]

**திரு. எஸ். சின்னய்யன் :** ஸ்ரீரங்கம் கோவிலிலே ஹரிஜனங்களுக்கு என்று சில மடங்கள் இருக்கின்றன. அவற்றைப் பழுது பார்ப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் நடவடிக்கை எடுத்துக்கொண்டு, விடையும் அளிக்கலாம்.

**திரு. காஞ்சி மணிமொழியார் :** மக்கள் சமுதாயத்தில் ஒரு குடும்பத்திற்கு ரூ. 3,000-க்கு மேல் வருமானம் இருந்தால் வருமான வரி விதிக்கப்படுகிறது. கடவுள் சமுதாயத்தில் ஒரு கோயிலுக்கு குறிப்பிட்ட அளவு வருமானத்திற்குமேல் உள்ளதில் சிறு சதவிகிதம் பொதுக் காரியத்திற்குச் செலவழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ரூ. 3,000-க்கு மேல் வருமான வரி போட்டால், அந்த வருமானம் போதும் என்று அர்த்தம் இல்லை. ரொம்பக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வரி விதிக்கக் கூடாது என்பதுதான் வருமான வரியின் அடிப்படை. ஆகவே கனம் அங்கத்தினரின் கேள்வி எனக்குப் புரியவில்லை.

**திரு. மு. பொ. வடிவேல் :** பழனியிலுள்ள முருகன் சிலையை நவபாஷாணத்தை முறித்து செய்திருப்பதாலும் வைத்தியத்திற்கு உதவுகிறது என்பதாலும் அதனுடைய பாதத்தையும், முதுகையும் துளைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** எப்பொழுதோ நடைபெற்றதாகச் சொல்வதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். இன்று இருப்பதைப் பாதுகாப்பதுதான் நம்முடைய பொறுப்பு.

**திரு. ஏ. சிதம்பரநாத நாடார் :** சாதாரணமாக, கடவுள் இல்லை என்று சொல்லுகிறவர்கள், தேர்தல் சமயங்களிலே கோவில்களுக்கு அதிகமாகப் போவது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆஸ்திகர்கள் ஜனநாயகத்திற்குக் கட்டுப் பட்டவர்கள். அதன் காரணமாக யாரும் இப்பொழுது கடவுள் இல்லை என்று சொல்லவில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** நான் சென்ற ஆண்டு இம் மன்றத்தில் கேள்வி கேட்டபொழுது திருவேந்திபுரத்தில் சர்க்கார் கொடுத்த பணத்தைக்கொண்டு, 2, 3 நாட்களுக்குத்தான் திருப்பணி வேலை நடைபெற்றது, பிறகு நின்றுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அந்த வேலையைத் தொடர்ந்து நடத்துவதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் விவரமாக எழுதி அனுப்பினால், அதை நான் கவனிக்கிறேன்.

[7th March 1963

**திரு. து. ப. அழகமுத்து :** ரயில்வேக்கள் வாங்கும் பில்க்ரிம் வரியிலிருந்து எவ்வளவு வருமானம் ஸ்ரீரங்கம் கோவிலுக்குக் கிடைக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடம் விவரம் இல்லை. பில்கிரிம் டாக்ஸை ஆண்டு பூராவும் சில இடங்களிலே விதிக்கிறார்கள். சில இடங்களிலே அவ்வாறு விதிப்பதில்லை. சுகாதாரச் செலவு ஆகிறது என்று, ஆண்டு பூராவும் விதிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. இவற்றை எல்லாம் கவனித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** சேலம் மாவட்டத்திலே காளிப்பட்டி கந்தசாமி கோவிலுக்கு நிர்வாக அதிகாரியை நியமிப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எப்பொழுது நிர்வாக அதிகாரி நியமிக்கப்படுவார் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது சட்டப்படி கவனிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது என்ன நிலைமை என்பதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. க. ர. முனிரத்தினம் :** தமிழ்நாட்டிலே உள்ள கிராமப் புறங்களிலே இருக்கும் வருமானமுள்ள பெரிய கோவில்களை மட்டும் எண்டௌமென்ட் போர்டார் எடுத்துக்கொள்கிறார்கள். சிறிய கோவில்கள் நல்ல முறையில் இருந்தும் கவனிக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சிறிய கோவில்கள் கவனிக்கப்படுவதில்லை என்று சொல்லுவது சரியல்ல. அந்தந்த மாவட்டத்தில் ஏரியாக் கமிட்டி இருக்கிறது. அவர்கள் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். குறிப்பிட்ட ஏதாவது ஒரு கோவிலைப்பற்றி அங்கத்தினர் சொன்னால், மேலும் கவனிக்கப்படும்.

**திரு. ம. கமலநாதன் :** திருச்செந்தூர் கோவிலிலே மத்திய அமைச்சர் ஒருவருக்கு அவமதிப்பு ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** அது பழைய கதை. அவமதிப்பு ஒன்றும் ஏற்படவில்லை.

**திரு. கே. மூக்கையா தேவர் :** ஸ்ரீரங்கம் கோவிலுக்கு வெளி மாநிலங்களிலிருந்துகூட பக்தர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கும் வகையில், கோவில் வருமானத்திலிருந்து விடுதிகள் கட்டிக் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யாத்திரிகர்களுக்கு விடுதிகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்தி வருகிறேன். நிர்வாகக் குழு அதிலே கவனம் செலுத்தி வருகிறது.

**திரு. எஸ். முத்துலிங்கம் :** நமது மாநிலத்தில் எந்தெந்தக் கோவில்களிலே ஹரிஜனங்கள் தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் ?



7th March 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி முன்பே விவரங்கள் கொடுத்திருக்கிறேன். மறுபடியும் கேள்வி கேட்டால் விடையளிக்கலாம். சில கோவில்களிலே கோர்ட் ஸ்கீம்படி நடத்தப்பட்டு வருகிறது. அதற்குப் புறம்பாகச் செய்வதற்கு இல்லை. பொதுவாக, ஐந்து தர்மகர்த்தாக்கள் இருக்கும் இடத்திலே, ஒரு ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டு வருகிறார்.

**திரு. எஸ். மணி :** கிராமப் புறங்களிலே கோவில்களுக்கு சொந்தமான நிலங்களிலே ஒருவரே சொந்தக்காரராக இருந்து கொண்டு வருகிறார்கள். அதை மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** தேவஸ்தானம், மற்ற தரும ஸ்தாபனங்களைச் சேர்ந்த நிலங்கள் பயிரிடுவதைப் பற்றி சட்டம் இயற்றப்பட்டு வருகிறது. அந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். இந்தச் சட்டம் சீராக அமுலாக்கப்பட்டு வருகிறதா என்பதை ஒரு தனி அதிகாரி போட்டு, இதையெல்லாம் சரியாகக் கண்காணிக்க வேண்டுமென்ற யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** தமிழ் நாட்டுக் கோவில்களிலே காலவழிபாட்டின்போது வேத ஆகமங்களிலிருந்து உபசாரம் சொல்லப்படுகிறது. அதற்குப் பிறகு திராவிட வேதம் என்று சொல்லி, தேவாரம், திருவாய்மொழி பாடப்படுகிறது. "திராவிட வேதம்" என்று அழைப்பதற்கு பதிலாக, "தமிழ் வேதம்" என்று அழைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** "திராவிடம்" என்பது நல்ல பெயர். நம்முடைய தேசிய கீதத்தில்கூட இருக்கிறது. அதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. மு. கருணாநிதி :** வேறு கேள்விகளில் குறிப்பிட்ட சில ஊர்களுடைய பிரச்னையைப் பற்றிக் கேட்டால், தனிக் கேள்வி போட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் ஸ்ரீரங்கத்தைப் பற்றிய இந்தக் கேள்வியில் தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஊர்களிலுமுள்ள கோயில்களைப் பற்றி அமைச்சர் பதில் சொல்லுவதிலிருந்து, அரசாங்கத் துறையைவிட ஆத்மார்த்தத் துறையில் அவருக்கு அக்கறை இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதாகாதா ? (சிரிப்பு.)

**கனம் சபாநாயகர் :** இது மெம்பர்களின் கடவுள் பக்தியைத் தான் காட்டுகிறது. (சிரிப்பு.)

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கத் துறையிலும்கூட, குறிப்பிட்ட கேள்விகளுக்குப் புறம்பாக உப கேள்விகள் கேட்கப்படுகின்றன. அதற்கும் நான் விடை அளித்துக்கொண்டுதான் வருகிறேன்.

[7th March 1963

**திரு. கே. ஏ. மதியழகன் :** தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய கோயில்களிலிருந்து வரக்கூடிய வருமானம் அரசாங்கத்தின் வருமானத்தில் எத்தனை சத விகிதம் என்பதைச் சொல்ல முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்கு என்னிடம் போதிய விவரம் இல்லை.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** கனம் தலைவர் அவர்களே, திராவிடம் என்ற சொல், பிரிவினை உணர்ச்சியைக் குறிக்கிற சொல்லாக இருப்பதால், தமிழ் வேதம் என்று அழைப்பது நன்றாக இருக்கும் என்று சர்க்கார் உணரவில்லையா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிரிவினைக் கொள்கையை உணர்ச்சியாகக் கொள்வது அவரவர்களுடைய மனப்பான்மையைப் பொறுத்து இருக்கிறது. திராவிடம் என்ற சொல்லே அழகாக இருக்கிறது. ஆனால் கனம் அங்கத்தினர் அதை மாற்றிச் சொல்வதில் ஆட்சேபனை இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தமிழகத்தில் இருக்கின்ற ஆலயங்களில் தர்ம கர்த்தாக்களை நியமிக்கும்போது கிராமங்களில் அதிகப்படியான சச்சரவுகள் ஏற்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் சபாநாயகர் :** அதற்காக தேர்தல் வேண்டாம் என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பஞ்சாயத்துத் தேர்தல்களின் போதுகூட சச்சரவுகள் ஏற்படுகின்றன. பொது ஸ்தாபனங்களுக்குத் தேர்தல் நடக்கும்போதெல்லாம் சச்சரவுகள் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கும். அப்படிப்பட்ட சச்சரவுகள் ஏற்படாமல் இருக்க, வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும், எடுத்துக்கொள்ளப்பட்டும் வருகின்றன.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், மதுரை மாவட்டத்திலுள்ள தேவதானப்பட்டி என்ற கிராமத்திலுள்ள காமாட்சி அம்மன் கோவிலின் கதவு திறக்கப்படாமலேயே மூடி வைக்கப்பட்டு நெய்வேத்யம், பூஜை முதலியவைகள் நடைபெறுகின்றன. அதற்குக் காரணம் என்ன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? கதவைத் திறந்தால் மண்டை உடைந்து போகும் என்றும் சொல்லுகிறார்கள். அதுவும் தெரியுமா ? அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய அரசாங்கம் பரிசிலனை செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினருக்கு இதைப்பற்றி ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். அதைப் பற்றி எனக்குக் குறிப்பாக எழுதி அனுப்பினால் அதன் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்றுதான் சொல்லலாம்.



7th March 1963]

### தியாகிகளுக்கு நினைவுச் சின்னம்

* *145 கேள்வி.*—**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சுதந்திரப் போரில் ஈடுபட்டு தியாகம் செய்த தியாகிகள் யார் யாருக்கு அரசாங்கம் நினைவுச் சின்னங்கள் எழுப்பியுள்ளது ?

(இ) தியாகி சுப்ரமண்ய சிவா உயிர்நீத்த பாப்பாராப்பட்டியில் அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்ப உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government have erected memorials to the following patriots who took part in the Freedom Struggle :—

1. V. V. S. Iyer—A mandapam at Papanasam near the Kalyanatheertham Water-falls.

2. V. O. Chidambaram Pillai—The house of the patriot at Ottapidaram was purchased and a memorial building designed for use as a spinning hall and library-*cum*-reading room was constructed at the house-site.

3. Tiruppur Kumaran—A memorial has been erected at Tiruppur near the Railway station.

4. Tiru-vi-ka—A bust of his was installed in the Sembiam Colony, Madras.

(b) Yes. There is a proposal to construct in the Board High School, Papparapatti, a prayer hall in the name of Late Sri Subramania Siva. The matter is under examination of the Government in consultation with the Collector of Salem.

**திரு. எம். கரிவேங்கடம் :** அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்படும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி கலெக்டரிடம் இருந்து தகவல் வந்த பிறகு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, கடற்கரையில் நிறுவப்பட்டிருக்கும் காந்தியின் சிலையானது உண்மைத் தோற்றத்திற்குச் சற்றுப் புறம்பானதாகவும், அழகற்றதாகவும் இருக்கிறது என்று பரவலாகக் கருதப்படுகிறது. அந்தக் காரணத்தால் அந்தச் சிலையை அகற்றி விட்டு அதற்குப் பதிலாக உண்மைத் தோற்றத்தை அளிக்கக்கூடிய காந்தியாரின் அழகான சிலையை அங்கு அமைக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தச் சிலை பெரிய கலைஞரால் செய்யப்பட்டது. அது அழகாக இருக்கிறதோ, இல்லையோ அது அவரவர்களுடைய மனப்பான்மையைப் பொறுத்து இருக்கிறது.

[7th March 1963

காந்தியே அழகாக இல்லை என்று சொல்லக்கூடியவர்களும் இருக்கிறார்கள். ஆகவே அது சிலையைப் பொறுத்தது அல்ல. அந்தச் சிலை மாற்றி அமைக்கப்படவேண்டும் என்பதல்ல. சில விவரங்களுக்காக அது அமைக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று சொல்லுவது முறையல்ல. அது காந்தியின் சிலைதான். அதற்குத்தான் கௌரவம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், தேசியப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்குச் சின்னங்கள் வைப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த முறையில் தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று விருதுநகர் சங்கரலிங்க நாடார் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து தன்னுடைய உயிரையே தியாகம் செய்து கொண்டாரே அவருக்கு ஞாபகார்த்தச் சின்னம் ஏதாவது வைக்க அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உண்ணாவிரதம் இருந்து உயிரைத் தியாகம் செய்து கொள்ளுகிறவர்களுக்கெல்லாம் சிலை வைப்பது என்பது முடியாது. இப்பொழுது கனம் அங்கத்தினர் குறிப்பிட்டபடி எந்த விதமான யோசனையும் இல்லை.

**திரு. சா. கணேசன் :** பாப்பாரப்பட்டியிலுள்ள ஹைஸ்கூலில் தமிழ் நாட்டில் தேசியக் கனலை உண்டு பண்ணிய சுப்பிரமணிய சிவாவிற்கு ஒரு பிரார்த்தனை ஹால் அமைப்பதைவிட அவருக்குத் தனியாக ஒரு சிறப்பான ஒரு ஞாபகச் சின்னத்தை பாப்பாரப் பட்டியிலேயே ஏற்படுத்தல் தகும் என்று கருதி அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரு நினைவுச் சின்னத்தின் சிறப்பு அந்த ஸ்தலத்தின் பள்ளியிலேயே அமைப்பதுதான் உகந்தது என்பதைக் கனம் அங்கத்தினர் உணருவார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் தலைவர் அவர்களே, தேச பக்தர் எஸ். எஸ். விசுவநாத தாஸ் அவர்களுடைய படத்தை அகில இந்திய தேச பக்தர்களுடைய படங்களுக்கு மத்தியில் பார்க்கிறோம். அன்னாருக்குத் தகுந்த ஞாபகச் சின்னம் எழுப்ப சர்க்கார் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நாம் இப்பொழுது குறிப்பாக அரும்பெரும் தேச பக்தர்களுடையவும், தியாகிகளுடையவும் படங்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டின் பெருமைப்படக்கூடியவர்களுடைய படங்களையும் வைத்திருக்கிறோம். அந்தந்த நாட்டின் தலைவர்களைப்பற்றி அந்தந்த ஸ்தலங்களில் ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டால், அதற்குமேல் கவனம் செலுத்தலாம்.

**திரு. க. கோமதி சங்கர தீட்சதர் :** கனம் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கப்பலோட்டிய தமிழருடன் சேர்ந்து தேச விடுதலைக்குப் பாடுபட்ட முதன்மை தேச பக்தராகத் தோன்றிய தலைவர் சுப்ரமணிய சிவா அவர்களுக்கு அவருடைய பிறந்த ஊராகிய வத்தலகுண்டிலேயே ஒரு ஞாபகார்த்த சின்னத்தை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



7th March 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது பாப்பாரப்பட்டியில் வைக்கப்படுகிறது. அங்கு வைக்கப்பட்ட பின் அவர் பிறந்த இடத்தில் வைப்பதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. மு. கருணாநிதி :** தேச பக்தன் கட்டபொம்மனுக்கு ஞாபகார்த்த சின்னம் ஒன்றை அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நண்பர் சிவாஜி கணேசன் அவர்கள் சிலை வைக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார். அதற்கு அரசாங்கம் ஒத்துழைப்புத் தர முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பள்ளிக்கூடங்களில் பாலர்களும், மகளிர்களும் கட்டபொம்மன் நாடகத்தை நடித்து வருகிறார்கள். இப்படிப் பல இடங்களில் நடித்து வருகிறார்கள். இரவு நேரங்களில் நாடகம் நடிக்கிறார்கள். இதுவே ஒரு ஞாபகச் சின்னமாகக் கருதலாம். இதை விட வேறு வேண்டியதில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** விருதுநகர் சங்கரலிங்க நாடாருடைய தியாகத்தைச் சர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லையா ? தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று தன்னுடைய உயிரையே தியாகம் செய்தவருடைய தியாகத்தைச் சர்க்கார் உணரவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பே நான் கூறினேன். உண்ணாவிரதம் இருப்பதை அரசாங்கம் பாராட்ட முடியாது என்று.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஸார், சென்னை நகரத்திலுள்ள வெள்ளையர்களுடைய சிலைகளை அகற்றி விட்டு அந்த இடங்களில் தமிழ் நாட்டுத் தியாகிகளுடைய சிலைகளை வைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆட்சேபிக்கக்கூடிய வெள்ளையர்களுடைய சிலைகள் அகற்றப்பட்டு விட்டன. எல்லாச் சிலைகளையும் அகற்ற வேண்டும் என்பது அல்ல. ரஷ்யாவில்கூட பல சிலைகளை அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் மக்கள் வந்து பார்க்க வேண்டும் என்பதற்காக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நகராட்சி மன்றங்களில் தியாகிகளின் சிலைகளை நிறுவ வேண்டுமென்றால் அரசாங்கத்தினுடைய அனுமதி பெற வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அனுமதி பெற்றுத்தான் அதைச் செய்ய வேண்டும்.

**திரு. எஸ். முருகையன் :** தேச விடுதலைக்கு என்று போராடிய போது காலஞ்சென்ற திருவண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை அவர்களுக்கு நினைவுச் சின்னம் வைக்க வேண்டும் என்று சொல்லும் வர்களுக்கு நினைவுச் சின்னம் ஒன்றை ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[7th March 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். கனம் அங்கத்தினர் அதற்கு வேண்டிய அக்கறை எடுத்துக்கொண்டால் அதற்கு எந்த அளவிலும் உதவி அளிக்க தயாராக இருக்கிறேன்.

திரு கே. மூக்கையா தேவர்: பொதுவாக தேச விடுதலைக்குப் பாடுபட்ட தியாகிகளுக்கு கப்பலோட்டிய தமிழன் போன்றவர்களுக்கு சென்னை நகரத்தில் ஞாபகச் சின்னத்தை நிறுவ ஏற்பாடு செய்வதைவிட, அவரவர்களுடைய ஊர்களிலேயே ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா? அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சென்னை நகரத்தில் மட்டும் வைக்க வேண்டும் என்பதல்ல. அந்தந்த ஊர்களில் தனிப்பட்ட முறையில் நிறுவ நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: கனம் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பழுத்த அரசியல் வாதியும், என் ஊரைச் சார்ந்தவருமாகிய ஈ. வே. ராமசாமிப் பெரியாருக்கு உருவச் சின்னம் ஏற்படுத்தக்கூடிய எண்ணம் சர்க்காருக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அதற்கு அக்கறை எடுத்துக்கொண்டால் மகிழ்ச்சி அடையலாம். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் அக்கறை எடுத்துக்கொண்டால் அதன் பிறகு என்ன செய்யலாம் என்பதைப் பார்க்கலாம்.

8 00 a.m. திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: தேச விடுதலைக்காகப் போராடிச் சிறை சென்ற தியாகிகளுக்கு அந்தந்த ஜில்லாத் தலை நகரில் நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதற்கு அதிகச் செலவு ஏற்படுமென்றால், பெயர்களையாவது பொறித்து வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு ஒன்றும் அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

திரு. எஸ். முருகையன்: அண்ணாமலைப் பிள்ளை அவர்களுடைய உருவச் சிலையை அமைக்க வேண்டும் என்று திருவண்ணாமலை நகர சபையில் நாங்கள் தீர்மானம் போட்டு அனுப்பி ஒரு வருஷம் ஆகியும் சர்க்காரிலிருந்து இதுவரை எந்தவிதமான தகவலும் கிடையாது. ஆகவே, உடனடியாக அந்தச் சிலையை நிறுவ சர்க்கார் அனுமதி கொடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நகரசபை அரசாங்கத்திற்கு உத்தரவிட முடியாது. (திரு. எஸ். முருகையன்: தீர்மானம் . . .) தீர்மானம் போட்டால் மாத்திரம் போதாது. ஸ்தலங்களில் உள்ளவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் அதற்குத் துணைக்கே நிற்கும்.



7th March 1963]

திரு. ஜே. மாதா கவுடர்: "கட்டபொம்மன் நாட்டுக்காகப் பாடுபடவில்லை, புலித்தேவன் பாடுபட்டார்" என்று சொல்லப்படுகிறபடியால், கட்டபொம்மன் பாடுபட்டாரா, புலித்தேவன் பாடுபட்டாரா என்று சொல்ல முடியுமா?

கனம். திரு. எம். பக்தவத்சலம்: இந்தச் சர்ச்சையிலே நாம் இறங்கவேண்டியதில்லை.

திரு. தா. சின்னசாமி: பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவா கவனிப்பாரற்று இறந்தார் என்ற செய்தி அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த அரசாங்கம் அதற்குப் பொறுப்பு இல்லை.

*Water-supply (Chinnalapatti)*

* 146. Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) what steps have been taken by the Government to supply drinking water to Chinnalapatti and other places through the "Kamaraj Sagar Scheme", Dindigul, Madurai district; and

(b) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Administrative approval for a scheme costing of Rs. 10,35,200 to instal and Rs. 35,000 per annum to maintain has been accorded in September 1962.

(b) The detailed plans and estimates are under preparation by the Sanitary Engineer.

திரு. கே. மூக்கையா தேவர்: இந்தத் திட்டம் கடந்த ஐந்தாறு வருஷங்களாகப் பரிசீலனையில் இருந்துவருகிறது. இந்த வேலையைத் துரிதப்படுத்தி நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்து நடத்துவதற்குத்தான் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

பெரிய மருத்துவ மனை (செங்கற்பட்டு)

* 147 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் திறக்கப்பெற்ற செங்கற்பட்டு பெரிய மருத்துவ விடுதிக்கு 1962-63-க்காக ஒதுக்கப்பெற்ற, மருந்துகள் வாங்குவதற்காக தொகை எவ்வளவு?

[7th March 1963

(இ) அக்டோபர் மாதம் முடிய அம் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றவர்கள் எத்தனை பேர்?

(உ) அம் மருத்துவ மனையை மேலும் விரிவுபடுத்தும் உத்தேசமுண்டா?

(எ) ஆம் எனில், எவ்வாறு? திட்டமென்ன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** (அ) ரூபாய் ஒரு லட்சம்.

(இ) இன்-பேஷண்ட்—9,069

அவுட்-பேஷண்ட்—1,32,780.

(உ), (எ) ஜில்லா பொது சுகாதார ஆய்வுக்கூடம் கட்டும் வேலை நடந்து வருகிறது.

**திரு. முனு ஆதி:** தலைவர் அவர்களே, ரூரல் டிஸ்பென்ஸரிகளுக்கெல்லாம் மருந்து கிடைக்காமல் பெருவாரியான மக்கள் அவதிப்படுவதால், டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசர் மூலமாக மருந்துகளை வாங்கி வழங்கும் உரிமையைக் கொடுத்திருந்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்யும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அம்மாதிரி உத்தேசம் கிடையாது. மேனஜ்மெண்ட் சுமுகமாக நடக்காது என்பதுதான் அதற்குக் காரணம்.

**திரு. அ. ராகவ ரெட்டி:** செங்கற்பட்டு ஜில்லாவில் அனேக ரூரல் டிஸ்பென்சரிகள் மருந்துகள் இல்லாமல் மூடப்பட்டிருக்கின்றன. உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுத்து, மருந்து சப்ளை செய்யப்படுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ரூரல் டிஸ்பென்ஸரிகளைப் பொறுத்தவரையில், 'மருந்து இல்லை' என்று எங்கிருந்து எல்லாம் தகவல் வந்ததோ அங்கெல்லாம் மருந்துகள் சப்ளை செய்யப்பட உத்தரவிட்டிருக்கிறோம். மூலக் கேள்வி செங்கற்பட்டு டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியைப் பற்றியது என்றாலும், கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லிவிட்டேன்.

**திரு. கி. இரா. சம்பந்தம்:** ஆஸ்பத்திரிகளில் அடிக்கடி மருந்து இல்லாமல் போகும் காலத்தில், டாக்டர்கள் மருந்து எழுதிக் கொடுத்து வெளியிலே வாங்கிக்கொள்ளும்படிச் சொல்லுகிறார்கள். ஆகவே, சர்க்காரே மருந்து உற்பத்தி செய்வதற்கு முன்வருமா? அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சில 'எக்ஸ்பென்ஸிவ்' மருந்துகள் ஆஸ்பத்திரிகளில் இருப்பதில்லை. எந்த மருந்து ஆஸ்பத்திரியில் கொடுக்கப்படவில்லை என்று கனம் அங்கத்தினர் குறிப்பாகச் சொன்னால், அதுபற்றிக் கவனிக்கப்படும்.



7th March 1963]

**அரசாங்க மருத்துவ மனைகளில் அறுவை நிலையங்கள் (செங்கற்பட்டு மாவட்டம்)**

*148 கேள்வி.—**திரு. முனு ஆதி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள பெரிய அரசாங்க மருத்துவ மனைகளிலுள்ள அறுவை நிலையங்களில் (Operation Theatres) குளிர்சாதன வசதிகள் அமைக்கப் பெற்றுள்ளனவா?

(இ) எந்தெந்த இடங்களில்?

(உ) இதர மாவட்டங்களில் இது போன்று அமைக்கப்பட்டுள்ளனவா?

(எ) இல்லையெனில், அவ்வாறு குளிர்சாதன வசதிகள் அமைக்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM:

(a) No.

(b) Does not arise.

(c) No.

(d) Yes.

**பஞ்சாயத்து அமைத்தல் (அகரம் சிகூர்)**

*149 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி (திரு. இரா. நாராயணன் சார்பாக):** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டம் அகரம் சிகூர் கிராமத்தைத் தனி பஞ்சாயத்தாக ஏற்படுத்த உத்தேசமுண்டா?

(இ) அப்படியாயின், அது எப்போது அமுலுக்கு வரும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The question whether the existing panchayats should be bifurcated or amalgamated or retained as they are has to be considered as a general issue and a decision taken.

A decision on the question of constituting a separate panchayat for Agaramsikoor village will be considered at the appropriate time after the above general question is decided.

**திரு. கரு. சீமைச்சாமி:** இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்துக்களில், ஒரு பஞ்சாயத்துக்கு நாலைந்து ஊர்கள் இருக்கின்றன. அந்த ஊர்கள் ஒன்றுக்கொன்று ஏழு மைல் தொலைவிலும் இருக்கின்றன. ஆகவே, இனி வரப்போகிற பஞ்சாயத்துத் தேர்தலுக்குள்ளாக பஞ்சாயத்துக்களையெல்லாம் மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்துமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலில் இது பற்றிய கொள்கை நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒரு பஞ்சாயத்து இயங்கிக் கொண்டிருக்கும்போது அதை நடுவில் பிரிப்பதாக உத்தேசம் இல்லை. பொதுத் தேர்தலுக்கு முன்பு இதெல்லாம் கவனிக்கப் படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : அடுத்து வருகிற பஞ்சாயத்துத் தேர் தலுக்கு முன்பாகவே பஞ்சாயத்து இல்லாத கிராமங்களுக்குப் பஞ்சாயத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது பஞ்சாயத்துக் கள் இருக்கின்றன. புதிதாக பஞ்சாயத்து அமைக்கப்படவேண்டு மென்றால், அது கவனிக்கப்படும்.

திரு. கி. இரா. சம்பந்தம் : சில பஞ்சாயத்துக்கள் பெரிதாக இருக்கின்றன. அங்கு அவர்களுக்குள்ளாகவே பூசல்கள் ஏற்பட்டு பஞ்சாயத்தே நடக்க முடியாத நிலைமை இருக்கிறது. அப்படிப் பட்ட பஞ்சாயத்துக்களையெல்லாம் பஞ்சாயத்து போர்டு தீர்மா னம் போட்டனுப்பினால்தான் மாற்ற முடியுமா ? அல்லது பொது மக்கள் மகசர் கொடுத்தால், அதை வைத்துக்கொண்டு, மாற்று வதற்குச் சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றியெல்லாம் கொள்கை முதலில் நிர்ணயிக்கப்படவேண்டும். அது இப்பொழுது பரிசீலனை யில் இருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : பஞ்சாயத்துத் தேர்தல் எப்பொழுது நடைபெறும் என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்துத் தேர்தல், நெருக்கடி நிலையையொட்டி மற்ற தேர்தல்களைப் போல, ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். எப்பொழுது நடைபெறுவது என்ற பிரச்னை இன்னும் எழவில்லை.

திரு. ம. கமலநாதன் : உபதேர்தல் நடைபெற தேர்தல் கமிஷன் அனுமதித்திருக்கும்போது, பஞ்சாயத்துத் தேர்தல் நடத்து வதற்கு நெருக்கடி நிலைமை காரணமாக இருக்க வேண்டுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி அரசாங்கம் பரி சீலனை செய்யவேண்டும்.

திரு. க. ர. முனிரத்தினம் : தனிப் பஞ்சாயத்தாக இயங்கக் கூடிய சக்தி இருந்தும், இரண்டு கிராமங்களைச் சேர்த்து ஒரே பஞ்சாயத்தாக அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பஞ் சாயத்தைத் தனித்தனியாய்ப் பிரித்து அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று நான் முன்பே சொன்னேன்.



### *Potatoe crops*

* 150. *Q.*—Sri M. S. SELVARAJAN (on behalf of Sri V. SANKARAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether a fungus disease by name the 'late blight' has recently affected the potatoe crops in the Nilgiris district; and

(*b*) if so, the steps taken to eradicate the same?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) As soon as the incidence of the disease was noticed hand bills were prepared about the symptoms and control measures that have to be adopted and distributed extensively and slides were put up in Cinema Theatres to educate ryots to take up control measures. Fungicides were supplied at 50 per cent concessional rate and sprayers were also distributed at subsidised rates. Special staff was drawn from the plains to assist the spraying campaign. Power sprayers were made available at different centres for large scale spraying operations.

(அ) ஆம்.

(இ) இந்த நோய் ஏற்பட்டுள்ளது தெரிந்ததும், இந்த நோயின் அறிகுறிகள் யாவை, இந்த நோயைக் கட்டுப்படுத்து வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பவற்றை விளக்கிக்கூறும் துண்டுப் பிரசுரங்கள் தயாரித்துப் பரவலாக விநியோகிக்கப்பட்டன. விவசாயிகள் நோய் தடுப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக, சினிமா தியேட்டர்களில் ஸ்லைடு கள் போட்டுக் காண்பிக்கப்பட்டன. பூச்சிக்கொல்லி மருந்துகள் பாதி விலைக்கு விற்கப்பட்டன. ஸ்ப்ரேயர்களும் சகாய விலைக்கு விநியோகிக்கப்பட்டன. மருந்து தூவும் வேலையில் உதவி செய்வ தற்காக மலையடிவார ஊர்களிலிருந்து விசேஷப் பணியாளர் தருவிக்கப்பட்டனர். பெருவாரியாக மருந்து தூவுவதற்குப் பல இடங்களில் பவர் ஸ்ப்ரேயர்கள் வழங்கப்பட்டன.

திரு. ஜே. மாதா கவுடர் : உருளைக்கிழங்கு பயிருக்கு ஏற்படக் கூடிய நோயைத் தீர்ப்பதற்கு டைசேன் என்கிற மருந்து தேவைப் படுகிறது. அதை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற் கான லைசன்ஸ் பம்பாயிலுள்ள ஒரே ஒரு வியாபாரிக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இறக்குமதி மிகவும் பற்றுக்குறையாக வந்திருக் கும் காரணத்தால், இந்த நோயை அறவே போக்க முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தயவுசெய்து சர்க்காரே டைசேன் மருந்தை இறக்குமதி செய்ய முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த மருந்தை வாங்கி விவசாயிகளுக் குக் கொடுக்க ஏற்கெனவே பிரயத்தனம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு அளவுக்கு அந்த மருந்து கிடைத்திருக்கிறது. இறக்குமதி செய்ய அன்னியச் செலாவணி தேவைப்படுவதால், அதற்கு வகை

[7th March 1963

### *Mitta and Inam villages (Salem district)*

*151 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that Mitta and Inam villages in Salem district have been grouped for purposes of survey; and

(*b*) if so, when the village officers will be appointed for each group?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes.

(*b*) The appointment of separate village officers for group villages formed during settlement has already been made in respect of villages in Omalur and Krishnagiri Taluks. As regards Rasipuram, the matter is under the consideration of the Revenue Divisional Officer, Namakkal, who is empowered to make such appointments. Regarding other taluks, appointments will be made after the cadre strength is refixed and after observing the usual formalities in this regard.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இரண்டு மூன்று சிறிய சிறிய கிராமங்களுக்குத் தனித் தனியாக ஒவ்வொரு கிராம அதிகாரி இருக்கிறார். அந்த கிராமங்களை ஒன்றாக க்ரூப் செய்துவிட்டால் ஒரே அதிகாரியை நியமனம் செய்யும் விஷயமாய் சர்க்கார் எந்த முறையைக் கையாள உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: கிருஷ்ணகிரி, ஓமலூர் தாலுக்காவைப் பொறுத்த வரையில் இப்படி க்ரூப் செய்து அதிகாரிகளை நியமித்திருக்கிறது. ராசிபுரம் தாலுக்காவைப் பொறுத்தவரையில் ஆர்.டி.ஓ. பரிசீலனையில் இருக்கிறது. இப்போதுள்ள ஸ்கீம் பிரகாரம் மற்ற தாலுக்காக்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: மூன்று நான்கு கிராமங்களுக்கு ஒரு கிராம அதிகாரியை நியமிக்கும்போது எந்த முறையைக் கையாளுகிறார்கள் என்று சொல்ல முடியுமா?

MR. SPEAKER: The same question is asked again.

SRI R. S. VEERAPPA CHETTIAR: Since the required point has not been answered, I have repeated the question.

MR. SPEAKER: Next question.

### *Dam at Maddalapallam (Dharmapuri taluk)*

*152 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a dam at Maddalapallam near Donnakuttalahalli village in Dharmapuri taluk; and

(*b*) if so, when?



7th March 1963]

THE HON. SRI P. KAKKAN: (*a*) Yes.

(*b*) The work will be started as soon as the estimates are sanctioned.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1963-64—*cont.*

* திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்று கூறுவது தான் நல்லது என்று கருதுகிறேன். காரணம், எதிர்ப்பதாக ஆரம்பத்தில் சொல்லிவிட்டு ஏழெட்டு குறைபாடுகளை எடுத்துக் காட்டினாலும் அதை ஆளுங்கட்சியினர் எதிர்க்கவே தொடங்குகிறார்கள். ஆரம்பத்தில் ஆதரிப்பதாகச் சொல்லிவிட்டு ஆயிரம் குறைபாடுகளைச் சொன்னாலும் அதை இந்த மன்றத்தில் ஆதரிப்பதாகவே எடுத்துக்கொள்கிற காரணத்தினால் இதை வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன் என்று கூறுவதே நல்லது என்று கருதுகிறேன். (கனம் திரு. எம். பக்தவத்சலம்: முடிவில் நிராகரிக்கிறேன் என்று சொல்லிவிடுங்கள்.)

இதை வரவேற்பதற்கு இன்னொரு காரணத்தையும் கூட நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏறத்தாழ பதின்மூன்று, பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகும் இப்படிப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் எத்தனை வற்புறுத்தி எடுத்துச் சொன்னாலும், எந்தக் கொள்கை வாதங்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்தாலும், அவை அத்தனையையும் ஆட்சியாளர் நிராகரித்துவிட்டு தங்கள் இஷ்டம்போல் தயாரித்து அளிப்பதனால் இன்றைய நாட்டு மக்கள் ஆட்சியாளர்களுடைய கொடுமையைப் புரிந்துகொண்டு தாங்கள் செய்த தவறை உணர்வார்கள் என்ற காரணத்திற்காக இதை நான் வரவேற்கிறேன் என்று சூசகமாகச் சொல்லக்கூடும்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி இந்த மாமன்றத்திலே இரு தரப்பிலிருந்தும் பலதரப்பட்ட கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நிதியமைச்சர் அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தினுடைய இறுதி உரையில் குறிப்பிட்டிருக்கின்ற வாசகம் மிக மிக முக்கியமானது. இந்த நாட்டுக் குடிமக்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் தொடக் கூடியது என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் மறுப்பதற்கில்லை.

"பாதுகாப்பு, அபிவிருத்தி, இந்த இரண்டு இலட்சியங்களுக்குள் முரண்பாடு ஒன்றுமில்லை. ஆனால் இவை இரண்டையும் ஒருங்கே அடையவேண்டுமென்றால் நம்முடைய ஆள் பலம், பொருள் பலம் எல்லாவற்றையும் திரட்ட வேண்டும்.

[திரு. மு. கருணாநிதி] [7th March 1963

"அப்படித் திரட்டுகையில் தியாகங்களைச் செய்யவேண்டி நேர்ந்தால், சுதந்திர நாட்டினர் என்ற முறையில் நாம் பின் வாங்கக் கூடாது"

என்று நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே எங்களைப் பொறுத்தவரையிலே வேறுபாடான கருத்து நிச்சயமாக இருக்க முடியாது. இந்தியாவினுடைய வட எல்லைப் பகுதியில் சீனர்கள் நடத்துகின்ற ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காக இந்தியா போர்க்கொடி உயர்த்திய அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய இலட்சியத்தையே நிறுத்தி வைத்து விட்டு, இந்தப் போராட்டத்திற்கான ஆதரவை இந்திய சர்க்காருக்கு இதய சுத்தத்தோடு வழங்குவதற்குத் தீர்மானித்தது என்பதையும், அந்தத் தீர்மானத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் எள்ளளவும் பின் வாங்காமல் சீனா ஆக்கிரமிப்பை முறியடிப்பது ஒன்றுதான் நம்முடைய முதல் வேலை என்பதை உணர்ந்து பணி புரிந்து வருகிறது என்பதையும் நான் மிகப் பெருமையோடு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கின்ற குடிமகன் ஒவ்வொருவனுக்கும் உயிர்ப் பிரச்சனை இது. அந்தப் பிரச்னையில் நாம் எந்த அளவுக்கு நாட்டம் செலுத்தவேண்டும், எந்த அளவுக்குத் தியாகங்களுக்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதை இந்த அறிக்கையிலே நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது பாராட்டுதற்குரியதுதான்.

ஆனால் இதனைச் சற்றுச் சிந்திக்கிற நேரத்தில், "தியாகங்களைச் செய்கிறவர்கள் ஏழை மக்களாக மாத்திரந்தான் இருக்க வேண்டுமா? இந்தப் போரினால் ஏற்படுகின்ற சாதக பாதகங்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற முதலாளி வர்க்கத்தை தீண்டக் கூடாதா? பணக்காரர்களுடைய வீடுகளின் படிக்கட்டை மிதிக்கக்கூடாதா?" என்றுதான் கேட்க விரும்புகிறேன். நாட்டின் அபிவிருத்திக்குப் பொருள் தேவைப்படும். அந்தப் பொருளை ஈட்டுவதற்கு, வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிகளைக் காணவேண்டியதுதான். ஆனால் அதற்கான வழி காண்கின்ற நேரத்தில், அந்தப்பாரம் முழுவதும் இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழைக் குடிமகனுடைய தலையிலே மட்டும் விழலாமா என்பதைச் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். 'இது வரி போடப்படாத வரவு-செலவுத் திட்டம் அல்லவா' என்று ஆளும் கட்சியைச் சார்ந்த அத்தனை உறுப்பினர்களும் எடுத்துப் பேசினார்கள். அது மாத்திரமல்ல. "வரி போடாத நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற காரணத்தால் எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்குப் பேசுவதற்கே வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது; ஆகவே அவர்கள் 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிறார்கள்'" என்று பேசினார்கள். பேசிய அத்தனை உறுப்பினர்களும் எதைச் சொல்லத் தவறினாலும் அந்தப் பழமொழியைத் தவறாமல், எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நேற்றையதினம் பேசிய மதிப்புக்குரிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 'இந்த வரவு-செலவுத் திட்டத்திலே வரி போட்டிருப்போமானால் அதுதான் கடைசி வரியாக இருக்கும்' என்று குறிப்பிட்டார்கள். அந்த வாசகத்திற்குப் பொருள் என்னவாக இருக்க முடியும்? 'போட வேண்டிய வரிகளையெல்லாம் போட்டாகிவிட்டது, இனிப் போடுவதற்கு வரி எதுவும் இல்லை' என்பதைத்தான் அது காட்டுகிறது. நாலைந்து தினங்களுக்கு முன்பாக நீர்வரி, நிலவரி மசோதாவை நிறைவேற்றினோம். அந்த வரிகளின் சுமை ஏழைக் குடிமகனின் தலையிலே விழுந்திருக்கிறது. மத்திய சர்க்காருடைய வரித் திட்டங்கள் வேறு இந்த நாட்டுக் குடிமக்களைப் பாதித்துக் கொண்டிருக்கிறது. 'இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே வரி போட எங்கே இடம் இருக்கிறது?' என்றுதான் கேட்க விரும்புகிறேன். அம்மை நோயினால் பாதிக்கப்பட்டவனுடைய உடலில் ஊசி குத்தக் கூட இடம் இல்லை என்று கூறுவது போல், எல்லா வரிகளும் இன்றைய தினம் போடப்பட்டு இந்த நாட்டு மக்கள் பெருத்த வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். 'வரி போட்டிருந்தால் எதிர்க்கட்சிக்காரர்கள் பேச வாய்ப்பு ஏற்பட்டிருக்கும், வரி போடாத காரணத்தால் அவர்களுடைய வாய் மூடிவிட்டது' என்று சொல்லும் ஆளும் கட்சியினருக்கு, கனம் மாதா கவுடர் அவர்கள் இந்த மன்றத்திலே வரியை எதிர்த்துப் பேசிய வாசகத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 1957-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25-ஆம் தேதி தோட்ட வருமான வரி திருத்த மசோதா ஒன்று வந்தது. அந்த வரியை உயர்த்த எதிர்க்கட்சியிலிருந்து அத்தனை பேரும் எங்கள் ஆதரவை தெரிவித்தோம். அப்போது இந்த மன்றத்திலிருந்த அண்ணாதுரை அவர்கள்கூட, அந்த வரி 45 பைசா என்பதை 50 பைசா என்று ஆக்குவதில் கூடத் தவறில்லையென்று குறிப்பிட்டார்கள். அந்த நேரத்தில் நண்பர் மாதா கவுடர் அவர்கள் பேசிய வாசகம் எனக்கு நினைவிருக்கிறது. "நம்முடைய தொழில் முறையும், பிளான்டேஷனும் நல்ல விதமாக முன்னேறிக் கொண்டிருக்க வேண்டுமென்றால், அவர்களுக்கும் ஊக்கம் கொடுக்கவேண்டும். ஊக்கம் கொடுத்தால்தான் அவர்களும் அந்தப் பயிர்களை நன்றாக விளைவிப்பார்கள். விளைபொருள்களை அந்நிய நாட்டுக்கு அனுப்பி அந்நியச் செலாவணிகூட ஓரளவுக்கு அதிகமாகப் பெறக் கூடும். அப்படி முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தொழில் மீது ஓரேயடியாக அதிகமாக வரி போடுவதை நான் மிக வன்மையாக கண்டிக்கிறேன்" என்று நண்பர் மாதா கவுடர் அவர்கள் ஜூலை மாதம் 25-ஆம் தேதியன்று இந்த மன்றத்திலே பேசியிருக்கிறார். எதிர்க் கட்சியில் இருக்கும் நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தவராயினும், வேறு எந்த முற்போக்கு எதிர்க் கட்சியினராயினும், தாங்க முடியாதவர்கள் மீது சுமத்தப்படுகிற வரிச்சுமையைத்தான் எதிர்த்து வந்திருக்கிறோமே தவிர, தாங்கக் கூடியவர்கள் மீது போடப்படுகின்ற வரிகளை ஆட்சேபிப்பது கிடையாது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



7th March 1963] [திரு. மு. கருணாநிதி]

இந்த வரவு செலவுத் திட்டத்தில் 'வரியே இல்லை' என்று சொல்லும் நேரத்தில், இதிலே மகிழ்ச்சி தரக்கூடிய வேறு என்ன இருக்கிறது? தினந்தோறும் மனைவியை அடித்து நொறுக்கிச்

[திரு. மு. கருணாநிதி] [7th March 1963

கொண்டிருக்கும் கணவன், ஒரு நாள்—'இன்றையதினம் உன்னை அடிக்கப்போவதில்லை' என்று மனைவியைப் பார்த்து கணவன் கூற, 'என் மீது அவ்வளவு காதலா பிறந்து விட்டது' என்று மனைவி கேட்க 'இல்லை! இல்லை! உன்னை அடித்து அடித்து என் கை வலி எடுத்து விட்டது' என்று பதில் கூறினானாம். அதைப் போலத் தான், வரி போட வழி இல்லாத அளவுக்கு ஏற்கனவே எல்லா வரிகளையும் போட்டுவிட்டிருக்கின்ற காரணத்தினால், இந்த வரவு செலவுத் திட்டத்திலே புதிய வரிகளைப் போட முடியவில்லை. நாட்டிலே, வாடுகின்ற மக்கள் வாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். வரிப் பளுவை தாங்கிக் கொண்டிருக்கக் கூடிய மக்கள், 'சுமை இறக்கப்படாதா?' என்று சோகத்தோடு பெருமூச்சு விட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

ரஷ்யத் தலைவர் குருஷேவ் அவர்கள் இந்தியா வந்திருந்த நேரத்தில் மிக அழகாகக் குறிப்பிட்டார்கள்.

"சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய மனிதனுடைய தலையாய உரிமையானது,

வேலை செய்யவும், இன்றைக்கும் நாளைக்கும் பாதுகாப்பான வாழ்வைப் பெறவும், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை ஆகிய பயங்கரப் பயமுறுத்தல்களிலிருந்து விடுதலை பெறவும் உள்ள உரிமையேயாகும்.

தொழிற்சாலைகள், மில்கள், பாங்குகள், வீடுகள், நிலம், இயற்கைச் செல்வாதாரம் முதலிய உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் தம்முடைய கையில் வைத்துக் கொண்டு கொழுக்கின்றவர்களின் சுரண்டலில் இருந்து மனிதன் விடுதலை பெறுவதுதான் தனிநபர் சுதந்திரத்தின் மிக உயர்வான வடிவமாகும்."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே இந்த நாட்டிலே வரவு செலவுத் திட்டம் தீட்டப்படுகிறதா? வருமானத்தைப் பெருக்குவதற்கு வரிகளை மாத்திரம் நம்பினால் போதுமா? தொழில்களைத் தேசிய மயமாக்கவேண்டுமென்று நாங்கள் எடுத்துக் கூறுகின்ற கருத்தை இந்த அரசு ஏன் கவனிக்க மறுக்கிறது? இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தால் கூட, தனியார் துறை, பொதுத்துறைக் கணக்கினை ஆராய்ந்து பார்த்தால்,—பொதுத்துறையில், நெய்வேலித் திட்டம், கிண்டி டெலிபிரிண்டர் தொழிற்சாலை, நீலகிரி கச்சா பிலிம் தொழிற்சாலை, கனரக கொதிகலன் தொழிற்சாலை, ஆவடிக்கருகில் பாதுகாப்புச் சாதனத் தொழிற்சாலை ஆகியவைகள்தான் வருகின்றன. ஆனால் தனியார் துறையிலோ,—சேலம் மாவட்டத்தில் கலவை உருக்குத் தொழிற்சாலை, சர்க்கரை ஆலைக்கான இயந்திரங்கள் தயாரிக்க இரண்டு தொழிற்சாலைகள், சோடாக்காரம் மற்ற ரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் தாரங்கதாரா ஸ்தாபனம் (அதற்காகவே) மேட்டூர் கெமிக்கல் ஸ்தாபனம், எண்ணூர் உரத் தொழிற்சாலை, கடலூர் உரத் தொழிற்சாலை, கோவை உரத் தொழிற்சாலை, பாரி ஸ்தாபனத்தின் 'அம்மோனியம் பாஸ்பேட்' உற்பத்தித் தொழிற்சாலை, சேஷசாயி காகிதத் தொழிற்சாலை, சங்கரிதுர்கம்



7th March 1963] [திரு. மு. கருணாநிதி]

சிமெண்டு தொழிற்சாலை, கரூர் சிமெண்டு தொழிற்சாலை, விஸ்கோஸ் ஸ்தாபனத்தின் 'ரயான்' தொழிற்சாலை என்ற அளவில் தனியார் துறை விரிவுபடுத்தப்படுகிறது. இதிலே எங்கே 'ஆவடி சோஷலிசம்' இருக்கிறது? இப்படிப்பட்ட கலப்பட சமதர்மத்தால் ஏழைக் குடிமகனுடைய வாழ்விலே ஒளியை உண்டாக்க முடியுமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். தனிப்பட்ட முதலாளிகள் பெருத்த லாபம் அடைந்து வரக் கூடிய பஸ் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கவேண்டுமென்று நாங்கள் சொன்னால், அதிலே ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள்? ஏறத்தாழ ஐயாயிரம் பஸ்களை நிர்வகிக்கின்ற 200-க்கு மேற்பட்ட மோட்டார் மன்னர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பஸ் போக்குவரத்தை எடுத்து தேசிய மயமாக்கினால் என்ன? 'எனக்கு மட்டும் அதிகாரம் இருக்கிறது எல்லாப் போக்குவரத்துத் துறைகளையும் தேசியமயமாக்குவேன்'—நான் சொன்னதாகச் சிரிக்க வேண்டாம், சொன்னது நான் அல்ல. 'எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் எல்லாப் போக்குவரத்துத் துறைகளையும் தேசியமயமாக்குவேன்' என்று சொன்னது யார்? அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொருளாதாரக் கூட்டத்தில் பிப்ரவரி மாதம் 26-ம் தேதியன்று பேசியவர் சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள். ஏன் இந்த யோசனையை நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது? திராவிட முன்னேற்றக் கழகத்ததைத் தடை செய்யவேண்டுமென்கிற அவரது யோசனையை மாத்திரம் ஏற்றுக் கொள்ளுகின்ற நீங்கள் ஏன் இந்த யோசனையையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது?

ஏன் பஸ் தொழிலை தேசியமயமாக்கக் கூடாது என்று நான் 9-30
கேட்கிறேன். குறிப்பாகவும், சிறப்பாகவும் நேற்றையதினம் நான் a.m.
பார்த்த செய்தி ஒன்றை நான் இத்துடன் இணைக்க விரும்புகிறேன். சென்னை மாநகரில் டாக்சிகளை 50 வாடகை கார்களை ஒரு தனிப்பட்ட முதலாளி ஸ்தாபனத்தினிடம் கொடுப்பதற்கு சர்க்கார் அனுமதிப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. கீவராஜ் மோட்டார் ஸ்தாபனத்திற்கு 50 வாடகைக் கார்களைத் தருகிறோம் என்று அனுமதி அளித்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. இன்றையதினம் சென்னை மாநகரில் டாக்சிகளை வைத்துக் கொண்டு வாடகைக்கு விட்டுக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் சிறிய, நடுத்தர நிலையில் உள்ளவர்கள்தான். அவர்கள்தான் இந்த வாடகைக் கார்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரேயடியாக இந்த டாக்சிகளை தேசியமயமாக்குவதைப் பற்றி நான் ஆட்சேபனை செய்யவில்லை. அதுவரையில் இந்த சிறிய, நடுத்தர வாடகைக் கார்கள் சொந்தக்கார்களை பாதிக்காத அளவிற்கு இந்த 50, 100 என்று வாடகைக் கார்களை தனிப்பட்ட இந்த கீவராஜ் போன்ற ஸ்தாபனங்களிடம் தராமல் இருக்கக் கூடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன். என்ன நிபந்தனையோடு அவர்கள் இப்படி கொடுக்கப் போகிறார்கள் என்று நான் கேள்விப்படுவது, சென்னை டாக்சி ட்ரைவர்கள் ஸ்ட்ரைக் செய்ய ஆரம்பித்தால் அந்த நேரத்தில் இந்த ஸ்தாபனத்தின் வாடகைக் கார்கள் எல்லாம் எங்களுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும் என்பதுதான். சுருங்கச் சொன்னால் கருங்காலி வேலை செய்யவேண்டுமென்ற நிபந்தனை மீது இந்த

[7th March 1963

செய்யவேண்டுமென்று மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதப் பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் நான் கையெழுத்திட்டிருக்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இருந்து அநேகமாக நோய் தடுப்பு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்று அறிகிறோம். நீலகிரி ஜில்லாவில் இருபதாயிரம் ஏக்கராவில் உருளைக்கிழங்கு பயிரிட்டது போய், இந்த ஆண்டு 5 ஆயிரம் ஏக்கரா அளவுக்கு மட்டும் பயிர் வைக்கிற அளவு குறைந்திருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதற்குக் காரணம் என்ன என்று கனம் அமைச்சர் விளக்குவாரா?

**கனம் திரு. பூ. கக்கன் :** எவ்வளவு குறைந்திருக்கிறது என்கிற விவரம் என்னிடம் இல்லை. நோய் காரணமாகக் குறைந்துவிடக் கூடாது என்பதற்காகவே அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கின்றது.

**திரு. ஏ. இரா. சம்பந்தம் :** இம்மாதிரி பூச்சி விழுவதினால் பயிர் கள் நாசமாகிவிடுதலால், பூச்சி விழுந்த தம் பயிருக்கு ஒருவர் மருந்து அடிக்காது விட்டால் அது தொத்து நோய் போல மற்ற வர் பயிர்களுக்கும் பரவிவிடுவதால் அரசாங்கமே நேரிடையாக நோயை நீக்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** பருவ மழை காரணமாக இந்தப் பூச்சி விழுவதாக டாக்டர் வில்லியம் ப்ளேக் என்பவர் பரிசீலனை செய் திருக்கிறார். இவ்வாறு பூச்சி விழும்போது அதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் கனம் அங்கத்தினருடைய யோசனையையும் பரிசீலனை செய்து பார்க்கும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** பொதுவாக இப்போது பயிர் செய்யப் படுகிற எல்லா விவசாயப் பயிர்களுக்கும் நோய் விழுவது சர்வ சாதாரணமாகப் போய்விட்டதால் இந்த நோய்களை எல்லாம் ஆராய்ச்சி செய்து ஆரம்பத்திலேயே நோய் விழாதிருக்கத் தக்க நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். சில சமயங்களில் விதைகள் வழங்கும் போதே மருந்து கலந்துதான் கொடுக்கப்படுகிறது. கூடுமானவரை யில் ஆரம்பத்திலேயே நோய்கள் வராதிருக்கத் தக்க நடவடிக்கை எல்லாம் மேற்கொள்ளப்பட்டே வருகின்றது.

**திரு. கே. மூக்கையா தேவர் :** இந்த உருளைக்கிழங்கு நோய் நீலகிரியில் மட்டும் வருகிறதா? அல்லது கோடைக்கானல் போன்ற இதர பகுதிகளிலும் வருகிறதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** கோடைக்கானல் பகுதியில் அவ்வளவு இருப்பதாகத் தெரியவில்லை. நீலகிரியில் மட்டும் தான் இருக்கிறது.



7th March 1963]

**திரு. செ. சதாசிவம் :** நோய் தடுக்கப்படுவதற்கு மருந்து எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் மருந்து தெளிக்க டஸ்டர் ஸ்ப்ரேயர் முதலியவைகள். இவை அடிக்கடி பழுதாகி விடுவதனால் காலத்தில் மருந்து தெளிக்க முடியாது போகிறது. ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் விவசாய இலாகா வின் மூலம் இக்கருவிகளை ரிப்பேர் செய்வதற்குரிய ஆட்களை நிய மிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நியமிப்பது என்றால் செலவு ஏராளமாக ஆகிவிடும். பஞ்சாயத்து போர்டு களே தான் இவற்றைக் கவனித்துக்கொள்ளவேண்டும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** நீலகிரியில் பயிரிடக்கூடிய உருளைக் கிழங்கு விதையை மாற்றினால் இந்த நோய் வராது என்கிறார்கள். அதனால் க்ரேட் ஸ்காட்லாண்டிலிருந்து இரண்டாயிரம் டன் உருளைக்கிழங்கு விதை தேவை என்று சொல்லப்பட்டது. 50 டன் தான் கிடைத்திருக்கிறது. இதற்காவது பாரின் எக்ஸ்சேன்ஜ் முறையைத் தளர்த்தி ஸ்காட்லாண்டிலிருந்து உருளைக்கிழங்கு விதையைத் தருவித்துக் கொடுக்க முன்வருவார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** நான் முன்பே சொன்னேன். எவ்வளவு தூரம் இந்த நோயைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவ்வளவுதூரம் எடுத்திருக்கிறோம். மேலும் முதல் தரம், இரண்டாம் தரம் விதையைப் போட்டால் கூட நோய் வராது என்கிறார்கள். மேலும் மத்திய அரசாங்கத்தின் சார்பில் சிம்லா வில் தயாரிக்கப்படும் உருளைக்கிழங்கு விதையையும் தருவித்துப் பயிரிடலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** க்ரேட் ஸ்காட்லாண்டிலிருந்து உருளைக்கிழங்கு விதையைத் தருவிப்பதற்கு பாரின் எக்ஸ்-சேன்ஜைத் தளர்த்துவது மட்டும் பிரச்சனை அல்ல. நாம் அதற் காகத் தளர்த்தினாலும் கூட ஸ்காட்லாண்டில் இருந்து உருளைக் கிழங்கு விதையைக் கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. அங்கேயே போதுமான விதை இல்லாத காரணத்தினால் நாங்கள் தரமுடியாது என்று சொல்கிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** சென்ற மாதத்தில் விளம்பர இலாகா அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் நீலகிரிக்கு வந்து நோயினால் பாதிக்கப்பட்ட உருளைக்கிழங்குப் பயிர்களைப் பார்த்து வந்தார்கள். அங்கு பஞ்சத்தை ஒத்த நிலைமை நிலவுகிறது. அதைப்பற்றி கனம் அமைச்சரிடத்தில் தெரிவித்தாரா? அதன் பேரில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

**கனம் திரு. பூ. கக்கன் :** அவர் போய்வந்த பிறகு என்னிடம் அதைப்பற்றிக் குறிப்பிட்டார். நானும் அதற்கு முன்பு நேரில் போய்ச் சென்று பார்த்து வந்திருக்கிறேன். அதன் காரணமாகத் தான் இந்த நோயைக் தடுக்க எவ்வளவு தூரம் நடவடிக்கை எடுத் துக்கொள்ள முடியுமோ அவ்வளவுதூரம் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டு மெத்த வருத்தம் அடைகிறேன். ட்ரைவர்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக் நடத்துகிற போராட்டங்களைக் கூட வீழ்த்துவதற்கும், உடைப்பதற்கும், முறியடிப்பதற்கும் இந்த முறை பயன்படுமா அல்லவா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அடுத்து ஒரு நாட்டின் நல்வாழ்விற்காக விவசாயம் வளர்ச்சி, விவசாய தொழில் துறை முன்னேற்றம் இவைகள் இன்றியமையாதவை என்பது ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தாலும், அதை நாட்டிலுள்ள எல்லா தரப்புக் கட்சிகளில் இருப்பவர்களும் ஒப்புக் கொண்டபோதிலும் அது செயல் படும் விதத்தில் இருக்கிற மாற்றங்களை, முரண்பாடுகளை நான் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. இரண்டாவது உலக யுத்ததிற்குப் பிறகு ஜப்பான் நாட்டில், ஏறத்தாழ 60 லட்சம் விவசாயிகளைக் கொண்ட அந்த நாட்டில், விவசாயத் துறையில் ஏற்பட்டிருக்கிற வேகத்தோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். திரு. மதியழகன் அவர்கள் பேசும்போது அமெரிக்காவையும் ரஷ்யாவையும் ஒப்பிட்ட நேரத்தில் இன்னொரு நாட்டோடு ஒப்பிடலாமா என்ற கேள்வி எழுந்தது. ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையை ஆராயும்போது உலகத்திலுள்ள இதர நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதுதான் திட்டங்களின் வளர்ச்சிக்கு நல்ல இலக்கணமாக இருக்க முடியும். அந்த இலக்கண அடிப்படையில் வேறு நாடுகளில் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சிகளை நாம் காண வேண்டும். அப்படி கண்ட பிறகு அது குறித்து நாம் வருந்துவோ அல்லது தாழ்ந்திருக்கிறோம் என்று வருத்தப்படவோ வேண்டுமென்று சொல்லவில்லை. நான் சொல்வது என்னவென்றால், அந்த வளர்ச்சியைக் கண்டு அதை எட்டிப் பிடிக்க நம்மை நாம் தயார் செய்து கொள்ள வேண்டுமென்றுதான் பிற நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறேன். விவசாயத்தைப் பெருக்க அரசாங்கம் பல விதங்களில் முயற்சி செய்கிறது என்று குறிப்பிட்டாலும், நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தாலும் செயல்முறை தாமதமாகவும், நிய முறையிலும் நடந்து வருகின்றது என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. விவசாயத்திற்குத் தேவையான உரம், ஒரு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் எடுத்துக் காட்டியது போல், நியாய விலையில் கிடைப்பதில்லை, காலத்தில் வந்து சேருவதும் இல்லை. பொறுக்குவிதை சர்க்காரால் வினியோகிக்கப்படுவதைவிட கிராம சகாயக்குகளால் வினியோகிக்கப்படுவதை விட, தனிப்பட்ட விவசாயிகளே வினியோகித்தால் நல்லமுறையில் இருக்கும் என்று ஆளும் கட்சியைச் சார்ந்த தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் இந்த மன்றத்தில் நேற்றைக்கு முன் தினம் எடுத்துரைத்தார்கள். இது சர்க்காரால் வினியோகிக்கப்படவேண்டாம் என்பதற்காக நான் சொல்லவில்லை, வினியோகிக்கப்படுகிற இந்த முறை ஒழுங்கான முறையில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். கிராம சகாயக்குகள் பொறுக்குவிதைகளைப் பெருக்கித் தயாரிப்பதில் போதுமான பயிற்சி பெற்றவர்கள் அல்ல. அதற்காகத்தான் நான் இதை எடுத்துச் சொல்கிறேன். இன்று பல இடங்களில் பொறுக்குவிதை போடுவதால் ஏற்கனவே வயலில்





பயிரிடும்போது ஏற்படுகிற களையை விட அதிகமான களை உற்பத்தியாவதாக விவசாயிகள் கூறுகிறார்கள். வரவு-செலவுத் திட்டத்தைக் கண்டிக்க வேண்டும் என்பதற்காக சொல்லப்படுகிற வாதமாக இதை எடுத்துக் கொள்ளாமல் பிரத்தியட்ச நிலையை இந்த மன்ற அங்கத்தினர்களும், அமைச்சரவையும் உணர்ந்து பார்த்து ஆவன செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இதை எடுத்துக் கூறுகிறேன். அனுபவப் பயிற்சி பெறாத கிராம சகாயக்குகளால் இந்த ஆபத்து நேரிடுகிறது என்பதையும் அதைத் தொடர்ந்து விவசாயிகளுக்கும் தொல்லை ஏற்படுகிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. விஞ்ஞான முறைப்படி பொறுக்குவிதை தயாரித்தால் போதும் என்று கருதுவது நல்லதல்ல. அனுபவமும் தேவை பி.ஏ. அல்லது எம்.ஏ. படித்த ஒரு பெண்ணை, சமையல் வேலை தெரியாத அந்தப் பெண்ணை, சமையல் கட்டுக்கு அனுப்பி சமையல் செய் என்று சொன்னால், அப்பெண் விஞ்ஞானமுறையில், சுகாதார முறைப்படி சமைக்க வேண்டுமென்று நினைத்து கத்தரிக்காயையும், வெண்டைக்காயையும் சோப் போட்டுக் கழுவி குழம்பு வைத்தால் அந்தக் குழம்பு எப்படியிருக்குமோ, அதேபோன்று அனுபவம் பெறாத கிராமசகாயக்குகளால் தயாரிக்கப்படுகிற பொறுக்குவிதைகளைப் போட்டு விவசாயிகள் நல்ல விளைச்சலை காணமுடியாதிருக்கிறது. அடுத்து பழத்தோட்டம் என்ற முறை இருக்கிறது. இந்தப் பழத்தோட்டங்களை நல்ல முறையில் வளர்க்க வேண்டுமென்று கூறுகிறார்கள். நான் வட ஆற்காடுக்கு செல்கிற வழியில் காட்பாடி ரெயில்வே கேட்டுக்கு அருகாமையில், கேட்டை அடிக்கடி மூடுவதால் காரை அங்கு நிறுத்த வேண்டி வருகிறது. அதன் பக்கத்தில் பழத்தோட்டம் என்று அழகான, கவர்ச்சிகரமான பலகை தொங்கிக்கொண்டிருக்கிறது. காரை விட்டு இறங்கி பழத் தோட்டம் எங்கே இருக்கிறது என்று தேடிப்பார்த்தால் அதைக்காணவில்லை. அந்தப் பழத்தோட்டம், மாயப் பழத் தோட்டம் காட்பாடி ரெயில்வே கேட்டுக்கு அருகில் இருக்கிறது. அங்கு போர்டு மட்டும் இருக்கிறது, ஐந்தாறு குழிகள்தான் அங்கு இருக்கின்றன. அங்கு பழத்தையும் காணவில்லை. தோட்டத்தையும் காணவில்லை, செடிகளையும் காணவில்லை. நான் இந்த முறையைக் கண்டிக்கவில்லை, நோக்கத்தை கண்டிக்கவில்லை. ஆனால் அது செயல்படுகிற விதத்தில் ஏற்படுகிற முரண்பாடுகளைத்தான் தவறுதல்களைத்தான் நான் இங்கு சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன். தேனீப் பண்ணை என்ற பெயரால் 6.000 ரூபாய் வரையில் பஞ்சாயத்து யூனியன் மூலம் செலவிடப்படுகிறது. ஆனால் இப்பணம் ஒழுங்காகச் செலவிடப்படுகிறதா என்ற கண்காணிப்பு இருக்க வேண்டும். நோக்கத்தை நான் குறை கூறவில்லை என்பதை நான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். செயல்முறையில் ஏற்படுகிற தவறுதல்களைத்தான் நான் எடுத்துக் காட்டுகிறேன். கண்காணிப்பு நல்லமுறையில் இருக்கவேண்டும். விவசாயத் துறையில் நல்ல முறையில் விளைவு காண, இசை மூலம் விவசாயத்தில் நல்ல விளைச்சலைக் காணமுடியும் என்ற ஆராய்ச்சி 1950-ம் ஆண்டு முதல் இந்த பரிதாபத்திற்குரிய தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது.

[திரு. மு. கருணாநிதி] [7th March 1963

ஆனால் இது பற்றி நேற்றைய தினம் விவசாயத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டபோது "எனக்கு அது தெரியாது நான் அதைப் பார்த்ததில்லை" என்று சொல்லுகிறார். அது கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். இதைக் கூடப்பார்க்காதவர் விவசாய அமைச்சராக இருக்கிறாரே என்பதற்காக அல்ல. கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு இதுகூடத் தெரியவில்லையே என்பதற்காக நான் உள்ளபடியே ஆச்சரியப்படுகிறேன். அதற்கான ஆதாரங்களை கனம் அமைச்சர் அவர்களிடம் தருவதற்காக இதை நான் எடுத்துக் கொண்டு வந்தேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் டி. ஸி. எஸ். சிங் என்ற ஒரு வட நாட்டுக்காரர் இருக்கிறார்—தனிப்பட்டவர் மீது எங்களுக்கு துவேஷம் இல்லை என்பதற்கு இது ஒரு சான்று—அவர் தாவர ஆராய்ச்சி இலாகாவின் தலைவராக இருக்கிறார். அவர் கண்டுபிடித்த ஆராய்ச்சியின் சில விவரங்களை நான் இங்கு எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். 1950 டிசம்பரில் இருந்து அண்ணாமலை சர்வகலாசாலையில் சோதனை நடைபெற்று வருகிறது. நாதசுவரத்தில் சாருகேசி ராகத்தை ஒலிபரப்புவதன் மூலம் 25 சதவிகிதத்தில் இருந்து 60 சதவிகிதம் வரை நெல் அதிக உற்பத்தி கிடைத்திருக்கிறது. அதே விதத்திலே வேர்கடலை உற்பத்தி 45 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது. கானடா நாட்டில் ஒண்டேரியோ என்ற இடத்தில் வயலின் மூலம் ஐரோப்பிய சங்கீதத்தை ஒலிபரப்பியதில் கோதுமை உற்பத்தி 66 சதவிகிதம் அதிகமாயிருக்கிறது. புகையிலை கன்றுகளின் உற்பத்தியில் 50 சத விகிதம் முதல் 60 சதவிகிதம் வரையில் அதிக விளைச்சல் கிடைத்திருக்கிறது. வரப்பிற்கு ஒரு அடி உயரத்தில் ஒலிபெருக்கி பொருத்தி தினசரி காலை 6லிருந்து 7 மணிக்கு இடையில் அரை மணி நேரம் இசை ஒலி பரப்பப்பட்டது. காற்றுவீசும் திசை நோக்கி பொதுவாக ஒலிபெருக்கி அமைக்கப்படும். மண் சோதனை நடத்தி ஒரே மாதிரி தரமுள்ள இரு நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்றில் இசை ஒலிபரப்பு பயிர்கள் வளர்க்கப்பட்டன. அது இல்லாது இன்னொன்றில் வளர்க்கப்பட்டன. இரண்டிலும் ஒரே மாதிரி உரங்கள் ஒரே அளவில் ஒரே நாளில் போடப்பட்டன. பாண்டிச்சேரி மாநிலத்தில் அரசினர், நிலச்சொந்தக்காரர்கள் உதவியுடன் கீழ்க்கண்ட இடங்களில் நெற்பயிர் மீது சோதனை நடத்தினர். கீழ்காசமங்கலம், ராமநாதபுரம், இருளஞ்சந்தை, கரிகலாம்பாக்கம், தவளக்குப்பம், நைனார் மண்டபம். இவற்றில் விளைவு, நெல் உற்பத்தியில் 8 சதவிகிதத்தில் இருந்து 52 சதவிகிதம் வரை உயர்வு கிடைத்திருக்கிறது. வைக்கோல் அறுவடையில் 10 சதவிகிதம் முதல் 83 சதவிகிதம் வரை உயர்வு கிடைத்துள்ளது. கீழ்க்காசமங்கலத்தில் இசையால் ஊக்குவிக்கப்பட்ட குதிரைவாலி சம்பா பயிர் அது இல்லாத பயிரைவிட 6.48 அங்குலம் அதிகம் உயர்ந்திருக்கிறது. இப்படி புள்ளி விவரங்கள் நிறைய என்னிடம் இருக்கின்றன. கனம் நிதியமைச்சர் விரும்பினால் இதைத்தர நான் தயாராயிருக்கிறேன். கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு இதில் அக்



7th March 1963] [திரு. மு. கருணாநிதி]

கரை இல்லையோ அல்லது அதைக் காண தவறி விட்டார்களோ என்னவோ காரணம் எனக்கு புரியவில்லை. இந்த அளவுக்கு நெல்லில் மட்டுமல்ல, கரும்பில்கூட, உருவையாறு என்ற கிராமத்தில் பயிர் நாலரை மாதம் வளர்ந்த பிறகு அறுவை காலம் வரை நாதஸ்வரத்தில் சாருகேசி ராகம் இசைக்கப்பட்டது. இதன் காரணமாக ஒரு ஏக்கருக்கு 8 டன் அதிகமாக விளைந்திருக்கிறது. இம்மாதிரி நாதஸ்வர இசையின் மூலமாக விளைச்சலைப் பெருக்க முடியும் என்பதற்கு நமக்கு பல ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன.

இந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட ஆராய்சியாளரைப்பற்றி வட ஐரோப்பாவில் முக்கியத்துவம் வாய்ந்ததும், நார்வே நாட்டு மிகப் பெரிய தினசரியான "ஆஃப்தன் போஸ்டன்" என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அதில் இந்த இந்திய விஞ்ஞானியை மனித சமுதாயத்திற்கு உபகாரம் செய்தவராகக் கருதி அவருக்கு நோபல் பரிசு உரித்தாக்குவதற்கும் சாத்தியம் இருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறது. இப்படிப்பட்ட செல்வாக்குமிக்க அந்தப் பத்திரிகையில் இக்கட்டுரை வெளியாகியிருப்பதால் நோபல் கமிட்டி இதைப்பற்றி சிந்திப்பதற்கும் வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. பாண்டிச்சேரி அரசின் விவசாய இலாகா கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சியை நடத்தி வருகிறது. மேலும் ஆராய்ச்சியாளர் டி. சி. எஸ். சிங்கிற்கு 1955-ம் ஆண்டு பிருத்வி டிரஸ்ட், பிருத்வி பரிசை வழங்கியிருக்கிறது. அதாவது 2,000 ரூபாயையும் ஒரு தங்க மெடலும் 'டீன் ஆஃப் பிலாசபி' என்ற பட்டமும் வழங்கியிருக்கிறது.

இதே ஆராய்ச்சியாளர் அவர்கள், இந்திய அரசு இதை மேற்கொள்ளவேண்டும் என்று நேருவிற்கு கடிதம் எழுதினர். இதை மேற்கொள்வதில் பல சிரமங்கள் இருக்கலாம் என்றும், இதற்கான முயற்சிக்கு விவசாய இலாகாவை அணுகவேண்டும் என்றும் நேரு கடிதம் எழுதிவிட்டார். ஆனால் நம்முடைய விவசாய இலாகாவினர் இது குறித்து எந்தவிதமான அக்கரையும் காட்டவில்லை. எப்படி காட்ட முடியும்? நம்முடைய விவசாய மந்திரிக்குத்தான் இப்படிப்பட்ட ஓர் ஆராய்ச்சி நடப்பதாகவே தெரியாதே. இனி மேலாவது இதில் அக்கரை காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (கனம் திரு. கே. காமராஜ்: இசையில் மந்திரி கவனம் செலுத்தவில்லை, விவசாயத்தில் தான் கவனம் செலுத்தி வருகிறார்கள்.) இசைக்கும் விவசாயத்திற்கும் இசைந்த தொடர்பு இருக்கிறது என்றுதான் குறிப்பிடுகிறேன். விவசாயத்துறையில் மட்டும் அல்ல, தொழில் துறையிலும் நாம் எந்த அளவுக்கு பின்தங்கிய நிலையில் இருக்கிறோம் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. இந்த நாட்டிலே எழுந்த பெருத்த முழக்கத்திற்குப் பிறகு ஆளும் கட்சியினரின் திருப்திக்காக வேண்டுமென்றால் பெருத்த கூச்சலுக்குப் பிறகு என்று சொல்லுகிறேன்—பெரிய கூச்சலுக்குப் பிறகு இந்த நாட்டில் ஒன்றிரண்டு தொழிற் சாலைகள் இந்த மாநிலத்திற்கு கிடைத்திருக்கின்றன. அந்த அளவில் ஒன்றிரண்டு திட்டங்கள் இந்த மாநிலத்திற்கு கிடைத்திருக்கின்றன.

சேலம் உருக்குத் தொழிற்சாலை ஏற்படுவது 1938-வது ஆண்டிலிருந்தே ஆராய்ச்சியில் தான் இருந்து வருகிறது. தூத்துக்குடி ஆழகடல் திட்டம், சேதுசமுத்திரத் திட்டம் இந்தத் திட்டங்களை எல்லாம் இதில் இடம் பெறாத நிலையில் இருக்கிறது. ஏறத்தாழ ஐநூறு மைலுக்கு மேல் இலங்கையை சுற்றிச் செல்லுகின்ற அனாவசியமான பயணத்தை தூத்துக்குடிக்குச் செல்லுகின்ற கப்பல்கள் தவிர்க்க முடியும், இப்படிப்பட்ட திட்டம் இதில் இடம் பெறவில்லை. முக்கியமாக நாம் எந்த அளவுக்குத் தொழில் துறையில் பின்தங்கியிருக்கிறோம் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம நான் எடுத்துச் சொல்லவில்லை, ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 1958-59-ம ஆண்டு கணக்குப்படி சர்க்கரை உற்பத்தி, பீகாரில் 311 ஆயிரம் டன்னாகவும் பம்பாயில் 321 ஆயிரம் டன்னாகவும், உத்திர பிரதேசத்தில் 888 ஆயிரம் டன்னாகவும், தமிழகத்தில் 74 ஆயிரம் டன்னாகவும் இருக்கிறது. இப்போது வேண்டுமென்றால் சிறிதளவு ஏறியிருக்கலாம். ஆனால் நான் முக்கியமாக குறிப்பிட விரும்புவது "தென்இந்தியா, பம்பாய், இவைகளைப்போல் உத்திர பிரதேசம், பீகார், ஆகிய மாநிலங்கள் கரும்பு விளைச்சலுக்கு ஏற்றவை அல்ல. எனினும் பல ஆலைகள் அங்கு நிலைத்துவிட்டன" என்று 'இந்தியப் பொருளியல்' என்று புத்தகத்தில் 196-வது பக்கத்தில் டாக்டர் பா. நடராஜன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER: The hon. Member has already taken 25 minutes.

திரு. மு. கருணாநிதி: இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

MR. SPEAKER: Then it will be against the rules and regulations. இரண்டு நிமிடங்கள் தான் இனி கொடுக்கமுடியும். அதற்குள் முடித்துவிடுங்கள்.

திரு. மு. கருணாநிதி: மேலும் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். "பம்பாயில் பஞ்சாலைத் தொழிலும், உத்திரப் பிரதேசம், பீகார் மாநிலங்களில் சர்க்கரை தொழில்களும், வங்கத்தில் சணல் தொழிலும், வங்கம், பீகார் மாநிலங்களில் நிலக்கரிச் சுரங்கங்களும் செழித்துள்ளன. இவ்வாறு ஒரே தொழில் ஓரிடத்தில் செழிப்புறுவதால், அத்தொழிலில் ஏற்படும் தளர்வு அங்குள்ள மக்களை அல்லற்படுத்தும். ஓரிடத்திலேயே ஏற்படும் தொழிற்செறிவால் ஏனைய மாநிலங்கள் புறக்கணிக்கப்படலாம். அத்துடன் தொழில்கள் ஓரிடத்தில் திரண்டு செறிவதால் போர்க்காலத்தில் அப்பகுதிகள் அழிக்கப்படும்போது நாடே அவதியுறும்" என்று டாக்டர் பா. நடராஜன் அவர்கள் "இந்தியப் பொருளியல்" என்ற புத்தகத்தில் 174-வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த முக்கியத்துவத்தை கருதியாவது இந்தத் தொழில் நிலையங்கள் எல்லாம் ஒரே இடத்தில் குவிந்திருப்பது அபாயகரமானது என்பதை உணர்ந்து, பின் தங்கிய இடங்களில் முதன்மையாக இருக்கின்ற நம்முடைய தமிழகத்திற்கு நல்ல பல பெரிய திட்டங்களை இந்திய அரசினிடமிருந்து நமது அமைச்சர்கள் போராடிப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





இப்பொழுது ஏற்கனவே நான்கு கோடி ரூபாய் மத்திய அரசிலிருந்து கிடைக்கக்கூடிய தொகை வெட்டப்பட்டிருக்கிறது. இம்மாதிரி வெட்டப்பட்ட தொகைகளை துணிச்சலாக கேட்டுப் பெற வேண்டும். மேற்கு வங்காளத்தில் சங்கர்தாஸ் பானர்ஜி அவர்கள் மத்திய அரசாங்கத்தை கண்டித்து எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். நியாயமான பல வரிப் பங்குகளை கொடுக்காமல் இருப்பது நியாயமா என்று கேட்டு போர்க் குரல் எழுப்பியிருக்கிறார்கள். காலஞ் சென்ற திரு. பி.ஸி. ராய் அவர்கள் தங்கள் மாநில கோரிக்கையை எடுத்துக்கூறுகின்ற நேரத்தில் எங்களுடைய திட்டத்தை நாங்களே வகுத்துக் கொள்கிறோம், அதைப்பற்றி திட்டக் குழுவுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, எங்கள் நாட்டில் செய்ய வேண்டியதை நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்று போர்க் குரல் கொடுத்திருக்கிறார்கள். அத்தகைய துணிச்சலை நம்முடைய அமைச்சர்கள் பெற வேண்டும். நம்முடைய அமைச்சர்கள் எப்படியிருக்கிறார்கள் என்றால், வெளியில் 10, 20 பயில்வான்களை அடித்து வீழ்த்திவிட்டு, வீட்டுக்கு வந்தவுடன், "பெண்டாட்டி தாயே, பெரிய தாயே!" என்று சரணடைகிற பயில்வானைப் போலத் தான், நமது அமைச்சர்கள், என்னைப்பார்த்து "உங்களை ஒழித்துவிடுகிறோம் பாருங்கள்" என்று உறுமுகிறார்கள். ஆனால் மத்திய சர்க்காரிடத்தில், டெல்லி சர்க்காரிடத்தில் போய் மட்டும், வெளியில் குத்துச்சண்டையெல்லாம் போட்டுவிட்டு வீட்டுக்குப் போனவுடன் வேறு விதமாக நடந்துகொள்ளும் பயில்வானைப் போல் நடந்து கொள்கிறார்கள். இந்நிலை நமது அமைச்சர்களுக்கு மாறவேண்டும் என்றும், டெல்லி சர்க்காரிடத்தில் நமது கோரிக்கைகளை துணிச்சலாக கேட்டுப்பெறவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு சொல்லொணாத அவதிக்கு ஆளாகியிருக்கின்ற பொற்கொல்லர்களின் நிலைமையை ஆராய்ந்து, வேலையற்றிருக்கின்ற இவர்களுக்கு வேலை தேடித்தருவதற்கு இந்த மாமன்றத்தில் கொலுவீற்றிருக்கின்ற மந்திரிகள் வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். பொற்கொல்லர்கள் இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் என்ற ஆற்றில் மிதந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நீந்தத் தெரியாது, நீச்சல் பழக்கம் இல்லாதவர்கள், அவர்களைக்காப்பாற்ற வேண்டியது இந்த அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கனம் காமராஜ் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை தொடர்ந்து வாசித்துக்கொண்டு வருகிறேன். அவர் இளம் வயதினராக இருக்கும்

போது, அவருடைய நண்பர் ஒருவரை நீந்தக் கற்றுக் கொடுப்பதற்காக நீந்து நீந்து என்று சொன்னாராம், அந்த நண்பர் மறுக்கவே பக்கத்திலுள்ள ஆற்றில் பிடித்து தள்ளி விட்டாராம், பின்னால் ஆற்றில் நீந்தத் தெரியாமல் நண்பர் உயிருக்கு மன்றாடித் திணறித் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது அந்த நண்பரை, கனம் காமராஜ் அவர்கள் கரைக்கு ஏற்றினாராம். கரையேற்றி காப்பாற்றிய இந்த நிகழ்ச்சியைப்படித்து நான் மெத்த சுவைத்தேன். அந்த முறையில் இன்று வேறு வேலைகள் எதுவும் தெரியாத இந்தப் பொற்கொல்லர்களை நட்டாற்றில் பிடித்து தள்ளியிருக்கிறீர்கள். அன்று ஆற்றில் தள்ளிவிட்டு பிறகு நண்பரை கரையேற்றியது போல் இவர்களையும் காப்பாற்றுகின்ற வகையில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து உதவி செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இத்தகைய சந்தர்ப்பத்தில் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதையும், வரவேற்கத் கூடிய பாக்கியம் நமக்கு கிட்டவில்லையே என்ற வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன், போற்றுக்கிறேன், பாராட்டுக்கின்றேன். அத்தனைக்கும் அது பொருந்தும் என்பதை நான் தைரியமாக கூறிக்கொள்ள முடியும். அந்த விதத்தில் நமக்கு இருக்கின்ற நிதி வசதிகளை எல்லாம் எடுத்துச்சொல்லி, அதில் ஏற்படுகின்ற செலவினங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி பற்றாக்குறை எந்த அளவுக்கு ஏற்படுகிறது என்பதை எடுத்துச்சொல்லி—“மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல்”— என்ற வாக்கின் படி நம்முடைய பற்றாக்குறைகளை எல்லாம் எடுத்துச்சொல்லி, இந்தப் பற்றாக்குறையைப் போக்க, வரவு இனங்களையும் எடுத்துச்சொல்லி இறுதியில் வரி எதுவுமில்லை என்ற இனிப்பான செய்தியையும் கொடுத்திருக்கிறார்கள். இந்த முறையில் அமைந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை மிகவும் போற்றுதற்குரிய ஒரு விருந்து என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். வரி போட்டால் எதிர்க் கட்சியினர் எதிர்ப்பார்களே, அல்லது வரி போட்டால் எதிர்க் கட்சியினர் ஆதரிக்கமாட்டார்களே என்ற பயத்தால் அமைச்சர் அவர்கள் வரி போடாமல் இருக்கவில்லை. எந்த விதத்தில் வரிகளைப் போட வேண்டும், எப்போது போட வேண்டும் என்று நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பு அமைச்சர்களுடையது. இதை எதிர்க்கவும், ஆதரிக்கவும் இந்த சபைக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இந்த சபை வரி கொண்டு வந்தால் ஆதரிக்காமல் விட்டுவிடுமே என்ற எண்ணத்துடன்—அந்த பயத்திடன்—வரி போடாமல் இல்லை. அப்படி எண்ணியிருந்தால் எப்போதுமே எந்தவிதமான வரிகளும் இல்லாமல் நிதிநிலை அறிக்கையை கொண்டு வந்திருக்கலாம். அதற்கு அவர்கள் அஞ்சவில்லை. ஆளும் கட்சி



யைச் சேர்ந்தவர்கள், அரசாங்கத்தைத் தாங்குகிறவர்கள் வரி போட்டு விட்டால் எதிர்க்கட்சிக்காரர்கள் நிராகரித்து விடுவார்களோ, அல்லது சதித் திட்டம் என்று கூடச் சொல்லி விடுவார்களோ என்று அஞ்சி விடவில்லை. நிராகரிக்கிறேன் என்று கூறி விட்டால் என்ன செய்வது என்று பயந்திருந்தால், இத்தனை ஆண்டுகளில் இத்தகைய ஒரு முன்னேற்றத்தைக் கண்டிருக்க முடியுமா? வரி போடுவதால் எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்று ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் ஒரு போதும் எண்ணியது கிடையாது—எதிர்க் கட்சிக்காரர்களின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சியவர்கள் இல்லை அமைச்சர்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் இதை நிராகரித்து ஆதரிக்க முடியவில்லை என்று வருந்துகிறார்களே என்று அஞ்சியவர்களும் அல்ல. நம் நாட்டுக்குத் தலைமை தாங்குகிற அமைச்சர்கள் நம் நாடு அடிமைத் தளையில் அல்லலுற்று இருந்தபோது, அடிமை நிலையில் நாடு இருந்த நிலைமையை அறிந்த தலைவர்கள், சுதந்திரத்தின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்தவர்கள், விடுதலை என்றால் என்ன என்று விளக்கம் தந்தவர்கள், அவர்கள் வரி போடுகிறார்கள் என்றால் அது நியாயமாகத் தான் இருக்க முடியும்—நாட்டுக்குத் தேவையாகத் தான் இருக்க முடியும். நான் 1957-ம் ஆண்டு இந்தச் சட்ட சபைக்கு வந்தபோது, தமிழ் மாநிலத்தில் வரவு-செலவு ஏறத்தாழ 56 கோடி ரூபாய்—ஆனால் இன்று, 1963-64-ம் ஆண்டில் 127 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இப்படி ஒன்று அல்லது ஒன்றேகால் மடங்கு அளவுக்கு அதிகமாக்கியிருக்கிறோம் என்று சொன்னால், வரியில்லை என்று சொன்னால் எப்படி முடியும். எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்ற, என்னென்ன வகையில் நிதி திரட்டலாம் என்று ஆலோசித்து, எந்தெந்த சமயத்தில் கடன் வாங்கவேண்டுமோ அவைகளை வாங்கி, யார் யாருக்கு வரி போட முடியுமோ, அவர்களுக்கெல்லாம் வரியைப் போட்டு, திட்டங்களையெல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றி, 56 கோடி ரூபாய் அளவில் இருந்ததை இன்று 127 கோடி ரூபாய் அளவுக்கு அதிகப்படுத்தி வந்திருக்கிறோம் என்றால் அதற்காகவாவது எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் பாராட்டியிருக்கலாமே? வரியில்லை என்று அவர்கள் அதிகம் சிரமப்பட்டிருக்கிறார்கள். வரியில்லாமல் போய் விட்டது என்றும், சதித் திட்டம் என்றும் கூறுவதற்கு மதி வந்து விட்டதே ஒரு அங்கத்தினருக்கு என்று நினைக்கும்போது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. வேறு சிலர் சொன்னார்கள், இந்த ஆண்டில் இல்லா விட்டால் என்ன, போன ஆண்டில் இருந்ததே, போன ஆண்டில் போட்ட வரியை இந்த ஆண்டில் தானே வசூல் செய்யப் போகிறார்கள், ஆகையால் போன ஆண்டில் போட்டால் என்ன, இந்த ஆண்டில் போட்டால் என்ன என்று. குறை கண்ட இடத்தில் குறைகளை எடுத்துச் சொல்லி, நிறைவு கண்ட இடத்தில் நிறைந்த மனதோடு நல்ல வார்த்தை சொல்லி ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்கள் பேசியதாக என் போன்றவர்களுக்குத் தோன்றவில்லை. எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் கருணாநிதி அவர்கள் பட்டம் பெற்ற—பி.ஏ., எம்.ஏ., பட்டம் பெற்ற—பெண்கள் கார்க்கறியிலே சோப்பைப் போட்டுச் சமைத்து

விடுவார்கள், கையிலே சோப் போட்டுக்கொண்டு சோறு போடுவார்கள், அது போல இருக்கிறது என்று சொன்னார்கள். இப்படி அவர்கள் சொன்னது படித்த பெண்களை மிகவும் மட்டம் தட்டுவது போலத் தோன்றுகிறது. இங்கே இருக்கக் கூடிய நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய மனைவி மிகவும் படித்தவர்கள்—பட்டம் பெற்றவர்கள், இந்த நாட்டில் படித்தது போதாது என்று அயல்நாடு சென்று படித்து வந்தவர்கள் அந்தளைப் படித்துப் பட்டம் பெற்ற அந்தப் புண்ணிய அம்மையார், நமது எதிர்க் கட்சித் தலைவருக்கு சோப் கையோடு சோறு போடுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். அவ்வாறு பி.ஏ., எம்.ஏ., படித்துப் பட்டம் வாங்கியவர்கள் சோப் போட்டு விட்டு சோறு போடக் கூடிய அத்தனை ஞானம் இல்லாதவர்களாக இருக்க மாட்டார்கள். இப்படிப் பேசியதற்குக் காரணம் கனம் அங்கத்தினர் கருணாநிதி அவர்களுடைய மனைவியார் பி.ஏ. பட்டம் பெற்றவர் இல்லை என்பது தானோ என்று எண்ணுகிறேன் . . .

**கனம் சபாநாயகர்:** அவரை 'அட்டாக்' செய்வதற்காக, அவருடைய மனைவியை விவாதத்தில் இழுக்கிறீர்களே.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** கனம் அங்கத்தினர் பெண்களைப் பற்றிக் கூறிய காரணத்தினால் நாங்கள் அவர்களுடைய மனைவிகளைப் பற்றித் தான் சொல்ல வேண்டும். நாங்கள் ஆண்களைப் பற்றிச் சொல்ல முடியாது . . .

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, படித்த பெண்கள் அத்தனைபேரும் அப்படியே செய்கிறார்கள் என்று அவர் கூறவில்லை. அப்படி ஒரு பெண் செய்தால் எப்படி இருக்குமோ என்று கற்பனை அளவில்தான் சொன்னார்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** அந்தக் கற்பனைக்கும் படித்த பெண்கள் தானா ஆளாக வேண்டும்? படிக்காத பெண்கள் சோப்பே போட மாட்டார்கள், சீயக்காய் தான் போடுவார்களா என்று கேட்கிறேன்.

எல்லையிலே தொல்லை கொடுக்கிற சீனர்களை விரட்ட வேண்டும், திட்டமும் நடக்கவேண்டும்—இப்படி இரண்டையும் இட்டுச் செல்லும் அளவில் நல்ல விதமான சாதனைகளோடு கூட இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று என் போன்றவர்கள் பெருமையோடு கூறிக்கொள்ள முடியும். சேல்ஸ் டாக்ஸ் வருமானத்தைப் பார்த்தால் 25¾ கோடி ரூபாயாகக் கூடியிருக்கிறது. சிக்கனம் செய்ய வேண்டிய இடத்தில் சிக்கனம் செய்கிறோம். நான்கு ஆண்டுகளுக்கு முன் மோட்டார் வாகனங்களின் வரி மூலமாக 4 கோடி ரூபாய் வருமானம் இருந்தது இன்று 11½ கோடி ரூபாயாகக் கூடியிருக்கிறது. இதெல்லாம் நாட்டின் முன்னேற்றம் இல்லையா? போன யுத்த காலத்தில் நம் நாடு இருந்த நிலைமையைப்பற்றி ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குண்டூசி கூடச் செய்ய முடியாமல் அன்று வாழ்ந்து வந்தோம். யுத்தம் ஆரம்பித்த காலத்தில் தாள்களைக்

குத்த பள்ளி மாணவர்கள் தங்களுடைய விடைத்தாள்களை குத்த சப்பாத்தி முள்ளையும், கருவேலம் முள்ளையும் உபயோகப் படுத்தும் நிலையில் அன்று வாழ்க்கையைக் கழித்தோம் என்பதை இந்த சமயத்தில் கூறிக்கொள்கிறேன். அந்த விதமாக இல்லாமல் இன்று குண்டூசி மட்டுமல்ல, ஆணி முதல் ஆகாய விமானம்வரை யில் செய்கிறோம். பெங்களூரில் செய்கிற வாட்ச் மிகவும் உயர் வாக இருக்கிறது. தரத்தில் உயர்ந்திருக்கிறது. அன்னிய நாடு களிலிருந்த வருகின்ற வாட்ச்களைவிட நம் நாட்டில் ஹிந்துஸ்தான் கம்பெனியில் செய்யப்படுகிற வாட்ச் தரத்தில் உயர்ந்திருக்கின்றன என்று கேட்கும்போது, அந்தச் சாதனையைப் பற்றி சந்தோஷப் படவேண்டிய நிலையில் இருக்கிறோம். வரி போடவில்லை என்று பாராட்ட முடியாவிட்டாலும், இதற்காகவாவது பாராட்டக் கூடாதா என்று தோன்றுகிறது. ஆகவே இந்தத் திட்டமானது மிகவும் உன்னதமான திட்டம். இந்த நிதி நிலை அறிக்கையை மிக நல்ல முறையில் அமைத்துத் தந்திருக்கிறார்கள். நெருக்கடி நிலை வந்திருக்கிறது என்று திட்டத்தை கைவிட்டு விடவில்லை.

விவசாயத்தை எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, 2 கோடி ரூபாய் தக்காவிக் கடன் கொடுப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பம்ப் செட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 2 லட்சத்து 30 ஆயிரம் டன் உணவுப் பொருள்களை அதிகமாகத் தயாரித்திருக்கிறோம் என்று பெருமையோடு கூறிக்கொள்ளும் வகையில் திட்டம் நிறைவேற்றும் நிலையில் ஆட்சி நடத்தும் அமைச்சரவையைப் பாராட்டாமல் என்ன செய்ய முடியும்? கல்வியில் பார்க்கும்போது ஏராளமான புதிய பள்ளிகள். அதில் 40 பள்ளிகள் பெண்களுக்காகவே ஆரம்பிக்கப்படும் பள்ளிகள். பெண்கள் கல்வி விஷயத்தில் அமைச்சரவை அதிக அக்கறை காட்டுகிறார்கள். அதே போலத் தொழில்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சர்க்கரை ஆலை, கூட்டுறவு முறையில் நூற்பு ஆலை, சிமெண்ட் ஆலை இருக்க வேண்டும் என்ற முறையில் இன்றைக்குத் தொழில் வளம் வளர்ந்து வருவதைப் பாராட்டு கிறேன்.

அடுத்தபடியாக நெல்லையில் இருக்கும் ஒரு சில தேவைகளைப் பற்றி சில வேண்டுகோளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ரொம்ப நாட்களாக நாங்கள் மருத்துவக் கல்லூரி நெல்லைக்கு வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். சேலத்திற்கு மருத் துவக் கல்லூரி வருவதை மறந்தும் கூட விட்டுவிட மாட்டேன் என்று ஒரு மாதிரியாகப் பேசும்போது நெல்லையைச் சேர்ந்த என் போன்றவர்களுக்கு பயம் தோன்றுகிறது. நெல்லைக்கு இல்லாமல் போய் விடுமோ என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது. சேலத்திற்கு என்ஜியனிரிங் கல்லூரியைக் கொடுக்கிறோம் என்று சொல்லி விட்டு, மருத்துவக் கல்லூரியை எங்கு வைப்பது என்று நிர்ணயிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார். சேலத்திற்கு என்ஜினீயரிங் கல்லூரி என்று சொல்லும்போதே, நெல்லைக்கு மருத்துவக் கல்லூரி என்று சொல்லியிருந்தால் எங்களைப் போன்றவர்கள் சந்தோஷம் அடைந் திருப்போம். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த, பேச முடிந்தும்

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [7th March 1963

பேச முடியாத நிலையில் இப்போது தலைமை ஆசனத்தில் சபாநாயக ராக இயங்கிக்கொண்டிருக்கிறார்—மருத்துவக் கல்லூரி எங்கள் ஊருக்கு வந்தால் அவர் மட்டிலா மகிழ்ச்சி அடைவார். அதைப் போலவே அந்த மாவட்ட எம்.எல்.ஏ-க்கள், எங்களுக்குப் பின்னால் இருக்கக் கூடிய கோடிக் கணக்கான மக்கள்.

அதோடு கூட எங்கள் மாவட்டத்தில் சூட்டுப்பத்தை என்ற இடத்தில் காகம், குருவி பறந்தால் கூடக் கருகி விழுந்துவிடும் என்று சொல்லுவார்கள். அந்த இடத்தில் சுண்ணாம்புக்கல் அதிக மாக இருக்கிறது. அங்கே ஒரு சிமெண்ட் ஃபாக்டரி வைக்கலாம். அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் துறையில் வைத்து நடத்துவதற்குக் கூடத் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று அயர்ன், அறுபது சதவிகிதம் இரும்புச் சத்து இருக்கக் கூடிய தாது. கனம் அங்கத்தினர் பாலகன் அவர்கள்—இன்று இங்கு வரவில்லை—எங்கு சென்றாலும் அந்த மண்ணை எடுத்துச் சென்றுக்கொண்டிருக்கிறார். எந்த மந்திரி வந்தாலும் இதைக் காட்டுவது அவருடைய வழக்கம். நெல்லைக்கு வேறு எந்தத் திட்டமும் வரவில்லை. இந்த மாதிரியான தொழில் வாய்ப்பை நெல்லைக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக தங்கக்கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி ஒரு வார்த்தை. பதினான்கு காரெட்டில் நகைகளைச் செய்து போட்டுக் கொள்ள பெண்கள் தயார். செய்துகொடுக்கத் தொழிலாளர்களும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் எங்கே வாங்குவது, எப்படி வாங்குவது, எப்படி கிடைக்கும் என்று அவர்களுக்குத் தெரியாத நிலை இருக்கிறது. அவர்களுக்கு ஒரு சௌகரியத்தை இந்த அரசாங்கம் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பதினாலு காரெட் நகைகளைப் பற்றி பேசும்போது எதிர் தரப் பிலுள்ள ஒரு அங்கத்தினர் 14 காரெட் நகைகளைப் போடாதீர்கள் என்று சொல்லி, காதையும் மூக்கையும் குத்திக்கொள்ளும் பழக்கம் மேல் நாட்டில் கிடையாது. அவர்கள் 9 காரட்டில் செய்யப்பட்ட நகைகளைக் கொண்டு கூட ஆறுதல் அடைந்து விடுவார்கள், மூக்கு காது குத்திக்கொள்ளுகிற பழக்கம் இல்லாத காரணத்தினால் ஸ்ப்ரிங் கம்மல் போட்டுக்கொள்வது அவர்களுடைய வழக்கம், அதனால் புண் வந்து விடாது. இங்கு அப்படியல்ல, காதையும் மூக்கையும் குத்திக் கம்மல் போட்டுக்கொள்கிறார்கள், ஆகவே காதிலும் மூக்கிலும் புண் வந்து விடும், ஆகவே காங்கிரஸ் கட்சியில் இருக்கிற தாய்மார்கள் இந்தக் காதுப்புண்ணுக்கும் மூக்குப் புண்ணுக்கும் நிவர்த்தி தேடவேண்டியது அவர்களுடைய பொறுப்பு என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அங்கத்தினர் ஒருவர் ஓர் அருமையான யோசனையைச் சொன்னார்கள். இந்த சமயத்தில் ஆளும் கட்சியில் இருக்கிற—காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த—பெண்கள் மட்டுமல்ல, இந்த நாட்டுப் பெண்களே பாரதத் தாயினுடைய புனித வதனத்தைப் பகைவனுடைய பகைமைக் கணை புண் படுத்தியிருக்கும்போது, பாரத நாட்டிலுள்ள அத்தனை



7th March 1963] [திருமதி. ராஜாத்தி குஞ்சிதபாதம்]

பெண்களும், காதிலும், மூக்கிலும் புண் வந்துவிடும் என்று பயந்து சர்க்காருடைய திட்டத்தை நாங்கள் ஆதரிக்காமல் இருந்து விட மாட்டோம் என்று தைரியமாக எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். காதிலே புண்வருகிறது என்றால் எத்தனை பேர்கள் 22 மாத்துத் தங்கம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்கிறேன். 22 மாத்துத் தங்கத்தை பெண்கள் அநேகமாக காதிலும், மூக்கிலும் போடுவதில்லை. அப்படி காதிலும், மூக்கிலும் குத்திக்கொண்டு நகைகள் போட்டுக்கொள்கிறவர்கள் யார் என்றால், அவர்கள் ஏழை மக்கள் தான். அவர்கள் 22 மாத்துத்தங்கம் போட்டுக் கொள்ளக் கூடிய பொருளாதார நிலைமையில் இல்லை. சந்தைக் கடையில் ¼ ரூபாய்க்கு கம்மலும், ¾ அணாவுக்கு மூக்குத்தி வாங்கிப் போட்டுக்கொள்ளும் பொருளாதார நிலையில் தான் அவர் கள் இருக்கிறார்கள். அவர்கள் 22 காரட் நகை காதிலும் மூக்கிலும் அணிந்து கொண்டிருந்தால், கனம் அங்கத்தினர் அவர்களுடைய அனுதாபம் அவர்களுக்கு உரியதாக இருந்திருக்கலாம். அப்படி யிருக்கும்பொழுது அவர்கள் காதை மூக்கை குத்திக்கொண்டு 14 காரட் நகை அணிந்துகொள்வதால் புண்ணாக்கிக் கொள்வார்கள், அவர்களுக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தாய்மார்கள் அனுதாபம் காட்டவேண்டாமா என்று கேட்கிறார்கள். ஏற்கெனவே நான் சொன்னபடி ஏழை மக்கள் தான் காது, மூக்கு குத்திக்கொள் கிறார்கள். அவர்கள் 22 மாத்து தங்க நகையை போட்டுக்கொள்ள வில்லை. அப்படிப்பட்ட பொருளாதார நிலையில் அவர்கள் இல்லை. ஆகவே, இப்படிக் கூறுவது ஏதோ காது குத்துகிற வேலையாக இருக்குமோ என்று சந்தேகப்படவேண்டிய நிலைமையில் தான் இருக்கிறேன். 10-00 a.m.

உணவு உற்பத்தி பெருகவேண்டும் என்று சொல்லி, விவசாயி களுக்கு எத்தனையோ வசதிகளையும், சலுகைகளையும் அளித்துக் கொண்டிருக்கிறோம். எத்தனையோ கடன்கள் அளித்துக்கொண் டிருக்கிறோம். தக்காவிக் கடன்கள் கொடுக்கிறோம். உரம் வேண்டுமா, வேண்டாமா என்று விவசாயிகளைக் கேட்கக்கூடிய நிலைமையில் இன்றைக்கு உரம் நல்ல முறையில் விநியோகப்படு கிறது. இப்படியிருக்கும்பொழுது ஏழைகளுக்கு எப்படி தங்கம் பயன்பட்டது என்றால், அவர்கள் கையில் தங்க நகை இருப்பது கரெண்டு அகௌண்டு பாஸ் புக் இருப்பது மாதிரி இருந்தது. அவர்கள் நினைத்தால் செக்கைக் கிழித்துக்கொடுப்பது மாதிரி, தங்க நகையை அடகு வைத்து கடன் பெற்றுக்கொண்டு வந்தார் கள். இதற்காக விவசாயப் பெண்களுக்கு 22 காரட் நகை அணிந்துகொள்ள எக்ஸெம்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட் கப்போவதில்லை. அவர்கள் பணமாக கையில் வைத்திருக்க முடியாது; அன்றாடம் சேமித்து வைக்கலாம் என்றால் அவர்கள் வீட்டில் பணத்தை நோட்டுக்களாக அடுக்கி பெட்டியில் வைத்து பூட்டி திறவுகோலை கையில் வைத்துக்கொள்ள முடியாது, இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்ட முடியாது. பெற்ற பிள்ளைகளைக் கூட வயல் வரப்பில் தொட்டிலில் போட்டுவிட்டு வேலை செய்ய வேண்டிய நிலைமையில் விவசாய பெருங்குடி மக்கள் இருக்கிறார்கள்.

7th March 1963] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

கொடுப்பதற்கு தயங்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதை அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்று தான் நினைக்கிறேன். வரி போடுவதற்கு வேறு வழியில்லை என்று நினைத்துத் தான் வரி போடவில்லை என்று சொல்லுகிறார்கள். திரு. மு. கருணாநிதி அவர்கள், கணவன் மனைவியை அடி அடி என்று அடித்துவிட்டு, வெளியில் சென்று வந்த பிறகு 'உன்னை இனிமேல் அடிக்கப் போவதில்லை' என்று சொன்னபொழுது, மனைவி 'எப்பொழுது என் பேரில் காதல் பிறந்தது' என்று கேட்டாள் என்று சொன்னார். அவர்கள் கற்பனையில் எழுந்த கதைகளிலே கூறப்பட்டிருக்கிற கருத்தையே இங்கு கூற விரும்புகிறேன். அடிக்கிற கை தான் அணைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வரி போடுகிற கை தான் மக்களை அணைக்கும் கை. மக்களுக்கு வரி போட்டு வேதனை கொடுக்கிற கைதான் அவர்களுக்கு வேண்டிய சாதனைகளைச் செய்கிற கை, சலுகைகளைக் கொடுக்கிற கையாக இருக்கும் என்பதை அவர்கள் உணரவேண்டும். வரி போடுகிறார்கள் என்றால் அதே சமயத்தில் மக்களுக்கு வேண்டிய வசதிகளையும், சாதனைகளையும் அளிக்கிறார்கள். அரசாங்கம் எல்லாவற்றையும் ஆராய்ந்து பிறகு தான் வரி போட்டிருக்கிறார்கள், தாங்கக்கூடியவர்கள் பேரில் தான் வரி போட்டிருக்கிறார்கள். அதை மக்கள் ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கையை முழுமனதோடு வரவேற்று, கனம் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய ஆதரவை தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. அ. ராகவரெட்டி: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் நிறைய அனுபவம் வாய்ந்தவர்கள். அவர் வரி இல்லாமல் இந்த வருஷத்தில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருப்பதுபற்றி எல்லா பத்திரிகைகளும் பாராட்டியிருப்பதைப் பார்த்தோம். ஆனால் சென்ற மாதம் 27-ம் தேதி 100-க்கு 75 பேர்களாக இருக்கும் விவசாய மக்கள் மீது வரியை சுமத்திவிட்டு, இந்த மாதம் முதல் தேதியன்று வரி இல்லாமல் ஒரு வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்திருப்பது அவருடைய சாமர்த்தியத்தைத்தான் காட்டுகிறது. எனக்கு முன்பு பேசிய சிலர் இந்த வரியை ஆதரித்தும், எதிர்த்தும் பேசினார்கள். இந்த வரியை ஆதரித்தாலும், எதிர்த்தாலும், போடுகிற வரியை சர்க்கார் போட்டுத்தான் தீருவார்கள் என்ற ரீதியில் எனக்கு முன்பு பேசிய அம்மையார் அவர்கள் பேசினார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். எப்படியிருந்தாலும், வரியைக் கட்டித்தான் ஆகவேண்டும். துட்டு இருந்தாலும், இல்லாவிட்டாலும், வரி கட்டித்தான் ஆக வேண்டும் என்ற சங்கதி எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

நம்முடைய மாநிலத்திலே, நம்முடைய நாட்டிலேயே, மற்ற தொழிலாளர்களுக்கு இருப்பதுபோல விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு அஸோசியேஷன் இல்லை. அவர்கள் எல்லோரும்

அவர்கள் வீட்டுக் கூரையில் ரூ. 100, 50 நோட்டாக வைத்திருந்தால் காக்காய் கொத்திக்கொண்டு போகும், அல்லது காற்று அடித்துக்கொண்டு போகும் நிலைமைதான் ஏற்படும். ஆகவேதான் அவர்கள் கழுத்திலும் கையிலும் தங்க நகையாக அணிந்துகொண்டு விவசாயம் செய்யப் போகிறார்கள். அந்த நகைகளை அடமானம் வைத்து, வேண்டிய கடனை வாங்கிக்கொண்டு, பின்னால் அறுவடை முடிந்த பிறகு, நெல்லை விற்று தங்கள் நகையை மீட்டுக் கொள்வார்கள். ஆகவே, அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். கிராமங்களில் இருக்கும் கிரெடிட் சொஸைடிகள் மூலமாக வேண்டிய கடனை 30 நாட்கள், 90 நாட்கள், அல்லது 6 மாதத் தவணையில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பயிர் எத்தனை காலப் பயிரோ அதற்குச் தகுந்தாற்போல் தவணை இருக்க வேண்டும். அவர்களுக்கு சொந்த ஜாமீன் பேரிலேயே கடன் கொடுக்கவேண்டும். அரசாங்கத்தினிடம் கடன் வாங்குவதா என்று அலுத்துப்போகக்கூடிய நிலைமை ஏற்படக்கூடாது. அதற்குப் பெரிய விண்ணப்ப பாரம் ஒன்றும் இருக்கக்கூடாது. பனையேறி லைசென்ஸ் வாங்க வேண்டுமென்றால், கணக்குப்பிள்ளை, ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், டெப்டி கலெக்டர் இவ்வளவு பேர்களிடத்திலும் போய் பாரம் கிடைக்காமல் என் போன்ற அங்கத்தினர்களிடம் வந்து பாரம் வாங்கிக்கொடுக்கவேண்டுமென்று கேட்கக்கூடிய நிலைமை இருப்பதுபோல் இருக்கக்கூடாது. காலா காலத்தில் தாமதமின்றி கடன் கொடுக்கவேண்டும். காலம் தவறி கடன் தொகை கிடைக்குமானால், கால்வாயில் வருகின்ற தண்ணீர் வற்றிப் போய்விடலாம், வாங்கின உரம் காய்ந்து போய் விடலாம், விதைத்த முளை காய்ந்து விடலாம். ஆகையால் உடனடியாகக் கவனித்து கடன் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அவர்களுடைய உழைப்புச் செல்வத்தையே நாணயமாக வைத்துக்கொண்டு, அவர்களுக்கு வேண்டிய கடனை காலாகாலத்தில் கொடுத்து, பிறகு அறுவடை காலத்தில் திரும்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கொஸின் விலை ஏறிவிட்டது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அதனால் ஏழை மக்கள் பாதிக்கப்படவில்லை என்று சொல்லத் தயாராக இல்லை. ஆனால் எத்தனையோ ரூபாய் செலவழிக்கிறார்கள் மக்கள். உதாரணமாக நான் ஒரு சம்பவத்தை கூற விரும்புகிறேன். ஒரு பெண் முதல் நாள் என்னிடம் 2 ரூபாய் வாங்கிக் கொண்டு போனாள். மறுபடியும் அந்தப்பெண் என்னிடம் 2 தினங்களுக்குப் பிறகு வந்து பணம் கேட்டாள். நேற்று முன் தினம்தான் 2 ரூபாய் கொடுத்தேனே என்று சொன்னேன். சினிமாவுக்குப் போனதாகச் சொன்னாள். என்ன சினிமா என்றால், "கொடுத்துவைத்தவளுக்குப்" போனேன் என்றாள். எவ்வளவு கொடுத்து வைத்தவளுக்குக் கொடுத்தாய் என்றால் ரூ. 1.33 கொடுத்துப் பார்த்தேன் என்று சொல்லக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது, நாட்டினுடைய சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு நமக்குப் பொறுப்பு இருக்கிறது, தொடர்பு இருக்கிறது, பங்கு இருக்கிறது என்ற உணர்வுடன், ஆண், பெண்கள் அத்தனை பேர்களும் இந்தக் கொஸினுக்கு 10 நயா பைசா கூட்

ஊரிடத்தில் கூடி, அவர்களுடைய கஷ்ட சுகங்களைப்பற்றி ஆலோசனை செய்து, அரசாங்கத்தினிடம் தங்களுடைய குறைகளைச் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. மற்ற தொழிலாளர்களுக்கு இருப்பது போன்ற நிலைமை அவர்களுக்கு இல்லாததுதான் இதற்கு முக்கியமான காரணம் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது கோல்டு கண்டிரோலை எடுத்துக்கொள்ளுங்கள். கோல்டு கண்டிரோல் வந்தபிறகு, 100-க்கு ஒருவர் இருக்கும் பொற்கொல்லர்களைப்பற்றித் தான் நாட்டில் எங்கு பார்த்தாலும் ஒரே பேச்சாக இருக்கிறது. 100-க்கு 75 பேர்களாக இருக்கும் விவசாயிகளைப்பற்றி யாராவது அப்படி பேசுகிறார்களா, அவர்கள் தரப்பிலே பேசுவதற்கு முன்வந்திருக்கிறார்களா என்றால், எனக்குத் தெரிந்தவரையில் யாரும் அம்மாதிரி முன்வரவில்லை என்று தான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு விவசாயி நமது அரசாங்கம் சொல்லுகிறபடி "பர்த் கண்டிரோலை" மேற்கொண்டாலும், இரண்டு குழந்தைகள் இருந்தால், ஒரு வருஷத்திலே நமது அரசாங்கம் போட்ட திட்டப்படி எவ்வளவு வருமானம் வரும், அந்த இரண்டு குழந்தைகளை படிக்க வைக்கவேண்டுமென்றால், அந்த வருமானத்திலிருந்து எவ்வளவு ஒதுக்கவேண்டும், வீட்டிலே யாருக்காவது நோய் வந்தால் வைத்தியம் செய்து கொள்ளுவதற்கு எவ்வளவு ஒதுக்கவேண்டும், சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் உச்ச வரம்பு பிரகாரம் இருக்கும் நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானத்திலிருந்து இந்த அவசிய தேவைகளுக்கெல்லாம் ஏதாவது அவர்கள் பணம் செலவழிக்க முடியுமா என்பதை நம்முடைய அரசாங்கம் ஆராய்ந்து பார்த்திருந்தால், இப்படியெல்லாம் செய்யமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். முக்கியமாக நமது நாட்டில் எத்தனையோ தொழில்கள் செய்யும் எல்லோரையும் விட்டுவிட்டு, விவசாயம் செய்பவர்களுக்கு மட்டும் நில உச்ச வரம்பு என்று வைத்து, அவர்களுக்கு ஏறக்குறைய நம்முடைய சர்க்கார் புள்ளிவிவரப்படி 3,000 ரூபாய் வரையிலே வருஷ வருமானம் வரவேண்டும் என்ற ஒரு திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக சென்னை நகரத்தில் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறவர்கள் ஒரு மாதத்திற்கு ரூ. 30,000 வருமானம் வரக்கூடியவர்கள் கூட இருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு ரூ. 30,000 வருமானம் பெறுகிறவர்களை விட்டுவிட்டு, விவசாயிகளை மட்டும் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. விவசாயம் செய்யும் என்னைப் போன்றவர்களைப் பற்றி எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர்கள் புள்ளி விவரங்கள் கூடக் கொடுத்தார்கள். ஆனால் என்ன கொடுத்தாலும் நம்முடைய சர்க்கார் அதைக் காதிலே போட்டுக் கொள்ளுவதில்லை. விவசாயம் செய்வது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளே இந்தத் தொழிலே வேண்டாம் என்று நினைத்து, வேறு ஏதாவது உத்தியோகத்தைத் தேடியோ அல்லது கூலி வேலை செய்தோ விவசாயிகள் பிழைக்கும்படி நம் நாட்டிலே ஒரு நிலைமை ஏற்படும் என்பதை நான் தெரி-





வித்துக்கொள்கிறேன். ஒரு புறத்திலே விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. மறு புறத்திலே அவர்களை மேலும் மேலும் நிர்ப்பந்தப்படுத்திக் கொண்டிருந்தால், எப்படி உணவு உற்பத்தி பெருகும் என்பது எனக்குப் புரியவில்லை. கிராமங்களுக்குச் சென்றால் ரெவென்யூ அதிகாரிகள், விவசாயிகளிடமிருந்து நில வரி, வீட்டு வரி, சர்க்கார் கடன் பாக்கி இவைகளை வசூலிப்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்து, விவசாயிகளைத் தொந்தரவு செய்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய அம்மையார் அவர்கள் சொன்னமாதிரி, பொன்னை வைத்து மார்வாரியிடமிருந்தோ அல்லது பணக்காரரிடத்திலிருந்தோ, அவசரத்திற்கு பணத்தைப் பெற முடிந்தது. சர்க்கார் பாக்கியாவது காலாகாலத்திலே கொடுக்கக் கூடிய நிலைமை இருந்தது. இப்பொழுது அதுவும் இல்லாமல் போய்விட்டது. கூட்டுறவு சங்கங்களிலிருந்து விவசாயிகளுக்கு அதிகமான அளவுக்கு பணம் கொடுப்பதில்லை என்று சொல்கிறார்கள். எனக்கும் கூட்டுறவு இயக்கத்திலே சம்பந்தம் உண்டு. நானும் இதற்கு ஒரு டார்ஜெட் நிர்ணயம் செய்யவேண்டுமென்றுதான் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது இருக்கும் திட்டத்தின்படி கடன் எப்பொழுது தேவைப்படுகிறதோ அப்பொழுது வாங்கிக்கொள்வதற்கு சந்தர்ப்பம் இல்லை. இன்று மனுப் போட்டால் குறைந்தது 3 மாதங்களுக்குப் பிறகுதான் கடனைப் பெற முடிகிறது. அப்படி இல்லாமல் இன்னும் கொஞ்சம் சுலபமாகவும், உடனடியாகவும் கடன் கிடைப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஆரணியாறு நீர்த் தேக்கத் திட்டத்தை எடுத்துக்கொள்வதாக சர்க்காரிலே ஒரு திட்டம் இருந்தது. அதைப் பற்றி நான் ஏற்கெனவே இந்த சபையில் சொல்லியிருக்கிறேன். சர்க்கார் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் சபாநாயகர் அவர்களே, நடப்பு ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை நமது நிதி அமைச்சர் அவர்கள் சபை முன்பு வைத்துள்ளார்கள். அதை வரவேற்று, சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

தேசியப் பாதுகாப்பை முன்னிட்டு, விவசாய, தொழில் உற்பத்திக்கான திட்டங்களிலும், பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான மின்சாரம், போக்குவரத்து போன்ற துறைகளிலும் நாம் இன்னும் அதிக அளவிற்கு முதலீடு செய்ய வேண்டுமென்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். விவசாயம், தொழில் வளர்ச்சி, பாசனத் திட்டங்கள், தொழில் நுட்பக் கல்வி போன்ற துறைகளுக்கு மாத்திரம் பாதிக்குமேல், 195 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவிலுள்ள நாங்கள் விவசாயத்தை நம்பித்தான் வாழ்கிறோம். விவசாயத்தைப் பெருக்குவதற்கு வேண்டிய பசுந்தாள் உரம், ரசாயன

அதையும் கொடுக்கத் தயாராகத்தான் இருக்கிறார்கள். சர்க்காருடைய வேலைகளில் எந்த முறையில் ஒத்துழைப்பு தேவையோ அவற்றைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். எவ்வளவு துரிதமாக ஒத்துழைக்க வேண்டுமோ அவ்வளவு துரிதமாக ஒத்துழைக்கவும் தயாராக இருக்கிறார்கள். அத்துடன் மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளையும் அவர்கள் பாராட்டி, அவர்களுக்கு ஒத்துழைப்பைக் கொடுக்கவும் தயாராகத்தான் இருக்கிறார்கள். அரசாங்கம் இடக்கூடிய வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற எவ்வளவு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமோ அதைக்கொடுத்துக்கொண்டும் வருகிறார்கள். ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் இந்த வேலைகளையெல்லாம் எவ்வளவு லகுவாகச் செய்ய முடியுமோ அவ்வளவு லகுவாகச் செய்து கொண்டு வருகிறார்கள். சோஷலிஸ எண்ணத்தைக் கொண்டவர்களாக இருப்பதால் நாட்டில் தொழில் துறை முன்னேற்றமடைந்து வருகிறது. அதன் மூலமாக பல தொழில்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டிருக்கின்றன. அப்படி பல தொழில்கள் ஏற்பட்டிருப்பதில் என் பகுதியிலுள்ள தாரங்கதாரா தொழிற்சாலை ஒன்று. இதற்கு என்று ஐந்து முதற்கொண்டு பத்து கோடி ரூபாய் வரையில் மூலதனம் போட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் பொறுப்பில் பத்து லட்சம் ரூபாய் வேறு கொடுக்கப்பட்டு அந்தத் தொழிற்சாலை அங்கு நடைபெற்று வருகிறது. இப்படி பல தொழிற்சாலைகள் நம் நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. சுமார் பத்து கோடி ரூபாய் பாங்கியில் தூங்கிக்கொண்டிருந்ததை எடுத்து அதை தொழில் துறையில் போட்டு பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய அளவில் அந்தத் தொழிற்சாலையை நடத்தி வருகிறார்கள். அதன் மூலம் பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதைப்போலவே அரசாங்கம் ஒரு கோடி ரூபாய் பங்கெடுத்து பத்து கோடி ரூபாய் செலவில் பேப்பர் தொழிற்சாலை ஒன்றையும் ஏற்படுத்த இருக்கிறார்கள். அதுவும் சீக்கிரமாகவே உற்பத்தியைத் துடங்கும் என்று தோன்றுகிறது. இந்த முறையில் நம் ராஜ்யத்தில் தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் அடைந்து வருகிறது.

நம் ராஜ்யத்தில் பல பத்திரிகைகள் நடத்தப்படுகின்றன. அவற்றில் சிறிய பெரிய பத்திரிகைகளும் நடைபெற்று வருகின்றன. அப்படி நடக்கக்கூடிய பத்திரிகைகள் நல்ல முறையில் நடைபெற வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவைகள் எல்லாம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு கவனம் செலுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. பல பத்திரிகைகள் தங்களுக்குரிய கோட்டாப் பேப்பரை தவறாக விற்று ஜீவிக்கின்றன. அரசாங்கத்தை மிகவும் வேகமாகப் பழிக்கும் பத்திரிகைக்காரர்கள் குறிப்பாக எதிர் கட்சிப் பத்திரிகையாளர் நெஞ்சில் கைவைத்துப் பார்த்தால் வாயடைத்துப் போவார்கள். அரசாங்கம் வரி விதிக்கிறார்கள். அந்த வரிகளை மக்கள் மனமுவந்து கொடுக்கிறார்கள். அரசாங்கம் போடக்கூடிய வரிகள் எல்லாம் நல்ல முறையில் வசூலிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்





காணிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இப்படி வரி போடக்கூடிய சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொண்டு பல வியாபாரிகள் நடுவர்கள் அந்த வரிகளைவிட அதிகமாக விலை வைத்து மக்களிடமிருந்து வசூலிக்க முற்படுகிறார்கள். மக்கள் வேதனைபடக்கூடிய அளவில் இந்த வரியை வசூலிக்க முற்படுகிறார்கள். இதைக் கணகாணிப்பது அவசியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட கண்காணிப்பு வேலைக்குழுவை ஜில்லா அளவில் நிறுவுவதற்கு அரசாங்கத்தினிடம் எண்ணம் இருக்கிறது. என்னுடைய கருத்து என்னவென்றால் இந்தக் கண்காணிப்பு வேலையை தாலூகா லெவலில் அல்லது ப்ளாக் லெவலில் சிறிது அதிகாரங்களுடன் கூடியதாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே இந்த முறையில் வரி விதிப்பதை நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கும், அதைக் கண்காணிக்க ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் பல இடங்களில் பல தொழிற்சாலைகளை அமைக்கிறார்கள். அப்படி தொழிற்சாலைகளை அமைக்க லைசென்சு கொடுக்கும்போது அதை அமைக்கக்கூடிய இடம் சுகாதார வசதியுடையதாக இருக்கிறதா என்று பார்த்து லைசென்சு கொடுக்கிறார்கள். அந்தந்த இடத்தைப் பார்த்துக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு இடத்தில் ஒரு தொழிற்சாலையை அமைத்தால் அதனால் அங்குள்ள குடிதண்ணீர் நிலையங்கள் பாதிக்கப்படுகின்றனவா, ஓடைகளில் போகக்கூடிய மீன்கள் பாதிக்கப்படுகின்றனவா, கால்நடைகள் பாதிக்கப்படுகின்றனவா என்று பார்ப்பதாக இல்லை. சில இடங்களில் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைத்தால் அங்குள்ள பக்கத்திலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நஞ்சை நிலங்கள் எல்லாம் பாதிக்கக்கூடிய அளவில் வந்து விடுகிறது. அதன் பிறகு அரசாங்கம் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. தாரங்கதரா தொழிற்சாலையால் அத்தகைய நிலை ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில் தாம்பரபரணி ஆற்றுக்கு சமீபத்தில் பேபர் தொழிற்சாலை, வேறு சில தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் போகிறார்கள். சாதாரணமாக தொழிற்சாலை அமைப்பதாக இருந்தால் அவைகளை தண்ணீர் வசதியுள்ள இடங்களில்தான் அமைப்பார்கள். அதனால் தாம்பரபரணி நதியின் கரையில் அமைப்பதாக இருந்தால் அதனால் அந்த ஆற்றின் தண்ணீர் பாதிக்கப்படுமா, அதனால் பக்கத்திலுள்ள குடிதண்ணீருக்கு ஏதாவது கெடுதல் ஏற்படுமா, விவசாயத்தை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதைப் பார்த்துத் தான் லைசென்சு கொடுக்க வேண்டும். சுகாதார வசதி இருக்குமா, அங்குள்ள மக்களுக்கு அந்தத் தொழிற்சாலையிலிருந்து வரக்கூடிய கழிவு நீரினாலும், அங்கு உற்பத்தியாகக்கூடிய பொருள்களிலிருந்து வரக்கூடிய கெட்ட வாடையாலும் பக்கத்திலுள்ள மக்களுக்கு தீங்கு வராமல் இருக்கிறதா என்பதைப் பார்த்துத்தான் இடம் கொடுக்க வேண்டும். இதுவரை அமைக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளின் விளைவுகளை காலாகாலத்தில் அவசியம் பரிசிலனை செய்ய வேண்டும் என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு பல

உரம். இவைகளை அதிக அளவுக்குக் கொடுப்பதிலே பஞ்சாயத்து யூனியன்கள் நன்றாக செயல்பட்டு வருகின்றன. இதை வரவேற்கிறோம். தஞ்சை ஜில்லாவில் ரசாயன உரங்கள் ஏராளமாக வழங்கப்பட்ட போதிலும், தக்க காலத்தோடு மண் வளத்திற்கு ஏற்ற ரசாயன உரம் தேவை என்பதை நிர்ணயம் செய்யாமல் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக, சில சமயங்களில் ஒரு கிராமத்திற்கு அலாட் ஒதுக்கப்பட்டிருக்கும் உரத்தை வேறு கிராமத்திற்கு கொடுத்துவிடுகிறார்கள். இதைத் தவிர்க்க, ஒரு ஸ்டேட்மெண்ட் தயாரித்து, மாவட்ட கலெக்டர் மூலமாக இந்த உர விநியோகத்தைச் செய்தால் நன்றாக இருக்கும்.

நாகைத் துறைமுகத்தின் அபிவிருத்திக்காக பணம் ஒதுக்கப்பட்டு சென்ற ஆண்டிலிருந்து அபிவிருத்தி வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து வரும் ரசாயன உரங்கள் நாகைத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படுகின்றன. மழை, வெயில், இவற்றால் பாதிக்காத அளவுக்கு அங்கே ஒரு கோடவுன் அமைக்கப்படவில்லை. நாகைத் துறைமுகத்தில் இருக்கும் தொழிலாளர்கள் சென்ற 10 அல்லது 15 ஆண்டுக் காலமாக மிகவும் சிரமப்பட்டார்கள். இப்பொழுது அங்கே நிலக்கரி இறக்குமதி செய்யப்படுவதால், தொழிலாளர்களின் நிலைமை கொஞ்சம் மேம்பட்டிருக்கிறது. இந்த வருஷத்திலேயே நாகைத் துறைமுக அபிவிருத்தி வேலையைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் நாகைத் துறைமுகத்தில் அதிகமான பிரயாணிகள் வந்து இறங்குகிறார்கள். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் வெள்ளையர் காலத்தில் அமைக்கப்பட்ட டின் ஷெட்டுதான் இன்றும் இருக்கிறது. உயர்ந்த வகுப்பில் பிரயாணம் செய்பவர்கள் கூட அந்த ஷெட்டில்தான் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு அடைக்கப்பட்டு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து, மின்சார விசிறி போன்ற சாதனங்களை அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

சிறிய பாசனத் திட்டங்களின் மூலமாக எங்களுடைய ஜில்லா கூடுமானவரையில் நல்ல பாசன வசதி பெற்று வருகிறது. திருத்துறைப்பூண்டி, நாகை போன்ற தாலுக்காக்களில் சாகுபடி செய்யக்கூடிய மானாவாரி நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்தப் பகுதியிலே சிறு நீர்ப்பாசனத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டுமென்று சொன்னால், லிப்ட் இரிகேஷன் மூலமாகத்தான் செய்ய முடியும். வேட்டைக்காரன் இருப்பு, வேளாங்கண்ணி, விளுந்தமாவடி, பால்பண்ணைச்சேரி ஆகிய இடங்களுக்கு இந்த லிப்ட் இரிகேஷன் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நாங்கள் கேட்டிருந்தோம். ஆனால் வேளாங்கண்ணி, விளுந்தமாவடி, இந்த இரண்டு இடங்களுக்கும் லிப்ட் இரிகேஷன் கொண்டு வந்து விட்டார்கள். பாக்கி கிராமங்களிலும் லிப்ட் இரிகேஷன் மூலம் விவசாயம் செய்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





திருத்துறைப்பூண்டி தாலூக்காவில் பாமணி, வேதாரண்யம் ஆகிய பகுதிகளிலே ஏராளமான மானாவாரி நிலங்கள் இருக்கின்றன. வேதாரண்யம், பாமணி, ஆகிய இடங்களில் லிப்ட் இரிகேஷன் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். பக்கத்திலே உள்ள பகுதிகளுக்கும் கூடிய விரைவில் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி தாலூக்காவில் ரெவின்யூ தரிசு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. அவைகள் சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள். அரசாங்கத்தில் சர்வே செய்துவிட்டார்கள். நில அடமானம் செய்து கொடுக்கப்படவில்லை. இடும்பாவனத்தில் 1,000 ஏக்கரும், தலைஞாயிறு 2-ம் சேத்தியில் 1,000 ஏக்கரும், வாயு மேட்டில் 500 ஏக்கரும், மேலை மருதூரில் 500 ஏக்கரும், தில்லைவிளாகத்தில் 1,500 ஏக்கர் நிலங்களும் இருக்கின்றன. இவைகள் இன்னும் அஸைன்மெண்ட் செய்யப்படவில்லை. ஒரு தாசில்தார் விரைவாக அஸைன்மெண்ட் செய்யும் வேலையை மேற்கொண்டாலும் 100 முதல் 150 ஏக்கர் வரைதான் செய்ய முடியும் என்று ஆர்.டி.ஓ. தெரிவிக்கிறார். மொத்தம் 4,500 ஏக்கர் வரை இருக்கிறது. அதை அஸைன்மெண்ட் செய்து முடிப்பதற்கு கிட்டத்தட்ட 2½ வருட காலமாகும். இப்பொழுது ஒரு தாசில்தாரைப் போட்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு தாசில்தாரை நியமனம் செய்தால் 1¼ வருஷத்திற்குள்ளாக இந்த வேலையை முடிக்க முடியும். இந்த வேலையை சீக்கிரம் செய்து முடித்து, விவசாயிகளுக்கு பட்டா வழங்குவதற்கு இரண்டு தாசில்தார்களைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்தைப் பொறுத்தவரையில், எங்கள் ஜில்லாவிலே ஈஸ்ட் கோஸ்டல் ரஸ்தாவை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்தும்கூட சென்ற இரண்டு வருஷ திட்டத்திலேயும் இதை எடுத்துக்கொள்ளவில்லை. சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியான நேரத்தில் இந்த ரஸ்தா முக்யத்வம் வாய்ந்தது. கடலோரப் பகுதியிலே ராணுவ தளவாடங்களை காலதாமதமில்லாமல் அனுப்புவதற்கு நல்லதோர் மார்க்கமாக இது அமையும். ஆகவே ஈஸ்ட் கோஸ்டல் ரோடை மிகவும் துரிதமாகப் போடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு பேசுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைக் கூறி, முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற இந்த பட்ஜெட்டை நான் வரவேற்கிறேன். நம்முடைய நாட்டின் மக்களெல்லாம் இன்றைய தினம் அரசாங்கம் விதிக்கக்கூடிய வரிகளையெல்லாம் உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டு அதைக் கொடுப்பதுடன் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவும் தயாராக இருக்கிறார்கள். அத்துடன் மத்திய அரசாங்கம் விதிக்கக்கூடிய வரிகளையும் ஏற்றுக்கொண்டு

தொழிற்சாலைகள் ஏற்படுவதால் எண்ணற்ற மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கத்தான் செய்கிறது. அப்படி கொடுக்கும்போது பக்கத்திலுள்ள இடங்களுக்கு கெடுதல் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவும் வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது பல இடங்களில் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளை ஆரம்பிக்கிறார்கள். அதைப் போலவே திருச்செந்தூர் தாலுகாவில் தொழில்பேட்டை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கு பல்லாயிரம் பேர் இலங்கையிலிருந்து நாடு திரும்பி கஷ்ட நிலையில் இருப்பதால், ஸ்பெஷலாக தொழில்பேட்டையை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி ஆரம்பித்துவைத்து அதிகப்படியானவர்களுக்கு வேலை வாய்ப்பு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு மெடிகல் காலேஜை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சேலத்திற்கு இப்பொழுது எஞ்சினியரிங் காலேஜைக் கொடுத்துவிட்டார்கள். அப்பொழுது திருநெல்வேலி ஜில்லாவிற்கு மெடிகல் காலேஜ் வந்துவிட்டது என்றே நினைத்தோம். ஆகவே பட்ஜெட் விவாதத்திற்குப் பதில் சொல்லும்போது கனம் அமைச்சர் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவிற்கு மெடிகல் காலேஜ் ஒன்றைப் பரிசாகக் கொடுப்பார்கள் என்றே நினைக்கிறேன்.

சில தினங்களுக்கு முன்னதாகத்தான் விவசாயிகளுக்கு நிலத் தண்ணீர் தீர்வையை அதிகப்படுத்தி இருக்கிறார்கள். இதற்கு முன்னதாகவே திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள விவசாயிகள் தண்டத் தீர்வையைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது வேறு தீர்வை விதித்து இருக்கிறார்கள். இதை கனம் அமைச்சர் அவர்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் அளவில் துரிதமாக ஏதாவது செய்வார்கள் என்று மனப்பூர்வமாக நான் நம்புகிறேன்.

தேசீய நிதியை வசூல் செய்வதற்கென்று உண்டியல்களை வைத்திருக்கிறார்கள். இந்த உண்டியல்களை குலுக்குகிறபோது அதிலிருந்து பணம் கீழே விழக்கூடியதாக இருக்கிறது. அப்படி இல்லாமல் அதை ஜாக்கிரதையாக சீல் வைத்து பாதுகாக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது இருப்பதைப் பார்த்தால் சுலபமாக அதிலிருந்து பணத்தை எடுத்துவிடலாம் போல் இருக்கிறது. அப்படி இல்லாமல் அதை நல்ல முறையில் பூட்டு சீல் வைத்து பாதுகாக்கும் முறையில் இருக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தற்போது ஆசிரியர்களுக்கு நேஷனல், ஸ்டேட் அவார்டுகள் கொடுப்பதாகத் தெரிய வருகிறது. அது வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. ஆசிரியர்கள் ரிடயரானவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு இப்படி அவார்டுகள் கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. சுதந்திரம் அடைந்த பிறகு ரிடையர் ஆன ஆசிரியர்களை





யும் பரிசீலித்து அவர்களுக்கும் அவார்டுகள் கொடுக்க முன் வரலாம். ரிடையர்டு ஆசிரியர்களின் தகுதியையும் பார்த்து அவர்களுக்கும் பாராட்டுப் பரிசுகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் தீட்சதர் அவர்கள் சொன்னது போன்று ரிடயரான ஆசிரியர்களுக்கும் மற்றும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் பஞ்சப்படி கொடுக்கிறார்கள். ரிடையரான ஹையர் கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியர் பலருக்கு மாதம் ஐந்து முதற்கொண்டு பதினேழு ரூபாய் வரை கொடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது. இதையும் ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்து விலை உயர்வைக் கருதி அவர்களுக்கு எவ்வளவு தூரம் உயர்த்திக்கொடுக்கலாமோ அவ்வளவு தூரம் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ரிடையர்டு சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் கிராக்கிப்படி உயர்வை ரிடையர்டு ஆசிரியர்களுக்கும் கொடுக்கவேண்டும். பொற்கொல்லர்களுக்கு இப்பொழுது எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக வேலை வாய்ப்பு கொடுக்கப்படுவதாக இருக்கிறது. எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக முன்பாத்தியதை வழங்கப்பட்டாலும், வேலைக்கு எடுத்துக் கொள்ளும் இடத்தில் முன்பாத்தியதை வழங்குமாறு சர்க்கார் விதி செய்தால்தான் பியோசனப்படும். தனிப்பட்டவர்கள் நடத்தக் கூடிய தொழிற்சாலைகளில் கூட சர்க்காருடைய சிபாரிசின் பேரில் பலரை வேலைக்கு அமர்த்த முடியும். இதற்கென்று அரசாங்கம் எம்ப்ளாய்மெண்ட் அதிகாரிகளைக் கொண்டு அவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய சர்க்காருடைய தங்கக் கட்டுப்பாடு கொள்கையால் எண்ணற்ற பொற்கொல்லர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக வேலை கொடுப்பதாக இருந்தாலும் அவர்களை வேறு தொழில்களில் ஈடுபடுத்த சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய சர்க்கார் மானியமாக ஒரு கோடி ரூபாய் வரையில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று பெற்று அவர்களுக்கு மாற்றுத் தொழிலை கொடுக்கக்கூடிய அளவில் ராஜ்ய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய சர்க்காருடைய கொள்கையினால் அவர்களுக்கு இன்னும் சில மாதங்களில் நிலைமை திருந்தி நிவாரணம் கிடைக்கும் என்றாலும் மற்ற ராஜ்யங்களில் அவர்களுக்கு உதவி அளிப்பது போன்று இந்த ராஜ்யத்திலும் அவர்களுக்கு அரிசி கொடுத்தோ, பண உதவி கொடுத்தோ அல்லது மற்ற எந்த வழியிலாவது நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுதுள்ள சந்தர்ப்பத்தில் பட்டினியைப் போக்க அவர்களுக்கு அவசர நிவாரணம் அளிக்க முன் வரவேண்டும். இவைகளைப்பற்றி என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி யோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் சென்று பதிவு செய்துகொள்ளக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். ஜில்லாத் தலைநகரத்திற்குச் சென்று பதிவு செய்துகொள்ள வேண்டும் என்பதற்குப் பதிலாக, தாலுக்காவில்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [7th March 1963

இருக்கும் தலை நகரங்களிலும், மற்றும் நகர்ப்புறங்களிலும் 'காம்ப்' செய்து, மொஃபஸல்களில் பதிவு செய்துகொள்வதற்கு வசதி செய்வதன் மூலம் அவர்களுக்கு இருக்கும் கஷ்டத்தைப் போக்க முடியும். இதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த பட்ஜெட்டில் எங்களுடைய பகுதியில் அத்தூர் புன்னக்காயல் வட்டாரத்தில் ஒரு இன்டஸ்ட்ரியல் பெல்ட் ரோடு அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. சோனகன் விளை காயாமொழி ரோடுக்கு அறுபதாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் அவ் வேலைகள் தடைப்பட்டிருந்தன. இந்த ஆண்டும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாயும், ஐம்பதாயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவற்றைக் காலாகாலத்தில் எடுத்து நிறைவேற்றுவது நல்லது.

தூத்துக்குடியைப் பெரிய துறைமுகமாக விருத்தி செய்வதில் இந்த அரசாங்கத்திற்குக் கவனம் இருக்கிறதென்பது மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம். என்றாலும், அந்த வேலையை இன்னும் துரிதப்படுத்துவதற்கு வழி வகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புன்னக்காயல், காயல்பட்டிணம், குலசேகரப்பட்டிணம் என்னும் இடங்கள் பழைய காலத்தில் துறைமுகப் பட்டினங்களாக இருந்தன. அவற்றைச் சிறிய துறைமுகங்களாக விருத்தி செய்யவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்குப் பல காலமாக இருந்து வருகிறது. தூத்துக்குடியில் இருக்கும் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு, இந்த மூன்று சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வது இடைக் காலத்தில்கூட உதவிகரமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். குலசேகரப்பட்டினம் ஒரு சிறிய துறைமுகம் என்ற வகையில், மைனர் போர்ட் டெவலப்மெண்டின்கீழ் சிறிதளவு சுங்க வரி வசூலிக்கப்பட்டும் அபிவிருத்தி வேலை எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதிலும் கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொலிடிகள் ஸஃபரர்ஸ் (தியாகிகள்), ஸிலோன் ரிபாட்ரியேட்ஸ் குழந்தைகளுக்காக ஹாஸ்டல் ஃபீஸ் சலுகை வழங்க வேண்டுமென்று அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு சாங்ஷன் செய்திருந்தாலும், ஒரு சிலருக்குக் கூட வசதி கிடைக்க முடியாத அளவுக்கு ஃபாரம்கள் முதலியன காலத்தில் கிடைப்பதில்லை. இதற்கு கல்வி இலாகா பொறுப்பாளியா என்று தெரியவில்லை. ஃபாரம்கள் பெற முடியாத கஷ்டம் இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் மிக அவசரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

*திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள வரவு செலவுத் திட்டத்தை நான் வரவேற்றுப் பேசுகிறேன். இந்த அறிக்கையில் தேசப்



7th March 1963] [திரு. ஆ. கு. சுப்பையா]

பாதுகாப்பின் அவசியம் குறித்து மிகவும் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவசர நிலையின் காரணமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியப்படுகிறது. இந்தச் சமயத்தில் நாட்டின் வருவாய்க்கு ஒரு பகுதியை மக்களிடமிருந்து சர்க்கார் கோருவதும், அதை மக்கள் ஒத்துக்கொண்டு கொடுப்பதும் நியாயமாக இருக்க முடியும். இந்த விஷயத்தில் இரண்டு வித திரிபுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று—சர்க்கார் வரி விதிக்கக்கூடிய முறை. மற்றொன்று—வரியே விதிக்கக் கூடாது என்று கெட்ட அரசியல் நோக்கத்தோடு எதிர்க்கக்கூடிய நிலையும் இருக்கிறது. இரண்டு விதமான திரிபுகளையும் தவிர்க்க வேண்டும். அந்த முறையில்தான் நம்முடைய தேசத்தின் பாதுகாப்பு பலத்தைப் பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

தேசிய நெருக்கடி சமயத்தில் பொது மக்கள் உழைப்பதற்குத் தயாராய் இருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது. அதே சமயம் தேச மக்கள் உழைக்கக் கூடிய பலன் தேசத்திற்குப் பயன்படுகிறதா, அல்லது சுயநலக்காரர்கள் சுருட்டிக்கொள்ளுவதற்கு பயன் படுகிறதா என்ற கேள்வி இன்றைய தினம் நமக்கு முன்னால் எழுகிறது. சுயநல சக்திகள் தேச வருமானத்தைச் சுருட்டிக் கொள்வதைத் தடுப்பதற்காக சர்க்கார் உஷாராக இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சர்க்காருக்கு ஆதரவாக ஏழை எளிய மக்களைத் தங்களுடைய பக்கம் திரட்டுவதற்கும் போதுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வரி விதிக்கக் கூடிய முறையில் சாதாரண ஏழை எளிய மக்களைப் பாதிக்காத வண்ணம், படிப்படியாக உயர்ந்துகொண்டே வரும் வருமான அடிப்படையில் வரி விதிப்பது நியாயமாக இருக்க முடியும். அந்த முறையில் வரி விதிக்கப்படுமேயானால், சர்காருக்குப் போதுமான பணம் கிடைப்பதற்கு வழி ஏற்படும். இந்த நிலையில் நமது ராஜ்ய சர்க்காரைப் பொறுத்த வரையிலும் வரியே விதிக்காத ஒரு அறிக்கையை இப்பொழுது அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரைக்கும் இம்மாதிரி ஓர் அறிக்கையை நமது சபையில் சமர்ப்பித்ததே கிடையாது. அதே சமயத்தில், துண்டு விழக்கூடிய அளவை எடுத்துக்கொண்டால் சென்ற ஆண்டுகளில் நான்கு கோடி ரூபாய், ஐந்து கோடி ரூபாய், ஏழு கோடி ரூபாய், அளவுக்குத் துண்டு விழக்கூடிய நிலை இருந்தது. இப்பொழுது துண்டு விழும் தொகை இரண்டு கோடி சொச்சம் ரூபாய் அளவுக்குத்தான் இருக்கிறது. இந்தத் துண்டு விழும் தொகையை நாம் மக்களுடைய அனுசரணையையும் ஒத்துழைப்பையும் பெற்று, சரிக்கட்டிக்கொள்ள முடியும் என்றுதான் நான் நினைக்கிறேன். கடந்த பத்தாண்டுகளில், உயர்ந்த லாபங்களைப் பெற்று, சொத்து சேர்த்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் நன்றாகத் தெரியும். புதிய புதிய கார்கள், அரண்மனை போன்ற வீடுகள் இன்னும் மற்ற மூலதனங்களைச் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்

ராமநாதபுரம் ராஜா அதுபற்றிப் பரிசீலனை செய்து கேரள சர்க்காருடன் கலந்து ஆலோசித்தார்கள், அந்தத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதற்கு. அந்தச் சந்தர்ப்பத்தில் கொண்டுவர முடியவில்லை. இப்பொழுதாவது நமது முதல் அமைச்சர் அவர்கள் அம்முயற்சியைத் தொடர்ந்து நடத்தி அந்தக் கிரியாறு, பம்பையாறு திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வெள்ளிமலையடிக்குளம் இருக்கிறது. விவசாய மந்திரி அவர்கள் கூட அதைப் பார்த்திருக்கிறார்கள். பல ஆண்டுகளாக அத்திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு இன்றியமையாதது மின்சாரம். விவசாயத் துறைக்கு அதிகமாக மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். இரவில் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கிறார்கள். அதைப் பகல் நேரங்களில் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் அதுதான் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் தாலுக்காவில் புறம்போக்கு நிலங்கள், தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய அளவில் நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கவேண்டும், அல்லது கூட்டுறவு முறையிலாவது விவசாயத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

புளியங்குடி, சங்கரன்கோயில் போன்ற இடங்களுக்குக் குடி. தண்ணீர் திட்டம் வேண்டும். அவற்றை எவ்வளவு துரிதமாகக் கொண்டுவரமுடியுமோ அவ்வளவு துரிதமாகக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. சங்கரன்கோயில் தாலுக்காவில் பெரும்புதூர் கிராமம் இருக்கிறது. அங்கே கொடிக்கால் விவசாயம்தான் அதிகம். அந்தக் கொடிக்கால்களுக்குத் தண்ணீர் பாய்ச்சக்கூடிய ஒரு கிணறு புறம்போக்கு நிலத்தில் இருக்கிறது. அதை மாற்றிவிட முயற்சிக்கிறார்கள். அதனால் கொடிக்கால் விவசாயத்தில் நூறு, இருநூறு ஆண்டுகளாக ஈடுபட்டு வந்த இருநூறு குடும்பங்களுக்குமேல் பாதிக்கப்படுவார்கள். ஆகவே அந்தக் கிணற்றை அந்த கொடிக்கால் விவசாயிகளுக்கே மாற்றித் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சங்கரன்கோயில் ஆஸ்பத்திரி தாலுக்கா சென்டரில் இருக்கிறது. அங்கே டாக்டர்கள் இருந்தபோதிலும் சரியான மருந்து இல்லையென்று கூறுகிறார்கள். அந்த ஆஸ்பத்திரிக்கு நல்லமுறையில் மருந்து சப்ளை செய்து அது நல்லமுறையில் இயங்க வழிவகை செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.





கிராமங்களுக்கு ரோடு போடும் திட்டம் பஞ்சாயத்து யூனியன்களிடம் இருக்கிறது. அவர்களிடம் போதுமான பணம் இல்லாததனால் அந்த வேலையை நன்றாகச் செய்ய முடியாது கஷ்டப்படுகிறார்கள். அதை ஹைவேஸ் இலாகாவோடு சேர்த்தே அவற்றைச் செப்பனிடக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்வது நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்வதோடு, தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. என். வி. வேணுகோபால கிருஷ்ணசுவாமி**: கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நான் மனமார ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். முக்கியமாக திருநெல்வேலி ஜில்லாவில் கோவில்பட்டி, சங்கரன்கோயில் தாலுக்காக்கள் மிகவும் பிற்போக்கானவை. அந்தத் தாலுக்காக்களை முற்போக்காக வளரும்படி செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமை. அந்த தாலுக்காக்களை வளப்படுத்தக்கூடிய கிரியாறு, பம்பையாறு திட்டம் கடந்த பல ஆண்டுகளாகப் பரிசீலனையில் இருக்கிறது. அதைக் கேரள சர்க்காருடன் கலந்து பேசி இவ்வாண்டாவது நிறைவேற்றத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதன்மூலம் சங்கரன் கோயில் தாலுக்கா, கோயில்பட்டித் தாலுக்காவில் ஒரு பகுதி வளம்பெற வழியேற்படும்.

முக்கியமாக கோவில்பட்டித் தாலுக்காவில் விளாத்திக்குளம் என்ற சப் தாலுக்காவில் வைப்பாறு என்று ஒன்று இருக்கிறது. அதில் ஓடும் தண்ணீர் வீணாகக் கடலில் போய்ச் சேருகிறது. அந்த ஆற்று நீரை அணைகட்டித் தேக்கினால் விளாத்திக்குளம் தாலுக்காவில் உள்ள அத்தனை கண்மாய்களுக்கும் தண்ணீர் சப்ளை செய்யலாம். அதுபோக அதிகமாக உள்ள தண்ணீரை சாத்தூருக்குக் கீழ்புறம் ஒரு ரிசர்வாயர் ஏற்படுத்தி விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம். அதுபோக பல ஓடைகளில் தண்ணீர் வீணாக சமுத்திரத்திற்கு ஓடுகிறது. அந்த ஓடைகளில் ஆங்காங்கு அணைகள் கட்டி தண்ணீரைத் தேக்கி கண்மாய்களுக்குப் பாய்ச்சி அந்தத் தாலுக்காக்களை வளப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்பட்டி தாலுக்காவின் தென்பகுதியில் கடம்பூர் பிர்க்காவில் ஓட்டன்கால் என்ற ஒரு கால்வாய் இருக்கிறது. எட்டையபுரம் ஜமீன்தார் இருந்தபோது அந்தக் கால்வாய் வெட்டப்பட்டு சுமார் பத்து கண்மாய்களுக்கு அந்தத் தண்ணீர் போய்க்கொண்டிருந்தது. அந்தக் கால்வாய் பழுதடைந்து விட்ட காரணத்தால் சுமார் பத்து வருஷ காலமாக அந்தத் தண்ணீர் வீணாக சமுத்திரத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இது பற்றிப் பல முறை அரசாங்கத்திடமும், சர்க்கார் அதிகாரிகளிடமும் சொல்லியும், இன்னும் பரிசீலனையில் இருப்பதாகவே சொல்கிறார்கள். துரிதமாகப் பரிசீலனை செய்து இந்த வருஷத்திலாவது அந்தக் கால்வாயைப் பழுதுபார்த்துக் கொடுக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தெல்லாம் அரசாங்கம் வரி விதித்து வசூல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வது சரியாக இருக்கும். அதைச் செய்தால், வருங்காலத்தில் நம்முடைய தேசியப் பாதுகாப்பை மிகவும் பலப்படுத்தக்கூடிய ஒரு முறை ஏற்படும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஏழை, எளிய மக்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரியைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொண்டு, கெட்ட எண்ணத்தோடு வலது சாரிகள் இன்றையதினம் மொத்தமாக வரியை எதிர்ப்பதையும் நாம் பார்க்கிறோம். அதற்கு இடமில்லாத அளவுக்கு நமது ராஜ்ய சர்க்கார் நடந்துகொள்ள வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

ஊர்க் காவல் படை அமைப்பது விஷயமாக எந்த விதமான அரசியல் உள் நோக்கமும் இருக்கக் கூடாது. அந்த முறையிலே ஊர்க் காவல் படைகளை நாம் நிறுவியாக வேண்டும். ஊர்க் காவல் படை சம்பந்தப்பட்ட வரையில், தேசப் பற்று உள்ளவர்களாகப் பொறுக்கியெடுத்து, அந்தப் படைகளை அமைக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். தேசத்தில் நெருக்கடி ஏற்படுகிற சமயத்திலும், தேசத்திற்கு இடையூறுகள் வருகின்ற காலத்திலும் ஊர்க் காவல் படைகள் தைரியமாக நின்று நமது பாரத தேசத்தைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தில் அந்தப் படைகளை நாம் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

சிக்கனச் சீரமைப்பு சம்பந்தமாக சில விஷயங்கள் நான் சொல்ல விரும்புகிறேன். சிக்கனச் சீரமைப்பில் அரசாங்கமே ஒரு எடுத்துக் காட்டாக விளங்கவேண்டும். அம்மாதிரி விளங்கினால்தான் மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலே சிக்கனச் சீரமைப்பை ஏற்படுத்திக் கொள்ளுவார்கள். அந்த முறையில் நமது சர்க்கார் நடவடிக்கைகளில் இறங்கவேண்டும். லஞ்சம் போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும், ஊதாரித்தனமான செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் தீவிர நடவடிக்கை எடுத்தால் மத்திய சர்க்காரின் உதவி நான்கு கோடி ரூபாய் அளவுக்குக் குறைந்திருப்பதையும் நாம் நிறைவு செய்துகொள்ள முடியும். அந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விவசாய அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி யாரும் குறை சொல்ல முடியாது. ஆனால், குறைகள் பல இருந்து கொண்டிருக்கின்றன. சாதாரண விவசாயிகளுக்குக் காலா காலத்தில் உரம், பூச்சி மருந்து போன்றவை கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. அவர்களுக்குக் காலத்தில் இந்த உதவிகளையெல்லாம் செய்வதற்குப் போதுமான நடவடிக்கைகளை எடுத்தோமானால் நம்முடைய லட்சியத்தை இன்னும் விரைவாக அடைய முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதேசமயம் இன்றைய தினம் நிலத்திலிருந்து சட்டத்திற்கு விரோதமாக பல விவசாயிகள் வெளியேற்றப்படுகிறார்கள். மனைகளில் இருந்தும் வெளியேற்றப்படுகிறார்கள். குறிப்பாக தஞ்சை



மாவட்டத்தில் இந்த ஆண்டு பெய்த மழையின் காரணமாக அந்த ஜில்லாவில் விளைவு குறைந்து குத்தகை நெல் அளக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நிலக்காரர்கள் தானாக குத்தகைத் தள்ளுபடி செய்து கொடுக்கமாட்டார்கள். இதற்கு ஏதாவது உதவி செய்வதென்றால் அந்த உதவி குத்தகைக்காரர்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில் தனி நபர்களுக்காக 3 கோடிக்கு அதிகமான ரூபாய்களை உதவி செய்திருக்கிறோம். அதேசமயம் தொழில்கள் சரியான முறையில் நடைபெறுகிறதா, அதன் வருமானம் தேசீய வருமானத்தை உயர்த்தக்கூடிய அளவில் அமைந்திருக்கிறதா என்று உஷாராக கண்காணிப்பது அவசியமாகிறது. தஞ்சை மாவட்டத்தில் ஒரு பேப்பர் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய வாய்ப்பும், வசதியும் இருக்கிறது. அங்கே வைக்கோல் அதிகமாகக் கிடைக்கிறது. அந்த வைக்கோல்களைக் கொண்டு பேப்பர் தொழிற்சாலை ஆரம்பித்தால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

இன்னும் வேதாரண்யம் பகுதியில் வேதாரண்யத்திலிருந்து முத்துப்பேட்டை வரையில் இருபத்தைந்து மைல் நீளம், ஐந்து மைல் அகலத்திற்கு ஒரே சதுப்பு நிலம் இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ஒப்புக்கொண்டிருக்கிறோம். அந்தப் பிரதேசத்தில் கிடைக்கிற பொட்டாஷியம் க்ளோரைட், க்ரோமைட் இவற்றைக்கொண்டு ஒரு ஜிப்ஸம் தொழிற்சாலையை அமைக்க தனி நபர்கள் கம்பெனிகள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். ஒன்று தனி நபர்களுக்கு அந்த அனுமதியை வழங்க வேண்டும். இல்லையென்றால் அரசாங்கத் தரப்பிலேயே அந்தத் தொழிற்சாலையை அங்கு அமைக்க ஏற்பாடு செய்தால் தேசத்திற்கும் நிறைய வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அங்குள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு இடமிருக்கிறது. இந்த இரண்டு தொழிலையும் தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பித்து நடத்த அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பி. ஊர்க்காவலன்:** கனம் சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் பட்ஜெட்டை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை குறிப்பாக நெருக்கடி நேரத்தில் வந்திருக்கிறது. இருந்தும் விவசாயத்துறைக்கு அதிகப்பணம் ஒதுக்கி சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க வகை செய்யப்பட்டிருப்பதற்குப் பாராட்டுகிறேன். கடந்த பல வருடங்களாகவே நீர் இல்லாத நிலைமையில் மிகவும் வறட்சியான நிலைமையில் உள்ள சங்கரன்கோயில் போன்ற இடங்களில் உள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தத் தாலுக்கா விவசாயிகள் நலனை உத்தேசித்துக் கிரியாறு, பம்பையாறு திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று பல ஆண்டுகளாக இந்தச் சபையில் வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. முன்னால் மராமத்து அமைச்சராக இருந்த

[திரு. என். கி. வேணுகோபால கிருஷ்ணசுவாமி]
[7th March 1963

அடுத்தாற்போல், கோவில்பட்டி, எட்டையபுரம், கழுகுமலை, கயத்தாறு முதலிய கிராமங்களில் குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கோவில்பட்டியில் சுமார் 50,000 மக்கள் குடிதண்ணீர் வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். குடிதண்ணீர்த் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து அந்தப் பகுதிகளுக்கெல்லாம் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுமார் ஐம்பதினாயிரம் ஜனத்தொகை கொண்ட தாலுக்கா தலைநகரான கோவில்பட்டியில் ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. அங்கே சுமார் 14 படுக்கைகள் இருக்கின்றன. அங்கு நவீன வசதிகளும் மற்றச் சௌகரியங்களும் இல்லாமல் இருக்கிறது. இந்த ஆண்டிலாவது அந்த ஆஸ்பத்திரியை நவீன முறையில் வசதிகளுடன் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரத்தை இப்போது இரவிலே கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவை நீக்கி, பகலில் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை மனதாரப் பாராட்டி உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். வி. கரிவேங்கடம்:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நமது நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டம் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டம் என்று சொல்லப்பட்டாலும் கூட, நமது நிதியமைச்சர் அவர்கள் நினைத்திருந்தால் இதை உபரித் திட்டமாகக் கூடக் காட்டியிருக்க முடியும். சென்ற ஆண்டு 117 கோடி ரூபாய் நமது மாகாணத்திற்கு நிகரமாக வருமானம் வந்திருக்கிறது. மத்திய அரசிடமிருந்து நம்முடைய மாகாணம் பெறவேண்டிய தொகையிலே நான்கு கோடி ரூபாய் பெற முடியாமல் போய்விடும் என்று அமைச்சர் அவர்களுடைய உரையிலே காணப்படுகிறது. ஆனால் மத்திய சர்க்கார் ஏராளமான வரிகளை விதித்திருக்கும் காரணத்தால் அந்த நான்கு கோடி ரூபாயையும் அமைச்சர் அவர்கள் பெற்று விடுவார்கள். நில வரி, நீர் வரி உயர்வின் காரணமாக சென்ற ஆண்டு வசூல் தொகையும், இந்த ஆண்டு வசூல் தொகையும் சேர்த்து மூன்று கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்கக் கூடும். அதே போல் மத்திய விற்பனை வரி அதிகரிப்பின் காரணமாக இரண்டு கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கக் கூடும். ஆடம்பரப் பொருள்களின் மீது உள்ள வரியை மற்ற மாகாணங்களோடு ஒட்டி, உயர்த்தியிருப்பதன் காரணமாக இரண்டு, மூன்று கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும். ஆக, மொத்தத்தில் 10, 12 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கும். நம்முடைய செலவு 127 கோடி என்று மதிப்பிட்டிருக்கிறோம். ஏற்கனவே நிகரவருமானமான 117 கோடியுடன் 12 கோடியைக் கூட்டினால் நிச்சயமாக உபரி பட்ஜெட்டாகக் கூடச் சமர்ப்



7th March 1963] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

பித்திருக்க முடியும் என்று கூற விரும்புகிறேன். இந்த பட்ஜட்டில் புது வரி போடாததால், எதிர்க்கட்சிக்காரர்களுக்குக் 'காரம்' இல்லை என்று சொன்னார்கள். புது வரி போட்டால் நீங்கள் எப்படி வருத்தப்படுவீர்களோ, அதே போன்றுதான் நாங்களும் வருத்தப்படுகிறோம். நம்முடைய தொகுதிகளுக்குச் செல்லும் நேரத்தில், புது வரி போடப்பட்டிருந்தால், ஆளும் கட்சியிலுள்ளவர்களுக்கும், எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கும், மக்களிடமிருந்து கேள்விக் கணைகள் வரும். மேலும், இந்த அறிக்கையைப் பாராட்டவில்லை, புகழவில்லை, குறை கூறிக்கொண்டே இருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வள்ளுவருடைய குறளைத்தான் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

"இடிப்பாரை இல்லாத ஏமாரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்று வள்ளுவர் குறளை மாற்றி வாதத்துக்காக வைத்துக் கொள்வோம். நீங்கள் ஏமாரா ஆட்சியாளர்கள், கெடுப்பவராக இல்லாதவர்கள் என்றாலும் உங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அந்தப் பணியை நாங்கள் செய்யாவிட்டால் அந்தக் கடமையிலிருந்து தவறியவர்களாவோம். நிதிநிலை அறிக்கையிலுள்ள பல குறைகள் மேலாகப் பார்த்தாலேகூட ஆளும் கட்சியிலுள்ளவர்களுக்குத் தெரியும். நாங்கள் அதிலே காணுகின்ற குறைகளை இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்கிறோம்.

சென்ற கூட்டத் தொடரில் பொற்கொல்லர் பிரச்னை அதிகமாக அடிபட்டது. அவர்களுக்கு நிவாரணம் தரத்தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் கூறினார். மதுரையில் ஒரு பொற்கொல்லர் வேலை இல்லாததன் காரணமாக, பசியால் பட்டினியால் வாடி மாண்டார் என்ற செய்தியை நேற்றைய பத்திரிகையிலே பார்த்தேன். பொற்கொல்லர்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதில் இந்த மாமன்றத்தில் இருக்கும் அத்தனை பேருக்கும், குறிப்பாக அமைச்சரவைக்கும் முக்கிய பொறுப்பு உண்டு. இன்றையதினம் பொற்கொல்லர்கள் தங்கக் கட்டுப்பாட்டால் வேலை இழந்து பசியால், பட்டினியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

"தனியொருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று வள்ளுவர் கூறுவார். அதை அவர் இன்று என்ன சொல்லுவார்? சிந்தியுங்கள்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்று வள்ளுவர் கூறுவார். அதை அவர் இன்று என்ன சொல்லுவார்? 'நீ என்ன பாரதியாரா? வள்ளுவரா? என்று கேட்கலாம். நான் பாரதியாருமல்ல, வள்ளுவருமல்ல. எல்லோரையும் போல் நானும் இந்த மாமன்றத்திலே உள்ள அங்கத்தினர்களில் ஒருவன். நாட்டில் அத்தனை பேருடைய உயிருக்கும் வேலை வாய்ப்

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [7th March 1963

புக்கும் உத்தரவாதம் கொடுக்க வேண்டிய கடமை இந்த மன்றத்திற்கு உண்டு. இந்த மன்றத்திலே இருக்கும் நிதியமைச்சர் அவர்களும், ஏழை பங்காளர் என்று போற்றப்படுகிற முதலமைச்சர் அவர்களும் உடனடியாகப் பொற்கொல்லர்களுக்கு நிவாரணமளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று நம்புகிறேன். அவர்களுக்குக் குடும்பம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு படி அரிசியோ, மூன்று படி அரிசியோ கொடுப்பதோடு மற்றும் வேறு வேலை வாய்ப்புகளும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்பதில் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த எல்லாரும் ஒருமுகமான கருத்துடன் இருக்கிறோம். கடந்த பத்து, பதினைந்து ஆண்டு காலமாகவே அமைச்சரவையில் சேலம் மாவட்டத்தினருக்கு இடம் இல்லை. அதைப்பற்றிக்கூட நாங்கள் பெரிதும் கவலைப்படவில்லை. சேலம் மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கு எந்தத் தொழிலும் இல்லை. சேலம் மாவட்டத்திற்கு நீங்கள் பொறி இயல் கல்லூரியைத் தந்ததற்காக மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று மருத்துவக் கல்லூரியையும் தாருங்கள். திருநெல்வேலிக்குக் கனம் சபாநாயகர் அவர்கள் இருக்கிறார்கள். இன்னும் தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. சேலம் மாவட்டத்தினருக்கு அமைச்சரவையில் இடம் இல்லையென்றால், மருத்துவக் கல்லூரியையாவது தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று சூசகமாக சுகாதார அமைச்சர் அவர்களும் கேள்வி நேரத்தின்போது சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அது பற்றி மிகவும் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். எங்களை ஏமாற்றி விடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத் துறையைப் பொறுத்தவரை தமிழகம் வேகமாக முன்னேறிக் கொண்டு வருகிறது என்பதை யாரும் மறுத்துச் சொல்ல முடியாது என்றாலும், சென்ற பட்ஜட் உரையின்போது 18,638 கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது. இந்த பட்ஜட்டில் பதினொன்காயிரம் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1962-63-ஆம் ஆண்டு பட்ஜட்டில், புதிதாக 1,600 கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பது இலக்கு (டார்ஜெட்டு) என்று சொல்லப்பட்டது. ஆனால் கணக்கைப் பார்த்தால், ஏறக் குறைய 362 கிராமங்களுக்குத்தான் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

ஹொகனக்கல் நீர் மின்சாரத் திட்டத்தைப் பற்றியும் இந்த மன்றத்தில் அதன் அவசியத்தைப் பற்றியும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நெய்வேலி அனல் மின்சார திட்டத்தின் இரண்டாவது நிலை பூர்த்தியானால் அதிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய மின்சாரம் 400 மெகா வாட்ஸ். மேட்டூர் டன்னல் ஸ்கீமிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய மின்சாரம் 100 மெகா



7th March 1963] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

வாட்ஸ். குந்தா மின்சாரத் திட்டத்தின்கீழ் நமக்குக் கிடைக்கக்கூடிய மின்சாரம் 240 மெகா வாட்ஸ், ஆக அனல், நீர்மின்சார நிலையங்களிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய மின்சாரம் அத்தனையையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது 740 மெகாவாட்ஸ்தான் கிடைக்கும். ஆனால் ஹொகனக்கல் திட்டத்தை 58 கோடி ரூபாயில் சிக்கனமாக செலவு செய்து முடித்தால் நமக்கு 800 மெகா வாட்ஸ் கிடைக்கும், அதனால் நம் மின்சாரப் பகுதி பற்றாக்குறை நிச்சயமாக நீங்கும். இந்த ஹொகனக்கல் திட்டத்தைப் பொறுத்த மட்டில் நம் அமைச்சர்கள் மைசூர் மாநில அமைச்சர்களைச் சந்தித்து சுமுகமாகப் பேசி அத் திட்டத்தைக் கொணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது நிறைவேற்ற வழி பிறக்கும் என்ற சூழ்நிலையும் இருக்கிறது. நமக்கு இப்போது மின்சாரம் மிக மிகத் தேவையாக இருக்கிறது. அதுவும் இந்த நெருக்கடி நேரத்தில் தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் அதிகமாகத் தேவையாக இருக்கிறது. பகிர்ந்து கொள்வதில் ஒரு 5 சதவிகிதம் அதிகமாக அவர்களுக்கு வந்தாலும் நமக்கு வந்தாலும் விட்டுக் கொடுத்து எப்படியாவது இந்த ஹொகனக்கல் திட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினால் நம் மின்சாரப் பற்றாக்குறை மட்டுமல்ல, தென் மண்டலத்திலுள்ள மின்சாரப் பற்றாக்குறை நீங்கும், இதை மைசூர் அரசாங்கம் ஒப்புக் கொள்ளும் என்ற சூழ்நிலையும் இருக்கிறது, அவர்கள் தாராளமாகவும் இருக்கிறார்கள், என்ற வாசகங்கள் அறிக்கையில் காணப்படுகிறது. ஆகவே, "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்ற பழமொழிக்கு இணங்க, "ஒன்றே செய்யின் நன்றே செய்க" என்ற பழமொழிக் கிணங்க முதல் அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் இதில் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி இந்த ஹொகனக்கல் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக சின்னாறு அணைக்கட்டுத் திட்டம் என்ற திட்டம் என் தொகுதியில் இருக்கிறது. கனம் திரு. கக்கன் அவர்கள் மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அங்கு வந்து அந்த இடத்தையெல்லாம் பார்வையிட்டார்கள். அப்போது அத்துறை அவர்களிடம் இருந்தது. அந்த அணைக்கட்டு மிகவும் தேவையானது. முக்கியமானதும்கூட. அதன் பெயர்தான் சின்னாறு என்று இருக்கிறதே தவிர அங்கு பெரிய அணை கட்ட முடியும். அந்தத் தொகுதியில் உள்ள விவசாயிகள் சார்பாக நான் சொல்ல விரும்புகிறேன். குறிப்பிட்ட ஒரு அளவு சர்க்காருக்கு உதவ வேண்டும். ஒரு பர்ஸென்டேஜ் கேட்டால்கூட அதைக் கொடுக்க அங்குள்ள விவசாய மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே சின்னாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது முதல் அமைச்சர் அவர்கள் பெயரால் மாரண்ட ஹள்ளியில் மோசம் நடந்திருக்கிறது. காமராஜ் தொழிற் பயிற்சிக் கல்லூரி என்று எஸ்.எஸ்.எல்.சி கூட படிக்காத நபர் ஒருவர் ஆரம்பித்திருக்கிறார். அதை நம்பி எல்லா மாவட்டங்களிலிருந்தும் ஆசிரியர்கள் பல பேர்களும் ஒரு ஆண்டு லீவ் எடுத்துக்கொண்டு அங்கு வந்து, 400, 500 ரூபாய்

என்று கட்டணம் கட்டி அவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். அந்தக் கல்லூரிக்கு சர்வகலாசாலையின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறதா என்றால் கிடைக்கவில்லை. டி.பி.ஐ.-யின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறதா என்றால் கிடைக்கவில்லை. ஆகவே மாணவர்கள் ப்ரைவேட் ஸ்டடி என்று தேர்வுக் கட்டணம் செலுத்தியிருக்கிறார்கள். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் போலீசுக்குப் புகார் கொடுத்தும்கூட சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று நான் நினைக்கிறேன். அதுபற்றி முதல் அமைச்சர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும், எனக்கும் மகஜர் வந்திருக்கிறது. போலீஸ் நடவடிக்கை எடுத்து வழக்கு மன்றத்தில் கேஸ் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. அதனால் 60 ஆசிரியர்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ஆண்டும் விரயமாகியிருக்கிறது. இதுபோன்று அடுத்த ஆண்டும் தொடர்ந்து நடக்காமல் இருக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் உளம் கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எல். ராமகிருஷ்ண நாயுடு** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் 1963-64-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆமோதித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

"1961-62-ம் ஆண்டுக் கணக்கில் வருவாய் வகையில் 8 கோடியே 50 லட்சம் ரூபாய் அளவுக்குத் துண்டு விழுமெனத் தெரிவித்திருந்தேன். அந்த ஆண்டின் இறுதியான புள்ளி விவரங்கள் இப்பொழுது கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து வருவாய் வகையில் இன்னும் கூடுதலாகவே அதாவது 9 கோடியே 61 லட்சம் ரூபாய் துண்டு விழுவது தென்படும் என்றும், நடப்பாண்டில் 2 கோடியே 86 லட்சம் துண்டு விழலாம்" என்றும் கூறியிருந்தார்கள். "இரண்டு கோடியே 92 லட்சம் ரூபாய் துண்டு விழும் என்று மதிப்பீடு காட்டுகின்றன" என்றும் கூறியிருக்கிறார்கள் நிதி அமைச்சர் அவர்கள். ஆக வித்தியாசம் அதிகமாக இல்லை. சென்ற ஆண்டு பட்ஜட் சமர்ப்பிக்கப்படும்போது அன்னியன் நம் நாட்டின் மீது படை எடுக்கவில்லை. இந்த சமயத்தில் சீனா நம் மீது படை எடுத்திருக்கிறது. இது ஒவ்வொருவருக்கும் விடுகிற அறைகூவலாகும். இந்த சமயத்தில் வரிகள் விதிக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் மத்திய சர்க்கார் வரி விதித்திருப்பதினால் மாநில சர்க்கார் வரி விதிப்பதில்லை என்று நினைத்து வரி போடாது இந்த பட்ஜட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதை எல்லோரும் மனமார வரவேற்க வேண்டியதுதான். அன்னியனை விரட்டியடிக்க சர்க்கார் எந்த பட்ஜட்டைக் கொண்டு வந்தாலும் அதை ஆமோதிக்க வேண்டிய நிலையில் தான் நாம் இருக்கிறோம். சீனாக்காரன் வந்தான், சில இடங்களைப் பிடித்தான் திரும்பப் போய்விட்டான். மேலும் எந்த சமயத்தில் என்ன செய்வது



என்று நினைத்துக் கொண்டிருப்பான். ஏனெனில் ஆசியாவில் தன் செல்வாக்கு உயர வேண்டுமென்ற நினைப்பில் அவன் இருக்கிறான். அவர்கள் ஆட்சிக்கு வந்த 10, 12 ஆண்டுகளாக—நாம் தொழில், விவசாய அபிவிருத்தி செய்வது போல்—அவர்கள் ஆசியாவில் தங்கள் செல்வாக்கு உயரவேண்டுமென்று நினைத்து, ஆயுதங்கள் தயாரிப்பதில் மும்மரமாக இருந்து வந்திருக்கிறார்கள். சைனாவை இப்போது அங்கு ஆட்சியில் இருக்கக்கூடிய கட்சி பிடித்துக் கொண்டதில் இருந்து அவர்கள் போர்க்கோலத்திலேயே இருக்கிறார்கள். அவர்களை எதிர்க்க வேண்டிய நிலையில் நாம் இப்போது இருக்கிறோம். ஆகவே எந்தவிதக் கஷ்டங்களுக்கும் நாம் தயாராக இருத்தல் வேண்டும். விவசாயம், நீர்ப்பாசனம், தொழில் வளம் இவற்றைப் பெருக்கினால்தான் நாம் சண்டை செய்வதற்கு உதவியாக இருக்கும். ஆகவேதான் விவசாயம், பாசனத் திட்டங்கள், தொழில் நுட்பக் கல்வி இவைகளுக்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போற்றித்தானாக வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் நாம் 17 லட்சம் டன் உணவு உற்பத்தி அதிகமாக பெருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். இதில் முதல் ஆண்டில் சுமார் 2.3 லட்சம் டன் அளவிற்குத்தான் அதிகரித்திருக்கிறது. ஆகவே மூன்றாவது திட்டக் காலத்திற்குள் நாம் உணவு உற்பத்தியை எப்படி 17 லட்சம் டன் அளவிற்கு உயர்த்தப் போகிறோம் என்று தெரியவில்லை. பெரிய நீர்த்தேக்கங்கள் எல்லாம் கட்டி முடித்தாகி விட்டன. சிறிய நீர்த்தேக்கங்கள்தான் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு தாலுகாவிலும் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிற தண்ணீர் சமுத்திரத்தில் சென்று வீணாகாதபடி, அதை எல்லாம் கட்டுப்படுத்தி சிறு தேக்கங்கள் கட்டினாலொழிய இந்த அளவை நாம் எட்ட முடியாது. அடுத்தபடியாக, பெரிய தொழில்கள் எல்லாம் பெரிய தனவந்தர்களிடம் இருக்கின்றன. அவர்களால்தான் ஆரம்பிக்கப்படுகின்றன. பொதுத்துறையில் ஒன்றிரண்டுதான் ஆரம்பிக்கப்படுகின்றன. அதுவும் இந்தப் பக்கத்திலுள்ளவர்களால் மூலதனம் போட முடிவதில்லை. பெரிய மூலதனம் போட்டு செய்யப்படுவதால் சாதாரண விவசாயிகளுக்கு அதில் பங்கு இல்லாமல் போய்விடுகிறது. விவசாயிகள் தங்கள் விவசாயத்தை விட்டு விட்டு இந்தத் தொழிற்சாலைகளில் கூலிகளாகப் போய் விடுகிறார்கள். இப்போது ஒரு விவசாயி 30 ஸ்டான்டேர்ட் ஏக்கர்தான் வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அப்படி வைத்துக்கொண்டால், இன்றைக்கு 30 ஏக்கர்களை வைத்துக்கொண்டு விவசாயம் செய்வதை விட நகரத்தில் வந்து ஏதாவது தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வாழ்க்கை நடத்துவது நல்லது என்ற எண்ணத்துடன் இங்கே வந்து விடுகிறார்கள். விவசாயத்தை எடுத்துக்கொண்டால் இன்றுள்ள நிலைமையில் எந்தவிதமான லாபமும் ஏற்படுவதில்லை. விவசாயக் கூலிக்கு சராசரி 375 ரூபாய்தான் கிடைக்கிறது. அதே நேரத்தில் தொழிற்சாலையில் வேலை செய்கின்ற தொழிலாளியை எடுத்துக்கொண்டால் சராசரி 1,500 ரூபாய் 2,000 ரூபாய் வரை வருமானம் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. இதன்

காரணமாக தொழில் துறையில் இருக்கின்றவர்களும், தொழில் அதிபர்களும் அதில் வேலை செய்கின்ற தொழிலாளர்களும்தான் இன்றைக்கு வசதியாக வாழ முடிகிறதே தவிர, விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு எந்தவிதமான லாபமும் இல்லை. ஆகவே விவசாயத் தொழிலில் இருக்கின்றவர்களின் நன்மையை முக்கியமாகக் கருதி அவர்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றபடி, நம்முடைய சர்க்கார் பின்தங்கிய பகுதிகளை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பணம் ஒதுக்கி வருகிறார்கள். அதே போன்று பின்தங்கிய வகுப்பினருக்கு உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் பல உதவிகளை நம் சர்க்கார் செய்து வருகிறது. அதே முறையில் ஒவ்வொரு ஜில்லாவிலும் பின்தங்கிய பகுதிகள் எவை எவை என்று கணக்கெடுத்து அவற்றுக்கு வேண்டிய பாசன வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட பிரதேசங்களுக்கெல்லாம் என்ன செய்ய வேண்டும், எந்தெந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம் என்பதைப் பற்றி எல்லாம் ஆராய்ந்து தொழில்துறையில் என்னவெல்லாம் ஆரம்பிக்கலாம் என்று பார்த்து, பள்ளிக்கூடப் பையன்களுக்கு எப்படி ஸ்காலர்ஷிப் பணம் கொடுத்து உதவுகிறோமோ அதே போல் விவசாயிகளுக்கும் வேண்டிய சலுகைகளைக் கொடுத்தால் தான் எல்லாப் பகுதிகளும் முன்னேற முடியும். இல்லை என்றால் பின் தங்கியிருக்கும் எல்லாப் பகுதிகளும் முன்னேற முடியாது. ஆகவே எல்லாப் பகுதிகளும் ஒரே நிலையை அடைவதற்கு வழிவகை செய்கின்ற நிலையில் பல சலுகைகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஓரளவுக்கு அதிகாரம் மாற்றப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத் தகுந்த அம்சம்தான். பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக போட்ட ரோடுகள் எல்லாம் சரியான முறையில் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. ரோடு போடாமல் இருந்தால்கூட, நன்றாக இருக்கும் என்று நினைக்கின்ற அளவுக்கு இந்த ரோடுகள் எல்லாம் பழுதாகி இருக்கின்றன. இந்த ரோடுகளை செப்பனிடுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிகவும் குறைச்சலாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பணம் இன்னும் ஜாஸ்தியாகக் கொடுக்கப்பட்டால்தான் பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் வேலை செய்ய முடியும். சர்க்காருக்கும் நல்ல பெயர் இடைக்கும். பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்காக 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது என்றுதான் சொல்லவேண்டும். இன்னும் இதற்கு அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்வி இலாகாவிலிருந்தும் பல நன்மைகள் செய்யவேண்டியிருக்கிறது. இதற்காக அதிகமான அளவில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் பணம் ஒதுக்கவேண்டுமென்றால் ஓரளவுக்கு வரி





போட்டுத்தான் தீர வேண்டியிருக்கிறது. கல்வியைப் பொறுத்த வரையில் இன்னும் அதிகமான அளவில் பணம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நிறைய பணம் ஒதுக்க வேண்டும். நம்முடைய நாடு போதிய அளவுக்குப் பொருளாதார முன்னேற்றம் அடையாமல் இருக்கிறது. முன்னேற்றகரமான ஒரு நிலை ஏற்பட வேண்டும் என்று நமது சர்க்கார் பாடுபட்டு வருகிறது. எந்த அளவுக்கு நாம் முன்னேற முடியுமோ அந்த அளவுக்கு நமது சர்க்கார் கடந்த 15 வருடங்களாகப் பாடுபட்டு, ஜனங்களுக்கு எந்த விதத்தில் எல்லாம் நன்மைகளைச் செய்ய முடியுமோ அந்த விதத்தில் எல்லாம் நன்மைகள் செய்து வருகிறது. இருந்தாலும் இன்னும் நாம் முன்னேற வேண்டியிருக்கிறது. அவைகளை எல்லாம் அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஈஸ்ட் கோஸ்ட் பகுதியில் யுத்த காலத்தில் லட்சக் கணக்கான ரூபாய் செலவில் போடப்பட்ட நேஷனல் ஹைவேஸ் ரோடு இப்போது முக்கியமான ரோடாக இருக்கிறது. இந்த ரோட்டை நல்ல முறையில் பாதுகாப்பதற்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மாநில அரசாங்கம் வேண்டிய உதவிகளைக் கேட்டுப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சு. அங்கமுத்து நாயக்கர்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நெருக்கடியான நேரத்தில் எந்த விதமான வரியும் போடாமல் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அப்படி யிருந்தும் சிலர் குறை சொல்லி வருகிறார்கள். நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று பல வழிகளிலும் நாம் பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையிலும் இருந்து வரக்கூடிய நிலையில், வரி போட வேண்டிய நிலைமையில் இருந்தும், வரி போடாமல் இந்த அறிக்கை கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் சிலர் இதைக் குறை கூறுகிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்னென்ன வேலைகள் நடைபெறும் என்பதெல்லாம் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. நாடு முன்னேற்றம் அடைய வேண்டும் என்று சொல்லும்போது, நாம் சில வரிகளை ஏற்கத்தான் வேண்டும். அப்படியிருந்தும், இந்த தேசத்தைக் காப்பாற்றுவதற்காக நாங்களும் தியாகம் செய்கிறோம் என்று மார் தட்டிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாட்டினுடைய நன்மையைக் கருதி வரி போடும் போது அதை எதிர்க்கின்றார்கள். வரி போடுவது நாட்டின் நலனுக்காகத்தான் என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள முடியும். பத்து ஆண்டுகளுக்கு முன்பு நாம் பார்ப்போமேயானால் நம்முடைய நிலைமை

தாமான நிலமாக உள்ள நிலங்களை அடைமானமாகக் கொண்டு, அல்லது ஜாமீன் பேரிலாவது அவர்களுக்கு லோன் கொடுத்து உதவினால் நல்ல விதமான உற்பத்தியைப் பெருக்க முடியும், அவர்களும் விவசாயத் தொழிலில், ஈடுபடுவார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், எங்கள் பக்கத்தில் புறம்போக்கு நிலங்களில் ஏகப்பட்ட நிலங்களை உழுதுகொண்டும் பயிர் செய்து கொண்டும், 5-10 வருஷங்களாக கிணறு வெட்டி சீர்திருத்தம் செய்து பயிரிட்டுக்கொண்டும் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு இது வரையில் பட்டா வராமல் இருக்கிறது. இதை சகஜமாக நானும் சொல்லிக்கொண்டு வருகிறேன். அது சிவாயி ஜமாவாக இருந்தாலும், புறம்போக்கு நிலமாக இருந்தாலும், 10 வருஷமாக, 5 வருஷமாக பயிரிட்டுக்கொண்டு, சீர்திருத்தியிருந்தால் கட்டாயம் பட்டா கொடுக்கவேண்டுமென்று நான் அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த வகைகளிலெல்லாம் கவனித்து, இந்தக் குறைகளெல்லாம் நீக்கப்பட்டு, விவசாய உற்பத்தியை முன்னேற்ற வேண்டுமானால் விவசாயிகளுக்குப் பல வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. முனு ஆதி**: மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தினைத் தெரிவிக்கிற வாய்ப்புப் பெற்றமைக்கு மகிழ்ச்சி கொள்கிறேன். எல்லாவற்றையும் பற்றிப் பேசுகிற வாய்ப்பு அதிகமாக இல்லாமலிருப்பதால், கூட்டுறவுத் துறையில் இருக்கிற சில ஊழல்களை, அந்தத் துறையில் நடக்கிற சில திடுக்கிடக் கூடிய சம்பவங்களை, நடைபெறக் கூடிய நிர்வாகத் திறன் இல்லாத காரியங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, ஐயனாவரம் கூட்டுறவுப் பால் பண்ணையைப் பற்றி அதிகமாக எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியாது என்று கருதுகிறேன். 1927-ம் ஆண்டு, பல நல்ல மனிதர்களால், நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட பால் பண்ணை ஆகும் அது. அதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்கார் 4 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் மான்யமாகவும், கடனாகவும் கொடுத்திருக்கிறார்கள். 2 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மான்யமாகவும், 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கடனாகவும் தரப்பட்டதிலிருந்து சிறு தொகையை எடுத்து மூன்று சக்கர வண்டிகள் 12 வாங்கப்பட்டன. அவைகளுள் ஒன்றைத் தவிர 11 வண்டிகள் உபயோகப்படுத்தாமல் அங்கேயே தங்கிக்கொண்டிருக்கின்றன. இதற்கு என்ன அர்த்தம் என்று தெரியவில்லை. சர்க்காரினால் அனுப்பப்



பட்டிருக்கிற செயலாளர் இது குறித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. பழுது ஆகி விட்டது என்று சொன்னாலும், ஆண்டு ஒன்றுக்கு இரண்டு லட்சம் ரூபாய் இதற்கென்று செலவு செய்து கொண்டு வருகின்றது. 12 குளிர் சாதன யந்திரங்கள் இது போலவே முடங்கிக் கொண்டிருந்தன. பிறகு நகரத்தில் 12 இடங்களில் வாடகை கொடுத்து, அதுவும் தண்ட வாடகை கொடுத்து, இப்போது முடப்பட்டிருக்கின்றன. அவைகள் பயன்படுத்தப்படாமல் இருக்கிறன என்று கனம் சபாநாயகர் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். தானாக பாலை நிரப்பிக்கொள்ளுகிற யந்திரம் நீண்ட நாளாக உபயோகப்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. பிறகு நம் சர்க்கார் அதை அறிந்து அதை நாம் எடுத்துக் கொள்வலாம் என்ற எண்ணம் வந்த பின்னர் போர்டார் கூடி அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இது நமது உள்துறை அமைச்சருக்குக்கூட தெரிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். கூட்டுறவுப் பால் பண்ணையின் நோக்கம் மக்களுக்கு நல்ல பால் கிடைக்க வேண்டும் என்பதாகும். கூட்டுறவின் நோக்கமே மக்கள் நல்ல பலன் அடையவேண்டும் என்பதுதான். ஆனால் இந்த கூட்டுறவுப் பால் பண்ணையில் மூன்று வித கலப்படங்கள் நடப்பதை நான் பகிரங்கமாக, ஆதாரத்தோடு சொல்ல முடியும். வெளியில் இருந்து வருகிற பால் தண்ணீர் கலந்த பாலாக உள்ளே வருகிறது. நம் சர்க்காரில் வைத்திருக்கிற அனலிஸ்ட் 22 சதவிதம் நீர் இருக்கிறது என்று குறிப்பிட்டுக் காட்டியும் உள்ளே அனுமதித்திருக்கிறார்கள். நான் குறிப்பிடக்கூடியவர் யார் என்று சொல்லக்கூடும். உதவித் தலைவராகிய திரு. ஏ. ஆர். எம். ஸி. நரசிம்மலு செட்டியார் 22 சதவீதம் வரையில் தண்ணீர் ஊற்றி விநியோகத்திற்கு அனுப்புகிறார். வெளியிலே இருக்கிறவர்கள் நல்ல பாலைக் கொண்டுவந்து கொடுத்தால்கூட உதறித் தள்ளும் மோசமான நிலை இருக்கிறது. புதிய நண்டலத்திலிருந்து கொண்டு வந்த நல்ல பாலை உதறித் தள்ளி விட்டு, உள்ளே கொட்டிலில் மாடுகளை வைத்துக்கொண்டிருக்கிற ஒரு தனிப்பட்ட மனிதர் 22 சதவீதம் தண்ணீரை ஊற்றிக்கொடுக்கிற அந்தப் பாலை உள்ளே அனுமதித்து வருகிறார்கள். சர்க்காரினால் அனுப்பப்பட்டிருக்கிற செயலாளர் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார் என்று தெரியவில்லை. இதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏதோ சாதாரண நிலையில் பேசி விட்டேன் என்று கருதி விடாதீர்கள். நான் ஆதாரத்தோடு பேசுகிறேன். முதல் கலப்படமே உள்ளே வரும் பால் தண்ணீராக இருக்கிறது. இரண்டாவது 150 பவுண்டு பாலை எடுத்து, கூடுதல் கொழுப்புச் சத்து உண்டாக்க—ஏனென்றால் ராணுவ முகாமுக்கு சப்ளை செய்வதாக ஒப்புக்கொண்டுள்ள ஒப்பந்தப்படி அவர்களுக்கு சப்ளை செய்யும் பாலில் 6.5 சதவீதம் கொழுப்பு உள்ள பாலைத்தான் எடுத்துக்கொள்வோம் என்று அவர்கள் சொல்லுவதால்—150 பவுண்டு பாலை எடுத்து 12-லிருந்து 15 பவுண்டு அளவுக்கு கிரீம்

எப்படி இருந்தது, இப்போது இவ்வளவு வரி போட்டும் எப்படியிருக்கிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொண்டிருக்கிறோம்.

அடுத்தாற்போல், விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், இந்த அறிக்கையில் விவசாயத் துறைக்காகப் பல கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 17 லட்சம் டன் உணவு உற்பத்தி பெருக்க வேண்டும் என்று நமது அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அந்த வழியில் பார்த்தால் உழவர்களுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும். அதோடு செய்து கொடுக்கின்ற காரியங்களைத் துரிதமாகச் செய்து கொடுக்கவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக சிறு பாசனத் திட்டங்களை எல்லாம் நல்ல முறையில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். முக்கியமாக விவசாயிகளுக்கு சிறு பாசனத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்காத வரையில் நம்முடைய நோக்கம் நிறைவேறாது என்பதை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் பெரிய அளவில் இல்லாவிட்டாலும், இப்போது என் தொகுதியைப் பொறுத்தவரையில், சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் தாலுகாவில் பல சிறு ஏரிகள் இருக்கின்றன. அவற்றில் 70 சதவிகிதம் ஏரிகளில் தண்ணீர் வந்தாலும்கூட, அவை நல்ல முறையில் பழுது பார்க்கப்படாததன் காரணமாக நல்ல முறையில் உபயோகிக்கப்பட முடியவில்லை. இப்பேர்ப்பட்ட ஏரிகளைப் பழுது பார்ப்பதோடு, சிறிய அணைக்கட்டுகளை எல்லாம் நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் உடனடியாக ஏரிகளை ஆழப்படுத்தி, அல்லது கரைகளை உயர்த்தி பழுது பார்த்துக் கொடுத்தால் எதிர்பார்த்த அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மின்சாரத்தைப் பற்றியும் நான் சொல்லவேண்டியிருக்கிறது. நம் இந்தியாவிலேயே நாம் மின்சாரத்தில் முதலிடம் பெற்றிருக்கிறோம் என்று நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கம் எவ்வளவோ பாடுபட்டு, மின்சாரத்தை நல்ல வகையில் விவசாயிகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். ஆனால் இப்போது புது சர்வீஸ் வேண்டுமென்றால் அவர்களுக்குக் கொடுப்பதற்குச் சில கஷ்டங்கள் இருந்து வருகின்றன. வேறு தொழில்களுக்குக்கூட இப்போது மின்சாரத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். கட்டுப்படுத்திக் கொண்டும் வருகிறார்கள். அதே மாதிரி பார்க்கும்போது சினிமாவுக்கு, மூன்று ஷோ அல்லது இரண்டு ஷோ உள்ள சினிமாக்களுக்கு மின்சாரம் கொடுப்பதை நிறுத்திவிட்டு, ஒரு ஷோவுக்கு மட்டும் மின்சாரம் கொடுத்தால், இன்னும் பல ஆயிரக்கணக்கான





ஏக்கர்களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும், அவர்களுக்கும் பம்ப் செட் கொடுக்க முடியும். இதையும் அரசாங்கத்தின் ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல ஆத்தூர் டவுனில் குடி தண்ணீர் வசதி இல்லை. நீண்ட நாட்களாக இதைப்பற்றி நாங்கள் சொல்லிக்கொண்டு வருகிறோம். இதை அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று நான் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஓரளவுக்கு மக்கள் கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுக்க எப்போதும் தயாராக இருக்கிறோம். முப்பதாயிரம் மக்கள் இருக்கும் இடத்தில் குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. அந்த வகையில் எங்களுக்குக் குடிதண்ணீர் வசதியைச் செய்து கொடுக்கவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, கைத்தொழிலை எடுத்துக்கொண்டால், 10-15 வருடங்களுக்குள்ளாக நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை—யாரும் மறுக்கவும் முடியாது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நடந்து முடிந்து விட்டன. இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடக்கிறது. அந்த வகையில் பார்த்தால் ஆத்தூர் தாலுகாவில் விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலுமே இல்லை என்பதை நான் அரசாங்கத்திற்கு ஞாபகமூட்ட ஆசைப்படுகிறேன். விவசாயத்தைத் தவிர வேறு எதுவும் இல்லாததால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அத்தகைய ஜனங்கள் வேறு வேலை வாய்ப்பைத் தேடிக் கொள்ளவேண்டுமென்று விரும்பினாலும் இது வரையில், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் வந்தும், எந்த விதமான தொழிலும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். இது வரையில் அரசாங்கம் எந்தவிதமான தொழிலையும் ஏற்படுத்தாமல் இருக்கிறார்கள். ஆகையால் அங்கே தொழிலையும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இந்த அறிக்கையில் பாலிடெக்னிக்குகள் இரண்டு திறக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று திருச்சியில் ஏற்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றொன்று எங்கு என்று சொல்லாமல் விட்டிருக்கிறார்கள். கூடுமான வரையில் எங்கள், ஆத்தூர் தாலுகாவில் அதையாவது வைத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்த வரையில் மலையாளிகள் என்ற ஒரு சமூகத்தாருக்கு எந்த விதமான லோனும் கிடைப்பதில்லை. மலைமேலே இருக்கிறார்களே என்று நினைக்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. விவசாயிகளுக்குரிய லோன் வாங்க முடியவில்லை. நல்ல நிலமாக ஏக்கர் ரூ. 5,000 அல்லது 10,000 பெறுமானம் உள்ள நிலங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரம் அல்லது ஐநூறு ரூபாய் லோன் வாங்க வேண்டியதாக இருந்தாலும் சர்க்காரினால் கொடுக்க முடியவில்லை. ஆகவே விதி விலக்கு செய்து,

7th March 1963]

**கனம் சபாநாயகர்:** கூட்டுறவு ஒன்றைப் பற்றியே கனம் அங்கத்தினர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது ஒன்றுக்கே இவ்வளவு டைம் எடுத்துக்கொண்டால் மற்ற விஷயங்களைப்பற்றி எப்படிப் பேசமுடியும்?

SRI MUNU ADHI: I am dealing with co-operation. I am only exposing the defects noticed in Ayanavaram Milk Society.

MR. SPEAKER: If the hon. member is satisfied well and good, he may go one. He has got only a few more minutes.

**திரு. முனு ஆதி:** கார்பரேஷன் அதிகாரிகள்கூட பகிங்கரமாகப் பாலை வாங்கிக்கொண்டு, அவர்கள் சாம்பிள்கள் எடுக்காமல் நடந்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் வல்லம்பட்டி என்ற ஆந்திர கிராமத்திற்கு காவை நின்றுபோன மாடுகளை யூனியனிலிருந்து அனுப்புகிறார்கள். பாதி மாடுகள் திரும்புவது இல்லை. அதுபற்றி மாட்டுச் சொந்தக்காரர்கள் வழக்குகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மூன்று ஆண்டுகளாக இந்த யூனியனுக்கு இரண்டு லட்சம் ரூபாய் நஷ்டம் வந்துகொண்டிருக்கிறது. பாங்கு, கணக்கைப் பார்த்தால் ஓவர்டிராப்ட் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி பல ஊழல்கள் அங்கே மலிந்து கிடக்கின்றன. அமைச்சர் அவர்கள் இதில் அக்கறை எடுத்துக் கொண்டு இந்த யூனியனை சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கலப்படம் இல்லாத நல்ல பாலை மக்களுக்கு விநியோகம் செய்யவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தால் இதைச் சர்க்காரே ஏற்று நடத்த முன்வரவேண்டும். நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் காமராஜ் அவர்களும், மத்திய அமைச்சர் சுசீலா நய்யார் அவர்களும் உணவு கலப்படத்தைத் தடுப்பதற்குக் கடுமையான சட்டம் கொண்டு வரப்போவதாகவும், கலப்படம் செய்கிறவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது, யூனியன் செயலாளர் எவ்வளவு சொல்லியும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இருக்கும்பொழுது, சர்க்காரே இது பற்றி நியாயமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த ஊழல்கள் நடப்பதுபற்றி ஆதாரபூர்வமான விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. நடவடிக்கை எடுப்பதாயிருந்தால் அவைகளையெல்லாம் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

எங்கே யூனியனை சர்க்கார் எடுத்துக்கொண்டு விடுவார்களோ என்று தெரிந்து, 28—2—1963-ம் தேதியன்று போர்டார் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு, அதில் சர்க்கார் இதை எடுத்துக் கொள்ள வேண்டாம், தாங்களே தொடர்ந்து நடத்துகிறோம் என்று ஒரு தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். சித்தார்தருக்கு போகி மரத்தடியில் ஞானோதயம் ஆனாற்போல் இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சூடான பாலைக் கொடுப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

கூட்டுறவு முறை நாட்டில் வளர வேண்டுமானால், கூட்டுறவு முறையில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டுமானால், அதன் மூலம் சமுதாயத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், கூட்டுறவு முறையில் அதிக அக்கறை காட்டி அதில் இருக்கக்கூடிய ஊழல்களைக் களைவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சர்க்கார் முன்வரவேண்டும். அதுதான் சாலச் சிறந்தது. சொல்வது யார், கேட்பது யார், எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன சொல்வது என்று தயவு செய்து உதாசீனம் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இத்தனை ஊழல்களையும் நிரூபிப்பதற்கு ஆதாரபூர்வமான ரிகார்டுகள் நான் வைத்திருக்கிறேன். சர்க்கார் நேரடியான நடவடிக்கை எடுப்பதாயிருந்தால், அந்த விவரங்களை அமைச்சர் அவர்களிடம் சமர்பிக்கத் தயாராக இருக்கிறேன். கூட்டுறவு முறையில் நடக்கும் ஊழல்களை, புகார்களை நேரடியாக விசாரித்து அவைகளை நிவர்த்திக்க வேண்டும் அதன் மூலம் கூட்டுறவு நல்ல முறையில் நடக்கிறது என்று பெயர் எடுக்க வேண்டும், கூட்டுறவு முறை வளர வேண்டும், இல்லாவிட்டால், நகர மக்களுக்குத் தண்ணீர் கலந்த பால்தான் கிடைக்கிறது என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்ட வேண்டிய நிலைமைதான் ஏற்படும் . . .

(கனம் சபாநாயகர் மணியை அடித்தார்.)

* திரு. கே. திருவேங்கடம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1963-64-ஆம் வருஷத்திய பட்ஜெட்டை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்தில் கல்வி சம்பந்தப்பட்ட வரையில் நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, நல்ல முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. கல்விக்காக கோடிக்கணக்கான பணம் செலவழித்து வருகிறோம். அதில் சில குறைபாடுகள் இருப்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

கள்ளக்குடி சத்திரத்தில் ஒரு ஜில்லா போர்டு பள்ளி நடந்து கொண்டிருக்கிறது. அதில் வேலை பார்க்கும் தமிழ் ஆசிரியர் நான்கு மாதங்களுக்கு முன்பு ஏதோ மேல் படிப்புக்காக லீவில் போய்விட்டார். பின்னால் அந்தப் பள்ளியிலே தமிழ் ஆசிரியர் போடப்படவில்லை. நான் பல தடவை பெர்ஸனல் அஸிஸ்டெண்ட் அவர்களைப் பார்த்து ஞாபகப்படுத்தினேன். இரண்டு தினங்களுக்குள் போட்டுவிடுவோம் என்று சொல்லுவார். அவ்வளவுதான். இப்பொழுது ஏறக்குறைய மூன்று மாதங்கள் ஆகின்றன. தமிழ் ஆசிரியர் இல்லை. இந்த மாதிரி நிலைமை இருந்தால், 9-வது, 10-வது படிக்கும் பள்ளி மாணவர்களுக்குத் தமிழ்ப் படிப்பு எப்படி வரும் என்று கேட்க விரும்புகிறேன். இம்மாதிரி குறைபாடு இருப்பதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவுத் திட்டம் நல்லபடியாக நடந்து கொண்டிருக்கிறது. தற்சமயம் பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் தான் அதை நடத்திக்கொண்டு வருகிறார்கள். நானும் ஒரு பஞ்





சாயத்து போர்டு பிரஸிடெண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஒரு சில தலைவர்கள் தப்பான முறையைக் கையாளுகிறார்கள். என்னுடைய ஏரியாவில் ஒரு பஞ்சாயத்து போர்டு தலைவர் ரூ. 300 வரை எடுத்துத் தப்பான வழியில் செலவழித்துவிட்டார். அதுபற்றி நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. இம்மாதிரி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி, அம்மாதிரி தவறுகள் நடப்பதைத் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய உற்பத்திக்கு நமது மாநிலச் சர்க்கார் மிகவும் நல்ல முறையிலே செலவழித்து வருகிறார்கள். விவசாயிகளுக்கு காலாகாலத்தில் உரங்கள், விவசாயக் கருவிகள் கிடைப்பதற்கு வழி செய்தால், அவர்கள் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சுகாதாரத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், சாக்கடைத் திட்டத்திற்கு இப்பொழுது பணம் இல்லை என்று கலெக்டர் ஆபீஸில் சொல்லுகிறார்கள். எல்லாக் கிராமங்களுக்கும் சாக்கடைத் திட்டம் அவசியம். திட்டத்திற்கு வேண்டிய பண உதவி அளித்து, சாக்கடை கட்டுவதற்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு பணம் ஒதுக்கியிருக்கிறோம். அந்தத் திட்டத்தின்கீழ் திருமங்கலம் பகுதிக்கு அப்பர் பெரியார் டிவிஷன் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, யானைகெஜம் பள்ளத்தாக்கில் சாப்டூர் மலையடிவாரத்தில் ஒரு சிறு அணை கட்டினால் பல ஆயிரக்கணக்கான ஏகர் நிலத்திற்கு நீர்ப் பாசன வசதி கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். அந்த வேலையை உடனடியாக எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தங்கக் கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டால், தங்க நகைத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவிக்கிறார்கள். மிகவும் அவஸ்தைப்படுகிறார்கள். ஆனால், 14 காரட் தங்கத்திலிருந்து நகை செய்ய முடியுமா, செய்யமுடியாதா என்ற கேள்வி இல்லை. நிச்சயமாகச் செய்யலாம். எதிர்க்கட்சி நண்பர்கள் பேசும்பொழுதுகூட 14 காரட் தங்கத்தில் நகைகள் செய்து போட்டுக் கொண்டால், உடம்பில் புண் ஏற்படும் என்று சொன்னார்கள். ஆனால் ரோல்டு கோல்டு நகைகளை போட்டுக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்குப் புண் வந்திருக்கிறதாகத் தெரியவில்லை. மதுரையில் தெற்கு ஆவணி மூல வீதியில் வியாபாரம் நடந்து செல்வம் கொழித்துக் கொண்டிருக்கும். ஆனால், இப்பொழுது அங்கே எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டு வியாபாரமே நடக்காமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. தங்க நகைத் தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும் என்று சர்க்காரை மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இன்று காலைச் செய்திக்

[திரு. முனு ஆதி] [7th March 1963

எடுத்து அனைத் தண்ணீர் பாலில் கலந்து கொழுப்புள்ள பாலாக கொடுத்துவிட்டு 15 பவுண்டு கிரீம் எடுத்து எடுத்தது போக பாக்கியுள்ள சத்து இல்லாத பாலை—தண்ணீருக்குச் சமமான பாலை—தண்ணீர் கலந்து இருக்கக்கூடிய பாலில் இதையும் கலந்து வெளியில் விநியோகத்திற்கு அனுப்பி விடுகிறார்கள். கவர்ன்மெண்ட்' அனலிஸ்ட் கொடுத்திருக்கிற அத்தாட்சி, ஸ்டேட் டெய்ரி ஆஃபீஸர் டீ.ஓ. லெட்டர் ரெஃபரென்ஸ் நம்பர் உட்பட எல்லா விவரங்களும் என்னிடம் இருக்கின்றன. அவர்கள் என்ன சொன்னாலும் செயலாளர் நடவடிக்கை எடுக்காமல் உதாசீனப்படுத்தி தண்ணீர் கலந்த பாலாக வெளியே வருகிறது. மூன்றாவது கலப்படம்—முதலிலேயே தெரிவிக்க மறந்து விட்டேன்—மாடுகள் மழை காலத்தில் நிறையக் கறக்கின்றன வெயில் காலத்தில் கறக்கக்கூடிய பாலின் அளவு குறைந்து விடுகிறது. வெயில் காலம் திருமணக் காலமாதலால் பால் பண்ணைக்கு அதிகத் தேவை வருகிறது. ஆயிரத்துக்கு 60 லிட்டர்
11-30 a.m. வீதம் ஜாஸ்தி செய்து அனுப்பி விடுங்கள் என்று சொல்லி பகிரங்கமாகத் தண்ணீர் ஊற்றப்பட்டு, எக்ஸெஸ் என்ற முறையிலேகூட கணக்கு இருக்கிறது. இதைப் பார்த்து கோவாபரேடிவ் சப்-ரிஜிஸ்டிரார் அவர்கள்கூட இவ்வளவு எக்ஸெஸ் எப்படி வரமுடியும் என்று கேட்டிருக்கிறார்கள். உடனே நடவடிக்கை எடுத்து, பதில் அனுப்ப வேண்டுமென்று சொல்லியும், செயலாளர் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதில் அக்கறை காட்டுவதாக இல்லை. 'டி.எம்.எஸ்'. அவர்களும் மருத்துவ மனைக்குக் கொடுக்கிற பால் மிகவும் மட்டரகப் பாலாக இருக்கிறது, தண்ணீர் கலந்த பாலாக இருக்கிறது என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். 'ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, நாங்கள் வேறு எங்கேயாவது பாலை வாங்கிக் கொள்வோம், இதனால் ஏற்படுகிற நஷ்டத்தை நீங்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று டி. எம். எஸ். அவர்கள் யூனியனுக்கு வார்னிங் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதோடு ஜாயிண்டு ரிஜிஸ்டிரார் நேரடியாகச் சொல்லியும்கூட, இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. டெய்ரி ஆபீசரும், அஸிஸ்டெண்டு டெய்ரி ஆபீசரிடம் உடனடியாகப் பதில் சொல்லவேண்டும் என்று எழுதிக்கொடுத்துவிடுகிறாரே தவிர, உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதில்லை. மில்க் கமிஷனர் அவர்களுக்கும் எழுதி இருக்கிறார்கள். இந்த ஊழலை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு, சர்க்காரே இதை எடுத்து நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பால் விநியோகிக்கும்பொழுது, தொழிலாளர்களிடம் இவ்வளவு சத்துள்ள பால், கொழுப்புள்ள பால் என்பதற்கு கையொப்பம் வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால், வெளியே வரும் பொழுது தண்ணீர் கலந்த பாலை கார்பரேஷன் அதிகாரிகள் கண்டு பிடித்துவிடுவார்களே என்று அஞ்சி, அவர்கள் சாம்பிள் எடுத்து பரிசீலனை செய்வார்கள் என்று தெரிந்துகொண்டு, கார்பரேஷன் அதிகாரிகளுக்கு தினசரி 6 படி, 8 படி பால் கொடுக்கிறார்கள்.

தாளிலே கூடப் படித்தேன், மொரார்ஜி தேசாய் அவர்கள், இந்தப் பொற்கொல்லர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்வதாகவும், ஆனால் அவர்கள் செய்யும் கிளர்ச்சிகள் நின்ற பிறகு அதைப் பற்றிக் கவனிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் எந்தவிதமான பலாத்காரமான கிளர்ச்சியும் செய்ய வில்லை. சமீபத்தில் சென்னை நகரில் சில காரணங்களுக்காகப் பஸ்களை உடைத்தும், கட்டிடங்களைத் தாக்கியும் சில கிளர்ச்சிகள் நடந்தன. அப்படியில்லாமல் நல்ல முறையிலே ஊர்வலங்கள் சென்று கலெக்டரிடம் தங்களது குறைகளை அவர்கள் தெரிவித்துள்ளார்கள். கிளர்ச்சிகள் ஒன்றும் செய்யவில்லை என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்று காலையிலே பேசிய எதிர்க்கட்சி உப தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் முதலிலே ஓரளவுக்கு இந்த பட்ஜெட்டை ஆதரித்துப் பேசியும், பின்னர் பலமாக அதை ஆதரிக்கவில்லை என்றும் சொன்னார். விவசாயத்தைப் பற்றிப் பேசும்போது, விவசாய அமைச்சர் திரு. கக்கன் அவர்களுக்கு விவசாயத்தைப்பற்றி என்ன தெரியும் என்று பல தடவைகள் கேட்டார். அதற்கு நான் மிகவும் வருந்துகிறேன்.

**கனம் சபாநாயகர் :** விவசாயத்தைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லவில்லை. சங்கீதத்திற்கும் விவசாயத்திற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்று கேட்டார்.

**திரு. கே. திருவேங்கடம் :** அதற்குக்கூட பதில் சொல்வதற்கு கனம் அமைச்சர் அவர்கள் எழுந்தார்கள். ஆனால் நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஜாடை காட்டி ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று நிறுத்தி விட்டார் என்று நினைக்கிறேன். இந்த வார்த்தையைக்கூட நான் கனம் முதலமைச்சர் அவர்கள் சபையில் இருந்தால் சொல்லியிருக்கமாட்டேன். அவர்கள் இருந்தால் எனக்குப் பேசுவதற்குப் பயம்தான்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் முதலமைச்சர் அவர்கள் இது இசை சம்பந்தமானது, இசையைப்பற்றி பேசும்பொழுது யாரும் குறுக்கிடக் கூடாது என்று நினைத்துத்தான் குறுக்கிட வேண்டாமென்று சொன்னார்.

**திரு. கே. திருவேங்கடம் :** விவசாய அமைச்சர் கனம் கக்கன் அவர்களுக்கு விவசாயத்தைப்பற்றி நன்றாகத் தெரியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே சாட்டூரிலிருந்து காரியப்பட்டிக்கு பஸ் ஓடிக் கொண்டிருக்கிறது. சுமார் 25 மைல் தூரம் இருக்கிறது. அதற்கு மத்தியிலே கவுண்டல் நதி இருக்கிறது. விவசாய அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். இந்த ஆற்றிலே ஒரு பாலம் கட்டுவதற்கு ஏற்கெனவே ஒரு எஸ்டிமேட் போடப்பட்டது. அதைத் துரிதப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்த

7th March 1963] [திரு. கே. திருவேங்கடம்]

நதியிலிருந்து எஸ்.பி. நத்தம், புதுக்குளம் ஆகிய கண்மாய்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்வதற்காக ஒரு கானலை வெட்டுவதற்கு உணவு உற்பத்தி இலாகாவிலே ஒரு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதையும் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தத்திலே இந்த பட்ஜெட்டை நான் மனப்பூர்வமாக ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன.

* திரு. சி. சிவசுப்பிரமணியம்: கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் வாழ்த்தி வரவேற்கின்றேன.

இந்த அறிக்கையின்மீது நடந்துகொண்டிருக்கும் விவாதத்தில் பல அங்கத்தினர்கள் பேசியிருககிறார்கள். அதே சமயத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் எல்லாம் வரி அதிகமாகப் போட்டிருக்கிறார்கள், ஆகவே இதை ஆதரிக்க முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நல்ல அனுபவம் வாய்ந்தவாகள். அமைச்சரவையிலே நல்ல அனுபவம் பெற்றிருக்கிற காரணத்தினால் இந்த நிதிநிலை அறிக்கையை நல்ல முறையிலே சமர்ப்பித்திருக்கிறார்கள். உண்மையிலே எதிர்க் கட்சிக்காரர்கள் இந்த பட்ஜெட்டில் வரிகளை அதிகமாகப் போட்டிருப்பார்கள். அதை வைத்துக் கொண்டு தங்களுடைய பிரசார பலத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இதை யெல்லாம் தெரிந்துதான் ஒரு நல்ல வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். (சிரிப்பு) இந்த நிதி நிலை அறிக்கையிலே வரி போடப் போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்கள். அப்படிச் சொல்லிய பிறகு, எதிர்க் கட்சி முகாமிலே நிச்சயமாக உயிர் இல்லை என்றே சொல்ல வேண்டும். வரி ஏதாவது இருந்தால்தான் அதை வைத்துக்கொண்டு அவர்களுடைய பிரசாரத்தைப் பலப்படுத்த முடியும். ஒரு அன்பர், ஏதோ பை எலக்ஷன் வருகிறது, அதன் காரணமாகத்தான் வரி போடவில்லை என்று குறிப்பிட்டார். நம்முடைய நிதி அமைச்சர் அதைக் கண்டா பயந்து விட்டார் என்று நான் கேட்கிறேன்? அப்படி பை எலக்ஷனைக் கண்டு பயந்திருந்தால் நிச்சயமாக இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்க மாட்டார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் நினைப்பது போன்று பை எலக்ஷனுக்காக வரிகள் போடாமல் இருக்கவில்லை. எதிர்க் கட்சியினர் எல்லாத் திட்டங்களும் நிறைவேற்றப்பட வேண்டும், திட்டத்திற்காக எவ்வளவு ஒதுக்கினாலும் பரவாயில்லை என்றெல்லாம் சொல்லுகிறார்கள்.

(திரு. செ. சீனிவாசன் தலைமை.)

திராவிட முன்னேற்றக் கட்சி தலைவர்கூட ஒரு சமயத்தில் திட்டங்களுக்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று சொன்னதாகக் கேள்விப்பட்டேன். இந்த

[திரு. சி. சிவசுப்பிரமணியம்] [7th March 1963

புத்த நெருக்கடி சமயத்திலே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மிகவும் நல்ல முறையிலே இந்த பட்ஜெட்டைத் தயாரித்துள்ளார்கள். நாட்டின் பாதுகாப்பிற்காக எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்க வேண்டுமென்று சொன்ன எதிர்க் கட்சிக்காரர்கள், இன்றைக்கு வரி அதிகமாக இருக்கிறது, நடுத்தர வர்க்கத்தையும், ஏழை மக்களையும் அது பாதிக்கிறது என்று பேசுகிறார்கள். ஆனால் கிராமங்களிலே உள்ளவர்கள் திட்டங்களுக்காக என்ன வரி போட்டாலும், அதைக் கொடுப்பதற்குத் தயாராய் இருக்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மண்ணெண்ணெய் வரி ஓரளவுக்கு ஏழை மக்களைப் பாதிக்கக் கூடும். மண் எண்ணெயை அவர்கள் டின் கணக்கில் வாங்குவதில்லை. ஒரு புட்டிக்கு மேல் வாங்காத பாமர மக்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களை வேண்டுமானால் இது பாதிக்கலாம். அதைக்கூட பிரசாரத்திற்காகச் சொல்லலாம். எங்களுக்கு பிரசார பலம் இல்லாத காரணத்தினால்தான், அவர்களுடைய பிரசாரத்திற்காக இதை யெல்லாம் சொல்கிறார்கள். தங்கக் கட்டுப்பாட்டை ஒரு காரணமாகச் சொல்லுகிறார்கள். திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் எடுத்துக் கூறியதுபோல் அதை ஒரு காரணமாகக் காட்ட முடியாது. நமது நாட்டிலே யார் 22 காரட் தங்க நகைகளை அணிந்திருக்கிறார்கள் என்று அவர்கள் கேட்டார்கள். 22 காரட் தங்கம் எங்கே இருக்கிறது என்று அவர் கேட்டார். ஆகவே, பை எலக்‌ஷன் காரணமாக வரிகள் போடவில்லை என்று சொல்லுவது தவறு. நெருக்கடி நிலைமையை உத்தேசித்து, பாமர மக்களை உத்தேசித்து, ஏழை விவசாயிகளை உத்தேசித்து, உழைப்பாளி மக்களை உத்தேசித்துத் தான் இந்த அறிக்கையைச் சமர்பித்திருக்கிறார்கள். திட்டம் வேண்டும் என்று சொல்லுகிறவர்கள், வரிகள் போடக் கூடாது என்று ஏன் சொல்லுகிறார்கள் என்பது தெரியவில்லை. அன்புள்ள பெரியோர்களே . . . . (சிரிப்பு) அன்புள்ள தலைவர் அவர்களே, நான் இந்த நிதிநிலை அறிக்கையைப் போற்றுகிறேன். எல்லோரும் இதை ஒருமனதாக ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா அங்கத்தினர்களும் அவரவர்களுடைய தொகுதியைப் பற்றிப் பேசினார்கள். என்னுடைய ஜில்லாவாகிய தென் ஆற்காடு ஜில்லாவிலே எந்தவிதமான நன்மைகளும் செய்யப்படாமல் இருக்கின்றன, அங்கே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லாவிலே நெய்வேலித் திட்டம் வந்து விட்டதனால், அங்கே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை என்று சொல்லுவார்கள். அங்கேதான் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லாவில் இருக்கக்கூடிய உழைப்பாளர்களுக்கு நெய்வேலித் திட்டத்திலே இடமில்லை, மற்ற மாவட்டங்களிலுள்ளவர்கள்தான் அங்கு குடியேறி இருக்கிறார்கள். நெய்வேலி திட்டத்தில் வேலை பார்க்க மற்ற மாவட்டத்திலிருந்துதான் வேலைக்குப் போடுகிறார்கள்,





7th March 1963] [திரு. சி. சிவசுப்பிரமணியம்]

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ளவர்களைப் போடவில்லை. அதனால் தான் தென்னாற்காடு ஜில்லாவில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. மற்ற மாவட்டத்திலுள்ளவர்களைத்தான் அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். அப்படி இல்லாமல் நெய்வேலி திட்டத்தில் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அதிகமாகப் போட வேண்டும் என்று சிபாரிசு செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த முறையில் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோன்று அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் அநேகம் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு கல்லூரி மட்டும் இல்லை. அதுதான் மருத்துவக் கல்லூரி. அந்த ஒரு கல்லூரியைக் கொடுத்துவிட்டால் தமிழ் நாட்டிற்கு ஒரு பெரிய பெயர் கிடைக்கும். கனம் நிதி அமைச்சர் அவருக்கு அதில் அக்கறை இருக்கிறது. இந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே அங்கு ஒரு மருத்துவக் கல்லூரியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்திலிருந்து மாணவர்கள் மாணவிகள் பரங்கிப் பேட்டைக்குச் செல்லுகிறார்கள். அப்படிப் போக வேண்டுமானால் இருபத்தி ஐந்து மைல்கள் சுற்றிப் போக வேண்டியதாக இருக்கிறது. கிட்டப்போனால் எட்டு மைலில் போய்விடலாம். அதைப்போலவே பரங்கிப்பேட்டை பொது மக்களும் இதைப்பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்று அங்குள்ள வெள்ளாற்றில் ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுத்தால் எட்டு மைலில் கடந்து சென்று விடலாம். ஆகவே அங்கு ஒரு பாலம் கட்டிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போன்று அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் இருக்கக் கூடிய மாணவ மாணவிகள் சிதம்பரம் வருவதாக இருந்தால் ரயில்வே ஸ்டேஷனைத் தாண்டி வர வேண்டியதாக இருக்கிறது. அங்கு ஒரு பாலம் இல்லாமல் இருப்பதால் சிதம்பரம் போவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதனால் அங்கு ரயில் ஸ்டேஷனைக் கடப்பதற்கு ஒரு பாலம் (ஓவர் பிரிட்ஜ்) கட்டிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்போலவே அங்குள்ள கோஷன் ரோடிலிருந்து Coshan Road அங்கு பக்கத்திலுள்ள சிதம்பரம் ரோட்டிற்குப் போக ஓவர் ப்ரிட்ஜ் ஒன்றைக் கட்டிக்கொடுக்கும் படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே சமயத்தில் பலர் மின்சாரத்தைப்பற்றி யெல்லாம் பேசினார்கள். தண்ணீர் இல்லை அதனால் மின்சாரம் வேண்டும் என்று பேசினார்கள். ஆனால் சிதம்பரத்தில் தண்ணீர் அதிகமாக இருக்கிறது. அதனால்தான் மின்சாரம் வேண்டும் என்று கேட்கிறேன். வீராணத்தேரி, முதலிய ஏரிகளில் அதிகமாகத் தண்ணீர் இருக்கிறது. அங்கு மின்சார வசதி செய்து கொடுக்கும்படியாகக்

[திரு. பெ. ராஜகோபால்] [7th March 1963

மாற்றி அமைத்தால் அவர்களுக்குப் பலன் தரக்கூடியதாக இருக்கும். அதன் மேல் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். அவர்கள் பாதிக்கப்படக்கூடிய அளவில் பல சட்ட திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது ஒரு முக்கியமான பிரச்னை. கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையில் முக்கிய கவனம் செலுத்துவார்கள் என்றே நினைக்கிறேன்.

அடுத்தபடியாக மின்சாரப் பிரச்னை. சீப் இஞ்சினியர் ஆப் இர்ரிகேஷன் அவர்கள் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார். அதாவது பாலார் பேசின் ரூல்ஸ் என்று. இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு க்ளியரன்ஸ் சர்ட்டிபிகேட் என்று வழங்கி வருகிறார்கள். அதனால் ஊற்றுக் கால்வாய் தலைப்பிலிருந்து இரண்டு பர்லாங் தூரத்திற்கு அப்பாலும் மேற்படி கால்வாயின் கரையிலிருந்து ஒரு பர்லாங் தூரத்திற்கு அப்பாலும் உள்ள கிணறுகளுக்கு மட்டும் மின்சாரப் பம்பு செட்டுகள் அமைத்து நீர் இறைத்துக் கொள்ளலாம் என்று அமுலில் இருந்து வருகிறது. இந்த முறையில் அவர் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார். சில கால்வாய்கள் பாலாற்றின் 12-00 noon. கரையோரத்திலிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் வெட்டப்பட்டுள்ளன. மேலும் சில கால்வாய்கள் பாலாற்றில் ஊற்றுத் தலைப்பு இருந்தாலும் அவைகள் இரண்டு அல்லது மூன்று பர்லாங் தூரம் ஆற்றின் கரையிலிருந்து விலகி நிலங்களுக்கு இடையே வெட்டப்பட்டுச் செல்கின்றன. இதனால் பல விவசாயிகள் க்ளியரன்ஸ் சர்டிபிகேட் வாங்க முடியாமல், தங்கள் நிலங்களுக்கு மின் விசையின் மூலம் தண்ணீரை இறைத்து, உணவு உற்பத்தியைப் பெருக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். சொந்த நிலத்தில் ஒரு விவசாயக் கிணறு வெட்டி, அதிலே மின்சார பம்ப் செட் அமைத்து, உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய உரிமை உண்டு. இது அடிப்படையான உரிமையாகும். ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய நிலத்தில் கிணறு வெட்ட எந்தவிதமான ஆட்சேபணையும் யாருக்கும் இருக்கமுடியாது. எனவே, இந்த க்ளியான்ஸ் சர்டிபிகேட் வழங்குவதிலே ஏன் ஆட்சேபனை இருக்க வேண்டும் என்பது எனக்கு புரியவில்லை. வட ஆற்காடு மாவட்டத்திலிருக்கும் பல்வேறு விவசாயிகள் பாலாறு பேசின் ரூல்ஸ்களுக்கு உட்பட்டு க்ளியரன்ஸ் சர்ட்டிபிகேட் வாங்க முடியாத நிலையில், தங்களுடைய நிலங்களில் சாகுபடி செய்ய முடியாதிருக்கிறார்கள். இதுபற்றி முதலமைச்சர் அவர்களிடத்திலும், நிதி அமைச்சர் அவர்களிடத்திலும் விவசாயிகள் அடிக்கடி முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய நிலைமையை நன்கு பரிசீலனை செய்து, பாலாறு பேசின் ரூல்ஸ்களை அமுல் செய்யாமல் விலக்கி வைத்திருப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையில், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கும் இந்த நிலையில் பாலாறு பேசின் ரூல்ஸ்களை விலக்கி வைத்திருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். காரணம், ஊற்றுக் கால்வாய்களில் மழைக் காலங்களில்தான் தண்ணீர் வருகிறது. மற்ற காலங்



7th March 1963] [திரு. பெ. ராஜகோபால்]

களில் தண்ணீர் வருவது கிடையாது. மழை இல்லாத காலங்களில் ஊற்றுக் கால்வாய்களை வெட்டிச் சென்றாலுங்கூட, தண்ணீர் மட்டம் கீழே சென்று விடுகின்றது. நிலங்கள் மேடாக உள்ளதால் கால்வாயை ஆழப்படுத்தினாலும் தண்ணீர் சென்று பாய்வதற்கில்லை. மேலும் ஊற்றுக் கால்வாயிலிருந்து ஒரு பர்லாங்கில் இருக்கும் கிணறுகளில் மின் விசை அமைத்து, பம்ப் செட் மூலம் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சினாலும், இரண்டு மணி நேரம்தான் தண்ணீர் பாய்ச்ச முடியும். பம்ப் உபயோகப் படுத்தாமல் இருக்கும்போது மீண்டும் தண்ணீர் மட்டம் உயர்ந்து விடுகிறது. எல்லா விவசாயிகளும் பம்ப் செட் வைத்துக் கொள்ளும் அளவில் அனுமதி அளிக்க வேண்டும். பாலாறு பேசின் ரூல்ஸ்களை அமுல் செய்யாமலிருந்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இங்கிலாந்தில் 1895-ம் ஆண்டு நடைபெற்ற ஒரு வழக்கினை இங்கே ஞாபகப்படுத்த நான் விரும்புகிறேன். மேயர் ஆஃப் ப்ராட்ஃபோர்டு வெர்ஸஸ் பிகிள்ஸ் வழக்கில் கூறப்பட்டதாவது :—

'This case was decided by the House of Lords. Pickles was annoyed at the refusal of the Bradford Corporaton to purchase his and in connection with the scheme of water supply for the town. In return, actuated by feelings of revenge, pickles shank a shaft in his land and abstracted the water which percolated through the soil of his land in unknown and undefined channel to the land of the Corporation. The Corporation sued for an injunction to restrain Pickles from diminishing or polluting their water. They contended that his conduct was unlawful because it was dictated by an evil motive. The House of Lords held that it was already settled law that the interception of underground water is not an actionable wrong, even though done intentionally.'

இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், "தரை மட்டத்திற்குக் கீழே வெட்டும் கிணறுகளில் உள்ள ஊற்று நீரின் நிலை தெரியாது, அது அந்தந்த இடத்தைப் பொறுத்து அமைகிறது. இது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒரு காரியமாக இருப்பதால், பிகிள்ஸ் ஒருவேளை வேண்டுமென்றே தன்னுடைய நிலத்தில் கிணறு வெட்டி கார்ப்பரேஷனுக்குத் தண்ணீர் போகாத நிலைமையைச் செய்திருந்தாலுங்கூட, அது சட்டப்படி குற்றம் ஆகாது" என்று இங்கிலாந்தில் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடியானவன் தன்னுடைய நிலத்தில் கிணறு வெட்டி மின் விசை அமைத்துத் தண்ணீர் இறைத்துப் பயிர் செய்வதற்கு உரிமை உண்டு. என்றாலும், பாலாறு பேசின் ரூல்ஸ்களினால் பெரும்பாலான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இந்த நெருக்கடி நிலைமையை உத்தேசித்து உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்கிற நாம், பாலாறு பேசின் ரூல்லை விலக்கிடுவது அவசியம் என்பதை நான் நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உடனடியாக அதை நீக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கேட்டுக்கொள்ளுகிறேன். சிதம்பரத்திற்கு மின்சார வசதி செய்து கொடுத்தால் பல கிராமங்களில் விவசாயத்தைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்குச் சிதம்பரம் கிராமங்களுக்கு மின்சார வசதியை விஸ்தரித்துக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போன்று எங்கள் கிராமங்களில் மனைக்கட்டு பிரச்னை அதிகமாக இருக்கிறது. வீடு கட்டும் பிரச்னையை நிறுத்தி வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது. மனைக்கட்டுப் பிரச்னையை துரிதமாக முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரிஜனங்களுக்கு துரிதமாக மனைக் கட்டுக்களை வழங்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிதம்பரம் நகரத்தைப் பொறுத்த வரையில் அது ஒரு பெரிய நகரம், பெரிய கலாசாலை ஒன்று இருக்கிறது, பல ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. அதற்குத் தகுந்த ஆஸ்பத்திரி வசதி அங்கு கிடையாது. அங்குள்ள ஆஸ்பத்திரி சிறிய ஆஸ்பத்திரியாக இருக்கிறது. அங்குள்ள ரோடுகள் எல்லாம் குறுகிய ரோடுகள். பஸ்கள் போவதற்குத் கஷ்டமாக இருக்கிறது. அதனால் பக்கத்தில் வேண்டிய இடம் இருக்கிறது. ஆகவே அந்த இடத்தில் அங்குள்ள ஆஸ்பத்திரியை மாற்றி அமைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட ஒரு திட்டம் அரசாங்கத்தினிடம் இருப்பதாகத் தெரிய வருகிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஸ்ரீமுஷ்ணம், கம்மாபுரம் போன்ற இடங்களுக்குத் தண்ணீர் சிதம்பரத்திலுள்ள ஏரியிலிருந்து போக வேண்டியதாக இருக்கிறது. அங்கு போரிங் செட்டுகளை வைத்துக் கொடுத்தால் மக்களுக்குச் சௌகர்யமாக இருக்கும். போரிங் செட்டுகளை வைத்துக் கொடுத்தால் விவசாயிகள் ஏராளமாக நிலத்தை விவசாயத்திற்குக் கொண்டு வந்து உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். இதையே பொது மக்களும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கு ஐம்பது அல்லது நூறு அடிக்கு போரிங் வெல்கள் போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பஸ் விஷயமாகச் சிதம்பரத்திலிருந்து ஒரு பஸ்தான் சென்னைக்கு வருகிறது. மதராஸிலிருந்து ஒரு பஸ்தான் சிதம்பரத்திற்கு வருகிறது. முதல் நாள் காலையில் ஒன்றும் அடுத்த நாள் காலையில் ஒன்றும் தான் வருகிறது. அதுவும் கவர்ண்மெண்ட் பஸ் இல்லை. சிதம்பரத்திற்கு இரண்டு பஸ்கள் போவதற்கும் வருவதற்கும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தஞ்சைக்குக் கடலூர் நெய்வேலி வழியாகச் செல்லுகிறது. அது என் சிதம்பரம் வழியாகச் செல்லக் கூடாது? சிதம்பரம் மாயவரம் வழியாகச் செல்லலாம். ஆகவே சிதம்பரத்திற்கும் மதராசுக்கும் இன்னும் அதிகப்படியான பஸ்கள் விடும்படியாகக் கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.





* திரு. பெ. ராஜகோபால்: மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் தற்போது கொண்டு வந்திருக்கக்கூடிய நிதி நிலை அறிக்கையானது சபையிலுள்ளவர்கள் பாராட்டத் தகுந்த முறையில் அமைந்திருக்கிறது. நாட்டின் நிலையை அறிந்து அதற்கேற்றவாறு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள் என்றே சொல்லலாம். வரி இல்லாத ஒரு நிதி நிலை அறிக்கையை எல்லோரும் பாராட்டுவதுடன் அதை வரவேற்பார்கள் என்றே நான் கருதுகிறேன். பொதுவாகப் போடப்படுகிற வரி அதனால் வசூலிக்கப்படுகின்ற பணம் எல்லாம் பொது மக்களுடைய நன்மைக்காகவும் நாட்டின் நன்மைக்காவமே தான் செலவழிக்கப்படுகிறது. அதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்காது என்று கருதுகிறேன். பொதுவாக எல்லோரிடத்திலும் இப்பொழுது இருக்கக்கூடிய வாதம் என்னவென்றால் போடப்படுகிற வரியெல்லாம் யார் மீது சுமத்தப்பட வேண்டும் என்பதுதான். அந்தப் பிரச்னைதான் இருக்கிறதேயொழிய வரி போடக் கூடாது என்று யாரும் நினைக்கவில்லை. வரியை யாரும் ஆட்சேபிக்கவில்லை. வரி விதிக்கும்போது நன்றாகப் பரிசீலனை செய்து யார் யார் மீது வரியை விதித்தால் நல்லது என்பதையெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும். வரி விதிக்க வேண்டும் என்றுதான் எல்லோரும் சொல்லுகிறார்கள். அந்த வகையில் பார்க்கும்போது இப்பொழுது தயாரிக்கப்பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கையானது வரி இல்லாமல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த நிதி நிலை அறிக்கை பல்வேறு வகையில் பாராட்ட வேண்டிய நிலையில் இருக்கிறது. இப்பொழுது நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதால் ஊர்க் காவல் படை அமைக்க வேண்டும் என்றும், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றும் நாடு அபிவிருத்தி அடைய வேண்டும் என்றும், கோழிப் பண்ணை அபிவிருத்தியடைய வேண்டும் என்றும் இன்னும் பல்வேறு துறைகளில் முன்னேற்றமடைய வேண்டும் என்றும் அதற்காகச் சில நிதிகளையும் நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கி இருக்கிறார்கள். அதை வரவேற்க வேண்டியதாக இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில் விவசாயிகளுக்குப் பல வகைகளில் குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளையெல்லாம் தீர்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. விவசாயிகளுக்கு வரியை விதிப்பதால் உற்பத்தியைப் பெருக்குவதில் அவர்களுக்கு உற்சாகம் குறைகிறது. அதனால் அவர்களுக்குச் சில சலுகைகளைக் காட்ட வேண்டியதாக இருக்கிறது. விவசாயிகளுக்குப் பல சலுகைகளை அளிக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்தால் அவர்களால் விவசாயத்தைப் பெருக்கி உற்பத்தியைப் பெருக்க முடியும். நிச்சயமாகப் பெருக்குவார்கள். தற்போது விவசாயிகள் அந்த நிலைமையில் இல்லை. அவர்களிடம் கையாளப்படும் சில விதிகளை அவர்கள் விரும்பவில்லை. பல்வேறு வகையில் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். சில சட்ட திட்டங்களை

[திரு. பெ. ராஜகோபால்] [7th March 1963

என்னுடைய தொகுதியைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வடஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்து தான் அந்த ஆலைக்குக் கரும்பு வர வேண்டியிருக்கிறது. கரும்பு ஆலைக்கு வருவதற்குப் பாதைகள் நல்ல முறைகள் அமையவில்லை. பல்வேறு கிராமங்களிலிருந்து வண்டிகள் ஆலைக்கு வருவதற்கேற்ற வகையில் ஆற்றுக்குக் குறுக்கே பாலங்கள் கட்ட வேண்டியிருக்கின்றன. மேல் சாணாங்குளம், வடச்சேரி, கொல்லைகுப்பம், பாபலி பல்லி, உதியந்திரம் போன்ற பகுதிகளிலிருந்து கரும்பு ஆலைக்கு வருவதற்கு ஆற்றைக் கடந்து வரவேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இத்தகைய நிலையில் ஒரு பாலம் அமைத்துக் கொடுக்கும் படிக் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

* திரு. செ. சதாசிவம்: மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் 1963-64-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வரவேற்று, என்னுடைய தொகுதி பற்றிய சில கருத்துக்களை அவையோருடைய கவனத்திற்குக் கொண்டுவர வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக் கொளுகின்றேன்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை வரி இல்லாத ஒரு நல்ல அம்சத்தைக் கொண்டிருப்பது உண்மையிலேயே போற்றத்தக்கதாகும். நம்முடைய நாட்டிலுள்ள நெருக்கடியான நிலைமையில், நாட்டைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கை எடுப்பதோடு கூட, திட்ட வேலைகளையும் முக்கியமாக நிறைவேற்ற வேண்டுமென்ற கொள்கை அனுசரிக்கப்படுகிறது. உணவு உற்பத்தித் திட்டங்களுக்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் பெரும் பகுதி ஒதுக்கியிருப்பது மிகவும் போற்றத் தகுந்தது என்று நான கருதுகிறேன். உணவுத் தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கு முக்கியமான நில வளம், நீர் வளம், உரம் ஆகிய இந்த மூன்றும் மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து, அந்தந்தத் திட்டங்களின் அடிப்படையில் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. எதிர்க் கட்சி உப தலைவர் அவர்கள்கூட, நான்காவது 'ஐடம்' ஆக, இசை மூலம் அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற கருத்தை எடுத்துரைத்தார். இன்றுள்ள இந்த நிலைமையில் மூன்று ஐடம்களில் விவசாயிகள் பயனடையும்படிச் செய்த பிறகு புதிய திட்டங்களைப் புகுத்துவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்ற நினைப்பில்தான் நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டங்களுக்கு நல்லதொரு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

நில வளப் பாதுகாப்பு அவசியம் என்பதை உணர்ந்து மண் அரிப்பைத் தடுக்கக்கூடிய திட்டம் செயல்பட்டு வருகிறது. மிகவும் பிற்பட்ட வறண்ட பிரதேசமாக எங்கள் பகுதி இருக்கிறது. சொற்ப மழை பெய்து மண் அரிப்பு ஏற்படக்கூடிய அத்தகைய பிரதேசங்களைப் பொறுக்கி யெடுத்து, அங்கெல்லாம் இத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் அமைச்சர்



7th March 1963] [திரு. செ. சதாசிவம்]

அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்களுடைய தாலுகாவில் இந்த ஆண்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இந்த வகை மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்தில் மத்திய சர்க்காருடைய திட்டமும் ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு நிதி ஆண்டிலும், ஒவ்வொரு மாநிலத்திலும் இரண்டு பகுதிகளில் ஆயிரம் ஏக்கரில் பரீட்சார்த்தமாக இந்தத் திட்டம், லட்ச ரூபாய் மான்யத்தில் நடந்து கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டில் இந்த மாநிலத்தில் அமுல்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் நம்முடைய மாநிலத்திற்கு மிகவும் உகந்ததாகும். எங்கள் பகுதி விவசாயிகள் அதை நல்ல முறையில் வரவேற்கிறார்கள். இந்த ஆண்டிலும் அந்தத் திட்டத்தை நம் மாநிலத்தில் அமுல் நடத்த வேண்டும். மற்ற மாநிலங்களில் இத் திட்டம் அவசியமாக இருந்தாலும் அவசியமில்லாவிட்டாலும், நம் மாநிலத்திற்கு இது அவசியம் என்பதை மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திப் பெறவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அரவக்குறிச்சி மிகவும் பிற்பட்ட தொகுதி என்பது எல்லா அமைச்சர்களுக்கும் தெரியும். அந்தப் பகுதியில் நீர் வளம் பெருக வேண்டும் என்பதில் விவசாயிகள் மிக அக்கறை கொண்டு, கிணறுகளை ஏராளமாக வெட்டி வருகிறார்கள். இந்த ஆண்டில் கிணறு வெட்ட மான்யமாக 16 லட்சம் ரூபாயும், கடன் தொகையாக 97 லட்சம் ரூபாயும் ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. இந்தக் கிணறுகளுக்காகத் திருச்சி ஜில்லாவுக்கு ஒதுக்கப்பட்ட பணம் பெரும் பங்கு என்னுடைய பகுதிகளுக்கே செலவிடப்படுகிறது என்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். முன்பு குறைவாக இருந்த கிணறுகள் இப்போது அதிகமாக வெட்டப்படுவதால் கிணற்றில் நீர்மட்டம் இறங்கிவிட்டது. அதன் காரணமாக 60 அடி 70 அடி என்று தண்ணீர் காண்பதற்கு மிக ஆழமாகப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு ஆங்காங்குள்ள ஓடைகள், சிறு ஆறுகள் முதலியவற்றில் தடுப்பு அணை மூலம் தண்ணீர் தேக்கி வைக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கோயம்புத்தூர், சேலம் ஆகிய இரண்டு ஜில்லாக்களில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுடன் சேர்க்க, இதற்குத் தனியாக ஒரு சட்டம் வகுத்து இந்த இரண்டு ஜில்லாக்களிலும் பல தடுப்பு அணைகளைக் கட்ட வழி வகை செய்யப்பட்டுள்ளது. எங்கள் தாலுகா கோயம்புத்தூர் ஜில்லாவினோடு எல்லா அம்சங்களிலும் ஒன்றுபட்ட ஒரு பகுதியாகும். எங்கள் தாலுகா எல்லா அம்சங்களிலும் அதோடு ஒத்திருப்பதால் விவசாய மந்திரி அவர்கள் இதைக் கவனித்து நிச்சயமாக எங்கள் பகுதிக்கும் இச் சட்டத்தை நீடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எங்கள் ஜில்லாவிற்கு 30 குழாய்க் கிணறுகள் சாங்க்ஷன் செய்திருப்பதாக அறிகிறேன். துளைக் கிணறுகள் போடப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். பரீட்சார்த்தமாக என் தொகுதியில் முதலில் ஒன்று அல்லது இரண்டு துளைக் கிணறு போட்டுக் காண்பித்து, அதன்மூலம் போதுமான நீர் கிடைக்கும்

என்றால் கூட அதை அடுத்த ஆண்டு கொண்டுவருவதாகச் சொல்கிறார்கள். செந்துறை வட்டாரத்தை எடுத்துக்கொண்டால் குடிதண்ணீர் இன்றி பல்லாண்டுகளாக அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களிடத்தில் இன்னும் ஒரு ஆண்டு பொறுத்துக் கொண்டிருங்கள் என்று சொல்வது முறையல்ல. ஆகையால் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள்ளாகவாவது செந்துறை பிர்க்கா, உடையார்பாளையம் தாலுகா ஆகிய இடங்களில் குடிதண்ணீர் வசதியை அவசியம் செய்து தரவேண்டும் என்பதாக இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். பஞ்சாயத்தைப் பொறுத்தவரை அவர்களுக்கு இடுகாட்டையும், சுடுகாட்டையுந்தான் கொடுத்திருக்கிறார்களே தவிர மற்றபடி வேறு ஒன்றும் இல்லை. இங்கு பேசிய ஒரு உறுப்பினர் இடுகாட்டுக்குப் போக வழி இல்லை என்று சொன்னார்கள். நான் சொல்வதெல்லாம் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இடுகாடும், சுடுகாடும் தவிர வேறு ஒன்றும் இல்லையென்பதுதான். பஞ்சாயத்துக்கு குட்டைப் புறம்போக்கு, பாதைப் புறம்போக்கு, மயானப் புறம்போக்கு ஆகியவற்றைத்தான் கொடுத்திருக்கிறார்கள். அதனால் பஞ்சாயத்துக்களுக்கு எந்தவித வருமானமும் இல்லை. குட்டைப் புறம்போக்கில் டீசி மரப்பட்டா மரங்கள் இருக்கின்றன. அந்த மரங்கள் யார் யார் பேரிலோ மரப்பட்டா செய்யப்பட்டிருக்கின்றன. அந்த மாதிரி மரப்பட்டாவைத் தனிப்பட்டவர்களுக்கு இருப்பதை நீக்கி அதை, பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கவேண்டும்.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் தொழில்போதகர்களாக, முழு நேர ஊழியர்களாக வேலை செய்து வருகிறவர்கள், இப்போது போடப்பட்ட இயக்குநர் அவர்களின் உத்திரவின்படி 1963 ஜூன் மாதம் ஆரம்பம் முதல் குறுகிய நேர ஊழியர்களாகக் கருதப்படுவார்கள். அந்த உத்தரவின் காரணமாக, இப்போது தொழில் போதகர்களாக இருந்து வரக் கூடியவர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் பாதிக்கப்படுகிறது; ஆயுள் இன்ஷூரன்ஸ் பாதிக்கப்படுகிறது, சி.எல். பாதிக்கப்படுகிறது; ஸ்தல ஸ்தாபன பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கு இரண்டே முக்கால் நாள் லீவ் பாதிக்கப்படுகிறது; மருத்துவ உதவி பாதிக்கப்படுகிறது; மெடிகல் லீவ் பாதிக்கப்படுகிறது; பென்ஷன் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் அவர்களை எப்போதும்போல் முழு நேர ஊழியர்களாகவே வைத்திருக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. அ. துரைசாமி: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, 1963-64 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நமது தேசம் பெரிய அபாயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நமது மதிப்பிற்குரிய ஜவஹர்லால் நேரு அவர்கள் நேற்று ஒரு



பொதுக்கூட்டத்தில் பேசும்போது, 'தேச சுதந்திரத்தைப் பாதுகாக்க எந்த விலையையும் கொடுத்தாக வேண்டும், வரிச்சுமையைத் தாங்குவதைத் தவிர வேறு வழி இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நாம் எந்த வரியையும் கட்டத் தயாராக இருக்க வேண்டும். இந்த நெருக்கடி நேரத்திலும் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் எந்த விதப் புது வரியும் இல்லாமல் இந்த பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்த்து எதிர்க்கட்சி அன்பர்களும் பேசினார்கள். இதைப் பார்க்கும்போது எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. பாரதத்தில்—தருமரையும் துரியோதனனையும் அவர்களுடைய குரு அழைத்து, தருமரிடத்தில், 'உலகத்தில் ஒரு கெட்டவனை அழைத்து வா' என்றும், துரியோதனனிடத்தில் 'ஒரு நல்லவனை அழைத்து வா' என்றும் கூறி அனுப்பினாராம். தருமர் கெட்டவர்களைத் தேடிக்கொண்டு உலகம் பூராவும் சுற்றி அலைந்துவிட்டுத் திரும்பி வந்து 'ஒரு கெட்டவன் கூட உலகத்தில் இல்லை' என்று சொன்னாராம். அதே போல் துரியோதனன் உலகம் பூராவும் சுற்றி விட்டுவந்து 'ஒரு நல்லவன் கூட இல்லை' என்று சொன்னாராம். அதுபோல் ஆளும் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்கள் தருமரைப் போன்று, நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்தில் அதைப் பாராட்டி ஆதரித்துப் பேசுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லையென்று சொல்லி துரியோதனனைப் போல் பார்த்து, எதிர்க்கட்சிக்காரர்கள் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கை நல்ல முறையில் அமைந்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் அங்கத்தினர் அவர்கள் தருமரோடு ஒப்பிட்டுப் பேசி வருகிறார்கள். தன்னுடைய மனைவியைப் பந்தயத்தில் சூதாடித் தோற்ற தருமனை நல்லவர் என்று சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எதிர்க்கட்சியினரை துரியோதனன் என்று சொன்னால் அதற்காக எதிர்க்கட்சியினர் சந்தோஷப்படவேண்டும்.

திரு. அ. துரைசாமி: விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், எங்கள் பகுதியில் ஏழை விவசாயிகளுக்கு ஐந்து ஏக்கர் தரிசு நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பத்து வருஷத்திற்கு விற்பனை செய்யவோ, தானம் செய்யவோ முடியாது. சர்க்காரிலும் அதன் பேரில் எந்த விதமான கடனும் கொடுப்பதில்லை. அந்த விவசாயிகள் கடன் வாங்க வேண்டுமென்றால், வேறு ஒருவர் ஜாமீன் கொடுப்பதோடு அவருடைய நிலத்தையும் ஈடாகக் கொடுக்க வேண்டும். அந்த நிலத்திலே வில்லங்கம் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் தான் இந்த விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுக்கப்படுகிறது. சாதாரண ஏழையை நம்பி யாரும் தங்கள் நிலத்தை அடமானம் வைத்து உதவி செய்ய முன்வர

என்று மக்களுக்குக் காண்பித்தால் மக்களே நீண்ட காலக் கடன் பெற்று தூலைக் கிணறுகள் போடத் தயாராய் இருக்கிறார்கள். பரிட்சார்த்தமாகப் போடும் கிணறு வெற்றிகரமாக இருந்தால் செஸ் வரியும் கட்டத் தயாராய் இருக்கிறார்கள். ஆகவே பரிட்சார்த்தமாக அந்தத் திட்டத்தை உடனடியாக என் தொகுதியில் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் மூன்று நதிகள் ஓடுகின்றன. ஒன்று அமராவதி, மற்றொன்று நொய்யல், மூன்றாவது குடகநாறு. நொய்யல் ஆற்றில் லோயர் பவானி கழி நீர் ஏராளமாக வருவதால் அதைத் தேக்க வகை செய்தால் எங்கள் தொகுதியில் 34 ஆயிரம் ஏக்கரா இரு போக நஞ்சை ஏற்பட வழி உண்டாகும். இது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ந்திருந்தும் பல சிக்கல்கள் காரணமாக அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று உணர்கிறேன். உடனடியாக அந்த அணையைக் கட்ட முடியாவிட்டாலும் அந்தப் பிரதேசத்தில் உள்ளவர்கள் பம்பு செட்டுகளின் மூலமாகவாவது அந்தக் கழிவு நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள தாராளமாக அனுமதி வழங்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அமராவதி அணை தேக்கிய பிறகும் இதேமாதிரிதான் அதிகமாகக் கழிவு நீர் வருகிறது. பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின் அடிப்படையில் ஆளியாறு திட்டத்தின் மூலம் ஏழாயிரம் ஏக்கரா பாய்கிறது. அதன் மூலமும் அமராவதிக்கு வரும் கழிவு நீரையும் அமராவதியின் கடைக் கோடியில் உள்ள எங்கள் கரூர் தாலூகா விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள ஆங்காங்கே பம்பு செட்டுகள் வைத்துக்கொள்வதற்கு விவசாயிகளுக்கு தாராளமாக அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இரா. நாராயணன் :** கனம் தலைவர் அவர்களே, 1962-64-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை கனம் அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன் பேரில் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவ் விவாதத்தில் கலந்துகொள்கிற எங்களைப் பற்றி—அதுவும் எதிர்க்கட்சிக்காரர்களாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தவரைப் பற்றி—காங்கிரஸ்காரர்களில் யார் பேசினாலும் அவர்கள் ஒவ்வொருவரும் தாக்கியே பேசிக்கொண்டு வருகிறார்கள். திட்டத்திற்குப் பழுது சொல்கிறார்கள், அதை நிறைவேற்ற ஒத்துழைப்பதில்லை என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆரம்பத்தில் அவர்கள் பட்ஜெட்டை ஆதரிப்பதாகச் சொல்லிக்கொண்டு துவக்கினும் தங்கள் தங்கள் தொகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான குறைபாடுகளைத்தான் பின்னர் சொல்கிறார்கள். காக்காய்க்குந் தன் குஞ்சு பொன் குஞ்சு என்றாற்போல் அவர்கள் கட்சி சர்க்கார் தயாரித்த பட்ஜெட் என்பதனால் பாராட்டியும், மாநிலத்தில் ஆங்காங்குள்ள குறைபாடுகளை அவர்களாலும் மறைக்க முடியவில்லை. குறிப்பிடுகிறார்கள். நானும் இந்த மாமன்றத்தில் எங்கள் தொகுதியிலுள்ள குறைபாடுகளைக் கனம் அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





அதுவும் தவிர இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் புதிய வரி எதுவும் போடவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் வெகு தைரியமாகச் சொல்லிவிட்டார்கள். ஆனாலும் நாங்கள் எல்லாம் சொல்கிறோம், எங்கே வரி போடாது விட்டார்கள்? சென்ற 27-ஆம் தேதி அன்று பட்ஜெட்டுக்கு முன்னாலேயே நிலவரி, தண்ணீர் வரி இந்த ஆண்டிற்கு மட்டுமல்ல, சென்ற ஆண்டுக்கும் சேர்த்து வசூலிக்கப் புதிய வரியை நிறைவேற்றியிருக்கிறார்கள். இதனால் பாதிக்கப்படப் போகிறவர்கள் யார் என்று பார்த்தால் விவசாயிகள்தான். விவசாயிகள் இந்த நாட்டிற்கு முதுகெலும்பு என்பதை கனம் அமைச்சர் அவர்கள் மறந்துவிட்டார்களோ என்று கருதுகிறேன். இதேநேரத்தில் மத்திய சர்க்கார் புதியதாக 250 கோடிக்கு வரி விதித்திருக்கிறார்கள். அதுவும் ஏழை விவசாயிகளைத்தான் பாதிக்கப்போகிறதே தவிர மற்றப்படி ஒன்றும் இல்லை.

அதே தருணத்தில் நகைத்தொழிலாளர்கள் வேலை இழந்து படுகிற துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. அவர்கள் படுகிற கஷ்டங்களை நாம் ஒருவகையில் சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். நகைத் தொழிலாளர்களை, வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள், உங்களுக்கு முதற் சலுகை அளிக்கப்படும் என்று சொல்வதனால் நகைத் தொழிலாளர்களுடைய நிலைமை உடனடியாகச் சீர்திருந்திவிடாது. ஏற்கெனவே படித்தவர்கள் பலர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். நகைத்தொழிலாளர்களுக்கு முதல் சலுகை அளிப்பது என்றால் படித்தவர்களுடைய நிலை என்ன ஆவது? இவ்வாறு செய்வது நகைத் தொழிலாளர்களுடைய தொழில் நுட்பத் திறனுக்கு ஏற்ற வேலையை நாம் கொடுத்து விட்டதாக ஆகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்தாண்டுத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கவில்லை. ஆனால் அந்தத் திட்டம் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்றுதான் சுட்டிக்காட்டுகிறோம் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் உணர வேண்டும்.

அதுவும் தவிர பஞ்சாயத்து ஆட்சியில் இன்றைக்கு யூனியன்களை ஏ, பி, சி, டி என்று பிரித்திருக்கிறார்கள். அந்த நான்கு பிரிவுகளில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான மானியமும் சலுகையும் அளிக்கப்படுகிறது. என் தொகுதி வேப்பூர் பஞ்சாயத்தை பி. கிளாஸில் சேர்த்திருக்கிறார்கள். அது வடக்கலூர், வரகூர் பிர்க்காவைக் கொண்டது. நில வரி விகித அடிப்படையில் இப்படிப் பிரித்திருக்கிறார்கள். வேப்பூர் பஞ்சாயத்துக்கு நில வரி அடிப்படையில் 2 பைசா வரி கூட வருகிறது என்பதனால் இது பி. கிளாசாகிவிட்டது. வேறு ஒன்றும் இல்லை. இந்த 2 பைசா வித்தியாசத்தைப் பார்க்காமல் வேப்பூர் யூனியனை ஸி. கிளாஸ் பஞ்சாயத்தாகவே வைத்து கிராண்டு போன்ற மற்ற சலுகைகளை அளிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த வட்டாரத்தில் எவ்வித வசதியும் செய்யப்படவில்லை. தொழில் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று இந்த பட்ஜெட்டில் ஏதோ செய்திருக்கிறார்கள். குடிதண்ணீர் திட்டம்

கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த ஐந்து தினங்களுக்கு முன்னால் இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது ஆளும் கட்சியில் இருந்த நாங்கள் நிம்மதியாக மூச்சு விட்டபோது எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் ஏக்க பெருமூச்சு விட்டார்கள். நாங்கள் நிம்மதியாக மூச்சு விடவும் எதிர்க்கட்சிக்காரர்கள் ஏக்கப் பெருமூச்சு விட்டதற்கும் உள்ள காரணம் இந்த ஆண்டு புது வரிகள் விதிக்காததுதான். வரிகள் இல்லை என்றால் வழியில்லை அரசைக் குறைகூற என்று அவர்கள் கவலைப்பட்டார்கள். அடுத்த கணம் அந்தக் கவலையை விட்டு விட்டவர்கள் போல் தொடர்ந்து அதுகுறித்து நடைபெறும் விவாதத்தில் புதுப் புதுக் குறைகளை கூறுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை, கண்டுபிடித்துக்கொண்டு வருகிறார்கள், அவற்றை சொல்லி வருகிறார்கள். இந்த அறிக்கையைப் பற்றிக்கூட அவர்கள் குறை கூறும் தன்மை, மனப்பான்மை வியப்பளிக்கக் கூடியது. நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கும்போது ஆரம்பத்தில் நாட்டின் தற்போதைய சூழ்நிலை என்ன என்பதைப்பற்றி விளக்கமாக கூறியிருக்கிறார்கள். அதேபோல் இறுதியில், இந்த நிதிநிலை அறிக்கையை எப்படி அணுக வேண்டும், எப்படி ஆராயவேண்டும் என்பதைப் பற்றி கட்டளையிடும் தோரணையில் அல்லாது, கட்டாயப்படுத்தும் பாணியில் அல்லாது, வேண்டுகோள் விடுக்கும் முறையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம் நாடு அமைதியாக இருந்த நாடு, உலகத்திற்கு சமாதான தத்துவத்தை போதித்து வந்த நம் நாட்டில் இன்று அன்னிய நாட்டு ஆக்கிரமிப்பு நடந்து ஓய்ந்திருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பைச் சமாளிப்பதில் நம் தற்காப்பு அமைப்புக்களை பலப்படுத்திக் கொள்ளவேண்டிய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம் என்றும் கூறியிருக்கிறார்கள். எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்ற முறையில் நம் வெல்பேர் திட்டங்களைக் கைவிட வேண்டுமென்று சில மேதைகள் கூறுகிறார்கள். திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம்தான் நம் பொருளாதார நிலையை நாம் சரிபடுத்தி அதை உயர்த்த முடியும். ஆக, பாதுகாப்புப் பணிகளுக்காக ஒரு புறத்தில் நிதி ஒதுக்கி பணிபுரிந்து வருவதோடு மறுபுறத்தில் நமது திட்ட வேலைகளையும் செயல்படுத்துவது போன்ற இந்த இரண்டு அம்சங்கள் இந்த அறிக்கையின் சிறப்பான அம்சங்களாகும். புது வரிகள் வரும் என்று நினைத்தோம் அப்படி வந்திருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள நம்மை நாமே தயார்படுத்திக் கொண்டிருந்தபோது, புது வரிகள் எதுவும் இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கேட்டு பூரிக்காத உள்ளம் இருக்க முடியாது. அதைக் கேட்டு மகிழாத உள்ளம் இருக்க முடியாது. அப்படி அதைக் கேட்டும் பூரிக்காவிட்டால் அது இருதயமாகவே இருக்க முடியாது. அதை நன்கு புரிந்துகொண்டதினால்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றையதினம் பத்திரிகையாளர்களிடம் கருத்து தெரிவிக்கிறபோது புது வரிகள் இல்லை என்ற நிலையை, அந்த அம்சத்தைப் பாராட்டுகிறேன் என்று குறிப்பிட்டார்கள். "the first impression is the best impression" என்று சொல்வார்கள். அதேபோல் "the first expression is the best expression" அதுதான் உண்மையான "எக்ஸ்



ப்ரஷனாக" இருக்க முடியும். அதை விட்டு விட்டு அல்லது மறைத்துவிட்டு குறைகூறிக்கொண்டிருக்கிறார்கள். வரிகள் இல்லை என்ற காரணத்தினால் இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரிக்க வேண்டுமா என்று ஒருவர் கேள்வி போட, மத்திய சர்க்காரில் கழுத்தை நெரித்து விட்டார்கள், இவர்கள் அந்த நேரத்தில் கண்ணைக்குத்தாமல் விட்டுவிட்டார்களே என்று ஒருவர் கேலி மொழிய இது நிதித் திட்டமா?—அல்ல, அல்ல, சதித் திட்டம் என்று ஒருவர் பழிபேச; இப்படி கண்டனக் கணைகளை வீசி, குறைகளை அடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எடுத்துக் கூறுகிற நேரத்தில், 'நாங்கள் ஆளுகிற கட்சிக்கு ஆலவட்டம் வீச வரவில்லை, இடித்துக் கூற வேண்டிய இடத்தில் இடித்துக் கூறுவோம். அதற்காகத்தான் எதிர்ப்புறத்தில் உட்கார்ந்திருக்கிறோம், அதோடு ஆட்சித் தேர் தடம் புரண்டுவிடாமல் போவதற்கு முட்டுக்கட்டை போடுகிறோம்" என்று குறிப்பிட்டார்கள். விலைவாசி உயர்வாக இருந்தபோது, "விலைவாசி உயர்வினால் மக்களை வேதனைக்கு ஆளாக்கி விட்டீர்களே" என்று சொன்னவர்கள், இன்று விலைவாசிகள் இறங்கியிருக்கும்போது "விலைகளைக் குறைத்து வேதனை தந்து விட்டீர்களே" என்று சொல்லும் காட்சி; தாலி ஏன்? தங்கம் ஏன்? ஒரு ஜோடி மாலையுடனும், ஒரு சொற்பொழிவாளருடனும் திருமணம் நடைபெறாதா, அப்படித் திருமணம் நடைபெற்ற குடும்பத்தில் மகிழ்ச்சி அரும்பாதா; மழலைச் செல்வம் பிறவாதா? என்று சொன்னவர்கள் இன்று தாலி வேண்டும், தாலிக்குத் தங்கம் வேண்டும், அதுவும் 22 காரெட் தங்கம் வேண்டும் என்று கூறும்போது, சமயத்துக்குத் தகுந்தாற்போல் கொள்கையை மாற்றிக் கொள்ளும் தன்மையைப் பார்க்கும்போது அவர்கள் ஆட்சித் தேர் உருளக் கூடிய அளவில் முட்டுக்கட்டை போடவில்லை, அச்சாணியை அகற்றும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. பகிரங்கமாக ஒருவர், 'இப்படி வரியாகப் போடுகிறார்களே, இந்த ஆட்சியைக் கவிழ்க்க எல்லோரும் வாருங்கள்' என்று மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். இப்படி அழைப்பு விடுத்திருப்பவர் யார் என்று பார்க்கிற போது ஜனவரி, பிப்ரவரி தவிர மற்ற வரியெல்லாம் போட்டு விட்டார்கள் என மக்கள் குமுறும் நிலையை ஒரு காலத்தில் உருவாக்கித் தந்த அந்தப் பெரியவர்தான், இப்போது "வரி போட்டு விட்டார்கள், மக்களை வாட்டுகிறார்கள். வதைக்கிறார்கள்" என்று கூறுகிறார், அவரை சார்ந்தவர்கள்தான் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை எல்லாவற்றையும் இந்த ஆட்சி அழித்துவிட்டது, ஒழித்து விட்டது எனக் கூறுகிறார்கள். ஏழைகளை வாழ வைக்கிறது இந்த அரசு என்ற காரணத்தாலேயே கட்சி கட்டிய இவர்கள் நிலங்களில் துள்ளி விளையாடுகிறவர்கள் இருக்கக்கூடிய கட்சியைச் சார்ந்தவர்கள், அரச பரம்பரையில் பிறந்திருப்பவர்கள் பலர் இருக்கக் கூடிய கட்சியை சேர்ந்தவர்கள், மக்களை வாட்டுகிறார்களே, வதைக்கிறார்களே என்று கண்ணீர் வடிக்கிறவர்கள் போலப் பேசும்போது ஆடு நனைகிறதே என்று ஓநாய் கண்ணீர் வடித்து அழுத கதையைத்தான் நினைக்க வேண்டியிருக்கிறது.

மாட்டார்கள். ஆகவே, சர்க்கார் இந்த விவசாயிகளுக்கு எந்த வித சொத்து ஜாமீனும் இல்லாமல் கிணறு வெட்டக் கடன் கொடுத்தால், அவர்கள் அந்தத் தரிசு நிலத்தைப் பண்படுத்தி பயிர் செய்ய வசதியாக இருக்கும், அந்த விவசாயி முன்னேற முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டு வருகிறது. சேலம் ஜில்லாவைப் பொறுத்த வரையில் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் நான் இதைப் பற்றிக் கேட்டபோது, 'இப்போது இருக்கும் அளவிலேயே, மனைக்கட்டுகள் வழங்கவேண்டுமென்றால் ஏழெட்டு ஆண்டுகள் ஆகும்' என்று சொன்னார்கள். அப்படியிருக்கும்போது புதிதாகக் கிராமங்களில் உள்ள ஹரிஜன மக்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்க வேண்டுமென்றால் எத்தனை வருஷங்கள் ஆகுமென்று சொல்ல முடியாது. ஆகவே, வீடு கட்டும் திட்டத்தையாகிலும் நிறுத்திக்கொண்டு உடனடியாக ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அவசியம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தலைவாசல் தொகுதி மிகவும் பிற்போக்கான பகுதி. ஆத்தூர் தாலுகாவில் எந்தவிதமான சர்க்கார் தொழிலும் கிடையாது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது கூட நூற்பு ஆலை ஒன்று வைக்கவேண்டுமென்றும், தொழில் பேட்டை ஒன்று வைக்க வேண்டுமென்றும் கேட்டேன். இந்த ஆண்டு இந்த மாநிலத்தில் இரண்டு பாலிடெக்னிக்குகள் ஆரம்பிப்பதாகவும், அதில் ஒன்றை திருச்சியில் அமைக்கப் போவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இன்னொன்றை சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் தாலுகாவில் ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அங்கு தொழிற்பேட்டை ஒன்றை அமைத்து வேலையற்ற விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. பெருமாள்:** கனம் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் 1963-64-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது நான் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த அறிக்கையில் விவசாயத்திற்கு முதல் இடம் கொடுத்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. என் தொகுதியாகிய திருச்சுழி தொகுதி மிகவும் பிற்போக்கான தொகுதி. அங்கு எந்தவிதமான பாசன வசதியும் இல்லை. அங்கு விவசாயம் முன்னேறவேண்டுமென்றால் வைகை ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டி அந்தப்பகுதி மக்களுக்குக் கொடுக்கவேண்டும். அதற்கான வாய்ப்பும் வசதியும் இருக்கின்றன. அதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு தண்ணீர் கிடைத்து நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும் என்று அமைச்சர் அவர்களிடம் சொல்லிக்கொண்டு அதைச் செய்து தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதியில் பருவ மழை இல்லாததால் அங்கு வெள்ளாமை சாவியாகிவிட்டது. நீர் வரி, நில வரிகளை இம்மன்றத்தில் புதிதாக



நிறைவேற்றி இருக்கிறோம். விவசாயத்திற்காக லோன் வாங்கி அதைத் திருப்பக் கட்டமுடியாமல் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது இந்த நில வரி, நீர் வரி வேறு வந்து அவர்களுக்கு தொல்லை அளிக்கிறது. ஆகவே விவசாயத்திற்காக வாங்கிக் கட்டமுடியாத கடன் தொகையை 1373 பசலியில் வசூலிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டு விவசாயிகளை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் ஒரு சில கிராமங்களுக்குத்தான் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் திட்ட காலத்தில் மின்சார அமைச்சராக இருந்தவரிடம் என் தொகுதியில் சில கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தேன். அப்போது அமைச்சர் அவர்கள் மூன்றாவது திட்டத்தில் ஒரு கிராமமாவது மின்சாரம் இல்லாமல் இருக்காது, ஆகவே நீங்கள் பயப்படாதீர்கள்; உங்கள் தொகுதி பூராவிற்கும் மின்சாரம் வழங்கி விடுவோம் என்று இந்த சபையில் ஒரு நாள் பேசும்போது இடைமறித்து சொன்னார்கள். அதை இப்போது அந்தத்துறையை வகிக்கும் அமைச்சர் அவர்களிடம், அந்தப் பகுதியில் எந்தெந்த கிராமங்களுக்கு மின்சாரம் வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கிறார்களோ அந்த இடங்களுக்கு மின்சாரம் வழங்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த பட்ஜட்டிலும், விவசாயக் கிணறு வெட்ட நல்லமுறையில் நிதி ஒதுக்கி சலுகை கொடுத்திருப்பதை கண்டு மகிழ்ச்சியடைகிறேன். நாலு ஏக்கர் ஒரேயிடத்தில் இருந்தால்தான் அங்கு விவசாயக் கிணறு வெட்ட சர்க்கார் அனுமதிக்கிறது. அப்படி நாலு ஏக்கர் ஒரேடியாக இல்லாவிட்டால் அதிகாரிகள் அனுமதி கொடுக்க மறுத்து விடுகிறார்கள். அதனால் விவசாயக் கிணறு வெட்ட முடியவில்லை. ஆகவே 1½ ஏக்கர் ஒரேயிடத்தில் இருந்தால் அங்கு விவசாயக் கிணறு வெட்ட சர்க்கார் அனுமதித்து அதற்கு வேண்டிய உத்தரவுகள் கொடுத்து விவசாயிகளை நல்லமுறையில் ஆதரிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு சர்க்கார் நல்ல முறையில் உதவி செய்திருக்கிறது. அதற்காக நல்ல திட்டங்களை, சட்டங்களை செய்திருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. ஆனால் அதிகாரிகள்தான் சில இடங்களில் ஊழல்கள் செய்கிறார்கள். குறிப்பாக அவைகளை எடுத்துச் சொல்ல இப்போது சந்தர்ப்பம் இல்லாததால் சர்க்காரே அதைக் கவனித்து நேரடியாக, கட்சி வேறுபாடு இன்றி எல்லோருக்கும் மான்யம், கடன் போன்ற வசதிகளை செய்து கொடுத்து விவசாயிகளை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கோ. ராஜாராம்:** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து—ஆதரித்து என்று சொல்லும்போது, ஆதரித்து பின்னால் ஆயிரம் குறைபாடுகளை அடுக்குகிறார்கள் என்று எதிர்க்கட்சியில் இருந்து சொல்லப்பட்ட பொருளில் அல்லாது—முழுமையாக ஆதரித்து, வரவேற்று எனது

[திரு. கோ. ராஜாராம்] [7th March 1963

இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாய உற்பத்தி பெருக, தொழில் அபிவிருத்தி ஏற்பட, நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற கணிசமான நிதி ஒதுக்கியிருப்பது விசேஷ அம்சமாகும். எல்லை நிலை பற்றி வானொலியில் நமது பிரதமர் அவர்கள் குறிப்பிட்டது, 'நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்றவுடன் நாடு காக்க உடனே போர்க்களத்திற்கு ஓடவேண்டுமென்பதல்ல, இருக்கிற இடத்திலிருந்தே போர் வீரனுக்குரிய பணிகளை செய்யலாம், வயலில் உழைக்கிற விவசாயி, விவசாய உற்பத்தியைப் பெருக்கினால், தொழிற்சாலையில் இருக்கிற தொழிலாளி தொழில் அபிவிருத்தியைப் பெருக்கினால், நாடு பொருளாதார வலிவு பெறும், அப்படி பொருளாதார வலிவு பெற்றால் நாட்டைப் பாதுகாக்கும் நிலை ஏற்படும்' என்பதாகும். அந்த அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நான் இதைப் பாராட்டுகிறேன்.

தொழில் அபிவிருத்தி பற்றி பேசும்போது மாநிலத்திலேயே பெரியதும் பொலிவுற்றதுமான நெய்வேலி எங்கள் மாவட்டத்தில் அமைந்திருப்பது குறித்து நான் மகிழ்வெய்துகிறேன். உருக்கு ஆலைத் திட்டத்தைப் பற்றி அது நெய்வேலியில் அமையப் போகிறதா, அல்லது சேலத்திலா என்று கேள்விக்குறியில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டது. இப்படி கேள்விக் குறியாக இருப்பது முற்றுப்புள்ளியாக மாற்றப்பட வேண்டும். எப்படி முற்றுப் புள்ளியாக மாற்றப்படவேண்டுமென்றால் நெய்வேலியில் அமையும் என்று முற்றுப்புள்ளியிடவேண்டுமென்று தொழில் அமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கலைக் கல்லூரி ஒன்றை தென் ஆற்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்கும் உத்தேசம் இருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டத்தின் வடபகுதியில், திண்டிவனத்தில் அல்லது விழுப்புரத்தில் அமைந்தால் அது நியாயமானது என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த நேரத்தில் செஞ்சி தாலூகாவில் இண்டஸ்டிரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்டியூட் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்றும் கூறிக்கொள்கிறேன்.

ஒரு சுவையான செய்தியை இந்த மன்றத்திற்கு அளிக்க விரும்புகிறேன். செஞ்சி தாலூகாவில் 'தாழங்குணம்' என்ற கிராமத்தில் இரும்பு கிடைப்பதாகவும், லட்சக் கணக்கான டன்கள் கிடைக்கும் என்றும் கூறுகிறார்கள். அந்த இடத்தை நல்ல முறையில் ஆராய்ந்து, அந்தச் செய்தி உண்மையாக இருக்குமானால் அங்கு நல்லதொரு பெரும் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்து இது விஷயத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, புதிய வரிகள் இல்லாத, புதுமையான, புரட்சிகரமான, நாட்டு நலனில் அக்கறையோடு கூடிய, தீந்தமிழ் காவியமாக, இனிமை பயக்கும், சுவையளிக்கும் அறிக்கையாக இந்த நிதிநிலை அறிக்கை காட்சியளிக்கிறது என்று கூறி, எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்து எனது உரையை முடிக்கின்றேன், வணக்கம்.



7th March 1963]

***திரு. எல். ஆனந்தன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த 1963-64-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகளைப் பேச முன்வந்துள்ளேன்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் கோமுகி நதி நீர்த்தேக்கம் என்றும், மணிமுக்தா நதி நீர்த்தேக்கம் என்றும் இரு திட்டங்களை பல ஆண்டுகளாகப் பரிசீலனை செய்து இந்த ஆண்டில் கோமுகி நீர்த்தேக்கத்தை எடுத்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருவதால் நம் சர்க்காருக்கு கள்ளக்குறிச்சி தாலூகா விவசாயிகள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய தொகுதியிலுள்ள சில கோரிக்கைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து வலது புறம் ஒரு வாய்க்கால் வெட்டி கள்ளக்குறிச்சிக்கு வடக்குப் பகுதியிலுள்ள பாக்கம், ரிஷிவந்தியம், சங்கராபுரம் போன்ற வறண்ட பிரதேசங்களுக்கு உதவக் கூடிய முறையில், அங்குள்ள விவசாயிகளின் வாழ்க்கை வளமுற ஏற்பாடு செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் மணிமுக்தா நதி நீர்த்தேக்கத்தை அடுத்த ஆண்டிலாவது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கள்ளக்குறிச்சி நகரத்திற்கு குடி தண்ணீர் நிலையம் வேண்டுமென்று பல ஆண்டுகளாக சர்க்காரிடம் முறையிட்டிருந்தும் இது வரையில் கவனிக்கப்படவில்லை. அங்கு கோடை காலங்களில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் விலை கொடுத்து தண்ணீர் வாங்க வேண்டிய நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள், அங்குள்ள மக்கள். ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதோடு அதற்குரிய மதிப்பீட்டுத்தொகையில் பாதி மான்யமாகவும், பாதி கடனாகவும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கள்ளக்குறிச்சி தாலூகாவில் களத்தூர் பகுதியில் சாமிகுளம் ஏரி இருக்கிறது. இதை 1953-ல் செப்பனிடவேண்டுமென்று சர்க்காரிடம் முறையிட்டதின் பேரில் மேற்படி ஏரியை அதிகாரிகள் பார்வையிட்டு, செப்பனிட்டால் அதற்கு 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுத் தொகை ஆகும் என்றும், இவ்வேலையை 5 ஆண்டுகளுக்குப் பின்தான் ஆரம்பிக்க முடியும் என்று உத்தரவிட்டிருந்தும் நாளது வரையில் கவனிக்கப்படவில்லை. ஆகவே, இந்த வேலையை சிறு பாசனத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் வாழும் மக்களின் குடிசைகள் வருஷா வருஷம் தீக்கிரையாகிக்கொண்டிருக்கின்றன. அதனால் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டமும் நஷ்டமும் அடைகிறார்கள். என்னுடைய தொகுதியிலேயே, இவ்வாண்டு 10 கிராமங்களுக்கு மேல் தீப்பற்றி எரிந்து போய்விட்டன. தீயணைக்கும் படைக்குத் தகவல் கொடுத்தால் 5-6 மணிக்குப் பின் கிராமத்திற்கு வந்து பார்த்து விட்டுப் போகிறார்கள். ஆகவே ஒரு தாலூகாவுக்கு ஒரு தீயணைக்கும் படை என்று வைத்தால் கிராமப் புறங்

களிலுள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும் தீயணைக்கும் படைக்குச் செலவாகும் தொகையை அங்குள்ள பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்று உதவியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கள்ளக்குறிச்சி தாலூகாவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. தியாகராஜன் : கனம் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டுக்குரிய நிதி நிலை அறிக்கையை நமது நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பிக்கும்போது எந்தவித வரியும் போடவில்லை என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் போட வேண்டிய வரிகளையெல்லாம் மத்திய அரசாங்கம் போட்டுவிட்ட காரணத்தினாலும், அதோடு இந்த நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக லாண்ட் டாக்ஸ், வாட்டர் ஸெஸ்ஸும் போட்டுவிட்ட காரணத்தினாலும், நிதிநிலை அறிக்கையில், அவர்கள் சொல்லும்போது, எந்தவித வரியையும் போடவில்லை என்று சொன்னார்கள். அதோடு மாத்திரமல்லாமல் மேலும் ஒரு வரியை, சென்ற 1962-ம் வருஷம் 10-வது மாதத்தில் போடுவதற்கு ஒரு வாய்ப்பை அமைத்திருக்கிறார்கள். மார்க்கெட் கமிட்டி என்று ஒன்று ஏற்படுத்தி அதன் மூலமாக அத்தியாவசியமான தின்பண்டங்களுக்கு வரியைப் போடுவதற்கு ஒரு வழி வகை செய்திருக்கிறார்கள். மார்க்கெட் கமிட்டியில் 7 பண்டங்களுக்கு பண்டம் ஒன்றுக்கு 25 ரூபாய் வரி கொடுக்கவேண்டுமென்றும், 25 ரூபாய் வரி கொடுப்பது போக, பொருளை விற்கும்போது ரூ. 100-க்கு 4 அணா வர்த்தக வரி செலுத்தவேண்டுமென்றும் இப்போது திருச்சி ஜில்லா பூராவும் வாங்கி வருகிறார்கள். அது குறித்துக் கூட் மராமத்து இலாகா அமைச்சரிடம் ஒரு மனுவும் வந்திருக்கிறது என்று கருதுகிறேன். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் முக்கியமாக நீர்ப்பாசனத் திட்டத்திற்கும், கல்வித் திட்டத்திற்கும் அதிகமாகப் பணம் ஒதுக்கியிருப்பதாக நிதி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி கூறியிருக்கும்போது இந்த மாமன்றத்தில் இருக்கிறவர்கள் தங்கள் வாதத்தைச் சொல்லும்போது இங்கே ஆற்றுப் பாசன வசதிகள் உள்ளவர்கள் அதிகமாக அதை விரிவுபடுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் என்னைப் போன்று வறண்ட பிரதேசத்திலிருந்து வருபவர்கள் எங்களுக்கு ஆற்றுப் பாசனத்தை ஏற்படுத்தித் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது எதைப்போல் இருக்கிறது என்றால், பாலுக்கு சர்க்கரை இல்லை என்று அயாசப்படுபவர்களுக்கும், கூழுக்கு உப்பு இல்லை என்று அழுகிறவர்களுக்கும் உள்ள நிலையைக் காட்டுகிறது. அந்த மாதிரி நிலைமைதான் இருக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வை மாற்றி அமைப்பதற்கு வழிவகை செய்து தரவேண்டும் என்று அரசாங்கத்தை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.





அதோடு அண்மையில் புதுக்கோட்டையிலே நகராட்சி பொன் விழா நடந்தது. முனிசிபாலிடி பொன் விழா நடந்தபொழுது, நமது கனம் அமைச்சர்கள் ராமையாவும், மஜீதும், முதலமைச்சரவர்களும் வந்திருந்தார்கள். அப்பொழுது கனம் முதல் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது 'புதுக்கோட்டைக்கு காவேரி ஆற்றுத் தண்ணீரைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக புதுக்கோட்டை மக்கள் வோட்டை மாற்றி மாற்றிப் போடுகிறார்கள். நாங்களே கொண்டுவரமுடியாத நிலைமையில் இருக்கும்பொழுது, காவேரித் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு வேறு யாருக்கும் வோட்டுப் போட்டால் அவர்கள் மட்டும் என்ன செய்வார்கள்' என்று கேட்டார்கள். நான் நமது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை அவருடைய குருவான சத்தியமூர்த்தி அவர்கள் பிறந்த இடம். புதுக்கோட்டை வறண்ட பிரதேசமாக இருப்பதை மாற்றி அமைப்பதற்கு முதல் அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து ஏற்பாடு செய்து, அவருடைய குரு சத்தியமூர்த்திக்கு காணிக்கை செலுத்துவதுபோல நினைத்து, எங்கள் பகுதிக்கு காவேரி ஆற்றுத் தண்ணீரைக் கொண்டுவருவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, 'புதுக்கோட்டையில் இருப்பவர்கள் கோபக்காரர்கள், என்னுடைய தொகுதியில் இருப்பவர்கள் நல்லவர்கள், அவர்கள் யாருக்கு வோட்டுப் போடவேண்டும் என்று தெரிந்து, அவர்கள் யாரை ஆதரிக்கவேண்டுமோ அவர்களை ஆதரிப்பார்கள்' என்று சொல்லியிருக்கிறார். அதற்கு முன்பாக, கொப்பனாப்பட்டி பள்ளி திறப்பு விழாவில் பேசும்பொழுது, 'என்னுடைய காலத்திற்குள்ளாகவே காவேரி ஆற்றுத் தண்ணீரை குழாய் மூலம் கொண்டு வந்து தருகிறேன்' என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறியதை அப்படியே செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் அதில் சுயநலமும் கொஞ்சம் கலந்திருக்கிறது.

"நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்குமாங்கே பொசியுமாம் தொல்லுலகில் . . . "

என்று சொல்லுவதுபோல, திருமயம் தாலூகாவிற்கு தண்ணீர் போகும்பொழுது, நடுவிலே இருக்கிற புதுக்கோட்டை பகுதிக்கும் பங்கு கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வித் திட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் பகுதியிலே மன்னர் கல்லூரியில் "பி.டி." காலேஜுக்காக ஒரு கட்டடம் கட்டப்பட்டு வந்தது. மன்னர் கல்லூரியில் அந்தக் கட்டடம் கட்ட வேண்டாம் என்று ஏற்கெனவே மகஜர் கொடுத்து கட்டடம் கட்டுவது நிறுத்திவைக்கப்பட்டது. மீண்டும் இப்பொழுது அதைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஷெட் கட்டடத்தைக் கட்டி, மன்னர்

வசதியும் விவசாயிக்கு இல்லை என்றும், அதற்கு சமமான முறையில் திட்டங்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை என்றும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட நிலையில் உள்ள விவசாயிகளுக்கு பல திட்டங்கள் இருப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட திட்டங்கள் என்றால், கடன் வாங்கும் திட்டம்—கடன் வாங்கும் திட்டத்தைப் பற்றி நான் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். திட்டம் நல்ல திட்டம்தான். திட்டம் இல்லாமல் 20-ம் நூற்றாண்டில் எதையும் சாதிக்க முடியாது. கடன் வாங்கும் திட்டத்தில் ரூ. 1,000 விவசாயி வாங்க வேண்டும் என்றால், ரூ. 1,000 முழுவதும் அவன் கையில் கிடைப்பதில்லை. ஊடே ஏராளமான தரகர்கள், மனு எழுதவேண்டும், அலுவலகத்திற்குப் போகவேண்டும், இப்படி எத்தனையோ சிரமங்களும், செலவினங்களும் இருக்கின்றன. முழுத் தொகையாக அந்தக் கடன் தொகை விவசாயிக்குக் கிடைக்கவேண்டிய அளவுக்கு இந்த அரசாங்கம் அதில் கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த மன்றத்தில் கோரிக்கொள்கிறேன்.

உரப்பொடியைப்பற்றி சொல்லும்போது, இதற்காக அரசாங்கம் போட்டிருக்கும் திட்டம் நல்ல திட்டம்தான். மிகவும் வரவேற்கக்கூடியதுதான். உரப்பொடி தக்க நேரத்தில் கொடுக்கப்படுவதில்லை என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள். எப்போது தேவையோ அப்போது கொடுத்தால்தான் இந்த உரப்பொடி கொடுப்பதில் பயனுண்டு. சாதாரணமாக விவசாயத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள், "மடி விதைக்கு கைவிதை முந்தும்" என்று. அதேபோன்று தக்க நேரத்தில் கொடுக்கப்பட வேண்டும். சாதாரணமாக விவசாயிகள் கருது பிடித்தவுடன் உரப் பொடி வேண்டும் என்று கேட்டால், கருது அறுவடையாகும்போதுதான் உரப் பொடி கொடுக்கப்படுகிறது. கையில் காசை வைத்துக் கொண்டு தேவைக்குத் தகுந்தபடி கேட்டாலும் கிடைப்பதில்லை. ஆகவே தக்க நேரத்தில், விவசாயிகள் விரும்புகிற நேரத்தில், உரப் பொடியைக் கொடுப்பதற்கு வேண்டிய வழிவகைகள் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொறுக்குவிதை கொடுக்கும் திட்டம், சற்று பொருப்பற்ற முறையிலேயே நடந்து வருகிறது. பொறுக்குவிதை எவ்வாறு தயாரிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விவசாயிக்குத்தான் நன்கு தெரியும். பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் செய்யக்கூடிய பொறுக்குவிதைத் திட்டங்களில் சரியான விதத்தில் பொறுக்கு விதையை பக்குவப்படுத்தி தயாராக வைத்திருப்பதில்லை. இவ்விதம் நல்ல முறையில் பக்குவப்படுத்தாத காரணத்தினால் நல்ல வித்தில் பயிராகவேண்டிய இந்த பொறுக்கு விதைகளை உபயோகிக்கும் போது களைகள் முளைத்து மிக்க சேதாரத்திற்கு ஆளாகுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறு பாசனத்திட்டம் மிகவும் வரவேற்கக்கூடியதொன்று. எங்கள் பகுதியில் சிறுபாசனத் திட்டங்களுக்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாக தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். சுருளியாறு, வரட்டாறு,



கூத்தனாச்சியாறு என்று மூன்று ஆறுகள் இருக்கின்றன. இவைகளில் சிறுபாசனத்திட்டங்களின் மூலமாக வேலைகள் நடத்தினால் அப்பகுதியிலுள்ள விவசாயிகள் மிகவும் பயனடைவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், பல இடங்களிலும் இணைப்புப் பாதைகள் போடப்பட்டுள்ளன. இந்தப் பாதைகளில் பல இடங்களில் ஆறுகள் போகின்றன. இவைகளின் குறுக்கே பாலங்கள் போடப்படவில்லை. அதனால் பல பாதைகளும உபயோகமில்லாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டத்தில் அரிஜனங்களுக்காக 23½ லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். சாதாரணமாக முன்னால் எல்லாம் ஊரின் ஓரத்தில் இவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்து வந்தார்கள். இப்போது, ஊரைவிட்டே தள்ளி இவர்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுக்கிறார்கள். இவர்களை வேண்டுமென்றே ஒதுக்கி வைப்பதுபோல், ஊருக்குத் தள்ளி கொண்டு போய் வீடுகளை கட்டிக் கொடுக்கிறார்கள். ஆகவே இதை மாற்றி, அவர்களையும் பிற மக்களோடு சேர்ந்து வாழும்படியான அளவில் சேர்ந்து வாழ்வதற்கு வேண்டிய வழிவகைசெய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னிலை வகுப்பினருக்கு உதவியாக, பாக்கேஜ் திட்டம் உடனடியாகக் கொண்டு வரப்படுமா என்று, பாக்கேஜ் திட்டம் பற்றிய கேள்வி வரும்போது ஒரு உப கேள்வியாகக் கேட்டேன். அதற்கு அமைச்சர் அவர்கள் புரியாத விதத்தில் இப்போது அமல் நடத்த உத்தேசமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் தொகுதியில் கம்பம், போடி வட்டாரம் போன்ற பகுதிகளில் இப்போது தான் கடலை போடுவதற்கு விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள். இது போட்டு இரண்டு, மூன்று மாதங்களில் இந்த விவசாயத்திற்கு சீக்கு ஆரம்பிக்கும். ஆகவே மூன்று மாத காலத்திற்குள் இந்த பாக்கேஜ் திட்டத்தை எங்கள் பகுதிக்குக் கொண்டு வந்தால்தான் அங்குள்ள விவசாயிகளுக்கு இந்த வருட வருமானத்தில் எந்தவிதமான பாதகமும் ஏற்படாமல் போகும். ஆகவே உடனடியாகவே இந்த பாக்கேஜ் திட்டத்தை எங்கள் பகுதிக்கு அமல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆர். தங்கவேலு: கனம் தலைவர் அவர்களே, ஆற்றல்மிக்க அமைச்சர் அவையால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த வருட பட்ஜெட், ஆளும் கட்சியிலிருக்கின்ற என் போன்றவர்களுக்கு செந்தேனாக காட்சியளிக்கிறது. ஆனால் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இது எட்டிக்காயாகவும், செந்தேளாகவும் காட்சி அளிக்கிறது. காரணம் அண்மையில் வரவிருக்கின்ற பொதுத் தேர்தல்களில் வரியில்லாத பட்ஜெட்டைக் கண்ட மக்கள் தங்களுக்கு எங்கே வாக்குகளை கொடுக்க மறுத்துவிடுகிறார்களோ, எங்கே நேசக்கரங்களை நீட்ட முடியாது என்று மறுக்கிறார்களோ என்ற இக்கட்டான

கல்லூரிக்குக் கொடுத்து, அங்கே அதிகப்படியான மாணவர்களைச் சேர்த்து அந்தக் காலேஜை நல்ல முறையில் விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் நிதி அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பெண்களுக்கென்று ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்காக முனிசிபாலிடி ஒரு இடம் பார்த்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக நகரசபை சேர்மன் அவர்களும், மற்றவர்களும் இங்கே ஒரு டெபுடேஷன் வந்து விஷயத்தை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அதையும் ஆலோசித்து, பெண்களுக்கு தனியாக ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கீரனூரில் பெண்கள் பயிற்சிக் கல்லூரி ஒன்று ஏற்படுத்துவதற்கு ஒரு தனியார் இடம், பணம் எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு 3 வருஷமாக அரசாங்கத்தை உத்தரவு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது கவனிக்கப்பட்டு ஒரு விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை, அதற்கான உத்தரவும் போடப்படவில்லை. அந்த உத்தரவை இப்பொழுதாவது போட்டால், வருகிற கல்வி ஆண்டிலிருந்தாவது அந்தப் பள்ளியைத் துவக்குவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இதை சீர்தூக்கிப் பார்த்து, உடனடியாக கட்டடம் கட்டுவதற்கு வழி வகை செய்துதரவேண்டும் என்று இந்த நோத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, தொழில் சம்பந்தப்பட்ட வரையிலே எங்கள் பகுதியிலே ஒரு தொழில் பேட்டை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன், நன்றி செலுத்திக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாடகர் குழுக்கள், கலைஞர்கள், நாடகக்குழுக்காரர்கள் ரயிலில் பிரயாணம் செய்வதற்கு சலுகை டிக்கெட் வசதி செய்து கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தை விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொற்கொல்லர்களைப் பற்றி எல்லோரும் ஏகோபித்து ஒருமுகமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு தினம் 2 படி அரிசி கொடுப்பதோடு மட்டுமல்லாமல், எந்த இடங்களில் வேலை வாய்ப்புகள் இருக்கின்றனவோ அந்த இடங்களிலெல்லாம் அவர்களுக்கு முதல் இடம் கொடுத்து வேலை கொடுத்துவிட்டு, பாக்கி இருப்பவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்ற நிலைமையை தற்காலிகமாகவாவது ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராசாங்கம்** : சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, அனுபவம் வாய்ந்த அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 1963-64-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையானது ஒரு எட்டிச் சுரைக்காய் என்று கூறமுடியாது. ஆனால்





பால் கலந்த தண்ணீர் என்று கூறுவது ஓரளவு பொருந்துமென நினைக்கிறேன். இந்தப் பால் கலந்த பட்ஜெட்டை எதிர்க்கட்சியினராகிய நாங்கள் அன்னப் பறவையைப் போல் அணுகுகிறோம். கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் இவைகளைப்பற்றி அந்த பட்ஜெட்டில் பக்கங்கள் கூடுதலாகத் தொகுக்கப்பட்டு இருக்கின்றனவே தவிர, உடனடியாக மக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய திட்டங்கள் இதில் காணப்படவில்லை. சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டுமே அல்லாது, கூடுதலாகச் சொல்லி குழப்பத்தில் ஆழ்த்தக்கூடாது. இதற்கிடையில் மத்திய சர்க்கார் எவ்வளவு தூரம் வரிபோட்டு மக்களை அடிக்கலாமோ அவ்வளவு தூரம் அடித்திருக்கிறது. ஆனால் மாநில சர்க்காரோ அப்படி அடிபட்ட பொது மக்களை 'நாங்கள் ஒன்றும் புதுவரி போடவில்லை' என்று தேற்றிக்கொண்டிருக்கிறது. இந்த பட்ஜெட்டிற்கு ஒரு விளம்பரம் வரி இல்லாததுதான். இது விளம்பரம் மட்டும் அல்ல, இது விளம்பர தந்திரம் என்றுகூட கூறலாம். ஆக, ஆளுகிற அரசுக்கு வரி வைரம் போன்றதுதான். அதற்காக வைரத்தை வயிற்றில் குத்திக் கொள்ளலாமா? வரி மாநில சர்க்கார் போடவில்லை என்பதை வாதத்திற்கு ஒத்துக்கொள்ளலாம். ஆனால் மத்திய சர்க்கார் போடும் வரியை கட்டுகிறவர்கள் தமிழ் நாட்டு மக்களும்தானே? இது எப்படி இருக்கிறது என்றால், மருமகள் வாங்கவேண்டிய தாங்கமுடியாத வரி என்ற கெட்ட பெயரை மத்திய சர்க்கார் என்ற மாமியார் தாங்கிக்கொண்டிருக்கிறது. இடம்தான் மாற்றமே தவிர வரி மக்களைப் பாதிக்காமல் இல்லை.

நமது மாநிலம் இருமுனைத் தாக்குதலை சமாளிக்க வேண்டியிருக்கிறது. எல்லையில் சீனாக்காரன் அபாயம் ஒருபுறம் இருக்க, உள்நாட்டில் அரசாங்கம் கையாளும் உயிரை உறிஞ்சும் கொள்கைகள் இவைகளை சமாளிக்க வேண்டியிருக்கிறது. விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைத்தரக் குறைவு, தங்கக் கட்டுப்பாடு, அதனால் பங்கப்பட்ட தொழிலாளர்களின் அவல நிலை, அவசர நிலை சட்டம், வரிப் பெருக்கம், இப்படியெல்லாம் இருக்க தேசீய வருமானத்தில் பாதி வருமானத்தைத் தருகிற விவசாயிகளின் நிலை எப்படியிருக்கிறது என்று யோசித்துப் பார்த்தால், விவசாயி ஒரு வருட உழைப்பிற்குப் பிறகும் தன் வீட்டில் எஞ்சியுள்ள தங்கத்தையும் அடகு வைக்க வேண்டிய நிலையில் இருக்கிறான். ஆனால், ஒரு பஸ் முதலாளி, இன்னும் பாக்கியுள்ள புது டிசைன் நகைகளைச் செய்வதற்கு என்ன வழி இருக்கிறது என்று பார்த்துக்கொண்டிருக்கிறான். வருடக் கடைசியில் விவசாயி நிலத்தை அடகு வைக்கிறான். ஆனால், ஒரு ஆலை அரசராக இருந்தால், அடுத்து ஒரு ஆலை கட்ட அஸ்திவாரம் போடுகிறார். அவர் வருடங்கள் வளர வளர, விவசாயினுடைய கஷ்டமும், கடனும் வளர்ந்து, நிலத்தை விற்க வேண்டிய நிலைக்கு விவசாயி ஆளாக்கப்படுகிறான். ஆனால், பர்மிட்காரர்களோ, பஸ்ரூட்காரர்களோ தங்களுடைய நிலையில் வருடா வருடம் சம அளவிற்கு மேல் வளர்ந்து வருகிற நிலைமையைப் பார்க்கிறோம். ஆகவே, அவர்களுக்குக் கிடைக்கிற பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்பும்,

தாழ்த்தப்பட்ட மக்கள் மாவட்ட அதிகாரிகளுக்கு மனைக்கட்டு நிலம் வழங்க வேண்டுமென்று பல விண்ணப்பங்கள் அனுப்பியிருந்தும், தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை. சேலம் மாவட்டத்தில் 200-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பியிருந்தும், எந்தவிதமான பதிலும் இதுவரையிலும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இது சம்பந்தமாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI N. RAMACHANDRA REDDY: Mr. Chairman, Sir, I wish to speak a few words while welcoming the Budget for the year 1963–64 presented by the Hon. Finance Minister. It is a budget free from any fresh taxes and so it should be welcomed by each and everybody in the State because at present our country is in a state of National Emergency. It is not only the Centre and all the State Governments that are concentrating all their wealth, resources and potential towards increasing the tempo of the execution of the plan schemes and also to increase the defence potential to meet any kind of challenge and any kind of emergency from any quarter. It is only on this basis our State Government is undertaking various defence measures, which I need not repeat now, because this Hon. House has fully discussed it during the last session. In spite of heavy expenditure on defence measures, in spite of growing expenditure on old age pension and allotment of heavy additional funds to the Police force and even after getting four crores less of Central Aid, and when the entire State has expected that there would be some new taxes just to meet unavoidable and unexpected expenditure, our experienced and beloved Finance Minister has presented a Budget free from any fresh taxes. I say, on behalf of the people of the State, that it is definitely a boon to our State.

(Mr. Speaker in the Chair.)

Secondly, a question arises, whether the State Government have given up any of its plan schemes to be undertaken during the Third Five-Year Plan because of the Emergency and because of the non-levying of new taxes. The answer is certainly 'not'. Instead of this our Government have allotted more funds for agriculture, industrial development, education, power, irrigation and transport because it is only through socio-economic development of the country that we can strengthen the national defence. Plans should be intensified in several directions, because modern wars are not only fought by the soldiers on the fronts but also by the peasants and workers, who are labouring hard for increasing production on the farms, in the factories and even in workshops. Now modern wars are not being fought by hand to hand as in olden days. It is the mental quality and the youth of the country is even more important than the physical and material resources. Even in far advanced countries like Great Britain, during the Second World War, the British Government spent six times on

[Sri N. Ramachandra Reddy] [7th March 1963

Education over and above the normal expenditure. This fact, our State Government have fully realised and are alloting more funds to agriculture and education.

Thirdly, our country is predominantly an agricultural country. Nearly 75 per cent of the people are depending on agriculture. It is only through agricultural development that we can improve the national economy of our country. It is a well known fact. Though the Government are taking all possible measures to improve the conditions of the agriculturists, I request the Government to safeguard their other interests in equal degree. Also our State Government have estimated to increase the production of food grains to the tune of 17 lakhs tons during the Third Five-Year Plan.

Though our State Government are not levying any taxes in this Budget, the agriculturists have been heavily taxed to the utmost maximum. I should also like to state that it is the agriculturists, who are honest in paying taxes without any evasion.

With regard to the financial position of the agriculturists, I wish to state their position is not happy though the Government advance all sorts of loans directly or through Co-operative Societies and through Land Mortgage Banks. Long-term loans are not given by the Co-operative Societies. It takes a lot of time to get loans through the Land Mortgage Banks and it has become a very big problem to them. Before receiving a loan from the Land Mortgage Bank for agricultural operations, they had to go to money-lenders or private persons paying heavy interest at 25 or 30 per cent for fulfilling their needs. When the loan is received after a long delay, it would be sufficient only to pay the interest for such loans So I request the Government to take immediate steps to see that the loans either from the Government, or from the Land Mortgage Banks are given to the agriculturists as early as possible, I also request that provision be made for a very long-term loan through the Co-operative Societies to them.

Recently, the Central Government have enhanced many taxes, on many articles, viz., cigarettes, kerosene, petrol, etc. It has also been announced that this will be given effect to from 1st April. But what happened was that even from the date on which the Budget was presented in the Parliament, the local dealers have enhanced the rates on cigarettes, kerosene, petrol and other articles. I request the Government to take steps to put down this menace and again request our well experienced Finance Minister, who was kind enough to present a beautiful budget to our State, to write to the Central Finance Minister, Mr. Moraji Dasai and to advice him to withdraw the enhanced tax on kerosene as it is hitting very hard on the poor people.

Coming to my district, Salem, I wish to state that my district has not been represented. Though my district has got no representation in the Cabinet, yet there are nine Ministers in the Cabinet,



7th March 1963] [Sri N. Ramachandra Reddy]

who, I hope would safeguard the interests of the district of Salem. That district is very backward though it is the biggest one. The Government have sanctioned an Engineering College for that district. In addition, I request that district may be given a Medical College also.

As regards the long-term needs of my Hosur taluk, the less said, the better, because even the Government know that Hosur taluk is a very backward and neglected taluk. In spite of our best efforts for so many years, the Government have not so far moved its little finger towards the improvement of my taluk.

With regard to irrigation, medical and transport facilities, the taluk is in a very backward and very hopeless condition. Our main source of irrigation is only tanks but we are not having a single anicut even though an anicut could be constructed in four or five places. Also the tanks are in very hopeless condition.

So, I request the Government to take immediate steps to improve my taluk by providing irrigation, medical and transport facilities. I thank you for having given me an opportunity to speak.

திரு. ஆர். செங்காலியப்பன்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று கனம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப்பற்றி நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான கட்டத்தில்கூட நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் நல்ல ஒரு தெளிவான முறையில் இந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார். இன்று நாட்டில் இருக்கக்கூடிய நெருக்கடியான கட்டத்தில்கூட இப்பொழுதுள்ள நிலைமையை சமாளிக்க வேண்டிய கட்டத்தில் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. நமது பாதுகாப்பு நிலையைப் பொறுத்த மட்டில் இன்றைக்கு அதற்கு எவ்வளவு நிதி வேண்டுமானாலும் அதை கொடுக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள். மக்கள் அத்தனை பேரும் தாராளமாகப் பொருள்களைக் கொடுத்து உதவ முன்வருகிறார்கள் என்பதிலிருந்தே மக்களுக்கு நாட்டைக் காப்பாற்ற எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது தெரியவரும். இந்தச் சமயத்தில் அரசாங்கம் போடக்கூடிய எந்த திட்டமாக இருந்தாலும் அதை நிறைவேற்றிக் கொடுக்கவும் மக்கள் தயாராக இருக்கிறார்கள். எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதை நிறைவேற்ற முடியும் என்பதை மக்கள் கொடுக்கும் உதவியால் தெரிந்து கொள்ளலாம். நாம் இப்பொழுது எவ்வளவோ நெருக்கடியான நிலைமையில் இருக்கும்போதுகூட நாட்டிலுள்ள தொழிலாளர் மக்கள் இன்றைக்குப் பெருவாரியாக பொருள் உதவி செய்திருக்கிறார்கள். நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதால் இப்படிக் கொடுக்க முன் வருகிறார்கள். இன்றைய தினம் எடுத்துக்கொண்டால் பாதுகாப்பு நிதிக்காக சுமார் 2-½ லட்சம் ரூபாய் சேகரித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு நாட்டைப் பாதுகாப்பதற்கு எவ்வளவு

[திரு. ஆர். தங்கவேலு] [7th March 1963

இன்று நாட்டினுடைய நெருக்கடி நிலைமை வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதையும் அதே நேரத்தில் வரிவிதிப்பு வேண்டியதுதான் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் பாரம் பல்லவி எல்லாம் தாங்கக்கூடியவர்கள் மீதுதான் வரியைப் போட வேண்டும் என்பதுதான். அப்படி தாங்கக்கூடியவர்கள் யார் யார், எப்படி எப்படி அவர்கள் மீது, எந்தெந்த வரிகளைப் போடுவது என்பதற்கு விளக்கம் சொல்லவில்லை. அதே நேரத்தில் சர்க்கார் வரிகளைப் போடும் போது மட்டும் அதை எதிர்ப்பதிலேயே தங்கள் காலத்தை கடத்திக்கொண்டிருக்கிறார்கள். நான் கூற விரும்புவதெல்லாம், எதிர்க் கட்சிகள் என்றால் அரசாங்கத்தை எதிர்த்துக் கொண்டே தான் இருக்கவேண்டும் என்ற தவறான இலக்கணத்தை அமைத்துவிடக்கூடாது என்பதுதான்.

அத்துடன், தஞ்சை மாவட்டம் என்பது தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகிற இடம். எனவே தான் "நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சும் தஞ்சை" என்றெல்லாம் புலவர்கள் சொல்வார்கள். இப்படிப்பட்ட தஞ்சை மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலுகாவில், பருவமழை கெட்டுப்போய் விட்டதின் காரணமாகவும், விலைவாசி ஏற்றத்தின் காரணமாகவும், விவசாயம் சீரழிந்து, அங்குள்ள விவசாயிகளுக்கு பயிர்கள் எல்லாம் 20 சத விகிதத்திலிருந்து 30 சத விகிதம் வரை குறைந்து இன்று வேதனைப்படியில் வாழ்கிறார்கள். இந்த அவதியுறுகிற நிலைமையை சாதகமாக வைத்துக் கொண்டு, நிலச்சொந்தக்காரர்கள் எப்படியாவது விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றி விட வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள். இதன் காரணமாக பல குத்தகை பாக்கி வழக்குகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. நான் கேட்டுக்கொள்வது, குத்தகை, வாரம், இவற்றை எல்லாம் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளவில்லை, நிலச்சொந்தக் காரர்களுக்கு விவசாயிகள் கொடுக்கவேண்டிய குத்தகைகளை எல்லாம் ஆறு மாத கால அளவுக்கு ஒத்தி வைக்கவேண்டும் என்று சர்க்கார் நோட்டிஃபிகேஷன் செய்து விட்டால் அது விவசாயிகளுக்கு பெரியதொரு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சீர்காழி தாலுகாவில், கோட்டயமேடு நீர்ப்பாசனத்தைப்பற்றி பல தடவைகள் சொல்லப்பட்டிருக்கிறது. இதை விவசாய அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்திருக்கிறார்கள். இதை நடைமுறையில் கொண்டு வந்தால் எங்கள் தாலுகாவில் நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் வரை சாகுபடிக்கு வரும். இந்தத் திட்டத்தை அரசாங்கம் ஸாங்ஷன் செய்திருக்கிறது. ஆனால் இந்தத் திட்டத்தை எமர்ஜென்ஸி என்று தள்ளிப் போட்டு, விடாமல் உடனடியாக இம்ப்ளிமெண்ட் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக சீர்காழி தாலுகாவில் நடந்த காங்கிரஸ் விவசாய மகாநாட்டில், பல தீர்மானங்கள்—தீப் பொறி பறக்கும் தீர்மானங்கள் அல்ல—சாதாரணமாக நிறைவேற்றப்பட்ட பணிவான கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டன. அவைகளுக்கு எல்லாம் ஆவன செய்ய வேண்டும்



7th March 1963] [திரு. ஆர். தங்கவேலு]

கல்வி சம்பந்தப்பட்ட வரையில், கல்விக்கு அரசாங்கம் முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். தமிழ் மாநிலத்தில் கல்வி மிகவும் முக்கியத்துவம் பெற்றுவருகிறது கல்வித் துறையில் கருங்கல் பொட்டுகளாகக் கிடந்த ஏழை மக்கள் கல்வி அறிவைப் பெற்று முன்னேற்றப் பாதையில் முடுக்கிச் செல்கிறார்கள். இந்த நிலைமையில் எவ்வளவோ நன்மைகள் கல்விக்காக செய்து கொடுக்க அரசாங்கம் முன் வந்திருந்தும், கல்வியின் தரம் குறைந்து போய் விட்டது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதைப் பார்த்தால், நாம் அதற்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. நீதிக்கும், நிதிக்கும், மதிக்கும் அமைச்சராக இருந்து வரும் நமது அமைச்சர் அவர்களும், கல்வி இலாகா இயக்குநர் அவர்களும் இத்துறையில் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள் என்பதைக் கூறாமல் இருக்க முடியாது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மூன்று கோடி சொச்சம் ரூபாய் நிதியில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் பெறுவதற்காக அதிகப்படியாக பணம் ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாகும். பல இடங்களிலும் அரிஜனங்கள் வீட்டு மனைக்கட்டுகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை அரிஜன மக்களுக்கு மாடு வாங்கிக் கொடுக்கும் திட்டத்தை அரசாங்கம் உருவாக்கி அதன் மூலமாக பல ஏழை அரிஜன மக்களுக்கு மாடுகள் வாங்கிக் கொடுக்கிறார்கள். எங்கள் பகுதியில் 13 ஜோடி மாடுகள் (ஃப்ரீ புல்ஸ்) வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இவைகளை ஃபிஸிக்கல் வெரிஃபிகேஷன் செய்வதற்காக அதிகாரிகள் போகும்போது மாடுகளை வைத்திருப்பதில்லை. மாடுகளை வாங்கும்போது கொடுக்கின்ற எக்ரிமென்டை மீறி மாடுகளை விற்றுவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் இதற்காக கொடுக்கப்படும் பணத்தை டைவர்ட் செய்து ஸ்காலர்ஷிப், மனைக்கட்டுகள் முதலியவைகள் கொடுப்பதற்கு வழிவகுத்தால் நலமாக இருக்கும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அத்துடன், அரிஜனங்கள் மத்தியில், தீண்டாமை ஒழிப்பு நன்றாக நடந்தேறிவருகிறது என்றாலுங்கூட, சில இடங்களில் 'சிவில் டிஸ்ஸெபிலிடீஸ் ரிமூவல் ஆக்ட் (1937)' பிரகாரம் வழக்குப்போட்டாலும் கூட, சில நேரங்களில் சாதகமாக இருப்பதில்லை. தீண்டாமை ஒழிப்பதற்காக நாம் பல திட்டங்களைப் போடுகிறோம். தாலுகாக்களில் டெம்பரரி சேவக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு குறைந்த சம்பளமே கொடுக்கப்பட்டு வருவதால், அவர்களால் இன்டென்ஸிவ் டூர் செய்து நல்ல முறையில் பிரச்சாரம் செய்ய முடியவில்லை. ஆகவே அவர்களுக்கு நல்ல உதவி

அக்கறை இருக்கிறது என்பது தெரிய வரும். இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியின் காரணமாக சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக தொழிலாளர்கள் எவ்வளவோ தளர்ந்து கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று நமது அரசாங்கம் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. இந்த நேரத்தில் தொழிலாளர்கள் நல்ல முறையில் அதைப் பார்த்து நடக்க வேண்டும் என்றும், தொழில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் இன்றைக்கு பல இலாகாகளில் தொழிலாளர்கள் பல தொழிற் சங்க விதிகளையும் பார்க்காமல் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் வேலை செய்து வருகிறார்கள். தொழில் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் அவர்கள் நாட்டைப் பாதுகாக்க முன் வந்ததைக் கண்டு பாராட்ட வேண்டியதுதான். அதைப் போலவே நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் நாட்டைக் காக்கவேண்டும், சுதந்திரத்தைக் காக்க வேண்டும் என்ற எண்ணமும் இருக்க வேண்டும். அந்த முறையில் இன்றைக்கு தொழிலாளர்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்டு எட்டு மணி நேரம் இல்லை சட்டத்தை மீறக்கூடிய அளவில் எவ்வளவு மணி நேரம் வேண்டுமானாலும் வேலை செய்யத் தயாராக இருக்கிறார்கள். தொழிற் சங்க சட்டத்தைக் கூட பார்க்காமல் வேலை செய்கிறார்கள். இந்த நோக்கில் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்பதை தொழிலாளர் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல முதலாளிகள் தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கி பழி வாங்குகிறார்கள். அவைகளையெல்லாம் தடுத்து நிறுத்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியாகிய பல்லடம் தாலுகா ஒரு வறண்ட பிரதேசம் என்று எல்லோராலும் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்களுடைய தொகுதியைப் பற்றி பேசி வருகிறார்கள். அதைப் போலவே நானும் என்னுடைய தொகுதியைப்பற்றி பேச வேண்டும் என்று நினைக்கிறேன். என்னுடைய தொகுதியைப் பற்றி பேசுவதாக இருந்தால் சங்கடமாக இருக்கிறது. இருந்தாலும் சொல்லலாம் என்று நினைத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தண்ணீர் தீர்வை, நிலத்தீர்வை அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும் என் தொகுதியிலுள்ள விவசாயிகள் எந்த வரி போட்டாலும், அதைக் கொடுக்க தயாராகத்தான் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் என் போன்றவர்கள் தங்களுடைய தொகுதிகளில் சென்று அரசாங்கம் விவசாயிகளுக்குச் செய்யக்கூடிய நல்ல காரியங்களையெல்லாம் எடுத்துச் சொல்வதால் அரசாங்கம் போடக்கூடிய எந்த வரியையும் அவர்கள் கட்டத் தயாராக இருக்கிறார்கள். இன்னும் அதிகப்படியான வரிகளைப் போட்டாலும் அதைக் கொடுக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.



என்னுடைய பகுதி போன்ற பகுதிகளில் வாய்க்கால் வசதி போன்ற பாசன வசதிகளைச் செய்து கொடுத்தால் நிச்சயமாக எந்த வரி போட்டாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அதைக் கொடுக்க மக்கள் தயங்க மாட்டார்கள். மக்களுடைய நிலை உயர வேண்டுமானால் அவர்கள் விவசாயத் துறையில் முன்னேற்றமடைய வேண்டுமானால், அவர்களுக்கு வாய்க்கால் வசதியெல்லாம் செய்து கொடுக்கவேண்டும். மற்றும் கிணறு மானியங்கள் வேறு கொடுக்க வேண்டும். ரசாயன உர வசதிகள் வேறு செய்து கொடுக்க வேண்டும். பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும். இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுத்தால் அரசாங்கம் போடுகிற எந்தத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இப்பொழுது போடப்படுகின்ற வரிப் பணத்தை வைத்துக் கொண்டும் வெளி நாடுகளிலிருந்து பணத்தை கடனாக வாங்கியும் விவசாயிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தால் உற்பத்தியைப் பெருக்க முடியும். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மக்களுடைய தேவைகளைக் கண்டு அரசாங்கம் காரியங்களைச் செய்து வருவதால் அரசாங்கம் போடக் கூடிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மக்கள் தயங்க மாட்டார்கள், போடக்கூடிய வரியைக் கொடுக்கவும் தயங்க மாட்டார்கள்.

அதைப்போலவே பல்லடம் தொகுதியில், டவுனில் குடி தண்ணீர் வசதி இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அங்கிருக்கக் கூடிய மக்கள் வெளியூர்களுக்குச் சென்று வண்டியில் தண்ணீர் கொண்டு வரவேண்டியதாக இருக்கிறது. டவுனுக்குப் பக்கத்தில் நொய்யல் ஆறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. அதிலிருந்தோ அல்லது கிணறுகளை வெட்டி அதன் மூலமாகவோ குழாய் மூலமாக தண்ணீர் கிடைக்கும்படியாக வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவைகளில் இருந்து குழாய் மூலமாக பல்லடத்திற்கு தண்ணீர் கொண்டு வந்தால் அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு நல்ல முறையில் குடி தண்ணீர் கிடைத்து அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள். அப்படி பல்லடத்திற்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அறிக்கையை வரவேற்று, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சேலம் ஜில்லாவில் என் தொகுதி ஏர்க்காடு தொகுதி. சேர்வராயன் தொகுதி மலைப் பிரதேசம். இன்று அங்கு ஒரு வசதி கூட கிடையாது. அங்கே 64 கிராமங்கள் இருக்கின்றன. அந்த 64 கிராமங்களுக்கும் ஒரே ஆஸ்பத்திரிதான் இருக்கிறது. அந்த ஒரு ஆஸ்பத்திரி சுமார் முப்பது மைல் விஸ்தீரணத்திற்குள் இருக்கிறது. அந்தப் பகுதியில் ஏர்க்காடு டவுனாக இருக்கிறது. அங்கேதான் அந்த ஆஸ்பத்திரி இருக்கிறது. தெற்கு வடக்கே, கிழக்கு மேற்கே முப்பது மைல் போக வேண்டியதாக இருக்கிறது. அதற்கு

[திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்] [7th March 1963

இந்த முதலமைச்சர் காலத்திலேயே மலை ஜாதி மக்களை
1-35 p.m. முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்களை எப்படி அவர்கள் முன்னுக்குக் கொண்டுவந்தார்களோ அப்படியே மலை ஜாதி மக்களுக்கும் எல்லாச் சலுகைகளும் கொடுத்து ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

### III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

#### A. Statutory Rules and Orders†

* 109. *Notification issued with G.O.P. No. 4628, Revenue, dated 17th December 1962, regarding the reduction in the rate of sales tax to two per cent on articles made of baked clay and stoneware etc., and the exemption granted from the 1st April 1959 to the 31st March 1962, to dealers in pottery articles made of baked clay and stoneware having total turnover of less than rupees ten thousand from the sales tax payable under the Madras General Sales Tax Act, 1959. [Laid on the Table of the House under Section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959)]*

* 110. *Notification issued with G.O. No. 190, Revenue, dated 11th January 1963, amending Rule 51 of the Madras General Sales Tax Rules, 1959 published with Revenue Department Notification S.R.O. No. A-1941 of 1959, dated the 28th March 1959, at pages 232-280 of the Rules Supplement to Part I of the Fort St. George Gazette, dated the 1st April 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959)].*

111. *Notification issued with G.O. Ms. No. 3617, Food and Agriculture, dated 26th November 1962 regarding establishment of regulated markets by the Tiruchirappalli Markets Committee at Sendurai, Andimadam for the purchase and sale of groundnut and cashewnut and at Kulitalai for the purchase and sale of paddy in Tiruchirappalli district under sub-section (3) of section 5 of the Madras Agricultural Produce Markets Act, 1959. [Laid on the Table of the House under section 29(4) of the Madras Agricultural Produce Markets Act, 1959, (Madras Act 23 of 1959)]*

#### B. Reports, Notifications and other papers.

50. *Notifications issued with G.O. Ms. No. 5562, Revenue, dated 30th December 1961 amending the Indian Stamp Rules, 1925 and the Revenue Department Notification S.R.O. No. A-8880 of 1958, dated 22nd December 1958, published at page 2208 of Part I of the Fort St. George Gazette, dated the 31st December 1958, under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).*

† Laid on the table of the House on 8th March 1963.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Friday, 8th March 1963

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS

### STARRED QUESTIONS.

#### உணவு கலப்பட தடைச்சட்டம் (லைசென்ஸ் தொகை விதிப்பு

* குறுகிய கால கேள்வி எண் 1.— **திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கத்தின், உணவு கலப்பட தடைச் சட்டத்தின்கீழ், இட்லி, தோசை சுட்டு விற்றுப் பிழைக்கும், ஏழைப்பெண்களும், சோடா கலர் போன்ற பானவகைகள் வைத்து விற்கும், சிறு பெட்டிக் கடைக்காரர்களும் லைசென்சு தொகை கட்டவேண்டிய கட்டாயத்தில் அதிக அவதியுறுகிறார்கள் என்பதை அரசாங்கம் அறியுமா?

(இ) இவர்களுக்கு லைசென்சு கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க, அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்கு தெரிவித்து வேண்டியன செய்ய உத்தேசமுண்டா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** (அ) ஆம்.

(இ) இல்லை.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** தலைவர் அவர்களே, ஹோட்டல் சாப்பாடு வயிற்றுக்கு ஒத்துக்கொள்ளாத காரணத்தினால் வெளியூரில் வேலையாக இருக்கிறவர்கள் வீட்டுச் சாப்பாட்டை, பானைச் சோற்றை விரும்புகிறார்கள். இப்படி வீட்டுச் சாப்பாடு போடுகிறவர்களுக்காவது லைசென்சு என்று இல்லாமல் இருந்தால் நலமாக இருக்கும். இவர்களுக்கும் லைசென்சு இருப்பதனால் கஷ்டப்படுகிறார்கள். வெளியூரில் உள்ளவர்களுடைய வயிற்று நலனை உத்தேசித்தாவது இப்படிச் சிறு வியாபாரம் செய்கின்றவர்களுக்கு விலக்கு அளிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சார், மத்திய அரசாங்கச் சட்டத்தின்கீழ் 24-வது பிரிவுப்படி 3 ரூபாய் ஃபர்ஸ்ட் லைசென்சு ஃபீ என்றும், பின்னர் ரின்யூவலுக்கு 1 ரூபாய் என்றும் வசூலிக்கப்படுகிறது. இதை நானும் ஒன்றும் பண்ணுவதற்கில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தெருவில் கடை வைத்து விற்கின்ற ஏழை எளிய ஆப்பக்காரர்களிடமும் கூட பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் வரி விதிக்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதையாவது தள்ளுபடி செய்ய அரசாங்கம் முன் வருமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அவர்கள் தனியாக வரி போடுவது இல்லை. இந்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படுகிற வரி தான் பஞ்சாயத்து மூலமாக வசூலிக்கப்படுகிறது.

**திரு. கே. மூக்கைய தேவர் :** சார், கலப்படச் சட்டத்தின்கீழ் சோடா புட்டிகளை விற்கின்ற புட்டிக்கடைக்காரர்களும் தண்டிக்கப்படுகிறார்கள். சோடா கலர் தயாரிக்கக்கூடிய ஸ்தாபனம் கலப்படம் செய்யலாமே தவிர இவர்கள் கலப்படம் செய்ய வழியில்லாததனால் இவர்களை அக்குற்றத்திற்காகத் தண்டிக்காது இருக்க வழிவகை செய்வார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ரீடைல் டீலர்களும் இந்தச் சட்டத்தின் கீழ் வருகிற காரணத்தினால் இவர்களும் தண்டிக்கப்படுகிறார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கலப்படச் சட்டத்தின்கீழ் விற்பனை செய்கின்றவர்களைக் காட்டிலும் உற்பத்தி செய்கின்றவர்களை, உற்பத்தி செய்கின்ற இடத்தில் பிடித்துத் தண்டிப்பது தான் பொருத்தமாக இருக்கும். ஆகவே சோடா புட்டி விற்கின்றவர்களைத் தண்டிக்காமல், சோடா புட்டி உற்பத்தி செய்கின்றவர்களையே தண்டிக்க வழிவகை செய்யக்கூடிய அளவில் சட்டத்தில் மாறுதல் செய்ய நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை தெரிவிக்குமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ரீடைல் டீலர்கள் எந்த எந்த ஸ்தாபனத்திடம் வாங்கி விற்கிறார்கள் என்று தெரியாத காரணத்தினால் இப்படி இருப்பதனால் இவர்களே நல்ல உற்பத்தியாளரிடம் நல்ல சரக்கையே வாங்கி விற்க வழியேற்படும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** வேறு பொருள்களை விற்கின்றவர்கள் என்றால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் சோடா பாட்டில் விற்கின்றவர்களால் கலப்படம் பண்ண முடியாது. ஆகவே எங்கு உற்பத்தி செய்யப்படுகிறதோ அங்கேயே கலப்படம் செய்கின்றவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வழி செய்யப்படுமா? புட்டிக் கடைக்காரர்களுக்கு தண்டனை இல்லாது செய்ய முயற்சி செய்யப்படுமா?

**கனம் சபாநாயகர் :** முடியாது என்று எப்படிச் சொல்ல முடியும்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அந்தக் கோரிக்கை வந்திருக்கிறது. அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.



**திரு. டி. கார்ச்சா கவுடர் :** சிறு கடைக்காரர்கள் பள்ளிக்கூடங்களுக்கு முன்னால் ஈ மொய்த்த பண்டங்களை வைத்துக்கொண்டு விற்பதனால், அதை வாங்கி உண்ணுகின்ற மாணவர்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. ஆகவே அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதற்கெல்லாம் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### கம்யூனிஸ்டு கட்சி காரியாலயங்கள்

*153 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அவசரச் சட்டம் பிரகடனம் செய்த பிறகு தமிழ் நாட்டிலுள்ள அனேக கம்யூனிஸ்ட் கட்சி காரியாலயங்கள் போலீசாரால் பரிசோதிக்கப்பட்டதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : In November 1962, Communist Party Offices at Madurai, Salem, Tirunelveli and Tiruchirappalli were searched by the Police.

**திரு. கரு. சீமைச்சாமி :** போலீசார் சோதனையிட்டதில் பாரதத்தைப் பாதிக்கும் விதத்தில் ஏதாவது ரெகார்டுகள் கைப்பற்றப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றியெல்லாம் தகவல் கொடுப்பது உசிதம் அல்ல.

**திரு. கரு. சீமைச்சாமி :** அவர்களுடைய கட்டிடத்தில் சீனப் பிரதமர் சூயென்லாயின் படம் மாட்டப்பட்டிருந்தது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதை அகற்ற உத்தேசமுண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** என்னுடைய கவனத்திற்கு வந்தபோது அது எடுக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டது. ஏதோ தொழிலாளர்கள் சங்கத்தில் அது முதலில் மாட்டப்பட்டிருந்தது என்ற தகவல் வந்திருக்கிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Was any prohibitive literature found when the search was made by the Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I think the hon. Member knows Tamil also. I have just now answered in Tamil that it would not be right for me to disclose particulars about all these things.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இன்றைக்கு கம்யூனிஸ்டு கட்சியின் செயல்களைக் காட்டிலும் சுதந்திராக் கட்சியின் பிரசாரம் பாரதத்திற்குப் பெரும் தீங்கை விளைவித்துக்கொண்டிருக்கிறது என்ற காரணத்தினால் அவர்களுடைய காரியாலயம் முதலில்

[திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்] [7th March 1963

ஒரு ஆஸ்பத்திரிதான் இருக்கிறது. அது எல்லோருக்கும் உதவியாக இல்லை. அங்கு மூன்று அல்லது நான்கு மைல்களுக்கு ஒரு ஆஸ்பத்திரியை அமைத்துக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதைப்பற்றி இதற்கு முன் இந்தச் சட்ட சபையிலேயே பேசி இருக்கிறேன். அது இந்தச் சட்டசபைக்குக் கூட தெரியும். ஆகவே ஏர்க்காடு தொகுதியில் ஐந்து மைலுக்கு ஒரு ஆஸ்பத்திரியை அமைத்துக்கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி அமைந்து அங்குள்ள மக்களுக்கு வேண்டும்போது மருந்துகளைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அங்குள்ள ஜனங்களுக்கு ஊசி போட்டுக்கொள்வதாக இருந்தாலும் அது முடியவில்லை. அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஆகவே அங்கு உடனடியாக ஆஸ்பத்திரியை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு ஓமலூர் தொகுதிக்குப் பக்கத்தில் சிறுபாங்கநதி என்ற ஒரு நதி இருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்பு அங்கு அணை ஒன்று கட்டப்பட்டு அது உடைந்து போய்விட்டது. அது இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. அதன் பிறகு எவ்வளவோ அணைக்கட்டுகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த உடைந்த அணை மட்டும் இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. அதைக் கட்டிக்கொடுத்தால் ஓமலூருக்கு குடி தண்ணீர் வசதி கிடைப்பதோடு விவசாயத்திற்கும் கொடுத்தால் அங்குள்ள ஜனங்களுக்கு நல்ல வசதி ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

காடையம்பட்டி பகுதி சேர்வராயன் மலை அடிவாரத்தில் இருக்கிறது. தேனிஸ்பேட்டைக்கும் வடக்கம்பட்டிக்கும் மத்தியில் ஒரு ஆறு இருக்கிறது. ஒரு மைல் தூரத்தில் அது இருக்கிறது.
1-30 p.m. மழைக் காலத்தில் அந்த ஆற்றில் தண்ணீர் வரும்போது, தேனிஸ்பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்ல முடியாத அளவுக்கு வழியெல்லாம் ஒரே சேரும் சகதியுமாக இருக்கும். ஆற்றுக்கு மறு பக்கத்தில் மக்கள் நின்றுவிட வேண்டியிருக்கிறது. 1957 தேர்தலுக்கு வோட்டுக்காக கிராமங்களுக்குச் சென்றபோது, வடக்கம்பட்டி கிராமத்திற்கு அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் என்னுடன் வந்திருந்தார். அப்பொழுது ஆற்றில் தண்ணீர் வந்து, வழியெல்லாம் சேறாக இருந்தபோது, அமைச்சர் அவர்களும் சேற்றில் நடந்து வந்தது அவருக்கு ஞாபகம் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் இன்னும் கட்டப்படவில்லை. அதன் காரணமாக மழைக் காலங்களில் ஆற்றின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு ஜனங்கள் போகமுடியாமல் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். சல்லி ரோடு கூடப் போடப்படவில்லை. அரசாங்கத்தைக் கேட்டால், 'பஞ்சாயத்தில் செய்வார்கள்' என்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனைக் கேட்டால், 'ரூபாய் இல்லை. உங்கள் அரசாங்கத்தைப் பணம் கொடுக்கச் சொல்லுங்கள்' என்று சொல்கிறார்கள். வடக்கம்பட்டிக்கும் தேனிஸ்பேட்டைக்கும் இடையே உள்ள ஆற்றுக்கு ஒரு சிறு பாலம் கட்டி, ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு ஜனங்கள் போய்வர



7th March 1963] [திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்]

ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வடக்கம்பட்டியிலிருந்து ராமமூர்த்திநகருக்குப் போவதற்குப் பத்து மைல் தூரம் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் அந்த ரோடு இருக்கிறது. சென்ற பொதுத் தேர்தலின்போது அந்த ரோடு வழியாக வோட்டுக்காகச் செல்லவேண்டியிருந்தது. அப்பொழுது மத்திய சர்க்கார் அமைச்சர் திரு. எஸ். வி. ராமசாமி அவர்கள் பார்லிமெண்ட் அங்கத்தினர் பதவிக்கும் நான் சட்டசபை மெம்பர் பதவிக்கும் தேர்தலுக்கு நின்றபோது, கிராமங்களுக்கு வோட்டு கேட்பதற்காக சென்றோம். ப்ளஷர் காரில் வந்த மந்திரி 'வான்' இல் தான் ராமமூர்த்தி நகரத்திற்கு போகவேண்டியிருந்தது. அந்த ஊருக்குப் போய்த் திரும்பி வருகிறபோது பார்த்தால், உட்கார்ந்திருந்த இடம் இரத்தம் கட்டிவிட்டது. அந்தப் பத்து மைல் ரோடு அவ்வளவு மோசமான நிலைமையில் இருக்கிறது. திரு. ராமசாமி அவர்களுக்கு நன்றாக ஞாபகம் இருக்கும். அந்த ரோடு இன்னும் அதே நிலையில்தான் இருக்கிறது. அதைச் சல்லி ரோடாகப் போட்டால் ஜனங்களுக்கு வசதியாக இருக்கும்.

சுண்ணாம்புக்கரட்டு என்கிற ஊர் சேர்வராயன் மலையடிவாரத்தில் இருக்கிறது. காஞ்சேரி, குடும்பப்பட்டி வழியாக, சுண்ணாம்புக்கரட்டிலிருந்து தேனிஸ்பேட்டைக்கு வரும் ரோடு இன்னும் சல்லி போடப்படாமல் இருக்கிறது. அந்த ரோடுக்கு சல்லி போடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வாழைப்பட்டி பனைமரத்துப்பட்டிப் பகுதிகள் மலை ஜாதி மக்கள் இருக்கும் இடங்களாகும். பனைமரத்துப்பட்டி, கோணமுடி கிராமம் வரை 25 மைல் தூரம் அந்த ரோடு போகிறது. அந்த 25 மைல் ரோடுக்கு ஒரு வசதி கூட இல்லை. ஆஸ்பத்திரி கிடையாது. மின்சார வசதி கிடையாது. ஒரே ஒரு பஸ் தான் போகிறது. கம்மாளப்பட்டிக்கு ஒரு பஸ் ஓடுகிறது. அது போதவில்லை. ஜனங்கள் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. மங்களபுரம் பக்கத்தில் 30 கிராமங்களில் 50 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிறது. அங்கு இன்னொரு பஸ் விட்டால் ஜனங்களுக்கு வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கோணக்குடி கிராமத்தில் மின்சார வசதி இருந்தாலும், ஒரு பகுதிக்கு இருக்கிறது. இன்னொரு பகுதிக்கு இல்லை. இரண்டு வருஷமாக அதே நிலை இருக்கிறது. எஞ்ஜினியரைக் கேட்டால், 'இன்னும் ஆர்டர் வரவில்லை' என்று சொல்கிறார். இதையும் அரசாங்கம் உடனடியாகக் கவனிக்கவேண்டும்.

சேலத்திற்கும் திருச்சிக்கும் ஒரு எக்ஸ்ப்ரஸ் பஸ் போகிறது. திருச்சிக்குப் போகும் அந்த எக்ஸ்ப்ரஸ் பஸ் மங்களூரில் இரண்டு நிமிஷம் தங்கிச் சென்றால், அங்குள்ள மக்கள் திருச்சிக்குப் போக வசதி கிடைக்கும். இல்லாவிட்டால், எட்டு மைல் தூரம் சேலத்திற்கு வந்து, அங்கிருந்து திருச்சிக்குப் போகவேண்டும். மங்களூரில் எக்ஸ்ப்ரஸ் பஸ் நிற்க வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(5) கடம்பக்குறிச்சி வழியாகச் செல்லும் நெரூர்—தளவாய் பாளையம் சாலையில் 0/0 மையிலிருந்து 10/6 மைல் வரை சிமிட்டி கான்க்ரீட் போடுதல்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** கரும்பு விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகளுக்குச் சர்க்காரிலிருந்து மானியம் கொடுக்கப்படுகிறதா? அப்படியானால் எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** இது விவசாயிகளுக்கு மான்யம் கொடுப்பது பற்றியது அல்ல. கரும்பு பாக்டரிக்கு அனுப்பும் போது அவர்களிடமிருந்து 'செஸ்' வாங்குகிறோம். அந்த ரூபாயிலிருந்து ரோடு அமைத்தல், கரும்பு பற்றிய ஆராய்ச்சிகள் செய்தல் ஆகிய வேலைகள் செய்யப்படுகின்றன.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** 1961-62-ல் நெல்லிக்குப்பம் கரும்பாலையை ஏற்படுத்த எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்பதைச் சொல்ல முடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** இது திருச்சி மாவட்டம் சம்பந்தப்பட்ட கேள்வி. தென்னாற்காடு மாவட்டம் சம்பந்தப்பட்ட தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சமீபத்திலே மத்திய சர்க்கார் காப்பி, தேயிலை போன்றவைகளுக்கு 20 சதவிகிதம் செஸ் விதித்திருக்கிறார்கள். அந்த வரியின் மூலம் வரக்கூடிய தொகையை மத்திய சர்க்காரில் இருந்து வாங்கி நீலகிரியில் மற்ற மலைப் பகுதியிலிருந்து அந்த வரி எந்தெந்த இடங்களில் இருந்து வசூலிக்கப்படுகிறதோ அவற்றையெல்லாம் அபிவிருத்தி செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** இது கரும்பு சம்பந்தப்பட்ட கேள்வி. டீ, காப்பி சம்பந்தப்பட்ட கேள்வியைத் தனியாகக் கேட்டால் பதில் சொல்ல முடியும்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** கரும்பு செஸ் பண்டிலிருந்து பல வேலைகளை, குறிப்பாக பாதை அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்காகத் தனியாக ஒரு சப் டிவிஷன் ஏற்படுத்தப்பட்டு அது இப்போது நீக்கப்பட்டுவிட்டது. அதைத் தொடர்ந்து மீண்டும் ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கனவே, முதல் கேள்வியில் பதில் சொல்லியிருக்கிறேன். 'சப் டிவிஷன்' தேவை என்று சொன்னால் மீண்டும் ஏற்படுத்துவதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு. ஆர். ரங்கசாமி :** சர்க்கரை ஆலைகள் இல்லாத இடத்தில் கரும்புக்கு 'செஸ்' வசூலிக்கப்பட்டால், அந்த இடங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளின் நன்மைக்காக அத்தத் தொகை செலவழிக்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** 'செஸ்' பாக்டரி மூலம் வசூலிக்கப்படுகிறது. கரும்பு உற்பத்தி செய்யப்பட்டு பாக்டரிக்கு வரக்கூடிய ஏரியாவில் ரோடுகள் பராமரிப்பு, மற்றும் கரும்பு பற்றிய ஆராய்ச்சிகளுக்காக இந்தத் தொகை செலவழிக்கப்படுகிறது.



**திரு. தோ. மு. நல்லசாமி :** கரும்பு செஸ் நிதியையும், பொது நிதியையும் இணைப்பதற்கான திட்டத்தைப் பற்றி ஆலோசிக்கப்பட்டதா? அப்படியானால் அதன் பேரில் அரசாங்கம் எடுத்திருக்கும் முடிவு என்ன?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார் :** கரும்புத் தீர்வையானது மாகாணம் பூராவும் வசூலிக்கப்படுகிறதா? அல்லது குறிப்பிட்ட இடங்களில் மட்டுந்தான் வசூலிக்கப்படுகிறதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** எங்கெல்லாம் கரும்பு பாக்டரிக்கு அனுப்பப்படுகிறதோ, அங்கு பாக்டரி மூலம் 'செஸ்' வசூலிக்கப்படுகிறது.

### காய்கறி (விலை)

* 155 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை தியாகராயநகர் காய்கறி மார்கெட்டை முதலமைச்சர் அவர்கள் 1962-ம் வருஷம் டிசம்பர் மாதம் 25-ம் தேதியில் திடீரெனப் பார்வையிட்டாரா?

(இ) காய்கறி விலை அதிகமாக இருப்பதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) (1) சென்னை நகரத்தைப் பொருத்த வரையில் கொத்தவால் சாவடியில் உள்ள விலைக்கு அதிகபட்சம் 20 சதவீதம் இலாபத்துக்கு மேல் போகாமல் சில்லரை வியாபாரிகள் விற்குமாறு பார்த்துக்கொள்வதற்கு சென்னை அழுகும்பொருள் வர்த்தக சங்கம் உறுதி அளித்திருக்கிறது.

(2) காய்கறி உற்பத்தியை பெருக்கி பொதுமக்களுக்கு அதிகமாக கிடைக்கும்படி வகை செய்ய, காய்கறி உற்பத்தியை அதிகரிக்கும் திட்டமொன்றை அரசாங்கம் அனுமதித்துள்ளது. சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் இத்திட்டம் அமுலாக்கப்படும்.

(a) Yes, Sir.

(b) (i) So far as Madras City is concerned, an understanding has been reached with the Madras City Perishable Goods Merchants Association to the effct that the retailers should not charge a profit of more than 20 per cent over the prices of vegetables obtainingi n Kothwal Bazaar.

[8th March 1963

சோதனை செய்யப்படுமோ? குறிப்பாக ராஜாஜி அவர்களுடைய வீட்டைச் சோதனை செய்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எந்தக் கட்சியானாலும், எந்தத் தனி நபரானாலும் நாட்டின் பாதுகாப்புக்கு உகந்த வகையில் நடந்து கொள்ளும்படி செய்வதற்கு எந்த எந்த வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அது எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. கே. மூக்கைய தேவர்:** கனம் திரு. ராஜாஜியின் பிரசாரம் ஆளும் கட்சியினருக்கு அதிக ஆபத்தைத் தருகிறது என்பதைத் தவிர தேசத்திற்கு ஆபத்து இல்லை என்பதை அரசாங்கம் உணருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதை ஒப்புக்கொள்ள முடியாது. கனம் அங்கத்தினர் கேட்டதனால் சொல்கிறேன். நாட்டுக்கே பெரும் பாதகம் விளைவிக்கின்ற வகையில் தான் அந்தப் பிரசாரம் இருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** சூயென்லாயின் படத்தை அகற்றியிருக்கிறார்கள் என்று கனம் மந்திரி சொன்னார்கள். சென்னை மாநகரில் மிகவும் முக்கியமான இடத்திற்கு சைனா பஜார் என்ற பெயர் இருக்கிறது. அந்தப் பெயரைக் கூட மாற்ற அரசாங்கம் ஆலோசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப்பற்றி இதுவரையில் அரசாங்கம் பரிசீலனை செய்யவில்லை.

**திரு. கோ. சி. மணி:** சீனப் பிரதமர் சூயென்லாயின் படத்தை மாட்டக்கூடாது என்று அரசாங்கம் ஏதாவது உத்தரவு இட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதற்கெல்லாம் தனித்தனியாக உத்தரவிடவேண்டிய அவசியம் இல்லை.

**திரு. கே. மூக்கைய தேவர்:** இந்தச் சபையின் அங்கத்தினராகிய திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களுடைய உடல்நிலை சிறையில் மோசமாக இருக்கிறது என்ற காரணத்தினால் அவரை விடுதலை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவர்கள் உடல் நிலையை ஒட்டி அவரை சென்னைச் சிறைக்கு மாற்றினால் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை கொடுக்க முடியும் என்றார்கள். சென்னைச் சிறைக்கு மாற்ற உத்திரவிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு டாக்டர்கள் பார்த்து விடுதலை செய்யவேண்டிய நிமித்தம் இருக்கிறது என்றால் அதை அரசாங்கம் அப்போது பரிசீலனை செய்யும்.

*Sugar-cane Cess Fund*

*154. *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the amount collected during the year 1961–62 by way of sugar-cane cess;



8th March 1963]

(*b*) the balance in the Sugar-cane Cess Fund Account as on 31st March 1962; and

(*c*) the list of works taken up during 1961–62 in Tiruchirappalli district, whose expenditure was met from Sugar-cane Cess Fund?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Rs. 16,41,656.

(*b*) Rs. 50,52,336.

(*c*) No new item of work was taken up during the year 1961–62 in the Tiruchirappalli district under Sugar-cane Road Development Scheme.

No new works were taken up during 1961–62 in the Tiruchirappalli district, but the following works were in progress in the district during that year:—

(1) Formation of the road from Cauvery Bridge to Pugalur (via) Pugalur-Agraharam.

(2) Formation of the road from Pugalur to Karur-Erode Main Road (via) Senbadapalayam (work completed).

(3) Formation of the road from Thottakurichi Harijan Street to Padugai-lands.

(4) Cement concrting of th road from 10/6 of Karur-Pugalur Road to factory gate and then upto Punjai Pugalur (work completed).

(5) Cement concreting of the Nerur-Dalavapalayam Road (via) Kudambakurichi 0/0 to 10/6.

*(அ) ரூ. 16,41,656.*

*(இ) ரூ. 50,52,336.*

*(உ) கரும்பு ஆலைப் பகுதிகளில் சாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1961-62-ல் எந்தப் புதிய வேலையும் மேற்கொள்ளப்படவில்லை.*

*திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1961-62-ல் அடியிற்கண்ட சாலை வேலைகள் நடந்து வந்தன:—*

*(1) காவேரிப் பாலத்திலிருந்து, புகளூருக்கு (புகளூர்—அக்கிரகாரம் வழியாக) சாலை அமைத்தல்.*

*(2) புகளூரிலிருந்து கரூர்—ஈரோடு பிரதான சாலை வரையில் (செம்படபாளையம் வழியாக) சாலை அமைத்தல். (வேலை இப்போது முடிவடைந்துவிட்டது.)*

*(3) தோட்டக்குறிச்சி ஹரிஜன தெருவிலிருந்து படுகை நிலங்கள் வரையில் சாலை அமைத்தல்.*

*(4) கரூர்—புகளூர் சாலையின் 10/6 மையிலிருந்து தொழிற் சாலை வாயில் வரையிலும் அங்கிருந்து புஞ்சை புகளூர் வரையிலும் உள்ள சாலைக்கு சிமிட்டி கான்க்ரீட் போடுதல். (வேலை முடிவடைந்து விட்டது.)*

(ii) A scheme for increasing the production of vegetables in and around the Madras City and the towns of Madurai, Tiruchirappalli, Tirunelveli and Coimbatore has been sanctioned.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சார், காய்கறி வாங்கச் செல்கின்ற சமயத்தில் தாய்மார்கள் சென்றால்தான் அதிக விலை சொல்வதை அறிந்த நம்முடைய அமைச்சர்கள், விலை உயர்வு எந்த அளவு இருக்கிறது என்பதைப் பார்க்கப்போன முதலமைச்சர் அவர்கள் பெண் வேடம் போட்டுச் சென்றார்களா ? அல்லது ஆண் வேடத்திலேயே சென்றார்களா ?

**கனம் சபாநாயகர் :** முதலமைச்சர் அவர்களைப் பெண் வேடத்தில் பார்க்கவேண்டுமென்று கனம் அங்கத்தினருக்கு ஆசையாக இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்பதிலிருந்தே அவருடைய சிந்தனை எவ்வாறு இருக்கிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்வார்கள். எப்போதும் எந்தச் சட்டை அணிந்து இருப்பார்களோ அந்த ரூபத்தில்தான் போய்ப் பார்த்தார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கொத்தவால்சாவடியில் காய்கறி விலை விற்கப்படுவதற்கும், வானொலியில் காய்கறி விலைகள் சொல்லப்படுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சட்ட மன்றத்தில் ஒரு பெண் மெம்பர் புகார் செய்தார்களே, அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சிறிய காய்கறிக்கடைக்காரர்கள் கொத்தவால்சாவடியிலிருந்து வாங்கிக் கொண்டு போய் விற்கிறார்கள். அவர்கள் 20 சத விகிதத்திற்கு மேல் லாபம் வைத்து விற்கக் கூடாது என்று நிர்ணயித்திருக்கிறோம். கடைகளில் காய்கறியைக் கொண்டு போய் விற்பவர்கள் சொல்லும் விலையைக் கொண்டு சொல்வது சரியல்ல.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, சென்னையில் வாழும் 18 லட்சம் மக்களுக்கும் காய்கறி வழங்க கொத்தவால்சாவடியில் மட்டும் ஒரே ஒரு மார்கெட் இருக்கும் காரணத்தாலும், அங்கிருந்து சென்னை நகரின் பல்வேறு பகுதிகளுக்குக் காய்கறிகளைக் கொண்டு செல்லவேண்டிய நெருக்கடி இருக்கும் காரணத்தாலும், போக்குவரத்துச் செலவுகளின் பொருட்டு ஆங்காங்கு காய்கறி விலை அதிகமாக வழி இருக்கும் காரணத்தாலும், சென்னையை நான்கு, ஐந்து வட்டாரங்களாகப் பிரித்து, ஆங்காங்கு காய்கறி மார்கெட்டுகளை அமைத்துக் காய்கறிகளின் விலையைக் குறைக்க வழிவகைகள் செய்யப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கொத்தவால்சாவடியைப் போல் பெரிய மார்கெட் சென்னையில் வேறு இல்லையென்றாலுங்கூட, மற்ற





இடங்களிலும் மார்கெட்டுகள் இருக்கின்றன. மேலும் மார்கெட்டுகள் அமைக்கவேண்டியது உசிதம் என்று அரசாங்கம் கருதினால் அது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து சேலம், கோயம்புத்தூர் போன்ற இடங்களிலும் காய்கறிகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. கோயம்புத்தூர், சேலம் போன்ற இடங்களிலும் உதவாக்கரை புடலங்காய், கத்தரிக்காய் ஆகியவற்றைப் பயிரிடாமல் நீலகிரியிலுள்ள இங்கிலீஷ் காய்கறிகளை விளைவித்து மக்களுக்கு வழங்க அரசாங்கம் முன் வருமா ?

**திரு. சா. கணேசன் :** 'ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்'. புடலங்காய், கத்தரிக்காய் எல்லாம் உதவாக்கரை என்றால், காலிபிளவரும், காரட்டும் உதவும் கரையா ?

**கனம் சபாநாயகர் :** இதிலே என்ன 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர் சொன்னதைத் திருப்பிச் சொல்லிவிட்டுப் போகலாம்.

**திரு. பூ. கக்கன் :** நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தமட்டில் அங்கே பயிராகின்ற நல்ல காய்கறிகள் அங்குள்ள மக்களுக்குப் போதுமானதாக இருக்கிறது. சென்னை, திருச்சி, மதுரை போன்ற நகரங்களில் இருக்கும் மக்களுக்குக் காய்கறி அதிகமாகத் தேவையாக இருக்கிறது. அதற்காகத்தான் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. புடலங்காய், கத்தரிக்காயிலும் வைடமின் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** காய்கறிகளின் விலை குறைவாக இருக்கிற சமயத்தில் அதை கோல்ட் ஸ்டோரேஜ் கோடவுன்கள் கட்டி அதைப் பதனப்படுத்தி வைத்து விலை அதிகமாகும்போது அங்கிருந்து விடுவிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒரு பழமொழி உண்டு. மரத்தை வெட்டி அது வண்டியில் விழுந்தால் அதைச் சுலபமாக எடுத்துப் போகலாம். ஆனால் அதனால் சில சமயம் வண்டியின் அச்சு ஒடிந்து விடும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** காய்கறி அபிவிருத்தித் திட்டத்திற்காக பங்களாக்கள், காலி மனைகள் இவற்றில் எல்லாம் தோட்டங்கள் போடவேண்டுமென்று சர்க்கார் வேண்டுகோள் விடுத்தும் கனம் அமைச்சர் அவர்கள் வானொலியில் பேசவும் செய்தார்கள். அதையொட்டி சென்னை, மதுரை போன்ற நகரங்களில் எவ்வளவு இடங்களில் இந்த தோட்ட வேலை தொடங்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எவ்வளவு இடங்கள் என்று தெரியாது. பல இடங்களில் துவக்கப்பட்டிருக்கிறது. அந்த இடங்களை கனம் அங்கத்தினர் அவர்கள் வேண்டுமானால் சென்று பார்க்கலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** சென்னை நகரில் இருந்து வெளியே போகும் கழிநீர் பெரும்பகுதி வீணாக்கப்படுவதால், அதைப் பயன்படுத்திக் காய்கறித் தோட்டங்கள் போடுவதற்கும், அதன் மூலம் காய்கறி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** இப்போது அந்தத் திட்டம் இல்லை.

**திரு. ஏ. ஆறுமுகம்:** வேலூர் நகரத்தைச் சுற்றி காய்கறியை அதிகம் உற்பத்தி செய்ய சர்க்கார் ஆலோசனை செய்யுமா?

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினரே செய்யலாம் அல்லவா?

**கனம் திரு. பூ. கக்கன்:** நான் சொன்ன 4 நகரங்களைத்தான் எடுத்திருக்கிறோம். பின்னால் ஒருவேளை வேலூரைப் பற்றி வேண்டுமானால் பரிசீலனை செய்யலாம்.

**திரு. கே. மூக்கையா தேவர்:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் காய்கறிக் கடைகளுக்குச் சென்று எந்தெந்த காய்கறிகளின் விலைகளைப் பற்றி விசாரித்தார்கள்? அந்த விலைகளின் விவரம் என்ன?

**கனம் திரு. பூ. கக்கன்:** காய்கறி கடைக்குப் போனால் எல்லாக் காய்கறிகளைப் பற்றியும் விசாரித்திருப்பார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** அடையாறு நதியோரங்களில் ஏராளமாக தரிசு நிலங்கள் இருக்கின்றன. அதற்குப் பக்கத்தில் அமைச்சர்களின் இல்லங்களும் இருக்கின்றன. அமைச்சர்களின் வீடுகளில் உள்ள தோட்டங்களில் காய்கறி தோட்டங்கள் பயிராக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** எல்லா மந்திரிகள் வீடுகளிலும் தோட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அங்கும் காய்கறி உற்பத்தி செய்யப்படுகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி:** சென்னை நகரில் உள்ள வீடுகளில் இருக்கும் காம்பவுண்ட்களில் காலி இடத்தில் காய்கறி உற்பத்தி செய்ய அரசாங்கத்திற்கு ஏதாவது திட்டமிருக்கிறதா? அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சென்னை நகரில் பல பங்களாக்களில் காலி இடங்களில் காய்கறி உற்பத்தியைப் பெருக்க, அதற்கு ஒரு அட்வைசரிக் கமிட்டி கூட வைத்திருக்கிறோம். எந்தெந்த காம்பவுண்ட்களில் இடம் இருக்கிறதோ அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

**திரு. ஆர். ரங்கசாமி:** அடிக்கடி அமைச்சர்கள் காய்கறி மார்கெட்டுகளுக்குச் செல்வதால் விலைவாசி தாறுமாறாகக் குறைந்து அதனால் உற்பத்தி பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** ஒன்றும் பாதிக்காது.





**திரு. மு. கருணாநிதி:** கூட்டுறவு முறையில் காய்கறி விற்பதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்:** கூட்டுறவு சங்கங்கள் அமைத்து அரசாங்கத்தினிடம் உதவி கேட்டால் அதுபற்றி கவனிக்கப்படும்.

**திரு. கே. மூக்கையா தேவர்:** இப்படி காய்கறிகளின் விலைவாசி திடீரென்று உயர்வதற்குக் காரணம் என்ன?

**கனம் சபாநாயகர்:** நிறையச் சாப்பிடுகிறார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன்:** காய்கறியை அதிகமாக மக்கள் உபயோகிக்கிறார்கள். விளைச்சல் குறைந்திருந்தால் விலை உயருகிறது. விளைச்சல் அதிகமாக இருந்தால் விலை குறைகிறது.

**திரு. கோ. சி. மணி:** அமைச்சர் இல்லங்களில் உள்ள தோட்டங்களில் விளைகிற காய்கறியில் இருந்து கிடைக்கும் வருவாயை அரசாங்கத்திற்கு அனுப்புகிறார்களா? அல்லது அதை சொந்தத்திற்காக உபயோகப்படுத்துகிறார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்:** எங்கள் செலவில் விதை போன்றவை வாங்கி விளைவிப்பதால் நாங்கள் அதை உபயோகப்படுத்துகிறோம்.

**கனம் சபாநாயகர்:** கனம் மெம்பர் வந்தாலும் கொடுக்கலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** பத்திரிகைகளில் வரும் காய்கறி விலைப்பட்டியலில் இருப்பதற்கும் மார்கெட்டில் விற்கப்படும் விலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. இதில் எந்த விலை சரி என்று உறுதி செய்ய சர்க்கார் முன்வருமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** மொத்த வியாபாரிகள் சில்லறை வியாபாரிகள் அதிக விலைக்கு விற்காது பார்த்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். விலையைப் பற்றி ரேடியோவிலும் பத்திரிகைகளிலும் வெளியிடப்படுகிறது. ஏன் விலையை உயர்த்தி விற்கிறீர்கள் என்று மக்கள் கேட்கவேண்டும். மக்களுக்கு விலை தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் பத்திரிகைகளிலும் ரேடியோவிலும் விளம்பரப்படுத்தப்படுகிறது. ஒரு சிலர் ஏமாற்றுவதால் மக்கள் ஏமாந்து விடக்கூடாது.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** கூட்டுறவு சங்கங்கள் அமைத்தால் காய்கறி உற்பத்திக்கு உதவி செய்வதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீலகிரியில் வெஜிட்டபிள் க்ரோயேர்ஸ் கோவாப்பரேட்டிவ் ஸொஸைட்டிகள் பெருமளவில் இருக்கின்றன. அதற்கு ஏதாவது அரசாங்கம் உதவி செய்யமுடியுமா? அப்படியானால் அரசாங்கம் என்னென்ன உதவிகளை செய்ய இயலும்?

**கனம் திரு. பூ. கக்கன்:** நான் சொன்ன நகரங்களை எடுத்திருக்கிறோம். காய்கறி உற்பத்தி செய்கிறவர்களுக்கு ஏக்கருக்கு 120 ரூபாய் கொடுக்கிறோம் கடனாக. இரண்டு காலங்களில் செய்தால் 240 ரூபாய் கொடுக்கிறோம். நீலகிரியைப் பொறுத்தவரையில் விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி வேண்டும்.

[8th March 1963

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** காய்கறி உற்பத்திக்கான இத்திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள விவசாயிகள் முன் வந்திருக்கிறார்களா ? அப்படியானால் எவ்வளவு விவசாயிகள் முன்வந்திருக்கிறார்கள் என்பதற்கு ஏதாவது கணக்கு இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கணக்கு என்னிடமில்லை. விவசாயிகள் முன் வந்திருக்கிறார்கள். கொத்தவால்சாவடிக்கு சென்று அங்கு வரும் காய்கறிகளைப் பார்த்தால் தெரியும், விவசாயிகள் எவ்வளவு பேர்கள் முன்வந்திருக்கிறார்கள் என்பது.

**திரு. காஞ்சி மணிமொழியார் :** சென்னையில் கொத்தவால்சாவடி விலையை விட 20 சத விகிதம் அதிகமாக வைத்து வெளி மார்கட்டுகளில் விற்கலாம் என்று அறிக்கை வெளியிடப்பட்டு இருக்கிறது. ஆனால் விலையை மிக அதிகமாக இரண்டு மடங்குக்கும் அதிகமாக வைத்து விற்கப்படுகிறது, அதன்மேல் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்கத்திற்கு அப்படி அதிகமாக உயர்த்தி வைத்து விற்பதாக தகவல் வரவில்லை. கோடம்பாக்கத்தில் இருந்துதான் ஒருவர் புகார் எழுதியிருக்கிறார். அதை கலெக்டருக்கு அனுப்பி விசாரிக்கச் சொல்லியிருக்கிறோம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** சாதாரண இந்த காய்கறி உற்பத்தி செய்யக் கூட கூட்டுறவு முறையை அமுல் செய்ய வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

**திரு. கே. மூக்கையா தேவர் :** இப்படி காய்கறிகளின் விலை திடீரென்று உயர்வதற்கு காய்கறிகளுக்கு ஏற்படுகிற நோய்தான் காரணம் என்றால் அதற்காக முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நோய் வந்ததால் காய்கறி உற்பத்தி பாதிக்கப்படவில்லை. அப்படி வந்தால் அது பற்றி சொன்னால் அதைத் தடுக்க ஏற்பாடு செய்யலாம்.

**திரு. மு. கருணாநிதி :** தஞ்சை ஜில்லாவில் நடைபெற்ற பாதுகாப்புக் குழுவில் அங்கு கூட்டுறவு முறையில் காய்கறி விற்கச் செய்யவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல் எல்லா இடங்களிலும் கூட்டுறவு முறையில் காய்கறி விற்க வேண்டுமென்ற யோசனையை மற்றப் பகுதிகளுக்கும் அரசாங்கம் எடுத்துக்கூற முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தஞ்சை ஜில்லாவில் செய்த முடிவுகள் எனக்கு தெரிவிக்கப்படவில்லை. இது கூட அமைச்சருக்கு தெரியவில்லையா என்று கேட்க வேண்டாம். கூட்டுறவு முறையில் காய்கறி கடைகள் நடத்த முன்வந்தால் அதற்கு ஆதரவு காட்டப்படும்.



8th March 1963]

**திரு. கோ. சி. மணி :** காய்கறி விலை எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நாம் நிர்ணயம் செய்வதில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** காய்கறி விவசாயம் செய்பவர்களுக்கு வசதிக் குறைவுகள் இருப்பதால் அவர்கள் விவசாயம் செய்ய முன் வருவதில்லை. ஆகவே அவர்களுக்கு உற்சாகம் கொடுக்கக் கூடிய அளவில் சர்க்கார் மான்யம் வழங்கி அவர்கள் விவசாயம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதற்காகத்தான் சர்க்கார் உதவி வருகிறது. ஒரு ஏக்கருக்கு கடனாகக் கொடுப்பது, விதைக்கு 10 ரூபாய், Manure and fertilizers-க்கு ரூபாய் 40, கல்டிவேஷன் காஸ்ட் ரூபாய் 60, பெஸ்டிஸைட்ஸ்க்கு ரூபாய் 10 கொடுக்கிறார்கள். நான் சொன்ன நகரங்களில் 30 மைல்களுக்கு உள்ளே காய்கறி உற்பத்தி செய்தால் பாதி விலைக்கு விதை, மருந்து, உரம் வாங்க கடன் கொடுக்கப்படுகிறது.

**திரு. தோ. மு. நல்லசாமி :** காய்கறி உணவு அதிக சத்துள்ளது. 9-00 a.m.
கறியிலும் சத்து இருக்கிறது. இதில் யாருக்கும் சந்தேகமில்லை. இவைகளின் விலைவாசியை குறைக்கும் முயற்சியில், முக்கியமாக ஹோட்டல்களில் அதிகமான அளவில் காய்கறிகள் வீணாக்கப்பட்டு வருகின்றன. இவைகளை தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஹோட்டல்களில் பரிமாறும் அன்பர்கள் சாப்பிட சாப்பிட போட்டுக்கொண்டிருந்தால் நன்றாக இருக்கும். அரசாங்கம் இதில் ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஜப்பான் நாட்டில் வீடுகளின் கூரை மீது மண்ணைப்போட்டு, அதில் காய்கறிகளை உற்பத்தி செய்து வருவதாக சொல்லப்படுகிறது. அதே போல் சென்னையில் இருக்கின்ற பெரிய பங்களாக்களில் இருக்கின்ற டெரஸ்களில் எல்லாம் மண்ணைப் போட்டு காய்கறிகளை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு சர்க்கார் பங்களாவாசிகளிடம் சொல்லக்கூடாதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சென்னை நகரத்தில் இருக்கின்ற பங்களாக்களில் கீழேயே வேண்டிய இடங்கள் இருக்கின்றன. கிராமங்களிலும் இதற்காக வேண்டிய இடங்கள் இருக்கின்றன. ஆகவே கூரையின் மீது மண்ணைப்போட்டு காய்கறிகளை உற்பத்தி பாக்கவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** தலைவர் அவர்களே, காய்கறி சாப்பிடுகின்றவர்களைக் காட்டிலும், கறி சாப்பிடுகின்றவர்கள் நாட்டில் அதிகமாகிக்கொண்டு வருகிறார்கள். காய்கறிகளுக்கு இப்போது டிமாண்ட் குறைந்து போய்விட்டதன் காரணத்தினால் தான் இதை உற்பத்தி செய்கின்றவர்களும் காய்கறி உற்பத்தியைக் குறைத்துவிட்டார்கள். ஆகவே காய்கறிகளை அதிகமாக உற்பத்தி

[8th March 1963

செய்ய வேண்டும் என்று பிரசாரம் செய்கின்ற நோக்கில் காய்கறிகளை அதிகமாக சாப்பிட வேண்டும் என்பதையும் பிரசாரம் செய்வதற்கு சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** காய்கறியும் சாப்பிடலாம், கறியும் சாப்பிடலாம். அவரவர்கள் இஷ்டப்படி சாப்பிட்டுக்கொள்ளலாம்.

### *Fisheries (development)*

* 156. *Q.*—SRI S. MADHAVAN : }
SRI V. SANKARAN : } Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any scheme for the development of fisheries is collaboration with the Norwegian Government; and

(*b*) if so, the places selected for this purpose?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபத்தை தாற்காலிகமாக மத்திய இடமாகக் கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற உத்தேசம் செய்திருக்கிறோம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபத்தைத் தேர்ந்தெடுத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன். வரவேற்கின்றேன், பாராட்டுகின்றேன். இதன் மூலமாக அங்குள்ள மீன் பிடித் தொழிலாளர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதன் மூலமாக போட் கட்டுவதற்கு வசதி செய்து கொடுக்கப்படும், இதற்காக பணம் கொடுக்கப்படும். இதற்கான இன்சின்களை அவர்களே கொடுக்கிறார்கள். ஸ்பேர் பார்ட்ஸ்-ம் அவர்களே கொடுக்கிறார்கள். மேலும் கோல்ட் ஸ்டோரெஜ் கட்டுவது, ஃபிரீஸிங் யூனிட் முதலியவைகள் அமைப்பது போன்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்படும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், ஆழ்கடல் மீன் பிடிப்பு சம்பந்தமாக ஜப்பான் நாட்டு நிபுணர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் இப்போது எந்தக்கட்டத்தில் இருக்கிறது ? அதன் மூலம் சமீபத்தில் ஏதாவது வெற்றி பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதற்காக பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும் என்றுதான் இருந்தோம். இதற்காக பேச்சுவார்த்தைகள் நடத்துவது ஓரளவுக்கு செலவை ஏற்படுத்தும், ஆகையால் எமர்ஜென்ஸியின் காரணமாக தற்போது இது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.



8th March 1963]

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, மீன் வளத்தைப் பெருக்கி, அதை நல்லமுறையில் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏதாவது திட்டங்கள் அரசாங்கத்தினிடத்தில் இருக்கின்றனவா ? இல்லையென்றால் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதற்கான முயற்சிகள் எடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சிலோன் கவர்ன்மென்டோடு வேண்டிய ஏற்பாடு செய்து, இதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக சமீபத்தில் டைரக்டர் ஆஃப் பிஷரீஸ் அங்கு போவதாகவும் இருக்கிறார்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஸார், ராமநாதபுரம் மாவட்டத்தில் இருப்பது போன்று தஞ்சை மாவட்டத்தில் மீன்பிடித் தொழில் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை தஞ்சைக்கும் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இது நார்வே கொலாபிரேஷன் திட்டத்தின் கீழ் நடைபெறப்போவது. மண்டபத்தை தற்சமயம் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** இதற்காக செலவு செய்யும் தொகை எவ்வளவு ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதற்கு எவ்வளவு செலவழிந்தாலும் அதைக் கொடுப்பதாக அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, ஆறுகள், குளங்கள், ஏரிகள் இவைபோன்ற இடங்களில் மீன்பிடிக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு இந்தமாதிரி ஏதாவது பயிற்சி அளிக்கப்படுமா ?

**கனம் திரு. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** உள்நாட்டு மீனவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை அரசாங்கம் அங்கங்கே ஏற்பாடு செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், கருவாடுக்கு (உப்பிட்ட மீன்) எந்தெந்த நாடுகளில் கிராக்கி இருக்கிறது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதிகமாக கேரளாவில் தேவைப்படுகிறது. சிலோன் பகுதியிலும் இதற்கு கிராக்கியிருக்கிறது. ஆனால் இப்போது சிலோனில் அனுப்புவதற்கு முடியாத நிலை இருக்கிறது. ஆகவே சிலோனுக்கு இப்போது அதிகமாக அனுப்ப முடிவதில்லை.

**திரு. எம். தண்டாயுதபாணி :** ஸார், இந்தத் திட்டத்தின் கீழ் மண்டபத்தை தேர்ந்தெடுக்கப்பட்டது எந்த அடிப்படையில் என்பதை அறிய விரும்புகிறேன்.

8th March 1963]

SRI C. CHIRANJEEVULU NAIDU : Is it not a fact that a licence had been asked for establishment of a factory for exporting prawns at Ennoor? At what stage is that?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அப்படியொன்றும் இப்போது இல்லை.

**திரு. கே. பொன்னையா :** தலைவர் அவர்களே, வயல்களில் நடவு காலங்களில் மீன் குஞ்சுகளை விட்டு வளர்த்து, அறுவடை காலத்தில் மீனை பிடித்துக் கொள்ளலாம் என்று அரசாங்கத்தில் ஒரு திட்டம் இருந்ததே, அது என்னவாயிற்று?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அப்படி ஒரு திட்டம் பட்டுக்கோட்டையில் செய்யப்படவேண்டும் என்று அதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் :** ஸார், மீன் வகைகளில் எந்த மீன் மிகுந்த ருசியுள்ள மீன் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** எனக்கு அதைப்பற்றி தெரியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால் அதை நான் குறித்து வைத்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஸார், காய்கறி, மீன், இவைகளை எல்லாம் 10 பவுண்ட் சாப்பிட்டால் ஏற்படும் சத்து, ஒரே ஒரு கோழிக்கால் மட்டும் சாப்பிட்டாலே கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, கோழிக்கறி அதிகமாகக் கிடைப்பதற்கு வழி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கோழி வளர்க்கவேண்டும் என்று பல திட்டங்கள் போட்டு, பல கிராமங்களிலும் நல்ல முறையில் கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன என்பதும் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** ஸார், தஞ்சை மாவட்ட கடற்கரையோரமாக கிடைக்கும் மீன்களை திருச்சிக்கும் மதுரைக்கும் உடனடியாக கொண்டு செல்வதற்கு போக்குவரத்து வசதியில்லாமல் இருக்கிறது. இதன்காரணமாக அங்கே கிடைக்கும் மீன்களை எல்லாம் கருவாடாக ஆக்கவேண்டியிருக்கிறது. ஆகவே இந்த மீன்களை உடனடியாகக் கொண்டு செல்வதற்கு அரசாங்க வான்கள் கொடுத்து, வாடகை வசூலிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** முடிந்த வரையில் எல்லா சொஸைட்டிகள் மூலமாகவும் அரசாங்க வான்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கங்கே இருக்கின்ற அதிகாரி



Cash. 5000

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதற்காக ஒரு கமிட்டி போட்டிருந்தார்கள். இந்த ராஜ்யத்திலுள்ள செக்ரட்டரியும், டைரக்டர் ஆஃப் ஃபிஷரீஸ் அவர்களும் நார்வீஜியன் ஆபீஸர்களும் இந்தக் கமிட்டியில் இருந்தார்கள். இந்தக் கமிட்டியின் சிபாரிசுப்படிதான் மண்டபம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** மற்ற மாவட்டங்களிலுள்ள மீனை விட நீலகிரி மாவட்டத்திலுள்ள தேக்கங்களிலுள்ள மீன் மிகவும் ருசி அதிகமாக இருக்கிறது என்பது நிபுணர்களின் அபிப்பிராயம். ஆகவே குந்தா, எமரால்ட் போன்ற தேக்கங்களில் மீனை வளர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** எல்லா நீர்த்தேக்கங்களிலும் வேலை முடிந்தவுடன் மீன்களை வளர்க்க வேண்டும் என்ற நல்லதொரு திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறார்கள். அதன்படி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. பி. பழனிசாமி :** மீன் வளர்ப்புக்காக பல்வேறு பிளாக்குகளில் தொகை ஒதுக்கப்பட்ட பணம் செலவு செய்யாமல் இருப்பதின் காரணமாக அதை வேறு காரியங்களுக்கு ஒதுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** ஒவ்வொரு பிளாக்குக்கும் 54 ஆயிரம் ரூபாய் மீன் வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர் வசதி இருக்கின்ற இடங்களில் எல்லாம் இந்தப் பணம் நல்லமுறையில் உபயோகப்படுத்தப்படுகிறது. உபயோகப்படுத்த முடியாத இடங்களிலுள்ள இந்தப் பணத்தை வேறு இடங்களுக்கு கொடுப்பதற்கு சர்க்கார் இப்போது தயாராக இல்லை.

**திரு. சா. கணேசன் :** இந்தத் திட்டத்தின் கீழ் மீன் மட்டும் தான் பிடிக்கப்படுமா, அல்லது நத்தை இனத்தைச் சேர்ந்த பிரான் ஆமை முதலியவைகளையும் பிடித்து, அவற்றை "கானிங்" செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் முயற்சி செய்துள்ளதா ? அல்லது முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதைப் பற்றிய விவரங்கள் என்னிடமில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரையோரமாக அதிகப்படியான அளவில் ஷார்க் மீன் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. இவைகளின் ஈரலிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறதா ? எடுக்கப்படுகிறதென்றால் அதனுடைய மதிப்பு என்ன, இதில் எவ்வளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதற்கான விவரங்கள் இப்போது என்னிடமில்லை. தனியாக கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கலாம்.

[8th March 1963

களின் பொறுப்பின் கீழ் வான்கள் கொடுக்கப்படுகின்றன. இப்போது ஏற்பட்டிருக்கும் எமர்ஜென்ஸி காரணமாக புதிதாக வான்கள் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது.

**திரு. மா. இராசாங்கம்:** வைகை நீர்த் தேக்கத்தில் மீன் வளர்ப்புத் திட்டம் எந்த நிலையிலிருக்கிறது?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** வைகை நீர்த் தேக்கத்தில் இப்போது மீன் வளர்க்கின்றார்கள். மீன் குஞ்சுகளை வளர்த்து வருகிறார்கள். இந்த மீன் குஞ்சுகளை வெளியிடங்களுக்கும் கொடுத்துவருகிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** குளிர் சாதன முறையினால் பதப்படுத்துகிற மீன்கள் சுவை குறைந்து விடுகிறது என்று சொல்லப்படுகிறதே. அப்படி சுவை குறையாமல் பதப்படுத்த ஏதாவது முறைகளை அரசாங்கம் கையாளுமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** அப்படி ஒன்றும் எனக்குத் தெரிந்த வரையில் யாரும் புகார் செய்யவில்லை.

*Basic Education*

*157. Q.—Sri K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the majority of personnel employed in the Basic system of Education lack the right spirit and requisite training and that many schools lack equipment and wherever they have equipment, it is locked up in stores and is unutilised;

(b) whether the one-man Committee of Mr. Aryanayakam has come to the conclusion that the results achieved are not in proportion to the enormous amount spent; and

(c) whether a copy of the report will be placed on the Table of the House?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) to (c) The report of the one-man Committee of Sri Aryanayakam about the working of schools in Basic Education is under examination. A copy of the Report will be placed on the Table of the House after examination.

**திரு. கே. மூக்கையா தேவர்:** ஸார், இந்த ஆதாரக் கல்வித் திட்டமானது சரியாக நடக்கவில்லை, தோல்வியுற்றுவிட்டது என்று திரு. அரியநாயகம் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தைக் கைவிடும் நோக்கம் சர்க்காருக்கு இருக்கிறதா? அல்லது இதில் இருக்கக்கூடிய குறைகளை நீக்கி இதைத் தீவிரப்படுத்தி நடத்தத் திட்டம் இருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சரியாக நடக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் நிபுணர்கள். நிபுணர்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடு இருக்கிறது. முன்பு ஏற்படுத்தப்பட்டபடி



8th March 1963]

நடத்தவில்லை என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு அவர்களே அந்தத் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு ஏராளமான ஆதாரப் பள்ளிகள் இருக்கின்றன. அவைகளை மாற்றி அமைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். மாற்றி அமைப்பது இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தத் திட்டத்திலே பெரிய நிபுணரான நமது உதவி ஜனாதிபதி ஸாக்கிர் ஹுஸேன் அவர்களே இந்தத் திட்டம் தோல்வி அடைந்துவிட்டது, ஒரு பெரிய மோசடியாக மாறி விட்டது என்று சொல்லியிருப்பதை கனம் அமைச்சர் அறிவார்கள். ஆகவே இப்படி பொதுப் பணத்தை விரயம் செய்யாமல், வருகிற கல்வித் திட்டத்திலாவது அதை மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதில் ஒன்றும் விரயம் இல்லை. உதவி ஜனாதிபதி அவர்கள் சில இடங்களில் பார்த்துவிட்டு, சரியாக நடைபெறவில்லை என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் அம்மாதிரி சொன்ன பிறகு நானும் அவர்களோடு பேசியிருக்கிறேன். அவர்கள் கலந்துகொண்ட மாநாடுகளில் நானும் கலந்துகொண்டிருக்கிறேன். இந்த ஆதாரக் கல்வியின் அடிப்படை கருத்துக்கள் கல்வி ஸ்தாபனங்களில் புகுத்தப்பட்டிருக்கின்றன. மேலும் எந்த வகையில் மாற்றி அமைப்பது என்பதுதான் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கே. மூக்கையா தேவர்:** ஸார், இந்தத் திட்டத்தின்கீழ் அநேக ஆதாரப் பள்ளிகளில் மாணவர்கள் உட்கார்ந்து படிக்கக் கூட இடம் கிடையாது. ஏற்கெனவே இருக்கக்கூடிய இடத்தில் நூல் நூற்கும் சாமான்களைப் போட்டு அடைத்துவிட்டு மாணவர்களை வெளியில் உட்கார வைக்கும் நிலைமை இருக்கிறது. உதாரணமாக எடுத்துக்கொண்டால், மதுரை முனிஸிபாலிட்டியில் அநேக பள்ளிகளில் இந்த மாதிரி இருக்கிறது. இதற்கு உடனடியாக நல்ல வசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் முன்பே விடை அளித்தேன். திரு. அரியநாயகம் சிபாரிசுகள் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. சா. கணேசன்:** இத் திட்டம் செம்மையாக நடைபெறவில்லை, ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன என்பதற்காகத் திட்டத்தை கைவிட்டு விடுவது சரியாக இருக்காது என்றும், திட்டத்தைச் செம்மையான முறையில் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய நடவடிக்கை எடுப்பது நியாயம் என்றும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** திட்டத்தைக் கைவிட்டு விடவேண்டுமென்று நான் கூறவில்லை—அரசாங்கத்தின் கருத்தும் அது அல்ல. ஆனால் இந்தத் திட்டத்தை இப்போது இருக்கிற

[8th March 1963

*Teachers Training (age limit)*

* 159 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that there is an order restricting the students of more than 25 years in getting admission in training schools for teachers; and

(b) whether the Government have any proposal to grant exemption to students who have worked in schools as untrained teachers for a period of one year and more, and to fix the age as 27 for their admission?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b): Under the Madras Educational Rules, the normal age-limit for candidates for admission in training schools is 25 and in the case of teachers employed in recognised schools for not less than three years, the age-limit is 35. The controlling authority has the discretion to relax these rules in special circumstances. There is no proposal with Government for fixing the age-limit as 27 for untrained teachers.

**திரு. கரு. சீமைச்சாமி:** ஸார், இப்போது 300 ஜனத்தொகை இருக்கிற கிராமங்களில் பள்ளிகள் திறக்க வேண்டியிருப்பதால் ஆசிரியர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே பயிற்சி பெறும் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. எவ்வளவு தேவைப்படு கிறதோ அந்த அளவுக்கு இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படும்.

**திரு. எஸ். முருகையன்:** வேலூர் மத்திய சிறையில் நீண்ட நாள் தண்டனை அடைந்த பலர் 25 வயதுக்குப் பிறகு ஈ.எஸ்.எல்.சி. பாஸ் செய்திருக்கிறார்கள். அவர்கள் விடுதலை ஆன பிறகு இது போன்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர வயது நிர்ணயிக்காமல் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதுபற்றித் தனியாகக் கேள்வி வேண்டும்.

### பஞ்சாயத்து யூனியன் அலுவல்

* **160 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன் சம்பந்தமான வேலைகளை பஞ்சாயத்துத் தலைவரோ அல்லது பஞ்சாயத்து மெம்பர்களோ தனிப்பட்ட முறையில் செய்யக்கூடாதென உத்தரவிடப்பட்டதா?

(இ) ஆம் எனின், அவ்வாறு வேலை செய்தால் அவர்கள் பதவி இழக்கக்கூடும் எனவும் உத்திரவிடப்பட்டதா?



8th March 1963]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b): The Government have only clarified that, as the statutory provision under section 26(d) of the Madras Panchayats Act, 1958 stands, the Presidents of Panchayats undertaking the execution of Panchayat or Panchayat Union works in their individual capacity will stand disqualified and that the works should not, therefore, be entrusted to them.

**திரு. செ. சதாசிவம்:** இந்த விதியின் கீழ் நம் மாநிலத்தில் எந்த பஞ்சாயத்துத் தலைவராவது அல்லது பஞ்சாயத்து யூனியன் தலைவராவது நீக்கப்பட்டிருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

*E.S.L.C. Examination*

* 161. Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of students appeared for the E.S.L.C. Examination; and

(b) the percentage of pass during the academic year of 1961–62 in Ramanathapuram district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Madras State 44626—Ramanathapuram district 3,413; and

(b) 56·4 per cent.

**திரு. எஸ். மாதவன்:** செவென்த் ஸ்டாண்டர்டு படிப்பவர்களுக்கும் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை போல் ஒரு பொதுத் தேர்வு வைக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு நோக்கம் இப்பொழுது இல்லை.

**திரு. ம. கமலநாதன்:** ஈ.எஸ்.எல்.சி. தேர்வு முறை ஒழிக்கப்பட்டு, உயர் துவக்கப் பள்ளிகளில் 6-வது, 7-வது படிக்கும் மாணவர்களுக்கு அரசாங்க ஆணைப்படி பொதுத்தேர்வு முறை வேண்டாம் என்று சொன்னதினாலே, தரம் குறையுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்பொழுது கல்வி முறை ஆரம்ப வகுப்பிலிருந்து உயர்நிலை கடைசி வகுப்பு வரையிலே ஒரு இணைக்கப்பட்ட திட்டமாக இருக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்து. ஆகையினால், நடுவிலே ஒரு பொதுப் பரீட்சை வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. ஆ. தங்கவேலு:** ஈ.எஸ்.எல்.சி., எஸ்.எஸ்.எல்.சி., பரீட்சைகளில் தவறிய மாணவர்களுக்கும், பிரைவேட்டாக ஆசிரியர்

[8th March 1963

பயிற்சி பரீட்சை எழுதி தவறியவர்களுக்கும் பொய் சர்டிபிகேட் வழங்கப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி பொதுவாகக் கேள்வி கேட்டால் என்னிடம் தகவல் ஒன்றுமில்லை விடையளிக்க.

### குடிநீர் வழங்குதல் (இராசிபுரம்)

* 162 **கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பனைமரத்துப்பட்டியிலிருந்து இராசிபுரம் நகராட்சிக்குக் குடிநீர் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவின் (G.O. No. 1618, Health, dated 12th July 1962) மீது மாவட்ட ஆட்சியாளர் தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டாரா?

(இ) அவ்வேலை துவங்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) இல்லை.

(இ) சர்க்கார் இராசிபுரம் நகராட்சிக்கு குடி நண்ணீர் வழங்கும் திட்டத்துக்காக ரூபாய் 25,000 கடனாகக் கொடுத்திருக்கிறது.

**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** இந்த வேலை எப்பொழுது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இப்பொழுது நான் இந்த வேலையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—PRESENTATION OF THE REPORTS OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI T. M. NALLASAMY : Mr. Speaker, Sir, I rise to present the First Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on State Transport (Nationalised) and the Second Report of the Committee on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Small Scale Industries.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1963-64-*cont.*

MR. SPEAKER : The general discussion on the Budget will be continued. The hon. Member, Sri Chiranjeevulu Naidu will now speak.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I would like to say a few words on the Budget for 1963-64 presented before this House. The Budget has to be welcomed, inasmuch as no addditional taxation measures have been proposed in the Budget. But on the eve of the presentation of this Budget, the Bill relating to the levy of additional wet assessment proposed in the last Budget was passed and its effect would be felt by the ryots only in the coming year and they will only feel that this additional levy on wet assessment has been proposed only in this Budget.

Coming to the Budget Estimate for 1963-64, it was estimated that the revenue would come to the tune of about Rs. 127 crores. Last year's revenue had been estimated at about Rs. 120 crores. Now we see an additional revenue of about Rs. 7 crores, though additional taxation measures have not been proposed in this Budget. But the taxation measure proposed to tax lands in urban areas and the additional levy on wet assessment would be felt by the urban and rural population. Before the presentation of the Budget, there was a feeling of uncertainty in the minds of the people in the rural areas. It was felt in the rural areas that a word would be mentioned in the Budget speech about the misery and plight of the people in the rural areas with regard to fall in prices of paddy and the poor yield and also the sufferings of the agriculturists in getting purchasers for the produce they have produced. But nothing has been mentioned about it. Sir, our country is an agricultural country and a sizable amount of the Budget is earmaked for agriculture and top priority has been given to it. Our country has always been facing a sort of deficit in foodgrains but now their prices have fallen. The ryots are feeling that the fall in prices is not conducive to the proper working of agriculture and that they have been left out without any protection from the Government. Therefore it is up to the Government to see that they give protection to them and encourage them to continue their agricultural occupation by giving certain remissions. But no mention has been made about it in the Budget speech of the Hon. Minister for Finance. Now really there is a serious setback to agricultural production and agriculturists are not well off economically and they are the worst-hit people due to the fall in prices of paddy. There is a feeling and confusion among the people in the rural areas whether it would be economical and safe to produce paddy and whether they would be able to compete with the producers of other commodities. That is the position we are seeing to-day in the villages. So, some relief measures should be taken by the Government at least to see that they purchase their produce immediately. Now revenue collections are going on and the ryots feel it very difficult to pay the land

தேவைக்குத் தக்கவாறு எப்படி மாற்றி அமைப்பது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர் :** தலைவர் அவர்களே, சமீபத்தில் 23-2-63-ல் திருநெல்வேலியில் தமிழ் நாடு ஆதாரக் கல்வி மாநாடு நடைபெற்று, அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கின்றனவா ? அவைகளைப்பற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அடுத்த மாதம் ஒன்றிரண்டு தேதிகளில் இந்த மன்றத்தில் கல்விக்கொள்கை பற்றிப் பேச இருக்கிறது. அதற்கு முன் திரு. அரியநாயகம் அறிக்கையை இந்த மன்றத்தில் சமர்ப்பிக்க கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை செய்யப்பட்டு முடிந்தவுடன் அது மன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் :** இப்போது நம் ராஜ்யத்தில் ஆதாரக் கல்விப் பள்ளிகளில் நூல் நூற்பு, நெசவு ஆகியவைகளை மட்டும் ஆதாரத் தொழிலாக வைத்திருப்பதால் எல்லாப் பள்ளிகளிலும் வெற்றிகரமாக நடத்துவது கஷ்டமாக இருக்கும் என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? நூல் நூற்பு, நெசவு இவைகளைப் போல விவசாயம், பாட்டரி, தச்சுத் தொழில் இது போன்ற மற்ற தொழில்களை நல்ல முறையில் ஆரம்பித்தால் ஆதாரக் கல்வி வெற்றிகரமாக நடைபெறும் என்று சர்க்கார் அதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** நூல் நூற்பதை மட்டும் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை, மற்ற தொழில்களையும் வைத்துக்கொள்ளலாம் என்று சில நிபுணர்கள் கருதுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளைப்பற்றி மறுபரிசீலனை செய்யும்போது, குறைந்த பட்சம் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு அப்பியர் ஆனவர்களுக்கு மட்டும் இடம் கிடைக்கும் என்பதை மாற்ற சர்க்கார் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பயிற்சிப் பள்ளிகளில் இப்போது இருக்கிற தகுதி, யோக்கியதாம்சம் இவைகளை மாற்றுவதாக உத்தேசம் இல்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், ஆதாரப் பள்ளிகளில் நூல் நூற்கிறார்கள் மாணவர்கள். நூலை யார் விற்கிறார்கள் ? அந்தப் பணம் யாருக்குப் போய்ச் சேருகிறது ? பஞ்சு வாங்குவதற்கு மட்டும் மாணவர்களிடத்திலிருந்து பணம் வசூலிக்கிறார்கள். நூலை விற்கும் பணத்தை என்ன செய்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நூல் விற்கப்படுகிற பணம் கணக்கில் சேருகிறது—அரசாங்கக் கணக்கில். எந்த முறையில் செய்யப்படுகிறது என்பதைப்பற்றி தனியாகக் கேள்வி வேண்டும்.

## 'கிராமப்பணிகள் டிப்ளமா' படிப்பு

*158 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து பின்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோயம்புத்தூர், ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயம் நடத்தும் 'கிராமப் பணிகள் டிப்ளமா' படிப்பின் கீழ் 'கூட்டுறவு' பாடத்தைப் படித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பிற்கு விசேஷ வசதிகள் ஏதேனும் தரப்பட்டுள்ளனவா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சென்னைக் கூட்டுறவுப் பணி (Madras Co-operative Service) சென்னைக் கூட்டுறவுத் துணைப் பணி (Madras Co-operative Subordinate Service) ஆகியவற்றில் நியமிக்கப்படுவதற்கு நிர்ணயித்துள்ள கல்வித் தகுதிகளுக்கு, உயர்தர கிராமக் கல்வி சம்பந்தமான தேசீயக் கவுன்சில் (National Council for Rural Higher Education) வழங்கும் "ரூரல் சர்வீஸ் டிப்ளமா" இம்மாநிலத்திலுள்ள ஒரு பல்கலைக் கழகம் அளிக்கும் முதல்தரப் பட்டத்திற்குச் சமம் என்று அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. எனவே, கோயம்புத்தூர் ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயத்தினர் நடத்தும் "ரூரல் சர்வீஸ் டிப்ளமா" வகுப்பில் "கூட்டுறவினை" ஒரு பாடமாக எடுத்துப் படித்த மாணவர்கள் மேற்சொன்ன பணிகளில் நியமிக்கப்பெறத் தகுதி பெறுகிறார்கள்.

**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** ஸார், இது வரையில் எவ்வளவு பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் என்று அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இப்போது என்னிடத்தில் அந்தத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் கொடுக்கலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கோயம்புத்தூர் பயிற்சிப் பள்ளியில் சோஷல் எடுகேஷன் டிப்ளமா வைத்திருப்பவர்களை அரசாங்கத்தில் நேரடியாக உத்தியோகத்தில் எடுத்துக்கொள்வதில்லை என்று உத்தரவு போட்டிருக்கிறார்களா ? அவர்களுக்கு எந்தெந்த விதத்தில் மாற்று வேலை கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** போடப்பட்டிருக்கிற உத்தரவு கோவாப்பரேஷன் சம்பந்தமாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

[Sri C. Chiranjeevulu Naidu] [8th March 1963

revenue. Also June is fast approaching and they have to repay the loan amount taken from different co-operative societies. I understand that there is a proposal to purchase paddy from the millers but I suggest that it may be done through the marketing societies and wholesale stores. If that is done, it will be a sort of relief to them and also middlemen cannot exploit them. Also the work of procuring paddy may be entrusted to the marketing societies and central stores.

Regarding the Budget, I would like to say one or two words. Prohibition, mid-day meal and old-age pension schemes are the most notable schemes and we accept that they must be there. They are all social welfare schemes and everything depends upon the successful working of them. The prohibition scheme is a good scheme and it should be implemented effectively. So also the grants for the mid-day meal scheme have to be properly utilised and the Government should see that they go to the people concerned and not go to benefit certain classes of people. For the old-age pension scheme, a provision of Rs. 122 lakhs has been made in this Budget. I hope that it would not be a surprise if it goes to Rs. 2 crores. There are still more applications for old-age pension to be considered, scrutinised and granted. In this connection, I wish to point out that in granting the old-age pension, rules may be framed so as to facilitate the officers to accord the benefit of the pension to the real and needy person.

Regarding secondary education, it is stated that the secondary education would be brought under the control of the District Educational Officers who are to be called as Special Educational Officers and also under the over-all control of the Director of Public Instruction. But I want to point out that to-day some of the schools which are under the control of the Director of Public Instruction are not satisfactorily working. With due regard to District Educational Officers I would like to say that their attitude is most indifferent in certain aspects. When they come to the villages, they are not co-operating with Panchayat or Panchayat development activities. Their attitude has become most intolerable in certain areas. They do not co-operate with developmental activities that are now being carried on in the villages, viz., panchayat development activities. This aspect might be kindly considered. The Collector has now become the Inspector of Local Administration in the district and as such secondary education which has been hitherto under the control of district boards (which had now been abolished) might be entrusted to the Collector. We had entrusted elementary education to Panchayat Unions and I think there might not be any insuperable difficulty in entrusting secondary education to the control of Collector. This aspect might be considered. Let not the management and control of secondary education be in the charge of one department. That would be an anomaly. I think Government might consider this aspect of the matter.



8th March 1963] [Sri C. Chiranjeevulu Naidu]

Regarding acquisition of lands in Red Hills and Sholavaram areas, agriculturists in the area have come forward with a proposal that they would give up their irrigation rights to those lands. But they had pleaded that they need not be deprived of their lands. Those lands are fertile lands and could be well irrigated by pumpsets. The position that isprevailing today is that if these agriculturists are deprived of their lands, the rehabilitation of those agriculturists would become a problem and they would be put to much hardship. When they are prepared to give up their irrigation rights and only want to retain their ownership right over the lands, it is but just and reasonable to consider this aspect of the matter. I request Government to consider the plea of these agriculturists and help them.

With these words, I conclude my speech. Thank you, Sir.

9-30 a.m.

* **திரு. தோ. மு. நல்லசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே,
1963-64-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை நமது கனம் நிதி
அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார். அவர் சமர்ப்பித்
திருக்கிற இந்த நிதி நிலை அறிக்கை பரிபூரணமாக வரவேற்கத்
தக்கதாக இருக்கிறது என்பதை இந்தப் பக்கத்திலுள்ளவர்கள்
மட்டுமல்ல, எதிர் தரப்பிலுள்ளவர்களும் மறைமுகமாகவே
வரவேற்று கடந்த நாட்களாக பேசியே வந்திருக்கிறார்கள்.
அப்படிப் பேசி வந்ததை நாம் கடந்த சில நாட்களில் பார்த்து
வந்தோம். அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்து சமாளிக்க வேண்டும்
என்பதிலும் மக்களுக்கு ஏற்பட வேண்டிய சமூக, பொருளாதார
அபிவிருத்தி திட்டங்களைத் தொடர்ந்து அமுல் படுத்துவதிலும்
நம்மிடையே அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. இப்பொழுது
இருக்கக்கூடிய காரியங்கள் எல்லாம் வெற்றிகரமாக நடைபெற
வேண்டுமென்றால் போதிய தியாகங்களைச் செய்ய நாம் தயாராக
இருக்க வேண்டியதாக இருக்கிறது. இதிலும் நம்மிடையே
கருத்து வேற்றுமை கிடையாது என்பதைக் கடந்த சில நாட்க
ளாக நடந்த விவாதத்தில் கனம் அங்கத்தினர்கள் கூறியதை நாம்
கவனித்தோம். அம்மாதிரி பாதுகாப்புப் பொறுப்பை நம் அரசியல்
அமைப்பின்படி மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.
அப்படி பாதுகாப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற காலத்தில் அந்தப்
பாதுகாப்புக்குத் தேவையான நிதி வசதியைப் பெற வேண்டும்
என்பதற்காக புதிய வரிகளைப் போட்டிருக்கிறார்கள். அதை நாம்
எல்லோரும் பெரு மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்
என்பது ஒருபுறம் இருக்கிறது. நமது மாகாண அரசாங்கத்தின்
வரவு செலவு திட்டம் தயாரித்திருக்கிறது புதியதாக இருக்கிறது
என்பதை நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய
உரையில் குறிப்பிட்டிருக்கிறார். உள்நாட்டு போலீஸ் துறையை
பலப்படுத்துவதிலும், ஹோம் கார்டுகளை அமைப்பதிலும்,
நம்முடைய அரசாங்கத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் படிக்கக்
கூடிய மாணவர்களுக்கு மாணவர் படைகளை விஸ்தரிப்பதற்கும்
இரண்டு கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் மத்திய சர்க்காரிடமிருந்து பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்று நமக்குக் கடனாகவும், மானியமாகவும் கிடைக்க இருந்ததில் நான்கு கோடி பத்து லட்சம் ரூபாய் குறைந்து வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே ஆறு கோடி 65 லட்சம் ரூபாய்க்கு, வருமானக் குறைவை நாம் பல புதிய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதில் குறைத்துக்கொண்டு வேறு இனங்களில் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நிலைமை இன்னும் மோசமாகிக்கொண்டு போனால், அல்லது இதே நிலைமை இன்னும் நீடிக்குமானால் இன்னும் அதிகப்படியான சிரமங்களுக்கு நாம் ஆளாக வேண்டியதாக இருக்கும் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். கடந்த அக்டோபர் மாதம் 19-ம் தேதி சீனன் நம் நாட்டின் மீது ஆக்கிரமிப்பு நடவடிக்கை எடுத்துக்கொண்ட பிறகு இந்த சட்டமன்றத்தில் அநேகம் அங்கத்தினர்கள் தன்மானத்துடனும் உணர்ச்சியுடனும் நாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்துடனும் அப்படி நாட்டைப் பாதுகாக்கக் கூடிய நேரத்தில் எந்த விதமான தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். உடல், பொருள், ஆவி முதலிய எதையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பதாகவும் சொன்னார்கள். அப்பொழுது இங்குள்ள எல்லோரும் நல்ல உணர்வு பெற்றோம் என்பதையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நாட்டுப் பாதுகாப்பைத் தலையாய கடமையாகக் கொண்டு தன்மானத்தை தலைமைக் கடமையாகக் கொண்டு பேசினோம். அப்பொழுது எந்த வரி போட்டாலும் அதைக் கொடுப்பதாகவும், உடல், பொருள், ஆவி முதலிய எல்லா வகையிலும் உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் சொன்னார்கள். இதை நாம் எல்லோரும் அப்பொழுது கவனித்தோம். ஆனால் ஒரு மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் பேசும்போது "மண் போச்சு, பொன் போச்சு, பெண் போச்சு, எல்லாம் போச்சு" என்றெல்லாம் பேசினார்கள். நம்முடைய அரசாங்கம் தற்காப்புக்காக எடுக்கப்படுகிற நடவடிக்கைகளுக்கு செலவு செய்யவேண்டும் என்பதற்காகத்தான் வரியாகக் கேட்கிறார்கள். ஆனால் அந்நியனான சீனன் நம்முடைய சுதந்தரத்தையே வரியாகக் கேட்கிறான். இதை நாம் கருத்தில் கொண்டு போடக்கூடிய வரியையும் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும். இன்னும் மற்ற தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்பதையும், சிந்திக்க வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுதுள்ள நிலையில் திட்டங்களை மாற்றி அமைக்க முடியாத நிலையில் இருக்கிறோம். நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டபடி பல அபிவிருத்தி திட்டங்களை எடுத்து நடத்துவதற்கும் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். அத்துடன் தற்காப்பு முறையிலும் செலவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அத்துடன் பல அபிவிருத்தி திட்ட வேலைகளைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்



என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே நாம் பல இனங்களுக்கு பல தொகைகளை ஒதுக்கி இருக்கிறோம். அவைகளைக் குறைத்துக்கொண்டு இன்னும் அதிகப்படியாக ஒதுக்கி அபிவிருத்தி வேலைகளையும், பாதுகாப்பு வேலைகளையும் செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். அந்த முறையில் குறைக்க வேண்டியதைக் குறைத்து அதிகப்படுத்த வேண்டிய இனங்களுக்கு அதிகமாக ஒதுக்கி அந்த முறையில் அதிகப்படியான கவனமும் செலுத்திக்கொண்டு வருகிறோம். அந்த முறையில் இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது அது வரவேற்கக் கூடியதாகத்தான் இருக்கிறது. அதற்கு உதாரணமாக இப்பொழுது கட்டிட வேலைகளைச் செய்யாமல் அதற்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையை எடுத்து ஆர்டினன்ஸ் பாக்டரி முதலியவைகளுக்குச் செலவு செய்ய ஒதுக்கியிருக்கிறார்கள். சுற்று உலா மாளிகைகள் கட்டுவதையும் பூங்காக்கள் அமைப்பதற்கு செலவு செய்வதையும் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை எடுத்து ஆர்டினன்ஸ் பாக்டரி அமைப்பதில் செலவழிக்க ஒதுக்கி இருக்கிறார்கள். தளவாடங்கள் வாங்குவதிலும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தளவாடங்களை அதிகப்படியாக உற்பத்தி செய்வதற்கு செலவு செய்ய ஒதுக்கி இருக்கிறார்கள். இவைகளைப் பார்த்தால் இந்த நிதி நிலை அறிக்கை ரொம்பவும் வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. இந்த நிலையில் இந்த வரவு செலவு திட்டத்தைக் கவனித்தால் இதில் ஒரு புது திருப்பம் இருப்பதாகத் தெரிய வருகிறது. கடந்த காலத்தில் இருந்ததற்கு இப்பொழுது வேறு விதமாக இருப்பதாகத் தெரிய வரும். பல இனங்களில் குறைத்தும் பல இனங்களில் செலவை அதிகப்படுத்தியும் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். ஒரு புதிய லட்சியத்தை அடைய வேண்டும் என்ற முறையில் இது தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றே சொல்லலாம்.

விவசாயத்தைப் பொறுத்த மட்டில் நமது மூன்றாவது ஐந்தாண்டு திட்ட கால முடிவுக்குள் இன்னும் உபரியாக பதினேழு லட்சம் டன் உணவுப் பொருள் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதே மாதிரி தமிழ் நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளிலும் கூட்டுறவு சங்கங்களிலும் தேவையான பஞ்சு சப்ளை செய்யக்கூடிய அளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. கரும்பு ஆலைகளுக்கு வேண்டிய கரும்பு சப்ளை செய்வதற்கு போதிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போவதாகவும் சொல்லப்பட்டது. அதைப் போலவே எண்ணெய் வித்துக்களை சப்ளை செய்வதில் வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்வதாகவும் சொல்லி, வேண்டிய முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, உர வகைகள், ரசாயன உரங்கள், கம்போஸ்ட் உரங்கள், பசுந்தாள் உரங்கள், இவைகளைக் கொடுப்பதற்கு முயற்சிப்பதோடு, நெல், கரும்பு, பருத்தி, கடலை இவைகளுக்காக பாக்கேஜ் திட்டங்களைப் போட்டு அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கியிருப்பதைக்

13788



குறித்து மகிழ்ச்சி அடைகிறேன் என்றாலும், நாம் உடன்டியாக விவசாயத் துறையிலே இயந்திர சாதனங்களை அதிக அளவிலே பயன்படுத்த முன் வரவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது கிராமப் புறங்களிலே இருக்கக் கூடிய ஒரு நிலைமை என்னவென்றால், நம்முடைய எண்ணமே தொழில் துறையைப் பெருக்க வேண்டுமென்று இருப்பதால் விவசாயத் துறையில் குறைந்த வருமானம் கிடைக்கக்கூடியவர்களை அதிகமாக தொழில் துறைக்கு இழுத்துக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது வரவேற்கக்கூடிய அம்சம்தான். மேலும் இப்பொழுது அவசரக் கால நிலைமையை ஒட்டி, பட்டாளத்திற்கு ஏராளமானவர்கள் போவதையும் நாம் பார்க்கிறோம். அதோடு, இன்னொரு புதிய சூழ்நிலையும் உருவாகி வருவதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தற்பொழுது, படித்தவர்கள் விவசாயத் தொழில் செய்வதை குறைவாகக் கருதுகிறார்கள். ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி, விவசாயக் குடும்பத்திலேயே பிறந்தவர்கள் கொஞ்சம் படித்து, நாகரீக வாழ்க்கையில் ஈடுபடுவதால், விவசாயம் செய்வதற்கே கூச்சப்படுகிறார்கள். இப்படி பலர் தொழில் துறைக்குப் போவதாலும், யுத்த நெருக்கடியின் காரணமாக பட்டாளத்தில் சேருவதாலும், கிராமத்திலுள்ளோரின் எண்ணிக்கை குறைந்து வருவதாலும், வருகிற காலத்திலே விவசாயத்திற்கு ஆட்களே இல்லாத நிலைமை ஏற்படுமோ என்று நான் அஞ்சுகிறேன். விவசாயத் துறையில் நமது லட்சிய அளவை அடைவதற்குக் கூசாமல் இயந்திர சாதனங்களை நாம் மேற்கொள்ள வேண்டும். அப்படி மேற்கொள்ளும் முயற்சியில் சர்க்கார் கவனம் செலுத்தவில்லை என்று நான் நினைக்கிறேன். விவசாயம் செய்வதற்கு டிராக்டர்கள் மிகவும் அவசியம். இன்று டிராக்டர்களின் விலைவாசியைப் பார்த்தால் வெகு காலத்திற்கு நாம் அவற்றைப் பயன்படுத்த முடியாதோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. ஆகவே சீக்கிரத்தில் அதிகமான அளவுக்கு இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தும் முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு பாசனம் சம்பந்தமாகச் சொல்லும்பொழுது 240 புதிய ஆயில் எஞ்சின்கள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த காலத்திலும் நிறையக் கொடுத்திருக்கிறோம். ஆனால் இந்த இயந்திரங்கள் எல்லாம் சரியான முறையில் ஓடவேண்டும். மின்சாரம் சரியாகக் கிடைக்காத இடங்களிலே, இந்த இயந்திரங்களை நம்பித்தான் வாழ வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த ஆயில் எஞ்சின்கள் நியாயமான விலையில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது போட்டிருக்கும் விலைக்கு வாங்கினால் கட்டுபடி ஆகாது.

அதே சமயத்தில் இடைக் காலத்தில் ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் ப்ரோக்ராம் ஒன்றைப் போட்டு தமிழ் நாட்டில் உள்ள சில ஜல ஆதாரத் திட்டங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், நொய்



D V21, 3, N63 N163.9

யல் ஆறு, குடகனாறு, கொள்ளி மலையிலிருந்து வருகிற நதி, ஆகிய பல நதித் திட்டங்கள் ஆராயப்பட்டு கைவிடப்பட்டிருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட நகல் அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தத் திட்டங்களை நடத்துவதற்கான வழிவகைகளை . ஆராய்ந்து, அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்: கனம் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசும்பொழுது, இந்த ஆண்டில் புதிய வரிகள் ஒன்றும் போடவில்லை என்று எல்லோரும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ஆனால் நான் ஒன்று சொல்கிறேன். புதிய வரிகள் போடாததற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்ற கருத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை. புதிய வரிகள் போட்டிருந்தாலும் கூட இந்த நிதிநிலை அறிக்கையைக் குறித்து மகிழ்ச்சி தெரிவிக்க வேண்டியது நம்முடைய கடமை என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், வெள்ளமுண்டான் சமுத்திரம் என்ற குளம் சுமார் 20 ஆண்டுகாலமாக தண்ணீரே இல்லாமல் இருந்தது. சமீபத்தில், ஒரு மாதத்திற்கு முன்புதான் 1,96,000 ரூபாய் சர்க்கார் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். இப்பொழுதுள்ள அவசர நிலைமையில்கூட இந்த மைனர் இரிகேஷன் ஸ்கீமை சாங்ஷன் செய்ததற்காக என்னுடைய தொகுதியிலுள்ள மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பேற்பட்ட நிலைமையில், இந்தப் பணம் எங்கிருந்து வந்தது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஒரு ஹைஸ்கூல் இருந்த இடத்திலே மூன்று ஹைஸ்கூல்கள் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். நான்கு வருடங்களிலே கிட்டத்தட்ட 110 பள்ளிக்கூடங்களை சாங்ஷன் செய்திருக்கிறார்கள். மின்சாரத்திற்கு ரூ. 25 லட்சம் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து வந்தது. அதைப் பற்றி நினைப்பதற்கு நமக்குப் பொறுப்பில்லையா? வெல்பேர் ஸ்டேட்டிலே பணம் இல்லாமல் இருந்தால் எப்படி நல்ல காரியங்களைச் செய்ய முடியும்? ஆகவே நல்ல காரியங்களுக்காக வரிகள் போடுவதில் என்ன தவறு இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்களும், மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். புது வரி போடாததினாலே நன்றியைச் செலுத்துகிறோம் என்று சொன்னாலும், புது வரி போட்டாலும் நன்றி செலுத்த வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வரிப் பணத்திலிருந்துதான் சர்க்கார் பல நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்பதை நாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், குடகனாறுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கனம் அங்கத்தினர் திரு. நல்லசாமி அவர்கள் சொன்னார்கள். நானும் அதை வற்புறுத்துகிறேன். இந்த நெருக்கடி நிலையில் சொல்லக்கூடாதுதான்,

[திரு. இராம. அரங்கண்ணல்] [8th March 1963

மக்களும், கிராமப் புறங்களில் வாழ்கின்ற விவசாய மக்களும், எல்லாப் பொது மக்களுமே இடர்ப்பாட்டுக்கு ஆளாகி அவதிப்படுகிறார்கள் என்பதையும் நம்முடைய அரசாங்கமே ஒப்புக்கொண்டிருக்கிறது. இருந்தும், மேலும் மேலும் அதிக வரியைப் போடும் காரணத்தால், விலைவாசிகள் இன்னும் அதிகமாக உயர்வதற்குக் காரணங்கள் அமைந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் விலைவாசிகள் ஏறினால் என்ன? வரிகள் அதிகமாகப் போடப்பட்டால் என்ன? நாமெல்லாம் நாட்டைக் காக்கவேண்டாமா? என்று சொல்லப்படுகிறது. நாட்டைக் காக்க வேண்டும் என்ற உணர்ச்சி, மற்றக் காலத்தைவிட, சுதந்திரப் போராட்ட நாட்களைவிட இன்றையதினம் அதிகமாகப் பெருகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதை நம்முடைய அமைச்சர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நாட்டிலே இருக்கும் தாய்மார்கள்கூட தங்களுடைய கழுத்திலே இருக்கிற தாலியைக் கழற்றிக் கொடுத்து எப்படியாவது கம்யூனிஸ்டுச் சீனனை விரட்டியடிக்கவேண்டும் என்ற நல்ல உற்சாகத்தைக் கொண்டிருக்கிற காட்சியைக் காணுகிற நேரத்தில் நாட்டில் இருக்கும் அத்தனை பேரும் எல்லாத் தியாகங்களையும் செய்வதற்கு இன்றையதினம் தயாராக இருக்கிறார்கள். மக்களை பார்த்து 'தியாகங்கள் செய்யவேண்டும்' என்று சொல்லும் நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்களும் தங்களுடைய 'பிடிவாதத்தை' தியாகம் செய்வதற்குக் கொஞ்சம் பழகிக்கொள்ளவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் என்ன என்ன உரிமைகள் என்கிற அந்தப் பட்டியலில் மாநில அரசுக்கு என்று சில இனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, மாநில அரசுக்கு என்று கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், மராமத்து போன்ற இனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் பொதுவாக, 'கன்கரண்ட் லிஸ்ட்'டில் 44 இனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இங்கே எப்படி கல்வி இலாக்கா இருக்கிறதோ அதேபோல் மத்திய அரசிலும் ஒரு கல்வி இலாகாவும், இன்னும் அது போன்றே சுகாதார இலாகா, மராமத்து இலாகா, விளம்பர இலாகா என்று டில்லியிலும் இருந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய சென்னை பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்களும் ஒரு தடவை பேசியபோது, 'சாதாரண ஆரம்பக் கல்வி வரையிலும் டில்லியில் இருக்கிற கல்வி இலாகா தலையிடுகிறது' என்பதைக் குறிப்பிட்டிருந்தார்கள். இப்படி பற்பல விதங்களில் மாநில அரசினுடைய உரிமைகளில் மத்திய அரசு தலையிடுகிற நிலைமை இருக்கிறது. இதைப்பற்றி நான் பேசவேண்டிய இடம் பாராளுமன்றம் என்றாலும், டில்லியில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கும் நிதி அமைச்சர் அவர்களுக்கும் செல்வாக்கு அதிகமாக வளர்ந்து வருகிற காரணத்தால், டில்லி அரசினிடம் சொல்லி, இந்தப் பிடிவாதமான கொள்கைகளையெல்லாம் விட்டு, இதற்காக அங்கே ஏராளமான செலவு செய்கின்ற அந்த வகைகளையெல்லாம்



8th March 1963] [திரு. இராம. அரங்கண்ணல்]

குறைத்துக்கொள்ளும் அளவு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த எமர்ஜன்ஸி நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வரப்போகிற நாட்கள் சாதாரண நாட்களாக இருக்க முடியாது. ஏராளமான வரியை நாம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது போடப்பட்டிருக்கும் வரி அத்தனையும் அடுத்த ஆண்டு நாம் குறைத்துவிட முடியும், அல்லது அதற்கு அடுத்த ஆண்டு நாம் குறைக்கப் போகிறோம் என்று சொல்ல முடியாது. வரியை ஒரு தடவை போட்டுவிட்டால் பிறகு குறைப்பது என்பது கடினம். அது மட்டுமல்ல. சைனாக்காரன் தொடுத்திருக்கின்ற இந்தப் போர் ஓரிரு ஆண்டுகளில் முடிந்துவிடும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. எதிர்காலத்திலும் நாம் எப்பொழுதுமே எதிர் பார்ப்பதற்கில்லை. எதிர்காலத்திலும் நாம் எப்பொழுதுமே ஒரு பலமான ராணுவத்தையும் நல்ல பாதுகாப்பையும் வைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். நல்ல ராணுவத்தையும் நல்ல பாதுகாப்பையும் வைக்கவேண்டுமென்று சொன்னால், ஏராளமான பணம் நம்முடைய அரசாங்கத்திற்குத் தேவைப்படும். அந்தப் பணத்தையெல்லாம் நாம் எதிர்காலத்தில் எப்படிப் பெற முடியும் என்பதை யோசிக்கவேண்டும். பொருளாதார நிபுணர்கள், 'இந்தியாவில் இருக்கும் ஆட்சியினர் எந்த அளவுக்கு வரிகளைப் போட முடியுமோ அந்த அளவுக்கு ஏராளமான வரிகளைப் போட்டிருக்கிறார்கள்' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இனிமேல், வரி என்று சொல்லி மக்கள் தலையில் கை வைப்பதற்கு வழிவகை இன்றையதினம் இல்லை. நாம் நல்ல பல திட்டங்களை உருவாக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆந்திரா முதல் அமைச்சர் அவர்கள், கிருஷ்ணா நதித் தண்ணீரை நமக்குத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. கிருஷ்ணா நதித் தண்ணீரைக் கொண்டுவரவேண்டுமென்றால், சென்னையில் நாற்றமெடுத்து ஓடிக்கொண்டிருக்கிற பக்கிங்காம் கால்வாய்த் திட்டத்தை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். பக்கிங்காம் கால்வாய்த் திட்டத்தை நாம் எடுத்துக்கொண்டால், கிருஷ்ணா நதியிலிருந்து வருகிற தண்ணீரை சென்னை நகரத்திற்குக் கொண்டுவருவதோடு, தென்னாற்காடு மாவட்டத்திலிருக்கும் கெடிலம் நதி வரையில் கொண்டுசெல்லத்தக்க வகையில் பக்கிங்காம் கால்வாய் பயன்படக்கூடும். அதேபோல், சென்னையில் இருக்கும் கூவம் நதிக்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அதுவும் நம்முடைய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இதுபோல் பற்பல புதிய திட்டங்களையெல்லாம் வகுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்தத் திட்டங்களையும் நாம் வகுக்கவேண்டும். அவைகளையும் நாம் நிறைவேற்றவேண்டும். அதே சமயத்தில் போர்ப் பிரச்னையையும் கவனிக்கவேண்டும்.

இந்தப் பிரச்சினைகளோடுகூட அடிக்கடி புதிய பிரச்சினைகளும் நமக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு, தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம்,

[திரு. எஸ். நஞ்சுண்டராவ்] [8th March 1963

இருந்தாலும் மக்கள் அதை விரும்புகிறார்கள். மேலும் குஜிலியன் பாரையில் ஒரு சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ் வைக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். திண்டுக்கல்லிலே ஒரு ஆர்ட்ஸ் கல்லூரியை வைக்க வேண்டுமென்று அந்தத் தாலூகாவிலிருக்கும் மக்களும பழனி தாலூகாவிலிருக்கும் மக்களும் விரும்புகிறார்கள். எமர்ஜென்ஸி நேரத்தில் இதைக் கேட்பது சரியில்லை என்று சொன்னாலும்கூட, மக்களுடைய விருப்பத்தை இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளிலாவது நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஐந்து நாட்களாக இந்த சபையில் விவாதம் நடப்பதைப் பார்த்தால், "Wolf and the lamb" கதை மாதிரி இருக்கிறது. "நீ குற்றம் செய்யவில்லை என்றாலும், உன் அப்பன் செய்திருப்பான் அல்லது உன் பாட்டன் செய்திருப்பான்" என்று சொல்லி ஓநாய் ஆட்டுக் குட்டியைத் தின்ற கதைபோல் இருக்கிறது. நமக்கு வோட்டுக்கொடுத்த மக்களை திருப்திப்படுத்துகிற நிலைமை எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால் அதற்காக பொறுப்பில்லாத வகையில் ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தால் அர்த்தம் இல்லை. இன்று நம் நாட்டில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமையில் மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டை எந்த விதத்திலாவது குறைக்க முடியுமா, அல்லது மாகாண சர்க்காரின் செலவை எந்த வகையிலாவது குறைக்க முடியுமா? கனம் ராஜாஜி அவர்கள் சொல்கிற மாதிரி எல்லாவற்றிற்கும் அமெரிக்காவிலிருந்து பணம் வர வேண்டும் என்று சொல்லக்கூடிய ஸ்பூன் ஃபீடிங் மனப்பான்மை இருந்தால் அது நல்லதொரு ஜனநாயக அரசாங்கமாக இருக்க முடியாது. எந்தச் செலவுக்கு பணம் வேண்டுமென்று சொன்னாலும், அதை மக்களே கொடுக்கவேண்டும். அந்த ஸெல்ப் ஹெல்ப் பிலாஸபியை நாம் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஆகவே, மத்திய அரசாங்க பட்ஜெட்டையோ அல்லது மாகாண அரசாங்க பட்ஜெட்டையோ பொறுப்பில்லாத முறையிலே குறைசொல்லிக்கொண்டிருந்தால் கண்டிப்பாக அர்த்தமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய பட்ஜெட்டைப் பற்றி அநேகமாக எல்லா அங்கத்தினர்களும் பேசினார்கள். நான்கூட அதைப் பற்றிப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. மண் எண்ணெய் வரியைப் பொறுத்தவரையில், ஏழை மக்களின் தலையில் கை வைத்து விட்டார்கள்; தங்கக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் பொற்கொல்லர்களின் தலையில் கை வைத்துவிட்டார்கள் என்றெல்லாம் பேசப்படுகிறது. இப்பொழுது நம் நாட்டில் இருக்கும் நிலைமை என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். தங்கக் கட்டுப்பாடு நல்லது, இந்த நேரத்தில் மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரிகள் எல்லாம் நியாயம்தான் என்று சொல்லுகிற அளவுக்கு இந்தச் சபையிலே இருக்கிற அங்கத்தினர்கள் அனைவரும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சென்ட்ரல் பட்ஜெட்டைப்பற்றி இங்கே யார் என்ன பேசினாலுங்கூட,



8th March 1963] [திரு. எஸ். நஞ்சுண்டராவ்]

அதற்கு நம் அரசாங்கம் இங்கே பதில் சொல்வது கஷ்டம். சென்ட்ரல் பட்ஜெட்டைப் பார்லிமெண்டில் 'அனௌன்ஸ்' பண்ணின பிறகு, ஒவ்வொரு ராஜ்ய அசெம்பிளியும் சென்ட்ரல் பட்ஜெட் மீது தம்முடைய கருத்துகளைச் சொல்ல ஒரு ஏற்பாடு இருப்பது நல்லது. சென்ட்ரல் பட்ஜெட்டில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கான யோசனைகளை ராஜ்ய அசெம்பிளிகளிடமிருந்து தெரிந்துகொள்வதற்கு சென்ட்ரல் கவர்ன்மென்டே இதற்கு ஒரு வழிவகை செய்தால் மிகவும் நல்ல முறையில் இருக்கும். இல்லையென்றால் பெடிஷன் கொடுப்பதன் மூலம் இதை நல்ல முறையில் செய்துகொள்ளவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இன்னும் ஒரே ஒரு சிறிய கருத்தைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகின்றேன். நம் அரசாங்கத்திலே ஸ்மால் ஸேவிங்ஸ் ஸ்கீமின் மூலம் போதுமான அளவு வசூல் ஆகவில்லை. இதன் மூலமாக சேமிப்பை வளர்த்தால் நலமாக இருக்கும். இதை ஒரு 'மாஸ் மூவ்மெண்ட்' ஆகக் கொண்டுவர வேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இதை மாஸ் மூவ்மெண்ட் ஆகக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லும் போது, இதுபோன்ற இயக்கங்களில் சட்டசபை அங்கத்தினர்கள் எல்லாம் உதவியாக இருக்கும் முறையிலே நடந்தால் நல்லது. இசையின் மூலமாக விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கனவு உலகத்திலே பேசிக்கொண்டிருந்தால் முடியாது. இசையின் மூலமாக விவசாய உற்பத்தியைப் பெருக்கலாம் என்றாலும், அதை இன்னும் ஆதார பூர்வமாக 'ப்ரூவ்' பண்ண முடியவில்லை. இசையின் மூலமாக விவசாயத்தைப் பெருக்கவேண்டுமென்பதிலே கவனம் செலுத்துவதைவிட, ஸ்மால் சேவிங்ஸ் ஸ்கீமின் மூலம் அதிக சேமிப்பைப் பெற முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **திரு. இராம. அரங்கண்ணல்:** மாமன்றத் தலைவர் அவர்களே, ஏழு ஆண்டுகளுக்கு முன்பு 56 கோடி ரூபாயாக இருந்து, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 96 கோடி ரூபாயாக ஆகி, கடந்த ஆண்டு 117 கோடி ரூபாயாக வளர்ந்து, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் 124 கோடி ரூபாயாக வந்திருக்கிறது. இந்த வளர்ச்சி, தம்முடைய அரசாங்கம் எந்த அளவுக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாளிலிருந்து வரிக் கொள்கையை அனுசரித்து வருகிறது என்பதை விளக்குகிறது! அதுமட்டுமல்ல, வரிகள் நிரம்பிய பட்ஜெட்டுகள் வந்தவுடன் விலைவாசி ஏறுகிற ஒரு சம்பவத்தை நாம் கண்டு வருகிறோம். பொருளாதார நிபுணர்கள் கூட, விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமே அரசாங்கங்கள் அனுசரிக்கின்ற வரிக் கொள்கை தான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டிலிருந்து விலைவாசியைக் குறைக்கவேண்டும் என்ற குரல் நாட்டிலே அதிகமாக எழுந்திருப்பதையும், விலைவாசிகள் ஏறியிருக்கிற காரணத்தால் நகர்ப் புறங்களில் வாழ்கின்ற மத்திய தர

[திரு. இராம. அரங்கண்ணல்] [8th March 1963

பொற்கொல்லர்கள் படும் அவதியை நாம் பார்த்தால்; பேசிய அத்தனை பேரும் கண்ணீர் வடித்தார்கள். பொற்கொல்லர்கள் மட்டுமல்ல, அவர்களைச் சார்ந்திருக்கும் துணைத் தொழிலாளர்களும் இன்றையதினம் அவதிப்படுகிறார்கள். திருச்சியில் இருக்கும் இருபதாயிரத்திற்கு மேற்பட்ட செயற்கை வைரத் தொழிலாளர்கள் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இருபத்தாறாயிரம் தொழிலாளர்களுக்கு மேல் ஜரிகை உற்பத்தியை நம்பி, நம்முடைய மாநிலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பதினாறு கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய திருக்கையாலேயே காஞ்சீபுரத்தில் ஒரு கூட்டுறவு சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அதிலே நாலாயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் இன்றையதினம் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் காரணமாக ஜரிகையின் விலை மார்க் ஒன்று 80 ரூபாயிலிருந்து 120 ரூபாய் வரை உயர்ந்திருக்கிறது. ஜரிகை வாங்க, கைத்தறி நெசவாளிகள் சென்றால், "நீங்கள் நூறு ரூபாய் பணம் கொடுத்து லைசன்ஸ் வாங்கினால்தான் கொடுக்கப்படும்" என்று சொல்கிறார்கள். அதன் காரணமாக காஞ்சீபுரத்தில் இருக்கும் கைத்தறி பட்டு நெசவாளிகள் அத்தனை பேரும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட புதிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. நம்முடைய கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் விவசாயிகள் தினம் ஒரு ரூபாய் கூலி பெறுவதாகச் சொன்னார்கள். நான்கூட கடந்த மாதம் கெஜட்டைப் பார்த்தேன். சில இடங்களில் ஒரு வேளை சோறும் 37 காசும்தான் விவசாயிகள் கூலியாகப் பெறுவதாகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமை வளர்ந்துவரும் நேரத்தில் வரிகள் போட்டு அதிகமான வருமானத்தை நாம் பெற்றுவிட முடியும் என்று கருத முடியாது. அரசாங்கமே வருமானத்திற்கு உரிய வழிகைகளைத் தேடவேண்டும். அதற்கான வழிகள் ஒன்றிரண்டு சொல்லி என் உரையை முடிக்கின்றேன்.

பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்கி 600 பஸ்களை இன்றையதினம் ஓட்டிக்கொண்டிருக்கிறோம். அதன் மூலம் சுமார் இரண்டு கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்று கனம் தொழிலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நாட்டிலே ஐந்தாயிரம் பஸ்கள் ஓடுகின்றன. அவற்றில் இருந்து ஏராளமான பணம் வருகிறது, அவற்றை ஏன் தேசியமாக்கத் தயங்க வேண்டும்?

அடுத்தபடியாக சென்னை நகரில் 250 பெட்ரோல் பங்குகள்
10-00 a.m. இருக்கின்றன. ஒரு நாளைக்கு மூன்று லட்சம் காலன் விற்பனை ஆகிறது. ஒரு காலனுக்கு மூன்று அணா லாபம் பங்குக்காரர்களுக்குக் கிடைக்கிறது. ஒரு நாளைக்கு பெட்ரோல் பங்கின் மூலம் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் தனிப்பட்ட முதலாளிகளுக்கு போகிறது. அந்த பங்குகளை அரசாங்கமே எடுத்துக்கொண்டு நடத்தினால் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் வரும்.



8th March 1963] [திரு. இராம. அரங்கண்ணல்]

அடுத்து தமிழ்நாட்டில் 1,028 சினிமா தியேட்டர்கள் இருக்கின்றன. 430 தியேட்டர்கள், 598 டூரிங் தியேட்டர்கள். இவற்றின் மூலம் எட்டு கோடி ரூபாய் வசூலாகிறது. இரண்டு கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வரியாகப் போகிறது. மீதி ஆறு கோடி ரூபாய் தியேட்டர் முதலாளிகளுக்கு போகின்றது. இதில் 430 சினிமா தியேட்டர்களையாவது ஏற்று நடத்தினால் நான்கைந்து கோடி ரூபாய் வருமானம் அரசாங்கத்திற்கு வரும். புதிய வரிகளை மேலும் மேலும் போட்டுக்கொண்டே போகாமல் அரசாங்கத்தின் வருமானத்தை இப்படி அதிகப்படுத்த முயற்சி செய்யலாம். இவற்றை எல்லாம் தேசியமாக்குவது என்றால் போதுமான பணம் வேண்டாமா, நஷ்ட ஈடு கொடுக்க என்று கேட்கலாம். எமர்ஜென்ஸி நிலைமை மற்ற எல்லாவற்றுக்கும் பயன்படுகிற இந்த நேரத்தில் இவற்றுக்கு அதைப் பயன்படுத்தி தேசிய வருமானம் உயரவும், நம் மாநில அரசாங்கத்தின் வருமானம் உயரவும் ஏன் முயற்சி செய்யக் கூடாது? எடுத்ததற்கெல்லாம் மக்களை வாட்டி வதைக்கின்ற நிலைமையை மாற்ற வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். வரும் நாட்கள் விளையாட்டு நாட்கள் அல்ல. வேதனையும், சோதனையும், கொடுமையும் நிறைந்த நாட்கள். ஆகவே வேடிக்கையாகப் பேசி வரிகளைப்போட்டு நாட்களைக் கழித்துவிடக்கூடாது என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. டி. பி. ஏழுமலை: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் இவ்வாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதை வரவேற்று என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சில அவசிய விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பொதுவாக நாட்டிலே பல திட்டங்களைப் போட்டு, அத்திட்டங்களின் சார்பாக நாட்டு மக்கள் நல்ல பயனை அடைகின்ற முறையில் செயல்பட்டு வருகின்றது. நல்ல திட்டங்கள் என்று சொல்கிற போது, திட்டங்களினால் பாதிக்கப்படுகிற மக்களையும் சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று நான் மிக்க பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், திட்டங்கள் "என்னுடைய தொகுதிக்கு வரவேண்டும், என்னுடைய தொகுதிக்கு வர வேண்டும்" என்று பல அங்கத்தினர்கள் இங்கே கேட்கிறார்கள்.

குறிப்பாக சென்னைக்கு அடுத்து இருக்கின்ற என்னுடைய தொகுதியும் கனம் அங்கத்தினர் கோவிந்தராஜுலு நாயுடு தொகுதியும் அடுத்தடுத்து இருக்கிறது. இந்தத் தொகுதிகளில் பல திட்டங்கள் உருவாகி, பல ஜில்லா மக்களுக்குத் தொழில் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் அளவு நீங்கி வருகிறது. இதற்காக சர்க்காரை பாராட்டுகின்றேன். அண்மையில் பால் பண்ணைத் திட்டம் மாதவரத்தில் உருவாகி

[திரு. டி. பி. எழுமலை] [8th March 1963

யிருக்கிறது. இந்தப் பால் பண்ணைத் திட்டம் வந்தவுடன்—அங்கே குடியிருந்த விவசாய நிலங்களையே நம்பியிருந்த மக்களின் நிலைமை பாதிக்கப்பட்டிருக்கிறது. காரணம் நிலங்களைச் சர்க்கார் எடுத்துக் கொண்டு அபிவிருத்தி என்று சொல்கிறபோது, அங்கங்கே உள்ள மக்களின் நிலைமையையும் சர்க்கார் கவனிக்க வேண்டும். அங்குள்ள மக்கள் பாதிக்கப்படாது நிவாரணம் அளிக்க வேண்டும். மேலும், என் தொகுதியிலும், கனம் நாயுடு தொகுதியிலும் இருக்கும் புழல் ஏரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் நீரைக் கொண்டு, பல நூற்றாண்டுகளாக விவசாயம் செய்து வந்த விவசாய மக்கள் அங்கே இருக்கிறார்கள். சென்னை நகரத்திற்குக் குடி தண்ணீர் கொடுக்கவேண்டுமென்றால், அதை யாரும் ஆட்சேபிக்கவில்லை, தண்ணீர் கொடுக்கக்கூடாது என்றால் எதிர்கட்சிக்காரர்கள், சென்னையில் உள்ள மக்களின் குடிதண்ணீர் பிரச்னையையே பெரிதாக வைத்து, "பாருங்கள் இந்த அரசாங்கம் உங்களுக்கு குடிதண்ணீர் வசதி கூடச் செய்து தரவில்லை" என்று பிரசாரம் செய்வார்கள். ஆகவே குடிதண்ணீர் வசதி சென்னை நகரத்திற்குச் செய்து தரவேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சென்னைக்குத் குடிதண்ணீர் வசதி தரவேண்டும் என்பதற்காக அந்தப் புழலேரி, சோழவரம் ஏரிப் பகுதிகளில் விவசாயம் செய்து கொண்டிருந்த விவசாயிகளுக்கு நீர்பாசன வசதி அளிப்பதை நிறுத்திவிடக்கூடாது. அந்த விவசாய மக்களுக்குத் தண்ணீர் விடக்கூடாது என்ற எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏழாயிரத்து ஐநூறு ஏக்கரா நிலங்களையும் சர்க்கார் சொந்தமாக எடுத்துக்கொள்கின்ற திட்டத்தில் முனைந்து வேலை செய்து கொண்டு வருகிறார்கள். இதனால் இப்போது எதிர்க்கட்சிக்காரர்கள் எங்கள் தொகுதியில் சென்று, "பார்த்தீர்களா, பல நூறு வருஷங்களாக நிலங்களில் நீங்கள் விவசாயம் செய்து பிழைத்து வருகிறீர்கள். உங்களது விவசாய நிலத்தையே எடுத்துக்கொள்கிறார்கள்" என்று பிரசாரம் செய்யக்கூடும். அதுவும் தொடர்ந்து 1952-ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் கட்சி அபேட்சகரையே தேர்ந்தெடுத்து வந்திருக்கிற, அந்தத் தொகுதி மக்களுக்கு இத்தகைய ஒரு சங்கடம் வந்திருப்பது எதிர்க்கட்சிக்காரர்கள் அந்தத்தொகுதியில் ஆளும் கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்குத்தான் பயன்படும். அவர்கள் எப்போதும் பிரசாரத்திலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அந்த நிலங்களை எடுத்துக்கொண்டால் அந்த விவசாயிகளுக்கு சரியான மாற்று வேலையும் கொடுக்க முடியாது. மேலும், என் தொகுதியில் ஒரு திட்டம் வந்திருக்கின்றது. ஆனால், அந்த திட்டத்தில் வேலை வாய்ப்பும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்கவில்லை. நல்லவேளையாக இந்த நேரத்தில் சென்னைக்கு கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரைக் கொடுக்க அரசாங்கம் நல்லதொரு ஏற்பாட்டைச் செய்து வருகிறது. ஆந்திர அரசாங்கமும் சம்மதிக்கக் கூடியவகையில் இந்த, மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதை வெற்றிகரமாக நிறைவேற்றி, சென்னை நகரத்திற்கும், மற்ற உபயோகத்திற்கும் கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரைக் கொடுப்பதோடு, இந்த



8th March 1963] [திரு. டி. பி. எழுமலை]

புழலேரி, சோழவரம் பகுதியில் உள்ள விவசாயிகள் இதுவரையில் எப்படி அந்த நிலங்களில் பயிரிட்டு வந்தார்களோ அதுபோலவே இனியும் தொடர்ந்து பயிரிட்டு வர வகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நமது கனம் நிதி அமைச்சர் அவர்களும் கனம் முதல் அமைச்சர் அவர்களும் எப்படியாவது இந்த கிருஷ்ணா கோதாவரி குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்றி இந்த ஏரிப் பகுதியில் உள்ள விவசாயிகள் பரம்பரை பரம்பரை உரிமையோடு அந்த நிலங்களை அனுபவித்து வரும்படியாக ஜாரி செய்யும் நடவடிக்கையை விட்டு விடவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மேலும் சபாநாயகர் அவர்கள் கடைசி நேரத்தில்லும், சில நிமிடம், பேச வாய்ப்பு தந்தமைக்கு என் தொகுதி மக்கள் சார்பாக நன்றி சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. சொ. வெங்கிடுசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அந்நியர் நம் மீது படையெடுத்து வந்திருக்கிற இந்த நேரத்தில் அவசர நிலைமைப் பிரகடணம் எடுக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் குறிப்பாக மூன்று இனங்கள் நமக்குத் தேவை என்று நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலாவதாகப் படை பலம். படை பலத்திற்குத் தேவையான தளவாடங்கள். அதற்கடுத்து உணவு உற்பத்தி. உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் குறிப்பாகப் பல அணைக்கட்டுத் திட்டங்களும், பல குளங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும் ஆங்காங்கு இந்த மாநிலத்தில் பல வறண்ட பிரதேசங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்த வறண்ட பிரதேசங்களில் வாழ்கின்ற விவசாய மக்கள் அதிகமான இன்னல்களை ஏற்றுக்கொண்டு விவசாயம் செய்தாலும், விவசாயத்திற்கு இன்றியமையாத தண்ணீரை அடைய முடியாத காரணத்தினால் அவர்கள் முயற்சி தடைபடுகிறது. தண்ணீர் கிடைத்தால் உரங்கள் கிடைப்பதில்லை. ஆகவே வறண்ட பிரதேசங்களில் கிணறு வெட்டுவதற்கு மானியம் கொடுக்கவும், உரம் முதலியவை சப்ளை செய்யவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி அளித்தாலும் அது முழு அளவுக்கு விவசாயிகளுக்குப் பயன்படத்தக்க அளவுக்குப் போய்ச் சேருகிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. நாம் அளிக்கிற மானியத்தொகை, கடன் தொகை எல்லாம் விவசாயத்திற்குப் போய்ச் சேருகின்ற அளவுக்கு தக்க வழிவகை செய்யவேண்டும். அதோடு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு உற்பத்தி செலவு 200-ல் இருந்து 250 ரூபாய் வரை ஏற்படுகின்றது. நெல் போன்ற பயிரில் அவர்களுக்குக் கிடைக்கின்ற லாபம் 110 ரூபாய். இந்த 110 ரூபாயை வைத்துக்கொண்டு விவசாயிகள் எவ்வளவுதூரம் வாழ்க்கையை நடத்த முடியும் என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன்.

அதோடு விவசாயிகளுக்குப் பல கூட்டுறவு சங்கங்களை அமைத்து அந்தக் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக நியாயமான விலையில் அவர்களுக்குத் தேவைப்படுகிற பொருள்களைக் கொடுக்க வழி செய்திருக்கிறோம். ஆனால் இந்த விவசாயச் சங்கங்கள் சரி

வர இயங்குகிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. அவர்கள் மார்க்கெட்டிங் சொஸைடியில் தங்கள் பொருள்களை அடமானமாக வைத்து நல்ல விலைக்கு விற்கவேண்டுமென்று எண்ணுகிற அந்த நேரத்தில், வியாபாரிகள் கொடுக்கின்ற விலையைக் காட்டிலும் இரண்டு மூன்று பங்கு குறைவாக விற்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆகவே மார்க்கெட்டிங் சொஸைடியில் தங்கள் பொருள்களை அடமானம் வைக்கப் பயந்துகொண்டிருக்கிறார்கள்.

அதே போன்று கோவாப்ரேட்டிவ் ஏற்படுத்தியிருக்கின்ற ஒவ்வொரு இனங்கள் பேரிலும், அந்தந்தத் தொழில்களைச் செய்கின்றவர்கள் அதிலே பங்கு தாரர்களாக இல்லாமல், செல்வாக்கு பெற்றவர்கள் மட்டுமே அந்த சொஸைடிகளில் பங்குதாரர்களாக இருக்கக்கூடிய நிலைமையின் காரணமாகப் பல ஊழல்கள் நடந்து வருவதைப் பத்திரிகை வாயிலாகவும், மற்ற வகையிலும் நாம் அறிந்திருக்கிறோம். அந்த மாதிரி ஊழல்கள் இருக்கக்கூடிய சங்கங்களின் மீது எடுக்கப்பட்டிருக்கக் கூடிய நடவடிக்கைகள் இது வரை திருப்திகரமாக இருக்கிறதா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. அரசாங்கம் 'கூட்டுறவு' என்ற சொல்லைச் சமய சஞ்சீவியாகப் பயன்படுத்துகிறதா என்ற சந்தேகமும் உண்டாகிறது. குறிப்பாகச் சொன்னால், பழனித் தொகுதியில் ஃபிஷர்மேன் சொசைடி ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த சொசைடியில் . . . . . (மணி அடிக்கப்பட்டது).

*** திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த கனம் நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். மத்திய சர்க்கார் போட்ட வரிகளின் காரணமாக மக்களிடத்திலே பீதி ஏற்பட்டது. மறு தினத்தில் சென்னை ராஜ்ய பட்ஜெட் புது வரி ஏதுவும் இல்லாமல் வந்ததும் மக்கள் சாந்தி அடைந்தார்கள். நம்முடைய கனம் நிதியமைச்சர் அவர்கள் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்கள் மற்ற ராஜ்யங்களுக்கு வழிகாட்டக் கூடிய நிலைமையிலே பட்ஜெட்டைச் சமர்ப்பித்ததற்காக நான் மீண்டும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய ராஜ்யத்தில் 125 கோடி ரூபாய் வருமானம் என்று சொன்னால், 100-க்கு 25 சத விகிதம் அதிகமான செலவை நிர்ணயித்திருக்கிறோம். அதிகப்படியான, அவசியமில்லாத உத்தியோகஸ்தர்களும், அவசியமில்லாத சில திட்டங்களும் இருக்கின்ற காரணத்தினால்தான், 20 சத விகிதம் அனாவசியமான அதிகச் செலவு ஆகிக்கொண்டிருக்கிறது. அந்நிய ஆட்சியின்போது நிர்வாகத்தின் அளவு எந்த அளவுக்கு இருந்தது, இப்போது எந்த அளவுக்கு விரிவடைந்திருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அந்த வகையில் இப்போது நிர்வாகத்தை 'ரி-ஆர்கனிசேஷன்' செய்து திருத்தியமைக்கவேண்டியிருக்கிறது. இன்றைக்கு கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமலே பல இலாகாகள் இருந்து கொண்டிருக்கின்றன. இண்டஸ்ட்ரிஸ் டிபார்ட்மெண்ட் என்று சொன்னால், இண்டஸ்ட்ரீஸ் வளரவில்லை, அந்த டிபார்ட்மெண்ட் வளர்ந்து கொண்டே போகிறது. கூட்டுறவு இலாகாக்கள், விவசாய இலாகாக்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டாலும், அந்த இலாகாக்கள் வளர்ச்சியடைந்து கொண்டு போகின்றனவே தவிர, மக்களுக்குப் பலன் தருவதாக அவை இல்லை. குறிப்பாக, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது என்று சொன்னால், 60,000 ரூபாய் நிர்வாகச் செலவுகளுக்கு மட்டுமே செலவாகி விடுகிறது. நூற்றுக்குப் பத்து சத விகிதம் வேண்டுமானால் இருக்கலாமே தவிர, 60,000 ரூபாய் அளவுக்கு நிர்வாகச் செலவு இருக்குமானால் பஞ்சாயத்துகள் எப்படி மக்களுக்கு நன்மை செய்ய முடியும்? கனம் அமைச்சர் அவர்கள் ஒரு மூன்று மாத காலம் சென்னையிலேயே உட்கார்ந்து இந்த இலாகாக்களின் அளவையெல்லாம் பற்றி பரிசீலனை செய்து எந்த அளவுக்கு நிர்வாகச் செலவைக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைத்து அடுத்த பட்ஜெட்டை வருகிற ஆண்டிலே சமர்ப்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கேரளம், ஆந்திரம் ஆகிய பகுதிகள் சென்னையுடன் இருந்த காலத்தில் நிர்வாகம் எந்த அளவுக்கு இருந்ததோ, அதைவிட அதிகமாகவே இப்போது அவை பிரிந்த பிறகும் இருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் வருஷத்திற்கு ஒரு ஐ.சி.எஸ். ஆபீசர்தான் ரிடையராகிறார். ஆனால் வருஷத்திற்கு ஐந்தாறு ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் புதிதாகப் போடப்படுகிறார்கள். அதே போன்றுதான் ஐ.பி.எஸ். அதிகாரிகளும் போடப்படுகிறார்கள். இந்த நிர்வாகத்தின் அளவைக் குறைப்பதற்கான பரிசீலனைகளைச் செய்வதற்காக கமிட்டி ஒன்று போட்டு அதன் முடிவுகளின்படி நடவடிக்கை எடுத்து இலாகாக்களின் அளவைக் குறைத்து அனாவசியச் செலவுகளைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





பொதுவாக, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், தென்னாட்டிலே பெரிய திட்டங்கள் இல்லை, வட நாட்டிலேதான் பெரிய திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்ற குற்றச்சாட்டைக் கூறினார்கள். எங்கள் பகுதியிலே பரம்பிக் குளத் திட்டம் ஒரு கோடியே 25 லட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நீலகிரியில் இரண்டு மலைகளை இணைத்து, குந்தா மின்சாரத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்களுக்கு இவற்றையெல்லாம் கொண்டு போய்க் காட்டினால், அவர்கள் நம்முடைய ராஜ்யத்தில் நிறைவேற்றப்பட்டு வரும் பல பெரிய திட்டங்களை நேரிலேயே பார்த்து அறிந்து கொள்ள முடியும். (மணி அடிக்கப்பட்டது.) நேரம் இல்லாத காரணத்தால் மானியங்களின் மீது விவாதம் நடைபெறும் போது என்னுடைய மற்றக் கருத்துக்களைக் கூறுகிறேன் என்று தெரிவித்து, தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டுக்குச் சமர்ப்பிக்கப் பெற்ற நிதிநிலை அறிக்கை பலர் பாராட்டைப் பெற்றது. 'புது வரியே இல்லாத பட்ஜட்' என்று கனம் அங்கத்தினர்களிலே பலர் பாராட்டினார்கள். புது வரி இல்லையென்ற அளவில் நானும் அவர்களுடன் இணைந்து

பாராட்டுகின்றேன். 'புது வரியே இல்லாமல் இருப்பது மட்டும் போதுமா? அது மட்டும் திருப்தி அளிக்குமா?' என்பதையும் நாம் நன்ருகச் சிந்திக்கவேண்டும். 'இந்த ஆண்டிலே 127 கோடி, 19 லட்சம் செலவு; 124 கோடி, 45 லட்சம் வரவு. ஆகவே, துண்டு விழுவது 2 கோடி, 74 லட்சம்' என்று கனம் அமைச்சர் அவர்களுடைய உரையின் மூலமாகவும், பட்ஜட்டின் வழி நெறி வகுப்புகளின் மூலமாகவும் நாம் உணருகிரும். தமிழ் நாடு மூன்று கோடிக்குச் சிறிது அதிகமான ஜனத் தொகையுடையது என்று நாம் காண்கிரும் . அந்தக் கணக்குப்படி பார்த்தால் தலைக்கு 40 ரூபாய் வீதம் வரி வருகிறது. எல்லோருமே வரி செலுத்துவதில்லை என்பது நமக்குத் தெரியும். அந்தக் கணக்கில் பார்த்து, சரிபாதிப்பேர்தான் வரி கொடுக்கக் கூடியவர்கள் என்று எடுத்துக் கொண்டால், 80 ரூபாய் தலைக்கு வரி வருகிறது. ஒரு குடும்பம் என்று எடுத்துக்கொண்டால், சராசரி ஐந்து பேர்கள். ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு 400 ரூபாய் வரி என்று வருகிறது. இது மாநில சர்க்காராலே விதிக்கப்பெற்றிருக்கிற வரிகளுக்கு உட்பட்டது.

மத்திய சர்க்காரின் வசிகள் வேறு இருக்கின்றன. இப்படியெல்லாம் சொல்கிற போது வரி போடுவதையோ அல்லது வரி போடும் அளவையோ நான் ஆட்சேபிக்கிறேன் என்று யாரும் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். வரி போடுவதையோ அல்லது தேவைக்கு எவ்வளவு அதிகமாக வேண்டுமோ, அவ்வளவிற்கு போடுவதையோ யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். நான் நிச்சயமாக ஆட்சேபிக்கவே இல்லை. ஆனல் வரியினுடைய அளவு பயனுடையதாக இருக்கிறதா என்பது, அதனுல் ஏற்படக்கூடிய விளைவைப் பொறுத்ததே தவிர வரியின் தொகையையோ அல்லது அளவையோ அல்லது விகிதாச்சாரத்தையோ மட்டும் பொறுத்ததல்ல என்பதை நாம் நன்கு உணர்ந்துதான் பேசுகிரும். வரி என்ற சொல்லுக்கு காப்பு என்பதுதான் பொருள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். இந்த வரியின் நோக்கமே காப்பது. சிறப்பாக, எந்தெந்தத் துறைக்கு வரி போடுகிருேமோ அந்தந்தத் துறைகளைக் காப்பதற்கும், பொதுவாக எல்லாத் துறைகளையும் காப்பதற்காகத்தான். சில துறைகளில் மிக அதிகமாக வருமானம் வரும். அதில் அதிகச் செலவு இராது. வருமானம் இல்லாத துறைகூட இருக்கும். ஆனல் அதிக செலவு ஏற்படும். ஆகவே ஒரு துறையில் வருகிற வருமானத்தை அதற்குத்தான் செலவழிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அப்படி சொல்லவும் மாட்டேன். எதற்காக வரி விதிக்கிருேமோ அத்துறை காக்கப்பட வேண்டும். அதோடு கூட, அத்துறை வளர்க்கப் பெறவும் வேண்டும். இவற்றை மனத்தில் இருத்திக் கொண்டு இவற்றைச் செய்கிறவர்கள் செய்ய வேண்டும்; செய்கிருர்கள். அணுகவேண்டியவர்கள் அணுக வேண்டும்; அணுகுகிருர்கள். அப்படியே இதுபற்றி விமர்சனம் செய்கிறவர்களும் விமர்சனம் செய்ய வேண்டும் என்ற நெறியை நான் மறுக்கவில்லை. வரி பல முறையில், பல நேரங்களில் விதிக்கப்படுகிறது. அப்படி விதிக்கப்படுகிற வரிகளில், பல மிகச் சுலபமாக ஏமாற்றக்கூடியனவாகவும் இருக்கின்றன. சில எப்படியும் ஏமாற்றப்பட முடியாத வரிகளாக அமைந்திருக்கின்றன. குறிப்பாக எடுத்துப் பார்ப்போமானல் பல்வேறு கணக்குகள் மூலம், வருமானத்தின் மூலமாக என்றெல்லாம் கணித்து விதிக்கப் பெறுகிற வரி ஏமாற்றக் கூடியனவாக அமைகின்றன. நிலவரி; வீட்டுவரி போன்றவை எக்காரணத்தாலும் ஏமாற்றப்படமுடியாதவை. சில தவறுகள் வேண்டுமானல் அதில் நிகழலாம். அதில் தவறுகள் அத்திப்பூத்தாற்போல் ஒன்றிரண்டு வேண்டுமானல் நிகழலாம். நிலவரி போன்றவற்றை ஏமாற்ற முடியாது. ஏக்கருக்கு இவ்வளவு என்று வைத்து விட்டால், அதைக் குறைக்கவோ அல்லது கூட்டவோ சுலபமாக முடியாது. கூட்டினலும் குறைத்தாலும் அதை எளிதில் கண்டுபிடித்து விடலாம். இதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, ஏமாற்றப்படக் கூடிய வரிகளை நாம் ஜாக்கிரதையாக போட்டு, அதிலிருந்து தப்பித்து அதன்மூலம் அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம் குறைந்துவிடாமல் ஆட்சி மிகவும் கண்காணிப்பாக இருக்க வேண்டும். இப்போது அவர்கள் கண்காணிப்பில் குறைந்து விட்டார்கள் அல்லது தவறி விட்டார்கள் என்று நான் குற்றம் சாட்ட வர இல்லை. அது சுலபமாக நடைபெறுகின்றன. அதாவது வரி ஏமாற்றுவது. அவற்றைக் கண்டு பிடித்து வரியை ஏமாற்ருமல் இருக்கச் செய்வதில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். வெறும் அக்கறை மட்டும் முழுவதையும் கண்டு பிடித்து விட முடியும் என்று அரசியல் நெறி உணர்ந்தவர்கள் சொல்ல மாட்டார்கள். தவறு செய்தவர்களில் 10 பேர்களில் நாலைந்து பேர்கள் அகப்பட்டுக் கொள்ளலாம், நாலைந்து பேர்கள் என்று கூடச் சொல்ல முடியாது, ஒன்றிரண்டு பேர்கள் அகப்பட்டுக் கொள்ளலாம். மற்றவர்கள் நிச்சயமாக தப்பித்துக் கொள்ள வழி, வாய்ப்பு, வசதிகள் இருக்கின்றன. ஆகவே தப்பித்துக் கொள்பவர்களை விட்டுவிட்டாலும் பிடித்தவர்களை சுலபமாக விட்டு விடாமல் அதிகத் தண்டனை கொடுக்க வேண்டும். ஆட்சிக்கு கொடுக்க வேண்டிய வரிக்கு யார் யார் டிமிக்கி கொடுக்கிருர்களோ அவர்களுக்கு அதிகப்படியான, கடுமையான, கொடுமையான தண்டனை உண்டு என்ற நிலை ஏற்பட்டால்தான், அப்படி நாலு இடத்தில் செய்தால்தான் வரி எத்தர்கள் வரியை எத்தினல் நம் கதி கெட்டுவிடும் என்று அஞ்சுவார்கள். அந்த அச்சம் காரணமாக, தண்டத்தின் காரணமாக தவறுகள் நிவர்த்திக்கப் பெறும். அதன் மூலம் வராமல் நின்று விடுகிற பெரும் வருமானமும் வந்து தீரும். இப்போது பார்த்தால் வருமான வரி, சேல்ஸ் டாக்ஸ் போன்றவை கிட்டத்தட்ட பாதிக்கு மேல் ஏமாற்றப்படுகிறது என்று சொன்னல் கணக்கு காட்டு, புள்ளி காட்டு என்ருல் காட்ட முடியாது. ஊர் பூராவும் ஒருபுறம் நாம் சுற்றி வருகிரும். 100-ல் 90 கடைகளில் பில் கொடுக்க மாட்டார்கள். பில் கேட்டால் கொடுப்பார்கள். ஆனல் 8 சத விகிதம், 10 சத விகிதம் சேல்ஸ் டாக்ஸ் போடுவேன் என்று சொல்வார்கள். பிறரைச் சொன்னல் கோபித்துக் கொள்ளலாம், ஆகவே என்னையே சொல்லிக் கொள்கிறேன்,

160 ரூபாய்க்கு சாமான் வாங்கிவிட்டு ஏன் 112 ரூபாய் இழக்க வேண்டும். நான் என்ன கவர்ன்மெண்டிடம் வவுசர் கொடுக்கப் போகிறோமா என்று நினைத்து பில் இல்லாவிடில் வேண்டாம் என்று வந்து விடுகிறோம். ஆக இதனால் மாநில சர்க்காருக்குக் கிடைக்க வேண்டிய சேல்ஸ் டாக்ஸை ஏமாற்றுகிறார்கள். அதோடு வருமானத்திற்கு கொடுக்க வேண்டிய இன்கம் டாக்ஸை யும் ஏமாற்றுகிறார்கள். இந்த நிலை இல்லாமல் இதைக் கண்டு பிடித்து விட்டால் வேறு எந்த வரியும் இல்லாமலேயே இந்த வரியைக் கொண்டே ஆட்சி நடத்தலாம் என்று சொல்லும் அளவில் அவ்வளவு அதிகமான வரி ஏமாற்றங்கள் இந்த தேசத் தில் நடைபெறுகின்றன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை; பலர் அதை மறுக்கவும் மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே ஏமாற்றுகிற வரிகளை எல்லாம் நாம் பறிகொடுத்து விடா மல் அவை அனைத்தையும் இழுத்துப் பிடித்து வந்து நம் கஜானாவில் சேர்த்து விட்டால் மிகத் துன்பத்தை, சுமையைத் தரக்கூடிய சில வரிகளை நீக்கி விடுவது சுலபமாக இருக்கும். செலவிற்கு பணம் இல்லை என்பதற்காக, வரவேண்டிய அந்த இனங்களில் இருந்து வரவில்லை என்பதற்காக, ஏமாற்ற முடியாத, சுலபமாக வருகிற இனங்கள் மீது நாம் வரியை ஏற்றிக் கொண்டே போகிறோம். சிறப்பாகச் சொன்னால் விவசாய வரி. அந்தக் காலத்தில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு ரூபாய் கொடுத்தவர்கள் இனி 2½ ரூபாய் கொடுக்க வேண்டும். அதாவது 150 சத விகிதம் அதிகமாயிருக்கிறது. மற்ற துறைகளுக்கு விதிக்கப்படுகிற வரி அத்துறையில் ஏற்படுகிற பொறுப்பு முதலீடு, உழைப்பு, செலவு இவற்றைக் கணித்து இறுதியில் அதில் வருகிற லாபத்தையும் கணித்து விதிக்கப்படுகிறது. அவை எல்லா வற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அந்தத் துறை களில் இல்லாத அளவிற்கு அதிகப்படியான முதலீடு, உழைப்பு, அதிகமான அக்கறை, காலம், மணி, நேரம், அளவு என்றுகூட இல்லாமல் இரவு 12 மணிக்குச் சென்று தண்ணீர் திறந்துவிடப்படவோ, அல்லது அடைக்கவோ செய்ய வேண்டிய நிர்பந்தங்கள் எல்லாம் ஏற்படுகிற துறை அல்லது தொழில், விவ சாயம், அதில் ஏற்படுகிற செலவு, உழைப்பு, நேரம் அதனால் கிடைக்கிற லாபம், அதற்கு விதிக்கப்படுகிற வரி இவற்றை பிற துறைகளுடன் பக்கம் பக்கமாக வைத்துப் பார்த்தால் இதி லிருக்கிற பெருத்த வேறுபாடு நம் கண்களுக்கு, உள்ளத்திற்கு நன்கு புலப்படும் என்பதை நான் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. ஒன்றை நாம் மறந்து விடக்கூடாது. திட் டங்கள் தவறு என்று நாங்கள் சொல்லவில்லை, திட்டங்கள் கூடாது என்றும் நாங்கள் சொல்லவில்லை. திட்டங்கள் வேண்டும். நம்முடைய நிர்வாக ஆற்றலுக்கும், நம் நிதி நிலைக்கும், நம் நாட் டின் சூழ்நிலைக்கும், நம் தகுதிக்கும், நாம் கண்காணிக்க முடிகிற அளவிற்கும் உட்பட்டே திட்டங்கள் வகுக்கப் பெறவேண்டும். இப் போது ஏற்படுத்தப்பட்டிருக்கிற திட்டங்கள் வளரவேண்டு மென்றால், அவை செழிக்கவேண்டுமென்றால், அவை நல்ல பலன் தர வேண்டுமென்றால் விவசாயத்தை பெருக்காமல்





அது முடியாது, வேறு இயற்கைப் பொருள்களை, கனிப் பொருள் போன்றவற்றை வளர்க்காமல் நம் திட்டங்கள் நிறைவேறாது. எந்தத் திட்டங்களாக இருந்தாலும் 10.30 a.m.
சரி, எந்த விதமான தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, அவைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்களை உற்பத்தி செய் வதை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் நாம் எதையும் செயல் படுத்த முடியும். பஞ்சாலை அமைக்க வேண்டும் என்றால், அதற்கான கருவிகள் உற்பத்தியாவதை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் திட்டங்கள் போட முடியும். கனரக இயந்திரங் களை உற்பத்தி செய்ய வேண்டும் என்றால், அதிகமான அளவில் இரும்பு வேண்டும். நிலக்கரி வேண்டும். இவைகளை தயாரிக்க பச்சைப் பொருள்கள் அதாவது "ரா மெட்டிரீயல்ஸ்" வேண்டும். இவைகளை நாம் நிலத்தில் பாடுபடுகிற மக்களின் மூலமாகத்தான் பெற்றுக் கொள்ள முடியும். கைத்தொழில் வளர வேண்டுமானாலும் உழவர்கள்தான் அடிப்படையாக இருக்கவேண்டியிருக்கிறது. நிலத்தில் பாடுபடுகின்றவர்கள் நல்லமுறையில் உற்பத்தி செய்தால் தான், எந்தத் தொழிலும் நல்லமுறையில் வளர முடியும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. யாரையும் நான் குற்றம் சொல்ல வில்லை, பழி சுமத்தவில்லை, குறை சொல்லவில்லை, சபாநாயகர் அவர்களே, நான் சொல்லுகின்ற இவைகளை உங்கள் மூலமாக அவர்கள் ஏற்றுக்கொண்டு நல்ல வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற இருதய சுத்தியான எண்ணத்தோடுதான் இதை நான் சொல்லுகின்றேன். இந்த முறையிலேயே நாம் போய்க்கொண் டிருந்தால் நம் நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு அக்கறை இருக் குமா? இப்போது கிட்டத்தட்ட எல்லோருக்கும் தெரியும் 100-க்கு 90 பேர்கள், ஏதோ வீட்டில் கலப்பை சும்மா கிடக்கிறதே, நமக்கு வேறு எந்தவிதமான தொழிலும் இல்லையே, சும்மா இருப்பதைவிட ஏதோ எட்டணா சம்பாதிப்பதைப் பார்க்கலாமே என்ற எண்ணத் துடன், ஏதோ செய்யலாம் (Something is better than nothing) என்ற அளவில், ஒன்றும் இல்லாமல் இருப்பதை விட, ஏதாவது வருவதைப் பார்க்கலாம் என்ற நிலையில்தான் இன்றைக்கு பெரும்பாலான விவசாயிகள் நிலத்தில் இறங்குகின் றார்கள். ஏதோ இதன் மூலம் வளமான வாழ்க்கை நடத்திவிடலாம் என்ற எண்ணத்தில் இவர்கள் போக வில்லை. வேண்டுமென்றால் ஒன்றிரண்டு விவசாயிகள் நல்ல முறையில் இருக்கலாம். அடியோடு இல்லையென்று நான் சொல்லவரவில்லை. ஆனால் 100-க்கு 90 பேர்கள் நான் சொன்ன அளவில்தான் இருந்து வருகிறார்கள். அவர்களுக் கெல்லாம் வர வர நிலத்தில் அக்கறை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வருகிறது. அவர்களுடைய சிரமங்களை, அவர்களுடைய கஷ்டங்களை, அவர்களுக்கிருக்கின்ற இடையூறு களைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்களைச் சார்ந்தது, இந்த அரசாங்கத்தைச் சார்ந்தது என்பதை மிகவும் அழுத்தமாக பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளைப் பொறுத்த வரையில் இப்படியே போய்க்கொண்டிருந்தால், இன்னும் கூடிய சீக்கிரத்தில் விவசாயிகள் அனைவரும் நிலத்தைவிட்டே வெளியேறி

[திரு. சா. கணேசன்] [8th March 1963

விடுவார்கள். அப்படி இவர்கள் நிலத்தை விட்டு வெளியேறிவிடுவார்களேயானால், அது நாட்டுக்கு மிகப் பெரிய ஆபத்தாக முடியும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பொதுவாக உற்சாகமூட்டுகின்ற நிலை இருக்குமானால்தான் நாட்டில் எந்த மனிதனும் பாடுபடுவான். இன்றுள்ள நிலையில் விவசாயிகளுக்கு எவ்வளவோ சிரமங்கள், எடுத்ததெற்கெல்லாம் பிரச்னைகள், வாழ்க்கையே ஒரு பிரச்னை என்கிற நிலைக்கு விவசாயிகளின் வாழ்க்கை வந்துவிடுமானால், அது தேசத்திற்கு, ஆட்சிக்கு நல்லதா என்பதை சிந்தித்துப் பார்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நிலவரியை நாம் கூட்டிக்கொண்டே போவோமேயானால் என்ன நிலைமையாகும்? நிலவரிகளை எல்லாம் அந்தந்த பஞ்சாயத்துக்களே எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் கொள்கை வகுத்துக்கொண்ட நாம் நில வரிகளை அதிகரித்துக்கொண்டே போவோமேயானால், கணிசமான தொகையை எண்ணி நிலத்தின் மீது வருகிற வருமானத்தை விட்டுவிட வேண்டும் என்கின்ற உணர்ச்சி இனிமேல் ஏற்படாமலேயே போய்விடக்கூடும் என்பதை அரசாங்கத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். நிலவரியை, மாநில ஆட்சி, பஞ்சாயத்துக்கு விட்டுக்கொடுக்க முடியாது என்கின்ற உணர்ச்சியும் வந்துவிடும். ஆகவே நிலவரி எடுக்கப்பட வேண்டும் என்ற உணர்ச்சியை வளர்ப்பதற்கு செய்யத்தக்கனவற்றை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றத் துறைகளில் எல்லாம் வருகின்ற வருமானத்தின் மீதுதான் வரி போடப்படுகிறது. அந்தந்த தொழில்களின் மீது அதாவது உடைமையின்மீது வரி விதிக்கப்படுவதில்லை. இந்த நிலையில்தான் 90 சத வரிகள் போடப்படுகின்றன. ஆனால் இந்த நிலத்திற்கு மட்டும்தான், நிலத்தில் விளைந்தாலும் சரி, விளையாவிட்டாலும் சரி, நிலத்திற்கு வரி கொடுக்கவேண்டும். "நிலம் விளையவில்லை என்ற கணக்கைக் காட்டினால் இதற்கு நிவாரணம் கிடைக்கும்" என்று அன்றொரு நாள் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்தவிதத்தில் இதற்கான நிவாரணத்தைத் தேடிக் கொள்ள முடியும் என்பது நமக்கெல்லாம் தெரியும். இதற்கான பேப்பர்களை எடுத்துக்கொண்டு தாசில்தார் ஆபீஸிக்கும் கலெக்டர் ஆபீஸிக்கும் திரும்பத் திரும்ப நான்கு தடவைகள் போய் வந்துவிட்டால், திரும்பி வரவேண்டும் என்று நினைக்கிற பணத்தைவிட அதிகமான பணம் கையிலிருந்தே செலவழிந்துவிடும். ஏதோ விஷயம் தெரிந்தவர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கும் நமக்கே எவ்வளவோ தொந்தரவுகள் ஏற்படுகின்றன, அப்படியானால் சாதாரண ஒரு விவசாயிக்கு எவ்வளவு கஷ்டங்கள், சிரமங்கள் ஏற்படும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. பெரிய அளவில், அதாவது 10 லட்சம் 15 லட்சம் திரும்பி வரும் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கு வேண்டுமானால் இது சுலபமாகத் தோன்றலாம். ஆனால் வெறும் 15 ரூபாய் திரும்பி வரும் என்ற எண்ணத்துடன் மதுரைக்கும், ராமநாதபுரத்திற்கும் இரண்டு தடவைப் போய்க்கொண்டிருந்தால், அவனுக்கு கிடைக்



8th March 1963] [திரு. சா. கணேசன்]

கக்கூடிய பணத்தைவிட அதிகமாகச் செலவு செய்ய வேண்டிய நிலைமைதான் ஏற்படும். ஆகவே இவைகளையெல்லாம் மனதில் கொண்டு, காரியங்களை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிற துறைகளை எல்லாம் நாம் பார்க்கின்றோம். கைத்தறி துணிகள் தேங்கிக்கிடக்கிறது என்ற காரணத்திற்காக அரசாங்கமே முன்வந்து ரிபேட் கொடுக்கிறோம் என்று சொல்லி, அதற்கான வழிவகைகளை வகுத்துக் கொடுக்கிறார்கள். அதை நான் குறைவாகச் சொல்லவில்லை. அவ்வாறு செய்வதை நான் வரவேற்கின்றேன். இவ்விதம் செய்வதின் மூலமாக கைத்தறித் துணிகளை அதிகமான பேர்கள் ஒரு ரூபாய் துணியை 85 ந.பை.-க்கு வாங்கலாம் என்று வாங்குவதின் மூலமாக கைத்தறி துணிகளுக்கு கிராக்கி ஏற்படுகிறது. அதன் மூலமாக அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற, அந்தத் தொழிலின் மூலமாக ஜீவித்து வருகிற மக்களுக்கெல்லாம் ஆதரவு தருவதற்கு அரசாங்கம் முன்வருகிறது. அதற்கான முயற்சியை நான் பாராட்டுகின்றேன், வரவேற்கின்றேன். ஆனால் இந்தத் தொழில்களுக்கெல்லாம் உயர்ந்ததாக இருப்பது உணவு உற்பத்தி. முதல் தேவை உணவு. அதற்குப் பின்தான் உடை. இந்த அளவில் கருதப்படுகிற விவசாயத்தின் நிலைமை எப்படியிருக்கிறது என்று பார்த்தால், எங்கள் பக்கத்தில் இன்றைக்கு 54 படி கொண்ட மூட்டை ஒன்று 14 ரூபாய் அளவுக்கு விற்கின்றது. 14 ரூபாய் முதல் 17 ரூபாய் வரையில் எவ்வளவு நெல் வேண்டுமானாலும் வாங்கலாம். இது நாட்டுக்கு க்ஷேமத்தை தருமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் மிளகாயை எடுத்துக் கொண்டால், ஒரு வீசை ஒரு ரூபாய்க்கு விற்றது இப்போது ஏழு ரூபாய்க்கு ஏறியிருக்கின்றது. ஆனால் 20, 25 ரூபாயாக விற்ற நெல், இன்றைக்கு 14 ரூபாயாக இறங்கியிருக்கின்றது. இப்போது இருக்கின்ற பொருளாதார அமைப்பில் ஏதோ, எங்கேயோ ஓட்டை இருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். உண்மையில், பொருளாதார அடிப்படையில் பார்த்தால், நெல், அரிசி இவைகளின் விலை அடிப்படையில்தான் பிற பண்டங்களின் விலை அமைய வேண்டும் என்று பொருளாதார வல்லுநர்கள் கருதுவார்கள், நம்புவார்கள். ஆனால் அந்த நிலை இங்கே மாறிக் கிடக்கிறது, இவர்களுக்கு நாம் ஏதாவது நிவாரணம் செய்யவேண்டாமா? ஏன் இந்த நிலைமை திடீரென்று வந்தது? தங்கக் கட்டுப்பாடுதான் காரணம். வயல்களிலிருந்து களத்திற்கு கொண்டு வந்தவுடனேயே கதிரறுக்கின்ற நிலையிலேயே நெல்லை விற்றுவிடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அடகு வைத்த தங்க நகைகளை எல்லாம் சாதாரணமாக அறுவடையாகி நல்ல விலை வரும் வரைக் காத்திருந்து விற்றுப் பணம் கையில் கிடைத்தவுடன் திருப்புவது வழக்கம். அவசர நிர்பந்தமில்லாதவர்கள் பின்னால் மார்க்கட்டில் நல்ல விலையில் விற்கலாம் என்று வைத்திருப்பார்கள். இருந்தாலும் பெரும்பாலான விவசாயிகளும் உற்பத்தி செய்கின்ற நெல்லின் முழு விலையில் கிடைக்கின்ற பயனைப் பெறுவதில்லை. சாதாரணமாக வியாபாரிகள் சொந்தப் பணத்தையும், பாங்கில் கடன் வாங்கிய

[திரு. சா. கணேசன்] [8th March 1963

பணத்தையும் வைத்துக்கொண்டு அறுவடை காலத்தில் களத்தில் சென்று அழிவிலையில் வாங்கி நெல்லை சேர்த்துவிடுகிறார்கள். காலம் போகப் போக விலையும் பின்னால் ஏறிக்கொண்டே வரும். அதனால் கிடைக்கும் லாபம் வியாபாரிகட்கே சென்று சேரும். விலை இறக்கத்தால் விற்க மனமில்லாத விவசாயிகட்கு ஏதாவது பணம் திடீரென்று தேவைப்பட்டால் தங்கச் சங்கிலி கையில் இருக்கும், அதை எடுத்துக்கொண்டு போய் அடகு வைத்துப் பணத்தை பெற்றுக் கொள்வார்கள். தங்கக் கட்டுப்பாட்டு விதி ஏற்பட்ட பிறகு தங்கச் சங்கிலியைக் கொண்டுபோய் வைக்கவும் முடியவில்லை. இதன் காரணமாக, நிர்பந்தமாக, நெல்லைதான் ஏடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அறுவடையான உடனேயே, கதிர் அறுக்கின்ற நேரத்திலேயே கமலாயம் வந்து களத்திலேயே விற்றுவிடுவதை நான் கண்ணாலேயே பார்த்திருக்கிறேன். இது தேசத்தில் வளர்ச்சிக்கு, மக்களின் சுபீட்சத்திற்கு ஏற்றதா என்பதை சிந்திக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் ஆட்சிக்கு இருக்கிறது, அவர்களுக்கு கஷ்டங்கள் வந்தபின்னால், அதிலிருந்து காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்படாமல், அதற்கான வழிவகைகளை கண்டுபிடிக்க முடியாத நிலைமையில் திண்டாடாமல், முன்னமேயே கஷ்டங்கள் வாராதவாறு தடுத்துவிடுவது அரசாங்கத்திற்கு சிறப்பல்லவா? ஆட்சியாளர் கடமைகளைப் பற்றியெல்லாம் சேக்கிழார் நன்றாக எடுத்து விளக்கியுள்ளார். எந்தவித அச்சமும் இல்லாமல் மக்களை வாழச் செய்யவேண்டியதே ஆட்சியாளர் கடமை. கனம் நிதி அமைச்சருக்கு நன்றாகத் தெரியும், சேக்கிழார் கூறியது—

"மாநிலம் காவலன் ஆவான்
மன்னுயிர் காக்கும் காலை

தானதனுக்கு இடையூறு—தன்னால்,
தன் பரிசனத்தால்,

ஊனம் மிகு பகைத்திறத்தால்,
கள்வரால், உயிர்கள் தம்மால்—

ஆன பயம் ஐந்தும் தீர்த்து
அறம் காப்பான் அல்லனோ?"

என்று வினா வழியாக, அவ்வளவு அழுத்தம் கொடுத்துப் பேசுகிறார். இந்த நிலையில் ஏதாவது வந்து விடுமோ, நெல் விற்கவே படாது போய் விடுமோ, கஷ்டப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் தான் அவர்களுடைய மனதைக் கொன்றே தீர்ப்பது. இதை மனதில் கொள்ளவும். கொள்ளக் கூடாதவர்கள் என்று நான் பழி சொல்லவில்லை. கொள்ளக்கூடியவர்கள், கொள்ள முயற்சிக்கிறார்கள், கொள்ளுகிறார்கள். இதை நன்றாக உணர்ந்து நல்ல விதத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று உரிமையோடு வற்புறுத்தி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்படியில்லாமல் போனாலும் ஐந்தாண்டு திட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறோமே இதெல்லாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்திருப்பதுதானே? இதை விட்டுவிட்டால், இது கெட்டு விட்டால்



8th March 1963] [திரு. சா. கணேசன்]

ஐந்தாண்டுத் திட்டம் எப்படிச் சரியாக வரும்? கீழே அடிதளத்தில் இருக்கிறது புதைவடை சரியாக இல்லாது போனால் மூன்றாவது மாடி, நான்காவது மாடி எல்லாம் எப்படிச் சரியாக இருக்க முடியும்? புதைவடை கலகலத்தால் மேலே உள்ளவை பொல பொல என்று உதிர்ந்து விடுமே? இந்த நிலையையெல்லாம் மனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொன்றையும் நான் கூற வேண்டும். எங்கள் பக்கத்தில் மேல் பெரியாறு திட்டத்தைப்பற்றி பலர் பேசினார்கள். கேரளத்திலே கடலிலே சென்று கழிகிறது நீர். அதைத் திருப்பி இங்கு கொண்டுவருவதற்கு வேண்டிய முயற்சிகளை அமைச்சரவை எடுத்துக்கொண்டால்—அவர்களுக்கு அதனால் நஷ்டம் இல்லை என்பதை அவர்களை எண்ணும்படியாக செய்து விடலாம், அவர்களை ஏற்றுக்கொள்ளும்படி செய்து விடலாம்—அப்படி அந்த நீரைத் திருப்பிக் கொண்டுவந்தால் மிக வரண்ட பிரதேசமாக இருக்கிற கீழ் ராமநாதபுரத்தில்—கருவேல், எருக்கு ஆகியவைகள்தான் அங்கு விளைகிற உயர்தர விளைபொருள்களாக இருக்கின்றன—அங்கு அதைத் திருப்பி விட்டால் 1¼ லட்சம் ஏக்கர்கள் பாசன வசதி பெற்றுச் சாகுபடிக்குத் தகுதியுடையனவாகும். ஆகவே இதைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். இதில் சிரமம் ஒன்றும் இல்லை—கஷ்டம் ஒன்றும் இல்லை. வேறு ஒரு மாநிலத்தோடு பேசவேண்டிய நிலை இருக்கிறது. அவர்களும் நம்மைப் போன்ற இதயம் படைத்தவர்கள்தான். இதைப்பற்றிப் பேசிக் கொண்டுவருவதற்குத் திறமை நம் அமைச்சரவைக்கு நிறைய இருக்கிறது. (கனம் திரு. கு. காமராஜ்: முடியவில்லையே நாங்கள் என்ன செய்வது?) ஆகவே, முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. அவ்வளவுதான் நான் சொல்லலாம்.

அதற்கு மேலே, திட்டங்கள் வளரவேண்டுமென்று சொல்கிறோம். போட்டிருக்கக்கூடிய திட்டங்களில் இப்போது எவ்வளவுக்குப் பலன் தந்திருக்கிறது, இந்த அரசினர் உடைமையாக்குவதில்—நாஷனலைஸேஷன் செய்வதில்—எவ்வளவு பலாபலன்கள், நன்மை தீமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று இதையெல்லாம் கவனிப்பதற்கு விருப்பு-வெறுப்பற்ற ஒரு குழுவை நியமித்து—திட்டத்தையே நீக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை, இதை அழிக்க வேண்டுமென்று சொல்லவில்லை, ஒழிக்க வேண்டுமென்று சொல்லவில்லை—எங்கெங்கே தவறுகள் இருக்கின்றன, என்னென்ன தவறுகள் இருக்கின்றன, எந்தெந்த தவறுகளை நீக்க முடியும், அந்தத் தவறுகளை நீக்கினால் என்ன லாபம், இந்தத் தவறுகளையெல்லாம் நீக்கவே முடியாதா, அப்படி முடியாதென்றால் நஷ்டத்தையும் ஏற்றுக்கொண்டு, வரவேண்டிய லாபத்தைப் பெறாமல் மேற்கொண்டு இதை நடத்துவது நன்மையா என்பதைக் கணிக்க, கணித்துப் பார்த்து அது பற்றி முடிவு எடுக்க, நல்ல ஆலோசனைக்கூற தக்க நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து அதன்மூலமாக விஷயங்களை ஏற்று, தேசத்தின் பாது

காப்புக்கும், தேசத்தின் சுபிட்சத்திற்கும் நன்மையான ஒரு நெறி முறையை அடைய முடியுமல்லாவா? ஆகவே அந்த நிலையிலே அமைச்சரவை கவனத்தைச் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வருமானம் வருவது மட்டும் நமக்குப் போதாது. வந்த வருமானம் விரயம் இல்லாமல், மோசடி இல்லாமல், தவறுகள் இல்லாமல் செம்மையான முறையில் செலவழிக்கப்படுகிறதா என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். அப்படி கவனிக்கிறபோது, சமீபத்திலே நமது மாநில சர்க்கார் செய்திருக்கிற செயல் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி தந்தது. இந்த அரசாங்க ஊழியர்களுக்குக் கெல்லாம் இதற்குமுன் 11 மணியிலிருந்து 5 மணி வரையில் அலுவல் நேரம் என்று இருந்தது, அதிலே இடைக்காலம் (தி லஞ்ச் அவர்) ½ மணி நேரம், அதைக் கழித்து விட்டாலும் 5½ மணி நேரம் வேலை நேரம் என்று கருதப்பட்டது—இதை இப்போது அமைச்சரவை மாற்றி 10½ மணியிலிருந்து 5½ மணி வரையில் என்று அமைத்திருக்கிறது. இடைக்கால ½ மணியைக் கழித்து விட்டால் இப்போது 6½ மணி நேரம் வேலை நேரம் என்ற நிலையை அமைத்திருக்கிறது. அதன் மூலம் வேலை நேரம் அதிகப் படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அதன் மூலமாக என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இன்னும் அறியவில்லை. அமைச்சர்கள் அறிந்திருக்கலாம்—அல்லது அறியவேண்டும். இப்படிச் செய்ததன் மூலமாக சுமார்—ஒரு உத்தேசம்—18 சதமானம் வேலை நேரம் கூடியிருக்கிறதே . . . இல்லையா? . . . 18 சதமானம் வேலை நேரம் கூடியிருக்கிறது என்று சொன்னால், 18 சதமானம் உத்தியோகஸ்தர்களின் தொகை இறங்கியிருக்க வேண்டுமல்லவா? . . . யோசியுங்கள் . . . (கனம் திரு. கு. காமராஜ்: ட்ரேட் யூனியனில் சண்டைக்கு வந்து விடுவார்கள்) . . . நாங்கள் கருத்துக்களைச் சொல்லுகிறோம். சொல்லுவதில் தவறு இல்லை என்று எண்ணுகிறேன். பார்லிமெண்டரி முறையில் சொல்லு வார்கள் 'ஸே' தான் உண்டு எங்களுக்கு, 'வே' உங்களிடம் என்று . . . இந்த மாதிரிப் பார்த்தால் 10 சதமானம்கூடக் குறைய வில்லை என்பதுதான் என்னுடைய அனுமானக் கணக்கு. அதற்கு மேலே உபரியாகப் பல்வேறு இலாகாக்களில் நியமிக்கப் பெற்றவர் களும்கூட இன்னும் ஆங்காங்கே ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். இது அவசர காலம், நெருக்கடி நேரம், பணம் தேவை என்று கருதுகிற காலத்திலே, இந்த மாதிரி விரயம் ஏற்படாமல் காக்க வேண்டும் என்பதையும் அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதற்குமேலே இந்த அவசர காலத்திலே புது நியமனங்களுக்குத் தடையும்கூடப் போட வேண்டும். (Ban over new appointments) என்று சொல்லவேண்டும். அதற்காக சில காரியங்களைப் புதிதாக ஆரம் பிக்கும்போது, இப்போது இல்லாத துறையில் ஈடுபடவேண்டு மென்று சொன்னால், இருக்கிறவர்களை வைத்துக் கொண்டு அந்தக் காரியங்களில் ஈடுபடவேண்டுமென்று நான் சொல்லவில்லை.



அந்த மாதிரியான காரியங்களுக்கு, விஷேச சந்தர்ப்பங்களுக்கு நியமிப்பது என்பது அன்றாட நியமனத்தோடு ஒவ்வாது. 'ஒரு அணு ஆராய்ச்சி சாலை வைக்கிறோம், இங்கு இருக்கிற செக்ரடரி யில் யாரை வைப்பது' என்று கனம் மந்திரி அவர்கள் என்னைக் கேட்டு விடக்கூடாது. விசேஷத் துறைக்கு புதிதாக நியமிப்பதில் ஆட்சேபணையில்லை. ஆனால் பொதுத் துறையில் மேலும், மேலும் ஊழியர்களின் தொகை பெருகிக்கொண்டு போவதைக் கட்டுப் படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதற்கு மேலே, நாம் வருமானத்தை—செலவுக்கு தகுந்த வருமானத்தை பெற முயற்சி செய்யவேண்டும். மத்திய ஆட்சி யிடமிருந்து ஏற்கெனவே நாம் இன்கம் டாக்ஸிலிருந்து 50 சதமானத்தைப் பகுதிப்பணமாக பெற்றுக்கொண்டிருந்தோம். அப்போது கார்ப்பொரேஷன் டாக்ஸ், இன்கம்-டாக்ஸ் ஆகிய இரண்டிலும் ஈவுத்தொகை பெற்றுக்கொண்டிருந்தோம். இப்போது கார்ப்பரேஷன் டாக்ஸைத் தனியாக ஒதுக்கிவிட்டு, இன்கம் டாக்ஸ் மட்டும்தான் பெறுகிறோம். அப்போது இரண்டையும் சேர்த்துப் பிரித்துக் கொடுப்பதில் 100-க்கு 50 என்று இருந்தது, இப்போது இன்கம் டாக்ஸில் நூற்றுக்கு, 66 2/3 பங்கு—அதாவது மூன்றில் இரண்டு பங்கு—பெறுகிறோம் என்று சொல்லுவார்கள். கார்ப்பொரேஷன் டாக்ஸையும் சேர்த்துப் பார்த்தால் காலே-அரைக்கால்கூட வரவில்லை. இதைப்பற்றிச் சொல்லுகிற போது, 'இப்போது நெருக்கடி நேரம் அல்லவா? தேசத்தை பாதுகாக்க வேண்டிய நிலைமை சென்னை மாநிலத்துக்கா உண்டு? இந்தியப் பேரரசுக்கல்லவா உண்டு? அவர்களுக்கு நிதி வசதி வேண்டாமா?' என்று கேட்கலாம். நான் அதை மறுக்கவில்லை—ஏற்றுக்கொள் கிறேன். பணத்தைப் பெறவேண்டுமென்றும் நான் சொல்லவில்லை. அந்தப் பணத்தில் பங்கு பெறுவதற்கு நமக்கு உரிமை உண்டு என்று உரிமையை நிலைநாட்டி விடுங்கள். இந்த நெருக்கடி நிலைமைபோய், யதார்த்த நிலை வந்த பிறகு, உரிமைப் பணத்தைப் பற்றிச் சிந்திக்கலாம்.

அதைப்போலத்தான் விற்பனை வரியிலே சில துறைகளை அவர் களுக்கென்று நாம் துறந்து விட்டோம்—கரும்பு, துணி, புகையிலை ஆகிய இந்த மூன்றையும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அந்த வரியை வசூலிக்கின்ற உரிமையும் அவர்களைச் சேர்ந்தது, வரி விதிக் கின்ற உரிமையும் அவர்களைச் சேர்ந்தது என்று விட்டுவிட்டு, சுமார் 38 கோடி ரூபாய் நாம் பெற்று வருகிறோம். 38 கோடி ரூபாய் எப்பொழுதிலிருந்து, ஆரம்ப காலத்திலிருந்து. இப் பொழுது அந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கிற வருமானம் இருக்கிறதே, அந்த வரி விகிதாசாரம் இருக்கிறதே, அது ஏறி விட்டது. அது அப்படி ஏறியும்கூட, அதனால் பல பல கோடி ரூபாய்கள் வந்தும்கூட, கணக்கிட்டுப் பார்த்தால் நமக்கு கிட்டத் தட்ட 50 கோடி ரூபாய்க்கு மேற்பட்டு வரவேண்டிய நிலை இருந்தும்கூட, அது 38 கோடியில்தான் நிற்கிறது. இதற்கும்

[திரு. சா. கணேசன்] [8th March 1963

அதே சமயத்தில் அவசர கால நிலைமை என்று சொல்லக்கூடும். இந்தக் காலத்தில் நாம் பணத்தை வாங்க வேண்டுமென்று சொல்லவில்லை. அந்த உரிமை நமக்கு உண்டு, அங்கே வரி விகிதாசாரம் எவ்வளவுக்கு ஏறுகிறதோ, அவ்வளவுக்கு நமக்குக் கிடைக்க வேண்டிய பகுதிப் பணமும் ஏறவேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டும். அதை குறிப்பிட்ட நிலையான ஒன்றாக வைத்துவிட்டு, வரிபாட்டுக்கு ஏறிக்கொண்டு போகப்போக, மத்திய அரசின் இத்துறை வருமானம் பாட்டுக்கு ஏறிக்கொண்டு போகப்போக, நமக்குள்ள பங்குத் தொகை மட்டும் பிடித்து வைத்த பிள்ளையார் போல் ஆடாமல், அசையாமல், வளராமல் அப்படியே நிற்கிறது. அங்கு வளர வளர நம்முடைய வருமானமும் வளர—அங்கு வருமானம் தேய்ந்தால் நமக்கும் தேயட்டும், அதைப்பற்றி அக்கறை இல்லை—அந்த உரிமையை நிலை நாட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதற்கு மேலே இங்கே உள்ள பல்வேறு தொழில் துறைகளிலே சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. சிறப்பாக தங்கத் தொழிலாளர்களின் நிலைமையைச் சொல்லலாம். அதே மாதிரி நிலை விவசாயிகளுக்கும் வந்துவிடக்கூடாது என்பதையும் முன்னமேயே நான் விண்ணப்பித்துக்கொண்டேன். தங்கத் தொழிலாளர்களுக்கு வேலை போய்விட்டது. அந்த நிலைமை நம்முடைய சட்ட அமைப்பினால் ஏற்பட்டது. இதைப்பற்றிக் கேட்டால், மத்திய நிதி அமைச்சர் அவர்கள் "வேலை இழந்தவர்களுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய நிலைமையிலே நம்முடைய அரசாங்கம் இல்லை" என்று சொல்லுகிறார்கள். அதன் மீது நான் வாதமிடப்போவதில்லை. அந்த விஷயம் எனக்குத் தெரியும். அதைப்பற்றி இங்கே பேசவேண்டிய வேலையும் இல்லை. அந்தப் பதிலை 'கொள்கை நிலையாக' மனதில் கொண்டு, அதன் விளைவாக ஏற்பட்ட பலாபலன்களை மனதிலே கொண்டு, அதன் மீது என்ன செய்ய வேண்டும், என்ன செய்யப்படாது என்பதை சிந்திப்பதற்குத்தான் இதை உதாரணமாக எடுத்துக்கொண்டேன். அதற்கு பதில் சொல்லுவதற்கு நான் விரும்பவில்லை. வேலையற்றவர்களாக பலர் ஆக்கப்பட்டு விட்டார்கள். அவர்கள் இப்பொழுது 10 கோடிப் பேர்கள் என்று கனம் மொரார்ஜி தேசாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஒப்புக்கொண்டாலும்—10 லட்சம், மன்னிக்கவேண்டும்—10 லட்சம் என்று ஒப்புக்கொண்டாலும், 50 லட்சம் பேர்கள் ஜீவாதாரமான வருவாய் இழந்தவர்களாக இருக்கிறார்கள் என்பது நன்றாக புலப்படுகிறது. என்னுடைய கணக்கில் ஒரு கோடி என்று சொன்னேன். அதை அப்படியே இப்பொழுதும் பிடித்துக்கொண்டிருக்கிறேன். அது இல்லை என்று சொன்னாலும் சரி, 50 லட்சம் பேர்கள் நிச்சயம். துணைத் தொழிலாளர்கள் வேறு பலர் இருக்கிறார்கள். அது வேறு விஷயம். அந்த நிலையிலே அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் செய்யக்கூடிய நிலையில் இன்று ஆட்சி அல்லது அரசாங்கம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அப்படியானால், அவர்களைக் காக்கவேண்டிய பொறுப்பு யாரைச் சேர்ந்தது? நான் வம்புக்காகச் சொல்லவில்லை, வாதம் பண்ண



8th March 1963] [திரு. சா. கணேசன்]

வில்லை. திறந்த மனதோடு, ஈரமுள்ள நெஞ்சத்தோடு சொல்லுகிறேன். சிந்தித்துப் பார்க்கவேண்டிய பொறுப்பு இந்த ஆட்சியைச் சேர்ந்தது அல்லவா? அப்படியானால் அவர்களுக்கு நாம் என்ன வழி, வசதி செய்யப்போகிறோம், அதற்கு என்ன வழி வகைகள் கண்டிருக்கிறோம், என்ன முறையிலே அதை அணுக வேண்டும்? அவர்களுடைய பொருளாதாரம் எப்படி இருக்கிறது? அவர்களுக்கு யாசகம் கொடுப்பது மாதிரி கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அந்தத் தொழிலாளர்களும் தங்களுக்குப் பிச்சை போடவேண்டுமென்று கேட்பார்கள் என்று நான் நம்பவில்லை. அவர்களும் மானமுடையவர்கள், தன்மானம் உடையவர்கள். எப்பொழுதும் தாங்கள் உழைத்து வாழ்வதற்கு இந்த நாட்டில் தங்களுக்கும் உரிமை வேண்டும் என்றுதான் அவர்கள் விரும்புவார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த நிலையிலே அவர்களுக்கெல்லாம் என்ன நிவாரணம் அல்லது வழிவகை செய்யப் போகிறோம் என்பதையும் ஆட்சியாளர்கள் யோசிக்க வேண்டும். அதற்குத் தக்க வழி வகைகளைச் செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு மேலே, "வரி போடுகிறார்கள். ஏதோ கொஞ்சம் வரி ஏறுகிறது" என்று பத்திரிகையிலே செய்தி வந்ததுமே, போஸ்டு ஆபிஸ் ஒன்றில்தான் 5 காசு ஸ்டாம்புக்கு 6 காசு ஒட்டவேண்டுமென்று சொல்லவில்லை, ஏப்ரல் முதல் தேதிக்குப் பிறகு ஒட்டலாம் என்று சொல்லுகிறார்கள். மற்ற இடங்களில் 5 சதவிகிதம் வரி என்றால் 10 சதவிகிதம் விலை ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். வரி கொஞ்சம் போடுகிறார்கள் என்று சொன்னால், 10, 15 சதவிகிதம் விலை ஏறுவதை எல்லாத் துறைகளிலும் காண்கிறோம். அந்த நிலைமையை நமது மாநிலத்திலே ஏராளமாகப் பார்க்கிறோம். ரொம்ப நாட்களாக இருக்கிறது. ரொம்பவும் பணிவோடு விண்ணப்பித்துக் கொள்கிறேன். இதை கவனிக்க வேண்டும். நெருப்புப் பெட்டியை எடுத்துக்கொண்டால், 6 காசு, 5 காசு என்று விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். பெட்டிகளின் மீது அச்சிட்டுமிருக்கிறார்கள். ஒரு கடையிலும் 5 காசுக்கு நெருப்பு பெட்டி கொடுப்பதில்லை. 5 காசு பெட்டிக்கு 7 காசு கொடுக்கவேண்டும், 6 காசு பெட்டிக்கு 8 காசுதான் விலை. இது நியாயமா? இதற்கு என்ன செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை. என்ன செய்தால் சரி என்று அரசாங்கமே முடிவு செய்துகொள்ளட்டும், வேறு ஒன்றுமில்லை. தவறு செய்கிறவர்களை 10 பேர்களை பிடித்தால், பிறகு தவறு நடக்காமல் இருக்கும். இது சர்வ சாதாரண நிலைமையாகப் போய்விட்டது. முன்பு, காலணா வடை விலை என்னவென்றால் ஒரு அணா என்று சொல்லுவார்கள். காலணா வடை என்ற பெயர் சைஸைப் பொறுத்து வந்தது. காலணா வடை ஒரு அணா என்று சொல்லுவதுபோல் 5 காசு பெட்டி 7 காசு, 6 காசு பெட்டி 8 காசு என்று சொல்லக்கூடிய ஒரு நிலை வரலாமா? இதற்கு எதற்காக ஸீல் போடவேண்டும். ஒன்று இன்ன விலை என்று பெட்டியின் மீது ஸீல் போட வேண்டாம், இஷ்டப்பட்ட விலைக்கு விற்கட்டும், ஆட்சேபணை இல்லை. ஸீல் போட்ட பிறகு

[திரு. சா. கணேசன்] [8th March 1963

6 காசு பெட்டியை 6 காசுக்கு விற்காமல், 8 காசுக்கு விற்பது என்ற நிலை ஏற்படுமானால், அது நம்முடைய ஆட்சிக்குப் பெருமையாக இருக்குமா என்பதைச் சிந்தியுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த பட்ஜெட்டிலுள்ள பல்வேறு இனங்களினாலே குறிப்பாக பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் விவசாயிகளும், ஒரே நிலை வருவாய் உடையவர்களும் (அதாவது 'பிக்ஸட் இன்கம் குரூப்') தான். அவர்களுடைய கணக்கை எடுத்து நான் தமாஷாகப் போட்டுப் பார்த்ததில் எனக்குப் பரிதாபகரமாக இருந்தது. ரூ. 500, 1,000 சம்பளம் என்றுதான் தோன்றுகிறது. கடைசியில் கணக்குப் போட்டுப்பார்த்தால், 500 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள் 421 ரூபாய் இன்கம் டாக்ஸ் கட்டுகிறார் ஒரு வருஷத்திற்கு. மாத வருமானம் ரூ. 500 என்றால், வருஷ வருமானம் ரூ. 6,000 என்று வைத்துக்கொண்டு, அப்புறம் கணக்குப் பார்க்கவேண்டும். இன்கம்டாக்ஸ் மாதா மாதம் பிடித்துக் கொண்டாலும், கணக்குப் பண்ணுவதிலே வருஷ வருமானத்தின் மீதுதான் கணக்குப் போடுகிறார்கள். வருஷத்தில் ரூ. 6,000 வருமானம் வந்தால் ரூ. 421 இன்கம்டாக்ஸ். பிராவிடெண்டு பண்டு இந்த மாநிலத்தில் 6 சதவிகிதம், அப்புறம் 5 சதவிகிதம், ஆகக்கூடி 11 சதவிகிதம். அப்படிக் கணக்குப் பார்க்கிறபொழுது, வருஷ வருமானம் ரூ. 6,000-க்கு ரூ. 660 பிராவிடெண்டு பண்டு. பின்னால் அது அவர்களுக்கே வரும் என்பது வேறு விஷயம். இன்ஷூரன்ஸ் ரூ. 160. ரூ. 5,000-க்கு கம்பல்சரி இன்ஷூரன்ஸ். இப்பொழுது கம்பல்சரி இன்ஷூரன்ஸ் இல்லை என்று கனம் அமைச்சர்கள் பதில் சொல்லுவார்கள். போன வருஷம் முதல்தான் கம்பல்சரி இல்லை. ஏற்கனவே பாலிஸி எடுத்துக்கொண்டவர்கள் லாப்ஸாக விடுவார்களா? விடலாமா? அவர்கள் இன்ஷூரன்ஸ் பிரிமீயத்தைக் கட்டித் தீரவேண்டிய கடமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். கார்ப்பரேஷனுக்கு ப்ரொபெஷன் டாக்ஸ் கொடுக்கிறார்கள். அது ரூ. 35. ரூ. 500 சம்பளம் வாங்குகிறவர்கள் ரூ. 75, 80-க்கு குறைந்து வாடகை கொடுத்து குடியிருப்பது சுலபமில்லை. ஆக, வருஷத்திற்கு ரூ. 6,000 சம்பளத்தில். இது மாதிரி நிச்சயம் கொடுத்துவிடவேண்டுமென்ற நிலை இருக்கிறது, அதாவது வருஷத்திற்கு ரூ. 2,276 கொடுத்துவிடவேண்டியதாக இருக்கிறது. மாதம் ஒன்றிற்கு ரூ. 190 கணக்குக்கு வருகிறது. கடைசியில் மாதத்திற்கு கையில் கிடைப்பது ரூ. 310. ரூ. 310 வைத்துக் கொண்டு ஒரு அஸிஸ்டெண்டு செக்ரடரி போன்ற உத்தியோகத்தில் இருப்பவர் கார் வைத்துக்கொள்ளவேண்டும், பிள்ளைகளுக்கு கல்வி கொடுக்கவேண்டும்—ஏனென்றால், அவர்களுக்கு கல்விச் சலுகை கிடையாது, ரூ. 500 சம்பளம் வாங்குகிறார்கள்—துணிமணி வாங்கிக் கொடுக்கவேண்டும், மின்சார வசதி செய்து கொள்ளவேண்டும், பொழுதுபோக்கவேண்டும். கோவிலுக்குப் போவதையும் நான் பொழுதுபோக்கில்தான் சேர்க்கிறேன் அல்லது சினிமாவுக்கு போகவேண்டும், பீச்சுக்கு போகவேண்டும். அவர்களுக்கு



8th March 1963] [திரு. சா. கணேசன்]

ஏதாவது ரெக்ரியேஷன் வேண்டும். இழந்த சக்தியை அவர்கள் மீண்டும் பெறவேண்டாமா? இதற்கெல்லாம் போக, மிச்சத்தை சாப்பாட்டிற்கு வைத்துக்கொள்ளவேண்டும். இந்த நிலை எவ்வளவு சிரமமாக இருக்கும் என்பதை யோசிக்கவேண்டும். இந்த மாதிரியே 750 ரூபாய் உத்யோகஸ்தர் 498-ம், 1,000 ரூபாய் உத்தியோகஸ்தர் 621-ம், 1,250 ரூபாய் உத்தியோகஸ்தர் 707-ம், 1,500 ரூபாய் உத்யோகஸ்தர் 806-ம் தான் ஒவ்வொரு மாதமும் பெறுகிறார்கள். இந்த நிலையிலே ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது 3 சதவிகிதம் கம்பல்சரி ஸேவிங் என்று ஒன்று வந்திருக்கிறது. இது மற்ற மாகாணங்களுக்கு பொருந்துமா, பொருந்தாதா என்பது எனக்குத் தெரியாது. எல்லா மாகாணங்களுடைய பட்ஜெட்டுகளையும் நான் அலசிப் பார்க்கவில்லை. இந்த மாகாணத்தின் பட்ஜெட்டை முழுவதும் அலசிப் பார்த்தேன் என்று சொல்லக்கூடிய நிலையிலும் இல்லை. ஆறு சதமானம், பிறகு 5 சதமானம், ஆக 11 சதமானம் பிராவிடெண்டு பண்டு கட்டவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் நோக்கமானது நமக்குத் தெரியும். அவசர நிலையை ஒட்டித்தான் அதைச் செய்தோம். அப்படியிருக்கையில் மேலும் 3 சதவிகிதம் கம்பல்சரி ஸேவிங் ஏன் வரவேண்டும்? இதை விட்டுவிடலாம். இல்லை, விட முடியாது என்று சொன்னாலும், போஸ்டு ஆபீஸில் போடுவதற்கு அனுமதிக்கிறார்கள். போஸ்டு ஆபீஸில் போடுவதற்கு பதிலாக எந்த ரெகக்னைஸ்டு பாங்கிலும் போடலாம் என்று சொல்லலாம். அப்படிச் செய்வதால் என்ன நன்மை என்றால், மனிதனுக்கு ஒரு அபாயம் வந்திருக்கிறது என்றால், அவசிய தேவை, இன்றியமையாத தேவை ஒன்று வந்திருக்கிறது என்றால், அந்தப் பணத்தை ரூ. 100, ரூ. 200, ரூ. 500 பாங்கில் சேர்த்து வைத்திருந்தால், அந்தப் பாங்கிலேயே அதை மார்ட்கேஜ் செய்து 2 சதவிகிதம் கூடுதலான வட்டிக்கு கடன் பெற்றுக்கொள்ளலாம். இப்பொழுது தங்கமும் போய்விட்டது. ஆகவே, தங்கத்தை ஈடுவைத்து கடன் வாங்க முடியாது. சேர்த்து வைத்திருக்கிற பணத்திலிருந்துகூட அவசரத் தேவைக்குக் கடன் வாங்க முடியாத நிலைமை இருந்தால், அது மனிதனுடைய வாழ்க்கைக்கு உபயோகம் உள்ளதாக இருக்குமா என்பதை நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு மேலே, சில நண்பர்கள் பாதுகாப்புத் தொழிலைப் 11-00 p.m.
பற்றியும், சோழவரம் ஏரியைப் பற்றியும் பேசினார்கள். ஆவடிக்கு அருகே ஒரு பாதுகாப்பு சாதனத் தொழிற்சாலையைக் கட்டுவதாக இருக்கிறார்கள். எங்கே கட்டினாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை. அம்மாதிரி ஒரு தொழிற்சாலை தேவை என்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம். ஆனால் ஆற்று நீர் எங்கு இருக்கிறதோ, அங்கு கட்டினால் நலமாக இருக்கும். தினம் 30 லட்சம் காலன் தண்ணீர் வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படியிருந்தால் இதை ஆவடியிலே கட்டுவானேன்? எந்த ஜில்லாவில் வேண்டுமானாலும்—கோயம்புத்தூர் ஜில்லாவிலோ அல்லது சேலம் ஜில்லாவிலோ வேண்டுமானாலும்—இதை ஏற்படுத்தட்டும். எங்கள் ஜில்லாவுக்கு

இது நிச்சயமாக வராது. ஏனென்றால் அங்கே தண்ணீர் கிடையாது. ஆகவே, சுயநலம் காரணமாக நான் இதைச் சொல்லவில்லை. எங்கே நல்ல நிரந்தரமான ஓட்டத்தோடு கூடிய ஆறு இருக்கிறதோ அங்கே இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவது நலமாக இருக்காதா என்பதை யோசிக்கவேண்டும். முப்பது லட்சம் காலன் தண்ணீரும் அப்படியே விஷமாக ஆகிவிடாது. கொஞ்சம் தண்ணீர் விஷமாக ஆககலாம். ஆனால் பாக்கித் தண்ணீரை ஆற்றிலேயே விட்டுவிடலாம். எங்கே மூலப்பொருள் கிடைக்கிறதோ, அங்கே தொழிற்சாலையை ஏற்படுத்துவதுதான் சரி. வேண்டிய சாதனங்கள் இருக்கும் இடத்தில் ஏற்படுத்துவது தான் முறை. ஆவடியில் கட்டுவதால் சுமார் 7,500 ஏக்கர் நன்செய் நிலம் தண்ணீர் அற்றுப்போகும் என்று சொல்லப்படுகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிற இந்த சமயத்தில், உணவு பறிபோகக்கூடிய நிலைமை இல்லாமல் இதைச் செய்ய முடியாதா என்பதை யோசிக்க வேண்டும். ஆகவே, இதை நன்றாகச் சிந்தித்து, எது நன்மை தரக்கூடியது, எது பயன்தரத் தக்கது என்று பார்த்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். இந்த அவசர கால நிலைமையிலே தேசீயப் பாதுகாப்புக்காக என்னென்ன காரியங்களை எல்லாம் நாம் செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் இம்மியும் குறையாமல் செய்யக் கடமைப்பட்டவர்கள் நாம். அதற்காக நிதி வசூல் செய்வதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் பள்ளிச் சிறுவர்களையும், ஆசிரியர்களையும் மார்க்கெட்டுக்குப் போய் உண்டியல் குலுக்கி வரச் செய்வதை பல இடங்களிலே நாம் இன்று பார்க்கிறோம். உங்களைப் போன்ற, எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் வீடு வீடாகப்போய் வசூலிக்கலாம். அது நியாயம், அவசியம் என்றும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் பள்ளிச் சிறுவர்களையும், ஆசிரியர்களையும் எதற்காக உண்டியலைக் குலுக்கச் சொல்ல வேண்டும்? ஆசிரியர்களுக்கு பயந்து கொண்டு பையன்கள் அவ்வாறு குலுக்குகிறார்கள். மேலே இருக்கிற மானேஜ்மெண்டுக்கோ, இன்ஸ்பெக்டருக்கோ பயந்து ஆசிரியர்கள் நடக்கிறார்கள். ஒரு உபாத்தியாயர் இவ்வளவு ரூபாய் பங்கு தர வேண்டுமென்று எழுத்து மூலமாக இல்லாவிட்டாலும், அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை வசூல் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இது எனக்கே வெட்கமாக இருக்கிறது. என்னுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கு. என்னுடைய தேசத்தைப் பாதுகாப்பதற்கு, நான் கொடுப்பதற்கு இஷ்டமில்லை என்பதுபோல் வேறு யாரோ அதிகாரி வந்து நிற்பதானது, திருவள்ளுவர் சொல்வது போல்,

"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றான் இரவு"



என்பது போல் இருக்கிறது. ஆட்சியிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் மக்களிடம் சென்று தா என்று இரப்பதும், கொடுக்கிறாயா இல்லையா என்று அச்சுறுத்துவதுபோல் இருக்கிறது. இதை மனதிலே வைத்துக் கொண்டு பள்ளி மாணவர்களையும், ஆசிரியர்களையும், இந்த முறையிலே செல்வதைத் தடுக்க வேண்டும். அதன் மூலமாக நமது அரசாங்கத்திற்கு நல்ல பெயரும், சிறப்பும் ஏற்படும் என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் 1963-64-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, கனம் நிதி அமைச்சர் அவர்களால், இம்மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதனை ஒட்டிச் சில கருத்துக்களை இம் மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிற கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாக இருக்கின்றனவோ இல்லையோ, நல்ல தமிழ் மணம் கமழக்கூடிய வகையில், இந்த அறிக்கை உருவாக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இந்த நிதிநிலை அறிக்கையின் விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய உறுப்பினர்கள் பலருடைய பேச்சிலும்கூட நல்ல தமிழ் மணம் கமழ்கிற அளவுக்கு, நல்ல தமிழ் வளர்கிற அளவுக்கு, உவமைகள், உருவகங்கள், கதைகள், மேற்கோள்கள் ஆகிய பலவற்றை எடுத்துக்காட்டுகிற அளவுக்கு மிக்க மகிழ்ச்சி தரத்தக்க வகையிலே அமைந்திருந்தது வரவேற்கத் தக்கதாகும்.

நிதிநிலை அறிக்கை வெளிவருகிறது என்ற உடனேயே, மக்கள் முதலாவதாக எதிர்ப்பார்ப்பது புதிய வரிகள் எவையேனும் போடப்பட்டிருக்கின்றனவா என்பதுதான். இரண்டாவதாக, புதிய வரிகள் போடப்பட்டிருந்தால், சமுதாயத்தினுடைய எந்தெந்த நிலையினரை அவை பாதிக்கத் தக்கதாக அமைந்திருக்கின்றன என்று பார்க்கிறார்கள். மூன்றாவதாக, துண்டு விழுகிற வரவு-செலவுத் திட்டமா அல்லது மிச்சப்படுகிற வரவு-செலவுத் திட்டமா என்று பார்க்கிறார்கள். நான்காவதாக துண்டு விழுகிற வரவு-செலவுத் திட்டமாக இருந்தால், அந்தத்துண்டு விழுகிற தன்மை எப்படி சரிக்கட்டப்படுகிறது என்று பார்க்கிறார்கள். அதற்குப் பிறகுதான் நிதிநிலை அறிக்கையிலுள்ள கருத்துக்களில் நுழைந்து, வரவேற்கத்தக்கதாக இருந்தால் அதை வரவேற்கவும், திருத்தி அமைக்கத் தக்கதாக இருந்தால் திருத்தி அமைக்கவும், கண்டிக்கத் தக்கதாக இருந்தால் கண்டிக்கவும், மாற்றத் தக்கதாக இருந்தால் மாற்ற வேண்டுமென்று வற்புறுத்தவும் ஆன நிலைமைகள் ஏற்படுகின்றன. அந்த முறையிலே இந்த நிதிநிலை அறிக்கை வந்தவுடனே, மக்கள் முதலிலே எதிர்பார்க்கிற ஒன்று, புதிய வரிகள் போடப்பட்டு இருக்கின்றனவா, இல்லையா என்பதுதான். அத்தகைய முறையிலே புதிய வரிகள் இப்போதைக்கு இந்த நிதி

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1963

நிலை அறிக்கை மூலமாகப் போடப்படவில்லை என்ற செய்தி வந்தவுடனே அது வரவேற்கத்தக்கது என்ற கருத்தினை நான் செய்தித்தாள் நிருபர்களிடத்தில் கூறினேன். அது எடுத்த எடுப்பிலே ஒவ்வொருவருக்கும் வருகின்ற ஒரு கருத்து ஆகும். எதற்கு இதை நான் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த நிதிநிலை அறிக்கையில் வரிகளே போடவில்லையே, கண்டித்துரைப்பதற்கு வாய்ப்பு ஏற்படவில்லையே என்று எதிர்க்கட்சிக்காரர்கள் ஏங்குகின்ற தன்மையிலே இது இருக்கிறது என்று ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறினார்கள். அந்த நிலைமையில் எதிர்க்கட்சியினர் இல்லை என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். புதிய வரிகள் போட்டால் கண்டிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று கருதி, புதிய வரிகளைப் போடுகின்ற நிலைமையை எதிர்பார்க்கிற நிலை எங்களுக்கு ஏற்படவில்லை. புதிய வரிகள் இல்லை என்றவுடனே, நாங்கள் அந்த அளவுக்கு, வரவேற்கத்தக்க சூழ்நிலைதான் இருந்தது என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகத்தான் இதை எடுத்துச் சொல்கிறேன்.

புதிய வரிகள் போடுகின்ற நிலைமை இந்த நிதிநிலை அறிக்கையில் இப்போதைக்கு இல்லை என்றாலும், இந்தத் தொடர் கூட்டத்திலே புதிய வரிகள் போட்டு, அதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியத்தை அமைச்சரவை ஏற்படுத்தியிருந்திருக்கிறது. எதிர்க்கட்சியினர்க்குப் பேசுவதற்கு அவல் கிடைக்கவில்லை, வெறும் வாயை மென்று கொண்டிருக்கிறார்கள் என்ற தன்மையிலே சில ஆளும் கட்சியினர் எடுத்துக் கூறினார்கள். அப்படி அவல் கிடைக்காத நிலைமையை, புதிய வரிகள் போடாத நிலைமையை என்றென்றும் இந்த அமைச்சரவை ஏற்படுத்துமேயானால், அது வரவேற்கத்தக்க ஒன்றாக அமையும். அந்த நிலைமையும்கூட இல்லாமல், தொடர்க்கூட்டம் ஆரம்பித்த உடனேயே, நிலவரியைப் பற்றியும், நீர்க்கூலியைப் பற்றியும் மசோதாக் கொண்டுவரப்பட்டுக் கருத்துக்கள் பரிமாறப்பட்டு, எதிர்க் கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டு, வரிகளை மறுத்துரைக்கவும், குறைக்க வேண்டுமென்று வற்புறுத்தவும்கூடிய சூழ்நிலையும் ஏற்படுத்தப்பட்டுதானிருந்தது. புதிய வரிகள் மக்களை பாதிக்கத்தக்க அளவுக்கு அமைந்திருக்கின்றனவா, இல்லையா, என்று பார்க்கும்போது நாட்டு மக்களால் தாங்க முடியாத அளவுக்கு வரிகளின் அளவு உயர்ந்திருக்கிறது என்பதை அனைவரும் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். மத்திய அரசாலும், மாநில அரசாலும் புதிய வரிகள் போடப்படுமோ என்று அச்சப்பட்டுக் கொண்டிருந்த நிலை நாட்டிலே இருந்தது என்பதை அனைவரும் அறிவோம். இந்தியப் பேரரசு ரூ. 275½ கோடிக்குப் புதிய வரிகள் போட்ட உடனேயே, ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் ஆகியோர் தாங்க முடியாத அளவுக்கு, மாநில அரசும் புதிய சுமையை ஏற்படுத்துமோ என்று அச்சப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில், புதிய வரிகள் இல்லை என்ற நிலைமை ஏற்பட்ட உடனே ஓரளவுக்கு மக்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால், வரிகளைத் தாங்கக்கூடிய அளவிலும், கொடுக்



8th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கக்கூடிய அளவிலும்தான் இந்த நாட்டு மக்கள் இருக்கிறார்கள் என்றும், எந்த வகையிலும் அவைகள் அவர்களைப் பாதிக்கா என்றும் ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் சிலர் எடுத்துக் கூறினார்கள். ஆனால் மாநில அரசு புதிய வரியை இப்போதைக்குப் போடவில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறதே தவிர, இந்த மாநிலத்திலே வாழ்கிற மக்கள் புதிய வரிகளைக் கட்டித் தீர வேண்டிய நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுத்துரைப்பதற்கில்லை.

மத்திய அரசு வரிகளைப் போட்டாலும் கூட, அதாவது மத்திய அரசு சுமார் 275 கோடி ரூபாயை வரி மூலமாக வசூல் செய்வதாக இருந்தாலும் கூட நீதி நிர்வாகம், காவல் துறை போன்ற நிர்வாகத் துறைகளின் மூலம் வசூல் செய்யும் பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாக இருக்கிறது. மத்திய பேரரசுக்கு அளிக்கக்கூடிய தொகையிலிருந்து ஓரளவுக்கு மாநில அரசுக்குக் மானியம் கிடைக்கிறது. அந்த அடிப்படையில்தான் மாநில அரசு இருக்கிறது. பொதுவாகப் பார்க்கும்போது இந்நாட்டு மக்கள் மூன்று வகைகளில் வரிகளைச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மத்திய அரசு விதித்துச் செலுத்த வேண்டிய வரிகள், மாநில அரசு விதித்துச் செலுத்த வேண்டிய வரிகள், அத்துடன் உள்ளாட்சி மன்றங்கள் விதித்துச் செலுத்தவேண்டியவர்களாக இருக்கள் எல்லாவற்றையும் மக்கள் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இப்படி மக்கள் மூன்று இனங்களில் மூன்று விதங்களில் வரிகளைச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாநில அரசு வரி விதிக்காவிட்டாலும் கூட, மற்ற ஆட்சிகள் விதிக்கக்கூடிய வரிகளை அவர்கள் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுதுள்ள நிதி நிலை அறிக்கையில் எந்தவிதமான வரியும் விதிக்கவில்லை என்றாலும் கூட, மத்திய அரசு விதித்த புதிய வரிகளை மக்கள் கொடுக்க வேண்டியவர்களாகத்தான் இருக்கிறார்கள். அந்த முறையில் இந்த வரவு-செலவு திட்டத்தில் மாநில அரசுக்கு வரி செலுத்த வேண்டியதாக இல்லாவிட்டாலும் இந்திய பேரரசுக்குக் கட்ட வேண்டிய வரிகள் இருக்கின்றன. அதன் காரணமாக விலைவாசிகள் உயருகின்றன. இப்பொழுதுள்ள நிலைமையில், மக்கள், உயருகின்ற விலைவாசிகளைத் தாங்கக் கூடிய நிலையில் இருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் உள்ளபடியே அவர்கள் தாங்க முடியாத நிலையில் தான் இருக்கிறார்கள். இதை யாரும் மறுப்பதற்கு இல்லை. மேலும் நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள், தம்முடைய பதினாறு ஆண்டு காலத்து அனுபவத்தை யொட்டி இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். மிகவும் திறமையாகத்தான் தயாரித்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையை நல்ல முறையில்தான் உருவாக்கி இருக்கிறார்கள். அவர் குறிப்பாக ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். " நான் புதிதாக ஒரு வரியையும் விதிப்ப

தாக உத்தேசிக்கவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைச் சொன்னவுடனேயே அது வரவேற்கக்கூடியதாகத்தான் இருக்கிறது. அப்படிச் சொல்லும்போது அவர் "நான்" என்ற வார்த்தையை அழுத்தந்திருத்தமாகத்தான் சொல்லி இருக்கிறார்கள். அவர் இப்படிச் சொல்லி இருப்பதைப் பார்த்தால், வேறு யாரோ வரி போட இருக்கிறார்கள் என்பதுதான் அதிலிருந்து புலப்படுகிறது. அதாவது இந்தியப் பேரரசு மேலும் வரிபோட இருக்கிறது என்பது தெரியவருகிறது. புதிதாக எந்த வரியையும் விதிப்பதாக உத்தேசம் இல்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அவர் இப்படிச் சொல்லி இருக்கிறாரே தவிர, அவர் சொல்லி இருப்பதற்கு அடுத்த இரண்டு வரிகளையும் கவனிக்க வேண்டும். புதியதாக எந்த வரியும் விதிக்கப்போவதில்லை என்று சொல்லி விட்டு, புதிதாகப் போடப்போகிற இரண்டு வரிகளைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அதாவது "மத்திய விற்பனை வரி விகிதத்தை உயர்த்துவதென மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்த வரியை மத்திய அரசாங்கம் விதித்த போதிலும், அதை வசூலித்துப் பயனடையப் போவது மாநில அரசாங்கமாகும்." என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிச்சொல்லி விட்டு துண்டு விழக்கூடிய இரண்டு கோடி 92 லட்சம் ரூபாயை ஈடு செய்வதற்கு மோட்டார் கார்கள், காமிராக்கள் போன்ற ஆடம்பர பொருள்களின் மீது ஒரே மாதிரி விகிதத்தில் விற்பனை வரி விதிக்கும் கொள்கையை மாநில அரசாங்கங்கள் பின் பற்றும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையில் இந்த மாநிலத்திலிருந்து அடுத்த மாநிலத்திற்கு சாமான்களை விற்றாலும், அடுத்த மாநிலத்திலிருந்து இந்த மாநிலத்திற்கு விற்றாலும் வரி கூடுதலாகப் போடப்படும். அதன்மூலம் தொகை கொஞ்சம் எதிர்பார்க்கப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. இந்த முறையில் பார்த்தாலும் அதிகப்படியாக இந்த மாநில மக்களின் மீது மேலும் இரண்டு புதிய வரிகள் விதிக்கப்படபோவதாகத் தான் தெரிய வருகிறது. இந்த வரிகளையும் மக்கள் கட்டியே தீர வேண்டும் என்றும் ஏற்படுகிறது. இந்த நிதி நிலை அறிக்கையில் வரியே புதிதாகக் குறிப்பிடப்படவில்லை என்று கூறப்பட்டாலும், புதிய வரிகள் இரண்டு, மக்கள் தலைமீது விழத்தான் போகின்றன. இப்படி மாநில மக்கள் இந்த வரியை கட்டியே தீரவேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இன்னும் இரண்டு பெருத்த வரிகள் பின்னால் வர இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அரசு வரிகளைப் போடும்போது மக்கள் அதைத்தாங்கக்கூடிய அளவில் இருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால் சில பல ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, கிராமத்திலுள்ள விவசாய மக்கள், போடக்கூடிய வரிகளைத் தாங்கக்கூடிய அளவில்தான் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். எதிர்க் கட்சி உறுப்பினர்கல், பொதுவாக ஏழை மக்கள் தாங்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள் என்று சொல்லும்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் அதை மறுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.



எந்த வரி விதித்தாலும் அதைக் கொடுக்க ஆட்சேபணை இருக்க முடியாது என்ற அளவில் ஆளும் கட்சி உறுப்பினர்களில் சிலர் பேசி இருக்கிறார்கள். ஆனால் கனம் அமைச்சர் அவர்கள், "நான் புதிய வரிகளை விதிப்பதாக உத்தேசிக்கவில்லை" என்று சொன்னபோது, ஆரவாரம் எழுந்தது. அது எதைக் குறிப்பிடுகிறது என்றால், ஏற்கெனவே தாங்க முடியாத அளவில் வரி பளு இருக்கிறது, இன்னும் புதியதாக வரும் வரிகளைத் தாங்க முடியாது என்பதைத்தான். எனவேதான் புதியவரி இல்லை என்று சொன்னவுடனே ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த முறையில்தான் இம்மன்றத்தில் எழுந்தது ஆரவாரம். இதுதான் ஆரவாரம் என்பதிலிருந்து தெரிய வருகிறது. புதிய வசதிகள் ஏற்பட்டுள்ளன என்றபோது ஆரவாரம் இல்லை. புதிய வரி இல்லை என்றவுடன்தான் ஆரவாரம் ஏற்பட்டது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, கிராம மக்கள் இந்த வரியை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே நாட்டின் நிலைமை அதைக் காட்டவில்லை. நெருக்கடி ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில், எல்லை போராட்டத்தால் ஏற்பட்டிருக்கிற அதிகப்படியான செலவைச் சரிக்கட்டுவதற்கு போடப்பட்டிருக்கிற வரிகளாக இருப்பதால் அவற்றைக் கட்டியே தீர வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் வரிகளைத் தாங்கக்கூடிய அளவில் இருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. நெருக்கடியான நிலைமையில் பெரும் செலவை தாங்கிக்கொள்ளுகிற அளவுக்கு மக்கள் மனப்பக்குவத்தை பெற வேண்டும், எந்தக் கஷ்டத்தையும் தாங்கிக் கொள்ளவேண்டும் என்று இருக்கிறார்கள். இதை எதற்குச் சொல்லுகிறேன் என்றால், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிற நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை உணர்த்துவதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். இந்த நிலைமையில் இந்தியாவின் தலைமை அமைச்சர் பண்டித நேரு அவர்கள் ராஜஸ்தானில் அனுமான்காட் என்ற இடத்தில் பேசுகிற போது என்ன சொல்லி இருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். இதைத் தெளிவுபடச் சொல்லி இருக்கிறார். இந்தப் புதிய வரிகள் மக்களை பாதித்தே தீரும் என்றும், இந்த நாட்டின் விடுதலையை உத்தேசித்து மக்கள் விடுதலை வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று நினைத்தால் அந்த அடிப்படையில் மக்கள் இந்தச் சுமையைத் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும் என்றும் அவர் எடுத்துச் சொல்லி இருக்கிறார். நெருக்கடியான நிலைமையில் புதிய வரிகளை மக்கள் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதையும், மக்கள் உணர வேண்டும் என்பதையும் அவர் சொல்லி இருக்கிறார். இதில் எந்தவிதமான ஐயப்பாட்டிற்கும் இடம் இல்லை.

மத்திய பேரரசின் வரிகள் ஏழை எளிய நடுத்தர மக்களின் வாழ்க்கை நிலைமை பாதிக்கப்படுகின்ற அளவுக்கு அமைந்து இருக்கின்றன என்பதை நாம் நன்றாக உணர வேண்டும். ஏழை எளிய நடுத்தர மக்கள் பாதிக்கக்கூடிய அளவில் இப்பொழுது மண்ணெண்ணெய், தேயிலை, காபி, சோப், சிகரெட், பீடி போன்ற

வைகளுக்கு ஏராளமான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் சுமார் 867 கோடி ரூபாய் பாதுகாப்புச் செலவிற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் போடப்பட்ட திட்டங்களை நிறைவேற்றவேண்டிய நிலைமையிலும் இந்திய பேரரசு இருக்கிறது.

இப்படி ஒவ்வொரு இனத்திலும் அதிகப்படியான செலவு செய்ய வேண்டியதாக மத்திய பேரரசுக்கு இருக்கிறது என்பதை உண்மையிலேயே யாரும் மறுப்பதற்கு இல்லை. மற்றும் கிடைக்கின்ற பணத்தை வைத்துக்கொண்டு பல திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய வருமானத்தைத் தேடிக்கொள்ள வேண்டியதாகவும் இருக்கிறது. வரக்கூடிய வருமானத்தை வைத்துக்கொண்டு ஏற்படுகின்ற செலவை ஈடு செய்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது மத்திய பேரரசு. தேவையான செலவு அவசியமான செலவு முதலியவைகளைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஆனால் போடப்பட்ட திட்டங்களிலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்துக்கொண்டு செலவை சரிக்கட்டக்கூடிய அளவில் வருமானம் வரவில்லை. அதற்கு வேண்டிய வசதியும் ஏற்படவில்லை. அதன் விளைவாக எதிர் பார்க்காத அளவில் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன. ஆனால் மக்களுக்கு வசதி குறைவாக இருக்கிறது. இத்துடன் நமது மத்திய பேரரசு இந்த அதிகப்படியான செலவைச் சரிக்கட்டுவதற்கு 151 கோடி ரூபாய் அளவில் நோட்டுகளை அச்சடித்துக் கொடுக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி அச்சடித்துக் கொடுத்தால், பண வீக்கம்தான் ஏற்படும். அதன் மூலம் விலைவாசிகள் இன்னும் அதிகப்படியாக உயருவதற்கு இடம் ஏற்படும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனால், வருங்காலத்தில் நடுத்தர ஏழை எளிய மக்கள் எவ்வளவு தூரம் கஷ்டத்திற்குள்ளாவார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். தாங்க முடியாத சூழ் நிலைக்குக் கொண்டுபோய் விடும் இது. ஆகவே இப்படிப்பட்ட கஷ்டத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டியதற்கு தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஏழை எளிய பாட்டாளி மக்கள் தாங்கக்கூடிய அளவில் நிலைமை ஏற்பட வேண்டும். சில பல ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது கிராமங்களில் வாழக்கூடிய மக்கள், பெருங்குடி மக்கள், எவ்வளவு வரி போட்டாலும் அதைத் தாங்கக்கூடிய அளவில் இருக்கிறார்கள் என்று கூறினார்கள். அதற்கு வேண்டிய சில புள்ளி விவரங்களையும் சொன்னார்கள். அந்த முறையில் பார்க்கும்போது, சாதாரணமாக நாட்டில் வாழ்கின்ற உழவர் பெருங்குடி மக்களுடைய நிலைமை தாழ்வுற்றதாக இருக்கிறது. பொருளாதார நிபுணர்களுடைய கணக்குப்படி பார்த்தால், சாதாரண உழவுத் தொழிலாளியின் குடும்பத்திற்கு இப்பொழுது இருக்கிற நிலையில், ஆண்டு ஒன்றுக்கு 447 ரூபாய் வருமானம் வருகிறது என்றும், அந்தக் குடும்பத்தினுடைய ஆண்டு சராசரி செலவு 461 ரூபாய் என்றும் தெரிய வருகிறது. அதன் மூலமாக ஒரு உழவுத் தொழிலாளியின்





குடும்பத்திற்கு இன்றைய நிலையில் 14 ரூபாய் துண்டு விழும் அளவுக்கு அவர்களுடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டங்கள் அமைகின்றன. அது மட்டுமல்லாமல், கிராமங்களில் வாழும் விவசாயத் தொழிலாளர்களிலே எத்தனை பேர் கடன்படுகிற அளவுக்குக் கடன்பட்டு, அதன் காரணமாகத் தொல்லைப்படும் அளவுக்கு இருக்கிறார்கள் என்று கணக்கிடும்போது, ஏறத்தாழ 45 சத விகிதத்தினர் கடன்பட வேண்டிய அவசியத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்று எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். கடன்பட்டு இருக்கக்கூடிய ஒவ்வொரு குடும்பமும் சராசரி ஆண்டுக்கு 105 ரூபாய் அளவுக்குக் கடன்பட வேண்டிய அத்தகைய நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

நாட்டினுடைய பொதுவருமானத்தின் நிலைமைகளைப் பார்த்தால், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிக்கொண்டிருக்கும் நிலைமையில், நாட்டினுடைய பொருளாதார அமைப்பு 1951-லிருந்து 1958-59 வரையில் கணக்கிடும் அளவிலே பார்க்கும்போது, 33.8 சத விகிதம் நாட்டினுடைய பொது வருமானத்தில் உயர்வு ஏற்பட்டிருப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. தனி நபருடைய வருவாய் அளவைக் கணக்கிடும்போது, நாட்டின் பொதுவருமானம் பெருகிக்கொண்டிருக்கும் அளவுக்குத் தனி நபருடைய சராசரி வருமானம் உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால், உயரவில்லை என்பது தெரிய வரும். 17.7 சத விகிதம் தனி மனிதனுடைய வசதிகள் பெருகவும், நாட்டினுடைய வசதி 33.8 சத விகிதம் பெருகவுமான நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதைப் பொருளாதார நிபுணர் சொல்லும்போது, மக்கள் எண்ணிக்கையினுடைய பெருக்கத்தின் தன்மை தனி நபருடைய வருமானத்தின் அளவைக் கீழே இறக்கி காட்டுகிறது என்று கூறுகிறார்கள். நாட்டின் பொது வருமானம் 33.8 சத விகிதத்திற்கு உயர்ந்தாலும் தனி மனிதனுடைய வருமானம் 17.7 சத விகிதம் அளவுக்குத்தான் உயர்ந்திருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், தாங்க முடியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கும் தன்மையில் இந்த மாநிலம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான். மேலும், இந்த நிலைமையைத்தான், கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அப்படிச் சுட்டிக்காட்டுகின்ற அத்தகைய நிலைமையில், அரசினர் நிதிக் கமிஷனுக்கு இந்த அரசாங்கத்தின் சார்பாகக் கொடுத்திருக்கிற அறிக்கையில், இந்த மாநிலத்தின் சூழ்நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள்.

"Considering that Madras ranks only sixth in the country in 'per capita' income, the incidence of State Taxation is exceptionally heavy in the State, a fact which the present Finance Commission should take sympathetic note of, in recommending devolution and *adhoc* grants."

என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அத்துடன்,

"The State Government's representatives pointed out that even this target was unrealistic considering the high level of prevailing taxation and the low level of 'per capita' income in the State." என்றும் சொல்லியிருக்கிறார்கள். "மத்திய அரசு பகிர்ந்தளிக்கும் முறையையும், தற்காலிகக் கோரிக்கைகளையும் சிபாரிசு செய்யும் பொழுது, தமிழ்நாடு சராசரி வருமானத்தில் ஆறாவது இடத்தைத்தான் பெற்றிருக்கிறது என்பதையும், மாநில வரிப்பளு மாநிலத்தில் தவிர்க்க முடியாத அளவு மிக அதிகமாக இருக்கிறது என்பதையும் தற்போதைய நிதிக் குழு அனுதாபக் கண்ணோட்டத்துடன் நோக்க வேண்டும். இம் மாநில அரசாங்கத்தின் பிரதிநிதிகள், மாநிலத்தில் இப்பொழுதுள்ள வரிச் சுமையின் உயர்ந்த அளவையும், சராசரி வருமானத்தின் தாழ்ந்த அளவையும் எடுத்துக்கூறி இந்தக் குறிக்கோள்கூட நடைமுறை சாத்தியமற்றது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள்" என்று கூறுகிறது. எதற்கு இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், தாங்க முடியாத அளவுக்குத்தான் நிலைமைகள் இருக்கின்றன என்பதை உணர்த்தவேயாகும். எனவே வரி போடுவதன் மூலமாக மேலும் மேலும் ஏழை எளிய நடுத்தர வகுப்பு மக்களைப் பாதிக்கின்ற அளவுக்குச் செல்லாமல், வருவாய்த் துறையைப் பெருக்குவதற்கான அத்தகைய முயற்சிகளில் அரசு ஈடுபடவேண்டும் என்பதை வற்புறுத்துகிறேன். மத்திய அரசிலிருந்து பெறும் மானியக் கோரிக்கையை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக ஆக்க முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக ஆக்குவதற்கான முயற்சிகளை இந்த மாநில அரசு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்வதற்காகவும் இதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது மத்திய அரசினர் இருநூற்றி எழுபத்தைந்தரை கோடி ரூபாய்க்குப் புதிய வரிகளைப் போட்டிருக்கிறார்கள். அதிலும் ஏதாவது மாநிலத்திற்கு உரிய பங்கு கிடைக்குமா என்பது விளக்கமாகத் தெரியவில்லை. கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையின் இறுதியில் அதைப்பற்றிக் குறிப்பிடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இருநூற்று எழுபத்தைந்தரை கோடி ரூபாய்க்கு வரிகள் போடும்போது, எக்ஸைஸ் வரி, வருமான வரி போன்றவைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் பங்குத் தொகை மேலும் வளருவதற்கு ஏதாவது வழி வகை ஏற்படுமா என்பதை அறிந்துகொள்ள நான் விரும்புகிறேன்.

வருவாய்த் துறையைப் பெருகுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். வரிகளின் மூலம் 61 கோடி ரூபாய் இந்த மாநில அரசுக்கு கிடைக்கின்றது என்றாலும், வருவாய்த் துறை மூலம் 31 கோடி ரூபாய் கிடைக்கிறது என்றும் கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது. அதிலும்கூட, மொத்தமாக வரும் வருமா குத்தான் நிலைமைகள் இருக்கின்றன என்பதை உணர்த்தலே கிறதைச் செலவினத்தில் சேர்த்துக் காட்டியிருக்கிறார்கள்.





வருவாய்த் துறை பெருகுவதற்கான முயற்சிகளிலே இன்றைய அரசினர் மிகத் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அப்படி வருவாய்த் துறையின் மூலமாக வரும் அளவைப் பார்க்கும்போதுகூட, அதற்கான வாய்ப்புகள் பெருக்கத்தக்க அளவில் இல்லாமல், குறைந்து போகும் அளவு சில பல வகைகளில் இருப்பது மிக மிக வருந்தத்தக்கதாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு அரசாங்கம் வருவாய் துறைக்காக வைத்திருக்கும் இனங்களில் பஸ் போக்குவரத்து ஒன்றாகும். அந்த பஸ் போக்குவரத்தைச் சர்க்கார் எடுத்து, பத்து, பன்னிரண்டு ஆண்டுகளாகவே நடத்திக்கொண்டு வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு பஸ்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வருகிறது. ஏறத்தாழ சென்ற ஆண்டு மார்ச் மாதத்தின் கணக்குப்படி 660 பஸ்கள் சர்க்காரின் சார்பில் ஓட்டப்பட்டன என்று கூறப்படுகிறது. அதன் மூலமாகப் பெருகும் வருவாய் நிலையைப் பார்த்தால், 1961-62-இல் பஸ் போக்குவரத்தின் மூலமாகக் கிடைத்திருக்கும் லாபம் என்று புள்ளி விவரங்களில் காட்டப்பட்டிருப்பது 22 லட்சம் 39 ஆயிரம் ரூபாய் ஆகும். 1962-63-இல் வருகிறபோது, அதன் மூலமாகக் கிடைத்திருக்கும் லாபம் 10 லட்சம் 83 ஆயிரம் என்று காட்டப்பட்டிருக்கிறது. இப்பொழுது 660 பஸ்கள் ஓடும் அளவுக்கு, ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய் மூலதனமாக அதிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் 1963-64-ம் ஆண்டுக்கு 2 லட்சம் 85 ஆயிரம் ரூபாய்தான் அதிலிருந்து லாபமாக எதிர்பார்க்கப்படும் என்று கூறப்படுகிறது. இந்த நிலைமை உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாகும். பஸ்களின் எண்ணிக்கை வளர்ந்திருந்தும், ஆனால் ஏற்றிச் செல்லும் மக்களின் அளவு சென்னையில் வளர்ந்திருந்தும், பஸ்களிலே எவ்வளவு பேர்களை ஏற்ற வேண்டுமோ அதற்கு மேலே ஏற்றுகிற அளவுக்கு நெருக்கடி ஏற்பட்டு இருந்தும், வருமானம் இந்தத் துறையில் குறைந்துபோகும் நிலைமை இருப்பது மிக மிக வருந்தத்தக்கதாகும்.

அது மட்டுமல்லாமல், சாதாரணமாக வருமான வரியைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, பஸ் முதலாளிகளுக்கு ஒரு பஸ்ஸுக்கு 6,000 ரூபாய் லாபம் வருகிறது என்ற அளவை வைத்து, வருமான வரி போடுகிறார்கள் என்பதை நாம் அறிகிறோம். அந்த வகையிலே வைத்துப்பார்த்தாலுங்கூட, 660 பஸ்களுக்குக் கிட்டத்தட்ட 40 லட்சம் ரூபாய் இலாப வருமானம் காட்டப்பட வேண்டும். அப்படி இல்லாமல், 2 லட்சம் 85 ஆயிரம் ரூபாய்தான் அதிலே வருமானம் காட்டியிருக்கக்கூடிய நிலைமை இருப்பது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாகும். அரசினர் ஏற்று நடத்தும் அத்தகைய பொது நிர்வாகத்தின் மூலம் வரும் வருவாய்கள் மேலும் மேலும் வளருவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தவேண்டும் என்பதை நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ளுகிறேன்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1963

யில் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்க்கத் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அந்த அடிப்படையில்தான் நேற்றுகூட கனம் கருணாநிதி அவர்கள் இசையின் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்பதாகக் குறிப்பிட்டார்கள். இது பற்றி அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பயிருக்கு எப்படி எப்படி எல்லாம் சத்தை ஊட்டலாம் என்று ஆராய்கிற நேரத்தில் உரத்தினால் வருகின்ற சத்து, பொறுக்கு விதையினால் வருகின்ற சத்து, மண்ணினால் வருகின்ற சத்து, நீரினால் வருகின்ற சத்து, காற்றினால் வருகின்ற சத்து, சூழ்நிலையைப் பொறுத்து ஏற்படுகின்ற சத்து, இடைவெளியைப் பொறுத்து ஏற்படுகிற சத்து, அப்புறம் அகல உழுவது, ஆழ உழுவது, ஜப்பான் முறையின் மூலம் நடவு செய்வது என்று இப்படிப் பலவழிவகைகளை மேற்கொள்கிறபோது, இசையின் மூலமாக உற்பத்தி பெருக வழிவகை உண்டா என்பதை ஆராய்ச்சி செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இதுபற்றி ஆராய்ச்சி நடந்திருக்கிறது. பாண்டிச்சேரி ஆட்சியும் இதுபற்றி பரிட்சை செய்து பார்க்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இங்கு ஆடுதுறைப் பண்ணையில் வாழையைப் பொறுத்த அளவில் இசையின் மூலம் அவை நல்ல வளம் பெறுவதாக ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. இந்த முயற்சியின் காரணமாகவே உணவு உற்பத்தி முழுவதும் பெருகிவிடும் என்று சொல்வதற்கில்லை. அந்த முயற்சியினால் ஏதாவது பயன் விளையுமானால் அதைப் பெறுவதற்கு வழிவகை செய்யப்படவேண்டுமென்றே வற்புறுத்த விரும்புகிறேன். அதுவும் மற்றைய நிலங்களில் வளர்ந்திருக்கின்ற பயிரைவிட ரயில் இருப்புப் பாதையோரம் இருக்கிற வயல்களில் விளைகின்ற பயிரின் ஊட்டம் பெருகியிருக்கிறது என்கிறார்கள். அடிக்கடி ரயில் போகின்றதனால் ஏற்படுகிற அதிர்ச்சியின் விளைவு பயிருக்கு ஏற்படுகிறது என்று அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவற்றை ஆராய்ந்து பார்க்க நாம் ஆராய்ச்சியாளராக இல்லாவிட்டாலும் அறிஞர் ஆராய்ந்து கூறுகிற முடிவுகளை அநுபவத்தில் பொருத்திப் பார்க்க முயற்சிகளை மேற்கொள்ளலாம். அதுவும் மார்கழி மாதங்களில் தினமும் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களை ஒவ்வொரு கோயில்களிலும் ஒரு மணி அல்லது ஒண்ணரை மணி இசைத்தட்டின்மூலம் பாட வழி செய்திருக்கிறார்கள். பெரும்பாலும் கோயில் இல்லாத ஊரே இந்த நாட்டிலே இல்லை என்னலாம். பெரும்பாலும் எல்லாவிதமான இசைக்கருவிகளும் கோயில்களில் ஒலிக்கின்ற சூழ்நிலை இந்த நாட்டிலே இருக்கிறது. வயல்வெளிகளில் ஒரு மண்டபம் கட்டி, கோயிலிலே ஒலிக்கின்ற இசை இங்கே ஒலிக்க வழி செய்வோமேயானால் ஒன்றுக்கு இரண்டாகப் பயன் ஏற்படலாம். ஒன்று திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களும் இசைக்கப்படும். இரண்டாவதாக பயிர்களும் இசையின்பயனை பெற வழி ஏற்படக்கூடும்.



8th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அரசாங்கமேதான் இம்முயற்சியில் ஈடுபட வேண்டுமென்பதில்லை. மற்ற அங்கத்தினர்களும் முயன்று பார்த்து இதனால் பலன் ஏற்படுகிறது என்றால், அவர்களுடைய ஆராய்ச்சியின் முடிவைச் சட்டசபையில் வைக்கிறபோது அதை அமைச்சரும் ஏற்றுக்கொள்ள முன்வருவார் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து மற்ற எல்லா உறுப்பினர்களும் மிக்க வேதனையோடு எடுத்துக் கூறியதுபோன்று தங்கக் கட்டுப்பாட்டுப் பிரச்னையை எடுத்துக்கொண்டால் மிக்க வேதனை அடையவேண்டிய நிலைமையே இருக்கிறது. தங்கக் கட்டுப்பாட்டின் மூலம் மத்திய அரசுக்கு எதிர்பார்த்த பலன் முழுவதும் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. ஆனால் அதனால் அவதிகள் பல ஏற்பட்டு இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். தங்கக் கட்டுப்பாட்டின் நோக்கம் சிறந்தது என்பதை அத்தனைபேரும் ஒப்புக்கொள்கிறோம். தங்கத்தை சேமிப்பதன் நோக்கமே குடும்பங்களில் கஷ்டம் ஏற்படுகிறபோது அதை வைத்துக் கடன் வாங்கவும், குடும்பக் கஷ்டத்தை ஓரளவு நீக்கிக்கொள்ளவுமேதான். இந்த நிலை நாட்டிற்கே ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் அரசினருக்கே 500 கோடி ரூபாய் தங்கம் கைவசம் இருந்தால்தான் வெளிநாடுகளில் இருந்து கடன் வசதி பெறமுடியும் என்று பாராளுமன்றத்தில் திரு. மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டிருக்கிறார். அந்த அடிப்படையில்தான் இந்த நாட்டில் உள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களும் இந்நாள்வரை தங்கத்தைச் சேர்த்துக்கொண்டு வந்தார்கள். பல்வேறு குடும்பங்களும் தங்கள் தங்கள் குடும்ப வரவு-செலவுத் திட்டத்தை நிலை நிறுத்த தங்கத்தில் முதலீடு செய்தார்கள். இந்த நாட்டில் சுமார் 1,800 கோடி ரூபாய்க்குத் தங்கம் இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இவ்வளவுதான் இருக்கும் என்று திட்டவட்டமான முடிவுக்கு வர இயலாது. இரண்டாயிரம் கோடி என்கிறார்கள் ஒருசிலர். நாலாயிரம் கோடி இருக்கும் என்கிறார் வேறு சிலர். இந்திய சர்க்காருக்குத் தங்கப் பத்திரங்களின் மூலம் இதுவரையில் கிடைத்திருப்பது 7 கோடி ரூபாய்தான் ஆகும். இந்திய சர்க்கார் எதிர்பார்ப்பது 500 கோடி ரூபாய் தங்கம் என்று சொல்கிறார்கள். இன்று எப்படியும் 14 காரட் தங்கக்கட்டுப்பாட்டுச்சட்டத்தை மாற்றுவதற்கு இல்லையென்று மிகக் கண்டிப்பாகவும், பிடிவாதமாகவும் இன்னும் சில விஷயங்களோடு இந்திய நிதி அமைச்சர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறார். நாட்டு மக்களுடைய மனப்பான்மையையும் நகைத் தொழிலாளருடைய மனப்பான்மையையும் மாற்ற வேண்டும் என்று பிடிவாதமாக வற்புறுத்துகிறார். அது மட்டுமல்ல. இந்தக் கட்டுப் பாட்டைக் கொண்டுவருவதன் மூலமாக நாட்டில் ஏற்பட்டிருக்கிற தொல்லைகளை மெல்ல மெல்ல போக்குகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லுகிறார்களேதவிர, முடங்கிக் கிடக்கிற தங்கத்தைக் கொண்டுவரவும், நாட்டின் பொது வருமானத்தைப் பெருக்கவும் நகைத்தொழிலாளர்களுடைய வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படாமல் காப்பாற்றுவதற்கும் எத்தகைய சூழ்நிலையும் உருவாகவில்லை. 22 காரட் தங்கத்தை இனி ஆபரணத்திற்கு உபயோகப்

11-30 a.m. பால் பண்ணையை நடத்தும் வகையில், ஏறத்தாழ ஒரு கோடியே 29 லட்சம் ரூபாய் மூலதனமாக அதிலே போடப்பட்டிருந்தும், அதன் மூலமாக 1961-62-இல் 7 லட்சம் 88 ஆயிரம் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. 1962-63-இல் 8 லட்சம் 96 ஆயிரம் ரூபாய் நட்டம் ஆகும். 1963-64-இல் எதிர்பார்க்கப்படும் நட்டம் ஒரு லட்சம் 16 ஆயிரம் ரூபாய் என்று கூறப்படுகிறது.

(கனம் சபாநாயகர் தலைமை வகித்தார்.)

இப்படி அரசினர் ஏற்று நடத்தும் அத்தகைய நிறுவனங்கள் மூலமாகக் கிடைக்கும் வருவாயை, மேலும் மேலும் பெருக்குவதற்கு வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தவும், அவற்றிலிருக்கும் குறைபாடுகளைப் போக்கவும், அவற்றைத் திறம்பட நடத்தி, அதிகமான வருவாய்களைப் பெருக்குவதற்கான வாய்ப்புக்கள் அரசினருக்கு இருந்தும், அந்த வாய்ப்புக்கள் ஏற்படாமல் போவதற்குக் காரணம் என்ன என்பதை இந்த அரசினர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்தக் கேடுகளைக் களைந்து, இதன் மூலமாக வருவாயைப் பெருக்குவதற்கு வழி நிலைமைகளை அரசினர் மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் விலைவாசிகள் உயர்ந்துவிடாதிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க இந்திய அரசினர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க மாநில அரசும் முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது என்றும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த முயற்சிகளையும் மீறி விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கிற சூழ்நிலை நாட்டில் வளர்ந்துகொண்டிருக்கிறது. அவற்றைக் கட்டுப்படுத்த மாநில அரசினர் மிகத் தீவிரமாக நடவடிக்கையை மேற்கொண்டு, நியாயவிலைக்கடைகள் மூலமாக பரவலாக எல்லா நகரங்களிலும், பேரூர்களிலும், உணவுப் பண்டங்கள் கிடைக்க வழி செய்வதும், அவற்றின் மூலமாக மற்ற அநியாய விலைகள் ஏற்படாதிருக்கத்தக்க வழிவகைகளை மேற்கொள்வதும் அவசியமாகும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவுப் பிரச்னையைப் பொறுத்து இந்நாட்டில் இருக்கக்கூடிய சூழ்நிலையை ஆராய்ந்து பார்க்கிறபோது, அமெரிக்க தூதுவராக இங்கே இருக்கிற பேராசிரியர் கால்ப்ரெய்த் இந்திய அரசினர்க்கு எழுதிய குறிப்பு ஒன்றில் ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"The foodgrains problem must be left to the States, the Centre confining itself to technical advice and co-ordination."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ரீதியில் ஒரு வழிவகையை கூறு உணவுப் பண்டத்தைப் பகிர்ந்து அளிக்கிற முறையில், கட்டுப்பாட்டு முறையில் நியாயவிலைக்கு விற்கின்ற நிலைமையை உண்டாக்க நடவடிக்கைகளை எடுக்கும் முயற்சியை நம் மாநில அரசு ஏற்க வேண்டும். இந்தியப் பேரரசின் ஒத்துழைப்பையும் பெறுகின்ற நிலைமையில் சிலபல சீர்வகை செய்யவேண்டுமென்றும் கூற விரும்புகிறேன்.



உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை அரசினர் மேற்கொண்டிருக்கிறார்கள். உணவு உற்பத்திப் பெருக்குக்கான திட்டங்கள் சிலபல என்னவென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். உரம் விநியோகம் செய்வதற்கும், ஆங்காங்கு பசுந்தாள் உரம் சேர்த்துத் தருவதற்கும், பொறுக்கு விதைகளைத் தருவதற்கும், கூட்டுறவு முறையில் சிலபல சலுகைகள் தருவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அவற்றில் இருக்கிற குறைபாடுகளை இரு பக்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களும் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அத்தகைய குறைபாடுகளை நீக்காவிட்டால், நாம் எத்தகைய முயற்சிகளை எடுத்துக் கொண்டாலும், அவை கிராமங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களிடையே போய்ச் சேராத நிலையில் எதிர்பார்த்த பலன் கிடைக்க முடியாத நிலையைத்தான் வளர்த்துவிடும். உள்ளபடியே குறைபாடுகளைக் களைந்து, உண்மையிலேயே உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தீவிர முயற்சியை மேற்கொள்ள வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்றப்படவேண்டிய சில பகுதிகள் இருக்கின்றன. அவற்றைத் தவிர பெரும்பாலான நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவந்தாகிவிட்டது. நீர்ப்பாசனத் திட்டங்கள் சிலபலவற்றைத்தவிர பெரிய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டன. நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், பெரும்பான்மையான நிலம் நீர்ப்பாசனத்திற்கும், விளைச்சலுக்கும் கொண்டுவரப்பட்டுவிட்டது. என்று சொல்லப்படுகிறது. இனி நீர்ப்பாசன வசதி பெற வேண்டிய நிலங்களோ, விவசாயத்திற்குக் கொண்டுவரப்படவேண்டிய நிலங்களோ மிகக் குறைவாகத்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே இருக்கின்ற நிலங்களிலேயே உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான திட்டங்களில் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தியாகவேண்டும். இந்த வகையில் க்ரேட் பிரிட்டன் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பிரிட்டனில் இருக்கக்கூடிய நிலத்தில் அவர்கள் எப்படி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தவிர வேறு ஒன்றும் இல்லை. க்ரேட் பிரிட்டனில் கடந்த பதினெட்டு ஆண்டு காலமாக புதிதாக நிலத்தை விளைச்சலுக்குக் கொண்டுவரக்கூடிய பகுதி இல்லாததனால், இருக்கக்கூடிய நிலம் அத்தனையும் விவசாயத்திற்குக் கொண்டுவரப்பட்டுவிட்டதனால் கடந்த பதினெட்டு ஆண்டு காலமாக இருக்கிற விளை நிலங்களிலேயே உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டதாகவும், அதன் மூலம் இந்தப் பதினெட்டு ஆண்டு காலத்தில் 60 சதவிகிதம் உற்பத்தி பெருக்கியிருக்கின்றது இருக்கிற நிலங்களிலேயே என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களைப் போலவே நாமும் இருப்பதனால், மேற்கொண்டு விவசாயத்திற்குக் கொண்டுவரக்கூடிய நிலப்பகுதி இல்லாததனால், இருக்கின்ற விளை நிலங்களின் உற்பத்தியையே பெருக்கக்கூடிய நிலையில் உள்ளதினால் க்ரேட் பிரிட்டனில் என்ன என்ன முயற்சிகளை அத்தகைய வழி

கிறார்கள். இப்போது கூட பாதுகாப்பு நிதிக்காக 10 லட்சம் ரூபாய்க்கு மேல் வசூலித்து இந்தியப் பேரரசுக்கு நன்கொடையாக அளித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தமிழர்கள் முன்பு இங்கே வரும்போது 75 ரூபாய் கையிலே கொண்டுவரலாம் என்ற நிலைமை இருந்தது. அந்த ரூபாய் அவர்கள் துறைமுகத்தில் இறங்கியவுடன் செலுத்தவேண்டிய தீர்வைகளைச் செலுத்தவும், மற்றும் இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி போன்ற தங்கள் ஊர்களுக்குச் செல்வதற்கான ரயில் கட்டணத்திற்கும், மற்றும் இரண்டு மூன்று நாட்கள் சென்னையிலே தங்கியிருப்பதற்கான செலவுகளுக்கும்தான் போதுமானதாக இருக்கும். அந்தத் தொகையை இப்போது இந்திய சர்க்கார் 20 ரூபாய் அளவுக்குக் குறைத்து விட்டிருப்பதின் காரணமாக அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் துறைமுகத்தில் வந்திறங்கியவுடன் கட்ட வேண்டிய தீர்வையைக் கட்டிவிட்டு, சென்னையில் இரண்டொருநாள் தங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் தங்கிவிட்டு, தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போய்ச் சேருவதற்குப் போதுமான அளவு பணம் இல்லாமல் போய்விடுகிறது. அந்தத் தொகை 150 ரூபாய் அளவுக்காவது இருக்கவேண்டுமென்று அவர்கள் முன்பு கோரியிருந்தார்கள். இப்போது அந்தத் தொகை அந்த அளவுக்கு உயர்த்தாவிட்டாலும் ஏற்கனவே இருந்த 75 ரூபாய் அளவுக்காவது உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்ற அளவுக்காவது செய்யவேண்டுமென்ற சிபாரிசை மாநில அரசினர் மத்திய அரசினருக்குச் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் நீண்ட பெரும் காலமாகப் பல பெரும் பிரச்னைகள் தீர்க்கப்படாமலே இருக்கின்றன. சென்னை நகரில் கூவம் நதி பெரும் பிரச்னையாக இருக்கிறது. கூவம் நதியின் துர்நாற்றத்தைப் போக்கும் வகையில் ஏற்கனவே சிலபல திட்டங்கள் போடப்பட்டன. பதினெட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழும் சென்னை மாநகரில் கூவம் நதியின் காரணமாக, தொத்து நோய்கள் ஏற்படவும், மக்கள் நடமாட முடியாத அளவுக்குத் துர்நாற்றம் வீசவுமான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த நிலைமையை மாற்ற, ஏற்கனவே ஒரு கோடி, ஒன்றரைக் கோடி ரூபாயில் போடப்பட்ட திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், சென்னை மாநகரைத் தூய்மையாக வைத்துக் கொள்ள முடியும். கூவம் நதியை ஆழப்படுத்தி, கடல் நீரை நதியினுள் பாய்ச்சுவதன் மூலம் அதிலிருக்கும் தூய்மையற்ற போக்கை மாற்ற வழிவகைகள் இருக்குமென்று கூறப்பட்டது. அதை உடனடியாகச் செய்ய அரசினர் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு பஞ்ச காலத்தில் இந்த பக்கிங்காம் கால்வாய் வெட்டப்பட்டு அதன்மூலம் போக்குவரத்து செய்யப்பட்டு வந்திருக்கிறது. பிறகு அது சரியாக கவனிக்கப்படாமல், ஆற்றுகால்கள் வந்து சேராது, கடல் நீர் வந்து உப்பு நீராகிவிட்டதாலும் அதில் போக்குவரத்து தடைபட்டுவிட்டது. பக்கிங்காம் கால்வாயை கெடிலம்





வரை கொண்டு போய், போக்குவரத்து நடத்த முடியும் என்று வல்லுனர்கள் கூறுகிறார்கள். ஆகவே அந்த முறையில் அப்போக்குவரத்தை மேற்கொண்டால் அதனால் அக்கால்வாய் மூலம் ஏற்படுகிற பலன்களை நாம் பெற வழி ஏற்படக்கூடும். இத்தகைய நிலைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள், வருவாயைப் பெருக்குவதற்கான திட்டங்களை அரசினர் மேற்கொள்ள வேண்டும். வருவாய்த்துறையில் திறமைக்குறைவு இருப்பதால் வருவாய் குறைந்திருப்பதைப் போக்கி வருவாய் துறையைப் பெருக்கி அதன் மூலம் வரி போடுகிற துறையைக் குறைப்பதற்கான முயற்சியையும் எடுக்கவேண்டும். ' பலர் எடுத்துக்கூறியது போல் புது வரிகளைப் போட்டு அதன் மூலம் வருவாயை சேகரிக்க அரசாங்கம் ஈடுபடுவதன் மூலம் கடைசியில் அதன் முழுச் சுமை ஏழை எளிய நடுத்தர மக்களின் தலையில்தான் விழுகிறது. போடப்பட்டிருக்கிற வரிகளில் சில வரிகள் வசூலிக்கப்படவில்லை. விற்பனை வரி, வருமான வரி போன்ற பல வரிகளில் வசூலிக்க வேண்டிய வரிகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். மத்திய அரசினரும் அதில் தக்க கவனம் செலுத்தி வருமான வரி போன்றவற்றை நன்கு பெற முயற்சி செய்தால் போட வேண்டிய வரிகளைக்கூட குறைத்துக்கொள்ள முடியும் என்று சொல்கிறார்கள். விற்பனை வரியைப் பொறுத்த மட்டில், விடுபட்ட வரிகளை வசூலிப்பதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தினால், அதை முழுதும் வசூலிக்க திட்டம் இடப்படுமானால், புது வரிகள் போடும் நிலை கூட ஏற்படாது. ஆகவே போடப்பட்டிருக்கிற வரிகளை வசூலித்து அதன் மூலம் ஈடுகட்டும் நிலையை அரசினர் ஏற்படுத்த வேண்டும். அதனால் அடிக்கடி வரி போட்டு அவை ஏழை மக்களின் தலையில் விழக் கூடிய தன்மையும் தடுக்கப்படலாம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் முதியோர் உதவி நிதிக்காக 1 கோடி 22 லட்சம் ரூபாய், கல்விக்காக 27 கோடியே 58 லட்சம் ரூபாய், மருத்துவ பொது சுகாதாரத்திற்காக 5 கோடி 6 லட்சம் ரூபாய் இப்படியாக பல இனங்களுக்கு தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த முயற்சிகள் உள்ளபடியே வரவேற்கத்தக்கன. இதன்மூலம் ஏற்படுகிற நல்ல பலனை நாம் அடைவதற்கு வேண்டிய வழிவகைகளை அரசினர் கைக்கொள்ள வேண்டும். நான் முன்பு குறிப்பிட்டது போல் வருவாய் இனத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். கனம் அங்கத்தினர் திரு. ராம அரங்கண்ணல் அவர்கள் சொன்னார்கள். வரவு இனத்தைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் ரயில்வே போக்குவரத்தை இந்திய அரசினர் வைத்துக் கொண்டிருப்பதால் இந்திய அரசுக்கு வருவாய் தேடித் தருகிற வாய்ப்பை அளிப்பதாக ரெயில்வே அமைந்திருக்கிறது. அதேபோல் பஸ்களில் இருந்து வருவாய் பெரும் முயற்சியை, மாநில அரசு மேற்கொண்டால் நம் மாநில அரசின் வருவாய் அதிகரிக்கும். அதே போல் திரைப்பட கொட்டைகளை எடுத்துக்கொள்வதால், வருவாய் பெருகும். நஷ்ட ஈடு தரும் பிரச்னையில் பல்வேறு வகைத் திட்டங்களில் மேற்கொண்டிருப்பதுபோல் இதிலும் மெல்ல மெல்ல தருவதற்கான வழியை மேற்கொண்டு, அதையும் அரசு ஏற்றுக் கொண்டால், நாட்டின் வருவாய் இனம் மேலும் பெருகுவதற்கான வழி ஏற்படும். இதையெல்லாம் எடுத்துச் சொல்கிறபோது,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1963

அரசினர் இவற்றை கருத்திற்கொண்டு அந்நிலையை உருவாக்க வேண்டும், அந்த முறையில் மாற்றப்படுதல் வேண்டும். ஆக மேலும் மேலும் வரி போடும் சூழ்நிலைதான் இந்த நிதிநிலை அறிக்கை மூலம் ஏற்பட்டிருக்கிறதே தவிர வருவாயைப் பெருக்கிக் காட்டுவதற்கான, அதிகப்படுத்திக் காட்டுவதற்கான முறையில் இந்த அறிக்கையில் ஒன்றும் கூறப்படவில்லை. அம்முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசினரைக் கேட்டுக் கொள்கிறேன். இந்திய பாராளு மன்றத்தில் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தபோது நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் இறுதியில் கூறியிருக்கிற வாசகத்தை இந்திய அரசினருக்கும், மாநில அரசினருக்கும் நினைவுபடுத்தி என் உரையை முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

"What we need is more performance with less expenditure of resources, in every sphere of public activity; and what such economy through efficiency requires is an attitude of mind—a spirit of vigilance and responsibility—on the part of all those who are entrusted with the expenditure of the people's money; be they engineers, army officers, contractors, workers, civil servants or indeed Ministers."

"பொதுப் பணிகளின் ஒவ்வொரு துறையிலும் மூலப்பொருள்களை மேலும் குறைத்துச் செலவிட்டு அதிகப்படியான செயல் திறமையை வெளிப்படுத்துவது நம் இன்றியமையாத தேவையாகும். பொது மக்கள் பணத்தைச் செலவிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள்—அவர்கள் பொறியியல் வல்லுனர்களாகயிருந்தாலும் சரி, இராணுவ அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அல்லது ஒப்பந்தப் புள்ளிக்காரர்கள், தொழிலாளர்கள், அரசாங்க அலுவலர்கள் அல்லது அமைச்சர்களாகயிருந்தாலும் சரி, அவர்கள் எல்லாம் செயல்திறமையினால் சிக்கனம் செய்ய வேண்டிய பொறுப்புணர்ச்சியும் விழிப்புணர்ச்சியும் கொண்ட நல்ல மனப்பாங்கைப் பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள்" என்று கூறியிருக்கிறார்கள். அம்முறையை மாநில அரசும் மத்திய அரசும் மேற்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். செலவினத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் முறையில் சிலபல நடவடிக்கைகளை நீண்ட காலமாக எடுத்து வருகிறோம் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் விவரம் இல்லை. அந்த விவரத்தை நிதி அமைச்சர் அவர்கள் தம் உரையில் கூறுவார்களேயானால், நன்றாக இருக்கும். அம்முறையில் மேலும் சிக்கனப்படுத்தி, ஏழை எளிய பாட்டாளி மக்கள் மேல் சுமத்தப் பட்டிருக்கிற நில வரி, நீர் வரி போன்றவற்றை நாளாவட்டத்தில் எடுத்து, வருவாயைப் பெருக்கி, அதன் மூலம் அவர்கள் வாழ்க்கையை செம்மைப்படுத்தும் முயற்சிகளை இந்த அரசு தீவிரமாக மேற்கொள்ளவேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த வரவு செலவுத் திட்டத்தை இந்த மன்றத்தில் சமர்ப்பித்தபோது கொஞ்சம் கவலைப்பட்டேன். இதைப்பற்றி என்ன



8th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

குறை கூறப் போகிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்று நான் எதிர்பார்த்தேன் என்று சொல்லவில்லை, கவலைப்பட்டேன் என்று சொல்கிறேன். ஏனெனில் எனக்கு ஜனநாயகத்தில் மிக நம்பிக்கை உண்டு. எதிர்க்கட்சியின் அவசியத்தை நாம் நன்கு உணர்கிறோம். எதிர்க்கட்சி எதிர்க்கட்சியாகவே இயங்கவேண்டுமென்றும் நாம் உணர்கிறோம். எப்போதுமே எதிர்க்கட்சி எதிர்க்கட்சியாக இருக்க வேண்டியதில்லை. மக்கள் ஆதரவு பெற்று அவர்களும் ஆளும் கட்சியாக வரலாம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் எதிர்க்கட்சியாக இருக்கும்போது எதிர்க்கட்சியாகவே இருக்கவேண்டும். குறை ஒன்றும் இல்லாவிட்டாலும் குறை சொல்லவேண்டும். அதுதான் எதிர்க்கட்சிக்கு அழகு. அவர்களும் புகழ்ந்து பாராட்டிப்பேசி விட்டால் ஜனநாயகமே பாதிக்கப்படும் என்ற கவலைதான் எனக்கு. ஆகவே, இதில் என்ன குறை கூறப் போகிறார்கள், ஒரு வேளை குறை கூறாமல் போய் விடுவார்களோ என்றுதான் நான் கவலைப்பட்டேன். ஆனால் எனக்கு ஒரு திருப்தி. எதிர்க்கட்சியினர் எதிர்க்கட்சி என்ற முறையில் மிக்க விழிப்போடு எதிர்க்கட்சியினராகவே பேசினார்கள். ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும் ஒரே பாடமாகப் பேசினார்கள். அவர்கள் தெரிவித்தது ஒரே பாடம். அப்படி ஒரே பாடமாக தெரிவிக்கக்கூடிய அந்தக் கட்சியின் தன்மையை, அதற்குரிய தலைமையை நான் பாராட்டுகிறேன். அவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் பேசினார்கள். ஆனால் கனம் அங்கத்தினர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ஒரு படி மேலே கூடப் போனார்கள். அவர்கள் நான் பேசியதைப் பற்றிக்கூட சொன்னார்கள். நான் வரவு செலவுத் திட்ட உரையைப் படித்ததைப் பற்றி அவர்கள் குத்தலாகப் பேசினார்கள். நான் ஏன் படித்தேன் என்பதைப் பற்றி குத்தலாகச் சொன்னார்கள். அது எதிர்க்கட்சியின் வாதத்தை உயர்த்துமா என்பதை அவர்களே முடிவு செய்து கொள்ளட்டும். நான் அதுபற்றிக்கூற வேண்டிய அவசியமில்லை.

**திரு. மு. கருணாநிதி:** திரு. தர்மலிங்கம் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள் படித்த முறையையோ, திறனையோ கேலி செய்வதற்காக அதைக் குறிப்பிடவில்லை. வேறு மாநிலங்களில், முன்னாள் குடியரசுத் தலைவர் மறைவுக்காக படிக்காமலேயே அப்புத்தகத்தை வழங்கிவிட்டார்கள். ஆனால் இங்கு படிக்கப்பட்டது என்றுதான் சுட்டிக்காட்டினாரே தவிர திறமையைக் குறைத்துச் சொல்லவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** திறமைக்குறைவு என்று சொன்னார்கள் என்று நான் சொல்லவில்லை. திறமைக்குறைவு என்று குறிப்பிட்டிருந்தால் கூட நான் அதை வரவேற்றிருப்பேன். படித்த முறையை குறைசொல்வதாக வெளிப்படையாக குறிப்பிடாமல் சொன்னார்கள். திறமையாகப் படிப்பேன் என்று சொல்வதற்கு எனக்கு அகங்காரம் இருக்கிறது. வேறு மாநிலங்களில் என்னவோ செய்தார்கள் அதே போல் ஏன் செய்யவில்லை என்ற முறையில் குத்தலாகப் பேசினார்கள். ஒப்பற்ற தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் மறைந்தது நம் அனைவருக்கும் வருத்தத்தைக்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1963

படுத்தக்கூடாது என்றால் அப்படி உபயோகப்படுத்தக்கூடாது என்ற மனப்பான்மையும், 14 காரட் தங்கத்திலேயே ஆபரணம் அணியவேண்டுமென்ற மனப்பான்மையும் நாட்டு மக்களிடையே வளர வழிவகை செய்யாவிட்டால், பெரும்பாலான நகைத்தொழிலாளர்களுக்கு எந்த வகையிலும் வேலைவாய்ப்புக் கிடைக்க வழியில்லை.

பொற்கொல்லர்கள் அத்தனை பேரும் வேலை வாய்ப்பு இல்லாமல் பசியால் திண்டாடும் அளவும், வாட்டமுறும் அளவும் நிலைமைகள் உருவாகி இருக்கின்றன. இந்த நிலைமையைப் பற்றி எடுத்துச் சொல்லும் நேரத்தில், இந்திய நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள் கூறியிருக்கிறார்கள்—"தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டம் வெற்றியடைந்து விட்டது என்று மகிழ்கிறேன்" என்று. "பொற்கொல்லர்கள் வேலையின்றி வாடுகிறார்கள் என்று சொன்னால், 'தங்கக் கட்டுபாடுத் திட்டம்' வெற்றியடைந்துவிட்டது, பொற்கொல்லர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள்" என்று பாராளுமன்றத்திலே நேற்றையதினம் பேசியிருக்கிறார். இந்த நிலைமைகளைப் பற்றி நான் வற்புறுத்திச் சொல்லக் காரணம், 30, 35 வயதுக்கு மேற்பட்ட பொற்கொல்லர்கள் இனிமேல் வேறு தொழிலிலே ஈடுபட்டுத் தங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கான வழிவகைகள் எளிதில் ஏற்படாது என்பதுதான். ஐம்பது அறுபது வயதுடைய பொற்கொல்லர்கள் தாங்கள் இது வரை செய்து வந்த தொழிலை தங்கள் வாழ்நாள் வரை செய்து வரக்கூடிய அந்த அளவுக்காவது, வசதிகளைச் செய்து தரும்படி தான் கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவுக்கு ஓரளவு கட்டுப்பாட்டினை தளர்த்தி, சிலபல சலுகைகளை அந்தப் பொற்கொல்லர்களுக்கு அளிக்கும் வகையில் மாநில அரசினர் மத்திய அரசினரை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், 14 காரட் தங்கத்தில் வேலை செய்யப் பொற்கொல்லர்கள் முயல்கின்றபோது தங்கத்தை எங்கே பெறுவது என்று தெரியாமல் தவிக்கிறார்கள். பதினான்கு காரட் தங்கத்தையாவது அவர்களுக்கு அளிப்பதற்கான வழிவகைகளையாவது செய்து கொடுக்கவேண்டும். தங்கத்தை விநியோகிக்கின்ற முறை முழுவதும் ஒருசில தனிப்பட்டவர்களிடம் இருப்பதைவிட, எவ்வாறு அரசாங்கமே நேரடியாகக் கார்டு, கவர் போன்றவற்றை வழங்கி வருகிறதோ, அந்த முறையில் 14 காரட் தங்கத்தையும் தேவையான அளவுக்குப் பொற்கொல்லர்களுக்கு அளிப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டும். மேலும் பொற்கொல்லர்கள் 100 ரூபாய் கட்டி லைசென்ஸ் பெறவேண்டுமென்றிருப்பதை, இலவசமாகவே பர்மிட் வாங்கும் வகையில் எளிதாக்குவதற்கான வழிவகைகளையும் இந்திய அரசினர்க்கு நம்முடைய மாநில அரசினர் சிபாரிசு செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கூட்டுறவு அமைப்புகளைப் பற்றி மன்றத்திலுள்ள பல்வேறு உறுப்பினர்களும் தெளிவுபட எடுத்துக் கூறினார்கள். கூட்டுறவு முறையின் மூலமாக நிதி பெருகவும், அந்த நிதி தொழில் துறைகளில் முதலீடு செய்யப்பட்டு தொழில் வளரவும் வழிவகை



8th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கள் ஏற்படுகின்றன. நோக்கம் நல்ல நோக்கமாகவும், முறை நல்ல முறையாகவும் இருந்தாலும், நடத்துகின்ற வகைகளில் சீர்கேடுகள் இருக்கும் காரணத்தால், நோக்கம் முழுவதும் நிறைவேறாமலும், எதிர்பார்க்கும் பலன்கள் முழுவதும் கிடைக்க முடியாமலும் போகின்றன என்பதைப் பரவலாக எல்லா இடங்களிலிருந்தும் குற்றச்சாட்டு வரும் நிலைமையைப் பார்க்கிறோம். அந்தக் குறைபாடுகளைப் போக்கவும், கூட்டுறவுத் திட்டத்தின் மூலமாக முதலீடு செய்து தொழில் வளர்ச்சியைப் பெருக்கவுமான முயற்சியில் அரசினர் மேலும் முயலவேண்டும். அதிலே மக்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும் அளவுக்குச் செய்யவேண்டும். சில பல கூட்டுறவுச் சங்கங்களை ஒருசிலர் தங்கள் கையில் வைத்துக் கொண்டு, ஏமாற்றவும், ஒரு சிலரே பலனை நுகரும் அளவுக்கும் இருக்கிறது. இந்தக் குறைபாடுகளையெல்லாம் போக்க அரசினர் மேலும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன்.

இன்று, மலேயா, சிங்கப்பூர் தமிழர்களைப் பொறுத்தவரையில், மாநில அரசினர் தங்கள் கவனத்தைச் செலுத்தி, இந்திய அரசினருக்குச் சிபாரிசு செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. மலேயா, சிங்கப்பூரில் வாழ்கின்ற இந்தியர்களில்—எட்டு லட்சம் பேரில் ஏழரை லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தமிழர்களாக இருக்கிறார்கள் என்ற கணக்கு சொல்லப்படுகிறது. அவர்களில் பெரும்பாலோர் தங்களை மலேயா வாழ் மக்களாகவும், சிங்கப்பூர் வாழ் மக்களாகவும் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் உற்றார், உறவினர், தாயகம் என்ற முறையில் அதிகமான தொடர்பைத் தமிழகத்தோடு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு சென்று இருபது முப்பது ஆண்டுகள் கழித்துக் கூட தாயகத்துக்கு வந்து உற்றார் உறவினர்களைப் பார்த்துவிட்டுச் செல்லுகிறார்கள். அப்படி வருகிறவர்களுக்குச் சிலபல குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை நீக்கும் பொறுப்பு இந்தியப் பேரரசினர் கையில் இருந்தாலும், தமிழர்களிடம் அக்கறை கொண்டு அவர்களுடைய நலன்களில் கவனம் கொண்டுள்ள தமிழக அரசு, முயற்சி எடுத்து, அந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டும். அங்கு வாழ்வோரில் 100-க்கு 90 சதவிகிதத்தினர் தோட்டத் தொழிலாளர்களாகவே இருக்கிறார்கள். பத்து சதவிகிதத்தினர் வியாபாரம் போன்ற வேறு பலவற்றில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் தாயகத்துக்கு வரும்போது கப்பலில் மூன்றாவது வகுப்பில் பல வசதிக் குறைவுகளுக்கிடையே பிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது. அவர்கள் கப்பல்களிலே போடப்படும் சாமான்களோடு சாமான்களாக வந்து சேரவேண்டியவர்களாக இருக்கிறார்கள். குடிதண்ணீர் வசதி கூட இல்லாத நிலைமையில் அடிமைகளைப் போல் வரவேண்டியிருக்கிறது. அவர்களின் குறைகளைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழகத்திலே சிலபல கஷ்டங்கள் ஏற்பட்ட சமயத்தில் எல்லாம் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள். இங்கே புயல் வீசியபோது அவர்கள் மூன்று லட்சம் ரூபாய்க்கு மேல் திரட்டி அளித்து ஆதரவைக் காட்டியிருக்

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1963

கொடுத்தது. அந்த நேரத்தில் இதைப் படித்தது சரியல்ல என்பதை குத்தலாகப் பேசினார்கள் என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக எதிர்க்கட்சிகளின் ஆட்சேபணைகள் எல்லாம் இந்த வரவு செலவுத் திட்டத்தில் வரிகள் இல்லை என்று எப்படி சொல்லலாம் என்று கேட்டார்கள். அவர்களுடைய உண்மையான ஆட்சேபணை ஏன் புதிய வரிகள் போடப்படவில்லை என்பது தான். புதிய வரிகள் ஒன்றும் இல்லை என்று நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அதை நான் தற்பெருமையாகச் சொல்லவில்லை. யாருடைய பாராட்டுதல்களையும் பெற வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இருக்கிற நிலைமையை அப்படியே சொல்லவேண்டும், துண்டு விழுகிறது என்று சொன்னால் அதை எந்த விதத்தில் எல்லாம் சரிக்கட்டுவது என்று குறிப்பிட வேண்டிய கடமை நிதி அமைச்சர்களுக்கு இருக்கிறது. அந்த வகையில் தான் துண்டு விழக்கூடிய தொகைக்கு என்ன செய்யப்போகின்றோம், என்று குறிப்பிட்டு புது வரிகள் ஒன்றும் போடப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறேன். புதிய வரிகள் போடப்படவில்லை என்பதற்காக ஒருசிலர் பாராட்டினார்கள் என்றால் அது சில எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு பிடிக்கவில்லை என்று தான் நான் எடுத்துக் கொள்ள முடியும். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல், அன்றைய தினம் வரிகள் ஒன்றும் போடப்படவில்லை என்று நான் வாசித்தபோது, எங்கள் பக்கத்தில் இருந்து மட்டும் கைதட்டவில்லை, எதிர்க்கட்சியிலிருந்தும் ஒருசிலர் கைதட்டினார்கள், ஆரவாரித்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய வாதம் வரியே இல்லாது இருக்கவேண்டும், வரிகளை ஒருசிலர் மீது மட்டும் தான் போடவேண்டும் என்பது. வரிபோடவேண்டும் என்றால் யார் தான் வரி போடுவதை விரும்புவார்கள்? எங்கள் கட்சி மட்டும் வரி போட வேண்டும் என்பதை விரும்புகிறதா? வரிகளே இல்லாமல் அரசாங்கத்தை நடத்த முடிந்தால் நல்லது தான். எங்களை பொறுத்த வரையில் அது முடியாது தான். எனக்குத் தெரிந்த அளவில் எதிர்க்கட்சிக்கும் அது முடியாதது தான் என்று நினைக்கிறேன். வரிபோட்டால் எல்லோருக்கும் கஷ்டம் தான். வரி கொடுக்கின்றவர்களுக்கு கஷ்டம், அதே போல் வரி போடுகிறவர்களுக்கும் கஷ்டம் தான். வரியைப் போடுகின்றவர்களும் அதை மகிழ்ச்சியோடு போடுவதில்லை. தவிர்க்க முடியாத நிலைமையில் தான் வரிகளைப் பேரடுகிறோம். பொதுவாக புதிய வரிகள் ஒன்றும் போடவில்லை என்றால், பொது மக்கள் வரவேற்பார்கள், பத்திரிகைகளும் வரவேற்கும். அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. எந்த விதமான வரியும் இல்லாமல், நேர்முகமான வரியோ, மறைமுகமான வரியோ எதுவுமில்லாமல் வரவு செலவுத் திட்டம் வரும் என்று எதிர் பார்த்திருந்தால், அவர்களுடைய பொருளாதார ஞானத்தை, அவர்களுடைய அரசியல் ஞானத்தை நான் தெரிந்து கொள்ளவேண்டும். அதைத் தெரிந்து கொண்டால் அதை நான் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்னால் தானே, வரிகள் எல்லாம் போடப்பட்டது என்றெல்லாம் கூட குறிப்பிட்டார்கள்.



8th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

வீட்டு நிலத்திற்கும், நீர், இவைகளுக்கும் வரி போடப்பட்டது. நீர் வரி சம்பந்தமாக மசோதா கொண்டுவந்து அதை பொறுக்குக் கமிட்டி நல்ல முறையில் பரிசீலனை செய்து சட்டமாக்கப்பட்டிருக்கிறது. நான் முன்பு குறிப்பிட்டது போல், கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள், சென்ற வரவு செலவுத் திட்டத்தில் இம்மாதிரியான ஒரு வரி வரும் என்று குறிப்பிட்டிருந்தது. அந்தக் கணக்கை வைத்துக்கொண்டு பிற இனங்களை எல்லாம் எப்படியெல்லாம் சரிக்கட்டுவது, இதன் மூலம் எவ்வளவு வருமானம் வரும், செலவு எவ்வளவு என்று கணக்கிட்டு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. நகர்ப்புறங்களிலுள்ள மனைக்கட்டுகளுக்கு வரிபோடுகின்ற மசோதா இப்போது பொறுக்குக் கமிட்டியில் பரிசீலனையில் இருக்கின்றது. இதையும் எந்த அளவுக்கு மாற்றி அமைக்கவேண்டுமோ அந்த அளவுக்கு மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. யார் மீதும், நகரத்திலுள்ள யார் மீதும் இந்த வரி பாரமாக இருக்கக்கூடாது என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. நீர் வரியை அமுலாக்குவதற்கு அரசாங்கம் எம்மாதிரியெல்லாம் மாற்றி அமைப்பதற்கு இணங்கியதோ, அதே போன்று இதிலும் ஏதாவது மாறுதல்கள் செய்யவேண்டும் என்று எண்ணினால் அவற்றை பொறுக்குக் கமிட்டியில் பரிசீலனை செய்து திருத்தி அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட பின்னும் மீண்டும் இந்தச் சபைக்கு அந்த மசோதா வரும். சாதாரணமாக நகரத்தில் குடியிருப்பு மனை என்றால் கட்டிடம் இல்லாமல் இருப்பது தான், இதற்கு வரி போடவேண்டும் என்ற எண்ணமிருந்தாலும் இதை எந்த அடிப்படையில் போடவேண்டும் என்பதை பரிசீலனை செய்து கொள்ளலாம். நீர்வரி போடப்பட்டிருப்பதைப்பற்றி பல அங்கத்தினர்கள் தங்கள் ஆட்சேபத்தையும் அபிப்பிராயங்களையும் தெரிவித்தார்கள். அதிலும் முக்கியமாக நீர்ப்பாசன திட்டங்களை புதிதாக ஆக்குவதில் மட்டும் செலவு ஏற்படுவதில்லை, பராமரிப்பதிலும் அதிகமான செலவு ஏற்படுகிறது. இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் பலர் சோஷியலிஸத்தைப்பற்றிப் பேசினார்கள். சோஷியலிஸத்தைப்பற்றிப் பாடம் கற்பித்தார்கள். இப்போது என்னுடைய கவலை சோஷியலிஸத்தை யாரிடமிருந்து கற்றுக்கொள்வது என்பது. ஒரே இடத்தில் முன்னால் இருந்தது போலவே வரி இல்லாமல் இருக்கவேண்டும் என்பதும், சில இடங்களில் மட்டும் அதிகப்படியான வரிகளை கொடுத்துக்கொண்டேயிருக்கவேண்டும், இது தான் சரி என்று சொன்னால் அது சோஷியலிஸம் அல்ல. ஆகவே எந்த அளவில் வரி குறைவாக இருக்கிறது என்பதையெல்லாம் பார்த்துத்தான் இப்போது நீர்வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அதிலும் மசோதாவில் முன்பு இருந்ததைவிடவும் பொறுக்குக் கமிட்டி பரிசீலனை செய்ததில் ஓரளவுக்கு குறைத்து இருக்கிறோம்.

இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சியிலுள்ள சில அங்கத்தின்ர்கள் விவாதித்தார்கள். குறை கூறினார்கள். கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் இதை நிராகரித்தே விட்டார்

கள். அப்படியெல்லாம் எதிர்க்கட்சி என்ற முறையில் அவர்கள் குறை கூறினாலும், கண்டிக்கவேண்டும் என்ற அளவில் கண்டித்தாலும், அல்லது கண்டிக்கவேண்டும் என்ற உணர்ச்சி இருந்தாலும், இந்த வரவு செலவுத் திட்டத்தில் உருப்படியாக என்ன குறையைக் காண முடியும்? என்ன புதிய யோசனைகளை சொல்ல முடியும் என்றுதான் இப்போதும் எனக்குத் தோன்றுகிறது. இங்கு கடந்த ஆறு நாட்களாக நடந்த பொதுவிவாதத்தில் பல அங்கத்தினர்கள் பேசினார்கள், கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட. இவர்கள் எல்லாம் பேசியிருந்தும், இந்த வரவு செலவுத் திட்டத்தில் நான் சமர்ப்பித்த, நான் ஆற்றிய உரையில் என்ன குறையை, உருப்படியான என்ன குறையை கண்டார்கள் என்று தான் தெரியவில்லை. ஆட்சியை இப்போது இருப்பதைவிட இன்னும் நல்ல முறையில் நடத்துவதற்கு என்ன உருப்படியான யோசனைகளை சொல்லியிருக்கின்றார்கள் என்று பார்த்தால் ஒன்றுமே இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஒரு யோசனையைச் சொன்னார்கள். அது பழைய யோசனைதான். மோட்டார்கள், பஸ்கள், சினிமாக்கள் இவைகளை தேசியமயமாக்கலாம் என்கின்ற யோசனை. நேற்றுப் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் பெட்ரோல் பங்கையும் சேர்த்துக்கொள்ளலாம் என்ற யோசனையைத் தெரிவித்தார்கள். இவைகளை எல்லாம் தேசியமயமாக்கலாம் என்ற ஒரு யோசனையைத்தான் தெரிவித்தார்கள். ஆனால் இப்போது பேசிய கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சர்க்கார் நடத்துகின்ற மோட்டார் டிரான்ஸ்போர்ட்டில் அதிகமான லாபம் வருவதில்லை, லாபம் வரவர குறைந்து கொண்டே வருகிறது என்று குறிப்பிட்டார்கள். லாபம் அவ்வாறு குறைகின்றது என்று சொன்னால் அது சர்க்காருடைய திறமைக் குறைவு என்றோ அல்லது கவனிப்புக் குறைவு என்றோ சொல்ல முடியாது என்பதை நான் கூறிக்கொள்ள முடியும். சர்க்கார் நடத்துகின்ற டிரான்ஸ்போர்ட்டில், 1947-ல் பாஸஞ்சர் ஃபேர் எவ்வாறு இருந்ததோ அதே தான் இப்போதும் இருக்கிறது. இன்னும் உயரவில்லை. இரண்டாவது அவ்வப்போது முதலீடு செய்யும் போது, என்ன வட்டி முதலில் அளிக்கப்பட்டு வந்ததோ அதே விகிதம் தான் இப்போதும் அளிக்கப்பட்டு வருகிறது. இப்போது சுமார் 5.5½ சதமானம் ரூபாய் அளிக்கப்பட்டு வருகிறது. அதோடு, மற்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு எந்த முறையில் பஞ்சப்படி கொடுக்கப்படுகிறதோ அதே முறையில் இவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. தனியார் துறையை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு சில ரூட்டுகளில் நஷ்டம் வருகிறது என்று சொன்னால் அந்த இடத்தில் பஸ் போக்குவரத்து நடத்த முன் வரமாட்டார்கள். ஆனால் அரசாங்கம், பிரயாணிகள் சௌகரியத்தை மட்டும் கருதி நஷ்டம் வந்தாலும் கூட, புதிய ரூட்டுகளில் எல்லாம் பஸ்களை ஓட்டி வருகிறார்கள். அந்த முறையில் சென்னை நகரத்தில் பல இடங்களில் பஸ் விடப்பட்டு வருகிறது. லாபத்தைப் பாராமல் பாஸஞ்சர்களின் வசதியை மட்டும் கருதி பஸ் போக்குவரத்தை நடத்திவருகின்ற காரணத்தினால் தான் நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு லாபம் இதில் வரவில்லை. ஆனால் எந்த தொழிலாக இருந்தாலும் சரி, தேசியமயமாக்க வேண்டும் என்ற எண்ணம்





சர்க்காருக்கு இருக்குமானால் அதைத் தேசியமயமாக்கி வருகிறது. அப்படிப் பல தொழில்களை இன்றைக்கு சர்க்கார் தேசியமயமாக்கியிருக்கிறது. தேசியமயமாக்குவதில் இந்த சர்க்காருக்கு நம்பிக்கை இருக்கிறது. அந்த முறையில் எதை தேசியமயமாக்கவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறதோ அவற்றையெல்லாம் தேசியமயமாக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் எல்லாவற்றையும் தேசியமயமாக்கவேண்டும் என்று சொல்லுகின்ற யோசனையை சர்க்கார் இப்போது ஏற்றுக்கொள்வதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்றால், எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அரசாங்கம் சில முதலாளிகளுக்கு சலுகைகள் காட்டவேண்டும் என்றோ, அல்லது அவர்களுடைய வசதிகளை பெருக்கிக்கொள்ள வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்கின்ற காரணத்தினால் அல்ல. மக்களுக்கு சேவை புரிவதை முக்கியமாகக் கொண்டு தான் சில தொழில்களை தேசியமயமாக்காமல் இருந்து வருகிறது. தேசியமயமாக்குவது என்றால் அதற்குரிய முதல் வேண்டும், ஆற்றல் வேண்டும். முதலாளிகள் முதலீடு போடுவதென்றால், அதை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களுடைய அனுபவத்தையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால், அவர்கள் லாபம் சம்பாதிப்பதிலே, சர்க்கார் வரியாகப் போட்டு, பெரும்பாலும் அதை மீண்டும் நாமே பெற்றுக்கொள்ள வேண்டும், வரி மூலமாக அரசாங்கமே பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் கொள்கை. இப்பொழுது, மத்திய ஆட்சியிலே 'சூப்பர் ப்ராபிட் டாக்ஸ்' கூட போட்டிருக்கிறார்கள். சிறு தொழிலதிபர்கள் இப்பொழுதே குறை கூறுகிறார்கள். தங்களுக்குப் போதிய ஊக்கம் இல்லாமல் போய் விடும், மேலும் முதலீடு போடுவதற்கு இடம் இல்லாமல் போய்விடும் என்று அவர்கள் அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், ஆட்சேபணையை தெரிவித்திருக்கிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். அது எவ்வளவு தூரம் சரி என்பதைப் பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. பிரைவேட் செக்டாருக்கும், பப்ளிக் செக்டாருக்கும் என்ன வித்தியாசம் பாராட்டுவது? பப்ளிக் செக்டார் எது, பிரைவேட் செக்டார் எது? எல்லாவற்றையும் பப்ளிக் செக்டாரே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் சொல்லுவார்கள். ஒன்றுமே பப்ளிக் செக்டாரில் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் சொல்லுவார்கள். இரண்டுக்கும் மத்தியாக, பிரைவேட் செக்டார், பப்ளிக் செக்டார் இரண்டிற்கும் அடிப்படையில் வித்தியாசம் பாராட்டுவது சரியல்ல. பிரைவேட் செக்டார், பப்ளிக் செக்டார் இரண்டும் இம்மாதிரி தான் நடைபெறவேண்டும், இயங்கவேண்டும். பிரைவேட் செக்டாரிலிருந்து வருகிற லாபத்தை பெரும்பாலும் மாநில ஆட்சியும், மத்திய ஆட்சியும் பலவிதமான வரிகளாகப் பெற்றுக்கொள்ளுவார்கள். அந்தப் பணத்தைக் கொண்டு மக்களுக்கு வேண்டிய சேவையைச் செய்வார்கள். அரசாங்கம் செய்ய வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. ஆகையால் எல்லாவற்றையும் அரசாங்கமே தங்கள் தலையில் போட்டுக்

கொண்டு தாங்களே ஏற்று நடத்தவேண்டும் என்ற எண்ணம் இல்லை. அது தான் அடிப்படை.

முதல் முதலில் இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் நல்ல முறையிலே விவாதத்தைத் துவக்கினார்கள், நல்ல விமர்சனம் செய்தார்கள். முக்கியமாக, இந்த வரி விகிதத்தைப்பற்றி பேசினார்கள். மத்திய ஆட்சிக்கும், நம்முடைய ஆட்சிக்கும் உள்ள வரி விகிதாசாரத்தைப் பற்றி பேசினார்கள். கனம் உருப்பினர் திரு. மதியழகன் அவர்கள் எந்தத் திருப்பத்தையும் காணவில்லை என்று சொன்னார்கள். எங்களிடம் திருப்பத்தைக் காணவில்லை என்று சொன்னார்கள். திருப்பத்தைக் காண முடியாது. இன்றைக்கு புதியதாக ஒரு திருப்பத்திற்கு அவசியம் இல்லை. ஒரே திருப்பமாகத் தான் இருக்கிறது. திருப்பத்தை மாற்றவேண்டிய அவசியமில்லை. ஆனால் எதிர்க்கட்சியில் நான் ஒரு திருப்பத்தைக் கண்டேன். அதிலே எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. இப்பொழுது அவர்கள் பேசிய முறையைத்தான் சொல்லுகிறேன். மத்திய ஆட்சிக்கும், மாகாண ஆட்சிக்கும் எதற்கு அதிகாரம் அதிகம், எது அதிக வரி போடவேண்டியது, பெருக்கக்கூடிய வரித்துறை யாரிடம் இருக்கிறது, பெருகக்கூடாத வரித்துறை யாரிடம் இருக்கிறது, பெருகக்கூடிய வரித்துறை மத்திய அரசாங்கத்தினிடம் இருக்கிறது. பெருகக்கூடாத வரித்துறைகள் நம்மிடம் இருக்கின்றன . என்றெல்லாம் குறை கூறினார்கள். அம்மாதிரி குறை கூறுவது நியாயம் தான். இப்படிக் குறை கூறுவதில் கோரிக்கை விடுவதில் ஒன்றும் தவறில்லை, ஆட்சேபணை ஒன்றும் இல்லை. அதையெல்லாம் சொல்லத் தான் வேண்டும். மாகாண ஆட்சி இருக்கிற வரையிலே, நம் மாகாணம் வேறு, மத்திய ஆட்சி வேறு என்று பிரிக்கக்கூடாது என்றாலும், மத்திய ஆட்சி நம்முடைய மாநிலத்திலுள்ள கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் பயன்படுகிறது என்றாலும், அவர்களுடைய செலவினங்களினால் நமக்கும் பயன் கிட்டுகிறது என்றாலும், அவ்வப்பொழுது எந்த நாட்டிலும் மாநிலத்திற்கு எவ்வளவு அதிகாரம், மத்திய ஆட்சிக்கு எவ்வளவு அதிகாரம் என்றெல்லாம் கோருவதுண்டு, கேட்பதுண்டு. அம்மாதிரி கேட்கலாம், கேட்பதில் ஒன்றும் தவறில்லை. அதே வகையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுக்காட்டினார்கள். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களும் கூட இதுபற்றிக் குறிப்பிட்டார்கள். பினான்ஸ் கமிஷனுக்கு இந்த அரசாங்கம் ஒரு மெமோராண்டம் சமர்ப்பித்தார்கள். எவ்வளவு அதிகமாக வேண்டுமோ அவ்வளவு பெறுவதற்காக நம்முடைய வாதத்தை எடுத்துச் சொன்னோம். நம்முடைய வாதத்தை எடுத்துச் சொல்லும்பொழுது, மாநில ஆட்சிக்கு எவ்வளவு தூரம் அதிக வரி விகிதாசாரம் வரவேண்டும் என்று சொன்னோம். அதையே வைத்துக்கொண்டு, இப்பொழுது அப்படியிருக்கிறது, இப்படியிருக்கிறது என்று சொன்னால், அதில் பயன் இல்லை . . . . .

**திரு. கே. மதியழகன்:** 'பினான்ஸ் கமிஷனுக்கு' கொடுத்த மெமோராண்டத்தில் 'எக்ஸெப்ஷனலி ஹெவி' என்று சொல்லியிருக்கிறார்கள், 'லான் மட்டும்' என்று சொல்லியிருக்கிறார்கள்.



நான் குறிப்பிடும்பொழுது கூட, கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, எதிர்க்கட்சி சர்டிபிகேட் வாங்குவதற்காக நாங்கள் இதை வற்புறுத்திச் சொல்லவில்லை. நான் ஒரு தெளிவு மட்டும் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். நான் குறிப்பிடும்பொழுது திட்டவட்டமாகச் சொன்னேன். கனம் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் நிதி அமைச்சராக வந்த பிறகு, கடந்த பட்ஜெட்டில் அறிவித்த புதிய வரிகளிலிருந்து நடப்பு ஆண்டில் 4 கோடியே 80 லட்சம் ரூபாய் கிட்டுமென எதிர்பார்க்கிறார். இப்பொழுது இங்கு பிரேரேபித்த அடிஷனல் டாக்ஸேஷன் பிரபோஸல்ஸ் உள்பட 17 கோடி ரூபாய் வரி நாம் செலுத்த வேண்டியதாக இருக்கிறது. இனிமேல் போடுவதற்கு வரியில்லை என்பதினால் வரி போடவில்லை என்பதைத்தான் சொன்னேன். நான் கனம் அமைச்சர் அவர்களிடம் ஒன்றை மட்டும் கேட்க விரும்புகிறேன். அவர் நிதி அமைச்சராக வந்தபிறகு 17 கோடி ரூபாய் புதியதாக போடப்பட்ட வரி என்பதை அவர் மறுக்கிறாரா என்பது மட்டும் சொன்னால் போதும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் ஏன் மறுக்க வேண்டும்? (சிரிப்பு) அடுத்த ஆண்டிலும் நான் நிதி அமைச்சராக இருந்து வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவேண்டியிருந்தால், மேலும் கூட வரி போட வேண்டியிருந்தால் வரி போடத்தான் வேண்டும். வரி போடுவது மக்களுடைய நன்மையை ஒட்டித்தான், மக்களுடைய வளர்ச்சிக்காகத்தான். மக்களுடைய வளர்ச்சி வேண்டாம் என்றால், வரியில்லாமலேயே அரசாங்கத்தை நடத்தி விடலாம். வெறுமனே அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டு அரசாங்கத்தை நடத்திக்கொண்டு போய்விடலாம். மக்களுடைய வளர்ச்சிக்காகத்தான் வரி போடவேண்டும். தாங்கக்கூடியவர்கள் மீது தான் வரி போடவேண்டும் தாங்கக்கூடாதவர்களுக்கும் அதன் மூலம் வசதி செய்து தருவதற்குத்தான் வரி போடுகிறோம். வரி போடுவது தான் சிறந்த சோஷலிஸக் கொள்கை. வரி இல்லாமல் சோஷலிஸக் கொள்கை இல்லை. தாங்கக்கூடியவர்கள் மீது வரி போட்டு, அவர்கள் கொடுத்து, மற்றவர்களுக்கு, அவர்களைவிட ஈனஸ்திதியில் இருப்பவர்களுக்கு, அது பயன்பட வேண்டுமென்பதற்காகத்தான் வரி போடுகிறோம். நான் வரி போடுகிறேன் என்பதை மறுக்கவில்லை. மேலும் போடவேண்டியிருந்தாலும், போடத்தான் வேண்டும், போடலாம், அம்மாதிரி வரி போட வேண்டியும் இருக்கலாம். வரி போட்டுத்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அப்பொழுதுதான் பினான்ஸ் கமிஷனிடம் மெமோராண்டம் கொடுத்தோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிக்கொண்டு வருகிறது. அதற்கு வரி போட்டுத்தான் ஆகவேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டபொழுது, இந்த மன்றத்தில் அதைச் சமர்ப்பித்தோம். பின்னாலே அதை பிளானிங் கமிஷன் ஏற்றுக்கொண்டார்கள். அப்பொழுதே நாம் 35 கோடி ரூபாய் வேண்டுமென்று சொன்னோம். அவர்கள் ஏதோ கணக்குப் போட்டுப் 43 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். புதிய வரி போட்டுத்தான் இதைச் சரிக்கட்டவேண்டுமென்று சொன்

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1963

எல்லா பெடரேஷன்களிலும் மத்திய ஆட்சி என்னென்ன வரிகளை விதிக்க வேண்டும், மாநிலங்கள் எந்தெந்த வரிகளை விதிக்க வேண்டும் என்று போட்டு, மத்திய ஆட்சி ஒரு பகுதியை குறிப்பிட்ட செலவினங்களுக்காகக் கொடுக்கிறது. அப்படிக் கொடுப்பது அதிகமாக இருக்கிறதா, அல்லது குறைவாக இருக்கிறதா என்பதை அப்போதைக்கப்போது பரிசீலனை செய்து, மாநிலங்களுக்கும் மத்திய ஆட்சிக்கும் நியாயம் வழங்கும் முறையிலே ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு நிதிக் கமிஷனை நியமித்து, அவர்கள் பார்த்து முடிவு செய்யவேண்டுமென்று இருக்கிறது. முதல் நிதிக் கமிஷன் சிபார்சுகளின்படி நமக்கு வருமான வரியிலிருந்து 55 சத விகிதம் கிடைத்தது. இரண்டாவது நிதிக் கமிஷன் சிபார்சின்படி நமக்கு 60 சத விகிதம் கிடைத்தது. மூன்றாவது நிதிக் கமிஷன் சிபார்சின்படி இப்பொழுது நமக்கு 66.2/3 சத விகிதம் கிடைக்கிறது. வருமான வரியிலிருந்து கூட நம்முடைய பங்கு அதிகரித்துக்கொண்டு வருகிறது. இப்பொழுது இருக்கின்ற கொள்கைப்படி, வசூலுக்காக 20 சத விகிதம் நிறுத்திக் கொண்டு, 80 சத விகிதத்தை ஜனத்தொகை விகிதாசாரப்படி மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறார்கள். அது நமக்கு அனுகூலமாக இருக்கிறது. அந்தந்த மாநிலங்களே வருமான வரியை வைத்துக் கொள்வதென்றால், வங்காளத்திற்கும், பம்பாய்க்கும் தான் அதிகமாக வரும். நமக்கு இப்பொழுது கிடைப்பது வராது. 20 சத விகிதத்தை வசூலுக்காக ஒதுக்கி வைத்துவிட்டு, 80 சத விகிதத்தை ஜனத்தொகை விகிதாசாரப்படி பிரித்துக் கொடுக்கிறார்கள். அதன்படி இந்த ஆண்டிலே வருமான வரியிலிருந்து நாம் ரூ. 8 கோடி எதிர்ப்பார்க்கிறோம்.

எக்ஸைஸ் வரியை எடுத்துக்கொண்டால், முதல் நிதிக் கமிஷன் மூன்று பொருள்களின் மீது இந்த வரியை விதித்தார்கள். இரண்டாவது நிதிக் கமிஷன் 8 இனங்களின் மீது விதித்தார்கள். இப்பொழுது மூன்றாவது நிதிக் கமிஷன் சிபார்சின்படி இந்த எக்ஸைஸ் வரியை 35 இனங்களுக்குப் போட்டிருக்கிறார்கள். இந்த வரியும் கூட ஜனத்தொகை விகிதாசாரப்படி மாநிலங்களுக்கு அளிக்கப்படுகிறது. பின் தங்கிய மாநிலங்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஜனத்தொகை விகிதாசாரத்தில் இது அளிக்கப்படுகிறது. ஜனத்தொகை விகிதாசாரப்படி வேண்டாம், அந்தந்த மாநிலங்களில் கிடைப்பதை அவர்களே வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னால், நமக்கு குறைவாகத் தான் வரும். மேலும் மூன்றாவது நிதிக் கமிஷன் சிபார்சின்படி வருஷா வருஷம் திட்டத்திலே இல்லாத ரெவின்யூ இனத்திலே செலவு செய்யும் இனங்களுக்காக ரூ. 3 கோடி கொடுக்கப்படுகிறது. திட்டச் செலவுகளுக்காகக் கொடுக்கப்படுவதற்கு மேலே இந்தத் தொகை நமக்குக் கிடைக்கிறது. இந்த ஆண்டிலே திட்டச் செலவுகளுக்காக நாம் 58 கோடியே 32 லட்சம் ரூபாய் ஒதுக்குகிறோம். இதிலே 31 கோடியே 80 லட்சம் ரூபாய் நமக்கு மத்திய ஆட்சியிலிருந்து கிடைக்கிறது. இதிலே கூட ரூ. 4 கோடி குறைந்துவிட்டது என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். இப்பொழுது கொடுக்கப்படவில்லை என்றாலும், மொத்தத்திலே அது சரிக்கட்டப்பட்டு



8th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

விடும். அவர்கள் கொடுப்பதாக ஒத்துக் கொண்டதைக் கொடுப்பார்கள். நாம் ஓவர் டிராப்ட் வாங்க வேண்டிய நிமித்தம் இது வரையிலும் ஏற்படவில்லை. கடைசியிலே அவர்கள் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிடுவார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சென்ற நிதிக் கமிஷன் எல்லா மாநிலங்களுக்கும் அட்ஹாக் கிராண்டுகள் வழங்கியிருக்கிறார்கள். மூன்று மாநிலங்களுக்கு மட்டும் கொடுக்கவில்லை. நம்முடைய மாநிலத்திலே இருக்கும் சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதம் மற்ற மாநில ஊழியர்களுடைய சம்பள விகிதத்தை விடவும், மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய சம்பள விகிதத்தை விடவும் குறைவாக இருக்கிற நிலைமை இருந்தாலும், இந்த அட்ஹாக் கிராண்டு கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா? இனிமேலாவது கொடுப்பார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இரண்டு விதத்திலும் அவர்கள் கொடுக்க முடியாது. எல்லாவற்றையும் பரிசீலனை செய்துதான் ரூ. 3 கோடி கொடுத்திருக்கிறார்கள்.

இப்பொழுது 1946-47-ம் வருஷத்தை எடுத்துக் கொண்டால், மத்திய வரிகளிலிருந்தும், கிராண்-இன்-எய்டிலிருந்தும் நமக்கு எவ்வளவு கிடைத்தது, நம்முடைய மாநிலத்தின் வருமானம் என்ன என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் தெரியும். நான் கொடுக்கும் புள்ளி விவரங்களிலிருந்து,

Percentage of Central taxes and Grants-in-aid to the revenues of the State Government, compared to the revenue of the State Government.

என்ன என்பது தெரியும். நம்முடைய வருமானத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், 1946-47-ல் 11.9 சத விகிதமும், 1955-56-ல் 23.7 சத விகிதமும், 1959-60-ல் 30.4 சத விகிதமும், 1961-62-ல் 33.1 சத விகிதமும் வந்திருக்கிறது. இதிலிருந்து மத்திய ஆட்சியிலிருந்து நமக்குக் கிடைக்கும் பங்கு அதிகரித்துக் கொண்டு வருவது தெரியும். இப்பொழுது நமக்கு ரூ. 30 கோடி வரையில் கடனாகவும், வருமானமாகவும் கிடைக்கிறது. இது நம்முடைய மாநில வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.

அடுத்து, எலாஸ்டிக் வரிகள் எல்லாம் மத்திய ஆட்சிக்குப் போய்விட்டது, நான்-எலாஸ்டிக் வரிகள் தான் நம்மிடம் இருக்கின்றன என்று கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் சொன்னார்கள். நில வரியைப் பொறுத்த வரையில், ஒரு வேளை அப்படி இருக்கலாம். இப்பொழுது நாம் போடுகிற விற்பனை வரி, மோட்டார் ஸ்பிரிட் வரி, மோட்டார் வாகனங்கள் வரி, மின்சார வரி, இவற்றிலிருந்து நம்முடைய வருமானம் பெருகிக் கொண்டுதான் வருகிறது. இந்த மாநிலம் போடுகிற வரியில் மத்திய ஆட்சி தலையிடவில்லை. விற்பனை வரியை எடுத்துக்கொண்டால், அதிலே "எவேஷன்" இருக்கிறது என்று கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். வருமான வரியைப் பற்றி நான் பேசுவதற்கில்லை. ஆனால், விற்பனை வரியைப் பொறுத்தவரையில்,

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1963

னார்கள், நாமும் சொன்னோம். 35 கோடி ரூபாய் போதும் என்று நாமும் ஒரு கணக்குப்போட்டு சொன்னோம். அந்த 35 கோடி ரூபாய், 36 கோடி ரூபாய்க்குத்தான், இந்த 12 கோடி ரூபாய் உள்பட வரி போட்டிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகப் போட்டிருக்கிறோம். அதனால் வரி போடுவதைப்பற்றி நாம் தயங்கவில்லை, அவசியம் இருந்தால் போடுவோம். மேலும் போடுவதற்கு அவசியமிருந்தால் போடுவோம். வரி போடுவதற்கு இடமில்லை, அதனால் போடவில்லை என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. வரி போடுவதற்கு இடம் இருக்கிறது. நான் பயமுறுத்துவதற்காகச் சொல்லவில்லை. நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. இந்த மாநிலத்தில் இப்பொழுது இருக்கிற ஏற்பாட்டின்படி வரி வேண்டுமென்றால், அவசியமிருந்தால், வரி போடுவதற்கு இடம் இருக்கிறது. ஆனால் வரி வேண்டியதில்லை, வரிக்கு அவசியமில்லை. இப்பொழுது இருக்கிற வரியை வைத்துக்கொண்டே பாதுகாப்புத் தேவையையும் நாம் சமாளிப்போம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பையும் சமாளிப்போம். திட்டத்தில் அடங்காத திட்டத்தை நிறைவேற்றுவதையும் சமாளிப்போம். இதையெல்லாம் நன்றாக ஆராய்ந்துதான் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறோம்.

கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் வருமானம் அதிகமாக பெருகக்கூடிய வரிகளை மத்திய ஆட்சி வைத்துக்கொண்டிருக்கிறார்கள், மற்றபடி வருமானம் பெருகாத வரி இனங்களைத்தான் மாநில ஆட்சி வைத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது அப்படியில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெடரல் டைப் ஆட்சி இருக்கிற எந்த நாட்டிலும், மாநில ஆட்சிக்கு என்ன முறை, மத்திய ஆட்சிக்கு என்ன முறை என்றெல்லாம் இருக்கிறது. பல நாடுகளிலும் இதைப்பற்றி ஆராய்கிறார்கள். அவர்களுடைய அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றும் பொழுது இதுபற்றியெல்லாம் ஆராயப்படுகிறது. நம்முடைய அரசியல் நிர்ணய சபையிலும் இதுபற்றி ஆராயப்பட்டது. நம்முடைய நாட்டுப் பிரதிநிதிகளும் அதில் இருந்தார்கள். தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளும் அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்தார்கள். அப்பொழுதிருந்த ஆட்சியாளர்களும் நமக்கு என்னென்ன உரிமைகள் வேண்டும், என்னென்ன உரிமைகளை பாதுகாத்துக்கொள்ளவேண்டும், என்னென்ன வசதிகளை பெருக்க வேண்டும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு, மத்திய ஆட்சிக்கு என்ன வரி, மாநில ஆட்சிக்கு என்ன வரி என்பதை நிர்ணயித்திருக்கிறார்கள். இம்மாதிரி நிலைமை நம்முடைய நாட்டில் மட்டுமல்ல. பெடரல் டைப் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழுள்ள எல்லா நாடுகளிலும் இப்படித்தான் நிலைமை இருக்கிறது.

இப்பொழுது நாம் நெருக்கடியான நிலையிலே இருக்கும் பொழுது மத்திய ஆட்சியின் தேவையை உணரவேண்டும். சாதாரண நிலையிலும் உணரவேண்டும். இப்பொழுதிருக்கிற நிலையிலே பாதுகாப்பு முழுப் பொறுப்பும் மத்திய அரசாங்கத்தினு



8th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

டையது. நாம் அவர்களுக்குத் தேவைப் படுவதை கொடுப்பதற்கில்லை என்று சொல்ல முடியாது. அவர்களுக்கு என்ன தேவையோ அதை நாம் அவர்களுக்காக பெற்றுத்தான் ஆகவேண்டும். எல்லா உறுப்பினர்களும் ஒரு மனதாக நாட்டு பாதுகாப்பிற்காக முதல் இடம் அளிப்போம், அதற்காக எல்லா தியாகங்களையும் செய்வோம், எல்லா உதவிகளையும் செய்வோம் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த நிலையில் இப்பொழுது மத்திய ஆட்சிக்கு என்ன வரி, மாநில ஆட்சிக்கு என்ன வரி என்றெல்லாம் இப்பொழுது கணக்குப்போடுவோம் என்று சொல்வது சரியல்ல. சாதாரண நிலையிலும் அம்மாதிரி சொல்லக்கூடாது. பின்னால் அது பற்றி சொல்லுகிறேன். இப்பொழுதிருக்கும் நிலையிலே மத்திய ஆட்சிக்கு இதுவேண்டும், அது வேண்டாம் என்று சொல்வது முறையல்ல. மத்திய அரசாட்சிக்கு அதிகச் செலவு இருக்கிறது, தேவை இருக்கிறது. தேவை, பாதுகாப்புத் தேவை. நமக்கும் அவர்கள் உதவி அளிக்கின்றார்கள்.

பெடரல் டைப் அரசாங்கம் நடக்கிற எந்த நாட்டிலும், மாநில ஆட்சி, மத்திய ஆட்சி என்று அடியோடு பிரித்துவிடுவதில்லை. மாநிலங்கள் இந்த வரிகளைத்தான் போட்டு அவர்கள் பயன் படுத்திக்கொள்ளவேண்டும். மத்திய அரசாங்கம் இந்த வரிகளைத்தான் போட்டு அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும், ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லை, அவரவர்கள் பெருகிற வரி இனங்களைக் கொண்டு அவரவர்கள் ஆட்சி நடத்திக் கொள்ளலாம் என்று சொல்லுவதற்கில்லை, அப்படிச் சொல்லுவது முறையும் இல்லை, நல்லதுமில்லை. ஏனென்றால் மத்திய ஆட்சியில் போடுகின்ற இந்த வரிகள் கூட பிரித்துக்கொள்ளப் படுகின்றன. இந்த வரிகளிலிருந்தும் கிடைக்கும் தொகையில் ஒரு பகுதியை மாநில ஆட்சிக்குக் கொடுப்பதோடு, மான்யமும் கொடுக்கிறார்கள். ஆகவே மத்திய ஆட்சி என்ன செய்கிறதோ, அதிலே மாநில ஆட்சிகளுக்கும் அக்கறை இருக்கிறது. நான் சொன்னபடி, அவர்களுக்குக் கிடைக்கிற வரிகளிலிருந்து ஒரு பகுதியைக் கொடுப்பதோடு, கிராண்ட்-இன்-எய்டும் கொடுக்கிறார்கள். மத்திய ஆட்சி இவ்வளவு வரிகள் போட்டிருக்கிறார்களே, அவற்றிலிருந்து நமக்கு எவ்வளவு கிடைக்குமென்று சில அங்கத்தினர்கள் கேட்டார்கள். ஸர்சார்ஜ் ஆகக் கொடுப்பதெல்லாம் நமக்கு வராது. மத்திய ஆட்சிக்குத்தான் போகும். அவர்கள் போட்டிருக்கிற வரி இனங்களிலிருந்து நமக்கு குறைந்த அளவுக்குத்தான் கிடைக்கும். எதிர்க் கட்சியினர் சிலர் நமது பற்றாக் குறையைச் சரிக்கட்டுவது பற்றிக் குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்கார் சென்ற மாதம் 28-ம் தேதி அவர்களுடைய பட்ஜெட்டை சமர்ப்பித்தார்கள். ஆனால், சென்ற மாதம் 18-ம் தேதியே விற்பனை வரியை இரட்டிப்பு ஆக்குகின்ற மசோதாவை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலிருந்து நமக்கு கணிசமான அளவுக்குப் பணம் வரும். அப்படி வரும் என்று சொன்னால், வேறு மாநிலத்திலுள்ளவர்கள் கொடுப்பார்கள். ஆடம்பரப் பொருள்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எல்லா மாநிலங்களும் சேர்ந்து ஒரே அளவுக்கு வரி விதிக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். நாமும் அதை ஒப்புக் கொண்டிருக்கிறோம். அதிலிருந்து ஓரளவுக்குப் பணம் வரும்.

அதிலே "எவேஷன்" அதிகம் இல்லை. கூடியவரையிலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. கொஞ்சம் கூட "எவேஷன்" இல்லாமல் வசூலிப்பதற்கு அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 1956-57-ல் ரூ. 11.7 கோடி கிடைத்தது. 1961-62-ல் ரூ. 15.79 கோடியும், இந்த வருஷத்தில் ரூ. 17.59 கோடியுமாக உயர்ந்திருக்கிறது. அடுத்த ஆண்டிலே ரூ. 19.21 கோடி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, வருமான வரி, யூனியன் எக்ஸைஸ் வரிகளை மாநிலங்களுக்குக் கொடுப்பதிலே பிரயோசனம் இல்லை. நம்முடைய மாநிலத்திற்கும் நல்லதல்ல என்பதை மேலும் விளக்கிக் கூற வேண்டிய அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன். அத்துடன் ஒரு மாகாணத்தில் வசூலிக்கப்படுகிற வரி அடுத்த மாகாணத்திற்கே கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னால் அந்த வரி மற்ற மாகாணத்திற்குக் கிடைக்காமல் போய் விடும். அப்பொழுது நம்முடைய மாகாணத்திற்கு அதிகப்படியான வரிப் பணம் கிடைக்காது. மற்ற மாகாணங்களில் கலால் மூலம் அதிகப்படியாக வரிப் பணம் கிடைக்கிறது. அவ்வளவு நம் மாகாணத்தில் கிடைக்கவில்லை. அதனால் நமக்கு மத்திய அரசாங்கத்திலிருந்து அந்த முறையில் அதிகப்படியான
12-30 p.m. பணம் கிடைக்காது. பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் தான் அதிகப்படியாகக் கிடைக்கும். இப்பொழுது மூன்றில் இரண்டு பங்கு மாகாணங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படி இல்லையென்றால் வங்காளம் பம்பாய்க்குத்தான் அதிகமாகக் கிடைக்கும் நமக்கு அவ்வளவாகக் கிடைக்காது. நம் மாகாணம் போன்ற குறைந்த அளவில் வசூலிக்கக்கூடியவர்களுக்கு அதிகமாக வராது. ஆகவே அந்த முறையை ஒப்புக்கொள்வது சரியல்ல. நமது மாகாணத்தில் அதிகமாக அந்த வியாபாரம் நடைபெறவில்லை. பம்பாயில் தான் அதிகமாக கலால் வியாபாரம் நடக்கிறது. வசூலிப்பது எல்லாவற்றையும் அந்தந்த மாகாணங்களுக்கே கொடுக்க வேண்டும் என்று சொன்னால் நமக்குப் பாதகம் ஏற்படும். ஒரு சில வரி புதிய இனங்களில் இருக்கிறது என்று சொல்வது சரியல்ல. பழைய இனங்களில்தான் செலவு செய்கிறார்கள். புதிய இனங்களில் செலவு செய்யவில்லை. இதைப்பற்றி வரவு செலவுத் திட்டத்தில் கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இதை மறுபடியும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். புதிய நீர்ப் பாசனத் திட்டங்களை ஆரம்பித்திருக்கிறோம். புதிய உணவு உற்பத்தித் திட்டங்களை ஆரம்பித்திருக்கிறோம். அதற்காக மஞ்சளாறு-கோமுகி நதி திட்டம் முதலிய திட்டங்களை ஆரம்பித்திருக்கிறோம். புதியதாக ரீஜனல் இஞ்சினியரிங் காலேஜை திருச்சிராப்பள்ளியில் ஆரம்பிப்பதாக இருக்கிறது. இவை எல்லாம் குறிப்பிடத்தக்கவை. சேலத்தில் ஒரு இஞ்சினியரிங் காலேஜும், மற்றும் இரண்டு பாலிடெக்னிக்குகளும் ஐந்து இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட்களும் புதிதாக வைத்தியக் கல்லூரி ஒன்றும் அமைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டேன். அந்தந்த மாவட்டங்களிலிருந்து வந்த அங்கத்தினர்கள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள குறைகளைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். அந்த முறையில் திருநெல்வேலியில் ஒரு வைத்தியக் கல்லூரியை அமைப்பதாக அரசாங்கத்தின் முடிவு. மேலும் மூன்று இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளும் ஆரம்பிக்கப்படும். அத்துடன் பார்ட் 2 ஸ்கீம் என்று இருக்கிறது. அதில் சொல்லப்பட்டவைகள் எல்லாம் புதிய திட்டங்கள். கனம் அங்கத்தினர்கள் பட்ஜெட்டைப் பார்த்தால் இது நன்றாகத் தெரியும். அதில் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் இப்படிப்பட்ட புதிய திட்டங்களுக்கு ஒதுக்கி இருப்பது தெரியும். பார்ட் 2 ஸ்கீமில் சொல்லி இருப்பதெல்லாம் இப்படிப்பட்ட புதிய ஸ்கீம்கள் தான். வேறு ஒன்றும் இல்லை.





சில அங்கத்தினர்களும் எதிர்க் கட்சியிலுள்ள கனம் அங்கத்தினர்களும் திட்டக் கமிஷனை ஆதரிப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஆதரிப்பதாகவே பேசினார்கள். அவர்கள் சொல்வதைத் தான் நிறைவேற்ற வேண்டுமென்பதல்ல. திட்டக் கமிஷன் மாகாண அரசாங்கத்துடன் ஆலோசிக்கிறார்கள். திட்டங்களை மாகாண அரசாங்கம் தயாரிக்கிறது. அதை அவர்கள் பரிசீலனை செய்கிறார்கள். அதன் பிறகுதான் இதை நாம் நிறைவேற்றுகிறோம். ஆகவே அவைகளை சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத்தான் நான்கு கோடி எழுபத்தி எட்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் 1961-62-ல் ஐம்பது கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்திருக்கிறோம். அதற்குப் பிறகு ஐம்பத்தி ஒரு கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். இப்பொழுது நாம் எதிர்பார்க்கிறபடி 58 கோடி 32 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாகாணம்தான் திட்டங்களை தயாரிக்கிறது. நாம் தயாரிக்கும் திட்டங்களுக்கு திட்டக் குழு பொதுவாக அங்கீகாரம் கொடுக்கிறது. திட்டம் சரியாக நடக்கிறதா என்று அகில இந்திய ரீதியில் அது கவனிக்கப்படுகிறது. ஆனால் இப்பொழுதுள்ள நெருக்கடி நிலையையொட்டி 450 கோடி ரூபாய் அளவிலிருந்து 400 கோடி ரூபாய் அளவிற்கு குறையும் என்று தெரிய வருகிறது. இதை வைத்துக்கொண்டு திட்டத்தை கூடிய வரையில் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். இதையெல்லாம் நிறைவேற்றுவதற்குத்தான் வரி போடப்பட்டிருக்கிறது. அப்படி வரி போட்டதற்குத்தான் வரி போட்டு விட்டார்கள் என்று குறை கூறுகிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் கனம் அங்கத்தினர்கள் சொல்லவில்லை. அதைக் கண்டு நான் திருப்தி அடைகிறேன். மற்ற மாகாணங்களில் குறிப்பிட்டது போன்று, மதுவிலக்கை ஏன் எடுத்துவிடக் கூடாது என்று கேட்கவில்லை. உப்பு வரியைக் கொண்டு வரவேண்டும் என்றும், மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்றும் பார்லிமெண்டில் பேசியது போல் இங்கு ஒருவரும் பேசவில்லை என்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்; திருப்தி படுகிறேன். அதை இங்கு நான் குறிப்பிட வேண்டிய அவசியமே இல்லை. மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபாரிசு செய்ய வேண்டும் என்று சொன்னதால் அதை இங்கே குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது. அதற்காகத்தான் குறிப்பிட்டேன். இப்பொழுதுள்ள நிலையில் வரி போட்டிருப்பதை மக்கள் உணருவார்கள், அதைப் பொறுத்துக்கொள்வார்கள். அவ்வாறே தெரிவித்தும் இருக்கிறார்கள். இப்பொழுதுள்ள நெருக்கடி நிலையில் பாதுகாப்பை நாம் பலப்படுத்த வேண்டியதாக இருக்

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1963

வேண்டுமானால், "நிலைமை அப்படியே இருக்கிறது; அபிவிருத்தி ஒன்றும் ஏற்படவில்லை" என்று இந்த மன்றத்தில் சொல்லலாம். ஆனால் 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஒரு நிலை இன்று எவ்வளவு தூரம் சீர்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டதுபோல், எந்த ஒரு கிராமத்தில் கூட்டம் கூட்டினாலும், அங்கே வருகிற மக்களைப் பார்த்தால் நன்கு தெரியும். திருவிழாக் கூட்டங்களுக்கு வருகிற மக்களைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். பத்தாண்டுகளுக்கு முன், அத்தகைய கூட்டங்களுக்கு மக்கள் வந்திருந்த காட்சி நினைவு இருக்கும். இப்பொழுது அத்தகைய கூட்டங்களுக்கு வருகிற மக்களைப் பார்க்கும்போது, எவ்வளவு தூரம் வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டு வருகிறது என்பதையும் யாரும் உணராமல் இருக்க முடியாது. அப்படி உயர்ந்துகொண்டு வருகிறது என்றால், பல நேரடியான வசதிகள் பெருகுவதோடு மட்டுமல்லாமல் பொருளாதாரத் துறையிலும் உயர்வு ஏற்படுவதற்கு உரிய முறையில் விவசாய அபிவிருத்தி முதலியவைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. தொழில் துறையிலும், கனரகத் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், சிறுரகத் தொழில்கள், கிராமக் கைத்தொழில்கள் எல்லாவற்றிலும் கணிசமான அளவுக்கு இப்பொழுது வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மற்ற மாநிலங்களிலிருந்து வருகிறவர்கள்கூடப் பொறாமைப்படத்தக்க அளவுக்கு, எத்தனையோ தொழிற்சாலைகள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. இதையெல்லாம் ஒருசிலர் மறந்தாலும் மக்கள் மறக்கமாட்டார்கள். ஏனென்றால், மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

வரி போடுவதைப்பற்றி எடுத்துக்கொள்வோம். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள், ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய பல நாடுகளைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். தேசீய வருமானத்தோடு ஒப்பிட்டு மற்ற நாடுகளெல்லாம் வரி போடுகின்றன. அப்படி மற்ற நாடுகள் வரி போடுவதையும் நம் நாட்டில் நாம் வரி போடுவதையும் கணக்கிட்டுப் பார்த்தால், நாம் போடுகின்ற வரி விகிதம் மற்ற நாடுகளைவிட ஒன்றும் அதிகம் இல்லை என்று கனம் உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இங்கிலாந்து நாட்டில் உள்ள நிலைமைகளை விளக்கும் "British System of Taxation" என்கிற புத்தகம் இப்பொழுது என்னுடைய கையில் இருக்கிறது. வேண்டுமானால், கனம் உறுப்பினர்கள் அதிலிருந்து விவரங்கள் தெரிந்துகொள்ளலாம். நான் தவறுதலாகச் சொல்வதாக நினைத்துக்கொள்ள வேண்டாம். அந்தப் புத்தகத்தில்,

"To meet the increased expenditure, taxation has increased until—including local taxation—it now takes about 30 per cent of the national income compared with about 10 per cent before 1914."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. "1914-ஆம் ஆண்டில் வரி விகிதம் தேசீய வருவாயில் பத்து சத விகிதமாக இருந்தது, இப்பொழுது முப்பது சதவிகிதமாக உயர்ந்து இருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது.



8th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

இதேபோல், அமெரிக்காவில், தேசீய வருமானத்தில் 31 சதவிகிதத்திற்கு மேல் வரி விகிதம் இருக்கிறது. ஜெர்மனியில் 33.8 சதவிகிதம் இருக்கிறது. சைனாவில் கூட 25 சதவிகிதம் போடுகிறார்கள். ஆஸ்திரேலியாவில் 28 சதவிகிதம் இருக்கிறது. ஸ்வீடனில் 23 சதவிகிதம் இருக்கிறது. நம் நாட்டில், இப்பொழுது புதிதாகப் போடப்படுகிற வரிகளைக் கணக்கிட்டுப் பார்த்தால், அது மத்திய சர்க்காருடைய வரியாக இருந்தாலும், மாநில சர்க்காருடைய வரியாக இருந்தாலும், எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்தால், தேசீய வருமானத்தில்—நம் நாட்டின் தேசீய வருமானத்தை நான் சொல்கிறேன். இங்கிலாந்து நாட்டின் தேசீய வருமானத்தையோ, அமெரிக்க நாட்டின் தேசீய வருமானத்தையோ நான் குறிப்பிடவில்லை— 13 சதவிகிதம் தான் நம் நாட்டில் வரி விகிதம் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மற்ற நாடுகளில் 25 சதவிகிதம், 30 சதவிகிதம், 31 சதவிகிதம் என்று இப்படி இருக்கும்போது, நம் நாட்டில் தேசீய வருமானத்தில் 13 சதவிகிதம்தான் வரி விதிக்கப்படுகிறது. புதிய வரிகளைச் சேர்க்காமல் கணக்கிட்டுப் பார்த்தால், அதாவது ஒரு வருஷத்திற்கு முன்னால் பார்த்தால், 13 சதவிகிதம் இருக்காது, 11½ சதவிகிதம்தான் இருந்திருக்கும். ஆக, இப்பொழுது 1½ சதவிகிதம்தான் உயர்ந்திருக்கிறது. இப்பொழுது நாட்டிலுள்ள நெருக்கடி நிலையையொட்டி, நம் மாநில பட்ஜெட்டிலும் சரி, மத்திய சர்க்கார் பட்ஜெட்டிலும் சரி, பாதுகாப்புச் செலவினங்களுக்காக ஏராளமான பணம் வேண்டியிருக்கிறது என்பதைக் கருத்திற்கொண்டுதான் பட்ஜெட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. தேசீய வருமானத்தில் 13 சதவிகிதம் அளவுக்குத்தான் வரிகள் நம் நாட்டில் விதிக்கப்படுகின்றன. மற்ற நாடுகளில் இருக்கும் நிலையோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 'நம் நாட்டில் ஏதோ அக்கிரமமாக வரிகளைப் போட்டு சுமத்தி விட்டார்கள்' என்று சொல்வது முறையாகுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** மற்ற வெளி நாடுகளில் வருமானத்தையொட்டி வரி போடப்படுகிறது. 'டைரக்ட் டாக்ஸ்' அமெரிக்காவில் 88 சதவிகிதம் இருக்கிறது. பிரிட்டனில் 55 சதவிகிதம் இருக்கிறது. தென்னாப்பிரிக்காவில் 65 சதவிகிதம் இருக்கிறது. இந்தியாவில் 'டைரக்ட் டாக்ஸ்' 12 சதவிகிதம் இருக்கிறது. நாங்களும் இந்தப் புள்ளி விவரங்களைக் கொடுக்க முடியும்.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் என்ன சொல்ல வருகிறார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எதிர்க் கட்சியினுடைய கொள்கையை நான் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்பொழுது எனக்கு நினைவுக்கு வருகிறது—முன்பு எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவர் குறிப்பிட்ட ஒரு கொள்கையை மனதில் வைத்துக் கொண்டு கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று நான் நினைக்கிறேன். 'இன்டைரக்ட் டாக்ஸ்' ஸைவிட 'டைரக்ட் டாக்ஸ்' நல்லது என்பது எதிர்க்கட்சியினுடைய கொள்கை. அந்தக்

கிறது. அத்துடன் போடப்பட்ட திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. அதனால் யாரும் வரியே போட வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒவ்வொரு திட்டங்களையும் நிறைவேற்றவேண்டும் என்றுதான் சொல்லுகிறார்கள். பாதுகாப்புக்கு நிதி வேண்டும் என்று கேட்டாலும் மக்கள் அதை மனமுவந்துதான் கொடுக்கிறார்கள். பாதுகாப்புக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும் என்று எல்லோரும் உணருகிறார்கள். அதற்காக என்ன வேண்டுமானாலும் பேசலாம். அரசாங்கத்தை மாற்றிவிடலாம் என்று கூட பேசலாம். இப்படியெல்லாம் பயமுறுத்தினால் அதற்கு அரசாங்கம் பயப்படமாட்டார்கள். மக்கள் அதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். மக்களை ஏமாற்ற முடியாது. அவர்கள் ஏமாற மாட்டார்கள். பாதுகாப்புதான் முக்கியம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

மத்திய அரசாங்க நிதி அமைச்சருடைய உரையைப்பற்றி கடைசியில் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். செலவைக் கட்டுப்படுத்தலாம் என்று கூறினர். பாதுகாப்புக்கு முதல் இடம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அத்துடன் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. அதற்காக சில இனங்களில் செலவைக் குறைத்தும் சில இனங்களில் செலவை அதிகரித்தும் இருக்கிறோம். எந்த அளவில் சில இனங்களில் குறைக்க வேண்டுமோ அந்த அளவில் குறைக்கப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வதற்கும் மக்கள் தயாராக இருக்கிறார்கள். தேசத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக எல்லோரும் தயாராகத்தான் இருக்கிறார்கள். பாதுகாப்பு நிதிக்கு மக்கள் தாங்களாகவே மனமுவந்து கொடுக்க முன் வருகிறார்கள். சுதந்திரா கட்சித் தலைவர் பேசும்போது கட்டாயப்படுத்தி வாங்குகிறார்கள் என்று தெரிவித்தார். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களையும் பள்ளி மாணவர்களையும் கட்டாயப்படுத்தி அவர்களிடமிருந்து வசூலிக்கிறார்கள் என்று தெரிவித்தார். அப்படிச் சொல்வது சரியல்ல. எந்த விதத்திலும் கட்டாயப்படுத்தவில்லை. வற்புறுத்திக் கேட்கவும் இல்லை. வற்புறுத்திக் கேட்கக்கூடாது என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களை வற்புறுத்தக்கூடாது என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் தாங்களாகவே முன் வந்து கொடுக்கிறார்கள். சில இடங்களில் சின்னச் சின்ன குழந்தைகளும் பாலர்களும் 3, 2, 5, 10 நயா பைசாக்களை அவர்களாகவே முன் வந்து அழகாக க்யூ வரிசையில் நின்று கொண்டு கொடுக்கிறார்கள். அப்படி ½ மணி நேரம் நின்று கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது சில இடங்களில். குழந்தைகள் சந்தோஷமாகக் கொடுக்கிறார்கள். அவர்களுடைய பெற்றோர்கள்—தகப்பனர்—அவர்களுக்கு சிற்றுண்டிக்காகக் கொடுக்கிற பணத்தை உணவு சாப்பிடாமல் அதைப் பாதுகாப்பு நிதிக்கு என்று கொடுக்கிறார்கள். இவ்வளவு ஆர்வம் குழந்தைகளிடம் இருக்கிறது. குறைந்த சம்பளம் வாங்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் இப்படிப்பட்ட ஆர்வம் இருக்கிறது. கட்டாயம் என்பதே கிடையாது. யாரும் கட்டாயப்படுத்தி வாங்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையில் இந்த பாதுகாப்பு



நிதி வசூலிக்கப்படுகிறது. கட்டாயப் படுத்துகிறார்கள் என்று யாராவது தெரிவித்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** நான் அப்படிச் சொல்லவில்லை. மாணாக்கர்களும் ஆசிரியர்களும் உண்டியல் டப்பாக்களை எடுத்துக் கொண்டு வீதி வீதியாக வீடு வீடாகச் சென்று வசூலிக்கச் செல்வதாகச் சொன்னேன். இதை என் கண்ணால் நான் பார்த்திருக்கிறேன். இந்த முறையில்தான் கட்டாயப்படுத்துகிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கட்டாயப்படுத்தவே கூடாது. கட்டாயப்படுத்தினால் அது தவறு. சில இடங்களில் தங்களுக்குள்ள ஆர்வத்தினால் அப்படிச் சொல்லி இருக்கலாம். நாங்கள் கட்டாயப் படுத்தச் சொல்லவில்லை. அப்படிக் கட்டாயப்படுத்தினாலும் அது தவறு. அதற்கு இடம் கொடுக்க மாட்டோம். யாரையும் கட்டாயப்படுத்தி இருக்க மாட்டார்கள் என்று நான் சொல்லுகிறேன்.

மற்றொன்று மத்திய ஆட்சியினர் இந்த முறை அவர்களே மொத்தமாகக் கடன் எழுப்பி மாநிலங்களுக்கு உரிய பங்கை கொடுத்து விடுவதாகவும் ஆண்டு தோறும் மாநிலங்கள் கடன் எழுப்ப வேண்டாம் என்றும் சொன்னார்கள். அந்த வகையில் 12 கோடி ரூபாய்க்குக் கடன் எழுப்பியதில் 13 கோடி ரூபாய்க்கு மேல் மக்கள் கொடுத்தார்கள். சென்ற ஆண்டில் எந்த எந்த மாநிலத்திற்கு எவ்வளவு கடன் தொகை கிடைத்ததோ அந்த அளவுக்குக் குறையாமல் கொடுப்பதாக மத்திய அரசாங்கத்தார் சொன்னார்கள். அதன்படி இந்த மாநில அரசாங்கமும் அதற்கு ஒத்துக்கொண்டது. இதில் என்ன தவறு இருக்க முடியும்? கடன் வாங்குவதில் கூடவா, நான்தான் வாங்குவேன், நீ வாங்கக் கூடாது' என்று சொல்வது? நம்முடைய பாரத்தை அவர்கள் ஏந்திக்கொண்டு, அவர்கள் கடன் வாங்கி, நம் மாநிலத்திற்குரிய தொகையைக் கொடுக்கிறார்கள். ஒரு வேளை வட்டி குறைந்தாலும் குறையலாம். இதை நான் நிச்சயமாக, உறுதியாகச் சொல்லவில்லை. எப்படியிருந்தாலும், நம்முடைய பாரத்தை அவர்கள் ஏந்திக்கொள்ளுகிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இப்படியிருக்க, எதற்கெடுத்தாலும், மத்திய ஆட்சி செய்வது தவறாகத்தான் இருக்கும் என்று நினைத்துக்கொண்டு, குறை சொல்வது சரியல்ல என்றுதான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் பக்கத்தில் இருக்கும் மதிப்பிற்குரிய கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது, கிராமங்களில் முன்பிருந்த நிலையையும், இப்பொழுதிருக்கும் நிலையையும், அவர்கள் நேரில் கண்டதை, மிகவும் உருக்கமாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். தவறாகவோ, அலங்காரமாகவோ பேசக்கூடியவர் அல்ல அவர் என்பதை எதிர்க் கட்சியில் உள்ள கனம் உறுப்பினர்கள் எல்லோரும் உணர்ந்திருப்பார்கள். முன்பிருந்த நிலையைவிட, இப்பொழுது அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது, வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்பதை யார் மறுக்க முடியும்? கிராமத்தார்கள் யாராவது மறுக்க முடியுமா? ஏதோ வாதத்திற்கு

கொள்கையை நான் ஏற்க முடியாது. மறைமுகமாக வரி என்றால், கடையில் சாமான் வாங்கும்போது, அந்த விலையில் வரியும் சேர்ந்திருக்கும். அது அவ்வளவாகத் தெரியாது. கொடுத்து விடுவார்கள். ஒரு பொருளின் விலை ஒரு கடையில் ஒரு அளவுக்கும், இன்னொரு கடையில் அதே பொருளின் விலை சற்றுக் கூடுதலாகவும் இருக்கக்கூடும். அதனால், மறைமுகமான வரி தெரியாத நிலையில் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆனால், நில வரி, வருமான வரி இவையெல்லாம் நேர்முக வரிகள் ஆகும். நேர் முக வரி குறைவாகத்தான் இருக்கிறது. மறைமுக வரி அதிகமாக இருக்க வேண்டும் நேர்முக வரி குறைவாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை, இந்த சர்க்காரினுடைய கொள்கை. நேர்முக வரி அதிகமாக இருக்க வேண்டுமென்கிற கனம் எதிர்க் கட்சி அங்கத்தினருடைய கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

**திரு. கே ஏ. மதியழகன் :** கனம் அமைச்சர் அவர்கள் அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள வரியின் சத விகிதத்தைக் குறிப்பிடும்போது, நம் நாட்டில் வரியின் சத விகிதம் குறைவாக இருப்பதாகச் சொன்னார்கள். கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற புத்தகத்தை நானும் படித்தேன். ஆனால், 100 ரூபாய் வருமானம் பெறுகிற ஒருவர் பத்து ரூபாய் வரி கொடுப்பதற்கும், ஆயிரம் ரூபாய் வருமானம் பெறுகிற ஒருவர் 200 ரூபாய், 300 ரூபாய் வரி கொடுப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு இடத்தில் மொத்த வருமானம் ஏறியிருக்கிறது. அதற்குத் தகுந்தபடி வரியின் சத விகிதம் ஏறியிருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் நன்கு படித்தவர் ' ஆவரேஜ் ' என்றால் என்ன என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஸார், கனம் அங்கத்தினர் அவர்கள் நிதி அமைச்சரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இப்படிக் கேள்விகள் கேட்கிறார்களா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**MR. SPEAKER :** Is it a point of order ? It is not a point of order.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 'ரேஷியோ', 'ப்ரபோர்ஷன்' என்பதற்குப் பொருள் கனம் அங்கத்தினருக்கே நன்கு தெரிந்த விஷயம். தேசீய வருமானம் என்ற ஒரு யூனிட் இருக்கிறது. 'ஆவரேஜ்' கணக்கிடுவதற்கு தேசீய வருமானம் எந்த அளவுக்கு இருந்தால் என்ன ? நூறு ரூபாய்க்குப் பத்து ரூபாய் வரி என்றால் ஆயிரம் ரூபாய்க்கு நூறு ரூபாய் என்றாலும் ஒன்று தான். நம் நாட்டில் வரியின் விகிதம் குறைந்துதான் இருக்கிறது.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். கனம் விவசாய அமைச்சர் அவர்கள், ' ஒரு ஏக்கரில் ஒரு விவசாயி ஒரு வருஷத்தில் பெறக்கூடிய வருமானம் 375 ரூபாய் ' என்று சொல்லியிருப்பதை





வைத்து கனம் உறுப்பினர்கள் சொல்லுகிறார்கள். "375 ரூபாய்" என்ற புள்ளி விவரம் 1955-56-இல் கணிக்கப்பட்டது. அதற்குப் பிறகு புள்ளி விவரம் இன்னும் வரவில்லை. 1955-56-க்குப் பிறகு விவசாயினுடைய வருமானம் ஏறிக்கொண்டுதான் வருகிறது. அதைத்தான் மத்திய அரசாங்க நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு "புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு குழப்பிக் கொள்ளாதீர்கள்" என்று சொன்னார்கள்.

விலைவாசியைப் பற்றிக் கனம் அங்கத்தினர் திரு. சீமைச்சாமி அவர்கள் ஒரு கணக்குக் கொடுத்தார்கள். அதை எங்கே அவர் தயாரித்தாரோ தெரியவில்லை.

(திரு. கரு. சீமைச்சாமி எழுந்தார்.)

**கனம் சபாநாயகர் :** கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட ஆரம்பிப்பதற்குள்ளேயே கனம் அங்கத்தினர் எழுந்துவிடுகிறாரே! அவர்கள் சொல்லி முடிக்கட்டும் கடைசியில், அவர்களுக்கு மேலும் சந்தேகம் இருந்தால், அப்பொழுது வேண்டுமானால் கேட்டுக் கொள்ளலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விவசாயச் செலவைப்பற்றியும் கனம் அங்கத்தினர் திரு. சீமைச்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் எவ்வளவோ அக்கறை எடுத்துக் கொண்டு புள்ளி விவரத்தைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தைப் பார்த்து, விவசாயம் செய்துகொண்டிருக்கிறவர்கள் அத்தனை பேரும் நிலத்தை விட்டே ஓடிவிடுவார்களோ என்ற சந்தேகம் எனக்கு வந்தது. நகரத்திற்கு வந்து நகரத்தை நரகமாக்கிவிடுவார்களோ என்று கூட சந்தேகம் வந்துவிட்டது. 'ஏக்கருக்கு ஒன்பது ரூபாய்தான் மிச்சம் ஆகிறது' என்று புள்ளி விவரம் அவர்கள் கொடுத்தார்கள். விவசாயச் செலவு, வரி இதையெல்லாம் சேர்க்காமலேயே மிச்சம் 9 ரூபாய்தான் வருகிறது என்று அவர்கள் சொன்னார்கள். இராமநாதபுரம் ஜில்லாவைப்பற்றி அவர்கள் சொன்ன பிறகு, நான் கணக்குச் சேகரித்தேன். 'ரஃப்' ஆகத்தான் சொல்கிறேன். 'அக்யுரேட்' ஆகச் சொல்லவில்லை. இது பற்றிப் பல மாவட்டங்களில் விசாரித்தேன். அவற்றையெல்லாம் இங்கே சொல்வதற்கு சற்று நேரம் ஆனாலும், சொல்வது நல்லது என்று நான் நினைக்கிறேன். ஒரு மாவட்டத்தைப்பற்றி மாத்திரம் சொன்னால் நன்றாக இருக்காது. அதனால் விவரமாகச் சொல்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சாகுபடிச் செலவு (காஸ்ட் ஆஃப் கல்டிவேஷன்) 185 ரூபாய் ஆகிறது. சராசரியை வைத்துச் சொல்கிறேன். ஒரு வருஷத்தில் பயிர் கெட்டுப்போனால் அது வேறு விஷயம்—பயிர் நன்றாக விளைந்தால் சாகுபடிச் செலவு 185 ரூபாய் ஆகிறது. பலன் (ஈல்டு) 310 ரூபாய், ஆக, நிகர லாபம் (இன்கம்) 125 ரூபாய் வருகிறது.

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு ஏக்கருக்குச் சாகுபடிச் செலவு ரூபாய் 195 ஆகிறது. பலன் ரூபாய் 300 கிடைக்கும். ஆக அந்த மாவட்டத்தில் நிகர லாபம் ஒரு ஏக்கருக்கு ரூபாய் 105 கிடைக்கும்.

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1963

செங்கல்பட்டு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஒரு ஏக்கருக்குச் சாகுபடி செலவு ரூபாய் 168தான் ஆகிறது. நிலத்தில் இருந்து கிடைக்கும் வருமானம் ரூபாய் 290 ஆகும். ஆக அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒரு ஏக்கருக்கு நிகர லாபம் ரூபாய் 122 நிற்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர், திருவாடானைத் தாலுக்காவையே எடுத்துக்கொண்டால் ஒரு ஏக்கருக்குச் சாகுபடிச் செலவு ரூபாய் 165 ஆகும் என்றால் ஈல்டு ரூபாய் 360 நிற்கும். ஆக எச்செலவும் போக நிகர லாபம் அந்தப் பகுதியில் ஒரு ஏக்கருக்கு ரூபாய் 195 வரை நிற்கும். இவை எல்லாம் உத்தேசமான புள்ளி விவரங்கள்தான். கனம் அங்கத்தினர் சீமைச்சாமி ஏதோ ஒரு புள்ளிவிவரத்தைக் கொடுத்தார்கள். அவர் கொடுத்ததன் பின்னர் நானும் அதுபற்றி விசாரித்து, இந்தப் புள்ளிவிவரங்களைச் சேகரித்தேன். இந்தப் புள்ளிவிவரங்களில் இருந்து கனம் அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ளலாம், ஏதோ விவசாயத்தில் லாபமே இல்லை, நஷ்டம் தான் வருகிறது என்று அச்சப்படவேண்டியதில்லை என்பதற்காக இந்தப் புள்ளிவிவரங்களை இப்போது கொடுத்தேன்.

இன்னொன்று. நெல் விலையைப் பற்றி கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் இங்கே கூறினார்கள். இப்போது இராமநாதபுரம் ஜில்லா ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் 54 படிகொண்ட சம்பா நெல் மூட்டை 1-க்கு ரூபாய் 21 ஆக விற்கிறது. ஏதோ நெல் விலை ரொம்பக் குறைந்துவிட்டது போலச் சொல்வது நல்லது அல்ல. மன்றத்தில் இப்படிப் பேசுவதே, வியாபாரிகளுக்கு நெல் விலையைக் குறைக்க வழி ஏற்படுத்திவிடும்.

இன்னும் விவரமாக ஒரு ஏக்கருக்கு ஆகும் சாகுபடிச் செலவு பற்றி புள்ளி விவரம் ஒவ்வொரு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் சேகரித்து வைத்திருக்கிறேன். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டு பார்க்கலாம்.

**Devakottai Division—Tiruvadanai taluk.**

***Cost of cultivation.***

**Nursery bed—(10 cents)—**

| | RS. | | |
|---|---|---|---|
| Ploughing 3 pairs .. .. .. | 6 | 0 | 0 |
| Cost of 10 M. M. seeds .. .. | 6 | 0 | 0 |
| Sowing (one cooly) .. .. .. | 1 | 8 | 0 |
| **Cultivation—** | | | |
| Ploughing one acre, 3 pairs, six lines (6×3×1·50). | 27 | 0 | 0 |
| Levelling 2 pairs .. .. .. | 4 | 0 | 0 |
| Trimming bund, 2 men, pulling out seedlings and transplantation. | 14 | 0 | 0 |



8th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

| | | | | |
|---|---|---|---|---|
| **Manuring nursery bed—** | | | | |
| Two bundles of green leaves and one cart-load of cattle manure. | 3 | 0 | 0 | |
| Puddling one man .. .. .. | 1 | 8 | 0 | |
| **Manuring the field—** | | | | |
| Ten cart-loads of compost, 10 to 15 bundles of green leaves. | 30 | 0 | 0 | |
| Cartage, etc. .. .. .. .. | 15 | 0 | 0 | |
| Weeding (twice), 10 to 15 women .. | 20 | 0 | 0 | |
| **Harvesting—** | | | | |
| 16 men (paddy in kind) .. .. | 32 | 0 | 0 | |
| Total cost of cultivation per acre .. | 163 | 0 | 0 | or about 165 |
| Average yield for one acre .. .. | 350 | 0 | 0 | |
| Net income .. .. .. .. | 187 | 0 | 0 | or about 190. |

**திரு. கரு. சீமைச்சாமி:** கனம் தலைவர் அவர்களே, நான் கொடுத்த புள்ளி விவரம் உண்மையானது. நிலத்தில் பயிரிடுகிற ஒரு விவசாயிக்கு ஆகும் உண்மையான செலவு ஆகும். ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் ஏதோ விவசாய இலாக்காவில் இருக்கிற அதிகாரிகள் கொடுத்த புள்ளிவிவரங்களை இங்கே சொல்கிறார்கள். குறிப்பாக நாற்றுப் பாவுவதற்கு 6 ரூபாய் செலவாகும் என்கிறார்கள். 6 ரூபாயில் முடியவே முடியாது. ஒரு மூட்டை விலையாவது நிச்சயமாக ஆகும்.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் இப்போது என்ன சொல்லுகிறார்கள். கனம் அமைச்சர் கொடுத்த புள்ளிவிவரங்களை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்கிறீர்களா? கனம் அங்கத்தினர் கொடுத்த புள்ளி விவரம் சரியல்ல என்று கனம் மந்திரி சொல்கிறார்கள். அவ்வளவுதானே. (சிரிப்பு)

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் சொல்கிறபடி செலவாயிற்று என்றால் அவருக்கு விவசாயம் செய்யத் தெரியவில்லை, அனுபவம் போதவில்லை என்று தான் அர்த்தம். அப்படி ஊதாரியாகச் செலவு செய்கின்றவர்கள் ஒரு சிலர் இருக்கலாம். இவ்வளவு நஷ்டம் ஏற்படக்கூடிய வகையில் விவசாயம் செய்கின்றவர்கள் யாரும் இல்லை.

அடுத்து விலைவாசியைப் பற்றிப் பலர் குறிப்பிட்டார்கள். விலைவாசி கூட கடந்து பத்து வருஷங்களுக்கு ஒப்பிட்டுப் பார்க்கும் போது ரொம்ப உயர்ந்துவிட்டதென்று சொல்ல முடியாது. அது பற்றிய புள்ளிவிவரங்களையும் நான் கனம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1963

நம்முடைய ராஜ்யத்தில் 1953-இல் விலைவாசிப் புள்ளி 622.25 ஆக இருந்தது, 1954, 55, 56—இல் ஐநூறுக்குக் கீழே குறைந்து இருந்திருக்கிறது. 1957, 58-இல் ஐநூறுக்கு மேல் ஐநூற்று ஐம்பதுக்குள் இருந்திருக்கிறது. மறுபடியும் 1959-இல் 462-81 ஆகக் குறைந்திருக்கிறது. 1961-ல் 621.21 ஆக உயர்ந்தது. 1962-ல் 599.93 ஆக இருந்திருக்கிறது. 1953-இல் இங்கிலாந்தில் 972.63 ஆக இருந்த விலைவாசிப் புள்ளி 1962-இல் 1016.26 ஆக உயர்ந்திருக்கிறது. ஆந்திர 'பிரதேசத்தை—நம்முடைய அண்டை ராஜ்யத்தை எடுத்துப் பார்த்தால் கூட 1962-இல் 583.32 ஆக இருப்பது தெரியும். வெஸ்ட் பெங்காலில் 1962-இல் 687.58 ஆக இருந்திருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தைவிட கிட்டத்தட்ட 100 புள்ளி அதிகம். நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் தான் விலைவாசிகள் ஏறிவிட்டது என்று சொல்வதற்கில்லை. இன்றைக்கு உலக மார்க்கெட் நிலவரப்படி இங்கும் கொஞ்சம் கூடுதலாக புள்ளி இருக்கலாமே தவிர கட்டுக்கு மீறிப் போய்விட்டது என்று சொல்வதற்கில்லை. இன்னும் இந்த விலைவாசியைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது நாணய மதிப்பு குறைந்து போகிறது என்று சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நாணயம் மதிப்புக் குறைந்து போகிறது என்றால் அது நம்முடைய ராஜ்யம் சம்பந்தப்பட்ட பிரச்சனை மட்டும் அல்ல. இந்த தேசப் பிரச்சனை மட்டும் அல்ல. உலகத்திலேயே இன்றைய தினம் நாணய மதிப்பு குறைந்திருக்கிறது. நாணய மதிப்புக் குறைந்துள்ள நாடுகள் பல இருக்கின்றன. இப்படி நாணய மதிப்புக் குறைந்து போகாதிருக்கவேண்டும் என்று நான் எல்லா நாடுகளும் கவலைப்படுகின்றன. விலையை ஒழுங்குப்படுத்த, நிலைப்படுத்த எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதைப்பற்றியெல்லாம் நாம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறோம். இதுபற்றிய புள்ளிவிவரத்தைக் கூட கனம் அங்கத்தினர்களுக்கு நான் கொடுக்கக்கூடும். 1951-இல் இருந்து 1961 வரை எடுத்துக்கொண்டு இந்தப் பத்தாண்டு காலங்களில் பார்த்தால் டெப்ரிஸியேஷன் பர்சென்டேஜ் இந்தியாவில் 1.8 சதவிகிதமே இருந்திருக்கிறது. இங்கிலாந்தில் 3.3 சதம் இருந்திருக்கிறது. இன்னும் ப்ரான்சை எடுத்துக்கொண்டால் 4.2 சதம் இருந்திருக்கிறது. ஜப்பான் நாட்டில் 3.0 சதம் இருந்திருக்கிறது. பாகிஸ்தானில் 2.6 சதம் இருந்திருக்கிறது. நம்முடைய நாட்டில் தான் 1.8 சதம். ஆகவே நாணய மதிப்பு குறைந்து போகிற தென்பதைப் பற்றி நாம் கவலைப்படவேண்டாமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய அளவு விலை உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இந்திய சர்க்காரும் கவனம் எடுத்துக் கொள்வார்கள். மாநில சர்க்காரும் அவ்விஷயத்தில் முழுக் கவனம் செலுத்துவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் ருஷ்யாவை ஒப்பிட்டுப் பார்த்தார்கள். ருஷ்யாவோடு ஒப்பிட முடியாது. காரணம் அங்குள்ள நிலைமை வேறு. நாம் டாக்ஸ் போடுகிறோம். அவர்கள் விலையையே உயர்த்திவிடுகிறார்கள். ஏனென்றால் விற்பனையாவதில் ஒரு பாகம் அரசாங்கத்திற்கு அங்கு வந்துவிடுகிறது. வேண்டுமென்றால் அமெரிக்காவோடு நம் நாட்டை ஒப்பிட



8th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

லாம். இங்கிலாந்தோடு ஒப்பிடலாம். அப்படிப் பார்த்தால் இங்கு விதிக்கக்கூடிய வரி அதிகம் இல்லை என்பதை கனம் அங்கத்தினர்களே உணர்ந்து கொள்வார்கள்.

இன்னும் தங்கக் கட்டுப்பாடு பற்றிப் பேசினார்கள். அது சுவை அளிக்கக்கூடிய விஷயமாக இருக்கலாம். இன்று பத்திரிகையில் பார்த்து இருப்பீர்கள். மத்திய நிதி அமைச்சர் தங்கம் விலை குறைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தங்கக் கட்டுப்பாட்டினால் பலனே இல்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் சொல்வதை நான் ஒப்புக் கொள்ளமுடியாது. அது சரியல்ல என்று சொல்வேன். பொற்கொல்லர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். தவிர்க்க முடியாத அளவுக்கு ஏற்பட்டால் அதற்கு மாற்று பார்க்கவேண்டுமே தவிர அதைப்பற்றியே பேசிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. பாதுகாப்பு நடவடிக்கையை முன்னிட்டு நமக்கு ஏராளமான அந்நியச் செலவாணி தேவைப்படுகிறது. இதுபற்றி மத்திய நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் நமது முதல் மந்திரி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தைக் கூட கனம் அங்கத்தினர்களின் கவனத்திற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் கொண்டுவர விரும்புகிறேன். இன்று காலை தான் இந்தக் கடிதம் வந்தது. தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட இருக்கிற பொற்கொல்லர்களின் எண்ணிக்கை ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமாகச் சொல்லலாம். அவர் கணக்கில் 5 லட்சம் இருக்கும் என்று மதிப்பிடுகிறார்கள். அவர் அக்கடிதத்தில் சொல்கிறார்!

"Whatever the actual figure may be, I need hardly state that none of us want additional unemployment in the country".

பொற்கொல்லர்கள் வேலை இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு வேலை கொடுப்பது அவசியம் என்பதை மத்திய நிதியமைச்சர் அவர்களும் வற்புறுத்துகிறார்கள். அவர்கள் அலட்சியமாக இருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. பத்திரிகையில் ஏதேதோ வருகிறது. இப்போதுதான் அவர்களிடமிருந்துகடிதம் வந்தது. அதைப் படிக்கிறேன். 1-00 p.m.

"The smuggling of gold into the country was costing us annually something between Rs. 40 and Rs. 50 crores in foreign exchange and that was a drain which apart from being completely illegal, was economically catastrophic in our present situation. A large part of the smuggled gold was spreading all over the country and goldsmiths, unaware much of the time that they used smuggled gold were making ornaments out of it.".

'பொற்கொல்லர்களுக்கு வேலை கொடுப்பது பற்றிக் கவனிக்கிறேன், மாநில சர்க்கார் திட்டம் போட்டு அனுப்பினால் ஆதரவு கொடுக்கிறேன், உதவி அளிக்கிறேன்' என்றுதான் கூறியிருக்கிறார்கள். பொற்கொல்லர்களுக்குப் புதிய தொழில்களைக் கற்றுக் கொடுப்பதற்காக கடன் கொடுப்பதாகவும் மத்திய நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பொற்கொல்லர்களுக்கு 14 காரட் தங்கம் கிடைக்கக்கூடிய வகையிலே கவனம் செலுத்தலாம். இது

வரை அரசாங்கம் தங்கத்தை விற்பனை செய்ததில்லை. இப்போதும் அரசாங்கம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கில்லை. பொற்கொல்லர்களுக்கு 14 காரட் தங்கம் கிடைக்கச் செய்ய வேண்டியது மிக அவசியமானதுதான். கட்டுப்பாட்டினால் பரிதவிக்கின்ற பொற்கொல்லர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். ஒரு சிலர்—பெரிய தொழில் அதிபர்கள் கூட, பொற்கொல்லர்களைத் தூண்டிவிடும் வகையில் '14 காரட் தங்கத்தில் நகைகள் செய்ய மாட்டோம்' என்று கூறுகிறார்கள். இந்தக் கட்டுப்பாட்டு நிலைமையில் ஏதாவது ஒரு கவலையை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் அவர்கள் வேண்டுமென்றே அவ்வாறு கூறுகிறார்கள்.

கனம் அங்கத்தினர்கள் எல்லாம் ரொம்ப அலங்காரமாகப் பேசினார்கள். கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள்தான் வழக்கம் போல உற்சாகத்துடன்—அல்ல, அல்ல—உணர்ச்சி மிகுதியினால் பேசினார்கள். கனம் அங்கத்தினர் நாங்கள் சதி செய்வதாகக் கூறினார்கள். நாங்கள் செய்தது சதிதான். நாங்கள் எதற்காகச் சதி செய்தோம்? மக்கள் நல்வாழ்வு வாழவும், மக்களுக்கு வந்திருக்கும் ஆபத்து தீரவேண்டுமென்பதற்காகவும், மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டுமென்பதற்காகவும் தான் நாங்கள் சதி செய்கிறோம். கனம் அங்கத்தினர் உணர்ந்த சதிதான் இது.

கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்களுக்கு இந்த பட்ஜெட் கானல் நீராகத் தோன்றுகிறது. அவர்களுக்குக் கண்ணில் கோளாறு எதுவும் இருக்காது. மனதில்தான் கோளாறு இருக்கிறது என்று நினைக்கிறேன். கண்ணிலே கோளாறு என்றால் டாக்டர்களிடந்தான் காட்டவேண்டும். 'இந்த பட்ஜட்டிலே ஒன்றுமே இல்லை' என்று பொதுவாகச் சொல்லிக்கொண்டு போவதில் பிரயோசனமில்லை. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா, இல்லையா என்றால், எந்தக் குக்கிராமத்தில் போய்க் கேட்டாலும் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்பதைக் கூற மறுக்க மாட்டார்கள். வேலை வாய்ப்பு அதிகரித்து வருகிறதா என்றால் அதுவும் அதிகரித்துத்தான் வருகிறது. ஆனால் விவசாயிகளைப் பொறுத்த வரை இப்போது கொஞ்சம் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் இப்போது அங்கே வேலை செய்யத் தயாராக இல்லை. விவசாயப் பொருளாதாரத்தை தொழில் துறையில் பொருளாதாரத்தோடு ஒப்பிட முடியாது. விவசாயத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் வித்தியாசம் உண்டு. விவசாயிகளுக்குச் சட்டம் செய்து குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்து கொடுத்தாலும் தொழிற்சாலைகளில் வேலை செய்யக் கூடியவர்களுக்கு வருமானம் வருகிற மாதிரி வருமானம் வராது. கிராமத்தில் கூட இப்போது 'கூலி ஐந்து ரூபாய் கொடுக்கிறாயா?' என்று கேட்கிறார்கள். ஆகவே, வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருகிறது, வேலை வாய்ப்பு பெருகி வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.





'கிராம சகாயக்' பற்றிக் குறிப்பிட்டார்கள். 'சகாயக்' என்பது இந்துஸ்தானிப் பெயர். கிராம சேவக் வேறு, கிராம சகாயக் வேறு. சமுதாய நலத் திட்டத்தின் கீழ் கிராம சேவக்குகள் பணியாற்றி வருகிறார்கள். கிராம சேவக் என்றால், கிராம ஊழியர்கள், தொண்டர்கள் என்றுதான் பொருள். 'கிராம சகாயக்' என்பது புதிதாக வந்தது. விவசாய உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அவர்கள் பணி புரிந்து வருகிறார்கள். முன்பு தனிப்பட்ட விவசாயிகளிடம் இந்தப் பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தது. இப்போது கிராம சகாயக்குகள் என்று நியமிக்கப்படுகிறவர்களும் விவசாயிகளிலிருந்தேதான் போடப்படுகிறார்கள். அரசாங்கமே தங்கள் பண்ணைகளில் விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளைக் கொண்டே—உத்தியோகஸ்தர்களைக் கொண்டு அல்ல—அவற்றை கொடுப்பது என்பதுதான் நோக்கம்.

கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள் சங்கீதத்தினால் பயிர் வளருவதைப் பற்றிச் சொன்னார்கள். எவ்வளவோ ஆராய்ச்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நடைபெற்று வருகின்ற ஆராச்சிகளை எல்லாம் இப்போதே போய் அமைச்சர் அவர்கள் பார்க்கக்கூடாது. ஆராய்ச்சி முடிகின்ற வரையில் என்ன செய்கிறார்கள் என்று அமைச்சர் போய்ப் பார்க்கக்கூடாது. நான் கூடப் பெருமையாகச் சொல்லலாம், 'மேகத்தைக் கொண்டு வந்து மழை பெய்விக்கவேண்டும்' என்று. சோடியம் குளோரைடை மேகமண்டலத்திற்கு அனுப்பி மழை பொழிய வைக்க ஆராய்ச்சி நடக்கிறது. ஆஸ்திரேலியாவில் அந்த ஆராய்ச்சி நடக்கிறது. நான் ரஷ்யா போயிருந்தபோது அது பற்றிக் கேட்டேன். அவர்களால் அதற்குப் பதில் கொடுக்க முடியவில்லை.

**திரு. மு. கருணாநிதி:** ஆராய்ச்சிகளை அவ்வளவு அவசரப்பட்டு அணுகக் கூடாது என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், தண்ணீர் எங்கே இருக்கிறது என்று சொன்ன பாணிவாலா மகாராஜுக்காக எந்த அளவுக்குப் பணம் துர்விநியோகமாயிற்று என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**கனம் சபாநாயகர்:** அந்த மாதிரித் துர்விநியோகம் ஆகக் கூடாது என்பதற்காகத்தான், அவசரம் காட்டக்கூடாது என்று கனம் அமைச்சர் கூறுகிறார்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சில பாணிவாலாக்கள் நம் ஊரில்கூட இருக்கிறார்கள். அவர்கள் தண்ணீர் இருக்கிறது என்று சொல்லும் இடங்களில் தோண்டிப் பார்த்தால், வெற்றிகரமாகவே இருக்கிறது. ரெவின்யூ போர்டில்கூட, அவர்களில் சில பேரை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

கனம் அங்கத்தினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் மற்றொரு புகாரைச் சொன்னார்கள். பள்ளிகளிலே ஆசிரியர்கள் 'மதிய உணவு அளிப்பதிலேயே முழு கவனத்தையும் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். அதிலே முழு கவனம் செலுத்தத்தான் வேண்டும். அதனால் பாடம் சொல்லிக் கொடுப்பது பாதிக்கப்படுகிறது என்று சொல்வதற்கில்லை.

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1963

மூலதனம் போட்டு தொழில் நடத்துவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மூலதனத்தில் கூட, வடநாட்டு மூலதனம், தென்னாட்டு மூலதனம் என்று சொல்வது சரியல்ல. வடநாட்டு மூலதனத்தோடு மாத்திரமல்லாமல் அந்நிய நாட்டு மூலதனத்தையும் நாம் வரவேற்கிறோம். அப்படி இல்லையென்றால் இவ்வளவு தொழில்கள் இங்கே வளர்ந்திருக்க முடியாது. அந்நிய நாட்டார் இங்கேவந்து மூலதனத்தைப் போட்டு, பொறுப்பேற்றுத் தொழில்களை நடத்துகிறார்கள். 'டெக்னிகல் மென்' அளிக்கிறார்கள். 'டெக்னிகல் நோஹவ்' பற்றியெல்லாம் ஆலோசனை கூறுகிறார்கள். தனிப்பட்ட தொழில் அதிபர்கள் சிறந்த ஆற்றலும் அனுபவமும் உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உருக்காலை அமைப்பதில் ஆமை வேகத்தில் செல்வதாகக் கூறப்பட்டது. அவசரப்பட்டு எதையாவது பண்ணிவிட்டு 'உருக்காலை' என்று போர்டு போட்டுவிட்டால் பயன் இல்லை. (குறுக்கீடு :— காட்பாடியில் . . .) காட்பாடியில் அரசாங்கப் பழத்தோட்டங்கள் வைக்கப்படவில்லை. பஞ்சாயத்து யூனியன் சார்பில் பழத்தோட்டம் ஒன்று இருக்கிறது. அதிலே அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிறது. பழங்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டால் எல்லாரும் பழங்கள் சாப்பிடலாம். குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

சர்க்கரை ஆலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். புதிய சர்க்கரை ஆலைகள் நம்முடைய நாட்டிலே அமைக்கப்பட்டு வருகின்றன. எல்லோரும் கரும்பு சாகுபடி செய்வதன் காரணமாக நெல் சாகுபடி குறைந்து போகிறது என்று சிலர் கூறினார்கள். இன்றைக்கு வெல்ல விலை அதிகமாகி இருக்கிறது. அமராவதி சர்க்கரை ஆலை மூடப்பட்டு விட்டது. ஆலைகளுக்குக் கரும்பு கொடுப்பார் இல்லை. நிலைமை சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி மாறிக் கொண்டே வருகிறது.

கனம் அங்கத்தினர் திரு. வடிவேல் அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களில் தப்புக் கணக்கு கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் ஒரு யூனியன் தலைவராக இருந்து கொண்டே இப்படிச் சொல்லலாமா? திருத்தவேண்டியதைத் திருத்தி இனி என்றால் முடியவில்லை என்று சொன்னால் சரி. அவர்கள் கூறியதைப் பற்றி நான் விசாரித்தேன். கணக்குகள் தலைவர்கள் மூலமாகத் தான் வர வேண்டுமாம். கமிஷனர்கள் நேராக அனிப்புவதில்லை. தவறுகள் இருக்கலாம், குறைபாடுகள் இருக்கலாம் . . .

திரு. மு. பொ. வடிவேல் : என் யூனியனில் அப்படி நடப்பதாகக் கூறவில்லை. சில இடங்களில் அப்படி புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படுகிறது. அந்த அடிப்படை தவறு என்று சொன்னேன். கனம் அமைச்சர் அவர்கள் என்கூட வந்தால் அம்மாதிரியான இடங்களை நான் காட்ட இயலும்.



8th March 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் தலைவராக இருக்கிற யூனியன் நல்ல முறையில் நடக்கிறது என்பதை அறிய மகிழ்ச்சி. அவர்கள் மற்ற யூனியன்களுக்கு வழி காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளில் உள்ள குறைகளைப் பற்றி சொன்னார்கள். அவற்றைப் பற்றியெல்லாம் நான் இங்கு குறிப்பிடவில்லை என்பதால் அவைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்று நினைக்கக் கூடாது. நேரம் இல்லாததால் அதுபற்றி கூறமுடியவில்லை. அவைகள் கவனிக்கப்படும். ஏற்காடு அங்கத்தினர் திரு. குழந்தைசாமி கவுண்டர் அவர்கள் உருக்கமாகச் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அக்குறைகளை விசேஷமாக கவனிக்க வேண்டுமென்று அவர்கள் தொகுதியில் உள்ள குறைகளைப் பற்றிக் கூறினார்கள். அவை எல்லாம் கவனிக்கப்படும். கணக்குப் போட்டுத்தான் டெபிசிட் என்று போடப்பட்டிருக்கிறது. டெபிசிட் இல்லை, இது உபரி பட்ஜெட் என்று சொன்னால் அவர்கள் அப்படியே வைத்துக் கொள்ளலாம். ஆனால் கணக்கு உண்மையானதே. கணக்கு என்பது ஏமாற்று வித்தை அல்லது ஜால வித்தை அல்ல. புது வரிகள் போடவேண்டுமென்றால் டெபிஸிட் என்று காட்டி அதைச் சாக்காக வைத்துக்கொண்டு வரி போடுகிறோம் என்று சொல்லலாம். டெபிஸிட்டை சமாளிக்க போடப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். திரு. சசிவர்ணத் தேவர் அவர்கள் அர்பன் லான்ட் டாக்ஸிலிருந்து 5 கோடி ரூபாய் வருவாய் வருமென்று சொன்னார்கள். அது அவர்கள் கணக்கு. இப்படி வேறு ஒரு மன்றத்தில் ஒரு அங்கத்தினர் பேசியபோது, இந்த டாக்ஸ் குறித்து இரண்டு பேர்களும் சேர்ந்து ஒரு காண்ட்ராக்ட் எடுத்துக் கொள்ளலாம், நீங்கள் ஐந்துகோடி கொடுங்கள், இதை உங்களிடம் ஒப்படைத்து விடலாம் என்று சொன்னார்கள். சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், அதிக வரி வரும் என்று. அப்படி வந்தால் நல்லதுதான். இன்னும் எவ்வளவோ திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

கூட்டுறவு சங்கங்களில் உள்ள குறைகள் பற்றி சொல்லப்பட்டன. அவைகள் நல்லமுறையில்தான் இயங்குகின்றன. அங்குமிங்கும் ஒரு சில குறைகள் இருக்கலாம். பின்னர் பால் சப்ளை யூனியன் பற்றி கனம் அங்கத்தினர் திரு. முனு ஆதி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட இயந்திரங்கள் வாங்கியதில் தவறு ஒன்றுமில்லை, அவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதை மேலும் பரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறேன். யார் தவறு செய்தாலும் நிர்தாட்சண்யமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும். முன்பு சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அதிக பஞ்சப்படி கொடுத்தோம். அப்போது 150 ரூபாய்க்கு மேல் சம்பளம் உள்ளவர்களுக்கு பஞ்சப்படி கொடுக்க முடியவில்லை. அதற்கு நிதிநிலை அனுமதிக்கவில்லை என்று சொன்னோம். எதிர்த்தரப்பிலிருந்து அவர்களுக்கும் ஏன் கொடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். ஆனால் இந்த வரவு செலவுத் திட்டம்

வரை காத்திருக்கவில்லை. இதைக் கொண்டுவருவதற்கு முன்பே 300 ரூபாய் வரை உள்ளவர்களுக்கும் அந்த உயர்வைக் கொடுத்திருக்கிறோம். இதையெல்லாம் நான் பெருமையாகச் சொல்லிக் கொள்ளவில்லை. என்னென்ன இனத்தில் எது எது கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்கிறோம். உத்தியோகஸ்தர்களும் மிகுந்த ஆர்வத்தோடு பணியாற்றுகிறார்கள். அவர்கள் நல்ல முறையில் ஒத்துழைக்கிறார்கள். இந்த நெருக்கடி நிலை அவர்களிடையே ஒரு அற்புதமான உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. நெருக்கடியை யொட்டி ப்ராவிடன்ட் பண்டை மேலும் 5 சத விகிதம் உயர்த்தவேண்டுமென்று கோரினால் நாங்கள் சம்மதிக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் தயக்கம் இன்றி அதை ஒப்புக் கொண்டார்கள். நூறு ரூபாய்க்கு குறைந்தவர்களுக்கு 3 சத விகிதம் கம்பல்சரி ப்ராவிடன்ட் பணம் என்று வைத்திருக்கிறோம். அதோடு அரை மணி நேரம் அதிக வேலை செய்யவேண்டுமென்று சொன்னோம். அதைக் கொஞ்சங்கூட தயக்கமில்லாமல் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் எவ்வளவு பேர்களை எடுத்தீர்கள் என்று கேட்டார்கள். நெருக்கடி நிலையை யொட்டி வேலையும் அதிகரித்திருக்கிறது. எடுக்கிறபோது எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். எடுக்காமல் இல்லை. திருஷ்டாந்தத்திற்கு ஒன்று சொல்கிறேன். டிரான்ஸ்போர்ட் ட்ரிப்யூனல் என்று ஒரு ஜில்லா ஜட்ஜ் இருந்தார்கள். கரப்ஷன் ப்ரொசீடிங்ஸ்க்கு ஒரு ஜட்ஜ் இருந்தார். இரண்டிற்கும் சேர்ந்து ஒரு ஜட்ஜ் போதும் என்று ஒருவரைக் குறைத்து விட்டோம். ஆகவே எந்தெந்த விதத்தில் செலவைக் குறைத்து சிக்கனத்தை ஏற்படுத்த முடியுமோ அதையெல்லாம் செய்து வருகிறோம். அடுத்தபடியாக கன்னியாகுமரி மாவட்ட அங்கத்தினர்கள் சித்தாறு பட்டணங்கால் திட்டம் குறித்து ஒன்றுமே செய்யவில்லையே என்று சொன்னார்கள். அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் மிச்ச நீரை நாங்குனேரிக்கு கிடைக்கச் செய்யவேண்டும் என்பதுதான் நோக்கம். அதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அடுத்தபடியாக, அந்த மாவட்ட அங்கத்தினர்கள் அக்கறை கொள்வது இன்டக்ரேஷன். அதுபற்றி, ஒவ்வொன்றாக பரிசீலனை செய்து 3/4 பங்குக்கு மேல் உத்தரவு போடப்பட்டு விட்டது. இனி கொஞ்சம் பேர்கள்தான் பாக்கி. அதில் பாதிப்பேர்களுக்கு மேல் இப்போது உத்தரவு போடப்பட்டுள்ளது. எப்படி இணைப்பது, எப்படிச் சரிப்படுத்துவது என்று பார்த்து செய்யவேண்டியிருக்கிறது. அந்த வகையில் செய்கிறோம். பின்னர் கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஓய்வு பெறும் வயதை அதிகப்படுத்துவது பற்றி மத்திய அரசாங்கத்திற்கும் நமக்கும் தாரதம்மியம் இருக்கிறது, ஏன் வித்தியாசம் பாராட்ட வேண்டுமென்று சொன்னார்கள். எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. மத்திய சர்க்கார் செய்வதை எல்லாம் நாம் செய்ய முடியாது. ஐம்பத்தைந்து வயதை ஐம்பத்தி எட்டு ஆக



உயர்த்துவதை குறித்து, என்.ஜீ.ஓ. அஸோஸியேஷன் என்ற ஒரு பெரிய அஸோஸியேஷன் இருக்கிறது. மாநிலம் பூராவிற்குமாகச் சேர்ந்து, அவர்கள் தாங்களாகவே சொன்னார்கள், எங்களுக்கு இது வேண்டாம், சிறிய வயதுடையவர்கள், புதிதாக வேலைக்கு வருகிறவர்கள் ப்ரமோஷனை எதிர்பார்க்கிறவர்கள், அதனால் பாதிக்கப்படுவார்கள்; ஆகவே வயதை உயர்த்தக் கூடாது என்று ஒருமுகமாக அந்த அஸோஸியேஷன் கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறு அவர்களுக்கு பாதகம் ஏற்படும் என்றால் அது வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. தென் மண்டலத்திலுள்ள மற்ற மாநிலங்களிலும், கேரளா, மைசூர், ஆந்திரா போன்ற மாநிலங்களிலும் அவ்வாறு உயர்த்துவதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள். சுதந்திராக் கட்சி தலைவர் அவர்கள் சொன்னார்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இந்த ப்ராவிடன்ட் பண்ட் கொடுக்கிறார்கள். ஐந்நூறு ரூபாய் வாங்குகிறவர்களுக்கு 300 வந்தால் போதுமா, அதற்குமேல் கம்பல்சரி சேவிங்ஸ் எதற்கு என்று கேட்டார்கள். சாதாரணமாக சேமிக்கும் பழக்கம் நல்லதுதான். அப்பழக்கம் வேண்டும். அவர்கள் சேமித்தால் சேமிக்கும் அப்பணம் நம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படும் முறையில் அப்பழக்கம் வேண்டுமென்று அப்போது வற்புறுத்தப்பட்டது. தற்போதைய நெருக்கடி நிலையில் செலவைக் குறைத்துக் கொள்வது அவசியம். முந்நூறு ரூபாய் போதவில்லை என்றால் சிறிது கஷ்டப்பட்டு 275 ரூபாய் செலவு செய்யவேண்டும். இதுவரை செலவு செய்ததை ஒவ்வொரு குடும்பமும் குறைத்துக் கொள்வது இந்த நெருக்கடி நேரத்தில் உதவியாக இருக்கும். பல தொழிற்சாலைகளில், பாதுகாப்பிற்கான தொழில்கள் நடைபெறுகின்றன. அமெரிக்காவிலிருந்து 20 தினங்களுக்கு முன்பு சில நிபுணர்கள் ஒரு குழுவாக வந்தார்கள். அவர்கள் டாப் ராங்கிங் ஸ்பெஷலிஸ்ட்ஸ். அவர்கள் சென்னை நகரைச் சுற்றிப் பார்த்தார்கள். நம் டிபென்ஸ் இன்டஸ்ட்ரீசை பார்த்தார்கள். அதன் தலைவர் என்னிடம் கூறினார்கள், நாம் சிறந்த முறையில் தொழில் புரிகிறோம், சிறந்த முறையில் உற்பத்தியைப் பெருக்குகிறோம், நாம் செய்வது திருப்தி அளிக்கக் கூடியதாக இருக்கிறது என்று சொன்னார்கள். பாதுகாப்புத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தொழில்துறையைப் பெருக்குகிறோம் என்றாலும் அது ஓரளவிற்குத்தான் பெருக்க முடியும். நிலைமை இன்னும் மோசமாகக் கூடும். அதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். ஓரளவு தான் நாம் பாதுகாப்புத் தொழில்களுக்கு வேண்டியதைச் செய்யலாம், மற்றவை சிக்கனத்தினால் நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான் எல்லோரும் சிக்கனமாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். இதை ஆசிரியர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்கள் எல்லோரும் ஓரளவு ஒப்புக்கொள்கிறார்கள். தொழிலாளர்கள் அவர்களாகவே முன் வந்து ஒரு சட்டம் செய்து விடுங்கள், எங்கள் போனசைப் பிடித்துக் கொள்ள என்று தொழிலாளர் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறு சட்டமும் மத்திய அரசாங்கம் செய்கிறது.

சிக்கனம் செய்யவேண்டியது ஒன்று. மற்றொன்று அதை "சேவ்" செய்வது. அப்படி "சேவ்" செய்வதினால் இந்த நெருக்கடி காலத்தில் பல திட்டங்களை நிறைவேற்றவும், எதிர்பாராத செலவினங்களை சமாளிக்கவும், மூலதன செலவினங்களை சமாளிப்பதற்கும் அது பயன்படுகிறது. அந்த வகையில் கம்பல்சரி சேவிங்ஸ் என்று மத்திய ஆட்சியில் போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக சேமிக்காமல் செலவு செய்து கொண்டிருக்கின்றவர்களுக்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும்கூட, மற்ற நாடுகளில் எல்லாம் நெருக்கடியான நேரத்தில் ஒப்புயர்வற்ற தியாகத்தை அங்குள்ள மக்கள் செய்திருப்பதை நாம் பார்க்கின்றோம். நாமும் உணருகின்றோம். அதே வகையில் நமக்கும் தியாக உணர்ச்சி இருக்கிறது. அதைச் செயல் படுத்தும் வகையில்தான் இந்த கம்பல்சரி சேவிங்ஸ் அமைந்திருக்கிறது. அது மட்டுமல்ல, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னால் இதில் முதலீடு செய்யப்படும் பணம் வட்டியோடு திருப்பிக் கொடுக்கப்படும். எந்தத் துறையில் இருந்தாலும் சரி, சர்க்கார் உத்யோகஸ்தர்களாக இருந்தாலும் சரி, வியாபாரிகளாக இருந்தாலும் சரி, இப்போது இருக்கின்ற பணத்தை எல்லாம் செலவுதான் செய்கிறோம். ஆனால் இப்படி சேமிக்கப்படும் பணம் ஐந்து வருடங்களுக்குப் பின்னால் வட்டியோடு திரும்பி வரப்போகிறது. ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னால் கொடுத்துவிடப் போகிறார்கள். ஆகவே இதை வரவேற்கத்தான் வேண்டும்.

பெரிய தொழில், சிறிய தொழில் என்பவைகளைப்பற்றி நான் முன்பு குறிப்பிட்டேன். சில அங்கத்தினர்கள் "சைக்கிள் அசெம்பிளி யூனிட்" என்று ஏற்படுவதுகூட இது சிறிய தொழில் தானே என்று அலட்சியமாக குறிப்பிட்டார்கள். இந்தத் தொழில் வேலூர், தஞ்சாவூர் போன்ற இடங்களில் இருக்கிறது. சிலர் வேண்டுமென்றால் இதை அலட்சியமாக கருதலாம். ஆனால் பொது மக்கள் இதை வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

புழலேரி தேக்கப் பகுதியில் அக்வயர் செய்வதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இது ஆவடி டாங்க் தொழிற்சாலைக்கு மட்டுமல்ல. கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக சென்னை நகரம் வளர்ந்துகொண்டேயிருக்கிறது. சென்னை நகரத்திலும், சென்னை நகரத்தைச் சுற்றிலும் பல தொழில்கள் வளர்ந்துகொண்டே வருகின்றன. இதற்கெல்லாம் தண்ணீர் வேண்டும். தண்ணீர் வசதியில்லாமல் எந்த தொழிலும் வளர முடியாது. அதோடு சென்னை நகரத்திற்கு இப்போது இருக்கின்ற குடி தண்ணீர் வசதி போதவில்லை. அதற்கும் நாம் வசதி செய்து கொடுக்கவேண்டும். ஆவடி டாங்க் தொழிற்சாலையை ஏன் இங்கு அமைக்கவேண்டும் என்று கேட்டார்கள். இந்தத் தொழிற்சாலையை எங்கு அமைப்பது என்று பரிசீலனை செய்து பார்த்ததில் வசதியான இடம், தகுதியான இடம் ஆவடி என்று தேர்ந்தெடுத்ததின் பின்னால்தான் இந்தத் தொழிற்சாலையை அமைக்க முன் வந்தார்கள். ஆகவே இந்தத் தொழிற்சாலைக்கும் சென்னை நகரத்தின் குடிதண்ணீர் வசதியை விஸ்தரிப்பதற்கும் வேண்டித்தான் சோழவரத்திலுள்ள ரெட்ஹில்ஸ் ஆயக்கட்டு நிலங்களை அக்வெயர் செய்யலாம் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. ஆனால் நமக்கு தண்ணீர்தான் வேண்டும். ஆகவே நிலத்திலிருக்கின்றவர்களை வெளியேற்றவேண்டும் என்ற நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது. ஆனால் தண்ணீர் வேண்டுமென்றால் சட்டபூர்வமாக நிலத்தையும் அக்வெயர் செய்ய வேண்டும். இல்லையென்றால் சட்டபூர்வமாக இதை ஆட்சேபிக்கக் கூடிய நிலைமை ஏற்படும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கனம் அங்கத்தினர் ஏழுமலை அவர்களும், கோவிந்தராஜ் நாயுடு அவர்களும் அங்குள்ள மக்கள் இதை ஏக மனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தண்ணீரை மட்டும் விட்டுக்கொடுப்பதற்கு அங்குள்ள மக்கள் எந்தவிதமான ஆட்சேபத்தையும் தெரிவிக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள். இப்போது அக்வெயர் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற ஆலோசனை அரசாங்கத்தினிடத்தில் இருந்து வருகிறது. வேண்டுமென்றால் இதை அரசாங்கம் மறு பரிசீலனை செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





கனம் அங்கத்தினர்கள் பத்திரிகையில் பார்த்திருப்பார்கள், ஆந்திரா முதலமைச்சர் அவர்களும், மைசூர் முதலமைச்சர் அவர்களும் மகாராஷ்டிரா முதல் அமைச்சர் அவர்களும் சென்னைக்கு தண்ணீர் கொடுப்பதுபற்றி தங்கள் சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நமக்கு குடிதண்ணீர் விஷயத்தில் இருக்கின்ற கஷ்டங்களை நீக்குகின்ற வகையில் இது அமையும் என்று நம்புகிறேன். நமக்கு 15 (டி.சி.எம்.) யூனிட் தண்ணீர் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டு விட்டார்கள். அங்கும் எவ்வளவோ அரசியல் பிரச்னைகள் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும் தண்ணீர் தருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நமது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி நமக்கு தண்ணீர் வரவேண்டுமென்றால், 200 மைல்களுக்கு கால்வாய் வெட்ட வேண்டும். இதைப்பற்றியும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். ரெட்ஹில்ஸ்-லிலுள்ள மக்களை அப்புறப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு கிடையாது. அவர்கள் பேரில் அரசாங்கத்திற்கு பரிபூரண ஆதரவு இருக்கிறது. அவர்களுக்கு எந்தவிதமான தொல்லையும் கொடுக்காமல் நஷ்டஈடு கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும். இவையெல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன. பரிசீலனை செய்து எந்த அளவுக்கு பரிகாரம் அளிக்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு பரிகாரம் அளிக்கப்படும் என்பதை மட்டும் இப்போது நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, திட்டங்கள் எல்லாம் சரியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றனவா என்று பரிசீலிப்பதற்காக ஒரு குழு அமைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சியிலிருந்து சொல்லப்பட்டது.

திட்டங்கள் அவ்வப்போது என்னென்ன முறையில் நிறைவேற்றப் பட்டு வருகிறது என்பதை பரிசீலிக்க மத்திய ஆட்சியிலிருந்து நிபுணர்கள் வருகிறார்கள். மாகாண ஆட்சியிலிருந்தும் பரிசீலனை செய்யப்படுகின்றது. ஆகவே இதற்கு தனியாக பரிசீலனை செய்வதற்காக குழுக்கள் அமைக்கவேண்டிய தேவையில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சுதந்திராகட்சித் தலைவர் அவர்கள், வரிவிகிதத்தைப் பற்றிச் சொல்லும்போது, ஒரு குடும்பத்திற்கோ, அல்லது ஒருவருக்கோ 40 ரூபாய் வருகிறது என்று சொன்னார்கள். நாங்கள் போட்டிருக்கிற கணக்கில் 20 ரூபாய்தான் வருகிறது. இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், இதைப் பார்த்துவிட்டு ஜனங்கள் மிரண்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான். சாதாரணமாக வியாதி இல்லாமல் சும்மாயிருக்கிறவனைப் பார்த்து, என்னவோ போல் இருக்கிறாயே என்று கேட்டால் உண்மையிலேயே வியாதி ஏதாவது இருக்கிறதோ என்று அவன் நினைத்துவிடுவது வழக்கம் . . . . .

**திரு. சா. கணேசன் :** அரசாங்க அறிக்கைப்படி 120 கோடி ரூபாய் வரி போடப்பட்டிருக்கிறது. நம் தமிழ்நாட்டில் ஏறக்குறைய மூன்று கோடிப் பேர்கள் இருக்கிறார்கள். 120-ஐ மூன்றால் வகுத்தால் 40 வரும், இது சாதாரணமான பள்ளிக்கணக்குத்தான். இதைத்தான் நான் சொன்னேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதில் நேஷனல் இன்கம் எல்லாம் சேர்க்க வேண்டும். இதன்படிப் பார்த்தால் நேரடியாக வரி கொடுக்கின்றவர்களை கணக்குப் பார்த்தால், ஒருவருக்கு 20 ரூபாய்தான் வரும்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அண்டை மாநிலத்தில் எல்லாம் பல பெரிய திட்டங்கள் இருக்கின்றன. பொதுவாக இதைப்பற்றி அதிகமாக இங்குப் பேசுவதுகூட சரியல்ல. அரசாங்க சார்பிலிருந்து மட்டுமல்ல, எதிர்க்கட்சியின் சார்பிலிருந்தும் பேசுவது சரியல்ல. நீர்ப்பாசனத்தைப் பெருக்க வேண்டுமென்பதில் இந்த அரசாங்கத்திற்கு பரிபூரண அக்கறை இருக்கிறது. நீர்ப்பாசனத்திற்கு வசதிகள் குறைவாக இருக்கின்ற நம் ராஜ்யத்திற்கு எந்தவிதத்தில் எல்லாம் நீர்ப்பாசனத்தைப் பெருக்க முடியுமோ அவைகளில் எல்லாம் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சியிலுள்ள கனம் அங்கத்தினர் அவர்கள் தர்மபுரியில் நமது முதலமைச்சர் அவர்கள் பேரால் ஒரு பள்ளிக்கூடம் நடந்து வருவதாகவும், அது மோசமாக நடந்து கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள். அதைப்பற்றி பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்களின் பெயர் இருப்பதால் பரிசீலனை செய்யாமல் விட்டுவிடுவோம் என்று எண்ணவேண்டாம் என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





கனம் சபாநாயகர் அவர்களே, மேலும் நான் இந்த சபையின் நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. கனம் அங்கத்தினர்கள் சொன்ன காரியங்களை எல்லாம் நான் இங்கு குறிப்பிடவில்லை என்பதற்காக அதை கவனிக்கவில்லை என்று அர்த்தமல்ல, அவைகளின் மீதெல்லாம் வேண்டிய பரிசீலனை செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நெருக்கடியான இந்த நேரத்தில் நம் எல்லோருக்கும் ஒரே எண்ணம்தான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த முறையில் நாட்டைக் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் நாம் போட்டிருக்கும் திட்டங்களை எல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றி, சீக்கிரத்திலேயே நெருக்கடி தீரக்கூடிய வகையில் நாட்டில் நாம் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில், இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள் எல்லாம் தங்கள் சேவைகளில் ஈடுபடுவார்கள் என்று நம்பி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. ஏ. மதியழகன்** எழுந்தார்.

**கனம் சபாநாயகர் :** என்ன பேசப்போகிறீர்கள் . . . . . .

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தைக் கேட்பதற்காகத்தான். கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள், விற்பனை வரியிலிருந்து பலர் எவேஷன் (அவர்கள் 'எத்தல்' என்று குறிப்பிட்டார்கள்) செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும், அதனால்தான் இதிலுள்ள வருவாய் குறைந்து விட்டது என்றும் குறிப்பிட்டார்கள். இவ்வாறு எவேஷன் செய்பவர்களை கண்டுபிடித்துக் கொடுத்தால் அந்தந்த ஆபீஸிலுள்ள பியூன், பொதுமக்கள் இவர்களுக்கு 300 ரூபாய் பரிசு கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. டெப்யூடி கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர்கூட இதை அறிவித்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன். இந்த முறையை ஊக்குவித்தால் 30 கோடி ரூபாய்வரை நிச்சயமாக கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். இதற்கு கனம் அமைச்சர் அவர்கள் என்ன விளக்கத்தை தருகிறார்கள் என்பதை கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முப்பது கோடி ரூபாய் என்ன, வேண்டுமென்றால் 35 கோடி ரூபாய் என்றுகூட சொல்லலாம். கூடிய வரையில் எவேஷனைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். மேலும் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வோம். இருந்தாலும் எவேஷன் அவ்வளவு அதிகமாக இல்லை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**MR SPEAKER :** The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-10 p.m.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

## A. Statutory Rules and Orders.

112. *Notification issued with G.O. Ms. No. 105, Home, dated 8th January 1963 regarding the collection of concessional rate of motor vehicles tax in respect of lorry bearing registration No. MDJ 1358 belonging to the St. Mary's High School and Orphanage, Vellore, so long as the said lorry is used exclusively for the transport of materials for the construction of buildings for the said educational institution and orphanage and for carrying food-stuffs to the orphanage from the market [Laid on the table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

113. *Notification issued with G.O. Ms. No. 2818, Local Administration, dated 29th December 1962 issuing the rule relating to the exercise by the Chief Electoral officer, Madras, of the powers of the Inspector of Municipal Councils and Local Boards under the rules, notifications and orders issued under the Madras District Municipalities Act, 1920. [Laid on the Table of the House under section 304(d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

114. *Notification issued with G.O. Ms. No. 1175, Rural Development and Local Administration, dated 19th May 1962 amending the Madras Panchayats (Election of Presidents and Vice-Presidents) Rules, 1961, published with Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-489 of 1961,, dated the 26th April 1961 at pages 10-13 of the Supplement to Part V of the* Fort St. George Gazette, *dated the 10th May 1961. [Laid on the table of the House under section 179(4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

## B. Reports, Notifications and other papers.

* 51. *The Administration Report of the Madras State for 1961.*

52. *First Report (Third Assembly) of the Committee on Estimates relating to the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on State Transport (Nationalised).*

53. *Second Report (Third Assembly) of the Committee on Estimates relating to the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Small Scale Industries.*

* Placed on the table of the House on 7th March 1963.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Saturday, 9th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

**தீ விபத்துக்கள்.**

* 163 Q.— **திரு. து. ப. அழகமுத்து** : *கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*தீ விபத்துக்களுக்கு உள்ளான வீடுகளுக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகை எப்போது நிர்ணயிக்கப்பட்டது ?*

**கனம் திரு. வெ. ராமையா** : *இப்போது கொடுக்கப்படும் உதவித் தொகை 1954-ம் வருடம் நிர்ணயிக்கப்பட்டது.*

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, is there any proposal to enhance the amount that is being granted as subsidy?

THE HON. SRI V. RAMAIAH : There is no proposal pending before the Government now.

**திரு. ஆ. கு. சுப்பையா** : *இப்பொழுது வீடு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்படுகிறது ?*

**கனம் திரு. வெ. ராமையா** : *இப்பொழுது வீடு கட்டிக் கொள்வதற்கு கொடுக்கக்கூடிய உதவித் தொகை ரூ. 30. ரூபாய் 10, துணி, மணி போன்றவைகள் எரிந்து போனால் ஏற்படக்கூடிய நஷ்டத்திற்கு உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.*

**திரு. எஸ். முருகையன்** : *இப்பொழுது கொடுக்கக்கூடிய தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. ஹரிஜன மக்களுக்கு இந்தத் தொகையை இரட்டிப்பாகக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?*

**கனம் திரு. வெ. ராமையா** : *இப்பொழுது அரசாங்கத்திற்கு அது போன்ற உத்தேசம் ஒன்றுமில்லை.*

**திரு. அ. ராமச்சந்திர ராயர்** : *தீயினால் எரிந்த வீட்டிற்கு கொடுக்கும் இந்த உதவித் தொகையை ரூ. 30 லிருந்து ரூ. 50 ஆக உயர்த்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ?*

MR. SPEAKER : Let the hon. Member Sri A. Ramachandra Rayar repeat the question.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I follow the question. The hon. Member, Sri A. Ramachandra Rayar is only making a suggestion.

**திரு. ஜே. மாதா கவுடர்** : *இது மாதிரி தீ விபத்துக்குள்ளான வீடுகள் இடிந்து விடுகின்றன, அல்லது தீயினால் பாதிக்கப்பட்டு எரிந்து விடுகின்றன. இப்பொழுது சர்க்கார் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது*

[9th March 1963

**கனம் திரு. வெ. ராமையா :** இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஆர். ரங்கசாமி :** எதிர்பாராமல் ஏற்படுகிற தீ விபத்துக்களுக்குத் தான் இந்த உதவித் தொகை கொடுக்கப்படுகிறதா அல்லது கட்சிப் பூசல்களின் காரணமாக ஊரில் ஏற்படும் தீ விபத்துக்களுக்கும் இது கொடுக்கப்படுகிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இந்த உதவித் தொகையை பாதிக்கப் பட்டவர்களுக்கு உடனே கொடுத்து விடுகிறோம். கட்சியினால் ஏற்பட்டதா, அல்லது வேறு காரணங்களினால் ஏற்பட்டதா என்பதை அப்பொழுது சர்ச்சை செய்வது கிடையாது.

*Central Jail (Madras)*

* 164 *Q*.—SRIMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Chief Minister be pleased to state whether any steps have been taken to provide flushout latrines at the Central Jail, Madras to prevent the pollution of Buckingham Canal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

**கொடும்பாவி புதைத்தல்**

* 165 *Q*.— **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முன்னாள் கவர்னர் ஜெனரல் ஒருவரின் உருவம் ஒன்றினை சென்னை கடற்கரையில் புதைத்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதனை ஏன் தடுக்க அரசாங்கம் முன் வரவில்லை ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) & (இ) கனம் அங்கத்தினர் குறிப்பிடும் கூட்டத்தைக் கூட்டியவர்கள் கொடும்பாவியை எரிப்பதாக முதலில் உத்தேசித்திருந்தனர். அது நகரப் போலீஸ் சட்டத்தின் 74-வது பிரிவின்கீழ்க் குற்றமாகுமென போலீசார் அவர்களுக்குத் தெரிவித்தார்கள். எனவே, அக்கொடும்பாவியைப் புதைத்து விடுவதென அதே கூட்டத்தில் அவர்கள் முடிவு செய்திருக்கலாம். இது அரசாங்கத்துக்கு முன்கூட்டியே தெரியாது. என்றாலும், இதுபோன்ற அருவருப்பான செயல்கள் மீண்டும் செய்யப்படாதவாறு தடுக்க, அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய செயல்களைத் தடுப்பதில் வெவ்வேறு அரசியல் கட்சிகளும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, குறிப்பாகத் தற்போதைய நெருக்கடிக் காலத்தில் ஆபாசமான இச்செயல்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளும் என்று அரசாங்கம் நம்புகிறது.

(*a*) & (*b*) The original proposal of the organisers of the meeting referred to by the Hon'ble Member was to burn the effigy. They were informed by the Police that this was an offence under section 74 of the City Police Act, and so they seem to have decided at the meeting itself to bury the effigy. The Government had no previous knowledge of this. However, suitable action was subsequently taken to ensure that such obnoxious acts did not recur. The Government have no doubt that the various political parties will also co-operate in this matter and ensure that such unseemly acts are avoided, especially during the present emergency.



9th March 1963]

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கூட்டம் நடைபெற்ற இடத்தில் போலீஸ் அதிகாரிகள் இருந்தார்களா ? அப்படி இருந்திருந்தால், முடிவு செய்யப்பட்ட உடனே அவர்கள் ஏன் அதைத் தடுக்க முன்வரவில்லை ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போலீஸ்காரர்கள் சட்டப்படியும், உத்தரவுப்படியும்தான் நடவடிக்கைகள் எடுக்க முடியும். உத்தரவு இல்லாமல் புதிதாக ஒரு நடவடிக்கையை அவர்கள் எடுக்கமாட்டார்கள்.

**திரு. கோ. சி. மணி :** அதைப் புதைத்ததற்குப் பிறகாவது உத்தரவு பெற்று, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சட்டப்படி யார் குற்றம் செய்திருந்தாலும், நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இதற்குமுன் இவ்வாறு அசம்பாவிதமான சம்பவங்கள் ஏற்பட்டு, அதற்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதே மாதிரி சம்பவம் நடந்தது என்று நான் கூற முடியாது.

*Forest resources*

* 166 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any scheme for undertaking a pre-investment survey of forest resources with a view to assessing the potentialities of forest in relation to further planning and development of integrated forest industries; and

(*b*) if so, the grant obtained therefor?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) & (இ)—ஆம். மத்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டதன்படி ஒரு திட்டம் தயாரித்து அந்த அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவர்களுடைய ஒப்புதலுக்குப் பின்புதான், அவர்கள் கொடுக்கும் மானியம் எவ்வளவு என்பது தெரியும்.

*Tuticorin Port*

* 167 *Q*.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state the decisions taken at the meeting which the Secretary of Union Ministry of Transport and Communication had with the State Officials and Hon. Chief Minister in connection with the development of Tuticorin as a Major all-weather port?

THE HON. SRI V. RAMAIAH : A paper [a] is placed on the table of the House.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கண்ட்லா துறைமுகத்தை சுங்க வரி இல்லாத துறைமுகமாகச் செய்திருப்பது போல் தூத்துக்குடித் துறைமுகத்தையும் செய்வதற்கு நம்முடைய சர்க்கார் யோசனை கூறினார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் இந்த அறிக்கையைப் படிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எழுப்பியுள்ள மூல கேள்விக்கும், இந்த 'உப' கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

---

[a] Printed as Appendix on page 413.

[9th March 1963

**திரு. கே. ஏ. மதியழகன் :** சம்பந்தமில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுவது அவ்வளவு சரியல்ல. ஏனென்றால் தூத்துக்குடித் துறைமுகம் தென்னகம் முழுவதற்கும் பயன்படக் கூடிய ஒரு துறைமுகம். குறிப்பாக திருநெல்வேலி, ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்குப் பயன்படுமாதலால், கண்ட்லா துறைமுகத்தைப்போல் வரி இல்லாமல் செய்ய வேண்டுமென்று சொல்வது, ஒரு தொடர்பான விஷயம்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினருடைய மூலக் கேள்வியிலே இது சம்பந்தமான கூட்டத்தில் நடந்த முடிவைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே இது சம்பந்தமான விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். தூத்துக்குடி துறைமுகம் முக்கியமான திட்டம்தான். மற்றும் எல்லா விவரங்களையும் கொடுக்க முடியும். ஆனால் இந்தக் கேள்வியில் எழவில்லை என்றுதான் நான் சொல்லுகிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், கனம் அங்கத்தினர் மதியழகன் சபாநாயகர் அவர்கள் கூப்பிடுவதற்கு முன்பாகவே, தன் இச்சையாகக் கேள்விகள் கேட்கிறார்களே, இது சட்டசபை நடவடிக்கைப்படி முறையாகுமா ?

MR. SPEAKER : The hon. member Sri K. A. Mathialagan has got my permission to put the question.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தூத்துக்குடி துறைமுகத்திட்டத்தோடு சேதுசமுத்திரத் திட்டமும் இணைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது பிரித்து விடப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதையும் இதோடு சம்பந்தப்படுத்து கிற வகையிலே, சேதுசமுத்திரத் திட்டத்தை வற்புறுத்தி இருக்கிறார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும், சேதுசமுத்திரம் திட்டம் மிகவும் அவசியம் என்பதை நமது அரசாங்கம் வலியுறுத்திக் கொண்டு வருகிறது என்று. அதற்கு வேண்டிய ஆரம்பப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

**மர்மலாங் மேம்பாலம்**

*** 168 Q.— திரு. எஸ். முருகையன் : (திரு. முனு. ஆதி சார்பாக) :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை அருகில் அடையாற்றின் மீது கட்டப்பட்டுள்ள மர்மலாங் மேம்பாலம் போக்குவரவு நெரிசல் நிறைந்த இடமாக உள்ளதை அரசாங்கம் அறியுமா ?

(இ) அம்மேம்பாலத்தை பழுதுபார்க்கவோ, அல்லது புதுப்பித்துக் கட்டவோ அரசாங்கத் திட்டமுண்டா ?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) ஆம்.

(இ) இப்போது இருக்கும் மேம்பாலத்தை அகலப்படுத்த அரசாங்கம் 33 லட்சம் ரூபாய் உத்தேச செலவில் அனுமதி அளித்திருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தப் பாலம் போர்ச்சுகீசியர் காலத்தில், சுமார் 200 அல்லது 300 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதால் மக்கள் அதன்மீது பிரயாணம் செய்யும்போது பீதியடைகிறார்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** பீதி ஒன்றும் அடைய வேண்டாம். பாலத்தைப் பொறுத்தவரையில் பலமாகத்தான் இருக்கிறது. கொஞ்சம் அகலப்படுத்த வேண்டும். அதை விஸ்தரிக்கும் முறையிலேதான் இப்பொழுது அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது.



9th March 1963]

## *N.C.C.*

* 169 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have any scheme to make N.C.C. Training compulsory for College-Students; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) N.C.C. training will be made compulsory from the next academic year for all College boys excepting the students of the final year Degree, the post graduate courses and the last 2 years of 5 years integrated Professional courses. Though N.C.C. training will not be made compulsory for all college girls, a minimum of one unit should be raised by each of the Women's Colleges.

## *Nurseries*

* 170 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the number of nurseries that have been approved by the Government in the Districts of Salem, North Arcot and South Arcot with the names of Nurseries?

THE HON. SRI P. KAKKAN : There are eight approved private nurseries in the districts of Salem and North Arcot, but there is no approved nursery in South Arcot district. The names of the approved nurseries in Salem and North Arcot districts are given below :

Salem district—

1. The Salem Nursery Gardens, Salem.
2. New Mottur Village Nursery, Pachampalli P.O., Krishnagiri taluk.
3. Crown Nursery, Salem.

North Arcot district—

1. Kannaiyar Nursery, Tirupattur.
2. Narayana Prasad Nursery, Tirupattur.
3. Sivaram Prasad Nursery, Tirupattur.
4. Chandra Nursery, Tirupattur.
5. Govindarama Iyer & Sons, Nursery Gardens, Sengunampattarai, Paniyandapalli Post (via) Nattarampalli.

சேலம் வட ஆற்காடு மாவட்டங்களில் அங்கீகாரமான எட்டு செடிப் பண்ணைகளை தனியார் நடத்துகிறார்கள். தென் ஆற்காடு மாவட்டத்தில் அத்தகைய செடிப் பண்ணை எதுவும் இல்லை. சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் அங்கீகார செடிப் பண்ணைகளின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

சேலம் மாவட்டம்—

(1) சேலம் செடிப் பண்ணைத் தோட்டம், சேலம்.
(2) புதிய மோட்டூர் கிராமச் செடிப் பண்ணை, பட்சம்பள்ளி த.ஆ., கிருஷ்ணகிரி தாலூகா.
(3) கிரௌன் செடிப் பண்ணை, சேலம்.

வட ஆர்க்காடு மாவட்டம்—

(1) கண்ணையர் செடிப் பண்ணை, திருப்பத்தூர்.
(2) நாராயண பிராசாத் செடிப் பண்ணை, திருப்பத்தூர்.
(3) சிவராம் பிராசாத் செடிப் பண்ணை, திருப்பத்தூர்.
(4) சந்திரா செடிப் பண்ணை, திருப்பத்தூர்.
(5) கோவிந்தராம அய்யர் அண்டு சன்ஸ், செடிப் பண்ணைத் தோட்டம், செங்குணம் பட்டரை, பனியாண்டபள்ளி த. ஆ., நாட்டரம்பள்ளி (வழி).

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, what is the control or general supervision exercised by the Department over these Nurseries, as defects are found in grafting of plants ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நர்சரிகளை கவனிப்பதற்காகவே அது சம்பந்தப்பட்ட பழச் செடிகள் வைப்பதில், பழத் தோட்டங்கள் வைப்பதில் மத்திய சர்க்காரும் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் போய்ப் பார்த்து கவனிக்கிறார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாநிலமெங்கும் இருக்கிற மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட நர்சரிகள் எவ்வளவு ?

**கனம் திரு. பூ. கக்கன்:** தனியார்கள் நடத்துவது 18. சர்க்காரால் நடத்தப்படும் பழப் பண்ணைகள் 8 இருக்கின்றன. அவற்றுள் 7 பண்ணைகள் பயன் அளித்து வருகின்றன. ஆத்தூரில் இப்போதுதான் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் கன்னியாகுமரி, ராமநாதபுரம், தஞ்சாவூர் ஜில்லாக்களில் பழத் தோட்டங்களை வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இந்த நர்சரிகள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது ? இதை அரசாங்கத்தாரே தேர்ந்தெடுக்க உத்தேசம் இருக்கிறதா, என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்கனவே பழ மரங்கள், பழத் தோட்டங்கள் இருந்து வருகின்றன. அதையெல்லாம் பார்த்து அந்தந்த வட்டாரத்தினுடைய மண் வளம், சீதோஷ்ணம் எல்லாவற்றையும் பார்த்து எங்கு வைத்தால் நல்ல பலன்தரும் என்று பார்த்து ஏற்பாடு செய்யப்படுகிறது. மேலும் கன்னியாகுமரி, ராமநாதபுரம், தஞ்சாவூர் ஜில்லாக்களில் நர்சரிகளை வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, தனியார் துறையிலே நடத்தும் இந்தச் செடிப் பண்ணைக்கு அரசாங்கம் ஏதாவது மான்யத் தொகை அளித்திருக்கிறதா ? இவைகள் அரசாங்க அதிகாரிகளின் மேற்பார்வையில் இயங்குகின்றனவா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்கம் கடன் கொடுக்கிறது. அரசாங்க அதிகாரிகளும் போய்ப்பார்த்து வருகிறார்கள். புதிதாக பழத் தோட்டங்கள் ஏற்படுத்தினால் ஏக்கருக்கு 300 ரூபாய் கொடுக்கப்படுகிறது. பழைய தோட்டங்களுக்கு 65 ரூபாய் வீதம் கொடுக்கப்படுகிறது. திராட்சைப் பழத் தோட்டங்களுக்கு 600 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

**திரு. சா. கணேசன் :** தமிழ் நாட்டிலே சிறப்பாகக் கருதப்படுகிற, முப்பழம் என்று சொல்லப்படுகிற, பலா, மா முதலியவை வறண்ட பிராந்தியங்களில்தான் நன்றாக வளரும், அங்குதான் நன்கு பலன்தரும் என்பதை எண்ணி, பட்டுக்கோட்டை பகுதி காரைக்குடி பகுதி ஆகிய அந்தப் பகுதிகளில் நல்ல செம்மண்ணும் நல்ல வளமான பூமியும் இருக்கிற காரணத்தினால் இந்தப்பகுதிகளில் மா, பலா, ஆகியவைகளைப் பயிரிட விசேஷத் திட்டம் ஏற்படுத்துவதற்கு அல்லது அக்கறை எடுத்துக்கொள்ளுவதற்கு உத்தேசம் உண்டா ?

9th March 1963]

**கனம் திரு. பூ. கக்கன் :** மாம்பழத்தைப் பொறுத்த வரையில் சேலம் ஜில்லாதான் பெயர் போனது. ராமநாதபுரம் ஜில்லாவிலே எங்கு வைப்பது என்று இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த இடம் என்று இப்போது சொல்ல முடியாது. கனம் அங்கத்தினர் சொன்ன செய்தியை மனதில் கொண்டு அந்த வட்டாரத்திலும் வைக்க ஏற்பாடு செய்யலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே திருப்பத்தூர் பக்கமாகவே நர்சரி இருப்பதாக அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தின் தலைநகரமான வேலூரிலே வைக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ? அம்மாதிரி வைத்தால் எல்லாத் தாலுக்காக்களுக்கும் கிடைக்கக் கூடிய முறையில் இருக்குமாதலால் அந்த மாதிரி உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** தாலூக்காவிலும் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று பார்ப்பதற்கில்லை. மண் வளத்தையும், சீதோஷ்ணத்தையும் பார்த்து, எந்த இடத்தில் வைப்பது பலன்தரும் என்பதையும் பார்த்துத்தான் ஏற்பாடு செய்யப்படுகிறது.

## ஓய்வு பெறும் வயது

* 171 Q.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஐ.ஏ.எஸ். மற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் ஓய்வு பெறும் வயதினை உயர்த்தும் உத்தேசம் உண்டா?

(இ) இது பற்றி மாநில கெஜட் பதிவில்லாத அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சங்கம் ஏதேனும் கருத்து தெரிவித்ததா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government have decided to fall in line with the Government of India's proposal to raise the age of superannuation of All-India Service Officers from 55 to 58 years *with the option* of issuing three months' notice on either side. They have also decided that the age of retirement of State Government servants will continue to be 55.

(அ) அனைத்திந்திய சர்வீஸிலுள்ள அதிகாரிகளின் ஓய்வு வயதை 55-லிருந்து 58-ஆக உயர்த்த வேண்டும் என்று இந்திய அரசாங்கம் செய்த சிபார்சை இந்த அரசாங்கமும் ஏற்றுக்கொள்வதென முடிவு செய்திருக்கிறது. ஆனால், சம்பந்தப்பட்ட ஊழியரும் அரசாங்கமும் மூன்று மாத நோட்டீஸ் கொடுத்து, இந்த கால நீடிப்பிலிருந்து விலகிக்கொள்ளலாம். மாநில அரசாங்க ஊழியர்களின் ஓய்வு வயது தொடர்ந்து 55 ஆகவே இருக்க வேண்டுமென்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

(b) The N.G.G.O's union had given a representation requesting that the age of retirement of Government servants of this State also may be raised to 58.

(இ) இம் மாநில அரசாங்க ஊழியர்களின் ஓய்வு வயதையும் 58 ஆக உயர்த்தும்படி என்.ஜி.ஜி.ஒ. யூனியன் வேண்டுகோள் செய்துள்ளது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய உத்தியோகஸ்தர்களுடைய ஓய்வு பெறும் வயதை 58 ஆக உயர்த்தும்போது மாநில அரசினுடைய எண்ணம் கேட்டு அறியப்பட்டதா ? அறியப்பட்டது என்றால் மாநில அரசு எழுதி அனுப்பிய கருத்து என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாநில அரசாங்கங்களிடம் இது கலந்து ஆலோசிக்கப்பட்டது. மண்டல கவுன்சில் கூட்டத்திலும் இது பற்றிப் பேசப்பட்டது. எல்லோரும் கலந்து பேசி இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

[9th March 1963

போல, தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுத்து, மாதா மாதம் அந்தத் தொகையை திருப்பி வாங்கிக்கொள்ளுவது பொருத்தம் அல்லவா ? ரூபாய் 30 வைத்துக் கொண்டு எப்படி வீடு கட்டிக்கொள்ள முடியும் ?

**கனம் திரு. வெ. ராமையா :** ரூபாய் 30 வைத்துக்கொண்டு வீடு கட்டிக் கொள்ளமுடியாது. அவர்கள் கஷ்டத்தைப் போக்குவதற்காக அளிக்கக்கூடிய உதவித் தொகைதான் இது. தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் தாராளமாக கடன் கொடுத்து வருகிறது. வீடு ஒன்றுக்கு ரூ. 1,000 கடன் கொடுத்து வருகிறோம்.

**திரு. சா. கணேசன் :** கடனை நிவர்த்திக்க முடியாத, ஏராளமான, ஹரிஜன மக்கள் போன்ற, ஏழைகள் பெருகியிருக்கிற சந்தர்ப்பத்தில், பெரும்பாலாக இம்மாதிரியான தீ விபத்துக்கள் சேரி போன்ற இடங்களில் தான் சுலபமாக அதிகமாக ஏற்படுகிற காரணத்தினாலே, அதற்குத் தக்க முறையிலே அதிக நிவாரணத் தொகை கொடுப்பதற்கோ அல்லது புதிய வீடுகள் இனமாகக் கட்டிக் கொடுப்பதற்கோ ஏதாவது திட்டம் இருக்கிறதா, அல்லது கொண்டு வரும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இதையெல்லாம் சமீபத்தில் பரிசீலனை செய்து ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். இப்பொழுது இருக்கக்கூடிய நிலையிலே மற்றொரு கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது ரூ. 1,000 கடனாகக் கொடுக்கிறோம் என்று சொன்னேன். புதியதாக வீடுகளைக் கட்டி அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற திட்டம் இப்பொழுது அரசாங்கத்தினிடம் இல்லை. சமீபத்தில் தீ விபத்துக்கள் நடந்த இடங்களை பார்க்கும் பொழுது, அரசாங்கத்தினுடைய உதவியோடு நின்று விடாமல், ஸ்தலத்தில் இருக்கக்கூடிய பெரியவர்கள், அதிகாரிகள் இவர்களுடைய முயற்சியினால், பல நன்கொடைகள் வாங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொஞ்சம் தாராளமாக உதவக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

**திரு. ரா. கு. வீரப்ப செட்டியார் :** இந்தத் தொகையை உயர்த்துவதற்காக வட சேலம் மாவட்ட மன்றத்திலிருந்து ஒரு கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படியானால், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**கனம் திரு. வெ. ராமையா :** அந்த விவரம் இப்பொழுது என்னிடமில்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.

**திரு. எஸ். மணி :** பெரம்பலூர் தாலூகாவில் 1962-63-ல் எத்தனை கிராமங்கள் தீயினால் பாதிக்கப்பட்டன ? அந்த வட்டாரத்திலுள்ளவர்கள் அரசாங்கத்திற்கு ஏதாவது மனு கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** இப்படி ஒவ்வொரு வட்டாரத்தைப்பற்றியும் கேட்டுக் கொண்டே போனால் என்ன செய்வது It is a general question.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தத் தீ விபத்துக்கள் வருடா வருடம் அதிகமாகியிருக்கின்றனவா அல்லது குறைந்திருக்கின்றனவா ? குறைந்திருந்தால் அதற்குக் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** குறைந்து வருகிறது பற்றி கவலையா ?

**கனம் திரு. வெ. ராமையா :** என்னிடம் இதுபற்றி இப்பொழுது ஒன்றும் தகவல் இல்லை. தீ விபத்துக்கள் அதிகரித்துக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. குறைவதற்குக் காரணம் இப்பொழுது என்னால் சொல்ல முடியாது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சர்க்கார் கொடுக்கக்கூடிய கடன் தொகையை எத்தனை ஆண்டு காலத்தில் திருப்பிக் கொடுக்கவேண்டும் ? இருபது வருஷ தவணை கொடுக்கப்படுமோ என்பதை அறிய விரும்புகிறேன்.



9th March 1963]

**கனம் திரு. வெ. ராமையா :** திருப்பிக் கொடுக்க வேண்டிய தவணை காலத்தைப்பற்றி நேரடியாக இப்பொழுது பதில் சொல்ல முடியாவிட்டாலும், தவணை காலம் சௌகரியமாக அமைக்கப்பட்டிருக்கிறது. 10 வருஷம் அல்லது 20 வருஷம் இருக்குமென்று நினைக்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** சென்ற ஆண்டில் ஏற்பட்ட தீ விபத்துகளுக்கு எவ்வளவு சப்ஸிடி, எவ்வளவு கடன் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கம் அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அந்த விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இதுவரையிலே நமது ராஜ்யத்தில் எத்தனை தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன ?

**கனம் திரு. வெ. ராமையா :** தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து பதில் சொல்ல முடியும்.

**திரு. ஆர். நாராயணன் :** கனம் அமைச்சர் அவர்கள் இந்த உதவித் தொகையை இப்பொழுது அதிகப்படுத்த முடியாது என்றும், ஆனால் கடன் கொடுத்து வருகிறோம் என்றும் சொன்னார்கள். நிலம் இல்லாத ஏழைகளுக்கு எந்த வகையிலே கடன் கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Sir, It is a hypothetical question. But still I will try to answer it. When such a situation arises, the Government will look into it.

**திரு. மூ. சண்முகம் :** கடன் உதவி அளிக்கும் திட்டம் எல்லா ஏழைகளுக்கும் பொதுவாக இருக்கிறதா ? அல்லது ஹரிஜனங்களுக்கு மட்டும் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இந்த உதவி எல்லோருக்கும் கிடைக்கும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இப்பொழுது ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 750 மான்யமாகவும், ரூ. 250 கடனாகவும் கொடுக்கிறார்கள். அதே மாதிரி எரிந்துபோன வீடுகளுக்கு உதவி அளிக்கும்போதும், ரூ. 1,000 கொடுப்பதில் ரூ. 750 அரசாங்கம் மான்யமாகக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுது அதுபோல ஒன்றும் உத்தேசம் இல்லை.

**திரு வி. எஸ். எஸ். மணி :** பெரும்பாலும் தீ விபத்துக்கள் சேரிகளிலே உண்டாகின்றன. இம்மாதிரி விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஏதாவது வழி செய்ய முடியுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** தீ விபத்து எதிர்பாராத காரணங்களினால் ஏற்படக்கூடிய ஒரு சம்பவம். எதிர்பாராத காரணங்களை முன் கூட்டியே தெரிந்துகொண்டு, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க முடியாது. ஹரிஜனங்கள் காலனிகளில் மட்டும் தீ விபத்துக்கள் ஏற்படுவதில்லை. சென்னையில் இரண்டு தினங்களுக்கு முன்பு ஒரு பெரிய மாளிகையில்கூட தீ விபத்து ஏற்பட்டது பலருக்கும் தெரியும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இப்பொழுது தாலூக்காக்களிலே தீயணைக்கும் படை ஆபீஸ் இருக்கிறது. மாவட்டத்திலே ஜில்லா ஃபயர் ஆபீசர் இருக்கிறார். இப்பொழுது அவருடைய கண்ட்ரோலில் செயல்பட்டு வருகிறது. எஸ். பி. அவர்களுக்கு இந்த டிஸ்டிரிக்ட் ஆபீசர் அதிகாரத்தை வழங்க முடியுமா ?

[9th March 1963

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சர்க்கார் அதிகாரிகள் எல்லோருடைய வயதையும் 58 ஆக உயர்த்த அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி அடுத்த கேள்வியில் பதில் சொல்லுகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நம் சர்க்கார் வயது வரம்பை 55 என்று வைத்துக்கொண்டு, மத்திய சர்க்கார் வயது வரம்பு 58 என்று ஒத்துக் கொண்டிருப்பது முரண்பாட்டைக் காட்டவில்லையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சர்வீஸ்களில் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. இது இல்லாமலேயே மத்திய அரசு சர்வீசுகளில் 40 சதவீதத்துக்கு மேல் 60 வயது வரையில் இருக்கிறார்கள்.

* 172 *Q.*—Sri V. SANKARAN :
Sri R. PONNAPPA NADAR : } Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to raise the retirement age of Government servants; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) The Government have decided not to raise the present age of retirement of employees under the rule-making powers of this Government.

**திரு. சா. கணேசன் :** உத்தியோகத்திற்குள் பாரபட்சம் இல்லாத நிலை இருப்பதற்கும், வயது குறிப்பிட்ட அளவு ஆனாலும் வேலை செய்யத் திராணி, அனுபவம், திறமை இருக்கிற காரணத்தினாலும், வேறு சில குழப்பங்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவும் மாநில ஆட்சிக்கு உட்பட்ட ஊழியர்களின் வயதை ஐ.ஏ.எஸ். போல அந்த நிலைக்குக் கொண்டு வந்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஐ.ஏ.எஸ். என்பது தனி சர்விஸ். அதற்குள்ள சலுகைகளை மற்ற உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுப்பது என்பதை எதிர்பார்க்க முடியாது. உத்தியோகத்திலேயே வேறு வேறு வகைகள் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று வித்தியாசம் இல்லாமல் இருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதற்கில்லை. இந்த அரசாங்கத்தைப்பொறுத்த மட்டில், சிறு உத்தியோகஸ்தர்களில் பெரும்பாலானவர்கள் வயதை உயர்த்தக் கூடாது என்று விரும்புகிறார்கள். ஏன் என்றால் அவர்களால் இருக்கிறவர்களுக்கு மேல் உத்தியோகத்திற்குப் போகத் தடை ஏற்படும். உத்தியோகத்தை எதிர் பார்த்திருக்கிறவர்களுக்கும் உத்தியோகம் கிடைப்பது தடைப்படும். அந்தக் காரணத்தினால் 55 வயதோடு நிறுத்தினால் நலம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். அதையெல்லாம் ஆராய்ந்து 55-க்கு மேல் உயர்த்துவதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, வயதை உயர்த்துகிற அத்தகைய நிலை பற்றி இந்த மாநிலத்திலுள்ள என்.ஜி.ஓ. சங்கங்கள் அத்தனையும் ஒருமித்த கருத்தைத் தெரிவித்தனவா ? அல்லது வேறுபட்ட கருத்தினைத் தெரிவித்தனவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பு சொன்ன மாதிரி முதலில் அவர்கள் உயர்த்தலாம் என்று சொன்னார்கள். பின்னால் ஆராய்ந்து பார்த்து உயர்த்தவே கூடாது என்று வற்புறுத்திச் சொன்னார்கள். செக்ரெட்டேரியட்டில் இருக்கிற என்.ஜி.ஓ.க்கள் உயர்த்தலாம் என்று சொன்னார்கள். அவரவர்கள் தெரிவிக்கிற அபிப்பிராயம் அவரவர்கள் நிலையைப் பொறுத்தது. வயது அதிகமாக உள்ளவர்களாக இருந்தால் உயர்த்த



9th March 1963]

வேண்டும் என்று சொல்லுகிறார்கள். குறைந்த வயதுள்ளவர்கள் உயர்த்தாமல் இருப்பது நல்லது என்று சொல்லுகிறார்கள். பெரும்பாலானவர்களுக்கு எது நலம் என்று கருதி முடிவு செய்திருக்கிறோம்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** இப்போது நாட்டினுடைய சராசரி வயது கூடியிருக்கிறது. ஆகவே இதை வைத்துக்கொண்டாவது ஐ.ஏ.எஸ். அல்லாத அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ஓய்வு பெறும் வயதினை உயர்த்தவேண்டுமென்ற கருத்தை ஏற்றுக்கொள்வார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சராசரி வயது உயர்ந்திருப்பது உண்மை. உத்தியோகத்தை எதிர்ப்பார்க்கிறவர்கள் எண்ணிக்கை இன்னும் குறையவில்லை. அதையொட்டித்தான் இந்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

*Pension for teachers*

* 173 *Q.*—Sri N. P. SENGOTTUVELU (on behalf of Sri M. V. KARIVENGADAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any disparity between the pension granted to retired teachers and that allowed to other Government pensioners in the State; 9-00 a.m.

(*b*) if so, the details thereof;

(*c*) the reasons for the disparity; and

(*d*) whether the Government propose to remove this disparity?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, between non-Government retired teachers and Government pensioners.

(*b*) The quantum of pension is higher in the case of Government pensioners.

(*c*) Teachers in non-Government schools enjoy the benefits of the scheme of contributory Provident Fund which is not applicable to Government employees and hence a lower rate of pension is allowed to them.

(*d*) No.

**திரு. ஆ. தங்கவேலு :** கனம் சபாநாயகர் அவர்களே, குறைந்த அளவில் பென்ஷன் வாங்குகிறவர்களும், மற்ற பென்ஷன் வாங்குகிறவர்களும் தாலூகா ஆபீஸ் சென்று பென்ஷன் வாங்குவதாக இருப்பதால் அவர்களுக்கு போக்குவரத்து செலவு அதிகமாகிற காரணத்தால் அவர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. அதன் காரணமாக முதியோர் பென்ஷன் தொகையை மணிஆர்டர் மூலமாக அனுப்புவது போன்று இவர்களுடைய பென்ஷனையும் மணி ஆர்டர் மூலமாக அனுப்புவதற்கு அரசாங்கம் யோசனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி தனி கேள்வி போட வேண்டும்.

**திரு. மூ. சண்முகம் :** ஸார், பென்ஷன் பெறுகிற ஹையர் க்ரேட் ஆசிரியர்கள், செக்ண்டரி க்ரேட் ஆசிரியர்கள் முதலியவர்களுக்கும் சர்க்கார் பென்ஷனர்களுக்கு கொடுப்பது போன்று, சமீப காலத்தில் கொடுக்கப்படுகிற டியர்னஸ் அலவன்சு கொடுக்கப்படுகிறதா ? இல்லை என்றால் காரணம் என்ன ?

[9th March 1963

**திரு. ஜே. மாதா கவுடர் :** அறுபது வயதுடைய முதியோருக்கு 55 வயதுடைய மனைவி இருந்தால் அவருக்கு அந்தச் சலுகை கிடைப்பதாக இல்லை. இந்தக் காலத்தில் பெண்கள் 45 வயதிலேயே கிழவியாகி விடுவதால் அவர்களுடைய வயதைக் 45-க்குக் குறைத்து அவர்களுக்கு பென்ஷன் கொடுக்க சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் பெண் அங்கத்தினர்களுடைய சார்பாக இதை நான் மறுக்கிறேன். பெண்களுடைய வயதைக் குறைக்கக் கூடாது என்று சொல்லுவார்கள். இப்பொழுது பெண்கள் 55 வயதானாலும் அவர்கள் கிழவியாகிறார்கள் என்று சொல்வது தப்பு. அதனால் தான் அவர்களுக்கு 55 வயது என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி :** கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது வயதைப் பற்றி நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதற்காக மனுப் போட்டவர்களை ஆஸ்பத்திரிகளில் உள்ள டாக்டர்களிடம் சென்று பரிசோதனை செய்யச் சொல்லி அவர்களுடைய வயதை நிர்ணயம் செய்கிறார்கள். அதனால் வயது வந்தவர்கள் ஆஸ்பத்திரிகளில் அதிக தூரம் நடந்து போய் அதிக நேரம் தங்கியிருக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் வயது வந்தவர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் வயது வந்தவர்களிருக்கும் இடத்திற்கு டாக்டர்கள் போய், அவர்களை உடனடியாக பரிசோதனை செய்யும்படியாக உத்தரவு இடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப் பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டுத்தான் வருகிறது. மனுக்கள் வந்தால் அவைகள் அவ்வப்போது பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டு முடிவு எடுக்கப் பட்டுத்தான் வருகிறது. கனம் அங்கத்தினர் சொன்னதைப் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.

**திரு. கோ. சி. மணி :** வயதானவர்கள் மனுப்போட்டால் அவர்களை அதிகாரிகள் வந்து விசாரிக்கும் போது அவர்களுடைய தொழில் என்ன என்று கேட்கிறார்கள். மனுச் செய்தவர்கள் பிச்சைக்காரர்கள் என்று சொன்னால் பணம் கிடைக்கும் என்ற காரணத்தால் தங்களுடைய தொழில் பிச்சைக்காரத் தொழில் என்று சொல்கிறார்கள். உமக்குப் பிச்சை எடுக்கிற தொழிலாக இருப்பதால் உமக்குப் பணம் இல்லை, சலுகை இல்லை என்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். அந்த மாதிரி கேஸ்கள் என்னுடைய வட்டாரத்தில் பல இருக்கின்றன. ஆகவே இதை நல்ல முறையில் பரிசீலனை செய்து அவர்களுக்கு பரிகாரம் தேடிக் கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உறுப்பினர் தம்முடைய வட்டாரத்தில் இம்மாதிரி சொல்லாமல் நல்ல முறையில் சொல்லும்படியாகச் சொல்ல வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆர். நாராயணன் :** ஆதரவு உள்ளவர்களும், வசதி உள்ளவர்களும் இந்தப் பென்ஷனைப் பெற்று வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படியும் இருக்கலாம். தவறுதல் ஏற்படுவது சகஜம்தான். இருபது ரூபாய் பென்ஷன் கிடைக்கிறது என்று வந்திருக்கலாம். ஒன்றிரண்டு வகைகளில் அப்படி தவறுதலாக [illegible]ங்கி வரலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** வோட்டர் லிஸ்டில் வயது 55 ஆனவர்கள் தங்களுடைய குழந்தையின் வயதை பத்து குறைத்து 45 என்று கொடுத்திருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு பத்து வயதிலேயே குழந்தைகள் பிறந்து விட்டனவா என்று அறிய விரும்புகிறேன். அதைப் பற்றி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா ?



9th March 1963]

**கனம் சபாநாயகர் :** குறைத்து எழுதி இருப்பது தப்பு என்று சொல்லி விடலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சிறிய வயதாக இருக்கலாம். அப்படி எழுதி இருப்பதெல்லாம் தவறுதான். வோட்டர் ஜாப்தாவில் தவறாக எழுதியிருக்கலாம்.

**திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் :** தலைவர் அவர்களே, மன்றத்திலே கனம் அங்கத்தினர்கள் திரு மாதா கவுடர் அவர்களும். திரு கர்ச்சா கவுடர் அவர்களும் சொன்ன ஒரு நிலை பற்றி பெண் அங்கத்தினர்கள் மிகவும் கோபப்பட்டிருக்கிறார்கள்.

(ஒரு கனம் அங்கத்தினர் : அவர்கள் சொல்லட்டும்.)

**கனம் சபாநாயகர் :** கோபத்திலே பேச முடியவில்லையோ, என்னவோ !

**திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் :** அந்த நிலையில் அந்த கனம் அங்கத்தினர்கள் இருவரும் வெளியே சென்றால் ஆபத்து வரும் என்ற நிலையும் இருக்கிறது. ஆகவே, அவர்களைப் பாதுகாப்பதற்கு போலீஸ் உதவி கொடுக்கப்படுமா ?(சிரிப்பு).

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பெண் அங்கத்தினர்கள் எவ்வளவு. கோபப்பட்டாலும் பயப்பட வேண்டியதில்லை. (சிரிப்பு).

**திரு. மு. கருணாநிதி :** பலாத்காரத்தில் இறங்குவார்கள் என்ற அளவுக்குச் சொல்வது மேலும் அவமதிப்பதாக இருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** இப்படியெல்லாம் இனிமேல் அந்தக் கனம் அங்கத்தினர்கள் கேள்வி கேட்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

### *University for Madurai*

* 175 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR (on behalf of Sri V. SANKARAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the starting of a University at Madurai has been deferred; and

(b) if so, how long?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) In view of the Emergency, no immediate measures of a legislature nature will be taken for setting up the University. But it is proposed to appoint an Expert Committee under the Chairmanship of the Director of Public Instruction to go into the details relating to the establishment of the new University and to make recommendations to Government.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னாலேயே மதுரைப் பல்கலைக்கழக மசோதாவை இந்த மன்றத்திலே அறிமுகப்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டார்கள். நெருக்கடி நிலை காரணம் என்றாலும் கல்விக்காக சுமார் 28 கோடி ரூபாய் செலவழிக்கும் இந்த சர்க்கார் நம் மதுரைப் பல்கலைக் கழகம் நிறுவும் விஷயத்திலும் இன்னும் விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முதலீட்டுச் செலவு சுமார் இரண்டு கோடி ரூபாய் ஆகும் என்று உத்தேசமாக சொல்லலாம். ஆண்டு தோறும் ஐம்பது லட்சம் ரூபாய் செலவாகும். இதிலே, தனிப்பட்டவர்கள்,

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப்பற்றியும் தனி கேள்வி போடவேண்டும்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** ஒரு ரூபாய் பென்ஷன் வாங்குகிற பென்ஷனர்கள் அது தங்களுக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டு முதியோர் பென்ஷன் இருபது ரூபாய் வாங்க வேண்டும் என்று கருதினல் அதைப்பற்றி சர்க்கார் யோசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஒரு ரூபாய் பென்ஷன் கொடுப்பதை நிறுத்திவிடலாம். ஆனல் முதியோர் பென்ஷன் வாங்குவதாக இருந்தால் அதற்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் கவனித்து தான் அரசாங்கம் அவர்களுக்கு முதியோர் பென்ஷன் கொடுக்க முடிவு செய்யும்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** சாதாரண பென்ஷனர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கு ப்ராவிடென்ட் பண்ட் அதிகமாக இருக்கிற காரணத்தால் அவர்களுடைய பென்ஷன் சலுகை குறைவாக இருக்கிறது. அப்படி இல்லாமல் நல்ல அளவில் பென்ஷன் வாங்குவதற்கு சரியான முறையில் வாங்குவதற்கு இத்தனை பர்சென்ட் அடிப்படை சம்பளத்தில் பென்ஷன் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை சர்க்கார் கொண்டு வருமாஎன்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஏற்கனவே உத்யோகஸ்தர்கள் வேறு வேறு வகையில் வசதி பெற்று வருகிறார்கள், சலுகைகள் பெற்று வருகிறார்கள். அதை மாற்றி ஒரே முறையில் பென்ஷன் கொடுப்பது என்பது இயலாது.

**திரு. கூ. கோமதி சங்கர தீக்ஷிதர்:** கனம் தலைவர் அவர்களே, ரிட்டயரான ஹையர் க்ரேட், செக்ண்டரி க்ரேட் டீச்சர்களுக்கு கிடைக்கும் பென்ஷன் தொகை 2½, 7, 17 ரூபாய் என்று இருப்பதால் அவர்களுக்குள்ள கஷ்டமான நிலையை கவனித்து "ஓல்ட் ஏஜ் பென்ஷன்" ரூபாய் இருபது ஆவது போட்டுக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** "ஓல்ட் ஏஜ் பென்ஷன்" கொடுக்க சில விதிகள் இருக்கின்றன. அதை அனுசரித்துத்தான் கொடுக்கப்படுகிறது. அதற்கு ஏற்பட்ட விதிகளின்படி என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அதன்படி எடுத்துக்கொண்டு தான் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைப்பற்றி பரிசிலனை செய்துதான் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த முறையில் குறைந்த பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு, கொடுப்பதாக இருந்தால் ஓல்ட் ஏஜ் பென்ஷன் கொடுக்கக்கூடிய விதிகளை அனுசரித்துத்தான் கொடுக்க முடியும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** ஸார், ஓய்வு பெறும் ஆசிரியர்களுடைய குடும்பங்களுக்கு வைத்திய வசதி, கல்வி வசதி முதலிய வசதிகளை மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுப்பது போன்று கொடுக்க அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

**திரு. கே. பி. பழனிசாமி:** இருபது ரூபாய்க்கு குறைவாக பென்ஷன் வாங்கும் ஆசிரியர்களுக்கு ஓல்ட் ஏஜ் பென்ஷன போன்று இருபது ரூபாயு கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் முன்பே கூறியது போல் ஓல்ட் ஏஜ் பென்ஷன் கொடுக்க சில விதிகள் இருக்கின்றன. அதை அனுசரித்துத்தான் கொடுக்க முடியும். குறைவான பென்ஷன் வாங்கக்கூடியவர்களுக்கு இருபது ரூபாய் பென்ஷன் வேண்டும் என்றால் அவர்கள் ஓல்ட் ஏஜ் பென்ஷன் வாங்குவதற்கு எந்தெந்த விதிகளை அனுசரிக்க வேண்டுமோ அவைகளை அனுசரித்து இருந்தால் அதன்படி இருபது ரூபாய் பென்ஷன் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். அந்த விதிகளை அனுசரிக்காவிட்டால் அந்த முறையில் கொடுக்கப்பட மாட்டாது.



### *Old age pension*

*174 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government propose to extend the old age pension facilities to disabled destitutes without age consideration?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:** இந்தச் சலுகை அவர்களுக்கு கொடுக்காவிட்டால் நாட்டில் பிச்சைக்காரர்கள் அதிகமாகும் என்பதை அரசாங்கம் அறியுமா ? அப்படி இருந்தால் பிச்சைக்காரர்களுக்கு என்ன சலுகை கொடுக்கப்படும் என்பதை அரசாங்கம் அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பிச்சைக்காரர்களை எப்படி நடத்துவது என்பதைப் பற்றி அவ்வப்போது சட்டம் இயற்றப்பட்டு வருகிறது. இப்பொழுது வயது வந்தவர்களுக்குத்தான் பென்ஷன் கொடுப்பது என்பது திட்டம். உத்தரப் பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்களில் 57 வயதிலிருந்து அவர்கள் டெஸ்டிட்யூட்டாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், டிஸேபிள்டாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கொடுப்பது என்று இருக்கிறது. அப்படி எழுபது வயது வரையில் கொடுத்து வருகிறார்கள். ஆனல் இந்த மாநிலத்தில் 65 வயதிலிருந்தே கொடுத்து வருகிறோம். இந்த மாநிலம் தான் மற்ற மாநிலங்களை விட அதிகப்படியான சலுகைகாட்டி வருகிறது.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** குருடர், நொண்டி போன்ற அங்கஹீனம் உடையவர்களுக்கு பென்ஷன் கொடுக்க அவர்களுடைய வயதைக் குறைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு எம். பக்தவத்சலம்:** வயதைக் குறைக்க இப்பொழுது உத்தேசம் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** இந்த வயது நிர்ணயிப்பதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஏழை எளியவர்கள் தங்களுடைய வயதை சரியாக எழுதிக் கொடுக்காத காரணத்தால் பெரும்பாலும் அறுபது வயதுடையவர்கள் 55 என்றும் 55 வயதுடையவர்கள் 40 என்றும் எழுதப்பட்டுள்ளது. அதைப் போலவே வோட்டர் லிஸ்டில் அச்சுப் பிழையின் காரணமாகவும் அவர்களுடைய வயதை நிர்ணயம் செய்வது கஷ்டமாக இருப்பதால் அவர்களுக்கு இந்தப் பென்ஷன் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அவர்களுடைய வயதை சரியானபடி நிர்ணயம் செய்ய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** வயது விஷயமாக அதை நிர்ணயம் செய்வது என்பது கஷ்டமானதுதான். குறைத்து வயதைக் கொடுத்திருப்பவர்கள் போன்று வயதை அதிகமாகவும் கொடுத்து அதாவது குறைவான வயதுடையவர்கள் அதிகப்படியான வயதைக் கொடுத்துக்கூட பென்ஷன் வாங்கி வருகிறார்கள். இந்தச் சலுகையைப் பெற்று வருகிறார்கள். ஆகவே இதைக் கண்டு பிடிப்பது என்பது மிகவும் கஷ்டமானதுதான். ஆகவே இதைப் பற்றியெல்லாம் அவ்வப்போது பரிசிலனை செய்யப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுதான் வருகிறது.

[9th March 1963

தரும் சிந்தனை உள்ளவர்கள் முன் வந்து ஓரளவு உதவியளித்தால், சீக்கிரத்திலேயே இந்தப் பல்கலைக்கழகத்தை அமைக்க ஏற்பாடு செய்யலாம். யூனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் அளிக்கும் மான்யம் கூட பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட பிறகுதான் கிடைக்கும். இந்தப் பல்கலைக்கழகம் சீக்கிரம் நிறுவப்பட வேண்டும் என்பதிலே எனக்கும் விருப்பம்தான். ஆனால், இதிலே அக்கறை உள்ளவர்கள், உதவியளிக்கக் கூடியவர்கள் தாராளமாக உதவி அளித்தால் சீக்கிரத்திலேயே இதை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** அவசர கால நிலையை முன்னிட்டு எந்த எந்த வேலைகள் இம்மாதிரி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன எந்த எந்த அடிப்படையில் அவை நிறுத்தி வைக்கப்படுகின்றன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கல்வித் துறையைப் பொறுத்த மட்டில், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் விஸ்தரிப்பு இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மற்றப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில், கட்டிடங்கள் கட்டுவது ஓரளவு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு கோ. சி. மணி :** ஆரம்பப் பள்ளிக்குக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்று தீர்மானம் போட்டாலும், அவை நிறுத்தி வைக்கப்பட வேண்டுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சிறிய கட்டடங்களாக இருந்தால் நிறுத்தி வைக்கப்படமாட்டாது.

**திரு. கோ. சி. மணி :** எத்தனை ரூபாய் எஸ்டிமேட்டில் இருந்தால் அது நிறுத்தி வைக்கப்படும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எவ்வளவு எஸ்டிமேட் என்ற வரம்பு ஒன்றும் இல்லை. கட்டடங்களினுடைய அவசியம், கட்டடங்களின் மதிப்பீடு இவைகளைப் பொறுத்ததாக இருக்கும்.

**திரு கரு. சீமைச்சாமி :** பஞ்சாயத்து யூனியனுக்கு இன்னும் கட்டடமே இல்லாமலிருக்கிறது. கட்டடம் இல்லாத பஞ்சாயத்து யூனியன்களும் பாதிக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கட்டடம் கட்டுவதற்கு—பள்ளிக் கூடம் கட்டுவதற்கு—பஞ்சாயத்து யூனியன் தலைவர், கனம் அங்கத்தினர் போன்றவர்கள் உள்ளூரில் பணம் சேகரித்துத்தர முன் வந்தால் அப்பொழுது மேலும் அரசாங்கம் உதவியளிப்பதுபற்றிக் கவனிக்கும்.

**திரு. எஸ். முருகையன். :** பல உயர்நிலைப் பள்ளிக் கட்டட வேலை நடந்து கொண்டிருக்கிறது. அதை நிறுத்திவிடும்படியாக சர்க்காரிலிருந்து உத்தரவு வந்திருக்கிறது. அந்தக் கட்டடங்களைத் தொடர்ந்து கட்டிமுடிக்க அரசாங்கம் உத்திரவு பிறப்பிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கட்டடம் பாதி வேலையில் இருந்தால் அதைத் தொடர்ந்து கட்டுவது பற்றி ஆலோசிக்கலாம்.

**திரு. ம. கமலநாதன் :** பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் ஸாங்ஷன் செய்யப்பட்டிருந்த வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருந்தால், துவக்க வேண்டாமென்று அரசினர் ஏதாவது ஆணையிட்டிருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வேலை துவக்கப்படாமல் இருந்தால், அதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்றுதான் உததரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** மதுரையில் நிறுவ உத்தேசித்திருக்கும் சர்வகலாசாலைக்குத் தனிப்பட்ட பிரமுகர்களிடமிருந்து கணிசமான உதவி கிடைப்பதாக ஏதேனும் அரசாங்கத்திற்குத் தகவல் இருக்கிறதா ?



9th March 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி குறிப்பான தகவல் ஒன்றும் அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தைப் பற்றி.. . . . .

MR. SPEAKER : The original question relates to the University but the hon. Member goes on referring to Panchayat Unions.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கல்வி சம்பந்தமான கேள்வியாக இருந்ததால், "பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடம்" என்று கனம் அங்கத்தினர் சொல்லும் பொழுதே, பஞ்சாயத்து யூனியன் பள்ளிக் கூடம் என்று நான் எடுத்துக்கொண்டு பதிலளித்தேன்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** மதுரையில் பல்கலைக் கழகம் நிறுவுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டாலும்கூட, இடம் தேர்ந்தெடுப்பது போன்ற ஆரம்ப வேலைகளாவது நடந்து கொண்டிருக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டதாக நான் சொல்லவில்லை. "புதிய பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவது சம்பந்தமான விவரங்களை ஆராய்ந்து அரசாங்கத்திற்குச் சிபார்சுகள் செய்வதற்கு மாநிலக் கல்வித் துறை இயக்குநர் தலைமையில் நிபுணர் குழு ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளோம்" என்று நான் குறிப்பிட்டேன்.

**திரு. ஆ. தங்கவேலு :** மதுரையில் கட்டப்பட இருக்கும் பல்கலைக் கழகம் தேவஸ்தான நிதியிலிருந்து எடுத்து கட்டப்படுமா அது பற்றிய யோசனை இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தேவஸ்தானத்திலிருந்து நிதி ஒதுக்குவதாக இருந்தால், ஏதோ ஓரளவு அவர்கள், குறிப்பிட்ட வகைக்கு உதவியளிக்கலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** காஞ்சிபுரத்தில் பல்கலைக் கழகக் கட்டடமும் ஹாஸ்டலும் கட்ட வேண்டுமென்று ஒரு திட்டமிருந்தது. அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது. அதைக் கட்ட அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** காஞ்சீபுரத்தில் பல்லவர் காலத்தில் பல்கலைக்கழகம் இருந்தது. இப்பொழுது பல்கலைக் கழகம் மீண்டும் அமைப்பதாக உத்தேசம் இல்லை. ஆஸ்பத்திரி இருக்கிறது. அது விரிவுப்படுத்தப்படும்.

*Block formation*

* 176 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal for the formation of one Block for each Assembly Constituency; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** வட்டாரங்களில் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களில் பல பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து அதிகாரிகளைக் குறைக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

[9th March 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பற்றிய மான்யம் விவாதத்திற்கு வரும்போது, கனம் அங்கத்தினர் குறிப்பாக எந்த எந்த உத்தியோகஸ்தர்களை எடுத்துவிடலாம் என்று யோசனை சொன்னால் அரசாங்கம் பரிசீலனை செய்து அவசியமா என்பதைப் பற்றி கவனிக்கலாம்.

திரு. ஆ. தங்கவேலு : மின்சாரம் சீக்கிரமாகக் கிடைக்கும் என்ற காரணத்தால் பஞ்சாயத்து யூனியன்களில் கடன் வாங்கி, ஓராண்டுக்கு முன்னதாகவே பம்பு ஸெட் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் மின்சாரம் கிடைக்கவில்லை. என்றாலும், பஞ்சாயத்து யூனியனில் உள்ளவர்கள் பணத்தைக் கட்டும்படி நோட்டீஸ் அனுப்புகின்றார்கள். மின்சாரம் கொடுத்த பிறகு பணத்தை வசூலிக்கும்படியாக அரசாங்கம் உத்திர விடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மின்சாரத்தைப் பற்றிய மான்யம் விவாதத்திற்கு வரும்பொழுது அதைப்பற்றி பேசலாம்.

## *Pump sets*

*177 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to extend the time for the repayment of the agricultural loans advanced for the installation of pump sets?

The Hon. Sri V. RAMIAH : No, Sir.

திரு. எஸ். முருகையன் : இப்பொழுதிருக்கும் தவணை முறையில் கூட, சொந்த நிலம் இல்லாமல் குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகளுக்கும் இதுபோன்ற வசதிகள் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில், "தவணையை நீட்டிக் கொடுப்பது இல்லை" என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் குறிப்பிடுவதற்குக் கூட்டுறவுக் கடன் விநியோக அமைப்பிலே இடம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்பொழுது பம்ப் ஸெட் கடனைக் கொடுப்பதில் ஏகப்பட்ட கஷ்டங்கள் விவசாயிகளுக்கு இருக்கின்றன. அவைகளை நிவர்த்தித்து, சுலபமான முறையில் அவர்களுக்குக் கொடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

(பதில் இல்லை.)

திரு. ஆ. தங்கவேலு : மின்சார பம்ப் ஸெட்டுகளுக்காகக் கடன் வாங்கிய தொகையை, மின்சாரம் கொடுப்பதற்கு முன்னாடியே வசூல் செய்ய நோட்டீஸ் அனுப்புகிற காரணத்தால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அதனால், மின்சாரம் கொடுத்த பிறகு வசூல் பண்ணுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் கூறக்கூடிய ஆலோசனையைத் தனியாக எழுதியனுப்பினால், அதை நான் கவனிக்கிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : மழையை நம்பியிருக்கிறவர்கள் பல மாவட்டங்களில் இருப்பதால், மழை பெய்யாத காரணத்தால் கஷ்டத்திற்கு உள்ளாகக் கூடிய அத்தகைய பிரதேசங்களுக்குச் சலுகை விஸ்தரிக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : பாதிக்கப்பட்ட மக்களுக்கு அப்போதைக்கப்போது கடன் வசூலை ஒத்திவைத்துத்தான் வருகிறோம்.



9th March 1963]

திரு. ம. கமலநாதன் : பம்பு செட்டு லோனில் டிரில்லிங்—ல் வாங்கினால் நிலத்தை அடமானமாக ரிஜிஸ்தர் பண்ணிக் கொடுக்க வேண்டும் என்பதால் 200, 300 என்று செலவாகிறது. பஞ்சாயத்து யூனியன் மூலமும், கோவாப்ரேடிவ் மூலமும் கொடுக்கப்படுகிறபோது செலவு இல்லை. இதுபோலவே டிரில்லிங் மூலம் வழங்குவதற்கும் இன்கம்பரன்ஸ் சர்டிபிகேட் கொடுத்தால் போதும், லோன் வழங்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இந்த ஆலோசனையையும் எழுதி அனுப்பினால் கவனிக்கப்படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கிணறு வெட்ட 250 ரூபாய் மானியம் தருகிறார்கள். இந்தக் கிணற்றில் பொறுத்தி இரைக்கும் பம்பு செட்டுக்கும் மானியம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அப்படி ஒன்றும் ஆலோசனையில் இல்லை.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Sir, will the Government consider the desirability of waiving the penal charges that they being levied in certain cases whenever the postponements of recovery of loans are made,

The Hon. Sri V. RAMAIAH : Postponements are made by the Government in the recovery of loans. But I do not think that any penal charges are levied in such cases.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய சாகுபடியாளர்களுக்கும் இந்த பம்பு செட்டு லோன் கொடுக்கும் உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : அதற்கு வேண்டிய எல்லா அருகதையும் இருந்தால் கடன் கொடுக்கப்படும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64.

### DEMAND No. VI—STATE LEGISLATURE, DEMAND No. VII—ELECTIONS, DEMAND No. VIII—HEAD OF STATE, MINISTERS AND HEAD-QUARTERS STAFF AND DEMAND NO. XXXII—PENSIONS.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 13,04,600 under Demand No. VI—State Legislature'.

Sri K. MOOKIAH THEVAR : Sir, I move—

'That the allotment of Rs. 13,04,600 under Demand No. VI—State Legislature be reduced by Rs. 100.'

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

*'That the Government be granted a sum not exceeding Rs. 13,72,900 under Demand No. VII—Elections.'

[9th March 1963

SRI K. A. MATHIALAGAN : Sir, I move—

'That the allotment of Rs. 13,72,900 under Demand No. VII—Elections—be reduced by Rs. 100.'

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,82,32,200 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff.'

SRI V. R. NEDUNCHEZHIYAN : Sir, I move—

'That the allotment of Rs. 1,82,32,200 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff—be reduced by Rs. 100.'

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 3,34,65,100 under Demand No. XXXII—Pensions.'

SRI SA. GANESAN : Sir, I move—

'That the allotment of Rs. 3,34,65,100—under Demand No. XXXII—Pensions—be reduced by Rs. 100.'

MR. SPEAKER : The demands and the cut motions are before the House for discussion.

***திரு. எம். எஸ். மணி :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நிதி அமைச்சர் அவர்கள் சபை முன்பு பிரேரேபித்திருக்கிற நான்கு மானியங்களின் மீதும் பேசுகின்ற வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டமன்றத்தைப் பற்றி நான் பேசுகிறபோது பெரும் புகழ் வாய்ந்தவர்கள் எல்லாம் இந்தச் சட்ட மன்றத்தில் இருந்திருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன். அதுமட்டும் அல்ல. இந்தச் சட்ட மன்றத்தை இதற்கு முன்னே பல பெரியவர்கள் எந்த முறையில் நடத்திச் சென்றிருக்கிறார்களோ அந்த வழியைப் பின்பற்றி நாமும் நடந்துகொண்டு வருகிறோம் என்பதை எண்ணி பெருமைப்படுகிறோம். குறிப்பாக இந்தச் சட்ட மன்றத்தை திறம்பட நடத்திப் பெரும்புகழ் பெற்றவர்கள் இதற்கு முன்பு திரு. சிவஷண்முகம் பிள்ளை, திரு. கிருஷ்ணராவ் ஆகியவர்கள் ஆவார்கள். அன்றைய தினம் அவர்கள் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்து, எதிர்க்கட்சிகளின் அந்தஸ்தை உயர்த்தியிருக்கிறார்கள். அதுபோல் இன்றையதினம் நமக்கு சட்ட மன்றத் தலைவராக வாய்த்திருக்கிறவரும் நல்ல வழக்கறிஞராக இருக்கிறார்கள். இவர்களை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்வது எல்லாம் எதிர்க்கட்சியினருக்கு இன்னும் அதிகமான சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும், எதிர்க்கட்சியில் அந்தஸ்தை உயர்த்த வேண்டும் என்பதுதான். ஆளும் கட்சியில் உள்ளவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் இன்றையதினம் கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துச் செயலாற்றுகிறார்கள். எனவே இந்த மன்றத்தில் கனம் தலைவர் அவர்கள் எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் கேட்கலாம். என்ன கேட்டாலும் கொடுக்கிறோம். (சிரிப்பு)



9th March 1963]

**திரு. எம். எஸ். மணி :** நன்றி. மேலும் கடந்த சட்ட மன்றக் கூட்டத்திலேயே நம்முடைய சுதந்திராக் கட்சியின் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் ஒரு யோசனையை இந்த மன்றத்தின் முன் வைத்தார்கள். குறிப்பாக சட்டசபையில் நடத்தப்படுகிற நடவடிக்கைகளை வார்த்தைக்கு வார்த்தை சரியாக எடுக்கிறபோது சில தவறுகளும் ஏற்பட்டு விடுகிறது. எனவே இனி குறிப்பு எடுப்பதற்கு பதிலாக டேப் ரெக்கார்டு அமைத்து நாம் சொல்கிற கருத்தை அப்படியே ரெக்கார்டு செய்து வைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது தாம் அதுபற்றி கவனித்து ஆவன செய்கிறோம் என்று உறுதி கொடுத்தார்கள். அதை மீண்டும் இந்த மன்றத்தில் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. சட்டமன்றத்தில் நடைபெறுகின்ற எல்லா நிகழ்ச்சிகளும், குறிப்பாக தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் பெரும்பகுதி தமிழிலேயே நடைபெறவேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த மன்றத்தில் நாம் நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்கிறபோது ஒரு சில சம்பவங்கள் நடைபெறுகின்றன. நாம் ஏதோ ஒரு சில கருத்தை எடுத்துச் சொல்கிறபோது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் உட்கார்ந்தபடியே ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர் நாம் சொல்கிற கருத்தைப் பாராட்டுகிறாரா அல்லது அதில் குறை காண்கிறாரா என்று கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியவில்லை. இந்த மன்றத்தில் அவர் ஏதாவது சொல்ல வேண்டுமானால் அந்த நேரத்திலேயே எழுந்திருந்து ஏதாவது சொல்லலாம். அல்லது மன்றம் முடிந்த பிறகு எங்களிடம் நேரில் சொல்வதாக இருந்தாலும் பரவாயில்லை. அப்போது எங்களிடம் ஏதாவது குறையிருந்தாலும் திருத்திக்கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். எனவே இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து நமது கவர்னர் அவர்கள் மேல் சபைக்கு 9 பேர்களை நியமனம் செய்கிறார்கள். அந்த ஒன்பது பேர்களில் பெரும் பகுதியினர் காங்கிரஸ் கட்சியினராகவே இருக்கிறார்கள். இனியாவது புதிதாக நியமிக்கிறபோது கவர்னர் அவர்கள் தொழிலாளர்களுக்கு என்று ஒருவரை மேல்சபை உறுப்பினராக நியமனம் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, மேல் சபைக்கு கவர்னர் நியமனம் செய்யும் விஷயத்தைப்பற்றி இந்தச் சபையில் நாம் விவாதிக்கலாமா என்பதைப்பற்றித் தாங்கள்தான் அபிப்பிராயம் கூற வேண்டும்.

**திரு. எம். எஸ். மணி :** சட்ட சபை பற்றிய மானியமாதலின் நான் அதைபபற்றி இங்கே குறிப்பிட்டேன்.

அதுமட்டுமல்ல. இந்தச் சட்ட மன்றத்தில் ஏராளமான ப்யூன்கள் இருக்கிறார்கள். குறிப்பாக சட்ட மன்றம் நடக்கிற காலத்தில் அவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். இப்படி கடந்த எழெட்டு ஆண்டுகளாக தினக்கூலி பெற்று அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். இன்னும் ரெகுலர் வேலை அவர்களுக்கு இல்லை. இதற்கு நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். கடந்த எழெட்டு ஆண்டுகளாக தினக்கூலி பெற்று இங்கே பியூனாகப் பணியாற்றி வருகிறவர்களுக்கு வேறு இலாகாவில் ரெகுலர் ப்யூன் வேலை காலியாகிறபோது இவர்களை அங்கே நியமனம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** இவர்களை வேறு இலாகாவில் நியமித்துவிட்டால் பின்னர் சட்டசபை நடக்கிறபோது வேறு நபர்களைத்தானே இங்கே நியமிக்க வேண்டும். அப்போது இவர்கள் தினக்கூலி பெற்று டெம்பரரியாகத்தான் இருப்பார்கள். இல்லையா ?

[9th March 1963

**திரு. எம். எஸ். மணி :** பல ஆண்டுகள் தொடர்ந்து தினக்கூலி பெற்று வேலை செய்து வருகிறவர்களை—குறிப்பாக லேபர் கமிஷனர் ஆபீஸ் போன்ற இடங்களில் நியமித்தால், அதுபோல் பின்னால் வருகிறவர்களையும் நியமிக்கலாம். சீனியராக இருக்கக்கூடியவர்களுக்கு ரெகுலர் சான்ஸ் கொடுக்கவேண்டும் என்பதற்காக இங்கே நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே சட்ட மன்ற அங்கத்தினர்கள் தங்குவதற்குப் போதிய அறைகள் இல்லை. சட்ட மன்ற விடுதிகளில்கூட 100 பேர் தங்கக்கூடிய அளவுக்குத்தான் அறைகள் இருக்கின்றன. அதையும் இன்னும் கொஞ்சம் விரிவு படுத்தவேண்டும். சட்ட மன்ற விடுதியிலே ‘ ரிக்ரியேஷன் கிளப் ’ போன்று அமைத்து, அங்கத்தினர்கள் படிப்பதற்காகப் பத்திரிகைகளை வரவழைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்தலைப்பொறுத்து சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தேர்தல் மானியத்திற்காக 13,72,900 ரூபாயை நிதியமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். சென்ற ஆண்டைப் பொறுத்தவரையிலும் இந்த இனத்தில் சட்டமன்றம், மேல் சபையைப் பொறுத்தவரை ரூ. 11 200 செலவு செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு இடைத்தேர்தல் செலவை ரூ. 17,000–ஆகக் கூட்டியிருக்கிறார்கள். கூடுமானவரை அந்தச் செலவைக் குறைக்க முயற்சிக்க வேண்டும்.

இடைத் தேர்தல்கள் நடைபெறும் காலத்தில் நம்முடைய அமைச்சர்கள் அரசாங்க செலவில் செல்லாமல், தங்கள் சொந்தச் செலவிலோ அல்லது கட்சியின் செலவிலோ சென்றால், நல்ல முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இடைத்தேர்தல் காலத்தில் அமைச்சர்கள் அரசாங்கச் செலவில் சென்றால், அதிகாரிகள் உடன் வருகிறார்கள். அந்த அதிகாரிகளுக்குப் பயந்து வாக்கு அளிக்கும் நிர்ப்பந்தங்கள் எல்லாம் பொதுமக்களுக்கு ஏற்படுகின்றன. அமைச்சர்கள் சொந்தச் செலவில் வருவதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் கவர்ன்மெண்ட் ஹவுஸ் எஸ்டேட்டுக்காக இந்த ஆண்டில் கோரியிருக்கிற தொகை 1,00,220 ரூபாய். இந்த கவர்ன்மெண்ட் ஹவுஸ் எஸ்டேட் யாருடைய கையில் இருககிறது என்று தெரியவில்லை. மராமத்து இலாகா கண்ட்ரோலில் இருந்தால் இந்தச் செலவினங்கள் மராமத்து இலாகா மானியத்தோடு சேர்ந்திருக்கும். இவ்வளவு செலவு செய்தும் அங்குள்ள ஒரு பெரிய குளத்தைப் பார்த்தால் ஏராளமான கொசுக்கள் இருக்கின்றன. இரண்டு தினங்களுக்கு முன்பு கொசு மருந்து அடித்தார்கள். இப்போது அதிகமாகக் கொசுக்கள் உண்டாகியிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். (கனம் திரு. கு. காமராஜ்: மருந்து அடித்ததற்குப் பிறகு கொசு அதிகமாகிவிட்டதா ?) மருந்து அடிப்பதற்கு முன்னால் கொசு சத்தம் இல்லாமல் பறந்தது. இப்போது ரீங்காரம் செய்துகொண்டு பறக்கிறது.

மெட்ரிக் முறையை மத்திய அரசாங்கம் புகுத்தியிருக்கிறது. இதற்காக 1962–63 ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் 10,200 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். 1963–64-க்கு 10,800 ரூபாய் கோரியிருக்கிறார்கள். இந்த முறை மத்திய சர்க்காரால் கொண்டுவரப்பட்டது. இதிலே நாம் இவ்வளவு பெரிய செலவை செய்யவேண்டுமா? அப்படி செலவு செய்ய வேண்டும் என்று சொன்னாலும், இந்தச் செலவை மத்திய சர்க்காரிலிருந்து பெற மாகாண சர்க்கார் முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பென்ஷன் செலவுகளுக்காக நிதியமைச்சர் அவர்கள் ரூ. 3,34,65,100 கோரியிருக்கிறார்கள். இது உள்ளபடியே வரவேற்கத் தக்கது தான். பென்ஷன் தொகையானது வெள்ளைக்காரன் காலத்தில் எந்த அளவுக்கு கொடுக்கப்பட்டு வந்ததோ அதே அளவுக்குத்தான் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தத் தொகை இன்னும் அதிகப்படுத்தப்படவில்லை. முன்பு பென்ஷன் தொகையாகப் போலீஸ்காரர்கள் எந்தத் தொகையை வாங்கிக்கொண்டிருந்தார்களோ, அதே தொகையைத்தான்



9th March 1963] [திரு. எம். எஸ். மணி]

இன்றும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகையை இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், பென்ஷனை வாங்குவதற்காக தாங்கள் இருக்கும் இடங்களில் இருந்து தாலுகா ஆபீசுக்கு இரண்டு மூன்று ரூபாய் செலவு செய்து கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்கு மிச்சம் ஏதும் அதிகமாக இருப்பதில்லை. ஆகவே, அந்தப் பணத்தை மணியார்டர் மூலமாக அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வயதானவர்களுக்குப் பென்ஷன் திட்டம் வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின்மூலம் பெரும்பான்மையானவர்களுக்குப் பணம் கிடைக்கவில்லை. அவர்கள் தங்களுக்குப் பென்ஷன் தொகை அளிக்க வேண்டுமென்று மனு எழுதிப் போடுகிறார்கள். அவர்களுக்கு என்று ஒரு இடம் இல்லாத காரணத்தால், ஒரு விலாசத்தைக் கொடுத்து மனு எழுதிப் போடுகிறார்கள். அவர்களைப்பற்றி விசாரிக்க வருகிற ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வருகிற வேளையில் அந்த இடத்தில் அந்த முதியவர் இல்லையென்றால், “ ஆள் இல்லை ” என்று எழுதிக் கொண்டு போய்விடுகிறார்கள். அப்படி விசாரிக்க வருகிறவர்கள் பொறுப்புடன் வந்து விசாரிக்க உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் தாசில்தார் அலுவலகத்தில் கேட்கப்படுகிற கேள்விகளுக்கு அவர்களால் பதில் சொல்ல முடிவதில்லை. அவர்களை விசாரிக்க வருகிற ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கேட்கிற முதல் கேள்வி “ வயது என்ன ” என்பது. வயது 60, 70 என்று சொல்கிறார்கள் என்றால், அதற்கு சர்டிபிகேட் இருக்கிறதா ? என்று கேட்கிறார்கள். அவர்களால் அதற்கான சர்டிபிகேட்டைக் காட்ட முடிவதில்லை. “ இதுவரை எப்படிச் சாப்பிட்டு வந்தீர்கள் ? ” என்ற கேள்விக்கு அவர்கள் பொதுவாக “ பிச்சை எடுத்துத்தான் சாப்பிட்டு வருகிறேன் ” என்று பதில் சொல்கிறார்கள். பிச்சை எடுத்துச் சாப்பிட்டால் இந்தச் சட்டத்தின்கீழ் பென்ஷன் கிடையாது என்று சொல்லிவிடுகிறார்கள். வயதான கிழவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 50 வயதான மனைவி இருக்கிறாள். ஒருவர் குறிப்பிட்டது போல் 50 வயதானவர்கள் வேலை செய்யாமல் . . .

**கனம் சபாநாயகர் :** அந்த விஷயத்தைப்பற்றி பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** திருத்திக்கொள்கிறேன். வயதானவர்கள் வேலை செய்ய முடியாமல் பல பகுதிகளில் இருக்கிறார்கள். ஐம்பது வயதானவர்களுக்கும், கால் கை முடமானவர்களுக்கும், கண் குருடாக இருக்கிறவர்களுக்கும் இந்தப் பென்ஷன் திட்டத்தின்மூலம் பலன் கிடைக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக இன்னும் இரண்டு, மூன்று லட்சங்கள் செலவானாலும் பரவாயில்லை. இந்த நாட்டில் வேலையில்லாததன் காரணமாகப் பசியாலும், பட்டினியாலும் வாடி 50 வயதை எட்டும்போதே முதுகிழவர்களாகக் காட்சியளிக்கக்கூடிய நிலைமை இருப்பதால் அவர்களுக்கெல்லாம்கூட இந்தப் பென்ஷன் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் இந்த மானியக் கோரிக்கையை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். சபாநாயகர் அவர்கள் பாரபட்சமாக இல்லாமல் எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சலுகையளிக்க வேண்டுமென்று முன்னால் பேசிய நண்பர் அவர்கள் சொன்னார்கள். சபாநாயகர் அவர்கள் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களுக்குப் பேச ஐந்து நிமிஷம் கொடுத்தாலும், எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் என்று கொடுக்கிறார்கள். சபாநாயகர் அவர்கள் மீது குறையாக நான் சொல்லவில்லை. நடுநிலைமையோடு நடந்துகொள்கிறார்கள் என்ற முறையிலேயே கூறுகிறேன். அதற்காகச் சபாநாயகர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

[திரு. ம. கமலநாதன்] [9th March 1963

காற்று வருகிறது. எப்படி வருகிறது என்றால் லைட்கள் எரிகின்றன, ஃபான் சுற்றுகின்றன, ஆகவே நாம் விடும் காற்று வெளியே போக முடியாதபடி சூடாக இருக்கிறது. இந்தக் கட்டிடத்திற்குள்ளே வெளியில் இருந்தும் காற்று வந்து புக முடியாது. ஆகவே ஏர் (air) கண்டிஷன் செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. "எக்ஸாஸ்ட் பான்ஸ்" ஆவது வைத்து உள்ளே உள்ள காற்று வெளியே போய் ப்ரஷ் ஏர் (Fresh air) உள்ளே வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். சட்டசபை இலாகாவைச் சேர்ந்தவர்கள் எல்லாம் எங்களைவிட அதிகமாக உழைக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒரு "எக்ஸ்ட்ரா ட்யூட்டி அலவன்ஸ்" கொடுத்தால் அவர்களும் மகிழ்ச்சியடைவார்கள் என்றும் சொல்லிக்கொள்கிறேன். சென்ற ஆண்டில் சொன்னதின் பேரில் எப்படி தமிழில் பதில்கள் அளிக்கப்படுகிறதோ அதேபோல் இப்போது நாங்கள் சொல்வதில் 50 சதவிகிதத்தையாவது ஏற்றுக்கொண்டு செய்வார்கள் என்று எதிர்பார்த்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. ராஜாராம் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து இருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் என் கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். ஜனநாயக அமைப்பை சிறப்பாக எடுத்துக் காட்டுவதும், ஜனநாயகத்தை செயல்படுத்துவதில் சிறப்பாக விளங்கும் இந்த மன்றத்தைக் குறித்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து பேசுவதில் நான் மகிழ்வெய்துகிறேன். பிரிட்டிஷ் பார்லிமெண்டரி ஸிஸ்டத்தை ஏற்றுக்கொண்டு செயல்பட்டு வருகிற நாடுகளில் சிறப்பாக செயல்படுத்தி வருகிற நாடு இந்தியா தான். அதில் இந்திய நாட்டில் முதல் இடத்தைப்பெறுவது சென்னை மாநிலம்தான் என்று பார்லிமெண்டரி முறைகளில் ஞானம் மிக்கவர்கள், அனுபவம் மிக்கவர்கள் கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கிறேன், படித்திருக்கிறேன். அந்த நல்ல பெயருக்கு மேலும் பொலிவூட்டும் வகையில் இம்மன்றத்தை நடத்திச் செல்கிற தலைவர் அவர்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே இந்தப்புறத்திலிருந்து பேசியவர்கள் தாங்கள் எதிர்க் கட்சியினருக்கு அதிகச் சலுகை தருவதாகக் குறிப்பிட்டார்கள். அதே நேரத்திலே அங்கேயிருந்து பேசியவர்கள் எங்களுக்கு அதிகச் சலுகை தருவதாகக் குறிப்பிட்டார்கள். அப்படிப் பார்க்கின்றபோது தாங்கள் இரண்டு பேருக்குமே அதிகச் சலுகை தருகிறீர்கள் என்று ஆகின்றது. அந்த வகையிலே தாங்கள் நடு நிலைமை தாங்கி நடந்துகொள்கிறீர்கள். ஆகையால் தங்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் உங்களுக்கு உதவியாக இருந்து சபை நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் துணைத் தலைவரையும் நான் பாராட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

அடுத்து, இந்தச் சட்ட மன்றத்தோடு இணைந்திருக்கிற செயலகம் திறம்பட நடக்கக் காரணமாக இருக்கிற செயலாளர் அவர்களையும், துணைச் செயளாலர் அவர்களையும் இன்றைய தினம் பாராட்ட வேண்டியவனாக இருக்கிறேன். அதேபோல பல பிரிவுகளும், குறிப்பாக சபார்டினேட் லெஜிஸ்லேஷன், நோட்டீஸ் அண்ட் என்க்வயரி, ரிஸர்ச் அண்ட் ரெஃபரன்ஸ் செக்ஷன் முதலியன புதிய உறுப்பினர்களாகிய எங்களுக்கு நல்ல வழி காட்டியாக இருந்து, எங்களுடைய தேவைகளை உடனுக்குடன் கவனித்துக் கொள்வதையே தங்கள் பணிவாகக் கொண்டு வேலை செய்து வருகின்றன.

ரிப்போர்ட்டிங் செக்ஷன் பற்றி சென்ற முறை குறிப்பிட்ட போது, இங்கே பேசுகிற கருத்து ஒன்று, ரிப்போர்ட் ஆகி வருகிற கருத்து வேறு ஒன்றாக இருக்கிறது என்று குறிப்பிட்டேன். இந்த முறை அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள். முன்னேறியிருக்கிறார்கள் என்றால், வெகுவாக முன்னேறியிருக்கிறார்கள். மேலும், எங்களுக்குப் பேசக் கிடைக்கிற நேரம் குறைவு. அதேநேரத்தில் பேச நினைத்துக்கொண்டிருக்கிற விஷயங்கள் நிறைய இருக்கின்றன. அந்தக் காரணத்தினாலே, கொடுக்கப்பட்ட நேரத்திற்குள்ளாகவே சொல்லவேண்டிய விஷயங்களையெல்லாம் சொல்லிவிட வேண்டு



9th March 1963] [திரு. கோ. ராஜாராம்]

மென்ற எண்ணத்தில் வேகமாக, வேகம் என்றால் அசுர வேகத்தில் பேசும்போது, அவ்வளவு வேகமாகப் பேசுவதைக்கூட அவர்கள் மிகவும் கடமை உணர்வோடு ரிப்போர்ட் செய்கிறார்கள் என்று கூறிக்கொள்கிறேன். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன்றம் இயங்க வேண்டிய இடத்தைப் பற்றிய சச்சரவு இன்னும் இருக்கிறது. மவுண்டு ரோடுக்குப் போகவேண்டுமென்றுகூடக் கோரிக்கை இருப்பதாக வெட்டுப் பிரேரணைகளைப் படித்துப் பார்த்ததிலிருந்து அறிகிறேன். மவுண்டு ரோடு நகர மத்தியில் இருக்கிறது. என்றாலும் அது இரைச்சல் நிறைந்த பகுதி, போக்குவரத்து நிறைந்த பகுதி, அந்த இடத்திற்கு இந்த மன்றம் போக வேண்டாமென்று கூறி 1951-ம் ஆண்டிலேயே எதிர்ப்புக் குரல்கள் எழுந்திருக்கின்றன. அப்படி அந்த எதிர்ப்புக் குரல்களை எழுப்பியவர்கள் காங்கிரஸ்காரர்கள் அல்ல எதிர்கட்சிக்காரர்கள்தான். இன்றைய தினம் எதிர்க் கட்சிக்காரர்கள் அங்கு கொண்டு போகவேண்டுமென்று விரும்புகிறார்கள். அது சரியான யோசனையாக இருக்காது. சட்டமன்றத்திற்குப் பக்கத்தில் செக்ரெட்டேரியட் இருப்பது நல்லது, அதனால் நல்ல வசதிகள் இருக்கின்றன என்பதை உறுப்பினர்களும் மற்றவர்களும் உணர்ந்திருப்பார்கள். மவுண்ட் ரோடுக்கு மாற்றுகிற யோசனை நல்ல யோசனை அல்ல. சுருக்கமாகச் சொன்னால் அது துக்ளக் யோசனையாகத்தான் இருக்கும்.

அடுத்தபடியாக, நீலகிரி மாவட்டத்தில் இந்த மன்றத்தின் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று நான் சென்ற முறை வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதேபோல அந்த மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும்கூட வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு வேண்டுகோளை விடுத்தபோது, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிற நேரத்திலே அப்படி சட்ட மன்றக் கூட்டத்தை அங்கே நடத்துவதில் ஆட்சேபணை இல்லை, ஆனால் பல அங்கத்தினர்கள் அங்கே நடத்துவதை விரும்பவில்லை, காரணம், அது குளிர்ந்த பிரதேசம், அங்கே சட்ட மன்றம் கூடுவதற்கும், அதற்கு வருவதற்கும் பலர் விரும்பவில்லை என்று குறிப்பிட்டார்கள். இப்போது யாரும் அந்த மாதிரி ஆட்சேபணை தெரிவிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்த நாட்டைக் காக்க எல்லைப் பிரதேசத்தில் கடும் குளிரிலும் வீரர்கள் போராடினார்கள். இன்றும்கூட கடும் குளிரில் இந்த நாட்டைக் காத்துக்கொண்டு வீரர்கள் அங்கே இருக்கிறார்கள். அப்படி அவர்கள் பனியில் இருக்கும்போது, அப்படி அவர்கள் குளிரில் இருக்கும்போது, இந்த நேரத்தில் சட்டமன்றத்தை நீலகிரியில் கூட்டும்போது எந்த அங்கத்தினரும் குளிர் என்று கூற மாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த நல்ல நிலையைப் பயன் படுத்திக்கொண்டு நீலகிரியிலும் இந்த மன்றத்தைச் சில நேரங்களில் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று அவர்களிடம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தங்குமிடத்தைப் பற்றி பல கருத்துக்களைச் சொன்னார்கள். நாங்களும் சொல்ல முடியும். முதல் அமைச்சரும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். குறிப்பாக கெஸ்டுகளுக்கு விதிக்கப்படுகிற கட்டணம் நியாயத்திற்குப் புறம்பாக இருக்கிறது. இப்படி விதிக்கப்பட்டாலும் கெஸ்டுகளை செக் செய்கிற முறையைப் பார்க்கும் போது எங்களுக்குப் பிரதிநிதிகள் என்ற மதிப்பு அளிக்கப்படுவதாகத் தோன்றவில்லை. அறைக் கதவு மூடப்பட்டிருந்தாலும்கூட, கதவைத் தட்டி, எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று கேட்கிற கேள்வி எங்களுக்கு தன்மதிப்பை பாதிப்பதாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு இதையெல்லாம் மாற்றி, பிரதிநிதிகள் என்ற முறையில் மதிப்புக் கொடுக்கும் முறையில் மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பை அளித்த சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். மாதவன்:** மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஜனநாயக நாட்டில் நம்முடைய ஆட்சியைச் செலுத்தக்கூடிய ஒரு முக்கியமான துறையைப் பற்றி இந்த மன்றத்தில் விவாதித்துக்கொண்டிருக்கிறோம்.

சட்டசபை அங்கத்தினர்கள் தங்கும் ஹாஸ்டல்களில் சில குறைபாடுகள் இருக்கின்றன. ஓரளவு மற்றச் சௌகரியங்கள் இருப்பினும் நல்ல உணவு அளிக்கக்கூடிய உணவு விடுதி இல்லாதது பெருங்குறையாக இருக்கிறது. சாதாரணமாக, அங்கத்தினர்கள் 30, 40 நாட்கள் சென்னையில் ஹாஸ்டலில் தங்கியிருக்கவேண்டி இருக்கும்போது, நல்ல உணவு அளிக்கக் கூடிய உணவு விடுதி அவசியமாக இருக்கிறது. ஆகவே, நல்ல உணவு அளிக்கும் வகையில் ஒரு காண்டீனை அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பென்ஷன் பற்றிச் சொன்னார்கள். நமக்கு 125 கோடி ரூபாய் வருமானம் என்று சொன்னால் மூன்றரைக் கோடி வரையில் பென்ஷனுக்காக ஒதுக்கியிருக்கிறோம். பென்ஷன் கொடுப்பதைவிட பிற ஸ்தாபனங்களில் இருப்பதுபோல் ரிட்டயர் ஆகும்போது ஒரு பெரும் தொகையைக் கொடுத்தால் சர்க்காருக்கு வருடா வருடம் ஏற்படும் செலவு ஆகாது. " ஓல்ட் ஏஜ் பென்ஷன் " பற்றி சில குறைகளைக் கூறினார்கள். 60, 65-க்கு மேற்பட்டவர்களுக்கு மாதா மாதம் 20 ரூபாய் கொடுப்பதைவிட்டு அவர்களுக்கு ராட்டினம் போன்றவற்றை கொடுத்து அவர்களுக்கு ஏதாவது தொழில் கொடுத்து ஆதரிப்பது நலம்என்று நான் கருதுகிறேன். அப்படி அவர்களுக்கு ஏதாவது தொழில் செய்ய உதவி அளித்தால் தொழில் வளர்ச்சியும் ஏற்படும், அத்தொழில் செய்பவர்களுக்கும் நல்லதொரு வருமானம் ஏற்படும். ஆகவே இதைப் பரிசீலனை செய்து காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸின் கீழ் ராட்டு, நூல் போன்றவற்றைக் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்யலாம்.

அடுத்தபடியாக தேர்தல் பற்றி சொல்லப்பட்டது. இன்றைய தினம் அபேட்சகர்கள் செலவு செய்யும் தொகையை விட சர்க்கார் குறைவாகத்தான் செலவு செய்கிறது. நகரசபைத் தேர்தல் இப்போது நெருக்கடி நிலை காரணமாக ஒத்தி போடப்பட்டிருக்கிறது. இப்போது 3½ ஆண்டுகள் ஆகிவிட்டதால் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே நகரசபைத் தேர்தலை வருகிற செப்டம்பர் மாதத்திலாவது நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக மினிஸ்டர்ஸ், ஹெட்குவார்ட்டர்ஸ் ஸ்டாப் பற்றி அடுத்தபடியாக அது வரும்போது அதுபற்றிப் பேசிக்கொள்கிறேன் என்று கூறி எனது நன்றியையும் தெரிவித்துக்கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு ம. கமலநாதன்** : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டப் பேரவை மீது ஒதுக்கப்பட்டிருக்கும் மான்யத்தின் மீது நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ற சட்டசபைக் கூட்டத்திலே இந்த மான்யத்தின்மீது பேசும்போது எங்கள் கட்சி உப தலைவர் அவர்கள் வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தாமல் ஒரு புது சம்பிரதாயத்தை உருவாக்கினார். நடுநிலைமையோடு இங்கு விவாதத்தை துவக்கி வைத்து பலவிதக் குறைகளை எடுத்துக் கூறினார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் விடை அளிக்கும்போது சில பல குறைகளைக் கவனிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் செய்த ஒன்றே ஒன்று, பாராட்டவேண்டிய ஒன்றே ஒன்று—இங்கே கொடுக்கப்படும் கேள்விகளுக்கு தமிழில் விடை அளிப்பது ஒன்றுதான். சென்ற ஆண்டு, சட்டசபைக்கு வரும் அங்கத்தினர்களுக்கு புதிதாகத் தங்கும் விடுதி கட்ட முனைவதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் அதற்கான முயற்சிகள் இதுவரை எடுத்துக்கொள்ளப்படவில்லை. தங்கும் விடுதிபற்றி எனக்கு முன் பேசிய அங்கத்தினர் எடுத்துக் கூறினார்கள். ம்யூசிக்கல் சேர் (chair) மாதிரி உஷாராக இருப்பவர்களுக்குத்தான் அங்கு ரூம் கிடைக்கிறது. அநேகம் பேர் ஹோட்டல் அசோக், தாசப்பிரகாஷ் போன்ற இடங்களில்தான் எக்கச்சக்கமாக பணம் கொடுத்து தங்க வேண்டியிருக்கிறது. ஆகவே உறுப்பினர்களுக்கு தங்குவதற்கு எவ்வளவு வசதிகள் செய்து கொடுக்க முடியுமோ, அந்த அளவு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து அங்கத்தினர்களை பார்க்க அவரவர்கள் தொகுதியிலிருந்து தினம் நாலைந்து பேர்கள் வருகிறார்கள். விருந்தோம்பலுக்குப் பெயர்போனது தமிழகம். அப்படி அவர்கள் வந்து தங்கும்போது தலைக்கு 2½ ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாங்கள் 2½ ரூபாய் கொடுக்கிறோம் என்றால் அதற்கு கட்டில் மெத்தை எல்லாம் போட்டு வசதி செய்து





கொடுத்திருக்கிறார்கள். அது போதும். ஆனால் " கெஸ்டாக " வருகிறவர்களுக்கு ஒருவித வசதியும் கொடுக்கப்படாமல் ஆளுக்கு 2½ ரூபாய் வாங்குவது என்பது கொள்ளை அடிப்பதுபோல் இருக்கிறது. 4 பேர்கள் அல்லது பத்து பேர்கள் வந்தாலும் அவர்கள் கட்டாந்தரையில்தான் படுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே வருகிற கெஸ்ட்களுக்கு உள்ள வாடகையை குறைத்து அவர்களுக்கும் சாதாரண வசதிகளையாவது செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாப் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் சண்டிகர் என்ற பெரிய நகரத்தைக் கட்டி அங்கு அங்கத்தினர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பங்களூரிலும் நல்ல கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் நிறைய இடம் இருக்கிறது. ஆகவே அங்கு புதுக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதில் கஷ்டம் இருக்காது. அதை உடனடியாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது இருக்கிற இடத்திலாவது வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். மூன்று அறைகளை எடுத்துக்கொண்டு அதை இரண்டாக ஆக்கி நடுவில் உள்ளதை பாத்ரூமாக சுலபமாகச் செய்ய முடியும். அடுத்து கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் ஏராளமான க்வார்ட்டர்ஸ் இருக்கின்றன. அவை சட்டசபை அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதேதவிர அங்கு குடியிருப்பவர்களைப் பார்த்தால் யார் யாரோ இருக்கிறார்கள். செயலாளர், துணைச் செயலாளர், சட்டசபை இலாகாவைச் சார்ந்தவர்கள் அங்கு இருந்தால் கூட பாராட்டலாம். ஆனால் டாக்டர் வரதராஜுலு நாயுடு என்ற பெயரில் அங்கு இன்னும் வீடு இருக்கிறது. அங்கு யார் குடியிருக்கிறார்கள் என்ற விவரம் கூட தெரியவில்லை. House கமிட்டி அங்கத்தினர்களைக் கேட்டால் அவர்கள் விவரங்கள் கேட்டிருக்கிறோம், இன்னும் சொல்லவில்லை என்கிறார்கள். ஆகவே ஹௌஸ் கமிட்டி முடிவு செய்வதை அதில் ஓரளவையாவது நிறைவேற்ற அரசாங்கம் முனைய வேண்டும். விவசாய அமைச்சர் அவர்கள் விதைப் பண்ணைகள் வைத்திருக்கிறோம், கோழிப் பண்ணை வைத்திருக்கிறோம், லாபம் வரவில்லை என்கிறார்கள். கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் கொசுப் பண்ணை சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. கொசு போடும் சப்தத்தைவிட அதிக சப்தம் போடும் அளவிற்கு Swing Fog Machine ஐ-க் கொண்டு அடித்தார்கள். பிறகு கதவைத் திறக்கும் போது காஸ் போய் கொசு வருகிறது. கேட்டால் கார்ப்பரேஷனைச் சேர்ந்தவர்கள் தாங்களாகவே வந்து அடித்தோம் என்கிறார்கள். அதில் அரசாங்கம் எந்தவித அக்கறையும் காட்டவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அக் கொசுக்கள் சாவதில்லை. அமைச்சர்கள் நல்ல பங்களாக்களில் இருப்பதால் அவர்களுக்கு இது தெரியவில்லை என்று நினைக்க இடம் இருக்கிறது. மேலும் அறைகளில் உள்ள ஜன்னல்கள் பெரிதாக இருக்கிறது. அதனால் உள்ளே ஒரு குச்சியை விட்டு சட்டைகளைக்கூட எடுத்துச் சென்றுவிடலாம். ஆகவே கதவை மூடிக்கொண்டு தூங்கவேண்டியிருக்கிறது. பாதுகாப்பு இல்லை. Trespassers will be prosecuted என்று போர்ட் போட்டிருக்கிறதேதவிர, அது ஒரு பொது வழியாகத்தான் இருக்கிறது. இராத்திரி பூராவும் டாக்ஸிகளும் கார்களும் வந்துகொண்டிருக்கின்றன. 1, 2, 3, எண்ணுள்ள அறைகளில் தூங்கமுடிவதில்லை. ந்யூஸன்ஸாக இருக்கிறது.

பின்னர் இந்தியன் பாங்கில் பணம் வாங்க வசதி இருக்கிறது. அங்கு போஸ்ட் பாக்ஸ் இருக்கிறது. மாலை 3 3/4-க்குப் பிறகு காலை 5-30-க்குத்தான். தபால்கள் எடுக்கிறார்கள். அதற்குப் பின்னர் மவுண்ட்ரோடு அல்லது சென்ட்ரலுக்குப் போகவேண்டும். ஆகவே ஏன் அங்கு ஒரு டெம்பரரி போஸ்ட் ஆபீஸ் வைக்கக்கூடாது. ? அதுபற்றியும் கவனிக்க வேண்டும். இந்தியா காபீ ஹௌவுஸ் மொபைல் வான் மூலம் நல்லமுறையில் காப்பி வழங்குகிறார்கள். அது ஹாஸ்டல் பக்கமாக வந்தால் காலையிலும் மாலையிலும் நல்ல காப்பி குடிக்கலாம். சேலம் காப்பி குடித்தவர்களுக்கு இந்தக் காப்பி சீயக்காய் காப்பியாக இருக்கிறது. பின்னர் லாபியில் எல்லாம் ஸி. ஐ. டி.-கள் மப்டியில் இருப்பதாக கேள்விப்படுகிறோம். எங்கள் கௌரவத்தைப் பாதுகாக்கும் முறையில் அப்படி லாபி, விஸிட்டர்ஸ் காலரியில் வந்து இருக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். சட்ட மன்றத்தில் அனல்

சரி, வேறு யாராலும் சரி, சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியினர்களாக இருந்தாலும் சரி தங்கள் இடங்களுக்கு வரவேண்டுமென்று அமைச்சர்களை கலந்து ஆலோசிக்கலாம். அப்படி கலந்து ஆலோசித்ததினால் அவர்களுக்கு சுற்றுப் பிரயாண திட்டம்பற்றி முன்பே தெரிந்திருக்கலாம். ஜில்லா காங்கிரஸ் கமிட்டியினரோ, அல்லது சட்ட மன்ற உறுப்பினர்களோ அல்லது எதிர்க்கட்சியினரோ இந்த இடத்துக்கு வரவேண்டும், இதைப் பார்க்கவேண்டுமென்றால், அமைச்சர்கள் வருகிறார்கள். ஆனால், சுற்றுப் பிரயாணத் திட்டம் யாராயிருந்தாலும் எல்லோருக்கும் ஒரே சமயத்தில்தான் அனுப்பப்படுகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. எஸ். மாதவன் :** நான் என்னுடைய அனுபவத்தை வைத்துச் சொல்லுகிறேன். முதல் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது எனக்கு முன்தினம்தான் அவருடைய சுற்றுப்பிரயாணத் திட்டம் கிடைத்தது. அதற்கு பல தினங்களுக்கு முன்பாகவே காங்கிரஸ் கமிட்டிக்கு கிடைத்துவிட்டது என்ற தகவல் எங்களுக்கு கிடைத்தது. அதை வைத்துக்கொண்டுதான் நான் இம்மாதிரி குறிப்பிட்டேன்.

அதேசமயத்தில் அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் வரும்பொழுது, அதில் எங்களுக்கு என்ன பங்கு கொடுக்கப்படுகிறது என்பதை திட்டவட்டமாகக் குறிப்பிடவேண்டும். நாங்கள் உண்மையாகவே அமைச்சர்கள் வரும்பொழுது, அந்த நிகழ்ச்சிகளில் பங்கு பெற ஆசைப்படுகிறோம். ஆனால், அனுபவத்தில் பார்க்கும்பொழுது, அமைச்சர்களுக்கு நாங்கள் மாலை போடுவதைக்கூட காங்கிரஸ்காரர்கள் தடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இவ்வளவு பெரிய அரசியல் அநாகரிகத்தை நம்முடைய நாட்டில் வளர விட்டால், அது நன்மை பயக்குமா என்பதை சிறிது ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காங்கிரஸ் கட்சி அமைச்சரவை தொடர்ந்து 15 ஆண்டு காலமாக ஆட்சியில் இருக்கிறது. கராச்சி காங்கிரஸில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கக்கூடிய குறைந்த பட்ச கூடுதல் சம்பள விகிதங்களையும், அதனுடைய வேறுபாடுகளையும் குறைக்கவேண்டும் என்று திட்டவட்டமாக தீர்மானம் போடப்பட்டது. 1954-ல் சட்டமன்றத்தில் காங்கிரஸ் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரப்படி 168 உயர்ந்த அதிகாரிகளுக்கு 25 லட்ச ரூபாய் சம்பளமாக கொடுக்கபட்டுகிறது என்று குறிப்பிடப்பட்டது. இந்தத் தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறது. 168 பேர்களுக்கு ரூபாய் 25 லட்சம் கொடுக்கக்கூடிய அளவுக்கு இருக்கும் இந்த வேறுபாடு இன்னும் குறைக்கப்படவில்லை. அதிகமாகிக்கொண்டு வருகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னொன்றும் கூற ஆசைப்படுகிறேன். தமிழக அமைச்சரவை தமிழ் மக்களுக்கு பாடுபடவேண்டும். அவர்கள் தமிழ் நாட்டு பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் உலகத்தில் எந்தப் பகுதியில் இருந்தாலும், அந்த மக்களுக்கு தமிழக அமைச்சரவை தங்களுடைய பிரதிநிதிகள் தங்களுக்காக செயல்படுகிறார்கள் என்ற நம்பிக்கை ஏற்படவேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக, நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியது போல், மலேயா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளில் வாழக்கூடியவர்கள் இந்த நாட்டில் பிறந்தவர்கள், இந்த மண்ணில்தான் பிறந்தவர்கள், அவர்கள் இங்கே பிழைப்பதற்கு வழியில்லாமல் வேறு நாடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் கடற்கரை துறைமுகத்தில் வந்து இறங்கும்பொழுது, அவர்களுக்கு அதிகாரிகள் கொடுக்கக்கூடிய தொல்லைகளை கொஞ்சம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கஸ்டம்ஸ் துறை மத்திய சர்க்காரிடம் இருந்தபோதிலும், நம்முடைய பிரதிநிதிகளாக, தமிழ் மக்களுடைய பிரதிநிதிகளாக இந்த அமைச்சரவை மத்திய சர்க்காருடன் போராடவேண்டும். கடலில் பிரயாணம் செய்து விட்டு, துறைமுகத்தில் இறங்கும்பொழுது அவர்கள் என்னென்ன சாமான்களைக் கொண்டுவரலாம் என்பதுபற்றி திட்டவட்டமான அறிக்கை இல்லை. யார், எப்பொழுது, எந்த சாமான் கொண்டு வரலாம் என்று சட்டம் வகுக்கப்படவில்லை என்று நான் இந்த நேரத்தில்





கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு நபர் ஒரு நாளைக்கு ஒரு பொருளைக் கொண்டு வந்தால், அதற்கு அவருக்கு வரி விதிக்கப்படுகிறது. அதே பொருளை அடுத்த கப்பலில் இன்னொரு நபர் கொண்டுவந்தால், அந்தப் பொருள் பறிமுதல் செய்யப்படுகிறது. அதுமட்டுமல்ல. விதிக்கக்கூடிய கஸ்டம்ஸ் டியூட்டியில் வேறுபாடுகள் இருக்கின்றன. இதனால் குழப்பம் ஏற்படுகிறது. இந்தக் குழப்பத்தைத் தவிர்க்க, நம்முடைய மாநில சர்க்கார் மத்திய சர்க்காருடன் கலந்து பேச முயற்சி செய்யவேண்டும். உதாரணமாகச் சொல்லுகிறேன். தங்கத்தை எடுத்துக்கொள்வோம். தங்கம் ஒரு மனிதன் உபயோகிக்கின்ற அளவுக்குக் கொண்டுவரலாம் என்ற பொது விதி இருக்கிறது. ஆனால், இது விஷயத்தில் மலேயாவிலிருந்து வரக்கூடியவர்களுக்கு ஏற்படக்கூடிய தொல்லைகளை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு நபர் 25 பவுன் கொண்டுவந்தால் சில சமயத்தில் விட்டுவிடுகிறார்கள். இன்னொரு நபர் 6 பவுன் கொண்டு வந்தாலே, அதை உடனே பறிமுதல் செய்து, ஏன் கான்பிஸ்கேட் செய்யக் கூடாது என்று உத்தரவு வருகிறது. மத்திய சர்க்காருக்கு இதுபற்றி கூட நான் எழுதியிருக்கிறேன். வெளி நாடுகளிலிருந்து வரும் தமிழ் மக்கள் இதனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதைப்பற்றி திட்டவட்டமாக அறிவித்துவிடவேண்டும். இந்தப் பொருளைத்தான் கொண்டு வர வேண்டும், இந்த அளவுக்குத்தான் கொண்டுவர வேண்டும் என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டால் அது மிகுந்த பயன் அளிக்கும், அவர்களுடைய தொல்லைகளைக் குறைக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே சமயத்தில் இன்னொன்றும் கூற ஆசைப்படுகிறேன். இலங்கை, மலேயா பகுதிகளிலிருந்து அதிகமான பேர்கள் நம்முடைய நாட்டிற்கு வெளியேற்றப்படுகிறார்கள். அப்படி அவர்கள் அந்த நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு இங்கே குடியேறத் தொடங்கியிருக்கிறார்கள் அங்கேயுள்ள சட்டத்தினால் ஏற்பட்ட தொல்லைகளினால். அவர்களுக்காக நம்முடைய அரசாங்கம் எந்த முறையில் மத்திய அரசாங்கத்தோடு போராடி உதவி பெற்றிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த அளவிலே முன்னாலிருந்த அமைச்சர் அவை சொன்னதெல்லாம் என்னவென்றால், இலங்கையிலிருந்து வருபவர்கள் நிறையப் பொருளோடு வருகிறார்கள், நிறைய வசதியுடையவர்கள், அவர்களுக்கு ஏன் உதவி செய்வது என்று கேட்டார்கள். அமைச்சர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏதோ வட்டிக் கடை வைத்துக் கொண்டிருக்கிறவர்களையும், எஸ்டேட் சொந்தக்காரர்களையும் வைத்துக் கொண்டு கணக்குப் போடக்கூடாது. எஸ்டேட்டில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். நான் நேரடியாகப் பார்த்ததில் ஏராளமான தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டிற்கு விரட்டியடிக்கப்படுகிறார்கள். அவர்களுக்காக மாநில அரசாங்கம் தமிழர்கள் பிரதிநிதி என்ற முறையில் மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்தி என்ன செய்திருக்கிறது என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன். உதாரணமாகச் சொல்லுகிறேன். திபெத்து நாட்டை எடுத்துக்கொண்டால் திபேத் சீனாவின் ஒரு பகுதி என்று நம்முடைய அரசாங்கமே ஒத்துக்கொண்ட ஒரு பகுதி அது. அப்படி இன்னொரு நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அகதிகளுக்கு லட்சக்கணக்கான ரூபாய்களை மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள், உதவியாகக் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. தனி ப்ளேன் அனுப்பப்படுகிறது தங்கக்கட்டிகளைக் கொண்டு வருவதற்கு என்ற செய்தியையும் படித்தோம். நம்முடைய தமிழர்களுக்கும் மாநில சர்க்கார், மத்திய சர்க்காரோடு போராடி அப்படிப்பட்ட வசதிகளை ஏன் பெறக் கூடாது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். அந்த முறையிலே இந்த மாநில சர்க்கார் முன்னின்று அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து தர வேண்டும்.

இன்னொன்றும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய மாநில சர்க்காருடைய அதிகாரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டு வருகிறது. இண்டியன் போலீஸ் ஸர்வீஸ், இண்டியன் அட்மினிஸ்டிரேடிவ் ஸர்வீஸ் என்று வைத்திருந்தார்கள். இப்பொழுது புதிதாக ஒரு செய்தி செய்தித்தாளில் காணப்படுகிறது. இன்னும் சில பகுதிகளும் அகில இந்திய சர்வீஸாக மாற்றப்படுகிறது. மாநில சர்க்காருக்குள்ள அதிகாரங்கள் இன்னும்

[திரு. எஸ். மாதவன்] [9th March 1963

இந்த நேரத்திலே நான் சுட்டிக்காண்பிக்க விரும்புவதெல்லாம், ஜனநாயக ஆட்சியிலே உள்ளவர்களுக்கு எப்படிப் பொறுப்பு இருக்கிறதோ அதே பொறுப்பு—அதைவிட அதிகமான பொறுப்பு—எதிர்க்கட்சிகளுக்கு இருக்கிறது என்பதை ஆட்சியில் உள்ளவர்கள் உணர வேண்டுமென்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன். காரணம் ஆட்சியிலே உள்ளவர்களுடைய கொள்கையை மட்டும் எதிர்க்கட்சிகள் எதிர்த்துப் பேசுவது என்ற முறை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கொள்கைக்குக் கொள்கை வேறுபட்டுள்ளதைப் பேசும் அளவுக்குப் பேசிவிடலாம். அதைவிட இன்னொரு முக்கிய செயல் எதிர்க்கட்சிக்கு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். ஆட்சி யந்திரம் பழுது படாமல் நடந்து செல்லுகிறதா என்று ஆராய்ந்து அதற்குத் தக்கவாறு எதிர்க் கட்சிகள் யோசனை கூறுவதற்கு என்ன வாய்ப்பை எதிர் கட்சிகளுக்குத் தந்திருக்கிறார்கள் என்று நினைவூட்ட விரும்புகிறேன். (கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அமைச்சர்களுக்கு புள்ளிவிவரங்களைத் தயாரித்துக்கொடுக்க அரசாங்கத்தில் பணியாளர்கள் இருக்கிறார்கள். எதிர்க் கட்சிகளைப் பொறுத்தமட்டில் அமைச்சர்களுக்குப் புள்ளி விவரங்களைத் திரட்டித் தருகிற மாதிரி அவர்களுக்குக் கிடைப்பதற்கும், அதிலிருந்து நிர்வாகத் துறையில் இருக்கக்கூடிய குறைகள் என்ன, இருக்கக்கூடிய கோளாறுகள் என்ன என்று ஆராய்வதற்கும், எங்களுக்கு அத்தகைய புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தருவதற்கு என்ன வழிகள்செய்து கொடுத்திருக்கிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். நம்முடைய நூலகம் நமக்கு வேண்டிய அளவுக்கு விஷயங்களைச் சேகரித்துத் தரும் அளவுக்கு இயங்கவில்லை. அதுவும் இந்த நூலகம் இங்கே செகரட்டேரியட்டில் இருக்கிற காரணத்தினால், விடுதியில் உள்ளவர்களுக்கு, விடுதியில் தங்குகிறவர்களுக்கு எந்த அளவுக்கு பயப்படுத்த முடிகிறது என்பதில் சந்தேகம்தான் உண்டாகிறது. நான் கேட்டுக்கொள்வது, உண்மையாகவே நேற்று நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சொன்னார்கள் எதிர் கட்சியானது உண்மையிலேயே எதிர் கட்சி என்ற முறையில் அமர்ந்திருப்பதை நான் பாராட்டுகிறேன் என்று—அந்தப் பாராட்டு நிலைக்க வேண்டுமானால், உண்மையாகவே எதிர் கட்சிகள் நல்ல முறையில் பணியாற்ற, எதிர் கட்சிகளுக்காக ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும். சட்ட மன்றம் நடைபெறும்போதும், மற்ற நேரங்களிலும் எங்களுக்கு வேண்டிய முறைகளை, எங்களுக்கு வேண்டிய வழிகளை, எங்களுக்கு வேண்டிய செய்திகளைத் தெரிந்து கொள்ள நல்ல வாய்ப்பைத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நிதி நிலை அறிக்கையைப் பற்றி ஏராளமான புத்தகங்கள் எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிலே இருக்கக் கூடிய விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்வதிலே யார் எந்த அளவு முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள் என்று அமைச்சர் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். இதிலுள்ள பிரேரணைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒவ்வொரு செயலாளராக, செக்ரட்டேரியட் முழுவதும் தேடித் தேடிப் போக வேண்டியிருக்கிறது. எதிர்க் கட்சி என்ற முறையிலே செயலாளர்கள் எங்களோடு எப்படி நடந்துகொள்வார்கள் என்ற சந்தேகம் இருக்கிறது. எதிர்க் கட்சிகளுக்கென்று சட்ட மன்றத்திலே அவர்களுக்குப் பயன்படத் தக்க வகையிலே ஒரு அமைப்பு இந்த செக்ரட்டேரியட்டில் உருவாக்கப்பட்டு, அவர்கள் மூலமாக ஏராளமான செய்திகளை, அரசாங்கம் நடத்துகிற முறைகளைப் பற்றி, அரசாங்க இலாகாக்களின் அலுவல்கள் பற்றி, அரசாங்கத்தின் திட்டங்களைப் பற்றி அல்லது எந்தக் கொள்கை அடிப்படையில் நடைபெறுகிறது என்பதைப் பற்றி நாங்கள் தெரிந்து கொள்ள ஆசை கொண்டிருக்கிறோம் என்று கூறிக்கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நம் விவசாய அமைச்சர் இங்கே கொடுத்த புள்ளி விவரம் தவறு என்று வெளியே உள்ள அதிகாரி ஒருவர் கூறுகிறார். இதில் எதை நம்புவது? அந்த அதிகாரி செய்தித்தாளில் திட்ட வட்டமாகக் கூறியிருக்கிறார்கள். விவசாய அமைச்சர் கொடுத்த புள்ளிவிவரம் தவறு, அவர் உதாரணத்திற்குக் கொடுத்திருக்கலாம் என்று ஒரு அதிகாரி சொல்லுகிறார். இந்த நிலையில் அமைச்சர் சொல்லுவதை நம்புவதா? அல்லது அதிகாரி சொல்லுவதை நம்புவதா? எதையாவது வைத்துப் பேசி விட்டால், ஏதாவது தவறாக



9th March 1963] [திரு. எஸ். மாதவன்]

இருக்குமானால், உடனடியாக எங்களை மட்டம் தட்டத் தொடங்கி விடுவார்கள். இதைக் கொண்டாவது நான் கூறும் யோசனையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னொன்று, சட்ட மன்ற உறுப்பினர்களுடைய பணி என்ன என்று திட்டவட்டமாக முடிவு செய்யப்படவேண்டும். நாம் பாராளுமன்ற ஆட்சி முறையைப் பின்பற்றி வருகிறோம். அதிலும் குறிப்பாக பிரிட்டிஷ் பார்லிமெண்ட் இயங்குகின்ற முறையில் பாராளுமன்ற முறையைப் பின்பற்றி வருகிறோம். சட்டமன்றத்தின் உரிமைகளைப் பாதுகாக்க, சட்ட மன்ற உறுப்பினர்களின் பணி என்ன என்று திட்டவட்டமாக வரையறுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன், சட்ட மன்றத்தில் மட்டும் எங்கள் கொள்கையைப் பேசி விட்டுப் போகாமல், தொகுதியினுடைய குறைகளைப் பற்றி ஆங்காங்கு இருக்கிற அதிகாரிகளைக் கண்டு பேசவேண்டியிருக்கிறது. பேச வேண்டியது கடமை என்று கருதுகிறேன். அதிகாரிகளைக் கண்டு பேசி, மக்கள் குறைகளைச் சொல்லி, அல்லது தொகுதியின் குறைகளைச் சொல்லி, அந்த அதிகாரிகள் அத்தகைய குறைகளை நிவர்த்தி செய்து விட்டால், அவர்களுக்கு ஏற்படக் கூடிய கதி கண்டு எங்களுக்கு பயமாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். ஒரு அமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலே, மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பேசுகிற போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 3 படி அரிசி ரூபாய்க்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள், எங்கே கொடுக்கப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியாது, இந்த ஊரில் உள்ள தாசில்தார் அறிஞர் அண்ணாதுரையோடு கல்லூரியில் படித்ததாகக் கேள்விப்படுகிறேன், அவர் கொடுப்பாரோ என்னவோ, என்று சிலேடையாகக் கிண்டல் செய்து பேசினார் அமைச்சர் அவர்களுடைய முன்னிலையில். 10-00 a.m.
மறுநாள் அதே தாசில்தாருக்கு தந்தி மூலம் உத்தரவு வருகிறது "உங்களை மாற்றியிருக்கிறேன்" என்று. இந்த முறை பின்பற்றப்பட்டால், நாங்கள் மீண்டும் அந்தத் தாசில்தாரிடம் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படுமா என்பதைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இன்னொன்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதிகாரிகளை சந்திக்கவேண்டாம், குறைகளை எடுத்துக்கூற வேண்டாம் என்று திட்டவட்டமாக சொல்லிவிடுங்கள். எங்களுக்குக் கவலையில்லை. ஆனால் மக்களுக்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற காரணத்தினால் நாங்கள் அதிகாரிகளை சந்திக்க வேண்டியிருக்கிறது; குறைகளை எடுத்துக்கூற வேண்டியிருக்கிறது. என் இவ்வளவு தூரம் பாரபட்சமாக, மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நாங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை அமைச்சர்கள் நன்றாக யோசிக்கவேண்டும்.

நான் இன்னொன்றும் கூற ஆசைப்படுகிறேன். அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். ஆனால், ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்குத்தான் முதலில் சுற்றுப்பிரயாண அறிக்கை போகிறது. அந்தப் பகுதியிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர்கள் வருகிறார்களா என்று கூடத் தெரிவதில்லை. அப்படி ஏதாவது டூர் ப்ரோகிராம் வந்தாலும், அமைச்சர் வருவதற்கு முன்தினம் தான் அது எங்களுக்குக் கிடைக்கிறது. ஆனால், ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு மாதம் அல்லது குறைந்தது 15 நாட்களுக்கு முன்பே டூர் ப்ரொகிராம் அனுப்பப்பட்டு விடுகிறது. இதன் விளைவு என்ன? நாங்கள் எங்கள் தொகுதிக்குச் செல்லுகிறோம். மக்கள் எங்களிடம் "அமைச்சர்கள் தொகுதிக்கு வருகிறார்கள், உங்களுக்குத் தெரியாதா" என்று கேட்கிறார்கள், கேலியாகப் பேசுகிறார்கள். என் அமைச்சர்களை எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் வரவேற்கமாட்டார்கள் என்று கருதப்படுகிறதா? அவ்வளவுக்கு அரசியல் அநாகரிகம் எங்களிடத்தில் இல்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அமைச்சர்களுடைய சுற்றுப்பிரயாணத் திட்டம் எல்லோருக்கும் ஒரே சமயத்தில்தான் அனுப்பப்படுகிறது. ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு 15 நாட்களுக்கு முன்னால் அனுப்பிவிட்டு, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பின்னால்தான் அனுப்பப்படுகிறது என்று சொல்லுவது தவறு. ஜில்லா காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்தவர்களானாலும்

ஒவ்வொரு துறையிலும் குறைக்கப்படுகிறது என்ற செய்தியைப் பார்க்கிறோம். தமிழக அமைச்சரவை இதையெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கிறதா? இதெல்லாம் நன்மை என்று கருதுகிறதா, அல்லது பாதகம் என்று கருதுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். எதிர்கட்சியினர் சொல்லக்கூடிய கருத்துக்களை தமிழக அமைச்சரவை நன்றாக ஆலோசித்துப் பார்த்து, எங்களுக்கு அதிக வாய்ப்பு தந்து, இன்னும் இந்த மாநில சர்க்கார் மத்திய சர்க்காருடன் போராடக்கூடிய சக்தி பெறவேண்டும் என்று கூறி, விடை பெறுகின்றேன். வணக்கம்.

***திரு. ஆர். ரங்கசாமி :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது சட்டசபை ஆரம்பிக்கும் நேரம் அதிகாலையில் 8½ மணி என்பது எல்லோருக்கும் தெரியும். முன்பு பேசிய அங்கத்தினர்கள் சொன்னமாதிரி, கொசுக் கடியால் தூக்கம் வராமல் இரவு 11½ மணி, 12 மணிக்குத்தான் ஒருவாறு தூக்கம் வந்து தூங்கி எழுந்திருப்பதற்குள் காலையில் 7½ மணி ஆகிவிடுகிறது. காலையில் எழுந்த உடனே பாத்ரூமுக்குச் சென்று குளிக்கலாம் என்று நினைத்துக் கொண்டு போனால், "கெஸ்ட் ரெஜிஸ்டரிலே" பெயர் இல்லாவிட்டாலும் கூட, ஒவ்வொரு அறையிலும் இரண்டு மூன்று பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் முதலிலே குளிக்கும் அறையிலே இருக்கிறார்கள். அவர்கள் குளித்த பிறகாவது, சுடு நீரிலே குளிக்கலாமென்று நினைத்தால், மூன்று பேர்கள் குளித்த உடனே, பாயிலரிலே தண்ணீர் இல்லாமல் போய்விடுகின்றது. குளிர்ந்த தண்ணீர்தான் கிடைக்கிறது. அதிலாவது குளித்துவிட்டு வரலாமென்றால் 8½ மணி தாண்டிவிடுகிறது. அதற்குள்ளாக இங்கே சட்டசபை ஆரம்பித்து கேள்வி நேரம் முடிந்துவிடுகிறது. முக்கியமான கேள்வி நேரத்தில் நாங்கள் ஏதாவது கேள்விகள் போடவேண்டுமென்று நினைத்து இங்கே வரும்போது கேள்விகள் முடிந்துவிடுகின்றன. ஆகவே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த சட்டசபை நேரத்தை மாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலை 9 மணிக்கு ஆரம்பித்து 1 மணி வரையில் நடத்தினால் சௌகரியமாக இருக்கும். சட்டசபை முடிந்த பிறகு மதிய உணவுக்குச் செல்லும்பொழுது 1½ மணிக்கு மேல் ஆகிவிடுகிறது. அங்கே இருக்கக்கூடிய ஹோட்டலிலே வெளியிலிருந்து வரக் கூடியவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் சாப்பாட்டிற்குப் போகும்போது, எல்லாம் தீர்ந்து விட்டது என்று சொல்லுகிறார்கள். முதலிலேயும் கஷ்டம், சட்டசபைக் கூட்டம் முடிந்த பிறகும் கஷ்டம் என்ற முறையிலே இரண்டு விதத்திலும் நாங்கள் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, காலை 9 மணிக்கு ஆரம்பித்து 1 மணி வரை சட்டசபைக் கூட்டத்தை வைத்துக்கொண்டால் நன்றாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். எதிர்க் கட்சி அங்கத்தினர்களும் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த மாதிரி ஒரு ஏற்பாட்டைச் செய்யும்படி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக மெம்பர்களுக்கு அளிக்கப்படும் ஆஸ்புத்திரி வசதியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் சட்டசபை விடுதியிலே கொசுவோடு தனியாகப் போராடிக்கொண்டு படுத்திருக்கிறோம். காலையிலே எழுந்து ஏதாவது உடம்புக் கோளாறு காரணமாக உடம்பு சரியில்லை என்றால் டாக்டரிடம் சென்ற பிறகுதான் மருந்து கொடுக்கிறார்கள். ஆஸ்பத்திரி போய்ச்சேர்வதற்குக்கூட எங்களுக்கு உதவியாக ரூமில் யாரும் இல்லை. (சிரிப்பு). எங்கள் அறையிலேயே டாக்டர் வந்து பார்க்கக் கூடிய நிலைமை இப்பொழுது இல்லை. எங்களுக்கு ஆஸ்பத்திரி வசதிகளை நல்ல முறையில் செய்து கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் நலமாய் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

எங்களுக்கு கெஸட்டட் ஆபீஸர் ராங்கு கொடுக்கப்பட்ட போதிலும் அது அநேகமாக கையெழுத்துப் போடும் வகையில்தான் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அவர்களுக்கு இருக்கக்கூடிய வசதிகள் ஒரு அளவுக்குக்கூட எங்களுக்குக் கிடையாது என்பதை எடுத்துச்சொல்ல விரும்பு





கிறேன். இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் இந்த சர்டிபிகேட்டுகளில் எம். எல். ஏ.க்கள் கையெழுத்துப் போடும் முறை என்போன்றவர்களுக்கு விளங்கவில்லை. ஒவ்வொரு ஃபாரமும் ஒவ்வொருவிதமாக இருக்கிறது. கையெழுத்துப்போட மறுப்பதற்கும் எங்களுக்குத் தைரியம் இல்லை. (சிரிப்பு). எங்கள் ஊரிலே நாட்டாண்மைக்காரர் கையெழுத்துப் போட மறுத்து விடுகிறார், ரெவென்யூ இன்ஸ்பெக்டரும், தாசில்தாரும் கூட கையெழுத்துப் போட மறுத்துவிடுகிறார்கள். கடைசியாக எம். எல். ஏ.க்களிடத்தில் போய் கையெழுத்து வாங்கிவாருங்கள் என்று அவர்கள் சொல்லுவதால், நாங்களும் மூச்சு விடாமல் கேட்ட உடனே கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறோம். பின்னர் அது எங்களை எந்த விதத்தில் பாதிக்குமென்பது எங்களுக்குத் தெரியவில்லை. தாசில்தார் போன்றவர்கள் பின்னால் ஒருவேளை தங்களுடைய சம்பளத்தைப் பாதிக்குமோ என்று நினைத்து கையெழுத்துப் போட மறுத்து விடுகிறார்கள். பொது மக்கள் நாங்கள் கையெழுத்துப் போட்டுக்கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். எங்களைப் பாதிக்காத வகையிலே, சர்க்காருக்கும் நஷ்டம் ஏற்படாத வகையிலே, எந்தெந்த சர்டிபிகேட்டுகளுக்கு நாங்கள் கையெழுத்து போடலாம் என்பதை அந்தந்த ஃபாரங்களிலேயே குறிப்பிட்டால் நலமாய் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடுகூட, ஸ்காலர்ஷிப்பைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஜாதியினரும் ஒரு உட்பிரிவைக் காட்டி தாங்கள் பின்தங்கியவர்கள் என்று சொல்கிறார்கள். உதாரணமாக, ரெட்டியார் ஜாதியை எடுத்துக்கொண்டால், "கஞ்சம் ரெட்டியார்" என்ற உட்பிரிவு இருக்கிறது "கஞ்சன்" என்றால் பணத்தை செலவழிக்காதவன் என்று கூட தமாஷாகச் சொல்வதுண்டு. அதேமாதிரி நாயக்கரை எடுத்துக்கொண்டால், "கவரை நாயக்கர்" என்ற ஒரு பிரிவு இருக்கிறது. ராவுத்தரை எடுத்துக் கொண்டால், லப்பை என்ற உட்பிரிவு இருக்கிறது. ஐயர் ஜாதியை எடுத்துக் கொண்டாலும், "பட்டர்" என்ற பிரிவினர்கூட பின்தங்கியவர்களுடைய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. எல்லோரும் எங்களை கையெழுத்துப் போடும்படிக் கேட்டுக்கொள்கிறார்கள். இதற்கு ஏதாவது ஒரு வழி செய்து கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய திரு. மாதவன் அவர்கள், அமைச்சர்கள் வரக்கூடிய காலத்திலே ஆளுங் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் எதிர்க் கட்சியினரை மாலை போட விடுவதில்லை என்று சொன்னார். இது இரவல் பந்தலிலே கல்யாணம் செய்வதுபோல் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். (சிரிப்பு). நாங்கள் போட்டிருக்கிற பந்தலிலே, நாங்கள் நடத்துகிற நிகழ்ச்சியிலே, அவர்கள் வந்து அமைச்சருக்கு மாலை போட வேண்டுமென்று சொன்னால் அது எவ்வளவு நியாயமாக இருக்குமென்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் நடத்துகிற நிகழ்ச்சிகளில் நாங்கள் மாலை போடக்கூடாதென்று சொன்னோமா? அவர்கள் மாலை போடுவதை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு டூர் புரோகிராம் வருகிறது என்று சொன்னால், நாங்கள் முன்பாகவே முதலமைச்சர் அவர்களையும், மற்ற அமைச்சர்களையும் தேதி குறிப்பிடும்படிக் கேட்டுக்கொண்டு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறோம். புரோகிராம் அனுப்பப்படும்பொழுது எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத்தான் அனுப்பப்படுகிறது என்று அமைச்சர் அவர்களே சொன்னார்கள். அவர்கள் ஏற்பாடு செய்து நடத்தக்கூடிய நிகழ்ச்சிகளிலே ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் மாலை போட வேண்டாமென்று சொன்னார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இந்தமாதிரி குறைகளை யெல்லாம் நீக்கி, சட்டசபை மெம்பர்களுக்கு ஹாஸ்டல் சம்பந்தமாகவும், போக்குவரத்து சம்பந்தமாகவும், என்னென்ன வசதிகள் செய்து தர முடியுமோ, அவற்றைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. எஸ். முருகையன் :** சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, இந்த சட்டப்பேரவை மான்யத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. எஸ். முருகையன்] [9th March 1963

சென்ற ஆண்டு இதே விவாதத்தை நான் துவக்கி வைத்து, சில கோரிக்கைகளைச் சொல்லி இருந்தேன். அவைகள் எதுவும் இதுவரையில் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. நேற்றைய தினம் தான் பத்திரிகைகள் வைக்கப் பட்டிருக்கிறது, காரம் போர்டு வைக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு கடிதத்திலே குறிப்பிடப்பட்டிருந்தது. சட்டமன்றத்திலே நாம் பேசும் போது, ஒருவர் இருவர் நலத்தைக் கருதிப் பேசவில்லை. சட்டமன்றத்திலுள்ள அத்தனை அங்கத்தினர்களின் குறைகளைப் போக்குவதற்காகத் தான் சென்ற ஆண்டு அதை எல்லாம் எடுத்துச் சொன்னேன். ஒரு குறைகூட நேற்றுவரை நிவர்த்திக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கு ஆஸ்டலில் இருக்கக்கூடிய ஆபீசிலே மூன்று குமாஸ்தாக்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூன்று பேரும் எல்லா வேலைகளையும் செய்துக் கொண்டு வருகிறார்கள். ஏதாவது டெலிபோன் செய்ய வேண்டுமென்றால் வேறு வேலையைப் பார்த்துக்கொண்டு, இந்த வேலையையும் அவர்களால் செய்ய முடியவில்லை. ஆகவே அவ்விடத்திலேயே (டெலிபோன் இருக்குமிடம்) தனியாக ஒரு குமாஸ்தாவை வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியிருந்தால்தான் நாங்கள் ஏதாவது டெலிபோன் பேசுவதற்கு வசதியாக இருக்கும்.

மேலும், வெளியிலே இருந்து வரக்கூடியவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் எந்த அறையிலே தங்கி இருக்கிறார்கள் என்று கேட்டால், சரியான முறையிலே பதிலளிப்பது கிடையாது. இந்த முறையை மாற்றி, கேட்கிறவர்களுக்கு தகவல் சொல்லுவதற்கு, அங்கே இருக்கும் ஒரு பியூனைக் கொண்டாவது தகவல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கென்று தனியாக குமாஸ்தா போட வேண்டாம். இருக்கிறவர்களை வைத்தே இந்தக் குறையை நிவர்த்தி செய்யலாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். பல தொகுதிகளிலிருந்து வந்திருக்கும் அங்கத்தினர்களைத் தேடிக்கொண்டு வருகிறார்கள். என்னைத் தேடிக்கொண்டு வந்த ஒருவர் இரண்டு நாட்கள் ஹாஸ்டலிலேயே தங்கியும்கூட என்னைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தேர்தலைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் தேர்தல் நடக்க இருக்கிறது. இதற்கு முன்னதாக சில பஞ்சாயத்து தேர்தல்கள் நடைபெற்றன. பல கிராமங்கள் ஒன்றுகச் சேர்ந்து அவைகள் ஒரு பஞ்சாயத்தின்கீழ் இயங்கிவருகின்றன. அவைகள் தனித்தனியே பஞ்சாயத்துக்களாக இயங்கக்கூடிய நிலையில் இருந்தாலும் அவைகள் ஒன்றுக இருந்து ஒரே பஞ்சாயத்தின்கீழ் தேர்தல் நடைபெற்றன. இப்படி நாலைந்து கிராமங்கள் அடுத்தடுத்து இருந்தாலும் ஒரே பஞ்சாயத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகள் இரண்டு மூன்று மைல்கள் தூரத்தில் இருந்தாலும் ஒரே பஞ்சாயத்தாக இருந்து வருகிறது. அதை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டத்தில் ஒன்றுக இருக்க வேண்டும் என்று இருந்தாலும், சட்டத்தை மாற்றி தனித்தனியாக இருக்கும் முறையில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது சில இடங்களில் சட்டத்தில் சொல்லி இருக்கிறபடிகூட இல்லை. ஆகவே கிராமங்களை தனித்தனியாகப் பிரித்து தனித்தனி பஞ்சாயத்தின் கீழ் இருக்கும்படியாக அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அத்துடன் குறிப்பிட்ட ஒரு ரெவன்யூ வில்லேஜ் இருந்தால் அதற்கு இரண்டு கிராமங்கள் இருக்கலாம். அப்படி இருக்கக்கூடிய கிராமங்களையும் பிரித்து தனித்தனியான பஞ்சாயத்துக்களாக அமைக்க வேண்டும். அவைகள் தனித்தனியாக இயங்கக்கூடியதாக இருந்தால் அவைகளை தனியாகவே அமைக்கலாம். கிராமங்கள் 1½ மைல் தூரமாக இருந்தாலும் அவைகள் தனித்தனியாக இயங்கக்கூடியதாக இருந்தால அவைகளைப் பிரித்து தனித்தனி பஞ்சாயத்துக்களாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



9th March 1963] [திரு. எஸ். முருகையன்]

அடுத்தபடியாக நகரசபை தேர்தலைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். நகரசபை தேர்தல்கள் நடைபெறுவதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. குறிப்பாக நான் வசிக்கும் நகரமான திருவண்ணாமலை நகரசபையைப் பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அது சுமார் 23 வார்டுகள் கொண்டது, 28 அங்கத்தினர்களைக் கொண்டது. இப்பொழுது இருக்கக் கூடிய நிலையில் ஒரு வார்டில் பார்த்தால் 600 வாக்காளர்கள் இருக்கிறார்கள் மற்றொரு வார்டில் இரண்டாயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் 600 வாக்காளர்கள் இருக்கக்கூடிய வார்டில் தேர்ந்தெடுக்கப் பட்டு வருகிறவரைவிட 2,000 வாக்காளர்கள் இருக்கக்கூடிய வார்டில் அதிகப்படியான வாக்குகளை பெற்று தேர்ந்தெடுத்து வரவேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட பாரபட்சம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சுமார் பத்து வருடங்களுக்கு முன்னதாக வாக்காளர் ஜாபிதா நிர்ணயிக்கப்பட்டது. இப்பொழுதும் அப்படியேதான் இருக்கிறது. ஆகவே இதை மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. சமீபத்தில் தேர்தல் வரப்போகிறது, அதற்குள்ளாகவே இதை மாற்றி அமைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். தேர்தல் வைக்க வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போட்டவுடனேயே இதையும் மாற்றி அமைக்கும்படியாக உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக ஏற்படுத்திய வார்டு பிரிவினை அப்படியே இருந்துக்கொண்டிருக்கிறது, இந்தப் பாரபட்சம் இருக்கக்கூடாது என்பதற்காக இதை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதே போல பல நகரசபைகளில் இருக்கின்றன. ஆகவே எல்லாவற்றையும் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் சில இடங்களில் அதிகப்படியான ஸ்தானங்கள் இருக்கவேண்டும் என்று இருந்தாலும்கூட குறைந்த ஸ்தானங்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையும் பார்த்து திருத்தம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக வாக்குச் சாவடிகளை அமைக்கும்போது சில இடங்களில் அவைகளை தனிப்பட்டவர்களுடைய இடத்தில் அமைக்கிறார்கள், தனிப்பட்டவர்களுடைய இடத்தில் அமைப்பதால் பல தவறுகள் ஏற்படுகின்றன. பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு வோட்டர்களுக்கு ஏஜெண்டுகள் சீட்டு எழுதிக்கொடுக்க முடியவில்லை. ஏனென்றால் அது தனிப்பட்டவருடைய இடமாக இருப்பதால் அங்கு உட்காரக்கூடாது. என்று சொல்லி விடுகிறார்கள். அதனால் வோட்டுச் சாவடிகளை தனிப்பட்டவர்களுடைய இடத்தில் அமைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வோட்டர்களுக்கு வேண்டிய வசதி இல்லாமல் இருக்கிறது.

அடுத்தபடியாக வயது வந்தவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பென்ஷனைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். இது விஷயமாக ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்தாலும்கூட ஐந்து அல்லது பத்துப் பேர்களுக்குத்தான் பென்ஷன் கிடைக்கிறது. அதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகிறது. ஒரு தாலூகாவிற்கு ஒரு ரிவின்யூ இன்ஸ்பெக்டரைத்தான் போட்டிருக்கிறார்கள். அவருக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. பல வேலைகள் இருப்பதால் இதில் முழு கவனம் அவரால் செலுத்த முடியவில்லை. மனுக்களை நல்ல முறையில் பரிசீலனை செய்ய முடியவில்லை. ஆகவே இந்த மனுக்களை உடனடியாக பரிசீலனை செய்து முடிவுகாண அதிகப்படியானவர்களை நியமிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே இதை உடனடியாக நல்ல முறையில் செய்ய தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*திருமதி சி. குழந்தையம்மாள் : கனம் சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். சிறப்பாக முதியோர் பென்ஷன் பெறக்கூடியவர்கள் கோயம்புத்தூர் ஜில்லாவை பொறுத்த வரையிலும் சுமார் 2,500 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். அவர்களில் நிச்சயமாக நாலைந்து பேர்கள் மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் பென்ஷன் வாங்கி வருகிறார்கள். அப்படி ஒரு ரூபாய் பென்ஷன் வாங்குகிறவர்கள் டிரஷரிக்குச் சென்று காலை பத்துமணி முதற்கொண்டு சாயங்காலம் நான்கு

அல்லது 4½ மணிவரை காத்துக்கொண்டிருந்து வாங்கி வரவேண்டிய சூழ் நிலை ஏற்படுகிறது. இந்த நிலையை மாற்றி பாங்குகளில் அக்கவுண்ட் இருக்கிறவர்களுக்கு அந்த ரூபாயை அந்த பாங்கு அக்கவுண்டுக்கு மாற்றிக் கொடுக்கும் அளவில் சூழ் நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட ஒரு பழக்கம் மேல் நாடுகளில் இருப்பதாக தெரிய வருகிறது அதாவது அறுபது அல்லது அறுபத்தி ஐந்து வயதுக்குப் மேற்பட்டவர்கள் ரிடயராகி பென்ஷன் வாங்குகிற காலத்தில் அவர்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லாமலேயே வீட்டிலிருந்து கொண்டே தங்களுடைய பென்ஷன் வாங்கிக் கொள்ளக்கூடிய சூழ் நிலை இருப்பதாகத் தெரிய வருகிறது. சமீப காலமாக சாதாரணமாக 21, 22 வயதிலிருந்து 55 வயது வரையில் நல்ல முறையில் சர்க்காரில் வேலை பார்த்து விட்டு ஓய்வு பெற்று பென்ஷன் வாங்குகிற காலத்தில் இந்த பத்து ரூபாய் பென்ஷன் வாங்குவதற்குள் அவர்கள் படக்கூடிய கஷ்டம் ரொம்பவும் மோசமாக இருக்கிறது. அவர்களை வயோதிகர்களாக மதிக்கப் படுவதில்லை. இந்த இருபது ரூபாய் பென்ஷன் வாங்குவதற்குள் அவர்கள் எவ்வளவோ கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது. இதை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது இருபது ரூபாய் பென்ஷன் கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஓய்வு பெற்று பென்ஷன் வாங்குகிறபோது அவர்கள் வீடு வாசல் இருக்கிறது, குழந்தை குட்டிகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் காப்பாற்ற வேண்டும். இப்பொழுது அகவிலை உயர்ந்திருக்கிறது. இந்த நிலைமையில் அவர்களால் எப்படி சமாளிக்க முடியும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும். அதனால் அரசாங்கம் அவர்களுடைய நிலைமையை உத்தேசித்து அவர்களுக்கு உத்யோகத்தில் இருக்கிறவர்களுக்கு கொடுப்பது போன்று ரிடயரானவர்களுக்கும் பென்ஷன் தொகையுடன் பஞ்சப்படி தொகையையும் உயர்த்திக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக 1871-ம் ஆண்டு இந்த பென்ஷன் சட்டம் நிறைவேற்றப் பட்டது. அது முதற்கொண்டு அப்பொழுதுள்ள அடிப்படையில் கொடுக்கப் பட்டு வருகிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையையும் உத்தேசித்து அந்தச் சட்டத்தை மாற்றி அமைத்து அதிக பென்ஷன் வழங்குவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது 90 ஆண்டுகளுக்கு முன்னதாக ஏற்படுத்தப்பட்ட சட்டம். அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுறேன். பல்வேறு துறைகளில் நாம் எவ்வளவோ மாறுதல்களைச் செய்து கொண்டு வருகிறோம். அதைப்போலவே காலத்திற்கு ஏற்ற வகையில் இந்தச் சட்டத்தையும் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே சட்டத்தை வைத்துக்கொண்டிருப்பதால் அவர்கள் சந்தோஷமில்லாமல் இருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு, தொழிலாளர்களுக்கு நாம் எவ்வளவோ வசதிகளை எல்லாம் செய்துகொடுத்திருக்கிறோம். அதைப்போலவே இவர்களுக்கும் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே அதைத் திருத்தி அமைக்க இந்த ஆண்டிலேயே முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ரிடயராகும்போது அவர்களுக்கு ஒரு தொகையைக் கொடுக்கிறார்கள். அதன் பிறகு ஆறு மாதம் கழித்தோ அல்லது ஒரு வருடம் கழித்தோ மெடிகல் சர்ட்டிபிகேட் கேட்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்பட்ட பிறகு கொடுத்த தொகையில் 2,000 மோ அல்லது 5,000 மோ அதிகமாகக் கொடுக்கப்பட்டு விட்டதாக கருதி திருப்பிக் கொடுக்கச்சொல்லுகிறார்கள். ஆனால் அந்தத் தொகையை வாங்கிய பென்ஷனர் அதைக் கொண்டு வீடோ வாசலோ வாங்கியும் கலியாணம் முதலியவைகள் நடத்தியும் பணத்தை செலவு செய்து விடுகிறார்கள். அதன் பிறகு அந்தப் பணத்தைக் கட்ட வேண்டும் என்று சொன்னால் அவர்களால் கட்ட முடியவில்லை. அத்துடன் அந்தத் தொகைக்கு வட்டி வேறு கட்டச் சொல்லுகிறார்கள். அதனால் அவர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த முறை இல்லாமல் பென்ஷன் கொடுக்கும்போதே இன்னென்ன சர்ட்டிபிகேட்டுகள் வேண்டும் என்பதைச் சொல்லி அதை வாங்கி பணம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும். மற்றும் வட்டி கட்ட வேண்டும் என்று சொல்வதையும் நிறுத்திவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

9th March 1963] [திருமதி சி. குழந்தையம்மாள்]

அடுத்தபடியாக, சாதாரணமாக சட்டசபை உறுப்பினர்கள் 150 ரூபாய் வாங்குவதால் அதற்கு தொழில் வரி கட்ட வேண்டாம் என்று விதிவிலக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே பென்ஷனர்களுக்கும் தொழில் வரி கட்ட வேண்டாம் என்று அவர்களுக்கும் விதிவிலக்குக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் தொழில் புரிந்த பிறகு தான் அவர்களுக்கு பென்ஷன் கிடைக்கிறது. இந்தப் பென்ஷன் வாங்குவதற்கு அவர்கள் எந்தவிதமான தொழிலையும் செய்யவில்லை. அதனால் அவர்களிடமிருந்து தொழில் வரி வாங்குவது நியாயமாக இல்லை. ஆகவே அவர்களுக்கு தொழில் வரி கட்டவேண்டாம் என்று விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலை நாடுகளில் உத்தியோகத்தில் இருக்கும்போது முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு டிக்கட்டுகள் பெற்று வந்தவர்கள் ரிடையர் ஆனபிறகும் அதே சலுகையைப் பெறுகிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி சலுகைகளும், வைத்திய உதவிகளும் கிடைக்கின்றன. ஆனால் நம் நாட்டில் ரிடையர் ஆன அடுத்த நிமிடமே, இம்மாதிரிச் சலுகைகள் அவர்களுக்கு இல்லை என்று சொல்லுவோமானால், அவர்கள் குழந்தை குட்டிகளின் நிலைமை என்ன ஆகும் என்பதை நாம் யோசிக்க வேண்டும். ஒரேயடியாகச் சலுகைகளைக் குறைத்துவிடாமல், படிப்படியாக குறைக்க வேண்டும் என்று தான் நான் ஞாபகப் படுத்திக் கொள்ளுகின்றேன். ரிடையர் ஆவதற்கு முன் முதல் வகுப்பில் போய்க்கொண்டிருந்த ஒரு அதிகாரி, ரிடையர் ஆனவுடன், பென்ஷனின் அளவு குறைந்திருக்கிற நிலையில், மூன்றும் வகுப்பில் போகக்கூட முடிவதில்லை. போகாமல இருக்கட்டுமே என்று சொல்வதும் மனிதப் பண்பாடாக இருக்க முடியாது. 100% ரயில் கட்டணச் சலுகை அளிக்காவிட்டாலும் 50%, 60% ரயில் கட்டணச் சலுகையாவது கொடுக்கப் பட வேண்டும். பென்ஷனர்களுடைய குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை கொடுக்கவேண்டும். ஐந்தாறு குழந்தைகள் படித்துக்கொண்டிருக்கும் நிலையில் ரிடையர் ஆகிறவர் பென்ஷன் பணத்தை வைத்துக்கொண்டு படிக்க வைக்க முடியாது, அவர்கள் குழந்தைகள் படிக்காமலிருக்கவும் முடியாது. ஆக, கல்விச்சலுகை அவர்களுக்கு தொடர்ந்துஇருக்கவேண்டும். ஆனால் ஒரு சிறு திருத்தம் செய்துகொள்ளலாம். வேலை செய்யும் போது ஐந்து பேர்களுக்குக் கல்விச் சலுகை கொடுத்தால், ரிடையர் ஆன பிறகு நான்கு பேர்களுக்கு கல்விச் சலுகை கொடுக்கலாம். நான்கு வருஷங்கள் கழித்து மூன்று பேர்களுக்குக் கொடுக்கலாம். படித்துக்கொண்டே தான் இருக்கப்போகிறார்கள். படிப்படியாகப் படித்து முடித்துவிடுவார்கள். ஆகவே, கல்விச் சலுகையும் வைத்திய வசதியும் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டுமேதவிர, திடீரென்று எல்லா வசதிகளையும் குறைத்துவிட்டால் 25, 30 வருஷங்கள் ஊழியம் செய்துக்கொண்டிருந்தவர்களின் மனதில் எந்த விதமான உற்சாகமும் இருக்காது என்று நான் இந்த இடத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 10-00 a.m.

மேலை நாடுகளில் உத்தியோகத்தில் இருந்து ரிட்டையர் ஆனவர்களுக்கு என்ன மதிப்பு இருக்கிறது என்பதையும், அவர்களுக்கு என்ன வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் செய்தித் தாளில் நாம் பார்க்கிறோம். நம் நாட்டுப் பொருளாதார நிலையில் அப்படிப்பட்ட வசதிகளைச் செய்ய முடியாது. இன்றைக்கிருக்கும் யுத்த நெருக்கடியின் காரணமாக, இம்மாதிரி பிரச்னைகளை நாம் பேசுவதற்குக்கூட வாய்ப்பு இல்லை என்றாலும், யுத்த நெருக்கடி தொடர்ந்து நீடிக்கும் என்று நான் கருதவில்லை. இன்றைக்கில்லாவிட்டாலும், வருங்காலத்திலாவது இம்மாதிரி பென்ஷன் பெறக்கூடியவர்களும் நல்ல முறையில் மக்களாகக் கருதப் படவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். முதியோர்களுக்குக் கொடுக்கும் பென்ஷன் தொகையான இருபது ரூபாய்க்குக் குறையாமல் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து ரிடையர் ஆகிறவர்களுக்கும் பென்ஷன் தொகை வழங்கப்படவேண்டும். இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் பென்ஷன் வாங்குகிறவர்களும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இருபது ரூபாய் அளவுக்காவது பென்ஷன் தொகை கொடுக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எதிர்க் கட்சியிலுள்ள சில கனம் அங்கத்தினர்கள் பேசும்போது, செக்ரடேரியட்டில் உள்ளவர்கள் எம். எல். ஏ.-க்களைச் சரியாகக் கவனிப்பதில்லை என்று சொன்னார்கள். என்னுடைய சொந்த அனுபவத்தைச்

சொல்கிறேன். சென்ற ஆறு ஆண்டுக் காலத்தில், எந்த அங்கத்தினர் எந்த இலாகாவுக்குச் சென்றாலும் நல்ல முறையில் நடத்தப்படுகிறார். 'சட்டசபை அங்கத்தினர், என்று சொல்லும்போதே நல்ல மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்கள். அம்மாதிரி குறை கூறிக்கொண்டே இருப்பது நம்முடைய தகுதிக்குக் குறைவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒரு அங்கத்தினர் பேசினால் என்ன ? இரண்டு அங்கத்தினர் பேசினால் என்ன ? இலாக்காவில் உள்ளவர்கள் நல்ல முறையில்நடந்துகொள்ளக்கூடிய சமயத்தில், ' டிபார்ட்மெண்டில் இருக்கக்கூடியவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களை நல்ல முறையில் நடத்தவில்லை ' என்று சொல்வதென்றால், அது உண்மையிலேயே உண்மைக்குப் புறம்பான செய்தி என்பதை நான் மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளுகிறேன்.

அதற்குமேலே, கோயமுத்தூரிலிருந்தும், இன்னும் மற்ற ஊர்களிலிருந்தும் ரயில் மூலமாகச் சென்னைக்கு வரும்போது, கவர்ன்மெண்ட் எஸ்டேட்டுக்கு வரவேண்டுமென்றால், ரயில் நிலையங்களில் டாக்ஸிகள் கிடைப்பதில்லை, ஒன்றரை மைல் தூரம்தான் இருப்பதால் டாக்ஸிக்காரர்கள் வருவதில்லை. ஆளைப் பார்க்கிறார். எம். எல். ஏ. என்றால் ' டாக்ஸியில் ஏற வேண்டாம் ' என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. அதே போலத்தான், கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிலுள்ள ஹாஸ்டலிலிருந்து ரயில் நிலையங்களுக்குப் போகும் போதும் டாக்ஸிகள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. 8 மணி ரயிலுக்குப் போகவேண்டுமானால், ஆறு மணியிலிருந்தே டாக்ஸிக்காகப்போய்க் காத்திருக்கவேண்டியிருக்கிறது. ரயில் நிலையங்கள் சமீபத்தில் இருப்பதால் டாக்ஸிக்காரர்கள் தங்களுக்கு லாபம் இல்லை என்று கருதுவதாகத்தெரிகிறது. இந்த நிலைமை சீர்திருத்தப்பட வேண்டும். இதற்கெல்லாம் கூட சர்க்கார் பஸ்களையே அனுப்பிவைத்தால் கவலையில்லாமல் போய்விடும். சில சமயத்தில் டாக்ஸி கிடைக்கவில்லையென்றால், யார் காராவது நிற்கிறதா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. அந்தக் குறையும் நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

அமைச்சர்கள் சுற்றுப்பயணங்களின்போது காங்கிரஸ் உறுப்பினர்கள்தான் அவர்களுடன் இருக்கிறார்கள், அவர்கள்தான் வரவேற்பு கொடுக்கிறார்கள் என்ற வகையில் எல்லாம் இங்கே எதிர்த் தரப்பிலிருந்துபேசப்பட்டது. அமைச்சர்களைப் பல நிகழ்ச்சிகளுக்கு வரவேண்டுமென்று முன்கூட்டியே ஏற்பாடு செய்து வைத்திருப்பார்கள் காங்கிரஸ்காரர்கள். எதிர்த்தரப்பிலிருப்பவர்கள் அதைப்பற்றிக் கவலை இல்லாமலே இருந்துவிட்டு, செய்தித்தாளைப் பார்த்துவிட்டு, நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கும்போது, தாங்கள்தான் அதை ஏற்பாடு செய்ததுபோல "show" காட்டி, பொதுமக்களை ஏமாற்ற வேண்டுமென்று நினைப்பார்களானால், பொதுமக்கள் அதில் மயங்கிவிடமாட்டார்கள் என்பதை நான் அவர்களுக்கு இந்த இடத்தில் ஞாபகப்படுத்துகின்றேன். அவர்கள்தான் ஏதோ கஷ்டப்பட்டு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தவர்கள் என்று நினைத்துக்கொள்ளவேண்டாம் என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

***திரு. காஞ்சி மணிமொழியார் :** சட்ட மன்றத் துணைத்தலைவர் அவர்களே, இன்றையதினம் நம் எதிரில் நான்கு மானியக் கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் மீதுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் அவர்கள், மந்திரிகளைக் காங்கிரசுக்காரர்கள் வரவழைத்து, அவர்களுக்காக எல்லா வகையான ஏற்பாடுகளும் செய்து, கூட்டங்களையோ மற்ற நிகழ்ச்சிகளையோ நடத்தும் நேரத்தில், ஏதோ நாங்கள் அங்கே சென்று, அதன் மூலமாகப் பெருமை அடையப் பார்க்கிறோம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே அவர்கள் ஏற்பாடு செய்வது வாஸ்தவமாக இருக்கலாம். ஆனால், அவர்கள் ஏற்பாடு செய்து அழைக்கிற மந்திரிகளுக்கு வேண்டிய செலவுகள் அத்தனையும் அந்தந்த நிகழ்ச்சியிலிருந்து தரப்படுகிறதா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். பொதுவாக, எந்த நிகழ்ச்சிகளுக்கு மந்திரிகள் சென்றாலும், செலவுகள் அத்தனையும் பொது மக்களுடைய வரிப் பணத்திலிருந்துதான் செலவழிக்கப்படுகிறது. ஆகையால், நாங்களும் பொது மக்கள் பிரதிநிதி





என்ற காரணத்தால், யார் ஏற்பாடு செய்திருந்தாலும் அந்தப் பொது நிகழ்ச்சிகளிலும் அந்தப் பொதுக் கூட்டங்களிலும் கலந்துகொள்ளுவதற்கான வாய்ப்பு நிச்சயமாக ஏற்படவேண்டும். பொதுவாக, எந்தக் கட்சிக்காரரும் அந்தந்தக் கட்சியின் சார்பான நிகழ்ச்சிகளுக்கு எந்த மந்திரியையும் கூப்பிடுவதில்லை. பொது நிகழ்ச்சிக்காகத்தான் அழைக்கிறார்கள். கட்சியின் சார்பில் அழைக்கப்பட்டால் அந்தச் செலவுகள் பொதுவாக சர்க்காரினுடைய செலவிலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்று முன்பே ஒரு முறை கேள்விக்கு இங்கே பதிலளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் சொல்கிறேன்—பொது நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்படுகிற நேரத்தில் எல்லா அரசியல் கட்சிகளைச் சார்ந்த எம். எல். ஏ.—க்களுக்கும் அழைப்பு அனுப்பச் செய்து, அவர்களும் அதிலே கலந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் அந்தத் தொகுதியைப்பொறுத்த வரைக்கும் அவர்களுக்கும் அக்கறை இருக்கிறது என்ற காரணத்தால் இதை நான் சொல்கிறேன். இன்னொரு கனம் உறுப்பினர் பேசும்போது " இப்பொழுது இந்த வேனிற் காலத்தில் சட்டமன்றம் குளு குளு இடத்தில் நடக்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ஆனால், எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் அந்தக் குளிரைத் தாங்க பயப்படுகிற காரணத்தால் எதிர்க்கிறார்கள் " என்று சொன்னார்கள். கனம் உறுப்பினர் குறிப்பிடுகிறபடி அந்தக் குளிரைக் கண்டு பயந்து அல்ல, இப்பொழுது வடக்கே நம்முடைய சைனியங்கள் அனுபவிக்கிற அத்தகைய குளிரைக்கூட நாங்கள் அனுபவிக்கத் தயாராக இருக்கிறோம். நாங்கள் பயப்படுவது அதனால் ஏற்படும் வீண் செலவுகளுக்காகத்தான். வீணான செலவுகள் ஏற்படாமல் இருக்குமானால், தண்டச் செலவுகள் பொது மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவழிக்கப் படாமலிருக்குமானால், அந்தச் செலவை அங்கே சென்று வருகிற செலவை—அந்தந்த உறுப்பினரே ஏற்றுக்கொள்வார்களானால் அதற்காகக்கூட நாங்கள் ஒத்துக்கொள்ளத் தயாராகயிருக்கிறோம். மந்திரிகளின் அலுவலகம் இங்கிருந்து போய் வருவதற்கான செலவுகளையும், அங்கே இருக்கும் நேரத்தில் ஏற்படுகிற வீணான செலவுகளையும் நாங்கள் எதிர்பார்த்துத்தான், நம்முடைய குளிர் வசதிக்காக பொது மக்களுடைய பணத்திலிருந்து செலவழிக்கக்கூடாது என்ற காரணத்தால் தான், தவிர்க்கிறோமே தவிர, குளு குளு நிலைமையைத் தாங்க முடியாது என்பதற்காக அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொதுவாக, இந்த மன்றத்தில், கனம் உறுப்பினர்களில் சிலர், இரயிலுக்குப் போக வரக் கஷ்டமாக இருப்பதாகவும், அதற்காக ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். நான் அதைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, சென்னையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உறுப்பினர் ஆனாலும் சரி, அல்லது வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வந்து இங்கே தங்கியிருக்கும் உறுப்பினரானாலும் சரி, அவர்களுக்கெல்லாம் சென்னை சர்க்காருக்குச் சொந்தமான சென்னை நகர பஸ்களில் கட்டணமின்றிச் செல்வதற்கு வாய்ப்புத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்! அத்தகைய வாய்ப்பு அளிக்கப்படுமானால் இங்கே அவர்கள் வருகின்ற சமயத்தில், தங்கள் தங்கள் தொகுதி சம்பந்தமாகப் பல அலுவலகங்களுக்குச் சென்று, அந்தந்தத் தொகுதிக்குள்ள குறைகளைப்பற்றிக் கேட்டு அறியவும், அவற்றை நீக்குவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளவும் அதிகச் செலவு ஏற்படும் காரணத்தால், எல்லோருக்கும் வாய்ப்பாகவும் வசதியாகவும் இருக்கும் என்று கருதி எல்லா உறுப்பினர்களுக்கும், சென்னையில் தங்கும் நேரத்தில் அவர்களுக்குக் கட்டணம் இல்லாமல் அரசினர் பஸ்களில் செல்ல வசதி செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பொதுவாக, 69 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட ஒரு தொகுதி இருக்கிறது. 1 லட்சம் 30 ஆயிரம் வாக்காளர்கள் கொண்ட தொகுதியும் இருக்கின்றது. என்னுடைய தியாகராயநகர் தொகுதியில் 1 லட்சம் 29 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதி கிட்டத்தட்ட 15 மைலுக்கு மேற்பட்ட நீளமுடைய தொகுதியாக இருக்கிறது, தொகுதிகளைப் பிரிக்கும்போது, சுமார் ஒரு லட்சம் வாக்காளர்கள் மட்டும் இருக்கும்படியாக, அதற்குள் அடங்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். தொகுதியின் பரப்பளவையும் குறைந்த அளவுக்குக் கொண்டுவர

[திரு. காஞ்சி மணிமொழியார்] [9th March 1963

வேண்டும். இப்பொழுதிருக்கும் முறையில் 30, 31 தொகுதிகள் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களைக்கொண்ட தொகுதிகளாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒரு லட்சம் வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகளாக மாற்றியமைக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படி இருந்தால்தான் அந்தத் தொகுதியிலுள்ள பல இடங்களுக்குச் சென்று குறைகளை, கஷ்டங்களை நேரில் தெரிந்துகொள்ளுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இன்று நான் சட்டசபைக்கு வருவதற்காக ஏழேகால் மணிக்கே இரயிலடிக்கு வந்தும், 8-35 மணிக்குத்தான் இங்கு வந்து சேர முடிந்தது. அதற்குக் காரணம், இரயிலிலும், குறிப்பாக முதல் வகுப்பில் இருந்த நெருக்கடியாகும். நான் ஏறியிருந்த முதல் வகுப்புப் பெட்டியில் இரண்டு பேர் உட்கார வேண்டிய பெஞ்சியில் மூன்று பேர உட்கார்ந்திருந்ததோடு, நின்றுகொண்டு பிரயாணம் செய்தவர்களின் எண்ணிக்கை மட்டும் 42 ஆகும். அந்தப் பெட்டியில் 30 பேர்கள்தான் பிரயாணம் செய்யலாம் என்ற வரையறை குறிப்பிடப்பட்டு இருந்தும், நின்றுகொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை மட்டும் 42 என்கிற அளவுக்கு மின்சார ரயிலில் நெருக்கடி இருந்துகொண்டிருக்கிறது. இப்படி நெருக்கடி இருப்பதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் நெருக்கடி காரணமாக பிரயாணமே தடைப்பட்டு விடக்கூடாது. நெருக்கடி உள்ள நேரத்தில் ரயில்வே இலாகாவினர் தக்க வசதி செய்து தரவேண்டும் என்பதாக இந்த அரசு கேட்டுக்கொள்ள வேண்டும் என்று யோசனை சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக முதல் வகுப்பில் பூக்கூடைகளை வைத்துக்கொண்டு ஏறிவிடுகிறார்கள். பூக்கூடைகள், உணவுக் கூடைகள் முதலியவற்றை வைக்க வசதியுள்ளதாக மில்க் வான் போல 'food van' என்று அந்த வண்டியிலேயே தனியாக ஒரு பெட்டி சேர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் காலை எட்டு மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4½ மணி முதல் 7 மணி வரையிலும் முதல் வகுப்புப்பெட்டி இன்னொன்று சேர்ப்பதற்கும் யோசனை கூறவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேல் சபைக்கு கிராஜ்வேட் தொகுதி, ஆசிரியர் தொகுதி என்று ஆறு, ஆறு உறுப்பினர்களுக்கு இடம் இருக்கின்றது. இந்த 12 பேர்களுமே க்ராஜ்வேட்டுகளாக வந்துவிடுகிறார்கள். ஆரம்பக் கல்வி எல்லாக் கல்விக்கும் அடிப்படை. மேல்நிலைக் கல்விக்கும், தொழிற் கல்விக்கும் அடிப்படையாக இருக்கிற ஆரம்பக் கல்வியைப் போதிக்கிற ஆசிரியர்களுக்கு கட்டாயம் மேல்சபையில் ஒரு பிரதிநிதித்துவம் கொடுப்பதற்குத் தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை சட்டசபையினர் விடுதியில் வந்து தங்கக்கூடிய ஒரு சிலருக்கு ஹோட்டல் சாப்பாடு உடம்புக்கு ஏற்றதாக அமையாத காரணத்தினால் அவர்கள் குடும்பத்தோடு வந்து தங்க விரும்புகிறார்கள். இப்போது குடும்பத்தோடு வந்து தங்குகிறவர்களுக்கு எவ்வித வசதியும் கிடையாது. ஆகவே அங்கத்தினர்கள் குடும்பத்தோடு வந்து தங்குவதற்கான இட வசதியையும் செய்து தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சென்னை நகரத்தை "ஏ" பிரிவு நகரமாக்க தக்க நடவடிக்கை எடுத்து வருவதாக சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. விரைவில் இதை "ஏ" பிரிவு நகரமாக ஆக்கித்தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கம்யூனிடி சர்டிபிகேட்டுகளைப் பெறுவதற்காக மாணவர்கள் தாசில்தாரிடம் சென்றால் விசாரணை செய்து தருவதற்கு ஒரு மாதத்துக்குமேல் ஆகுமெனக்கூறி விரட்டிவிடுகிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் சர்டிபிகேட் கொடுத்த பிறகாவது அவர்கள் உடனடியாகத் தந்தாகவேண்டும். ஆனால் கோடம்பாக்கத்திலுள்ள தாசில்தார் ஒருவர், தி.மு.க.வைச் சேர்ந்த எம். எல். ஏ. சர்டிபிகேட் கொடுத்திருப்பதால்தான் கையெழுத்திட முடியாதென மறுத்திருக்கிறார். என் கையெழுத்து பெற்றவர்கள் 10 பேர்கள் வரையில் இந்தப் புகாரைச் சொல்லியிருக்கிறார்கள் அப்படி ஏதாவது தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறதா? அல்லது சர்க்காரின் நல்ல பிள்ளை என்று காட்டிக்கொள்வதற்காக இப்படி நடந்துகொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன். சட்டசபை உறுப்பினர்கள் யார் கையெழுத்துப் போட்டாலும் அதை அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



9th March 1963] [திரு. காஞ்சி மணிமொழியார்]

இன்னும் எண்ணெய் வளம், கனி வளம் தமிழகத்தில் ஆங்காங்கே இருக்கிறது என்று அடிக்கடி செய்திகள் வெளிவருகின்றன. அதைப் பற்றியெல்லாம் விரைவிலே ஆராய்ச்சி செய்து எங்கெங்கே எதை எதைப் பயன்படுத்தி இந்த நாட்டை வளப்படுத்த முடியுமோ அவற்றையெல்லாம் மேற்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தின் மீது பிரேரிக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்:** கனம் சட்ட மன்றத் துணைத்தலைவர் அவர்களே, இன்று இந்தச் சட்ட மன்றத்தின் முன்பு கொண்டு வந்திருக்கிற சட்ட மன்றத்துறை மானியக் கோரிக்கையையும், தேர்தல் துறை மானியக் கோரிக்கையையும், மற்ற விஷயங்களையும் வரவேற்று நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

என்பது குறள். பழந் தமிழ் நாட்டிலே அரசாட்சி என்பது குடிகள் வேறு, மன்னன் வேறு என்ற நிலைமையில் ஆளப்பட்டு வந்தது என்பதை நம்முடைய நூல்கள் வாயிலாக அறிகிறோம். பழங்காலத் தமிழகம் என்று சொல்கிறபோது இப்போது நடைபெறுகின்ற ஆட்சிக்கு முன்பு நடந்த அந்நிய அரசாட்சியும் கூட ஓர் அளவுக்கு மன்னனையே தலைவனாகக் கொண்டு நடைபெற்றது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். சுதந்திரம் கிடைத்த பின்பு நம்முடைய பரந்த பாரத நாடு எவ்வாறு இயங்கவேண்டுமென்ற நிலையை ஆராய்ந்து அரசியல் நிர்ணய சபையில் இந்நாடு குடியரசாகத்தான் இயங்கவேண்டுமென்ற ஒரு திட்டத்தை வகுத்துக்கொண்டோம். அதன்படிக்கு இன்று இப்பாரத தேசம் குடியரசு நாடாகத் திகழ்கின்றது. அதைத்தான் பாரதியார்,

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்"

என்று கூறியிருக்கிறார். குடியரசு என்கின்ற ஒரு பெரிய நிலை ஆட்சியில் பிரதிபலிக்க வேண்டுமென்றால், அது சட்ட மன்றங்களின் மூலமேயாகும் என்றதோர் உண்மையை நாம் அறிந்திருக்கிறோம். சட்ட மன்றங்களும், அங்கு நடக்கின்ற நடவடிக்கைகளும்தான் ஒரு குடியரசு நாட்டின் முக்கியமான அம்சம். அந்த ஒரு வகையில் இம் மாமன்றத்தின் நடவடிக்கைகளுக்காக கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்பது அங்கத்தினர்கள் எல்லோருடைய கடமையாகும் என்பதை நான் குறிப்பிடத் தேவையில்லை.

நம்முடைய தமிழகத்தில் பழைய காலத்தில் மொழியை அடிப்படையாகக் கொண்டும், அரசாட்சியை அடிப்படையாகக் கொண்டும் பல மாமன்றங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தமிழ் வரலாற்று நூல்களினால் நாம் தெரிந்து கொள்கிறோம். அதில் மொழியை அடிப்படையாகக்கொண்டு அமைந்த மன்றங்கள் முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்றாக இருந்திருக்கின்றன. அதில் முதல் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அகத்தியனார் இருந்தார் என்றும், அப்போது அகத்தியம் என்கின்ற இலக்கண நூல் ஆக்கப்பட்டது என்றும், இடைச் சங்கத்திற்கு தொல்காப்பியர் தலைவராக இருந்தார் என்றும், அப்போது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் உண்டாக்கப்பட்டது என்றும், கடைச்சங்கம் நக்கீரர் முதலிய புலவர்களைத் தலைவர்களாகக் கொண்டு திகழ்ந்தது என்றும் நாம் அறிவோம்.

அதற்கு மேலே அரசாட்சியை அடிப்படையாகக்கொண்டு அமைந்த பல மன்றங்களைப்பற்றியும் நாம் வரலாற்று நூலிலே தெரிந்து கொண்டிருக்கிறோம். சேரன் செங்குட்டுவன், கரிகால் பெருவளத்தான், மனுநீதிச் சோழன், சுந்தர பாண்டியன் போன்ற முப்பெரும் மன்னர்களின் ஆட்சியிலே பல ஆட்சி மன்றங்கள் இருந்திருக்கின்றன.

குறிப்பாக கடைச்சங்கத் தலைவராக இருந்த நக்கீரர் இறைவனைப் பார்த்தே நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று [illegible] என்பதான் ஒரு வரலாற்றை நாம் அறிகிறோம். இதில் இருந்து

[திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்] [9th March 1963

தமிழகப் பண்பாடு என்பது யாரும் அஞ்சாத திண்மை உடையதாக, நீதியும், நேர்மையும் கொண்டதாக மிளிர்ந்தது என்பதை உணர பல வரலாற்றுச் சான்றுகளைக் காணலாம். இந்த வரலாறுகளை எல்லாம் நாம் படிக்கிறபோது தெரிந்து கொள்வது அந்த உண்மைதான். அதற்குமேல் மனுநீதிச் சோழன் சட்ட மன்றத்திலே தலை வாயிலில் கட்டிய ஆராய்ச்சி மணியை ஓர் ஆ அசைத்ததாகவும், அந்த ஆ-வுக்காக தன் மகனைத் தேர்காலில் வைத்துக் கொன்றான், தன் மகன் ஆவின் கன்றைத் தேர் காலால் அரைத்துக் கொன்றதால் அவனும் இறந்தே படவேண்டும் என்று நீதி வழங்கினான் என்றால், உறவு முறைகூடப் பார்க்காமல் நீதியை நேர்மையாகவும், குற்றமற்றதாகவும் கொண்டிருந்தார்கள் என்பதைத் தான் அது உணர்த்துகிறது. இப்படி தமிழகப் பண்பாடு ஈடும் இணையும் இல்லாத வகையில் நேர்மையையும், நீதியையும் அடிப்படையாகக் கொண்டு திகழ்ந்திருப்பதை நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். அந்த முறையிலே பணியாற்றக் கூடிய பலவிதமான மன்றங்களைக்கொண்ட தற்காலத்திலும், இன்று நடக்கின்ற இந்த மாமன்றம் ஒப்பற்று விளங்குகிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முக்கியமாக, சட்டமன்றம் என்றால், அதிலே உயிர்நாடியாக இயங்கு கின்றவர் மன்றத்தின் தலைவர். இன்று நம் மன்றத்தின் தலைவராக வீற்றிருக்கும் பெரியாரவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து வந்த வர்கள். திருநெல்வேலி என்று சொன்னாலே —திரு—அழகிய, நெல்—நெல்லை விளைகின்ற, வேலி—வயல்களால் சூழப்பட்டிருக்கின்ற இடம், என்று பொருள்படும் என்று நான் நினைக்கிறேன். அவர் பிறந்த மாவட்டத்தின் நிலைமைக்கேற்ப, அந்தச் சூழ்நிலைக்கேற்ப, அவர் அறிவும் ஆற்றலும், உருவும் திருவும், பண்பும் அன்பும், அதோடு கண்டிப்பும் மிகவும் கொண்டு இந்த மன்றத்தை நடத்துகிறார்கள் என்பது யாவரும் ஒப்புக் கொள்ளவேண்டிய ஒரு விஷயம். அப்படிப்பட்ட ஒரு பெரியாரை இம்மா மன்றத்தின் தலைவராகப் பெற்றிருப்பது இந்த மன்றத்தின் ஒரு பெரிய பாக்கியமாகும். துணைத் தலைவராக விளங்குகின்ற பெரியாரவர்கள் பார்த்த சாரதி என்ற அழகான பெயரைக் கொண்டவர்கள். பார்த்தனுக்குச் சாரதி யாக, வழி காட்டியாக, இருந்த கண்ணபிரானைப் போன்ற அவர்கள் நமக்கும் வழிகாட்டியாக இருக்கிறார்கள். அவர்கள் துணைத் தலைவராக அமைந்தது நமக்குக் கிடைத்த பாக்கியம் என்றே கருதுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக மன்றத்தின் முக்கிய அம்சமாக விளங்கக் கூடியது, ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியுமாகும். இந்த இரண்டுந்தான் மன்றத்தில் செயலாற்றக்கூடிய பெரிய அம்சங்கள். ஆளுகின்ற கட்சியாக இன்று நமக்கு வாய்த்த, நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியானது சுதந்திரத்திற்காக மகாத்மா காந்தியடிகள் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப் பட்டு பொறுப்புணர்ச்சியோடு மக்களுடைய நிலைமையை அறிந்து அதற் காகவே பாடுபட்டு வந்த, பாடுபட்டுக் கொண்டிருக்கிற அரும் பெரும் கட்சியாகும். குறிப்பாக மக்களுடைய பணிக்கென்றே பிறந்து உயிர் வாழ்ந் திருக்கக்கூடிய நேருஜி, காமராஜ், பக்தவத்சலம் போன்றவர்களுடைய வழிகாட்டுதலின் கீழ் காங்கிரஸ் கட்சியானது அரும் பணிகளைச் செய்து வந்து கொண்டிருக்கிறது என்பது யாவரும் ஒப்புக் கொள்ளவேண்டிய விஷயம். இங்கு ஒன்பது பேர்கள் மந்திரிகளாக இருக்கிறார்கள். சென்ற ஆண்டிலே கவர்னர் பெருமான் உரையிலே கூறியதுபோல், "முதிர்ந்த அனுபவ அறிவும், இளமைத் துடிப்பும் ஒருங்கே அமைந்த மந்திரி சபை" என்பது முற்றிலும் உண்மை என்று பாராட்டுகிறேன். அந்த நிலைமையில் அமைந்த மந்திரி சபை தன்னுடைய பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி கொண்டு வருகிறது என்பதைப் பார்க்குமிடத்து நான் அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்தது எதிர்க் கட்சிகள். எதிர்க்கட்சியினரைப் பொறுத்து ஒன்று கூற ஆசைப்படுகிறேன். இந்தத் தமிழ்நாடு சட்ட மன்றத்தைப் பொறுத்தவரை அன்பும் பண்பும், ஆற்றலும் இணக்கமும் கொண்ட எதிர்க் கட்சிகள் தான் இருக்கின்றன என்பதை நான் நிச்சயமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நான் ஒன்றும் காக்காய் பிடிப்பதற்காகச்



9th March 1963] [திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்]

சொல்லவில்லை. (சிரிப்பு). அதற்கு அவசியமும் இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், அந்தப் பண்பிலே அவை செயலாற்று கின்றன என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். சீதை சொல்கிறாள் இராவணனைப் பார்த்து—

கடிக்கும் வல்லரவும் கேட்கும் மந்திரம் களிக்கின்றோயை
அடுக்கும் ஈது அடாது என்ற ஆன்ற ஏதுவோடு அறிவுகாட்டி
இடிக்குனர். இல்லை ; உள்ளார் உன்னியது உன்னி உன்னை
முடிக்குனர் என்றபோது முடிவன்றி முடிவாது உண்டோ.

"உன்னுடைய மந்திரிகள் எல்லாம் எப்படி அமைந்திருக்கிறார்கள் என்றால் நீ எதை நல்லது என்று சொல்லுகின்றாயோ அதற்கு "ஆமாம்" என்று சொல்லக் கூடியவர்கள் மந்திரிகளாக வாய்த்திருப்பதால் நீ தொலைவதைத் தவிர வேறு வழி கிடையாது. மந்திரிகள் எப்படி இருக்க வேண்டுமென்றால், இது அடுக்கும், இது அடாது என்று அறிவுறுத்துகிறவர் களாக இருக்க வேண்டும்", என்று சீதை கூறுகின்றாள். அந்தந்தச் சமயத்தில் இது தக்கது, இது தகாதது என்ற ஆன்ற ஏதுவோடு விளக்கங்களைக் கூறி, உண்மை நிலைக்கு விளக்கங்களைக் கூறி, இடித்துச் சொல்லக்கூடிய எதிர்க் கட்சிகள் இல்லாவிட்டால் எந்த அரசாங்கமும் நன்றாக நடக்க முடியாது. காரணம், முழுவதும் குற்றம் இல்லாத மனிதன் உலகத்தில் கிடையாது. முழுவதும் குற்றமுள்ள மனிதனும் உலகத்தில் கிடையாது. இயற்கையே அது. உலகில் எல்லாமே நல்லது என்ற பொருளும் இருக்காது, எல்லாமே கெட்டது என்ற பொருளும் இருக்காது. எந்த ஒரு அரசாட்சியாக இருந்தாலும் நிச்சயமாகக் குறைகள் வரும். குறைகளை அந்தந்தச் சமயத்தில் எடுத்துக் காட்டி இடிக்கின்ற பண்பு கொண்ட எதிர்க் கட்சிகள் தமிழகத்திலே அமைந்திருக்கின்றன என்பதை நான் நிச்சயமாகக் கூறவிரும்புகிறேன்.

நம்முடைய பாரத தேசத்துக்குத் திடீரென்று ஆபத்து வந்தது. ஆபத்துக் காலத்தில் எல்லோரும் எல்லாவற்றையும் மறந்து—

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு,"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கொப்ப, வலது கை கொடுத்தது இடது கைக்குத் தெரியாத வகையில் எம். ஜி. ஆர். அவர்கள் ஒரு லட்சம் ரூபாய் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்தார் என்று அறிந்தபோது பெரிதும் பரவசமடைந்தேன். அந்த மாதிரி எதிர்க் கட்சிகள் நாட்டுக்கு எப்போதும் தேவை. சமயத்தில் காலை வாரி விட்டுவிட்டு மற்றச் சமயத்தில் குலாவுவதில் அர்த்தமில்லை. செய்ய வேண்டிய பணிகளைக் காலாகாலத்தில் செய்து, குறைகளை இடித்துக் கூறுகின்ற அரசியல் கட்சிகள் இருக்குமானால் ; அந்த நாட்டிற்கு என்றுமே பழுது வராது என்பதைக் கூறமுடியும். சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கம்பனைப் போன்று வீற்றிருக்கிறார் கள். மற்றத் தலைவர்களும் சிறந்த முறையிலே விளங்குகின்றார்கள். இந்த மாதிரி அருமையான எதிரிக் கட்சிகள் வாய்க்கப்பெற்ற இந்த மாமன்றம் நிச்சயமாகப் பெருமையடைகிறது.

கடைசியாக, பெண் அங்கத்தினர்களைப்பற்றி ஒரு உரையாவது கூறாமல் விட்டுவிட்டால் குறை படும் என்று கருதுகிறேன். தமிழ் நாட்டில் பெண்பாங்குக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்ற பெண்கள் நம்முடைய மாமன்ற அங்கத்தினர்களாக வந்திருக்கிறார்கள். அது சாலவும் பொறுத்த முடையது, வரவேற்கத்தக்கது பெண்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி வேண்டாமென்று நான் முன்பு சொன்னேன். இப்போது எனக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. இன்று நடந்த சம்பவத்திலிருந்து. இவர்கள் கையில் துப்பாக்கியும் இருந்து விட்டால் என்ன ஆகுமோ என்ற பயம் வந்து விட்டது. நல்ல வகையில், பெண் குலத்திற்கே சிறப்பளிக்கக்கூடிய வகை யில் பெண் அங்கத்தினர்கள் நம் சபையில் இருப்பது நம்முடைய பெரிய பாக்கியம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

சபை அங்கத்தினர்களைப் பற்றிச் சொல்லாவிட்டால், சபைக்கே பொலிவு இல்லாமல் போய்விடும். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் "சட்டமன்ற அங்கத்தினர்களுடைய வேலை என்ன என்பதைப்

பற்றித் தெளிவாக்க வேண்டும்" என்று சொன்னார்கள். உண்மையிலேயே அது கொஞ்சம் சிக்கலான விஷயந்தான். சட்ட மன்றக் கூட்டம் நடைபெறுகின்றபோது அவர்களுடைய பணி என்ன என்பது தெளிவாகவே இருக்கிறது. ஆனால் அவர்களுடைய தொகுதியிலே அவர்களுடைய பணி என்ன என்பதை உன்னிப் பார்க்கின்ற நேரத்தில், அவரவர்களுடைய தொகுதியிலே உள்ள நிலைமையை அறிந்து, மக்களுக்கு என்னென்ன தேவைப்படுகின்றன என்பதை அறிந்து, மக்கள் படுகின்ற பாட்டின் தன்மைகளையெல்லாம் சரியான வகையிலே அறிந்து, அவற்றை இந்த மன்றத்திலே பிரதிபலிப்பதுதான் அங்கத்தினர்களுடைய பணியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். (மணி அடிக்கப்பட்டது). இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, நம் நண்பர் மாதவன் அவர்கள் இந்தச் செயலகத்தில் உள்ள செயலாளர்களைப்பற்றி ஒரு குறிப்பைக் கூறினார்கள். மற்றத் துறைகளில் உள்ள செயலாளர்களிடம் சென்று வரவேண்டிய நிலை எனக்கு வரவில்லை. ஆனால் சட்ட மன்றத் துறையைப் பொறுத்தவரை இத் துறையில் இருக்கும் செயலாளர்களைப்பற்றியும் அங்கு பணிபுரிகிற மற்ற அலுவலர்களைப்பற்றியும் இந்த மன்றத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. விருந்தினர்களை வரவேற்கும் முறையில் எப்படி வரவேற்க வேண்டும் என்பதைப் பற்றிய திருக்குறளை விளக்கும்போது, அதற்கு உரை எழுதுகிற பரிமேலழகர் அவர்கள் கூறுகிறார்கள், "செய்மைக் கண் கண்ட வழி இன்முகமும், அதுபற்றி நண்ணிய வழி இன்சொல்லும், அதுபற்றி நண்ணியவழி இனிது ஆற்றலும் என இம்மூன்றும் விருந்தோம்புவாரிடத்தில் அமைய வேண்டும்" என்கிறார்கள். இன்முகம், இன்சொல், இனிய செயல் என்ற அந்த மூன்று பண்பும் திருவாளர் 11-00 a.m. ஹனுமந்தப்பா அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்த செயலகத்தில் பணிபுரியும் அத்தனை அலுவலர்களிடத்திலும் இருக்கின்றன என்பதைக் கூறாமல் போனால், நான் நன்றி மறந்தவனாவேன். ஆகவே அதுபற்றி கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இம் மன்றத்திலிருக்கிற உறுப்பினர்கள் அரசாங்கத்தினிடமிருந்து சரியான புள்ளி விவரங்களை எதிர்பார்க்க வேண்டியவர்களாவார்கள். திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிற ஆட்சி முறையில் புள்ளி விவரங்கள் சரியாகத் தரப்பட வேண்டும். அது தரப்படவில்லை என்ற செய்தி நமக்கு இப்போது தெரிகிறது. சென்ற கூட்டத்தின்போது தஞ்சை சாகுபடித் திட்டத்தைப் பற்றிய ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் அளித்த விடை அத்திட்டம் அவ்வளவு நல்ல திட்டமாக இல்லை, ஆக்கம் காட்டுவதாக இல்லை என்று தெரிவிப்பதாக இருந்தது. அதையொட்டி செய்தித் தாள்கள் எல்லாம் தலையங்கங்கள் எழுதத் தொடங்கிய பிறகு அத்துறை டயரக்டர் அவர்கள், தஞ்சையில் சென்ற ஆண்டு ஆகஸ்ட் 21-ம் தேதி ரோட்டரி கிளப்பில் பேசும்போது இப்படிப்பட்ட ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்கள்.

'The figure furnished by the Minister, in reply to a short notice question in the Assembly, for a variety of reasons, could not be accurate and based on a complete study of all the aspects. The figure furnished by the Minister, was a tentative official estimate based on a set of given circumstances.'

ஆக அமைச்சர் அவர்கள் இங்கே அளிக்கிற புள்ளிவிவரம் சரியானது அல்ல என்ற செய்தி வெளியில் அதிகாரிகளால் கூறப்படுகிறது. இந்த நாட்டு அரசியல் முறைக்கு அது ஏற்றதாக இராது என்று கூறிக் கொண்டு இனி அளிக்கிற புள்ளிவிவரங்களாவது நல்ல ஆதாரத்தை வைத்து அளிக்கப்படுபவனவாக இருக்க வேண்டும்.

எதிர்க்கட்சிகள் எதிர்க்கட்சிகள் என்பதைக் காட்டிக்கொண்டு ஆளும் கட்சியை நல்லமுறையில் நடத்திச் செல்வதற்குத் துணையாக இருப்பவை கேள்விகளும் கேள்விகளுக்கு அளிக்கும் பதில்களும்தான். இப்போது கேள்விகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. அது ஒரு குறை. அடுத்து அங்கத்தினர்கள் எழுதி அனுப்புகிற கேள்விகள் எப்படி எப்படி எல்லாம்



திருப்பி அனுப்பப்படுகின்றன என்று பார்க்கும்போது நாம் வருத்தப்படும்படியிருக்கிறது. எதிர்க் கட்சிகாரர்களுக்கு நல்ல வாய்ப்பு அளிக்கவில்லை என்று குற்றம் கூறவேண்டியிருக்கிறது. அதுகுறித்து ஒரு சிலவற்றை இங்கு கூறவிரும்புகிறேன். கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி இந்த மன்றத்தில் இருக்கிற அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். அதை அடிப்படையாக வைத்து நான் ஒரு சில கேள்விகள் எழுதி அனுப்பினேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** சபாநாயகர் அவர்கள் அனுமதிக்க மறுத்த கேள்விகளானால் அது பற்றி இங்கு குறிப்பிட வேண்டாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** அனுமதி அளித்த கேள்விகள் பின்னால் எப்படியாகி இருக்கின்றன என்ற நிகழ்ச்சிகளை எப்படிக் கூறாமல் இருக்க முடியும் ?

"தமிழகத்திலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் விவசாய பாங்குகளும் நடைமுறை நிதி ஆண்டில் தானிய ஈட்டின் மீது எவ்வளவு கடன் தொகை வழங்கியுள்ளன" என்ற அடிப்படையில் பல கேள்விகள் வந்திருக்கின்றன. அக்கேள்வி 4-5-62-ல் அனுமதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, கூட்டுறவு சம்பந்தமாகவே மேலும் பல கேள்விகளை நான் அனுப்பிய பிறகு இதே கேள்வி 11-6-62-ல் மறுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பலர் கூட்டுறவு இயக்கத்தில் கலந்து கொண்டிருப்பதால் அவர்களது தலையீட்டினால்....

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மறுக்கப்பட்டிருகிறது என்றால் யார் மறுத்தார்கள் ? அரசாங்கம் அல்லது மந்திரிகள் மறுத்திருந்தால் அது பற்றி அங்கத்தினர் குறை கூறலாம். ஆனால் சபாநாயகர் அல்லது சட்டசபை இலாக்காவால் மறுக்கப்பட்டிருந்தால் அதுபற்றி இங்கு பேசுவது முறை அல்ல என்று தாங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

**புலவர் கா. கோவிந்தன் :** அனுமதித்து பின்னர் மறுத்திருக்கிறார்கள். செக்ரட்டரி அவர்களால்............

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** செக்ரட்டரி என்றால் சபாநாயகர் என்றுதான் அர்த்தம். அதில் அரசாங்கத்திற்குப் பொறுப்பில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** அனுமதிக்கப்பட்டு..........

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கத்தைப்பற்றித்தான் பேச வேண்டும். சபாநாயகர் அவர்களைப் பற்றி இங்கு பேசுவதற்கில்லை. சபாநாயகர் அவர்கள்தான் இங்கு எல்லாவற்றிற்கும் பொறுப்பு. அப்படி அவரைப் பற்றி குறை கூற வேண்டுமென்றால் வேறு வழிகள் இருக்கின்றன.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் படித்ததிலிருந்து கனம் சபாநாயகர் அனுமதி மறுத்ததாகத் தெரிகிறது. ஆகவே அதுபற்றி தொடர்ந்து பேசாமல் மேலே கூற வேண்டிய விஷயத்தைப்பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** இந்த மன்றத்தில் எதிர்க்கட்சிகள் எதிர்க்கட்சிகளாக இயங்கவேண்டும் என்பதற்கு ஆளும் கட்சியில் இருந்த பெரியோர்கள் எல்லாம்கூட ஆசிகூறி வரவேற்றிருக்கிறார்கள். ஆசிகூறி வரவேற்கிற கடமைகளை எதிர்க்கட்சிகளால் செய்ய முடியவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இந்த இடத்தில் நாங்கள் இதை வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கிறோமே தவிர இது குறித்துப பேச எந்த இடம் எந்தநேரம் வாய்ப்புடையது என்று தலைவர் அவர்கள் கூறுவார்களேயானால் நான் அந்த நேரத்தில் அந்த இடத்தில் அதைப் பயன்படுத்திக்கொண்டு இந்த இடத்தை விட்டுவிடுகிறேன். ஆக எந்தநேரத்தில் எந்த இடத்தில் நாங்கள் இந்தக் குறைகளைப்பற்றிக் கூற முடியும் என்பதை நீங்கள் எங்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.....

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கோரிக்கைகளை எல்லாம் நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதலில் அங்கத்தினர்கள் குறைகளை எல்லாம்

[திருமதி டி. என். அனந்தநாயகி] [9th March 1963

விரிவாக எடுத்துக் கூறினார்கள். குறிப்பாகப் பெண் அங்கத்தினர்களுக்கும் சில குறைகள் இருக்கின்றன. முதலில் நாங்கள் தங்குகிற ரூமிற்குத் தனி போன் ஒன்று வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தோம். ஐந்தாண்டுகளாகக் கேட்டு இப்போது ஆறும் ஆண்டும் வந்து விட்டது. இங்கிருந்து எக்சென்சுக்குப் பேசி அவர்கள் அங்கிருந்து அடிக்கடி ராங்க் நம்பர்களுக்குக் கணக்ஷன் கொடுத்து அதனால் ஏற்படும் தொல்லைகளை விடுத்துத் தனியாக டயரக்ட் போன் கொடுத்தால் நாங்கள் துரிதமாக வேலை செய்ய சுலபமாக இருக்கும். ஆகவே, முதலில் அக்குறையைத் தீர்த்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாக அரசாங்கம் அமைக்கிற முக்கிய கமிட்டிகளில் எல்லாம் சட்டசபை அங்கத்தினர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அதில் முக்கால் பங்கு அபிஷியல்ஸ்க்குப் போகிறதே தவிர நான்-அபிஷியல்ஸ் சென்று அக் குறைகளை ஓரளவு தீர்க்க முடியுமா என்ற ஆர்வம் குன்றி வருவதைப் பார்க்கிறோம். அதிகாரம் இல்லாத கமிட்டிகளில் போடப்பட்டு நாங்கள் அவஸ்தைப் படுகிறோமே தவிர முக்கிய கமிட்டிகளில் எங்களுக்கு இடம் கிடைப்பதில்லை. குறிப்பாக கவர்ன்மெண்ட் ப்ரஸ்க்கு ஒரு ஆலோசனைக் கமிட்டி போட்டிருக்கிறார்கள். முன்பு போட்டதில் ஆபீசர்கள்தான் இருந்தார்கள். இப்போது போட்டிருப்பதிலும் ஆபீஸர்கள்தான் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எம். எல் ஏ. க்கள், மற்றவர்களுக்கு அதில் இடம் கிடையாது. நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், மற்ற மாவட்ட எம். எல். ஏ.-க்களுக்கு பலவித வேலைகள் செய்ய வாய்ப்பு இருக்கிறது. ரோடுகள் போட்டோம், பாலம் கட்டினோம், ஆஸ்பத்திரி கட்டினோம் என்று அவர்கள் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் நகரத்தில் இருக்கிற எங்களுக்கு ஒன்றுமே இல்லாது எல்லாம் கார்ப்பரேஷனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு முக்கியமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில்தான் அதிக சிரத்தை எடுக்க வேண்டியிருக்கிறது. கவர்ன்மெண்ட் ப்ரஸ் கமிட்டி போன்றவைகளில் ஸிட்டி எம். எல். ஏ. ஒருவருக்கு இடம் அளித்தால் அதன்மூலம் ஓரளவு உதவி செய்ய உதவியாயிருக்கும். அதனால் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்கமுடியும். அவர்கள் அவஸ்தைப்படுகிறார்களா இல்லையா என்றாவது எடுத்துக் கூறலாம். ஆகவே நான்-அபிஷியல்ஸ்க்கும், அங்கத்தினர்களுக்கும் இக் கமிட்டிகளில் இடம் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும். கார்ப்பரேஷனில் அங்கத்தினர்களாக எம். எல். ஏ.-க்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதை மறுத்துவிட்டது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இப்போது மாவட்டங்களில் இருக்கிற எம். எல். ஏ.-க்கள் டெவலப்மெண்ட் கவுன்ஸில் மெம்பர்களாக இருக்கிறார்கள்—பஞ்சாயத்து யூனியனில் பங்கெடுத்துக்கொள்ள அதிகாரம் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் நகரத்தில் இருக்கிற எம். எல். ஏ.-க்கள் என்ன பாபத்தைச் செய்து விட்டோமோ தெரியவில்லை, சேரக் கூடாது என்று சொல்லுகிறார்கள். நகர சபையைப் பார்த்தால் அங்கு ஆளுகிற கட்சி வேறு. அங்கு நடைபெறும் நிர்வாகத்தைப்பற்றிச் சொல்வதற்கில்லை. அங்கு இருக்கும் லஞ்ச ஊழல் கொஞ்ச நஞ்சமல்ல. ஏதாவது ஒரு அரசாங்கம் அதிகாரி 5 ரூபாய் லஞ்சம் வாங்கிவிட்டார் என்றால் அதற்காக ஒரு இலாகாவை வைத்து, குற்றத்தைக் கண்டுபிடித்து, 5 ரூபாய்க்கு 5 ஆண்டு தண்டனை கொடுத்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. வெட்ட வெளிச்சமாக லஞ்ச ஊழலை நடமாட விட்டிருக்கிறார்கள் நகர சபையில் என்று பார்க்கும்போது நாமெல்லோரும் வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது. இன்றைய தினம் எதையெடுத்தாலும் அவர்கள் கையில் கொடுத்து, அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கி, அரசாங்கத்திலிருந்து மான்யமாகக் கொடுத்து, ரோடுக்காகக் கொடுத்து, ஆஸ்பத்திரிகள் அமைப்பதற்காகக் கொடுத்து, பள்ளிகளுக்காகக் கொடுத்து, மேம்பாலத்திற்காகக் கொடுத்து, தண்ணீர் திட்டங்களுக்காகக் கொடுத்து, அத்தனையும் பெற்றும் கூட, அரசாங்கத்தின் உதவியையும் பணத்தையும் பெற்றும் கூட, அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு அவர்கள் நடத்தக்கூடிய விழாக்களில் இடம் கொடுப்பது கிடையாது. எந்த வேலையைச் செய்தாலும் எதிர் கட்சியைச் சேர்ந்த மேயரும், அங்கத்தினர்களும் நாங்கள் தான் செய்தோம் என்று பெருமையாகப் பேசிக்கொள்ளும்போது, உண்மையாக மக்கள் பிரதிநிதிகளாகிய எங்கள் நெஞ்சம் வெடித்து விடுகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



9th March 1963] [திருமதி டி. என். அனந்தநாயகி]

இந்த நிலைமை இருந்தால் நகரத்தில் இருக்கிற எம். எல். ஏ.-க்களுக்கும் மக்களுக்கும் இருக்கிற தொடர்பு என்ற பாலம் அழிந்து விடும். அதை உடைத்துவிட்டு பாபத்திற்கு அமைச்சர்கள் ஆளாக வேண்டியிருக்கும். கட்டாயமாக எங்களுக்கு பதவி தேவையில்லை, அங்கே எங்களுக்கு ஓட்டு வேண்டாம், மேயராக நிற்க வேண்டாம், டெபுடி மேயராக வரவேண்டாம். கமிட்டியில்கூட இடம் வேண்டாம். 10 அங்கத்தினர்களும் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டு, நடவடிக்கைகளைக் கண்காணித்து, எங்கள் தொகுதிகளின் குறைகளை எடுத்துச் சொல்லி, அத்தகைய குறைகளைப் பார்க்கிறார்களா, அவைகளைப் போக்குவதற்குக் கமிஷனரும் மேயரும் முயற்சி செய்கிறார்களா என்று கவனித்துப் பார்க்க வாய்ப்பும் வசதியும் அளிப்பது பற்றி அமைச்சர் அவர்கள் ஆர அமர யோசித்துப் பார்த்து இந்தக் குறையைத் தீர்த்து வைப்பார் என்பதில் நம்பிக்கை இருக்கிறது.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்கள் வெளி நாட்டிலிருந்து முக்கியமான தலைவர்கள் வந்தால் விருந்து அளிக்கும்போது, அத்தகைய வைபவங்களில் பழைய காலத்தில் இருந்தவர்களே தான் அழைக்கப்படுகிறார்கள் என்று நினைக்கிறேன். விருந்துக்கென்று ஒரு லிஸ்ட் தனியாக இருக்கிறது கவர்னர் மாளிகையில். அன்னிய ஆட்சியின் போது இருந்த கவர்னர்கள் வைத்து விட்டுச் சென்ற லிஸ்ட்டைத்தான் இன்றைக்கும் பின் பற்றி வருகிறோம். அந்த நிலை இல்லாமல், மக்கள் தொடர்புள்ள, அரசியலில் அக்கறை காட்டுகிறவர்களை அழைப்பது, அன்னிய நாட்டு மக்களின் நிலைமை என்ன என்று நாம் அறிந்து கொள்ளுவதற்கும், நம் நாட்டு மக்களின் நிலைமை என்ன என்று வெளி நாட்டிலிருந்து வந்தவர்கள் அறிந்து கொள்வதற்கும் ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். அந்த லிஸ்ட்டில் இருக்கிறவர்கள் அரசாங்கம் என்றால் தூக்கு எவ்வளவு, அரசியல் என்றால் வீசை என்ன விலை என்று கேட்கக் கூடியவர்கள். அவர்களையே பழைய முறைப்படி அழைத்துக் கொண்டு வருகிறார்கள். இதற்கெல்லாம் மந்திரிகள் விதி விலக்கு. மந்திரிகளெல்லாம் அழைக்கப்படுகிறார்கள். மற்றவர்களையும் நினைத்துப் பார்க்கும்போது, நகரத்தில் இருக்கிற பிற பிரதிநிதிகளையும், அரசியல் தொடர்பு உள்ளவர்களையும் அழைத்து விருந்து நடத்துவதால் கவர்னர் பெருமான் விருந்து இன்னும் சற்று நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, செக்ரட்டேரியட் ஸ்டாஃபுக்கு வருகிறோம். பே கமிஷன் ரிப்போர்ட் படி மூன்று ஆண்டுகள் ஒரு போஸ்ட் தொடர்ந்து இருந்தால் அந்த போஸ்ட்டை பர்மனெண்ட்டாக ஆக்கி விடுவது நல்லது என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். இன்னும் நமது ஸ்டாஃபில்-செக்ரட்டேரியட் ஸ்டாஃப் என்று இல்லை—எல்லாத்துறையிலும், கெஜெட்டெட் போஸ்ட்டும் சரி, நான்-கெஜெட்டெட் போஸ்ட்டும் சரி 10 அல்லது 12 ஆண்டுகளாக அந்தந்த ஆண்டுக்கு, சம்பளம் வாங்க புதுப் புது ஜீ. ஓ.—வை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு ஆண்டும் ஜீ. ஓ. தயாரிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது, உத்தியோகஸ்தர்களுடைய நேரம் வீணாகிறது, ஜீ. ஓ. போட்டு அவர்களுக்குப் போவதற்குக் கால தாமதம், அந்த ஆஃபீஸருக்கு முதல் தேதியன்று சம்பளம் கிடைக்காமல் அவர்களுக்குக் கஷ்டம், இதையெல்லாம் தவிர்க்க முடியும். அதைப் பற்றிச் சொல்லும்போது—கட் மோஷனில் தெரிவித்திருப்பதைப் பார்த்தேன், என்ன கொடுத்திருக்கிறார்கள் என்றால் ஆள் குறைப்பு செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதிகமான அளவுக்கு ஆள் இருப்பதால் அதிகச் செலவு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்போன்ற ட்யூப்ளிகேஷன் இருப்பதால் அவைகளை நீக்குவதை விட்டு, ஆட்குறைப்பு என்று நாம் சொல்லுகிறோம் என்றால், அப்படிச் சொல்லுவதால் அவர்களுடைய ஆயுளை குறைக்கிறோம்—அவர்களுடைய குடும்பங்களின் ஆயுளைக் குறைக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். ரிட்ரெஞ்மெண்ட் என்று பேசி வேலை செய்துகொண்டிருக்கிறவர்கள் அடி வயிற்றில் நெருப்பை வைத்துக் கொண்டு வேலை செய்ய வேண்டுமென்று இல்லாமல்—இன்றைக்கு லேபர் என்று எடுத்துக்கொண்டால் எவ்வளவு செலவு ஆகிறது என்றால் 22.2 சதவீதம்தான்; மிஞ்சி மிஞ்சிப் போனால் 25 சதவீதம் இருக்கும். அதுவும் இல்லையென்றால் இன்னும் வேலை இல்லாத் திண்டாட்டம், சுனம் சுதந்திர

கட்சித் தலைவர் ரிட்ரெஞ்ச்மெண்ட் என்று சொல்லுகிறாரே என்று ஆட் குறைப்பு செய்தால், நாளைக்கு அதனால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர் கட்சியைச் சேர்ந்த அவரிடம் போய்க் கேட்டால் நான் என்ன செய்வது அரசாங்கம் இம்மாதிரி செய்துவிட்டது என்று தட்டிக் கழித்து விட்டு, செல்வார். அத்தனையையும் நாம் தான் தாங்கவேண்டும். தயவு செய்து ஆட்குறைப்புத் திட்டத்தைக் கையாளாமல், இப்போது இருக்கக்கூடிய வேஸ்ட்டேஜை எப்படிக் குறைக்கலாம் என்று சிந்தித்துப் பார்த்து, ஒரு கெஜெட்டெட் ஆபீஸருக்குச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றால் ஒவ்வொரு ஆண்டும் ஜீ. ஓ. பாஸ் செய்யாமல்-இந்த மாதிரி 10-12 ஆண்டுகளாக இருக்கக்கூடிய போஸ்ட்டுகள்கூட இருக்கின்றன-பே கமிஷன் சிபாரிசுப்படி என்ன செய்யவேண்டுமென்றால் 3 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கக்கூடிய போஸ்ட்களில் எவ்வளவு போஸ்ட்கள் தேவை என்று பார்த்து, அவை களைப் பர்மெனெண்ட் ஆக்கிவிட்டால் ஆண்டுக்காண்டு ஜீ. ஓ. போட்டுக் கொண்டிருக்காமல், ஒழுங்காகச் சம்பளம் ஆஃபீசருக்குக் கிடைக்க ஏற்பாடு செய்துவிட்டால், பலருடைய நேரம் விரயமாகாது, பலருடைய வேலை குறையும், தொல்லை இருக்காது. அடித்தளத்தில் இருக்கக் கூடிய சிப் பந்திகளில் பலர் டெம்பரரி, பர்மனெண்ட் அல்லது பர்மெண்ட் டெம்பரரி என்ற முறையில் இருக்கிறார்கள். ஹைக்கோர்ட்டில் இந்த மாதிரி 40 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள்-ஸ்வீப்பர்ஸ் மாதிரி இருக்கக் கூடியவர்கள். 30 வருஷம் வேலை செய்தும் அவர்களுக்கு ஒரு ரூபாய் இன்க்ரிமெண்ட் கூடக் கிடையாது. இன்று வரையில் காஷுவல் லேபர் என்ற முறையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். நாமே-நமது அரசாங் கமே இந்த மாதிரி ஒரு தவறான வழியைக் காட்டினால் தனியார் எவ்வளவு தவறான வழிகளில் செல்லுவார்கள் ? 40 வருஷமாக அவர்களுடைய ஊழியம் தேவை என்று உணர்ந்த பிறகும் கூட, 30 வருஷமாக அவர் களுடைய உழைப்பைப் பெற்றும் கூட, அன்றைக்குக் கொடுத்த சம்பளத் தையே இன்றைக்கும் கொடுத்தால் அது ஒரு மாபெரும் பாபம் என்று சொல்லுவேன். இந்த மாதிரி காஷுவல் லேபராக வருஷக் கணக்கில் வைத்திருக்கிறார்கள்-அசெம்ப்ளி இலாக்காவில் இருக்கிற சில பேர்களுக்குக் கூட அந்தத் தலைவலி இருக்கிறது. இங்கு கூட ஸ்வீப்பர்ஸ்களுக்கு அன்று கொடுத்த சம்பளம் தான், இன்க்ரிமெண்ட் என்பது கிடையாது. பென்ஷன் கிடையாது, க்ராச்சுயிட்டி கிடையாது, இந்த முறையில் இருப்பதை அரசாங்கம் துரிதமாகக் கவனிக்கவேண்டுமென்று நான் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பென்ஷனை பொருத்தவரையில் அதைக் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. சர்க்காரிலே வேலை செய்யக்கூடிய ஒருவன் எப்போது ரிட்டயர் ஆவான் என்று தெரியும். ஒரு வருஷத்துக்கு முன்னாலேயே இந்த வேலையை எடுத்துக்கொண்டு சம்பந்தப்பட்ட இலாகா துரிதமாகப் பார்த்தால், வேண்டிய காரியங்களைச் செய்தால் ரிட்டயர் ஆனவுடனே அடுத்த மாதத் தில் அவனுக்குப் பென்ஷன் கிடைக்கும், அவனுக்குச் சேர வேண்டிய தொகையை அனுப்பலாம். அதை விட்டு ரிட்டயர் ஆகும் வரையில் தூங்கிவிட்டு, இலாகாவுக்கும் வீட்டுக்குமாய் அவனை ஒரு வருஷம் அலையவைத்து பென்ஷன் வாங்குவதை விட வாங்காமல் சாகும் சூழ்நிலை வருகிறது. இதைப் பற்றி அவசரமாக யோசித்து, ரிட்டயர் ஆன மறு மாதம் அவனுக்குச் சேர வேண்டிய தொகை போய்ச் சேரவும், மறு மாதமே பென்ஷன் கிடைக்கவும் அப்படிப்பட்ட ஒரு சூழ் நிலையை ஏற்படுத்த வேண்டும். அதை அரசாங்கம் கட்டாயம் செய்யும் என்று நம்பிக்கை கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : கனம் சட்டமன்ற உதவி சபாநாயகர் அவர்களே, எதிர்க் கட்சியில் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆத ரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இப்போது நாட்டிலே எமர்ஜென்ஸியாக இருக்கிறது என்று சொல்லு கிறார்கள். நம்முடைய அமைச்சர்களெல்லாம் மிகவும் நல்லவர்கள். நாட்டுப்புறங்களிலெல்லாம் போய் மக்களுக்கு யுத்தத்தின் கெடுபிடிகளை யும், நாட்டிலே இருக்கிற நிலைமைகளையும் எடுத்துப் போதிக்கிற முறையில் இருக்கிறார்களே தவிர இவற்றைத்தாமே கடைப்பிடிக்கிறார்களா என்று





பார்த்தால் அப்படி ஒன்றைக்கூட கடைப்பிடிப்பது இல்லை என்று சொல்ல லாம். வெளியில் சென்று 14 காரட் தங்கத்தைப் போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிற அமைச்சர் வீட்டில் இருக்கிற 22 காரட் தங்க நகைகளை எந்த அமைச்சராவது கொடுத்திருக்கிறாரா என்று பார்த்தால் எந்த அமைச்சர் வீட்டிலிருந்தும் கிளம்பியதாக இல்லை.........

**கனம் திரு. பூ. கக்கன்** : எங்கள் வீட்டிலிருந்து கொடுத்திருக்கிறோம்.

**கனம். திரு. எம். பக்தவத்சலம்** : மந்திரிகள் வீட்டில் எவ்வளவு நகைகள் இருக்கின்றன என்ற விவரத்தைக் கொடுத்தால் நல்லது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : அமைச்சர் வீட்டில் இருக்கிற பெட்டிகளில் இருக்கிற நகைகளும் வெளியில் வந்தால் நலம் என்று கருதுகிறேன். அதே போல வெளியே சென்று பேசுகிறார்கள், மின்சாரத்தை உபயோகிப் பதைக் குறைத்துக்கொள்ளுங்கள் என்று. ஆயிரக்கணக்கான பேர்கள் உட்கார்ந்து சினிமா பார்க்கும் இடங்களில் ஒரு விசிறி கூட போடக்கூடாது என்று இப்போது ஒரு விசிறி கூட ஓடாமல் மக்கள் புழுக்கத்தினால் கஷ்டப்படுகிறார்கள். உபயோகப்படுத்தக்கூடாது என்று சொல்லும் மந்திரி கள் இல்லங்களில் எவ்வளவு மின்சாரம் வீணாக்கப்படுகிறது என்று சிந்தித் துப் பார்க்கவேண்டும். அரசாங்கச் சிப்பந்திகள் தங்கள் சம்பளத்தில் கொஞ்சம் பணத்தை மீதப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறோம். குறைத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறோம். இங்கே இருக்கிற அமைச்சர்களில் யாரேனும் யுத்த நெருக்கடியை நினைத்து சம்பளம் வேண்டாமென்று சொன்னவர்கள் இருக்கிறார்களா ? அதுவும் நமது முதல் அமைச்சர் இருக்கிறாரே அவர் நல்லவர். அவருக்கு ஆடைச் செலவு ஆண் டுக்கு ரூ. 100 கூட ஆகாது என்று கருதுகிறேன். அவர்களுடைய தாய்க்குக் கூட பணம் அனுப்பாமலேயே சிக்கனமாக இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இப்படியிருக்கிற முதல் அமைச்சர் அவர்கள் தன் னுடைய சம்பளத்தை........

**கனம் திரு. பூ. கக்கன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் தன்னுடைய தாய்க்கு மாதந்தோறும் எவ்வளவு பணம் அனுப்புகிறார்கள் என்பது கனம் அங்கத்தினர் அவர் களுக்குத் தெரியாது. தெரியாத விஷயத்தைப்பற்றி இந்த மன்றத்தில் சொல்லாமல் இருக்குமாறு தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர்** : கனம் அங்கத்தினர்கள் பேசும்பொழுது யாரையும் பெர்சனலாக குறிப்பிட்டு பேசாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : அமைச்சர் அவர்கள் தங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்திலே தான் கூறினேனே தவிர, வேறு எண்ணத்தில் பேசவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இரண்டாவதாக, தேர்தலைப்பற்றி இங்கே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். தேர்தல்களை இப்பொழுது ஒத்திவைத்திருக்கிறோம். பஞ்சாயத்து தேர்தல்களையும், முனிசிபல் தேர்தல்களையும் இப்பொழுது ஒத்திவைத்திருக் கிறோம். அப்படி ஒத்தி வைத்த நேரத்தில் யுத்த நெருக்கடி இருந்தது. இப்பொழுது யுத்த நெருக்கடி போய்விட்டது. இதைக் கருதியாகிலும் தேர்தல்களை உடனடியாக நடத்தவேண்டும் என்று நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். தேர்தல்கள் வருகிற சமயத்தில், பஞ்சாயத்து தேர்தலாக இருந்தாலும் சரி, முனிசிபல் தேர்தலாக இருந்தாலும் சரி, ஜனநாயகம் பாழாகிக்கொண்டு வருவதைப் பார்க்கிறோம். பஞ்சாயத்து யூனியன் சேர்மன் தேர்தலில் ரூ. 10,000, 20,000 லஞ்சம் கொடுத்து வோட்டுகள் வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. முனிசிபல் சேர்மன் தேர்தல்களிலும் இம்மாதிரி பணம் கொடுத்துத்தான் வோட்டுகள் வாங்கப் படுகின்றன. இந்தமாதிரி நிலைதான் இருக்கிறது. அதே போல கிராமப் பஞ்சாயத்து தேர்தல்களிலும் மக்கள் நேரடியாக வோட்டுகள் போட்டு பஞ்சாயத்து தலைவரை தேர்ந்தெடுக்கக் கூடிய முறை இல்லாத நிலை இருக்கிறது. ஜனநாயகத்தில் உள்ளாட்சி சேர்மன் தேர்தல்கள் நடைபெறும்

பொழுது மக்கள் மூலம் நேரடியாக தேர்தல் நடைபெறவேண்டும். அப்படியில்லாமல் பஞ்சாயத்து மெம்பர்கள் பஞ்சாயத்து தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், பஞ்சாயத்து மெம்பர்கள் சேர்ந்து பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும், நகரசபை உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து நகரசபைத் தலைவரை தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும் முறை இருந்தால், லஞ்சம் கொடுத்து வோட்டுகள் வாங்கக்கூடிய நிலை தான் ஏற்படுகிறது. அந்த முறை ஒழிக்கப்படவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மக்களே நேரடியாக தலைவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

**(கனம் சபாநாயகர் தலைமை.)**

பஞ்சாயத்து தேர்தல், பஞ்சாயத்து யூனியன் தேர்தல், முனிசிபல் தேர்தல் இவைகளை உடனடியாக நடத்தவேண்டும். இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் பல சட்டசபைத் தேர்தல் கூட நடக்கவேண்டியிருக்கிறது. தேர்தல் கமிஷன் யுத்த நெருக்கடியில் ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் தேர்தல்களை நடத்தலாம், ஏப்ரல் மாதவாக்கில் தேர்தல்களை நடத்தி விடவேண்டும் என்று மாநிலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பிருப்பதாகத் தெரிகிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஏப்ரல், மே மாதத்தில் நடத்தவேண்டாம், மே மாதம் கடைசி அல்லது ஜூன் மாதத்தில் நடத்தலாம் என்று யோசனை கூறியிருப்பதாக நான் அறிகிறேன். நான் இங்கே சொல்லிகொள்ள விரும்புவதெல்லாம், தேர்தலை என் இப்படி ஒத்திவைக்கவேண்டும் ? தேர்தலை ஒத்தி வைக்க காரணம் என்னவென்று கேட்கிறேன். ஒருவேளை திருச்செங்கோடு எதிரொலி தேர்தலை ஒத்திவைக்கும் சூழ்நிலையைக் கொண்டுவந்து விட்டதா ? அல்லது, மத்திய சர்க்கார் போட்டிருக்கிற வரிகளை இன்னும் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்ற எண்ணமா ? தங்கக் கட்டுப்பாடு அல்லது விதிகளினால் தாய்மார்கள் உள்ளம் பொங்கி எழுந்திருக்கிற காரணத்தினால் அதை ஏன் இப்பொழுது ஏற்கவேண்டுமென்ற எண்ணமா என்று இங்கு ஆட்சியிலிருப்பவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் நல்லவர்களாக இருக்கவேண்டுமென்றால், நியாயமாகத் தேர்தல்களை நடத்தவேண்டும், உடனடியாகத் தேர்தல்களை நடத்தவேண்டும். பஞ்சாயத்து தேர்தல்களாக இருந்தாலும் சரி, முனிசிபல் தேர்தல்களாக இருந்தாலும் சரி, சட்டமன்ற தேர்தல்களானாலும் சரி, தேர்தல் கமிஷன் கூறிய ஆலோசனைப்படி, இந்த மாநிலத்தில் தேர்தல்களை நடத்தவேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அஸாம் மகாணத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் தேர்தல்களை ஏப்ரல் மாதத்தில் நடத்தவேண்டும். ஏனென்றால், பிறகு வெயில் வந்துவிடும், மக்களுக்கு மற்றத் தொல்லைகள் வந்துவிடும். ஆகையினால், காலம் அறிந்து தேர்தல்களை நடத்தவேண்டும். தேர்தல் கமிஷன் கூறுகிற யோசனையை நம்முடைய மாநிலம் அரசாங்கம் புறக்கணிக்கக்கூடாது. உடனே தேர்தல்களை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், முனிசிபல் தேர்தல்கள், பஞ்சாயத்து யூனியன் சேர்மன் தேர்தல்கள் நடைபெறுகின்ற விதங்களில் பல ஊழல்கள் இருக்கின்றன. லஞ்சம் கொடுத்து வோட்டு வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த ஊழல்களைத் தவிர்ப்பதற்காக மக்களிடமிருந்து நேரடியான வோட்டுகளைப் பெற்று சேர்மனாக வந்தால், பிரஸிடெண்டாக வந்தால், அவர்கள் மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். இப்பொழுதிருக்கும் முறை நீடித்தால், பணத்தைக்கொடுத்து வோட்டுகளை வாங்குகிற முறை நீடித்தால், பதவிக்கு வந்தவுடன் பணம் எப்படி சம்பாதிக்கிறது என்ற முறையில் இவர்கள் ஈடுபடுகிறார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. மக்களுடைய நேரடியான ஆதரவைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்மனாகவோ, பிரசிடெண்டாகவோ பதவிக்கு வந்தால், நல்லபடியாக ஜனநாயகம் இன்னும் தழைத்தோங்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் இன்னொரு யோசனையையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சட்டசபைக் கூட்டத்தை இப்படி மார்ச் மாதத்தில் நடத்தாமல் சற்று ஒரு மாதத்திற்கு முன்பே ஆரம்பித்து நடத்தினால், வெயில் வருவதற்கு முன்பு சட்டசபை நடவடிக்கைகள் நல்ல முறையில் நடைபெற முடியும்.





பிப்ரவரி மாதத்திற்குள்ளேயே சட்டசபை கூட்டத்தை முடிக்க முடியவில்லை என்றால், இரவு நேரங்களிலாவது சட்டசபைக் கூட்டத்தை நடத்தினால் நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால், நாங்கள் வெளி ஊர்களிலிருந்து வருகிறவர்கள். எங்கள் தொகுதியிலுள்ள மக்களுடைய குறைகளை செகரடரிகளுக்கும், மற்றுமுள்ள அதிகாரிகளுக்கும் எடுத்துச் சொல்ல நேரம் இல்லாமல் போய்விடுகிறது. முன்பு பேசிய நண்பர் ரெங்கசாமி ரெட்டியார் அவர்கள் கூறியதுபோல், காலையில் எழுந்து நாங்கள் இங்கே வருகிறோம். பிறகு சட்டசபை கூட்டம் முடிந்த பின் நாங்கள் உண்ணுவதற்கும் மற்ற அலுவல்களில் ஈடுபடுவதற்கும் தான் நேரம் சரியாகப்போய்விடுகிறது. ஆகையினால் எங்களுடைய தொகுதிக் குறைகளை நேரடியாக அமைச்சர்களிடம் அல்லது அதிகாரிகளிடம் சொல்லுவதற்குத் தகுந்த நேரத்தைக் காலையில் ஒதுக்கிவிட்டு, மாலை நேரங்களில் சட்டசபைக் கூட்டத்தை நடத்துவது நல்லது என்று கருதுகிறேன். அது எவ்வாறு சாத்தியப்படும் என்பதனை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து பரிசீலித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, மந்திரி அவர்களின் போக்கைப்பற்றி நான் இங்கே ஒன்று குறிப்பிடாமல் விடுவதற்கில்லை. எங்களுடைய மாவட்டத்து நண்பர் திரு. எம். ஆர் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தேர்தல் வழக்கு நடைபெறுகிறது, தேர்தல் நடந்த விதத்தைப்பற்றி நான் சொல்லவில்லை. மந்திரி அவர்கள் அந்தத் தேர்தல் வழக்கை நடத்துவதில் எவ்வளவு ஊக்கம் காட்டுகிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு ஆதரவாக யாரும் பேசக்கூடாது என்று சிதம்பரம் வட்டத்தில் படையாச்சிமார்களை அழைத்துச் சொல்லியிருக்கிறார்கள் மந்திரி அவர்கள்......

**கனம் திரு. கோ. பூவராகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுவது சரியல்ல. ஏதோ வேண்டுமென்றே உண்மையைத் திரித்துக் கூறுகிற ஒரு முறையில் கூறுகிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது கனம் அங்கத்தினர் அவர்கள் எந்த ஹோதாவில் சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் வழக்கறிஞர்களாகவும் இருக்கிறார்கள். தேர்தல் வழக்கிலும் வழக்கறிஞர்களாகப் பணியாற்றுகிறார்கள். இப்பொழுது கனம் அமைச்சர் அவர்களைப்பற்றி சொல்லுவது எந்த ஹோதாவில் சொல்லுகிறார்கள், அவர்களுக்கு எப்படித் தகவல் வந்தது ?

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவரைப் பற்றி நான் இங்கே பேசுகிறேன். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஒருவேளை அவர்கள் இல்லை என்று சொல்லுவது உண்மையாக இருக்குமானால், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கிற எங்கேயாவது ஒரு இடத்திற்கு அழைத்து அங்கே நீதி சொல்லவேண்டுமென்றால், நான் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறேன். அமைச்சர் அவர்கள் சிதம்பரத்தில் ஏதாவது ஒரு இடத்திற்கு வந்தால் எந்த ஆள் இடத்தில் செய்தித்துறை அமைச்சர் சென்று இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதற்கான விவரத்தை நான் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். ஆகவே, இன்றைக்கு மந்திரிகளாக மாறிவிட்டார்கள் என்றால், கட்சிப்பிடிப்பை ஓரளவுக்கு விட்டுவிடவேண்டும். மந்திரிகளாக இருப்பது ஆளும் கட்சிக்கு மட்டுமல்ல. எங்களுக்கும் கூட அதில் பங்கு உண்டு. ஏனென்றால் மக்களுடைய வரிப் பணத்திலிருந்துதான் மந்திரிகளாக வருகிறார்கள். மந்திரி பதவிக்கு வந்தவுடன் கட்சிப் பிடிப்பினை கொஞ்சம் தளர்த்தவேண்டும். மந்திரிகள் தேர்தல் காலத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து பிரசாரம் செய்துவருகிறார்கள். இங்கிலாந்தில் அமைச்சர்கள் தேர்தல் பிரசாரத்திற்குச் செல்லுவது கிடையாது.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். கனம் உறுப்பினர் அவர்கள் மந்திரியாக வந்தவுடன் கட்சியை விட்டுவிட வேண்டுமென்று இவ்வளவு அரசியல் நுணுக்கம் புரிந்து பேசு

கிறார்கள். சட்டசபை சபாநாயகர், நகரசபை மேயர் இவர்களெல்லாம் கட்சிக்கு அப்பாற்பட்டவர்களே ? அப்படியிருக்கும்பொழுது நகரசபை மேயர் திராவிட முன்னேற்றக் கட்சியின் போராட்டத்தில் பங்குகொண்டார்களே ?

Sri K. A. MATHIALAGAN : It is irrelevant, Sir.

Mr. SPEAKER : Is the hon. Member going to give a ruling ? The hon. Member should not pass immediate judgment.

Sri V. KRISHNAMOORTHI : It is irrelevant and it has not bearing with my speech, Sir.

Srimathi T. N. ANANDANAYANI rose......

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அமைச்சர்களாக இருப்பவர்கள் தங்கள் பதவியை ஒரு விதத்திலும் துஷ்பிரயோகம் செய்யமாட்டார்கள் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன், என்னுடைய சகாக்களின் சார்பாகவும். ஆனால் அமைச்சர்கள் கட்சியை விட்டுவிடவேண்டும் என்று சொல்லுவது எந்த ஜனநாயகத்திலும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. அமைச்சராக வந்துவிட்டால் கட்சியை விட்டுவிட வேண்டும் என்று சொல்லக்கூடிய உறுப்பினர் தன்னுடைய வழக்கறிஞர் தொழிலை விட்டுவிடுவார்களா என்று முதலில் கேட்கிறேன். கட்சி விஷயமாகக் கூட வழக்கறிஞராக உறுப்பினர் பணியாற்றுவது எனக்குத் தெரியும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கட்சியிலே இருக்கிற பிடிப்பினை தளர்த்த வேண்டுமென்று சொன்னேனே தவிர, என்னுடைய கட்சியில் சேர்ந்து விடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. தேர்தல் சமயத்திலே மந்திரிகளும் போகிறார்கள். நாங்களும் போகிறோம். திருச்செங்கோடு தேர்தலின்போது முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் வந்திருந்தார்கள். மந்திரிகள் போய் பிரசாரம் செய்யும்போது, அங்குள்ள மக்கள் கவர்ச்சிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய பதவியைக் காட்டி, அதிகாரத்தைக் காட்டி, என்னென்ன செய்திருக்கிறோம் என்ற காரணத்தைக் காட்டி, அவர்கள் தேர்தல் பிரசாரத்திலே ஈடுபடுவது தவறு என்பதைத் தான் நான் தெரிவிக்கிறேன். ஆளுங்கட்சியைச் சேர்ந்த தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரோ, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவரோ, மற்றும் முக்கிய பிரசாரகர்களோ சென்று பிரசாரம் செய்வதைப் பற்றி நான் குறை கூறவில்லை. இதிலே சர்க்கார் பணத்திலிருந்து பயணப்படி வாங்குகிறார்களா, இல்லையா என்பது பிரச்னை அல்ல. அமைச்சர்களுடைய அதிகாரம் அங்கே செல்லுகிறது. அவர்களுடைய அதிகாரம் தேர்தல் நேரத்திலே செலுத்தப்படுவதன் காரணமாக, அவர்களுடைய பதவி துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நல்ல ஒரு ஜனநாயகம் வேண்டுமென்றால் இந்த இடைத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும். இடைத் தேர்தலின் போது ஆளுங்கட்சியிலே இருக்கிற அமைச்சர்கள் சென்று பிரசாரம் செய்யாமல் மற்றவர்கள் யார் வேண்டுமானாலும் செய்யலாம். மந்திரிகள் சென்று பிரசாரம் செய்வதன் காரணமாக அவர்களுடன் அந்த நிர்வாகப்
11-3 a.m பதவியும் கூட வருகிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட தொகுதிக்குச் சென்று, அரசாங்கத்தைப் பற்றி குறை சொல்லுகிறார்கள். அப்படி அவர்கள் குறை சொல்லுவது சரியில்லை என்று மக்களிடத்திலே எடுத்துச் சொல்லுவது குற்றமாகுமா ?

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஆளுங் கட்சியிலே இருக்கிற அங்கத்தினர்களுக்கு இந்த இக்கட்டான நிலைமை ஏற்படாது. ஏனென்றால் அமைச்சர்கள் 9 பேர் தான் இருக்கிறார்கள். ஆனால் ஆளுங் கட்சியிலே உள்ள அங்கத்தினர்களோ 139 பேர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கள் பிரசாரம் செய்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. அமைச்சர்கள் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமல், இந்த இடைத் தேர்தல்களை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.





**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அமைச்சர்கள் பதவிக்கு வந்த பிறகு, அமைச்சர்களுடைய அதிகாரத்தை தேர்தல் காலங்களிலே உபயோகிக்கக்கூடாது என்று மிகவும் காரசாரமாக எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் சொன்னார்கள். அமைச்சருடைய வீட்டிலே ஃபான் ஓடுகிறது என்று சொன்னார்கள். அவருக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் எல்லாம் எங்களுடைய அறையிலே கொசு கடிக்கிறது. ஃபான் இல்லை, இன்னும் வசதிகள் கொடுக்கவேண்டுமென்று அங்கத்தினர்கள் சொல்லிக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே அமைச்சர்களுக்காக மின்சாரம் எவ்வளவு செலவாகிறது என்பதைப் பற்றியெல்லாம் புள்ளி விவரங்களோடு சொன்னார்கள். நமக்கு இருக்கக்கூடிய உரிமை அமைச்சர்களுக்கு இருக்கக்கூடாது என்பதிலே ஏதாவது பொருள் இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். ஏதோ அமைச்சர்கள் நன்றாக இருக்கிறார்கள் என்ற பொறாமையின் காரணமாக இதையெல்லாம் சொல்லலாமே அல்லாது, அவர்களைப் போல் நாமும் அமைச்சராக முடியவில்லையே என்று ஏங்கித் தவித்துக் கொண்டு இப்படிப் பேசியாவது தீர்த்து விடுவோம் என்று சொல்லலாமே தவிர, இதனால் வேறு பலன் கிடைக்காது. இப்படியெல்லாம் பேசினாலும் அமைச்சராக முடியாது. எந்த நேரத்திலும் அவர்கள் அமைச்சர்களாக முடியாது. அந்த மாதிரி ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஏதாவது ஒரு நாளிலாவது இந்தப் பக்கம் வந்து அமைச்சரவையிலே உட்கார்ந்துகொண்டு அமைச்சர்களாக வந்து விடலாமோ என்ற சூழ்நிலையும் இப்போது மாறிவிட்டது. அப்படி மாறியதற்கு நான் பல உதாரணங்கள் சொல்ல முடியும். சென்ற தேர்தலிலே ஒரு சில மக்கள் அவர்கள் பேச்சைக் கேட்டு ஏமாந்தார்கள். ரூபாய்க்கு 3 படி அரிசி கொடுக்கிறோம், மாடுகள் கொடுக்கிறோம், மனை கொடுக்கிறோம் என்று அவர்கள் சொன்னதைக் கேட்டவர்கள் எல்லாம், இப்பொழுது நமது நாட்டின் நிலைமை என்ன, நமது நாடு எப்படிப்பட்ட நாடாக இருக்க வேண்டும்; அதிலே நம்முடைய பொறுப்பு என்ன என்பதைப் பற்றியெல்லாம் மக்கள் இப்பொழுது சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். திருச்செங்கோடு தேர்தலின் காரணமாக மற்ற இடைக்காலத் தேர்தல்களை நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று சொல்லுவதிலே எந்தவிதமான அர்த்தமும் இல்லை. இடைக்காலத் தேர்தல் வரத்தான் போகிறது, அதை நாமும் பார்க்கத்தான் போகிறோம். இந்த இடைக்காலத் தேர்தலிலே எதிர்க்கட்சிக்காரர்கள் பிரசாரம் செய்வதற்கு நமது பட்ஜெட் உரையில் இடம் இல்லை. மக்களிடத்திலே எப்படிப் போய் பிரசாரம் செய்வது என்று அவர்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே தங்கக் கட்டுப்பாடும், பொற்கொல்லர்களும் அவர்களுடைய பிரசாரத்திற்கு உதவக் கூடிய முறையில் இருக்கிறது. பொற்கொல்லர்களுக்காக வக்காலத்து வாங்கக்கூடிய ஒரே நிலை இப்பொழுது இருக்கிறது. அவர்களைக் காட்டி இந்த இடைத் தேர்தல்களிலே ஜெயித்து விடலாம் என்று அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். தங்கக் கட்டுப்பாடானது நம்முடைய தேசத்தின் பாதுகாப்புக்காக ஏற்பட்ட ஒரு சட்டம். அந்தத் தங்கக்கட்டுப்பாட்டைக் கொண்டு வருகிற நேரத்திலே இடைக்காலத் தேர்தல் வருகிறது என்றால் . . . . . .

Mr. SPEAKER : Let the hon. Member come to the subject.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தங்கக்கட்டுப்பாட்டை வைத்துக்கொண்டு இந்த இடைக்காலத்தேர்தலிலே யாராவது உண்மைக்குப் புறம்பாகச் சொல்லி வோட்டுகள் சேகரம் செய்வதைத் தடை செய்யவேண்டுமென்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேன். நாட்டின் பாதுகாப்புக்காக ஒரு சட்டம் செய்திருக்கக்கூடிய நேரத்திலே, தேர்தல் நாளை எதிர்பார்த்துக்கொண்டு, இந்தத் தங்கக் கட்டுப்பாட்டைப் பற்றிப் பேசுவதானது நாட்டின் பாதுகாப்புக்கு

[திரு. ஜே. மாதா கவுடர்] [9th March 1963

உகந்ததல்ல. ஆகவே, அமைச்சரவை ஒரு சட்டத்தை இயற்றி, தேர்தல் சமயத்திலே இந்தத் தங்கக்கட்டுப்பாட்டைப் பற்றிப் பேசக்கூடாது என்று ஏற்பாடு செய்யவேண்டுமென்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய திரு. மாதவன் அவர்கள் தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய மந்திரிகள் தமிழ் மக்களுக்காகப் பாடுபடவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அது வரவேற்கக் கூடியதுதான். தமிழ் நாட்டிலே இருப்பவர்கள், தமிழ் மக்களுக்காகப் பாடுபடவேண்டியது நியாயமாக இருக்கலாம். ஆனால் திராவிட மக்களுக்கெல்லாம் பாடுபட வேண்டாமா? தமிழ் நாட்டிலே ஆந்திரர்கள், கன்னடர்கள், மலையாளிகள் இருக்கிறார்களே. இப்படிக் குறிப்பிடுவதிலிருந்து திராவிட நாட்டை விட்டுவிட்டார்களா? தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் தமிழ் மக்களுக்கு மட்டும் பாடுபடவேண்டும் என்ற தோரணையில் பேசுகிறார்களே. இன்று ஆதித்தனார் அவர்கள் கூட, திராவிட நாட்டை விட்டு விட்டு, தமிழ் நாட்டுக்கு வந்து விடுங்கள் என்று கூப்பிடுகிறார். திரு. மாதவன் அவர்களும் ஒரு வேளை இதிலே சேர்ந்துவிட்டாரோ என்று நான் நினைக்கிறேன். தமிழ் நாட்டிலே வாசம் செய்கிறவர்களுக்குப் பாடுபடுங்கள் என்று சொன்னால் அர்த்தம் இருக்கிறது. தமிழர்களுக்கு மட்டும் பாதுகாப்புக் கொடுங்கள் என்றால், மற்றவர்களைப் பிரித்துக் சொல்லுகிறாரா என்று நான் கேட்கிறேன். ஆகவே, திராவிடம் போய்விட்டது. "தி" என்பதில் மேலே இருக்கும் சுழியை எடுத்துவிட்டால், தி.மு.க. என்பது "த.மு.க." ஆகிவிடும். அதாவது, தமிழ்நாட்டு முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்துக்கொள்ளலாம். படிப்படியாக அந்த நிலைமைக்கு வந்து விடும். அதை விட்டுவிட்டு, தேர்தல் சமயத்திலே மந்திரிகள் வரக்கூடாது, அவர்கள் வரக்கூடாது, இவர்கள் வரக்கூடாது என்றெல்லாம் சொல்லி, எப்படியாவது தேர்தலிலே ஜெயித்து விடலாம் என்று நினைப்பதானது வெறும் பகல் கனவாக முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

முன்பெல்லாம் இந்த மானியம் வரும்பொழுது கவர்னருக்கு அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்றெல்லாம் பேசுவார்கள். ஆனால் இப்பொழுது என்ன சொல்லுகிறார்கள்? திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுக் கூட்டத்திலே ஒரு மாகாணத்திற்கு ஒரு கவர்னர் இருப்பதற்குப் பதிலாக, நான்கு மாகாணங்களுக்கு ஒரு கவர்னரை வைத்துக் கொள்ளலாம் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அப்படிப் போட்டால் கவர்னர் பதவி போய்விடுமா? அதற்காகச் செலவு ஏற்படாதா?

**திரு. சா. கணேசன்:** On a point of order, Sir. எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் பேசாது இருந்தும் போன வருஷம் சொல்லிய கருத்துக்களையும் எண்ணங்களையும் இப்பொழுது நினைவுப்படுத்திக்கொண்டு அதற்குப் பதில் சொல்வது என்பது சட்டசபை போக்கிற்கும் ஒழுங்கிற்கும் சரியா என்பதைப் பற்றித் தீர்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I think there is no point of order. But what the hon. Member (Sri J. Matha Gowder) said might be irrelevant.

**திரு. எம். எஸ். மணி:** ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். திராவிட முன்னேற்றக் கழக பொதுக் குழுவின் தீர்மானத்தின்படி நான்கு கவர்னர்களை நியமிப்பதைவிட ஒரு கவர்னரை நியமித்தால் சாதாரணமாக செலவைக் குறைக்கலாம் என்றும் அந்த முறையில் செலவைக் குறைக்கவேண்டும் என்று சொன்னோமே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர்:** நீங்கள் இன்பர்மேஷன் கொடுக்கிறீர்களா அல்லது கேட்கிறீர்களா?

**திரு. ஜே. மாதா கவுடர்:** தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதைப் பத்திரிகையில் பார்த்தேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: In parliamentary proceedings, when an hon. Member is speaking, another member can interrupt the speech only on a point of order and not on a point of information. I would like to be educated on it. Of late many hon. Members in the Opposition interrupt the speech by raising point of information. Obstruction of an hon. Member's speech could be done only by raising a point of order and not by raising a point of information. May I have a ruling on this?



9th March 1963] [Srimathi T. N. Anandanayaki]

MR. SPEAKER: The Speaker has got discretion to allow.

SRI K. T. KOSALRAM: That we agree. But the hon. Lady Member Srimathi T. N. Anandanayaki wants to know whether the speech of hon. Members on our side could always be interrupted by Opposition Members raising 'points of information'.

MR. SPEAKER: Such interruption comes from the hon. Lady Member herself sometimes.

SRIMATHI T. N. ANANDANAYAKI rose.

MR. SPEAKER: I am not allowing anybody to speak. I know all the rules and rulings. I am not unaware of them. If I want to be strict, I will be strict.

SRI K. A. MATHIALAGAN: The hon. Member Sri M. S. Mani wanted to elucidate a point.

MR. SPEAKER: He raised a 'point of information'. But he did not ask for any information but only gave some information. That is my complaint. Now the hon. Member Sri J. Matha Gowder can continue his speech.

**திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது பொது மக்களிடத்தில் தங்களுடைய அதிகாரத்தைக் காட்டித்தான் இப்படிச் செய்கிறோம் அப்படிச் செய்கிறோம் என்று சொல்லி வோட்டுகளை வாங்கி விடுகிறார்கள் என்று கூறப்படுகிறது. கனம் அமைச்சர்கள் தங்களுடைய சுற்றுப் பிரயாணத்தின் போது தங்கள் கட்சியின் தன்மையைப் பற்றி மக்களிடத்தில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது தங்களுடைய அதிகாரத்தைக் காட்டி வோட்டுகளை வாங்குவதாகச் சொல்லக்கூடாது. கனம் அமைச்சர்கள் தங்களுடைய கட்சியைப் பற்றித் தங்கள் கட்சியின் தன்மையைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கலாம். மக்களிடத்தில் விளக்கிச் சொல்ல வேண்டியதாக இருக்கலாம். அதற்காகச் சொல்லி, இருக்கலாம். இதற்காகக் கனம் அமைச்சர் மீது குறை சொல்ல வேண்டியதில்லை. குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் சொல்ல வேண்டும் என்பதற்காக வேண்டுமானால் சொல்லலாம்.

அடுத்தபடியாக நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய பத்திரிகை நிருபர்களுக்குப் பல குறைபாடுகள் இருக்கின்றன. அவர்களுக்குப் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அறையானது வெள்ளையர் ஆட்சி காலத்தில் கொடுக்கப்பட்ட அறைதான். அப்பொழுது மூன்று அல்லது நான்கு பத்திரிகை நிருபர்கள்தான் இருந்திருப்பார்கள். ஆனால் இப்பொழுது அநேகம் பத்திரிகைகள் ஏற்பட்டிருக்கின்றன. அநேகம் நிருபர்கள் இருக்கிறார்கள். அவர்களை அவர்களுடைய அறையில் போய் பல அங்கத்தினர்கள் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அறை ரொம்பவும் குறுகலாக இருக்கிறது. பத்திரிகைகள் வளர்ந்து வரக்கூடிய இந்நாளில் நிருபர்களும் அதிகரித்து வருகிறார்கள். நம்முடைய பேச்சுக்களையும் நாம் அவர்களுக்கு ஏதாவது செய்திகளைச் சொன்னாலும் அவைகளை அவர்கள் அவரவர்களுடைய பத்திரிகை ஆபீஸ்களுக்கு அனுப்பவேண்டியதாக இருக்கிறது. அப்படிச் செய்திகளை அவர்கள் டெலிபோன் மூலமாக அனுப்பவேண்டியதாக இருக்கிறது. அப்படி உட

ணடியாக அனுப்ப முடியவில்லை. காரணம் அங்கே ஒரு டெலிபோன் தான் இருக்கிறது. ஒருவர் பேசிய பிறகு மற்றொருவர் பேச வேண்டியதாக இருக்கிறது. அது வரையில் காத்திருக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்காக அங்கு நாலைந்து டெலிபோன்களையாவது வைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் பத்திரிகை நிருபர்கள் கலந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. அந்நிய நாட்டிலிருந்து பல தலைவர்கள் வருகிறார்கள், போகிறார்கள். அவர்களைக் காண வேண்டியதாக இருக்கிறது. பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுதெல்லாம் பத்திரிகை நிருபர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி அனுப்பப்படவில்லையானால் பத்திரிகை நிருபர்களால் கலந்துகொள்ள முடிவதில்லை. அவர்கள் எந்த நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளக் கூடிய அளவில் மேல் நாடுகளில் இருப்பது போன்று அவர்களுக்கு தனியாக நிரந்தரமான ஒரு அனுமதிச் சீட்டை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்களுக்கு நிரந்தரமாக அனுமதிச் சீட்டு வழங்கும்போது அவரவர்களுடைய போட்டோவையும் அதில் வைத்துக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே சில சமயங்களில் அந்நிய நாட்டுத் தலைவர்களுடன் பத்திரிகை நிருபர்கள் பிரயாணம் செய்யவேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது நிருபர்கள் தலைவர்களுடைய பக்கத்தில் உட்கார்ந்து செய்திகளை எழுதிக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது சிறிய பத்திரிகை நிருபர்களாக இருந்தால் அவர்களால் அந்தத் தலைவர்களுடன் பக்கத்தில் உட்கார்ந்து அதாவது முதல் க்ளாசில் உட்கார்ந்துகொண்டு பிரயாணம் செய்ய முடிவதில்லை. பெரிய பத்திரிகை நிருபர்களாக இருந்தால்தான் அவர்களுடன் முதல் க்ளாசில் பிரயாணம் செய்யக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.. அதனால் அப்படிப்பட்ட சிறிய பத்திரிகைக்காரர்களுக்கு ரயில்வே கட்டணத்தையோ அல்லது பஸ் பட்டணத்தையோ பாதியாக வசூலிக்கவேண்டும் என்ற முறையைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே ரயில் கட்டணத்தையும் பஸ் கட்டணத்தையும் அவர்களுக்குப் பாதியாகக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய சட்டசபைக் காரியதரிசி திரு. ஹனுமந்தப்பா அவர்கள் அண்மையில் இங்கிலாந்துக்குச் சென்று விட்டு அங்கு பார்லிமெண்ட் எப்படி நடக்கிறது என்றெல்லாம் பார்த்து வந்திருக்கிறார். அவருடைய அனுபவத்தை எடுத்துக்கொண்டு அங்கு எப்படியெல்லாம் சௌகர்யம் செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அவரைக் கேட்டு அந்த முறையில் இங்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, முதலாவதாக சென்னை நகரப் பிரதிநிதியாக கனம் அனந்தநாயகி அம்மாள் அவர்கள் கூறிய சில கருத்துக்களை நான் 100-க்கு 100 ஒத்துக்கொள்ளுகிறேன். அதாவது சென்னை நகரசபையைப் பொறுத்த வரையில் சென்னைப் பிரதிநிதிகளான எம்.எல்.ஏ.-க்கள் அவசியம் இடம் பெற வேண்டும் என்று குறிப்பிட்டார். அதை நான் வரவேற்கிறேன். அப்படி இடம் பெற்றால் சென்னை நகரத்திலுள்ள வேலையில்லா திண்டாட்டம் முதலியவைகளைப் பற்றியெல்லாம் சொல்லலாம் என்று வற்புறுத்தினார். அதையும் நான் வரவேற்கிறேன். மாவட்டங்களில் டெவலப்மெண்ட் கவுன்சில்கள் நடைபெறுகின்றன. அங்கே சட்டசபை அங்கத்தினர்கள் இடம் பெறுவது போன்று இங்கே இடம் பெறச் செய்ய வேண்டும். அவர்களுக்கு ஓட்டுரிமை இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. அவர்களும் கலந்துகொள்வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அப்படிக் கலந்துகொண்டு அவரவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு இருக்கவேண்டும். ஆளும் கட்சியின் உறுப்பினரிடமிருந்தும் எதிர்க்கட்சி உறுப்பினரிடமிருந்து வந்துள்ள உடன்பாடான கருத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.





நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் நேற்று நிதி அறிக்கையின் மீது விவாதம் நடந்ததற்கு பதில் அளிக்கும்போது ஆந்திராவிலிருந்து சென்னை நகரத்திற்கு கிருஷ்ணா தண்ணீரைக் கொண்டு வருவதைப்பற்றி குறிப்பிட்டு அதற்கு பாராட்டுகளையும் தெரிவித்தார். ஆந்திரா சர்க்கார் முதலமைச்சருக்கும் மைசூர் முதலமைச்சருக்கும் மகாராஷ்டிர முதலமைச்சருக்கும் தன்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்களுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவ்விதம் தெரிவித்துக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப் பாராட்டுகிற நேரத்தில் சென்னை நகர குடி தண்ணீர் பிரச்னையும் ஓரளவு தீர்ந்து விடுகிறது. இது விஷயமாக நம்முடைய அமைச்சரவையும் குறிப்பாக முதல் அமைச்சர் அவர்களும் நிதி அமைச்சர் அவர்களும் வெளி மாநிலங்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கு சென்னை நகர மக்கள் அவர்களுக்கு என்றைக்கும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள். நாளையதினம் அந்தத் தண்ணீரைக் குடிக்கும் நேரத்தில் அந்தத் தண்ணீரில் கனம் காமராஜ் அவர்களுடைய திருவுருவமும், கனம் பக்தவத்சலம் அவர்களுடைய திருவுருவமும் எங்களுக்குத் தெரியும் என்ற நம்பிக்கையில் அவர்கள் பெருமைப்படலாம்.

இவைகளைச் சொல்கிற நேரத்தில் இன்னும் சில காரியங்களும் இருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் இந்த மானியத்தில் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை நகரம் "ஏ" பிரிவு நகரமாக வேண்டும் என்று சென்ற மானியத்தின் போது நாங்களெல்லாம் வற்புறுத்திய நேரத்தில் கனம் நிதி அமைச்சரும் சரி, கனம் முதலமைச்சரும் சரி, "நாங்கள் டில்லியில் இதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்களே எழுந்து அப்பொழுது அத்தகைய வாக்குறுதியை அளித்தார்கள். ஆனால், "ஏ" பிரிவு நகரமாக சென்னை இன்னும் ஆக்கப்படவில்லை, ஆக்குவதற்கான காரியங்களிலும் ஈடுபடவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்வது நகரப் பிரதிநிதி என்ற முறையில் மிக முக்கியமான பெரும் கடமை என்றே நான் கருதுகிறேன்.

மாநிலத்தின் தலைநகரமாக இருக்கும் இந்தச் சென்னை நகரையொட்டிய பல காரியங்கள் இருக்கின்றன. பல கமிட்டிகளை நாம் நியமிக்கிறோம். எதற்கெடுத்தாலும் கமிட்டிகள் அமைக்கப்படுகின்றனவே தவிர, அவை நடைமுறையில் வருவதில்லை. கூவம் ரிவர் இம்ப்ரூவ்மெண்டுக்காக ஒரு ஹை பவர் டெக்னிகல் கமிட்டி நியமிக்கப்பட்டது. சென்னை நகரத்திலிருக்கும் போக்குவரத்திலுள்ள நெரிசல் எல்லோருக்கும் தெரிந்தது. க்யூ வரிசை ஒரு பஸ் ஸ்டாப்பிலிருந்து அடுத்த பஸ் ஸ்டாப் வரை இருப்பதையும் நாம் பார்க்கிறோம். கனம் அமைச்சர்கள் பஸ்ஸில் போவதில்லை. அதனால் அந்தச் சிரமம் தெரிவதில்லை. கனம் திரு வெங்கட்ராமன் அவர்களுக்கு ஃபோட்டோ படம் பிடித்து வேண்டுமானால் காட்ட முடியும். சென்னை நகரத்தில் போக்குவரத்திலுள்ள நெரிசலைத் தவிர்க்கும் வகையில் பக்கிங்காம் கால்வாயை கிண்டி ரயில்வே நிலையத்தோடு இணைப்பதின் மூலம் கோட்டையிலிருந்து திருவல்லிக்கேணி, மைலாப்பூர், அடையார் வழியாக போக்குவரத்து வசதிகளைப் பெருக்கலாம். கூவம் ரிவர் இம்ப்ரூவ்மெண்டு ஹை பவர் டெக்னிகல் கமிட்டியினுடைய அறிக்கை சர்க்காரினுடைய பேழையிலே தூங்கிக்கொண்டிருக்கிறதா, குப்பைத் தொட்டிக்குப் போய்விட்டதா என்று தெரியவில்லை.

விறகுப் பஞ்சத்தை போக்குவதற்காக சவுக்கு மரங்கள் ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கர்களில் வைக்கப்படுகின்றன என்றெல்லாம் சொல்கிறார்கள். எப்பொழுது சவுக்குப் பயிரிடுவது ? எப்பொழுது விறகுப் பஞ்சம் தீர்வது ? மாற்று யோசனை ஒன்று தரப்பட்டிருக்கிறது. ஸுவேஜ் யுடிலைசேஷன் கமிட்டியினர் சமர்ப்பித்த அறிக்கையில், சென்னை நகரத்தில் வீணாகும் சாக்கடைக் கழிவு நீரிலிருந்து எரி வாயுவை (Fuel Gas) உற்பத்தி செய்து திட்டம் அமைத்தால் வளர்ந்து வருகிற சென்னை நகரின் விறகுப் பஞ்சத்தைப் போக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்

[திரு. கே. .எ. மதியழகன்] [9th March 1963

கள். செக்கோஸ்லாவிகியா' நாட்டு அனுபவத்தின் அடிப்படையில் கமிட்டி தயாரித்த அறிக்கையும் இந்தச் சர்க்காரின் அலமாரியில் தூங்கிக்கொண்டிருக்கிறது. அது எப்போது வெளியேவரும் ?

சென்னை நகருக்கு மாஸ்டர் ப்ளான் ஒன்று போட்டுக் கொடுத்தார்கள். தனிப்பட்டமுறையில் கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டபோது, "புதிதாக அமெரிக்க நிபுணர்களைக் கலந்தாலோசித்து மாஸ்டர் ப்ளான் தயார் செய்துகொடிண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். இப்படி ப்ளான் போடுகிறோம், கமிட்டிகள் போட்டிருக்கிறோம் என்று சொல்லப்படுகிறதே தவிர, அந்தக் கமிட்டிகள் ரிபோர்ட் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. காவிரி நதித்தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டுவருவது பற்றி இன்வெஸ்டிகேட் செய்வதற்காக ஒரு கமிட்டி போட்டோம். அது என்ன ஆயிற்று ? கேட்கும் நேரத்தில், "கமிட்டி போடுகிறோம், ஆராய்ச்சியில் இருக்கிறது" என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறதே தவிர, இந்த மாநிலத்தின் தலைநகரத்தைப் பொறுத்தவரையில் நிறைவேறாது இருக்கும்பெரும் காரியங்கள், ஏதோகண்துடைப்பாக, காலத்தைத் தாழ்த்தும் காரியங்களாக அமைகின்றனவே அல்லாமல், கூவம் ரிவர் இம்ப்ருவ்மெண்ட் ஹை பவர் கமிட்டி, ஸுவேஜ் யுடிலைசேஷன் கமிட்டி, காவரி வாட்டர் இன்வெஸ்டிகேஷன் கமிட்டி இவைகளைப்பற்றிய விவரங்களைப்பற்றித் என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள் என்பதுபற்றி தயவுசெய்து அமைச்சர் அவர்கள் கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் உள்ள போக்குவரத்து நெரிசலைப் போக்கவும், விறகு பஞ்சத்தைப் போக்கவும் நல்ல வாய்ப்பும் வழியும் இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

என்னுடைய வெட்டுப் பிரேரணையில், ஐந்து பார்லிமெண்டரி தொகுதிகுரிய இடங்களை ஏழு அசெம்பிளி தொகுதிகளாக அமைக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். இது சர்க்காருடைய கருத்துக்கு விரோதமானதல்ல. ஆந்திரமாநிலம் போன்ற மற்ற மாநிலங்களில் அப்படி மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தமாநில சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகை அதிகரிக்கப்படவேண்டும். அதற்கான காரணங்களை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். தொகுதி மக்களிடம் நேரடித்தொடர்பிற்கும் சீரானபணிக்கும் மக்கள் குரலை சீரிய வகையில் பிரதிபலிபதற்கும் எண்ணிக்கை அதிகமாகவேண்டும். இங்கிலாந்து போன்ற நாடுகளில் கூட, ஐம்பதாயிரம், அறுபதாயிரம் வாக்காளர்கள் உள்ள ஒரு தொகுதிக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இருக்கிறது. ஒரு பார்லிமெண்டரி தொகுதிக்கு ஏழு அசெம்பிளி தொகுதிகள் இருக்கவேண்டும் என்று கோருகிற என்னுடைய கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுகொண்டு, அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளிப்பாரானால், நான் என்னுடைய வெட்டு பிரேரணையை வற்புறுத்தாமல் அதனைத் திருப்பிபெறக் காத்திருக்கிறேன் என்று கூறி என்னுடைய உரையை முடித்துகின்றேன்.

*திரு. மு. கருணாநிதி : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தந்துள்ள வெட்டுப் பிரேரணைகளின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகள், "மாநிலச் சட்டப்பேரவை, தேர்தல்கள் மாநிலத் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர், ஓய்வு உபகாரத் தொகைகள்" ஆகிய நான்கு பகுதிகளில் கோரப்படுகிற மானியக் கோரிக்கைகள் ஆகும். சென்ற ஆண்டு இந்த மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தில், "சட்டப்பேரவை" என்ற மானியத்தின் மீது தனியாகவும், மற்ற மூன்று பகுதிகள் மீது தனியாகவும் எடுத்துக்கொண்டு விவாதம் நடைபெற்றது. அந்தக் காரணத்தினால் சட்டமன்ற மானியத்தைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் நல்லதொரு அமைதியான சூழ்நிலையும், சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒருமித்த கருத்தோடு தங்கள் தங்களுடைய எண்ணத்தை எடுத்துத் தெரிவிக்கக்கூடிய சூழ்மான நிலையையும், சென்ற ஆண்டு விவாதத்தில் ஒளிவிடக் கண்டோம். ஆனால், இந்த ஆண்டு, சரியாகவோ தவறாகவோ, விரும்பாத காரணத்



9th March 1963] [திரு. மு. கருணாநிதி]

தாலோ அல்லது நினைக்காத காரணத்தாலோ அல்லது அந்தக் கருத்தை யாரும் வெளியிடாத காரணத்தாலோ இந்த நான்கு மானியக் கோரிக்கைகளும் ஒன்றாக இணைந்துவிட்ட காரணத்தால், இந்த மானியக் கோரிக்கையின் விவாதத்தில் இதுவரையில் இல்லாத சூடும் சுவைக்குறைவும், சுருதி பேதமும் ஏற்படுவதற்காக நான் மிக மிக வருந்துகிறேன்.

இந்தச் சட்ட மன்றம் நல்ல பாரம்பரியத்தைப் பெற்று வளர்ந்து வருகிற ஒரு சட்ட மன்றம் ஆகும். இந்த சட்டமன்றத்தினுடையதலைவர்களாக இது வரையில் வீற்றிருந்தவர்கள் எல்லாம், இந்த மன்றத்தினுடைய பெருமையை மிகவும் சிறப்பாகக் காப்பாற்றக்கூடிய அளவிலும், நல்ல கனிவு காட்டியும், கருணை மழை பொழிந்தும், கட்சி வேறுபாடு 12-00 noon.
இல்லாமலும், மறைமுகமாகக்கூட கட்சி எண்ணத்தை மனதிலே கொள்ளாத நிலையில் இந்த மாமன்ற நடவடிக்கைகளை நடத்திச் சென்றிருக்கிறார்கள். அவ்வழியிலே, சென்ற ஆண்டு தொடங்கி இதுவரையிலும். இந்த மாமன்றத்தை, சட்ட மன்றத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிற தாங்கள் மிகத் திறமையோடு நடத்தி வருகின்றீர்கள். சட்ட மன்றத்தின் நடவடிக்கைகளில் சூடு பிறக்கின்ற நேரத்தில் தணித்தும், சுருதி பேதம் ஏற்படுகிற நேரத்தில் அதை நிறைவு செய்தும், இந்த மன்றத்தை நடத்திச் செல்கிற தங்களுக்கும், தங்களுக்கு உறுதுணையாக இருக்கும் மன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எங்களுடைய கட்சியின் சார்பாக மீண்டும் மீண்டும் நன்றியையும் வணக்கத்தையும் நாங்கள் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

விவாதங்கள்—அது வரவு செலவுத் திட்டத்தின் மீதுள்ள விவாதமாக இருந்தாலும், வேறு சில சட்டங்கள் நிறைவேற்றப்படும் விவாதமாக இருந்தாலும் —நல்ல முறையில் நடைபெறுகின்றன. நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு இறுதியில் உரையாற்றிய நேரத்தில், நேற்றை தினம் நம்முடைய மதிப்புக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் பேசும் போது எதிர்கட்சி எந்த அளவுக்குச் செயல்படுகிறது என்பதையும் எந்த அளவுக்குத் திறமையோடு இயங்குகிறது என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அதைப்போலவே இன்றைய தினம் இந்த மானியத்தின் மீது பேசிய ஈரோட்டை சேர்ந்த கனம் காங்கிரசு உறுப்பினர் ஒருவர், எதிர்கட்சியினுடைய திறமைகளை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார்கள். ஈரோட்டிலிருந்து எங்களுக்குப் பாராட்டுக் கிடைக்கிறது என்றாலே அதற்குத் தனி மகிழ்ச்சி உண்டு. அது கிடைக்கவேண்டிய இடத்திலிருந்து கிடைக்காமற்போனாலும், கிடைக்குமா என்று சந்தேகப்பட்ட இடத்திலிருந்து கிடைக்கிறது என்பதற்காக நாங்கள் மிக மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த மாமன்றத்தில் நம் சட்டமன்ற மானியத்தைப் பற்றி இங்கு பேசுகிற நேரத்தில் குறிப்பிட வேண்டியது மிகமிக முக்கியமாக ஒன்று உண்டு. இந்தச் சட்ட மன்றத்தில் சில நேரங்களில் சூடு அதிகமாகி விவாதங்கள் நடைபெற்றன என்று நான் குறிப்பிட்டேன் அவைகளில் முக்கியமாக, இந்த மன்றத்திற்குச் சம்பந்தப்படாதவர்கள் வெளியிலே இருப்பவர்களுடைய பெயர்கள் அடிக்கடி இங்கு இழுக்கப்பட்டன. அந்தப் பெயர்கள் சொல்லப்படாவிட்டாலும், 'இவரைத்தான் குறிப்பிட்டுஇருப்பார்கள்' என்று வெளியே இருப்பவர்கள் பத்திரிகை நிருபர்கள், தாங்களாகவே கற்பனை செய்து, பெயரைக்கூடப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். நேற்றயதினம் நிதி அமைச்சர் அவர்கள், 'வெளியிலே இருக்கிற ஒரு பெரியவர்' என்று குறிப்பிட்டார்கள். ஆனால், பத்திரிகையில் 'எந்த பெரியவரை இவர் குறிப்பிட்டார்' என்று பெயர் பொறித்து, தலைப்புச் செய்திகள் வந்திருக்கின்றன.

ஆகவே இந்த மன்றத்தில் பேசுகிற நேரத்தில் மன்றத்திற்குச் சம்பந்தம் இல்லாதவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் மிகவும் அமைதியுடனும், எச்சரிக்கையுடனும் குறிப்பிடவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பெரியவருக்காக நாங்கள் வக்காலத்து வாங்குகிறோம் என்றோ, அவர்களின் கொள்கையும் எங்கள் கொள்கையும் ஒன்றாகக் கலந்துவிட்டது என்றோ யாரும் தயவு செய்து கற்பனை செய்துக் கொள்ளக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் திரு. ராஜகோபாலச்சாரியார்

[திரு. மு. கருணாநிதி] [9th March 1963

படம் அழகாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த படத்தின் கீழே தன் இருதயத்திலும், அறிவிலும் மகத்தானவர் என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பெரியவரைச் சிறைச்சாலையில் தள்ள வேண்டு மென்று சொல்லுகிற அளவு இந்த மன்றத்தில் பேசப்படுவது மிகவும் வருந்தத்தக்கதாகும். இத்தகைய நிலை விவாதத்தில் நீடிக்குமானால் இந்த மன்றம் தன்னுடைய பழம் பெருமையையெல்லாம் இழந்துவிடக்கூடுமோ என்ற அச்சத்தினால் நான் இதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தாங்கள் அருள் கூர்ந்து, மனம் விரும்பி அத்தகைய சொற்களைச் சட்டமன்ற நடவடிக்கை ஏடுகளில் இருந்து எடுப்பதற்கு முயற்சி செய்வீர்களானால் நான் பெரிதும் நன்றி தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டவனாக இருப்பேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொதுவாக சட்டமன்ற விவாதங்களில் நல்ல கண்ணியத்தை வளர்க்க வேண்டுமென்பதற்காகவே நான் இதை இங்கே எடுத்துக் காட்டுகிறேனேயொழிய, நம்முடைய பெருமைமிக்க பழைய மரபு, பண்பாட்டை ஒட்டி சட்டசபை நடவடிக்கைகள் செல்லவேண்டுமென்ற ஆசையின் காரணமாக இக்கருத்தைத் வெளியிடுகிறேனே தவிர வேறு இல்லை. இதன் காரணமாக சுதந்திரக் கட்சியோடு திராவிட முன்னேற்றக் கழகம் இணைந்துவிட்டது என்றோ, இரு வேறு கட்சிகள் ஒன்றாக இணைந்துவிட்டது என்றோ யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. சீன வெறியர்கள் இந்த நாட்டைத் தாக்குவதற்கு வட எல்லையில் கால் வைத்தவுடனே திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய சர்க்காரோடு இத்தாக்குதலை முறியடிப்பதற்கு எல்லாவகையிலும் ஒத்துழைப்பது என்று முடிவு செய்தது. அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசோடு இணைந்துவிட்டது என்று சொன்னவர்கள் உண்டு. நல்ல வேளையாக அப்படிப்பட்ட எண்ணம் நிலைபெற்றுவிடாத அளவுக்கு இந்தச் சட்டமன்றத்தில் நடந்த விவாதங்கள் இரண்டையும் வேறுபடுத்தியே காட்டும்அளவில் அமைந்ததற்கு நான் ஓரளவு பெருமைப்படுகிறேன். சீன வெறியர்கள் நாட்டைத் தாக்குவதற்கு முனைந்தபோது முழு மூச்சுடன் அத்தாக்குதலை முறியடிக்கவேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் தன் ஒத்துழைப்பை இந்திய சர்க்காருக்கு அளிக்க முன்வந்ததே தவிர காங்கிரஸ் கட்சிக்கு அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் அளிக்கின்ற ஆதரவு ஆளும் கட்சிக்கு அல்ல, நாட்டை ஆளும் அரசாங்கத்திற்கே ஆகும். இன்றையதினம் எதிர்கட்சிகளுக்கும் ஆளும்கட்சிக்குமே பலவகையில் அபிப்பிராயபேதம் இருந்தாலும் கூட பொது எதிரியான சீனர்களை எதிர்ப்பதற்கு சர்க்காரின் கை ஒருமுகமாக வலுப்பட வேண்டும் என்பதற்காக இந்த ஆதரவையும்,ஒத்துழைப்பையும் நல்க முன்வந்திருக்கிறோம். இன்றைக்கும்கூடப் பார்க்கலாம். பெரிய ஆலயங்களில் க்ளோபுகள் கட்டித் தொங்கவிட்டிருப்பார்கள். அந்த க்ளோப் லஸ்தர் விளக்குகளைப் பார்த்தால் அந்த விளக்குகளுக்குள் ஒரு கண்ணாடி டம்ளரைப் பொருத்தி அதில் பாதி எண்ணெ, பாதி தண்ணீர் விட்டுத் திரியை போட்டு எரியவிடுவது தெரியும். சூடேறி க்ளாஸ் உடைந்துவிடக்கூடாது என்பதற்காக தண்ணீர் விடப்படுகிறது, மேலும் எண்ணெ குறைவாகவிட்டாலும் போதும், தண்ணீரின் மேல் மிதப்பதனால் மேலாகவே எண்ணெயிருக்கும் என்ற காரணங்களுக்காகத் தண்ணீர் விடப்படுகிறது என்று சொன்னாலும் எண்ணெயோடு தண்ணீர் கலந்தாலும் விளக்கு எரிகிறது. இருள் நீங்க அது பயன்படுகிறது. குறைவாக எண்ணெ இருந்தாலும் அதை மேலாகக் கொண்டுவந்து நிறுத்தி விளக்கை எரித்து இருளைப் போக்கப்பயன்படுகிறது. இந்த அளவில் பார்த்தால் காங்கிரசை எண்ணெய் என்றோ, திராவிடமுன்னேற்றக் கழகத்தைத் தண்ணீர் என்றோ சொல்ல நான் முன்வரவில்லை. அதைப்பற்றி நாட்டம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. இந்த இரண்டும் இணைவதனால் இன்றைய தினம் நம் நாட்டைச் சூழ்ந்து கொண்டிருக்கிற போராகிய மேகத்தின் கரிய இருளை நீக்கப் பயன்படும். ஆலயங்களில் விளங்கும் க்ளோப், லஸ்தர் விளக்குகளைப் போன்று விளங்குகிற சர்க்கார், எல்லா கட்சியின் ஆதரவையும் பெற்று செயலாக ஒளிவிட்டு பொது எதிரியாகிய சீனர் தொடுத்த யுத்த மேகத்தினால் நாட்டைச் சூழ்ந்துகொண்டிருக்கும் இருட்டை விரட்டுகிற முயற்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியின் சர்க்காரை ஆதரிக்க முன்வந்தது நாட்டிலே ஒரு பலம் பொருந்திய சுமுகமான நிலையை உண்டாக்கியிருக்கிற காட்சியைத்தான் காண்கிறோம்.



9th March 1963] [திரு. மு. கருணாநிதி]

இந்த நேரத்தில் இடைத் தேர்தல் வர இருக்கிறது என்ற அறிவிப்பை தின ஏடுகளில் காண்கிறோம். மத்திய சர்க்கார் நியமித்துள்ள இந்தக் குழுவானது விரைவில் இடைத்தேர்தலை நடத்தித் தீரவேண்டுமென்று அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக அறிகிறோம். அதன்படி மூன்று நான்கு இடைத்தேர்தல்கள் வர இருக்கின்றன . இந்த இடைத்தேர்தல்கள் இப்போது அவசியம் தானா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இடைத் தேர்தலே வேண்டாம் என்ற எண்ணத்தில் நான் கூறவில்லை. முதல் அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துப்படி இந்த இடைத் தேர்தல் ஏற்பட்டுள்ள ஸ்தானங்களில் இருந்து சென்ற தடவை எந்த எந்த கட்சி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களோ அந்த அந்தக் கட்சியில் இருந்தே ஒருவரை நியமனம் செய்துவிடலாம் என்கிறயோசனை கவனம் செலுத்தப்படவேண்டிய ஒன்றுதான். கட்சிகளின் சார்பாகத் தேர்தெடுக்கப்பட்டு வந்துள்ள இடங்களுக்கு இம்மாதிரி சங்கடம் இல்லாமல் நியமனம் செய்துவிடலாம். ஆனால் சுயேச்சை அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தொகுதியாக இருந்தால் திரு. காமராஜ் அவர்களுடைய யோசனைப்படி யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற சங்கடம் எழக்கூடும் என்ற காரணத்தினால் எதிர் கட்சியிலுள்ள சிலரும் முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆயினும் இடைத்தேர்தல் வருகிறநேரம் எப்படிப்பட்டது ? நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிற காலத்தில், நெருக்கடி அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டு எதிர்க்கட்சிகளின் பேச்சுரிமை கட்டுப்படுத்தப்பட்டு வைத்திருக்கிற காலத்தில் இருக்கிற உரிமையையும்கூட பறித்து சிறையில் பிடித்துத் தள்ளி வைக்க வேண்டும் என்று கனம் மாதா கவுடர் பேசுகிற காலத்தில் இடைத் தேர்தலை நடத்தியேதான் தீருவது என்றால் ஒரு விஷயத்தைக்கவனித்துப்பார்க்க வேண்டும். இடைத் தேர்தலை நடத்துவது என்றால் அவசர நிலைமைப் பிரகடனத்தையாவது வாபஸ் பெறுங்கள். இல்லையென்றாலும் எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பூட்டு போடாமல் முன்பிருந்த பேச்சுரிமையையாவது வழங்கிவிட்டு இடைத் தேர்தலை நடத்துங்கள். என் இதைச் சொல்லுகிறேன் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். இல்லாதபட்சத்தில் வீணான கலவரங்களும், குழப்பமும்தான் நாட்டில் ஏற்பட இடமுண்டாகும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தனையில் தேக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இடைத்தேர்தல் நடத்தப்படுவதாக இருந்தால் பேச்சுரிமை வழங்கப்படவேண்டும். பேச்சுரிமையைக் கட்டுப்படுத்திவிட்டு இடைத்தேர்தலை நடத்துவது சரியல்ல. அப்படி நடத்துவதானது வீண் குழப்பங்களையும், இப்போது ஏற்பட்டிருக்கிற அமைதிக் குலைவையுமே ஏற்படுத்த ஏதுவாக இருக்கும். இன்றைக்கு ஊர்காவல் படை என்று அமைத்திருக்கிறோம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் நாட்டைப் பாதுகாக்கவேண்டும் என்ற ஒரேசீரிய எண்ணத்தில் ஒன்றுபட்டிருக்கும் முயற்சியே ஊர்க்காவல் படை. இன்றையதினம் கட்சிப் பாகுபாடின்றி எல்லோரும் நமக்கெல்லாம் பொது எதிரியான சீனரை விரட்டியடிக்கவேண்டும் என்றே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இடைத்தேர்தலைக் கொண்டுவந்து நிறுத்தினால் ஊர்க்காவல் படையினரும் அந்தக் கட்சி இந்தக் கட்சி என்று தேர்தலில் கலந்துகொள்ள இரண்டுபட வேண்டுமா ? இதைப்பற்றியெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக தமிழக மாநிலத்தைப் பொறுத்த வரையில் தேர்தல் தலைப்பில் கூறவேண்டுமென்றால் 41 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு செல்லும் நிலைமை இருந்தது. இனி மக்கள் தொகை கணக்குப்படி 41–இல் இருந்து அது 38 ஆகக் குறைகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை மக்கள் தொகை கணக்கை வைத்து ஏற்படுகிறது. மக்கள் தொகை 51–ல் இருந்து 61–ஆம் ஆண்டு முடிய பார்க்கிறபோது நம் ராஜ்யத்தில் மக்கள் தொகையின் பெருக்கம் மிகமிகக் குறைவாக இருக்கிறது. அஸ்ஸாம் மாகாணத்தில் 34.3 சதம் ஏற்றமும், பீகாரில் 19.75 சதம் ஏற்றமும், மத்தியப்பிரதேசத்தில் 24.25 சதம் ஏற்றமும், கேரளத்தில்

[9th March 1963

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்** : "நகைத் தொழிலாளர்களின் நிலைமை பற்றி மொரார்ஜி தேசாய் அக்கறை காட்டவில்லை" என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று சொன்னபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பக்கத்தில் இருந்த நிதி அமைச்சர் அவர்களிடம் அப்போதுதான் அவர்களுக்குத் திரு மொரார்ஜி தேசாய் அவர்களிடமிருந்து வந்த கடிதத்தைக் கொடுத்து, திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் அந்த நகைத் தொழிலாளர்களுடைய நிலைமையை எந்த அளவுக்கு அனுதாபத்துடன் நோக்குகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டச் சொன்னார். இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் முதலமைச்சர் அவர்கள் மற்ற மந்திரிகளுடன் கலந்தாலோசிக்க நேரிடும். அவர் பேசுவது நம்முடைய நன்மைக்காகத்தான். நாம் பேசும்போது முதலமைச்சர் அவர்கள் பேசக்கூடாது என்று வாய்ப்பூட்டுப் போட வேண்டாமென்று எதிர்க்கட்சி அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். முன்பு ஊட்டியிலே சட்ட மன்றத்தைக் கூட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தக் காலம் முடிந்துவிட்டது. என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், எங்களுடைய நெல்லை மாவட்டத்திலே உள்ள குற்றாலத்திலே இந்தச் சபையைக் கூட்ட வேண்டும் என்பதுதான். எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த சபாநாயகர் இருக்கும் போது அந்த வாய்ப்பை எங்களுக்குத் தரவேண்டும். குற்றாலம் குளிர் நீர்ச்சோலை நிறைந்த அருவி. பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் இருந்தெல்லாம் அங்கே வருகிறார்கள். பசி இல்லாதவர்களும், அன்னத் துவேஷத்தினால் அன்னத்தை வெறுத்தவர்களும் அங்கே வந்து அந்த மலைக் காற்றை சுவாசிப்பதன் காரணமாகக் குணம் பெறுகிறார்கள். அங்கே வருகிறவர்களைப் பற்றிக் கதைகள்கூட சொல்வதுண்டு. வயதானவர்கள் அங்கே வந்தால் இளமைப் பருவத்தை அடைந்துவிடுவார்கள் என்று சொல்வதுண்டு. இந்தச் சட்டமன்றத்தில் இருக்கின்ற வயதானவர்கள் அங்கே வந்து இளமைப் பருவத்தை அடையவும், இளமைப் பருவத்தில் இருக்கின்றவர்களுக்கு இளமை முறுக்கு மேலும் அதிகமாகவும், இந்தச் சட்டமன்றத்தைக் குற்றாலத்திலே கூட்ட அத்தனை அங்கத்தினர்களும் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அதிகாரிகளைப்பற்றி ஒரு வார்த்தை. என்.ஜீ.ஓ.-க்கள் பற்றி கான்பிடன்ஷியல் ரிப்போர்ட்டை மேல் அதிகாரிகள் தயாரிக்கும்போது அது அவர்கள் கழுத்தை அறுக்கும் நிலையில் இருக்கக்கூடாது. அந்த ரிப்போர்ட் அட்வெர்ஸாக இருந்தால் அதை அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்ற விதி இருக்கிறது. ஆனால் அதை அநேக இடங்களில் அனுசரிக்காமல் இருக்கிறார்கள். அடுத்தபடியாக அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டுமென்று நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்ன எதிர்கட்சிக்காரர்கள் இப்போது அமைச்சர்கள் வருவதை வரவேற்கிறார்கள். எங்கள் தொகுதிக்குக் கனம் ராமய்யா அவர்கள் வந்திருந்தார்கள். எங்கள் இடத்தில் இருந்த ஒரு பாலத்தை, பல ஆண்டுகளாக கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததை, நேரில் அழைத்துச் சென்று காண்பித்தோம் அமைச்சர் அவர்களை. அவருடன் சீப் என்ஜினியர் வந்திருந்தார்கள். உடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஆகவே அடிக்கடி அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டும். அப்படி அவர்கள் மாவட்டங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்ய அந்தந்த மாவட்டங்களில் ஒரு ஸ்டேட் கார் வைத்து அதை கலக்டரிடம் விட்டு வைத்திருந்தால், தி.மு.க. அல்லது மற்றக் கட்சி அங்கத்தினர்கள் காங்கிரஸ்காரர் காரில் அமைச்சரோடு எப்படி போவது என்று கூசி நிற்க வேண்டியதில்லை. பொதுக் கார்தானே என்று யாரும் ஏறிச் செல்லலாம். ஆகவே அந்தந்த மாவட்டங்களில் கலக்டரிடம் ஒரு ஸ்டேட் கார் இருந்தால் அது வரவேற்கத் தக்க அம்சமாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொண்டு இந்த கோரிக்கையை நான் முழு மனதுடன் ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன்** : கனம் சபாநாயகர் அவர்களே, டிமாண்ட் எண் 6-ன் மீது முதலில் என் கருத்துக்களை உங்கள் மூலமாக சமர்ப்பிக்க முன்வருகிறேன். காலம் பாதியாக வெட்டப்பட்டு விட்டதால் விளக்கம்



9th March 1963] [திரு. சா. கணேசன்]

இல்லாமல் விஷயத்தைச் சொல்வதுடன் நிறைவு செய்ய நான் முயல்கிறேன். சட்டசபையில் இட நெருக்கடி என்பதை நாம் எல்லோரும் நன்றாக உணருகிறோம். கிட்டத்தட்ட 40 பேர்களுக்காக முதலில் அமைக்கப்பட்டது இச்சபா மண்டபம், பின்னால் 100 பேர்களுக்காக ஸ்தானங்கள் பெருக்கப்பெற்றன. இப்போது 206 பேர்களுக்காக இது அமைக்கப் பெற்றிருக்கிறது. இந்த நிலையில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி பெரிது. இதை நிவர்த்திக்க வேண்டும் என்பதை விளக்கம் காட்டிப் பேச முடியாமையினால் வலியுறுத்தி நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மேலே பார்வையாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் இட நெருக்கடி பலமாகத்தான் இருக்கிறது. மேலே கொஞ்சம் சப்தம் வருகிறது அல்லது இங்கு நடைபெறுகிற நிகழ்ச்சிகளைச் செம்மையாக, திறமையாக, பத்திரிகைகளில் வெளியிடப்படவில்லை என்றால், அதற்கு மூலகாரணம் இட நெருக்கடிதான் என்பதை நான் வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். யார் பேசுகிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதைக்கூடத் தெளிவாகக் காணவோ அல்லது கேட்கவோகூட முடியாததற்கு இட வசதியின்மைதான் காரணம். அதற்கு மேலே உறுப்பினர்கள் உண்டி கொள்வதற்குக்கூட இங்கு சரியான இடமே கிடையாது. விஷயங்களைத் தெரிந்து கொண்டு ஆய்வதற்குச் சந்தடி இல்லாத அறை கிடையாது. எவ்வளவோ பேசியும், கேட்டும், படித்தும் ஏற்பட்டிருக்கிற அலுப்பை நீக்கிக் கொள்ள சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்றால் அதற்கு வேண்டிய இடம் இல்லை. இவையெல்லாம் கண்டிப்பாகச் செய்து கொடுக்கப் பெறவேண்டிய இன்றியமையாத தேவைகளாகும். இவையெல்லாம் "லக்ஷுரிஸ்", ஆடம்பரங்கள் அல்ல. இவை இன்றியமையாத் தேவைகளாகும் என்பதை கட்சி வேறுபாடு இன்றி, கொள்கை வேறுபாடு இன்றி அனைவரும் உணருகிறார்கள் என்பதை நான் உங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்தபட்சக் கோரிக்கையாகக் கேட்டால் ஒரு சாப்பாட்டு ஹால் தேவை. ஆய்வு செய்வதற்குரிய, சிறிது அமைதியான சூழ்நிலையோடு கூடிய, ஒரு இடம் தேவை. கட்சிகளுக்கு தனித்தனியாக அந்தந்த கட்சிகளுக்குப் போதிய இடம்—பிரமாதமான வசதிகள் வேண்டாம்—உள்ள அறைகள் தேவை. இவை எல்லாம் இல்லாவிடில் ஜனநாயக முறையில் பூர்ணமான அளவில் நம் சட்டசபை இயங்க மாட்டாது என்று சொன்னால் அதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். இப்போது இருக்கிற நிலையில் சீர் திருத்தம் செய்ய வேண்டும் என்று எண்ணத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்காக அமைச்சரவையை, சிறப்பாக கனம் ராமையா அவர்களைப் பாராட்டுகிறேன்.

நேற்றும் முந்திய நாளும் அசெம்பளி அங்கத்தினர்கள் உறைவிடங்களை எல்லாம் வந்து சுற்றிப் பார்த்துக் தணிக்கை செய்தார்கள். தணிக்கை செய்வதோடு நின்று விடாமல் அதற்கு ஆகவேண்டிய காரியங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக லைப்ரரி என்று ஒன்று இருக்கிறது. அது ஒரு கோடவுன் மாதிரி இருக்கிறது. அது லைப்ரரியாக இல்லை. அங்கு சென்று ஒழுங்காக இருந்து புத்தகங்களை பார்க்கவேண்டுமென்றால்—படிப்பதற்கு என்றுகூடச் சொல்லவில்லை—அங்கிருக்கிற அலமாரிகளில் உள்ள புத்தகங்களை இண்டக்ஸ் கார்டைப் பார்த்துக் கூட எடுக்க முடியாத நிலையில் அலுப்புத் தட்டி விடுகிறது. இந்த நிலை இருப்பது வருந்தத்தக்கது. அது செம்மைப்படுத்தப்பட வேண்டும். லைப்ரெரி நூல்கள் எல்லாம் அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாகப் பல இடங்களில் தொகுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை ஒரு இடத்தில் ஒழுங்காக வைத்து, நூற் பெயர், ஆக்கியோர் பெயர், துறை, வரிசையில் இண்டக்ஸ் ஸிஸ்டம் அமைத்து சரியாக வைத்து, ஆசிரியர் பெயர், நூலின் பெயர், பொருள் இவற்றைச் சொன்னால் அவை உடனே கிடைக்கும் நெறியில் அது அமைக்கப் பெற்றிருக்க வேண்டும் என்று நான் விண்ணப்பித்துக்கொள்கிறேன். ஹாஸ்டலில் உள்ள வசதிக் குறைவுகளைப் பற்றி இங்கு பல உறுப்பினர்கள் சொன்னார்கள். குளியல் அறைக்குச் செல்ல க்யூவில் நிற்கும் நிலை இருக்குமானால் எப்படி உறுப்பினர்கள் தங்கள் கடமைகளைச் செம்மையாகச் செய்ய முடியும் என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். ஆகவே குறைந்தபட்சம் எல்லா அங்கத்தினர்களுக்கும் குளியலறையுடன்கூடிய அறைகளை ஏற்பாடு செய்து ஹாஸ்டல் வசதியைப் பெருக்கிக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இவைகள்

24.55 சதம் ஏற்றமும், மேற்கு வங்கத்தில் 32.94 சதம் ஏற்றமும் ஏற்பட்டிருக்கிறபோது தமிழகத்தில் மட்டும் 11.73 சதம் ஏற்றம்தான் இருக்கிறது என்று கணக்கு காட்டுகிறது. மேற்கு வங்கத்திலும், அஸ்ஸாமிலும் மக்கள் தொகை அதிகமாகப் பெருகியிருக்கிறது என்பதை வெளியிடுகிற நேரத்தில் அங்கு சுரங்கத் தொழிலும், வேறு பல ஆலைத் தொழில்களும் எண்ணெய் சுரங்கங்களும் பெருகி யிருக்கிற காரணத்தினால் மக்கள் தொகை பெருகியிருக்கிறது என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் மக்கள் தொகை குறைந்திருப்பதற்குக் காரணம் புரியவில்லை, புதிராக இருக்கிறது என்று காரணம் கூறாமல் விடப்பட்டிருக்கிறது.

ஒருவேளை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மத்திய சர்க்காரின் உத்திரவுகளை ஒழுங்காக அமுல் நடத்தப்படுகிற முறையை மற்ற மாகாணங்களையெல்லாம்விட சிறப்பாகவும், ஒழுங்காகவும் கொண்டிருக்கிற இந்த மாநில சர்க்கார் அவ்விஷயத்திலும் அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றுகிற முறையில் மிகத் தீவிரமாக நடந்துகொண்டுவிட்டார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக மக்கள் தொகை குறைந்துவிட்டதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. குறைந்துவிட்டது என்பதற்காகக் கவலைப்படவில்லை. முன்னால் அது குறைந்ததனால் பார்லிமென்டில் நமக்குள்ள ஸ்தானம் 38 ஆகக் குறைந்துவிட்டதே என்பதுதான் கவலை. கனம் மதியழகன் குறிப்பிட்டது போல நமக்குள்ள எண்ணிக்கை குறைந்துவிடாதிருக்கவும், சட்டமன்ற உறுப்பினர்களின் தொகையை அதிகப்படுத்தவும், இப்போது நாம் அனுப்புவது 5 என்று இருப்பதை 7 என்றாவது உயர்த்தவும் முயற்சி எடுத்துக்கொண்டாகவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படி ஆக்கப்படுமானால் இந்த மன்றத்திலே 266 உறுப்பினர்கள் இடம் பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அதையும் இந்த அரசு மிகத் தீவிரமாகக் கவனிக்கவேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரை ஒரு சில உறுப்பினர்கள் சிறைச்சாலைக்குச் சென்ற காரணத்தினாலோ, மாநகராட்சி மன்றத்திற்கு வரக்கூடிய சூழ்நிலை அவர்களுக்கு அமையாத காரணத்தினாலோ, திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த மூவரும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இருவரும், முஸ்லீம் லீகைச் சார்ந்த ஒருவரும், சுயேச்சை அங்கத்தினர் ஒருவரும், கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர் ஒருவரும், ஆக எட்டுப் பேர் தங்களுடைய பதவியை இழந்திருக்கிறார்கள். அப்படிப் பதவியிழந்தவர்களை மீண்டும் பதவியிலே அமரக் கூடாது என்று நீதிமன்றம் கட்டளையிட்டு விட்டது. அந்தக் கட்டளையைப் பற்றி நான் ஆராய விரும்பவில்லை ; தகாது. அந்த எட்டுப் பேர் இல்லாமலே மாநகராட்சி மன்றம் நடைபெறுவது சாத்தியமாகலாம். ஆனால் தங்கள் தொகுதிகளினுடைய உறுப்பினர்களைப் பெறாமல் இருக்கக்கூடிய அந்தப் பகுதி மக்களுடைய சிரமங்களை எண்ணிப் பார்த்து, இந்த அரசு ஒரு புதிய சட்டத்தின் மூலமாகவாவது அவர்களை மீண்டும் மாநகராட்சி மன்ற அங்கத்தினர்களாக இணைத்துக்கொள்ள வழிவகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, இங்கு பேசப்படுகிற விஷயங்களுக்கு மந்திரி பதில் சொல்வதோடு அமைந்துவிடாமல், மந்திரிகள் கூறுகின்ற உறுதிமொழிகள் எல்லாம் செயல் படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கு முன்பு உறுப்பினராகப் பணியாற்றிய ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள், "இவைகளையெல்லாம் குறித்து வைத்துக் கொண்டு 'ஆகட்டும், பார்க்கலாம்' என்ற நிலைமையில் இருந்து விடாதீர்கள் ; கேள்விகளுக்கு இருக்கும் மதிப்புகூட விவாதங்களுக்கு அளிக்கப்படுவதில்லை. இங்கே பேசப்படுகின்ற கருத்துக்களைக் குறித்து அலுவலாளர்களைக் கொண்டு தக்க நடவடிக்கைகள் அவற்றின் பேரில் எடுக்க வேண்டும். ஆகவே, வந்தனம், உறுப்பினர்களுக்கு நன்றி, என்று சொல்லிப் பேச்சை முடித்துக் கொள்ளாதீர்கள்" என்று பல முறை இந்த மன்றத்திலே எடுத்துக் கூறி இருக்கிறார்கள். விவாதங்களின்போது நல்ல



உறுதி மொழிகளைத் தரும் அமைச்சர்கள், அந்த உறுதி மொழிகளை நல்லபடி செயல்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்றத்தின் பாரம்பரியத்திற்குத் தகுந்த முறையிலே, மிக நல்ல முறையிலே நம்முடைய சபாநாயகர் அவர்கள் சபையை நடத்தி வருவதைப் பார்க்கிறோம். நமது சபாநாயகர் அவர்கள், நேர்மையுள்ளவர், நீதியுள்ளவர் என்பதோடு கண்டிப்பும் உள்ளவர் என்றாலும், சட்டமன்ற அங்கத்தினர்களிடம் மிகவும் அன்புடன் நடந்து வருகிறார்கள் என்பதை எங்கள் காங்கிரஸ் கட்சியின் பக்கத்தில் இருந்தவர்கள் மட்டுமல்ல, எதிர்தரப்பில் உள்ளவர்களும் எடுத்துக் கூறியது காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்களுக்கு மட்டில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் என் போன்றவர்கள் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறோம். தான் ஈன்ற சேயைத் தான் பாராட்டுவதைக் காட்டிலும் அடுத்தவர்கள் பாராட்டும்போது அகமகிழ்ச்சி அதிகமாக இருக்கும். உதவி சபாநாயகர் அவர்களும் கண்டிப்போடும், அதே சமயத்தில் அங்கத்தினர்களிடம் அன்போடு நடந்து கொள்கிறார்கள். தலைவரிடம் கண்டிப்பு இல்லாவிட்டால் அங்கத்தினர்கள் பேசுவதற்குக் காலம் எடுத்துக் கொள்வது கணக்கில்லாமல் போய்விடும். தலைவர் அவர்களின் கையிலே மிக நல்ல ஆயுதம் ஒன்று இருக்கிறது. அதுதான் மணியடிப்பது. அந்த மணி அடித்தவுடனே பேசிக் கொண்டிருப்பவர்களுடைய பேச்சின் தொடர்புகூட அற்றுப்போய் அப்படியே நிறுத்தி விடலாம் என்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. வண்டி போகும் பாதை மாறிப் போனால் பள்ளத்தில் விழுந்துவிடும் என்ற காரணத்தால், உணர்ச்சி பொங்கிப்பேசும்போது வழி தவறக்கூடிய நிலைமை ஏற்பட்டால், உடனே நம்முடைய நிலைமையைப் பற்றிக் கவனமூட்டி, அவர்களும் நம்முடன் சேர்ந்து பங்கெடுத்துக் கொள்கிறார்கள். சபாநாயகர் அவர்களிடம் கண்டிப்பு இருந்தாலும்கூட, கண்டிப்புக்குப் பிறகு கருணை நிறைந்த பார்வையைப் பார்த்தவுடன், அந்தக் கண்டிப்பு மறந்துவிடுகிறது.

பெண் அங்கத்தினர்களைப் பற்றித் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அத்தனை பெண் அங்கத்தினர்களும் இந்த மன்றத்திற்கு வராவிட்டாலும்கூட, தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் மட்டும் இந்தச் சபையிலே இருந்தால் அதிக மங்களகரமாக இருக்கும். திலகம் இட்டுக் கொள்ள நாங்கள் மறந்து விட்டாலுங்கூட, அவர்கள் நெற்றியிலிருந்து உடன் கணக்கில் நாங்கள் எடுத்துக்கொள்ளலாம். அவர்கள், பெண்களைக் கண்டு பயந்ததுபோல் பேசினார்கள். "துப்பாக்கியைக் கையில் கொடுத்துவிட்டால் இந்தப் பெண்கள் என்னதான் செய்வார்களோ" என்று கூறினார்கள். எங்கள் கையில் இருக்கிற 'ஹாண்ட்பாக்' கைக் கொண்டே துப்பாக்கியைவிட அதிக வேலை செய்ய முடியும். அந்தத் துணிச்சல் இந்த நாட்டுப் பெண்களுக்கு உண்டு. இந்த நாட்டுப் பெண்கள் கட்டுப்பாட்டுடனும் கடமையுணர்ச்சியுடனும் நடந்து கொள்வார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் அரசியல் கண்ணியம் மிக்கவர், கண்ணியமாகப் பேசக்கூடியவர், நடந்து கொள்ளக் கூடியவர். உப தலைவர் அவர்களும் உவமானம், உவமேயத்தோடு கவர்ச்சிகரமாகப் பேசக்கூடியவர். சுதந்திரக் கட்சி தலைவர் அவர்கள் பேசுகின்ற கருத்துக்கள் காட்டமான கருத்துக்களாக இருப்பினும், அவர்கள் பேசுகின்ற இன்பத் தமிழிலே அத்தனையையும் மறந்து விடுகிறோம்.

கனம் மணி அவர்கள் பேசும்போது, "நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது முதலமைச்சர் அவர்கள் பேசினால் எங்களுக்கு அச்சமாக இருக்கிறது, என்ன பேசுகிறார் என்று புரியவில்லை" என்று சொன்னார்.

**கனம் சபாநாயகர் :** சத்தம் அதிகமாக இருக்கிறதே—பார்வையாளர்கள் மாடத்திலிருந்து சத்தம் வருவதாக இருந்தால், பார்வையாளர்கள் எல்லோரும் வெளியே போகவேண்டியிருக்கும்.

எல்லாவற்றையும் செய்வதற்கு அதிகமாகப் போனால் பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு ஆகாது. வீண் விரயம் செய்யக் கூடாது என்பதில் நான் யாருக்கும் இரண்டாவதாக நிற்பவன் அல்ல. ஆனால் இதை எல்லாம் வீண் விரயம் என்ற தலைப்பில் தள்ளிவிடக்கூடாது என்று நான் உணருகிறேன், அமைச்சரவையும் உணரவேண்டும். அதற்கு மேலே பார்வையாளர்களாக வருபவர்களும் நம்மைப் போன்றவர்கள்தாம். அவர்கள் சிறிது தங்கி, உண்டு, அமர்வதற்கு செம்மையான வாய்ப்புகள் இல்லை. இவற்றையெல்லாம் நாம் கவனிக்க வேண்டும். அதேபோல் பத்திரிகைகாரர்கள். இந்த மண்டபத்தைப் பார்க்கும்போது இங்கிலாந்தில் உள்ள அடிப்படையில்தான் இது ஆக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறோம். நாம் இங்கிலாந்து பார்லிமெண்டரி சம்பிரதாயத்தை அனுசரிப்பவர்கள். அங்கு பத்திரிகைக்காரர்களுக்கு அந்தக் கட்டிடத்திற்குள்ளேயே டெலிபிரின்டர் போன்ற வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்காக தனி "டைனிங் ஹால்" இருக்கிறது. இதையெல்லாம் நான் கேட்கிறேன், படிக்கிறேன், அங்கு சென்று பார்த்ததில்லை. அவ்வளவு பிரமாதமாக செய்யாவிட்டாலும் ஒவ்வொரு பத்திரிகைக்காரருக்கும் ஒரு சிறிய அறை, ஒரு டெலிபோனுடனாவது அவர்களுக்குக் கொடுக்கும்படிச் செய்வது நம் ஜனநாயகம் வளர நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று விண்ணபித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். பல உறுப்பினர்கள் என்னிடம் சொன்னார்கள், ஏன் என்னிடம் சொல்லுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை, உறுப்பினர்களின் சம்பளம், அலவன்ஸ் இவைகளை கூட்ட வேண்டுமென்று சொல்லச் சொன்னார்கள். நான் சொல்வானேன், நீங்களே சொல்லலாமே என்று சொன்னேன்—கட்சியைச் சொன்னால் வருத்தம் ஏற்படலாம்—நான் சொன்னால் தவறாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** அதிகப்படுத்த வேண்டும் என்றுதானே சொல்கிறார்கள் ; என்னையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

**திரு. சா. கணேசன் :** சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றி, அவர்களது பிரதிநிதியாக என்னை அமைத்ததில். உறுப்பினர்கள் என்று சொல்லும்போது சபாநாயகர் அவர்களையும் உறுப்பினராகக் கொண்டு உறுப்பினர்களின் தலைவராகத்தான் நாங்கள் அவர்களை ஏற்றுக் கொள்கிறோம் என்பதால் அவர்களையும் நான் இதில் சேர்த்துக் கொள்வதில் மகிழ்ச்சியுடையவனாக இருக்கிறேன். நான் ஐந்து ரூபாய் சம்பளத்தில் வேலை பார்க்கவேண்டுமென்று சொன்னாலும் தயார். ஆனால் நாம் செய்யும் வேலையில் அக்கறை, ஆர்வம் ஏற்படும் விதத்தில் பிற தொல்லைகள் இல்லாமல் இருக்கும் அளவிற்கு அமையும் சம்பளம், அலவன்ஸ் நியாயம் என்பதை ஏற்றுக்கொள்ளுகிறேன். நியாயம் எது என்றாலும் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன், அதைச் சொல்லவும் தயங்கமாட்டேன். இதைச் சொன்னால் யாராவது என் மீது பழி சுமத்திவிடுவார்களோ என்று அஞ்சி சொல்லாமல் விடுவதில்லை. நல்ல காரியத்திற்காக பழி வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள நான் தயங்கமாட்டேன்.

12-30 p.m. அதற்கு மேலே இந்த அசெம்பிளி நடவடிக்கைகள், போன வருஷத்தில் நடந்தவைகளுக்கு, போன வருஷத்தில் வந்ததற்கு பின்னும் இண்டெக்ஸை வரமாட்டேன் என்கிறது. புதிதாக வந்தவர்கள் இது வரையில் நடந்துள்ள நிகழ்ச்சிகள் என்ன, முன் நிகழ்ச்சிகள் என்ன என்று தெரிந்து, கணித்து, அதிலுள்ள குண தோஷங்களை வகுத்து அதன் மீது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தெரிந்துகொள்ள முடியும் அந்த இண்டெக்ஸ் சரிவர இருந்தால். அசெம்ப்ளி நடவடிக்கை அறிக்கைகள்கூட உடனுக்குடன் வருவதில்லை. 3 மாதங்கள், 4 மாதங்கள் கழித்து வருகின்றன. இந்த அசெம்பிளி வந்து ஒரு வருஷமாகியும் இன்னும் இண்டெக்ஸ் வரவில்லை. தபாலில் இண்டெக்ஸ் எங்களுக்கு வரும்போது, அதை அக்கறையோடு எடுத்துப் பார்த்தால் அது 1960-ம் வருஷத்துக்கானதாக இருக்கிறது—1961-ம் வருஷத்துக்கானதாக இருக்கிறது. இதற்கு இவ்வளவு கால தாமதம் ஆவது நியாயமல்ல. இங்கிலாந்து நாட்டில் லண்டனில் நடக்கும் பார்லிமெண்ட் ப்ரொஸீடிங்ஸ்—இங்கு அசெம்பிளிக்கு வருவதையே பார்க்கிறோம்—15-20 நாட்களில் வந்து





விடுகிறது. இந்த நிலை ஏற்பட, அவ்வளவு துரிதமாக வருவதற்கு நாம் முயலவேண்டும். அந்த அளவுக்கு நாம் முயலாவிட்டாலும், ஒரு மாதத்திற்குள்ளாகவாவது அது வரவேண்டாமா ? இந்த ஸ்டேட் அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் ஒரு வருஷம் ஆகியும் வைக்கப்படாத நிலை இருந்தது. நான் இந்த இலாகா அதிகாரிகளிடம் சொல்லி, இந்த இலாகா உதவிச் செயலாளர் உடனடியாக ஃபோன் செய்து 7-ம் தேதி நம் மேஜையில் வைக்க ஏற்பாடு செய்தார்கள்—அந்த அளவுக்கு நன்றி. அதிக பட்சம் இதற்கு 4 மாதத்திற்கு மேல் தேவையா ? இருக்கிற குறைகளைச் சொல்லுகிறேன். 14 மாதங்கள் ஆகியும் தற்செயலாக இந்த அட்மின்ஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் வரவில்லை. அதுவும் முறைப்படி வரவில்லை. யாரோ இதைப் பற்றி 'நான் கிளப்புவேன், சட்ட சபையில் பேசுவேன்' என்று சொன்னதற்குப் பிறகு இங்கு வருகிறது என்றால் இந்த நிலைமை நீடிப்பது சரியா, அதை நாம் போக்க வேண்டாமா என்று சிந்திக்கவேண்டும்.

இனி தேர்தல் விஷயத்துக்கு வருகிறேன். தேர்தலைப் பற்றி எனது கட்மோஷனில் கொடுத்திருக்கிறேன். தேர்தலில் சட்ட விரோத முறைகள் கையாளுவதைத் தடுக்க வேண்டும். குற்றம் செய்கிறவர்களைக் கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். எப்படியானாலும் நமக்குத் தெரியும், கணக்குக் கொடுப்பது ஒன்று, நடப்பது ஒன்று என்பது—இது சர்வ சாதாரணமாக ஆகி விட்டது. இந்தச் சட்ட சபையில் அந்தத் தரப்பிலிருந்துகூட புலப்படுத்தப்பட்ட ஒன்று தான். நான் குறை சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. எல்லோரும் தவறு செய்கிறோம் என்றால் அப்படிச் செய்வது தவறு இல்லை என்று செய்து விடுங்கள் சட்ட பூர்வமாக. தவறு என்று வைத்துவிட்டு அந்தத் தவற்றை தொடர்ந்து செய்துகொண்டேயிருப்பது, அது நியாயம் அல்ல, அது தர்மம் அல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு மேலே, இந்தத் தவறுகள் ஏற்படாமல் இருக்க என்ன வழி என்று சென்ற ஆண்டிலே நான் குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகம். இயங்கும் வாக்குச் சாவடி வைத்து—அதாவது மொபைல் போலிங் பூத்ஸ் வைத்து—10 மணியிலிருந்து 2 மணி வரையில் யாரும் எங்கும் பிரயாணம் செய்யக்கூடாது. அவரவர் வீட்டிலேதான் தங்கவேண்டும், ஏதோ டாக்டரைப்போல, போலீஸ் போல, நெருப்பு அணைக்கும் வண்டி போல இந்த மாதிரி இன்றியமையாத சேவைகளைச் செய்யக்கூடியவர்களை விட்டு விட்டு, ஆங்காங்கு உள்ளவர்கள் அங்கங்கே தான் தங்கவேண்டும் என்று ஏற்பாடு செய்து வாக்குச் சாவடி அமைக்கப்பட்ட வண்டி ஆங்காங்கு போய் வாக்குப் பதிவு செய்ய ஏற்பாடு செய்தால் பித்தலாட்ட ஓட்டுகள் போடுவதற்கு வழியில்லாமல் போகும். இதைப்பற்றி இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டும். ஆனால் நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால் அதையதை சுட்டிவிட்டுச் செல்கிறேன். இந்த மாதிரியான அமைப்புகளைப் பற்றி ஆராயவேண்டும். அதற்கான வழிகளை வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நமக்குக் கிடைத்திருக்கிற ஒரு "போனஸ்" இந்த ஆண்டிலிருந்து மூன்று பார்லிமெண்டரி அங்கத்தினர்கள் குறைவு. இது என்ன காரணத்தால் வந்தது என்று சொல்லவில்லை. பல்வேறு மாநிலங்களில் ஜனத்தொகை பெருகியிருக்கிறதே தவிர குறையவில்லை. வெஸ்ட் பெங்காலில் பிறப்பு கூடியிருக்கவில்லை—அகதிகள் குடியேற்றத்தால் தொகை ஏறிக்கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் அகதிகள் குடியேற்றம் அவ்வளவு இல்லை. நாம் பர்த் கண்ட்ரோல் முறையை கையாளுவதனாலே தான் இந்நிலை என்று நான் சொல்லவில்லை (பர்த் கண்ட்ரோலை நான் ஆதரிக்காதவன் ; காந்தி சொன்ன மாதிரி பர்த் கண்ட்ரோலை ஆதரிக்கிறவன், கருவிகள் முறையை ஆதரிக்காதவன்) மூன்று உறுப்பினர்கள் குறைகிறார்கள்—41-லிருந்து 38-ஆகக் குறைகிறது. இப்போது சட்ட சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 205. 205 என்பதை எப்படி வகுப்பது என்பதில் சிக்கல் வருகிறது. 5 ஆகத் தான் இருக்கவேண்டும் என்று சொன்னால், சட்ட சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கை 190-ஆகத்தான் குறைக்கவேண்டும். 7-ஆக இருக்கவேண்டுமென்று கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை ஒப்புக்கொண்டால் 266 அங்கத்தினர்களாக எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். அதாவது 61 ஸ்தானங்கள் கூடுதலாகின்றன. இரண்டும் எனக்குப் பொருத்தமாகத்

சீராக நகைச் சுவையைக் கையாள வேண்டும். அது சில சமயங்களில் முடியாமல்போய்விடுகிறது. கனம் எதிர்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் சிறந்த கலைஞர். அவருக்கு நன்றாகத் தெரியும். நகைச்சுவை ஒரு சிறந்த கலை. அதைக் கையாளுவது எல்லோருக்கும் சரியாக வராது. அதே மாதிரிதான், ஏதோ காரமாகப் பேச வேண்டும். நாம் எதிர் கட்சியைச் சேர்ந்தவராயிற்றே என்று நினைத்துக் கொண்டு பேசினால், சில சமயங்களில் அசம்பாவிதங்கள் வந்து விடுகின்றன. கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் மந்திரி சபையைப் பற்றிக் கூறும் பொழுது அநாகரிகம் என்ற சொல்லை உபயோகப்படுத்தினார்கள். எங்கேயோ படித்திருக்கலாம் " அன்ஸிவிலைஸ்டு" என்று. கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுவதே அலாதி. நான் முன்பே அது பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். அதை நான் " ஸீரியஸாக " எடுத்துக் கொண்டு ஒன்றும் பேசப் போவதில்லை. இந்த மன்றத்திலே எதிர்க்கட்சியும் இயங்கி வருகிறது. எதிர்க்கட்சி இல்லாமல் இருக்கிறது என்ற உணர்ச்சி இல்லை, விழிப்பு இல்லாமல் இல்லை. ஆனால், விவாதமும் சுமுகமாக நடைபெறுகிறது என்பது பற்றி நாம் எல்லோரும் பெருமை கொள்ளலாம். காரணம் என்னவென்றால், மற்றவர்கள் தவறுதலாக நினைக்கக் கூடாது, மற்றவர்களை நான் குறை கூற மாட்டேன், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூடியவரை விவாதம் சுமுகமாக நடைபெறுவதற்கு காரணம் நாம் தமிழ் நாட்டில் இருக்கிறோம். அது தான் முக்கிய காரணம். அந்த பண்பாடு நம்மை அறியாமலே, நாம் வேண்டாமென்றாலும், நம்மைப் பிடித்துக் கொண்டிருக்கிறது, நம்மை விடமாட்டேன் என்கிறது. அந்த முறையிலே இந்த மன்றத்தின் நடவடிக்கைகள் நடப்பது பற்றி இந்தச் சமயத்தில் என்னுடைய திருப்தியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பாராட்டுதல் என்று நான் சொல்லவில்லை. இதற்கெல்லாம் மூல காரணமாக இருப்பது தாங்கள். தாங்கள் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது, எல்லோரும் ஏகோபித்து தங்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அதை ஒட்டி, தாங்கள் மற்ற உறுப்பினர்கள் தெரிவித்தபடி கண்டிப்பாகவும் இருக்கிறீர்கள், சுமுகமாகவும் இருக்கிறீர்கள், அவ்வப்பொழுது பாரபட்சமின்றி தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கிறீர்கள். அது இந்த மன்றத்திலுள்ள அனைவரும், இந்த மன்றத்தில் அக்கரை உள்ளவர்களும் பெருமைப்பட கூடியது. அதே மாதிரி தங்களுடைய சகாக்களும், துணைச் சபாநாயகரும், மற்றவர்களும், எல்லோரும் சேர்ந்து—அது மட்டுமில்லை சட்ட மன்ற காரியதரிசி, அவருடைய சகாக்கள் எல்லோரும் சேர்ந்து எடுத்துக்கொள்ளுகிற முயற்சிகளினால் சீரிய முறையிலே, மற்றவர்களுக்கு வழி காட்டக் கூடிய அளவிலே, இங்கே விவாதங்கள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதைப்பற்றி நாம் எல்லோரும் பெருமைப்படலாம்.

அடுத்தபடியாக, கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலுள்ள இட நெருக்கடியைப் பற்றிக் கூறினார்கள். மற்றவர்களும் கூறினார்கள். உண்மை தான். இது பழைய கட்டிடம். இந்தக் கட்டிடத்தில்தான் பல ஆண்டுகளுக்கு முன்பு சிறிய ஒரு சட்ட சபை, பொம்மை சட்டசபையை வெள்ளையர் ஆட்சி காலத்தில் வைத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கத்தினர்கள் இவ்வளவு எண்ணிக்கை கூட இல்லை. அந்தக் காலத்தில் இது ஏற்பட்டது. நம்முடைய சிக்கன உணர்ச்சியை இது எடுத்துக் காட்டுகிறது. நாமும் வேறு சில மாநிலங்களில் கட்டியிருப்பது போல் பிரும்மாண்டமான சட்டசபை மண்டபத்தைக் கட்டியிருக்கலாம். கூடியவரையிலே இருப்பதை வைத்துக் கொண்டு நாம் சமாளித்துக் கொண்டு போவோம், அனாவசியமான செலவு வேண்டாம் என்ற ஒரே நோக்கத்தில் தான் இது வரையிலே இந்த மன்றத்தை நாம் இங்கே நடத்திக்கொண்டு வருகிறோம். ஒரு காலத்தில் இந்த மன்றத்தில் இடம் போதாமல் செனேட் மண்டபத்தில் 1937–38-ல் சட்ட சபை நடந்தது. அதற்கப்புறம் 375 பேர்கள் இந்த மன்றத்திற்கு அங்கத்தினர்களாக இருந்தார்கள். ஆந்திரா, மற்ற பகுதிகள் நம்முடன் இருந்த பொழுது, அப்பொழுது இருந்த அரசியல் அமைப்புச் சட்டப்படி 375 அங்கத்தினர்கள் இருந்தபொழுது, இந்த இடத்தில் சட்ட சபை நடத்த முடியவே முடியாது என்று கருதி, தற்காலிகமாக மவுண்டு ரோடு கவர்ன்மெண்டு எஸ்டேட்டில் ஒரு கட்டிடம் கட்டினோம். அதற்கு ஒன்றும் அதிகச் செலவு ஆகவில்லை. ரூபாய்



5½ லட்சம் செலவு செய்து மவுண்டு ரோடில் கட்டிடம் கட்டினோம். அப்பொழுது அங்கு சட்டசபை நடந்தது. அது நிரந்தரமாகக் கட்டிய சட்ட மன்ற மண்டபம் அல்ல. பின்னாலே அங்கத்தின்ர்களுடைய எண்ணிக்கை குறைந்தவுடன் இங்கே வந்தோம். 205 அங்கத்தின்ர்களான பிறகு இங்கே வந்து விட்டோம். ஆனால் முன்பு 215 அங்கத்தினர்கள் இருந்த போதுகூட, 1938-39-ல் அப்பொழுதுதான் இதே மண்டபத்தில் சட்டசபை நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 215 அங்கத்தினர்களுக்கு இந்த மண்டபத்தில் இந்த ஏற்பாடெல்லாம் அப்பொழுது செய்யப்பட்டன. இப்பொழுது 206, 207 அங்கத்தினர்கள் இருக்கிறோம். (திரு. சா. கணேசன்: ஸீட் 215 இருக்கிறது).

அடுத்தபடியாக ஹாஸ்டலைப்பற்றி குறிப்பிட்டார்கள். சட்ட மன்ற அங்கத்தினர்களுக்கு வேண்டிய வசதிகள், லாபி போன்றவை, அவர்களுக்கு தனி அறைகள் இதைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். இதையெல்லாம் செய்யத்தான் வேண்டும். நாம் அனாவசியமான செலவை செய்யமாட்டோம் என்றாலும், அவசியமான செலவைச் செய்வதற்கு தயங்கக்கூடாது. இதையெல்லாம் செய்யத்தான் வேண்டும். இப்போது இருக்கிற ஹாஸ்டல் வசதி போதாதுதான். நான் ஹாஸ்டலில் தங்குவதில்லை என்றாலும், அது பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். கட்டிடம் போதாது என்று அப்பொழுதே என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறேன். இதையெல்லாம் சேர்த்து ஒரு இடத்திலே கட்டவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் யோசனை. எல்லா வசதிகளையும் அளித்து, கட்டிடம் கட்டவேண்டும் என்ற யோசனை இருக்கிறது. ஆனால், அதற்கு அதிகமாகச் செலவு ஆகும். ரூ. 10 லட்சத்திற்கு மேலேகூட போகலாம். ஆனால் கட்டுகிறபொழுது, நல்ல முறையிலே கட்டவேண்டும். அனாவசியமான செலவுக்கு இடம் கொடுக்கவில்லையென்றாலும், இதையெல்லாம் பற்றி யோசித்துக் கொண்டிருந்தோம். இடமெல்லாம்கூட பார்த்தோம். ஹாஸ்டலுக்கு தனியாக கட்டிடம் கட்டவேண்டுமென்று நினைத்தோம். மத்தியில் நெருக்கடி நிலை வந்துவிட்டதால் இதெல்லாம் இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற வகையிலே வசதிகளை எவ்வளவு தூரம் பெருக்க முடியுமோ, அவ்வாறு பெருக்குவதில் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். உண்பதற்கு இடம் வேண்டும் (குறுக்கீடு) உறங்குவதற்கு வேண்டியதில்லை. சட்டசபையில் யாரும் உறங்குவதில்லை. உண்பதற்கு இடம் வேண்டும். ஓய்வு எடுத்துக்கொள்வதற்கும் இடம் போதாது. எவ்வளவு தூரம் இந்த இடத்திலே சௌகரியம் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்து கொடுப்பதில் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். நான் முன்பே சொன்னேன். கோட்டையில் சட்டமன்றம் நடப்பது ஒரு விசேஷம். இதையே விரிவுபடுத்தி வேண்டிய வசதிகளைப் பெருக்கிக் கொண்டால் நலம் தான். அதை நான் வரவேற்கிறேன். இல்லையென்றால், நாம் வேறு இடத்திற்குப் போக வேண்டும். ஹாஸ்டலும் கூடியவரையிலே அருகிலே இருப்பதுதான் நல்லது. இப்பொழுது இருக்கிற இடத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு தூரம் வசதிகளை பெருக்கக் கூடுமோ அவ்வாறு பெருக்குவதிலே கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். நெருக்கடி நிலைமை தீர்ந்த பிற்பாடு, ஹாஸ்டலுக்கு வேண்டிய அளவுக்கு பெரிய கட்டிடமாகக் கட்டி, மற்ற வசதிகளையும் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

சட்டசபை நூலகத்தைப் பற்றிச் சொன்னார்கள். நூலகம் இப்பொழுது இரண்டு இடத்தில் இருக்கிறது. இங்கே ஒன்று இருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. மாதவன், ஹாஸ்டலுக்குப் பக்கத்தில் நூலகம் இல்லை என்று கூறினார் என்று நினைக்கிறேன். பல பேர்களுக்கு தெரிந்திருக்காது, அதை நான் சொல்கிறேன். இங்கே இருக்கிற நூலகத்தைத் தவிர, ராஜாஜி மண்டபத்திற்குக் கீழே ஒரு ஸெல் இருக்கிறது, அங்கே ஒரு நூலகம் இருக்கிறது. அங்கு போய் புஸ்தகங்களைப் பார்க்கலாம். உபயோகப்படுத்திக்கொள்ளும் புஸ்தகங்கள் இருந்தால் அதை நன்றாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம். சுதந்திராக் கட்சித் தலைவர் சொன்னதுபோல உட்கார்ந்து படிப்பது கஷ்டமாக இருக்கிறது. நல்ல ஒரு நூலக மண்டபம் வேண்டியதுதான். எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டும்பொழுது, அதையும் மனதில் வைத்துக்கொள்ளலாம்.

தோன்றவில்லை. எனது ஆலோசனை, எனது அபிப்பிராயம் 6-ஆக ஆக்கி விட்டால், 23 உறுப்பினர்கள் அதிகமாகி 228 உறுப்பினர்கள் கொண்ட சபையாக இருக்கும். அப்படி ஆறு ஆருக வகுத்துச் செய்துவிடுவது—கருப்பூர் பஞ்சாயத்து முடிவு மாதிரி—இரண்டுக்கும் நடுவில் இருக்கும். அதுவும் இல்லாமல், இதுவும் இல்லாமல் நடுவில் வைத்து விடுவது. எங்கள் பக்கத்தில் கருப்பூர் பஞ்சாயத்து முடிவு என்று சொல்லுவார்கள். அதாவது ஒரு பொருள் என்று இருந்தால் அதற்கு முதல், இடை, கடை என்று இருக்குமல்லவா ? அதிலே முதலும் வேண்டாம், கடையும் வேண்டாம், இடையே வைத்துக்கொள்வோம் என்று தீர்மானிப்பார்களாம். அந்த முறையிலே இப்போது ஆறு ஆருகச் செய்துவிடலாம் என்று சொல்லவில்லை. சரி என்று தோன்றுவதையே சொல்லுகிறேன். 38-ஐ 6-ஆல் பெருக்கி 228 அங்கத்தினர்கள் கொண்டதாக அமைத்து விட்டால்—நாமினேஷன் இதிலே வருவதில்லை, ஆகையால் அதை விட்டு விடுகிறேன்—அப்படிச் செய்வது பொருத்தமாக இருக்கும்.

பல துறைகளில் ஊழியர் தொகையைக் குறைக்கவேண்டுமென்று நான் சொல்லியிருப்பதைபற்றி கனம் அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் சொன்னர் என் பெயரைச் சொல்லி. ஊழியர் தொகையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லும்போது யார் தலைமேல் பழி விழும் என்று எண்ணக்கூடாது. தேவையில்லை என்றல், குறைப்பதில் ஆட்சேபணை கூடாது. அஞ்சவும் கூடாது. ஆள் கூடக்கூட வேலையும் கூடுகிறது. உத்தியோகஸ்தர்கள் கூடக்கூட வேலை கூடுகிறது என்பதை 200 வருஷ ஆட்சி நிலையைப் பார்ப்போமானல் நமக்குப் புலப்படும். அந்த நிலையில் ஆள் கூடக்கூட வேலை செம்மையாக நிறைவேருமலும் போகிறது. இதை மனத்தில் கொள்ள வேண்டும். பல்வேறு இடங்களில் உத்தியோகஸ்தர்களுக்கு ஜீப் கொடுத்திருக்கிறேம். இப்படி கொடுத்திருப்பதால் வேலைகள் துரிதமாக, செம்மையாக, நடைபெறுகின்றனவா, அல்லது வீண் விரயம்தான என்று ஆய்வு செய்ய வேண்டும். அப்படி ஆய்வு செய்து அதனுடைய பலாபலன்களைக் கணித்து, அதன்மீது முடிவு எடுக்க வேண்டும். அதற்கு மேலே, நெல் விலை இருக்கிறது அல்லவா, அதற்கு அறுவடை காலத்திலிருந்தே ஒரு விலை வரம்பை வைத்து விட வேண்டும். அதைப் போலவே அந்த நெல் விலையின் அடிப்படையிலே மிளகாய், உப்பு, மஞ்சள், பருப்பு போன்ற இன்றியமையாத உணவுப் பண்டங்களுக்கும் வரையறை செய்து விடவேண்டும். அது மட்டும் போதாது. ஒரு அளவுக்கு இந்தப் பண்டங்களை அரசாங்கத்தின் கையிருப்பிலே வைத்துக்கொண்டு விலை ஏருமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படி விலை ஏறினல் அவைகளைக் கொடுப்போம் என்று வியாபாரிகள் உணரக் கூடிய நிலையில் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். "வெறும் புள்ளிவிவரத்தை நம்பி, அதை வைத்துக்கொண்டு பேசக்கூடாது" என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அதை முழுக்க முழுக்க நம்புகிறவன் நான். அதைப் போல விவசாயத் துறையில் நிறையச் செலவு வருகிறது என்று சிலர் தரும் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு அதுதான் சரி என்று சொல்லி விட முடிவதில்லை. சில உறுப்பினர்கள் தாங்கள் உழைத்த உழைப்புக்கு கூலி சேர்க்காமல் இருக்கிருர்கள். சிலர் தங்களுடைய உழைப்புக்கும் சாதாரணமாக சம்பளத்தைப் போட்டுக் கொடுக்கிருர்கள். அப்படி எடுக்கும் போது ஏக்கருக்கு 5 அல்லது 10 ரூபாய்தான் மிச்சம் என்று சொல்லத் தோன்றுகிறது. சர்க்காரால் நடத்தப்படுகிற பண்ணைகளின் கணக்கை எடுத்துப்பார்த்தால் எவ்வளவு லாபம், எவ்வளவு நஷ்டம் என்று நம் எல்லோருக்கும் தெரியும். அதையும் வைத்து அதன் பக்கத்திலே அவர்களுடைய சாகுபடியையும் வைத்து ஒப்பிட்டுப்பார்த்து குணதோஷங்களைக் கணித்து அதன்மீது முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லஞ்ச ஒழிப்புக்கு வகை செய்யவேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் பலர் சொல்லியிருக்கிருர்கள். கட்மோஷனில் கொடுத்தது காகிதத் தோடு போய்விடாது என்று நம்புகிறேன். அந்தந்த இலாகா அதிகாரிகள் அதன்மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கவனிப்பார்கள் என்ற சம்பிரதாயத்தை உணர்ந்து அவற்றைப் பற்றிப் பேசாமல் விட்டு விட்டுச் செல்கிறேன். இந்த லஞ்ச ஊழலைத்





தடுக்க உயர் அதிகார வரம்பு உடைய ஒரு குழுவை (**High Power Commission**) நியமிக்க வேண்டும். அவர்கள் மூலமாக என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கண்டறிந்து அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று உறுதிகொள்ள வேண்டும்.

அதற்கு மேலே இன்று பத்திரிகைகளில் பார்த்தோம் வெஸ்ட் பெங்கால் அரசாங்கத்தின் முடிவை. அங்கு பொற்கொல்லர்களுடைய நிலை, வயது, பால் வேற்றுமை இல்லாமல் ஒவ்வொரு ஆளுக்கும் 4 ரூபாய் வீதம் உதவித் தொகை கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிருர்கள். அது ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. இங்கே நாமும் அந்த முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். எவ்வளவு கொடுப்பது என்பது அரசாங்கத்தின் மனத்தையும், பொருளாதாரத்தையும் பொறுத்திருக்கிறது. கூட்டியோ, குறைத்தோ தொகையை நிர்ணயம் செய்து அந்த முறையிலே இங்கேயும் பொற்கொல்லர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, கடைசி, அதாவது பென்ஷன் துறை. ரூ. 3, ரூ. 4, பென்ஷன் கொடுத்துக் கொண்டிருப்பது நமக்குக்கூட கஷ்டமாக இருக்கிறது. சம்பளத்திற்கு ஊழியத்தில் இருப்பவர்களுக்கு இதுதான் அடிப்படை என்று சொல்லுவது போல், வேலை பார்த்துவிட்டு வீட்டில் ஓய்வு எடுத்துக்கொண்டிருப்பவர்களுக்கும் ஒரு அடிப்படைத் தொகை வேண்டும். ரூபாய் 3, 4, $1\frac{1}{2}$ கூட பென்ஷன் கிடைக்கிறது. திருமதி குழந்தை அம்மாள் ஒரு ரூபாய் கூட இருக்கிறது என்று சொல்லுகிருர்கள். இம்மாதிரி நிலை சரியாக இருக்குமா ? அவர்களும் வாழ வேண்டாமா ? ஆகவே, பென்ஷனுக்கும் ஒரு அடிப்படைத் தொகை வைத்துவிடவேண்டும். நிச்சயமாக ரூ. 20-க்குக் குறைந்து இருக்கக்கூடாது என்று நான் மனப்பூர்வமாக விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

அதற்கு மேலே, முதியோர் பென்ஷன். இந்த விஷயத்திலே குறைகள் பல. அவற்றையெல்லாம் சொல்ல நேரம் இல்லை. அவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு, அதற்கேற்ற வழிவகைகளை நாம் செய்ய வேண்டும், எல்லோரும் இதற்குச் சாதகமான நிலையை உண்டாக்க வேண்டும் என்று, சபா நாயகர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்கள் நான்கு மான்யங்களையும் சேர்த்து விவாதத்திற்கு வைக்கப்பட்டிருப்பது பற்றி குறிப்பிட்டார்கள். சென்ற முறை நடைபெற்றது எனக்கு நினைவுக்கு வரவில்லை. ஆனல், முன்னதாக யாராவது இது பற்றி யோசனை கூறியிருந்தால், சட்டமன்றத்தைப் பற்றிய மான்யத்தை தனியாக விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு, அது நிறைவேற்றப்பட்ட பிறகு, மற்ற மான்யங்களை எடுத்துக்கொண்டிருக்கலாம். எனினும், இன்று நடைபெற்ற விவாதத்தைப் பொறுத்த மட்டில் நான்கு மான்யங்களுக்கும் சேர்ந்து விவாதம் நடைபெற்றதிலே ஒன்றும் குறைவு இல்லை என்பதை கனம் எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களே ஒப்புக்கொள்வார்கள். சீரிய முறையிலே இந்த விவாதம் நடைபெற்றது. இன்று தான் நடை பெற்றது என்றுகூட நான் கூற மாட்டேன். பொதுவாக தங்களைப் பற்றி என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கும் முன்பு, இந்த மன்றம் நடக்கிற முறையைப் பற்றி, முக்கியமாக எதிர்கட்சியினர்கள் நடந்து கொள்ளுகிற முறையைப் பற்றி நான் முதலில் என்னுடைய திருப்தியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சி என்று இருந்தால் எதிர்க்கட்சியாக இயங்க வேண்டும். எதிர்க்கட்சி என்று எங்கள் பக்கத்தில் இருக்கிறவர்கள் பார்க்கும்பொழுது, கொஞ்சம் சூடு வரலாம். சூடு இருப்பதைப்பற்றி கவலையில்லை. ஆனல் தரம் மட்டும் குறையக்கூடாது. சில சமயங்களில் திருஷ்டிப் பரிகாரமாக ஒன்றிரண்டு சம்பவங்கள் நடைபெற்றுவிடுகின்றன. ஓரிரு அங்கத்தினர்கள் அம்மாதிரி நடந்து கொண்டுவிடுகிருர்கள். அவர்கள்கூட வேண்டுமென்று செய்வதில்லை. தெரியாததினலே, ஆற்றல் குறைவினல் என்று சொன்னல் அதை இவர்கள் தவறுதலாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நகைச்சுவை இருக்கவேண்டுமென்று முயற்சி செய்கிருர்கள். எப்பொழுதும்

[திரு. மு. கருணாநிதி] [9th March 1963

அதை " தமிழ் நாட்டிலுள்ள தேர்களைப்பற்றி "என்று திருத்திக் கொடுத்தேன். அப்படி திருத்திக்கொடுத்தும், அந்தப் பிழையோடுதான் அச்சிலே வந்திருக்கிறது. இப்படி பல பிழைகள் இருக்கின்றன.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மன்றத்திலே உறுப்பினர்கள் பேசுவதை சுருக்கெழுத்தாளர்கள் சுருக்கெழுத்திலே எடுக்கும் முறைதான் சிறந்தது. டேப் ரிகார்டரை வைத்துப் பதிவு செய்வதினால், அதிகச் செலவோ வேறு கஷ்டமோ ஏற்படுவதற்கில்லை. எந்த இடத்திலாவது சந்தேகம்வந்து சொற்களைப்பற்றி தவறுகள் ஏற்படாமல் திருத்திக் கொள்வற்கு வசதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்த முறையையும் இதோடு சேர்த்துக் கொள்ளலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எதிர்க் கட்சித் துணைத் தலைவர் சொன்ன பிழைகள் எங்கும் ஏற்படுகின்றன. அவைகளைத் திருத்த வேண்டியது தான். நிரந்தரமாக டேப் ரிகார்ட்டர் வைப்பதினால் ஏற்படும் செலவைப் பற்றிக் கூட பிரச்னை இல்லை. அவசியமிருந்தால் வைத்துக் கொள்ளலாம். ஆனால் டேப் ரிகார்டர் எதற்காக வேண்டுமென்று சொன்னால், சாட்சியம் கொடுக்கும்போது அப்படியே ரிகார்டு செய்வதற்கு வேண்
60-1 p.m. டும். சட்டசபை நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், கனம் அங்கத்தினர்கள் அவர்களுடைய பேச்சுக்களைத் திருத்திக் கொடுக்கிறார்கள். அப்படி திருத்திக் கொடுப்பது சரியல்ல, இப்படித்தான் பேசினார்கள் என்று சட்டமன்ற இலாகாவினர் சொல்வதற்கு வேண்டுமானால் டேப் ரிகார்டர் வைத்துக்கொள்ளலாம். அதிக தவறுகள் இருந்தாலும் கூட அங்கத்தினர்கள் திருத்திக்கொடுத்தால் அதை சட்டசபை இலாகாவினர் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்கள். ஆகவே திருத்திக் கொடுத்தால் ரிபோர்ட் நல்ல முறையில் அமைந்திருக்கும். அதற்கு வேண்டிய வாய்ப்பு இருக்கிறது. அதைக் கவனித்துப்பார்த்துக் கொடுக்க வேண்டும். எனக்கு சில சமயங்களில் சில குறைபாடுகள் ஏற்படுகின்றன. என்னுடைய பேச்சையே என்றால் மறுபடியும் படிக்க முடியவில்லை. படிக்க அவகாசம் ஏற்படுவது இல்லை. மற்ற உறுப்பினர்கள் நல்ல முறையில் திருத்தங்கள் செய்து திருத்திக் கொடுத்தால் சிரமம் ஒன்றும் இருக்காது.

தமிழில் நடவடிக்கைகள் எடுப்பதைப்பற்றி சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது தமிழில்தான் நடவடிக்கைகள் நடக்கின்றன. ஆங்கிலத்தில் ஒருவர் கேள்வி கேட்டால் அதற்கு ஆங்கிலத்தில்தான் பதில் அளிக்கப்படுகிறது. தமிழில் கேட்டால் தமிழிலேயேதான் பதில் அளிக்கப்படுகிறது. தமிழில்தான் நடவடிக்கைகள் நடக்க வேண்டும் என்று விதி விதித்து விடலாம். அப்படி ஒரு விதி உடனே விதித்து விட்டால் அதிலிருந்து பல சங்கடங்கள் ஏற்படும். சாதாரணமாக மசோதாக்கள் எல்லாம் ஆங்கிலத்தில் தான் தயாரிக்கப்படுகின்றன. அவைகளைத் தமிழில் தயாரிக்க முடியாது. மசோதாக்களை ஆங்கிலத்தில் தயாரிக்கும்போதே எவ்வளவோ குற்றங்களை கண்டு பிடிக்கிறார்கள். பல குறைபாடுகள் இருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. கோர்ட்டுகளில் வேறு குற்றங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதில் சங்கடங்கள் ஏற்படுகின்றன, பல கோளாறுகள் ஏற்படுகின்றன. இந்த நிலைமையில் தமிழில் தயாரித்து விட்டால் இன்னும் எவ்வளவோ குற்றங்களைக் கண்டு பிடிப்பார்கள். தமிழில் இன்னும் சரியானபடி தயாரிக்க, நல்ல முறையில் மொழி பெயர்ப்பிக்க முடியவில்லை. அந்த வேலை இப்பொழுது நடைபெற்று வருகிறது. அது முடிவாகவில்லை. அது முடிந்தவுடன் தயாரிக்கலாம். இதை அவசரப்பட்டுக் கொண்டு செய்து விட முடியாது. நிதானமாகத்தான் செய்ய வேண்டும், அவசரப்படக் கூடாது. இப்பொழுது தயாரிப்பதில், ஸ்டேஷனரி சப் மாஜிஸ்ட்ரேட் என்று போட்டிருந்தது. அதற்கு தமிழில் என்னமோ போட்டிருந்தது. அதைப் பற்றி கேட்டதற்கு அந்த மாதிரியான ஒரு பெயர் இருப்பதாக தனக்குத் தெரியாது என்று அந்த வார்த்தையை மொழி பெயர்த்தவர் சொல்லுகிறார். இப்படி பல வார்த்தைகளுக்கு தமிழ் மொழி தெரியாமல் இருக்கிறது. அவைகளையெல்லாம் தயாரித்த பிறகுதான் எல்லாவற்றையும் தமிழில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அவசரப்பட்டுக்கொண்டு



9th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

வருவதில் பிரயோசனம் இல்லை. இன்றைக்கு எத்தனையோ இடங்களில் தமிழிலேயே நடத்துகிறோம். அதனால் தமிழில் கொண்டு வருவதற்கு ஆட்சேபணை இல்லை. அதைப்பற்றி இன்னும் கொஞ்சம் ஆலோசனை செய்துதான், பொறுத்துகொண்டு வரவேண்டியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக, சட்டமன்றத்தின் கூட்டம் நடப்பதைப்பற்றியெல்லாம் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது $8\frac{1}{2}$ மணியிலிருந்து $1\frac{1}{2}$ மணி வரைக்கும் நடக்கிறது. இப்படி வைத்துக்கொள்வதுதான் சரியாக இருக்கிறது. அப்படி இல்லாமல் காலையில் எட்டு மணி முதற்கொண்டு ஒரு மணி வரையிலும், அதன் பிறகு மூன்று மணியிலிருந்து ஆறு மணி வரையிலும் என்று வைத்தால் அங்கத்தினர்கள் அதிகமாக வரமாட்டார்கள். கனம் அங்கத்தினர்கள் சாப்பிட்டு விட்டு மறுபடியும் வருவது என்பது முடியாது. இப்பொழுது ஐந்து மணி நேரம் பணி செய்ய வேண்டும் என்று வைத்திருக்கிறோம். அந்த முறையில் இல்லாமல் நான்கு அல்லது நாலரை மணி நேரம் மட்டில் வைத்துக்கொண்டால் போதும் என்று சொன்னால் அதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. அப்பொழுது எட்டு மணிக்கு ஆரம்பித்து ஒரு மணிக்கு முடித்து விடலாம். அல்லது ஒன்பது மணிக்கு ஆரம்பித்து விட்டு ஒன்றரை மணிக்கு முடித்து விடலாம். அப்படி இல்லாமல் ஐந்து மணி நேரம் எல்லோரும் பணி புரிய வேண்டும் என்பதற்காகத் தான் இப்படி வைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) என்னைப் பொறுத்த வரையில் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று கனம் எதிர் கட்சித் தலைவர் சொல்லுகிறார். இப்பொழுது இருக்கிறபடியே இருக்கலாம் என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அபிப்பிராயப்படுகிறார். இந்தக் கூட்டத்தை பிப்ரவரியில் ஆரம்பித்து முடிக்கக் கூடாதா என்று கேட்கிறார்கள். நிதி ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதியுடன் முடிவாகிறது. மார்ச்சு மாதத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே பட்ஜெட்டை தயாரிக்க ஆரம்பிக்கிறோம். அந்த முறையில் பிப்ரவரி மாதம் மத்தியிலிருந்து தயாரிக்க ஆரம்பிக்கிறோம். இந்தக் கூட்டம் தான் நீண்ட கூட்டம், மார்ச்சு மாதம் 31-ம் தேதியுடன் முடிவாகிறது. அதன் பிறகு இன்னும் வேலை இருந்தால், அதற்குப் பிறகும் உட்காருகிறோம். இப்பொழுது பிப்ரவரி மாதத்தில் பட்ஜெட்டை தயாரிக்கும் போதே ரிவைஸ்ட் பட்ஜெட் என்று வருகிறது. இன்னும் முன்னாலேயே ஆரம்பித்தால் இன்னும் அதிகப்படியான ரிவைஸ்ட் பட்ஜெட் வருவதாக இருக்கும். இந்த பட்ஜெட்டை மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்குள் முடிக்க வேண்டியதாக இருக்கிறது. மார்ச்சு மாதம் சென்னை நகரத்தில் வெயில் அவ்வளவு கடுமை என்று சொல்ல முடியாது. மார்ச்சு மாதத்தில் ஒன்றும் கோடை ஆரம்பிப்பதாக இல்லை. இந்த வருடம் கூட்டத்தை ஏப்ரல் மாதம் 2 அல்லது 3 தேதியுடன் முடிக்கிறோம். ஏப்ரல் மாதம் 10-ம் தேதி வரைக்கும் போக முடியாது. அப்படி வைப்பதற்கு நமக்கு அதிகாரம் இருந்தாலும் கூட அப்படி வைப்பது இல்லை. இப்பொழுதுள்ளபடி ஏப்ரல் மாதம் 2, 3 தேதியுடன் முடிப்பதாக இருக்கிறது.

அடுத்தபடியாக, தேர்தலைப்பற்றி குறிப்பிட்டார்கள். தேர்தல்களில் கனம் அமைச்சர்கள் வரக்கூடாது என்றும் குறிப்பிட்டார்கள். அது வேறு பிரச்னை. அது எதிர்க்கட்சியினுடைய அபிப்பிராயமாக இருக்கலாம். ஜனநாயக முறையில் நடக்கும்போது இதையெல்லாம் பார்க்க முடியாது. ஜனநாயக நாடுகளில், மற்ற நாடுகளில் பார்த்தால் இது நன்றாகத் தெரிய வரும். ஆனால் ஒன்று மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி போகும்போது அமைச்சர்கள் பொதுச் செலவில் போகிறார்களா என்றுதான் பார்த்துக் கொள்ள வேண்டும். நிச்சயமாகச் சொல்லலாம், அமைச்சர்கள் பொதுச் செலவில் போவதில்லை. சர்க்காருடைய வாகனங்களில்கூட அவர்கள் வருவது இல்லை. தேர்தல் கூட்டங்களில் கலந்து கொள்ளும் போது சர்க்கார் வாகனங்களிலும் வருவதில்லை; பொது செலவிலும் வருவதில்லை. இது கண்டிப்பாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. மற்றவர்களுக்கு இருப்பது போன்று தேர்தல் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு அவர்களுக்கும் உரிமை இருக்கிறது. சாதாரணமாக அமைச்சராக ஆகிவிட்டார் என்பதற்காக அவருடைய உரிமையைப் பறிக்க முடியாது. அதனால் அவருடைய உரிமை பறிக்கப்பட்டு விட்டது என்று கருதக் கூடாது. ஜனநாயக நாட்டில் அதை ஒப்புக்கொள்ளவும் முடியாது. ஆனால்

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1963]

நம்முடைய மாநிலத்தின் ஜனத்தொகை குறைந்துவிட்டது. இதைக் குறித்து, ஒரு புறத்திலே மகிழ்ச்சி பெறலாம். சிலர் மகிழ்ச்சி பெறமாட்டார்கள். நம்முடைய பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் ஸ்தானங்கள் குறைந்திருக்கின்றன. அது குறைந்தது பற்றி நாம் மகிழ்ச்சி அடைய மாட்டோம். அது ஏமாற்றமாகத்தான் இருக்கும். இருந்தாலும் ஸென்ஸஸ் எடுக்கப்பட்டது. அதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பார்லிமெண்டைப் பொறுத்த வரையில், 41 பிரதிநிதிகளுக்குப் பதிலாக 38 பேர்தான் இருப்பார்கள். இதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது. இதைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் மதியழகன் அவர்களும், கனம் சுதந்திராக் கட்சித் தலைவரும், மற்ற அங்கத்தினரும் குறிப்பிட்டார்கள். இப்பொழுது இருக்கிற முறைப்படி ஒரு பார்லிமெண்ட் ஸ்தானத்திற்கு 5 அசெம்பிளி ஸ்தானங்கள் என்று வைத்திருக்கிறோம். திருத்தணித் தொகுதியையும் சேர்த்து, இப்பொழுது 206 ஸ்தானங்கள் இருக்கின்றன. புதிய முறைப்படி 15 ஸ்தானங்கள் குறையும். 206 என்று இருப்பது 191 ஆகிவிடும். அப்படிக் குறைகிறதே, அதை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். 7 மடங்கு ஆக வைத்துக் கொள்ளலாம் என்று சிலர் சொன்னார்கள். 7 மடங்கு என்று வைத்தால் மேலும் 60 ஸ்தானங்கள் கிடைக்கும். இந்த மண்டபத்திலே இடம் இருக்கிறதா என்பது வேறு பிரச்னை. இடம் வேண்டுமானால் கட்டிக் கொள்ளலாம். அவ்வளவு எண்ணிக்கை வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. குறைவாக இருந்தாலும் பரவாயில்லை. கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் சொன்ன யோசனையின்படி 6 மடங்காகப் பெருக்கிக் கொண்டால், 228 ஆகும். இப்பொழுது 206 ஸ்தானங்கள் இருக்கின்றன. மேலும் 22 ஸ்தானங்கள் உயரும். இப்பொழுது 15 ஸ்தானங்கள் குறையும். இந்த மண்டபத்திலே 215 அங்கத்தினர்களுக்கு இடம் இருக்கிறது. மேலும் 13 பேர் வந்தால், கொஞ்சம் நெருக்கடியாக உட்கார்ந்து கொள்ள வேண்டியிருக்கும். 6 மடங்காகப் பெருக்க முடியுமா என்பதை அரசாங்கம் யோசனை செய்து, அதைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்த பிறகு, பின்னர் அறிவிக்கப்படும்.

இட நெருக்கடி எங்கும் இருக்கிறது. இந்த மண்டபத்தில்தான் நெருக்கடி இருக்கிறது என்பதில்லை. சட்டமன்றங்களுக் கெல்லாம் தாய் மண்டபமாக விளங்குகின்ற ஹவுஸ் ஆப் காமன்ஸில் கூட இட நெருக்கடி இருக்கிறது. நான் அந்த இடத்தைப் போய் பார்த்தேன். காமன்வெல்த் பார்லிமெண்டரி அஸோஸியேஷன் தலைவர் என்னை அங்கே அழைத்துக் கொண்டு போவதற்கு ஏற்பாடு செய்தார். அங்கேயும் விஸிட்டர்கள் காலரில் ரொம்ப நெருக்கடி இருக்கிறது. சட்டமன்றத்திலே இருக்கும் அங்கத்தினர்களைப் பொறுத்தவரையில்கூட நெருக்கடி இருக்கிறது. நம்மைப் போல்தான் அங்கேயும் இருக்கிறார்கள். கூடியவரைக்கும் சட்டமன்றத்தை மாற்ற வேண்டாம், எதற்காக புதிய கட்டிடம் கட்டுகிறது என்று அவர்கள் நினைப்பதாகத் தெரிகிறது. இரண்டாவது யுத்தத்திலே அவர்களுக்கு வெற்றி தேடிக்கொடுத்தவர்கூட எங்கேயோ உட்கார்ந்து கொண்டிருந்தார். கேள்விகள் கேட்க வேண்டுமென்றால்கூட வேறு ஸ்தானத்திற்கு வந்து கேட்க வேண்டியிருக்கிறது. ஹவுஸ் ஆப் லார்ட்ஸிலும் அதே மாதிரிதான் நெருக்கடி இருக்கிறது. அங்கேயும் விஸிட்டர்களைப் பொறுத்தவரையில் இந்த மாதிரி முறைதான் இருக்கிறது. அரை மணி நேரம் அல்லது 1 மணி நேரத்திற்குப் பிறகு அவர்கள் எழுந்து போக வேண்டும். ஹவுஸ் ஆப் லார்ட்ஸில் இருக்கிற விஸிட்டர்கள் ஹவுஸ் ஆப் காமன்ஸுக்குப் போகட்டும். அங்கே இருக்கிறவர்கள் இங்கு வரட்டும் என்று சொல்லுகிறார்கள். அங்கே நெருக்கடி இருப்பதால் நாமும் நெருக்கடியிலே இருக்க வேண்டும் என்பதில்லை. எந்த அளவுக்கு நெருக்கடியைக் குறைக்க முடியுமோ, அந்த அளவுக்குக் குறைக்கலாம்.

ஹாஸ்டலைப் பொறுத்தவரையில், இருக்கிற வசதிகளை சரிப்படுத்தலாம். கொசுக்களின் தொல்லையைப் பற்றிச் சொன்னார்கள். எல்லோருக்கும் தான் தொல்லை இருக்கிறது. ஃபான் வேண்டுமென்று சொன்னார்கள். ஃபானைப் போட்டாலும் கூட கொசு வந்து கடிக்கிறது. அப்பேர்ப்பட்ட தொல்லை என் வீட்டில் இருக்கிறது. இரவில் தூக்கம் வருவதில்லை. அந்த மாதிரித் தொல்லை எல்லோருக்கும் தான் இருக்கிறது. அங்கே வசம்



9th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

நதி வேறு இருக்கிறது. இப்பொழுது இருக்கிற ஹாஸ்டலிலே கூவத்தின் வாசனையை ஒட்டி தொல்லை இருக்கிறது. எந்தெந்த வகையிலே இதற்கெல்லாம் பரிகாரம் அளிக்க முடியுமோ, அந்த முறையிலே அளிக்கலாம்.

குடும்பத்தோடு இருப்பவர்களைப் பற்றி சொன்னார்கள். சர்க்கார் எஸ்டேட்டில் இருக்கும் கட்டிடங்கள் எல்லாம் சட்டமன்றத்திற்காக மட்டும் கட்டப்படவில்லை. அங்கத்தினர்களின் ஹாஸ்டல் இருக்கிறது. புது ஹாஸ்டலும் இருக்கிறது. மற்ற கட்டிடங்கள் கவர்னர் அவர்கள் இருந்த பொழுது ஏற்பட்ட குவார்டர்ஸ்கள். அதில் ஒரு பகுதியை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாடகைக்கு கொடுக்கிறோம். மற்ற கட்டிடங்களிலே சிறிய உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வீடுகள் கிடையாது. வேறு வீடுகளுக்குப் போகச் சொன்னால் அதிக வாடகை கொடுக்க வேண்டியிருக்கும். இதிலே ஒரு வரம்பை வைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. பலர் கேட்கிறார்கள், சில சமயங்களிலே சீட்டுப்போட்டு, யாருக்கு விழுகிறதோ அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

சட்டமன்றத்திலே பேசப்படுகின்ற பேச்சுக்களை ரிப்போர்ட் செய்வதைப் பற்றி முதலிலே பேசிய கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். ரிப்போர்ட் சரியில்லை என்று சொன்னார். தமிழிலே பேசுவது அவ்வளவு சரியாக வரவில்லை என்று ஒரு புகார் இருந்தது. ஆனால் இப்பொழுது ரொம்ப அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது கூடியவரையிலே சுருக்கெழுத்தாளர்கள் நல்ல முறையிலே செய்கிறார்கள். ஆனால் தமிழில் பேசுவதை ரிப்போர்ட் செய்வதிலே கஷ்டம் இருக்கிறது. அந்த மன்றத்திலே கூட ஒரு உறுப்பினர் வேகமாகப் பேசினார். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அதை எப்படி எடுக்க முடியும் என்று நான் கேட்டேன். யார் பேசுவதைப் பற்றியும் நான் குறை கூறவில்லை. ரிப்போர்ட் பண்ணுவதிலே இருக்கிற கஷ்டத்தைத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். அங்கே உள்ள காரியதரிசி, "நான் பார்த்து, பேச்சைத் திருத்தி அங்கத்தினர்களுக்கு அனுப்புகிறேன்" என்று சொன்னார். அவ்வளவு கஷ்டம் இருக்கிறது. டேப் ரிக்கார்ட் வைப்பதினால் பரிகாரம் ஏற்படாது. குறிப்பிட்ட சில சமயங்களிலே வேண்டுமானால் டேப் ரிகார்டிங் செய்யலாம். நிரந்தரமாக அதை வைக்க வேண்டுமென்று சில உறுப்பினர்கள் கூறினார்கள். டேப் ரிகார்டை நிரந்தரமாக வைத்தால் என்ன பிரயோசனம் ஏற்படும்? யாராவது உட்கார்ந்துக்கொண்டு கேட்பதற்குத்தான் பிரயோசனமாக இருக்கும். அதை மறுபடியும் எழுதத்தான் வேண்டும். இப்பொழுது நாம் பேசுவதை சுருக்கெழுத்தில் எழுதி, ப்ரொஸீடிங்ஸ் தயாரிக்கப்படுகிறது. டேப் ரிக்கார்டர் வைத்தாலும், அதை வைத்துக் கேட்டு மறுபடியும் குறிப்பு எடுக்க வேண்டும். டேப் ரிகார்டில் ரிகார்டான எல்லாவற்றையும் மறுபடியும் குறிப்பு எடுக்க வேண்டும்.

**திரு. சா. கணேசன் :** டேப் ரிக்கார்டர் சாதகமாக உதவி செய்தால் அதிலே "புட் கண்ட்ரோல் இருக்கிறது" காலை வைத்து அமுக்கிக் கொண்டே, விஷயங்கள் விட்டுப்போகாமல் இருப்பதற்கும், அப்படி ஏதாவது விட்டுப்போய்விட்டால், இரண்டு மூன்று தரம் திருப்பிக் கேட்டு, ஒத்துப் பார்ப்பதற்கும், சந்தேகம் இருந்தால் என்ன சொல் என்று தெரிந்து கொள்வதற்கும், பொருள் மாறிவிடாமல் இருப்பதற்கும் சுருக்கெழுத்தாளர்களுக்கு உதவியாக இருக்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது சட்டமன்ற சுருக்கெழுத்தாளர்கள் நல்ல முறையிலே ரிப்போர்ட் செய்கிறார்கள். இன்னும் அபிவிருத்தி ஏற்படும் என்று நினைக்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** நாங்கள் திருத்திக் கொடுத்த பேச்சுகளிலே கூட பிழைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக, சென்ற 1962–ம் ஆண்டு ஜூலை 11–ம் தேதி நான் இங்கே பேசியபொழுது, "தேர்தலைப் பற்றி நான் பேசவில்லை. ஆனால் தமிழ் நாட்டிலுள்ள தேர்களை பற்றி இங்கு பேச விரும்புகிறேன்" என்று சொன்னேன். ஆனால் எனக்கு வந்த குறிப்பில் " தமிழ் நாட்டிலுள்ள தேர்தல்களைப் பற்றி" என்று இருந்தது.

கவனிக்க வேண்டியதெல்லாம் அந்தக் காலங்களில் கனம் அமைச்சர்கள் தங்களுடைய அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யாமல் இருக்கிறார்களா என்பதைத்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். சுற்றுப் பிரயாணத்தைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். இதைப்பற்றி நான் முன்பே சொன்னேன். சுற்றுப் பிரயாணத்திற்கு என்று ப்ரோகிராம் போடுகிறோம். ஒரே மாதிரியாக ஒரே சமயத்தில் அனுப்புகிறோம். சிலருக்கு முன்னதாகவே தெரியவில்லை என்று சொல்லுகிறார்கள். ப்ரோகிராம்களை தயாரிக்கும் போது அருகில் இருந்தால் அவர்களுக்கு முன்னதாகத் தெரிந்து விடுகிறது, அதை வைத்துக் கொண்டு முன்னமேயே தங்களுடைய தொகுதிக்குச் சென்று சொல்லுகிறார்கள். ஆகவே சுற்றுப் பிரயாணச் செய்திகளை அனுப்புவதில் எந்த விதமான குறைபாடும் இல்லை என்று கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக அதிகாரிகளை அணுகுவதைப்பற்றி குறிப்பிட்டார்கள். அதிகாரிகளை அணுக முடிவதில்லை என்று குறிப்பிட்டார்கள். கட்சி அடிப்படையில் அவர்களுக்கு அணுக முடியாமல் இருந்திருக்கலாம். மற்றப்படி எல்லா அங்கத்தினர்களையும் அதிகாரிகள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில் அதிகாரிகள் எந்தவிதமான பாரபட்சமும் காட்டுவதில்லை, வித்தியாசம் பார்ப்பதும் இல்லை. அப்படி வித்தியாசம் காட்டமாட்டார்கள் என்று நிச்சயமாகச் சொல்லலாம். இப்பொழுது சட்ட மன்ற உறுப்பினர்கள் எவ்வளவு தூரம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதும் எவ்வளவு தூரம் அவர்களிடமிருந்து தகவல் தெரிந்து கொள்ளுகிறார்கள் என்பதும் நன்றாகத் தெரியும். அதிகாரிகள் தங்களுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டு எவ்வளவு தகவல் கொடுப்பார்களோ அவ்வளவுதான் கொடுப்பார்கள். அதற்குமேல் கொடுக்கமாட்டார்கள். எனக்குத் தெரிந்த மட்டில் அதிகாரிகள் தகவல் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தகவல்கள் கொடுப்பது இல்லை என்று நினைப்பது சரியல்ல. எனக்குத் தெரிந்தமட்டில் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அதிகாரிகளிடம் சென்று சில தகவல்களையும் விவரங்களையும் தெரிந்துகொண்டுதான் வருகிறார்கள்.

அகில இந்திய சர்வீசைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்பொழுது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். இருக்கிறார்கள். சாதாரணமாக இந்த அரசாங்கத்தின் அங்கீகாரம் இல்லாமல் புதிதாக அகில இந்திய சர்வீசில் சேர்த்துக் கொள்ள முடியாது. இந்த அரசாங்கத்தினுடைய அங்கீகாரம் மத்திய அரசாங்கத்திற்கு வேண்டும். பாரஸ்ட், இஞ்சினியரிங், பப்ளிக் ஹெல்த் இந்த மூன்று அம்சங்களிலும் அகில இந்திய சர்வீசில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படி சேர்ப்பது நல்லது என்று கருதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அவைகளை அகில இந்திய சர்வீஸ் என்று கருதி அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சேர்த்துக் கொள்வதற்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளின்படிதான் இப்பொழுது சர்வீஸ் அளிக்கப்பட்டு வருகிறது.

அடுத்தபடியாக, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சில வசதிகள் வேண்டும் என்று சொன்னார்கள். நியாயமான வசதிகள் எதுவாக இருந்தாலும் அவை செய்து கொடுக்கப்படும். அது மறுக்கப்பட மாட்டாது. சில வசதிகள் குறைவாக இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த வசதிக் குறைவு நியாயமானதாக இருந்தால் அவைகளை செய்து கொடுக்க எந்த விதத்திலும் யாரும் மறுக்க மாட்டார்கள். பென்ஷனைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அதில் இருக்கக்கூடிய கஷ்டங்களைப்பற்றியும் அதை வாங்குவதில் இருக்கக்கூடிய கஷ்டங்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். பென்ஷனை எழுதி வாங்கும்படியாக இருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். எழுதி வாங்குவது என்பது முடியாது. அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதையெல்லாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. எல்லாவற்றையும் மாற்றுவதாக இருந்தால் விதிகளை மாற்ற வேண்டியதாக இருக்கிறது. பென்ஷன் கொடுப்பது போதாது என்றும் சிலர் குறிப்பிட்டார்கள். எந்தக் காலத்திலோ ஏற்படுத்தியது, அதை மாற்றி அமைக்க வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். பழைய முறையிலேயே இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அப்படிச்





சொல்வது சரியல்ல. இப்பொழுது பஞ்சப்படி அளிக்கப்பட்டு வருகிறது. சில பெண் அங்கத்தினர்கள் போன் வசதி இல்லை என்று குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி மேலும் கவனித்து இப்போது இருக்கிற இடத்திலேயே எவ்வளவு இன்னும் அதிகப்படியாக வசதிகளைச் செய்து கொடுக்க முடியுமோ அவைகளையெல்லாம் செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். சில கனம் அங்கத்தினர்கள் ராஜ் பவனத்திலிருந்து அழைப்புகள் வருவதில்லை என்று குறிப்பிட்டார்கள். பழைய ஜாப்தாவை வைத்துக்கொண்டுதான் அழைப்பு அனுப்புகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். நானே பார்த்திருக்கிறேன், எவ்வளவோ அங்கத்தினர்களுக்கு அழைப்பு வருகிறது என்பதை. சில சமயங்களில் எல்லா உறுப்பினர்களுக்கும் கூட வருகிறது. ஆகவே சட்ட மன்ற உறுப்பினர்களை கவனிப்பதே இல்லை என்று கூறுவது சரியல்ல. அதற்கு இடமே இல்லை. பழைய ஜாப்தாவை வைத்துக்கொண்டுதான் அனுப்புகிறார்கள் என்று சொல்வதற்கு இல்லை.

சட்டசபை உறுப்பினர்கள் ஒன்று அல்லது இரண்டு பேர்கள் நகரசபை கூட்டங்களில் பிரதிநிதிகளுடன் உட்கார வேண்டும் என்று சொன்னார்கள். இரண்டு பேரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்றும் எதிருக்கு எதிராக உட்காரவேண்டும் என்றும் சொன்னார்கள். சில அங்கத்தினர்கள் அதிகப்படியான ஸ்தானங்களையெல்லாம் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். இதெல்லாம் சட்ட மன்றம் செய்யவேண்டிய வேலை அல்ல. சட்ட மன்றம் அதன் விதிகளைத் திருத்த வேண்டியதில்லை. நகரசபைகளே விதிகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். நகரசபைதான் இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். நகரசபைதான் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரவேண்டும். அவையெல்லாம் நகரசபை கவனிக்கவேண்டிய விஷயம்.

வருகிற உப தேர்தலைப்பற்றி கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் சொன்னார்கள். தேர்தல் கமிஷன் ஏதோ ஒரு தேதி குறிப்பிட்டதாகவும், நாங்கள் அந்த தேதி வேண்டாமென்று மாற்றி விட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி ஒன்றுமில்லை. தேர்தல் கமிஷன் தேதி நிர்ணயிக்கிறது. தேர்தலை நடத்துவது இந்த மாநில சர்க்கார்தான், அவர்கள் இங்கு வந்து தேர்தல் நடத்துவது இல்லை. வெள்ளிக் கிழமையா, சனிக்கிழமையா, ஞாயிற்றுக் கிழமையா, மழை இருக்குமா, வேறு வேலை இருக்கக்கூடிய நாளா என்றெல்லாம் பார்த்து தேதி நிர்ணயிக்கப்படுகிறதே தவிர, மற்றபடி ஒரு குறிப்பிட்ட தேதியில்தான் நடத்தவேண்டும் அல்லது நடத்தக்கூடாது என்பதில் யாருக்கும் அக்கறை இல்லை. தள்ளிப்போடப்பட்டது என்றால், அதெல்லாம் தேர்தல் கமிஷன் பார்த்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். இங்கிருக்கும் கனம் அங்கத்தினர்கள் வேண்டுமென்றால் தேர்தல் கமிஷனுக்கு எழுதி கேட்டுக்கொள்ளலாம். இவர்களுக்கு வேண்டிய தேதியில் கூட வைத்துக்கொள்ளும்படி தேர்தல் கமிஷனைக் கேட்டுக்கொள்ளலாம்.

"இப்பொழுது ஏன் உப தேர்தலை வைக்கவேண்டும் ?" என்று ஒரு கனம் உறுப்பினர் கேட்டார். உப தேர்தல் வைக்கலாம் என்று தேர்தல் கமிஷன் அபிப்பிராயப்பட்டது. மத்திய அரசாங்கம் அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டது. ஆகவே, உப தேர்தல் நடக்க இருக்கிறது. இப்பொழுது, உப தேர்தல் வேண்டாம் என்று சொல்வது எப்படி முறையாகும் ? தேர்தல் நடத்துவதற்கான தேதி, ப்ரோக்ராம் எல்லாம் குறிப்பிடுகிறார்கள். ஒவ்வொன்றாக அவர்கள் குறிப்பிட்டு, முடிவு செய்த பிறகு கெஜட்டில் பிரசுரிக்கப்படும்.

"தேர்தல் வைப்பதாயிருந்தால் பேச்சுரிமை பாதிக்கப்படக் கூடாது" என்று ஒரு கனம் உறுப்பினர் சொன்னார்கள். பேச்சுரிமை எந்த விதத்திலும் பாதிக்கப்பட மாட்டாது. நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகமான எந்த நடவடிக்கையையும் நாம் அனுமதிக்க கூடாது. அதற்காகத்தான் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் வகையிலுடன் பேச்சு கூடாது. நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகமான முறையில் பேசவோ, நடப்பதோ அனுமதிக்கப்பட மாட்டாது. ஆகையால்

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1963

அனாவசியமான உத்தியோகஸ்தர்களை எடுத்துவிட வேண்டியதுதான். இதைப்பற்றி நேற்றுகூட நான் குறிப்பிட்டேன். வேறு ஆட்சி நம் நாட்டை ஆண்டுகொண்டிருந்தபோது நான் கூட அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஏதோ தேவைக்கதிகமான உத்தியோகஸ்தர்கள் இருப்பதாக. உள்ளபடியே பின்னால்தான் அவர்களுடைய அவசியம் எனக்குத் தெரிந்தது. வேலை அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுக்கொண்டுவரும்போது இன்னும் பல துறைகளில் பணிகள் விரிவு படுத்தப்படவேண்டிய நிலைமைகள் ஏராளமாக இருக்கின்றன. நாம் அவசரப்பட்டுக்கொண்டு உத்தியோகஸ்தர்களை எடுத்துவிட்டால், அந்த உத்தியோகஸ்தர்களுக்கு வேலை போவது ஒரு புறம் இருக்க வேலைகளும் பாதிக்கப் படக்கூடும். வேலை பாதிக்கப் படாத அளவுக்குத்தான் காரியங்கள் செய்யவேண்டும். உத்தியோகஸ்தர்கள் துரிதமாக, திறமையாகப் பணி புரியவேண்டும் என்பதில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம். இதற்காகத் தனிக் கமிட்டி போட்டுப் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லை. நெருக்கடி நிலை ஏற்பட்ட பிறகு தொடர்ந்து இதில் கண்காணிப்பும், கவனமும் செலுத்திக்கொண்டு வருகிறது இந்த அரசாங்கம். ஒரு திருஷ்டாந்தம் சொன்னேன். ஒரு பெரிய பதவியைக் கூட வேண்டாமென்று குறைத்துவிட்டோம் என்று குறிப்பிட்டேன். ஆக, இதற்கென்று தனியாகக் கமிட்டி ஒன்றும் அவசியம் இல்லை என்று நான் சொல்வேன். இதற்குமேலே நான் தங்கள் காலத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. மீண்டும், இங்கு விவாதத்தை நல்லமுறையில் நடைபெறச் செய்த கனம் அங்கத்தினர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். இந்த மானியங்களைப் பொறுத்த வரையில் வெட்டுப்பிரேரணைகளை வற்புறுத்த மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வற்புறுத்த வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத் துறையைப் பொறுத்த மானியத்தின் மீது வெட்டுப் பிரேரணை கொடுக்கப் பட்டிருக்கிறது. சட்டமன்றத் துறை தங்கள் சீரிய தலைமையின் கீழ் இயங்குகின்ற துறையாகவும் நடு நிலைமையிலும் இருந்து இயங்குகின்ற துறையாகவும் இருப்பதனால் நாங்கள் குறிப்பிட்ட விஷயங்களைத் தாங்களே நேரிடையில் செயலாற்றுகின்ற காரணத்தினாலும், சென்ற ஆண்டினைப் போலவே இந்த ஆண்டும் சட்ட மன்றத் துறை மானியத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் வற்புறுத்த விரும்பாத காரணத்தினால் அது வாபஸ் பெறப்படும். அந்த சட்ட மன்றத்துறை சம்பந்தப்பட்ட வெட்டுபிரேரணை மட்டும் வற்புறுத்தப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

The cut motion under Demand No. VI—State Legislature was, by leave, withdrawn.

Mr. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 13,04,600 under Demand No. VI—State Legislature.'

The Demand was put and carried and the Grant was made.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் அமைச்சர் அவர்கள் அசெம்பிளி உறுப்பினர்களின் தொகையை ஆறாக உயர்த்துவதற்கு வாக்குறுதி அளித்திருக்கிற காரணத்தினால். . .

**கனம் சபாநாயகர் :** அப்படியொன்றும் அவர் வாக்குறுதி அளித்ததாகத் தெரியவில்லையே. (சிரிப்பு)

**திரு. கே. ஏ. மதியழகன்:** வாக்குறுதி என்று அளிக்காவிட்டாலும் அதைக் கவனிப்பதாகச் சொல்லியிருக்கிற காரணத்தினால் அதை 7 ஆக உயர்த்த ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு என் வெட்டுப் பிரேரணையை வாபஸ் பெறுகிறேன்.

**The cut motion under Demand No. VII—Elections was, by leave, withdrawn.**



9th March 1963]

Mr. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 13,72,900 under Demand No. VII—Elections.'

The Demand was put and carried and the Grant was made.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 8-வது மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை நான் வலியுறுத்துகிறேன்.

Mr. SPEAKER : I will put the cut motion of the hon. Member, Sri V. R. Nedunchezhiyan to the vote of the House.

The question is—

'That the allotment of Rs. 1,82,32,200 under Demand VIII —Head of State, Ministers and Headquarters Staff—be reduced by Rs. 100.'

The cut motion was put and declared lost.

A poll was demanded and the House divided thus :—

*Ayes—*

Sri V. R. Nedunchezhiyan
,, M. Karunanithi
,, K. A. Mathialagan
,, Saw Ganesan
,, Rama Arangannal
,, K. Mookiah Thevar
,, V. S. S. Mani
,, M. Rajangam
,, Kanchi Manimozhiar
,, A. Perumal
,, N. Rajangam
,, V. Arunachalam
,, S. Madhavan
,, S. Mani
,, A. Thiagarajan
,, P. Murugaiyan
,, V. R. Periannan
,, M. Kamalanathan
,, S. Muthulingam
Pulavar K. Govindan
Sri T. Chinnasamy
,, M. R. Krishnamurthy
,, A. Thangavelu
,, Munu Adhi
,, S. Murugaiyan
Srimathi Jagadambal Velayudham
Sri M. S. Mani
,, N. P. Sengottuvelu
,, S. Arumugham
,, A. G. Balakrishnan

[9th March 1963

*Ayes*—cont.

Sri R. Narayanan
,, V. Krishnamurthy
,, K. R. Munirathnam
,, S. J. Ramaswamy
,, R. Sampangi.

*Notes*—

Sri K. Parthasarathy
,, M. Alagiriswamy
,, C. M. Ambikapathi
,, L. Anandan
,, P. Appavoo
,, A. M. P. S. Balagangadharan
,, B. Bashyam Reddi
,, M. Chelliah
,, S. Chinna Karuppa Thevar
The Hon. Sri K. Kamaraj
,, M. Bhaktavatsalam.
,, P. Kakkan
,, V. Ramaiah
Sri A. S. Dhakshinamoorthy Gounder
,, V. Ellamma Naidu
,, T. P. Elumalai
,, P. Ramachandran
,, G. Gomathisankara Dikshidar
,, P. Jayaraj
,, A. K. Kaliappa Gounder
,, T. Karcha Gowder
,, C. Kothandarama Bagavathar
,, R. Krishnaswami Gopalar
,, M. Kulandaiswamy Gounder
,, T. Manavalan
,, M. Maruthanayagam Pillai
,, M. P. Muthukaruppannaswami Gounder
,, P. K. Muthuvelappa Gounder
,, S. Nanjunda Row
The Hon. Sri N. Nallasenapathi Sarkarai Manradiar
,, G. Bhuvarahan
Srimathi T. N. Anandanayaki
,, C. Kolandaiammal
,, P. K. R. Lakshmikantham
,, A. S. Ponnammal
,, Krishnaveni
,, Lakshminarasamma
,, N. R. Ranganayaki
Kumari D. Sulochana
Sri K. Narayanaswamy Pillai
,, K. P. Palanisamy
,, G. D. Perumal Raju
,, R. Ponnappa Nadar
,, K. Ponniah
,, S. Ponnusamy



9th March 1963]

*Notes*—cont.

Sri P. Rajagopal
,, G. Rajaram
,, A. Ramachandra Rayar
,, A. L. Ramakrishna Naidu
,, S. Ramalingam
,, R. Rangaswamy
,, B. Parameswaran
,, M. S. Selvarajan
,, R. Sengaliappan
,, N. Shanmugasundaram
,, O. Sreenivasa Reddiar
,, R. Subramaniam
,, K. S. Subramania Gounder
,, N. Subramaniam Chettiar
,, K. B. Palani
,, R. Thangavelu
,, P. Urkavalan
,, O. Venkatasubba Reddy
,, C. Srinivasan.

Ayes : 35.

Noes : 64.

Neutral : Nil.

The cut motion was lost.

MR. SPEAKER : The question is —

" That the Government be granted a sum not exceeding Rs. 1,82,32,200 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters staff."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Sri Saw Ganesan to Demand No. XXXII—Pensions was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

" The cut motion of Sri Saw. Ganesan to Demand No. XXXII—Rs. 3,34,65,100 under Demand No. XXXII—Pensions."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 11th March 1963. 1-35 p.m.

**The House then adjourned.**

III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

## A. Statutory Rules and Orders.

115. *Notification issued with G.O. Ms. No.* 298, *Food and Agriculture, dated* 29*th January* 1963 *amending the Madras Khadi and Village Industries Board Rules*, 1960, *published with the Food and Agriculture Department S.R.O. No. A*-213 *of* 1960, *dated the* 11*th August* 1960 *at pages* 206–208 *of Part V of the* Fort St. George Gazette, *dated the* 24*th August* 1960. [*Laid on the Table of the House under section* 29 (3) *of the Madras Khadi and Village Industries Board Act*, 1959 (*Madras Act* 18 *of* 1959).]

## B. Reports, Notifications and other papers.

*Nil.*





### APPENDIX

[*Vide* answer to starred question No. 167, on page 333.]

The following conclusions were reached at the meeting between the Transport Secretary to the Government of India and the Officials of the Madras Government:—

(i) It was agreed that the supply of one lakh gallons of water per day required during the construction stage of the project would be tapped from the 16″ main pipe line supplying water to the Tuticorin Municipality;

(ii) It was agreed that the State Electricity Board would take on hand the supply of power required during the construction period; and

(iii) It was agreed that the alignment of the harbour and of the railway and road approaches to the harbour should be settled and the lands required for the port project demarcated.

[333-ம் பக்கத்திலுள்ள 167 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.]

இந்திய அரசாங்கப் போக்குவரவுச் செயலாளரும் தமிழ்நாடு அரசாங்க அதிகாரிகளும் சந்தித்த கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன :—

(1) ஷை துறைமுகத் திட்டத்தைச் செயற்படுத்தும் காலத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் காலன் தண்ணீர் தேவைப்படும் எனவும், அதைத் தூத்துக்குடி முனிசிபாலிட்டிக்குத் தண்ணீர் வழங்கும் 16″ மெயின் பைப் லைனிலிருந்து எடுத்துக்கொள்ளலாமெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

(2) இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்போது, தேவையாயிருக்கும் மின்சாரத்தை மாநில மின்சார போர்டு வழங்குமென ஒப்புக்கொள்ளப் பட்டது.

(3) துறைமுகம், ரெயில்வே மார்க்கம், துறைமுக சாலை மார்க்கம் இவற்றை வரிசைப்படுத்தவும் துறைமுகத் திட்டத்திற்குத் தேவையான நிலத்திற்கு எல்லைக்கல் நாட்டவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1963

முக்கியமாக இங்கே குறிப்பிட்டுப் பேசிய கனம் உறுப்பினர்கள் உப தேர்தல்கள் சம்பந்தமாகத் தாராளமாகக் கலந்துகொள்ளலாம். அவர்களுக்குரிய பேச்சுரிமை எந்தவிதத்திலும் பாதிக்கப்படமாட்டாது என்று நான் நினைக்கிறேன். அவர்களும் அதைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டாம் என்று தான் நான் அவர்களுக்குச் சொல்வேன்.

உப தேர்தல் வரும்போது, அகப்படை (ஹோம் கார்ட்ஸ்) எப்படி இருக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டது. அகப்படை உத்தியோகப் பற்றில்லாதவர்களைக்கொண்ட ஒரு படையாகும். எப்பொழுது அவர்களுடைய பணி தேவைப்படுகிறதோ அப்பொழுது அவர்கள் பணியாற்றுவார்கள். அவர்கள் ஒன்றரை மாதத்திற்குப் பயிற்சி பெறுவார்கள். இந்த அகப்படையினர் எந்தத் தேர்தலிலும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். அகப்படையில் இருப்பவர்கள் என்றைக்கோ குறிப்பிட்ட பணிகளுக்காக அழைக்கப்பட போகிறார்கள் என்பதற்காக, சாதாரண உடை அணிந்துகொண்டிருக்கும்போது கூட அவர்களைக் கட்டுப்பாடு செய்ய முடியாது. ஏனென்றால், உத்தியோகப்பற்றில்லாதவர்கள் அவர்கள். எந்தக் கட்சியின் கருத்தில் அக்கறை உள்ளவராகவும் இருக்கலாம். ஆனால், அரசாங்க ஊழியர்களாக இருந்தால், அரசாங்க ஊழியர் என்ற முறையில் உள்ள கட்டுப்பாடுதான் அவர்களுக்கு இருக்கும். அகப்படையினர் (ஹோம் கார்ட்ஸ்) அவர்களுக்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் உடையை அணிந்துகொண்டு எந்தத் தேர்தலிலும் கலந்துகொள்ளமாட்டார்கள், கலந்து கொள்ளுவதற்கு இடம் இருக்காது என்று மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த சட்ட மன்ற கூட்டத்தை உதகையில் கூட்ட வேண்டும் என்று உதகை அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். குற்றாலத்தில் கூட்ட வேண்டும் என்று திருநெல்வேலி அங்கத்தினர் கேட்டுக்கொண்டார்கள். (திரு. சா. கணேசன் குறுக்கீடு) எதுவாக இருந்தாலும், இப்பொழுது அந்தப் பேச்சு வேண்டாம். நெருக்கடியான இந்த நேரத்தில், சென்னை நகரத்தைவிட்டு வேறு இடத்தில் சட்ட மன்றக் கூட்டம் நடக்கிற பிரச்சனை இல்லை. (திரு. இரா. நெடுஞ்செழியன் : விருந்தினராக அழைத்தால் போகலாம்) விருந்தினராக வரத் தயாராக இருப்பதாக கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார். சட்ட மன்ற அங்கத்தினர்கள் குற்றாலம் வருவதற்கு திருநெல்வேலி அங்கத்தினர் அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்பாடு செய்வார்கள் என்றுதான் நானும் எதிர்பார்க்கிறேன். இந்த அரசாங்கத்தினுடைய அபிப்பிராயம் இதைப்பற்றி என்ன என்பதை முன்பே தெரிவித்திருக்கிறோம். சென்னை நகரத்தை விட்டு வேறொரு ஸ்தலத்திலே சட்ட மன்றக் கூட்டம் நடப்பதென்றால், அதற்கு எல்லாக் கட்சிகளும் ஏகோபித்து ஒப்புக்கொள்ளவேண்டும். எல்லாக் கட்சிகளும் ஏகோபித்து ஒப்புக்கொண்டாலன்றி இந்த அரசாங்கம் அதற்கு இணங்காது என்பது முன்பே நாங்கள் தெரிவித்த அபிப்பிராயமாகும். அதுவும், நாட்டில் இப்பொழுதுள்ள நெருக்கடி நிலையில் அந்தப் பிரச்னையை இப்பொழுது எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

**திரு. மு. கருணாநிதி:** இடைத் தேர்தலை நடத்துவது என்று அரசு முடிவு செய்துவிட்டாலும், மாநகராட்சி மன்றம், நகராட்சி மன்றம், உள்ளாட்சி மன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல்களை நடத்துவதற்கும் ஒருவேளை அரசு முயற்சிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உப தேர்தல் நடைபெறுவதாக இப்பொழுது ஏற்பட்டு விட்டது. தேதியும் நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. ஆகையால், என்னுடைய அபிப்பிராயத்தை——அரசாங்கம் இன்னும் அதைப் பற்றி பரிசீலிக்கவில்லை——சொல்லி விடுகிறேன். இனி மற்ற நகராட்சி மன்றம், பஞ்சாயத்து இவைகளுக்கான தேர்தல் அல்லது உப தேர்தல் இந்த நெருக்கடி நிலையிலும் கூட நிறுத்தப்படவேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயமாகும். ஆனால், இவைகளுக்கான தேர்தல்களை எப்பொழுது வைத்துக்கொள்வது என்று பரிசீலனை செய்யவேண்டும். இதற்கெல்லாம் முன் ஏற்பாடு வேண்டும். வாக்காளர் ஜாப்தா பரிசீலிக்கப்படவேண்டும். புதிய வாக்காளர் ஜாப்தாக்கள் தயாரிக்கப்படவேண்டும். இதெல்லாம் பார்த்துத்தான் செய்யவேண்டும்.



9th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

பஞ்சாயத்தை ''டீ-லிமிடேஷன்'' செய்வது பற்றியும், கவனிக்கவேண்டும். இதற்குச் சில மாதங்களாகும். என்னுடைய கருத்து——எப்பொழுது உப தேர்தல் நடக்கிறதோ——அதே மாதிரி மற்ற தேர்தல்கள், ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்கள் நீண்ட காலம் ஒத்தி வைக்கப்படவேண்டியதில்லை என்பது தான். மற்றப்படி, இங்கே குறிப்பிடப்பட்ட பல விஷயங்களைப் பற்றியும் நான் கூடிய வரையில் பேசிவிட்டேன் என்று தான் நினைக்கிறேன்.

''சட்ட மன்ற நடவடிக்கைகள் அச்சிட்டு வருவதில் கொஞ்சம் தாமதமாகிறது'' என்று குறிப்பிடப்பட்டது. கனம் அங்கத்தினர்கள் இங்கே பேசுவதையெல்லாம் டைப் அடித்து எவ்வளவு விரைவாக அனுப்பப்பட வேண்டுமோ அவ்வளவு விரைவாக அனுப்பி வைக்கப்படுகின்றன. கனம் அங்கத்தினர்கள் அவற்றை சரி பார்த்துத் திருப்பியனுப்புகிறார்கள். பிறகு அவை அச்சகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அதன்பிறகு ''ப்ரூஃப்'' பார்த்துத் திருப்பியனுப்பவேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் நாள் ஆகும். என்றாலும், நடவடிக்கைகளை எவ்வளவு சீக்கிரத்தில் பிரசுரிக்கக் கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் பிரசுரித்துவிடவேண்டும் என்பது தான் சட்ட மன்ற அலுவலகத்தினுடைய கருத்தாகும்.

அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டைப் பற்றிச் சொன்னார்கள். உடனே அனுப்பி வைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட் எப்பொழுது வந்ததோ, அப்பொழுது, ஒரு நாள் தாமதம் இல்லாமல், இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்டைத் தயாரிப்பதென்றால், ஒரு ஆண்டு பூர்த்தியான பிறகு அந்தந்த இலாகாவிலுள்ளவர்கள் அறிக்கை தயாரிக்கிறார்கள். அதற்கு கொஞ்ச நாள் ஆகின்றது. அது தயாரிக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு வந்த பிறகு, அரசாங்கம் நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. இதற்குப் பிறகுதான் அச்சுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதனால் தான் ஓரளவுக்குத் தாமதம் ஆகிறது. ஆனால், முன்பிருந்த தாமதம் இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கிறது. தாமதத்தை மேலும் குறைப்பதற்கு இப்பொழுது அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

**திரு. சா. கணேசன் :** 1960-ம் ஆண்டுக்கான அறிக்கை 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதியன்றைக்கு நமது லைப்ரரிக்கு வந்திருக்கிறது. லைப்ரரி ஸீல் போட்டிருக்கிறது. நான்கு நாட்கள் முன்னதாக வந்தாய் விட்டது. 1961-ம் ஆண்டுக்கான அறிக்கை இந்த மார்ச் மாதம் 7-ம் தேதி தான் வைக்கப்பட்டிருக்கிறது. ஆக, தாமதம் 12 மாதங்களிலிருந்து 14 மாதங்களாகக் கூடியிருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒன்றரை மாதம், இரண்டு மாதம் என்பதை ஒன்றும் பெரிதாகச் சொல்லவேண்டியதில்லை. ஓராண்டில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். ஒருமாதம், இரண்டு மாதங்களைப் பெரிதாகச் சொல்வதில் பயனில்லை. கூடிய வரையில் சீக்கிரத்திலே சமர்ப்பிப்பதற்குத் தான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கனம் சுதந்திரக் கட்சித் தலைவர் அவர்கள் இன்னும் சில கருத்துக்களை சொன்னார்கள். தேர்தலில் ஏற்படுகிற குற்றத்தைத் தவிர்க்கவேண்டும் என்பதில் எல்லோருடைய கவனமும் இருந்து கொண்டிருக்கிறது. பார்லிமெண்டும், தேர்தல் கமிஷனும் கவனம் செலுத்திக்கொண்டு வருகின்றன. சட்டங்களெல்லாம் கூட அப்போதைக்கப்போது மாற்றியமைக்கப்படுகின்றன. மொபைல் போலிங் ஸ்டேஷன் வைப்பதென்றால், அதிலே சிக்கல்கள் இருக்கின்றன. தேர்தல் கமிஷன் கவனித்து, அவர்கள் மற்றவர்கள் யார் யாரைக் கலந்தாலோசிக்கவேண்டுமோ அவர்களைக் கலந்தாலோசித்து அதற்குப் பிறகு அவர்கள் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும். இது உடனே ஏற்றுக்கொள்ளக்கூடிய யோசனை அல்ல.

விலைவாசியைப்பற்றிக் குறிப்பிடப்பட்டது. வேறு கமிட்டியெல்லாம் போடவேண்டும் என்று சொன்னார்கள். அவசியமில்லாத உத்தியோகஸ்தர்களை நீக்கி விடலாம் என்று யோசனை தெரிவித்தார்கள். இதில் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 11th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

### ராமகிருஷ்ண குடில் (திருப்பராய்த் துறை)

*178 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள திருப்பராய்த்துறையிலிருக்கும் ராமகிருஷ்ண குடில், ராமகிருஷ்ண தபோவனம் இவைகள் இரண்டிற்கும் எவ்வளவு புறம்போக்கு நிலங்கள் அடமானம் செய்யப்பட்டுள்ளன ?

**கனம் திரு. வெ. ராமையா :** திருப்பராய்த்துறை கிராமத்தில் எஸ்.எப். 237–5-ல் 9 ஏக்கர் 5 செண்ட் நிலமும் பெருகமணி கிராமத்தில் எஸ்.எப். 8-5-ல் 16 செண்ட் நிலமும் ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன. அந்த நல்லூர் கிராமத்தில் எஸ்.எப். 186–2-பி-ல் 30 ஏக்கர் நிலமும் எஸ்.எப். 186–2-ஏ-ல் 12 ஏக்கர் 50 செண்ட் நிலமும் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்துக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன. கோயம் புத்தூர் ஜில்லா, கோயம்புத்தூர் தாலூகா, புலுவப்பட்டி கிராமத்தில் சர்வே ந. 424–2-ல் 2 ஏக்கர் 15 செண்ட் நிலமும், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் நிர்வகித்து வருகிற ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த ஆசிர மத்துக்கு வழங்கப்பட்டது.

**திரு. து. ப. அழகமுத்து :** திருப்பராய்த்துறை பகுதியில் உள்ள எல்லாப் புறம்போக்கு நிலங்களையும் இந்த இரண்டு ஸ்தாபனத்திற்கும் அடமானம் செய்து கொடுப்பதன் மூலம் மேய்ச்சல் காட்டிற்கு இடமில்லை என்று விவசாயிகள் புகார் செய்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அதுபோல் புகார்கள் என் கவனத்திற்கு வரவில்லை.

### நெல் விலை நிர்ணயம்

*179 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல் விலையை அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கிறதா ?

(இ) விவரம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) இல்லை.

(*a*) & (*b*) No Sir.

**திரு. கரு. சீமைச்சாமி :** மில்களில் அரிசி மூட்டைக்கு இவ்வளவு என்று அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அது எவ்வளவு ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மில் ஓனர்களிடமிருந்து அரிசி வாங்க மாண்டு ஒன்றுக்கு இவ்வளவு என்று விலை முடிவு செய்திருக்கிறோம். விவசாயிகள் இவ்வளவுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யவில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** என்ன விலைக்குக் கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது ?

**கனம் சபாநாயகர் :** இன்ன விலைக்கு என்று இல்லை என்று சொல்கிறுரே !

**திரு. கரு. சீமைச்சாமி :** ரைஸ் மில்களிலிருந்து அரசாங்கம் என்ன விலைக்கு வாங்குகிறது ?

**THE HON. SRI P. KAKKAN :**

| | RS. | nP. |
|---|---|---|
| Red Kar or short duration red-kar varieties, Madu Muzhangi, Sambalai Kullam Samba, Kallimattu Puzhuthi Peratti, mosonam, manavarai Pisani, manakathi, red-vadan samba, Kolavazhi | 15 | 00 |
| Vallikar, swarnavari, Gobikar, Adt. 3, 4, sarapalli, Poonkar, Arupathankottai, Chitrakalai | 15 | 50 |
| Vadansamba, muthu samba Thuyamalli Rangoon samba | 15 | 80 |
| Nellore samba (coarse) .. .. .. .. | 16 | 00 |
| Kattai samba (Arai samba) .. .. .. | 16 | 25 |

**திரு. கரு. சீமைச்சாமி :** இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலை குறைவாக இருக்கிறது. இதனால் மில் சொந்தக்காரர்கள் நெல்லைக் குறைந்த விலைக்கு வாங்கத்தான் முற்படுகிறுர்கள். ஆகவே இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறுர்கள் என்பதை அரசாங்கம் உணர்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விவசாயிகளிடம் போய் வாங்குவதனால் கண்ட்ரோல் காலத்தில் ஏற்பட்ட கஷ்டங்கள் தெரியும். விவசாயிகளைத் தொந்தரவு படுத்த வேண்டாம் என்றுதான் மில் ஓனர்களிடம் பேசி ஒரு முடிவிற்கு வந்திருக்கிறோம். அவர்கள் ஒத்தாசை செய்யவேண்டுமென்று நேரடியாகப் பேசி முடிவிற்கு வந்திருக்கிறோம். 1959-ல் என்ன விலை கொடுக்கப்பட்டதோ அதேபோல் இப்போதும் பார்த்துத்தான் கொடுக்கபடுகிறது. மில் ஓனர்கள் பத்து மூட்டைகள் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சையில் 12 மூட்டையும் இதர ஜில்லாக்களில் 10 மூட்டை என்றும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

**திரு. கோ. சி. மணி :** நிர்ணயித்த விலையில் அரசாங்கம் குறிப்பிட்ட நேரத்தில் மில்காரர்கள் வந்து கொடுக்க வேண்டுமா ? அல்லது மில்காரர்களிடம் போய் அரசாங்கம் வாங்கிக் கொள்ள வேண்டுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மில்களில் போய் வாங்கிக்கொள்ள வேண்டும்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** 1959-ம் ஆண்டு வாங்கிய விலையில் இன்று வாங்குகிறோம் என்று சொன்னால் அன்று இருந்த உற்பத்திச் செலவை விட இன்று அதிகமாக செலவாகிறது என்பதை அரசாங்கம் உணர்வார்களா ? ஆகவே உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை நிர்ணயிக்க சர்க்கார் ஆலோசனை செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இது மாகாண சர்க்காரால் நிர்ணயம் செய்வதில்லை. மத்திய சர்க்கார் நிர்ணயம் செய்து நாம் வாங்கி ஏழை மக்களுக்கு "பேர் ப்ரைஸ் ஷாப்" மூலம் வழங்கும் எண்ணத்தில் வாங்கப்படுகிறது.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** அமைச்சர் அவர்கள் கொடுத்த விடையில் இருந்து மத்திய சர்க்காரால் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது என்று தெரிய வருகிறது. ஒரிஸா போன்ற மாநிலங்களில் நிர்ணயித்திருப்பதை



விட இங்கு விலை குறைவாக விற்பதால் அவர்களுக்கு லாபமாக இருக்கிறது. அதனால் நம் விவசாயிகள் பாதிக்கப்படுகிறுர்கள். ஆகவே இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அறுவடை சமயத்தில் விலை குறைகிறது. ஒரு மாதம் கழிந்தவுடன் விலை இறு இறு என்று ஏறி விடுகிறது. தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் கூட உதவி செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே இதற்கு மேல் இருக்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. மூக்கையா தேவர் :** மத்திய சர்க்காரோ அல்லது மாநில சர்க்காரோ விலை நிர்ணயம் செய்து விட்டது. அந்த விலையை விட இரண்டு ரூபாய் குறைத்துத்தான் மில்காரர்கள் விவசாயிகளிடம் கேட்கிறுர்கள். ஆகவே நெல் விலை ஏறுவதை டிஸ்கரேஜ் செய்வதாக இது இருக்கிறது. அதனால் நல்ல பலன் ஏற்படவில்லை. ஆகவே இந்த விலை நிர்ணயம் செய்வதைக் கைவிட உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விவசாயிகள் இன்ன விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடவில்லை. கிராமங்களில் கோடவுன்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மார்க்கட்டிங் சொஸைட்டிகள் போன்றவை இருக்கின்றன. ஆகவே விலை கட்டுப்படியாகாவிட்டால் பின்னால் அதிக விலைக்கு அவர்கள் விற்றுக் கொள்வார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஜில்லாவிற்கு ஜில்லா, மாநிலத்திற்கு மாநிலம் நெல் விலை வேறுபடுகிறது. இன்று விவசாயச் செலவு அதிகரித்திருக்கிறது என்பதை அரசாங்கம் உணருமா ? அப்படி உணர்ந்திருந்தால் இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை குறைவாக இருக்கிறது என்று மத்திய அரசிடம் எடுத்துச்சொல்லி இந்த விலையைக் கூட்டுவதற்கு இந்தச் சர்க்கார் சிபார்சு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அவர்களிடம் இதுபற்றி அதிகமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். எல்லாவற்றையும் பார்த்துத்தான் விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாமல் செய்திருக்கிறோம்.

**திரு. சா. கணேசன் :** இந்தமாதிரி விலைநிர்ணயம் செய்யும்போது மத்திய ஆட்சியிடம், இந்த மாநிலத்தில் இருக்கிற நிலையை எடுத்துச் சொல்லி அதற்கு மேல் விலை இன்னது என்று நிர்ணயித்து விடுவது மிகவும் பயன் உள்ளதாகவும் சிறப்பாக விவசாயிகளைத் துன்புறுத்தாமல் விவசாயிகளுக்கு ஆர்வம் ஏற்படச் செய்வதாகவும் இருக்கிறது என்று மீண்டும் வலியுறுத்த அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அறுவடை சமயம் கிட்டத்தட்ட முடியப் போகிறது. மீண்டும் அவர்களிடம் எடுத்துச்சொல்வதில் எந்தவிதப் பயனும் இல்லை. உணவு இலாகா சம்பந்தப்பட்டவர்களும் சமுதாய நலன் அமைச்சர் அவர்களிடம் எல்லாம் ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மலையாளத்தில் இருந்து நெல் வாங்க வருபவர்கள் இன்னும் வாங்க வரவில்லை. அவர்கள் வாங்க வந்தால் விலை ஏறிவிடும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் :** தலைவர் அவர்களே, அரசாங்கம் நெல்லுக்கு ஒரு விலையை நிர்ணயம் செய்து வாங்குவதால் நெல்லினுடைய விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது என்று விவசாயிகள் நம்புகிறுர்கள். அதனுடைய உண்மையான நிலை என்ன என்று சர்க்கார் சொல்ல முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதை நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்யவில்லை. மில் ஓனர்களிடமிருந்து நெருக்கடி நேரத்தில்—எமர்ஜென்ஸி பீரியட்டில்—வாங்குவது, மில் ஓனர்கள் தியாகமாகக் கொடுத்து உதவ வேண்டும் என்று இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[11th March 1963

**திரு. சி. ம. அம்பிகாபதி :** மத்திய அரசாங்கமானது, இந்தத் தேதிக்குள் கொள்முதல் செய்யவேண்டும் என்று ஏதாவது தேதி குறிப்பிட்டிருக்கிறார்களா இந்த அரசாங்கத்திற்கு ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள் என்று இருக்கும் என்று நினைக்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** கிச்சிலிச் சம்பா நெல் எங்கள் தொகுதியில் 24 ரூபாய்க்கு விற்கிறது. அதை அரிசியாக்கினால் பச்சை அரிசியானால் 30 படி, புழுங்கலரிசியானால் 32 படிகள் ஆகும். அரிசி ஆக்கிய பிறகு பச்சை அரிசி 26 ரூபாய் ஆகிறது. புழுங்கல் அரிசி 26½ ரூபாய் ஆகிறது. அரிசியாக சென்னையில் விற்கும்போது, புழுங்கல் அரிசி படி 1 ரூபாய் 2 அணாவாகவும், பச்சை அரிசி படி 1 ரூபாய் 6 அணாவாகவும் இருக்கிறது. புழுங்கல் அரிசி 36 ரூபாய் ஆகிறது, பச்சை அரிசி 41 ரூபாய் ஆகிறது. அப்படி விற்கப்படும்போது புழுங்கல் அரிசியில் 9½ ரூபாயும், பச்சை அரிசியில் 15 ரூபாய் 4 அணாவும் விலை வித்தியாசம் இருக்கிறது. இந்த விலை உற்பத்தியாளர்களைப் போய்ச் சேரவில்லை. வாங்குகிறவர்களும் நஷ்டப்படுகிறார்கள். இடையில் உள்ளவர்களுக்குத்தான் இது போய்ச் சேருகிறது. இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த நஷ்டத்தில் அவர்கள் விற்கவேண்டியதில்லை. கோவாப்பரேட்டிவ் சொஸைடீஸுக்கு விற்று விட்டு நல்ல லாபம் வரும்போது விற்றுக்கொள்ளலாம்.

**காடு வளர்ப்புத் திட்டம்.**

*180 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ்ப் பல்வேறு வகையான மரக்கன்றுகளை நட்டிருக்கும் புறம்போக்கு இடங்களில், அவற்றிற்கு வேண்டிய தண்ணீர் அளிப்பதற்கு அரசு மேற்கொண்டிருக்கும் திட்டம் யாது ?

**கனம் திரு. ந. நல்லசேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் :** காட்டுப் பண்ணை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் புறம்போக்கு நிலங்களில் செடிகள் நடப்படுகின்றன. பருவ காலத்து மழையின் உதவியால் செடிகளை வளர விடுவதால், அவைகளுக்குத் தண்ணீர் ஊற்றப்படுவதில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** ஸார், பருவ மழை நம்முடைய நாட்டில் தவறி விடுவதை அரசாங்கம் உணருகிறது. ஆகையால், பருவ மழையை எதிர்ப்பார்த்து மரம் நடுவதால், பருவ மழை தவறும்போது அவைகள் பயனற்றுப் போகின்றன என்று அரசாங்கம் உணருகிறதா ? இதை உணர்ந்து தென் வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் இப்படிப்பட்ட இடங்களில் தண்ணீர் இரைக்க கைவண்டிகளையாவது தரவேண்டுமென்று தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். அதன்மீது நடவடிக்கை எடுத்து அந்த முறையில் திட்டம் போடப்படுமா ?

**கனம் திரு. ந. நல்ல சேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் அங்கத்தினர் சொல்லுவதையெல்லாம் அரசாங்கம் உணருகிறது. தண்ணீர் ஊற்றுவது என்று தனியாக ஸ்கீம் ஏற்பாடு செய்யவில்லை. அதற்குச் செலவு அதிகமாக ஆகிவிடும். செடிகளை நடும்போது மழைக் காலத்தில் தான் நடுகிறோம். அப்படி நடுவதில் 30 அல்லது 40 சத வீதம் வரை தான் வாடிப்போகின்றன. 60 சத வீதம் வரையில் நன்றாகவே வருகிறது.

**திரு. எஸ். முருகையன் :** சென்ற மூன்று ஆண்டு காலமாக ஒவ்வொரு ஆண்டும் எத்தனை ஏக்கரில் காடு வளர்ப்புப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன ? எத்தனை சத வீதம் செடிகள் நன்றாக இருக்கின்றன என்று அறியலாமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் :** 1961–62-ல் 6,658 ஏக்கர்களில் செடிகள் நடப்பட்டன. 1962–63-ல் 5,700 ஏக்கர்களில் செடிகள் நடப்பட்டன. 1963–64-ம் ஆண்டில் 5,576 ஏக்கர்களில் நடவேண்டுமென்று கணக்குப் போட்டிருக்கிறோம்.



11th March 1963]

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகளில் இரு ஓரங்களில் வளர்ந்தோங்கி நின்று நிழல் தரும் மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கத் தீவிரத் திட்டம் ஏதாவது உண்டா ? மரங்கள் அற்று இருக்கிற சாலைகளில் மரங்களை நடவும் முயற்சி எடுக்கப்படுமா ?

**கனம் திரு. ந. நல்ல சேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் :** அது எனக்கு சம்பந்தப்பட்ட கேள்வி அல்ல. அது ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் சம்பந்தப்பட்ட கேள்வி.

**திரு. கே. மூக்கையா தேவர் :** அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது செடிகள் என்று சொன்னார்கள். அவைகள் செடிகளா அல்லது மரங்களா ? மரங்கள் என்றால் நடப்பட்டுள்ள மரங்களின் ஜாதிகளின், வகைகளின் பெயர்கள் என்ன என்று தெரிவிக்க முடியுமா ?

**கனம் சபாநாயகர் :** செடிகளாக இருந்துதானே மரங்களாகின்றன. மரங்களாகவே நடமுடியுமா ?

**திரு. சோ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஏரிகளின் கரைகளில் கருவேலம் மரங்களை வைக்கிறார்கள். மரம் வளர்ந்த பிறகு அவைகளின் தழைகள் உதிர்ந்தால், அந்தத் தண்ணீர் வயல்களில் பாயும்போது அதனால் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் ஏரிகளில் கருவேலம் போன்ற மரங்களை வைக்காமல் இருக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்ல சேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் :** கருவேல மரம் இருக்கிற ஏரிகளில் இப்போது நடுவதற்கு முன்பே இருந்தவை அவைகள். கருவேல மரம் காரணமாக பயிர்களுக்கு ஒரு கெடுதலும் வந்ததாகத் தகவல் இல்லை. இப்போது தண்ணீர் வராத ஏரிகளில்தான் வைக்கிறோம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆண்டுதோறும் செடி நடு விழா நடத்துவதால் உருவான பலன் ஏதாவது கிடைக்கிறதா ? அந்த விழாக் காலங்களில் செடிகளை நடுவதற்கு மட்டும் முயற்சி எடுக்கப்படுகிறது, பிறகு அவைகளைக் காப்பாற்ற முயற்சி எடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறதே, அது உண்மைதானா ?

**கனம் திரு. ந. நல்ல சேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் :** இந்த முயற்சியை எல்லோரும் எடுத்துக்கொள்ள வேண்டும்—பொது மக்களும், பஞ்சாயத்துக்களும் எடுத்துக்கொள்ள வேண்டும்—என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**மின்சார வசதி (பென்னாகரம் தொகுதி)**

*181 கேள்வி.—**திரு. புலவர் கா. கோவிந்தன் : (திரு. எம். வி. கரிவேங்கடம் சார்பாக)** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பென்னாகரம் தொகுதி பனைகுளம் பஞ்சாயத்துக்கும், விவசாயத்திற்கும் உடனடியாக மின்சாரம் கொடுக்கும்படிவேண்டி தீர்மானம் ஒன்றை பஞ்சாயத்து அனுப்பியதா ?

(இ) அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

(உ) வேலம்பட்டி, இண்டூர், பாபிநாயக்கன் அள்ளி (பென்னாகரம் தொகுதி) ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்க சர்வே செய்யப்பட்டதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) இல்லை.

(இ) வினா எழாது.

(உ) ஆம்.

[11th March 1963

## தொழில்களுக்கு லைசென்சு புதுப்பித்தல்

*182 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நடப்பு அக்டோபர்—மார்ச் மாதங்களில் சில தொழில்களுக்குப் புதிய லைசென்சுகள் தர இயலாது என மத்திய அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்பியதா ?

(இ) அவ்வித தொழில்கள் ஏற்படும் வாய்ப்புகள் தமிழகத்தில் அதிகமாக உள்ளனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) & (இ) மத்திய அரசாங்கம் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் வழங்குவது குறித்து அவ்வப்போது பரிசீலனை செய்து வருகிறது. வெவ்வேறு தொழில்களுக்கு திட்டமிடப்பட்ட அளவு, அவற்றிற்கு இதுவரை எந்தமட்டும் லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் எந்த மட்டும் லைசென்சுகள் தரக் கூடும் என்னும் விஷயங்கள் ஆராயப்படுகின்றன. இதன் விளைவாக எந்தெந்தத் தொழில்களில் ஏற்கெனவே போதுமான அளவு லைசென்சுகள் வழங்கப்பட்டுள்ளனவோ அவற்றிற்கு மேலும் லைசென்சுகள் கொடுக்க இயலா என்று " தடைப் பட்டியலில் " சேர்க்கப்பட்டு ராஜ்ய சர்க்கார்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. அக்டோபர் 1962—மார்ச் 1963 முடிய உள்ள காலத்துக்கு சம்பந்தமான இத்தகைய தடைப்பட்டியல் இவ்வரசாங்கத்திற்கு வந்திருக்கிறது.

இப்பட்டியல் இந்தியாதேசம் முழுவதிலும் உள்ள வாய்ப்புகள், அடைந்துள்ள அபிவிருத்தி இவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படுவதால், பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொழில்களுக்கு நமது மாகாணத்தில் வாய்ப்பு இருக்கிறதா இல்லையா என்ற பிரச்சினை எழுவதற்கு இடமில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், நூற்பு ஆலை சம்பந்தமாக, 1961–1962–ம் வருஷங்களில் லட்சக்கணக்கான கதிர்களுக்கு, புதிய ஆலைகளுக்காகவும், ஏற்கெனவே இருக்கிற ஆலைகளை விஸ்தரிக்கவும் 500, 600 பேர்கள் தமிழ் நாட்டிலிருந்து விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த புள்ளி விவரங்களின்படி, கடந்த மே மாதம் வரையிலும் ராஜஸ்தான், மேற்கு வங்காளம், குஜராத் போன்ற மாநிலங்களுக்கு லட்சத்துக்கு மேற்பட்ட ஸ்பிண்டில்கள் வழங்கப்பட்டிருந்தும் தமிழ் நாட்டுக்கு ஒரு ஸ்பிண்டில்கூட வழங்கப்படவில்லை. இங்கே இந்தத் தொழில் வளர்ந்து முடிந்து விட்டது என்று மத்திய சர்க்கார் கருதுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினருடைய புள்ளி விவரங்கள் தவறு—சரியாக இல்லை. சென்னை ராஜ்யத்துக்கு 75,000 ஸ்பிண்டில்ஸ் கிடைத்திருக்கிறது. அதைத் தவிர நாம் கூட்டுறவு முறையில் 8 மில்கள் இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிபாரிசு செய்து 6 மில்களுக்கு லைசென்ஸ் வழங்கி அதன் மூலமாக 72,000 வந்திருக்கிறது. தமிழ் நாட்டுக்கு ஸ்பிண்டில்கள் ஒதுக்கப்படவில்லை என்ற புள்ளி விவரம் சரியல்ல.

இரண்டாவது, நூற்பு ஆலைகள் சம்பந்தமாக எந்தெந்த ராஜ்யங்களுக்கு எவ்வளவு ஸ்பிண்டில்கள் ஒதுக்கவேண்டுமென்பது அந்தந்த ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கிற அபிவிருத்தியைப் பொறுத்தது. அவ்வாறு பார்க்கும் போது, குஜராத், மகாராஷ்ட்டிரம், சென்னை ஆகிய மூன்று ராஜ்யங்களும் நிறைய ஸ்பிண்டில்கள் உள்ள ராஜ்யங்களாக இருக்கின்றன. அவைகளுக்குக் குறைவாகவும், ஆந்திரா, வங்காளம், ஒரிஸா, கேரளம் ஆகிய இந்த ராஜ்யங்களுக்குச் சற்று அதிகமாகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு 75,000 ஸ்பிண்டில்ஸ் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், லோக் சபாவில் பதில் அளிக்கையில் 1961–62 மே மாதம் முடிய எல்லா மாநிலங்களுக்கான ஸ்பிண்டில்களின் புள்ளி விவரங்களை தொழில் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் தனிப்பட்டவர்கள் புதியதாக மில் ஆரம்பிப்பதற்கோ மற்றவர்களுக்கோ லைசென்ஸ் வழங்கப்படவில்லை என்பது சரிதானா ?



11th March 1963]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் சொன்ன புள்ளி விவரம் சரியல்ல. தனியார் துறையிலே 75,000 ஸ்பிண்டில்களுக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. இதைத்தவிர 72,000 ஸ்பிண்டில்ஸ் நாம் வாங்கிவிட்டோம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ். **I am talking of the Third Five-Year Plan** லோக் சபாவில் அவர்கள் தவறான புள்ளி விவரம் கொடுத்திருந்தால் அங்கே அவர்களுடைய அங்கத்தினர்கள் அதைப்பற்றி கேட்கவேண்டும். இங்கே இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** திட்ட அளவுக்கு மேல் நம்முடைய மாநிலத்தில் ஏதாவது ஒரு தொழில் அதிகரித்திருக்கிறதா ? அப்பேற்பட்ட தொழில்கள் யாவை ? இப்பொழுது லைசென்ஸ் வழங்குவதில்லை என்று மறுக்கப்பட்டிருக்கும் தொழில்கள் யாவை என்று சொல்ல முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தனியார் துறைக்கு திட்டம் கிடையாது. மத்திய சர்க்கார் நியமிக்கின்ற தொழில்களுக்கு இன்னென்ன தொழில்கள் சர்க்கார் ஆரம்பிக்கிறது என்ற திட்டம் இருக்கிறது. தனியார் தொழில்கள் பற்றி இந்தியா பூராவுக்கும் திட்டம் அமைக்கப்படுகிறது. அதில் எந்தெந்த ராஜ்யங்களுக்கு வசதிகள் இருக்கின்றனவோ, எந்தெந்த ராஜ்யங்களுக்கு தொழில்கள் மிகவும் குறைவாக இருக்கின்றனவோ, அவைகள் அதிகமாக தொழில்கள் பெற்று சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே பார்க்கிறபொழுது, இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 470 லைசென்சுகளுக்குமேல் வந்திருக்கின்றன.

**திரு. இர. பொன்னப்ப நாடார் :** கூட்டுறவு அடிப்படையில் கன்யாகுமாரி ஜில்லாவிற்கு நூற்பு ஆலைக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கன்யாகுமாரி ஜில்லாவில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்த வேண்டுமென்று நாம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அங்கிருக்கிற பொது மக்கள் சீக்கிரத்திலே அதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தனியார் துறையில் ஆரம்பிக்கப்படுகிற தொழில்களுக்கு இந்தியா பூராவுக்கும் கணக்கு எடுத்து, அதன் அடிப்படையில் லைசென்ஸ் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாப் மாகாணத்தில் ஏற்கெனவே பல தொழில்கள் ஆரம்பித்துவிட்ட காரணத்தினால், தமிழகத்தில் ஆரம்பிக்கக்கூடாது என்ற நியதியா ? இன்னும் இங்குள்ள வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கி வேலை வாய்ப்புகள் கொடுப்பதற்கு மேலும் பல தொழில்கள் ஏற்படுத்துவதற்கு ஏன் அரசாங்கம் முயற்சி செய்து லைசென்சுகள் வாங்கித் தரக்கூடாது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தேவைக்கு அதிகமாக பண்டங்கள் உற்பத்தி செய்தால் தொழில்கள் நசித்துவிடும். அதில் போடுகின்ற முதலீடும் நஷ்டமாகிவிடும். நாட்டிற்கு எவ்வளவு தேவை என்று கணக்குப் போட்டு அதற்கு எவ்வளவு லைசென்சுகள் கொடுக்கப்படவேண்டும் என்று கணக்கிடப்படுகிறது. அதற்கு சற்று அதிகமாகவே லைசென்சுகள் வழங்கப்படுகின்றன. ஏனென்றால், ஒன்றிரண்டு தொழில்கள் அமையாமல் போய் விடலாம். அதற்கெல்லாம் கணக்குப்போட்டு அதன் அடிப்படையில் லைசென்சுகள் வழங்கப்படுகின்றன. ஏற்கெனவே உற்பத்தி அதிகமாக இருக்கிற தொழில்களில் நாம் முதலீடு போட்டால் நஷ்டம்தான் ஏற்படும். இதில் மாநிலம், மத்திய அரசாங்கம், மற்ற ராஜ்யங்கள் என்ற பிரச்னையே எழவில்லை.

**திரு. ப. க. முத்துவேலப்ப கவுண்டர் :** தனியார் துறையிலே கதிர்கள் வேண்டுமென்று இந்த ஆண்டில் லைசென்சுகள் கேட்கப்பட்டிருக்கின்றனவா ? அப்படியிருந்தால், இந்த ஆண்டுக்கு கதிர்கள் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 800 லைசென்சுகளுக்கு அப்ளிகேஷன்கள் வந்திருக்கின்றன. அதைக் கொடுப்பது பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை. அம்மாதிரி முடிவு எடுக்கின்றபொழுது, யாருக்குக் கிடைக்கிறதோ, பார்க்கவேண்டும்.

[11th March 1963

**திரு. என். ராமசாமி உடையார் :** நமது மாநிலத்தில் கூட்டுறவு அல்லாத தனியார் துறையிலே எத்தனை சர்க்கரை ஆலைகளுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன ? அவைகளெல்லாம் உரிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த வரையில் பெண்ணாடம் சர்க்கரை ஆலை, தஞ்சாவூரில் இருக்கும் மன்னார்குடி சர்க்கரை ஆலை இவை இரண்டையும் தவிர, மற்ற எல்லா ஆலைகளும் அமைக்கப்பட்டுவிட்டன.

**திரு. ர. ஜீவரத்னம் :** தொழில்களுக்கு லைசென்ஸ்கள் வழங்குவதில் ஜில்லாவிற்கு ஜில்லா ஏதாவது பாகுபாடு உண்டா ? அல்லது தமிழ் நாட்டில் பரவலாக எல்லா ஜில்லாக்களிலும் எல்லா தொழில்களும் சமமாக இருக்கவேண்டும் என்ற நிலையை அனுசரித்து, வட ஆற்காடு ஜில்லாவிலிருந்து ஏதாகிலும் தொழில்கள் ஆரம்பிக்க அனுமதி கோரி மனுக்கள் வந்தால் அவைகள் பரிசீலிக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தொழில்களை பரவலாக நடத்த வேண்டுமென்பதுதான் சர்க்காருடைய பொதுவான கொள்கை. பரவலாக நடத்தவேண்டும் என்பதற்காக வசதி இல்லாத இடத்தில ஒரு தொழிலை ஏற்படுத்துவோமானால், அது ஒரு அட்டைத் தொழிலாக இருக்கமுடியுமே தவிர, உண்மையான தொழிலாக இருக்கமுடியாது. ஏனென்றால் ஒரு தொழிலை ஒரு இடத்தில் ஆரம்பிக்கவேண்டுமென்றால், அங்கு ஒன்று மூலப்பொருள்கள் கிடைக்கவேண்டும், அல்லது விற்பனை மார்கெட் பக்கத்தில் இருக்கவேண்டும். அல்லது அதற்கு வேண்டிய மற்ற விதமான டெக்னிகல் ஸ்கில்ஸ் போன்றவைகள், உப பண்டங்கள், "ஆன்ஸெலரி காம்போனெண்டஸ்" கிடைக்கக்கூடிய இடமாக இருக்க வேண்டும். அதையெல்லாம் பார்த்துத்தான் தொழில்களை வைக்க வேண்டும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** நாடு முழுவதுக்கும் சேர்த்து நமது தேவைக்கு மேற்பட்டு உற்பத்தி செய்யக்கூடிய தொழில்கள் இன்னென்ன தொழில்கள் என்று மத்திய சர்க்கார் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்களா? அப்படிக் குறிப்பிட்ட தொழில்களுக்கு லைசென்ஸ்கள் வழங்குவதில்லை என்று மத்திய சர்க்கார் சொல்லக்கூடிய தொழில்கள் யாவை ?

MR. SPEAKER : The question is vague. The hon. Member should put a specific question . . .

THE HON. SRI R. VENKATARAMAN : I will answer that question.

**1962** அக்டோபர் மாதத்திலிருந்து **1963** மார்ச்சு முடிய கீழ்க்கண்ட தொழில்களுக்கு அனுமதி வழங்குவதில்லை என்று 120 ஐடெம்ஸ் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி ஜில்லாவில் கூட்டுறவு முறையிலே தேயிலைத் தொழிற்சாலை அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஒன்று குந்தாவில் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது—கூட்டுறவு டீ மேகிங். மற்றொன்று ஆரம்பிப்பது பற்றி சர்க்கார் இப்பொழுது பரிசீலனை செய்துக்கொண்டிருக்கிறது.

**திரு. சா. கணேசன் :** அனுமதி கொடுக்கப்பட முடியாதவை என்று 100–க்கு மேற்பட்ட தொழில்கள் உள்ளன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவை எவை என்பதை படிக்க முடியாத காரணத்தினால் அதை மேஜையின் மீது வைப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



11th March 1963]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது கெஜட்டில் பப்ளிஷ் ஆகியிருக்கிறது. நியூஸ்பேபர்களிலும் பப்ளிஷ் ஆகியிருக்கிறது. வேண்டுமானால் இதை மேஜையின் மீது வைப்பதற்கும் தயாராக இருக்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கடந்த இரண்டு வருஷங்களில் நூற்பு ஆலையின் சம்பந்தமாக எத்தனை லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன் ? அவைகளின் மொத்த கதிர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கூட்டுறவுத் துறையிலே ஆறு லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. வழங்கப்பட்ட கதிர்கள் 72,000. தனியார் துறையிலே ஒன்று கூட வழங்கப்படவில்லை. நாங்கள் வழங்கவில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ராமனாதபுரம் ஜில்லா ராஜப்பாளையத்தில் கூட்டுறவு சர்க்கரைத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு போடப்பட்ட விண்ணப்பம் நமது அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டு, மத்திய அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. இப்பொழுது அதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதால், அதைப்பற்றி மீண்டும் மத்திய அரசாங்கத்திற்கு ஞாபகமூட்டி லைசென்ஸ் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது இருக்கிற கொள்கை புதியதாக சர்க்கரை ஆலைக்கு லைசென்ஸ் கொடுப்பதில்லை என்பதுதான். ஏனென்றால், இப்பொழுது போதிய அளவிற்கு நம்முடைய இந்திய நாட்டில் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. இனி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பது பற்றி பரிசீலனை செய்ததில், இப்பொழுது கொஞ்சம் ஏற்றுமதி செய்வதற்கு வசதிகள் இருப்பதாகத் தெரிகிறது. அப்படி வசதிகள் இருக்குமானால் கொள்கை ஒன்று நிர்ணயம் செய்யவேண்டும். இருக்கிற மில்களை விஸ்தரிப்பதா, எக்ஸ்பான்ஷனுக்கு ஏற்பாடு செய்வதா அல்லது புதிய மில்கள் ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் கொடுப்பதா என்ற கொள்கை இனிமேல் நிர்ணயிக்கப்படும்.

**திரு. க. தா. பெருமாள் ராஜி :** தாளவாடி பிர்க்காவில் பட்டுப்பூச்சி வளர்க்கப்படுகிறது. அங்கே பட்டுப் பூச்சி பாக்டரி ஏதாவது ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தாளவாடி பிர்க்காவில் இப்பொழுது ஸில்க் ரீலிங் யூனிட் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இதை இன்னும் விஸ்தரிப்பதற்கு ஏதேனும் திட்டங்கள் இருக்கின்றனவா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் இப்பொழுது ஒரு யூனிட் அங்கே சிறிய முறையில் வேலை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** வடக்கு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது தமிழகத்தில் சர்க்கரை உற்பத்தி மிகக் குறைந்திருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. ஏற்றுமதிக் கொள்கை அனுமதிக்கப்பட்டவுடன் சர்க்கரை ஏற்றுமதி செய்வதற்கு தமிழகத்தில் ஆலைகள் அதிகமாக நிறுவப்படுவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் என்ன சொல்லுகிறாரோ அதைத்தான் உத்திரப் பிரதேசத்தில் இருக்கிறவர்கள் சொல்லுகிறார்கள். "தமிழ் நாட்டை ஒப்பிட்டுப் பார்த்தால் எங்களுக்கு நூற்பு ஆலைகள் இல்லையே, எதற்காக நூற்பு ஆலைகள் தமிழ் நாட்டிற்குக் கொடுக்கிறீர்கள்" என்று கேட்கிறார்கள். எந்தெந்த ராஜ்யத்தில் எந்தெந்தத் தொழில்கள் நல்ல முறையிலே லாபகரமாகச் செய்ய முடியுமோ அந்த அடிப்படையில்தான் செய்ய வேண்டும். ஆகவே சர்க்கரை உற்பத்தியைப் பொறுத்த வரையில் எவ்வளவு நாம் இனி உற்பத்தி செய்தால் அதை விற்பனை செய்யக்கூடிய வசதிகள் இருக்கின்றனவோ, அதைப் பொறுத்து எல்லா ராஜ்யங்களுக்கும் நியாயமான முறையில் சர்க்கரை ஆலை ஏற்படுத்துவதற்கு லைசென்ஸ்கள் வழங்கப்படும்.

**திரு. செ. சீனிவாசன் :** டெக்டைல்ஸ் மில்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும்போது, குறிப்பிட்ட காலத்திற்குள் வேலை தொடங்கவேண்டுமென்று இருக்கிறதா? அல்லது இஷ்டப்படி 7 அல்லது 8 வருடங்கள் கழித்து ஆரம்பிக்கலாமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இண்டஸ்டிரியல் லைசென்ஸ் கொடுக்கும்பொழுது பூர்வாங்க நடவடிக்கைகள் ஆறு மாதத்திற்குள் எடுக்கவேண்டும், அதற்குள்ளாக எடுக்காவிட்டால் லைசென்ஸ் ரத்தாகிவிடும் என்று லைசென்ஸிலேயே ஒரு நிபந்தனை போடப்பட்டிருக்கிறது. ஏதாவது காரணத்தினால் தள்ளிப்போனால் மத்திய சர்க்காரிடம் அனுமதி வாங்கி காலத்தை நீடித்துக்கொண்டு போக முடியும்.

**திரு. எ. கோ. கோபாலகிருஷ்ணன் :** திண்டிவனத்திற்கு அருகிலே ஒரு நூற்பு ஆலை ஏற்படுத்துவதாக இருந்தது. அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பணம் இன்னும் வசூல் செய்யவில்லை என்பது என் ஞாபகம். கூட்டுறவு ஆலைக்கு வேண்டிய பணத்தைச் சேகரித்துக் கொடுப்பதாக இருந்தால், அந்த இடத்திலே நூற்பு ஆலையை வைக்க முடியும்.

**திரு. எஸ். முத்துலிங்கம் :** வந்தவாசியிலே அமைக்கப்படவிருந்த கூட்டுறவு ஆலையை வேறு இடத்திற்கு மாற்றினதற்காக காரணத்தைச் சொல்ல முடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் மூக்கையா தேவருக்குச் சொன்ன காரணத்தைத்தான் உங்களுக்கும் சொல்ல வேண்டும். அந்த ஊரிலும் பணம் வசூல் செய்வதற்கு வசதி இல்லை. அதனால்தான் அந்த இடத்திலே வைக்க முடியவில்லை. வேலூருக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** தனியார் நடத்தும் நூற்பு ஆலையிலே அதிகமான லாபம் வருகிறது. தொழிலாளர்களுக்கும் அதிக போனஸ் கொடுக்கிறார்கள். அந்த அளவிலே கூட்டுறவு நூற்பு ஆலைகளில் லாபம் வருவதில்லை என்று சொல்லுகிறார்கள். இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதிக லாபம் வரக்கூடாது என்பதற்காகத்தான் கூட்டுறவு நூற்பு ஆலையை வைக்கிறோம். கூட்டுறவு நூற்பு ஆலையிலும் அதிக லாபம் வர வேண்டும் என்பதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும் ?

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தென் ஆற்காட்டிலே ஆரம்பிக்கவிருந்த நூற்பு ஆலைக்கும் பணம் கிடைக்கவில்லை. பணம் கொடுக்கிற இடங்களிலே மில்லை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ? கடலூர் தாலூக்காவிலே இருக்கிறவர்கள் பங்குகள் எடுத்துக் கொள்வதற்குத் தயாராய் இருக்கிறார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, it is a hypothetical question.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தாராபுரத்தில் ஆரம்பிக்கவிருக்கும் கூட்டுறவு ஆலை எந்தக் கட்டத்தில் இருக்கிறது ? அங்கேயும் இதே காரணத்தைக் காட்டி, நூற்பு ஆலை ஆரம்பிப்பது தவிர்க்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினருக்கே சந்தேகமாக இருப்பதாகத் தெரிகிறது. பணம் வசூல் செய்தால், தாராபுரத்திற்குக் கொடுத்த நூற்பு ஆலை அந்த இடத்திலேயே ஏற்படும். இல்லாவிட்டால் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய நிலைமை ஏற்படும்.





**திரு. கே. மூக்கையா தேவர் :** இந்த மாதிரிப் பகுதிகள் பணம் கொடுப்பதற்கு வசதி இல்லாத காரணத்தினால், தனியார் துறையிலே ஆரம்பிப்பதற்கு முன் வந்தால், அரசாங்கம் ஒத்தாசை அளிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தக் கொள்கை அடிப்படையில் தான் கிழக்கு ராமநாதபுரத்தில் ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு மில் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலே கொடுக்கும்பொழுது, ஒரு குறிப்பிட்ட இடத்திலே வைக்கலாமென்று கட்டாயப்படுத்த முடிகிறது.

**திரு. மு. கருணாநிதி :** அறந்தாங்கியிலிருந்து நூற்பு ஆலை மாயூரத்திற்கு மாற்றப்பட்டது ஏன் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது மூன்றாவது உதாரணம் என்று சொல்லாம். பணம் வசூல் பண்ண முடியாததுதான் காரணம்.

*Interest free loans to education*

* 183 *Q.*—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) when the loan scholarship scheme will come into force,

(*b*) the details of the scheme; and

(*c*) how many students will be benefited annually?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The loan scheme has come into force with effect from 1st June 1962.

(*a*) Under the scheme, interest free loans are granted to children of non-gazetted officers and teachers and also of parents having an annual income of Rs. 1,500 and less studying in professional colleges and technical institutions under the control of the State Government. The details of the scheme were given in the Statement placed on the Table of the House on 2nd November 1962 in reply to Question No. 1081. The attention of the Member is invited to this Statement.

(*c*) No precise figures can be given as this depends on the number of applicants eligible for the loan.

* 184 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to extend the advancing of interest free loans to the children of the village officers and poor ryots for prosecuting studies in the M.B.B.S., and other degree courses; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*): The scheme for the grant of interest free loans for professional and technical courses has since been extended to the children of parents whose annual income is Rs. 1,500 and less, on the same terms and conditions under which loans are granted to children of N.G.Os. and teachers. The children of village officers and poor ryots studying for M.B.B.S. and other professional courses will also be granted loan under the scheme if their parents come under the above income limit.

[11th March 1963

9-00 a.m **திரு. சா. கணேசன் :** தமிழ்நாட்டைப் போன்ற உஷ்ணப் பிராந்தியத்திற்கு அதிக சர்க்கரை இன்றியமையாதது அல்ல என்பதையும், மேலும் மேலும் சர்க்கரை ஆலைகளை உற்பத்தி செய்துகொண்டு போனால், அதற்கு வேண்டிய மூலப்பொருளான கரும்பு உற்பத்தி செய்யப்பட அதனால் இன்றியமையாத உணவு தான்ய உற்பத்தி பாதிக்கப்படும் என்பதை அரசாங்கம் மனத்தில் கொள்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நான் இண்டஸ்டிரீஸ் அமைச்சர். ஆகவே தொழில்களை அதிகரிக்க வேண்டுமென்றுதான் யோசனை பண்ணிக்கொண்டிருக்கிறேன்.

**திரு. ர. ஜீவரத்தினம்:** நமது மாகாணத்தில் தெற்கே தொழில்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. வட ஆற்காடு ஜில்லாவிலே வளராமல் தேய்ந்து கொண்டிருக்கிறது. இந்தக் குறையைப் போக்குவதற்காகவாவது, வட ஆற்காடு ஜில்லாவிலே ஏராளமான தொழில்களை ஏற்படுத்த லைசென்சுகள் வழங்கப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வட ஆற்காடு ஜில்லாவிற்கு மட்டும். நான் எந்தவிதமான சலுகையையும் கொடுப்பதற்குத் தயாராய் இல்லை எல்லா ஜில்லாக்களுக்கும் எல்லாவிதமான உதவிகளையும் செய்யத் தயாராயிருக்கிறேன்.

**திரு. என். ராமசாமி உடையார் :** நமது மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்குச் சென்றுகூட நூற்பு ஆலைகள் வைத்து நடத்துகிறார்கள். ஆகவே அரசாங்கம் இன்னும் அதிகமாக லைசென்சுகள் வழங்குவதற்கு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதை எல்லாம் வற்புறுத்தித்தான், அலக்கேஷன் செய்யப் படுகிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அண்மையில் மத்திய உணவு அமைச்சர் அவர்கள், சர்க்கரை உற்பத்தியின் அளவை 30 லட்சம் டன்னிலிருந்து 50 லட்சம் டன்னாக உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். இது மாநில அமைச்சருக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால், ஏக்கருக்கு அதிகமாக கரும்பு உற்பத்தி செய்யப்படுகிற நம்முடைய மாநிலத்தில் மேலும் பல தொழிற்சாலைகளை வாங்கித் தர அரசாங்கம் முயற்சி செய்யுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அமைச்சர்கள் பேசுவதெல்லாம் சர்க்காருடைய கருத்தல்ல. அந்த விதமான முடிவு எடுக்கிறபொழுது, அதற்கு வேண்டிய வசதிகள் நம்முடைய ராஜ்யத்திற்கும் சேர்ந்து செய்யப்படும்.

SRI M. WILLIAM : May I know what steps have been taken for getting sanction for the establishment of textile mill in the Kanyakumari district?

THE HON. SRI R. VENKATARAMAN : I think the hon. Member may contact the Deputy Registrar of Co-operative Societies, who has been asked to take preliminary steps for the organisation of a textile mill in the Kanyakumari district.

**திரு. ம. கமலநாதன் :** தற்போது இருக்கும் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில், " ஏரியா ஆப் ஆபரேஷன் " ஒரு குறிப்பிட்ட அளவில் இருக்கிறது. இதை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? அப்படி என்றால், ஆம்பூர் சர்க்கரை ஆலையுடன் கிருஷ்ணகிரியைச் சேர்த்துக் கொள்ள முடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது என்னுடைய "பிராவின்ஸில்" இல்லை. விவசாய அமைச்சர் " பிராவின்ஸில் " இருக்கிறது.



11th March 1963]

**திரு. கே. மூக்கையா தேவர் :** மதுரை ஜில்லாவில் உசிலம்பட்டிப் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையை ஆரம்பிப்பதாக இருந்ததே. அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதற்குப் பதிலாக மேலூரில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்து இன்றைக்கு பூர்வாங்க நடவடிக்கைகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அமராவதியிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை கடந்த ஆறு மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது என்பதாக அறிகிறோம். அது உண்மையா? அப்படியானால் அதற்கான காரணங்கள் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** புதிதாக சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தலாம் என்ற நிலைமை வருகிறபொழுது, ஈரோடு பகுதியிலே ஒரு புதிய சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** புதிதாக சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்துவது என்று முதலிலே முடிவு எடுக்க வேண்டும். அப்படி முடிவு எடுத்த பிறகு எந்த இடத்திலே வைக்கவேண்டும் என்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** உசிலம்பட்டிப் பகுதியானது ஏற்கனவே பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அதனாலேதான் ஒரு கூட்டுறவு ஆலை கொடுக்கப்பட்டது. அதற்காக இடம் பார்த்து, ஒரு கமிட்டியை அமைத்து, எல்லா வேலையும் நடந்தது. அதற்குப் பிறகு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. உசிலம்பட்டி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், தயவுசெய்து அந்தப் பகுதிக்கே கொடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பின்தங்கிய பகுதியாக இருப்பதால் தான் அங்கே மில் வரவில்லை. ஒரு கூட்டுறவு மில்லை வைக்க வேண்டுமென்று சொன்னால், எந்த இடத்திலே பங்குத் தொகை 10 அல்லது 12 லட்சம் ரூபாய் வசூல் செய்ய முடியுமோ, அந்த இடத்திலேதான் வைக்க முடியும். தனியார் துறையிலே வைக்க வேண்டுமென்று சொன்னால், செய்யலாம். ஆனால் கூட்டுறவுத் துறை மூலமாக இருக்கிற காரணத்தினால் தான், உசிலம்பட்டியில் பணம் கிடைப்பதற்கு சாத்தியக்கூறே இல்லை என்று தெரிந்த பிறகுதான் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

**திரு. கே. மூக்கையா தேவர் :** அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலே, பின்தங்கிய பகுதி என்ற காரணத்தால் பங்குத் தொகை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். கோருகிற பணத்தைக் கொடுக்க முன் வந்தால், அந்தப் பகுதியிலே வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

MR. SPEAKER : I think the hon. Member's request is coming very late.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பணம் வரவில்லை இரண்டு மூன்று தரம் முயற்சி செய்து பார்த்தோம். தாமதம் வேண்டாம் என்ற காரணத்திற்காக வேறு இடத்திலே கொடுத்திருக்கிறோம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** கிழக்கு ராமநாதபுரம் பகுதியிலே தனியார் துறையிலே நூற்பு ஆலை அமைப்பதற்கு முன் வந்தால், அரசாங்கம் உதவி செய்ய முன் வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கிழக்கு ராமநாதபுரம் பகுதிக்கு தனிச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அந்தப் பகுதியிலே ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு டெக்ஸ்டைல் மில் கொடுத்திருக்கிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், இந்தத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளம் கடன் திட்டம் பள்ளிக் கூட வகுப்புகளுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா. அதற்கு முயற்சி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பள்ளிக்கூடத்திற்கு இப்பொழுது இருக்கிறது. அதாவது ஹைஸ்கூலில் படிக்கிறவர்களுக்கு 150 ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் வாங்கக்கூடியவர்களுடைய குழந்தைகளுக்கு இந்தச் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சா. கணேசன் :** கடன் கொடுப்பதுடன் மற்ற தொழில் துறை கல்லூரிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது போன்று வைத்திய கல்லூரியில் எம். பி. பி. எஸ். படிக்கிறவர்களுக்கு மூன்று வருட கோர்ஸ் ஏற்படுத்துவது பற்றி யோசிக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்குத் தனியாக கேள்வி போட வேண்டும். ஸ்டைபெண்ட் கடன் கொடுப்பது போன்றவைகளைப் பற்றித்தான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ஸார், கிராம அதிகாரிகளுக்கு வருமான அடிப்படையில் வைக்காமல் அவர்களுக்கு என்.ஜி.ஜி.ஓ.க்களுக்கு கொடுக்கப்படும் சலுகையைப்போன்று கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதைப்பற்றி பரிசீலனை செய்து அவர்களுக்கு வருமான அடிப்படையில்தான் இந்தச் சலுகை கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படியே தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** அண்ணாமலை சர்வகலாசாலையிலுள்ளவர்களும் இந்த ஸ்டைபெண்ட் திட்டத்தினால் பயனடைவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ராஜ்யத்திலுள்ள எல்லோருக்கும் இந்தச் சலுகை உண்டு.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, மேல் நாடுகளுக்கு படிக்கச் செல்லுகிற மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தின்படி கடன் உதவி அளிக்கப்படுமா, அல்லது வேறு ஏதாவது உதவி கொடுக்கப்பட்டிருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மேல் நாடுகளுக்குச் சென்று படிக்க கடன் உதவி கேட்டவர்களுடைய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன். ஆனால் ஸ்காலர்ஷிப்புகளைக் கொடுப்பதற்கு சில விதிகளைப் போட்டிருக்கிறோம். எம்.பி.பி.எஸ். படிக்க வருடத்திற்கு 1,500 ரூபாய் மாதம் 50 ரூபாய், மற்ற டிகிரி கோர்சுக்கு வருடத்திற்கு 1,000 ரூபாய், மாதம் ஐம்பது ரூபாய், டிப்ளோமா கோர்சுக்கு வருடத்திற்கு 500 ரூபாயும் மாதத்திற்கு ஐம்பது ரூபாயுமாகக் கொடுக்கப்படுகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** 1962-ம் வருடம் ஜூன் மாதம் இந்தத் திட்டம் அமுலுக்கு வந்ததாக கனம் அமைச்சர் குறிப்பிட்டார். அமுலுக்கு வந்ததிலிருந்து எத்தனை மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள். எவ்வளவு அதிகமாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை குறிப்பிடவில்லை. அப்படி குறிப்பிடாததற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 1962-63 வருடம் முடிந்துதான் கணக்குக் கொடுக்க முடியும். அப்பொழுதுத்தான் முழுக் கணக்குத் தெரியும். வருடம் முடிந்த பிறகுதான் எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்ற முழுக் கணக்குத் தெரிய வரும். சிலருக்கு செப்டம்பரில் கொடுக்கலாம், சிலருக்கு அக்டோபர், டிசம்பரில் கொடுக்கலாம்.



ஆகவே வருடம் முடிந்த பிறகுதான் முழுக் கணக்கும் தெரியும். அந்தந்த வருடக் கணக்கு அந்தந்த வருடத்திலேயே கொடுக்க முடியாது அந்த வருடம் முடிந்த பிறகுதான் கொடுக்கப்படும். சாதாரணமாக எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பதை மட்டிலும் சொல்லலாம். அதாவது சுமார் 865 மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

*Diploma in Mining*

* 186 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Central and State Governments are recognising the Diploma in Mining awarded by the Madras Government; and

(*b*) if not, the reasons therefor?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) : The Central Government have intimated recently that the diploma in Mining issued by the State Board of Technical Education in this State will not be recognised for appointments under them as practical training has not been given to the students in under-ground mining.

The question of prescribing the Mining diploma for appointment to posts in this Government is under consideration.

**கண்ணாடி வளையல் செய்முறை பயிற்சிக்கூடம்**

* 187 கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலத்தில் கண்ணாடி வளையல்கள் செய்ய பயிற்சிக்கூடம் நிறுவ உத்தேசமுண்டா ?

(இ) தமிழகத்தில் அம்மாதிரி பயிற்சிக்கூடங்கள் எங்கெங்கு உள்ளன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) நெடுமாரதியில் அரசினர் கண்ணாடி வளையல்கள் செய்யும் பயிற்சிக்கூடம் ஒன்று 21-ந் தேதி பிப்ரவரி மாதம் 1957 முதல் 31-ந் தேதி மார்சசு மாதம் 1961 வரை இயங்கி வந்தது. மறுபடியும் இதுபோன்ற பயிற்சிக்கூடம் ஒன்று சேலத்தில் நிறுவ இப்போது உத்தேசம் இல்லை.

(இ) தமிழகத்தில் மதுரையில் மட்டும் கண்ணாடி வளையல், மணி ஆகியவை செய்வதற்கான பயிற்ச்சிக்கூடம் ஒன்று 25-ந் தேதி ஜூன் மாதம் 1954 முதல் இயங்கி வருகிறது.

**காஞ்சீபுரத்திலுள்ள பாலிடெக்னிக் (கட்டிட வசதி)**

*188 கேள்வி—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காஞ்சீபுரம் பக்தவத்சலம் பாலிடெக்னிக் பள்ளிக்கு வேண்டிய கட்டிடமும், அப்பள்ளி மாணவர்க்கான மாணவர் விடுதியும் சொந்தத்தில் அமைந்துள்ளனவா ?

(இ) இல்லையேல், அவற்றிற்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் யாவை ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) இன்னும் இல்லை. (இ) பக்தவத்சலம் தொழிற்க் கல்லூரிக்கான நிரந்தரக் கட்டிடங்கள் அமைப்பதற்கென காஞ்சீபுரத்திற்கு அருகாமையிலுள்ள காரப்பேட்டை கிராமத்தில் சுமார் 73 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு மானேஜ்

**திரு. ர. ஜீவரத்னம் :** வேலூரிலிருந்து கிருஷ்ணகிரிக்குச் செல்லும் பாதையில் வேலூர் நகரத்திற்கு அருகாமையில் இருக்கும் ரயில்வே லெவல் கிராஸிங் மீது ஒரு மேம்பாலம் கட்டவேண்டுமென்ற அபிப்பிராயம் இருந்தது. அதற்காக சர்வே செய்தார்கள். அந்த மேம்பாலம் கட்டப்படுமா ? அல்லது கைவிடப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** திட்டவட்டமாகப் பதில் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

**திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர் :** அம்பாசமுத்திரம் இரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில். . . . . . . . . .

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்வி போன்ற ஒவ்வொன்றுக்கும் பதிலளிக்கக் கூடிய வகையில் அமைச்சர் அவர்கள் லிஸ்டு கொண்டுவந்திருக்கமாட்டார் !

**திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர் :** அம்பாசமுத்திரம் இரயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் இரண்டு லெவல் கிராசிங்குகள் இருக்கின்றன. அவற்றினால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைத் தவிர்ப்பதற்காக புதிதாக ஒரு ரோடு அமைக்கப்பட்டிருப்பதைத் துரிதமாகத் திறந்துவிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த விவரத்தைத் தனியாக எனக்கு எழுதியனுப்பினால் உடனே அதைக் கவனிக்கிறேன்.

### கருங்கற்கள் விநியோகம்

*190 கேள்வி.—**திரு. எஸ். முருகையன் (திரு. முனு ஆதி சார்பாக) :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பல்லாவரம் மலையிலுள்ள கருங்கல் ஜல்லி உடைக்கும் குவாரியிலிருந்து பெறும் கருங்கல் ஜல்லி, சென்னை துறைமுக டிரஸ்டின் சொந்த அலுவல்களுக்கு மட்டும்தானா ? அல்லது மற்றைய கட்டிட கண்டிராக்டர்களுக்கும் அது விநியோகிக்கப்படுகிறதா ?

(இ) தற்பொழுது, இந்த கருங்கல் ஜல்லிகளை உரிய இடத்தில் கொண்டு சேர்ப்பதற்கான காண்டிராக்ட் யாரிடமுள்ளது ?

(உ) அவர்கள் சரிவர துறைமுக டிரஸ்டுக்கு சப்ளை செய்கிறார்களா என்பதனை கண்காணிப்பது யார் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) பல்லாவரம் மலையிலிருந்து எடுக்கப்படும் கற்கள் துறைமுக அபிவிருத்திக்கு மட்டுமே உபயோகப்படுத்தப்படுகிறது.

(இ) இக் கற்கள் தற்போது ஜோன்சி அண்ட் கம்பெனியாரால் துறைமுகத்திற்கு பல்லாவரத்திலிருந்து கொண்டுவரப்படுகிறது.

(உ) துறைமுக டிரஸ்ட் குவாரி மானேஜரால் அவை சரிவர சப்ளை செய்யப்படுகிறதா என்று கண்காணிக்கப்படுகிறது.

### *Spinning Mill (Salem)*

* 191 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are in receipt of a resolution requesting the opening of a spinning mill at Salem from the North Salem District Development Council; and

(*b*) if so; the action taken thereon?





THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Government have received a copy of the resolution passed by the North Salem District Development Council suggesting the issue of a licence for the establishment of a spinning mill in the private sector in the North Salem Development District.

(*b*) The Government have received some applications from industrialists for licence to set up spinning mills in the North Salem Development District. These applications will receive due consideration along with applications from other districts.

### *Sago Laboratory (Salem)*

* 192 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to establish a Laboratory in Salem district for conducting researches to increase the production of Sago and to improve its quality; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) : The Government have sanctioned a scheme for the establishment of a Sago Research and Testing Laboratory in Salem to help the local sago manufacturing industry. The scheme involves a non-recurring expenditure of Rs. 1,05,800 on land, buildings, plant, machinery, etc., and a recurring expenditure of Rs. 22,000 per annum.

MR. SPEAKER : Questions are over :

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

### II.—PRIVILEGE MATTER *RE.* A REPORT IN THE "VIDUTHALAI"

*SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, I rise to raise a matter of privilege regarding the report of the proceedings of the Assembly in regard to a question regarding the working of the State Transport raised on the floor of the House by hon'ble Members Karunanithi and V. Krishnamoorthy on the 4th March 1963 and reported in the VIDUTHALAI, dated the 5th March 1963.

MR. SPEAKER : The hon. Member may point out the portions in the report which he considers objectionable.

SRI K. A. MATHIALAGAN : I am coming to that, Sir. The report of the proceedings relating to the question and the supplementaries is in such a way as to cast aspersions on the Members who put them as will be evident from the following. In addition, the report is not a complete account of all the supplementaries and answers relating to this question. The heading given states that Members put questions blindly—

" அசெம்பிளியில் க. மு-க்களின் கண்மூடிக் கேள்விகள் ".

[11th March 1963

மெண்டாரிடம் நிலங்களை ஒப்படைக்கப்பட்டுள்ளன. மானேஜ்மெண்டார் மாணவர் விடுதி உள்ளிட்ட எல்லா கட்டிடங்களுக்குமான வரை படங்களும் மதிப்பு பட்டியலும் தயாரித்துள்ளனர். கட்டிட வேலை விரைவில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளனர்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், காஞ்சீபுரம் பக்தவத்சலம் பாலிடெக்னிக் பள்ளியில் பல்லவ சாம்ராஜ்யத்தில் சிறப்பக் கலை கைத்தொழில் சொல்லிக் கொடுத்ததைப் போன்று இப்பொழுது அங்கே சொல்லிக் கொடுக்க ஏதாவது முயற்சி எடுக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறதை கனம் அங்கத்தினருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மகாபலிபுரத்தில் இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டாரால் சிறப்பக் கலைக்கு, அதில் பழைய முறைப்படி பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய ஸ்டைபெண்டும் கொடுக்கப்பட்டு தான் வருகிறது.

*Railway level-crossing (Accidents)*

* 189 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Railways have suggested to the State Government the adoption of certain measures to prevent accidents at railway level crossing; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The measures suggested by the Government of India relate to unmanned level crossings only and they are as follows :—

(i) Manning of certain unmanned level crossings;

(ii) Provision of road signs at approaches to level crossings and adding the word ' Stop ' in the regional language in bold letters beneath the road signs; and

(iii) Introduction of ' undulations ' or ' bumps ' at approaches to the level crossings, so that fast moving vehicles are obliged to reduce speed.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், இப்பொழுது அவர்களுடைய யோசனைப்படி நம்முடைய சர்க்கார் எதை எதை அமுல்படுத்தி இருக்கிறது ? அதை அமுல்படுத்துவதினால் இப்பொழுது ரயில்வே லெவல் க்ராசிங்கில் விபத்துக்கள் எவ்வளவு குறைந்து இருக்கிறது ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** எவ்வளவு விபத்துக்கள் குறைந்து இருக்கிறது என்பதற்கு இப்பொழுது என்னிடம் புள்ளி விவரம் இல்லை. அவர்களுடைய யோசனையின் பேரில் குறிப்பாக லெவல் க்ராசிங்குகளில் " அன்மான்ட் லெவல் க்ராசிங்கில் " கேட் கீப்பர்களை போடவேண்டும் என்று சொல்லி யோடப்பட்டிருக்கிறது. அதற்கு ஏற்படக்கூடிய செலவில் ஐம்பது சத விகித செலவை மத்திய அரசாங்கமும், ஐம்பது சத விகித செலவை ராஜ்ய அரசாங்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இந்தப் பொறுப்பு பூராவும் ரயில்வேயைச் சேர்ந்த காரணத்தால் அரசாங்கம் அதைப்பற்றி பரிசீலனை செய்து அதில் சேர்க்கப்பட்டுள்ள செலவு பூராவையும் அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவர்களுக்குக் கடிதம் எழுதி இருக்கிறோம். அதற்கு பதிலை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். மற்றும் " ஸ்டாப் அண்ட் கோ " என்று எழுதியும் காட்டப்படும். மூன்றாவதாக " பம்ப்ஸ் அண்ட் அண்டுலேஷன்ஸ் " மூலமாக வண்டிகளின் ஸ்பீடை



11th March 1963]

தடைசெய்யலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அதிகப்படியான விபத்துக்கள் தான் ஏற்படும் என்பது இந்த் அரசாங்கத்தின் கருத்து.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** பல இடங்களில் லெவல் கிராசிங்கில் அதிகப்படியான நேரம் கேட்டுகளை மூடி வைப்பது விபத்துக்களில் பெரும் விபத்தாக அமைகிறது. கேட்டை அதிக நேரம் மூடி வைப்பதால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. அதுவே விபத்தாக அமைகின்றது. அதை கூடிய சீக்கிரம் நிவர்த்திக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்பொழுது லெவல் க்ராசிங்கில் கேட்டுகளை அதிகநேரம் மூடுவதால் தாமதம் ஏற்படாலமேயொழிய விபத்துக்கள் ஏற்படாது. விபத்துக்கள் எப்படி ஏற்படும் என்பது புரியவில்லை!

**கனம் சபாநாயகர் :** தாமதம் ஆவதைத்தான் அவர் ஆக்ஸிடென்ட் ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** தாமதம் அதிகப்படாமல் இருக்க அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி எழுதி இருக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி :** சென்ற ஆண்டு இத்தகைய சந்திப்பு இடங்களில் எத்தனை விபத்துக்கள் நடைபெற்றன என்று அமைச்சர் அவர்கள் கூற முடியுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அந்த விவரம் என்னிடம் இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சென்னை நகரத்தில் கோடம்பாக்கத்திற்கும் மாம்பலத்திற்கும் மத்தியில் சென்ற ஆண்டு ஒரு விபத்து ஏற்பட்டது. அம் மாதிரி இனி ஏற்படாமல் தவிர்ப்பதற்கு அந்த விபத்துக்குப் பிறகாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டனவா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** பொதுக் கேள்வியில் இத்தகைய உப கேள்வி எழவில்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** இந்த விதமான விபத்துக்களைத் தடுக்கும்பொருட்டு, லெவல் க்ராஸிங்களில் மேம்பாலங்கள் கட்டும்படியாக மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** எங்கெங்கே மேம்பாலங்கள் கட்டப்படவேண்டுமோ அவற்றைப்பற்றி இரயில்வே இலாகாவினரே முடிவு செய்து, அவர்களுடைய ஆலோசனைகளை நமது அரசாங்கத்திற்குத் தெரிவிக்கின்றார்கள். மேம்பாலம் கட்டவேண்டுமென்று ரயில்வே போர்டும் நமது அரசாங்கமும் முடிவுக்கு வந்தால், அதற்காகும் செலவில் ஒரு பங்கை ரயில்வே போர்டும், மற்றொரு பங்கை நமது அரசாங்கமும் கொடுக்க வேண்டும். அவசியமுள்ள இடங்களில் நமது அரசாங்கமும் செய்து கொண்டிருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கோவை-அவனாசி ரோடில் ரயில்வே லெவல் இராஸிங் ஒன்று இருக்கிறது. அதற்கு மேம்பாலம் கட்டவேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கியும், மாநில அரசாங்கம் நிதி ஒதுக்காத காரணத்தால் அது தாமதப்பட்டு வருவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதை விரைவில் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** எத்தனையோ இடங்களில் மேம்பாலங்கள் கட்ட வேண்டும், அல்லது அண்டர்வே பாஸேஜ் அமைக்கவேண்டும், எல்லா இடங்களிலும் உடனே கட்டிவிட முடியாது. நமது மாநில அரசாங்கத்திற்கு இருக்கும் நிதி வசதியைக் கொண்டு எங்கெங்கே அமைக்க முடியுமோ, அதற்கு ப்ரையாரிட்டி கொடுத்து அமைத்துக்கொண்டு இருக்கிறோம்.

[Sri K. A. Mathialagan] [11th March 1963

The report further goes on and states that Members belonging to a particular party put questions blindly and got a good whipping by way of reply from the Minister Sri R. Venkataraman.

"நேற்று அசெம்பிளியில் க. து. உறுப்பினர் கண்மூடித்தனமான கேள்விகள் சிலவற்றைக் கேட்டுவிட்டு அமைச்சர் திரு ஆர். வெங்கட்டரமனிடம் சாட்டையடி போன்ற பதில் பெற்றுக்கொண்டனர்".

The report is an incorrect one and is intended to bring the members of a particular party into ridicule and is thereby a breach of the privilege of the Members and also a contempt of the House.

MR. SPEAKER: I would like to know from the hon. Member what it is that he is taking objection to.

SRI K. A. MATHIALAGAN: It is an incorrect report.

MR. SPEAKER: I would like the hon. Member to explain what particular point in the report he is objecting to.

SRI K. A. MATHIALAGAN: The statement in the paper 'அசெம்பிளியில் க.து-க்களின் கண்மூடிக் கேள்விகள்' gives the general impression that the Members of that Party were blindly putting the questions.

MR. SPEAKER: Is it the contention of the hon. Member that the newspaper was not justified in using the expression 'கண்மூடித்தனமான கேள்விகள்'? May I know whether that is the main objection of the hon. Member?

SRI K. A. MATHIALAGAN: That is one of the objections, Sir.

MR. SPEAKER: According to the hon. Member, there may be more objections. One of them may be that the whole proceedings have not been published and only a portion of the same had been published. Secondly, the hon. Member may object to the use of the expression 'blindly'. After all, what is the meaning of the word 'கண்மூடித்த'? Does it not mean, 'out of ignorance' or something like that?

SRI K. A. MATHIALAGAN: It may mean 'stupid', 'foolish' and so on.

MR. SPEAKER: I may tell the hon. Member that according to the Tamil Lexicon, 'கண்மூடித்தனமான' means 'கவனமின்மை', 'அறியாமை'. In all such matters, if at all we are to take any action against any particular individual or organisation, we must proceed on right lines. On the other hand, if we are vague, that individual or organisation may escape. So, let the hon. Member point out clearly to what words or expressions he is taking objection.

SRI J. MATHA GOWDER: May I know what is the meaning of 'க.து.'?

MR. SPEAKER: We are not concerned with that now. The hon. Member may resume his seat.



11th March 1963] [Mr. Speaker]

Now, may I know whether a statement that 'questions were put out of ignorance, or unknowingly or blindly' will constitute a breach of privilege?

SRI K. A. MATHIALAGAN: It puts a particular party into ridicule. There is no 'க. து. கட்சி' here. There is only the Dravida Munnetra Kazhagam here.

MR. SPEAKER: If there is no 'க. து. கட்சி' here, why should the hon. Member raise the matter at all here?

SRI K. A. MATHIALAGAN: Sir, the report should be taken as a whole. It is stated therein 'அசெம்பிளியில் க.து. க்களின் கண்மூடிக் கேள்விகள்'. The name of the party as given in the report should not be isolated from the other portions of the report.

MR. SPEAKER: There is no party by the name 'க.து. கட்சி' in the House. Hon. Member Sri K. Mookiah Thevar has also been referred to in the report. So, I think there is no question of any particular party being involved in this matter.

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பத்திரிகையில் வந்திருக்கிற வாசகம் "அசெம்பிளியில் க. து.-க்களின் கண்மூடிக் கேள்விகள்" என்பதாகும். அசெம்பிளியில் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. காங்கிரஸ் கட்சி இருக்கிறது. கம்யூனிஸ்டு கட்சி இருக்கிறது. சுதந்திராக் கட்சி இருக்கிறது. க. து. கட்சி என்பதாக ஒன்றில்லை. இந்தப் பெயரோடு திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட மன்றத்தில் செயல்படவில்லை. அசெம்பிளியில் க. து.—க்களின் கண்மூடிக் கேள்விகள் என்று தலைப்பிடுகிறபோது வெளியில் உள்ளவர்களுக்கு அது என்ன கட்சி என்றே தெரிந்து கொள்ள முடியாத நிலைமையும், "காறித் துப்புகிற கட்சி" என்று விகாரமாகப் பொருள்பண்ணிக்கொள்கின்ற நிலைமையும் கூட ஏற்படக்கூடும். 9-30 க.ம.

கனம் சபாநாயகர்: நீங்கள் சொன்ன பிறகுதான் இந்தப் பொருளையும்கூடத் தெரிந்துகொள்வார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர்: பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். . . .

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் திரு. மு. கருணாநிதி அவர்கள் இன்னும் தன் பேச்சை முடிக்கவில்லையே? இப்பொழுது தாங்கள் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பப்போகிறீர்கள்?

திரு. மு. கருணாநிதி: இப்படி சட்டசபை நடவடிக்கையில் பங்கு கொள்கிற கட்சியைப் பற்றி அவமரியாதையாகவோ, சட்ட சபையில் அக் கட்சிக்குள்ள பெயரை வெளியிடாமல் வேறு பெயரைக் கொண்டு இழிவுபடுத்துகிற வகையில் சபை நடவடிக்கைகள் பத்திரிகையில் தலைப்புக் கொடுத்து வெளியிடுவதற்கு அனுமதித்தாலோ நாளை அந்த அந்தக் கட்சிப் பத்திரிகைகள் மற்ற மாற்றுக் கட்சிகளைப் பற்றி இப்படி வெளியிடும் அநாகரீகம் வளர்வதற்கு இடமுண்டாகிவிடும். இந்த நிலைமை வளராமல் இருப்பதற்கு சட்டசபைக்குள் இயங்குகின்ற ஒரு உறுப்பினரது கட்சியின் பெயரை மாற்றி வெளியிட நாங்கள் அனுமதிக்கக் கூடாது. ஆகவே இதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் தலைவர் அவர்களே, சட்டசபையைப் பற்றி அவமரியாதையாகவோ அல்லது குறிப்பாக ஒரு அங்கத்தினரைப் பற்றி அவமரியாதையாகவோ வெளியிட்டால் பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வரலாம். அது உரிமைப் பிரச்னையாகவும் ஆகும் இன்னும் அதில் உபயோகிக்கக் கூடிய வார்த்தை மரியாதைக் குறைவானதாக, பார்லிமெண்டரி நடவடிக்கைக்கு உகந்ததாக இல்லாமலோ.

[Sri R. Venkataraman] [11th March 1963

Societies in the State. During the Pongal season the Government permitted the sanction of special additional rebate of 5 nP. in the rupee on retail sales of handloom cloth by Weaver's Co-operative Societies and Consumers' Co-operatives for eight days in January 1963, to enable the societies to clear off their accumulated stocks which were worth Rs. 3 crores. Even though the sales during the Pongal season have been satisfactory, the stocks of the cloth remaining at the end of the period are still larger than usual on account of certain extraordinary developments during this year viz., 1962–63. On account of the National Emergency, the off-take of goods from this State in Upper India came to a virtual standstill. The credit contraction effected by the Banks also had its effect on marketing. The usual Handloom week celebrations which were an opportunity to dispose of stocks also were not celebrated this year owing to the National Emergency. All these factors had cumulatively contributed to the Weavers' Co-operative Societies holding stocks worth about Rs. 364 lakhs. While the holding capacity of the societies is normally two months, at present the Co-operatives are nearly having four months' stocks. This position is further aggravated by the fact that the stocks are held at the end of the peak sales season with no immediate prospects of the clearance of the goods in the coming few months.

The accumulation of stocks has caused considerable concern to the Madras State Handloom Weavers' Co-operative Society and difficulties to the primaries affecting production and contracting employment opportunities and straining the resources of the societies. This Government were naturally anxious to remedy this situation effectively and quickly. At our instance, Government of India also concurred that the following measures be implemented immediately :—

(1) Sanction of special additional rebates of 5 nP. in the rupee on retail sales and 3 nP. in the rupee on wholesale sales of handloom cloth by Weavers' and Consumers' Co-operatives. The special rebates are to be given in addition to ordinary rebates of 5 nP. on retail sales and 3 nP. on wholesale sales.

(2) Conducting a sales promotion campaign for handloom fabrics for a period of 15 days to start with, with a prospect of extension of another fortnight. Efforts to be made for giving wide publicity in organising increased sales of handloom cloth in the city and in the districts avoiding all ostentations and extravagant expenditure.

This Government have also accordingly in G.O. Ms. No. 1198, Industries, Labour and Co-operation, dated 27th February 1963 issued orders. The Sales Promotion Campaign will commence from 1st March 1963.

Besides, the Government have also addressed the Reserve Bank to enhance the credit limit made available by it to the State Society for marketing of handloom cloth from Rs. 70 lakhs to Rs. 100 lakhs at least for a period of one year to enable the State Society to intensify procurement campaign of stocks.



11th March 1963] [Sri R. Venkataraman]

Thus, this Government have already taken effective steps to enable the societies to liquidate their stocks quickly. The Sales Promotion Campaign will also have its impact on the production and sale of handloom goods by Weavers outside the Co-operative fold.

MR. SPEAKER : According to the rules, no point of information can be raised on the statement made by a Minister in response to a calling attention notice under Rule 41.

Now, let us pass on to the next item in the agenda.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1962-63—cont.

(1) DEMAND NO. XVI—AGRICULTURE.

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,27,39,000 under Demand No. XVI—Agriculture".

SRI K. S. MANI : Sir, I move—

"That the allotment of Rs. 6,27,39,000 under Demand No. XVI—Agriculture be reduced by Rs. 100".

(2) DEMAND NO. XVIII—ANIMAL HUSBANDRY.

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,78,54,400 under Demand No. XVIII—Animal Husbandry".

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move—

"That the allotment of Rs. 1,78,54,400 under Demand No. XVIII—Animal Husbandry be reduced by Rs. 100".

(3) DEMAND NO. XXXIX—CAPITAL OUTLAY ON AGRICULTURE.

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,75,000 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture".

SRI M. KAMALANATHAN : Sir, I move—

"That the allotment of Rs. 8,75,000 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture be reduced by Rs. 100".

[திரு. ஆர். வெங்கட்டராமன் ] [11th March 1963

இருந்தால் உரிமைப் பிரச்னை எழலாம். ஆனால் சம்பந்தப்பட்ட இவ் விஷயத்தில் கண்மூடிக் கேள்விகள் என்று குறிப்பிட்டிருப்பது சட்டசபை பார்லிமெண்டரி வார்த்தைகளுக்கு மாறுபட்டது அல்ல. 'ப்ளைண்ட்லி' என்று சொல்கிற ஆங்கில வார்த்தையின் நேர்மொழி பெயர்ப்புதான் என்று கருதுகிறேன். ஆகவே அந்த வார்த்தை தவறானது என்று உரிமைப் பிரச்னை எழுப்ப முடியாது.

இன்னும் அந்தக் கட்சியைப் பற்றி வேறு பெயர் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். ஒரு கட்சியைப் பற்றி பத்திரிகையில் வேறுவிதமாக குறிப்பிட்டிருப்பது சட்டசபையின் தரத்தைப் பாதிப்பதாக நான் கருத வில்லை. ஆகவே இவ்வுரிமைப் பிரச்னையில் "பிரைம பஸி கேஸ்" கூட எழவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் இன்றையதினம் பொறுப்பு வாய்ந்த எதிர்க் கட்சியாக சட்டமன்றத்தில் இருந்து பணியாற்றி வருகிறது. அந்தக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு கனம் அமைச்சர் அவர்கள் விடை அளித்தார்கள். அந்தக் கட்சியினர் சட்டசபையில் கேட்ட கேள்வியை யும், அதற்கு அமைச்சர் கொடுத்த பதிலையும் தருகின்றபோது, அதற்குத் தலைப்பிடுகின்ற முறையில் " அசெம்பிளியில் க. து.-க்களின் கண்மூடிக் கேள்விகள் " என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். இந்தக் கட்சி வெளியில் கலந்து கொள்கிற நடவடிக்கைகள் பற்றி எந்த வகையில் எந்தப் பெயர் கொடுத்து எழுதினாலும் வேறு நிலை. இழித்தும் பழித்தும்கூட எழுதலாம். அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் சட்டசபை நடவடிக்கையில் பங்குகொள்கிறபோது, அதுவும் குறிப்பாகத் தி. மு. கழகம் என்ற ஒரு பெயரில் பிரதான எதிர்க் கட்சியாகப் பணி யாற்றிக் கொண்டிருக்கிறபோது, சட்டசபையில் நடந்த நிகழ்ச்சியை வெயிடுகிறபோது, அந்தக் கட்சியின் பெயரை மாற்றியும், திரித்தும் இழிவுப்படுத்தக்கூடிய வகையில் குறிப்பிடுவது, இந்த மன்றத்தின் பொது நாகரீகத்தை சிறிது குறைத்து மதிக்கப்படுவதாகும் என்றே கருதுகிறேன். இப்படிப்பட்ட வகையில் சட்டசபையில் இயங்குகின்ற ஒரு கட்சியானது சட்டசபையில் கலந்துகொள்கிற நடவடிக்கையைப் பிரசுரிக்கும்போது, ஒரு பத்திரிகை அச் செய்தியை இழிவாக வெளியிடுவதானது அரசியல் நாக ரீகத்தை நல்ல முறையில் நிலைநாட்ட வழி செய்வதாக அமையாது. அதற்காக உரியவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று சொல்லாவிட்டாலும் அம்மாதிரி வெளியிடுவது தவறு என்று எச்சரிக்கிற அளவிலாவது, அறிவுரை கூறுகிற அளவிலாவது இதை உரிமைப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு தலைவர் அவர்கள் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** நீங்கள் கேட்ட கேள்வி, அதற்கு அமைச்சர் கொடுத்த பதில் இவற்றில் ஏதாவது மாறுதல் செய்யப்பட்டிருக்கிறதா ?

"கடந்த ஆண்டில் சர்க்கார் பஸ் துறையில் ரூ. 5 லட்சத்துக்கு மேல் நஷ்டம் காண்பிக்கப்பட்டிருக்கிறது" என்று க. து. உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி கேட்டதற்கு சட்டென அமைச்சர் ஆர். வெங்கட்ட ராமன் அவர்கள் "சென்ற வருஷம் நஷ்டமே கிடையாது. உறுப்பினருக்கு இந்தப்புள்ளி விவரம் எங்கிருந்து கிடைத்ததோ என அறைந்தார்" என்று பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இது தவறான செய்தியா ?

Sri K. A. MATHIALAGAN : Sir, it definitely casts an aspersion and it is an incorrect version.

Mr. SPEAKER : How is the report incorrect?

Sri K. A. MATHIALAGAN : It is incorrect in many places

Sri V. KRISHNAMOORTHY : rose . . .

Mr. SPEAKER : I am not going to allow the hon. Member.



11th March 1963]

Sri K. A. MATHIALAGAN : Sir, I have got a copy of the '*Viduthalai*'.

Mr. SPEAKER : I have also got a copy of the '*Viduthalai*' which the hon. member has given me. But I want to know how it is incorrect.

Sri V. KRISHNAMOORTHY : Mr. Speaker, with your kind permission . . .

Mr. SPEAKER : No. permission is granted. If the hon. Member (Sri V. Krishnamoorthy) gets up again. I will be very serious. Now, the point is, is there anything incorrect in the report?

Sri K. A. MATHIALAGAN : Yes. Sir. In the main question . . .

Mr. SPEAKER : What is the main question?

Sri K. A. MATHIALAGAN : Sir, the main question is—

சர்க்கார் பஸ் போக்குவரத்துத் துறையில் நஷ்டம் எனக் காட்டப் பட்டிருப்பது குறித்து . . . .

Moreover, they have put in the front portion 'அசெம்பிளியில் க. து. க்களின் கண்மூடிக் கேள்விகள்'

Mr. SPEAKER : I could see it. Is there anything wrong or distorted in the supplementary question and the answer given?

Sri K. A. MATHIALAGAN : But, the general effect that has been created . . .

Mr. SPEAKER : The hon. Member says that nothing has been omitted in the supplementary question and answer . .

Sri K. A. MATHIALAGAN : If it is separately taken . . .

Mr. SPEAKER : If it is not put along with that . . .

Sri K. A. MATHIALAGAN : Yes, I am not objecting to that . . .

Mr. SPEAKER : I shall give my ruling tomorrow.

## III.—CALLING ATTENTION TO PLIGHT OF HANDLOOM WEAVERS.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் பெரும் அளவில் தேங்கிக் கிடப்பதால், இம் மாநிலத்தில் உள்ள பல்வேறு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நெசவாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை நான் கனம் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

* The Hon. Sri R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement :—

A representation was received from the Madras State Handloom Weavers' Co-operative Society that there were heavy accumulations of handloom cloth with the Weavers' Co-operative

[11th March 1963

(4) DEMAND NO. XLVI—CAPITAL OUTLAY ON SCHEMES OF GOVERNMENT TRADING.

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

That the Government be granted a sum not exceeding Rs. 6,78,82,100 under Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading ".

SRI SAW. GANESAN : Sir, I move—

" That the allotment of Rs. 6,78,82,100 under Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading be reduced by Rs. 100 ".

MR. SPEAKER : The Demands and the Cut Motions are before the House for discussion.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்னுரையாக நிகழ்த்த வேண்டிய சொற்பொழிவினை அச்சடித்துக் கனம் அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக, கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளைப் பார்க்கும்போது, அரசாங்கத்தின் விவசாய இலாகா பாலிசி, கால்நடை வளர்ச்சித் திட்ட பாலிசி சம்பந்தமானதாகத்தான் இருக்கின்றன. அதைப் பற்றி மட்டும் முதலிலே முன்னுரையாகச் சொல்ல விரும்புகிறேன்.

வேளாண்மை பற்றிய பல்வேறு பிரச்னைகளைப் பற்றிப் பயிலுதலும், புதிய வழிமுறைகளைப் புகுத்துதலும், தற்போது நடைமுறையிலுள்ள வேளாண்மை முறைகளில் முன்னேற்றம் காணுதலும், அதன் மூலம் தேவையான தானிய உற்பத்தியைப் பெருக்குவதுடன், தொழிலுக்கு வேண்டிய கச்சாப் பொருட்களை உற்பத்தி செய்வதும்தான் இந்த இலாகாவினுடைய வேலைத் திட்டமாகும். இந்த இலாகாவில் பொதுவாகச் செய்ய வேண்டிய பணிகள்—

1. தரமான விதைகளையும், செடிகளையும் விநியோகித்தல் ;

2. பயிர்களுக்கும், நிலத்திற்கும் தக்க உர வகைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லுதல் ;

3. பயிர்கட்கு ஏற்படக்கூடிய பூச்சி அரிப்புக்களையும், நோய்களையும் தவிர்த்தல் ;

4. தேவையான நவீன விவசாயக் கருவிகளை விநியோகித்தல் ;

5. தாவர சம்பந்தமான நல்ல முறைகளைப் புகுத்துதலும், தக்க நீர்ப் பாசன வசதிகள் செய்து தருதல் ;

6. மண்வளப் பாதுகாப்பு ;

7. உணவு தானியப் பயிர்கள்—பிரத்தியேகமான தோட்டப் பயிர்கள் பயிரிடல் ;

8. திருந்திய மார்க்கட்டிங் முறைகளை அனுசரித்தல்.

பல்வேறு பிரச்னைகளைப் பற்றிய பரிசீலனைகள் கோவையிலுள்ள விவசாயக் கல்லூரியிலுள்ள ஆராய்ச்சி நிலையத்திலும், மற்றும் மாநிலத்தில் இதர இடங்களிலுள்ள பல ஆராய்ச்சி நிலையங்களிலும் நடந்து வருகின்றன. மற்றைய, விரிவு படுத்தல், விநியோகம் செய்தல் முதலிய திட்டங்கள் இலாகாவினாலேயே பஞ்சாயத்து யூனியன்களின் உதவியோடும் ஒத்துழைப்போடும் நிறைவேற்றப்படுகின்றன.

கால்நடை வளர்ப்புத் துறையைப் பொறுத்த வரையில் கடந்த சில ஆண்டுகளாக, பணிகள் வெகுவாக அதிகரித்துள்ளன. தமிழ் நாட்டிலுள்ள கால்நடைகளைக் கொண்டு நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்கவும், வேலை வாங்கவும் எல்லா வகைகளிலும் அவைகளை அபிவிருத்தி செய்து, அவற்றிற்கு வரும் தொத்து வியாதிகளையும், மற்ற வியாதிகளையும்



11th March 1968] [திரு. பூ. கக்கன்]

கட்டுப்படுத்துவதுதான் இத்துறையினரின் நோக்கமாகும். நல்ல கன்றுகளை உற்பத்தி செய்வதற்குக் கேந்திர கிராமத் திட்டமும், அதனையொட்டி செயற்கை இன வளர்ச்சி நிலையங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை இந்த இரு துறைகளின் பணிகளைப் பற்றிய விளக்கங்கள் கனம் அங்கததினர்களுக்குப் புத்தக வடிவில் அச்சிட்டு வழங்கப்பட்டிருக்கின்றன. கனம் அங்கத்தினர்கள் பேசும்போது அவைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருத்துக்களை மனத்தில் கொண்டு, தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Now, I wish to tell the House that in the list that is given to me, there are the names of 30 hon. Members who wish to take part in the discussion on these Demands. That number includes the hon. Leader of the Opposition and also the Hon. Minister. I will, therefore, be constrained to allot only 5 minutes to each hon. Member. I wish to make this clear even in the first instance so that the hon. Members may not mistake me or get angry with me later.

**திரு. மு. கருணாநிதி:** திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு என்று இவ்வளவு நேரம் என்று ஒதுக்கி விடுங்கள். நாங்கள் பிரித்துக் கொள்ளுகிறோம்.

MR. SPEAKER : If that is done, the hon. Members belonging to the Dravida Munnetra Kazhagam will get just one-fourth of the time allotted for the discussion of these Demands. Thus, in actual practice, it will be a loss to them. As a matter of fact, more time is allotted to them and more number of Members belonging to that party are being called by me.

**திரு. கோ. சி. மணி :** மாமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வேளாண்மைத் துறையினுடைய ஆண்டு அறிக்கையையும், வேளாண்மை, மூலதனச் செலவு போன்ற,—பதினாறு, முப்பத்தொன்பது ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளையும் நம்முடைய கனம் விவசாய அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன்பேரில் தரப்பட்ட வெட்டுப் பிரேரணையின் பேரில் சிலபல கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, இந்த ஆண்டு கனம் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய பேச்சுக்களில் எந்த விதமான புதுமையோ, விவசாயத்திற்குப் புதிய சீர்திருத்தத்தையோ, பாதுகாப்பையோ குறிப்பிடுகிற அளவுக்கோ இல்லை என்பதைப் பார்க்கிறபோது, உள்ளபடியே சென்ற ஆண்டைப் போல் இந்த ஆண்டும்—பழமொழி சொல்வதைப்போல்— புதிய மொந்தையில் பழைய கள் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

ஏற்கனவே தரப்பட்டிருக்கிற புள்ளி விவரம் போதும் என்ற நிலைதான் இந்த உரையில் அமையப் பெற்றிருக்கிறது. இதற்காக அனுமதி கேட்கப்பட்டிருக்கிற தொகை 16-வது மான்யத்தின் கீழ் ரூபாய் 6,27,39,000, 39-வது மான்யத்தின் கீழ் கேட்கப்பட்டிருக்கிற தொகை ரூபாய் 8,75,000. தொகை ஓரளவிற்கு அதிகப்படுத்தப் பட்டிருந்தாலும் அதில் பாராட்டப்படவேண்டியது சாமர்த்தியமாக, திறமையாக நாகரீகமாக தலைப்புக்கள் தரப்பட்டிருக்கின்றன, ஏறத்தாழ 23 தலைப்புக்கள், நான்கு மாற்று வேலைத் திட்டங்கள் என்ற தலைப்புக்கள் இதில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இத்தலைப்புக்களைப் பார்க்கும்போது இவைகளை செவ்வனே செயல் படுத்தி விட்டால் இந்த ஆண்டிற்குள்ளேயே நாம் நினைத்திருக்கும் சீர்திருத்தங்களை நிச்சயமாக பெற்றுவிட முடியும் என்ற அவா தூண்டி விடப்படுகிறதே தவிர ஒவ்வொரு ஆண்டும் இத்தகைய தலைப்புக்களின் கீழ் தொகை ஒதுக்கப்பட்டு அதற்காகவுள்ள செலவினங்களும் காட்டப்பட்டு அதற்கான புள்ளி

[திரு. கோ. சி. மணி] [11th March 1963

விவரங்கள் சேகரிக்கப்படு தரப்படுவது உண்மையாக இருந்தால் இந்த மன்றத்தில் கொடுக்கப்படுகிற வெட்டுப் பிரேரணைகளுக்கே வேலை இராது. சுருக்கமாகச் சொன்னால் இங்கு தரப்பட்டிருக்கிற புள்ளி விவரங்கள் ஏட்டிற்கு பெருமை அளிக்கக் கூடியதாக இருக்கிறதே தவிர இந்த நாட்டிற்கு அது உண்மையாக இல்லை என்பதைத்தான் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக 1956-57-ம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கையில் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் அதற்கான விவரங்களைச் சேகரித்து அதை எப்படி எப்படி மாற்றியமைப்பது, எப்படி எப்படிச் சீர்திருத்துவது என்பதற்காக அமைக்கப்பட்ட குழுவிற்கு திருப்திகரமான பதிலை இந்த அரசாங்கம் இதுவரையில் சமர்ப்பித்திருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. குறிப்பாக 1956-57-ல் வெளியிட்ட அறிக்கையில் ஒரு விவசாயின் ஆண்டு வருமானம் 1951-ல் 447 ரூபாய் ஆக இருந்திருக்கிறது. அதே விவசாயின் வருமானம் 1957-ல் 437 ஆகக் குறைந்திருக்கிறது, கிட்டதட்ட ஐந்தாறு ஆண்டு காலத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தின் வருமானம் 10 ரூபாய் குறைந்திருக்கிறது. ஆக முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒரு விவசாயிக் குடும்பத்தின் வருவாய் ஏறத்தாழ 2 சதம் குறைந்திருக்கிறது. தரப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உணவு உற்பத்தி 38 லட்சத்திலிருந்து 44 லட்சமாக உயர்த்திக் காட்டப்பட்டிருக்கிறது.

புள்ளிவிவரப்படி ஆறு லட்சம் டன் அளவிற்கு தான்ய உற்பத்தி அதிகமாயிருக்கிறது என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. விளைபொருள்கள் உயர்ந்தும், அதன் உற்பத்தி அளவு உயர்ந்தும் இந்த ஐந்தாண்டுகளில் ஒரு விவசாயக் குடும்பத்தின் வருமானம் பத்து ரூபாய் குறைந்திருக்கிறது. செலவினத்தை எடுத்துக்கொண்டால் 56-57ல் 461 ரூபாய் இருந்தால்தான் சிக்கனமாக ஒரு விவசாயக் குடும்பத்தை நடத்தமுடியும் என்று அந்த அறிக்கையிலேயே சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. ஆக செலவு 461 ரூபாயாகிறது. ஆனால் அவனுக்குக் கிடைக்கக் கூடிய வருவாயோ 437 ரூபாய்தான். ஆக மிகுதித் தொகையை யார் கொடுப்பது ? எப்படிக் கொடுப்பது ? அவர்களை எப்படி வளர விடுவது ? இதுபற்றி பரிசீலனை செய்யப் பட்டிருந்தாலும் அதற்கு அரசாங்கம் பரிகாரம் தேடாமல் இருக்கிறது என்ற குற்றச்சாட்டை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்த துண்டு விழுகிற தொகையை யார் கொடுப்பார்கள்? அதைச் சரிக்கட்டிக் கொடுக்க இந்த நாட்டில் அவர்களுக்கு யாரும் இல்லை. அப்படிக் கொடுத்தாலும் அது கடனாகத்தான் கொடுக்கப்படுகிறது. அல்லது அந்த விவசாய மக்கள் மார்வாடிகளிடம் கடன் பட்டிருக்கலாம் அல்லது கூட்டுறவு சங்கத்தில் கடன் பட்டிருக்கலாம், அல்லது தனிப் பட்டவர்களிடம் கடன் பட்டிருக்கலாம், அல்லது நிலச் சொந்தக்காரர்களிடம் கடன் பட்டிருக்கலாம். ஆக அவர்களின் கடன் தொகை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டிருக்கிறதே தவிர அவர்கள் முன்னேற வாய்ப்பில்லை. ஆனால் 1960-ல் இந்த நிலை மாற்றப்பட்டிருக்கலாமே, ஏன் 1957-ம் ஆண்டின் கதையைச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டால் 1960ம் ஆண்டு அறிக்கைப் படி ஒரு குடும்பச் செலவிற்குத் தேவைப்படுவது 618 ரூபாய், என்று அந்த அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக 1951-ல் இருந்து 1957 வரை ஒரு குடும்பத்தின் செலவு அதிகச் செலவு 157 ரூபாயாகிறது. ஆக எத்தனை திட்டங்கள் போட்டும் அவர்களின் செலவு ஏறிக்கொண்டு தான் இருக்கிறது. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு இப்போது மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் மூன்றாவது ஆண்டின் துவக்கத்தில் இருக்கிறோம். இனியும் அந்த விவசாயிகளின் நிலை சரிக்கட்ட முடியாத நிலையில் தான் நாம் இருக்கிறோம். ஆனால் அபிவிருத்தி என்ற தலைப்பின் கீழ் தரப்பட்டிருக்கிற புள்ளவிவரத்தைப் பார்த்தால் முதல் திட்டத்தில் 38 லட்சத்தில் இருந்து 44 லட்சம் அளவிற்கு உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இரண்டாவது திட்டத்தில் 53 லட்சத்திலிருந்து 69·5 லட்சம் டன் அளவிற்கு விளைவு உயர்த்திக் காட்டப்பட்டிருக்கிறது. 61-62ல் கூடுதலாக உற்பத்தியாகியிருப்பது 2.27 லட்சம் டன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 62-63ல் எதிர்பார்ப்பது 2.75 லட்சம் டன் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. எதிர்பார்க்கக் கூடியது அதிகமாக இருக்கிறதே தவிர நடைமுறையில் அது அதிகரித்திருப்பதாகக் காணவில்லை.



11th March 1963] [திரு. கோ. சி. மணி]

அந்த அளவிற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்குள் அதிகப்படியாக 17 லட்சம் டன் உற்பத்தியை செய்தே தீர வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் வெளியிலும் இம்மன்றத்திலும் கூறுகிறார்கள். ஆனால் இந்த 17 லட்சம் டன் உற்பத்தியை எப்படி, எங்கிருந்து யார் செய்து கொடுக்க முடியும் ? நிலத்தில் என்ன உரம் போட்டாலும் என்ன ஆழத்தில் உழுதாலும் என்ன தான் பாடுபட்டாலும் எவ்வளவுதான் விளைய முடியும் ? பத்திரிகையில் பார்த்தேன் சைனாக்காரன் நம்மை ஆக்கிரமித்திருக்கிறான், சைனா தேசம் 60 கோடி மக்களைக் கொண்டது, நம் நாடு 40 கோடி மக்களைக் கொண்டதுதான். ஆகவே அவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு நாம் 1½ ஆள் ஈடுகட்டித் தீர வேண்டும், ஆகவே நாம் 1½ மடங்கு உற்பத்தியை உயர்த்திக் காட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எந்த அடிப்படையில் இதை உயர்த்துவது ? நாம் உரம் கொடுக்கிறோம், கலப்பைகள் கொடுக்கிறோம், பல திட்டங்களுக்காகத் தொகை ஒதுக்கிறோம். ஆனால் உரத்தை எடுத்துக் கொள்வோம், இதை எடுத்துக் கொண்டால் கொடுக்கிற உரம் தேவைப்படுகிறவர்களுக்கு தேவைப்பட்ட சமயத்தில்போய் சேருகிறதா சேர வேண்டிய நிலத்திற்கு அது போய் சேருகிறதா என்ற புள்ளிவிவரம் நிச்சயமாக இந்த அவைக்குத் தெரியாது என்றே நான் கருதுகிறேன். அதற்குள்ள பட்டியல் காட்டப் படுகிறது. இது எப்படி இருக்கிறதென்றால் வீட்டுக்குள் இருந்து எழுதி ஏட்டளவில் கொடுக்கப்படுகிறதே தவிர நடைமுறையில் இருப்பது போல் இல்லை. அமைச்சர் அவர்கள் விவசாயப் பெருங்குடியைச் சார்ந்தவர்கள் தான். உள்ளபடியே அவர் ஒரு விவசாயிதான். அவரைப் பற்றி நான் இங்கு குறை கூறுகிறேன் என்று யாரும் கருத வேண்டாம். அவர்கள் தரக்கூடிய புள்ளிவிவரங்கள் புனிதமானதல்ல. ஆகவே அதை அப்படியே எடுத்துக் கொள்ளாது திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். உரக் குழிகள் வெட்டுகிறார்கள். உரம் சேகரிக்கிறார்கள் என்று ஏட்டளவில் சொல்கிறார்களே தவிர அது நடைமுறையில் இருக்கிறதா என்றால் இல்லை. இதையெல்லாம் அருள் கூர்ந்து சிந்தித்து பார்க்க வேண்டும். எனக்குத் தரப்பட்டிருக்கும் நேரம் குறைவு, அதை ஐந்து நிமிடங்கள் அதிகப்படுத்தித் தந்தால் இதுபற்றி அதிகமாகச் சொல்ல முடியும் என்று கூறி எனக்கு தெரிந்த கருத்துக்களை நான் சொல்ல 10-00 a.m. ஆசைப்படுகிறேன். விவசாயியின் வருமானம், செலவு பற்றிய புள்ளிவிவரத்தை நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பாக அளித்தார்கள். அதை ஏற்றுக் கொண்டால் கூட அவர்களுக்கு மிஞ்சுவது எவ்வளவு ? ஒரு ஏக்கர் விவசாயம் செய்ய ஆகும் செலவு ஏர் 12, ரூ. 36 வரப்பு வெட்ட நான்கு பேர்களுக்கு இரண்டு ரூபாய் வீதம் ரூ. 8, விதை கலம் 30 ரூபாய், நாற்று பிடுங்க ஆறு ஆட்களுக்கு ரூ. 12, நடவு ஆட்கள் 15 பேர்களுக்கு ரூ. 15, கதிர் அறுத்து அடிக்க ஆட்கள் 12, ஆளுக்கு 4 கலம் வைத்து ரூ. 35, ஆக 136 ரூபாயாகிறது. ஆகக் கூடுதல் 136 ரூபாய் ஒரு ஏக்கருக்கு விவசாயத்தைச் செய்ய மட்டும் செலவு ஆகிறது. அதைத் காக்க, பரிபாலிக்க ஆகக் கூடிய செலவை இதில் சேர்க்கவில்லை. நீர் இறைக்கும் கூலியை விட்டிருக்கிறேன். போரடிக்கும் செலவு இதில் சேர்க்கவில்லை, காவல் சம்பளத்தை நீக்கியிருக்கிறேன். கோவில் பூசாரிக்கும் தர வேண்டியதை நீக்கியிருக்கிறேன், ஆசாரிக்குத் தரவேண்டியதைச் சேர்க்கவில்லை, கொல்லருக்குத் தரவேண்டியதைச் சேர்க்கவில்லை. இதெல்லாம் கிராமத்தில் நடக்காமலிருக்குமா ? அவர்களுக்குக் கொடுக்கவேண்டியதை யெல்லாம் கொடுத்துத்தான் தீரவேண்டும். இதெல்லாம் ஆரம்பத்தில் ஏற்பட்ட கடன்கள், அறுவடை காலத்தில் காத்திருக்கின்றன. இவைகளை நீக்கியே சொல்லுகிறேன். 136 ரூபாய் தேவைப்படுகிறது ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய—மிகக் குறைந்த செலவு. வெளியில் போகின்றபோது அமைச்சர் அவர்கள் யாரையாவது கேட்டால்—ஆளும் கட்சிக்காரர்களில் யாரையாவது கேட்டால் கூட—சொல்லுவார்கள், இந்தச் செலவுக்குக் குறைந்து செய்ய முடியாது என்று. இப்படி 136 ரூபாய் செலவு செய்து, உரம் நீக்கி சாகுபடி செய்கிற வயலில் உயர்ந்த பட்ச கொள் முதல் 30 கலம்—உரமே போடாதது. உரத்தையே பார்க்காத நிலத்தில், 10 கலம் ஒரு மாவுக்கு என்றால் ஒரு ஏக்கருக்கு 30 கலம் உயர்ந்த பட்சக் கொள்முதல். உரமே இடாமல் யாரும் செய்ய முடியாது. ஏக்கருக்கு 30 கலம் என்று வைத்தால்

[திரு. கோ. சி. மணி] [11th March 1963

அதனுடைய விலை ரூ. 262-8-0. எக்கருக்கு 136 ரூபாய் செலவு செய்வதைக் கழித்துப் பார்த்தால் எவ்வளவு மிஞ்சும் என்பதை தயவு செய்து கவனித்துப் பார்க்க வேண்டும். இது ஒரு நிலச்சுவான்தாருடைய நிலை. குத்தகைக்குப் பெற்று இருக்கிறவர்களுடைய நிலையைப் பார்த்தால் 40 சதவீதம் நிலச்சுவான்தாருக்குக் கொடுத்து விடவேண்டும். 40 சதவீதத்தைக் கொடுத்துவிட்டு, 60 பெற்று செலவழிக்க வேண்டிய பூரா தொகையையும் இதிலிருந்து செலவு செய்து மிகுதியைத்தான் எடுத்துச் செல்லமுடியும். அந்த விவசாயிக்கு மேல்வாரம் நீக்கி 157 ரூபாய் 8 அணா கண்டு முதலிலே கிடைக்கிறது. ஏற்கெனவே செலவழித்த தொகை 136 ரூபாயைக் கழித்துவிட்டால் மிகுதி ஒரு எக்கருக்கு 21 ரூபாய் 8 அணா கிடைக்கிறது. இப்போது ஏற்படுத்தியிருக்கிற சட்டத்தின் பிரகாரம் ஒரு விவசாயி 5 எக்கருக்கு மேல் வைத்துக் கொள்ள கூடாது என்று செய்திருக்கிறோம். ஒரு எக்கருக்கு 21 ரூபாய் 8 அணா என்றால் 5 எக்கருக்கு 100 சொச்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. எல்லாவற்றையுமே பணமாகக் கொடுத்தால் முடியுமா, தன் உழைப்பு எங்கே போவது என்று நீங்கள் கேட்கலாம். தன் உழைப்பு மிஞ்சி, ஒரு தொழிலை நடத்துகிறவனுக்கு 21 ரூபாய் வருகிறது என்றால் இதனை நம்பி எத்தனை நாள் அவன் வாழ முடியும்? எப்படி அவன் அபிவிருத்தி செய்வதாகக் கருத முடியும்? உரம் போய்ச் சேரவில்லை என்று அன்றே குறிப்பிட்டேன். சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கை பற்றி விவாதித்துக் கொண்டிருந்த நேரத்தில், ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி, 40 ரூபாய் பெருமானமுள்ள மூட்டைகள் காலாகாலத்தில் போய்ச் சேராமல் அடுத்த வருஷம் வரையில் இருந்து வீணாகி விட்டன என்று குறிப்பிட்டேன். அப்படிக் குறிப்பட்டதற்கு அடுத்த ஆண்டு உரம் போய்ச் சேராமலேயே செலவு எழுதிருக்கிறார்கள்....

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் போன முறை இந்த மன்றத்தில் பேசுகிறபோது உர மூட்டை பற்றி குறை கூறினார்கள். உடனடியாக கலெக்டரிடத்தில் நாங்கள் விவரத்தை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டோம் அவர்களுடைய பதிலை, கனம் சபாநாயகருடைய அனுமதியுடன், இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்

'There was neither a huge stock of 40,000 tons accumulated nor had the stock become unfit for consumption as alleged by the hon. Member. Action has been taken to dispose of, during the current manurial season, even the little stock with the Koradacheri Society, that is, 1,894 tons as on 31st July 1962. The facts have been *prima facie* exaggerated'.

என்ற பதிலை கலெக்டர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

**திரு. கோ சி. மணி :** நான் இந்த மன்றத்தில் ஏற்கனவே குறிப்பிட்ட காலத்தில் உரம் செலவழிக்கப்படவில்லை, உரத்தை எடுத்துச் செலவழித்து விட்டதாகப் புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள், இத்தனை லட்சம் டன் உரத்தைச் செலவழித்து இத்தனை டன் உணவு உற்பத்தி செய்திருப்பதாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பது தான். அத்தனை டன் உரங்கள் இங்கே அனுப்பப்பட்டதாகக் கணக்கில் இருக்கிறதே தவிர, வயலில் போடவில்லை என்பதற்காகத்தான் குறிப்பிட்டேன்.

**கனம் திரு. பூ கக்கன் :** அத்தனையும் நஷ்டம் ஆகி விட்டதாக கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** நான் பேசும்போது விவசாய அமைச்சரிடத்தில் இந்த மன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.................

MR. SPEAKER : What is the point of the hon. Member?

**திரு. மு. கருணாநிதி :** உரத்தைப் பற்றித் தான்.

MR. SPEAKER : Is that a point of order?



11th March 1963]

**திரு. மு. கருணாநிதி :** நான் தான் அப்போது பேசினேன்.

MR. SPEAKER : This practice of automatically getting up and talking something is exactly what is objected to by various hon. Members. Is it not? So, I request hon. Memberc to rise on a point of order or a point of information or a point of clarification only with the permission of the Chair and they must respect the Chair. Otherwise, if one or two hon. Members get up at the same time, some confusion will be created and everything will be in a mess. So, I request hon. Members—I am not particularly mentioning any hon. Member—to get the permission of the Chair before raising their point. If the hon. Member, Sri Karunanithi wants, he can raise his point.

**திரு. மு. கருணாநிதி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் கொரடாச் சேரியில் வினியோகிக்கப் படாமல் ஏராளமான உரம் வீணாக்கப்பட்டது என்றும், ஒரு விடுதியில் ஒரு ஆண்டு காலத்திற்கு மேல் வைக்கப்பட்டு கரையானாலும், வெய்யிலாலும், மழையாலும் பாதிக்கப்பட்டு வீணாகிவிட்டது என்பதை அமைச்சர் அவர்களிடத்தில் நான் கூறினேன். அவரும் விசாரிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த விசாரணை தஞ்சை மாவட்ட கலெக்டருக்குச் செல்லுவதற்கு முன் கொரடாச்சேரி வட்டாரம் முழுவதிலும் ஒரு பரபரப்பை உண்டு பண்ணி, இரவோடு இரவாக அந்தச் சாக்குப் பைகள் அங்கிருந்து அகற்றப் பட்டு, வேறு உரங்கள் வைப்பதற்கு முயற்சிகள் நடைபெற்றது என்பதைத் தகவலாக அமைச்சருக்கு தருவதற்கு விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கலெக்டர் அவர்களே பார்த்து இந்த மாதிரி ரிப்போர்ட் சமர்பிக்கும்போது அதை நம்புவதா? அல்லது கனம் அங்கத்தினர் சொல்லுவதை நம்புவதா?

MR. SPEAKER : The hon. members time is over and he should finish his speech in two minutes. Already the hon. member has taken 20 minutes though I have allotted five minutes for each hon. member.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, அந்த உரம் நஷ்டம் ஆனது என்றால் வயலுக்குப் போய் அந்த நேரத்தில் சேராதது உள்ளபடியே நஷ்டம் என்றுதான் இந்த நேரத்தில் கூறுகிறேன். அந்த உரம் வயலிலே போய்ச் சேர்ந்திருந்தால் இப்போது சொன்ன புள்ளிவிவரத்தைக் கூட அதிகரித்துக் காட்டியிருக்கக் கூடும்—உணவு உற்பத்தி அதிகமாகி யிருக்கிற புள்ளி விவரத்தை, அந்த அடிப்படையில் தான் நான் குறிப் பிட்டேன்.

அடுத்து, விவசாய தினக் கூலித் தொழிலாளர்களுக்கு எனத் தனிச் சட்டம் தேவை. அது பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமலில் இருக்கும் பகுதிகளுக்கு அப்படி ஒரு சட்டம் இருந்தால் விஸ்தரிக் கப்படவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட தினக் கூலித் தொழிலாளர் சட்டத்தை இந்த அரசாங்கம் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமலில் இருக்கிற பகுதிகளில் விஸ்தரிக்கவில்லை. அதனால் கிராமப்புரங்களில் அமைச்சர் அவர்கள் ஒரு பகுதியில் குறிப்பிட்டிருக்கிறார்கள், தமிழகத்தில் ஏறத்தாழ 92,86,207 விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று. நம் நாட்டு மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் இந்த தினக் கூலி விவசாயத் தொழிலாளர்கள். இப்படிப்பட்ட, நான் குறிப்பிட்டிருக்கிற இந்த 92 லட்சத்து சொச்சம் பேர்களும் உள்ளபடியே நிர்ணயம் இல்லாத சம்பளத் தைப் பெற்றுத் தொழில் நடத்திக்கொண்டிருப்பவர்கள். தஞ்சை மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தை அமல் நடத்தியும் கூட அவர்களுக்கு பாதி நாள் வேலை கிடைப்பது என்பது அறிதாக இருக்கிறது. வேளாண்மையே 6 மாதத்திற்குள் முடிவுபெற்று விடுகிறது. 6 மாதத்திற்குள் பரபரப்பான முறையில் அவசர அவசரமாகச் செய்யவேண்டிய தொழில்

விவசாயம். 22 நாட்களுக்குள் குருவையை நட்டுவிடவேண்டும். நாற்றுவிட்டு 22-ம் நாளுக்குள் நட்டு விடவேண்டும். அதற்குள் பல சச்சரவுகள் கிராமங்களில் வந்து விடுகின்றன. விவசாயி கேட்கிற கூலி தராவிட்டால் வர மறுக்கிறான். கூலி அதிகமாகக் கேட்கிறான் என்ற காரணத்தினால் நிலச்சுவான்தார்கள் அவர்களைக் கூப்பிடாமல் மறுக்கிறார்கள். வெளியிலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து நடவு நடத்துகிறார்கள். சம்பந்தப்பட்ட போலீஸ் இலாகாவிடம் போய்ச் சொன்னால், நிலச்சுவான்தார்கள் 1 மரக்கால் கொடுக்கிறேன் என்று சொல்லலாம், விவசாயி 6 மரக்காலும் கூலி கேட்கலாம். 6 மரக்கால் கேட்பது தவறு என்று சொல்ல முடியாது. 1 மரக்கால் தருவேன் என்று சொல்லுவதும் தவறு என்று சொல்ல முடியாது. இரண்டு பேரும் அடித்துக்கொண்டு காயம் படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். காயம் பட்டால் எங்களிடம் வாருங்கள் என்று சொல்லுகிறார்கள். இதை யார் தீர்த்து வைப்பது? இதற்கு ஒரு நிர்ணயம் இருந்தால், இவ்வளவு கொடுக்கவேண்டும் என்று இருந்தால், சட்டத்தில் இவ்வளவு கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது ஆகையால் அதைக் கொடுக்கவேண்டும் என்று தீர்த்து வைப்பதற்காக வரக்கூடிய நியாயஸ்தர்களும் தீர்த்து வைப்பார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு என்ன குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று ஒரு குழுவை நியமித்து மாவட்ட வாரியாகப் பரிசீலனை செய்து, அறிக்கை தயாரித்து, இப்போது 3,500 சிற்றூர்களைச் சுற்றிப்பார்த்துத் தயாரித்தோம் என்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்—அதைப்போல எல்லா மாவட்டங்களுக்குச் சென்று விவசாயக் குடும்பங்கள், நடுத்தர வருமானமுள்ள குடும்பங்கள், நிலச்சுவான்தார்கள், விவசாயத் தொழிலாளர்கள், இவர்களுடைய சங்கப் பிரதிநிதிகள் அத்தனை பேர்களையும் அழைத்து வைத்துப் பேசி எவ்வளவு கூலி நிர்ணயிக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்து நிர்ணயம் செய்ய வேண்டும். பிறகு அந்த சட்டத்தை அமுல் நடத்த வேண்டும். முன்பு நிதி அமைச்சராக இருந்தவர் கூட ஒரு கேள்விக்கு இந்த சட்டமன்றத்தில் பதில் சொல்லும்பொழுது, பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமுலில் இருக்கிற பகுதிகளுக்கு இந்தச் சட்டத்தை விஸ்தரிக்காத காரணம், இதைவிட அதிகமான கூலியை அந்தப் பகுதிகளில் இருக்கிறவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். நான் இந்த மன்றத்திற்கு வராதபொழுது அவர் அப்படிச் சொன்னார் என்று பத்திரிகையில் பார்த்தேன். அம்மாதிரி இருக்கலாம். ஏன் அப்படிக் குறைந்த கூலியை ஒரு சட்டத்தில் நிர்ணயம் செய்யவேண்டும்? ஒரு பகுதியில் வாழ்கிறவர்களுக்கு முரணான கூலியை ஏன் சட்டத்தில் நிர்ணயம் செய்ய வேண்டும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** நடவு நடக்கிற காலத்தில், அறுவடைசெய்கின்ற காலத்தில் நிர்ணயம் செய்ததை விட கூலி ரொம்பவும் அதிகமாக இருக்கிறது. வேலையில்லாத காலத்தில் நிர்ணயம் செய்ததை விட கூலி குறைவாக இருக்கிறது. அதனால் தான் கூலி நிர்ணயத்தை அமுல் நடத்துவது கஷ்டமாக இருக்கிறது, பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமுலில் இருக்கும் பகுதிகளில் அதைவிட அதிகமாகக் கூலி கிடைக்கிறது என்ற எண்ணத்தில் தான் அங்கே இந்தச் சட்டத்தை அமுல் செய்யவில்லை.

**திரு. கோ. சி. மணி:** நான் தினக் கூலித் தொழிலாளர்களைக் குறிப்பிடுகிறேன். 92,86,000 தொழிலாளர்கள் நிச்சயம் பண்ணையாட்கள் அல்ல. நான் சொல்லுவது தினக்கூலி தனியாட்கள், அந்தக் கூலிகள் கண்டிஷனாக வேலைக்குவரவேண்டும் என்பதுமில்லை, கண்டிஷனாக வேலை கொடுக்கவேண்டுமென்பதில்லை. அவன் வருவான் போவான். அப்பேற்பட்டவர்களைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பண்ணையாட்களைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். பண்ணையாட்களை நீக்கிவிட்டு, தனியான ஒரு சாதாரண அந்தக் கூலிகளைப்பற்றி நான் பேசுகின்றேன். அவர்கள் பண்ணையாட்கள் அல்ல என்பதையும் நான் அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். தகராறு ஏற்படாமல் கூலியை நிர்ணயித்துவிட்டால் விவசாயம் சுமுகமாக நடக்கும், நாம் இயற்றியிருக்கும் துணைச் சட்டங்களும் நல்ல முறையில் அமுலாகும். உச்ச வரம்புச் சட்டம் நாம் எதிர்பார்த்த அளவிற்கு நல்ல



முறையில் அமலாகவில்லை. நாம் சட்டம் இயற்றினாலும், நடந்து கொண்டிருக்கிற நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்துக்கொண்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பரிகாரம் காண வேண்டும். அப்படி பரிகாரம் காணுவதற்கு ஒரு குழுவை நிச்சயம் அமைத்து, அதன் மூலம் விசாரணை நடத்தி ஒரு ரிப்போர்ட் வாங்கி, நடைமுறைக்குப் பொருந்தும்படியாக ஒரு சட்டத்தை இயற்றி, அமல் நடத்தித் தீரவேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*** திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியப் பிரேரேபணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கடந்த பல ஆண்டுகளாக விவசாயம் நமது நாட்டில் மற்ற தொழில்களைப் போன்று லாபம் தரத்தக்க தொழிலாகவும், அனைவரும் விரும்பும் தொழிலாகவும் விளங்குகிறது. அதன் காரணமாகத்தான் நிலங்களின் விலைகளும் அதிகமாக உயர்ந்திருக்கின்றன. அந்தத் தொழிலில் கணிசமான ஆதாயம் இருக்கிறது என்பது என்னுடைய அனுபவத்தில் பல இடங்களில் நிதர்சனமாகத் தெரிகிறது. விவசாயத் தொழிலாளர்களாக பாவிக்கப்பட்டு வரக்கூடிய 92 லட்சம் பேர்களில் அவர்கள் வீட்டிலுள்ள இன்று பிறந்த குழந்தைகள் உட்படத்தான் அந்தத் தொழிலாளர்களின் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறேன். அவர்கள் மாவட்டத்திற்கு மாவட்டம் வெவ்வேறு விதமாக தொழிலில் ஈடுபடக்கூடியவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஜில்லாவில் கூட்டாகச் சேர்ந்து 30, 40 பேர்களாகச் சேர்ந்து அறுவடை செய்கிறார்கள். அறுவடை நடந்துகொண்டிருந்தபொழுது நான் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்தேன். அங்கே 4 பேர்கள், 5 பேர்கள், 2 பேர்கள், 3 பேர்கள் சேர்ந்துகூட அறுவடை செய்துக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களை அழைத்து ஏன் கூட்டாக 40, 50 பேர்கள் சேர்ந்து அறுவடை செய்யக்கூடாது என்று கேட்டபொழுது, "கணவன் மனைவி, இன்னும் அவர்களைச் சேர்ந்தவர்கள் தொழில் புரிவதற்கு சக்தியுள்ளவர்களாகச் சேர்ந்து நன்றாக அறுவடை செய்தால், உழைப்புக்குத் தகுந்தபடி தனியாக அதிகமான கூலியை பெறமுடியும், நாங்கள் எவ்வளவு அறுவடை செய்கிறோமோ அதற்கான கூலியை நெல் கண்டு முதலிலிருந்து கூலியாகப் பெறுகிறோம், ஆகையினால் எல்லோருமாகச் சேர்ந்து அறுவடை செய்வதில்லை" என்று சொன்னார்கள். என்னுடைய ஜில்லாவில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் உடல் வலிவு உள்ளவர்கள், இல்லாதவர்கள் அத்தனை பேர்களும் சேர்ந்து அறுவடை செய்து, அத்தனை பேர்களுக்கும் நபர் வாரியாக வரக்கூடிய கூலியை சராசரியாக பகிர்ந்து கொள்கிறார்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரை அவரவர்கள் உழைப்புக்குத் தகுந்த மாதிரி அவரவர்கள் கூலி பெறுகிறார்கள். இது பல்வேறு விதங்களில் இருந்துக்கொண்டிருக்கின்றன.

விவசாயத் துறையிலே உர வினியோகம் சம்பந்தப்பட்டமட்டில், சமீப காலத்தில் நான் எல்லா ஜில்லாக்களையும் சுற்றிவர அவசியம் நேர்ந்தது. அப்பொழுது பல இடங்களிலுமுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்களில் இந்த வருஷம் எப்படி உர வினியோகம் நடைபெற்றது என்பதை பரவலாக விசாரித்து அறிந்திருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜில்லா கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைடிகளில் 100, 200 டன் உரம் இப்பொழுது இருப்பில் இருந்துக்கொண்டிருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு வரக்கூடிய உரத்தை எடுத்து வைத்துக்கொள்வதற்கு அவர்களுடைய நிதிநிலை போதியதாக இல்லை. அவர்களுக்கு எவ்வளவு பங்குத் தொகை இருக்கிறதோ, எவ்வளவு ரிசர்வ் நிதி இருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி தான் பாங்குகளில் கடன் பெற முடிகிறது. டிபார்ட்மெண்ட் அனுப்பக்கூடிய எல்லா உரத்தையும் எடுத்துவைத்துக்கொள்ளும் சக்தியை இன்னும் ஒவ்வொரு ஜில்லா மார்க்கெடிங் சொஸைடியும் அடையவில்லை என்ற நிலையில் இருந்துக்கொண்டிருக்கிறது. தாலூகா மார்க்கெடிங் சொஸைடிகளும், மற்ற கூட்டுறவு ஸ்தாபனங்களும் நிதிநிலைமை சரிவர இல்லாததன் காரணமாக பூரா ஸ்டாக்கையும் எடுத்து வைக்க முடியாத நிலை ஏற்படு

கிறது. அதற்கு அரசாங்கம் ஏதாவது ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, உர விநியோகம் சம்பந்தப்பட்ட மட்டில் ரசாயன உரம் வேண்டிய அளவுக்கு மேல் எல்லா இடங்களுக்கும் சரியாக பரவலாக விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்பதை பல இடங்களுக்கும் சென்றிருந்த நான் அறிவேன். ஒரு சில இடங்களில் பருவ காலத்தில் உரம் வந்து சேரவில்லை. சில இடங்களில்தான் அவ்வாறு சொல்லப்பட்டது என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ராஜ்யத்தில் உரம் சம்பந்தப்பட்டமட்டில் கலப்பு உரம் தயாரிப்பதற்கு சிலருக்கு லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு ஸ்தாபனங்களில் சில ஸ்தாபனங்களுக்கு கலப்பு உரம் தயாரிப்பதற்கான லைசென்ஸுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1963–64–ல் இன்னும் அதிகமாக கோட்டா கொடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு இருப்பதாக நான் அறிகிறேன். 1963–64–ம் ஆண்டில் கலப்பு உரம் தயாரிப்பதற்கு அவர்கள் அதிகப்படியான கோட்டா கேட்பார்களா என்று நான் ஐயுறுகிறேன். காரணம், அமோனியம் சல்பேட் போன்ற நேரடியாக போடக்கூடிய அத்தகைய உரங்கள் வேண்டிய அளவு கிடைத்திருக்கிறது. கலப்பு உரம் தயாரிப்பதற்கு அவசியம் இல்லாத நிலை வந்துவிடுமோ என்று கூட அஞ்சுகிறேன். இந்த உரம் கிடைக்கவில்லை என்றால்தான் கலப்பு உரம் தயாரிப்பதற்கு அவசியம் ஏற்படுகிறது, ஆகவே, கலப்பு உரம் தயாரிப்பதற்குக் கோட்டாவை அதிகரிக்கவேண்டுமா என்பதுபற்றி யோசிக்க வேண்டும். கலப்பு உரம் தயாரிப்பவர்கள் இடத்திலே நைட்ரேட் போன்ற சில ரசாயன உரங்கள் இருக்கின்றன. உடனடியாக கலப்பு உரம் தயாரிக்கப்படவேண்டும். அதை ஸ்டாக்கில் வைத்துக்கொள்ள முடியாது. ஆகவே, அவர்கள் அதை நேரடியாக விற்பதற்கு அனுமதி கேட்டால், கலப்பு உரத்தை விநியோகிப்பதை விட இந்த உரத்தை விவசாயிகளுக்கோ, மற்றவர்களுக்கோ நேரடியாக விநியோகிப்பதற்கு அனுமதி கேட்டால், அரசாங்கம் தடையின்றி அதற்கு அனுமதி கொடுப்பது பொருத்தமாக இருக்கும். இல்லாவிட்டால், அவர்களிடத்தில் இருக்கும் கால்சியம் நைட்ரேட் உரம் கட்டிதட்டிவிடும். ஆகவே அதை நேரடியாக விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் அவர்கள் விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்தால், இந்த சந்தர்ப்பத்தில் அனுமதி கொடுத்தால், அவர்கள் மேலும் ஸ்டாக்கை எடுத்து வைத்துகொள்வதற்கு அனுகூலமாயிருக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களிடம் இருக்கும் உரத்தை அந்தந்தப் பகுதியில் இருப்பவர்களுக்குத்தான் வழங்கவேண்டும், சில மகசூலுக்குத் தான் வழங்க வேண்டும் என்பதை அமல் நடத்தாமல் விதி விலக்கு அளித்து, யாருக்கு வேண்டுமானாலும் எந்த ஜில்லாவில் எந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கும் கொடுத்துக்கொள்ளலாம் என்ற விதி விலக்கை இந்த சந்தர்ப்பத்தில் தற்காலிகமாக கொடுப்பது அனுகூலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவ்வாறு கொடுத்தால், இருப்பதை விற்றுவிட்டு வந்திருக்கக்கூடிய உரத்தை அந்தந்த ஸ்தாபனம் ஸ்டாக்கில் எடுத்துக்கொள்வதற்கு அனுகூலமாக இருக்கும். பல்வேறு பயிர்களுக்கு இந்த உரம் கிடைக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு இது அனுகூலமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

டிராக்டர்கள் வாங்கும்பொழுது டிராக்டர்களைப் பெறுபவர்கள் நீண்டகாலக் கடனாக அரசாங்க உதவி பெறுவதினாலே அவர்களுடைய நிலங்களை அடமானம் வைத்துக் கொடுக்க வேண்டுமென்று இப்பொழுது கோரப்படுகிறது. அவ்வாறு அடமானம் வைத்துக் கொடுக்கும்பொழுது பத்திரங்கள் எழுதுவதற்கு ஆகும் கட்டணத்தை அரசாங்கம் குறைத்திருக்கிறது என்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் பெரிய விவசாயிகள், தொன்று தொட்டு நிலத்தை அடமானம் வைத்துப் பழக்கப்படாதவர்கள், இந்த டிராக்டர்களை வாங்குவதற்கு நிலத்தை அடமானம் வைக்க வேண்டியிருக்கிறதே என்று தயங்குகிறார்கள். ஏற்கெனவே கடைப்பிடித்து வந்த பழைய முறைப்படி அங்குள்ள ரெவென்யூ அதிகாரிகளே ஸால்வன்ஸி சர்டிபிகேட் கொடுத்தால் இந்த அடமானப் பத்திரம் இல்லாமலேயே கடன் கொடுத்து உதவி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



புதிய ஏரிகள், சிறிய அணைகளைக் கட்டுவதற்கான ஆரம்பப் பரிசீலனைகள் பல வருஷங்களாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. குறிப்பாக ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் தென்கரை, சுந்தரபாண்டியம், ஆகிய ஏரிகளை அமைப்பதற்கு பல ஆண்டுகளாக பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. தென்கரையின் விஸ்தீரணம் 500 ஏக்கர். அதே மாதிரி சுந்தரபாண்டியத்தின் விஸ்தீரணம் 500 ஏக்கர். பல வருஷங்களுக்கு முன்னதாகவே பரிசீலனைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டும் இன்னும் வேலையை தொடங்குவதற்கான நிலைமை ஏற்படவில்லை. ஆகவே, இவற்றை சீக்கிரம் பரிசீலனை செய்து, துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று, சின்னய்யன் கோட்டை அணை, கிளவன் கோவில் அல்லது பிளவைக்கல் அணை, இவை இரண்டும் பல வருஷங்களாக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அவற்றையும் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களிடத்தில் சிறிய ஏரிகளை மராமத்து செய்யும் வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்குப் போதிய வருமானம் இல்லாமல் அரசாங்கம் ஒரு ஏக்கருக்கு ரூ. 2½ வீதம் மான்யத் தொகை கொடுக்கிறது. இது பிரத்யட்ச அனுபவத்திற்கு ஒத்ததாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, சிறிய ஏரிகளின் மராமத்திற்காக வழங்கப்படுகிற மான்யத் தொகையை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் கடந்த பல ஆண்டுகளாக விவசாயிகளுக்கு பூச்சி மருந்துகள் தெளிப்பதற்கும், உரங்கள் போடுவதற்கும், நோயைத் தடுப்பதற்கும், பலதரப்பட்ட யோசனைகளையும், மருந்துகளையும் விவசாயிகளுக்கு அளித்திருந்தாலும்கூட, காலாகாலத்திலே பூச்சி மருந்துகளைத் தெளிக்கவோ, நோய்களைப் போக்கவோ, உரம் போடுவதற்கு பருவ காலத்தில் என்ன காரியங்களை செய்ய வேண்டுமென்று விவசாயத்துறை அதிகாரிகள் சொல்லுவதைக் கடைபிடிப்பதிலோ, காலாகாலத்தில் அவைகளைச் செயல்படுத்தி வரவேண்டிய திறமை இன்னும் விவசாயிகளிடத்தில் உருவாகவில்லை. இத்தகைய திட்டங்களை அரசாங்கம் கடைப்பிடிக்காமல் இருந்த காலத்தில் எப்படி அவர்களுடைய அலுவல்களிலே ஈடுபட்டார்களோ, அதே மனப்பான்மையைத்தான் இப்பொழுது புதிய அபிவிருத்தித் திட்டங்கள் அமல் நடத்தப்படுகின்ற இந்தக் காலத்திலேயும் பலர் செயல்பட்டு வருகிறார்கள். காலத்திற்கேற்ப அவைகளை எப்படி மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைத்து அவர்கள் புது முறைகளைக் கையாளும் திறமை பூரணமாக உருவாகிவிட்டது என்று சொல்ல முடியாது. தலைமுறை தலைமுறையாக விவசாயத்திலே ஈடுபட்டு வந்தவர்கள் அக்காலத்தில் எந்தெந்த முறைகளைக் கையாண்டு வந்தார்களோ, லாபம் தராத நிலைமையில் அழுது வழிந்து கொண்டு விவசாயத்தைச் செய்து வந்தார்களோ, அதே முறையில்தான் இப்பொழுதும் பலர் நடந்து கொள்கிறார்களே தவிர, புதிய முறைகளை ஏற்றுக்கொண்டு விவசாய வேலைகளைச் செய்ய முற்றிலும் தகுதியுள்ளவர்கள் ஆகிவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. திருந்திய விவசாய முறைகளில் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கு, தகுந்த பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு, விவசாயக் குடும்பத்திலுள்ளவர்களுக்கு விவசாய செய்நேர்த்தி முறைகளிலே பயிற்சி அளிப்பதற்கு 6 இடங்களிலே பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பித்திருப்பதை நான் வரவேற்கிறேன். அவசியமானால் இன்னும் அதிகமான பள்ளிகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது, தரமான வித்துக்களைப் பெருக்குவதற்காக, பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும், இந்த மூல வித்துக்களை குறிப்பிட்ட கிராம சகாயக்குகளுக்கு வழங்குகிறார்கள். அவர்கள் இந்த மூல வித்துக்களைப் பெற்றுச் செல்கிறார்களா என்பதை வேளாண்மை அதிகாரிகள் கவனிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாட்டை நான் வரவேற்கிறேன். அப்படி கிராம சகாயக் யாராவது மூல வித்துக்களைப் பெற்றுக்கொள்ளாமல் இருந்தால், விவசாயத் துறை அதிகாரி, உள்ளூர் பஞ்சாயத்தைக் கலந்துகொண்டு தரமான விதைகளைப் பெருக்குவதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. புதிய வகையில் இந்தப் பொறுப்பை

[திரு. கே. பார்த்தசாரதி] [11th March 1963

இல்லை. சில இடங்களில் இந்த ஆக்ட் அமலில் இல்லாத காரணத்தால் செஸ் விதிப்பதை தவிர்க்க விளைபொருளை அடுத்த மாவட்டத்திக்குக் கொண்டுபோய் விற்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அங்கு செஸ் இல்லாத காரணத்தால் அங்கு பொருள்களைக் கொண்டு போய் விற்பனை செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே இந்த ஆக்டை அமலுக்கு கொண்டு வரும்போது கூடுமான வரையில் எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே சமயத்தில் அமலுக்குக் கொண்டு வரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். கூடுமான வரையில் தமிழ் நாடு முழுவதிலும் இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எல்லா இடங்களிலே நெல்லை ஒரு பொருளாகச் சேர்த்து கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச்சேர்த்துக்கொண்டு இந்தச் சட்டத்தை தமிழ் நாடு பூராவுக்கும் அமலுக்குக் கொண்டுவந்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, on the Agriculture, Animal Husbandry and the two other Demands moved just now, I wish to say a few words.

Sir, the other day, the Hon. Minister for Finance was giving us certain figures regarding the income of the agriculturists and the cost of production, etc., per acre, in respect of some districts. My only request is that these figures may be compared with the cost of production, income, etc., in respect of the State Seed Farms run by the Government themselves. Let the Government find out the cost of production and the actual yield from those Seed Farms and see for themselves how they compared with the figures quoted by the Hon. the Minister for Finance on the floor of the House. I would like to take this opportunity to point out that the cost of cultivation has gone up very high and the agriculturists are not getting the expected yield from their lands. So, at this juncture, the agriculturists should be afforded adequate protection by way of price support or any other method. In my view, that is very essential at present.

The Government should also come forward to give relief to the agriculturists by introducing suitable crop insurance and cattle insurance schemes. I want to lay stress on this aspect as I am convinced that such schemes would go a long way in alleviating the suffering of the agriculturists who are mainly depending on agriculture for their livelihood. By bringing such legislation our State would be setting up an example for other States.

Regarding the supply of fertilisers, I find that the supply is very meagre. My only request in this regard is that whatever is supplied, let it be supplied in time. Let it not be supplied in the summer when there will not be any crop at all in fields. Whenever the agricultural operations start under seasonal conditions, fertilisers may be supplied immediately. For doing this, the Government should stock sufficient quantities of the fertilisers beforehand and should see that those fertilisers were supplied to the right persons at the right time. If this is not done, the agriculturists will be put to lot of difficulties. I understand that though thousands of tons of fertilisers had been allotted, they were not made available to the agriculturists just at the time of agricultural operations when they were mostly needed by them.



11th March 1963] [Sri C. Chiranjeevulu Naidu]

I request the Government to pay attention to this matter and take steps to see that the fertilizers were supplied to the agriculturists at the right time.

As for the supply of seeds, I think their supply through Grama Sahayaks is commendable. It will also in a way encourage the agriculturists to produce in an advanced method. The only difficulty is storage facility. The immediate disposal or distribution of these commodities produced by the Grama Sahayaks depends upon the purchasing capacity of the ryots and other factors Such of the co-operative societies which are in a position to have some warehouses may be given facilities for constructing godowns. Societies may be entrusted with the procurement work of the seeds. In the Panchayats, such facilities may be afforded for the proper storage and distribution.

Regarding the supply of pesticides, some doubts have been expressed as to whether the extensive use of these pesticides in the villages was not actually producing still more pest. Besides people feel that clayey is not resisting the application of fertilizers and its fertility is being deteriorated. I request that proper research may be conducted in this regard about the resistance of the soil so that there may not be any reduction in the yield as such and the fertility of the soil is kept up.

It is stated that the yield has increased in the field. My sincere opinion in regard to this matter is that more land has been brought under cultivation and there has not been more yield from the lands already under cultivation. In most cases ryots have not only brought more lands under cultivation but also the agriculturists are repeating the crops in particular land which was not there previously.

(The time bell was run)

I would like to say a few words about Food Production and Special Minor Irrigation Programme. The two Divisions dealing with these schemes may be amalgamated so that these schemes may be carried out properly. The Food Production Division estimates one thing and the Special Minor Irrigation Division estimates another thing with the result that there is no co-ordination between the two Divisions. Certain estimates of work are pending with the Food Production Division and at the same time certain works are being carried out by Special Minor Irrigation Programme without consultation. In food production department I see certain works being executed to the convenience of the department and contractors. In certain cases where there are encroachments in the tank bed upto the Tank bed repairs are being carried out. This aspect of the matter may be kindly considered. Repairs to tanks and other sources of irrigation may simultaneously be taken up.

One word about animal husbandry. So far as Key Village Centres are concerned, Sub-centres are functioning very well. But they may be well equipped with the machinery required by them for the treatment of diseases.

ஏற்றுக்கொண்டு செய்யக் கூடியவர்கள் செய்யாது போனாலும் கூட, மற்றவர்கள் இதைச் செய்ய முன் வரவேண்டும் என்பதற்காக இந்த வாய்ப்பை அளித்திருப்பது வரவேற்கத்தக்க விஷயம்.

உரக் குழிகள் தயாரிப்பு சம்பந்தமாக, சில இடங்களிலே சில குறைகள் இருக்கின்றன என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அவற்றை சட்டமன்றத்திலே வந்து சிலர் சொல்கிறார்கள். நமக்கு சிரத்தையிருந்தால் நம்முடைய பஞ்சாயத்திலே, பஞ்சாயத்து யூனியன் பகுதியிலே எந்தெந்த இடங்களிலே உரக் குழிகள் சரியாக தயாரிக்கப்பட வில்லை என்பது நமக்குத் தெரியாமல் எப்படி இருக்க முடியும்? தவறாக மான்யத்தை வாங்குவதற்கு அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் முயல்வார்களேயானால், அதை நாம் தெரிந்திருக்கும்பொழுதுகூட, நாம் கவனம் செலுத்தாமல் இருக்கிறோம். அப்படி சரியாக தயாரிக்காத பொறுப்பு அமைச்சரவையின் கவனக் குறைவு என்ற முறையிலே சட்டமன்றத்தில் சொல்லி, அதற்குப் பரிகாரம் தேடலாம் என்று நாம் நினைக்கிறோம். ஒரு ஸ்தலத்திலே குறைகள் இருந்தால், அந்த ஸ்தல அதிகாரிகளின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்து, அந்தக் குறையை நிவர்த்திப்பதற்கு அங்கத்தினர்கள் முயல வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கே. பார்த்தசாரதி :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே அக்ரிகல்சரல் பிராடியூஸ் மார்க்கெட்டிங் ஆக்டை அமலுக்குக் கொண்டு வந்ததைப் பற்றி நான் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தச் சட்டத்தை அமல் நடத்துவதில் என்னென்ன சிரமங்கள் ஏற்படலாம் என்பதைச் சுட்டிக்காட்டி, அவற்றை நிவர்த்திக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதற்காக நான் இப்பொழுது பேச முன் வந்திருக்கிறேன்.

இந்தச் சட்டம் அமலுக்கு வருவதினால் சிறிய வியாபாரிகளுக்குத் தொந்தரவு இருக்கக் கூடாது என்று நினைத்து இந்தச் சட்டத்திலே 6–வது பிரிவிலே விதிவிலக்குகள் அளிக்கலாம் என்றும், அவர்கள் எந்த அளவுக்கு எந்த பொருள்களை வியாபாரம் செய்தால் சிறிய வியாபாரிகளாக கருதப்படுவார்கள் என்பதற்கு விதிகள் வகுக்க வேண்டுமென்று கண்டிருக்கிறது. அந்த மாதிரி விதிகளை வகுக்கும்பொழுது 21–வது விதியிலே, விதிவிலக்கைப் பற்றிச் சொல்லும்பொழுது, ஒவ்வொரு பொருளுக்கும் எவ்வளவு அளவு என்று கண்டிருக்கிறது. பொருள்களின் பட்டியலிலே நெல்லைப் பற்றி குறிப்பிடவில்லை என்பதால் சில தவறுகள் ஏற்படலாம். சிலருக்கு கஷ்டங்கள் ஏற்படலாமென்று நான் நினைக்கிறேன். இந்தச் சட்டத்தின் கீழே நாம் நெல்லையும் சேர்த்திருக்கிறோம். ஆகையினால் நெல் வியாபாரம் செய்கின்றவர்களும் இந்தச் சட்டத்தின் கீழே லைசென்ஸ் வாங்கவேண்டிய நிலைமை ஏற்படும். ஆனால் சிறிய அளவிலே சில பெண்களெல்லாம் நெல்லை வாங்கி அதை அரிசியாக்கி விற்று ஜீவனம் செய்கிறார்கள். சிறிய அளவிலே வாங்கி நெல் குத்துகிறார்கள். எந்த அளவுக்கு நெல் வாங்கி அவர்கள் வியாபாரம் செய்தால் சிறிய வியாபாரிகள் ஆவார்கள், லைசென்ஸ் வாங்க வேண்டியதில்லை என்பதற்கு ஒரு அளவைக் குறிப்பிடாததினால் அவர்களுக்கு பாதகம் ஏற்படுமென்று நான் நினைக்கிறேன். இதைப் பரிசீலித்து, அந்த 21–வது பிரிவிலே நெல்லையும் சேர்த்து, எந்த அளவுக்கு அவர்கள் நெல் வாங்கினால், லைசென்ஸ் பெறத் தேவையில்லை என்பதையும் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்று இங்கே யூனிட் அப் ப்ரைஸ் கொடேஷன், அதாவது
10-30 உ.ம. டைரக்டர் அவர்களுடைய அனுமதி பெற்று அதை மார்க்கெட்டிங் கமிட்டி அமலாக்க வேண்டுமென்று இருக்கிறது. இப்பொழுது எங்களுடைய மாவட்டத்தில் நெல் மார்க்கெட்டிங் கமிட்டி வந்ததால் அங்கு அறுபது கிலோ ஒரு மூட்டை என்று சொல்லி அதற்கு ஸ்டாண்டர்டைஸ்டு விலை போட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். எங்கள் மாவட்டத்தில் சிதம்பரம் பகுதியில் அவர்கள் முன்பெல்லாம் $1\frac{1}{2}$ மணங்கு ஒரு மூட்டை என்று சொல்லி வியாபாரம் செய்து வந்தார்கள். ஆனால் சேலம் பக்கத்தில் எல்லாம் இரண்டு மணங்கு ஒரு மூட்டை என்று வைத்து பிறகு 7





கிலோ வைத்து வியாபாரம் செய்து வந்தார்கள். இப்போது அறுபது கிலோவுக்கு ப்ரைஸ் கொடேஷன் வைக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இதனால் பக்கத்திலுள்ள மார்க்கெட்டுடன் தொடர்பு கொண்டிருப்பதால் இப்படி ஒரு மூட்டை 60 கிலோ என்று வைத்து வியாபாரம் செய்வது கஷ்டமாக இருக்கிறது. சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய புள்ளி விபரங்களுக்கு வேண்டுமானால் இப்படிப்பட்ட ப்ரைஸ் கொடேஷன் வைத்துக்கொள்ளலாம். அதற்கு டைரெக்டர் ஸ்டாண்டர்டைஸ் பண்ணியது சரியாக இருக்கலாம். ஆகவே இதை மறு முறை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த முறை இல்லாமல் பழைய பழக்க வழக்கங்களில் இருக்க வேண்டிய எடை அளவு முறையில் அந்தந்த பகுதியில் எந்தெந்த பழக்க வழக்கங்கள் இருக்கின்றனவோ அதன்படி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே இப்பொழுதுள்ளபடி இல்லாமல் பழைய பழக்க வழக்கத்தின்படி யூனிட்டுகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி அந்த முறையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னும் மற்றொன்று இந்த ஆக்டைப்பற்றி. இந்த ஆக்ட் ஏற்படுத்திய காலத்தில், இந்த ஆக்டை இதற்குமுன் இருந்த சட்டசபையில் பாஸ் செய்தார்கள். அப்பொழுது இந்த மார்க்கெட் கமிட்டிகளை ஏற்படுத்தும்போது அதைத் தேர்தல் முறையில் ஏற்படுத்த வேண்டும் என்று சட்டத்தில் கண்டிருக்கிறது. ஒரு வருடத்திற்கு இந்த கமிட்டிகளை நியமனம் மூலம் ஏற்படுத்துவார்கள். அந்தக் காலம் முடிந்த பிறகு அந்தக் கமிட்டிகள் எல்லாம் தேர்தல் மூலமாக ஏற்படுத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு கமர்சியல் க்ராப்ஸ் மார்க்கெட்டிங் ஆக்ட்டின் கீழ் தேர்தல் மூலமாக கமிட்டிகளை அமைத்து இருந்தோம். இதற்கு முன்பாக விவசாயிகளுடைய வியாபார விளைவுப் பொருள்களை மட்டும் இதில் சேர்த்திருந்தோம். இப்பொழுது எல்லாவற்றையும் சேர்த்து விட்டோம். இப்பொழுது நெல் விவசாயம் செய்கிறவர்கள் கூட இந்த ஆக்டின் கீழ் வருகிறார்கள். இப்படி எல்லா விளைவுப் பொருள்களையும் இந்த ஆக்டின் கீழ் கொண்டுவருவதால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மார்க்கெட்டிங் கமிட்டி ஏற்படுகிறது. அந்த முறையில் பார்த்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் லட்சக் கணக்காண வாக்காளர்கள் வருவதற்கு இடம் ஏற்படுகிறது. அவர்களுக்கு பிரதிநிதிகள் 7 அல்லது 8 என்று வரக்கூடியதாக இருக்கிறது. இந்த விதத்தில் பெரிய பெரிய தொகுதிகளாக ஏற்பட்டு லட்சக்கணக்கான வாக்காளர்கள் வருவதாக இருக்கிறது. இப்படி லட்சக் கணக்காண வாக்காளர்களை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்த வேண்டியது அவசியமில்லை என்று தோன்றுகிறது. ஆகவே இதைப்பற்றி மேலும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதை உடனடியாகச் செய்யாவிட்டாலும் இந்த வருடம் நியமன காலம் முடிவடையும்போது இதைப்பற்றி யோசித்து முடிவு எடுக்கலாம். ஆகவே தேர்தல் வைக்க வேண்டும் என்பது அனாவசியமான காரியம். ஆகவே நியமன முறையிலேயே கமிட்டிகளை அமைக்கலாம் என்று செய்தால் சர்க்காருக்கும் செலவு குறையும். இதனால் மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு எந்த விதமான இடையூறும் இல்லை. அப்படி செய்துவிட்டால் கமிட்டிகள் ஒழுங்கான முறையில் நடக்கும். வியாபாரிகளும் நல்ல முறையில் ஒன்று சேர்ந்து வியாபாரத்தை நடத்துவதற்கும் சௌகர்யமாக இருக்கும். தேர்தல் முறை என்று வைத்துவிட்டால் மாவட்டங்களில் விவசாயிகளிடையே அனாவசியமான மனக்கசப்பும் மனமாச்சர்யமும் ஏற்படும். ஆகவே இவைகளையெல்லாம் தவிர்க்க இவைகள் எல்லாம் நடவாமல் இருக்க தேர்தல் முறையை எடுத்து விட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே இதைப்பற்றி பரிசீலனை செய்து நல்ல முறையில் சட்டத்தை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நியமன முறையை அமைத்தால் ஒன்றும் கெட்டுவிடப்போவதில்லை என்பது என்னுடைய அபிப்ராயம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சில மாவட்டங்களில் மட்டும் நெல்லை இதில் சேர்த்திருக்கிறார்கள். நெல்லை இந்த ஆக்டின் கீழ் கொண்டுவந்திருக்கிறார்கள். சில இடங்களில் இந்த ஆக்ட் அமலில்

முதல் அமைச்சர் அவர்களையும் விவசாய அமைச்சர் அவர்களையும், மற்றும் விவசாய இலாகா டைரக்டர் அவர்களையும், கால்நடை இலாகா டைரக்டர் அவர்களையும் பாராட்டி, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, விவசாய அபிவிருத்தியை முன்னிட்டு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற அறிக்கை பல திட்டங்களை எடுத்துக் கூறுகிறது. அந்தத் திட்டங்களினுடைய நன்மை தீமைகளைப் பற்றி அங்கத்தினர்கள் பலரும் தங்களுடைய கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். இன்னும் கூற இருக்கிறார்கள். அவர்கள் அளித்திருக்கின்ற அத்தனை வாய்ப்புகளையும் பெற்று உணவு உற்பத்தித் துறையில் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்ற நம்பிக்கையோடு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்த நம்பிக்கை எதிர்காலத்தில் எந்த அளவுக்கு இருக்கும் என்பதைப்பற்றி நாம் நிச்சயமாக ஐயப்படவேண்டிய நிலை இருக்கிறது. நமது நண்பர் திரு. சீமைச்சாமி அவர்கள் உணவு உற்பத்தித் துறையில் எவ்வளவு செலவாகிறது என்பதைப்பற்றியும், அதன் மூலம் எவ்வளவு வருவாய் வருகிறது என்பதைப்பற்றியும் ஒரு புள்ளி விவரம் தந்தார். கனம் அமைச்சர் அவர்கள் அதை மறுத்து வேறு ஒரு புள்ளி விவரம் தந்தார். இன்று பேசிய திரு. கோ. சி. மணி அவர்கள் ஒரு புள்ளி விவரம் தந்தார். இந்தப் புள்ளி விவரம் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளாது தள்ளிவிட்டாலும் அமைச்சர் கொடுத்த ஒரு புள்ளி விவரத்தை அடிப்படையாக வைத்துப் பார்த்தாலும் இப்போது உணவு உற்பத்தித் துறையில் ஊக்கம் குன்றுவதற்கான நிலைமை இருந்துகொண்டிருப்பதை உணர்ந்துகொள்ளலாம். குறிப்பாக இன்றைக்கு வடாற்காடு மாவட்டத்தில் ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய செலவு என்ன, அதில் கிடைக்கும் வருவாய் எவ்வளவு, மிச்சம் எவ்வளவு என்கிற புள்ளி விவரத்தை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்ட ரீதியாகப் புள்ளி விவரம் கொடுத்தபோது அளித்தார்கள். அதில் வடாற்காடு மாவட்டத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பார்த்தால் ஒரு ஏக்கரில் சாகுபடி செய்வதற்கு ரூ. 195 செலவாகிறது என்றும், அதில் இருந்து ரூ. 300 வருமானம் வருகிறது என்றும் சொன்னார்கள். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது மிச்சம் ரூ. 105 ஒரு ஏக்கருக்கு நிற்கிறது. ஆனால், ஆங்காங்குள்ள வாரமுறைகளைப் பார்க்கவேண்டும். எப்படி எப்படியெல்லாமோ வாரங்கள் இருக்கின்றன, என்றாலும் 60,40 என்றமுறையில் வைத்துப் பார்க்கிற நேரத்தில் மொத்த வருமானம் ரூ. 300-ல் விவசாயிக்கு 180 ரூபாய் வரும். அவன் அந்த ஒரு ஏக்கர் நிலத்தில் பயிரிட ரூ. 195 செலவிட்டிருக்கிறான் என்பதை கனம் அமைச்சர் ஒத்துக்கொள்கிறார். அப்படியென்றால் இன்றைக்கு ஒரு ஏக்கர் சாகுபடி செய்கின்றவன் ரூ. 15 நஷ்டம் அடைகிறான் என்றால் விவசாயத்தில் நிச்சயமாக ஊக்கம் குன்றி வரக்கூடிய சூழ்நிலையே வளர்ந்துவிட்டது என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நீடிக்குமானால் நாம் எவ்வளவு வாய்ப்புகள் அளித்தாலும் விவசாயம் பெருக முடியாது.

இன்னும் நம் நாட்டுக்கு அதிகமாக அந்நியச் செலாவணியைத் தேடித் தருகிற விவசாயப் பொருள்களை அபிவிருத்தி செய்வதற்கு என்னென்ன வழிவகைகளை செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிற நேரத்தில் ஏமாற்றமடையவேண்டிய நிலையிலேயே இருக்கிறோம். நம்முடைய நிலங்களை மூன்றாகப் பிரிக்கலாம். நீர்ப்பயிர் மட்டும் சாகுபடி செய்யக்கூடிய பூமி, நீர்ப்பயிரோடு, நீர்வளம் கொஞ்சம் குன்றினாலும் பயிர் செய்யக்கூடிய பூமி, நீர் வளமே தேவைப்படாத பயிர் விளையும் பூமி என்று இப்படி நிலங்களை மூன்றாக வகைப்படுத்திக்கொண்டால், நீர்ப்பயிர் மட்டும் விளைவிக்கக்கூடிய பகுதியில் நெல்லை நல்ல முறையில் பயிரிட வகை செய்யவேண்டும். நீர் அதிகம் தேவைப்படாத நிலத்தில் முதல்போகம் நெல், இரண்டாம் போகம் நிலக்கடலை, மிளகாய் போன்றவற்றை, பயிரிட சில இடங்களில் முயற்சி செய்யவேண்டும். இன்னும் இதே இடத்தில் கரும்பையும் வாழையையும் பயிரிடலாம். வாழை இப்போது வெளிநாடுகளில் மார்க்கெட் பெறுகின்ற நிலையை அடைந்திருக்கிறது. குறிப்பாக வாழைப் பழத்தை ருஷ்யர்கள் விரும்பி வரவேற்கிறார்கள் என்று அறிகிறோம். சிறுமலைப்பழம் என்றால் கட்டைவிரல் அளவில் இருக்கிறது. உரித்தால்



பழம் சுண்டுவிரல் அளவுதான் இருக்கிறது. இதன் விலை நம் நாட்டிலேயே 6 பைசா. இந்த மலைப்பழத்தை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு வழிவகை செய்யவேண்டும்..

அடுத்தபடியாக, வெறும் அரிசியை மட்டும் தின்று பயன் இல்லை. நெல் பயிரோடு வேறு பயிரையும் பயிரிடுவதற்கு வழி செய்யவேண்டும். மக்களுக்கு மாற்று உணவாக, ப்ரோடீன்ஸ் சத்து அதிகமாக உள்ள மாற்றுப்பொருள் தேவை. மேலும் மா, முந்திரி போன்ற மரங்களைப் பயிர்செய்வதற்கும் வழிசெய்யவேண்டும். அடுத்தபடியாக, நம் நாட்டுக்குப் பொன்னையும், பொருளையும் தேடித்தந்த சந்தனம், தேக்கு போன்ற மரங்களையும் அதிகமாகப் பயிரிட வழி செய்யவேண்டும். இப்படிப்பட்ட துறையில் போதிய கவனம் செலுத்தப்படாததாலும், நெல்லுக்கு உரிய விலை தரவும், பிற வாணிகப் பொருள்களை வளர்க்கவும் தவறியிருக்கிற காரணத்தினால் எதிர்க்கட்சிகளின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆர். ஜீவரத்னம் :** கனம் சபாநாயகர் அவர்களே, விவசாய இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயப் பெருமக்கள் அதிகமாக உள்ள ஒரு பகுதியில் இருந்து விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். விவசாயிகளுடைய நிலைமை என்ன என்று நன்கு தெரிந்த ஒருவர் விவசாய இலாகா அமைச்சராக ஏற்பட்டதைக்கண்டு நான் அவர்களைப் பாராட்டுகிறேன். விவசாயிகள் அதிகம் நிறைந்து தொழில் வளமே இல்லாத வடாற்காடு ஜில்லாவின் தேவைபற்றி அவர்களிடத்தில் சமர்ப்பிக்கிறேன். அவைகளை அவர் அனுதாபத்தோடு கவனித்துப் பார்த்து ஆவன செய்வார்கள் என்றும் நம்புகிறேன்.

வடாற்காடு ஜில்லாவில் பாலாற்றங்கரையோரத்தில் ஏராளமான நிலங்கள் சாகுபடிக்கு இருக்கின்றன. மின்சார அனுமதி கேட்டால் மின்சாரம் கொடுப்பது கிடையாது. பாலாற்றுப் பாசன விதி குறுக்கே நிற்கின்றது. ஆகவே பாலாற்றங்கரை ஏரியாவில் உள்ள நிலங்களுக்கு எல்லாம் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தி அதன் மூலம் வெறும் நிலங்களாகக் கிடப்பனவற்றைப் பயிர் வைக்கின்ற பூமியாக ஆக்கவேண்டும். சர்க்கார் சார்பிலேயே இம்மாதிரி குழாய்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, பஞ்சாயத்துக்களிடம் இந்த ஏரிகளின் மராமத்து ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கல்விப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்புகளை ஏற்று நடத்த பஞ்சாயத்துக்களுக்கு நிதி நிலை சரியில்லை. அம்மாதிரியுள்ள பஞ்சாயத்துக்களிடம் இருந்து அரசாங்கமே நேரிடையாக இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். விவசாய இலாகா அரசாங்கச் செலவில் நேரிடையாக இந்த மராமத்து வேலைகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோன்று ரசாயன உரம் கிடைக்காமல் விவசாயிகள் கிராமசேவக்குகளையும், விவசாய இலாகா அதிகாரிகளையும், டெமான்ஸ்ட்ரேட்டர்களையும் தேடி அலைய வேண்டியிருக்கிறது. ஆனால் வடாற்காடு மாவட்ட டெவலெப்மெண்டு கவுன்சில் கூட்டத்தில் யாரும் ரசாயன உரம் வாங்க முன்வருவது இல்லையென்றும், 25 லட்சம் பெறுமான உர மூட்டைகள் தேங்கிக் கிடப்பதாகவும் கலெக்டர் சொன்னார். கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு தேவையானவர்களுக்கு, தேவையான உரம் கொடுப்பது என்று வந்தால் விவசாயமும் நன்கு நடக்கும். இப்படி செய்கையில் ரசாயன உரம் தேங்காது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று எங்கள் ஜில்லா விவசாயத்தில் மிக முக்கியமான ஜில்லாவாக இருப்பதனால் டிராக்டர்கள் மிக அதிகமாகத் தேவைப்படுகிறது. உழைத்துப் பயிரிடுகிறவர்கள் எங்கள் மாவட்டத்திலேயே அதிகம். போதுமான டிராக்டர்கள் கிடையாது. ஆகவே கூடியவரையில் டெவலெப்மெண்டு கவுன்சில் கூட்டத்தில் ப்ளாக்குக்கு ஒரு டிராக்டர் வேண்டுமென்று

[Sri C. Chiranjeevulu Naidu] [11th March 1963

Regarding poultry, in addition to upgrading the breeding of poultry, the country variety also should be encouraged. Otherwise, in course of time, they may be eliminated. Certain villages may be selected for upgrading of poultry on exchange basis. If they are spread over a number of places it will go a long way to improve poultry production. With these words, I conclude my speech. Thank you, Sir.

* **திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, நம் ராஜ்யத்தில் மற்ற எல்லா இலாகாக்களையும்விட விவசாய இலாகாவுக்கும் கால்நடை இலாகாவுக்கும் அதிக உதவிகள் அளிக்கப்படுகின்றன என்பதைக் குறித்து நான் அரசாங்கத்தைப் பெரிதும் பாராட்டுகின்றேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 38 லட்சம் டன் உணவு உற்பத்தியைப் பெருக்கியிருப்பதாகவும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும்போது 68 லட்சம் டன் அளவுக்கு உற்பத்தி பெருகும் என்றும் அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது மிகவும் பெருமைப்படத்தக்க விஷயமாகும். இதற்காக அரசாங்கத்தையும், சம்பந்தப்பட்ட இலாகாவினரையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

உணவு உற்பத்தி ஒன்றுக்கு இரண்டு மடங்காகப் பெருகுகிறதென்றால் மூன்று வகைத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் இந்த அரசாங்கம் அதைச் சாதித்து வருகிறார்கள். பெரிய பெரிய அணைக்கட்டுத் திட்டங்கள், சிறிய பாசனத் திட்டங்கள் ஆகியவைகள் மூலமாக விவசாய உற்பத்தி பெருகுகின்றது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு விவசாய இலாகாவினரும், இன்ஜினியரிங் இலாகாவும் நல்ல முறையில் ஒத்துழைத்து வருகின்றார்கள். இந்தத் திட்டங்கள் மூன்று வகையாக முன்னேறிக் கொண்டிருப்பதாக நமது ராஜ்ய முதல் அமைச்சர் அவர்களையும் விவசாய அமைச்சர் அவர்களையும், விவசாய இன்ஜினியரிங் இலாக்காகளிலுள்ள சம்பந்தப்பட்ட எல்லோரையும், விவசாயத்திலே ஈடுபட்டிருக்கும் விவசாய மக்களையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு கோரப்படுகிற இந்த மானிய கோரிக்கைகளை நான் வரவேற்கிறேன்.

விவசாய உற்பத்திக்கு முக்கியமாக வேண்டியது உரம். இது பற்றி அமைச்சருடைய அறிக்கையில் பலவாறாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஏட்டளவில் இருக்கிறதே தவிர நடைமுறையில் இல்லை என்று நான் சொல்லிக்கொள்ளுகின்றேன். அமோனியம் சல்பேட், நைட்ரேட் போன்ற உரங்களை ஆங்காங்கு வினியோகிக்கும் பொறுப்பு கூட்டுறவு சொசைட்டிகளுக்கு விடப்பட்டிருக்கிறது. உரங்கள் தேவைக்கு அதிகமாகக் கிடைத்திருப்பதைப்பற்றி நான் பெருமைப்படுகிறேன். உள் நாட்டில் மலங்கள் மூலமாகவும், குப்பைகள் மூலமாகவும் தயாரிக்கப்படும் உரங்களும் விவசாயத்திற்கு நல்ல முறையில் பயன்படுகின்றன. இப்படி தமிழ் நாட்டில் 65 நகரங்களிலும் பஞ்சாயத்துக்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைப் பெரிதும் வரவேற்கிறோம். சிறு சிறு கிராமங்களிலும் பஞ்சாயத்து யூனியன் சார்பாக பசுந்தாள் உரங்கள் தயார் செய்வதற்குச் சர்க்கார் உதவித் தொகை கொடுக்கிறார்கள். இதுவும் ஏட்டளவில்தான் இருக்கிறதே தவிர, நடைமுறையில் மக்களுக்கு நல்ல முறையில் பயன்படவில்லை என்றுதான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. சர்க்காரால் கொடுக்கப்படும் அமோனியம் சல்பேட் தவிர, நகர் புறங்களில் குப்பை போன்றவற்றின் மூலம் கிடைக்கும் உர வகைகளையும் விவசாயிகள் பயன்படுத்துவதன் காரணமாக, பஞ்சாயத்து யூனியன் சார்பாகவும், பஞ்சாயத்தின் சார்பாகவும் சிறு சிறு கிராமங்களில் உள்ளவர்கள் உரம் தயாரிக்க வேண்டுமென்பதற்காக சர்க்காருடைய உதவித் தொகையைக் கொடுப்பது வீண் விரதாவைத் தவிர, அதனால் எந்த விதமான பலனும் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்வதோடு, அந்தத் திட்டங்களைக் கைவிடும்படியாகவும் நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நூற்றுமுப்பத்தாறு சர்க்கார் விதைப்பண்ணைகள் இருக்கின்றன. மேலும் 74 விதைப் பண்ணைகளை ஏற்படுத்தப் போவதாகக் கூறுகிறார்கள். நானொரு விவசாயி என்ற முறையில் என் கருத்தைத் தெரிவிக்கின்றேன். விதைப்



11th March 1963] [திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர்]

பண்ணையினால் சர்க்காருக்கு ஒரு பெரிய செலவு ஏற்படுகிறதே தவிர, அதனால் விவசாய மக்களுக்குப் பயன் இல்லாத நிலைதான் இருக்கிறது. விவசாயிகளுக்கு நல்ல விதை கிடைக்க வேண்டுமென்றால், விவசாயிகளுக்கு உதவித் தொகை கொடுத்து, அவர்களைக்கொண்டே தயாரிக்கச்செய்து சர்க்காரால் வாங்கிக்கொள்ளப்படவேண்டும். தஞ்சையில் நல்ல நெல் விதை கிடைக்கலாம். கோவை, சேலம் பகுதிகளில் நல்ல சோள விதைகள் கிடைக்கலாம். அந்தந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு நல்ல மானியத்தொகை கொடுத்து, விவசாயிகளிடமிருந்து பொறுக்கு விதைகளை வாங்கி மற்ற விவசாயிகளுக்கு விநியோகித்தால், சர்க்காருக்குச் செலவு குறைவதோடு, விவசாயிகளுக்கும் நல்ல முறையில் பயன்படும். திருப்பூருக்குப் பக்கத்தில் ஒரு விவசாயப் பண்ணை இருக்கிறது. அது மக்களுக்கு நல்ல முறையில் பயன்படவில்லை. இதுபோன்ற சர்க்கார் நடத்தும் 136 விதைப் பண்ணைகளுக்கும் சாதாரணமாக நாலைந்து லட்சம் ரூபாய் விரதாவாகச் செலவழிக்கப்படுகிறது. மேலும் விதைப்பண்ணைகள் விஸ்தரிக்கப்படப் போவதாகச் சொல்லப்படுகிறது. நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல், நல்ல பருத்தி விதைகள், நெல், சோளம் முதலிய விதைகளை விவசாயிகளே நல்ல முறையில் உற்பத்தி செய்யும்பொருட்டு, அவர்களுக்கு மானியத்தொகை கொடுத்து, விவசாயிகளுக்கு வினியோகித்தால் சர்க்காருக்குச் செலவு குறையும், விவசாயிகளுக்கும் உதவியாக இருக்கும். இந்த வகையில் திட்டமிடப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தென்னந் தோப்புகள் வைப்பதற்குக் கூட, தோப்பு வைத்திருப்பவர்களிடமிருந்து தென்னங்கன்றுகளை வாங்கிக்கொள்ளலாம். இதனாலும், சர்க்காருக்குச் செலவு குறையும். பாக்குத் தோப்புகளும் இந்த வகையிலேயே விஸ்தரிக்கப்படலாம்.

அரிசி மில் வைப்பதற்கு லைசென்ஸ் வழங்குவதில் சில குறைகள் இருக்கின்றன. மத்திய அரசாங்கத் திட்டத்தின்படி அரிசி மில்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதில் பாகுபாடுகள் இருப்பதால், இது பற்றி மத்திய சர்க்காருக்கு எழுதி, ரைஸ் மில்களை வைக்கத் தாராளமாக லைசென்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கால்நடை அபிவிருத்தியை எடுத்துக்கொண்டால், நம் ராஜ்யத்தில் தரமுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. குறிப்பாக விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. விவசாயம் செய்வதற்கு ட்ராக்டர் போன்ற இயந்திரக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இருந்தாலும், கீ விலேஜ் செண்டர்களில் ஜீப்களை வைத்துக்கொண்டு அங்குமிங்கும் போய் வருகிறார்களே தவிர, முன்போல் பொலி காளைகளை வைத்துப் பராமரித்து, கால்நடைகளின் இனத்தைப் பெருக்குவதற்கான வசதிகள் வர வரக் குறைந்து வருகின்றன. மொத்தமாகப் பார்க்கும்போது, தரமான கால்நடைகளின் எண்ணிக்கை பெருகுவதில் அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை. ஆகவே, பழைய முறையைக் கையாளலாம். கன்று ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம், மூன்று ஆண்டுகளுக்கு 360 ரூபாய் கொடுக்கிறார்கள். அது அவசியமில்லாத காரியம். அந்தச் செலவைக் குறைக்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எஸ்.பி.ஸி.ஏ. என்பது இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. நகர்ப்புறங்களுக்கு மாட்டு வண்டிகள் வருவது குறைந்துகொண்டிருக்கிறது என்றாலும், இந்தக் கழுத்துப் புண் சங்கம் (எஸ்.பி.ஸி.ஏ.) டோல் கேட் மாதிரி இருந்துகொண்டு தொந்தரவாக இருக்கிறது. நகரங்களுக்குப் பெரும்பாலும் லாரிகளின் மூலமாகவே சரக்குகள் வருவதன் காரணமாக இந்த எஸ்.பி.ஸி.ஏ. ஸ்தாபனத்தை எடுத்துவிடும்படியாக நான் யோசனை தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்பதற்காக பால் பண்ணைகள் ஏற்படுத்த சர்க்கார் உதவி அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆக, விவசாய அபிவிருத்திக்காகவும், கால்நடை அபிவிருத்திக்காகவும் சர்க்கார் எடுத்துவரும் முயற்சிக்காக நான்

இந்த ஆண்டு எங்கள் தொகுதியில் பெரிய பருத்தியில் பெரிய புழு விழுந்து விட்ட காரணத்தால் விவசாயிகளுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அடுத்த வருஷமும் இந்த நிலைமை நீடித்தால் விவசாயி எழமுடியாத நிலைமை ஏற்பட்டு விடும். விவசாயத்துறையில் பல்வேறு ஆராய்ச்சிக்காக கடந்த ஆண்டு 4,96,000 ரூபாயைச் செலவழித்தோம். இந்த ஆண்டு 11,00,000 ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆராய்ச்சி நிலையங்களில், பயிர்களில் புழு பூச்சிகள் விழுவதைப் பற்றியும் ஆராய்ச்சி நடக்கிறது. அவர்கள் இந்தப் பெரிய புழுக்களை ஒழிக்க என்ன செய்வது என்று ஆராய்ச்சி செய்து "பாலிடால்" அடித்துவிட்டால் போதும் என்று கூறிவிட்டார்கள். பாலிடாலில் அந்தப் புழுக்கள் மிதந்து செல்கின்ற நிலைமையைத்தான் நாங்கள் பார்க்கிறோம். பாலிடாலினால் அந்தப் புழுக்களை அழிக்க முடியவில்லை. ஆகவே, அதற்கு மாற்று யோசனையைத் தேடித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிணறுகள் வெட்டுவதற்காக இரண்டாயிரம் ரூபாய் வரைக் கடன் கொடுக்கிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவில் இரண்டாயிரம் செலவில் கிணறு வெட்டவே முடியாது. பத்தாயிரம் செலவு செய்தால் கூடப் பாதிக் கிணறுதான் வெட்ட முடியும். பாதிக் கிணறு தாண்டும் நிலைமை என்னவாகும் என்பது எல்லோருக்கும் தெரியும். முழுக் கிணறு வெட்ட வேண்டுமென்றால், குறைந்தது பதினைந்தாயிரம் ரூபாய் செலவாகும். மேலும் விவசாயி ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கவேண்டுமென்று சொன்னால், முப்பதாயிரம் ரூபாய்க்கு "சால்வன்சி சர்டிபிகேட்" கொடுக்க வேண்டியிருக்கிறது. இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கி, தங்களிடம் இருக்கும் பணத்தையும் வைத்துக் கால் கிணறுதான் வெட்ட முடிகிறது. ஆகவே, கிணறு முழுவதும் தோண்டும் வகையில் விவசாய இலாகா மூலம் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை ஐந்து "போர் வெல்" வேலை செய்து வருகின்றன. "போர் வெல்" சக்ஸஸ் ஆனவுடன் பம்ப் செட்டு வேண்டுமென்றால், வேப்பேரியில் உற்பத்தி செய்யப்படும் பம்ப் செட்டுகள் கிடைப்பதே இல்லை. பம்ப் செட் வேண்டுமென்றால் ஒரு வருஷத்திற்கு முன்பே ரிஜிஸ்டர் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு விவசாயி ஒரு வருஷத்திற்கு முன்பே பம்ப் செட்டுக்காக ரிஜிஸ்டர் செய்துவிட்டு போர் வெல்லுக்காகவும் செலவு செய்ய வேண்டுமென்று சொன்னால் அதிலே அவர்களுக்குச் சிரமம் ஏற்படுவதோடு, காலதாமதமும் ஏற்படுகிறது. இதிலே ஏற்படக் கூடிய காலதாமதத்தை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு நெல் விலையானது இன்றைக்கு ஒரு பொதிக்கு 30 ரூபாய் குறைந்து விட்டது. ஆனால் அவர்களுடைய உற்பத்திச் செலவு அதிகமாகவே இருக்கிறது. சென்ற ஆறு மாதங்களுக்கு முன்னால் பருத்தியினால் அவதிப்பட்ட விவசாயிகள், இன்று நெல்லை வைத்துக் கொண்டு அவதிப்படுகிறார்கள். கூட்டுறவு சங்கங்கள் முன் வந்து பாங்கிலிருந்து பணம் கொடுத்து வாங்கி ஸ்டாக் செய்து பொதிக்கு 10 ஏற்றி வைத்து இந்த வியாபாரத்தை நடத்தலாம். விவசாயிக்கு ஒரு பொதிக்கு 30 ரூபாய் குறைந்தால் எவ்வளவு கஷ்டம் ஏற்படும். ஆக விவசாயிகளுக்கு வேண்டியதைச் செய்து அவர்களுக்கு கஷ்டங்கள் தொடர்ந்து வளர்ந்து கொண்டு போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். பெரிய நீர்ப்பாசன வசதி இல்லாத எங்கள் வட்டாரங்களில் சிறு நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கு பணம் செலவு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி:** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினர் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை வரவேற்று நான் ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். ஒரு நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தால்தான் அதை முன்னேற்றம் அடைந்த நாடாகக் கருத முடியும். தொழில் துறையில் மட்டும் தன்னிறைவு அடைந்ததால், அது தன்னிறைவு அடைந்த நாடு என்று சொல்லமுடியாது. மேலை நாடுகள் நவீன உலகமாக இருக்கிறது. ஆங்காங்கு பலவிதமான முன்னேற்றங்கள் செய்து வருகிறார்கள். ஆனால் உணவுக்கு என்று ஒரு





மாத்திரை செய்து அதனால் ஒரு உயிர் வாழ முடியுமா என்றால் அப்படிப்பட்ட மாத்திரையை அவர்களால் செய்ய முடியாது. அப்படிச் செய்தாலும் அந்த மாத்திரைகளைக் கொண்டு அவர்கள் நீண்ட நாட்கள் உயிர் வாழ முடியாது. ஆகவே விவசாயத் துறையிலே அதிகப்படியான அக்கறை செலுத்தப்பட வேண்டும். ஆனால் நாம் இப்போது இதில் அதிக கவனம் செலுத்தவில்லை. முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் 600 கோடி ரூபாய் செலவு செய்தோம் விவசாயத்திற்காக. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 400 கோடி ரூபாய் செலவழித்தோம். ஆக 1,000 கோடி ரூபாய் விவசாயத்திற்காக செலவு செய்யப்பட்டது. அதனால் எந்தளவு விவசாய உற்பத்தி பெருகியிருக்கிறது என்று பார்த்தால், உண்மையிலே அந்தப் பணம் எல்லாம் விரயமாக்கப் பட்டிருக்கிறது. இதே கருத்தைத்தான் பண்டித நேரு அவர்களும் கூறியிருக்கிறார்கள். 1,000 கோடி ரூபாய் வேஸ்டாகி யிருக்கிறது. அதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்று அவர்களே எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். நான் ஒரு விஷயத்தை மட்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். கிட்டத்தட்ட 17 லட்சம் டன் அளவிற்கு விவசாய, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பது நம் இலட்சிய நோக்கம். அந்த லட்சியம் நிறைவேறுமா என்றால் நிச்சயமாக நிறைவேறாது. இன்று விவசாயப் பொருள்களின் விலை குறைந்திருப்பதால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். சென்ற பட்ஜட் விவாதத்தின்போது நான் குறிப்பிட்டேன் ஒரு ஏக்கருக்கு ஆகும் செலவு 391 ரூபாய் என்றும், கிடைக்கிற வருவாய் 400 ரூபாய் என்றும் ஆக 9 ரூபாய்தான் மிச்சம் வருகிறது என்றும் குறிப்பிட்டேன். ஏன் சொன்னேன் என்றால், சென்ற ஆண்டில் 54 படி கொண்ட மூட்டை 24 ரூபாய்க்கு மதுரை மார்க்கட்டில் விற்கப்பட்டிருக்கிறது. நானும் விற்றிருக்கிறேன். நானும் ஒரு விவசாயிதான். நான் கொடுத்த புள்ளி விவரம் சரியானதுதான். நிதி அமைச்சர் அவர்களும் ஒரு புள்ளி விவரம் கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த புள்ளி விவரம் தவறு என்று நான் கூறவில்லை. ஆனால் சில ஐட்டங்களுக்கான செலவுகள் அதில் குறிப்பிடப்படவில்லை. ராமநாதபுரத்தைப் பொறுத்தவரை செலவு 185 ரூபாய் வரவு 310 ரூபாய், ஆக லாபம் ரூ. 125. நார்த் ஆற்காட்டில் செலவு ரூ. 195, வரவு ரூ. 300, லாபம் ரூ. 105. செங்கல்பட்டை எடுத்துக்கொண்டால் செலவு ரூ. 168, வரவு ரூ. 296, லாபம் ரூ. 128. அகில இந்திய ரீதியில் எடுத்துக்கொண்டாலும் இப்படித்தான். ஆக கிட்டத்தட்ட ஒரு ஏக்கருக்கு வருகிற வருவாய் அதாவது லாபம் ரூபாய் 150. இதில் வரியைச் சேர்க்கவில்லை. அது தனியாக இருக்கிறது. அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. நேரம் இல்லாததால் சுருக்கமாகவும் வேகமாகவும் பேசுகிறேன். இன்று 70 சதவீதம் மக்கள் 5 ஏக்கருக்கு கீழ் விவசாயம் செய்கிறவர்கள். 15 சதவீதம் 50 செண்ட் விவசாயம் செய்பவர்கள். 15 சதவீதம் நிலம் இல்லாதவர்கள். ஆக ஒரு ஏக்கருக்கு 100 ரூபாய் வருகிறது லாபம். ஆக ஒருவர் ஐந்து ஏக்கர் வைத்திருந்தால் வருகிற வருமானம் ரூ. 500. இதை வைத்துக்கொண்டு குழந்தை குட்டிகளோடு எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் எவ்வளவு பேர்கள் மருத்துவக் கல்லூரிகளில், என்ஜினீரிங் கல்லூரிகளில் படிக்கிறார்கள்? அவர்களில் எத்தனை பேர்களுக்கு இன்று கார் வசதி இருக்கிறது? ஆக, விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இன்று ஒரு ரெயில்வே தொழிலாளியை எடுத்துக் கொண்டால், அவனுக்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ. 1,600. இரும்புத் தொழிற்சாலை அல்லது உருக்குத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளியை எடுத்துக் கொண்டால், அவன் வருமானம் ரூ. 1,700 ஆக இதில் மூன்றில் ஒரு பங்கு கூட விவசாயம் செய்பவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த வித்தியாசத்தைப் போக்க நாம் முயல வேண்டும். எந்த முறையில் விலைவாசி நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்பதற்காக 1959-ல் மதிப்பிற்குரிய நம் நிதியமைச்சர் அவர்கள் விவசாய அமைச்சராக இருந்தபோது ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அதில் விலைவாசி பற்றி கூறப்பட்டிருக்கிறது. அதை எடுத்துச் சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

"The greatest incentive to the agriculturists to go all out and incrase the yields in their lands to the utmost extent is to increase them of a reasonable price for their produce. At present,

குறிப்பிட்டார்கள், அப்படி இல்லாவிட்டாலும் ஒரு தாலுக்காவுக்கு ஒரு டிராக்டராவது வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு மின்சாரம் வழங்க முதல் இடம் கொடுக்கவேண்டும். அப்போதுதான் கிணறுகள் தோண்டவும், தண்ணீர் இறைக்கவும், நல்ல வழி ஏற்படும்.

கிணறு வெட்டுவதற்கு ஆயிரம், இரண்டாயிரம் கொடுக்கிறார்கள். சிமிண்டு, மற்ற பொருள்களின் விலை, கூலி ஆகியவை உயர்ந்துவிட்டதனால் இது போதவில்லை. ஆகவே ஆயிரம், இரண்டாயிரம் என்பதை இரண்டாயிரம், நாலாயிரம் என்று உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் மானியத் தொகையை 50 சத விகிதம் அதிகமாக் கித்தரவேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

11-00 a.m. வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள ஏலகிரி மலையை அபிவிருத்தி செய்து உருளைக்கிழங்கு, காப்பி போன்றவற்றைப் பயிரிட வசதிகள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லாவிற்கு அடுத்தாற்போல் வட ஆற்காடு மாவட்டமானது உணவு உற்பத்தியில் முன்னணியில் நிற்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூடப் பெருமையாகக் கூறியிருக்கிறார்கள். இதுவரை ஆரம்பிக்கப்படாமல் இருக்கக்கூடிய விவசாயக் கல்லூரியை வட ஆற்காடு ஜில்லாவில் எங்காவது ஒரு பகுதியில் ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு ஜில்லாவில் உணவு உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு உரம் அதிகமாகத் தேவையாக இருக்கிறது. ஆகவே, உரத் தொழிற்சாலை ஒன்றையும் வட ஆற்காடு ஜில்லாவில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசி மில்களுக்காக அனுமதி கோரி மனுக்கள் கொடுத்தால் அனுமதி வழங்க இரண்டு மூன்று வருஷங்கள் ஆகிவிடுகின்றன. அந்த இரண்டு மூன்று வருஷங்களும் மில்லுக்காக அனுமதி கேட்டவர்கள் சென்னைக்கு நடந்து நடந்து திரும்புவதற்கே 100 ரூபாய், ஆயிரம் ரூபாய் என்று செலவாகி விடுகிறது. ஆகவே, அனுமதி கோரி வரக் கூடிய மனுக்களை உடனுக்குடன் பரிசீலித்து "உண்டு, இல்லை" என்று அவர்களுக்குத் தெரிவித்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீமான் பார்த்தசாரதி நாயுடு அவர்கள் சொன்னது மாதிரி, மார்க்கட்டிங் கமிட்டிக்குத் தேர்தல் மூலமாகவும், நியமனத்தின் மூலமாகவும் ஆட்கள் நியமிக்கப்படுகிறார்கள். தேர்தல் என்பதிலே நமக்கு நல்ல அனுபவம் இருக்கிறது. கமிட்டிக்கு ஆட்களைப் போடுவதில் நியமன முறையைக் கடைப்பிடித்தால் நல்லபடியாக இருக்கும், மனமாச்சரியங்கள் தவிர்க்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை வளர்ச்சிப் பண்ணை ஒன்றை வட ஆற்காடு ஜில்லாவில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாய உற்பத்திக்கு வேண்டிய கருவிகள் செய்கிறார்கள். அந்தக் கருவிகள் செய்வதற்கு வேண்டிய இரும்புக் கோட்டாவுக்காக மனுக் கொடுத்தால் ஓரிருவருக்குத் தான் அனுமதி கொடுக்கிறார்கள். பரவலாக எல்லோருக்கும் இரும்புக் கோட்டா கொடுத்தால் விவசாயிகளுக்குரிய கருவிகளை சுலபமாகப் பெற்றுக் கொள்ள வழிவகைகள் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் காய்கறிப் பஞ்சம் இருப்பதற்குக் காரணம் நஞ்சை நிலங்களில் எல்லாம் தொழிற்சாலைகளைக் கட் டிவிடுவதுதான். சென்னை நகரில் காய்கறிப் பஞ்சத்தைப் போக்கும் வகையில் இனிமேலாவது தொழிற்சாலைகளை வறண்ட பிரதேசமான வட ஆற்காடு ஜில்லாவில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் சபாநாயகர் அவர்களே, நமது விவசாய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், சிறப்பாக நமது நாட்டிலே விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமோ அந்த





அளவுக்கு விவசாய இலாகாவின் மூலம் கொடுத்து வருகிறோம் என்பதற்காக முதலில் அரசாங்கத்திற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டிலே நூற்றுக்கு எண்பது பேர் விவசாயம் செய்கின்றவர்களாக இருப்பதாலும், அவர்களில் பெரும்பாலோர் படிப்பறிவு அற்றவர்களாக இருப்பதாலும் நம்முடைய அரசாங்கம் இப்படிப்பட்ட ஒத்துழைப்பைக் கொடுப்பதன் காரணமாக உற்பத்தி பெருக வழி ஏற்பட்டிருக்கிறது.

**(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)**

இன்று விவசாயிகள் பல நன்மைகளைப் பெற்றிருப்பதோடு, ஒரு சில தின்மைகளையும் அனுபவித்து வருகிறார்கள். அவற்றைத் தீர்க்க இந்த அமைச்சரவை தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எனது தொகுதியைப் பொறுத்தவரை ஆறு ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகளுக்கு மின்சார சப்ளை கொடுத்தார்கள். அதை இரவு சப்ளையாகக் கொடுத்தார்கள். ஆறு ஆண்டு காலமாக இரவில் கொடுத்து வந்தும், இன்னும் பகல் சப்ளையாக மாற்றாமல் இருக்கிறார்கள். அதோடு ஆறு மணி நேரம் என்பதை, எட்டு மணி நேரம்........

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதைப் பற்றியெல்லாம் எலக்ட்ரிசிடி பட்ஜட்டை விவாதிக்கும்போது சொன்னால், அதற்கான புள்ளி விவரங்களையெல்லாம் கொடுக்கலாம். இதைப் பற்றி அக்ரிகல்சரல் மானியத்தில் சொல்வது பொருத்தமல்ல.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** நேரம் கிடைத்த நேரத்தில் இதைப் பற்றிச் சொன்னால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுமே என்ற காரணத்தினால் தான் இப்போது இதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆறு மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படுவதால் விவசாயி மேலும் இரண்டு மணி நேரத்திற்குக் கூலி கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, எட்டு மணி நேரத்திற்கு இந்த மின்சாரத்தைக் கொடுப்பதோடு, அதைப் பகல் நேரத்தில் கொடுக்கவேண்டுமென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய கடன்களைப் பெறுவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஒரு தொழிற்சாலையிலே மூலதனம் போடுகிறார்கள் என்றால், அந்த மூலதனத்தைப் போல் சம பங்கை அரசாங்கம் கடனாகக் கொடுக்கிறது. ஆனால் விவசாயி ஒரு பூமியை 30,000 ரூபாய் கொடுத்து வாங்கினால், அரசாங்கம் 3,000 ரூபாய் கூடக் கடன் கொடுப்பதில்லை. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஒரு விவசாயியினுடைய சொத்து மதிப்பைக் காட்டும் பாங்கு பாஸ் புத்தகம் வைத்திருப்பது போல் இங்கும் இருந்தால் நலமாக இருக்கும். இங்கே விவசாயி கடன் வாங்கவேண்டுமென்றால், ஒவ்வொரு முறையும் கணக்கப் பிள்ளையையும், மணியக்காரரையும் போய்ப் பார்த்து சொத்து மதிப்பை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக விவசாயி பல்வேறு துறைகளில் கடன் வாங்கக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, சொத்து மதிப்பைக் காட்டுகின்ற பாஸ் புக் திட்டத்தை நம்முடைய நாட்டிலும் கொண்டுவர வேண்டுமென்பதை இந்த இடத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் டிராக்டர்கள் வாங்கும்போது ஸ்டாம்ப் டியூடி கட்டணமானது குறைந்த அளவுக்கு, 15 ரூபாயாக இருந்தது. இப்போது ஐ.எ.இ.சி. சப்-மெர்ஜிபிள் பம்ப் வாங்க வேண்டுமென்று சொன்னால் 145 ரூபாய் ஸ்டாம்ப் கட்டணம் செலுத்தி, ஆறாயிரம் ரூபாய் கடன் பெறுகிறார்கள். பதினைந்து ரூபாயாக இருந்த இந்தக் கட்டணத்தைத் திடீரென்று இந்த அளவுக்கு உயர்த்தியிருப்பது விவசாயிகளின் தலையில் மேலும் பளுவை ஏற்றிக் கொண்டு போவதாகத்தான் அமையும். விவசாயிகளுக்கு 100-க்கு ஆறு ரூபாய் வட்டிக்குக் சர்க்கார் கடன் கொடுக்கிறது என்றால், இந்த ஸ்டாம்ப் டியூடி கட்டணத்தையும் சேர்த்துக் கொண்டால் வட்டி ஒன்பது ரூபாயாக ஆகிறது. இப்படி அவர்கள் மேல் மேலும் பளுவை ஏற்றுவதன் காரணமாக நாம் எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு நன்மை செய்கிறோம் என்பதைச் சர்க்கார் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி:** சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மான்ய கோரிக்கையின்மீது தரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைப் பேச முன் வந்திருக்கிறேன். வேளாண்மை நடத்துவதற்கு உரம் அவசியம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இந்த நிலையிலே உரம் உழவர்களுக்குத் தாராளமாகக் கிடைப்பதற்குச் சில கஷ்டங்கள் இருப்பதாக முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். குறித்த காலத்தில் உரம் கிடைப்பதில்லை. பயிரிடும் போது மனுக்கள் செய்தால் அறுவடை காலத்தில்தான் அனுமதிச் சீட்டு கிடைக்கிறது. அதோடு ரசாயன உரம் இருக்கிறதே அந்த உரத்தை விட பசுந்தாள் உரம் சிறந்தது என்று எல்லோருக்கும் தெரியும். பசுந்தாள் உரத்திற்கு நாட்டிலே ப்ளெயின்ஸிலே மரங்களை வளர்த்து அதில் இருக்கக்கூடிய பசுந் தழையைக் காட்டிலும், மலைப் பிரதேசத்தில் உண்டாகும் செடிகளின் இலைகள், பசுந்தழைகளை உரத்திற்குச் சேகரித்து வைத்தால் நிச்சயமாக நெல் பயிர்களுக்கு நல்ல சத்துள்ள ஒரு உரமாக ஆகும். எனது பகுதியிலே மலைப்பிரதேசம் இருக்கிறது. அதற்குக் கீழே உள்ள விவசாயிகள் மலையில் இருக்கக்கூடிய அந்தத் தழையைத்தான் உபயோகிப்பது. எனவேதான் அந்தத் தழையை உபயோகிப்பதன் காரணமாக அந்த நஞ்சைகளில் விளையக்கூடிய நெல்லானது சிறந்ததாக இருக்கிறது. குறிப்பாக எனது ஊரான சித்தையன் கோட்டையைப் பற்றி சொல்லாமல் இருக்கமுடியவில்லை. சித்தையன்கோட்டை டொப்பி சம்பா நெல் என்றாலே அதற்கு தனிச் சிறப்பு உண்டு. கனம் அமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும். அதன் விலைகூட மற்ற நெல்களின் விலையைக் காட்டிலும் 2–3 ரூபாய் அதிகமாக இருக்கிறது. ஏனென்றால், அந்த நஞ்சையில் விளையக்கூடிய நெல் அவ்வளவு சிறந்தது. காரணம் அவர்கள் பெரும்பாலும் மலைத் தழைகளை உபயோகிப்பதினால். எனவே நான் யோசனை கூறுவதெல்லாம் மலைத் தழையைச் சேகரித்து, ரிசர்வ் செய்து, மற்ற இடங்களுக்கும் அனுப்பி, நெல் விவசாயம் செய்யக்கூடிய உழவர்களுக்குக் கொடுத்தால் ரசாயன உரத்தைக்காட்டிலும் நல்ல தரமான நெல் உற்பத்தி செய்யக்கூடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக மலைப் பிரதேசங்களில்—காட்டிலாகா அமைச்சருக்குக்கூட சொல்லிக்கொள்கிறேன்—நல்ல தரமான செடிகளை வளர்த்து தழைகளை உற்பத்தி செய்தால் அந்தத் தழைகளை மற்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்து நெல் விவசாயத்திற்கு உபயோகித்து உற்பத்தியை அதிகப்படுத்த முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்தக் கதிர்களைச் சேகரித்து அடிப்பதற்குக் களம்—த்ராஷிங் ஃப்ளோர்—வேண்டும். குறிப்பாக, பெரியாறு ஆற்றுப் பாசனப் பகுதியில் மதுரைக்குப்போகும் சாலை (ட்ரங்க் ரோடு) இருக்கிறது. அந்தச் சாலையை களமாக உபயோகப்படுத்தும் நிர்ப்பந்தம் உழவர்களுக்கு இருக்கிறது. பொதுவாக அங்கு த்ராஷிங் ஃப்ளோர் இல்லாததால் விவசாய மக்கள் அந்தக் கதிர்களை சாலையிலேயே—போக்குவரத்துக்கு இடைஞ்சலாக—அடித்தாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதற்காக சர்க்காரில் காமன் த்ராஷிங் ஃப்ளோர்ருக்காக ஆங்காங்கு பகுதிகளில் நிலம் வாங்கி உழவர்களுக்குக் கொடுத்தால் நிச்சயமாக களம் வசதி இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால், முன்னாளில் ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருந்தன. அவைகளையெல்லாம் ஆகஸ்ட் தியாகிகளுக்குக் கொடுத்துவிட்டதால், இப்போது புறம்போக்கு நிலம் அதிகமாகக் கிடைப்பதில்லை. எனவே காமன் த்ராஷிங் ஃப்ளோருக்கு (**common thrashing floor**) நிலம்சர்க்காரால் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கரும்பு சாகுபடி பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். தென்னகத்தில் பயிரிடக்கூடிய கரும்பு மிகவும் உயர்ந்த ரகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தவித கரும்பு சாகுபடி இருக்ககூடிய பகுதியிலே அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை வேலை இல்லாமல் நின்று இருப்பதாக நேற்று முன் தினம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏன் இவ்விதம் நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் விவசாயிகள் கரும்புகளைக் கொடுக்கவில்லை என்பது. இவ்விதமே தான் மைசூர் மாநிலத்தில் மாண்டியா சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்தச் சர்க்கரை ஆலை சர்க்காரினால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. அந்த சர்க்கரை ஆலைக்கு சர்க்காரே ஏறத்தாழ 1,000 ஏக்கர் நிலம் சொந்தமாக வைத்துக்கொண்டு சர்க்காரே சாகுபடி செய்வதினால்தான், அந்த சர்க்கரை ஆலை நிற்காமல் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது, அந்த முறையில் அமராவதி சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையிலும், சர்க்காரே சொந்தமாக நிலத்தை வாங்கி கரும்பு பயிர் செய்தால் நிச்சயம் வேலை நிற்காமல் சர்க்கரை ஆலை தொடர்ந்து நடக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



அடுத்தபடியாக, திராட்சை போன்ற கனி வர்க்கங்கள் எங்கள் வட்டா 11-30 a.m.
ரத்தில் அதிமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. திராட்சை போன்ற பழங்களை கேன் செய்து குளிர் பதனிட்டு வைத்து வெளிநாடுகளுக்கு அனுப்பலாம். இதற்குத் தகுந்த ஆலையை, ஸ்தாபனத்தை அங்கே ஏற்படுத்தி, வேண்டிய இயந்திரங்களையும் வரவழைத்துக்கொடுத்தால், பழ உற்பத்தியாளர்களுக்கு நல்ல வசதியாக இருக்கும் என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, வேளாண்மை சம்பந்தமான மான்யங்களை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கும்பொழுது தானிய உற்பத்தி 38 லட்சம் டன்களாக இருந்தது. அந்த ஐந்து வருஷ முடிவிற்குள் 44 லட்சம் டன்னாக உற்பத்தி அதிகமாயிற்று. அதற்கு ஐந்தாண்டுகளுக்குப் பிறகு 53 லட்சம் டன்னாக உற்பத்தி அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அறிக்கையில் நல்ல முறையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபற்றி என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதுபற்றி எதிர்க்கட்சி நண்பர் ஒருவர் இது ஏட்டுச் சுரைக்காய், கவைக்கு உதவாது என்று சொன்னது மிகவும் வருந்தத்தக்கது. இரண்டு ஐந்தாண்டுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நெருக்கடியான நேரத்தில் இந்த வருஷத்தில் 2·75 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பது வரவேற்கத்தக்கது. அதோடுகூட 38 லட்சம் டன்களிலிருந்து, 53 லட்சம் டன்களாக தானியம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு, அடுத்த ஆண்டிலே சுமார் 4½ லட்சம் டன் தானியம் அதிகமாக உற்பத்தி செய்வோம் என்று அறிக்கையில் கண்டிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதோடு அந்த நிலைமையை அடைய முடியும் என்று பரீட்சார்த்தமாக செய்து பார்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடுகூட விவசாயிகள் பற்றி எதிர்க்கட்சியினர் பேசும்பொழுது, நல்ல முறையிலே அவர்களுக்கு விலை உயர்வு கொடுக்கவேண்டும், விவசாயக் கூலி அதிகமாக இருக்கிறது, கட்டுபடியாகவில்லை, அவதிப்படுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் சென்ற வருஷத்தில் அவர்களே அட்டைகளை பிடித்துக்கொண்டு ரூபாய்க்கு பக்கா 3 படி அரிசி கொடுக்க வேண்டுமென்று தீவிரமாக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அதனால் லட்சக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. 3 படி அரிசி கொடுக்கவேண்டுமென்றால், நெல் மூட்டை ரூ. 9 விலைக்குத்தான் வாங்கமுடியும். ரூ. 9 விலைக்கு விற்றால், விவசாயிகளின் கதி என்ன? சென்ற ஆண்டில் நகராட்சித் தேர்தல் வந்தபோது, "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூபாய்க்கு 3 படி அரிசி வாங்கிக்கொடுப்போம்" என்று சொல்லி அவர்களை ஏமாற்றி வோட்டுகள் வாங்கும் நிலையில், அன்று ரூபாய்க்கு 3 படி அரிசி கொடுப்போம் என்று சொன்னார்கள். இன்று உபதேர்தல்கள் வருகின்றன, பஞ்சாயத்துத் தேர்தல்கள் வருகின்றன, விவசாயிகளுடைய நம்பிக்கையைப் பெறவேண்டுமென்பதற்காக அவர்களுக்கு இன்று குறைந்த விலை தான் கிடைக்கிறது, அதன் காரணமாக அவர்கள் அவஸ்தைப் படுகிறார்கள் என்று பேசுகிறார்கள். இம்மாதிரி வருடம்தோறும் திட்டத்தை மாற்றிக்கொண்டு பேசுவது, பச்சோந்தி நிறம் மாறுவதுபோல் இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

லோயர் பவானித் திட்டத்தின் மூலம் எங்கள் ஏரியாவில் இப்பொழுது 2 லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் பாய்கிறது. இப்பொழுது 6 மாதம், 8 மாதத்திற்குள் தண்ணீர்முறை தீர்ந்துவிடுகிறது. அந்த ஏரியாவிற்கு எலெக்ட்ரிக் கரெண்ட் கொடுத்தால் எல்லாக் கிணறுகளுக்கும் தண்ணீர்

this may not be an urgent problem, because the prices now ruling for agricultural produce are not unattractive. But, there have been occasions in the past when a downward trend in the prices of agricultural produce had a depressing effect on agricultural production and such occasions may well arise again in the future''. என்று தெளிவாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் விலைகளை நிர்ணயம் செய்கிறார்கள் என்று இங்கு எடுத்துச் சொல்லப்பட்டது.

''The cost of production of rice varies from place to place. Preliminary enquiries undertaken in different districts in the State have shown that the cost of production of rice varies greatly from district to district ''.

என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே விவசாயப் பொருள்களின் விலைகளை நிச்சயமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விலைவாசியை நிர்ணயம் செய்யும்போது காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன் எவ்வளவு என்று பார்த்து விலை நிர்ணயம் செய்யப்படவேண்டும். அதற்கு ஒரு தனிக் கமிட்டி போடவேண்டும். வெளிநாடுகளில் " ப்ரைஸ் பிக்ஸிங் மெஷினரி " என்று ஒரு போர்ட் மூலம் அது இயங்கி வருகிறது. அவர்கள் அறுவடைக்கு முன்பே விலையை நிர்ணயித்து விடுகிறார்கள். அதேபோல் இங்கும் இருக்கவேண்டும். விவசாயிகளின் தரமும் உயர வேண்டும். அவர்களுக்கு உப தொழில்களான காட்டேஜ் அண்ட் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸின் கீழ் அவர்களுக்கு தொழில்கள் கொடுக்கப்பட வேண்டும். பின்னர் அவர்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டும். பின்னர் மற்ற தொழில்கள் போல் விவசாயத்தையும் ஒரு தொழில் என்று மக்கள் நினைக்கும் அளவிற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படவேண்டும். இன்னும் பிற வசதிகளும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு கடன் வசதி நல்ல முறையில் செய்து கொடுக்க வேண்டும். தக்காவி மான்யுவலை மாற்றவேண்டும். அதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. வட்டியில்லாக் கடன்கள், மான்யம் போன்றவை கொடுக்கப்படவேண்டும். கால்நடை அபிவிருத்தி ஏற்படவேண்டும். இப்போது புறம்போக்கு நிலங்களை நிலமாகச் செய்துவிட்டால், மாடுகள் எங்கு சென்று மேய்வது ? இதற்கு, ஒரு சட்டம் கொண்டுவரவேண்டும். பின்னர் தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும். மேலைநாடுகளில் தண்ணீருக்காக மழையை நம்பி இருப்பதில்லை. அங்கு ஸீஸனல் ரெயின்ஸ் பெய்கிறது. பின்னர் "ஸ்டேட் பைவ் (5) இயர் ப்ளான் பார் அக்ரிகல்ச்சர்" என்று தனி ஐந்தாண்டுத் திட்டம் போடவேண்டும் விவசாயத்திற்காக. சிறந்த நிபுணர்களை, சிறந்த விவசாயிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்து விவசாய நிலையைப் பெருக்கவேண்டும். விவசாயிகள் வரியை டிமிக்கி கொடுக்க முடியாது. ஆகவே அவர்கள் மீது போடப்பட்டிருக்கிற வரிகளை புனர் பரிசீலனை செய்து, அதை தள்ளத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு தலைவர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்தமைக்காக என் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. மீ. அழகர்சாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மான்யக் கோரிக்கைகளை ஆதரிக்கிறேன். குறிப்பாக நம்முடைய மாநிலத்திலே, விவசாயத் துறையிலே போற்றத்தக்க முறையிலே வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. கடந்த 10—15 ஆண்டுகளாக மாநில அரசும், மத்திய அரசும் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, மற்ற இதர ராஜ்யங்களைக் காட்டிலும் நமது ராஜ்யத்திலே விவசாயத் துறையிலே பல் வழிகளில் நாம் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். அதற்காக இந்த விவசாயத் துறையிலே பணியாற்றுகிற எல்லோரையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

விவசாயம் நல்ல முறையிலே நடைபெறவேண்டுமானால் அதற்கு வேண்டிய ரசாயன உரங்கள் காலாகாலத்தில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். ரசாயன உர வினியோகத்தில் காணப்படுகிற பல்வேறு குறையாடுகளை இன்று இருக்கக்கூடிய இந்த கூட்டுறவு அமைப்பை பலப்படுத்துவதன்



மூலமாகக் குறைத்துவிட முடியும் என்று நான் நம்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் கலவை உரங்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தக் கலவை உரம் தயார் செய்வதற்கான லைஸென்ஸுகளை வழங்குவதில் அரசு மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். அனுபவம் வாய்ந்த, தொழில் நுட்பத்திறமை வாய்ந்த நல்ல ஸ்தாபனங்களுக்கு இந்தக் கலவை உரமானது தயாரிக்கக்கூடிய லைஸென்ஸுகளைக் கொடுக்கவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். இல்லையேல் இந்தக் கலவை உரத்திலும் கூட கலப்பு ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுவிடும். அதன் காரணமாக, விவசாயமே பாதிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுவிடும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், தென்னை, பருத்தி போன்ற பயிர்களுக்கு இன்ஸெக்ட்டிஸைட்ஸ், பெஸட்டிஸைட்ஸ் எல்லாம் 50 சதவீதம் விலையில் கொடுக்கப்படுகிறது. இதுபோலவே ஆரஞ்சுபோன்ற பல பயிர்களுக்கும் பெஸ்ட்டிஸைட்ஸ் இன்ஸெக்ட்டிஸைட்ஸ போன்றவைகளை 50 சதவீதம் விலையில் கொடுக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எலெக்ட்ரிக் மோட்டார்கள், பம்ப்-செட்ஸ், ஆயில் என்ஜின்ஸ் இவைகளை ஹைர் பர்சேஸ் ஸிஸ்டத்தில் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதே முறையை அனுசரித்து பவர் ஸ்ப்ரேயர்ஸ்களையும் ஹைர் பர்சேஸ் ஸிஸ்டத்தில் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, இந்த மூன்றாவது திட்டத்திலே மண் வளப் பரிசோதனை நிலயம் ஒன்றை மதுரை மாவட்டத்தில் பெரியகுளம் தாலூகாவில் அமைப்பதாக கண்டிருந்தது. இதுவரையில் அந்த பரிசோதனை நிலயம் அமைக்கப்படவில்லை. மதுரை மாவட்டம், குறிப்பாக பழ வர்க்கங்கள் நிறைய விளையக்கூடிய பிரதேசம். காபி, ஏலம் போன்ற பல அன்னியச் செலாவணியைச் சேகரித்துக் கொடுக்ககூடிய பல பொருள்கள் விளையக்கூடிய பல. பிரதேசங்கள் மதுரை மாவட்டத்தில் இருக்கிற காரணத்தினால் மதுரை மாவட்டத்தில் மண் வளப் பரிசோதனை நிலயம் மிக மிக அவசியம் என்று சொல்லி, அதை சீக்கிரமாக அங்கு ஏற்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக் இந்த ஆராய்ச்சி நிலயம் நிறுவுவதற்கும், மாதிரி பழத்தோட்டங்கள் அமைப்பதற்கும் வேண்டிய நிலங்களை காட்டிலாகாவிலிருந்து தான் பெறவேண்டிய ஒரு அவசியம் இருக்கிறது. காட்டிலாகாவிலிருந்து நிலங்கள் மாற்றப்படுவதில் மிகவும் தாமதம் ஏற்பட்டு வருவதை நாமெல்லோரும் பார்க்கிறோம். அதன் காரணமாக பழ ஆராய்ச்சி நிலயம் அமைப்பதிலும், மாதிரித் தோட்டங்களை நிறுவுவதிலும் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டே வருவதையும் நாம் பார்க்கிறோம். ஆகவே அதைத். தவிப்பதற்கு உடனடியாக நிலங்களை அக்ரிகல்ச்சுரல் டிபார்ட்மெண்டுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஃபாரெஸ்ட் டிபார்ட்மெண்ட் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மாநிலத்தில் கோக்கோ பயிர் செய்வதற்கு நல்ல இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்த இடங்களிலே கோடைக்கானல் கீழ் மலைப்பகுதியிலே சிறந்த அம்சங்களோடுகூடிய இடங்கள் இருக்கின்றன. இப்போதுகூட, கோடைக்கானல் பகுதியில், பூளத்தூர் என்ற கிராமத்தில் கோக்கோ பயிர் செய்யப்படுகிறது. சமீபத்திலே அந்தப் பகுதியில் ஒரு பொருட்காட்சி நடத்தினார்கள். அவர்கள் உற்பத்தி செய்த கோக்கோ பழங்களைக்கூட கொண்டுவந்து வைத்திருந்தார்கள். அங்கே நல்ல தரமுள்ள கோக்கோ பயிர் செய்யப்பட்டுவருகிறது. மேலும் நல்ல முறையில் இதைப் பயிர் செய்ய எந்தெந்த வழிகளில் ஊக்கம் கொடுத்து, உற்சாகப்படுத்தமுடியுமோ அந்த வழியில் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோக்கோவுக்கு மாதிரியாக ஒரு பண்ணை அமைக்க ஏற்பாடு செய்துவருகிறார்கள். ஆகவே இந்தப் பண்ணையை அமைப்பதற்குத் தகுதியான இடம் அந்தப்பகுதி என்று சொல்லி, அந்தப் பகுதியிலே இந்த மாதிரிப் பண்ணையை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

களா என்றால், யாரும் வெட்டுவதில்லை. கணக்குக் காட்டி பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். இப்படி விவசாயிகளுக்கு முழுத் தொகையும் போய்ச் சேருவதில்லை. அவர்களுக்கு போதுமான அளவு கடன் கொடுக்கப்படுவதும் இல்லை. நஞ்சை ஒரு ஏக்கருக்கு ரூ. 250 வீதம் விவசாயச் செலவிற்காகக் கடன் கொடுக்கிறார்கள். ஆற்றுப் பாசனம் உள்ள இடங்களிலே வேண்டுமானால் இது போதுமானதாக இருக்கலாம். ஆனால் கேணியிலிருந்து இறைத்து விவசாயம் செய்யக்கூடிய பகுதிகளுக்கு இந்தத் தொகை போதாது. பிண்ணாக்கு வாங்குவதற்கே இந்தத் தொகை போதுமானதாக இல்லை. மேற்கொண்டு ஏற்படுகிற செலவுகளுக்கு மண்டிக் கடைக்காரர்களிடம் போய் கடன் வாங்கி விவசாயம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. அதன் மூலம் மண்டிக்காரர்களிடம் விவசாயிகள் கட்டுப்படக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. இந்தக் கடனைத் திரும்ப நெல்லாகவே கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. அதன் மூலமாக விவசாயிகள் நஷ்டம் அடைகிறார்கள். அபிவிருத்தி என்ற இனத்திலே செலவு செய்யப்படுகிற பெரும் பகுதித் தொகை சரியான முறையில் செலவிடப்படவில்லை. விதைகள் உற்பத்திக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அரசாங்கப் பண்ணைகள் நல்ல முறையில் செயல்படவில்லை என்று கூறப்படுகிறது. விவசாயக் கருவிகள் வழங்குவதிலே, எந்தெந்த கருவிகள் எந்தெந்தப் பகுதிக்குத் தேவையானது என்று ஆராய்ச்சி செய்யாமல், வற்புறுத்தலின் பேரில் விவசாயிகள் எடுத்துத்தான் தீரவேண்டுமென்ற முறையில், அவர்களுக்குத் தேவையில்லாத கருவிகள் கொடுக்கப்படுகின்றன. அதைப்போன்று விவசாயி போர் வெல் போட வேண்டுமென்று மனுச் செய்தால் காலாகாலத்தில் கொடுப்பது கிடையாது. அப்படி கருவிகள் வழங்கினாலும் அந்த இலாகாவிலே லஞ்ச ஊழல் அதிகமாக இருக்கிறது. போர் வெல்லே வேண்டாம் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சிறிய பாசனத் திட்டங்களுக்கு செலவு செய்யக்கூடிய தொகையும் ஒழுங்கான முறையில் செலவிடப்படவில்லை. இந்த வகைகளில் எல்லாம் விவசாயிகளுக்காக செலவாகின்ற பணம் சரியான முறையில் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. அதே நேரத்தில் கால்நடை அபிவிருத்தியும் போதுமான அளவில் இல்லை. மீன் வளத்தை அதிகரிப்பதற்குப் பணம் செலவிடப்படுகிறது. ஆனால் அந்தப் பணம் சரியான முறையிலே செலவிடுவதற்கு. பஞ்சாயத்து யூனியன்களுக்குப் போதுமான அதிகாரிகள் கொடுக்கப்படாததினால், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அந்தப் பணம் மீதியாகிக் கொண்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

*திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் விவசாய மானியக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். நம் நாடு பரப்பளவிலே விரிந்த ஒரு நாடு. நம் நாட்டின் பிரதான தொழில் விவசாயம். ஒரு மனிதனுடைய முதுகெலும்பு போல் இருக்கிறது ஒரு நாட்டின் விவசாயம். ஆகவே, விவசாயத் துறையில் தன்னிறைவு பெறுவதுதான் நமது அரசாங்கத்தின் லட்சியமாக இருந்துவருகிறது. அந்தத் தன்னிறைவைப் பெறுவதற்காக பல திட்டங்களைத் தீட்டி, அவற்றை நடைமுறையில் கொண்டு வந்து, உற்பத்தியைப் பெருக்கும் வகையில் விவசாய இயக்குநர் அவர்களும், அந்தத் துறையைச் சார்ந்த பல்வேறு துறையினரும் பாடுபட்டு வருவதைக் குறித்து நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் தமிழ் நாட்டில் பல்வேறு விவசாயப் பொருள்களின் சராசரி உற்பத்தி அகில இந்திய சராசரியைவிட மிகவும் உயர்ந்திருக்கிறது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் திருந்திய சாகுபடி முறைகள், உரங்கள், தக்க காலத்தில் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தல், இவைகள் தான் என்று சொன்னால் அது மிகையாகாது. தரமான விதைகள் கிடைப்பதற்கு கிராம சகாயக்குகள் மூலம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்காக அரசாங்க விதைப் பண்ணைகளை ஏற்படுத்தி தரமான விதைகள் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த முறையிலே நம்முடைய விவசாயம் முன்னேற்றமடைந்து,





ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் நாம் போட்டிருக்கிற லட்சியத்தை அடைந்து கொண்டு வருகிறோம். எனக்கு ஞாபகம் நன்றாக இருக்கிறது. 1957 தேர்தல் முடிந்த பிறகு இந்தச் சட்டசபையில் பல அங்கத்தினர்கள் ரசாயன உரம் கிடைக்கவில்லை, பம்பு செட்டுகள் கிடைக்கவில்லை என்றெல்லாம் கூறிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது அந்தக் குரல் இல்லை. இன்றைக்கு முறையாக விவசாயிகள் என்ன வேண்டுமென்று கேட்கிறார்களோ அவற்றை அவர்களுக்கு வேண்டிய அளவு கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். பம்பு செட்டுகள் வேண்டும் என்று கேட்கிறவர்களுக்கு எல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதெல்லாம் நமக்கு எந்த விதமான சங்கடமும் இல்லை. பல துறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறோம். இது கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்களுடைய பேச்சுக்களிலிருந்து நன்றாக தெரியவரும்.

ஆனால் இப்பொழுது ட்ராக்டர்கள் கிடைப்பதில் கொஞ்சம் சங்கடம் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு ட்ராக்டர்கள் கொடுக்கப்பட வேண்டும், கடன் கொடுக்கப்பட வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டம் இன்னும் நடைமுறைக்கு வேகமாக வரவில்லை. பலர் ட்ராக்டர்கள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் கூட ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று கொடுத்தாலும் நன்றாக இருக்கும். அதை வைத்துக்கொண்டு இங்கே இருக்கிறவர்கள் முறையாக அதை எடுத்து உபயோகித்து இன்னும் வெள்ளாண்மையை பெருக்குவதில் முயற்சி எடுத்துக்கொள்ளுவார்கள் என்று தெரிய வருகிறது. ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் இதை உடனடியாக கவனித்து ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒவ்வொரு ட்ராக்டரைக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை கனம் அமைச்சர் அவர்கள் கவனிப்பார் என்றே நினைக்கிறேன்.

இன்னொரு விஷயம் என்னவென்றால் விவசாயிகளுக்கு சிமெண்ட் கிடைப்பது என்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. விவசாயிகளுக்கு எதற்கு சிமெண்ட் என்று கேட்கலாம். அவர்கள் தண்ணீர் பாய்ச்சுகிற வாய்க்கால்களுக்கு ரிபேர் செய்ய வேண்டியதாக இருக்கலாம். தண்ணீர் தொட்டிகள் கட்ட வேண்டியதாக இருக்கலாம். இதற்காக அவர்களுக்கு சிமெண்ட் தேவையாக இருக்கிறது. ஆனால் சிமெண்ட் வேண்டும் என்று அப்ளிகேஷன் போடும்போது "உங்களிடத்தில் ப்ளான் இருக்கிறதா" என்று கேட்கிறார்கள். சிறிய வாய்க்கால்களை ரிபேர் செய்வதற்கும் தொட்டிகளை கட்டுவதற்கும் அவர்களிடத்தில் ப்ளான் ஏது?. ப்ளானை எங்கிருந்து கொண்டுவரமுடியும். ஆகவே அவர்களால் இதற்கெல்லாம் ப்ளான்களைக் கொண்டு வர முடியாது. அதனால் அங்குள்ள ஆபீஸர்கள் அதிகாரிகள் நேரடியாகச் சென்று பார்த்து ரிபேர் செய்யக்கூடிய வாய்க்கால் இருக்கிறதா தொட்டி கட்ட வேண்டியதாக இருக்கிறதா என்று பார்த்து அவர்களுக்குத் தேவையான சிமெண்டைக் கொடுக்கும் படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப் படியாக மதுரை மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்துவதாக முடிவாகி இருப்பதை குறித்து என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கான முன்னேடி காரியங்கள் எல்லாம் இப்பொழுது செயல் முறையில் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதே போன்று விவசாயக் கல்லூரியில் இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற சீட்டுகள் குறைவு. அதனால் இன்னும் அதிகப்படியான சீட்டுகளை அங்கு அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது எல்லாம் கல்லூரிகளிலும் மாணவர்கள் அதிகமாக வந்து படிக்க வேண்டும் என்று வருகிறார்கள். ஆகவே அந்தக் கல்லூரியில் இப்பொழுது இருப்பதை விட இன்னும் அதிக மாணவர்களைச் சேர்க்க வாய்ப்பு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: கனம் தலைவர் அவர்களே இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து எனக்குத் தெரிந்த சில யோசனை சொல்ல விரும்புகிறேன்.

வருவதற்கு வகை ஏற்படும். நமக்கு பருத்தி பற்றாக்குறை இருக்கிறது மூன்று வருஷங்களாக. 4,86,000 பேல்கள் வரையிலே அதிகமாக உற்பத்தி செய்யமுடியும். சாதாரணமாக வறண்ட காலத்தில் பருத்தி பயிரிட்டால், 50,000 பேல்கள் அதிகமாக உற்பத்தி செய்யமுடியும். ஆகவே, பருத்தி போடுவதற்கு அனுகூலமாக மொத்தமாக கரெண்ட் விநியோகிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஏரியாவில் விவசாயிக்கு ஒரு தோட்டம் இருந்தால், 10, 15 ஏக்கர்கள் இருந்தால் சில இடத்தில் கிளர் மண் இருக்கிறது, செங்கட்டை மண் இருக்கிறது, கருங்கட்டை மண் இருக்கிறது. இவைகளுக்கெல்லாம் எந்த மாதிரி உரம் எந்த மாதிரி முறையில் போடவேண்டும் என்று விவசாயிகளுக்கு அதிகாரிகள் சென்று விளக்கவேண்டும். உரத்தை நல்ல முறையில் விநியோகித்தால் மட்டும் போதாது, அதை எப்படி உபயோகிக்க வேண்டும், எந்த மண்ணிற்கு எந்த மாதிரி உரம் போடவேண்டும் என்பதை அதிகாரிகள் விவசாயிகளுக்கு நல்ல முறையில் சொல்லிக் கொடுத்தால்தான் உற்பத்தியை அதிகமாக பெருக்கமுடியும். எங்கள் ஜில்லாவில் இப்பொழுது ஒரு கலப்பை வந்திருக்கிறது. அந்த கலப்பை நல்ல முறையில் கீறுவதில்லை, உழுவதில்லை. தஞ்சாவூர் மண்ணில்தான் அதனால் நல்ல முறையில் உழ முடியும். எங்கள் கோவை ஜில்லாவில் மண் மிகவும் கடினமாக இருப்பதினால், அந்த அளவுக்கு கலப்பை குறுக்கே பாய்ந்துகொண்டு ஓடுகிறது. "சூபர் 30" என்று 10 வருஷங்களுக்கு முன்பு பெரிய கலப்பைக் கொடுக்கப்பட்டது. அது நல்ல முறையில் உழுகிறது. ஆகவே, கலப்பையை மாற்றிக்கொடுத்து நல்ல முறையில் நன்றாக உழுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. செல்லய்யா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1963–64ம் ஆண்டுக்கான விவசாய மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். விவசாயத் துறையில் நமது மாநிலம் வேகமாக முன்னேறியிருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தான்ய உற்பத்தி 38 லட்சம் டன்னாக இருந்தது, இப்பொழுது 53 லட்சம் டன்னாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது குறித்து அமைச்சர் அவர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியாகிய ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள ஒரு சில தேவைகளைப்பற்றி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பல ஆண்டுகளாக இந்த மன்றத்தில் சுட்டி காட்டப்பட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இந்த மன்றத்தின் உறுப்பினர் கூறியது போல ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் பெரியகுளம் கண்மாய் இருக்கிறது. இந்தக் கண்மாயில் 10 வருஷங்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் நிரம்பியிருக்கும். இந்த ஆண்டில்கூட கண்மாய் நிரம்பாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு, நெல்லை சாவியாக அறுக்கவேண்டிய நிலைதான் ஏற்பட்டது. அந்த நிலையிலே சிறிய நீர்ப்பாசன திட்டத்தின் கீழே சின்னையங் கோட்டை அணைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி, ஸ்ரீவில்லிப்புத்தூர் விவசாய மக்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் சுந்தரபாண்டியம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கு கிட்டத்தட்ட 500 ஏகரா நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. 500 ஏகர் நிலங்களில் ஹரிஜனங்களுக்கு மாத்திரம் 400 ஏகரா நிலங்கள் சொந்தமாக இருக்கின்றன. அங்கு புதிய கண்மாய் ஒன்று கொண்டுவரவேண்டும் என்று கிட்டத்தட்ட 10 ஆண்டு காலமாக அங்குள்ள மக்கள் முயற்சி செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால், இந்த ஆண்டில்தான் விவசாயத் துறை அமைச்சரிடம் நேரிடையாகச் சொல்லி, எப்படியாவது இந்த ஆண்டில் கண்டிப்பாக அங்கே கண்மாய் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டதின்பேரில், அதற்கான முயற்சிகள் செய்திருக்கிறார்கள். அதற்காக எங்கள் வட்டார விவசாய மக்கள் சார்பாக கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்தபடியாக, ஸ்ரீவில்லிபுத்தூர் பஞ்சாயத்து யூனியனிலே ஒரு கால்நடை ஆஸ்பத்திரியைக் கட்டவேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்களும், மாவட்ட கலெக்டர் அவர்களும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நெருக்கடி நிலைமையை உத்தேசித்து அந்த ஆஸ்பத்திரியை இப்பொழுது கட்டமுடியாது என்று சர்க்கார் உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஆஸ்பத்திரிக்கு மதிப்பிற்குரிய சிவாஜி கணேசன் அவர்கள் ரூபாய் 5,000 கொடுப்பதாக வாக்களித்து, அதிலே ஒரு பகுதித் தொகையை இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் மான்யம் கொடுத்தால், இதையும் சேர்த்துவைத்து ஆஸ்பத்திரி கட்டலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நெருக்கடி காலமாக இருந்தாலும், விவசாயத்திற்கு கால்நடை இன்றியமையாததாக இருப்பதால், இந்த ஆஸ்பத்திரியை உடனடியாகக் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

அடுத்து, ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூக்காவிலே பாசன வசதியைப் பெருக்குவதற்கு பிளவக்கல் ரிசர்வாயர் திட்டம் சர்க்காரின் பரிசீலனையில் இருந்தது. அந்தத் திட்டத்தை கொண்டுவந்தால், கிட்டத்தட்ட 5,000 ஏகருக்குமேல் தண்ணீர் வசதி கிடைக்கும். ஸ்ரீவில்லிப்புத்தூர், சிவகாசி, சாத்தூர் போன்ற இடங்களுக்கு அர்சுன நதியிலிருந்து தண்ணீர்கொண்டு போவதற்கு வழிவகை ஏற்படும். ஆகவே, கூடிய சீக்கிரத்தில் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. து. ப. அழகமுத்து :** சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவாதத்திற்கு வந்திருக்கிற மான்யக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து, என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாய அபிவிருத்திக்காக ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டு வருகிறது. அப்படி செலவாகின்ற பணத்திற்குச் சாட்சியங்களாக எருக்குழிகள், ஜப்பானிய சாகுபடி முறை பழத் தோட்டம் என்கின்ற பெயர்ப் பலகைகள் சாலை ஓரங்களில் விளம்பரங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. செலவின் மூலமாக ஏற்பட்ட அபிவிருத்திக்கு கணக்குகள் பட்ஜெட்டிலும், அமைச்சர் அவர்கள் அறிக்கையிலும் பிரமிக்கத் தக்க வகையிலே புள்ளி விவரங்களுடன் கொடுக்கப்பட்டிருகின்றன. இவற்றையெல்லாம் உறுதி செய்யும் வகையிலே விவசாயிகளுக்கு கிருஷி பண்டிட்டுகள் என்ற பட்டமும் கொடுக்கப்படுகிறது. ஆனால் நாட்டிலே விவசாய அபிவிருத்தியின் காரணமாக விலைவாசிகள் குறைந்திருக்கின்றனவா என்று பார்த்தால், நெல் விலையைத் தவிர வேறு எந்தப் பொருளின் விலையும் குறைந்ததாகத் தெரியவில்லை. நெல் விலைக் குறைவு கூட தற்காலிகமாக இருக்கமுடியுமே தவிர, நிரந்தரமாக இருக்கமுடியாது. விவசாய அபிவிருத்தி ஏற்பட்டு இருக்கிறது என்று கூறுவதன் மூலமாக, நாட்டிலேயுள்ள மக்கள் அந்த அபிவிருத்தியால் ஏற்பட்ட நிலைமையை அனுபவிக்கத் தகுந்த ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று கூறமுடியாது. விவசாயத்திற்காக ஒதுக்கப்படுகிற பணத்தை பல வகைகளிலே செலவிடுகிறார்கள். மான்யமாகக் கொடுக்கிறார்கள், கடனாகவும் கொடுக்கிறார்கள், கருவிகள் வாங்குவதற்குக் கொடுக்கிறார்கள், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் செலவிடுகிறார்கள், ஆராய்ச்சிக்காகவும் செலவிடுகிறார்கள். இதிலே மான்யமாகக் கொடுக்கிற பணம் விவசாயிக்கு முழுவதும் போய்ச் சேருவதில்லை. நான் இதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். கிணறு வெட்டுவதற்கு ரூ. 500 மான்யமாகவும், ரூ. 1,500 கடனாகவும், ஆக ரூ. 2,000 கொடுக்கிறார்கள். இதிலே மான்யமாகக் கொடுக்கப்படுகிற ரூ. 500–ம் விவசாயிக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்தக் கடனை வாங்குவதற்கு முன்பு யார் யாரைப் போய் பார்க்கவேண்டுமோ, அவர்களுக்கெல்லாம் லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ மான்யத்திலே பாதித் தொகையை லஞ்சமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. மீதிதான் விவசாயின் கைக்குப் போய்ச் சேருகிறது. எருக்குழிக்கு ரூ. 6 கொடுக்கிறார்கள். உள்ளபடியே எருக்குழி வெட்டுகிறார்

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [11th March 1963

கல்வி சம்பந்தமாக, இப்பொழுது ப்ரொபெஸர்கள் அப்பாயிண்ட்மெண்ட் எல்லாம் பார்க்கும் போது எம். எஸ். சி. போஸ்ட் க்ராடுவேட்களைப் போடுகிறார்கள். அதனால் பல தடங்கல்கள் ஏற்படுகின்றன. ஐந்தாறு வருடம் படித்துவிட்டு எம். எஸ். சி. அக்ரிகல்சர் பாஸ் பண்ணிய அவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டியது அவசியம். அதை விட்டு விட்டு வெறும் பாட்டனி எம். எஸ். சியை போட்டால் எம். எஸ். சி. போஸ்ட் ராடுவேட்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளாமல் போய் விடுகிறது. இதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அது போக தென்னை அபிவிருத்திக்கு அசிஸ்டெண்ட் டெவலப்மெண்ட் ஆபீஸரை ஒரு ஜில்லாவிற்கு ஒன்று வீதம் போட்டிருக்கிறார்கள். ஆர். டி. எல். ஏ. கீழ், பஞ்சாயத்துகள் தென்னை, அபிவிருத்தி நடத்தப்பட்டு வருவதால் ஒரு ஜில்லாவிற்கு ஒரு டெவலப்மெண்ட் அசிஸ்டெண்டைப் காணாது. அல்லது மேற்படி அசிஸ்டெண்ட் கீழே அதிகப்படியான (Field men) நியமித்தால் நலம் என்று நினைக்கிறேன்.

அது போக விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும், உரங்கள் கொடுக்கப்படுகிறது. எந்தெந்த உரங்களை எந்தெந்த இடங்களில் உபயோகப்படுத்தலாம் என்பதைச் சொல்ல வேண்டும். அது சாயில் டெஸ்டிங் மூலமாகத்தான் முடியும். ஆனால் இப்பொழுதுள்ள டெஸ்டிங் யூனிட்டுகள் ரொம்பவும் குறைவாக இருக்கிறது. ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒன்று வீதம் இருந்தாலும் எந்தெந்த இடத்திற்கு எந்தெந்த உரம் தேவை என்பதைக் கண்டுபிடித்து அந்தப்படி கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். அந்த முறையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுபோக பழ அபிவிருத்திக்கு மாடல் ஆர்ச்சர்ட் பாரங்கள் இருக்கின்றன. இப்பொழுதுள்ளபடி இல்லாமல் புல் ஆர்ச்சர்ட் பாரம் அமைத்து பழங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்கள் அக்ரிகல்சர் மேல்பார்வைக்கு ஒரு டெக்னிகல் ஆளாகத்தான் இருக்க வேண்டும். டெக்னிகல் ஆளாக இருந்தால் தான் பணத்தை எப்படி நல்ல முறையில் செலவு செய்யலாம் என்பது தெரியும். அந்தப் பொறுப்பை அந்த டிபார்ட்மெண்ட் டெக்னிகல் ஹெட்டுக்குக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவருக்கு எப்படி அந்தப் பணத்தை நல்ல முறையில் செலவு செய்ய வேண்டும் என்பது தரியும். ஆகவே எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் அக்ரிகல்சர் பொறுப்பை டெக்னிகல் ஹெட்டுக்குக கொடுக்க வேண்டும் என்ற யோசனையைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக ந்யூக்லியஸ் சீட்ஸ். இப்பொழுது ந்யூக்லியஸ் சீட்ஸ் தரம் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதன் பொறுப்பு யாருக்காவது இருக்கவேண்டும். யாராவது ஒருவரை இதற்குப் பொறுப்பு என்று வைத்து விட்டால் ந்யூக்லியஸ் சீட்ஸ் எப்பொழுதாவது குறைவாக இருக்கிறது என்று சொன்னால் அவர் மீது பொறுப்பை சுமத்தலாம். அப்பொழுது நல்ல முறையில் விதைகளை தயாரிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்கள்.

அடுத்தபடியாக புறம்போக்கு சம்பந்தமாக இதன் முழு கண்ட்ரோல் விவசாய இலாக்காவில் இல்லை. அபிவிருத்திபண்ண வேண்டும் என்று கேட்டால் ரிவினியூ இலாக்காவைக் கேட்க வேண்டியதாக இருக்கிறது. கம்போஸ்ட் உர குழிகள் போடவோ அல்லது தழை உரம் போடவோ நிலத்தை ரிவினியூ இலாக்காவைக் கேட்க வேண்டியதாக இருக்கிறது. இந்த பூரா அதிகாரத்தையும் விவசாய இலாக்காவிற்கு கொடுத்தால் விவசாயம் சம்பந்தமாக அபிவிருத்திக்கு வழி ஏற்படும்.

அது எஸ். எம். ஐ. பி. சம்பந்தமாக சில யோசனை சொல்ல விரும்புகிறேன். கம்யூனிடி வெல்ஸ் அங்கங்கே வெட்டவேண்டும். அங்கங்கே இருக்கக்கூடிய இடங்களை ஒன்றாகச்சேர்த்து கிணறுகளை வெட்டிக் கொடுத்து விவசாயத்தை இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்யலாம்.



11th March 1963] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

அது போக ரிமாடலிங் ஸ்கீம் டேகன் ஓவர் எஸ்டேட்களில் எஸ். எம். ஐ. பி. நடத்தவேண்டும்.

கால்நடை சம்பந்தமாக ஒரே ஒரு வார்த்தை. இப்பொழுது இந்த மாகாணத்தில் கால்நடைகள் நல்ல அபிவிருத்தி அடைந்துக்கொண்டு வருகிறது. ஆனால் அவைகளுக்கு மேய்ச்சல் நிலம் கிடையாது. **Each district should have a salvage farm.** கால்நடை அபிவிருத்திக்குத் தேவையான Cattle food தயார் செய்யப்படவில்லை. அவைகளுக்கு வேண்டிய மேய்ச்சல் நிலங்களை ஒதுக்க வேண்டும். **Each district should have a salvage farm or grazing farm** என்று சொல்லிக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தகுதி மிக்க சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பொதுவாக விவசாய உற்பத்திக்கு அதிகமான தொகை ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்தாலும்கூட எந்த அளவில் செலவு செய்யப்பட்டிருக்கிறதோ அந்த அளவில் விவசாயிகள் பலன் அடைந்திருக்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல முடியும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக முயற்சிகள் எடுக்கப்படும் அதிகப்படியான உணவு உற்பத்தியை பெருக்கி இருப்பதாக கணக்குச் சொல்லலாம். ஆனால் உணவு உற்பத்தியை பெருக்கி இருந்தும் விவசாய உழவர்களுடைய குடும்பம் முன்னேற்றமடைந்திருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்லலாம். இந்த மன்றத்தில் பேசிய எல்லா கட்சி அங்கத்தினர்களும் சொல்லுகிற மாதிரி "உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது", என்ற ஒரு பழமொழி இருப்பது போன்று இன்றைக்கு விவசாயிகளுடைய நிலைமை இருக்கிறது. அந்த முறையில் அவர்கள் முன்னேற்றமடையவில்லை பலன் அடையவில்லை என்றும் சொல்லலாம். அதைப் பார்க்கின்ற போது, உண்மையிலே விவசாயிகள் இன்னும் முன்னேறவில்லை என்பது நன்கு 12-00 noon.
புலனாகிறது. விவசாயத்துறை எந்த அளவுக்கு முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதை பார்க்கின்றபோது, காலையில் தொழில் அமைச்சர் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள், "தொழில் வளம் பெருகவேண்டும் என்று சொல்கிற நாம் விவசாயத்தைப் பற்றி எப்படிச் சொல்வது" என்று. அதைப் பார்க்கின்றபோது, விவசாய நிலங்கள் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகின்றன என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். வீடு கட்டும் திட்டமாக இருந்தாலும் சரி, தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டமாக இருந்தாலும் சரி, சாலைகள் அமைக்கும் திட்டமாக இருந்தாலும் சரி, வேறு எந்தத் திட்டமாக இருந்தாலும், அவைகளுக்கெல்லாம் நிலங்கள் எடுத்துக்கொள்ளபட்டு வருகின்றன. நிலம் என்பது வளரும் ஒன்றல்ல. தொழில் வளரக் கூடியது. பல உற்பத்தித் திட்டங்களைப் பெருக்குகின்ற காரணத்தால் நிலத்தின் பரப்பளவு நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகிறது. சாதாரணமாக, இப்பொழுது எந்தக் கிராமத்தை எடுத்துக்கொண்டாலும் கூட, பல வீடு கட்டும் திட்டங்களுக்கு அயன் நஞ்சை நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. அப்படிப் பார்த்தால், அந்த ஊரில் நிலத்தின் பரப்பளவு குறைந்து வருகிறது. ஆனால், உற்பத்தியைப் பெருக்கும் உழவர்களுடைய தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது. உழவர்கள் ஒரு பக்கம் பெருகிக்கொண்டு வரும்போது, உழவு நிலங்கள் குறைந்து கொண்டே வந்தால் உண்மையிலேயே எந்த அளவு உற்பத்தி பெருக முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அரசாங்கம் உழவர்களுக்குப் பல காரியங்களைச் செய்துக்கொடுக்க முன்வரவேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய ஒரு கனம் உறுப்பினர், "முனிசிபல் தேர்தலுக்காகவும், பொதுத் தேர்தலுக்காகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மூன்றுபடி அரிசி போடுவதாகச் சொன்னார்கள்" என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் சொன்னது—அரசாங்கம் மூன்று படி அரிசி கொடுக்கவேண்டும் என்று சொன்னோம். அது எங்களுடைய அரசாங்கமாக இருந்தால் நாங்கள் செய்யவேண்டும். இப்பொழுது காங்கிரசுக் கட்சி அரசாங்கமாக இருக்கும் காரணத்தால் அந்தத் திட்டத்தை அவர்கள் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். "எப்படி முடியும்?" என்று கேட்கணும். நேராக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கின்ற பொறுப்பை

அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதை அவர்கள் குறைந்த விலைக்குக் கொடுக்கின்றபோது, வேறு நஷ்ட ஈடாவது கொடுக்கலாம். உதாரணமாக, யுத்த காலத்தில் அதிக விலைக்கு அரிசியைக் கொள்முதல் செய்து, பல இடங்களில் தொழிலாளர்களுக்குக் குறைந்த விலையில் கொடுத்து, அதன் நஷ்டத்தை மத்திய சர்க்காரோ, மாநில சர்க்காரோ தாங்கிக்கொண்டிருந்தது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுறுத்த ஆசைப்படுகிறேன்.

அதைப் போலவே, பல திட்டங்களுக்கு நிறையப் பணம் ஒதுக்கப்பட்டாலும், அது சரியான வகையில் செலவழிக்கப்படவில்லை என்பதை நாங்கள் மாத்திரமல்ல, இந்த மானியத்தை வரவேற்றுப் பேசியவர்கள் முதலில் வரவேற்றுவிட்டு, அதற்குப் பிறகு அதிலிருக்கும் குறைகளை எடுத்துச்சொன்னார்கள். ஆக, அதிலே குறைபாடு இருக்கிறது என்பதை எல்லோரும் நிச்சயமாக ஒத்துக்கொள்ள வேண்டும். பல இடங்களில் கடன் வாங்குவதில் பல குறைகள் இருக்கின்றன. உர விநியோக முறைகளில் ஊழல்கள் இருக்கின்றன. இப்பொழுது உரம் அதிகமாகத் தேங்கியிருக்கிறது என்றாலும் கூட, அந்த உரம் காலாகாலத்தில், எந்த நேரத்தில் எந்தப் பயிருக்கு எந்த உரம் போடவேண்டும் என்று பார்த்து தேவையான பகுதிக்கு அது நிச்சயமாக அனுப்பப்படுவதில்லை. கார் பயிருக்கு ஏதாவது உரம்போட வேண்டுமென்றால சம்பா பயிருக்கூட உரம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஒரு பகுதியில் உரம் தேங்கியிருக்க, இன்னொரு பக்கத்தில் உரம் கிடைக்காத நிலையில் விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். எனவே, அவைகளையெல்லாம் பார்த்து ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிணறுகள் தோண்டுவதற்குப் பவர் ட்ரில்கள் விவசாயிகளின் உதவிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன என்று திட்டம் இருக்கிறது. எங்கள் திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கு மூன்று பவர் ட்ரில்கள் வைத்திருக்கிறார்கள். அந்த மூன்றும் எல்லா நாட்களும் வேலை செய்கின்றனவா என்றால், இல்லை. அவை பல நாட்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. ஒரு விவசாயி கிணறு தோண்டுவதற்காக ஒரு பவர் ட்ரில்லைக் கொண்டுபோய் வைத்து, ஒரு அடி தோண்டிக்கொண்டிருக்கும் போதே ஏதாவது ஒரு சாமான் கழன்று விழுந்துவிடும். அந்த நிலையில் அந்தப் பவர் ட்ரில் அங்கேயே கிடக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். அங்கிருந்து அது பழுதுபார்க்கப்பட்டு வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுவதற்கு அதிகக் காலம் பிடிக்கிறது. இதிலே பல ஊழல்கள் இருக்கின்றன. திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கிருக்கும் இன்ஜினீருக்கும், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினருக்கும், அரசாங்கத்திற்கும் கூட சில மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. பவர் ட்ரில்கள் வழங்கப்படுவதில் இருக்கும் குறைபாடுகளினாலும், அங்கு நடக்கும் ஊழல்களினாலும், அதிலிருக்கும் பல தவறான காரியங்களினாலும் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற தொல்லைகளையெல்லாம் நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவைகளைத் தயவுசெய்து அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கலப்பை கொடுப்பதைப்பற்றி ஒருவர் குறிப்பிட்டார். தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்றதல்ல என்பது மட்டுமல்ல. பொதுவாக இலாகாவின் மூலமாகக் கொடுக்கும் கலப்பைகள் சாதாரணமாக ஒருவர் செய்துத்தரக் கூடியதைவிட அதிக விலையுள்ளவைகளாக இருக்கின்றன. அந்தக் கலப்பை சரியாக உழுகிறதா என்று பார்த்தால், தணிவு சரியாக வைக்காத காரணத்தால் அது சரியாக உழுவது கிடையாது. தனிப்பட்டவர்களிடத்தில் கலப்பை வாங்கும்போது, அது சர்க்கார்க் கலப்பையைவிடக் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றது. இதைப்பற்றிக் கூட சென்ற மாவட்ட வளர்ச்சிக் கழகக் கூட்டத்தில் நாங்கள் எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

விதைப் பண்ணைகளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். விதைப் பண்ணைகளில் எந்த அளவுக்குப் பொறுக்கு விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்று பார்த்தால், என்னுடைய தொகுதியில் ஒரு விதைப் பண்ணை மூன்று ஆண்டுக் காலமாக நடந்து வருகிறது. நான்





சமீபத்தில் சென்று பார்த்தபோது, அது இன்னும் சரியாகச் செயல்படாத நிலைமையில் இருக்கிறது. அவைகளையெல்லாம் திருத்தியமைக்கவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்ற நிலையைப் போக்கி உழவனுக்கு ஏதாவது மிஞ்சுகிற அளவுக்கு வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. பி. ஜயராஜ் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் விவசாய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் வேளாண்மைத் துறை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன். நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததற்குப் பிறகு, விவசாய உற்பத்திப் பெருக்கம் சென்னை மாநிலத்தில் எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. சென்ற 15 ஆண்டுகளுக்கு முன்னால், விவசாயம் என்றாலே என்ன என்று தெரியாதவர்கள், நிலம் என்றால் எங்கே இருக்கிறது என்று கேட்டுக்கொண்டு, நகரத்தில் குடியேறியிருந்த விவசாயிகளும் நிலச் சுவாந்தார்களும் இன்று நிலத்தை நாடிச் செல்லும் அளவுக்கு விவசாய உற்பத்தி பெருகியிருக்கிறது. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், ஒரு ஏக்கருக்கு ஆறு மூட்டை நெல் விளைந்துகொண்டிருந்தது, 15 ஆண்டுகளுக்கு முன். இப்பொழுது ஏக்கருக்கு இருபது மூட்டை நெல் விளையும் அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது. இதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. "விவசாய உற்பத்தி பெருகவில்லை, ஏதோ ஏட்டளவில் தான் புள்ளிவிவரங்கள் காட்டுகிறார்கள்", என்று இந்த அரசாங்கத்தைப் பற்றிக் குறை கூறுகிறார்கள் ஒரு சில கனம் அங்கத்தினர்கள். அது சரியல்ல. இன்று விவசாயம் செய்கின்ற ஒவ்வொரு விவசாயியும் எந்த அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார், அதற்காக எந்த அளவுக்கு இந்த அரசாங்கம் வழிவகுத்துக்கொடுக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அரசாங்கம் செய்துகொடுக்கும் உதவியின் காரணமாக நாட்டில் வளம் பெருகி, விவசாய உற்பத்தி பெருகி, அதன் காரணமாக நிலங்களின் விலை உயர்ந்திருக்கிறதென்பதைப் பார்க்கிறோம். 10, 15 ஆண்டுகளுக்கு முன் ஒரு ஏக்கர் நிலம் 200 ரூபாயாக இருந்தது, இன்று 3,000 ரூபாய்க்குமேல் விற்கிறது. இடத்திற்கு இடம் விலை உயர்ந்திருக்கிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற எண்ணத்தில் நகர்ப் புறங்களில் உள்ளவர்கள் கூட, நகரத்தில் உப தொழில்கள் செய்துக்கொண்டிருந்தவர்கள், மிராசுதார்கள் போன்றவர்கள் விவசாயத்தை விரும்பி வேண்டி கிராமப்புறங்களுக்கு வரும் நிலையையும் நாம் பார்க்கிறோம். அந்த அளவுக்கு விவசாயம் வளம் பெற்று வருகிறது. அதன் காரணமாகத்தான் புள்ளி விவரங்களும் உயர்ந்துக்கொண்டே வருகின்றன. புள்ளி விவரங்களைக்கூட நம்ப முடியாது என்ற வகையில் சில கனம் அங்கத்தினர்கள் சொல்கிறார்கள். புள்ளி விவரங்களையே நம்பவில்லையென்றால், அமைச்சர்கள் வாயளவில், "இதை செய்யப் போகிறோம், அதைச் செய்யப் போகிறோம்" என்று சொன்னால் எப்படி நம்பப் போகிறார்கள்? எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர் "பழைய மொந்தையில் புதிய கள் போட்டதுபோல இந்த வேளாண்மைத் துறை பற்றிய அறிக்கை இருக்கிறது" என்று சொன்னார்கள். ஆம். பழைய மொந்தை என்ற வகையில் பழைய நிலங்கள் இருக்கின்றன. புதிய கள் என்ற வகையில் இரசாயன உரங்களாகிய அமோனியம் சல்பேட், ஸூபர் பாஸ்பேட் போன்ற உரங்களைப் போட்டு உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். விவசாய உற்பத்திப் பெருக்கம் அந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசாங்கத்தைப்பற்றிக் குறை கூறிய கனம் அங்கத்தினர் அறிந்துக்கொள்ளவேண்டும். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற இரசாயன உரங்களாகிய சூபர்பாஸ்பேட் போன்றவைகள் கால தாமதமாகக் கிடைப்பதால் விவசாயிகளுக்குச் சரியான வகையில் அவை பகிர்ந்துக் கொடுக்கப்படாமல் இருக்கின்றனவா என்பதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும். ஜூலை மாதத்தில் விவசாயம் ஆரம்பமாகிறதென்றால், ஜூலை மாத முதலிலேயே விவசாயத்திற்கு வேண்டிய சூபர்பாஸ்பேட் உரம் கொடுக்கப்படவேண்டும். வயலில் உழுது, சேறாக இருக்கும்போது சூபர்

பாஸ்பேட் போடவேண்டும். அது காலதாமதமாகக் கிடைப்பதால், விவசாயத்திற்கு இணையக்கற்றதாகப் போய்விடுகிறது. அதேபோல், பயிர் நட்டு, முளைத்து வந்த கொஞ்ச காலத்திற்குப் பிறகு அமோனியம் சல்பேட் போடவேண்டும். அமோனியம் சல்பேட் அந்தக் காலத்தில் வழங்கப் படாத காரணத்தால் அந்த உரத்தையும் உபயோகப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. ஆக, எந்த நேரத்தில், எத்தகைய உரத்தை, எத்தகைய விவசாயத்திற்கு உபயோகப்படுத்தவேண்டும் என்பதைக் கவனித்து, அரசாங்கம் உரிய காலத்திற்கு முன்பாகவே இத்தகைய உரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

விவசாய மக்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யப்படவில்லை என்று கனம் அங்கத்தினர் திரு. கோ. சி. மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் விவசாயக் கூலி நிர்ணயம் செய்கிறபோது நாட்டிலே அங்கங்கு இருக்கக்கூடிய நிலைமையையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக என்னுடைய தொகுதியில் கூலி விகிதம் ஒவ்வொருவிதமாக இருக்கிறது. ஒரு கட்டு நாற்று பறித்தால் எட்டணா கொடுக்கிறார்கள். காலை எட்டு மணி முதல் பன்னிரண்டு மணிக்குள் நான்கு கட்டு பறித்தால் 2 ரூபாய் சம்பாதிக்கலாம். இரண்டு ரூபாய் முதல் இப்படி நான்கைந்து ரூபாய் வரை கூலி வர இடமிருக்கிறது. இன்னும் ஒரு கலம் அறுத்தால் ஒரு மரக்கால் கூலி. ஆறு கலம் அறுத்தால் 6 மரக்கால் என்று கூலி வாங்கலாம். ஆகவே விவசாயக் கூலி என்று நிர்ணயிக்கிறபோது இன்றுள்ள நிலைமையை மறந்துவிட்டு எந்தக் காரியமும் செய்யக்கூடாது. இதனால் பாதகம் ஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுடைய நன்மையை உத்தேசித்து அங்கங்கே தொழிற்சாலைகள் ஏற்படுத்தினால் விவசாயம் இல்லாத காலத்தில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட வழி உண்டாகும். தினக்கூலியாக இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பு பெருகும்.

இன்னும் எங்கள் தொகுதியில் இரசாயனம் வாங்கவேண்டுமென்றால் நன்னிலத்திற்குத் தான் செல்ல வேண்டும். முன்பு பேரளத்தில் ஒரு டெப்போ இருந்தது. இதை எடுத்துவிட்டார்கள். அப்படி யில்லாமல் அவசியம் பேரளத்தில் ஒரு விவசாய டெப்போவை ஏற்படுத்தினால் விவசாயிகளுக்கு மிகவும் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மானியத்தை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். வேளாண்மைத் துறையை எடுத்துக் கொண்டால்—கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களைப் பார்த்தாலே நமது சென்னை மாகாணம் இந்தியாவுக்கே ஒரு மாடல் ஸ்டேட்டாக விளங்குகிறது என்பது தெரியும். வேளாண்மையில் மட்டும் அல்ல. எல்லாத்துறைகளிலும் இது விளங்குகிறது என்பதை இம்மன்றமே ஒப்புக்கொள்ளும் என்று நினைக்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தச் சபையில் கேள்வி நேரத்தில் காய்கறிகள் மந்திரிகளின் வீடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்று கேட்டார்கள். அதற்குச் சாட்சியாக இன்று பத்திரிகையில் ஒரு படம் வந்திருக்கிறது. நமது மந்திரி திரு. மஜீத் அவர்கள் வீட்டுத் தோட்டத்திலே போடப்பட்டிருக்கும் முட்டைகோஸ் எவ்வளவு செழிப்பாக வளர்ந்திருக்கிறது என்பதை அந்தப் படம் காட்டும். இப்படி அவசர நிலைமையை உத்தேசித்து மக்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு வழி காட்டியாக நமது அமைச்சர்கள் நடந்துகொண்டு வருகிறார்கள் என்று இதில் இருந்து தெரிகிறது. இப்படியே ஒவ்வொரு அங்கத்தினரும் குறிப்பாக எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் நடந்துகொண்டால் நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமையை வெற்றிகரமாகச் சமாளிக்கலாம். என்னைக் கேட்டால் திரு. மதியழகன் மண்ணை வெட்டி கருணாநிதி காய்கறி பயிரிட்டு நெடுஞ்செழியன் நீர் ஊற்றி, கிருஷ்ணமூர்த்தி களை எடுத்து, அரங்கண்ணல் அறுவடை செய்து அமைச்சர் கக்கன் அவர்களிடம் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக எங்கள் ஜில்லாவில் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியான நிலைமை ஒன்றை நான் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் உருளைக் கிழங்குப் பயிருக்கு (Late blight) 'லேட் பிளைட்' என்ற ஒரு கொடுமையான நோய்வந்து பயிர்கள் எல்லாம் பெரிதும் நாசமடைந்திருக்கின்றன. குறிப்பாக முன்பு 20 ஆயிரம் ஏக்கராவில் உருளைக்கிழங்கு பயிரிட்டு வந்தார்கள் என்றால் இப்போது அது ஐந்தாயிரம் ஏக்கராவாகக் குறைந்திருக்கிறது. அந்த உருளைக்கிழங்குப் பயிரையே நம்பி வாழ்ந்து வந்த மக்கள் இப்போது வேறு என்ன பயிர்செய்வது என்று வழி தெரியாமல் மிகவும் தொல்லைக்குள்ளாகி யிருக்கிறார்கள். இதை அமைச்சரிடத்தில் நேரில் பல முறை சென்று நான் சொல்லியிருக்கிறேன். இதுவரை யாதொரு நிவாரணமும் ஏற்படவில்லை என்பதை மிக்க வருத்தத்துடன் கூற விரும்புகிறேன்.

எங்களுக்கு இன்றையதினம் ஸ்காட்லாண்டு உருளைக்கிழங்கு விதை இரண்டாயிரம் டன் வேண்டும். தற்போது இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் ஸ்காட்லாண்டில் இருந்து 53 டன் தான் தருவித்து இருக்கிறார்கள். இது எப்படித் தேவையைப் பூர்த்தி செய்யும் என்று விளங்கவில்லை. சர்க்கார் விதைப் பண்ணையிலேயே விதை கிழங்கு மூட்டை ஒன்றுக்கு இன்றையதினம் 90 ரூபாய்க்கு விற்கிறார்கள் என்றால் அவ்வளவு விலை கொடுத்து யாரால் வாங்க முடியும்? ஏதோ பணக்காரர்கள் தான் வாங்கலாம். அப்படியின்றி எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் இந்த விதையைக் குறைந்த விலையில் கொடுக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக டைதேன் மருந்து. இந்த மருந்தை அடித்தால் தான் நோய் போகும் என்று சொல்கிறார்கள். இந்த மருந்து 200 டன் தேவை என்றால் 20 டன் தான் தருவித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கும் ஏதாவது வழி செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அமோனியம் சல்பேட்டைப் பொறுத்த வரையில் எங்கள் மாவட்டத்திற்கு 1,500 டன் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த அமோனியம் சல்பேட்டில் பத்துப் பதினைந்து சதம் விவசாயிகளின் பரிதாப நிலைமையை உத்தேசித்து குறைந்த விலையில் கொடுக்குமாறு நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவில் தக்காவிக் கடன் பூரணமாக வசூலாகாமல் இருக்கிறது. இந்தக்கடனை நான்கைந்து ஆண்டுகள் தள்ளிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொடுக்கப்பட்ட தொகை 50 லட்சம் ரூபாய். மத்திய பாங்க் அந்தக் கடன் தொகை வசூலை வற்புறுத்துவதால் நடவடிக்கை ஜரூராக எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அதை மத்தியக்காலக் கடனாக மாற்றி ஐந்து வருஷங்களுக்குள் வசூல் செய்து கொள்ளலாம் என்றும், மேலும் 20 லட்சம் ரூபாய் நீலகிரி கூட்டுறவு மத்திய பாங்குக்கு நீண்டகால டெபாசிட்டாக கொடுத்து நீலகிரி மாவட்டத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. மு. கருணாநிதி :** சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைபற்றி கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணைக்கு ஆதரவாக என்னுடைய கருத்துக்களை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

விவசாயத்துறையில் இந்த நாட்டு உழவர் பெருங்குடி மக்கள் எந்த அளவுக்கு இன்றையதினம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரங்களை இந்த மன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மிக அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய குறைந்த வருமானமும், அவர்கள் தலையில் விழுந்திருக்கிற பெருத்த செலவுகளும் எந்தவகையில் உழவர்கள் குடும்பங்களில் வறுமைப் புயலை நுழைய விட்டிருக்கிறது என்ற விவரங்கள் இங்கே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் இருக்கிற ஏழை விவசாயிகளுடைய கூலியைக் குறைந்தபட்ச கூலியாக ஆக்க வேண்டுமென்ப

[திரு. மு. கருணாநிதி] [11th March 1963

அடுத்த மாதம் இந்தியாவுக்கு விருந்தினராக வர இருக்கின்ற லார்டு லிட்டன் என்ற பெரியவர் "ஹவுஸ் ஆப் லார்ட்சில்" மார்ச் மாதம் 5-ஆம் தேதியன்று பேசியிருக்கும் பேச்சைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"இந்திய மக்களது நிலங்களில் உலா வந்திடும் பல்லாயிரக் கணக்கான மிருகங்கள் கொல்லப்பட இந்திய மக்களது மத நம்பிக்கை அனுமதித்தால் இந்தியாவின் உணவுப் பிரச்னையின் பெரும் பகுதி நிவர்த்தி செய்யப்படலாம்"

என்று அவர் பேசி யிருக்கிறார். இதை நான் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்திலே, 'பசுக்களைக் கொல்வதா கால்நடைகளைக் கொல்வதா, என்று என்மீது சிலர் பாய்ந்திடக்கூடும். அவர்களுக்கு நான் ஒன்றை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்திய சர்க்காருடைய செலவில், விவசாய முறைகளையும், கால்நடைகளையும் பற்றி அறிந்து வருவதற்காக அமெரிக்கா சென்று திரும்பி, அருமையான புத்தகம் ஒன்றையும் எழுதியிருக்கிறார், பழைய கோட்டையைச் சேர்ந்த கனம் பார்வதி அர்ச்சுனன், எம்.எல்.ஏ., அவர்கள். அவர்கள், 'எனது வெளிநாட்டு அனுபவம்' என்ற நூலில்.—

"அமெரிக்காவில் பாலுக்குத் தகுதியற்றதாக இருக்கும் பசுக்களையெல்லாம் ஒழித்து விடுகிறார்கள். அதனால் அந்த விவசாய மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு இந்த முறை ஓரளவுக்குத் துணை புரிகிறது."

என்று கூறிவிட்டு, அடுத்து அம்மையாருக்கு இந்தியாவின் மத நம்பிக்கை பற்றிய பயம் வருவதன் காரணமாக—

"சர்க்கார் இது பற்றி நன்கு சிந்தித்து வீணாகும் நாட்டின் பொருளாதார விரயத்தைத் தடுக்க வேண்டும். பசுக்களைத் தெய்வம் எனத் துதிக்கும் நமது நாட்டில் இது விஷயத்தில் குறிப்பாகவும் ஆழ்ந்தும் சிந்தித்து ஒரு முடிவை எடுக்க வேண்டும். அப்போதுதான் விவசாயத் துறையில் நாம் கணிசமான அளவு முன்னேற்றத்தைக் காண முடியும்", என்று அம்மையார் அவர்கள் அந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையும் மனத்திலே வைத்து, இந்த நாட்டின் விவசாயிகளுடைய நிலை உயர கால்நடை வளர்ச்சி எவ்வளவு இன்றியமையாதது என்பதை உன்னிப் பார்த்து, எதிர்க்கட்சி சார்பில் எடுத்துரைக்கப்பட்ட—குறைந்தபட்ச கூலி நிர்ணயம்——விளைபொருள்களை விளைவிக்க நிர்ணயம் செய்யவேண்டும் என்பது பற்றிய கருத்துக்களையெல்லாம் மனத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் விவசாய மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்கள் பேசும்போது 'விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டும்' என்று பேசினார்கள். விவசாயத்தைப்பற்றி இன்னது என்று தெரியாதவர்கள்தான் அப்படிக் கூறுவார்கள். அறுவடைக் காலத்தில், ஒரு ஏக்கருக்கு இத்தனை மூட்டை, இத்தனை கட்டுக் கதிர் என்ற முறையில் பேசி, அதன் காரணமாகச் சில சமயங்களில் 10, 12 படி கூடக் கொண்டு போகக் கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்குக் கூலி நிர்ணயம் என்று செய்துவிட்டால்—4 படி என்று செய்து விட்டோம் என்று வைத்துக் கொண்டால் அவர்களால் அதற்கு மேல் கூலி பெற முடியாத நிலைமை உண்டாகிவிடும்.

விவசாயிகளின் நன்மையைக் கருதி நம்முடைய அரசாங்கமானது பல கோடிக்கணக்கான அளவுக்குப் பணத்தைச் செலவு செய்து வருகிறது. உரம் தயாரிப்பதிலிருந்து விதைகள் கொடுப்பது வரை அரசாங்கம் விவசாயிகளுக்காக உதவி செய்து வருகிறது. இப்போது சாபக்கேடு போன்று அவர்களுடைய உணவு தானியங்களுக்கு மூட்டை ஒன்றுக்கு 17, 18 ரூபாய்



11th March 1963] [திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்]

என்ற அளவில் அமைந்திருக்கிறது. தொழிலாளர்களாக இருந்தால் கூலி எங்களுக்குப் போதாது என்று கூறி ஸ்டிரைக் செய்ய வழி இருக்கிறது. 12-30 p.m.

ஆனால் விவசாயத்திற்கு ஒரு மூட்டை பிண்ணாக்கை 32 ரூபாய்க்கு வாங்கி, ஒரு மூட்டை உரப் பொடியை ரூபாய் 40-க்கு வாங்கி அதிலும் உரம் கிடைக்காவிட்டால் ப்ளாக் மார்க்கட்டில் ரூபாய் 60-க்கு வாங்கி ஒரு மூட்டை நெல்லை 17 ரூபாய்க்கு விற்பது என்றால் அது விவசாயின் நிலைமையை மிகவும் மோசமான ஒரு நிலைக்குக் கொண்டு வந்துவிடும் என்பதை இங்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அரசாங்கம் இதுபற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேண்டுமானால் ஒரு மூட்டை நெல்லை பத்து ரூபாய்க்குக் கொண்டு வாருங்கள், அதை நான் வரவேற்கிறேன். ஆனால் பிண்ணாக்கு, உரப்பொடி, விவசாயக் கருவிகள் இவற்றையெல்லாம் குறைந்த விலைக்கு கொடுத்து நெல்லின் விலையைக் குறைத்தால் சரி. நெல் விலை எந்த அளவுக்கு குறைகிறதோ அந்த அளவு மேற் சொன்னவைகள் குறைந்த விலையில் கிடைக்கும் நிலையில் இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம். தொழில் துறைகளை எல்லாம் தேசியமயமாக்குவதை விட எல்லா நிலங்களையும் தேசிய மயமாக்கி கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தால் கூட நல்லது என்று நினைக்கிறேன். விவசாயிகள் அன்றாடம் பாடுபட்டு உழைத்து பட்டணங்களில் பகட்டாக வாழ்பவர்களுக்கு நெல்லை மூட்டை மூட்டையாக அனுப்பிக் கொண்டிருக்கிறோம். ஆக விவசாயிகளுக்கு உரம், பிண்ணாக்கு, விவசாயக் கருவிகள் போன்றவற்றை சுலபமான விலைக்குக் கொடுத்தால்தான் ஏழை, நடுத்தர விவசாயிகள் கஷ்டமின்றி வாழ்க்கையை நடத்த முடியும். ஆகவே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக பூச்சி விழுந்தால் அதற்கு ஸ்ப்ரேயர்கள் பாதி விலைக்குக் கொடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது. மருந்துகளையும் பாதி விலைக்குக் கொடுக்கிறோம், அதுவும் வரவேற்கத் தக்கதே. நானே ஆறு மாதங்களுக்கு இரு முறை ஸ்ப்ரேயர்கள் வாங்கும் நிலை ஏற்பட்டு விட்டது. ஆகவே அந்த ஸ்ப்ரேயர்களை நன்கு பார்த்து பரிசீலனை செய்து விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பூச்சி மருந்து கொடுப்பதில் பாதி மான்யமாக கொடுக்கிறார்கள், பாதி விலைக்கு கொடுக்கிறார்கள். அப்படி பாதி மான்யமாகக் கொடுத்தும், பாக்கி 25 ரூபாய் அல்லது 30 ரூபாய் கொடுத்து வாங்க முடியாமலும் இருக்கிறார்கள் விவசாயிகள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய இலாகாவிலிருந்து அதை வாங்க கடன் கொடுத்து அறுவடை காலத்தில் அதை வசூல் செய்து கொள்ளலாம். இதை இந்த இலாகாவினர் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இதைச் செய்து கொடுத்தால் ஏழை விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பம்ப் செட்ஸ் வாங்க கடன் கொடுக்கிறார்கள். மூன்று முதல் ஏழு ஆண்டுகளுக்குள் அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதைப் பத்து ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று செய்ய வேண்டும். பத்து வருடத் தவணைகளில் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று செய்தால் விவசாயிகளுக்கு அது வசதியாக இருக்கும். சாதாரணமாக கிணறுகள் வெட்ட முடியாதவர்களுக்கு குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுத்தால் ஐந்து அல்லது 10 ஏக்கர் புஞ்சை வைத்திருப்பவர்கள் விவசாயம் செய்ய உதவிகரமாக இருக்கும். அதற்கும் 10 சத வீதம் மான்யம் கொடுக்கிறோம். அதற்கு 25 சத வீதம் மான்யம் கொடுத்து அந்த மீதித் தொகையை இருபது ஆண்டுக்குள் திருப்பி வாங்கும் நிலையை ஏற்படுத்தினால் ஏழை விவசாயிகளுக்கு அது நல்ல பலனை அளிக்கக் கூடியதாயிருக்கும். பின்னர் இப்போது "ஸப்மார்ஜிபிள் பம்ப்ஸ்" அதிகமாக கிடைப்பதில்லை. ஆகவே அதை இங்கேயே உற்பத்தி செய்ய சம்பந்தப்பட்ட இலாகாவினரும் அமைச்சரவையும் முயற்சி எடுத்தால் குழாய் கிணறுகளில் பம்ப் போட்டு தண்ணீர் எடுக்க வசதியாக இருக்கும். அடுத்தபடியாக மதுரையில் ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க இருப்பது பற்றி திருமதி லக்ஷ்மீகாந்தம் அவர்கள் கூறியதுபோல் நானும் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அதை நகரப்புறத்தில் அமைக்காமல் விஸ்தாரமான இடத்தில், காற்றோட்டம் நிறைந்த இடத்தில், விவசாயத்திற்கேற்ற பகுதியில் அமைத்தல் வேண்டும். . . . . .

[திரு. மு. கருணாநிதி] [11th March 1963

தற்கான காரணங்களை இந்த வெட்டுப் பிரேரணையை முன்மொழிந்து பேசிய கனம் உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறைந்தபட்ச கூலி விகிதம் இல்லாத காரணத்தினால் ஆங்காங்கு நிலப் பிரபுக்களுக்கும், தனிப்பட்ட விவசாயிக் கூலிகளுக்கும் இடையே நடைபெறுகின்ற சச்சரவுகளில் காவல்துறையினர் கூடச் சரியான நீதியை வழங்க முடியாத அளவுக்கு பிரச்சனை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். குறைந்தபட்சக் கூலி என்று நிர்ணயித்து விடுவோமேயானால் ஏழை விவசாயிகளுக்கு இன்ன வேலைக்கு இன்ன அளவு கூலி கிடைக்கும் என்ற அளவில் ஒரு ஒழுங்கு ஏற்பட்டு கழனிகளில் சென்று களிப்போடு வேலை செய்வதற்கான வாய்ப்பும் வசதியும் ஏற்படும். ஆகவே இந்த மன்றம் விவசாயிகளுக்குக் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பதில் தீவிரம் காட்டவேண்டுமென்று இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு ஒரு உணவுப் பொருளின் விலை கிராக்கியாக விற்பனையாகிறதென்றால் உடனடியாக அதே உணவுப் பொருளை மற்ற எல்லா விவசாயிகளும் உற்பத்தி செய்ய முன்வந்து விடுகிறார்கள். அதன் காரணமாக அந்த ஆண்டு அந்த உணவுப் பொருளின் விலை ஒரேயடியாகச் சரிந்துவிடுகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலைதான் நம் நாடெங்கும் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்க நாட்டை எடுத்துக் கொண்டால் அங்கங்கே பயிரிடப்படுகிற விளை பொருள்களின் மதிப்பு திடீரென்று குறைந்துவிடாதிருக்க, அங்கங்கே குறிப்பிட்ட அளவுக்குத்தான் குறிப்பிட்ட தானியங்களைப் பயிரிடலாம் என்ற அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரியாக இன்ன இன்ன பூமியில் இன்ன இன்ன அளவுக்குத்தான் இன்ன இன்ன பயிரை வைக்கலாம் என்ற அளவு நிர்ணயிக்கப்படுமானால் விவசாயப் பொருள்களின் விலையில் திடீர் சரிவு ஏற்படாது என்று சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பிட்ட பொருள்களைத்தான் விளைவிக்க வேண்டுமென்ற ஒரு கட்டுப்பாடும், அப்படிப்பட்ட ஒரு நிர்ணயமும் நம்முடைய நாட்டிலும் கொண்டு வரப்படுமானால் உணவுப் பொருள்களுடைய மதிப்புக் குறையாமலும், கிராக்கியாகச் சென்ற ஆண்டு விற்ற உணவுப் பொருள் இந்த ஆண்டு மலிந்து போகிற நிலைமையையும் தவிர்க்க முடியும். தவிர உற்பத்தி செய்கிற ஏழை விவசாயக் குடிமகன், உற்பத்திக்கும், தன் தேவைக்குமான வேறு பொருள்களை, வேறு பண்டங்களை வாங்குகிற நேரத்தில் அவைகளுடைய விலை பெரிதும் ஏற்றம் பெற்றிருக்கிற காரணத்தினால் அதைத் தாங்க முடியாத அளவுக்கு, அவனுடைய இல்லத்தை இன்னல் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். ஆகவே, அதை மனதில் கொண்டு, இந்த அரசினர் உணவு தானியப் பொருள்கள் விளைவிப்பதில் ஒரு நிர்ணயம் செய்வது சாலச் சிறந்ததாகும் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். விவசாயிகளுடைய வாழ்க்கை வேதனை நிரம்பியதாக இருக்கிறதென்பதையும், அவர்கள் பெறுகின்ற வருமானம் மிக மிகக் குறைவாக இருக்கிறதென்பதையும் எடுத்துக் கூறும் நேரத்தில், ஆளும் கட்சி உறுப்பினர்கள், அதிலும் குறிப்பாக, காங்கிரஸ் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள்—'இந்த நாட்டின் கிராமப் புறங்களைப் போய்ப் பார்த்தால் எங்கு பார்த்தாலும் வளமை கொஞ்சுகிறது, பேன் இல்லாத தலை இருக்கிறது, சட்டை இல்லாத ஆள் இல்லை, ஈருளி கேட்டால் கிடைப்பதில்லை' என்று நாட்டினுடைய முன்னேற்றத்தைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அதே நேரத்தில் அன்றாடம் ஏடுகளில், 'பட்டினியின் காரணமாகத் தங்களுடைய குழந்தைகளைப் பதைபதைக்கக் கொன்றுவிட்டுத் தாங்களும் தற்கொலை செய்து கொண்டார்கள்' என்ற செய்திகளும் வெளிவருகின்றன. 1961-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12-ஆம் நாள் நடைபெற்ற வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் அளித்துள்ள தீர்ப்பினுடைய சாராம்சத்தை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.



11th March 1963] [திரு. மு. கருணாநிதி]

கரூரில் காமாட்சி என்ற 25 வயது கூட நிரம்பாத ஒரு பெண், தன்னுடைய இரண்டு குழந்தைகளைக் கொன்றுவிட்டு, தன்னுடைய மூத்த மகனைக் கொல்ல முயன்றதாகவும், தானும் தற்கொலை செய்ய முயன்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டார். ஆயுள் தண்டனையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டபோது, ஏற்கெனவே அளித்த அந்தத் தண்டனை உறுதி செய்யப்பட்டாலும் கூட, உயர்நீதிமன்ற நீதிபதிகளான எம். அனந்தநாராயணனும், திரு. டி. வெங்கடாத்ரியும் வழக்கை விசாரித்து நீதி வழங்கும் நேரத்தில் குறிப்பிட்ட ஒரு வாசகத்தைப் படிக்க விரும்புகிறேன்.

"வாழ வழியின்றி வறுமையின் காரணமாகக் குழந்தைகளைக் கொன்றாள். இதற்குப் பரிகாரம் காணுவது சர்க்கார் பொறுப்பு. மக்கள் எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்பது சர்க்காரின் இலட்சியமாக இருக்கக்கூடாது. அவர்கள் நல்வாழ்க்கை நடத்த வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது சர்க்காருடைய பொறுப்பாகும்.

குற்றத்தை மெய்ப்பிக்கும் சாட்சியங்களைப் பற்றியும் குற்றத்திற்குரிய தண்டனைகளைப்பற்றியும் தான் எம்மைப் போன்ற நீதிபதிகள் கவனிக்க வேண்டும். குற்றத்திற்கான காரணங்களைக் கண்டு பிடிக்கும் பொறுப்பு சீர்திருத்தவாதி அல்லது அரசியல் வாதியைச் சேர்ந்தது.

இந்த வழக்கில் செய்யப்பட்ட குற்றம் தனி மனிதர் செய்த குற்றமல்ல; சமூகத்தையே உறுத்துகின்ற பரிதாபகரமான செயல். இம்மாதிரி நடைபெற அனுமதிக்கக்கூடாது.

ஏனைய நாடுகளிலே வறுமையில் உழல்பவர்களுக்கு, ஏதாவது வேலையளித்து, தேவையான ஊதியம் அளிக்கும் நிறுவனங்கள் ஏராளம் இருக்கின்றன.

நமது மாநிலம் விவசாயத்தை முக்கியமானதாகக் கொண்டது. சாகுபடி காலத்தில் வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட மாநிலத்தில் இது போன்ற நிறுவனங்கள் ஏற்படுத்துவதற்குத் தொல்லை இருக்காது. அப்படி ஏதாவது தொல்லைகள் இந்தப் பிரச்னையில் ஏற்பட்டால் அதைச் சமாளிக்க வேண்டும். எதிர்காலத்திலாவது இது போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடாது.

பரிதாபத்திற்குரிய இந்த அப்பீல் மனுதாரரும் அவருடைய கணவரும் நல்ல உடல் வலிமையுள்ளவர்களாக இருந்தும், பிச்சையெடுக்கத் துணியாத காரணத்தினால் இத்தகையதோர் இழிவான வழிகளில் இறங்க நேரிட்டதற்குத் தேவையில்லாதவாறு சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு"

என்று தங்களுடைய தீர்ப்பிலே இரண்டு நீதிபதிகளும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நான் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுவதற்கு எடுத்துக் கூறுவதாகத் தயவுசெய்து கருதக் கூடாது. நீதிபதிகள் சொன்ன கருத்தை இந்த அரசினர் தங்கள் இதயத்தில் ஏற்றி, நாட்டிலே தற்கொலைக்கு வழி இல்லாதபடி, ஒரு முழக் கயிற்றை, ஒரு துளி விஷத்தை, ஆழமான கிணற்றைத் தேடிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான அபலைகளை, அனாதைகளை, ஏழை உழவர்களைக் காப்பாற்ற இந்த அரசு முன்வரவேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியத்திலே, கால்நடை வளர்ச்சியைப் பற்றிப் பலர் எடுத்துக் கூறினார்கள். அவைகளைப் பற்றி என்னுடைய கருத்தைத் தெரிவிக்கும் நேரத்தில், "இந்தியக் கால்நடைகளின் எண்ணிக்கை பெரிதேயன்றி அவற்றின் தரம் உயர்ந்ததன்று. இந்தியப் பசு சராசரி 413 ராத்தல் பால் தருகிறது. பிற நாடுகளில் 2,000 முதல் 7,000 ராத்தல் வரை பால் தரும் பசுக்கள் உள்ளன. பெரும் பான்மையும் பயனற்ற கால்நடைகளாக இருப்பதால் அவை உழவர்களுக்குப் பாரமாகவே உள்ளன" என்று இந்த மன்றத்தில் வீற்றிருக்கிற டாக்டர் பா. நடராசன் அவர்கள் ஒரு நூலில் குறிப்பிட்டிருப்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

**திரு. கோ. சி. மணி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் : அங்கத்தினர் அவர்கள் கூறுகிறபோது கூலி நிர்ணயம் அமலுக்கு வந்து விட்டால் இப்போது தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்து பெறுகிற வருவாயைப் பெற முடியாது. எனவே அச்சட்டத்தை அமைப்பது நல்லதல்ல, ஸ்ட்ரைக் நீடிக்கத்தான் வேண்டுமென்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஊதியம். . .

**கனம் உதவி சபாநாயகர் :** அது அவர்கள் அபிப்பிராயம்.

*** திரு. ஆர். ரங்கசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். உரம் சம்பந்தப்பட்ட வரையில் கிராமங்களில் கம்போஸ்ட் உரம் தயாரிப்பதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. பெரிய நகரங்களில் அங்கு கிடைக்கும் மலத்தையும் ரோட்டில் கிடைக்கும் குப்பைகளையும் போட்டு ஒரு பங்கு மலம் இரண்டு பங்கு குப்பை என்று போட்டு கம்போஸ்ட் உரம் தயாரிக்கிறார்கள். ஆனால் கிராமங்களில் மாட்டுச் சாணம் ஒரு பங்கு, குப்பை இரண்டு பங்கு போடவேண்டுமென்று சொல்கிறோம். குப்பை கிடைப்பது கிராமங்களில் அரிதாக இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவர். அவரவர்கள் வீட்டிலுள்ள குப்பைகளை தங்கள் தங்கள் வீடுகளிலேயே எரு தயாரிக்க வைத்துக் கொள்கிறார்கள். கிடைக்கும் குப்பைகளை விவசாயிகள் ஆங்காங்கு விவசாயத்திற்காகப் போட்டுக் கொள்கிறார்கள். ஆகவே பஞ்சாயத்துக்கள் கம்போஸ்ட் உரம் தயார் செய்வது கஷ்டமாக இருக்கிறது. கிராமங்களில் குப்பைக்குப் பதிலாக வண்டல் மண்ணை அடிப்பது வழக்கம். குளங்களில் மரம், விதை பயிரிடுவதால் வண்டல் மண் கிடைப்பதும் அரிதாகி விட்டது. ஆகவே கிராமங்களில் கம்போஸ்ட் உரம் கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக என் தொகுதியைப் பொறுத்தவரையில் வெங்காயம் அங்கு அதிகமாக உற்பத்தியாகிறது. திண்டுக்கல்லில் இருந்துதான் வெளிநாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதியாகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதைப் பற்றி இங்கு ஒருவரும் பேசவில்லை. ஒரு வேளை ஈரோட்டுப் பெரியார் வெங்காயம், வெங்காயம் என்று பேசுவதால் அதை நாம் ஏன் சொல்ல வேண்டுமென்று விட்டு விட்டார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். அது விவசாயிகளை எந்தளவு பாதிக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெங்காயத்தை சேமித்து வைக்க சரியான வசதி கிடையாது. வெங்காயத்தை வெளியே எடுத்தால் 24 மணி நேரத்திற்குள் அதை விற்றுவிட வேண்டுமென்று இருப்பதால் திண்டுக்கல்லில் மார்க்கட்டில் வெங்காயம் மணங்குக்கு 50 நயே பைசாவிற்கு விற்கும் நிலை இருக்கிறது. விவசாயப் பொருளா அல்லது உணவுப் பொருளா என்று தெரியாது இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கிறது வெங்காயம். வெங்காயத்தை சேமித்து வைக்க வசதியின்றி குடியானவர்கள் கஷ்டப்படுகிறார்கள். வெங்காயம் உற்பத்தி செய்யும் நிலத்தில் எந்தவிதமான உரமும் இன்றி உணவுப் பொருள்கள் அதிகமாக விளைகிறது என்பது விவசாயிகள் எல்லோரும் அறிந்ததே. ஆகவே வெங்காயத்தை சேமித்து வைக்கவும் அதிலிருந்து புதிதாக ஏதாவது ஒரு பொருள் கண்டு பிடித்து அந்த விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாத ஒரு முறையைக் கண்டு பிடிக்க வேண்டும். கடலை தீவிர உற்பத்தித் திட்டத்தில் திண்டுக்கல்லையும், நத்தத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். பெரிய ட்ராக்டரை பெரிய நிலச் சுவாந்தார்கள் உபயோகிக்கும் நிலை இருக்கிறதேதவிர நடுத்தர நிலச் சுவாந்தார்கள் அதை உபயோகிக்கும் நிலையில் இல்லை. ஆகவே பத்து ஹார்ஸ் பவருக்கு கீழேயுள்ள ட்ராக்டர்களை இறக்குமதி செய்து கொடுத்தால் நடுத்தர விவசாயிகள் தண்ணீர் இறைக்க, எரு அடிக்க, உழுவது போன்ற பல காரியங்களுக்கு அதை உபயோகப்படுத்த முடியும். அதோடு கரெண்ட் கட் வரும்போது கிணற்றில் பம்ப் செட்ஸ் வைத்து தண்ணீர் இறைக்கவும் வசதியாக இருக்கும். ஆகவே சிறு ட்ராக்டர்களை அவசியம் இறக்குமதி செய்து விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே வந்திருக்கிற விவசாய மான்யக் கோரிக்கையை நாங்களும் தான் வரவேற்கிறோம், ஆனால் ஒரு வெட்டுப் பிரேரணையோடு வரவேற்



கிறோம். அவ்வளவுதான். நேரம் அதிகமாகிவிட்டதால், இன்றும் விஷயத்தைச் சொல்லி போக வேண்டியிருக்கிறதேயன்றி விளக்கிப் பேசுதற்கு நேரம் இல்லை. பொதுவாக விவசாயத்திற்கு இன்றியமையாதன நிலவளம், அடுத்தபடி நீர், மூன்றாவது உரம் என்பதை எல்லோரும் அறிவோம். நிலத்திற்குத் தக்கவாறு பயிர், நிலத்திற்குத் தக்கவாறு உரம் என்பதெல்லாம் நம் எல்லோருக்கும் நன்கு தெரியும். இப்போது ஒரு மோகம். உரம் என்று சொன்னாலே அத்தனையும் விஞ்ஞான ரீதியில் தயாரித்த உரம்தான் வேண்டுமென்ற மனோபாவம் பெருகியிருக்கிறது. இதனால் நிலத்தின் வளம் குன்றி வருகிறது என்பது அறிஞர்களுடைய தீர்ப்பு. நிலம் செம்மையாக இருக்க வேண்டுமானால் தழை உரம், மச்ச உரம் (கம்போஸ்ட் உரம்) முதலியவை இன்றியமையாதவை. அவற்றை ஊக்க வேண்டும், அது விவசாயிகளுக்கு, கிடைக்கும்படியாகவும் வழிவகை செய்ய வேண்டும். அதற்கு இப்போது ஒரு இடையூறு ஏற்பட்டிருக்கிறது நம்முடைய மாநிலத்திலே என்பதை நாம் மனத்தில் கொள்ளவேண்டும். தழை உரங்கள் விவசாயத்துக்குக் கிடைக்க முடியாதபடி பொட்டல் காடுகளாகக் கிடப்பவைகள்கூட ரிசர்வ் பாரெஸ்ட் ஆகிற 'மகோன்னத' நிலைமை பெற்றிருக்கிறது, இதனுடைய தீமை பெரிது, அதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். தழை உரத்திற்குத் தேவையான செடி வகைகளை அறுத்துக்கொள்ள எந்த விவசாயிக்கும் தடை இல்லை என்ற நிலையை உண்டாக்கினால் தான் உரத்தால் ஏற்படுகிற திண்டாட்டங்களும், அதனால் ஏற்படுகிற போட்டா போட்டிகளும், கள்ள மார்க்கெட்டும் குறையும்.

அதற்கு மேலே, மனித மல உரத்தைப் பயன்படுத்துகிற திட்டத்தை நாம் நன்றாகப் பின்பற்றவேண்டும். அதற்கும் மேலே, நகரப் புறங்களில் இருந்து வருகிற சாக்கடை முதலிய நீர்களை ஆற்றிலே, கடலிலே கலக்க விடாமல், அவற்றையெல்லாம் ஆங்காங்கு தேக்கி, அவற்றிலிருந்து பல்வேறு உரச்சத்துக்களை ஈட்டி, அவற்றையெல்லாம் பயன்படுத்துகிற நெறிமுறைகளை நாம் வகுக்கவேண்டுமென்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு மேலே, பம்ப் செட் பற்றியெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். "30 குழாய்க் கிணறுகளை இறக்கும் திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தோண்டுவதற்குத் தகுந்த துளை யந்திரங்கள் இல்லாத காரணத்தினால் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை. இதற்குத் தனிப்பட அந்நியச் செலாவணி ஒதுக்குவது பற்றி இந்திய அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். இதைவிட மிக இன்றியமையாத ஒன்று என்ன இருக்கிறது என்பதை நாம் உணரவில்லை. இதற்குப் பிராதான்யம் கொடுக்க வேண்டியது எவ்வளவு இன்றியமையாதது என்பதை யாவரும் ஒரு முகமாக ஏற்றுக்கொள்ளுவார்கள். இந்த நிலையிலே இதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். குழாய்க் கிணறுக்கு அந்நியச் செலாவணி தேவை என்பது அற்பத்தொகைதானே தவிர, பிரமாதமாகத் தேவை இருக்கிறது என்று எனக்குத் தோன்றவில்லை. யாரும் அப்படித் தேவை என்று கருதவும் மாட்டார்கள். இந்தக் கருவிகளில் உள்ள சில பகுதிகளுக்குத்தான் அந்நியச் செலாவணி தேவையேயன்றி, முழுதும் அந்நியச் செலாவணி அடிப்படையில் அமைந்திருக்கிற நெய்வேலித் திட்டம் அல்ல இது என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் மீண்டும் மீண்டும் ஒன்றை வற்புறுத்துகிறேன். பல்வேறு பிராந்தியங்களில் ஏரிகளின் உள்வாய்ப் பகுதியில் குழாய்க் கிணறு இறக்கிவிட்டால் அங்கிருந்து வருகிற தண்ணீர் ஏரியில் நீரில்லாத காலங்களிலும் பாசனத்திற்கு உதவும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அந்த நிலையிலே நாம் காரியங்களை அணுகவேண்டும். அதற்கு மேலே, நிலங்களுக்குத் தக்கவாறு எப்படியெல்லாம் பயிர் செய்யவேண்டுமென்று வருங்கால சந்ததிகளுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். எந்தெந்தப் பகுதியில் எந்தெந்தப் பயிர் செய்யவேண்டும் என்று பார்க்கவேண்டும். எல்லாப் பகுதிகளிலும் எல்லாப் பயிர்களையும் விளைவிப்பது என்பதோ, எல்லாப் பகுதிகளிலும் ஒரே பயிரை விளைவிப்பது என்பதோ பயனற்ற செயல். அன்று நான் சொன்னேன், எங்கள் பகுதியில் பலா அற்புதமாக வளருவதைப்போல வேறே எங்குமே வளருவதில்லை. அவ்வளவு

ருசி, அவ்வளவு மணம், அவ்வளவு நிறம். அதேமாதிரி நெல்லி அற்புதமாகப் பயிர் ஆகும். காய்ப்பு வந்துவிட்டால் ஒரு ஏக்கருக்கு 1,000 ரூபாய் வரை காய் பெற முடியும். அதை கவனத்தில் கொள்ளவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்கிறேன். பத்து ஏக்கர், 20 ஏக்கர் என்று ஆங்காங்கே பொறுக்கி எடுத்து, செம்மண், சரளை இருக்கும் இடத்தில், நல்ல கன்றுகளை வைத்து, ஓர் ஆண்டு அக்கறை செலுத்தி வந்தால், அதற்குப் பிறகு ஓரிரண்டு ஆண்டுகள் ஏனோ தானோ என்று கவனித்து வந்தால் போதும்—தானாக வளர்ந்து விடும். கஷ்டம் இல்லாத ஒன்று இது. இதை உணர்ந்து செயல்புரிய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதற்குப் பிறகு, கால்நடை பற்றியெல்லாம் சொன்னார்கள். நமது பகுதியிலே ஒரு அற்புதமான இனம் இன்று கிட்டத்தட்ட இல்லை என்று ஆகிவிட்டது ; புங்கனூர்க் குட்டை என்று சொன்னால் பலருக்கு அது தெரிந்திருக்கும். சித்தூர் பகுதியிலிருந்து வருவது ; இப்போது ஒரு ஜமீந்தார் வீட்டில் மட்டும் 10—50 மாடுகள் காணக் கிடைக்கின்றன. எங்கள் பகுதியில் 1—2 அத்தி பூத்தாற்போல இருக்கிறது. அருமையான இனம் ; குட்டையான் மாடு—3 அடிதான் இருக்கும். ஒரு கட்டு வைக்கோல் வாங்கிப் போட்டால் 1 அல்லது $1\frac{1}{2}$ வாரத்திற்குப் போதும். $\frac{3}{4}$ படிக்கு மேல் $1\frac{1}{4}$ படி வரையில் கறக்கிற இனம். இந்த மாதிரி இனத்தைப் பெருக்கினால் சிக்கனத்திற்குச் சிக்கனம்—சுகத்திற்கு சுகம். அதற்குமேலே, நமது நிலத்தில் உழுவதற்கு அத்தகைய சித்து மாடுகள்தாம் பயன்படும். காங்கேயம் போன்ற மாடுகளைக் கொண்டு சதுப்பு நிலங்களில் உழுதால் அது தானே அமுங்குமேதவிர உழுவதற்குப் பயன்படாது. வறண்ட உறுதியான நிலத்தில் உழுவதற்கு சக்தி இருக்கிற பெரிய மாடுகள் பயன்படலாம். ஆனால் நீர்ப்பாடி நிலங்களில் உழ சித்து மாடுகள் வேண்டுமேதவிர, யானை போன்ற ஆகிருதியுள்ள மாடுகளைக் கொண்டுவந்து உழ முடியாது. உழுவதற்குச் சித்து மாடுகள்தான் அவசியம். இந்த மாடுகளில் 20—30 கிடைத்தாலும் அவற்றைக் கொண்டு வந்து பெருக்குவதற்கு நாம் முயற்சி எடுக்கவேண்டும். இதை மிக மிக வற்புறுத்தி, விசேட அக்கறையுடன் கவனிக்கவேண்டும் என்று விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன்.

அதற்கு மேலே, இப்போது இன வளர்ச்சிக்குப் பல காரியங்களைச் செய்கிறோம். செயற்கைச் சினை ஏற்படுத்துகிற முறையைக் கையாளுகிறோம். அது எவ்வளவுக்கு நல்லது என்பதைக் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். இப்போது ஒரு மாடு—ஒரு பொலி காளை—இருக்குமானால், அது கிட்டத்தட்ட சர்க்கார் விதிப்படி, 60 கன்றுகளுக்குத் தந்தை ஆகலாம் என்ற நெறியை வகுத்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் கிட்டத்தட்ட அது 30 கிடேரி, 30 காளைக் கன்றுகளை உற்பத்தி செய்யும்—செய்யவேண்டும். இது நம்முடைய நியதி. இந்த மாதிரி செயற்கை முறையிலேயே போய்விடுமானால் ஒரு பொலி காளையின் மூலம் உண்டாகும் கன்றுகள் 300-க்குக் குறையாது. அப்படியானால், இந்தச் செயற்கைச் சினை முறையினால் 150 காளை, 150 கிடேரிக் கன்றுகள் ஏற்பட்டுவிடும். திரும்ப அதற்குள்ளேயே கலப்பு ஏற்பட வேண்டிய நிலை ஏற்படும்—சகோத்திர மணம்போல, அதாவது, ஒரே ரத்த இனப் பிரிவு (இன்பிரீட்). இது நல்லதா என்று சிந்திக்கவேண்டும். இது இப்போது நமக்குத் தெரியாது. பத்து வருஷங்கள் போன பிறகு, இந்த இனங்கள் ஆற்றல் அற்றுப் போய் விட்டன, திராணியற்றுப் போய் விட்டன, தரம் குறைந்து விட்டன, பலம் குறைந்து விட்டன என்று ஏற்படும் என்று அத்துறை அறிஞர்கள் அஞ்சுகிறார்கள். நிரூபிக்க முடியாது இன்றைக்கு. கணித முறையில் கணித்து ஊகிக்க முடியுமேயன்றி இன்று பிரத்யட்சப் பிரமாணமாகக் காட்டமுடியாது. அத்துறையில் வல்லவர்கள் நன்கு உணருவார்கள். இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். இதனால் எவ்வளவு நன்மை தீமை என்று கண்டு, குணம் நாடி, குற்றம் நாடி, இவற்றுள் மிகை நாடி, மிகுதி எது என்று கண்டு, தக்கது என்றால் கைக்கொண்டு, தகாதது என்றால் தள்ளத் தயங்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு மேலே, சபையில் கொடுக்கப்படுகிற கணக்கு—இப்போது சர்க்காரிலே சட்டம் வேறு போட்டு விட்டோம்—ஓர் இடத்தில் பார்த்தால் வீசையில் வருகிறது, இன்னொரு இடத்தில் ராத்தல் வருகிறது, மணங்கு வருகிறது, கிலோகிராம் வருகிறது—நான் குறை சொல்லவில்லை. நாங்கள் சொல்வதாக இருந்தாலும் இது நடக்கும். ஆனால் அரசாங்கம் கொடுக்கக் கூடிய கணக்கைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. ஒரு வகைக் கணக்காகத் தாருங்கள். மணு என்றால் எத்தனை வகை மணுக்கள் ? எங்கள் ஊர் மணு ஒன்று, ரெயில்வே மணு ஒன்று, இம்ப்பீரியல் மாண்ட் என்பது ஒன்று. கொடுத்திருப்பது எந்த மணு என்று புரியவில்லை. சில பண்டங்களுக்கு ஒரு மாதிரியும் வேறு பண்டங்களுக்கு வேறு மாதிரியும் செய்கிறார்கள். அரிசி என்று கொடுக்கிறார்கள் ஒரு இடத்தில். நெல் என்று கொடுக்கிறார்கள் மற்றொரு இடத்திலே. நிலக்கடலை என்றால் நிலக்கடலை மணியா அல்லது தொலியோடு கூடியதா ? இந்த நிலை இல்லாமல் செய்ய வேண்டும். அரிசி விளைவித்துக்கொண்டிருந்தோம் வெள்ளைக்காரன் காலத்தில். இப்போது நெல்தான் விளைகிறது என்பதை உணர்ந்து விட்டோம். அப்போது ஒரு விதி வைத்திருந்தோம், அந்த எண்ணை 66·6 சதவீதம் என்று கணக்கு வைத்து நெல்லை அரிசியாக மாற்றிக் கணக்குக் கொடுத்துக்கொண்டிருந்தோம். ஒரே மாதிரியான அளவுகளில் கொடுத்து விட்டால் சுலபமாக இருக்கும். இது மாதிரி திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்றும் விண்ணப்பித்துக்கொள்கிறேன்.



அதற்கு மேலே, இந்த விவசாயிகளுக்குத் துணைத் தொழிலாக இருக்க, குறிப்பிடத் தகுந்த தொழில் மாடு வளர்த்தல், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல், தேன்கூடு வைத்துக்கொள்ளுதல் இவையாகும். இங்கு பார்த்தால் இந்த விவசாய அமைச்சரிடத்தில் தேனீ கிடையாது. அது ஃபாரெஸ்ட் இலாகாவிற்குப் போக வேண்டியிருக்கும்போல் இருக்கிறது. அதைப் பார்க்கும்போது, ஒரே துறையாக ஆக்கப்பட்டு இருப்பது நல்லது என்று கருதுகிறேன். இதைப்பற்றி பட்ஜெட்டில் விளக்கம் தந்திருக்கிறார்கள் ஓரளவுக்கு. அந்தந்த அதிகாரிகளிடத்தில் கேட்டால் சில விளக்கங்கள் கிடைக்கின்றன. அப்படி இல்லாமல் பொதுவாக, கிராமங்களில் இருக்கிறவர்களுக்கும் புரியும்படியாக எங்கெங்கே என்னென்ன விவரங்கள் கிடைக்கும், என்னென்ன முறையில் வைத்துக் கொள்ளவேண்டும் என்பன போன்ற கையேடு—ஹாண்ட் புக்—கிடைக்கும்படி செய்துவிட வேண்டும். என்ன வகையான ஆடு, என்ன பலன் தரும், அதனுடைய நன்மை என்ன, பொறுப்பு என்ன, அதனால் பலன், லாபம் என்ன என்று விளக்க விபரத்துடன் கூடியதாயிருக்க வேண்டும். அதே மாதிரியாக கோழி, என்னென்ன வகைகள், என்னென்ன அளவுக்குப் பலன் தரும், எத்தனை தரம் ஆண்டு ஒன்றுக்கு முட்டை இடும், அதனுடைய விலைவாசி என்ன, தேன்கூடு எப்படி வைத்துக்கொள்ள வேண்டும், அவைகள் கிடைக்கக்கூடிய இடங்கள் யாவை, அதற்கு சர்க்கார் என்ன வழிவகைகள் செய்திருக்கிறார்கள், அதற்கான உதவிகளை எங்கிருந்து பெறவேண்டும் என்ற விவரங்களைக்கொண்ட கையேடு ஒன்றை—ஜாஸ்தியாகப்போனால் 100 பக்கங்களுக்குமேல் போவதற்கு மார்க்கம் இல்லை—கொடுக்க இந்தத்துறை முயற்சிக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டு, காலம் குறைவு, ஆனால் விஷயங்களோ மிகுதியாக இருந்தாலும், சொன்ன அளவிலே இவற்றைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, கனம் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மான்யக் கோரிக்கையின்மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேபணையை ஒட்டிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வேளாண்மைத் தொழில் வளர வேண்டும், அப்படி வளர வேண்டியதற்கான காரண காரிய விளக்கங்களை இந்த மன்றத்திலுள்ள இரு தரப்பினரைச் சார்ந்த உறுப்பினர்களும் தெளிவுபட எடுத்துக்கூறியிருக்கிறார்கள். வேளாண்மைத் தொழில் மூலம், விளைபொருள்கள மூலம் வருகின்ற வருமானம் நாட்டினுடைய மொத்த வருமானத்தில் பாதிக்குமேல் இருக்கிற அளவுக்கு, விளைவைப் பெருக்கக்கூடிய தன்மையில் வேளாண்மைத் தொழில் மேம்பட்டு விளங்குகிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். வேளாண்மைத் தொழிலைப் பொறுத்தும், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய நிலையைப் பொறுத்தும் பார்க்கிறபொழுது,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [11th March 1963

நாளுக்கு நாள் கீழே போகிற நிலைமைகளைத்தான் நாம் பார்க்கிறோம். வேளாண்மைத் தொழிலைப்பற்றி இந்த நாட்டில் பண்டைக் காலத்தில் சிறப்பாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லாம் தொழுதுண்டு
பின் செல்பவர்."
" மேழிச் செல்வம் கோழைப்படாது "
" சீரைத் தேடின் ஏரைத் தேடு "
" ஏர் பிடிக்கும் கை கோல் பிடிக்கும் கை "

என்றெல்லாம் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன. அந்த அளவுக்கு நிலைமைகள் முன்பெல்லாம் சீராக அமைந்திருந்தன. இப்பொழுது நிலைமைகள் வேறுவிதமாகச் சென்று கொண்டிருக்கின்றன. இன்றைய நிலைமையில் வேளாண்மைத் துறையில் தன் நிறைவு ஏற்படுவதற்கும், அதன் மூலம் அதிகமாக உற்பத்தி ஆவதற்கும், அதன் மூலம் நாட்டினுடைய வருமானம் பெருகுவதற்கும் வேண்டிய அளவு அது சீர்திருத்தப் படவேண்டும் என்ற கருத்துக்களை பலரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுடைய நிலைமை நாளுக்கு நாள் கீழேபோகிற அளவுக்கு, அதில் கிடைக்கின்ற வருமானத்தையும், அதை நம்பி வாழ்கின்றவர்களுடைய எண்ணிக்கையையும், அதிலிருந்து அவர்கள் மிச்சப்படுத்தி பெறுகின்ற பொருளின் தன்மையையும் பார்க்கிறபொழுது, நிலைமை கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கிற நிலைமையைத்தான் பார்க்கிறோம்.

நமது நாட்டைப் பொறுத்த மட்டில் கணக்குப் பார்த்தால், தமிழக மாநிலத்தில் வேளாண்மைத் தொழிலில் மட்டும் 74 சத விகிதத்தினர் ஈடுபட்டு, அந்தத் தொழிலை நம்பி வாழவேண்டிய நிலைமையில் இருக்கின்றனர். மற்றைய நாடுகளிலும் கூட வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய நிலைமையை, வாழ்க்கை வசதியைப் பெருக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய எண்ணிக்கையை எவ்வளவு குறைக்கலாம், அதனுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிவகைகளை எந்த முறையில் காணலாம், அதிலிருந்து தொழில் உற்பத்தித் துறைக்கு எத்தனை பேர்களை ஈர்க்கலாம் என்பதிலே கவனம் செலுத்தி வேளாண்மையை வளர்த்துக்கொண்டு வருகிற நிலைமையைப் பார்க்கிறோம். அந்த அடிப்படையிலே, கிரேட் பிரிட்டனைப் பார்ப்போமானால் வேளாண்மைத் தொழிலில் 6 சத விகிதத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் ; அமெரிக்காவில் 19 சத விகிதத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் ; ஜெர்மனியில் 14 சத விகிதத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் ; பிரான்ஸில் 25 சத விகிதத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்து, அதன் மூலம் வருகின்ற வருமானம், மற்ற நிலைமைகள் பெருகும் அளவுக்கு அதில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு செல்லும் அளவுக்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் தொழில் உற்பத்தித் துறைக்கு வேளாண்மைத் துறையில் இருக்கிற 74 சத விகிதத்தினரை மெல்ல மெல்ல ஈர்த்துக்கொண்டு, வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய எண்ணிக்கையை மெல்ல மெல்ல குறைத்து, அவர்களுடைய வருமான நிலையைப் பெருக்குவதற்கான திட்டங்களை அரசினர் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மேலும், வேளாண்மையின் மூலம் கிடைக்கக்கூடிய விளைபொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், விளை நிலங்களாக ஆக்கக்கூடிய நிலங்களை விளை நிலங்களாக ஆக்குவதற்கும், இப்பொழுது விளைந்துகொண்டிருக்கக்கூடிய நிலங்களில் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கும் வேண்டிய முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம், அப்படி ஈடுபட்டுக்கொண்டிருக்கிற காலத்தில், விளைவிக்காத நிலங்களை விளைச்சல் உள்ள நிலங்களாக ஆக்கவேண்டும். அத்தகைய முயற்சிகளை எடுத்துக் கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம் நீர் வசதி இன்மைதான். நீர்ப்பாசன வசதி இல்லாத காரணத்தினால்தான், சில பல பகுதிகளை புதியதாகப் பாசனத்திற்குக் கொண்டுவர இயலவில்லை என்று சொன்னார்கள். நீர்ப்பாசன வசதி மான்யக் கோரிக்கையின்பொழுது, அதைப்பற்றி விரிவாகப் பேசுகிற நிலைமை



11th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இருந்தாலும், பெரிய அணைக்கட்டுகளும், மற்றவைகளும் வட மாநிலங்களில்தான் ஏற்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டாலும், அப்படிப்பட்ட பெரிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவதற்கான கூறுபாடுகள் தமிழகத்தைப் பொறுத்த வரையிலே இல்லை, பயன்படுத்த வேண்டிய அளவுக்கு பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுவிட்டது என்று எடுத்துக் காட்டப்பட்டாலும், பல உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லிய தன்மையிலிருந்து, சிறிய நீர்ப்பாசன திட்டங்களைப் பெருக்குவதற்கான வழி வகைகள், கூறுபாடுகள் எல்லாத் தொகுதிகளிலும் இருக்கின்றன என்பதை நன்றாக அறிகிறோம். சிறிய நீர்ப்பாசன திட்டங்களை வளர்ப்பதற்கும், ஆங்காங்கு இருக்கிற குறைபாடுகளைப்போக்கி, புதிய நிலங்களை விளை நிலங்களாக ஆக்குவதற்குமான முயற்சியில் ஈடுபடவேண்டும். பெரிய திட்டங்களுக்காக இந்தியப் பேரரசிடமிருந்து மான்யங்கள் வாங்குவதற்கு வழி இல்லாமல் இருந்தாலும், சிறிய நீர்ப்பாசன திட்டங்களை பெரிய அளவுக்கு நிறைவேற்றும் வகையில் இந்தியப் பேரரசிடம் அதிகமாக மான்யம் கோரிப் பெறவேண்டும். பெரிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழி வகைகள், கூறுபாடுகள் இல்லை என்பதை சுட்டிக் காட்டி, அதனை ஈடுசெய்கின்ற வகையிலே சிறிய நீர்ப்பாசன திட்டங்களைத் தான் நிறைவேற்ற முடியும் என்ற காரணத்தை எடுத்துச் சொல்லி, அதிகமான மான்யத்தைப் பெறுவதற்கு முயற்சிகளை மாநில அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுடைய நிலைமையைப் பார்த்தால், 5 ஏகருக்குக் குறைவாக ஈடுபட்டிருப்பவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால், கிட்டத்தட்ட 82 சத விகிதத்தினர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று புள்ளி விவரம் எடுத்துக் காட்டுகிறது. அவர்களுக்கு இருக்கிற வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டும். வேளாண்மைத் தொழில் மூலம் அவர்கள் விளைச்சலைப் பெருக்கினாலும், அதிலிருந்து வருகிற வருமானம் குறைந்துகொண்டு வருவதினால், அவர்களுடைய வாழ்க்கையை ஈடேற்ற முடியவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம், நெல் விலை குறைந்திருப்பதும், மற்ற விலைகள் ஏறியிருப்பதும் ஆகும், அந்த நெல்லை உற்பத்தி செய்வதற்காக அவர்கள் வாங்கித் தீரவேண்டிய பொருள்களின் விலை, அவர்கள் ஈடுபடவேண்டிய வேறு வகைச் செலவுகள், ஏறிக்கொண்டிருக்கின்றன. வேறு வகையான செலவினங்கள் ஏறிக் கொண்டிருப்பதற்கும், விலை ஏறிக்கொண்டிருப்பதற்கும் காரண, காரிய விளக்கங்கள் என்ன என்று பொருளாதார நிபுணர்களைக் கேட்டால், கள்ள மார்கெட் காரணமாகவும், கொள்ளை லாபத்தின் காரணமாகவும், பதுக்கல் காரணமாகவும், இந்தியப் பேரரசின் ஏற்றுமதி, இறக்குமதி லைசென்ஸ் கொள்கை அவ்வப்பொழுது மாறுகின்ற அடிப்படையை வைத்து, அவ்வப்பொழுது நிலைமைக்கேற்ப விலையை உயர்த்துவதன் காரணமாகவும், இடைத்தரகர்கள் தம்முடைய லாபத்திற்கு உச்ச வரம்பு வைக்காத அளவிற்கு, தம்முடைய விருப்பத்தையே உச்ச வரம்பாக வைத்து விலையை ஏற்றும் பொழுது அது கட்டுப்படுத்தப்பட்டு நிறுத்தப்படாத காரணத்தாலும், விவசாயிகள் அந்தப் பொருள்களை ஏற்றப்பட்ட விலைக்கே வாங்கித் தீர வேண்டியிருக்கிறது. இவற்றின் காரணமாக விளைச்சல் மூலம் வருகிற வருமானம் குறைகிற நிலைமையும், செலவினம் ஏறுகிற நிலைமையும் இருக்கின்றன என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள்.

அரிசி விலை குறைய வேண்டும் என்ற கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூறுகிறார்கள் என்றால், அரிசி விலை, நெல் விலை மட்டும் தான் குறையவேண்டும், மற்ற பொருள்களின் விலை குறையக்கூடாது என்று சொல்லவில்லை. மற்ற பொருள்களின் விலையும் குறைந்து, உழவர் பெருங்குடி மக்களுடைய உற்பத்திச் செலவும், குறைவதற்கான நிலைமையை உருவாக்கித் தரவேண்டும். அவர்கள் தங்கள் நெல் விலை குறைகிற அளவுக்கு, அந்த குறைந்த நிலைமை மற்றவர்களுக்கு பயன்படுகின்ற அளவுக்கு, அவர்களுக்கு வருமானத்தைத் தேடித் தருகிற அளவுக்கு வாய்ப்புக்களையும், வசதிகளையும் செய்யவேண்டும். வேளாண்மையைப் பெருக்கவேண்டும், உற்பத்தியை அதிகரிக்கவேண்டும், தன்நிறைவு பெற வேண்டும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிற அளவுக்கு நிலைமை ஏற்பட்டு நாட்டினுடைய பொது வருமானம் மிகவேண்டும், பொது வரு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [11th March 1963

மானம் மிகுந்து வாழ்க்கைத் தரம் உயரவேண்டும், வயிரார உண்ண அத்தனை பேர்களுக்கும் உணவு வேண்டும் என்கின்ற கருத்துக்களில் யாருக்கும் வேறுபாடுகள் இருக்க நியாயம் இல்லை. அதற்கான முயற்சி களில் அரசினர் அறவே ஈடுபடவில்லை என்றும் நாங்கள் கூற வரவில்லை. நம்முடைய தேவைகள் நிறைவேற்றப்படுகின்ற அளவுக்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ? அந்த முயற்சிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகைகள் செலவழிக்கப்பட்டிருக்கிற வகைகள், செலவழிக்கப்பட்டிருக்கிற முறைகள், செலவழிக்கப்பட்டிருக்கிற நெறிகள் சரியாக இருக்கின்றனவா ? செலவழிப்பதற்குக் காரணமாயிருக்கிற துறைகள் செம்மையாக நிறைவேறி யிருக்கின்றனவா ? என்பதைத்தான் இம்மன்றத்தினர் கவனிக்க வேண்டி யவர்களாக இருக்கிறோம். அவை பற்றிய குறைபாடுகளைத்தான், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி, எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பசுந்தாள் உரத்தைப் பெருக்குவதற்காக வும், உரத்தைப் பெருக்குவதற்காகவும், பொறுக்கு விதைகளை உரு வாக்கித் தருவதற்காகவும், நிலத்தின் தன்மையைப் பெருக்கிக் காட்டு வதற்காகவும், வேறு பல வகைகளுக்காகவும் ஒதுக்கப்பட்ட தொகைகள் சரியாகப் போய்ச் சேர்ந்திருக்கின்றனவா என்பதற்கான காரண, காரிய விளக்கங்களைக் காணவேண்டும். உழவர்களுக்குக் கொடுக்கக்கூடிய வசதி களைக்கூட சரியாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சூழ்நிலையில் உழவர் பெருங்குடி மக்கள் இல்லை என்பதை ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் உறுப்பினர் கிருஷ்ணசுவாமி நாயுடு அவர்கள் தெளிவுபட எடுத்துக் கூறினார்கள். ஆகவே, இப்பொழுது அதற்கான ஆராய்ச்சிகளிலே ஈடு
1-00 p.m. பட்டு, விவசாயத் துறையிலே புதிய முறைகள், புதிய மனப் போக்குகள், புதிய வழி முறைகளைச் செலுத்துவதற்கான கண்டுபிடிப்புக்களைப் பெரிய பட்டப்படிப்பு படித்து வருகிறவர்கள் கண்டறிந்து வருகிறார்கள். உழவர் பெருங்குடி மக்கள் அந்தக் கண்டுபிடிப்புக்களை அறியவும், மன நிலை மாறவும், புதிய முறைகளைக் கற்றுக் கொள்ளவும், புதிய முறைகளை செயல் முறையில் காட்டுவதற்கான வழிவகைகளைப் பெறவும் முடியாமல் இருக்கிறார்கள் என்று அவர் எடுத்துச் சொன்னார்கள். பட்டப்படிப்பு படித்து, சிறந்த ஆராய்ச்சி நிபுணர்களாக வந்து, எந்தெந்த வகைகளிலே உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிவகைகளைக் காணலாமென்று முயலு கிறவர்களின் எண்ணிக்கை அதிகப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பதை விட்டு, அவர்களுடைய படிப்பின் தரம் உயர்ந்திருக்கிறதா என்று பார்ப்பதை விட்டு, அவர்கள் கிராமங்களில் வாழும் உழவர் பெருங்குடி மக்கள் மீது ஆர்வம் கொண்டுள்ளார்களா, அனுதாபம் கொண்டுள்ளார் களா ? நெருங்கிப் பழகி அவர்களுடைய உள்ளத்தை மாற்றுகிற அளவுக்கு பெரும் முயற்சி எடுக்கும் நிலைமைகளைப் பெற்றிருக்கிறார்களா ? அந்த அளவுக்கு அவர்கள் எடுத்துச் சொல்லுகிற கருத்துக்கள் நிலைபெற்று வர வழிவகை இருக்கிறதா ? என்பதை நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த முறையிலே அதிகாரிகளின் முயற்சிகள் இந்த நிலைமையை மாற்றப் பயன்படுமேயானால், உழவர்கள் கற்றுக்கொள்ளும் கருத்துக்கள் மூலமாக உற்பத்தியை அதிகமாகப் பெருக்கிக் கொள்ள வழி வகை ஏற்படும். பொது விவாதத்தின்போது நான் எடுத்துக் காட்டியதைப் போல, சென்ற 18 ஆண்டு காலமாகப் பிரிட்டன், புதிய நிலத்தை விளைச்ச லுக்குக் கொண்டுவராவிட்டாலும்கூட, உற்பத்தியைப் பெருக்குவதற்கான முறைகளைச் சீராகச் செம்மையாகக் கையாண்டதன் காரணமாக, 60 சத விகிதத்திற்குமேல் பெருக்கிக் காட்டியிருக்கிறார்கள். நாமும் அந்த முறை யில் இருக்கிற நிலங்களை வைத்துக்கொண்டுதான் பெருக்கிக் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான முயற்சிகளிலே இடர்ப்பாடு கள், குறைபாடுகள் இல்லாமல், குற்றங்கள் நிகழாமல், அதற்கு அதிகாரி கள் காரணமாக இல்லாமல், மிகத் தீவிரமாக அந்த முறைகளைப் பயன் படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சாதாரணமாக உழவர் பெருங்குடி மக்கள் தங்களுடைய நிலங்களில் தாங்களாகவே பொறுக்கு விதைகளை உருவாக்குகிற நேரத்தில், ஒரு ஏக்கர் நிலத்தில் 20 மூட்டை நெல் விளைகிறது என்றாலும்கூட, அதிலிருந்து ஒரு கலமாவது பொறுக்கு விதையை சேகரிப்பதற்குக் கவலை யோடு, அக்கறையோடு, ஆர்வத்தோடு தலையடியிலேயே, அதாவது முதல் அடியிலேயே, பொறுக்கு விதைகளைப் பெறத்தக்க நிலைமை பொதுவாகக்



11th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கையாளப்பட்டு வருகிறது. இரண்டாவது, மூன்றாவது அடிகளிலே கிடைக் கும் விதைகளைக்கொண்டு விளைவைப் பெருக்க வழிவகை கிடைக்கா. தலையடி மூலம் பெறுகிற பொறுக்கு விதைகள்தான் சிறந்த பொறுக்கு விதைகளாக இருக்கும் என்ற முறையில், தாங்களாக இப்படிச் சேகரிக்கும் பொழுது அக்கரையோடு செய்வார்கள். அப்படிப்பட்ட அக்கரை காட்டப் படாத காரணத்தினால், தலையடியில் இல்லாமல் இரண்டாவது மூன்றாவது அடியில் கிடைக்கும் விதைகளில் வேறு பல பொருள்களும், களைகளும் சேரும் அளவுக்கு அந்தப் பொறுக்கு விதைகள் இருக்கின்ற காரணத்தி னால், களைகள் அதிகமாக மண்டுகிற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதிலே கனம் அமைச்சர் அவர்கள் தீவிர கவனம் செலுத்திச் சிறந்த பொறுக்கு விதைகளைக் கொடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே நல்ல விளைச்சல் உருவாகின்ற நிலைமை இருக்கிறது. சாதாரணமாகச் சொல்லப்படுவது, அந்த மாவட்டத்திலே எலி களின் தொல்லை காரணமாக, ஆண்டுதோறும் 50,000 டன் நஷ்டமாகிறது என்பதாகும். இந்தப் புள்ளி விவரம் பத்திரிகையில் வந்திருக்கிறது. எலிகளின் தொல்லைகளைப் போக்குவதற்கு, திரு. எஸ். ஜி. ஹெரீஸ், எஸ். என். பாத்ரா, திரு. பாலசுப்ரமணியம், திரு. மகாதேவன், போன்ற வர்களைக்கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுத் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. அந்தத் திட்டம் எந்த அளவுக்குப் பலன் தந்திருக்கிறது, எலிகளின் கொடுமைகள் எந்த அளவுக்கு தீர்க்கப் பட்டிருக்கின்றன என்பவற்றில் அமைச்சரவை கவனம் செலுத்தி இப் பேர்ப்பட்ட சீர்கேடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஏழை எளியவர்கள், முதல் இல்லாதவர்கள், கடன்பட்டு வாழ்கிறவர்கள், வேறு வசதி பெற முடியாமல் இருக்கிறவர்கள், சர்க்காரிட மிருந்து வசதி பெற்றாலொழிய தங்களுடைய உழவடை நிலைமைகளைச் சரியாக அமைத்துக் கொள்ள முடியாத நிலைமையில் இருப்பவர்கள், ஆகிய இவர்களுக்கு உதவி செய்ய சர்க்கார் சிலபல முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சிகள் உள்ளபடியே ஏழை எளியவர் களுக்குப் போய்ச் சேருகிறதா ? என்பதில் பல்வேறு குறைபாடுகள் இருக் கின்றன. இவற்றையெல்லாம் சட்ட மன்ற உறுப்பினர்கள் உணர்ந் திருப்பதோடு மட்டுமல்லாமல், 1958-ம் ஆண்டிலே விவசாயத் துறையின ரால் அமைக்கப்பட்ட குழுவினரின் அறிக்கையைக் கண்டிருக்கவும் கூடும். கடன் வசதிகள் ஏழை விவசாயிகளுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று எண்ணியபோதிலும் அவை ஏழை எளியவர்களுக்குப் போகாமல், வசதி யுள்ளவர்களுக்கு மட்டுமே போகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று அந்த அறிக்கையிலே குழுவினர் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த அறிக்கை யில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால் : "During the last few years the existing organisation for credit has been able to benefit largely the well to do and the comparatively richer classes of peasants. The small peasant has been largely left untouched and this seems to be the principal reason why the G. M. Campaign fails to enthuse the large majority of cultivators to increase production to any appreciable degree'. ஏழை எளிய விவசாயிகளுக்குப் போய்ச் சேர வேண்டுமென்று ஒதுக்கப்பட்ட தொகை சரியாக போய்ச் சேருவதற்கான முறையில், எங்கே குறைபாடுகள் இருந்தாலும், அவற்றை அமைச்சரவை களைகிற அளவுக்குத் தக்க நடவடிக்கை எடுத்தால்தான், அதனால் எதிர்பார்க்கிற நல்ல பலன் வந்து சேர வழிவகை கிடைக்கும். பொறுக்கு விதைகள் கிடைப்பதற்கும், உரங்கள் கிடைப்பதற்கும், பசுந்தாள் உரம் கிடைப்பதற்கும், வேறு வகை களில் உற்பத்தியைப் பெருக்குவதற்குமான அத்தனை வழிவகைகளையும் செய்துதரவேண்டிய நிலையில் அமைச்சரவை இருக்கிறது. அந்த முறையை மேற்கொள்ள வேண்டியவர்களாக அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

உலகத்திலே அதிகமான கால்நடைச் செல்வம் நம் நாட்டிலே இருக் கிறது என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. அதிகமான கால்நடைச் செல்வங்கள் இருக்கின்றன. கால்நடைச் செல்வத்தை உருவாக்குவதிலே அதிக கஷ்டம் இருக்க முடியும். ஆனால், இருக்கின்ற கால்நடைச் செல்வங் களை ஊட்டம் உடையனவாகவும், வளம் உடையனவாகவும் ஆக்குவதற்கு முயற்சி எடுத்தால் இருக்கின்ற மாட்டு இனத்தையும், மற்ற கால்நடைச்

செல்வத்தையும் நல்ல பயன் தரத்தக்கனவாக ஆக்கமுடியும். அதற்கான முயற்சிகளில் அதிகமாக ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். இருக்கின்றவைகளை மேலும் மேலும் இழக்காமல், காவு கொடுக்கும் நிலைமைக்கு அவற்றை ஆளாகாமல், ஊட்டம் உள்ளனவாக ஆக்குவதற்கு என்னென்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். புதிதாக மாட்டை நாம் உருவாக்க முடியாது. உருவாகி இருக்கிற கால் நடைச் செல்வங்களை ஊட்டம் உடையனவாக ஆக்கும் முயற்சிகளில் ஈடுபட முடியும். சில கிராமங்களிலே மேய்ச்சல் நிலம் கிடைக்காத காரணத்தால் இயற்கையான ஊட்டம் பெற வேண்டிய கால்நடைச் செல்வங்கள் ஊட்டம் பெறமுடியாத நிலையில் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், ஊரிலே ஏற்படுகிற பல்வேறு நிலைமைகளின் காரணமாக எனக்கு, உனக்கு என்று, ஆளுக்குக் கொஞ்சம் பிரித்துக்கொண்டுவிடுகிறார்கள். பல கிராமங்களிலே புறம்போக்கு நிலங்கள் பறிபோகிக்கொண்டிருக்கின்றன. கால்நடைகள் காலாரச் சென்று விட்டு வந்துவிடுகின்றனவே தவிர, போய், மேய்ந்து ஊட்டத்தைப் பெருக்கக் கூடிய நிலையில் இல்லை. எனவே, ஊர்தோறும் திட்டமிட்டு இவ்வளவு மேய்ச்சல் நிலம் இருந்து தீரவேண்டும், இவ்வளவு கால்நடை இருக்கிற இடத்திலே இவ்வளவு நிலம் இருந்தால்தான் ஊட்டம் பெற முடியும் என்று திட்டவட்டமான ஒரு முறையை வகுக்கவேண்டும். மற்றவர்கள் அந்த நிலங்களைப் பயன்படுத்திக் கொள்ளாத வகையில், அவைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பினை அமைச்சரவை எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், காடுகளிலிருந்து பசுந்தாள் தழைகள் இவைகளைப் பெறுவதற்கான உரிமைகளை மக்களுக்கு அளிக்க வேண்டும். இந்தப் பிரச்னை காட்டிலாகாவினுடையது என்றாலும், வேளாண்மைத் துறைக்குப் பயன்படும் ஒன்று. தனிப்பட்டவர்களுக்கு விட்டால் தழை பறிப்பதற்குப் பதிலாக மரத்தையே பறித்துக்கொள்ளும் நிலைமை ஏற்படக் கூடும். அப்படி விடாமல் அரசினரே அத்தகைய பசுந்தாள் தழைகளைப் பெருக்குவதற்கான முயற்சிகளிலே ஈடுபடவேண்டும். வேளாண்மைத் தொழிலைப் பெருக்குவதற்கான வழிவகைகளை மிகத் தீவிரமாகச் செய்ய வேண்டுமென்று நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். விளைச்சல் பெருகுகின்ற அளவுக்கு செயல் முறைகளை மேற்கொள்ள வேண்டும். இதனை அருள் கூர்ந்து அமைச்சரவை கவனிக்க வேண்டும். மேலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டாவது விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு 30 லட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிட்டு ஒரு செய்தி வந்தது. அது எந்த அளவிலே இருக்கிறது, இரண்டாவது விவசாயக் கல்லூரி உருவாகி, அதன் மூலமாக இந்த மாநிலத்தின் நிலைமைகளை வளர்ப்பதற்கு, முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். ஜப்பானிய சாகுபடி முறைக்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அது எந்த வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது நல்ல முறையில் பயன் அளிக்கக் கூடியதாக இருக்கிறதா ? இல்லையா ? அந்த முறை கைவிடப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறதா அதற்கென ஒதுக்கப்பட்ட ரூ. 1 லட்சம் எந்த முறையில் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் தெரியாத நிலையில் நாம் இருக்கிறோம். அந்த முறையில் அது பயன் அளிக்கக்கூடியதாக இருக்கிறதா சர்க்கார் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலே இருக்கிறதா கைவிடக் கூடிய அளவிலே இருக்கிறதா என்ற விவரங்களைக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பாக்கு, அரக்கு போன்ற அன்னிய செலவாணி ஏற்படுத்தித் தருகின்ற பயிர்களை வளர்ப்பதற்குத் திட்டங்கள் இடப்பட்டிருக்கின்றன. 1962–63-ல் ரூ. 64,000 ஒதுக்கப்பட்டிருந்தது. 1963–64-ல் அதே தொகை தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை விரிவுபடுத்துவதன் மூலம் வருமானத்தைப் பெருக்குவதற்கான முயற்சிகளிலே அமைச்சரவை ஈடுபட வேண்டுமென்று கூறிக்கொண்டு, வேளாண்மையில் தன்னிறைவு பெறுவதற்கு இப்படிப்பட்ட முயற்சிகள் குறைபாடு இல்லாத அளவுக்கு நிறைவேற்றும் வகையில் அவ்வப்போது கண்காணிப்புச் செலுத்தி, மிகச்சீராகவும், செம்மையாகவும் முயற்சிகள் அத்துணையையும் அமைச்சரவை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக்கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.



*** கனம் திரு. பூ. கக்கன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாய மானிய கோரிக்கையின் மீதும் கால்நடை இலாகா மானிய கோரிக்கையின் மீதும் இந்த மன்றத்திலுள்ள பல கனம் அங்கத்தினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நல்ல கருத்துக்களைச் சொன்னால் அவைகள் நல்ல முறையில் பரிசீலனை செய்யப்படும். அதன் மூலம் விவசாய மக்கள் நல்ல பயனடைவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். விவசாயிகளைப் பற்றி ஏதாவது ஒரு அரசாங்கம், ஏதாவது ஒரு கட்சி, பாடுபட்டிருக்கிறது என்று சொன்னால் அது இந்த அரசாங்கம் தான், அது காங்கிரஸ் கட்சிதான் என்று சொன்னால் மிகையாகாது. சுதந்தரம் அடைந்த பிறகு விவசாயிகள் நல்ல முன்னேற்றமடைய வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி தான் பாடுபட்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. சுதந்தரம் அடைந்த பிறகு முதற்படியாக விவசாயிகளுக்குத்தான் நன்மை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் காரியங்களைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காக இந்த அரசாங்கம் கண்ணும் கருத்துமாக பாடுபட்டுக்கொண்டு வருகிறது, என்பதை முதலில் நான் எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். இதை மனதில் கொண்டு தான் விவசாயிகளுக்கு என்று முதலில் கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு அடுத்தாற்போல் ஒற்றிவைத்த நிலங்கள் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்தார்கள். அதன் பிறகு அவர்களுக்கு நியாய வாரக் கடன் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அத்துடன் நிற்காமல், நில உச்ச வரம்புச் சட்டத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அதையெல்லாம் கவனித்தால் இந்த அரசாங்கம் விவசாயிகளுடைய முன்னேற்றத்தை மனதில் கொண்டு எவ்வளவு அரும்பாடு பட்டு வருகிறார்கள் என்பது தெரிய வரும். இதை, இந்த மன்றத்திலுள்ள ஏனைய அங்கத்தினர்களும் அறிவார்கள். இதை முதலில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நமது மாகாணத்தில் குறிப்பாக விவசாய மக்களுக்கு, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு இந்த அரசாங்கத்தால் எந்தெந்த வகைகளில் என்னென்ன உதவிகளைச் செய்து கொடுக்கவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து கொண்டு வருகிறார்கள். ஒரு காலத்தில்—எல்லோருக்கும் நன்றாக தெரியும்—விவசாய ஆபீஸ் எங்கே இருக்கிறது என்பதைக் கூட விவசாயிகள் தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறார்கள். உரம் வாங்க வேண்டும் என்றால் விவசாயிகளுக்கு அந்த ஆபீஸ் எங்கே இருக்கிறது என்று கூட தெரியாமல் இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பார்க்கும்போது விவசாயிகளுக்கு அதெல்லாம் நன்றாகத் தெரியும். எங்கே போய் உரம் வாங்கலாம் என்றும் தெரியும். இன்றைக்குக் குறிப்பாக பார்த்தால் விவசாயிகள் ஆபீஸ்களில் காத்திருந்து தங்களுக்கு வேண்டிய உரம், நிதி, முதலியவைகளைப் பெற்று வருகிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். இப்படி அந்தந்த ஆபீசுகளுக்கு சென்று தங்களுக்கு வேண்டிய நன்மைகளைப் பெற்று வருகிறார்கள். அப்படி தங்களுக்கு வேண்டிய வசதிகளைப் பெற்று, விவசாயத்தைப் பெருக்கி, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்கு என்று அநேக திட்டங்களைப் போட்டு அவைகளை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். அந்தத் திட்டங்களின் காரணமாக உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டும் என்று சொல்லி அவர்களும் அதிகமாக உற்பத்தியைப் பெருக்க முற்பட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் அதிகமாக உற்பத்தியைப் பெருக்கி நல்ல முறையில் வாழ வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உற்பத்தியைப் பெருக்கி தங்களுக்குத் தேவையானதை வைத்துக்கொண்டு அதிகமாக இருப்பதை விற்று லாபம் அடைந்து தங்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த முறையில் விவசாயிகளும் நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டு வருகிறார்கள். கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும் இந்த மாநிலத்தில் தான் அதிக உற்பத்தியை கண்டிருக்கிறோம். இந்திய தேசத்தின் சராசரி உற்பத்தியைக்காட்டிலும் இதர மாநிலங்களை ஒப்பிட்டாலும் இந்த மாநிலத்தில் தான் அதிகப்படியான உணவு உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம் என்பது தெரிய வரும். அந்தப் பணி இந்த மாநிலத்தின் விவசாயியைச்

[திரு. பூ. கக்கன்] [11th March 1963]

சார்ந்தது. அந்த முறையில் நம் மாநிலத்தில் விவசாயிகள் நல்ல முறையில் பாடுபட்டு வருகிறார்கள். இதற்கு இந்த அரசாங்கம் எவ்வளவு தூரம் ஒத்துழைப்புக்கொடுக்க வேண்டுமோ அந்த அளவு கொடுத்துக்கொண்டு வருகிறது. விவசாயிகளுக்கு வேண்டிய உரம் கொடுக்கப்பட்டு வருகிறது. கலப்பைகள் வாங்குவதற்கும் கிணறுகளை வெட்டிக்கொள்வதற்கும் மற்றும் இதர விவசாயக் காரியங்களுக்கும் வேண்டிய கடன் உதவியும் செய்து தரப்பட்டு வருகிறது. எவ்வளவு துரிதமாக கடன் உதவி செய்ய வேண்டுமோ அவ்வளவு துரிதமாகத்தான் செய்து வருகிறது எவ்வளவு துரிதமாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு துரிதமாக நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டும் வருகிறது என்பதை கனம் எதிர் கட்சி தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த மாநிலத்தில் விவசாயிகளுடைய நிலைமை உயர வேண்டும் என்பதற்காக பல உதவிகளைச் செய்து வருகிறோம். அந்த முறையில் அவர்களும் உயர்ந்து கொண்டே தான் வருகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. விலைவாசிகள் குறைந்துவிட்டன என்று சிலர் சொல்லுகிறார்கள். உள்ளபடியே பார்த்தால் கிராமங்களில் உற்பத்தி அதிகமாகப் பெருகி வருவதால் விலை குறைகிறது. சாதாரணமாக அறுவடை காலங்களில் எப்பொழுதுமே விலை கொஞ்சம் குறையத்தான் செய்யும். அதைப் போலவே இப்பொழுது அறுவடை காலமாக இருப்பதால் விலை கொஞ்சம் குறைந்திருக்கிறது. இந்த குறைவு அறுவடை காலம் முடியும் வரையில் தான் இருக்கும். விலை ரொம்பவும் குறைந்து விட்டது என்று சொல்வது நல்லது அல்ல. அறுவடை காலங்களில் வியாபாரிகள் தானியங்களை வாங்கி வைத்துக்கொண்டு நல்ல விலை வரும்போது விற்க முன் வருவார்கள். இப்பொழுதே விற்றுவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் அதை வாங்கி வைத்துக்கொண்டு பிற்காலத்தில் விற்க முற்படுவார்கள். அதைப்போலவே குறைந்த விலையில் விற்க இருப்பதால் கிராமங்களில் விவசாய இலாகா மூலமாக பல கோடவுன்களைக் கட்டிக்கொடுத்திருக்கிறோம். அவைகளில் விவசாயிகள் தங்களுடைய தானியங்களை சேகரித்து வைத்துக்கொண்டு நல்ல விலை வரும்போது விற்கலாம் என்ற ஏற்பாட்டையும் இந்த அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது. அந்த முறையில் பல கிராமங்களில் பல கோடவுன்கள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி கிராமங்களில் பல மார்க்கெட்டிங் சொசைட்டிகளை ஆரம்பித்து வைத்து விவசாயிகள் தங்களுடைய தானியங்களை அங்கே சேர்த்து வைத்துக்கொண்டு பின்னால் விற்பதற்கு வேண்டிய வசதிகளையும்செய்து கொடுத்திருக்கிறார்கள். மூட்டை ஒன்று 15 ரூபாய் முன்பணம் கொடுத்து கூடுதலாக விற்கக்கூடிய காலங்களில் அவற்றை விற்பதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்படி இந்த மாகாணத்தில் பல கோடவுன்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றன. இப்படி பல முறைகளில் விவசாயிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுத்து உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டும் என்றும் அப்படி அதிகமாக உற்பத்தி செய்த பண்டங்களை நல்ல விலைக்கு விற்கவும் இந்த அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை முதலில் நான் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் எவ்வளவு நன்மைகளைச் செய்ய வேண்டுமோ அவ்வளவு நன்மைகளையும் செய்து கொண்டு தான் வருகிறது. மதிப்பிற்குரிய எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அமெரிக்க கால்நடைகளைப் பற்றி சொன்னார்கள். நாம் சுதந்தரம் அடையும் வரையில் அந்நியருக்கு அடிமையாக இருந்தோம். அப்பொழுது எந்த விதமான திட்டத்தையும் போட்டு அவற்றை நிறைவேற்ற முடியவில்லை. நாம் சுதந்தரம் அடைந்த பிறகு பல திட்டங்களைப் போட்டு அவைகளை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். அந்த முறையில் கால்நடைகளையும் நல்ல முறையில் அபிவிருத்தி செய்து கொண்டு வருகிறோம். ஒவ்வொரு ப்ளாக்கிலும் கேந்தர கிராமங்களிலும், இனச் சேர்க்கை மூலமாக சப் சென்டர்களிலும் கால்நடைகளை அபிவிருத்தி செய்து கொண்டு வருகிறோம், பெங்களூரிலிருந்து நல்ல முறையில் செமன்களை கொண்டு வந்து உபயோகப்படுத்தி நல்ல முறையில் கால்நடைகளை அபிவிருத்தி செய்து வருகிறோம். நல்ல முறையில் மாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு



[11th March 1963] [திரு. பூ. கக்கன்]

களை அரசாங்கம் செய்து வருகிறது. அந்த முறையில் கால்நடைகள் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்து வருகிறது. நாம் சுதந்தரம் அடைந்த பிறகு முதல் ஐந்தாண்டு திட்டம் போட்டு அதை நிறைவேற்றி விட்டு இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் மத்தியில் இருக்கிறோம். இந்த நிலைமையில் ஒன்றுமே செய்ய வில்லை என்று சொல்லுவது சரியல்ல. அடிமையாக இருந்து விலகிய பிறகு நல்ல திட்டங்களை அமைத்து அபிவிருத்தி அடைந்து வருகிறோம். அதைப் போலவே கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்கு எவ்வளவு உதவி செய்ய வேண்டுமோ அவ்வளவு உதவியையும் இந்த அரசாங்கம் விவசாயிகளுக்குச் செய்து வருகிறது. எவ்வளவு தூரம் அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவ முடியுமோ அந்த அளவு கடன் கொடுத்தும் உதவி அளிக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மதிப்பிற்குரிய சுதந்தரா கட்சி தலைவர் அவர்கள் கால்நடைகளில் சில குறிப்பிட்ட வர்க்கத்தைப்பற்றி குறிப்பிட்டார். அவைகள் சில இடங்களில் இருந்து வருகிறது. சில இடங்களில் இப்பொழுது இரும்புக் கலப்பைகளை உபயோகித்து வருகிறார்கள். அந்த இடங்களில் நல்ல உழைப்புள்ள கால்நடைகளை உபயோகிக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில் அவைகளை உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறோம். இன்னும் அவைகள் எந்த எந்த இடங்களில் உபயோகப்படுத்தலாமோ அந்தந்த இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. அதற்காக அந்த இன கால்நடைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் ஓரளவு எடுக்கப்பட்டு தான் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே எந்த வர்க்கம் பயனுள்ளதாக இருக்குமோ அவைகளை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைக்ள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

காடுகளில் பசுந்தாள் பெறுவதைப்பற்றி சொன்னார்கள். அதற்கும் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது காட்டிலாகா மூலமாக பராமரிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த வட்டாரங்களில் பசுந்தாள் பெற்று உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. மதுரை ஜில்லா போன்ற சில இடங்களில் பல மலைகள் இருக்கின்றன. அங்கு அதிகமாக பசும்தழை கிடைக்கிறது. அங்குள்ளவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்னென்ன நன்மைகளைச் செய்ய வேண்டுமோ அவைகள் எல்லாம் செய்யப் பட்டு அவர்களும் நன்மைகளை அடைந்து வருகிறார்கள் என்பதையும் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த வேளாண்மைத் துறை மானியங்கள் மீது முன்னுரையாக சொல்ல வேண்டியவை பற்றி நான் ஒரு குறிப்பை கனம் அங்கத்தினர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். " முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கும்போது நமது மாநிலத்தில் உணவு தானிய உற்பத்தி சுமார் 38 லட்சம் டன்களாக இருந்தது. அத் திட்டக் காலத்தில் இது 44 லட்சம் டன்களாக உயர்ந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்த உற்பத்தியை 53 லட்சம் டன் அளவாக மேலும் பெருக்க முடிந்தது. " என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். இதெல்லாம் உயர்வைக் காட்டுகிறதே அல்லாமல் தாழ்வைக் காட்டவில்லை என்பதைக் கனம் அங்கத்தினர் திரு. கோ. சி. மணி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். " ஏதோ ஏட்டுப் புள்ளி " என்று குறிப்பிட்டார்கள். நாட்டிலே விளைந்தால்தான் ஏட்டுக்கு வரும் என்றும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாட்டிலே இல்லாவிட்டால் ஏட்டிலே வராது. இதெல்லாம் ஏதோ கண்மூடித்தனமாகக் குறித்து வைக்கும் புள்ளி விவரங்கள் அல்ல. விவசாயத் துறை மூலமாகத் தான் புள்ளி விவரங்கள் கொடுக்கப்படுகின்றன. புள்ளி விவரங்கள் கொடுத்தாலும் சரியில்லை என்று சொல்வார்களானால், வேறு என்னதான் முடிவு இருக்கிறது? மந்திரி சொல்வது சரியில்லை, விவசாய இலாகா சொல்வதும் சரியில்லை. கலெக்டர் கொடுக்கும் புள்ளி விவரமும் சரியில்லை என்று, சொன்னால், யார் கொடுக்கிற புள்ளிவிவரத்தை நான நம்புவது? அரசாங்கம் கொடுக்கும் புள்ளி விவரங்களைக் கனம் அங்கத்தி ம்ர்கள் நம்பவேண்டும்.

முறை அங்கு இல்லையென்றும், ஆனால், சங்கீதத்தைக்கேட்ட பசுக்கள் கூடுதலாகப் பால் கறக்கிறது என்றும் சொன்னார்கள். நமக்குக் கூடத் தெரியும்—மாடு மேய்த்துக் கொண்டிருந்த கண்ணன் குழலோசையைக் கேட்ட மாடுகளெல்லாம் தங்களையே மறந்த நிலையில், சங்கீதத்தில் ஆழ்ந்து மகிழ்ந்திருந்தன என்கிற வரலாறு நமக்குத் தெரிகிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஏற்றம் இறைக்கும்போது கூட . . .

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்றம் இறைக்கும்போது பாடுகிறார்கள். எது எப்படியிருந்தாலும் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அன்றைய தினம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதனால், இதைப்பற்றிப் பரிசீலனை செய்வேன் என்று நான் சொல்லுகின்றேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** இன்னும் சிறிது நேரம் உட்கார்ந்து, இந்த மான்யக் கோரிக்கைகளை முடிப்பதற்கு சபை அனுமதி அளிக்குமென்று நம்புகிறேன்.

1-30 p.m. **கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்பிற்குரிய கருணாநிதி அவர்கள் பொது விவாதத்தின்போது காட்பாடிக்குப் பக்கத்தில் ஒரு பழத்தோட்டத்தைப் பார்த்தாகவும், அது மோசமாக இருந்ததனால் விவசாய இலாகா அதிகாரிகளே மோசம் என்பதாகவும் குறிப்பிட்டார். அப்படி அவர் சொல்வது சரியல்ல. ஒருவர் சென்னைக்கு வருகிறார் என்றால், சென்னையில் மெரினா பீச் இருக்கிறது. ஹைக்கோர்ட் இருக்கிறது. யூனிவர்ஸிடி இருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்காமல், கூவம் நதியைப் பார்த்துவிட்டு, சென்னை மாநகரமே ஒரே நாற்றம் அடிக்கிறது இதுதானா சென்னையின் அழகு என்று சொல்வது போலப் பேசுவது சரியல்ல. நம் மாநிலத்தில் ஏழு பழத் தோட்டங்கள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் அவர் சென்று பார்க்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்கார் சார்பில் நடத்தப்பட்டு வருகிற அந்தப் பழத் தோட்டங்கள் எல்லாம் மிக நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. காட்பாடி தோட்டத்தைக்கூட இவர் காரில் போகும்போது பார்த்துவிட்டு இப்படிச் சொல்வது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பழத் தோட்டங்கள் சம்பந்தப்பட்டவரை எந்தெந்த வகையில் அபிவிருத்தி செய்யவேண்டுமோ அந்த அந்த வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

**திரு. சா. கணேசன் :** சற்று முன்பு இசையின் மூலம் விவசாயத்தைப் பெருக்குவது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இசையின் மூலம் பயிர் நன்றாக வளரும் என்பதற்கு இலக்கியத்தில் பல சான்றுகள் இருக்கின்றன. இசை என்ற சொல் இல்லையே என்றாலும்,

“ வண்டுகள் இனிது பாட மாருதம் வீற்றிருக்கும் ”

என்றெல்லாம் இலக்கியங்களில் வருகின்றன என்பதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அதைப்பற்றித்தான் பரிசீலனை செய்து பார்க்கலாம் என்று முன்பு சொன்னேன்.

இந்த அவசர கால நிலைமையை உத்தேசித்து அங்கங்கே காய்கறி உற்பத்தியில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதைப்பற்றிப் பலர் சொன்னார்கள். அரசாங்கமும் காய்கறி உற்பத்தியைப் பெருக்கத்தான் திட்டம் ஒன்று வகுத்திருக்கிறது. விவசாயப் பெருமக்களுக்கு ஒரு ஏக்கருக்கு 120 ரூபாய் கடன் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். காய்கறி நாட்டில் அதிகம் உற்பத்தி செய்தாகவேண்டும். ஒரு நபருக்குக் குறைந்தது 6 அவுன்ஸ் காய்கறி சாப்பிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே காய்கறி உற்பத்தியில் இந்த அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தும் என்று நான் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் நமது மாநிலத்தில் சிறிய நீர்பாசனத் திட்டங்களுக்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைக் காட்டிலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிகப் பணம் செலவிட்டிருக்கிறோம். இரண்டாவது திட்டத்தைவிட மூன்றாவது திட்டத்தில் அதிகப் பணம் செலவிட்டு வருகிறோம். மத்திய சர்க்காரும் உதவி செய்துகொண்டிருக்கிறார்கள். விவசாய உற்பத்திக்கு என்ன என்ன வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமோ அவை அத்தனையையும் செய்து கொடுப்பதில் இந்தச் சர்க்கார் தீவிர கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.





ஸ்ரீமான் கோ. சி. மணி அவர்களும், திரு. சீமைச்சாமி அவர்களும் சொன்னார்கள், ஏக்கர் ஒன்றுக்கு 21 ரூபாய், 9 ரூபாய்தான் மிச்சமாகிறது என்று. இதை யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முடியுமா என்று சொல்வார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, நெல்லின் விலை இறங்கிவிட்டதன் காரணத்தினால் முன்பு ஒரு ஏக்கரில் 590 ரூபாய் வந்தால் இப்போது 400 ரூபாய் என்று குறைந்து, விவசாயச் செலவும் கூடிவிட்டதனால் ஒரு ஏக்கருக்கு 9 ரூபாய்க்குமேல் நிற்கவில்லை என்றே சொன்னேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** நெல் விலை சற்றுக் குறைந்திருக்கலாம். அப்படி ஒன்றும் அதிகமாகக் குறைந்துவிடவில்லை. இருந்தாலும் ஒரு ஏக்கருக்கு இவ்வளவு குறைந்த வருமானம்தான் வருகிறது என்று சொல்வதை யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மதிப்பிற்குரிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் உர மூட்டைகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். உர மூட்டைகள் சரியான முறையில் விநியோகிக்கப்படவேண்டும். கலப்பு உரம் தயாரிக்க நல்ல கம்பெனிகளுக்கு லைசென்சு வழங்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். இவை சரியாகக் கவனிக்கப்பட்டுதான் வருகின்றன. கலப்பு உரம் தயாரிக்க லைசென்சு கேட்கிறவர்களுடைய தகுதி, பொருளாதார வசதி எல்லாம் பார்த்தே அனுமதி வழங்கப்படும். மேலும் அவர்கள் ஒழுங்காக நடந்துக்கொள்ளவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கலப்பு உரத்தில் ஏதாவது தவறுதல்கள் நடந்தது என்றாலும் உடனே பர்மிட் ரத்து செய்யப்படும் என்றும் இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் அவர் தம்முடைய தொகுதி சம்பந்தப்பட்டவரை சிறிய நீர்ப்பாசனத் திட்டமாக தென்கரை, சுந்தரபாண்டியன்குளம் ஆகியவை பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே சுந்தரபாண்டியன்குளத்தைப்பற்றி, பரிசீலனை செய்து வருகிறோம். அதன் முடிவைப் பின்னால் தெரிவிக்கிறேன் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் நமது மன்றத்தின் உதவித் தலைவர் திரு. பார்த்தசாரதி அவர்கள் மார்க்கெட்டிங் சொஸைடி பற்றிச் சொன்னார்கள். எல்லாயிடங்களிலும் மார்க்கெட்டிங் சொஸைடி அமைத்துத்தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். படிப்படியாக எல்லா இடங்களிலும் அமைத்துக் கொண்டுதான் வருகிறோம். விவசாயிகளுடைய நன்மைக்காக எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் அமைக்கப்பட்டே வந்திருக்கிறது. மார்க்கெட்டிங் சொஸைடிமூலம் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு தக்க விலையும் கிடைக்கும்படி செய்யப்பட்டு வருகிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் மார்க்கெட்டிங் சொஸைட்டி அங்கத்தினருக்குத் தேர்தல் வேண்டாம், நாமினேஷன் மூலமே பண்ணினால் நல்லது என்றும் சொன்னார்கள். இதேமாதிரி மற்ற அங்கத்தினர்கள் சிலரும் குறிப்பிட்டார்கள். இதுபற்றிய விஷயமும் நன்கு பரிசீலிக்கப்படும் என்று இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீ சிரஞ்சீவலு நாயுடு அவர்கள் ‘ஸ்டேட் சீட்’ ஃபார்ம்களுக்கு அதிகச் செலவாகிறது என்று சொன்னார்கள். நமது விவசாயிகளிடம் பண்பட்ட நிலங்களிருக்கின்றன. சில இடங்களில் பண்பட்ட நிலங்களை

மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது, நான் கொடுத்த புள்ளி விவரத்திற்கும் விவசாய இலாகா டைரக்டர் ஒரு கூட்டத்தில் சொன்ன புள்ளி விவரத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதுபற்றி டைரக்டர் அவர்களைக் கேட்டதில், நான் கொடுத்த புள்ளி விவரங்களுக்கு விரோதமாக டைரக்டர் அவர்கள் பேசவில்லை என்று எழுதி இருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, "அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரம் சரியான புள்ளி விவரம் அல்ல—சில காரணத்தை முன்னிட்டு" என டைரக்டர் அவர்கள் சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ம் தேதி தஞ்சையிலே உள்ள ரோடரி க்ளப்பில் பேசியிருக்கிறார்கள்—என்ற செய்தியை நான் குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரம் சரியல்ல, விவசாய இலாகா டைரக்டர் கொடுத்த புள்ளி விவரம் தான் சரி என்ற கருத்தை நான் சொல்லவில்லை. "அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரம் சரியான புள்ளி விவரம் அல்ல" என்று டைரக்டர் அவர்கள் ஓரிடத்தில் கூறியிருக்கிறார்கள் என்ற செய்தியைத்தான் நான் தெரிவித்தேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாய இலாகா டைரக்டருக்கு அரசாங்கம் எழுதித் தகவல் கேட்டதில், அவர் பதில் எழுதியனுப்பியிருக்கிறார். "ரோடரி க்ளப்பில் பேசியது உண்மை தான். ஆனால், அமைச்சர் கொடுத்த புள்ளி விவரம் தப்பிதம் என்று நான் பேசவில்லை" என்று விவசாய இலாகா டைரக்டர் அவர்கள் கடிதம் எழுதி இருக்கிறார். ஆகவே, பத்திரிகையில் வந்த செய்தி தவறு என்றும் இந்தச் சமயத்தில் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பொது விவாதத்தில் பேசும்போது, சங்கீதத்தின் மூலமாகப் பயிர் வளர்க்கும் முறையைச் சொன்னார்கள். அதுபற்றிய ஒரு கேள்வியைக் கனம் அங்கத்தினர் கேட்டார்கள். அந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். அவர் கேட்ட கேள்வியையும் அதற்கு நான் சொன்ன பதிலையும் இங்கே தெரிவிக்கின்றேன். "இசை மூலமாக விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றம் காணலாம் என்ற ஆராய்ச்சியின் முடிவு அண்மையில் வெளிவந்திருக்கிறது. அது குறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன" என்ற கேள்விக்கு நான் பதில் சொல்லும்போது, "ஆராய்ச்சியை நான் பார்க்கவில்லை" என்று சொன்னேன். உண்மையிலேயே ஆராய்ச்சியை நான் பார்க்கவில்லை, ஆகவே பார்க்காததை 'பார்க்கவில்லை' என்று தானே சொல்லவேண்டும்? 'பார்க்கவில்லை' என்று நான் சொன்னேன். அரசாங்கத்திலே இன்னும் ஆராய்ச்சி செய்து இறுதியானமுடிவு எடுக்கப்படவில்லை. ஆராய்ச்சியைப்பற்றிய ஃபைலை நான் பார்க்காதபோது, "பார்த்தேன்" என்று எப்படிச் சொல்வது? ஆகவேதான் "பார்க்கவில்லை" என்று நான் பதிலளித்தேன் என்று இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

"ஆலயங்களில் காலை வழிபாட்டின் போது தேவாரம், திருப்புகழ் பாடுகிறார்கள்" என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது ரொம்ப வரவேற்கத்தக்கது. தெய்வ பக்தியை உண்டுபண்ணுவதற்காக அற நிலையப் பாதுகாப்பு இலாகா அந்த நல்ல ஏற்பாட்டைச் செய்து வருகிறது என்று இந்தச் சமயத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு அவர்கள், "தனிப்பட்டவர்கள் சங்கீதத்தின் மூலமாகப் பயிரினை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்தால் நல்லது" என்று சொன்னார்கள். அதுவும் வரவேற்கத்தக்க ஒரு விஷயம் தான். யார் யார் சங்கீதத்தின் மூலமாகப் பயிர் வளர்க்க முன் வருகிறார்களோ அவர்கள் முன்வர வேண்டுமென்றும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அந்த ஆராய்ச்சியைத்தான் பார்க்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் வெளியிட்ட கருத்தையொட்டித்தான் நான் என்னுடைய ஆச்சரியத்தை இங்கே தெரிவித்துக்





கொண்டேன். கேள்வி நேரம் என்பது அமைச்சர்களைக் கேள்வி கேட்டு மடக்குவதற்காகவோ, கேள்வி கேட்ட உறுப்பினர்களை அமைச்சர்கள் பதில் சொல்லி மடக்குவதற்காகவோ ஏற்பட்ட நேரம் அல்ல. கேள்விகள் கேட்கப்படும் காரணத்தால், அந்தந்த இலாகா நல்ல முறையில் தங்களுடைய வேலைகளைச் சரிவரச் செய்யும் என்கிற காரணத்திற்காகத்தான் கேள்வி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, என்பது இந்த மன்றத்திற்கு நன்றாகத் தெரியும். அந்த அளவில்தான் நான் கேள்வி கேட்டேன். "ஆராய்ச்சியைப் பற்றி நான் பார்க்கவில்லை" என்று அமைச்சர் அவர்கள் சொல்வதுதான் உள்ளபடியே வருந்தத்தக்கதாக இருக்கிறது. 1950-ம் ஆண்டு முதல் நம்முடைய தமிழகத்திலுள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் வட நாட்டிலிருந்து வந்திருக்கிற தாவர ஆராய்ச்சி நிபுணர் அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். அதுபற்றிய படங்களும். . . . . . .

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற படங்களை வேறு சந்தர்ப்பத்தில் காட்டினால் கனம் அமைச்சர் அவர்கள் மேலும் பரிசீலனை செய்யக்கூடும். கனம் அமைச்சர் அவர்கள் மேலே தொடர்ந்து பேசலாம்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் சொல்வது உண்மை அல்ல என்று நான் சொல்லவில்லை. ஆராய்ச்சியை நான் பார்க்கவில்லை, அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்து, அதுபற்றிய முடிவு இலாகாவின் மூலமாக எனக்கு வரவில்லை என்று சொன்னேனே தவிர, "ஆராய்ச்சி நடக்கவில்லை" என்று நான் சொல்லவில்லை.

சங்கீதத்தின் மூலம் பயிர் வளர்ப்பதைப்பற்றி இப்பொழுது கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் பேசும்போது நான் சிந்தித்தேன். அதுபற்றி ஏதாவது பரிசீலனை செய்து, நல்லதொரு முடிவுக்கு வரலாம் என்று ஸ்ரீமான் நீலகண்டன் என்கிற ஒரு சகோதரர் அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதுப்பற்றிப் பரிசீலனை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பரிசீலனை பண்ணியதில் முதலில் அவ்வளவு வெற்றிகரமாக நடக்கவில்லை என்று தெரிகிறது. இருந்தாலும், கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே சொல்வதால், அதைப் பரிசீலனை பண்ணிப் பார்த்துவிட வேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியைக் கோவையில் விவசாயக் கல்லூரி இருக்கும் காரணத்தாலும், அங்கே இதைப்பற்றி நன்றாக ஆராயக்கூடிய வல்லுநர்கள் இருப்பதாலும், அவர்களிடத்திலே இந்த ஆராய்ச்சியை விட்டு இதன் மூலமாக ஏதாவது பலன் ஏற்படுமா என்று பார்க்கும்படியாக அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆராய்ச்சி பண்ணுவதாயிருந்தால் விவசாயக் கல்லூரியில்தான் பண்ணுவோம். அங்கே தான் ஆராய்ச்சி பண்ணப்போகிறோம், ஏற்கனவே அந்த விவசாயக் கல்லூரியின் முதல்வரிடத்தில் நான் பேசியிருக்கிறேன். அவர்களுக்கே கொஞ்சம்சந்தேகமாக இருந்தாலும், "பரிசீலனை செய்து விடுவோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் :** கனம் தலைவர் அவர்களே, இசையின் மூலம் பயிர் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறதென்றால், இசையின் மூலம் பயிர் கருகவும் வாய்ப்பு இருக்கலாம். அதையும் கொஞ்சம் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அமெரிக்க நாட்டிலிருந்து விவசாயிகள் ஃபோரத்தைச் சேர்ந்தவர்கள் சென்னைக்கு வந்திருந்தார்கள். அவர்களிடத்தில் கூட இதைப்பற்றிக் கேட்டோம். "அமெரிக்க நாட்டில் சங்கீதத்தின் மூலமாகப் பயிர் வளர்க்கும் முறை இருக்கிறதா?" என்று கேட்டோம். அப்படியொன்றும், சங்கீதத்தின் மூலம் பயிர் வளர்க்கும்

முயற்சி எடுக்கப்பட்டு தஞ்சை ஜில்லாவில் கிடுக்கி வைத்து எலி பிடிக்கிறார்கள். மூட்டைப்பூச்சி மருந்தை சாப்பிட்டு சிலர் இறக்கிறார்கள். மற்றவர்களுக்கு அவ்வாறு ஆபத்து இல்லாது தீங்கு இல்லாது எதை எதை எல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்ய ஒரு முடிவிற்கு வரலாம். பின்னர் மதிப்பிற்குறிய சீமைச்சாமி அவர்கள் விவசாயக் குடும்பத்தில் உள்ளவர்கள் எத்தனை பேர்கள் மருத்துவக் கல்லூரியில், என்ஜினியரிங் கல்லூரிகளில் படிக்கிறார்கள் என்று கேட்டார்கள். சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர் விவசாய மக்கள், கிராம மக்கள் கல்லூரிப் படிப்பு என்னவென்று தெரியாதிருந்தார்கள். ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. கிராமங்களிலுள்ளவர்கள் எத்தனையோ பேர்கள் இன்று டாக்டர்களாக, என்ஜினியர்களாக, வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். கணக்கு எடுத்துப் பார்த்தால் நகரங்களில் உள்ளவர்களைவிட கிராமங்களில் உள்ளவர்கள்தான் இன்று கல்லூரிகளில் அதிகமாக படிக்கிறார்கள். ஆகவே ஒருவருமே இல்லை என்று சொல்லமுடியாது என்று அவர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன். திரு அழகர்சாமி அவர்கள் உரத்தைப் பற்றிச் சொன்னார்கள். தீங்கு இழைக்கக் கூடிய உரத்தைக் கொடுக்க அரசாங்கம் அனுமதியாது. அப்படி தீங்கு இழைக்கும் உரத்தைக் கொடுப்பதாக இருந்தால் அவர்களுக்குள்ள அனுமதி (லைசென்ஸ்) ரத்துப் செய்யப்படும். அடுத்தப்படியாக ஸ்ப்ரேயர்கள் ட்ராக்டர்கள் போன்றவை கொடுத்து உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. ஸ்ப்ரேயர்ஸ் பஞ்சாயத்து யூனியன் மூலம் கொடுக்கப்பட்டு வருவது எல்லோருக்கும் தெரியும். பவர்ஸ்ப்ரேயர்ஸ் சம்பந்தப்பட்ட மட்டில் அது பரிசீலனை செய்யப்படும். பெரிய குளம் தாலூகாவில் ஒரு பழத்தோட்டம் இருக்கிறது. அது நல்லமுறையில் இருக்கிறது. மண்வளப் பாதுகாப்பு பற்றி திரு சுப்பையா முதலியார் அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு தாலூகாவிலும் மண்ணை பரிசோதனை செய்ய ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தினால் நல்லது என்று சொன்னார்கள். எல்லா தாலூகாவிலும் ஏற்படுத்த முடியாவிட்டாலும் முக்கியமான இடங்களில் வைத்து விவசாயிகளுக்கு உதவி செய்யமுடியுமோ அது செய்யப்படும். நமது நிதிநிலையை அனுசரித்து தக்கபடி செய்ய முன்வருகிறோம். திரு வி. எஸ். எஸ். மணி அவர்கள் பசுந்தாள் உரம் பற்றி சொன்னார்கள். அரசாங்கமே நிலங்கள் வாங்கி சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு கொடுக்க வேண்டியது செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அரசாங்கமே நிலம் வாங்கி கரும்பு உற்பத்தி செய்தால் அது அரசாங்கக் கரும்பாலை ஆகப் போய்விடும். ஆகவே விவசாயிகள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து நண்பர்கள் முன்வந்து தங்குதடையின்றி கரும்பாலைகள் ஓட வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டும். பின்னர் திரு. முத்துவேலப்ப கவுண்டர் அவர்கள் எதிர்கட்சிக்காரர்கள் மூன்று படி அரிசி தருகிறோம் ரூபாய்க்கு என்று பிரசாரம் செய்வதைக் குறிப்பிட்டார்கள். அப்படிச் சொல்லிவிட்டு இப்போது என் விவசாயிகளுக்கு விலை குறைந்து விட்டது என்று சொல்வதாகச் சொன்னார்கள். அவர் குறிப்பிட்டது சரி அப்படியானால் மூடை 9 ரூபாய்க்கு விற்க வேண்டும், அது கட்டுப்படியாகுமா? உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுவது என்பார்கள். எதிர் கட்சிகள் குறை சொல்ல வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் உண்மையாகவே குறையிருந்தால் சொல்லவேண்டும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மூன்று படி அரிசி கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது உற்பத்திக்கு ஆகக்கூடிய விவசாயத் செல்வும் குறைக்கப்பட வேண்டுமென்று சொல்வதைச் சொல்லாமல் மூன்று படி அரிசி என்று சொல்வதைத்தான் சொல்கிறார்கள். அதுவும் உள் ஒன்று வைத்து புறம் ஒன்று சொல்வது போல்தான் இருக்கிறது.

**கனம் திரு. பூ. கக்கன்:** அங்கத்தினர்கள் நடத்திய போராட்டத்தில், அட்டைகளில் எழுதி வைத்திருந்தது விவசாயச் செலவைப் பற்றியெல்லாம் சொல்லவில்லை. மூன்று படி அரிசி வேண்டும் என்றுதான் சொன்னார்கள். காங்கிரஸ் அரசாங்கத்தைவிட விவசாயிகளுக்கு நன்மை செய்யும் அரசாங்கமே கிடையாது, அப்படி வரப்போவதும் இல்லை. அறுவடை காலத்தில் விலை இறங்கும். முன்பு மலையாள சகோதரர்கள் வந்து வாங்கிப்



போவார்கள், அதனால் நல்ல விலை கிடைத்தது. இந்த ஆண்டு அவர்கள் வராததால் தாமதம் ஏற்படுகிறது. வியாபாரிகள் வந்து வாங்காவிட்டால் ஆங்காங்குள்ள கோடவுன்களில் வைக்கலாம். விவசாயி உற்பத்தி செய்கிற பண்டங்களுக்கு விலை இறங்கினால் அரசாங்கமே முன் நின்று அதை வாங்க முன்வரும். மத்திய சர்க்காரிடமும் சொல்லியிருக்கிறோம். நியாய விலை கிடைக்க அரசாங்கம் பார்த்துக்கொள்ளும். திரு. அழகமுத்து, திருமதி. லஷ்மிகாந்தம், திரு சுப்பையா முதலியார், திரு. தர்மலிங்கம் போன்ற அங்கத்தினர்களும் பேசினார்கள். அவர்களுக்கெல்லாம் பதில் சொல்லநேரமில்லை. அங்கத்தினர்கள் பசியோடு இருப்பதாக தெரிவித்தார்கள். ஒன்றை மட்டும் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். திரு. கருணாநிதி அவர்கள் விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்சக் கூலி நிர்ணயச் சட்டம் வரவேண்டும் என்பதைப் பற்றி சொன்னார்கள், மத்திய அரசாங்கம் ஏற்கனவே சட்டம் செய்து விட்டது. மாநில அரசாங்கமும் சட்டம் வந்த பிறகு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்வதற்காக, ஷை பொதுஜன அபிப்பிராயத்தை எடுத்துக்கொண்டது. இடம், பொருள், ஏவல் என்பார்கள். விவசாயத் தொழிலாளர்களை பாதிக்கக்கூடாது, அப்படிப் பார்த்து, எந்தக் கட்டத்தில் இதை மாறுதல் செய்ய வேண்டுமோ அப்போது இது பரிசீலனை செய்யப்படும். ஹைகோர்ட் தீர்ப்பை பற்றி கருணாநிதி அவர்கள் சொன்னார்கள். சோஷியலிஸ சமுதாய அமைப்புதான் இந்த அரசாங்கத்தின் லட்சியம். எந்தக் கட்சியின்கீழ் இந்த அரசாங்கம் இருக்கிறதோ அந்தக் கட்சியின் இலட்சியமும் அதுதான். எங்கேயாவது ஒரு குறை ஏற்பட்டு விட்டால் அதை வைத்துக்கொண்டு ஒன்றுமே செய்யவில்லை என்று கருணாநிதி அவர்கள் சொல்வது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியில் நாதஸ்வர இசையால் அதிகமாக உற்பத்தி பெருகியது என்று கண்டோம். எதிர் கட்சியினரின் யோசனையைப் பார்த்தால் ஒருவர் வண்டு பாடவேண்டுமென்றும், மற்றொருவர் ஓதுவார் பாடவேண்டுமென்றும் இப்படியாகச் சொல்கிறார்கள். கோவை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சியில் நாதஸ்வர இசையால் நன்கு வளருமா, ஆண்கள் இசையால் நன்கு வளருமா? பெண்கள் இசையால் நன்கு வளருமா அல்லது வண்டு இசையால் நல்ல வளர்ச்சி ஏற்படுமா? என்று சொல்ல முடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வெட்டுப் பிரேரபணைகளைக் கொடுத்திருக்கிற கனம் அங்கத்தினர் நான் சொன்ன கருத்துக்களையெல்லாம் மனதில் கொண்டு, வெட்டுப் பிரேரணைகளை வற்புறுத்தாமல் இருக்குமாறு கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 6,27,39,000 under Demand No. XVI—Agriculture be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,27,39,000 under Demand No. XVI—Agriculture".

The Demad was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 1,78,54,400 under Demand No. XVIII—Animal Husbandry be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,78,54,400 under Demand No. XVIII—Animal Husbandry".

The Demad was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 8,75,000 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,75,000 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture".

The Demad was put and carried and the Grant was made.

The cut motion under Demand No. XLVI was, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,78,82,100 under Demand XLVI—Capital Outlay on Schemes of Government Trading'.

The Demand was put and carried and the Grant was made.

**கனம் திரு. பூ. கக்கன் :** *கடைசியாக இந்த மன்றத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது என் கடமையும்கூட. விவசாய இலாகாவில் வேலை செய்கின்ற டைரெக்டர் அவர்களும், கால்நடை இலாகாவில் வேலை செய்கின்ற காரியதரிசி அவர்களும், டைரெக்டர் அவர்களும் மற்றுமுள்ள அதிகாரிகளும் குறிப்பாக விவசாய மக்களுக்கு நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு வருவது பற்றி அவர்கள் எல்லோருக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

2-04 p.m.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

116. *Notification issued with G.O. Ms. No. 3577, Food and Agriculture, dated 23rd November 1962 directing the South Arcot Market Committee to establish a market for the purchase and sale of paddy at Chidambaram in South Arcot district and also to provide facilities for the purchase and sale of paddy in other markets established under the Madras Commercial Crops Markets Act, 1933. [Laid on the Table of the House under Section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959)].*



### B. Reports, Notifications and other papers.

* 54. *Note on the policy underlying the activities of the Animal Husbandry Department.*

† 55. *The Muthuchippi Parkal Fishing Rules, 1963, issued under sub-section (1), (4) and (5) of section 6 of the Indian Fisheries Act, 1897 (Central Act IV of 1897).*

* 56. *The Madras General Sales Tax (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 5 of 1963).*

57. *34th Annual Administration Report of the Madras State Electricity Board for 1960–61.*

---

* Circulated to Members on 9th March 1963.

† Laid on the table of the House on 9th March 1963.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Tuesday, 12th March 1963

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

### காகித விநியோகம் (அரசாங்க அலுவலகங்கள்)

*185 கேள்வி.—திரு. எஸ். முருகையன் (திரு முனு ஆதி சார்பாக). கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் அமைந்துள்ள வெவ்வேறு மாநில அரசாங்க அலுவலகங்களுக்கு, 1961-62 ஆண்டுகளில் அரசாங்க அச்சுக் கூடத்தினின்றும் அளிக்கப் பெற்ற காகிதத்தின் மதிப்பென்ன ?

(இ) நமது அரசாங்க தொழிலகத்தில் தயாரிக்கப்பட்டவையா ?

(உ) இல்லையெனில் எங்கிருந்து வரவழைக்கப்படுகின்றன ?

(எ) இதற்காக ஆகும் செலவென்ன ?

**கனம் திரு. ஜி. பூவராகன்** : (அ) காகித சப்ளை கணக்குகளை ஸ்டேஷனரி விதிகளில் சொல்லியிருக்கிறபடி ஸ்டேஷனரி இலாகா அந்தந்த இலாகாவாரியாகவே வைத்துவருகின்றது. சென்னை நகரிலுள்ள அலுவலகங்களுக்கு மாத்திரமென்று தனிக் கணக்குகள் வைத்து வருவதில்லை. தவிர, கணக்குகள் ஒவ்வொரு நிதி ஆண்டுக்கும் வைத்துவரப் படுகின்றன. இம் மாநிலம் முழுவதிலுமுள்ள அரசாங்க அலுவலகங்கள் அனைத்திற்கும் சப்ளை செய்யப்பட்ட காகிதத்தின் மொத்த மதிப்பு வருமாறு :—

| | | ரூபாய். |
|---|---|---|
| 1960-61 | .. | 50,38,992 |
| 1961-62 | .. | 62,03,376 |

(இ) & (உ) சென்னை அரசாங்கக் கதர்-கிராமத் தொழில் போர்டு செயலாளரின் மேற்பார்வையிலுள்ள பல்வேறு காகிதத் தயாரிப்பு யூனிட்டுகளிலிருந்து கையினால் செய்யப்பட்ட காகிதம் பெறப்படுகிறது. மற்ற வகைக் காகிதம் புது டில்லி ஸப்ளைஸ்-டிஸ்போசல் டைரக்டர்-ஜெனரல்மூலம் இந்தியக் காகித ஆலைகளிலிருந்து ரேட் காண்டிராக்ட் அடிப்படையில் பெறப்படுகிறது.

(எ) 1960-61. 1961-62-ல் விலைக்கு வாங்கிய காகிதத்தின் மதிப்பு வருமாறு :—

கையினால் செய்த காகிதம்—

| | | ரூ. | ந.பை. |
|---|---|---|---|
| 1960-61 | .. | 63,146 | 00 |
| 1961-62 | .. | 70,369 | 28 |

ஆலைக் காகிதம்—

| | | ரூபாய். |
|---|---|---|
| 1960–61 | .. | 63,38,478 |
| 1961–62 | .. | 50,24,016 |

(*a*) Accounts for supply of paper are maintained by the Stationery Department only departmentalwise, as required under the rules. Separate accounts are not maintained for offices in the Madras City alone. Further, the accounts are maintained for each financial year. The total value of paper supplied to all Government offices in the State in 1960–61 was Rs. 50,38,992 and in 1961–62 Rs. 62,03,376.

(*b*) & (*c*) Hand-made paper is procured from the various paper making units which are under the control of the Secretary, State Khadi and Village Industries Board Madras. The other papers are procured from the Indian Mills through the Director General of Supplies and Disposals, New Delhi, on the rate contract basis.

(*d*) The value of papers purchased during 1960–61 and 1961–62 are furnished below :—

Hand-made paper—

| | | ரூபாய். | ந. பை. |
|---|---|---|---|
| 1960–61 | .. | 63,146 | 00 |
| 1961–62 | .. | 70,369 | 28 |

Mill made paper—

| | | | |
|---|---|---|---|
| 1960–61 | .. | 63,38,478 | 00 |
| 1961–62 | .. | 50,24,016 | 00 |

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில் கைதிகள் பலர் இருக்கிற காரணத்தினால், அவர்களைப் பயன்படுத்தி இந்த அச்சகத் தொழிலை விரிவுபடுத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த முறையில் இந்த அச்சகத் தொழிலை விரிவுபடுத்து கிற எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. ஜி. பூவராகன் :** அச்சகத் தொழில் அங்கு நடந்து வருகிறது. இப்போதே செய்து வருகிறார்கள்.

**திரு. எஸ். முருகையன் :** வேலூர் சிறையில் ஏராளமான கைதிகள் இருந்தும் அங்கு அச்சுத் தொழில் நடைபெறவில்லை. அங்கும் இந்தத் தொழிலை ஆரம்பிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஜி. பூவராகன் :** இப்போது அது சம்பந்தமான உத்தேசம் ஒன்றும் இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சென்னை சிறைச்சாலையில் வைக்கோல் முதலியவைகளை உபயோகப்படுத்தி இந்த மாதிரியான காகிதங்களைச் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

**கனம் திரு. ஜி. பூவராகன் :** இப்போது கிராமக் கைத்தொழில் போர்டில் செய்து வருகிறார்கள். தனிப்பட்ட முறையில் சிறைச்சாலை களில் செய்ய உத்தேசம் இல்லை.



**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** தலைவர் அவர்களே, இந்த கை காகிதத் தொழிலில் செய்யப்படுகிற எல்லாக் காகிதங்களையும் அரசாங்கம் வாங்க ஏற்பாடு செய்கிறார்களா ? அல்லது அங்கு செய்வது அநேக தொழிற்சாலைகளில் தேங்கியிருக்கிறதா ? அப்படியானால் பூராவாக—கை காகிதத் தொழிற்சாலைகளில் செய்கிற எல்லாக் காகிதங்களையும் வாங்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. ஜி. பூவராகன் :** கையினால் செய்யப்பட்ட காகிதம் எவ் வளவு தேவை என்று முதலாவதாக கவனித்து போர்டு நிறுவனத்துக்கு எழுதி அனுப்புகிறார்கள். அதை மட்டும் பெற்று வருகிறார்கள்.

**திரு. ம. கமலநாதன் :** கையால் செய்யப்பட்ட காகிதம் வாங்குவது லாபகரமானதா ? அல்லது மில்லில் செய்யப்பட்ட காகிதம் வாங்குவது லாப கரமானதா ?

**கனம் திரு. ஜி. பூவராகன் :** இதில் லாப நஷ்டக் கணக்கு ஒன்றும் இல்லை. கையினால் செய்த காகிதத்தை எதற்கு உபயோகப்படுத்த முடியுமோ அவைகளுக்குத் தக்கவாறு பெற்றுக்கொள்கிறார்கள். மற்ற தேவைகளை மில்லிலிருந்து பெறுகிறார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** சட்ட மன்றப் பணிகளை—அதாவது சட்டம் மன்றம் பற்றிய அச்சக பணிகளை விரைவாகச் செவ்வனே செய்யக் கூடிய முறையில் தனியாக ஒரு அச்சகம் ஏற்படுத்தும் எண்ணம் அரசின ருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஜி. பூவராகன் :** இப்போது செவ்வனே நடந்து வருகிறது. தனி அச்சகம் ஒன்றும் அவசியம் இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய ஃபாரங்கள் இப்போது நிறையச் செலவு ஆகிறது. அவைகளை அரசாங்க அச்சகத்தில் அச்சிடக் கொடுக்காமல் ஹோா அண்ட் கோ போன்ற கம்பெனிகளில் அச்சிடக் கொடுத்திருப்பது என் என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. ஜி, பூவராகன் :** இது பேப்பர் கணக்கு பற்றிய கேள்வி. ஹோா அண்ட் கோவில் ஃபாரங்கள் அச்சிடுவது சம்பந்தமாகத் தனியாகக் கேள்வி கேட்டால் அப்போது பதில் கொடுக்க முடியும்.

**திரு. மூ. சண்முகம் :** விழுப்புரம் வட்டாரத்தில், பிடாகம் கிராமத்தில் கை முறையில் ஏராளமான காகிதம் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்ய முடியாத நிலை இருந்து வருகிறது. மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்காததால் தேங்கிக் கிடப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதற்கு உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் முயற் சிக்குமா ?

**கனம் திரு. ஜி. பூவராகன் :** அது சம்பந்தமாகத் தகவல் என்னிடம் ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் அது சம்பந்தமாக எழுதி அனுப்பி னால் அங்கு இருக்கும் காகிதங்களை வாங்க ஏற்பாடு செய்யலாம்.

*Liberalised Pension Scheme*

* 193 *Q.*—SRIMATHI A. S. PONNAMMAL (on behalf of SRIMATHI T. N. ANANDANAYAKI) : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state whether the Liberalised Pension Scheme has been made applicable to the Government Press Workers?

THE HON. SRI G. BOOVARAGAN : No, Sir.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know what are the categories of employees for whom this Liberalised Pension Scheme has not been made applicable?

[திரு. பூ. கக்கன்] [11th March 1963

விவசாயப் பண்ணைகளாக எடுத்துக்கொள்கிறோம். பண்படாத நிலங்களை எடுத்துக்கொள்ளும்போது இப்படிப்பட்ட பண்ணைகளில் கொஞ்சம் கூடுதலாகச் செலவாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உர விநியோகத்தை சொஸைடி மூலமாகச் செய்து வருகிறோம். ஜில்லா கூட்டுறவு சொஸைடிகள் மூலமாகவும், மார்க்கட்டிங் கமிட்டிகள் மூலமாகவும், பஞ்சாயத்து யூனியன் கோவாப்பரேட்டிவ் சொஸைடிகளுக்கு அனுப்பி, விவசாய மக்களுக்கு உற்ற சமயத்தில் உரத்தைக் கொடுத்து உதவி செய்து வருகிறோம். உற்ற சமயத்தில் உரம் கொடுக்கப்படவில்லை, காலதாமதமாகிறது என்று சிலர் கூறினார்கள். உற்ற சமயத்தில் உரத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் 'இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' கொடுத்திருக்கிறது. எவ்வளவு தூரம் நன்றாக இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமோ அவ்வளவு தூரம் செய்து வருகிறோம். சிறிது முன்னாலேயே உரத்தை வாங்கிக் கொள்வதானால் ரிபேட் கொடுக்கப்படுகிறது. அதனால் சில விவசாயிகள் உரத்தை முன்னாலேயே வாங்கி வைத்துக்கொள்ள இடம் இருக்கிறது. அப்படி முன்னாலேயே வாங்கி வைத்துக்கொள்வதன் காரணமாக விலையில் கொஞ்சம் ஆதாயம் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கொலை செய்யக்கூடாது, சாராயம் காய்ச்சக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனால் சில சமயங்களில் கொலை செய்கிறார்கள், சாராயம் காய்ச்சத்தான் செய்கிறார்கள். அதே போன்று சில விவசாயிகள் உரத்தை வாங்கி வைத்துக்கொண்டு பிளாக் மார்க்கட்டில் விற்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு மேற்கொண்டு உரம் வழங்கக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறோம். அரசாங்கம் எவ்வளவு தூரம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமோ அவ்வளவு தூரம் உர விநியோகத்தில் ஜாக்கிரதையாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்புக்குரிய திருப்பூர் பழனிசாமி கவுண்டர் அவர்கள் அரசாங்கம் குறிப்பாக விவசாய இலாகா செய்துள்ள வேலைகளைப் பாராட்டிப் பேசினார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்குப் பசுந்தாள் உரம், ரசாயன உரங்கள் கொடுத்தாலும், கிராமங்களில் கழிவுப் பொருள்களை ஒன்று சேர்த்து கம்போஸ்ட் உரம் தயாரிப்பதன்மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் பல ஆயிரக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கனம் அங்கத்தினர் "ஒப்புக்காக இந்த மாதிரி ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னார். அதையெல்லாம் மேற்பார்வை செய்யக் கமிஷனர்கள் இருக்கிறார்கள், விவசாய இலாகா டெமான்ஸ்ரேட்டர்கள், அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு தலைவரைப் பார்த்து, கழிவுப் பொருள்களைச் சேமிப்பதற்கு அவர்களும் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்கள். நகரத்தை நாம் சுத்தமாக வைத்துக்கொள்கிறோம். கிராமங்களில் கண்ட இடங்களில் மலஜலம் கழிக்கிறார்கள். அவற்றை நாம் சேமிப்பதன் மூலமாக கிராமங்கள் சுத்தமடைவதோடு நமக்கு உரமும் கிடைக்கிறது. ஆகவே, இந்த கம்போஸ்ட் உரத்தைத் தயார் செய்து உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்புக்குரிய புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது, "டிராக்டர்கள், புல்டோசர்கள்" ஆகியவற்றை அதிகமாகப்பெற அந்நியச் செலாவணியைக் கூடுதலாகப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதைச் செய்து கொண்டுதான் வருகிறோம். நெருக்கடியின் காரணமாக சிறிது குறைவு ஏற்பட்டிருந்தாலும்கூட எவ்வளவு தூரம் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு மத்திய அரசாங்கம் கொடுத்துக் கொண்டுதான் வருகிறது.

நீலகிரி ஜில்லாவில் உருளைக் கிழங்குக்கு ஏற்பட்டிருக்கும் நோயைப் போக்க டைதேன் என்ற மருந்து வேண்டியிருக்கிறது. அதைப் பெற அந்நிய செலாவணி அதிகமாக வேண்டியிருக்கிறது. அது கிடைக்காத காரணத்தால்தான் இந்த மருந்தை அதிக அளவுக்குக் கொடுக்க முடியவில்லை. அதிகமாகக் கிடைத்தால் நீலகிரி ஜில்லாவுக்கு அந்த மருந்தை அதிகமாகக் கொடுத்து உதவி செய்ய முடியும் என்பதைக் கனம் கரிச்சா கவுடர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



11th March 1963] [திரு. பூ. கக்கன்]

கனம் ஜீவரத்தினம் அவர்கள் பேசும்போது பாலாற்றுச் சட்டத் திட்டங்களைத் தளர்த்தி பம்ப் செட் வைத்துத் தண்ணீர் இறைக்க ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஏற்கனவே இதைப்பற்றி பரிசீலனை செய்துதான் சட்டதிட்டங்களைத் தயாரித்திருக்கிறோம். கரையோரம் முழுவதும் பம்ப் செட் வைத்து விட்டால், பிறகு கீழே தண்ணீர் ஊறாது. அதிகாரிகள் அது பற்றிப் பரிசீலனை செய்து, எத்தனை கஜத்திற்கு அப்பால் பம்ப் செட் வைக்கவேண்டுமென்று பார்த்து அந்த விதத்தில் பம்ப் செட் வைக்க விவசாயிகளுக்கு ஒத்தாசை செய்து வருகிறார்கள்.

வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்தவரை சிறிய பாசனத் திட்டத்திற்காக அரசாங்கம் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. வட ஆற்காடு ஜில்லா வரண்ட பிரதேசம். பாலாறு அந்த வழியே போனாலும் கூட அதிகத் தண்ணீர் கிடையாது. சிறு பாசனத் திட்டக் காரியங்களுக்காக என்றே வேலூர் தலைமையிடமாக கொண்டு உணவு உற்பத்தி எக்ஸிகூடிவ் இன்ஜினியர் வைத்து அந்த வட்டாரத்தில் அதிகச் நன்மைகளை செய்யவேண்டுமென்று ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

மதுரையில் விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கனம் திருமதி லட்சுமி காந்தம் அவர்களும், திருமதி பொன்னம்மாள் அவர்களும் சொன்னார்கள். மதுரையில் விவசாயக் கல்லூரி வரப்போகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு பெரியாறு பாசனமும், வைகைப் பாசனமும் இருப்பதால் இங்கு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்துவதன் காரணமாக விவசாய மக்கள் நல்ல முறையில் பலன் பெற வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீமதி குழந்தையம்மாள் பேசும்போது மின்சாரமானது குறைந்தது எட்டு மணி நேரம் அளவுக்காவது கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய நாட்டுக்கு சோதனையான நிலைமை ஏற்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் விவசாயிகளும் கொஞ்சம் கஷ்டத்தை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நாட்டிலுள்ள நெருக்கடி நிலைமை தீர்ந்து விட்டால் விவசாயிகளுக்கு எட்டு மணி நேரம் மின்சாரம் கொடுப்பதற்கு தக்க நடவடிக்கைகளை மின்சார இலாகா எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள், சால்வன்சி சர்டிபிகேட் வாங்குவதில் கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். சில பேர் பணத்தை வாங்கிக்கொண்டு ஆளே காணமல் போய்விடுகிறார்கள். சால்வன்சி சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்ற நிலைமை இருந்தால்தான் ஓரளவு இந்த நிலைமையைத் தவிர்க்க முடியும். அரசாங்கப் பணம் என்றால் அது மக்களுடைய வரிப் பணந்தான். ஆகவே, அந்த சர்டிபிகேட்டை வாங்குவது அவர்களுக்கும் நல்லது. அரசாங்கத்துக்கும் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது ஸ்டாம்ப் டியூடி அதிகமாகி விட்டது பற்றிச் சொன்னார்கள். அது பற்றி ஏற்கனவே ஓரளவு பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அவர்கள் பகுதியில் பருத்தியில் உண்டான புழு பாலிடால் அடிப்பதன் காரணமாக அழிவதில்லை என்று சொன்னார்கள். அரசாங்கம் அது பற்றிப் பரிசீலனை செய்து வேறு வழிகளையும் கையாண்டு அதைப் போக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நமது நாட்டில் சில பகுதிகளில் இப்போது எலித் தொந்தரவு இருக்கிறது. அதைப் போக்கவும் அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

எலிகளைக் கொல்ல என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்துவருகிறோம். பொள்ளாச்சியில் தொண்டர்படை வைத்துக்கூட எலிகளைக் கொல்லலாமோ என்று நினைத்தோம். மேலைநாடுகளில் ஈயைக்கொல்ல எடுத்துக்கொள்ளும் முயற்சியைப்போல எலிகளைக்கொல்ல

[12th March 1963

Director of Handlooms is only a distributing authority. He gets yarn from the mills and supplies them to the co-operative societies at ex-mill rates and for the people outside the co-operative societies, he is charging one per cent as handling charges.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது கூட்டுறவு நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியில், அவர்களுக்கு மலிவான விலையில் நூல் வழங்குவதற்கு கூட்டுறவு ஆலைகள் இருக்கின்றன. இல்லையெனில் விலை மலிவாகக் கிடைப்பதற்குத் திட்டம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கட்டுபடியாகக்கூடிய விலையில் தான் எந்தப் பொருளையும் விநியோகம் செய்ய முடியும். கட்டுபடியாகாத நிலையிலே நூல் விநியோகம் செய்ய வேண்டுமென்று சொன்னால், மில்களில் நூல் உற்பத்தி செய்யமாட்டார்கள். பெப்ரவரி மாதத்திற்கு முன்பு இருந்த விலைகள் கட்டுபடியாகாத காரணத்தினால், மில்களில் 40-ம் நம்பர், 26-ம் நம்பர், 20-ம் நம்பர் நூல்கள் உற்பத்தி செய்வதை நிறுத்தி விட்டார்கள். அதனால் நூல் தட்டுப்பாடு ஏற்பட்டது. இப்பொழுதிருக்கிற விலைப்படி நூல் தாராளமாகக் கிடைக்கிறது. அதனால் இந்த விலையை மாற்ற இயலாது.

**திரு. எ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** கைத்தறித் தொழிலுக்கு ஆக்கம் அளிப்பதற்காக கரை போட்ட சேலை, வேஷ்டிகளை கைத்தறிக்கு என்று தனியாக ஒதுக்குவதற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவ்வாறு ஒதுக்குவதன் மூலம் கைத்தறி நெசவாளருக்கு நன்மை ஏற்படாது என்பது என்னுடைய திடமான அபிப்பிராயம்.

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் :** ரெண்டு மாதத்திற்கு முன்னால் நூல் விலை குறைந்திருந்தது. அதற்குப் பிறகு இப்பொழுது விலை ஏறியிருக்கிறது. சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்க்கார் நடவடிக்கை எடுத்ததினால் தான் இந்த மாதிரி மாறி இருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** கூட்டுறவு நூற்பு ஆலைகளிலிருந்து மாகாண கைத்தறி நெசவாளர் சங்கம்,-துணிகளின் தேக்கம் அதிகமாக இருப்பதால்,-நூல்களை அவ்வப்போது எடுத்துக்கொள்ளத் தயங்குகிறார்கள். இந்த சந்தர்ப்பத்திலே கூட்டுறவு நூற்பு மில்கள் வெளியிலே உள்ள மற்றவர்களுக்கு நூல் விற்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தப் பிரச்னைக் குறித்து சர்க்காருக்கு கடிதம் எழுதினால் பரிசீலிக்கப்படும்.

**திரு. மு. கருணாநிதி :** கரைபோட்ட வேஷ்டி, சேலைகளை கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதற்காக இந்த சபையிலே ஒரு தீர்மானம் நிறைவேறியது. அது எந்தக் காரணத்தினால் கைவிடப்பட்டது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதைப்பற்றி விவாதம் வருகிற பொழுது நான் விளக்கமாகச் சொல்லுவதற்குத் தயாராய் இருக்கிறேன். கரை போட்ட வேஷ்டிகளை நாம் ஒதுக்கவேண்டுமென்று சொன்னால், மற்ற மாநிலங்களிலுள்ள மில்காரர்கள் அப்படி ஒதுக்கக் கூடாது என்று நினைக்கிறார்கள். அந்த ராஜ்யங்களிலுள்ள சர்க்கார் இந்த மாதிரி அபிப்பிராயம் கொண்டவர்களாக இல்லை. அவர்கள் இஷ்டப்பட்டால் மில் வேஷ்டிகளிலும்கூட கரைபோட்டு செய்துவிடலாம். எப்படி இன்றைக்கு



12th March 1963]

நம்முடைய ராஜ்யத்திலே பவர் லூம்கள் வேண்டாம் என்று நாம் நினைத்தபோதிலும். மற்ற ராஜ்யங்களில் உள்ளவர்கள் பவர் லூம்களில் தயாரித்த துணிகளை நம்முடைய ராஜ்யத்திற்கு அனுப்புகிறார்களோ, அந்த மாதிரி ஒரு நிலைமைதான் ஏற்படும்.

**திரு. து. ப. அழகமுத்து :** கூட்டுறவு அமைப்புகளில் இல்லாத, தனிப்பட்ட கைத்தறியாளர்கள் விலை அதிகமாகக் கொடுத்து நூல் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படுவதால், நியாயமான விலையில் நூல் கிடைப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தவிதமான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு கூட்டுறவு சங்கங்களில் இருக்கிறவர்களுக்கு நூல் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது இருக்கிற ஏற்பாட்டின்படி கூட்டுறவு சங்கங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 6,250 பேல்களும், வெளிநாடுகளுக்கு அனுப்புகிறவர்களுக்கு 2,000 பேல்களும், கூட்டுறவு சங்கங்களுக்கு வெளியிலே இருக்கிறவர்களுக்கு 4,000 பேல்களும் விநியோகம் செய்கிறோம்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** 40-ம் நெம்பர் நூலின் எக்ஸ்மில்ரேட் ரூ. 28 அளவிலே இருந்தது, இப்பொழுது திடீரென்று ரூ. 33-க்கு விலை உயர்த்தப்பட்டிருப்பது எந்த அடிப்படையிலே ? இது அரசாங்கத்திற்கு தெரியுமா ? திடீரென்று இப்படி ரூ. 5 கூட்டியது நெசவாளர்களைப் பாதிக்காதா.? அதனால் சில நெசவாளர் சொஸைடிகள் தங்களுக்கு அலாட் செய்த நூல்களை எடுக்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 5, 6 கேள்விகளை ஒரே சமயத்தில் கேட்டுவிட்டார்கள். நூல் விலைகளை உயர்த்தியதற்குக் காரணம், இன்றைக்கு உற்பத்திச் செலவு என்ன ஆகிறது என்று கணக்குப்போட்டு, அந்த அடிப்படையிலே அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அதிகரிப்பதற்கு முன்னர் குறைந்த விலை நிர்ணயம் செய்திருந்த காலத்தில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. விலை குறைவாக இருந்த காரணத்தினால் மில்களில் 40-ம் நம்பரையும். அதற்குக் குறைவாக உள்ள நம்பர் நூலையும் தயாரிப்பதை நிறுத்திவிட்டார்கள். இப்பொழுது கூடுதலாக விலை நிர்ணயம் செய்தபிறகு, இந்த நூல் உற்பத்தியாகிறது. அதனால் கிடைக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற விலையின் அடிப்படையில் சாதாரணமாக நூல் வாங்கி தொழில் நடத்த முடியும் என்பது தான் சர்க்காருடைய அபிப்பிராயம்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** கனம் தலைவர் அவர்களே, கூட்டுறவில் சேராத நெசவாளர்களுக்கு நூல் கொடுக்கும்போது அவர்களுக்குத் தேவை இல்லாத நூல் கொடுக்கப்படுவதாக எனக்கு புகார் கிடைத்திருக்கிறது. அப்படிப்பட்ட புகார் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அம்மாதிரி புகார் எனக்கு வரவில்லை. புகார் எழுதிக் கொடுத்தால் அதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**திரு காஞ்சி மணிமொழியார் :** ஸார், கரை போட்ட வேஷ்டி, சேலைகளை கைத்தறிகளுக்கு ஒதுக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகவே பல தரப்பிலிருந்தும் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அப்படி இம்மாகாணத்தில் மட்டும் செய்தால் வெளி மாகாணங்களிலிருந்து கரை போட்ட வேஷ்டி இங்கு கொண்டு வரப்படும், எதிர்பார்த்த பலன் கிடைக்காது என்று மந்திரி அவர்களால் சொல்லப்பட்டது. ஆகவே எல்லா மாநிலங்களிலுமே இந்தக் கரை போட்டவேஷ்டியையும் கலர் சேலையையும் மில்களுக்கு அனுமதிக்காமல் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்று இந்திய சர்க்காரை வற்புறுத்த இந்த மாநில சர்க்கார் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[12th March 1963

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : பொதுவாகவே ஒரு காலத்தில் இருந்த அபிப்பிராயம் மற்ற காலங்களிலும் இருக்கவேண்டும் என்பது இல்லை. அபிப்பிராயங்கள் அந்தந்த காலத்திற்கு ஏற்ப மாறக்கூடும். அந்தந்த சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறும் சூழ் நிலைக்குத் தக்கவாறும் மாறுபடும். கரை போட்ட வேஷ்டியையும் கலர் சேலையையும் கைத்தறிக்கு ரிசர்வ் பண்ணுவது என்று சொன்னால் மில் துணியில் தயாராகக்கூடிய வெள்ளைத் துணிகளுக்கு ஸ்கிரீன் ப்ரிண்ட் போடப்பட்டு அது காம்பெடிஷனில் வந்து விடும். அதனால்தான் மில் துணிகளுக்கு செஸ் வரி விதித்து செஸ் மூலமாக கைத்தறிக்கும் மில் துணிக்கும் விலையை ஏற்படுத்தி மில் துணிக்கு அதிகப்படியான விலை வைத்து கைத்தறி துணிக்கு ரிபேட் கொடுத்து கூட்டுறவு சங்கங்கள் மூலமாக குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கும் வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். செஸ் விதித்த பிறகும் அதற்கு மேலும் ஒதுக்கலாம் என்று சொன்னால் அதற்கு அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

## *G.C.I.M.*

* 197 *Q.*—SRI A. P. DHARMALINGAM (on behalf of SRI M. V. KARIVENGADAM): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) what is the status and position of G.C.I.M. Medical students after the abolition of the G.C.I.M. Medical course:

(*b*) the total number of G.C.I.M. degree holders in Government service; and

(*c*) whether the Government propose to allow them to appear for final M.B.B.S. Examination?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : (அ) ஜி. சி. ஐ. எம். முதல், இரண்டாம் ஆண்டு மாணவர்கள் 282 பேர் இணைக்கமான எம். பி.பி. எஸ்., (Integrated M. B. B. S. Course) இரண்டாம் ஆண்டு வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஜி. சி. ஐ. எம். மூன்றாம் ஆண்டு, நான்காம் ஆண்டு மாணவர்கள் 150 பேர் டி.எம். அண்டு எஸ்.தேர்வு (D.M. & S. Examination) எழுத அனுமதிக்கப்பட்டனர். நாட்டு மருத்துவத்திற்கு (Indigenous Medicine) பதிலாக, ஆங்கில மருத்துவம் (Modern medicine) கூடுதலாகப் பயின்ற பின்னரே அவர்கள் அவ்வாறு அனுமதிக்கப்பட்டனர். ஜி. சி. ஐ. எம். இறுதியாண்டு மாணவர்கள் 187 பேர் ஜி. சி. ஐ. எம். இறுதி தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர்.

(இ) 257 பேர்.

(உ) இல்லை.

**திரு. ஆ. துரை அரசன்** : ஸார், ஜி. சி. ஐ. எம். பட்டம் பெற்று ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் அரசினர் மருத்துவ மனையில் வேலை செய்து விட்டு ஆறு மாத காலம் பரீட்சைக்குச் செல்ல இருப்பதால் அவர்களுடைய முந்திய சர்வீஸ் பாதிக்கப்படுமோ என்று அஞ்சுகிறார்கள். அதன் விவரம் அறிய விரும்புகிறேன் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : சர்வீஸ் ஒன்றும் பாதிக்கப்பட மாட்டாது. அந்தக் காலம் இவர்களுடைய சர்வீசுடன் சேர்க்கப்படும்.



12th March 1963]

## மருத்துவக் கல்லூரி மாணவர்கள் (இன்டர்னிஷிப்)

* 198 கேள்வி.—திரு. எஸ். முருகையன் (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி சார்பாக) : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இன்டர்னிஷிப் (Interneeship) பயிற்சி பெறவேண்டியதில்லையென சென்னை சர்வகலாசாலைக்கு யோசனை கூறப்பட்டு உள்ளதா ?

(இ) சர்வகலாசாலை ஏதாகிலும் பதிலளித்ததா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) In view of the National Emergency the Medical Council of India requested the replacement of the interneeship training by one year of compulsory housemanship training as a temporary measure. The Government have, with the concurrence of the University of Madras, issued orders accordingly.

## மருத்துவக் கல்லூரிகள்

* 199 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி சார்பாக) : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் சென்னை அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு மாணவர்கள் ?

(உ) புதிய மருத்துவக் கல்லூரி துவக்கும் யோசனை உண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) 100.

(*c*) No.

## நீண்டதூர அரசாங்க பஸ்கள்

* 201 கேள்வி.—திரு. எஸ். முருகையன் (திரு. முனு. ஆதி சார்பாக) : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆந்திர, கேரள மாநிலங்களோடு தொடர்பு கொள்ள, நீண்ட தூர அரசாங்க பஸ்கள் விடும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், இதுபற்றி என்ன முயற்சி எடுத்துள்ளனர் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes. There are proposals under consideration to operate new routes (i) Madras to Vijayawada and (ii) Madras to Bangalore (via) Chittoor and Palamaner. There is no proposal to open new routes extending to Kerala State.

(*b*) The matter is under consideration pending decision on reciprocal arrangements between the Mysore, Andhra Pradesh and Kerala States and this State in terms of the recommendations of the Inter-State Transport Commission.

[12th March 1963

**கனம் திரு. ஜி. பூவராகன் :** இப்போது அரசாங்க அச்சகத்திலே உள்ளவர்களுக்கு லிபரலைஸ்ட் பென்ஷன் கொடுப்பதாக உத்தேசம் இல்லை. யார் யாருக்குக் கொடுப்பது என்று பார்த்து குமாஸ்தாக்களுக்கு மட்டும் மினிஸ்டீரியல் உத்தியோக அளவில் இருப்பவர்களுக்கு இந்தப் பென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் ∴பாக்டரி ஆக்ட்டின்கீழ் வருகிறவர்களுக்கு லிபரலைஸ் பென்ஷன் கொடுக்கவில்லை.

### செங்கல் தொழிற்சாலை

* 194 கேள்வி.—**திரு. ஆ. துரை அரசன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரந்தாங்கி தாலூகாவில் எலக்ட்ரிக் செங்கல் தொழிற்சாலை ஆரம்பிக்குமளவிற்கு மண் கிடைப்பது அரசினருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அறந்தாங்கி தாலூகாவில் சில பகுதிகளில் ஒருவகைக் களிமண் அரசாங்க பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்களால், பரிசோதனைக்காகச் சேகரிக்கப்பட்டுள்ளது. அறந்தாங்கிக்கும், அதிர்வ கோட்டைக்கும் இடையே படிந்துள்ள களிமண்ணின் அளவையும் தரத்தையும் நிர்ணயிக்கும் வேலை சீக்கிரமாக மேற்கொண்டு நடைபெறும். ஆனால் மின்சார சக்தியைக்கொண்டு கட்டிடத்திற்கான செங்கற்கள் தயாரிப்பதற்கு இந்த மண் பொறுத்தமுடையதா என்று ஆராய்ச்சி நடைபெறவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பூந்தமல்லி, திருமிழிசை, ஆகிய இடங்களில் ஏற்படவிருக்கிற மெக்கானைஸ்டு பிரிக் பிளாண்ட் எந்தக் கட்டத்தில் இருக்கிறது ? எப்பொழுது வேலை தொடங்கும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. ஆ. துரை அரசன் :** இதுவரையில் ஆராய்ச்சி நடைபெறவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இனிமேலாவது நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சி நடத்த திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த இடத்திலே மெக்கானைஸ்டு பிரிக் யூனிட் வைப்பது சாத்தியமா, அதனுடைய காஸ்ட் ஆப் புரொடக்ஷன் என்ன ஆகும், விற்பதற்கான வழிகள் அங்கே இருக்கின்றனவா என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்த பிறகு, மேற்கொண்டு பரிசீலனை நடத்தப்படும். அந்த இடத்திலே போதிய அளவு மார்க்கெட் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை:** இப்பொழுது கிராமங்களில்கூட செங்கல் கிடைப்பது கஷ்டமாகவும், அதிக விலையிலும் இருப்பதால், மின்சார சக்தியைக் கொண்டு இயங்கும் ஆலை ஏற்படுத்தாவிட்டாலும்கூட, தலைஞாயிரில் ஏற்படுத்திய சூளை லாபகரமாக இருப்பதால், தஞ்சையில் மேற்கொண்டும் சூளைகள் ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சிறிய தொழில்களை ஊக்குவிக்கும் வகையிலே, செங்கல் சூளைகள் வைப்பதற்கு அரசாங்கம் வேண்டிய உதவிகள் செய்து கொண்டு வருகிறது. அதைச் செய்வதற்கும் தயாராய் இருக்கிறது. மெக்கானைஸ்டு பிரிக் யூனிட் என்றால், ஒரு லட்சம் கற்கள் செய்யக்கூடிய யூனிட். கிராமங்களிலே அம்மாதிரி யூனிட் வைப்பது கட்டுபடியாகாத நிலைமை. அதனால் அதை வைப்பதற்கு முன்பு பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. சிறு சூளைகள் வைப்பதற்கு சர்க்கார் உதவி செய்யும்.



12th March 1963.]

**திரு. ஆ. துரை அரசன் :** அப்படிச் செய்யப்படுகின்ற செங்கற்களை அரசாங்கமே வேறு பகுதிகளுக்கு ஏற்றிச் செல்லுவதற்கு ஏற்பாடு செய்ய முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதிலே காஸ்ட் ஆப் டிரான்ஸ்போர்ட் முக்கியமான விஷயம். அறந்தாங்கியிலே கற்களைச் செய்து, சென்னைக்கோ அல்லது திருச்சிக்கோ கொண்டு போகவேண்டும் என்று சொன்னால் அதைக் கொண்டு போவதற்கான செலவு கல்லின் செலவைவிட அதிகமாகிவிடும். அதனால்தான் பொருளாதார முறையிலே கட்டுபடியாகுமா என்று ஆராய்ச்சி செய்து பின்பு எந்த இடத்தில் வைப்பது என்று முடிவு செய்யவேண்டும் என்று சொன்னேன்.

**திரு. ம. கமலநாதன் :** சிறிய அளவிலே செங்கல் தொழிலை நடத்துவதற்கு அரசாங்கம் எவ்விதச் சலுகைகளைக் கொடுக்கிறது ? எத்தகைய மண் வளம் இருக்கவேண்டும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எத்தகைய மண் வளம் என்பதைப் பரிசீலனை செய்து, தகுதியுள்ளதா அல்லது தகுதியற்றதா என்பதை அரசாங்கம் செய்து கொடுக்கிறது. ஸாயில் டெஸ்டிங் ஸ்கீம்கள் சர்க்காரிடத்தில் இருக்கின்றன. மேலும், கூட்டுறவு சங்கங்கள் அமைத்தால், வேண்டிய நிதி வசதியும் செய்து கொடுக்கிறோம்.

### நூல் விநியோகம்

* 195 கேள்வி.—**திரு. டி. கடம்பவனசுந்தரம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்க சர்க்கார் மேற்கொண்ட Voluntary Distribution Scheme-க்கு ஆலை முதலாளிகள் சங்கத்தார் ஒத்துழைக்கிறார்களா ?

(இ) ஆம் என்றால், எந்த அளவுக்கு ?

**கனம் திரு ஆர். வெங்கட்டராமன் :** (அ) நமது மாநிலத்தில் தானாக மேற்கொண்டுள்ள நூல் விநியோகத் திட்டம் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் கைவிடப்பட்டது. அந்தத் தேதியிலிருந்து Textile Commissioner அகில இந்திய பருத்தி நூல் விநியோகத் திட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்துள்ளார்.

(இ) வினா எழாது.

**திரு. டி. கடம்பவனசுந்தரம் :** 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ம் தேதி முதல் நூல்களின் மில் வாசல் விலைகளை அதிகரித்திருக்கிறார்கள். சர்க்கார் ஆலோசனையின் பேரில் இந்த விலை கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதற்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட விலை கட்டுப்படியாகவில்லை என்று புகார்கள் வந்தன. மில்களிலிருந்து மாத்திரம் அல்ல, கூட்டுறவு நூற்பு ஆலைகளிலே கணக்குப் பார்த்தால்கூட, முன்பு நிர்ணயம் செய்த விலை கட்டுபடியாகவில்லை என்பது தெரிய வந்தது. அதன் அடிப்படையில் மத்திய சர்க்கார் விலையை மாற்றியிருக்கிறார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Is it a fact that the prices that are being charged by the Director of Handlooms for the yarn, are more than the prices actually charged by the Mills?

THE HON. SRI R. VENKATARAMAN : It is perfectly open to the people to buy it from the mills if they can get it. The

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) ஆம்.

(இ) வேலூரிலும் தஞ்சையிலும் ஒவ்வொரு சைக்கிள் பகுதி இணைப்பு தொழிற்சாலைகள் உள்ளன.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தஞ்சையில் இருக்கும் சைக்கிள் தொழிற்சாலையில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்பது உண்மைதானு ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எந்தத் தொழில் ஆரம்பித்தாலும் ஆரம்பத்திலே லாபம் வராது. தொழில் தெரியாதவர்கள்தான் ஆரம்பத்திலேயே நஷ்டம் வந்துவிட்டதே என்று கேட்பார்கள். இப்பொழுது தான் அது சைக்கிளை உற்பத்தி செய்கிற நிலைக்கு வந்திருக்கிறது. 1962–63–ல் சற்றேறக்குறைய 368 சைக்கிள்கள்தான் உற்பத்தியாகி இருக்கும். அதன் முழு கபாஸிடியாகிய 5,000 சைக்கிள்கள் உற்பத்தி செய்யும் போது லாப நஷ்டம் சரியாகத் தெரியும். லாபம் வரும் என்பதில் சந்தேகம் இல்லை. 1962–63–இல் அங்கு நாம் எதிர்பார்ப்பது 1,000 சைக்கிள்கள் செய்யலாம் என்பது. அதுதான் இப்பொழுதுள்ள நிலைமை.

**திரு. மு. கருணாநிதி :** அந்த இலட்சிய அளவு பூர்த்தியடைய எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சாதாரணமாக, இந்த விதமான தொழிற்சாலை தனியார் துறையில் அமைத்திருந்தால் மூன்று நான்கு வருஷங்களாகும். அதுதான் நமக்கும் ஆகும் என்று நான் நினைக்கிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** கிருஷ்ணகிரியில் சைக்கிள் தொழிற்சாலை எப்போது துவங்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் ஆரம்பிககப்படும்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** சேலத்தில் சைக்கிள் தொழிற்சாலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சேலத்தில் வைப்பதாக உத்தேசம் இல்லை. தூத்துக்குடியிலும், கிருஷ்ணகிரியிலும்தான் வைப்பதாக இருக்கிறோம்.

*Lakshmanaswamy Mudaliar Committee (Report)*

* 206 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) what steps have been taken to implement the recommendations of Lakshmanaswamy Mudaliar Committee; and

(*b*) whether the attention of the State Government has been drawn by the Centre in connection with the implementation of the recommendation of Mudaliar Committee?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) The Lakshmanaswamy Mudaliar Committee was constituted by the Government of India. The recommendations of the Committee are still under examination of the Government of India. The Central Council of Health at its meeting held in October 1962 resolved that the commentary on the report by World Health Organisation and the Health Ministry should be made available to the State Governments for their study. Government of India





are forwarding extracts of the recommendations made under different chapters of the reports for action by the State Governments. In a few cases the recommendations of the Government of India have been communicated to the Director of Medical Services *or* the Director of Public Health for necessary action and in others reports have been called for.

**திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படி மத்திய சர்க்கார் அனுப்பிவைத்துள்ள சிபார்சுகளில் என்ன என்னவற்றை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள் இந்த சர்க்கார் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** மத்திய அரசாங்கம் அனுப்பியிருக்கிற சிபாரிசுகளெல்லாம் பரிசீலனையில் இருக்கின்றன. அவைகளாவன.—

(1) Medical care—Need for dental mobile vans in districts.

(2) Setting up of preventive mental Health Services—Improvement of Curative Services.

(3) Provision of a number of P.H. Laboratories for food analysis. The laboratory should provide facilities to private medical practitioners in the areas for examination of clinical specimens of Public Health importance.

(4) Treatment of eye diseases and prevention of blindness.

(5) Linking of district hospitals with teaching hospitals on a regional basis.

(6) Organisation of various departments of hospitals.

(7) Expansion of medical facilities in District hospitals.

(8) Provision of blood bank service in every district and teaching institution.

(9) Organisational set-up of the Medical and the Public Health Departments at the top and in the Districts.

(10) Training in dental care to Auxiliary Health Workers in Primary Health Centres.

(11) T.B. Schemes—Treatment of.

(12) Development of Medical care facilities on co-operative lines through suitable subsidies.

(13) Contact between the Director of Health Services and the State Health Minister.

அவைகளின் மீது டைரக்டர் ஆ.·.ப் மெடிகல் சர்விஸஸ் அவர்களிடமிருந்தும், டைரக்டர் ஆ.·.ப் பப்ளிக் ஹெல்த் அவர்களிடமிருந்தும் ரிபோர்ட்களை அரசாங்கம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

*Erskine Government Hospital (Madurai)*

* 207 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have received a memorandum from some of the M.L.As. of Madurai district, for establishing a full-fledged Neuro-Surgery Unit at Madurai Erskine Government Hospital; and

(*b*) if so, the action taken thereon?

**திரு. கே. ஏ. மதியழகன்:** ஸார், இந்த மாநிலத்திலிருந்து வருகிற ஆண்டில் எத்தனை நீண்ட தூர பஸ்கள் விடப்படும் என்பதைச் சொல்ல முடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது இண்டர் ஸ்டேட் ரூட்டைப் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

**திரு. இர. பொன்னப்ப நாடார்:** ஸார், நேரடியாக சென்னையிலிருந்து கன்யாகுமரிக்குச் செல்லும் எக்ஸ்பிரஸ் பஸ் என்ன ஆயிற்று என்பதை அறிய விரும்புகிறேன். அண்மையில் அப்படிப்பட்ட ஒரு பஸ்ஸை துவக்கப்போவதாக கூறினர்கள். அது என்ன ஆயிற்று?

**கனம் சபாநாயகர்:** போனது இப்பொழுது என்ன ஆயிற்று என்று கேட்பது போல் இருக்கிறது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அதைப்பற்றி பரிசீலனை செய்து அது கைவிடப்பட்டுவிட்டது.

**திரு. அ. துரைசாமி:** ஸார், தமிழ் நாட்டில் பெரிய திட்டங்களும், விசேஷ ஸ்தலங்களும் சரித்திரப் புகழ்பெற்ற பல இடங்களும் இருக்கின்றன. அவைகளை பொது ஜனங்கள் பார்க்க சர்க்கார் உல்லாச பிரயாணிகள் பஸ்களை விட உத்தேசம் உண்டா? இல்லை என்றால் அப்படிப்பட்ட பஸ்களை விடுவதுபற்றி உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்பொழுது அப்படிப்பட்ட எந்த விதமான யோசனையும் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர்:** ஸார், கேரள ராஜயத்தில் கொச்சின் துறைமுகத்தில் தேயிலை ஆக்ஷன் நடைபெறுகிறபடியால் நீலகிரியிலிருந்து அங்கு போவதற்கு ஊட்டியிலிருந்து கொச்சி வரைக்கும் துரித சர்க்கார் பஸ் விடுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கோயமுத்தூரிலிருந்து கொச்சி வரைக்கும் பஸ் விட வேண்டும் என்று பலவிதமான வேண்டுகோள்கள் வந்திருக்கின்றன. ஆனல் இது இன்டர் ஸ்டேட் விஷயமாக இருப்பதால் கேரள அரசாங்கத்துடன் கலந்து ஆலோசித்து அதன் பிறகுதான் ஒரு முடிவு செய்யப்படும்.

**திரு. ம. கமலநாதன்:** பெங்களூரிலிருந்து பாண்டிச்சேரி வரைக்கும் துரித பஸ் விடுவதாக முன்பு சொல்லப்பட்டது. அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அப்படி விடுவுதற்கு சர்க்காருக்கு யோசனை இல்லை.

**திரு. மு. சண்முகம்:** கர்நாடக மாநிலத்தில் அந்தத் திட்டம் கொண்டு வருவதற்கு உத்தேசம் இல்லையா? இல்லையானல் அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

**Mr. SPEAKER:** Please repeat your question.

**திரு. மு. சண்முகம்:** மற்ற மாநிலங்களுடன் தொடர்பு கொள்ளும் திட்டப்படி இப்படிப்பட்ட பஸ்ஸை விட்டு கேரளாபோன்ற கர்நாடக (மைசூர்) மாநிலத்திற்கு தொடர்புகொள்ள ஏற்பாடு செய்ய முடியுமா? இல்லையென்றல் அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது இன்டர் ஸ்டேட் ரூட்டைப் பொறுத்தது. ஆகவே கேரளா, போன்று மைசூர் அரசாங்கத்துடன் இன்டர் ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் நடத்துவதற்கு சில பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன.



**திரு. காஞ்சி மணிமொழியார்:** வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்குப் போகிறவர்கள் ரோடிலிருந்து பல மைல் நடக்க வேண்டியிருக்கிறது. திரும்ப வந்து பஸ்ஸைப் பிடிப்பதற்கும் ஒரு முறை நடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, சர்க்காரே நேராக அங்கு வாரத்திற்கு ஒரு நாள் ஒரு பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இன்டர்-ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டைப்பற்றி பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போது, இத்தகைய கேள்வி எழவில்லை. தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

*Atomic Power Plant*

* 202 *Q.*—Sri A. P. DHARMALINGAM (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of sites inspected by the team of experts for locating an atomic power plant;

(*b*) whether any communication has been received from the Atomic Energy Commission; and

(*c*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) The Site-Selection Committee inspected two sites in this State—one at Kalpakkam near Mahabalipuram and the other at Billigundlu near Hogenakkal.

(*b*) Yes.

(*c*) The Atomic Energy Commission has forwarded a copy of the announcement made by the Government of India in the Lok Sabha to the effect that when a decision is taken by them to proceed with the installation of the third Atomic Power Station in India, it is proposed to locate it at Kalpakkam near Mahabalipuram.

* 203 *Q.*—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the present stage of establishing an atomic power station at Kalpakkam in Madras State; and

(*b*) when the station is likely to begin functioning?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) The Government of India have not taken a decision in the matter.

(*b*) Does not arise.

**சைக்கிள் உற்பத்தி சாலை (சேலம்)**

* 204 கேள்வி.—**திரு நா. ப. செங்கோட்டுவேலு:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலத்தில் சைக்கிள் உற்பத்திசாலையொன்று துவக்கும் உத்தேசம் உண்டா?

(இ) அம்மாதிரித் தொழிற்சாலை நம் மாநிலத்தில் எங்கெங்கு உள்ளன?

[12th March 1963

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** (அ) ஆம்.

(இ) இது விஷயம் ஆலோசனையிலிருக்கிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, மதுரையில் ஒரு ந்யூரோ-சர்ஜரி யூனிட் ஒன்றை ஏற்படுத்துவது பற்றி ஆலோசனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆலோசனையில் இருக்கிறதென்றால் ஆலோசனை முடிவதற்கு இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும்? இரண்டு, மூன்று மாதங்களுக்குள் அந்த யூனிட்டை ஆரம்பிக்க வெகு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்த யூனிட் ஆரம்பிக்கப்படுவதற்கு எவ்வளவு துரிதமான ஏற்பாடுகள் செய்தாலும், இப்பொழுது ந்யூரோ-சர்ஜரி ஸ்பெஷலிஸ்ட்கள்—டாக்டர்கள்—கிடைக்கவில்லை. அதனால், அந்த வேலை மெதுவாகத்தான் நடைபெறும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** ந்யூரோ-ஸர்ஜரி டாக்டர்கள் கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார். சென்னை நகரத்திலேயே நான்கு ஐந்து டாக்டர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் யாராவது ஒருவருக்கு மதுரையில் போஸ்டிங் கொடுத்து, அங்கேயும் அந்த யூனிட்டை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தற்சமயம் ஸ்பேர் பண்ணக்கூடிய அளவிலே ந்யூரோ-சர்ஜன் இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர்:** கேள்விகள் முடிவடைந்தன.

**(*Note*.—An asterisk (*) at the Commencement of a speech indicates revision by the Member.)**

## II—PRIVILEGE MATTER *re* REPORT IN THE 'VIDUTHALAI'

MR. SPEAKER: Hon. Members are aware of the matter of privilege raised by the hon. Member, Sri K. A. Mathialagan, yesterday. Among other things, the hon. Member contended that the report in the 'Viduthalai' was not complete and therefore distorted, that the expression '*கண்மூடித்தனம்*' was offensive and therefore brought the House into contempt. The hon. Member further added that to call the Dravida Munnetra Kazhagam Party by some other name was objectionable.

I have gone through the Proceedings and I find that the supplementary question put by the hon. Member Sir V. Krishnamoorthy and the reply thereto by the Hon. Minister have been published by the newspaper. Nothing has been omitted resulting in the creation of a wrong impression. Newspapers do not publish everything that takes place in the House. They select such matters as they consider are of topical importance. As long as there is no *suppressio veri* resulting in *suggestio falsi*, I do not think we should bother much. In the present case, I do not see anything of material value having been omitted. I am of the opinion that the publication is not distorted. But if they had published in full, probably the point that the supplementary question was based on a record would have come out.



12th March 1963]

[Mr. Speaker]

The expression '*கண்மூடித்தனம்*' means, according to the Tamil Lexicon, '*அறியாமை, கவனமின்மை*'. It need not necessarily be interpreted as something very offensive. It is difficult even to attribute malafides to the publication.

Criticising a party cannot be held to be objectionable as the path of criticism is a public way. As long as improper motives are not attributed to an hon. Member, we should not proceed any further.

In this connection, I would bring to the notice of the hon. Members the observations of the Committee of Privileges of the House of Commons in the 'Daily Mail' Case, 1948. It says—

'That it is not consistent with the dignity of the House that penal proceedings for breach of privilege should be taken in the case of every defamatory statement, which strictly may constitute a contempt of Parliament . . . On the one hand the law of Parliamentary Privilege should not be administered in a way which would fetter or discourage the free expression of opinion or criticism, however prejudiced or exaggerated such opinions or criticisms may be and that, on the other hand, the process of Parliamentary investigation should not be used in a way which would give importance to irresponsible statement.'

I am of opinion that the paper might have done better and kept up the decorum by not using such fanciful or irresponsible epithets while publishing proceedings of this House.

My appeal to the Press and those concerned with such essential avocations in a democracy is to do the work in a noble manner and to use dignified language. Therefore in this case I feel that this statement need not be given any importance. Therefore I rule that there is no *prima facie* case of breach of privilege.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, தங்களுடைய கருத்துக்களையும், தீர்ப்பையும் ஒட்டி ஒரு சில வார்த்தைகள் சொல்ல அனுமதி கோருகிறேன். இந்த மன்றத்தின் தரம் பாதுகாக்கப்படுவதோடு, இந்த மன்றத்தைப் பற்றிய நடவடிக்கைகளும் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. சபையின் கௌரவம் பெரும்பாலான பத்திரிகைகளினால் காப்பாற்றப்பட்டு வருகிறது என்றே சொல்லவேண்டும். இந்த மன்ற அங்கத்தினர்களுக்கு உரிமை இருப்பது போலவே பத்திரிகைகளுக்கும் உரிமை இருக்கிறது. இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை அச்சிட்டு அன்றாடம் மக்களுக்கு அளிக்கும் பெரும் பொறுப்பை அவை ஏற்று திறம்பட நடத்தி வருகின்றன. ஆகவே இந்த மன்றத்தின் உரிமையோடு, அந்தப் பத்திரிகைகளின் உரிமையும் பாதுகாக்கப்படவேண்டும் என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். நானும் அதுபற்றி தாங்கள் தெரிவித்த கருத்துக்களை அப்படியே ஆதரிக்கிறேன். சட்டசபை நடவடிக்கைகளை வெளியிடும்போது கூடுமானவரை அப்படியே வெளியிடவேண்டும். தலைப்புக் கொடுக்கும்போது கூட உள்ளே உள்ள விஷயங்களையே, தலைப்பாகக் கொடுக்கலாம். இப்படித்தான் பெரும்பாலான பத்திரிகைகள் சபை நடவடிக்கைகளை அச்சிட்டு வெளியிடுகின்றன. தலைப்பு நடவடிக்கைகளையொட்டி ஒரு விமர்சனமாக இருக்கக்கூடாது. ஒன்றிரண்டு பத்திரிகைகள்—இந்த ஒரு பத்திரிகை மட்டும் அல்ல, வேறு சில பத்திரிகைகளும்கூட—தங்களுடைய விருப்பு, வெறுப்பை

[திரு. எம். பக்தவ [12th March 1963

முன் வைத்து இந்த மன்ற நடவடிக்கைகளை வெளியிடுவதையும், மன்ற நடவடிக்கைகள் பற்றிக் கட்டுரைகள் எழுதுவதையும் நான் பார்த்திருக்கிறேன். இவையெல்லாம் தவிர்க்கப்படவேண்டும். எல்லாப் பத்திரிகைகளுமே தங்கள் மேலான கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவேண்டும், ஏற்றுக்கொள்வார்கள் என்றே நான நம்புகிறேன்.

III.—ANNOUNCEMENTS BUSINESS OF THE HOUSE

MR. SPEAKER : Consideration of the calling attention notice under Rule 41 of the Assembly Rules is adjourned since the Hon. Minister concerned is indisposed.

There is another item, viz., one-hour discussion under Rule 57 of the Assembly Rules, proposed by Sri K. Mookiah Thevar. It relates to Agriculture. Are we going to have a debate on that to-day? We will now be taking up Demand No. XII—Police. We shall continue the discussion on this Demand till 1-15 p.m. Then we shall have the one-hour discussion under Rule 57 of the Assembly Rules and finish it. I hope the Hon. Minister for Agriculture is ready for that?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

MR. SPEAKER : Very well. Let us now take up Demand No. XII—Police.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64—*cont.*

DEMAND NO. XII—POLICE

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 8,10,79,400 under Demand No. XII—Police ".

கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற ஆண்டில் இம்மானியத்திற்கு நான் கோரியதைவிட இந்த ஆண்டில் அதிகமாகக் கோரியிருக்கிறேன் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். இதற்கு முக்கியமான காரணம் நெருக்கடி நிலைமைதான். நெருக்கடி நிலைமையையொட்டி புதிய பல பொறுப்புகள் போலீஸ் இலாகாவினர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன; அதற்கு ஏற்றபடி போலீஸ்படையை விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது. வேறு சில பகுதிகளையும் அமைக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் இவ்வாண்டு செலவினங்கள் அதிகரித்திருக்கின்றன என்பதை கனம் அங்கத்தினர்கள் நன்கு அறிவார்கள்.

மலபார் ஸ்பெஷல் போலீஸ் கம்பெனிகள் நான்கு, இரண்டு பெட்டாலியன் மத்திய அரசாங்கத்தின் வேலைக்காக நாகாலாண்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதேபோல் எம். எஸ். பி. கம்பெனிகள் இரண்டும், எஸ். ஏ. பி. பெட்டாலியன் ஒன்று, கம்பெனிகள் இரண்டும் வங்காளத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படி அனுப்பிவிடப்பட்டவர்களுக்குப் பதிலாக நாம் இங்கே இரண்டு இந்தியா ரிசர்வ் பட்டாலியன் என்று அமைத்திருக்கிறோம். இப்படி அமைக்கப்பட்ட இந்த இரண்டு படையினருக்கும் பயிற்சி அளிக்கவேண்டிய பெரும் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. நம் மாநிலத்திற்கு ஆகும் இந்தச் செலவை எல்லாம் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

அதோடு ஏற்கனவே உள்ளவர்களுக்கே இன்னும் சில பயிற்சிகள் புதிதாக அளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அளிக்கும் பயிற்சிக்கு ஆகும் செலவில் பாதித் தொகையை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது.



12th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

மேலும் கனம் அங்கத்தினர்களுக்கு எல்லாம் தெரியும் இந்த மன்றம் நிறைவேற்றியுள்ள சட்டத்தின்படியே இப்போது ஹோம்கார்ட்ஸ் என்று ஊர்க்காவல் படை அமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஊர்க்காவல் படையை அமைக்கும் விஷயமாகவும் நம்முடைய செலவு அதிகப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி போலீசாருக்கு சில புதிய உபயோகமான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதற்கும் செலவாகிறது. மேலும் போலீசாருக்கு வீடு கட்டும் திட்டம் சீரிய முறையில் நடைபெற்றுக்கொண்டுவருகிறது. சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு வீடு கட்டித்தருவதோடுகூட போலீசாருக்கு வீட்டுப் பிரச்சனை இருக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு மத்திய அரசாங்கம் கொடுக்கிற கடனையும் பெற்று இத்திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். இதுவரையில் மூன்று கோடி எண்பத்தொன்பது லட்சத்து இருபத்து நான்காயிரம் ரூபாய் வரையில் போலீஸ் அதிகாரிகள், போலீஸ் கான்ஸ்டேபிள்கள் இவர்களுடைய வீடுகளுக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. இதுவரையில் இரண்டு கோடியே பதினெட்டு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் வரையில் மத்திய அரசாங்கக் கடனையும் பெற்றிருக்கிறோம். அதோடு போலீசார் குடும்பங்களுக்கு, குழந்தைகளுக்கு வசதி அளிப்பதற்காக, க்ஷேமநலத்தையொட்டி நிவாரணம் அளிக்கப்பட்டு வருகிறது. போலீசார் ஊர்க்காவல் செய்வதோடுகூட ஒவ்வொரு கிராம அபிவிருத்தித் திட்டங்களிலும்—வீடு கட்டுதல் போன்ற காரியங்களிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதேமாதிரி பயர் சர்விஸ் பொறுப்பும் போலீசாரிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பிச்சைக்காரர்களுடைய பிரச்சனை சம்பந்தப்பட்ட வரையிலும் அவர்கள்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. மேலும் மதுவிலக்குத் திட்டம் சம்பந்தப்பட்ட வரையிலும் அந்தச் சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் பொறுப்பை போலீஸ் இலாகாவினர்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி அவர்கள் பலதுறைகளில் பணியாற்றி வருகின்ற நேரத்தில் இப்போது ஏற்பட்டுள்ள விசேஷ நெருக்கடி நிலைமையையொட்டி, அவர்கள் விசேஷப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதனால் அத்துறைச் செலவுக்குக் கூடுதலாகக் கோரப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்ந்து இதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. RAMASAMI : Sir, I move the following cut motion, viz, :—

" That the allotment of Rs. 8,10,79,400 under Demand No. XII—Police be reduced by Rs. 100 ".

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

* திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் போலீஸ் மானியக் கோரிக்கைக்கு எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன்.

பொதுவாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போன வருடத்தைவிட இந்த வருடம் போலீஸ் துறைக்கு அதிகமாக மானியம் கோரப்பட்டிருக்கிறது என்று. அதற்குக் காரணத்தையும் எடுத்துச் சொன்னார்கள். நெருக்கடி நிலைமை காரணமாக இப்படிச் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு இரண்டு கோடி அதிகம் செலவிடவேண்டிய நிலைமை இருக்கிறது. போலீஸ் படையை விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது. அவர்களுடைய வீட்டுப் பிரச்சனையை நீக்க வீடு கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க நாம் அதிகமாகச் செலவிட முன்வருகிற நேரத்தில் அவ்விலாகாவில் இருக்கும்

[12th March 1963

9-30 a.m. * **திரு. இ. நாராயணசாமி பிள்ளை :** கனம் சபாநாயகர் அவர்களே இந்த ஆண்டு போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நம்முடைய நாட்டிற்கு, நம்முடைய மக்களின் உயிரையும், பொருள்களையும் பாதுகாக்க போலீஸ் படை அவசியம் தேவை. அவர்கள் நம்முடைய நாட்டிலே நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள் என்று பாராட்டப்படுகிறார்கள். இவ்வளவு நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிற அவர்களுக்குச் சில வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டியது அவசியமாகும்.

நம்முடைய அமைச்சர் அவர்கள், போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதிக்காக ரூபாய் மூன்று கோடிக்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று முதலில் சொன்னார்கள். ஆயினும் சில இடங்களில் இன்னும் போலீஸ் லைன் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் தலைநகரில் போலீஸ் லைன் கட்டப்பட்டாலும்கூட, இன்ஸ்பெக்டர்கள், டெபுடி சூப்பரின்டெண்டுகள் ஆகியோருக்கு இன்று வீட்டு வசதிகள் இல்லை. அவர்களுக்கும் வீட்டு வசதிகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் போலீஸ் படையினருடைய உடையிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இப்போது இருக்கும் உடைகளைத் தவிர இன்னும் இரண்டு செட் அதிகமாகக் கொடுப்பதோடு சலவை செய்வதற்கான அலவன்சையும் அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊதியத்தையும் படியையும் ஏற்கனவே ஓரளவு அதிகப்படுத்தி இருந்தபோதிலும், இப்போது இருக்கும் விலைவாசியை உத்தேசித்து படியை மேலும் கொஞ்சம் கூடுதலாகக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். போலீஸ்காரர்களுடைய குழந்தைகளுக்காகக் கல்விச் சலுகைகள் கொடுத்து வருவதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அந்தக் குழந்தைகளுக்காக பூங்காக்களையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ்காரர்களுக்காக ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் ஸ்டேஷன்களிலே சில இடங்களில் டெலிபோன் வசதி இல்லை. கூடியவரை எல்லா ஸ்டேஷன்களிலும் டெலிபோன் வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ்காரர்கள் மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருப்பதோடு மற்றப் பல வேலைகளையும் செய்யவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு போலீஸ்காரருக்கும் சைக்கிள் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று சப் இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைக்கிளும், சர்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு ஜீப்பும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பல கிராமங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் தலைநகரிலுள்ள ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு 'வான்' வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் ஸ்டேஷன்களில் இருக்கக் கூடிய ஸ்டேஷன் ரைட்டர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் ஒரு டைப்ரைட்டர் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீசில் வேலை செய்கிறவர்களுக்காக ஒரு 'ரிக்ரியேஷன் கிளப்,' அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் போலீஸ்காரர்களுக்கான விளையாட்டுப் பந்தயங்களை அதிகமாக நடத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ்காரர்கள் ரோடு போடுதல், வெள்ளம் வந்த சமயத்தில் மக்களுக்காகப் பணி புரிதல், புயல் வந்த காலத்தில் கஷ்டப்படுகிற மக்களுக்கு உதவி அளித்தல், தீ விபத்து ஏற்படுகின்றபோது மக்களுக்கு உதவி புரிதல் போன்ற பொதுப் பணிகளையும் செய்து வருகிறார்கள். அதற்காக



12th March 1963] [திரு. இ. நாராயணசாமி பிள்ளை]

அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த நெருக்கடி காலத்தில் அதிக வேலை அவர்களுக்கு இருக்கும் என்ற காரணத்தால் அவர்களுக்கு அனுசரணையாக அகப்படையை நம்முடைய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. அதோடுகூட .·.பயர் சர்விஸ்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதோடுகூட ரிசர்வ் படையை அமைப்பதற்காகவும் அதிக மானியத்தைக் கோரியிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் வரவேற்கிறேன்.

இன்று பல கிராமங்களில் போலீஸ் அவுட்போஸ்ட் இல்லை. இப்போது கிராமங்களில் ஜனத்தொகை பெருகியிருப்பதன் காரணமாக, கலவரங்கள், கொலை, கொள்ளை, திருட்டு முதலியன நிகழாமல் பாதுகாக்க எல்லாக் கிராமங்களிலும் ஒரு அவுட்போஸ்ட் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விருத்தாசலத்தில் ஒன்றரை மைலுக்கு மேற்கே கொளஞ்சியப்பர் கோயில் இருக்கிறது. ஒவ்வொரு வாரமும் மக்கள் ஆயிரக்கணக்காக அந்தக் கோயிலுக்குப் போகிறார்கள். அங்கே அவசியமாக ஒரு போலீஸ் அவுட்போஸ்ட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய விருத்தாசலம் தாலுக்காவில் தீ விபத்து அதிகமாக ஏற்படுவதால் தீ அணைக்கும் படை ஒன்றை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** சபாநாயகர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதலிலே பேசிய அங்கத்தினர் அவர்கள் போலீஸ் நிர்வாகத்தை மிகவும் சிலாகித்துப் பேசினார்கள். அந்த அளவுக்கு சிலாக்கியமாகப் போலீஸ் துறை இருக்கவில்லை என்பது என்னுடைய கருத்து. ஏதோ கொஞ்சம் சிலாக்கியமாக இருக்கலாம். போலீஸ் நிர்வாகம் தமிழகம் சம்பந்தப்பட்ட மட்டில் தரத்தில் குறைந்துதான் இருக்கிறதென்பதை நான் கூறவிரும்புகிறேன்.

பழைய காலத்தில் பஞ்சமா பாதகம் என்று, கொலை, களவு, கள் உண்ணுதல், விபசாரம் செய்தல், பொய் சொல்லுதல் ஆகியவற்றைச் சொல்லுவார்கள். இப்போது நம்முடைய நாட்டிலே புதிய பஞ்சமா பாதகம் ஏற்பட்டிருக்கிறது. அதையும் உங்கள் முன்னால் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது, கள்ள மார்க்கட், கள்ள நோட்டு, கள்ள உணவு (அதாவது கலப்படம்), கள்ளப் பணம் (அதாவது லஞ்சம்), கள்ளச் சாராயம் ஆகியவைதான் புதிய பஞ்சமாபாதகமாக இன்றைய தினம் வளர்ந்து வருகிறது. பழைய பஞ்சமாபாதகங்களை விட இந்தப் புதிய பஞ்சமாபாதகங்களைக் கண்காணித்து அடக்கவேண்டும்.

பெரிய உத்தியோகஸ்தர்கள்—அதிகாரிகளைப் பொறுத்தவரை ஓரளவுக்கு நியாயமாக நடக்கவேண்டுமென்ற அபிப்பிராயம் இருக்கலாம். சிறிய உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தமட்டில் பரிபூரணமாக நல்லபடி செயல்படுகிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை. நான் எதிர்க்கட்சியில் இருப்பதால் அவ்வாறு சொல்கிறேன் என்று நினைக்கக்கூடாது. உண்மையாகவே சொல்கிறேன். இன்றைய தினம் கள்ளச்சாராயம் காய்ச்சுவது குடிசைத் தொழிலாக மாறிக் கொண்டிருக்கிறது. போலீஸ் இலாகாவில் இருக்கக் கூடிய சிறிய உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்குப் பின்னால் இருந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவாக பரிபூரணமாக உதவிசெய்து வருகிறார்கள். அதே போன்று லஞ்சம் வாங்குவதும் சிறிய உத்தியோகஸ்தர்களிடையே அதிகமாகக் காணப்படுகிறது. முன்னால் எல்லாம் போலீஸ் இலாகாவில் லஞ்சம் வாங்குவது எப்படி இருந்தது என்றால், பாதிக்கப்பட்டவர்கள் பார்த்து லஞ்சம் கொடுத்து, அதை வாங்கிக்கொண்டு அவர்களுக்கு அனுசரணையாக இருந்து வந்தார்கள். இப்போதோ இரண்டு பக்கத்திலும் அவர்கள் லஞ்சம் வாங்கிக் கொள்ளுகிறார்கள்.

இன்றைய தினம் சம்பந்தப்பட்டவர்கள் இரு தரப்பிலும் லஞ்சம் வாங்குகிறார்கள். அடித்தவனிடமும் பணம் வாங்கிக்கொள்கிறார்கள் ; அடிபட்டவனிடமும் பணம் வாங்கிக்கொள்கிறார்கள், கடைசியில்

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [12th March 1963

அதிகமான குறைகளையும் நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும். இதை கனம் அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவசியம் புரிந்துகொள்ளவேண்டும். நெருக்கடி நேரத்தில் இப்படி செலவு அதிகப்படுவதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. நானும் ஆட்சேபிக்கவில்லை. என்றாலும் இன்றையதினம் போலீஸ்காரர்களுக்கு இருக்கும் குறைகள் நீக்கப்படவேண்டும். பழைய எட்டடி, பன்னிரண்டடி என்ற வசதியற்ற வீட்டு ப்ளான் மாற்றப்பட்டு, புதிதாகக் கட்டுகிற வீடுகளை யாவது புது மாடலில் கட்டித்தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் மான்யம் பற்றிய விவாதத்தில், ஏழு எட்டு ஆண்டுகள் விவாதத்தை நான் படித்துப் பார்த்தேன். ஆரம்பத்தில் போலீஸ்காரர்களைப் பற்றி குறை கூறியிருக்கிறார்கள். பின்னர் அவர்கள் சேவையை பாராட்டியிருக்கிறார்கள். நான் பாராட்டவோ, அல்லது குறை சொல்லவோ தயாராயில்லை. ஆனால் போலீஸ்காரர்களுக்கு உள்ள குறைகளை நம் ஜனநாயக சர்க்கார் களைய வேண்டும். போலீஸ்காரர்கள் நல்ல நிலைக்குக் கொண்டு வரப்படவேண்டுமென்பதுதான் என் அபிப்பிராயம். உலக நாடுகளிலுள்ள போலீஸ்களில் ஸ்காட்லாண்ட் யார்ட் போலீஸைப் பற்றித்தான் பெருமையாகப் பேசுகிறார்கள். ஆனால் இந்திய துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையில் நம் சென்னை மாநில போலீஸ்காரர்கள் தான் சிரத்தையோடும், கண்யத்தோடும், கௌரவத்தோடும் பணியாற்றுகிறார்கள் என்று காலம் சென்ற நம் முன்னாள் ஜனாதிபதி அவர்களும், அண்மையில் இங்கு வந்து சென்ற இங்கிலாந்து நாட்டு மஹாராணி எலிஸபத் அவர்களும், குறிப்பாக நம் பிரதம மந்திரி நேரு அவர்களும் சென்னை மாநில போலீஸின் திறமையைப் பற்றி பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் நம் அவையில் உள்ள அமைச்சர்கள் என்ன கருதுகிறார்களோ தெரியவில்லை. அவர்கள் எப்போது பாராட்டுவார்கள் என்று தெரியவில்லை. நூற்றாண்டு மலரில் முதல் அமைச்சர் அவர்கள் போலீஸை அருமையாகப் பாராட்டியிருக்கிறார்கள். நான் அதை மறந்து விட்டேன். பாராட்டுவது மட்டும் போதாது, அவர்களுக்குத் தக்க பலனும் கிடைக்க வேண்டும். அதுதான் என் கோரிக்கை. அமைச்சர்கள் வெளியே சுற்றுப்பிரயாணம் செல்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் போனால் அவர்கள் கூட பந்தோபஸ்துக்குச் செல்லும் போலீஸ்காரர்களை சாப்பிட்டாய் விட்டதா என்று விசாரிப்பார்கள் என்று நான் கேள்விப்பட்டதுண்டு. நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு பந்தோபஸ்து போனது கிடையாது. என் துர்பாக்கியமோ என்னவோ தெரியவில்லை. இந்த நிலையில் எல்லா அமைச்சர்களும் பார்க்கவேண்டும் என்பதே என் வேண்டுகோள். அடுத்தபடியாக இந்த நெருக்கடி நிலையில் போலீஸ் படையை அபிவிருத்தி செய்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1948-ல் ஹைதராபாத்தில் ஏற்பட்ட கலவரத்தை மிலிட்டரி கொண்டு அடக்காமல் போலீஸ் படையை வைத்து அடக்கிவிட்டார்கள். அது பாராட்டவேண்டியதொன்று. அதிலிருந்து நம்முடைய மாநில போலீஸின் கடமை, கண்ணியம், திறமை உயர்ந்து விளங்குகிறது என்று சொல்லமுடியும். அதே நேரத்தில் அவர்களது வேதனை தீரவேண்டும். சென்னை மாநிலத்தில் போலீஸ் பல பிரிவுகள் இருக்கின்றன. அதில் முக்கியமானது ஸி. ஐ. டி. கிரைம் ப்ராஞ்ச். நான் அனுபவித்தது ஒருபுறமிருக்க எனக்கும் தெரியாமலும் சில பிரிவுகள் இருக்கின்றன. இந்த மன்றத்திற்கு நான் வந்தபோது வெளியில் வெள்ளை உடை தரித்து நிற்பவர்களை போலீஸ்காரர்கள் என்று நான் கருதவில்லை. சிறிது நாட்கள் கழிந்த பிறகுதான் அவர்கள் போலீஸ்காரர்கள் என்று தெரிந்தது. எங்கெல்லாம் பொதுஜன நடமாட்டம் அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் போலீஸ்காரர்கள் இல்லாமல் இல்லை. போலீஸ்காரர்கள் பொது மக்களின் பாதுகாப்பிற்காக இருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டவன் நான். எல்லோரும் இதை ஒத்துக்கொள்வார்கள் என நினைக்கிறேன். பந்தோபஸ்துக்கு வரும் போலீஸ்காரர்கள் ஒரு சில நேரங்களில் பாதிக்கப்படுகிறார்கள். அது மேல் அதிகாரிகளுக்கு தெரிகிறதோ தெரியவில்லையோ. அதை அவசியம் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த மன்றத்திற்கு



12th March 1963] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

பந்தோபஸ்திற்கு வரும் போலீஸ்காரர்களுக்கு தினம் கொடுக்கும் அலவன்ஸ் 10½ அணா. அவர்களின் ஒரு ஜதை உடுப்புக்கள் சலவைக்குப் போய்விட்டு வர எட்டணா கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் வெள்ளை உடை தரிப்பதால் இரண்டு நாட்களுக்கு மேல் அவர்களால் அதைப் போடமுடிவதில்லை. இந்த நிலையில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் அலவன்ஸ் காணாது. இந்த நெருக்கடி நிலையை உத்தேசித்து அவர்களுக்கு இந்த அலவன்ஸை உயர்த்தினால் நல்லது என்று நான் கருதுகிறேன். க்ரைம் ப்ராஞ்சைப் பொறுத்தவரை திறமை மிக்கவர்கள் அங்கு பணியாற்றுகிறார்கள். அண்மையில் தெற்கே நடந்த ஒரு கொலைக் கேஸில் தலையை வைத்து கேசை அவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இது போற்றவேண்டிய ஒன்று. இந்தத் திறமை ஸ்காட்லாண்ட் யார்ட் போலீஸுக்குத் தான் உண்டு என்பார்கள். நம் மாநில ஸ்பெஷல் ப்ராஞ்ச் போலீஸ்காரர்களும் நல்ல முறையில் திறமையாக புலன் விசாரித்து வருகிறார்கள். புலன் விசாரணை என்று சொல்லும்போது நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். இந்த விசாரணையை எடுத்துக் கொள்ளும் அதிகாரி கோபம் இல்லாமல் பொறுமை உள்ளவராக இருக்கவேண்டும். பொறுமை இல்லாவிடில் உண்மை கிடைக்காது. ஆகவே அவர்கள் பொறுமையைக் கையாளவேண்டும். இது என் அபிப்பிராயமும் வேண்டுகோளும் கூட. சில சமயம் புலன் விசாரணை செய்யும்போது பொது மக்கள் குறை கூறுவதுண்டு. காரணம் அவர்கள் பொறுமை இழந்து விடுகிறார்கள் என்பதுதான் என் அபிப்பிராயம். போலீஸ்காரர்களுக்கு உள்ள சம்பளம் குறைவாயிருக்கிறது. அமைச்சர் அவர்களே நாலைந்து முறை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள், போலீஸ்காரர்களின் சம்பளம் குறைவாக இருக்கிறது, கவனிப்போம், கவனிப்போம் என்று. அவர்களில் அதிகம் பேர்கள் சம்பளக் கமிஷனில் அதிக சம்பளத்தை எதிர்பார்த்தார்கள். ஓரளவு உயர்ந்தது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்த அளவு உயரவில்லை. குறைந்தது அடிப்படைச் சம்பளம் 100 ரூபாயாவது இருக்க வேண்டும். இல்லாவிடில் அவர்கள் வாழ்க்கை நடத்துவது கஷ்டம். படி தினம் ஒன்றுக்கு 1½ ரூபாய் கொடுக்கப்படுகிறது. நெருக்கடியை உத்தேசித்தோ என்னவோ தெரியவில்லை, மாதத்தில் 20 நாட்களுக்குத்தான் படி க்ளெயிம் செய்யலாம், அதற்கு மேல் க்ளெயிம் செய்யக்கூடாது என்று இருக்கிறதாம். அப்படியிருந்தால் அவர்கள் செய்யவேண்டிய வேலைகள் தடைப்படும். பின்னர் யூனிபாரம் அலவன்ஸ் குறைவாக இருக்கிறது, அதை இன்னும் உயர்த்த வேண்டும். போலீஸ்காரர்கள் ஒய்வு பெற்ற பிற்பாடு ப்ராவிடன்ட் பண்ட் உடனடியாக அவர்களுக்குக் கிடைப்பதில்லை. பென்ஷன்கூட சில சமயங்களில் தடைப்பட்டு விடுகிறது. ஆகவே அவைகளை உடனடியாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, அமைச்சர் அவர்கள் பெனவலன்ட் பண்டைப்பற்றி சொன்னார்கள். அதன் அமைப்பு நன்றாக இருக்கிறதே தவிர கஷ்டப்படுகிறவர்களுக்கு, வேதனைப்படுகிறவர்களுக்குக் கிடைப்பதில்லை. அப்படி யாருக்குப் போய் சேரவேண்டுமோ அவர்களுக்குப் போய் சேருவதில்லை. அது என்னவாகிறது ? ரொம்ப நாட்கள் கட்டி ஏமாந்தவர்களில் நானும் ஒருவன்.

அடுத்தபடியாக எம். எப். எஸ். பற்றி ஒரு வார்த்தை. அவர்கள் போலீஸோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள். போலீஸ்காரர்களுக்குள்ள சலுகைகள் இவர்களுக்கும் இருக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது) பின்னர் போலீசாருக்கு சிட்டி அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. இது எந்தக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதோ அப்பொழுது முதல் இன்று வரை ஐந்து ரூபாயாகத்தான் இருந்து வருகிறது. இன்றைய நிலையை உத்தேசித்து ஸிட்டி அலவன்ஸை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஸிட்டியிலுள்ள எம். எப். எஸ்-ல் பணியாற்றுகிறவர்களுக்கும் ஐந்து ரூபாய் சிட்டி அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. அதையும் சீர்தூக்கிப் பார்த்து அவர்களுக்கும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் எம். எப். எஸ். ஒர்க்ஷாப்பில் வேலை செய்து வருகிறவர்கள் டெக்னிக்கல் அலவன்ஸ் இல்லாமலேயே வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கும் அலவன்ஸ் கொடுக்கவேண்டுகிறேன்.

கேஸையும் போட்டு விடுகிறார்கள். அந்த முறையில் வழக்குப்போடுவது ரொம்பவும் ஜாஸ்தியாக இருக்கிறது. நகரங்கள் சம்பந்தப்பட்ட மட்டிலும், கிராமங்கள் சம்பந்தப்பட்ட மட்டிலும் புதிய புதிய முறைகளைக் கையாளுகிறார்கள். எனக்குத் தெரிந்த ஒரு ஊரில், நமது முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்த ஒரு ஊரில் ஏற்கெனவே ஏற்பட்ட அரசியல் பூசல் காரணமாக ஏதோ சச்சரவு ஏற்பட்டது. சுதந்திரா கட்சிக்கு ஓட்டுப் போட்டார்கள் என்று. நான் இங்கே சொல்லக்கூடிய எதுவும் நான் நேரில் பார்த்ததுதான். நேரில் பார்க்காத எந்தத் தகவலையும் நான் இங்கே சொல்லமாட்டேன் என்று இங்கே சொல்லிக்கொள்கிறேன். இலாகாவிற்குத் தெரிவித்தேன். இலாகாவினர் என்ன செய்தார்கள் ? யார் மீது புகார் கொடுத்தார்களோ, அவர்களில் 10–15 பேர்களைப் பிடித்து அவர்கள் பேரில் ஜாமீன் கேஸ் போட்டார்கள். யார் புகார் கொடுத்தார்களோ அவர்களில் 5–6 பேர்களைப் பிடித்து அவர்கள் பேரிலும் கேஸ் போட்டார்கள். அடித்தவன் மீதும் ஜாமீன் கேஸ். அடிப்பட்டவன் மீதும் ஜாமீன் கேஸ். இந்த மாதிரி ஜாமீன் கேஸ் இந்த மூன்று ஜில்லாக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நிறைய வளர்ந்திருக்கிறது. ஜாமீன் வழக்குப் போட்டு ஜாமீன் வாங்குகிறார்கள். எனக்கு நன்றாகத் தெரியும், சில இடங்களில ஜாமீன் கொடுக்க ஜாமீன்தார்களை கூட்டிக்கொண்டு போனால் அவர்களையும் அடிக்கிறார்கள். முன்னால் போலீஸ் சம்பந்தப்பட்ட மட்டில் குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடிக்க பலாத்காரம் உபயோகப்படுத்துவது வழக்கமாக இருந்தது. இப்போது எங்கு பார்த்தாலும் கீழ் தரத்தில் இருக்கக்கூடிய போலீஸ்காரர்கள் அடிப்பது என்பது சர்வ சாதாரணமாக இருக்கிறது. மதுரை சம்பந்தப்பட்ட 3-ம் நெ. போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒருவர் ஏதோ குற்றத்திற்காகக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே கொண்டுவரப்பட்ட அவரை அடித்துக் கொன்று விட்டார்கள். அடித்துக் கொன்றது கோடம்பாக்கம் வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டாவது எதிரி பாண்டியன் தான். மதுரையிலே அவரை மெட்ராஸ் போலீஸ் என்றுதான் சொல்லுகிறார்கள் எல்லோரும். அந்த நபர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுவரப்பட்டவரை நெஞ்சிலே அடித்துக்கொன்றிருக்கிறார். அங்கேயே சிறு குழந்தை மூன்றாவது படித்த குழந்தை இருக்கிறது, 80 வயது ஆன தாய் இருக்கிறாள், 6 வயது பையன் இருக்கிறான். இந்த மூன்று பேர்கள் முன்னிலையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்தத் தகவல் தெரிந்தவுடனே நான் மறு நாள் தந்தி கொடுத்தேன். நான் தந்தி கொடுத்தவுடனே, பிரேதத்தை போலீஸாரே, 5–6 ஸப்இன்ஸ்பெக்டர் உட்பட, போலீஸ் வானிலேயே எடுத்துச் சென்று மயானக்கரையில் வைத்து, பெட்ரோல் வைத்து தீ வைத்திருக்கிறார்கள். கொஞ்சம் சிந்திக்கவேண்டும். பொதுக் காரணத்தினால் மரணமடைந்து விட்டான் என்றால், போலீஸ் இலாகா சம்பந்தப்பட்ட பெரியவர்கள் பிரேதத்தைக் கொளுத்துவானேன் ? அதையொட்டித்தான் நான் இங்கே அவசரப் பிரேரணை கொண்டு வந்தேன். அது சம்பந்தமாக ஆர்.டீ.ஓ. என்க்வொயரி செய்வதாகச் சொன்னார்கள். அந்த என்க்வொயரியின் முடிவு என்ன என்று இன்னும் தெரியவில்லை. இந்த விவாதத்திற்கு பதிலளிக்கும்போது அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிச் சொன்னால் கேட்டுக்கொள்கிறேன்.

லஞ்ச ஊழலுக்கு அடுத்தபடி கலப்படம். இன்று எதையெடுத்தாலும் கலப்படம். எங்களுக்குத் தெரியும். ஐந்து நாள் தொடர்ந்து ஹோட்டலில் சாப்பிட்டு விட்டால் 6–வது நாள் சாப்பாடு என்பதே இல்லாத நிலை ஏற்பட்டு விடுகிறது. எதையெதையோ போடுகிறான் புண்ணியவான். இத்தியாதிக் குற்றங்களை கண்டுபிடிக்க—முதல் அமைச்சர் அவர்கள் வந்தால் வரட்டும் ; அவருக்கு வரமுடியவில்லை என்றால் நிதி அமைச்சர் அவர்கள் வரட்டும்—10 நாட்களுக்கு மாறு வேடம் போட்டுக்கொண்டு பல இடங்களுக்குப் போவோம். இத்தகைய குற்றங்களை கையும் களவுமாகப் பிடித்துத் தருகிறேன் என்று நிச்சயமாக நான் சொல்லிக்கொள்கிறேன்.

போலீஸ் இலாகா சம்பந்தப்பட்ட மட்டில் அரசியல் காரணத்திற்காக அதை உபயோகப்படுத்திக்கொள்வது ஜாஸ்தியாகியிருக்கிறது. முன்பெல்லாம் கொஞ்சமாக இருந்தது, இப்போது அதிகரித்திருக்கிறது. எங்கள்





பக்கத்தில் சென்ற ஆண்டில் மட்டும் 500–600 ஜாமீன் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. யாராவது எவரையாவது தவறி முறைத்துப் பார்த்தால் உடனே ஜாமீன் கேஸ். முறைத்துப் பார்த்தால் தவறு என்ன ? அரிவாளைக் காட்டி விட்டான் என்று ஒருவன் சொல்லி விட்டால், உடனே அவன் மீது ஜாமீன் வழக்கு. அரிவாளால் வெட்டி விடுவேன் என்று ஒருவன் சொன்னான் என்று பொய்யாக உடனே அவன் மீது ஜாமீன் வழக்கு. வழக்கு என்றால் லேசான காரியமா ? . . .

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** வெட்ட வந்தால் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டியது—வெட்டிய பிறகு நடவடிக்கை எடுக்க வேண்டியது என்பது கனம் அங்கத்தினர் அபிப்பிராயமா ?

**திரு. டி. எல். சசிவர்ணத்தேவர் :** வெட்ட வந்தான் என்று சொல்லி வழக்கு நடக்கிறது. அரிவாளும் இல்லை—வெட்ட வரவும் இல்லை.

**கனம் சபாநாயகர் :** அது வேறு விஷயம். பொய் என்றால் அது வேறு சமாசாரம். If he comes to cut with an aruval, then the question of security comes in.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** இந்த மாதிரி வெட்ட வந்தார் என்ற பொய்ப் புகார் அரசியல் காரணத்திற்காக போடப்பட்டு உடனடியாக வழக்குத் தொடரப்படுகிறது. கேஸ் போட்டு விடுகிறார்கள். கேஸ் என்று போட்டுவிட்டால், அதற்கு வக்கீல் வைத்து வழக்காடி வருவது என்றால் எவ்வளவு செலவாகும் என்பது தெரியும். இத்தியாதி குற்றங்கள் இருந்து கொண்டிருக்கிறது. அதைக் குறைக்க பரிபூர்ண முயற்சி எடுக்க வேண்டும். சாதாரண சிறிய உத்தியோகஸ்தர் ஏதாவது தவறுகள் செய்தால் மேலே இருக்கக் கூடிய பெரிய உத்தியோகஸ்தர்கள் அவனை ஆதரிக்கிறார்கள். அவன் செய்த குற்றத்தை மறைக்கப் பார்க்கிறார்கள். அதனால் போலீஸ் இலாகாவின் பெயர் தான் கெட்டுப்போகும். ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் யாரையோ அடித்துக் கொன்றுவிட்டார் என்றால், மேலே இருக்கக்கூடிய ஸப்-இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் அதை மறைக்கப் பார்க்கக்கூடாது. தவறு இருந்தால் அதற்குத் தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த முறையில் நடவடிக்கை எடுத்தால் நிர்வாகத்தின் தரம் உயரும் என்று சொல்லவேண்டுமே தவிர, தரம் குறைவு படாது. கீழே இருக்கக் கூடியவன் தவறு செய்தால் அதை மறைக்கப் பார்க்கும் பழக்கம் வெள்ளைக்காரன் காலத்தில் இருந்தது. அன்னியனான காரணத்தினால் அதைப் மறைக்கப் பார்ப்பான். போலீஸ் பேரில் இருக்கக்கூடிய பயம் போய் விடப் போகிறதே என்று அவன் ஆதரித்துக் கொண்டிருந்தான். நாம் அந்த மாதிரி செய்யவேண்டியதில்லை. இப்போது நடப்பது சுதந்திர சர்க்கார், மக்கள் சர்க்கார் என்று சொல்லும்போது இத்தகைய குறைகளைப் பரிசீலனை செய்து அவைகளை நீக்கி நல்ல முறையில் நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டும்.

இலாகா சம்பந்தப்பட்ட மட்டில் நிறையக் குறைகள் இருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய வசதிகள் போதாது. எங்கு பார்த்தாலும் புதிய புதிய ஸ்டேஷன்கள் ஜாஸ்தியாகிக் கொண்டிருக்கிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருக்கிறோம். திட்டம்போட்டு வளர்ச்சி அடைகிறோம் என்று சொல்லுகிறோம். பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறோம். பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால் குற்றங்கள் குறையும். ஏன் என்று கேட்டால் உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். மதுரையை அடுத்து அழகர்கோவில் பக்கத்தில் கள்ளர் கூட்டம் இருந்தது. அவர்களை அடக்க திருமலை நாயக்கர் காலத்திலிருந்து முயன்று பார்த்தார்கள். மதுரை வீரன் கதைகூட எல்லோரும் கேட்டிருப்பார்கள். அவர்களை அடக்கும் கூட்டத்தின் தலைவராக இருந்தார். இன்றைய தினம் பொருளாதார வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். பெரியாறு தண்ணீர் வருகிறது. அப்பகுதி நஞ்சை நிலமாக இருக்கிறது. இப்போது ஒரு காசு கூட களவு செய்து குற்றம் செய்வதில்லை. பொருளாதார

[திரு. எ. சுவாமிதாஸ்] [12th March 1963

அபிப்பிராயம் ஏற்படும், மதிப்பு ஏற்படும், உண்மையில் நாட்டின் பாது காப்பு நல்ல முறையில் நடைபெறும், போலீஸ்காரர்களோடு பொது மக்களும் ஒத்துழைப்பார்கள் என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

போலீஸ் சேவை முக்கியமான சேவைதான். ஆகவே, போலீஸ்காரர்கள் ஒரு சிலர் இப்படி நடந்துகொள்கிற காரணத்தினாலே, அவர்களைப் பற்றிய மதிப்பு, தரம் குறைந்துவிடுகிறது. இதையெல்லாம் நன்கு கவனிக்க வேண்டும். நான் முன்பு குறிப்பிட்டதுபோல கடைத்தர ஊழியர்களுக்கு போலீஸ் கான்ஸ்டேபிள்கள் இவர்களுக்குக் கூடுதல் வசதி செய்துகொடுக்க வேண்டும்.

கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டதுபோல, போலீஸ் ஆபீஸில் டைப்ரைடர் இல்லை. ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஆபீஸைச் சென்று பார்த்த பொழுது, அவர் வீட்டிலே இருந்த தன்னுடைய அப்பாவின் டைப்ரைடரை ஆபீஸில் வைத்துக்கொண்டு வேலை செய்வதைப் பார்த்தேன். "உங்களுக்கு டைப்ரைடர் வசதி இல்லையா?" என்று நான் அவரைக் கேட்டேன். "எங்களுக்கு அந்த வசதிகளெல்லாம் கிடையாது. நானேதான் அந்த வசதியை நேரடியாகச் செய்துகொண்டு 'கரஸ்பாண்டென்ஸை' டைப் செய்து அனுப்பவேண்டும். இல்லாவிட்டால் மேலதிகாரிகள் கோபித்துக் கொள்வார்கள். ஆகவே என்னுடைய வீட்டிலிருந்து என்னுடைய அப்பா வினுடைய டைப்ரைடரை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறேன். டைப் அடிக்கத் தெரிந்த கான்ஸ்டேபிளும் கிடையாது. ஆகவே நான்தான் எல்லா வேலைகளையும் செய்துகொண்டிருக்கிறேன்" என்று சொன்னார். அவர்கள் எந்த நேரம் பார்த்தாலும் கூட, ஒரு நாளைக்கு ஏறத்தாழ 17, 18 மணி நேரமும் ஆபீஸில் உட்கார்ந்து வேலை செய்கின்ற அளவுக்கு அதிகமாக கரஸ்பாண்டென்ஸ் நடத்தவேண்டியிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு சப் இன்ஸ்பெக்டர் ஆபீஸுக்கும் தனியாக ஒரு எழுத்தரைக் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை இதோடு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர்:** அன்பு மிக்க உதவி சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் மான்யத்தை ஆதரித்து இரண்டொரு வார்த் தைகள் கூற நான் முன் வந்திருக்கிறேன். நெருக்கடியான இந்த சமயத் திலே நமது ராஜ்யத்தில் சமாதானத்தையும், சட்டத்தையும் நன்கு பாது காக்கக்கூடிய வகையில் பொறுப்பு வாய்ந்த கடமை உணர்ச்சியோடு நமது சென்னை போலீஸார் உழைத்து வருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும். பிரிட்டிஷ்காரர் ஆண்ட காலத்திலே இருந்த போலீஸ் நிலைமையைப்போல் அல்லாமல், சுதந்திரம் பெற்ற நாட்டில் நல்ல பாதுகாப்பு வேலையை செய்துகொடுக்கக்கூடிய அளவில், பொறுப்பு உணர்ச்சியோடு மக்களோடு நன்கு பழகி சமாதானத்தை நல்ல முறையிலே நிலைநிறுத்துவதற்கு அவர்களுடைய கடமையை ஆற்றிவருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும். ஒரு சில வேளைகளில் அவர்கள் தங்களுடைய கடமைகளில் தவற லாம். பொறுப்புள்ள கடமைகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக் கின்றன. முக்கியமாக, மதுவிலக்கு விஷயமாக அவர்கள் பொறுப்புணர்ச்சி யுடன் பணியாற்றிவரக்கூடிய காலத்தில் சில தவறுதல்கள் ஏற்படுவது கண்டு நான் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. எனக்கு முன்பு பேசிய நண்பர் கூறியதுபோல, வேலியே பயிரை அழிக்கும் வகையில் நடந்துகொள்ளக்கூடாது. முக்கியமாக, மக்களுக்குச் செய்யவேண்டிய ஒரு சிறந்த பணி மதுவிலக்குப் பணி. அதில் தவறுதல்கள் இல்லாதபடி மக்களுக்கு வழிகாட்டியாக இருந்து, மது விலக்கு குற்றங்களை நன்கு கண்டுபிடித்து, அதில் வெற்றி பெறுவதற்கு, சிறந்த கடமை உணர்ச்சி யுடன் இன்னும் அதிகமான போலீஸ்காரர்கள், முக்கியமாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், இதில் தக்க கவனம் செலுத்தி நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டும். ஏனென்று கேட்டால், என்னுடைய இடத்திலே



12th March 1963] [திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர்]

இம்மாதிரி மதுவிலக்கு கேஸ்களில் போலீஸார் சம்பந்தப்படக்கூடிய நிலையைப் பார்த்துவருகிறேன். இப்பொழுது அந்த நிலைமை குறைந்து கொண்டு வருகிறது. மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெறுவதற்கு பொறுப்பு வாய்ந்த உணர்ச்சியுடன் போலீஸ்காரர்கள் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். சென்னை போலீஸ் மிகவும் பாராட்டக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். 'ஸி.ஐ.டி.' போலீஸார் 'கவுண்டர்பீட் நோட்' கேஸ்கள், பல மகாணங்களும் சம்பந்தப்பட்ட 'கவுண்டர்பீட் காயின்' கேஸ்கள் போன்ற கேஸ்களை கண்டு பிடித்து, நல்ல முறையில் செயல்பட்டு அவர்களுடைய கடமையைச் செய்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் சட்டத்தையும் சமாதானத்தையும் 10 a. m
நிலைநிறுத்தும் பணிகளில் ஈடுபடும்பொழுது மிகுந்த கஷ்டங்களுக்கு உள்ளா கிறார்கள். இதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மக்களுக்கு ஆபத்துக்காலம் ஏற்படும்பொழுது அவர்கள் பலவித சமூகப் பணிகளைச் செய்கிறார்கள். அவற்றையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். வெள்ளம் வரக்கூடிய காலத்திலும், தீ விபத்துக்கள் ஏற்படும் காலத்திலும் அவர்கள் மக்களுக்கு நல்ல உதவி செய்கிறார்கள். நமது நாடு சுதந்திரம் அடைந்த பிறகு அவர்கள் பொறுப்புணர்ச்சியோடுகூட தங்களுடைய கடமைகளை ஆற்றி வருகிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. அந்தச் சிறந்த பெயரை போலீஸ் இலாகாவினர் பெற்றுள்ளார்கள். மக்களுக்குத் தொண்டு செய்யும் வகையில் அவர்கள் மரியாதை வாரம் கொண்டாடுகிறார்கள். அதன் மூலம் அவர்களிடம் காணப்படுகிற சில குறைகளை நீக்கி, பொது மக்களுடைய போற்றுதலுக்குத் தகுந்தவாறு, அவர்களுடைய பொறுப்புகளை ஆற்றி வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ்காரர்கள் வழக்குகளைத் தயார் செய்து நடத்துகின்ற காலத்திலே, அவர்களிடையே ஒரு தவறான எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. மகாத்மா காந்தி அவர்கள் பொய்க் கேஸ்களுக்கு வக்காலத்து வாங்க மாட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். வழக்குகளைப் போடும்போது நியாயமான ருசுக்களை வைத்துக்கொண்டு, உண்மையான ருசுக்களை வைத்துக்கொண்டு அவர்கள் கேஸ்களை நடத்தினால் அது போற்றத்தக்கதாய் இருக்கும். அப்படி நடத்தும் கேஸ்கள் வெற்றி பெறாது என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கவேண்டாம். உண்மையான ருசுக்களைக் கொடுத்தால், நிச்சயம் அந்த வழக்குகள் வெற்றிபெறத்தான் செய்யும். ஆகவே, பழைய வழக்கங்களைக் கையாளாமல், உண்மையை நிலைநிறுத்தும் வகையில் வழக்குகளைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பொறுப்புணர்ச்சியோடு மக்களுக்கும், சமூகத்திற்கும் சேவை செய்து வருகிறார்கள். அவர்களுடைய தியாகத்தை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். மதுவிலக்கு வழக்குகள் ஆகட்டும், வேறு எந்த வழக்குகள் ஆகட்டும், சாட்சியம் கிடைக்காமல் அவர்கள் சில சமயங்களில் திண்டாடு கிறார்கள். இதற்குக் காரணம் நம்முடைய மக்களிடத்திலே பொறுப்புணர்ச்சி இன்னும் ஏற்படவில்லை. நியாயமான விவகாரங்களில் கூட, நம் கண்ணால் பார்க்கிற கேஸ்களில் கூட போலீஸ்காரர்கள் நியாயத்தை நிலைநிறுத்து வதற்காக பணியாற்றும் காலத்தில், அவர்களுக்கு உதவியாக சாட்சியம் அளிப்பதற்கு மக்களில் அநேகம் பேர் பயப்படுகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், உண்மையை உண்மை என்று நிலைநாட்டுவதற்கு நமது மக்கள் தைரியமாக முன் வருவதில்லை. போலீஸ்காரர்களுடன் நாம் ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த எண்ணம் நமக்கு இன்னும் ஏற்படாமல் இருக்கிறது. அவர்கள் மேலும் தங்களுடைய பணிகளை நல்ல முறையில் ஆற்றவும், அவ்வப்போது ஏற்படுகின்ற குறைகளை நீக்கி, இந்த ராஜ்யத்திற்கு உற்ற தூண்கள் போன்று, மக்களுடைய பாராட்டுதலைப் பெறும் வகையில் மேலும் மேலும் தங்களுடைய கடமைகளை நல்ல முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. இராம. அரங்கண்ணல்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சிறந்த பாரம்பரியத்திலே உருவாகி, நல்ல

[திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்] [12th March 1963

வளர்ச்சி இத்தகைய முறையில் மாற்றி விடுகிறது. அதே நேரத்தில் போலீஸ் ஸ்டேஷன்களை எடுத்துக்கொண்டால், அது என்ன அல்வா விற்கும் இடமா? அல்லது பிரியாணி விற்கும் இடமா? போலீஸ் ஸ்டேஷன்களைக் குறைக்கவேண்டும். பொருளாதார வளர்ச்சி ஜாஸ்தியாக இருந்தால் குற்றம் குறையும். குற்றம் குறையக் குறைய போலீஸ் ஸ்டேஷனும் குறைய வேண்டும். இன்னொரு கஷ்டம் ஜாஸ்தி நிர்வாகத்தை ஏற்படுத்துவதால் ஏற்படுகிறது. குற்றமே செய்யப்படவில்லை—அந்த மாதிரி இருந்தால் என்ன செய்வார்கள்? வேண்டுமென்றே குற்றம் செய்ததாகக் கற்பிப்பார்கள். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எ. சுவாமிதாஸ்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் மான்யத்தின் மீது எழுந்த விவாதத்திலே நானும் கலந்து கொண்டு ஒரு சில கருத்துக்களை இந்த அவை முன் வைக்கலாம் என்று நினைக்கிறேன். போலீஸாருடைய மதிப்பு இந்த நெருக்கடியான காலத்தில் மிகவும் அதிகரித்து விட்டது. முன்னால் இருந்ததைவிட, சீன ஆக்கிரமிப்புக்குப் பின்னால், நாட்டின் பாதுகாப்புப் பற்றி எல்லோரும் நன்கு உணர்ந்திருக்கிறோம்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

போலீஸ் மிகவும் தேவை. அவர்களுக்கு அதிக வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், நல்ல சலுகைகள் செய்யவேண்டும் என்று உணர்ந்து இந்த மான்யக் கோரிக்கையிலே நல்ல தொகை ஒதுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். எந்தெந்த அளவு போலீஸாருக்கு அதிக வசதி செய்து கொடுக்க வேண்டுமோ அதையெல்லாம் செய்து கொடுக்கவேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உண்டு. ஆனால் தாழ்ந்த நிலையில் இருக்கிற போலீஸாருக்கு—போலீஸ் கான்ஸ்டேபிள்கள், ஸப்-இன்ஸ்பெக்டர்ஸ் ஆகியவர்களுக்கு—கொடுக்கக் கூடிய சம்பளம் இன்றைய நிலையில் போதாது என்று கருத இடம் இருக்கிறது. ஸப்-இன்ஸ்பெக்டர்களாக இருக்கிறவர்களில் பெரும்பாலும் பட்டப்படிப்புப் படித்தவர்கள். சாதாரண பட்டதாரி ஆசிரியருக்குகூட ரூ. 140—5—180—10—250 என்று சம்பள விகிதம் இருக்கிறது. ஆனால் ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கு கூடுதல் சம்பளம் ரூ. 140–5—220 என்ற விகிதம் தான் வருகிறது. ஒரு சப்-இன்பெக்டருக்கு குறைந்த ஆரம்ப சம்பளம் ரூ. 200 இருக்கவேண்டும். அவர்களுக்கு இருக்கிற பொறுப்பு கடமை, வேலை இவற்றையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு நல்ல சம்பளம் கொடுத்தால்தான் அவர்கள் நல்ல முறையில் ஓரளவுக்கு வாழ முடியும். அதை நன்றாக மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால், லஞ்சம் வாங்குவதற்குத்தான் 'டெம்டேஷன்' ஏற்படக் கூடிய நிலை ஏற்படும். ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மதிப்பாக வாழவேண்டும், நல்ல முறையில் தம் குழந்தைகளுக்கு கல்வி கொடுக்கவேண்டும் என்றால் அவர்களுக்குப் போதிய சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். போதிய சம்பளம் இல்லை என்றால், தங்களுடைய சுயநலத்தைக் கருதி, எந்த முறையிலாவது லஞ்சம் வாங்குவதற்கு வழி வகை ஏற்படும். எனவே, சப்-இன்ஸ்பெக்டர், போலீஸ் கான்ஸ்டேபிள் ஆகியோர்களுக்கு கொஞ்சம் சம்பளத்தை உயர்த்தி, அவர்களுக்குக் கூடுதலான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநிலத்தில் போலீஸ்காரர்கள் கடமை உணர்ச்சியோடு, நல்ல முறையில் செயல்படுகிறார்கள் என்று பெருமையாக பேசப்பட்டாலும் கூட, ஒரு சில போலீஸ்காரர்கள் நடந்துகொள்கிற விதத்தைப்பற்றி இந்தச் சபையில் சொல்லாமல் இருக்க முடியவில்லை. எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல மது விலக்கை எடுத்துக் கொள்வோம். மது விலக்குத் திட்டம் 100-க்கு 100 வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், போலீஸ்காரர்கள் மது அருந்தாமலே இருந்தால் போதும். பல போலீஸ்காரர்கள் கூடவே இருந்து மது அருந்தி இருந்தால் போதும். பல போலீஸ்காரர்கள் கூடவே இருந்து மது அருந்து கிறார்கள் என்று பொது மக்கள் நமக்குப் பல இடங்களிலிருந்து உணர்த்தி



12th March 1963] [திரு. எ. சுவாமிதாஸ்]

யிருக்கிறார்கள். இதை நன்றாக கவனித்து, மது அருந்துகிற போலீஸாரே இலாகாவில் இருக்கக்கூடாது என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். இதை நாம் கவனித்து அப்பேர்ப்பட்டவர்களை இந்த இலாகாவிலிருந்து அகற்றிவிட்டோமானால், மதுவிலக்குத் திட்டத்தை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டு வரமுடியும் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். வேலியே பயிரை அழிப்பதுபோல இந்த இலாகாவில் ஒரு சிலர் நடந்துகொள்கிறார்கள். அவர்களைப்பற்றி பிராது வந்தாலும், உடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதைப்போலவே லஞ்சத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். லஞ்சம் வாங்குவது பற்றி யாராவது மனுக்கள் அனுப்பினால், எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் பல போலீஸ் அதிகாரிகளைப்பற்றி பொதுமக்கள் மனுக்கள் அனுப்பி யிருந்தும், இது வரையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகத் தெரிய வில்லை. அதையும் நன்கு கவனிக்கவேண்டும். நான் இன்னொன்றையும் எடுத்துக்காட்டாக சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். லஞ்சம் வாங்குகிறார்கள் என்பதற்கு இது அறிகுறி, எடுத்துக்காட்டு. ஒரு சப்-இன்ஸ்பெக்டர் பிளேயர்ஸ் சிகரெட் குடிப்பதுதான் வழக்கம். 'சாதாரணமாக தினசரி எவ்வளவு சிகரெட்டுகள் குடிப்பீர்கள், எத்தனை பாக்கெட்டுகள் வேண்டியிருக்கும்,' என்று கேட்டேன். '4, 5 பாக்கெட்டுகளாவது வேண்டும்' என்று பதில் சொன்னார். ஒரு பாக்கெட்டின் விலை ரூ. 1. சாதாரணமாக அவருக்கு ஒரு தினத்திற்கு 5 பாக்கெட் தேவை என்று வைத்துக்கொண்டால், தினசரி ரூ. 5, அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ. 150 சிகரெட்டுக்கு மட்டும் செலவழிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார். அவருக்குக் கொடுக்கிற அடிப்படைச் சம்பளமோ ரூ. 140 தான். எல்லாவற்றையும் சேர்த்தால் ரூ. 200 வரலாம். இப்படிப்பட்ட அதிகாரிகளெல்லாம் இருக்கிறார்கள். இவர்களைப் பற்றி நன்கு கவனிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். வாதி, பிரதிவாதி இருவர்களிடமும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்பது பற்றி பிராதுகள் அனுப்பியது உண்டு. ஒரு அதிகாரியிடம் ஒரு இடத்தில் களவு போய்விட்டது என்று ஒரு அரசாங்க ஊழியர் மனு கொடுத்திருந்தார். மனுக் கொடுத்த நேரத்திலே, சாதாரணமாக விசாரித்துப் பார்க்கிறேன் என்று சொல்ல வேண்டும். மனுக்கொடுத்து சில நாட்கள் சென்றபிறகு மனுவைப்பற்றி விசாரித்தீர்களா என்று கேட்டதற்கு, 'களவு ஒன்றும் போகவில்லை, உங்கள் வீட்டிலுள்ள பெண்கள் எடுத்திருப்பார்கள்' என்று பதில் வருகிறது. இந்த நிலையில் போலீஸ்காரர்கள் நடந்துகொள்ளுவதால், பொதுமக்கள் அவர்களிடத்தில் நம்பிக்கையை இழக்கவேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் நன்கு கவனிக்க வேண்டும். அவ்வப்போது பிராதுகள் வந்தால் அவைகளை நன்கு விசாரித்துப் பார்க்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கையின் மீது நடந்த விவாதத்தின்போதுகூட, போலீஸைப்பற்றி கன்யாகுமரி எம்.எல்.ஏ. அவர்கள் எடுத்துக் கூறினார்கள். உண்மையிலேயே அதிகாரிகள் நடந்துகொள்கிற விதத்தைப் பார்க்கும்பொழுது அங்குள்ள மக்களிடத்திலே பெரும் பீதி ஏற்படுகிறது. ஒரு எம்.எல்.ஏ.—இடத்தில் இத்தகைய அளவுக்கு போலீஸ்காரர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்றால், சாதாரண மக்களிடத்தில் எந்த முறையில் நடந்துகொள்வார்கள் என்ற ஒரு எண்ணம் ஏற்படுகிறது. எனது அருகில் உட்கார்ந்திருக்கும் கனம் குஞ்சன் நாடார் இடத்தில் ஒரு போலீஸ்காரர் தவறுதலாக நடந்துகொண்டிருக்கிறார்கள். அதையும் இந்த சட்டசபையில் கூறலாம் என்று நினைக்கிறேன். அவர் ஒரு அதிகாரியிடம் சென்று அவரோடு சம்பந்தப்பட்ட ஒரு வழக்கைப்பற்றி என்ன ஆயிற்று என்று கேட்கச்சென்றபொழுது, அந்த இடத்தில் பேச்சில் இரண்டு பேர்களுக்கும் ஏதோ தகராறு ஏற்பட்டு 'Please clear out' என்று ஒரு சப்-இன்ஸ்பெக்டர் அவரைக் கூறியிருக்கிறார். அந்த அளவுக்கு போலீஸ்காரர்கள் நடந்துகொள்ளுகிறார்கள். இதையெல்லாம் மேலதிகாரிகள் நன்றாகக் கவனிக்கவேண்டும். அப்படிக் கவனித்தால்தான் பொது மக்களிடத்தில் போலீஸ்காரர்கள் பற்றி நல்ல

[Sri K. S. G. Haja Sheriff] [12th March 1963

not have taken place smoothly and enabled the people to come to the voting booths and exercise their franchise without any fear or favour. I also know the conditions prevailing in the interior but so far as the election that was conducted in Madras City was concerned I can say, Mr. Deputy Speaker, that the whole proceed took place in a most admirable manner. About 40 to 45 per cent of the population was in a position to exercise their franchise, both men and women, within a couple of hours, without even a little hitch. That goes to show, how the department is functioning very well. We can also take other occasions, occasions when big State functions take place or at a time when V.I.Ps. are coming to the Metropolis. When people go there on such occasions in large numbers, the police are doing a very useful and great service. We are in a Welfare State and we are governed under Parliamentary Democracy. People are getting conscious of their duties and in the circumstances prevailing in the country today, the mentality of the police also change with the times. It is to be noted with pride that police officers are changing their trend. Some friends in the Opposition criticised badly about the conduct of the Police and police administration. But by and large we must judge things and review the position. As a man in business I only take the out-turn of anything when we speak of it. There may be here and there some mistakes being committed but that should not cause concern and make people criticise the whole police force which is doing very useful and good service. My friend Sri T. L. Sasivarna Thevar used the following words: "காங்கிரஸ்காரர்கள் வைக்கோல் போரில் தீ வைத்தார்கள்" But I know the Congress Members will say that it is absolutely incorrect, and that it was only Mr. Sasivarna Thevar's party men who did that thing and who now want to put the blame upon the Congress. So this sort of argument in a forum like this, I am afraid, will not be very congenial for members to enter into. Sir, I would like to say one thing before this House. During the previous month or two, I had occasion to give certificates to about four to five youngsters belonging to this police department. They came to me for conduct certificate, for getting admission in some industrial concern. They were young men with good physique and apparently with good conduct. I asked them what their previous experience was. They said that they were working in the Police and at present because they were getting a good demand from some industrial concerns and some advantageous conditions prevailed in some industrial undertakings they would like to go there and resign their job in the police department. I went deeper into the matter and ascertained from them that the scale of pay, particularly of the last grade people like constables and head-constables were low, the constable getting only Rs. 65 per mensem and the head-constable getting only Rs. 95 per mensem. Sir, I am not arguing that the Government must increase their emoluments forthwith but I can only put it to them that nowadays it is very difficult to get young people with good physique in a force like this. With the economy going up day by day, with more industrialisation, more industries will be started and even a



12th March 1963] [Sri K. S. G. Haja Sheriff]

packer in an industrialised concern will get Rs. 80 to 85 with other amenities like providend fund, gratuity, etc. What I want to stress is that these two sections of police force, viz., constables and head consables should be given some more money in addition to what they are already having viz., free housing, etc., so that the tendency among the young people (there are also many elders in this force) in this force may not be to go out and seek employment in other industrialised concerns. It is a very important thing. I do not know how other members are feeling but at any rate that is my experience and I would suggest for consideration of Government the enhancement of pay of constables and head-constables whenever they feel like doing it.

I have also ascertained, what their pay is in other States. No doubt in certain States, they are paid much less but in certain other States like West Bengal and Delhi, they are paid much more than what is paid in this State. The risk and responsibility undertaken by the Police force are much greater and without peace and proper order, there cannot be prosperity. I would therefore appeal to the Government to consider their case sympathetically.

In addition to that, Mr. Deputy Speaker, some measures should be taken to see that their womenfolk also earn through some useful avocation or other. Now we are seeing in the exhibitions the work like mat-weaving turned out by them. Some more useful schemes of employment should be introduced so that these women can augment the income that their menfolk earn.

Sir, I once again congratulate the Hon. Minister in charge of Police and also the officers and all others who are doing very useful and good work.

* **திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உதவித் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கான போலீஸ் மானியத்தின்மீது நான் இரண்டு அம்சங்களை மட்டும் விவாதத்தில் கவனப்படுத்தவேண்டுமென்று கருதுகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு ஹாஜா ஷெரீஃப் அவர்கள் குறிப்பிட்டது போல, போலீஸ்ராஜ் என்று சொல்லப்படுகிற போலீஸ் ராஜ்யத்திலிருந்து நாம் ஒரு வெல்பேர் ஸ்டேட்டாக அதாவது க்ஷேமநல சர்க்காராக மாறியிருக்கிறோம். அந்த அளவில், இன்றைக்குப் போலீசுத் துறையினருடைய பணிகளும், அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளும் மிகவும் மாறுபட்டு வளர்ந்து வந்திருக்கின்றன என்பதை நாம் மறுக்கத் தேவையில்லை. ஆனால், அவை வளர்ந்து வருகின்றன என்பது வெறும் பாராட்டுரையாக வழங்கிவிடாமல், உண்மையிலேயே இருக்கும் குறைபாடுகளையும், அவைகளை நிவர்த்திப்பதற்கான மார்க்கமும் அமையவேண்டும் என்பது இந்த மானியத்தினுடைய முக்கியமான பொருளாக இருக்கும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்களும், அமைச்சரவையும் நிச்சயமாக ஒத்துக்கொள்ளுவார்கள்.

இன்றைய தினம், பொதுவாக போலீஸ் நிர்வாகத்தினுடைய குறைகளைச் சொல்கிற நேரத்தில் ஆத்திரப்படுவதாலோ, கோபத்தை வரவழைத்துக் கொள்வதாலோ, ஏதோ எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்பதாலோ கவனக் குறைவாக இருந்துவிடத் தேவையில்லை. நான் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் மட்டும் என்னுடைய உரையின் முக்கிய கருத்தாகப் பேசி முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [12th March 1963

முதல் அம்சமாக, என்னுடைய கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள், டாக்ஸி டிரைவர்களுக்கும் போலீசுக்காரர்களுக்கும் இடையே இருக்கும் பகைமையையும், அதிலே இருக்கும் கோளாறுகளையும் குறிப்பிட்டார்கள். டாக்ஸி டிரைவர்கள் சரியாகப் போவதில்லை என்று போலீசுக்காரர்கள் வழக்குப் போடுகிறார்கள் என்று டாக்ஸிக்காரர்கள் சொல்லுகிறார்கள். அந்தப் பிரச்சினையை இந்த அமைச்சரவை மிக ஆழ்ந்து கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. டாக்ஸிகள் ஓட்டுகிறவர்கள் மீது வழக்குப் போடுகிறார்கள். 1,500 டாக்ஸிகள் ஓடிக்கொண்டிருக்கும் நிலையில் 3,000 பேர்களுக்குமேல் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். பல நேரங்களில் வழக்குகள் வருகின்றன. இந்த வழக்குகளில் இருக்கும் பிரச்சினைகளை நல்ல அனுதாபத்தோடு கவனிக்க வேண்டிய முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டிய நிலையில் சர்க்காரும் போலீசுத் துறையினரும் இருக்கவேண்டும். டாக்ஸி டிரைவர்களுக்கு இன்றைக்கு நிரந்தரமான வேலை வாய்ப்புக்கள் கிடையாது. அவர்களுக்கென்று குறைந்தபட்சக் கூலி நிர்ணயமும் கிடையாது. பல பேர்கள் டாக்ஸி வாங்குகிறார்கள். அவர்கள் தினத்திற்கு நாற்பது, ஐம்பது ரூபாய் வரையில் டிரைவர்கள் எடுத்துக்கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். குறைந்த தூரத்திற்கு வருவதில்லை, தேவையான இடங்களில் வண்டிகளை நிறுத்துவதில்லை என்றெல்லாம் குறைகளும் சொல்லப்படுகின்றன. இருந்தாலும், டிரைவர்களுடைய கஷ்டங்களையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும். கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கே கூட கடந்த ஆண்டில், தமிழ்நாடு டாக்ஸி, ஆட்டோ டிரைவர்கள் சங்கத்தார் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதில்,

"சென்னை நகரத்தில் டாக்ஸிகள் ஓட்டும் 2,000 தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வேலையோ அடிப்படைச் சம்பளமோ இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். டாக்ஸி வைத்திருக்கும் பெரும்பாலோர் பணமே பெரிதெனக் கருதி ஒரே வருடத்தில் போட்ட முதலை எடுத்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் டிரைவர்களைத் தினமும் அதிக வருமானம் கொண்டுவரச் சொல்லி நிர்பந்திக்கிறார்கள்...."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுபோன்ற பல விண்ணப்பங்களை அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள்.

டாக்ஸி டிரைவர்கள் மீது பல வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன என்பதை யாரும் மறுத்துவிடுவதற்கில்லை. பல வழக்குகள் போட்டிருக்கிறார்கள். என்னுடைய கையில் இப்பொழுது பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலிருந்து 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் தேதியிட்டு திரு பி. வெங்கடேசன் என்கிற டாக்ஸி டிரைவருக்கு அனுப்பப்பட்ட ஒரு நோட்டீஸ் இருக்கிறது. சாந்தி தியேட்டருக்கெதிரில்.. ...... ..

MR. DEPUTY SPEAKER: If the case is pending, the hon. Member should not refer to that.

SRI K. A. MATHIALAGAN: It is over.

MR. DEPUTY SPEAKER: Then it is all right.

**திரு. கே. ஏ. மதியழகன்:** 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் தேதி அன்று, மவுண்ட் ரோடில் சாந்தி தியேட்டருக்கெதிரில் ஒரு போலீசுக்காரர் டாக்ஸியில் ஏறிக்கொண்டு நேராகக் காஸினோ தியேட்டருக்கருகில் போய் இறங்கி பாரிசுக்கு வரவில்லை என்று ஒரு வழக்குத் தொடுத்தார்கள். திரு. பி. வெங்கடேசன் என்கிற டிரைவர் எம்.எஸ்.வி. 2397 எண்ணுள்ள டாக்ஸியை ஓட்டிக்கொண்டிருந்தார். அவர் பேரில் உள்ள வழக்கு 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி அன்று மாஜிஸ்ட்ரேட்டால் தள்ளப்பட்டது. இதுபோன்று இருபது, முப்பது வழக்குகள் தள்ளப்பட்டன. சில உண்மையாக இருக்கலாம் என்றாலும், இப்படி வண்டியை நிறுத்திவிட்டால் வழக்குப் போட்டுவிடுகிறார்கள்.



12th March 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** வழக்கு தொடரப்பட்டால் எல்லாமே வெற்றிகரமாக முடியவேண்டுமென்று எதிர்பார்க்கமுடியாது. போலீஸ் தொடர்கிற வழக்குகளாக இருந்தாலும், மற்ற மக்கள் தொடர்கிற வழக்குகளாக இருந்தாலும், தள்ளப்படுகிற வழக்குகள் எல்லாம் பொய் வழக்குகள் என்று சொல்வது சரியல்ல.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அமைச்சர் அவர்களுடைய கருத்தை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் தொடரப்படும் எல்லா வழக்குகளும் உண்மையான வழக்குகள் அல்ல. இன்றைக்கிருக்கும் நிலைமைக்குப் பரிகாரம் தேட (தடுவதற்கு) அமைச்சர் அவர்கள் ஒரு அழைப்பு விடுத்திருக்கிறார்கள். டாக்ஸிகளை விடுவதற்கும் பல நபர்கள் முன் வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். கெடுபிடி காரணமாக அனேகம் பேர்கள் டாக்ஸி நடத்த முன்வருவதற்கு யோசிக்கக்கூடிய நிலை இருக்கிறது. கமிஷனர்கூட அறிக்கைவிட்டார்கள். யாரோ ஒரு கம்பெனியார் ஐம்பது டாக்ஸிகள் விடுவதாகச் சொல்லப்பட்டது. ஐம்பது டாக்ஸிகள் விடுவது ஒரு பரிகாரமாக இருக்காது. டாக்ஸி ஓட்டுகிறவர்களுக்கு ஒரு நிரந்தரமான வாய்ப்பு ஏற்படுத்தலாம். அச்சமான நிலைமை இன்னும் போகாத நிலையில், பயமுறுத்தல் நிலை இருந்துகொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டு டிரைவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஐம்பது டாக்ஸிகளை ஓட்டுவதற்கு ஏதோ ஒரு கம்பெனிக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம் என்று போலீஸ் கமிஷனர் அறிக்கைவிட்டிருக்கிறார். இதனால் வேலை நிறுத்தங்கள் குறையுமென்று எதிர்பார்க்கிறார்கள். எங்கள் கட்சியின் துணைத்தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் நேற்று சொன்னதுபோல், வேலை நிறுத்தங்களைக் கட்டுப்பாடு செய்வதற்கு ஐந்தாம் படையாகவும், கருங்காலி (ப்ளாக் லெகர்ஸ்)களாகவும் இருக்கக்கூடிய வகையில் இம்மாதிரி செய்வது டாக்ஸிக்காரர்களுக்கும் சரி, பொதுமக்களுக்கும் சரி, நன்மை செய்வதாக இருக்காது. இதிலே தீவிர கவனம் செலுத்த பொது மக்களுக்கு அக்கறை இருக்கிறது. பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள், சில டாக்ஸிக்காரர்கள் தவறு செய்கிறார்கள். அவர்கள் தண்டனைக்கு உரியவர்கள். ஆனால் போலீசுக்கும் டாக்ஸிக்காரர்களுக்கும் பங்காளி சண்டை போல் இருக்கும் பகைமை போகவேண்டும்.

மோட்டார் தொழிலாளர்களுக்கான ஒரு சட்டத்தை மத்திய அரசாங்கம் 1961-ம் ஆண்டு கொண்டுவந்திருக்கிறது. அதன்படி ஐந்துக்கும், அதற்கு குறைவான டாக்ஸி டிரைவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதற்கும் அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இன்று முக்கியமாக போலீஸ் மானியத்தில் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் போலீசைப்பற்றி ஏதாவது சொல்வதற்கு முன்னால் அதைப் பற்றி உடனே அமைச்சர் அவர்கள் சமாதானம் கூறி விடுகிறார்கள். இப்படிக் கூறுவதனால் அந்த அந்த இலாகாவினர்களுக்கு பயம் அற்ற நிலைதான் ஏற்படும். "நாம் எதைவேண்டுமானாலும் செய்யலாம். நம்முடைய அமைச்சர் அந்தப் பிரச்சனை எழாதபடி தக்க சமாதனம் சொல்லிவிடுவார்கள்" என்ற நினைப்பு போலீசார் மத்தியில் வளரும்படி, எதற்கும் இப்படிச் சமாதானம் சொல்கிற வழக்கம் சரியில்லை என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

கடந்த வருஷம் ஜூலை மாதம் 19-ம் தேதி விலைவாசிப் போராட்டம் சம்பந்தமாக மறியல் நடந்தது. தமிழ்நாடு பூராவிலும் இருபதாயிரம் பேர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். அந்த மறியலில் மிகப் பயங்கரமான நிலைமை ஏற்பட்டது. வீணாக எங்கள் கட்சியின்மேல் கெட்ட பெயரைச் சுமத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் பல. வீணாக அடித்து நொறுக்கப்பட்ட தொண்டர்கள் பலர். வேண்டுமென்றால் அப்படி அடிபட்டவர்களில் என்னுடைய காரியாலயத்தில் வேலை செய்யும் லோகநாதன் என்ற பையனைக் நேராக அமைச்சரிடம் காட்டுவேன். இன்னும் அவன் முதுகில் தழும்பு இருக்கிறது. இத்தகைய ஒரு நிலைமை ஏன் ஏற்படவேண்டும்? இதற்கு யார் பொறுப்பாளி? மறியலில் ஈடுபட்டவர்கள் வடசென்னையில் மட்டும்தான் பலாத்காரத்தை மேற்கொண்டார்களா?

[திரு. இராம. அரங்கண்ணல்] [12th March 1963

முறையில் இயங்கிக் கொண்டிருக்கும் நம்முடைய போலீஸ் மான்யத்தின் மீது என்னுடைய கட்சித் தோழர் கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் இலாகா நமது நாட்டிற்குக் கண்ணாகவும், கருத்தாகவும், சில சமயங்களில் அரசாங்கத்திற்குக் கையாகவும் இருந்து, எந்த அளவுக்கு பணியாற்றி வருகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எதிர்க் கட்சிக்காரர்களும் பாராட்டக்கூடிய அளவுக்கு நல்லதொரு பண்பு நம் நாட்டு போலீஸ் துறையினரிடத்தில் வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் அந்தத் துறையிலே இருக்கின்ற நல்ல அதிகாரிகளும் நல்ல ஊழியர்களும்தான் ஆவார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு அரசியல் ஈடுபாடுகளும், அரசியல் ஆசாபாசங்களும் ஓரளவுக்கு இந்தத் துறைக்குள்ளும் புகுந்திருக்கிறது என்று சொன்னாலும், அந்த ஆசாபாசங்களைத் தாண்டி போலீஸ் அதிகாரிகளும் அந்தத் துறையினரும் நல்ல முறையிலே பணியாற்றி வருகிறார்கள் என்று சொன்னால், அந்த இலாகா சென்ற காலத்திலே பெற்றிருக்கிற நல்லதொரு படிப்பினைதான் அதற்குக் காரணம் என்று சொல்லமுடியும். சுதந்திரம் பெற்ற பிறகு இந்த இலாகாவிற்கு ஏற்பட்டுள்ள சுமைகளை காங்கிரஸ் அரசு உணர்ந்து, சில பல நல்ல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் போலீசாருக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக ரூ. 10 லட்சத்திற்கு மேல் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. அதிகம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்கிறார் கனம் நிதி அமைச்சர். அந்த அளவுக்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு, போலீஸ்காரர்களுக்கு உதவி செய்து கொடுக்கவேண்டுமென்ற உள்ளம் வளர்வது நல்லதுதான். அதேபோல் ஒரு பாரபட்சமற்ற முறையிலே இந்த இலாகா நடக்க வேண்டுமென்பதிலே நமது அமைச்சரவை அதிக அளவுக்கு அக்கறை காட்டி, நல்லதொரு இலாகாவாக நடப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இதைச் சொல்லுவதற்குக் காரணம், அரசியல் விவகாரங்களும், அரசியல் கிளர்ச்சிகளும் உருவாகிற நேரத்திலே, போலீஸ் இலாகாவினர் ஏராளமான பணிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய சுமையும், அவர்களுடைய வேலையும் அதிகரிக்கிறது. இம்மாதிரிக் கிளர்ச்சிகள் உருவாகாத அளவுக்கு ஆளுங் கட்சியினர் அன்பு முறைகளை மேற்கொண்டால், போலீஸ் இலாகாவினர் நல்ல முறையில் பணியாற்ற முடியும். நாம் சுதந்திரம் பெற்ற பிறகு போலீஸ் இலாகாவினர் செய்து வரும் வேலைகள் வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றன. உதாரணமாக, எதிர்க்கட்சித் தோழர்கள் பேசுகின்ற கூட்டங்களுக்கெல்லாம் சென்று ரகசியக் குறிப்புகள் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அதேபோல் ஆளுங் கட்சியினர் பேசும்போது அவ்வாறு குறிப்பு எடுக்கப்படுகிறதா என்று பார்த்தால், இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாக, சென்னை மாநகரம் போன்ற பெரிய நகரங்களில் பணிபுரிகின்ற போலீஸ் இலாகாவினர் ஏராளமான பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. லைசென்ஸ் கொடுப்பதிலிருந்து, அன்றாடம் நடக்கும் கூட்டங்களுக்குப் போய் அங்கே நிகழ்த்தப்படும் பேச்சுக்களைக் கேட்கிற அளவுக்கு அவர்களது பணிகள் வளர்ந்திருக்கின்றன. அதே நேரத்தில், போலீஸ் அதிகாரிகளுக்கும், போலீஸ் ஊழியர்களுக்கும் வேண்டிய அளவு சலுகைகள் தரப்படுகின்றனவா என்று பார்த்தால், போதுமான அளவுக்கு இல்லை என்றுதான் சொல்லவேண்டும். போலீஸ் ஊழியர்களுக்குப் பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. நம்முடைய சட்ட மன்றத்திலும்கூட பல போலீஸ் அலுவலர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்தப் பஞ்சப்படி சுமார் 3 அல்லது 4 மாதங்கள் கழித்துக் கொடுக்கப்படுகிற நிலைமைதான் இருந்து வருகிறது. உடனுக்குடனே அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய போலீஸ்துறையினர் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டை விட, சென்ற ஆண்டில் குற்றங்களை நல்ல முறையில், கண்டுபிடித்திருக்கிறார்கள்.



12th March 1963] [திரு. இராம. அரங்கண்ணல்]

ஆனால் மது விலக்குக் குற்றங்களைப் பொறுத்த வரையில் 1960-ல் 69,252 வழக்குகள் இருந்தன. ஆனால் 1961-ம் ஆண்டில் 84,936 வழக்குகள் என்று அது பெருகி இருக்கிறது. சென்னை மாநகரத்தை எடுத்துக் கொண்டால் கடந்த ஆண்டில் 20,048 வழக்குகள் பதிவாகி இருக்கிறது. நடை முறை ஆண்டில் 25,986 வழக்குகள் பதிவாகி இருக்கின்றன. இதை நான் கவனத்திற்குக் கொண்டு வரும்போது மதுவிலக்கு திட்டம் கூடாது என்று சொல்லவில்லை. மதுவிலக்குத் திட்டம் ஒரு நல்ல சீர்திருத்த திட்டம்தான். ஆனால் இந்தத் துறையில் வழக்குகள் பெருகிக் கொண்டு வருவதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து அறிந்து அதற்கு முடிவு காண வேண்டும். சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் போலீஸ்காரர்களுக்கும் டாக்சிக்காரர்களுக்கும் ஒரு சுமுகமான நிலை இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை அரசாங்க அதிகாரிகள் பரிசீலிக்கவேண்டும். ஏழை ரிக்ஷாத் தொழிலாளர்கள், கைவண்டித் தொழிலாளர்கள் போலீஸ் ஊழியர்களால் அடிக்கடி தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதுவும் தவிர்க்கப்பட வேண்டும்!

இன்னொன்று, நம்முடைய சென்னை மாநகரத்தில் திடீர் திடீரென்று மதுவிலக்கு ரெயிட்களை நடத்துகிறார்கள். அப்படி ரெயிட்கள் நடத்துவது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால், பெரும்பாலும் சென்னை நகரத்தில் குடிசை வாழ் மக்கள் வாழ்கின்ற இடங்களைத்தான் அவர்கள் ரெயிட் செய்கிறார்கள். இதற்கு முன்பு ஆச்சாரியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நம்முடைய சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் மதுவிலக்கு அமைச்சராக இருந்தபோது சென்னை மாநகரத்தில் பெரிய இடங்களிலும் 'ரெயிட்கள்' நடத்தப்பட்டதை நாம் அறிவோம். பெரிய இடங்களில் மதுவிலக்குக் குற்றங்கள் நடக்காமலா உள்ளன? ஆனால் குடிசை வாழ் மக்கள் இருக்கிற இடங்களுக்குச் சென்று திடீர் திடீர் என்று போலீஸார் நுழைவதன் காரணம் என்னவென்று தெரியவில்லை. இப்படி பல இடங்களில் நடைபெறுகின்றன. என்னுடைய தொகுதியாகிய மயிலையில் ராபர்ட்சன்பேட்டையில் அம்புரோஸ் என்பவருடைய வீட்டில்—அவர் என்னுடைய கட்சியைச் சார்ந்தவர் அல்ல. அவர் ஒரு பெரிய கட்சியைச் சேர்ந்தவர்—அந்தக் கட்சியின் பெயரைச் சொல்ல வேண்டாமென்று கருதுகிறேன். போலீஸ்காரர்கள் அவருடைய வீட்டில் நுழைந்து குழந்தைகள் படித்துக்கொண்டிருந்த புத்தகங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அதன் பிறகு அந்த புத்தகங்களைக் கூட திருப்பிக் கொடுக்கவில்லை. அதைப்பற்றி கேட்டதற்கு சரியான பதிலும் கிடைக்கவில்லை. பக்கத்தில் ஏழெட்டு வீடுகளிலுள்ள சட்டிப்பானைகள் எல்லாம் தூளாக்கப்பட்டன. ஏன் இந்தக் கொடுமை? மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிக்க எங்கள் கட்சி ஒத்துழைக்க தயாராக இருக்கிறது. மதுவிலக்கைப் பொறுத்த வரைக்கும் அந்தந்த வட்டாரங்களில் சர்வ கட்சி கமிட்டிகளை அமைத்து அவர்களுடைய ஒத்துழைப்பை பயன்படுத்திக்கொண்டு வந்தால் மதுவிலக்குக் குற்றங்கள் அதிகமாக நடைபெறாமல் பார்த்துக்கொள்ளலாம். ஏழை மக்கள் துன்புறுத்தப்படாமலிருக்கக்கூடிய நிலைமை ஏற்படும். மதுவிலக்குத் திட்டம் கண்ணியமாகவும் ஜனநாயக முறையில் நடக்கவும் தங்களுடைய கடமைகளைப் போலீசார் நாணயமாக செய்ய நல்ல முறையில் காரியங்களை உருவாக்கித் தர நமது அமைச்சரவை முயலவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

SRI K. S. G. HAJA SHERIFF: Mr. Deputy Speaker, Sir. I rise to support the Demand moved by the Hon. Minister under the Head "Police". Sir, I cannot but state how efficiently the Police Department is functioning in our State. When I say this I say it after understanding their work very well. We can take any big functions or we can also take the third general elections. But for the prior arrangement and but for the effective control made by officers of this department, I am sure the election would

[திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை] [12th March 1963

போக்குவரத்து இன்றைய தினம் மிகவும் ஆபத்தான நிலைமையில் இருக்கிறது. லாரி டிரைவர்களின் தவறுதலுக்காக அவர்களின்மீது கேஸ் போடப்பட்டு உரியவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படுகிறதா என்றால் இல்லை. திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலிருந்து வரக்கூடிய லாரி டிரைவர்கள் சார்ஜ் செய்யப்பட்டாலும், வழக்கு விசாரிக்கப்படும்போது குறிப்பிட்ட அந்த டிரைவர்களுக்கு 'சம்மன்' போய்ச் சேராத காரணத்தால் அவர்கள் வழக்குகளின்போது இருப்பதில்லை. குறிப்பாக, இங்குள்ள டிரைவர்களையே பிடித்து கோர்ட்டுகளில் ஆஜர் செய்து அவர்களுக்குத் தண்டனையை வாங்கிக் கொடுத்துவிடுகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். ஆகவே, கோர்ட்டுகளில் இருந்து அனுப்பப்படும் 'சம்மனைத்' குறிப்பிட்ட ஜில்லாக்களில் இருக்கக்கூடிய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் மூலமாக குறிப்பிட்ட லாரி டிரைவர்களுக்குச் சேரும்படிச்செய்யவேண்டும். குறிப்பாக, விழுப்புரம் வரை உள்ள போக்குவரத்தை நல்லபடி கண்காணிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எம்.எப்.எஸ்-ஐப் பொறுத்தவரை ஒவ்வொரு ஜில்லாக்களிலும் மூன்று நான்கு இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை ஜில்லாவிலுள்ள மன்னார்குடியில் அந்த சர்வீஸ் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து அறந்தாங்கி 76, 77 மைல் தூரத்தில் இருக்கிறது. அறந்தாங்கியில் தீ விபத்து ஏற்பட்டால், தீயணைக்கும் படை மன்னார்க்குடியிலிருந்து வருவதற்குள்ளாக தீ தானாகவே அணைந்துவிடுகிறது. ஆகவே, தாலூகாவின் அருகில் ஒரு இடத்தில் எம்.எப்.எஸ்-ஐ அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மதிப்பிற்குரிய சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டுக் காவல் துறையினர் வங்காளம், அஸ்ஸாம், நாகநாடு போன்ற பகுதிகளுக்கெல்லாம் அனுப்பப்பட்டு மிகத் திறமையுடன் பணியாற்றி வருகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே நாம் அந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்களைப் பாராட்டுவதோடு மாத்திரமல்லாமல் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறோம். அது மாத்திரமல்லாது, தமிழ் நாட்டைச் சேர்ந்த போலீஸ் காங்கோ நாடு போன்ற பகுதிகளுக்கெல்லாம் சென்று தமிழனின் வீரத்தை நிலைநாட்ட அரும்பாடுபட்டு வருகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது தமிழனின் வீரம் எந்த அளவுக்கு அங்கெல்லாம் பரவியிருக்கின்றது என்பதைக் கண்டு உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். அப்படிப்பட்ட ஒரு காவல் துறையினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற மானியம் அதிகமென்று சொல்ல முடியாவிட்டாலும்கூட, அந்தத் தொகை நல்ல முறையிலே பயன்பட வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் வெட்டுப் பிரேரணையை இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அந்த அளவு அந்தத் தொகை பயன் அளிக்கிறதா என்று பார்த்தால், அது எந்த அளவிற்குப் பயன் பெறுகிறது என்பதை அமைச்சர் அவர்கள்தான் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஒன்றை மட்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இங்கே நம்முடைய சட்ட மன்றத்திலே பணியாற்றுகின்ற காவலர்களுக்கு, அதாவது 'வாச அண்டு வார்டு'—ஆகப் பணியாற்றுகின்றவர்களுக்கு 1962-லே இரண்டு செட் துணிகள் கொடுப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. 1963-ம் ஆண்டிலேதான் அவர்களுக்கு அந்தத் துணி கொடுக்கப்பட்டிருக்கிறது மற்றக் காவலர்களைப் போல் அல்லாது இங்கே இருப்பவர்களுக்கு வெள்ளை உடை தரவேண்டிய அவசியம் இருக்கும் காரணத்தால் இன்னும் இரண்டு செட் கூட அதிகமாக இவர்களுக்குக் கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கப்படாவிட்டாலும்கூட, ஆண்டுதோறும் அவர்களுக்குத் துணி கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. 1962-இல் ஒதுக்கப்பட்ட நிதி என்னவாயிற்று என்பதை அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையிலேயே பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



12th March 1963 ] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

காவலர்கள் நாட்டின் பாதுகாப்புக்குத் தேவை என்று சொல்லும்போது, அவர்களுடைய வீட்டுக்குப் பாதுகாப்பு கொடுப்பது நமது கடமையாகும். அவர்களுக்குப் பல சலுகைகளை அளித்து வருகிறோம் என்று சொன்னாலும் கூட, நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற விலைவாசி உயர்வைப் பொறுத்துப் பார்க்கும்போது, அவர்களுடைய அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி போன்றவை நிச்சயமாகப் போதாது. அதிலும் திருச்சி மாவட்டத்தில் போலீசை அணுகியபோது, 'தினப்படி 15 நாட்கள் தான் அளிக்கப்படுகிறது' என்று கூறினார்கள். முப்பது நாட்களுக்கு அவர்கள் முழு நேரம் பணியாற்ற வேண்டும், 30 நாட்களுக்கும் இவர்கள் வெளியூர்களுக்குப் போகும் வேலையில் ஈடுபட வேண்டும். அப்படி இருந்தும் 15 நாட்களுக்குத்தான் படி கொடுக்கப்படுவதாக அவர்கள் சொன்னார்கள். அதையும் கவனித்து அவர்களுக்கு முழு மாதமும் படி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீசாருக்காகப் பல இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகளில் புருஷன் பெண்டாட்டி மட்டுந்தான் வசிக்கக் கூடிய வகையில் இருக்கிறதே தவிர, நான்கு குழந்தைகளுடன் வசிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே தயவு செய்து பெரிதாக அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீசாரின் குழந்தைகளுடைய படிப்புக்காகத் தனிச் சலுகைகள் வழங்குவது நல்லது என்று கூற விரும்புகிறேன். கல்லூரியில் படிப்பதற்கும், மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆகியவற்றிலும் அவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்கும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீசார் ஓய்வு பெறுகின்ற நேரத்தில் அவர்களுக்கு வழங்கப்படுகிற ஓய்வுச் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. அதை அதிகப் படுத்துவதோடு மட்டுமல்லாது, எக்ஸ்—சர்விஸ்மென் சங்கங்கள் அமைத்து அவர்களுக்கு பஸ் ரூட் வழங்குவது போல் போலீஸ் துறையில் பணியாற்றியவர்களுக்கும் சங்கம் அமைத்து அப்படிப்பட்ட சலுகைகளை அளிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, போலீஸ்காரர்கள் நல்லவர்கள் மத்தியில் மட்டுமல்லாது, கொலைகாரர்கள் மத்தியிலும், கொடுமைகாரர்கள் மத்தியிலும் பஞ்சமா பாதகர்கள் மத்தியிலும் அவர்கள் பழக வேண்டியிருப்பதால் அவர்களுக்கு இருக்கும் தொல்லை நமக்கு நன்றாகத் தெரியும். என்னுடைய தொகுதியில்கூட, சிறுகனூர் கிராமத்தில், பொதுத்தேர்தல் நடந்த காலத்தில் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு பெரிய பரபரப்பு ஏற்பட்டு, அங்கே இருந்த ஹெட் கான்ஸ்டபிள், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியவர்கள் எல்லாம் தாக்கப்பட்டு வழக்கு விசாரணை இப்போதுதான் முடிந்திருக்கிறது. இப்போது அந்த வழக்கு மேல் கோர்ட்டில் நடக்கின்ற காரணத்தால் அதைக் குறிப்பிட விரும்பவில்லை. நான் ஒன்றை மட்டும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்—கிராமக் காவல் நிலையங்களில் எல்லாம் அதிகமான காவலர்களை நியமிக்க வேண்டும். அங்கெல்லாம் பணியாற்றுகின்ற காவலர்கள் சில குறைகளைச் சொல்கிறார்கள். அவர்கள் நாட்டுப் பாதுகாப்புக்கான வேலைகள் மட்டுமல்லாது, பெரிய அதிகாரிகளுடைய வீடுகளில் தொண்டு வேலை செய்யக் கூடிய தொல்லைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்கள் சார்பாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்—அப்படிப்பட்ட உயர்தர அதிகாரிகளுடைய வீடுகளில் வேலை செய்வதற்காகக் காவலர்களை அனுப்பாது அவர்களுக்கு வேலை செய்வதற்கென்றே நியமித்து அனுப்பிவிடுவது நலமாக இருக்கும். நாட்டைப் பாதுகாக்க வேண்டியவர்கள் இந்த மாதிரி வேலைகளில் ஈடுபடுத்தப்படுவது நாட்டைப் பாதிக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

அடுத்து, காவலர்களுக்குப் பழைய காலத்தில செருப்புகள் கொடுக்கப்பட்டு வந்தன. இப்போது பெரிய பூட்சுகளைக் கொடுக்கிறார்கள். அதை

மற்ற இடங்களில் என் மேற்கொள்ளவில்லை? தென் சென்னையில் இத்தகைய ஒரு நிலைமை ஏற்படவில்லையே? இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சென்ற ஆண்டு ஜூலை 19-ம் தேதி நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி இந்த மன்றத்தில் ஏற்கெனவே கூறப் பட்டன. கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன. அப்போது கனம் அங்கத்தினர் இங்கே இல்லை. ஆகையால் இப்போது அவரிடம் நான் ஒரு அபிப்பிராயம் கேட்கிறேன். போலீஸ்காரர்களே வேண்டுமென்று கல் போட்டார்கள் என்று சொல்லப்பட்டதே, அதைப் பற்றி கனம் அங்கத்தினருடைய கருத்து என்ன என்று சொல்லவேண்டும்.

**திரு கே. ஏ. மதியழகன் :** இது சம்பந்தமாக திரு. நீலநாராயணன், செங்குட்டுவன் முதலியவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கில் குற்றமில்லையென்று விடுதலை செய்யப்பட்டார்கள் என்று மட்டும் சொல்லிக்கொள்வேன். நான் சொல்ல வந்தது எல்லாம் இவை அங்கத்தினர்கள் சொல்லும்போது உடனே அதற்குச் சமாதானம் சொல்ல அமைச்சர்கள் முன்வருவதனாலேயே அதிகாரிகளுக்கு எதைச் செய்தால் என்ன என்ற துணிவு ஏற்பட்டு வருகிறது. விலைவாசிப் போராட்டம் சம்பந்தமாக வட சென்னை கலவரம் வேண்டுமென்றே சிருஷ்டிக்கப்பட்ட ஒன்றுதான். அதுமட்டுமல்ல. அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பல பேட்டைகளில் இருந்த படிப்பகங்களில் எங்கள் கட்சித் தலைவர் அண்ணா படம், எதிர்க்கட்சித் தலைவராக விளங்குகின்ற திரு. நெடுஞ்செழியன, கலைஞர் கருணாநிதி ஆகியோர் படங்கள் எல்லாம் உடைத்தெறியப்பட்டிருக் கின்றன. பல தொண்டர்கள் இரவோடு இரவாகக் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். அடித்து லாரியில் ஏற்றிக்கொண்டு செல்லப்பட்டு சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நான் அப்போது சைதாப்பேட்டை சிறையில் இருந்தேன். நான் படித்துக்கொண்டிருந்த நூலில் ஹிட்லர் காலத்து பெர்லின் நகரத்தைப் பற்றி அதில் வருணித்து இருந்தது. "Berlin was a dark chamber, a jungle, a snakepit" என்றிருந்தது. "பெர்லின் நகரம் ஒரு இருட்டு நகரமாகவும், பாம்புப் புற்றுப்போலவும், வனாந்திரமாகவும் இருந்தது" என்று குறிப்பிட்டிருந்தது". அப்படித்தான் சென்னை நகரத்தை போலீஸ் கமிஷனர் திரு. மகாதேவன் அவர்கள் ஜூலை 20-ந் தேதி செய்து வைத்திருந்தார்கள்.

**கனம் உதவி சபாநாயகர் :** அதிகாரிகளின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்படி போலீஸ் கமிஷனர் அத்துமீறி பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். என்ன செய்தாலும் அமைச்சர் அவர்கள் தக்க சமாதானம் சொல்லிக்கொள்வார்கள் என்ற நினைப்பே இத்தகைய செயல்களுக்குத் தூண்டுகோலாக இருக்கிறது. இன்றைக்கு ஆளும் கட்சியில் உள்ள நீங்கள் கிளர்ச்சியில் ஈடுபடவில்லையா? நீங்கள் ஒன்றும் வெள்ளைக்கார வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் அல்ல. அப்படியிருந்தும் போலீஸ் அதிகாரிகள் அத்துமீறி பல காரியங்களைச் செய்தார்கள் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம், அமைச்சர்கள் எதைப் பற்றியும் விசாரிக்காமல் சபையில் ஒரு அங்கத்தினர் என்ன சொல்வதற்கும் சமாதானம் அளித்துவிட முயற்சி செய்வதும், தம் கெட்டிக்காரத்தனத்தினால் ஏதாவது பதில் சொல்லி மடக்கிவிட முயற்சி செய்வதுமேயாகும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு மாசையும், ஒரு களங்கத் தையும் ஏற்படுத்தத்தான் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ்காரர்கள் செய்கிற காரியங்களின் விளைவு அமைச்சரவையைத்தான் சாரும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மதுவிலக்கைப் பற்றி திரு. சசிவர்ணதேவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது ஒரு குடிசைத்தொழில் போல நடைபெறுகிறது என்று சொன்னார்கள்.



இன்றைக்கு ஓரிடத்தில் மட்டும் அல்ல. கள்ளச்சாரயம் காய்ச்சுகின்ற ஒரு தன்மை பலவிடங்களில் பல குடிசைகளில் காணலாம். பெண்களும். இளைஞரும் லட்சக்கணக்கில் ஈடுபட்டுள்ளனர். இப்படி சட்டத்திற்கு விரோதமாக நடப்பது என்று ஒரு சமுதாயமே உருவாகிவிட்டால் அது நாட்டிற்கே மிகவும் தீங்காக விளையும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாக வேண்டும்.

இன்னொன்று, கமிஷனருடைய மாஜிஸ்ட்ரேட் அதிகாரம் எடுக்கப்பட வேண்டும். இன்றைக்கு நினைத்தால் அவர் ஒருவரைக் கைது செய்து 14 நாள் ரிமாண்டில் வைக்க முடியும். நாம் நீதி இலாகாவைப் பிரித்து விட்டோம். இருந்தும் இத்தகைய ஓர் அதிகாரம் கமிஷனருக்கு அளிக்கப் பட்டிருப்பது லூயி மன்னன் காலத்தில் இருந்தது போன்று உள்ளது. இந்த அதிகாரம் குறைக்கப்படவேண்டுமென்று சொல்லி இதற்கான வழி வகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை :** கனம் உதவி சபாநாயகர் அவர் களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய இரண்டொரு கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் நல்ல முறையில் பணிபுரிந்துகொண்டு வருவது போலீஸ் இலாகா என்பதை நாம் மறுக்க முடியாது. மற்ற இலாகாவில் வேலை செய்யக்கூடியவர்களாவது ஏழு மணி, எட்டு மணி என்று பணியாற்று கிறார்கள். ஆனால் போலீஸ் இலாகாவினர் 24 மணி நேரமும் பணியாற்றி வருகிறார்கள் என்றால் மிகையாகாது. அவர்கள் 24 மணி நேரமும் ஒரு நாளில் மக்களுக்காகவே தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி யிருந்தும் அவர்களுக்குக் கொடுக்கின்ற படி அளவு மிகவும் குறைவாக இருப்பது உண்மையில் மிகவும் வருந்தத்தக்க விஷயம். உடல் வலிமை, மன வலிமை, அறிவு வலிமை ஆகிய எல்லாம் ஒருங்கே அமைந்த அவர் களுக்கு தக்க ஊதியமும், படியும் கொடுக்க வகை செய்யவேண்டும். அதோடு அவர்களுக்கு வீட்டு வசதி மிகமிகத் தேவை. தனியாக வாடகை வீட்டில் இருக்கவேண்டுமென்றால்கூட அவர்களுக்குக் கொடுக்கிற ஊதியம் போதாது என்கிற காரணத்தினால் வீட்டு வசதியைப் பெருக்க வழிவகை செய்யவேண்டும். அது மிகவும் அவசியமானது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மதுவிலக்கைப் பற்றி எனக்கு முன்பாகப் பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது மதுவிலக்குக் குற்றம் அதிகமாக வருவதனால் போலீஸ்காரர்களால் மற்ற குற்றங்களைப் பற்றி கவனமே செலுத்த முடியாத அளவு வேலை அதிகமாக இருக்கிறது. ஆகவே முன்போலவே மதுவிலக்கு சம்பந்தமாகத் தனி இலாகா இருந்தால் நல்லது. இந்த இலாகாவில் இருந்து அதைப் பிரித்து முன்போலவே தனியான ஒரு இலாகாவாக அதை அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, சென்னை நகரத்திலிருந்து மற்றப் பகுதிகளுக்கு வந்து செல்வது மிகவும் ஆபத்தான நிலைமையை உண்டாக்குவதாக இருக்கிறது. குறிப்பாக, சென்னையிலிருந்து விழுப்புரம் வரை போக்கு வரத்து அதிகமாக இருக்கும் காரணத்தால், ஒரு வாரத்திற்கு முன்னால் சிங்கப்பெருமாள் கோயில் பக்கத்தில் ஒரு ஆக்சிடெண்ட் நிகழ்ந்து மிகவும் வருத்தப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இரண்டு பேர் காரில் சென்றுகொண்டிருக்கும்போது எதிரில் வந்த லாரி மோதியதன் காரணமாக அந்த இடத்திலேயே அந்த இரண்டு பேரும் மாண்டிருக் கிறார்கள். விழுப்புரம் வரை டிராபிக் கண்ட்ரோல் மிகவும் குறைவாக இருக்கிறது. 1937-ம் ஆண்டில் அந்த இலாகா எந்த அளவுக்கு இருந்ததோ அதே அளவுக்குத்தான், இன்று இவ்வளவு ஜனத்தொகையும் போக்குவரத்தும் அதிகரித்திருந்தும், டிராபிக் கண்ட்ரோல் இலாகாவின் அளவு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றி முன் போலவே செருப்புகளைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, ரைட்டர்களாக ஸ்டேஷன்களில் பணியாற்றுகிறவர்கள் கூட அந்தப் பெரிய பூட்சுகளை அணிந்து கொள்ளவேண்டுமென்று விதி இருப்பதாக அறிகிறேன். அவர்களுக்காவது அதிலிருந்து விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது சாதாரண விஷயம் என்று சொல்லலாம். ஆனால் பல போலீஸ்காரர்கள் இந்த பூட்சுகளை போடாததன் காரணமாகக் கடுமையான தண்டனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அரசாங்கம் இதைப் பற்றிப் பரிசீலித்து, ரைட்டர்களாக இருக்கிறவர்களுக்காவது விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டங்களுக்கு வருகிற ஒற்றர்கள் எங்கள் கூட்டங்களுக்கு வருவது மட்டும் போதாது. எல்லாக் கட்சிக் கூட்டங்களுக்கும் ஒற்றர்கள் அனுப்பப்படவேண்டும். அப்படி அனுப்பப்படுகிற ஒற்றர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். எங்கள் பகுதிக்கு ஒற்றர்கள் வேலூரில் இருந்து அனுப்பப்படுகிறார்கள். அப்படி அனுப்பப்படுகிறவர்களில் சிலர் பெண்கள். அவர்களுக்கு பஸ் வசதியோ. இதர வசதிகளோ இல்லை. இவர்கள் பல சமயங்களில் கிராமங்களில் வந்து தங்க நேரிடுகிறது, இரவு நேரங்களில். ஆனால் இங்கு போலீஸ் ஸ்டேஷன் கிடையாது. அவர்களின் பாதுகாப்பிற்காக ஒரு கான்ஸ்டபிள் கூட வருவார், அவருடன் எங்காவது ஒரு குக்கிராமத்தில் தங்க நேரிடுகிறது. எவ்வளவோ செலவு செய்து அவர்களை அனுப்பி வைக்கிறார்கள், கிராமங்களுக்கு. ஆகவே அவர்கள் திரும்ப தலைமை அலுவலகத்திற்கு வந்த சேர அங்கிருந்து ஜீப் அல்லது கார் வசதி செய்து கொடுக்கவேண்டும். பின்னர், திறமை, தகுதி பார்த்து அவர்களுக்கு உத்தியோக உயர்வு அளிக்கப்பட வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பொதுவாக ஸீனியாரிட்டி பார்த்து ஸீனியர்மோஸ்டாக உள்ளவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கப்படுகிறது. அதோடு கூட உண்மை, சத்தியம், நேர்மை இவற்றை கடைப்பிடிப்பவர்களுக்கு அவர்கள் யார் யார் என்று பார்த்து அதையும் உத்தியோக உயர்விற்கு ஒரு தகுதியாக சேர்த்துக் கொண்டால் உண்மையில் அவர்கள் நல்ல முறையில் பணியாற்ற அவர்களுக்கும் விருப்பம் இருக்கும். உண்மையாக உழைத்தால், நீதியோடு பாடுபட்டால் நமக்கு உத்தியோக உயர்வு கிடைக்கும் என்று அவர்கள் நல்லமுறையில் பணியாற்றுவார்கள். ஆகவே இதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அடுத்து தீ அணைக்கும் படைகள் பெரும்பாலும் முனிசிபல் நகரங்களில் மட்டும்தான் வைக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரை தென் பகுதி, வட பகுதி என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. வட பகுதியில் காவேரி ஆற்றுக்கு வடக்கே பல பெரிய கிராமங்கள் இருக்கின்றன. அதை ஒரு மாவட்டமாக பிரிக்க வழி இருந்தாலும் அங்கு ..பயர் ஸ்டேஷன் கிடையாது. அரியலூர் உடையார்பாளயத்திற்கு திருச்சியில் இருந்துதான் தீ அணைக்கும் படை வரவேண்டியிருக்கிறது. 60 மைல்கள் தாண்டி வருவதற்குள் தீ பரவி எல்லாம் சாம்பலாகி விடுகிறது. அதனால் பல சேரிகள் பழாகி விடுகின்றன. பெருவளப்பூர் போன்ற கிராமங்கள் பல இருக்கின்றன. எங்கள் பெரம்பலூர் வட்டாரத்தில் சில கிராமங்கள் இருக்கின்றன. கிராமப் பகுதிகளில்தான் தீ அதிகமாக பரவுகிறது. நகரத்தில் இருந்து தீ அணைக்கும் படை வருவதற்கு முன் தீ பரவி எல்லாம் சாம்பல் ஆகிவிடுகிறது. ஆகவே தீ விபத்தைத் தடுக்க ஒரு இடத்தில்—பெரம்பலூர் அல்லது அரியலூரில்—எங்கேயாவது ஒரு இடத்தில் இந்த ஆண்டே ஒரு பயர் ஸ்டேஷன் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவோடு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. கோ. ராஜாராம்: மதிப்பிற்குரிய சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றை நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். பொதுவாக இம்மாநிலத்தில் தொழிற்சாலைகள் பெருகவில்லை, வளங்கள் பெருகவில்லை, அபிவிருத்தி வேலைகளில் முன்னேற்றம் காணவில்லை என்றெல்லாம் குறைப்பட்டுக் கொள்





கிறவர்கள்கூட மாநில ஆட்சி திறமை பற்றியும், நிர்வாகத்திறன் பற்றியும் பெருமைப்படுகிறார்கள், புகழ்மாலை சூட்டுகிறார்கள். ஆட்சித் திறன், நிர்வாகத் திறமை இவற்றில் நம் சென்னை மாநிலம் பிற மாநிலங்களைவிட சிறப்பானதொரு இடத்தைப் பெறுகிறது என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாகவும் சிறப்பாகவும் சென்னை மாநில போலீஸ் நிர்வாகத்திற்கு, எப்போதுமே ஒரு தனிப் பெயர் உண்டு. மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட நம் மாநில போலீஸ் நிர்வாகம் நல்ல பெயரைப் பெற்று வந்திருக்கிறது. அப் பெயருக்கு இழுக்கு வராதவண்ணம் அதைக் கட்டிக்காத்து பணி புரிந்து வருபவர்கள் நம் பாராட்டுதல்களுக்கு உரியவர்களாவர். போலீஸ் இலாகாவினரைப்பற்றி கூறும்போது சாதாரணமாக அவர்களை அரசாங்க ஊழியர்கள், அரசாங்கப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் கொண்டு வந்தாலும் உண்மையிலே அவர்களை சமுதாயத்திற்கு சேவை செய்கிற சேவையாளர்கள், சமுதாயத் தொண்டர்கள் என்று தான் நான் கருதுகிறேன். அதற்கு மேலே போனால் அவர்களை தியாக வாழ்வு வாழ்பவர்கள் என்று கூடக் குறிப்பிடலாம். சாதாரண மனிதன் உல்லாசமாக வீட்டிலிருந்து உரியவளோடும், பெற்ற செல்வங்களோடும் மகிழ்ந்து கொண்டிருக்கும்போது சமுதாயத்தின் நல்வாழ்விற்காக, சமுதாயத்தின் சுக வாழ்விற்காக அவர்கள் பணி புரிந்து வருகிறார்கள். கதை எழுதுபவர்கள் கூறுவார்கள். கோழி கூவுவதற்கு முன் உழவன் கலப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்று பாடுபட்டு கோட்டான் அலறும்போது வீடு திரும்புகிறான் என்று உழவர்களின் அவல நிலை பற்றி வர்ணிப்பார்கள். ஆனால் போலீஸ்காரர்கள் பல நேரங்களில் கோட்டான் அமரும்போது கூட வீடு திரும்புவதில்லை. வீட்டை மறந்து, வீட்டு சுகங்களை மறந்து சமுதாயம் அமைதியாக வாழ, சமுதாயத்தில் உள்ளவர்கள் நிம்மதியாக வாழ போலீஸ்காரர்கள் பணி புரிகிறார்கள். சமுதாயத்தில் மக்கள் நிம்மதியாக வாழ அமைதியாக இருக்க தீய சக்திகள், சமுதாய விரோத சக்திகள் அதை அழித்து விடாதிருக்க அவர்கள் பாடுபடுகிறார்கள். இப்படி கூறும்போது பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல் ஆங்காங்கு சிலபல தவறுகள் ஏற்படலாம். சமுதாயத்தின் நல வாழ்வை வேலையாக இருந்து பாதுகாத்து வரும் பாதுகாவலர்களாக அவர்கள் இருக்கும்போது பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல் சில பல தவறுகள் நேரிடும்போது வேலியே பயிரை மேய்கிறது என்ற மொழிதான் நினைவுக்கு வருகிறது. ஓரிருவருக்கு புற்று நோய் கண்டு விட்டால் சமுதாயத்தையே புற்று நோய் அரிக்கிறது என்று சொல்வது பொருத்தமாக இராது. அதேபோல் ஓரிரு பேர்கள் குற்றம் செய்வதினால் அந்த இலாகா முழுமையையும் ஒட்டு மொத்தமாக குற்றம் சொல்வது விவேகமாகாது. என்றாலும் சிலர் செய்கிற தவறு அந்த இலாவிற்கே மாசு தேடித் தருகிறது. அதாவது அழகிய முகத்தில் தீக் காயம் ஏற்பட்டு முகத்திற்கே களங்கம் ஏற்படுத்துவதைப் போல், தவறுகள் செய்கிறார்கள் என்றால் இது பெரிய அதிகாரிகளைத் தீண்டுவதில்லை. கீழ்தரத்தில் இருப்பவர்களைத்தான் அது பலி கொள்கிறது. அதற்குக் காரணம், அவர்கள் வாழ்க்கைத்தரம் உயரவில்லை, அவர்கள் வசதிகள் பெருகவில்லை, அவர்களின் சுயதேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியவில்லை. ஆகவே தவறு செய்கிறார்கள் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை. குறுகிய வழியில் செல்கிறவர்களுக்கு அவர்களுக்கு என்ன வசதிகள், வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்தாலும் அவர்கள் தங்கள் தேவைகளை வளர்த்துக்கொள்வார்களே தவிர திருந்த மாட்டார்கள். அதற்குள்ள பரிகாரம் மனமாற்றம்தான். சமுதாயத்திற்கு அவர்களுக்குள்ள தொடர்பை, அவர்கள் ஆற்ற வேண்டிய பொறுப்பை அவர்கள் உணர்ந்தால் அவர்கள் திருந்தி விடுவார்கள். ஆக சிறு தவறுகள் செய்பவர்களை நான் கண்டிக்கவில்லை, அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். உங்கம் பணியின் பொறுப்பை உணர்ந்து தவறுகளைத் திருத்திக் கொண்டு நல்ல முறையில் பணி புரியுங்கள் என்று அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அகில உலகத்திற்கு பஞ்சசீலத்தைப் போதித்து அது பற்றிய விவாதத்தில் உலகம் ஈடுபட்டிருக்கும்போது இங்கு பஞ்சமா பாதகத்தைப் பற்றிய விளக்கங்கள், வியாக்கியானங்கள் தரப்பட்டன. அந்த பஞ்சமாபாதகங்கள் இங்கு நடைபெறுகிறதா, இல்லையா என்ற பிரச்சினையில் நான் இறங்கவில்லை. தவறுகள் செய்வது, குற்றங்கள் புரிவது உலக

[திரு. சு. அங்கமுத்து நாயக்கர்] [12th March 1963

அதனால் பலன் அடைகிறார்கள். அதையெல்லாம் அரசாங்கம் மூலமாகச் செய்ய வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் செய்தால் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயரும். அப்படி அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர அவர்களுக்குப் போதுமான வசதியைச் செய்து கொடுக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கல்விச் சலுகையிலும் கூட, அவர்கள் வாழையடி வாழையாக இருக்கும் தொழிலில் அவர்களுடைய பிள்ளைகளும் வர வேண்டிய முறையில் வசதி செய்து கொடுக்கவேண்டும், அதற்காக கல்வி விஷயத்தில் அவர்களுக்குச் சில சலுகைகளைக் கொடுக்க வேண்டும். அந்த முறையில் அவர்களுக்குக் கல்வி வசதி செய்து அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தீயணைக்கும் படை பற்றிச் சொன்னார்கள். அது வாஸ்தவம் தான். ஏதாவது தீ பற்றிக்கொண்டால், போன் பண்ணினால் சேலத்தி லிருந்தோ அல்லது கடலூரிலிருந்தோ எங்கள் பகுதிக்கு தீயணைக்கும் படை வந்து சேரவேண்டும். இப்படி 40–50 மைல்கள் வருவதற்குள்ளாக எல்லாம் சாம்பலாகி, எல்லோரும் போன பிறகு தீயணைக்கும் படையினர் வந்து சேருகிறார்கள். அந்த அளவில் இல்லாமல் ஒவ்வொரு தாலூகா வுக்கும் தீயணைக்கும் படை ஏற்பாடு செய்து மக்களுக்கு நல்ல விதமாகச் சேவை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு தேடித் தரவேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் எங்கள் ஊரில் பெத்தநாயக்கம்பாளையம் என்ற கிராமம், அது ஒரு மேஜர் பஞ்சாயத்து. 12,000 மக்களுக்குமேல் வசிக்கிறார் கள். அங்கு ஒரு அவுட் போஸ்ட் ஏற்படுத்த வேண்டுமென்று நான் முன்னமேயே சொல்லி வந்திருக்கிறேன். அதையும் ஊன்றி கவனித்து அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த போலீஸ் மான்யத்தை ஆதரித்து, போலீஸ் நன்றாக திறமையாகப் பாடுபடுகிறது என்று தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் கொண்டு வரப்பட்டிருக்கும் போலீஸ் மான்யத்தின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கள்ளச் சாராயம் காய்ச்சுவது இந்த நாட்டில் குடிசை தொழில் போல இருக்கிறது என்று பேசினார்கள். அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிற குடிசைத் தொழில்களைக் காட்டிலும், மிக மிக நல்ல வருவாய் உள்ள குடிசைத் தொழிலாக எங்கு பார்த்தாலும் கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதை மதுவிலக்கு மூலம் எந்த விதத்திலும் தடைப் படுத்த முடியவில்லை என்பதைதான் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கள்ளச் சாராயம் அதிகமாக நாட்டிலே பெருகியிருப்பதன் காரணமாகத் தான் இத்தனை குற்றங்குறைகள் ஏற்படுகின்றன என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது இருக்கிற நிலைமையில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதை தடைசெய்ய, மது விலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும் என்று எனக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மது விலக்கு வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்றால், மிகத் தீவிரமாக மாற்று முறைகளை கண்டுபிடித்து கள்ளச்சாராய வேட்டையை ஆடவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

நமது நாட்டிலே மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்ததன் மூலம் பல கோடி ரூபாய் நமக்கு நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக் கிறது. அப்படியிருந்தாலும்கூட இதை ஏன் நாம் அமுல் நடத்திக்கொண்டு வருகிறோம் என்றால், மதுவிலக்கினால் பல குடும்பங்கள் நன்மை அடைகிறது, பல குடும்பங்களுக்கு லாபம் இருக்கிறது, குற்றங்குறைகள் குறையும்



12th March 1963] [திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

என்ற காரணங்களினால்தான் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும், மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்துகிறோம். அது நல்ல முறையில் நடைபெறாமல், கள்ளச்சாராயம் காய்ச்சுவது குடிசைத் தொழிலாக வளர்ந்துகொண்டிருந்தால், நாட்டிற்கு நஷ்டம் ஏற்படுகிறது, நமது சர்க்காருக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. மதுவிலக்கை நல்ல முறையில் அமுல் நடத்தி, இதுபோன்ற குடிசைத் தொழில் என்று சொல்லக்கூடிய அளவில் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதை தடுக்கவேண்டும். அல்லது மதுவிலக்கை ரத்து செய்துவிட வேண்டும். நமக்கு அதனால் பல கோடி ரூபாய் லாபம் வரும்படியாகவாவது செய்யவேண்டும் அவசியம் இந்த ஆண்டில் துரிதமாக ஒரு வழியைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது நாட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சுவது போல கள்ளக் கடத்தலும் அதிகமாக இருக்கிறது. கள்ளக்கடத்தல் பேர்வழிகளை பிடிப்பதில் ஒரு சில கஷ்டங்கள் இருக்கின்றன. கள்ளக் கடத்தலை கதர் கொடியின்கீழ் பல பேர்கள் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். கதர் கொடி கட்டிய கார்களில் கள்ளக் கடத்தல் அதிகமாக நடத்தப்படுகிறது இந்த நாட்டில். அப்படி கதர் கொடி கட்டிய கார்களை நிறுத்தி சோதனை செய்வதிலே அது ஆட்சியை சேர்ந்தவர்களின் கட்சிக் கொடியாதலால் அதிகாரிகள் தயங்கு கிறார்கள். ஆகவே, நமது அரசாங்கம் அப்படிப்பட்டவர்களை நிறுத்தி சோதனை செய்வதில் முதல் தரமான சலுகையை போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று குறிப்பாக நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் ஸ்டேஷன்களில் கேஸ்கள், பெட்டிஷன்கள் கொடுக்கப் படுகின்றன. ஆனால், பல மாதங்கள் ஆகியும்கூட, கேஸ்களும், பெட்டிஷன் களும் விசாரிக்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. அதற்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயிக்கவேண்டும். இத்தனை நாட்களுக்குள் கேஸ்கள், பெட்டிஷன்களை ஸ்தலத்திற்குச் சென்று விசாரிக்க வேண்டும் என்று அதற்கு ஒரு காலவரம்பு நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஸ்தலத்திலேயே விசாரணையை நடத்தவேண்டும். அப்படி யில்லாமல் குற்றம் செய்தவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூப்பிட்டு, அவர்களை மட்டுமல்லாமல், அவர்களுடைய குடும்பத்தினரை மட்டுமல்லாமல், அவர்களைச் சேர்ந்த மற்றவர்களையும் கூப்பிட்டு வைத்துக்கொண்டு காலையிலே விசாரிக்கிறேன், சாயங்காலத்தில் விசாரிக்கிறேன் என்றெல்லாம் நாள் கடத்திக்கொண்டே போகிறார்கள். அதனால் அவர்களுக்கு ஏராளமாக பணச்செலவு ஏற்படுகிறது. அம்மாதிரி நிலையை தவிர்ப்பதற்கு கண்டிப்பாக விசாரணையை ஸ்தலத்திலேயே நடத்தவேண்டும். அதுவும் உடனடியாக நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது நாட்டிலே போலீஸிடம் கேஸ் கொடுத்தால் அதிகமாகச் செலவு ஆகும் என்ற பீதி ஏற்பட்டிருக்கிறது. அப்படி நிலைமை இருக்கும்வரை குற்றம் புரிந்தவர்கள் மீது கேஸ் போடுவது கஷ்டமாக இருக்கும். அந்த நிலையைப் போக்குவதற்கு உயர்தர போலீஸ் அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று தங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். சில கேஸ்களில் இரண்டு பார்ட்டிகளும் சமாதானமாகப் போகிற நிலை ஏற்படும்பொழுது, போலீஸ் அதிகாரிகள் ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். நான் கேட்கிறேன் இரண்டு பேர்களும் இந்த நாட்டில் சமாதானமாக வாழவேண்டும் என்பது தானே குறிக்கோள். அப்படியிருக்கிறபொழுது, என் அம்மாதிரி கேஸ்களில் போலீஸ் அதிகாரிகள் தலையிடவேண்டும், தலையிட்டு கேஸ்களை நடத்து வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்கிறேன்.

எங்கள் ராமனாதபுரம் ஜில்லாவில், குறிப்பாக கிழக்கு ராமனாதபுரம் பகுதியில் இப்பொழுது நடந்த தேர்தல்களுக்குப் பிறகு ஒரு தினுசான ஜாமீன் கேஸ்கள் போடுகிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்கும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் ஏதாவது மனக்கசப்பு ஏற்பட்டு, சச்சரவுகள் ஏற்பட்டால் ஒரு காங்கிரஸ்காரரை எடுத்துக்கொண்டு, 30 பேர்கள் எதிர்க்கட்சியைச்

சார்ந்தவர்களை எடுத்துக்கொண்டு ஜாமீன் கேஸ் போடுகிறார்கள். அதுபற்றி போலீஸ் ஆபீஸர்களிடம் கேட்டால், நாங்கள் இரண்டு பார்ட்டிகளின்மீதும் கேஸ் போட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று பார்க்கவேண்டும். 1, 2 காங்கிரஸ்காரர்களை மட்டும் சேர்த்துவிட்டு, எதிர் கட்சியைச் சார்ந்தவர்கள் 30, 40 பேர்களைச் சேர்த்து ஜாமீன் கேஸ்கள் போடுவது, எதிர்க்கட்சிக்காரர்களுக்கு தொந்தரவு கொடுப்பதாக இல்லையா. இதையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து இப்படிப்பட்ட நிலை ஏற்படாதவாறு கண்காணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் அதிகாரிகள் கேஸ்களை விசாரித்து நியாயத்தை நிலை நாட்டுவதிலே கஷ்டங்கள் இருக்கின்றன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். போலீஸ் நிர்வாகத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகமாகத் தலையிடுகிறார்கள். அதனால் போலீஸ் அதிகாரிகள் நியாயத்தைச் செய்ய முடியாமல் தயங்குகிறார்கள். சென்ற போலீஸ் மான்ய விவாதத்தின் போதுகூட நான் இதைப்பற்றி சொல்லியிருக்கிறேன். அந்த நிலை இன்னும் குறைந்தபாடாக இல்லை. குறைவதற்குப் பதிலாக, அதிகமாக இருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் பல கேஸ்களில் நியாயத்தைச் செய்ய முடியாமல் தயங்குகிறார்கள். இனிமேலாவது இம்மாதிரி கேஸ்களில் ஆளும் கட்சியினர் தலையிடாமல் இருக்கச் செய்யவேண்டும் என்று நான் அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கு பார்த்தாலும் குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன. போலீஸ் அதிகாரிகள் ஸ்தலத்திற்குச் சென்று கேஸ்களை உடனடியாக விசாரிக்க வேண்டுமென்றால், அவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே ஒரு சர்கிள் ஜூரிஸ்டிக்ஷனுக்கு ஒரு ஜீப் கார் அவசியம் ஒதுக்கிக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் அவர்கள் நல்ல முறையில் கேஸ்களை கவனிக்க முடியும். சப் இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்களுக்கு ஒரு மோட்டார் சைக்கிளும், ஹெட்கான்ஸ்டேபிள் போலீஸ்காரர்களுக்கு சைகிள் வசதியும் அவசியம் செய்து கொடுக்க வேண்டும்.

பல கிராமப்புற போலீஸ் ஸ்டேஷன்களில் வேலை செய்பவர்களுக்கு வீட்டு வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். பல தூரங்களிலிருந்து அவர்கள் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு செல்லவேண்டியிருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கும் போலீஸ் ஸ்டேஷனில் வேலை செய்பவர்கள் குடியிருப்பதற்கு முதல் இடம் கொடுத்து அவர்களுக்கு ஸ்டேஷன் சமீபத்தில் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையைச் சார்ந்த பரசுராமன் என்பவர் அடுத்த வீட்டுக்காரர் தனக்கு தொந்தரவு கொடுக்கிறார் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல முறை மனுக்கள் கொடுத்தும், நமது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தும், எந்தவித பலனும் ஏற்படவில்லை. அங்கே சம்பந்தப்பட்டவர் 'எந்த மந்திரியானாலும், எந்த அதிகாரியானாலும் என் சம்பந்தப்பட்டவரை எதுவும் செய்ய முடியாது' என்று கூறிக்கொண்டிருக்கிறார். இந்த நிலைமைகளையெல்லாம் நன்றாகப் பரிசீலித்து, அதற்கு வேண்டியவற்றை உடனே செய்யவேண்டும் என்று நமது முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் லாக்கப்பில் பல பேர்கள் இறப்பதைப்பற்றி பேசினார்கள். அதுபற்றி ஒரு யோசனை சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். போலீஸ் லாக்கப்பில் யாராவது இறந்துவிட்டால், உடனே கலெக்டர் அவர்கள் ஸ்தலத்திற்கு வரவேண்டும், டி. எம். ஓ-வும் வரவேண்டும், இறந்தவர்களுடைய சொந்தக்காரர்களையும் கூப்பிடவேண்டும். அவர்கள் விரும்பினால் அவர்களுக்கு வேண்டிய டாக்டர் ஒருவரையும் கூட வைத்துக் கொள்ளவேண்டும். இந்தமாதிரி எல்லோரையும் கூப்பிட்டு வைத்துக் கொண்டு பிரேத பரிசோதனையை நடத்தினால், லாக்கப்பில் எப்படி அந்த





மனிதர் இறந்தார் என்பதுபற்றி எதையும் மறைக்கமுடியாத ஒரு நிலை ஏற்படும். அம்மாதிரி முறையை அமுல் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் போலீஸ் மான்யக் கோரிக்கையை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்திலுள்ள போலீஸ் அமைப்பு பாரத நாட்டிலே உள்ள வேறு மாநிலங்களைக் காட்டிலும் முதன்மையான ஒரு போலீஸ் அமைப்பாக இருக்கிறது என்று நாம் மட்டும் சொல்லி பெருமைப்படுவதோடு அல்லாமல், அன்னிய நாட்டிலிருந்து நமது தமிழகத்திற்கு வருகிற மாபெரும் தலைவர்களும் இதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக சென்னை நகரத்திலே பந்தோபஸ்திற்காக போலீஸ் இலாகாவினர் செய்திருக்கும் ஒரு சீரான அமைப்பை அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள், நடைமுறையில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு சிறிய தவறுகள் இருக்கலாம். அந்தத் தவறுகளை வைத்துக்கொண்டு அதற்குப் பொறுப்பாளி அந்த இலாகாதான் என்று சொல்லுவதில் பிரயோசனம் இல்லை. கதர்க்கொடியின் கீழ் கள்ளக் கடத்தல் நடக்கிறது என்று குறிப்பிட்டார்கள். கதர்க் கொடி கடையிலே விற்கப்படுகிறது. திருடர்கள் போய்க் கேட்டாலும் கூட கதர்க்கொடியை வாங்கமுடிகிறது. யார் வேண்டுமானாலும் கதர்க்கொடி வைத்துக்கொண்டு போகலாம். எனக்கு முன்பு பேசிய எதிர்கட்சிக்காரர்களும் கூட கதர்க்கொடியை உபயோகித்துக்கொள்ளலாம். ஆகவே, கதர்க் கொடியின் கீழ் கள்ளக் கடத்தல் நடக்கிறது என்று சொன்னால், அதற்கு சர்க்கார் எப்படி பொறுப்பாளியாக இருக்க முடியும் ? இன்றைக்கு சிலர் இருக்கிறார்கள், அவர்கள் கதரைக் கட்டிக்கொண்டு, குற்றம் செய்து, அந்தக் குற்றத்தை காங்கிரஸ்காரர்கள் பேரில் சாட்டிவிடலாம என்று நினைத்து அவ்வாறு செய்கிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் கூட கதரைக் கட்டிக்கொண்டு, காங்கிரஸ்காரர்கள் பேரில் பழி சுமத்துவதற்காக கதரைக் கட்டிக்கொள்கிறார்கள் என்று தெரியவருகிறது. ஆகவே, குற்றம் செய்யாதவர்கள் பேரில் குற்றம் சுமத்தவேண்டும் என்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல.

மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய தலைவர் அவர்களே கொண்டு வந்த இந்த மதுவிலக்குத் திட்டத்தைக் கண்ணுங்கருத்துமாக அமுல் நடத்த வேண்டும் என்று சொல்லுவதை விட்டுவிட்டு, ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லுவதைப் பார்த்தால் எனக்கே ஆச்சரியமாய் இருக்கிறது.

**திரு. சா. கணேசன் :** ரத்து செய்ய வேண்டுமென்று அவர் சொல்லவில்லை. அதை நன்றாக அமுல் நடத்த வேண்டுமென்றும், அப்படி அமுல் நடத்த முடியவில்லையென்றால், ரத்து செய்வதன் மூலமாகப் பணம் மிஞ்சும் என்று சொன்னார். ஆகவே, அப்படிச் சொன்னதை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னதாக கனம் அங்கத்தினர் எடுத்துக் கொள்ளக்கூடாது.

**திரு. ஜே., மாதா கவுடர் :** இன்றைக்கு நாட்டிலே கொலைக் குற்றங்கள் செய்தால் ஐ. பி. ஸி.–யில் 302-வது செக்ஷன் இருக்கிறது. இன்றும் கொலைகள் நடக்கின்றனவே, அதற்காக அந்த செக்ஷனை எடுத்து விடுங்கள் என்று சொன்னால் எவ்வளவு பொருத்தமாக இருக்குமோ, அந்த முறையில்தான் எதிர்க்கட்சி மெம்பர் சொன்னார், நிறைவேற்ற முடியவில்லை என்றால், ரத்து செய்து விடுங்கள் என்று சொன்னார். கொலைக் குற்றங்கள் நடப்பதால், அந்த செக்ஷனை எடுத்துவிடவேண்டும் என்று சொல்லுவதுபோல்தான் இது இருக்கிறது, அவர் அப்படிச் சொல்லுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. சாதாரணமாக, ஜாமின் கேஸ்கள் 107–வது செக்ஷன் கீழ் போடப்படுகின்றன. இரண்டு கட்சிகளுக்குள் மோதல் ஏற்படுமென்ற நிலைமை ஏற்பட்டு, அப்படி மோதல்

சமுதாயத்திற்கு புதிதல்ல. தர்மம் என்ற சொல்லுக்கே தலைவனாக இருந்த தர்மன் கூட மனைவியை வைத்து சூதாடிய பாதகத்தைச் செய்திருக்கிறான். இந்தத் தவறுகள் இயற்கையே. குற்றத்தை ஒருவர் மேல் சுமத்தி விட்டு பொறுப்பை தட்டிக் கழிப்பது சமுதாயத் தொண்டாக அமைவதில்லை. ஜனநாயகத்தின் தந்தை என்று சொல்கிற ரூஸோ சொல்லியிருக்கிறார்—"சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு அதை ஏற்றுக் கொண்டு அதற்காக பணி புரிவதாக மனிதன் வலிந்து செய்து கொண்ட ஒப்பந்தம் தான் ஜனநாயகத் தத்துவம்" என்று கூறியிருக்கிறான். சட்டம் செய்பவர்கள் மட்டும் அதில் அக்கரை எடுத்துக் கொண்டு அமுல் செய்யவேண்டுமென்று கூறி பிறர் பொறுப்பற்ற நிலையில் இருந்து விடக்கூடாது சட்டதிட்டங்களை அமுல் படுத்த அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். மதுவிலக்கு பற்றி இங்கு பல கருத்துக்கள் கூறப்பட்டன. மதுவிலக்கு பற்றி குறிப்பிடும்போது போலீஸைப் பற்றி சந்தோஷத்தோடு மன நிறைவோடு குறிப்பிடும் நிலையில் நான் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மது விலக்குத் திட்டம் குறித்து கீழ் மட்டத்தில் இருக்கிற போலீஸ் அதிகாரிகள் பொறுப்பற்ற தன்மையோடு கவனக் குறைவாக இருக்கிறார்கள். மதுவிலக்குக் குற்றங்களுக்கு உடந்தையாகவும், குற்றங்களை தூண்டி விடும் நிலையில் அவர்கள் இருப்பதாக பல செய்திகள் வருகின்றன. நேரில் சந்திக்க வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. இந்த மதுவிலக்கை அமுல் படுத்துவதில் உள்ள அக்கரை எங்களை விட இந்த மன்றத்தில் 50 பேர்கள் உள்ள கட்சிக்கு அதிக அக்கரை இருக்குமென நினைக்கிறேன். ஏனென்றால் நாங்கள் எல்லாம் மெம்பர்கள். அதை இந்த உலகத்தில் மட்டும் அமுல் படுத்தினோம். அவர்கள் தேவ லோகம் வரை மது விலக்கை அமல் செய்தவர்கள். ஆகவே சிறப்பாக அவர்களுக்கு இதில் அக்கரை இருக்கவேண்டும். மது விலக்கு ஏற்பட்டு அதில் சில தவறுகள் இருந்தாலும் அல்லது ஏற்பட்டாலும் அதனால் இன்று நாட்டில் ஒரு புது மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை யாராலும மறுக்க முடியாது. குடித்து விட்டு மனைவியின் தாலியை அறுத்துக்கொண்டு தள்ளாட்டம் போட்ட கணவனை நாம் இன்று காண்பதில்லை. மனைவியை அடித்து தெருவில் விரட்டும் காட்சியை நான் இன்று காணவில்லை. தாலியைப் பறி கொடுத்து அழும் மனைவிகளை காணவில்லை. குடித்து விட்டு தெருவில் புழுதியில் விழுந்து புரளும் காட்சியை நாம் இன்று காண முடிவதில்லை.

11-00 a.m. அநாகரீக வாழ்வு மறைந்து விட்டது; சமுதாயத்திலே பயந்து வந்த வாழ்க்கை மறைந்து விட்டது, நல்ல பண்புள்ள, நல்ல சிறப்பான வாழ்க்கை ஏற்பட்டிருக்கிறது, இந்த மது விலக்கு காரணமாக என்று சொல்லிக்கொண்டு, இதை இன்னும் சிறப்பாகச் செயல்படுத்தினால் நாகரீக வாழ்வு பெருகும், நடை முறைகள் மாறும், அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தப் பொறுப்பை முக்கியமாகச் செயல்படுத்துகிற போலீஸ் துறையினர் எச்சரிக்கையாக இருந்து சிறப்பாகச் செயலாற்றி, மக்களுக்கு சிறப்பான வாழ்வு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கடைசியாக, கத்தி—கனியை அறுக்கவும் பயன்படுகிறது, அதையே இதயத்தில் பாய்ச்சவும் பயன்படுகிறது என்று கூறி தரப்பட்டு இருக்கிற அதிகாரத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, அதைச் சார்ந்திருக்கிற அதிகாரிகளுக்கும் நாட்டுக்கும் நல்ல பெயரைத் தேடித் தரும் வகையில் போலீஸ் துறையினர் பணியாற்றவேண்டும்—ஆற்றுகிறார்கள்—என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சு. அங்கமுத்து நாயக்கர்**: மதிப்புக்குரிய கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது போலீஸின் நிர்வாகத்தைப் பற்றி பல விதமாகப் பேசினார்கள். ஆனாலும் தமிழ் நாட்டினுடைய போலீஸ் நிர்வாகமானது மிகவும் சிறந்து விளங்குகிறது. இந்தியாவிலேயே முதலிடம் பெறுகின்றது—என்று எதிர் கட்சி நண்பர்கள் கூடச்சொன்னதைப் பற்றி நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுவாக போலீஸ் நிர்வாகமானது நமது மாநிலத்தில் பல வழியிலேயும் சிறந்து நல்ல சேவை செய்து கொண்டு வருகிறது.





உதாரணமாக எலெக்ஷனில் கூட பாரபட்சம் இல்லாமல் நமது போலீஸ் நிர்வாகம் நடந்துகொண்டிருக்கிறது. சென்ற விலை உயர்வுப் போராட்டத்தில் போலீஸானது, எந்த வித பாகுபாடும் இல்லாமல், எந்த வித பாரபட்சமும் இல்லாமல் நடந்து கொண்டதால்தான் ஓரளவுக்கு ஓரிரண்டு தினங்களில் அமைதியை நிலை நாட்ட முடிந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. இப்போது சொல்லலாம்—அடிப்பட்டவர்களுக்கு ஏதேதோ பலவித எண்ணங்கள் தோன்ற முடியும்—அல்லது கலந்துகொண்டவர்களுக்குப் பலவித எண்ணங்கள் தோன்ற முடியும். அந்த வகையில் போலீஸ் நிர்வாகமானது, மக்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை நம்முடையது என்று நினைத்து அவர்களுக்காகப் பணியாற்றியதை யாரும் மறுக்க முடியாது. அவர்களுக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதையும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இந்தத் தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய மது விலக்குக் குற்றங்கள் பற்றிச் சொன்னார்கள். மது விலக்குக் குற்றங்கள் ஓரளவுக்குப் பல இடங்களில் இருந்து கொண்டு வருகிறது. அதுவும் சில கிராமங்களில் பெரும் பகுதி இருந்து கொண்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வகையில் போலீஸுடைய நிர்வாகமானது போலீஸ்காரர்களுடைய பெயர் கெட்டுப் போகாமல் இருக்க இன்னும் திறமையாகப் பாடுபடவேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த மது விலக்கு காரணமாக அவர்கள் படும் தொல்லை மிகவும் அதிகம். இரவு பகலாகப் போய் குடிகாரர்களிடத்தில் மாட்டிக்கொண்டு பல கஷ்டங்களை அடைகின்றார்கள். அவர்களுடைய கஷ்டம் அவர்களோடு தீரட்டும் என்று மக்கள் நினைக்கிறார்கள். கிராம மக்கள் அது மாதிரி நினைக்காமல் அவர்களும் ஒத்துழைப்பு கொடுத்தால் ஓரளவுக்கு நல்ல விதமாக இந்தக் குற்றங்களைப் போக்க முடியும். பெரிய ஊர்களில் பெருமளவில் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார்கள் என்று பல விதத்தில் பார்த்து தண்டிக்கவேண்டிய முறையோடு தண்டித்துக்கொண்டிருந்தும் மீண்டும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் கூட்டு அபராதம் விதிப்பதை விட வேறு எதுவும் செய்ய முடியாது என்று அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். இந்த மாதிரிசெய்தால் மதுவிலக்குக் குற்றங்கள் குறையும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், தற்கால நிலைமையில் பார்ப்போமானால் போலீஸுக்குச் சில அசௌகரியங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு சௌகரியங்கள் இல்லை என்று பலர் சொன்னார்கள். ஆனால் அதேபோல போலீஸாருடைய குடும்பத்தைக் காப்பாற்ற அவர்களுக்குப் போதிய வசதி இல்லை அல்லது சம்பளம் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதை நானும் அப்படியே சொல்ல ஆசைப்படுகிறேன். காரணம், அவர்களுக்கு நாம் பல வகைகளில் ஒத்தாசை—உதவி புரியவேண்டும். அவர்கள் குடும்பத்தை எடுத்துக்கொண்டால் அந்தக் குடும்பத்தினர் ஈடுபடுவதற்காக சில சிறு தொழில்களையாவது அவர்களுக்கு ஒதுக்கி வைக்கவேண்டும். என்னுடைய ஊர் ஆத்தூர். அந்த ஆத்தூரில் கொஞ்சம் போலீஸ் இருக்கிறது. அவர்களுடைய குடும்பமானது வெளியில் போய் வேலை செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. அவர்களுக்கு ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் சிறு கைத்தொழில் செய்வதற்கு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருவதற்கு அதிகாரிகள் முயற்சி எடுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். எங்கள் ஊரில் ஒரு பால் கூட்டுறவு சங்கம் இருக்கிறது. அந்த பால் கூட்டுறவு சங்கத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 250 ரூபாய் கொடுத்து மாடுகளைக் கொண்டுவந்து பால் கறக்கும் பணத்தில் 1, 2 ரூபாய் பிடித்துக்கொண்டு மீதியை அவர்கள் செலவுக்கு வைத்துக் கொள்ளும்படி ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். ஆனால் அது பெரிய உபகாரமாக இருக்காது. அதையே ஒவ்வொரு குடும்பத்திற்கும் 300 ரூபாய் வீதம் கொடுக்க சர்க்காரே முன் வந்தால் இந்த பால் கறவை கூட நல்ல விதமாகச் செயல்பட முடியும். மக்களுக்கு நல்ல முறையில் பால் தரக் கூடிய நிலைமை கூட இருக்கும். சேலம் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் சேலம் ஜில்லாவிலே எல்லா போலீஸ்காரர்களுக்கும் சிறு கைத்தொழில் ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். அதாவது கம்பளி அல்லது ஜமக்காளம் தயாரிப்பது போன்றவைகளில் ஈடுபட்டு அந்த மாதிரி சிறு கைத்தொழில் பல செய்து

[திரு. ஜே. மாதா கவுடர்] [12th March 1963

ஏற்படாவண்ணம் தடுப்பதற்கு இந்த 107–வது செக்ஷன் போடப்படுகிறது. அப்படி கிராமத்திலே உள்ள மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய வகையில் இம்மாதிரி நடவடிக்கை எடுத்தால், எங்களையும் இதிலே சேர்த்து விட்டார்கள் என்று சொல்லுவதிலே என்ன அர்த்தம் இருக்கிறது?

இன்றைக்கு இந்த சபையிலே கூட போலீஸ் இலாகாவைப் பற்றி பலர் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். அதைப்பற்றி நாம் எல்லோரும் சந்தோஷப் படவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் திரு. மதியழகன் மட்டும் ஒரு அரைகுறைக் குற்றத்தை சொல்லியிருக்கிறார்கள். அவரது கட்சியைச் சேர்ந்த திரு. என். வி. நடராசன் அவர்களே, கடற்கரைக் கூட்டத்தில் சென்னை மாநில போலீசாரைப் புகழ்ந்து பேசியிருக்கிறார். அவர் அப்படிப் பேசும்போது, இவர் குற்றம் சொல்லுகிறார். இது அவர்களுக்குள்ளே இருக்கும் முரண்பாட்டைத்தான் காட்டுகிறது. 1962–ம் ஆண்டு சரித்திரத்திலேயே ஒரு முக்கியமான ஆண்டு. அப்பொழுது நாடெங்கிலும் பொதுத் தேர்தல் நடந்தது. அந்த நேரத்தில் போலீஸ்காரர்கள் செய்த பணிகளுக்காக நாம் அவர்களை பாராட்டியிருக்கிறோம். இரண்டு கட்சிகளுக்குள் சூடு ஏற்பட்டு மோதல் ஏற்படக்கூடிய நிலைமை இருந்தபோதிலும், அவைகளைச் சமாதானப்படுத்தி எப்படியாவது தேர்தல் ஒழுங்கான முறையிலே நடக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு சென்ற பொதுத் தேர்தலிலே அவர்கள் பணியாற்றியுள்ளார்கள். 1957-ம் ஆண்டு தேர்தலிலே என்னுடைய தொகுதியிலே 30 அல்லது 40 சதவிகிதம் வோட்டுகள் பதிவான இடங்களில் எல்லாம் சென்ற தேர்தலிலே 70 சதவிகிதம் பதிவாகி இருக்கிறது என்று சொன்னால் அது போலீஸ்காரர்களின் திறமையையும், அவர்கள் மக்களுக்கு அளித்த பாதுகாப்பையும்தான் காட்டுகிறது. பொதுத் தேர்தலின்பொழுது நல்ல முறையில் நமது மாநில போலீசார் ஒரு எடுத்துக்காட்டாக பணியாற்றியிருக்கிறார்கள். யாரும் பயப்படாமல் வந்து ஓட்டு அளிக்கும் முறையிலே அவர்கள் சௌக்கரியம் செய்துகொடுத்ததை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அண்மையில் நம் நாட்டிலே சீனப் படையெடுப்பு ஏற்பட்டது. நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய ரிசர்வ் போலீஸ் படையும், எஸ். ஏ. பி. படையும் எல்லைப் பிராந்தியத்திற்கு அனுப்பப்பட்டதன் காரணமாக இங்கே இருக்கக்கூடிய போலீஸ்காரர்கள் உள்நாட்டிலே குழப்பம் ஏற்படாமல் இருக்கும்பொருட்டும், தேச விரோதச் செயல்கள் ஏற்படாமல் இருக்கும் பொருட்டும், பல நடவடிக்கைகளை மேற்கொண்டு அரும்பெருங் காரியங்களை இந்த நெருக்கடியான சமயத்திலே செய்து வருகிறார்கள். அவர்கள் எத்தகைய பொறுப்புக்களை நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது இன்று சர்க்கார் கோரியிருக்கும் மான்யத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதுதான் பொருத்தமாக இருக்குமே தவிர, வெட்டுப் பிரேரணைகள் கொண்டு வருவது அவ்வளவு நியாயமாக இருக்காது, அதனால் எந்த விதமான பிரயோசனமும் ஏற்படாது. ஆகவே, எதிர்க்கட்சிக்காரர்கள் அதை வற்புறுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் இப்பொழுது ஒரு "பாய்ஸ் கிளப்" ஏற்படுத்தியிருக்கிறார்கள். சிறிய குழந்தைகளாக இருக்கும்போதே அவர்களை நல்ல பிரஜைகளாக ஆக்கவேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன் இந்த காரியம் செய்யப்பட்டிருக்கிறது. மாவட்டத்திற்கு ஒன்று என்று இல்லாமல், இரண்டு மூன்று இடங்களில் ஏற்படுத்தி நல்ல முறையில் செயல்படுத்திக் கொடுப்பதற்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நாட்டின் பாதுகாப்பிற்கான பணிகளிலே அவர்கள் ஆற்றிய சாதனைகள் போற்றத்தக்கவை. அவர்கள் எல்லோரும் அவர்களுடைய ஒரு நாள் சம்பளத்தை நாட்டின் பாதுகாப்பிற்காக அளித்து, சுமார் ரூ. 1 லட்சம் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்திருக்கிறார்கள். சிறிய சம்பளத்தைப் பெற்றுக்கொண்டபோதிலும் அவர்கள் இவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்திருப்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. சென்னை



12th March 1963] [திரு. ஜே. மாதா கவுடர்]

போன்ற பெரிய நகரங்களில் எல்லாம் கெட்ட நோக்கம் உடைய ரௌடிகள் நிறையப்பேர் இருந்ததை இப்பொழுது மிகவும் குறைந்திருக்கிறார்கள். நமது போலீஸ் இலாகாவின் ஸி. ஐ. டி. ஸ்பெஷல் பிராஞ்சு மிகத் திறமையாக வேலை செய்கிறது. எப்பேர்பட்ட குற்றமாக இருந்தாலும், அவர்கள் அதைக் கண்டுபிடித்து விடுகிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே ஒரு மண்டை ஓட்டை வைத்து கொலைக் குற்றம் செய்தவரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இங்கிலாந்து தேசத்திலேதான் இந்தமாதிரிச் செய்திருக்கிறார்கள் என்று நான் படித்திருக்கிறேன். அந்த மண்டை ஓட்டை எடுத்து, ஆராய்ச்சி செய்து, கொலைக் குற்றத்தைக் கண்டு பிடித்து, ஹைக்கோர்ட்டிலே தண்டனை விதிக்கக்கூடிய அளவிலே அவர்களுடைய திறமை வளர்ந்திருக்கிறது. இங்கிலாந்து போன்ற நாடுகளிலே விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அந்த முறையில் பார்க்கும்பொழுது அந்த நாடுகளைக் காட்டிலும், நம்முடைய போலீஸார் திறமையாகப் பணியாற்றியிருக்கிறார்கள். ஹைக்கோர்ட் ஜட்ஜ்கள் இதைப்பற்றி அவர்களுடைய தீர்ப்பில் நன்றாக எழுதியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பருத்தி சூதாட்டம். இன்றைக்கு சென்னை நகரத்தில் பருத்தி சூதாட்டம் எவ்வளவோ நல்ல முறையில் அடக்கப்பட்டிருக்கிறது. 11-3 a.m இதற்கு முன்னதாக எவ்வளவோ நடந்து கொண்டிருந்தன. இப்பொழுது அவ்வளவு இல்லை என்றே சொல்லலாம். அப்படி நடவாமல் போலீஸ்காரர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். 1962-ம் ஆண்டு சுமார் 800 சூதாட்ட கேஸ்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1961-ல் இன்னும் அதிகமாக இருந்திருக்கிறது. இந்த ஆண்டு 252 கேஸ்கள் குறைந்திருக்கின்றன. இப்படி அந்தக் கேஸ்கள் குறைவதற்கு போலீஸ்காரர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக கள்ள நோட்டு கேஸ்களை நமது போலீஸ்காரர்கள் பிடித்திருக்கிறார்கள். எவ்வளவோ திறமையாக அந்தக் கேஸ்களை அவர்கள் பிடித்திருக்கிறார்கள். அதைக் கண்டு இந்த மாநில ஜட்ஜுகள் மட்டும் அல்ல பிற மாநில ஜட்ஜுகள் கூட இவர்களுடைய திறமையைக் கண்டு புகழ்ந்து எழுதி இருக்கிறார்கள். நம் மாநில போலீஸ்காரர்கள் எவ்வளவோ திறமையாகக் கேஸ்களை பிடிக்க முடியும் என்ற பெயரை வாங்கி இருக்கிறார்கள் என்றால் அது அவர்களுடைய திறமையைத்தான் காட்டுகிறது. எந்த கேஸாக இருந்தாலும் அதை வெகு திறமையாக பிடிக்க முடியும் என்ற நிலையை அவர்கள் எற்படுத்தி இருக்கிறார்கள். அது அவர்களுக்கு மட்டும் அல்ல, இந்த தமிழ் நாட்டிற்கே புகழ் தேடிக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. அந்தப் புகழ் தமிழ் நாட்டு சர்க்காருக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கே அந்தப் புகழைத் தேடிக் கொடுப்பதாக இருக்கிறது. தமிழ் நாட்டிற்கே அவர்கள் நல்ல பெயரை சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்வதுடன், அவர்களிடம் ஏதோ சில குறைபாடுகள் இருக்கலாம். . . (மணி அடிக்கப்பட்டது.)

* திரு. ர. சம்பங்கி : மதிப்பிற்குறிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்தினை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 1962–63-ம் ஆண்டிற்கு 6 கோடி 98 லட்சம் ரூபாய் போலீஸ் துறைக்கு செலவு செய்யப்பட்டு, வருகிற ஆண்டிற்கு எட்டு கோடியே பதினாறு லட்சம் ரூபாய் செலவு செய்வதற்கு மானியம் கோரப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு செலவு உயரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்கு காரணம் கனம் நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பட்ஜெட் உரையில் குறிப்பிட்டது போன்ற அந்நிய ஆக்கிரமிப்பால் ஏற்பட்ட பயங்கர சூழ்நிலையாலும் போலீஸ்காரர்களுக்கு புதிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருக்கிற காரணத்தாலும் அதிகச் செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். போலீஸ் படையை பலப்படுத்துவதற்கும், வேண்டிய தளவாடங்களை வாங்குவதற்கும், மற்றும் போக்குவரத்து சாதனங்கள் வாங்குவதற்கும் கூடுதலாக பணம் வேண்டும் என்று அனுமதி கோரி இருக்கிறார். அவர் சொல்லி இருக்கிற காரணங்களை மறுக்கத் தயாராக இல்லை. எடுத்த காரியத்தை

நல்ல முறையில் செயல் படுத்தக்கூடிய திறமை வாய்ந்தவர் நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள். இதை நீண்ட காலமாக நாம் பார்த்து வருகிறோம். 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதன் முதலாக புதிய சர்க்குலர் ஒன்றை ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் அனுப்பியதாக அறிகிறேன். சாதாரணமாக கிராமப்புறத்தில் மதுவிலக்குக் குற்றங்களை போலீஸ்காரர்கள் கண்டுபிடிக்கச் செல்லும்போது சாதாரணமாக அவர்களுக்கு எப்பொழுதுமே படி கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது அந்த நிலைமை மாறி குற்றங்களைக் கண்டு பிடித்தால்தான் படி உண்டு என்கிற முறையில் அவர்களுக்கு ஒரு சர்குலர் அனுப்பி இருப்பதாகச் சொல்லுகிறார்கள். கேஸ்கள் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் படி உண்டு என்பது போய் இப்பொழுது குற்றங்களைக் கண்டு பிடித்தால்தான் படி உண்டு என்கிற நிலைமை வந்திருக்கிறது. இதன் காரணமாக இப்பொழுது என்ன நடக்கிறது என்றால் மதுவிலக்கு குற்றங்களைக் கண்டு பிடிக்கப்போய் குற்றங்கள் கிடைக்கவில்லை என்றால் படி கிடைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அவர்கள் பொதுமக்களை காட்டி மதுவிலக்குக் குற்றங்களை அவர்கள் மீது சுமத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. படியைக் கொடுக்க முடியாது என்று சொல்லியதால் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி அவர்களுக்கு படி கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். சென்ற ஆண்டு இந்த மாநிலத்தில் போலீஸ் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு கோர்ட்டுகளில் வழக்கு தொடரப்பட்டது, அதாவது நீதி மன்றங்களுக்கு கொண்டு போகப் பட்டது 23,550 வழக்குகள். அதில் தண்டனை அடைந்த வழக்குகள் 12,000-த்து சொச்சம். மீதமுள்ள 11 ஆயிரம் வழக்குகள் என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. பொதுவாகச் சொன்னால் போலீஸ்காரர்கள் தங்களுடைய கடமையைச் செய்வதில் தவறுவது இல்லை. கடமையுணர்ச்சியுடன் தான் வேலை செய்கிறார்கள். வழக்குகளை அவர்கள் அனுவசியமாக கொண்டு போகமாட்டார்கள் என்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட வேண்டும். அவர்கள் கொண்டு போகக்கூடிய வழக்குகள் எல்லாம் ஜெயிக்க வேண்டும் என்ற சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக 23,550 வழக்குகளில் 12 ஆயிரம் வழக்குகள்தான் வெற்றி அடைந்திருக்கின்றன, 11 ஆயிரம் வழக்குகள் தோற்றுவிட்டன. இதற்குக் காரணம் சர்க்காரால் கொண்டு வரப்பட்ட புதிய சட்டம்தான். ஆகவே போலீஸ்காரர்கள் படி பெறுவதற்கு இப்பொழுதுள்ள சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக் நமது தமிழ் நாட்டிலுள்ள போலீஸ்காரர்கள் மிகவும் நிபுணர்கள், மிகவும் சாமார்த்தியசாலிகள். அவர்களுடைய நிபுணத்துவத்தை நாம் பாராட்ட வேண்டியதுதான். மற்ற மாநிலங்களில் இருக்கக் கூடிய அத்தனை அதிகாரிகளும் இந்த மாநில போலீஸ் அதிகாரிகளை பாராட்டித்தான் பேசுகிறார்கள். நமது மாகாண போலீஸ் அதிகாரிகள் நல்ல நிபுணர்கள் என்று பாராட்டிப் பேசுகிறார்கள். எனக்கு முன்னால் பேசிய பல கனம் அங்கத்தினர்களும் அவர்களை பாராட்டியே பேசியிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய கனம் மாதர கவுடர் அவர்கள் போலீஸ்காரர்களை பாராட்டியே பேசியிருக்கிறார்கள். நியாயமான முறையிலேயே பாராட்டி பேசியிருக்கிறார்கள். இருந்த போதிலும் சில குறைபாடுகள் இருக்கின்றன. வட ஆர்க்காடு துரிஞ்சாபுரம் பகுதியில் இரண்டு நாட்களுக்கு முன்னதாக வழிப்பறிக் கொள்ளை நடந்ததாக பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். திருவண்ணாமலை—போளூருக்கு இடையே ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே சொல்லிக் கொண்டு வருகிறோம். அந்த இடத்தில் காவல் நிலையம் இல்லாத காரணத்தால் வழிப்பறிக் கொள்ளைகள் சர்வ சாதாரணமாக நடந்து வருகிறது. ஆகவே போளூர்—கலசபாக்கம் அருகில் ஒரு காவல் நிலையம் ஏற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தீ விபத்துக்கள் ஏற்படுவதைப்பற்றி சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். தீ விபத்துக்கள் ஏற்படுவது இப்பொழுது சர்வ சாதாரணமாக இருக்கிறது. தீ விபத்துக்களை தடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு வருகிறது. அதற்கு தாலுகா

12th March 1963] [திரு. ர. சம்பங்கி]

வாரியாக இல்லாவிட்டாலும் மாவட்டவாரியாக தீ விபத்துக்களைத் தடுக்கும் படைகளை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இந்த மாநிலத்தில் போலீஸ்காரர்கள் திறமையாக பணியாற்றி வருகிறார்கள். பிற மாநிலத்தில் கூட நம் மாநில போலீஸ்காரர்களை பாராட்டுகிறார்கள். அங்கு குற்றங்களைக் கண்டு பிடிக்கக்கூட இங்கிருந்து அழைத்துப்போகிறார்கள். தமிழ் நாட்டில் நல்ல பெயரை எடுத்திருக்கிறார்கள். அதற்கு இந்த மாகாணத்திலுள்ள போலீஸ் உயர்தர அதிகாரிகளைப் பாராட்ட வேண்டியதாக இருக்கிறது. தமிழ் நாட்டிற்கே அவர்கள் நல்ல பெயரை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களுக்கு என் பாராட்டுதலை தெரிவித்துக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகளை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று போலீஸ் மானியத்தின் மீது விவாதம் நடைபெறும்போது இவ்வளவு சாந்தமாகவும் அமைதியாகவும் நடப்பதைப் பார்த்தால் போலீஸ் இலாகா நிர்வாகம் எவ்வளவு திறமையாக நடைபெறுகிறது என்பது தெரியவரும். சாதாரணமாக என்னுடைய அனுபவத்தில் போலீஸ் மானியக் கோரிக்கை வரும்போதெல்லாம் கொந்தளிப்பும் கோபமும் தான் இருக்கும். அப்படி இருப்பதுதான் வழக்கம். ஆனால் இன்று அமைதியாக இருக்கிறது என்று சொன்னால் அது இந்த போலீஸ் நிர்வாகத்தின் திறமையால்தான் என்று சொல்லலாம். எதிர்க்கட்சிக் காரர்கள் கூட பாராட்டத்தக்க அளவில் அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்றால் அதைக் கண்டு பாராட்டாமல் இருக்க முடியாது. எப்படி இருப்பினும் போலீஸ் இலாகாவினுடைய திறமை உண்மையிலேயே இந்தமுறை மிக மிக பாராட்டத்தக்கதாகத்தான் இருக்கிறது. சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலை அவர்கள் எவ்வளவோ அமைதியாக நடத்திக் காட்டினார்கள். அதற்கு முன்பு நடந்த நகரசபை தேர்தலில் எங்கு பார்த்தாலும் கலகமும் குழப்பமும் ஏற்பட்டு காட்சி அளித்தது. அப்பொழுது வோட்டர்கள் உண்மையிலேயே வெளியே வருவதற்குக் கூட அஞ்சினார்கள். ஆனால் சென்ற சட்டசபை தேர்தலின்போது எங்கெங்கு குழப்பம் நடத்தவேண்டும் என்று திட்டம் போட்டிருந்தார்களோ அந்த இடங்களில் அவைகள் நடைபெறாமல் அமைதியான முறையில், எல்லோரும் பாராட்டத்தக்க முறையில் தேர்தலை நடத்திக்காட்டினார்கள். அப்படி நடத்திக் காட்டியிருக்கிறார்கள் என்றால் உண்மையிலேயே அவர்களுக்கு நமது பாராட்டுதலை தெரிவிக்க வேண்டும். அதேபோன்று, அரசியல் வாதிகளும் விலைவாசி இறக்கத்திற்காகப் போராட்டத்தை நடத்திப் பல வேதனைகளுக்கு போலீஸ் இலாகா அதிகாரிகளை உள்ளாக்கினோம் என்றால், அதையும் கூடப் பொறுத்துக்கொண்டு, அமைதியை நிலைநாட்டி, சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடித்தார்கள் என்றால் உண்மையிலேயே அவர்கள் பாராட்டப்படவேண்டும். குறிப்பாக, அந்தப் போராட்டத்தில் அதிகமாகத் தாக்கப்பட்ட தொகுதி என்னுடைய தொகுதியாகும். எங்கோ மறியல் செய்கிறோம் என்று சொல்லிவிட்டுக் கள்ளங்கபடமற்ற மக்கள் வாழ்கின்ற வீடுகளிலெல்லாம் உள்ளே புகுந்து தொல்லை கொடுத்ததைப் பார்த்தபோது, உண்மையிலேயே எங்களைப் போன்ற, ஆட்சியை நடத்துகின்ற கட்சியைச் சார்ந்த அங்கத்தினர்களுக்குக் கூட கோபம் ஏற்பட்டது. இவ்வளவு பொறுமையைக் கையாளுகிறதே போலீஸ் இலாகா என்று. ஆரப்பங்கள் ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், அங்கிருந்த போலீஸ் கமிஷனரின் மீதே கல் வீசுகிற அளவுக்குத் துணிச்சல் வந்திருக்கிறது என்றாலும், எந்த அளவுக்கு அவர்கள் பொறுமையைக் கையாண்டு, ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டினார்கள் என்பதைப் பார்க்கும்போது நம்முடைய பாராட்டுதலை அந்த இலாகாவினருக்குக் கொடுக்காமல் இருக்கமுடியாது.

போலீஸ் இலாகா கத்தி மேல் நடப்பது போல் நடக்கவேண்டும். மிக இக்கட்டான நிலைமையில் வேலை பார்க்கவேண்டிய இலாகா அது. அதிலே ஆத்திரத்திற்கு இடமில்லாமல் நடந்துகொள்ளவேண்டும். அரசியல்வாதிகள் ஆத்திரப்பட்டாலும், அதை ஓரளவு சமாளித்து, இந்த நாட்டில் அமைதியை நிலைநிறுத்த முன்வருகிறார்கள் என்றால் அவர்களுக்கு எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் பாராட்டுதலைத்தான் தெரிவிக்கவேண்டும்.

[திருமதி டி. என். அனந்தநாயகி] [12th March 1963

ஆயிரம்விளக்கு தொகுதி அங்கத்தினர்கூடச் சொன்னார்கள், "யாரோ ஆத்திரப்பட்டுவிட்டார் என்று சொல்லிவிட்டார்களே, தூண்டிவிட்டார் என்று சொல்லிவிட்டார்களே, மற்ற இடங்களில் நடந்த ஒரு கூட்டத்திற்கு இங்கே ஏன் நடக்கவேண்டும் ?" என்று. எங்கெல்லாம் கட்டுப்பாடில்லாமல் இருந்தார்கள், எங்கெல்லாம் சட்டத்தை மீறினார்கள் என்பது அவர்களுக்குத் தான் தெரியுமே தவிர, அதற்கு நாங்கள் காரணம் கூறமுடியாது. கட்டுப்பாடின்றி, அவிழ்த்துவிட்டதனால் சம்பவங்கள் நடந்தன. அவற்றையெல்லாம் பார்த்தபோது நாங்கள்கூட யோசித்தோம்—அப்படிப்பட்ட சம்பவங்களுக்குக் காரணமான சிலரை இவ்வளவு அமைதியாகக் கமிஷனர் அவர்கள் வண்டியில் ஏற்றிச் சென்று அமைதியைக் கடைப்பிடித்து நடத்துகிறார்களே என்று ஆளுங்கட்சியில் இருந்த நாங்கள் கோபப்படுவதுண்டு. அவ்வளவு கண்ணியமாக அவர்கள் கடமையைச் செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, இந்த இலாகாவுக்குக் கட்டாயமாகப் பாராட்டைத் தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இப்படிப் பல இக்கட்டான நிகழ்ச்சிகளில் அவர்கள் அமைதியை நிலை நாட்டியது, சென்னை போலீஸ் இலாகாவுக்கிருக்கும் தனித் திறமையைக் காட்டுகிறது. ஆகவேதான், எதிர்க்கட்சி கனம் அங்கத்தினர் ஒருவர் சொன்ன மாதிரி, நமது மாநிலம் மாத்திரமல்லாமல், பிற மாநிலங்களில் இருப்பவர்களும் நம் மாநிலப் போலீஸ் துறையினரைப் பாராட்டுகிறார்கள் என்பதை நாம் பார்க்கின்றோம்.

போலீசார் சில பெரிய வழக்குகளையும் போட்டார்கள். "பஞ்சமா பாதகங்களெல்லாம் குடிபுகுந்துவிட்டன" என்று எதிர்க்கட்சி கனம் அங்கத்தினர் ஒருவர் கூறினார்கள். அந்தப் பஞ்சமா பாதகங்கள் மனிதன் தோன்றிய நாளிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன. பஞ்சமா பாதகங்கள் அன்றைக்கே இருந்திருக்கின்றன. அந்தப் பஞ்சமா பாதகங்களைக் காங்கிரஸ்காரர்கள் கொண்டு புகுத்திவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். பிறரால் புகுத்தப்பட்ட பஞ்சமா பாதகங்களைக் குறைப்பதிலே எவ்வளவு அக்கறை காட்டுகிறோம் என்பதை எடுத்துக்காட்டத்தான் கள்ள நோட்டு வழக்கை அவ்வளவு தீவிரமாக நடத்தி அதிலே ஈடுபட்டவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பியது. கள்ள நோட்டு வழக்குகளில் நம்முடைய போலீஸ் இலாகா ஒரு தனித் திறமையைக் காட்டி, அதை நிரூபிக்கக்கூடிய அளவுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த வழக்கிலே ஈடுபட்டவர் சாதாரண மக்கள் அல்ல. வசதி படைத்தவராக இருந்தும்கூட, அந்த வழக்குகளை அவ்வளவு கவனத்தோடு நடத்தியதால்தான் இன்றைக்கு நிரூபிக்கப்பட்டு, ஒரு நியாயத்தை நாம் பார்க்க முடிந்தது. நல்ல முறையில் வேலை செய்கிறவர்களைப் பாராட்டினால் மேலும் அவர்களுக்கு திறமையோடு வேலை செய்யக்கூடிய வேகம் இருக்குமே அல்லாது, நல்லதைக்கூட குறை கூறினால் செய்கிறவர்களுக்கு அக்கறையில்லாமல் போய், கடைசியில் அதனால் விளையும் தீமை சமுதாயத்தைதான் சேரும் என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். அந்த நிலைமையில் சென்னையில் ஏற்பட்ட கலவர வழக்குகளிலும், மற்ற வழக்குகளிலும் போலீசார் கவனம் செலுத்தியிருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் பாராட்டப்படவேண்டும்.

திருச்சி ஜில்லாவில் சிறுகனூர் போலீஸ் ஸ்டேஷன் சம்பவத்தை எடுத்துக்கொள்வோம். அது ஒரு பெரிய தீயாகப் பரவிவிட்டிருக்கும். அதை தக்க சமயத்தில் அடக்கி, ஒடுக்கி, தீமையைக் கண்டுபிடித்து, எங்கே குற்றம் என்று கண்டுபிடித்து, அதைக் களைந்தெறிந்த போலீசாருடைய திறமைக்கு நாம் உண்மையிலே பாராட்டுதலைத் தெரிவிக்க வேண்டும்.

இதுபோன்று பல வழக்குகளை போலீசார் திறம்பட நடத்தியிருக்கிறார்கள் என்பதைக் குறித்துச் சொல்லிக்கொண்டே போக முடியும். தமிழகத்தில் ஏற்படும் குற்றங் குறைகளில் 65, 70 சத விகிதத்திற்குமேல் கண்டுபிடிக்கும் திறனை நம்முடைய போலீஸ் இலாகாவினர் பெற்றிருக்கிறார்கள். இன்னும் பெற வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அதற்கு வேண்டிய வழிவகைகளை நாம் செய்து தருவதன் மூலம் கட்டாயம் போலீஸ் இலாகாவின் நிர்வாகம் இன்னும் பலப்படுத்தப்படவேண்டும்.



12th March 1963] [திருமதி டி. என். அனந்தநாயகி]

குறிப்பாக, நெருக்கடி நேரத்தில் போலீஸ் இலாகாவின் பொறுப்பும் அதிகரிக்கிறது, எல்லைப்புறத்திற்கு நம்முடைய போலீஸ் படையினரை நாம் அனுப்பிவைத்திருக்கிறோம். அங்கே அவர்கள் நல்ல பெயர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உள் நாட்டிலேயே இருந்துகொண்டு அன்னிய நாட்டுக்காக வேவு பார்க்கக்கூடிய அத்தகையவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் மறந்துவிடக் கூடாது. அந்தப் புத்தியே மக்களுக்கு வரக்கூடாது என்ற அளவுக்குப் போலீஸ் நிர்வாகத்தைப் பலப்படுத்துவதோடு, அப்போதைக்கப்போது தக்க பாதுகாப்போடு இருந்தால்தான் நாடு நன்றாகக் காப்பாற்றப்படும். ஆகவே, போலீஸ் இலாகாவுக்கு நெருக்கடி நேரத்தில் பொறுப்புகள் அதிகமாகிவிடுகின்றன. அதற்கேற்ற வகையில் நாமும் அவர்களுக்கு உற்சாகம் கொடுத்தால்தான் பணியை அவர்கள் செவ்வனே செய்ய வாய்ப்புக் கிடைக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ட்ராஃபிக் ஸைடிலும் இப்பொழுது சென்னை நகரத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக, மவுண்ட் ரோடில் லிங்க்ஸ் லேன் ட்ராஃபிக்கைப் பார்த்தால் மிக அழகாக இருக்கிறது. அந்த முறையினால் காரில் அவசரமாகப் போகிறவர்கள் வேண்டுமானால் நினைக்கலாம், ஐந்து நிமிஷம் தாமதமாகிறதே என்று. ஆனால், அந்த ஸிக்னல் மாத்திரம் இல்லாவிட்டால், ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு சாலையைக் கடக்கவேண்டிய பாதசாரிகள் நாள் பூராவும் நின்று கொண்டே இருந்தாலும் கடக்க முடியாது. 'நில்', 'நட' என்று ஸிக்னல்கள் இருப்பது பாதசாரிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் சாலையைக் கடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்படி இன்னும் பல இடங்களில் ஏற்பட வேண்டும். இன்றைக்குச் சென்னை நகரத்தில் 75,000 வண்டிகள் ஓடுகின்றன என்றால் எவ்வளவு தொல்லைகளுக்கு நாம் ஆளாகவேண்டும் ? ஆனால், மிகத் திறமையாக இந்த லிங்க்ஸ் லேன் ட்ராஃபிக் முறையை மிக அழகாக நடத்தியிருப்பதைப் பார்க்கும்போது, இப்படிப்பட்ட புதுமையைக் கண்டுபிடித்த அந்த இலாகாவினரின் புத்தியை மேலும் மேலும் பயன்படுத்திக்கொள்வதோடு, பொது மக்களும், பொது மக்களின் பிரதிநிதிகளும் அவர்களைப் பாராட்டி மேலும் அவர்களுடைய அறிவைப் பயன்படுத்த வாய்ப்புத்தர வேண்டுமென்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இதுபோன்று இன்னும் பல ஸிக்னல்கள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.ஏ.பி.-யில் இருக்கிறவர்களில் ஒரு சிலருக்குத்தான் வீட்டு வாடகை தரப்படுகிறது. இதிலே சில வேறுபாடுகள் இருக்கின்றன. ஆவடியில் இருந்தால் குடியிருப்பதற்கு இடம் கிடையாது. வெளியிலே இருப்பவர்கள் சில நேரங்களில் க்வார்டர்ஸ் இல்லாமல் தவிக்கிறார்கள். பல பேர்கள் வீடே கிடைக்காமல் தவிக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தபோது, எஸ். ஏ. பி. கான்ஸ்டபிள் ஒருவருடைய மனைவி தனக்கிருக்கும் கஷ்டத்தை நேரில் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னாள். அது பற்றி ஏதாவது இந்த வருஷத்திய பட்ஜெட்டில் இருக்குமா என்று பார்த்தேன். காணோம். எஸ்.ஏ.பி-யில் உள்ளவர்கள் எல்லோருக்கும் வீட்டு வாடகை கிடைக்கக்கூடிய நல்ல முறையைக் கையாண்டால் மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. எம். எஸ். மணி :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீது எங்கள் கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர் கொண்டுவந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மற்ற தொழிலாளர்களுக்குள்ள நல்ல பல சலுகைகள் குறிப்பாக, போலீஸ் தொழிலாளர்களுக்கு இல்லை என்பதை நாம் அனைவரும் ஒத்துக் கொள்ளவேண்டும். மற்ற தொழிலாளர்களுக்கு வேண்டிய பாதுகாப்புச் சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், போலீஸ் தொழிலாளர்கள், தங்களுடைய

கோரிக்கைகளைச் சொல்ல வேண்டுமானால், அவர்களுக்குச் சங்கம் அமைத்துக்கொள்ள உரிமை கிடையாது. எனவே அரசாங்கமே அவர்களுடைய நிலைமையை நல்ல முறையில் கவனித்து, அவர்களுடைய குறைகளைக் கண்டறிந்து, விலைவாசிக்கேற்றபடி அவர்களுடைய அடிப்படைச் சம்பளங்களையும், அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற பஞ்சப்படியையும் இன்னும் சற்று கூடுதலாக உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

போலீசுக்காரர்களை ஊரைவிட்டு ஊர் மாற்றுகிறபோது அவர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட திடீர் மாற்றங்களினால் போலீசாருடைய குழந்தைகள் படிப்பு பாதிக்கப்படுகிறது. ஒரு ஊரில் படித்துக்கொண்டிருந்த பிள்ளைகளைத் திடீரென்று மாற்றி, வேறு ஊர்களில் சென்று படிக்க வைக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, அவர்களை மாற்றுகிறபோது, குழந்தைகளின் பள்ளிப் படிப்பு முடிந்ததற்குப் பிறகு மாற்றுகிற ஒரு நிலைமையை உண்டாக்கவேண்டும். பள்ளியாண்டு முடிகிற சமயத்தில் வேண்டுமானால் மாற்றம் செய்வது நலம் என்றும் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அது மாத்திரமல்ல. மற்ற தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு முறையில் அளிக்கப்படும் எல்லாச் சலுகைகளும் போலீஸ் தொழிலாளர்களுக்கும் கிடைக்கத்தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பிரைவேட் பாதுகாப்பு விடுதிகள் என்ற பெயரில் 1961–62-ல் ரூ. 1,32,032 செலவு செய்யப்பட்டது. 1962–63-ல் ரூ 70,000 செலவு செய்யப்பட்டது. 1963–64-ல் ரூ, 70,000 செலவு செய்வதற்கு நிதி கோரப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை தனியார் விடுதிகள் நடத்துகிறவர்களுக்கு அளிக்கப்படுவதை நிறுத்தி இவ்வளவு பெரிய தொகையை அரசினரே செலவழித்து, ஏன் இத்தகைய விடுதிகளை நடத்தக்கூடாது என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் அரசினரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்திய சர்க்காருக்கு நாம் துணையாக போலீஸ்காரர்களை இங்கிருந்து அனுப்புகிறோம். அந்த வகையில் முப்பத்தேழு லட்சத்து முப்பத்தெட்டாயிரத்து, மூன்னூறு ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய சர்க்காரிடமிருந்து முப்பது லட்சம் ரூபாய்தான் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதில் 7 லட்சம் ரூபாய்தான் துண்டுவிழுகிறது. இந்த முழுச் செலவுத் தொகையையும் ஏன் அவர்களிடமிருந்து திரும்பப் பெற நமது சர்க்கார் முயற்சி செய்யக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல் ரைபிள் ட்ரெயினிங் என்ற இனத்தில் 100 ரூபாய் 1963–64-க்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைக் கூடுதலாக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தீயினால் ஏற்படுகின்ற விபத்தைச் சட்டென்று தடுக்க லாரிகளில் தண்ணீர் வைக்கப்படுகிற முறை சென்னை மாநில நகராட்சி மன்றங்களில் இருக்கிறது. இதுபோன்று கம்பம் முனிசிபாலிட்டியில் இல்லை. அமைச்சர் அவர்கள் அங்கே வந்திருந்தபோது தீ பற்றி எறிந்தது கூட அவருக்குத் தெரியும். ஆகவே கம்பம் முனிசிபாலிட்டியில் உள்ள நகராட்சி மன்றத்திலும் தண்ணீர் லாரி வைக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள் கட்டித் தருவது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதை விரைவில் அமைக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





குறிப்பாக மோட்டார் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் 5 மணிக்கு மேல் தொடர்ந்து வேலை செய்யக் கூடாது. ஐந்து மணி தொடர்ந்து வேலை செய்த ஒருவருக்கு இடையில் ½ மணி நேரமாவது ஓய்வு கொடுக்க வேண்டும் என்று சட்டத்தில் இருக்கிறது. இந்த மோட்டார் வாகனச் சட்டப்படி கவர்ன்மெண்டு டிரான்ஸ்போர்ட் இலாகாவில் வேலை செய்கிற டிரைவர்களுக்கு ஓய்வு கொடுக்கப்படுவதில்லை. ¼ மணி கொடுக்கிறார்கள். பல ரூட்டுகளில் அதுவும் இல்லை. தனியார் துறையில் ஓடும் பஸ்களில் வேலை செய்கிற டிரைவர்களுக்கு இப்படி ஓய்வு கொடுக்காவிட்டால் உடனே போலீஸ்காரர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் சர்க்கார் டிரான்ஸ்போர்ட் சம்பந்தப்பட்டவரை இப்படி நடவடிக்கை எடுப்பதில்லை. அரசாங்கம் நடத்துகிற டிரான்ஸ்போர்ட் சம்பந்தப்பட்டவரை இந்தச் சட்டம் செல்லாது போன்ற நிலையை மாற்றி, இப்படி பாரபட்சம் காட்டாமல் யாராக இருந்தாலும் போலீஸ் இலாகாவினர் சட்டப்படி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சிறையில் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்கிறபோதுகூட கையில் விலங்குபோட்டு அழைத்துச் சென்றார்கள். தாம் சட்டசபையைச் சேர்ந்த உறுப்பினர் என்று குறிப்பிட்டும் அவ்வாறு அவர் நடத்தப்பட்டார். இவ்வாறு செய்வது சரியல்ல. இதில் எல்லாம் தக்க மரியாதையோடு நடந்துகொள்ள சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நாட்டில் பிரசாரம் நடத்தப்படுகிறபோது கூட்டம் கூடுவதற்கு அனுமதி பெறவேண்டுமென்றால் முதலில் 3 ரூபாய் கட்டுகிறோம். அதற்குமேல் 1 ரூபாய் ஸ்டாம்பு பீஸ் என்று கட்டுகிறோம். அப்படிக் கட்டியும்கூட சில சமயங்களில் அனுமதி கிடைப்பது இல்லை. அதுவும் குறிப்பாக பொங்கல் விழாவைத் தமிழர்களாகிய நாம் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். திருச்சியில் பொங்கல் விழாவை முன்னிட்டு கூட்டம் நடத்தக் கோரப்பட்ட அனுமதி பலவிடங்களுக்குக் கிடைக்கவில்லை. அப்படியின்றி அனுமதி வழங்க சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் இலாகாவின் மீது குற்றம் சுமத்தப்படுகிறது என்றால் அதற்குக் காரணம் அவ்விலாகாவில் உள்ள ஒன்றிரண்டு அதிகாரிகளாவார்கள். சில அதிகாரிகள்தான் தவறாக நடந்துகொள்கிறார்கள். திருச்சியில் ஒரு அதிகாரி இருக்கிறார். திடீரென்று இந்த ஸ்டேஷனில் குற்றங்கள் கண்டுபிடிப்பது ஏன் குறைந்திருக்கிறது என்றால் ரோடுக்குப்போய் நான்கைந்து ரிக்ஷாக்களைப் பிடித்துவந்து பொய் கேஸ் தொடருகிறார்கள். கேட்டால் சந்தேகத்திற்கு ஆஸ்பதமாக இருந்தது என்கிறார்கள். ஸ்டேஷனுக்குச் சென்று ஜாமீனில் அழைத்து வரலாம் என்றால் கேஸ் ரிஜிஸ்டர் செய்துவிட்டோம் என்கிறார்கள்.

கடைசியில் திருச்சியில் நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். திருச்சியில் உள்ள எங்களுடைய வாசகசாலையை திராவிடக் கழகத்தவர்கள் தாக்கினார்கள். அதில் சிலர் அடிபட்டார்கள். அவர்களை அழைத்துக்கொண்டு இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று நான் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றேன். அவர்கள் என்பேரிலேயே செக்ஷன் 107 படி ஜாமீன் வழக்குப் போட்டிருக்கிறார்கள். கேட்டதற்கு உங்களைப் போன்ற பெரியவர்களின் மீது போட்டால்தான் வழக்கு நிற்கும் என்கிறார்கள். இப்படிப்பட்ட மனப்பான்மை மாறவேண்டும் என்பதாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கு ஒருவகையில் எனக்குச் சாதகமாக முடிந்துவிட்டது என்றாலும், நியாயத்தை எடுத்துச் சொல்ல ஒரு உறுப்பினர் போலீஸ் ஸ்டேஷன் சென்றால் அவர் பேரிலேயே வழக்குத் தொடருவது சரியாகாது என்பதைமட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் வற்புறுத்திக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

போலீஸ் துறையினர் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தந்து, அவர்களுடைய பங்காக லட்சக்கணக்கான ரூபாய்களைப் பாதுகாப்பு நிதிக்காகக் கொடுத்திருக்கிறார்கள், அதற்காக நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். அதே போன்று வட எல்லையில் போராட வேண்டுமென்று சொன்னபோதும், தமிழகப் பகுதியில் இருந்த காவல் துறையினர் அங்கே சென்று போராடி வருகிறார்கள். இவையெல்லாம் பார்க்கும்போது எதிர்க்கட்சியினராகிய நாங்களும் மனமுவந்து பாராட்டவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். சென்னையைப் பொறுத்தவரை டிராபிக் அரேஞ்ச்மெண்டைப் பற்றி கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். அந்த முறை மிகச் சீரான முறையிலே அமைந்திருக்கிறது. எதிர்க்கட்சி என்ற காரணத்திற்காக அதையெல்லாம்கூட எதிர்க்க வேண்டுமென்ற எண்ணம் எங்களிடத்திலே இல்லையென்று குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

போலீசார் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், வழக்குகள் தொடரப்படுவதிலும் இருக்கக்கூடிய இக்கட்டான சூழ்நிலையைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் எடுத்துக் கூறினார்கள். 1961-ம் ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய நிர்வாக அறிக்கையிலே, சுமாராக 24,000 வழக்குகள் கொடுக்கப்பட்டு, 12,000 வழக்குகள் தான் வழக்கு மன்றத்தில் வெற்றி பெற்றிருக்கின்றன என்று குறிப்பிட்டிருப்பதை காண்கிறேன். எல்லா வழக்குகளும் வெற்றிபெற்றுவிட முடியாது என்று நிதியமைச்சர் அவர்கள் சுட்டிக் காண்பித்தார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும், அதற்கு மூல காரணம் என்ன என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாாக்க வேண்டும். சாதாரண, அடிபபடையிலே உள்ள போலீஸ் அலுவலர்களுக்குச் சட்ட ஞானம் இல்லாத காரணந்தான் இது போன்று வழக்குகள் தோல்வியடையக் காரணம் என்று நான் கருதுகிறேன். அந்த அளவிலே கீழ் மட்டத்தில் உள்ள போலீஸ் அலுவலர்களுடைய 'குவாலிபிகேஷனை' உயர்த்தி அவர்களுக்குச் சட்ட அறிவு ஊட்டவேண்டுமென்று குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் காவல் துறையினருக்கு உள்ள வீடு கட்டும் திட்டத்தைப் பற்றிப் பெருமையாகக் குறிப்பிட்டார்கள். அதை நாங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். 1954-ல் இந்த மன்றத்திலே கொடுக்கப்பட்ட புள்ளி விவரப்படி 1950-ம் ஆண்டு வரை 50 சத விகித காவல் துறையினருக்குத்தான் வீடுகள்தான் இருக்கக்கூடிய அளவுக்கு வசதிகள் இருக்கின்றன என்று கொடுத்திருந்தார்கள், இப்போது கொடுத்திருக்கும் புள்ளி விவரத்தைப் பார்த்தால் 65 சத விகித அளவுக்குத்தான் வீடுகள் கட்டிக் கொடுக்க வசதி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்தப் பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்படுகிறதா என்பதைத் தான் நாம் யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலே, திருப்பத்தூர் வட்டத்திலே, நெற்குப்பை என்ற ஊரிலே போலீஸ் காலனி ஒன்று கட்டப்பட்டது. அதற்காக 1959-ம் ஆண்டு ஒருவரிடமிருந்து இரண்டு எக்கர், இருபத்தாறு சென்ட் நிலம் விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். அது என்ன விலைக்கு வாங்கப்பட்டது என்ற விவரத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது கூறியிருக்கிறார்கள். 18,469 ரூபாய் கொடுத்து 2 எக்கர், 26 சென்ட் நிலம் இராமநாதபுரத்திலே வாங்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்தார்கள். அந்த நிலத்தை விற்ற நபர் அதே நிலத்தை மூவாயிரம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார். மூவாயிரம் ரூபாய்க்கு ஒருவர் வாங்கிய நிலத்தை, நம்முடைய அரசாங்கம் 18,469 ரூபாய் கொடுத்து வாங்கலாமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்த இடத்திற்குப் பக்கத்திலுள்ள நிலங்களை நம்முடைய சர்க்கார் மருத்துவ விடுதிகள், கல்விக் கூடம் கட்டுவதற்காக வாங்கியிருக்கிறார்கள். அந்த நிலங்களை எக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கிரயம் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். போலீஸ் காலனி கட்டுவதற்காக வாங்கப்பட்ட நிலத்திற்கு மட்டும் எக்கர் ஒன்றுக்கு ஏறத்தாழ 9,000 ரூபாய் அளவுக்குக் கொடுத்து வாங்கியிருக்கிறது.



இது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டுவரப்பட்டிருக்கிறது. மக்கள் நிதி அமைச்சர் அவர்களுக்கு ஏராளமான மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். கடைசியாக 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ந் தேதியில் அவருக்கு ஒரு மனு அனுப்பபபட்டது. பொது மக்கள் அனுப்பினால் அதைக் கவனிக்கமாட்டார்களோ என்று கருதி சட்டமன்ற அங்கத்தினர் என்ற முறையில் நானும் நம் உள்துறை செயலாளருக்கு எழுதியிருக்கிறேன். அது கிடைத்ததா என்றுகூட எனக்குத் தெரியவில்லை. அந்தளவிற்கு நிர்வாகம் இந்த வீடு கட்டும் துறையில் இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விபசாரச் சட்டத்தைப் பொறுத்த வரையில் நம் போலீஸ் இலாகாவினர் எப்படி நடந்து கொள்கின்றனர் என்பதைப் பற்றி நம் உயர்நீதி மன்றத்தில் பல தீர்ப்புகள் வந்திருக்கின்றன. இந்த விபசார ஒழிப்புச் சட்டம் அமைந்திருக்கிற ஒரு முறையைப் பற்றி நம் அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். அந்தச் சட்டத்திற்குள்ளே நம் காவல் துறையினர் செயல்பட முடியாத அளவிற்கு இருக்கிற காரணத்தினால் இந்தக் குற்றங்களில் பெரும்பான்மையும் வழக்கு மன்றத்தில் செல்லுபடியாகாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு பல காரணங்களில் ஒன்று அச்சட்டத்தில் (Promiscuous) என்ற வார்த்தை இருக்கிறது. குற்றத்தைச் செய்யும்போது ஒரு தரம் தான் காவல் துறையினர் காண முடியும் என்றிருக்கிறது. இந்த word-க்கு கொடுக்கப்படும் லீகல் இண்டர்ப்ரெடேஷன் பல முறையில் இருப்பதால் பல தடவை இந்தக் குற்றத்தைச் செய்ததாக நிரூபிக்க வேண்டியிருப்பதால் வழக்குமன்றங்களில் அவை நிற்காத சூழ்நிலைதான் இருக்கிறது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. ரா. கு. வீரப்ப செட்டியார்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த போலீஸ் மான்யக் கோரிக்கை மீது நான் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த இலாகாவானது நல்ல முறையில் பணியாற்றி வந்தபோதிலும், சில குறைபாடுகள் இருக்கின்றன. 1961-ல் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் 22·6 சத விகிதம் குற்றங்களும் இதர குற்றங்களில் 7·4 சத விகிதமும் அதிகரித்துள்ளன. இதற்கு காரணம் அவர்களுக்குள்ள வசதிக் குறைவு என்று சொல்லலாம். 1961-ல் இந்தக் குற்றங்களில் 51·6 சத விகிதம் தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு பல காரணங்கள் இருந்தபோதிலும் வாகன வசதிக் குறைவு, மிகுந்த பரப்பளவு, ஸ்டாப் குறைவுபோன்ற காரணங்களால் குற்றங்களை கண்டு பிடிக்க முடியாத நிலை என சொல்லலாம். இவற்றிற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சர்கிள் இன்ஸ்பெக்டர்கள் ஒவ்வொருவருக்கும் ஜீப், சப்-இன்ஸ்பெக்டர் ஒவ்வொருவருக்கும் மோட்டார் சைக்கிள் போன்றவை கொடுக்க வேண்டுமென்று இங்கு பல நண்பர்கள் சொன்னார்கள். அதை நானும் ஆதரித்துப் பேசுகிறேன். பரப்பளவு அதிகமாக இருப்பதால் எங்கெங்கு அவுட் போஸ்ட்ஸ் வேண்டுமோ, எங்கெங்கு ஸ்டேஷன்கள் அமைக்க வேண்டுமோ அவற்றை பரிசீலித்து ஆங்காங்கு நிறுவ அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "டிடெக்டிவ் டாக் ஸ்க்வாட்ஸ்" நல்ல முறையில் செயல்பட்டு வருவதாக அறிக்கையில் காண்கிறேன். இந்த நாய்கள் சென்னையிலும், மதுரையிலும்தான் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. பிற மாவட்டங்களிலும் இந்த நாய்களை வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஏனெனில் கிராமப்புறங்களில் நாய் வருகிறது என்று சொன்னாலே குற்றத்தை ஒப்புக் கொண்டு விடுவதைக் காண்கிறோம். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த நாய்களை வைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக லாரி போன்ற வாகனங்களை விரைவாக, வேகமாக ஓட்டுவதால் பல விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே இதுபற்றி அரசாங்கம் சிந்தித்து இந்த ஸ்பீடை குறைப்பதற்கு ஏற்பாடு செய்தால் இந்த விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்கலா

மென்பது என் அபிப்பிராயம். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக ஒவ்வொரு தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸிலும் ஒரு பயர் என்ஜின் இருக்கவேண்டுமென்று இங்கு பலர் சொன்னார்கள். அதையும் நான் ஆதரித்துப் பேசுகையில் தர்மபுரியில் ஒரு பயர் ஸ்டேஷன் வேண்டுமென்று பன்முறை கேட்டிருக்கின்றேன். அதையும் இந்த சந்தர்ப்பத்தில், கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகப் பொறுப்புகளோடு நல்லமுறையில் சேவை புரியும் இந்த இலாகாவிற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவிப்பதோடு மேலும் அவர்களுக்கு வீட்டுவசதி, ஊதிய உயர்வு போன்ற வசதிகளைச் செய்து கொடுத்து அவர்கள் நல்லமுறையில் பணியாற்ற அவர்களை ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஏ. எஸ்.. தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** கனம் சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த மன்றத்தின்முன் வந்திருக்கின்ற போலீஸ் மான்யக் கோரிக்கையை வரவேற்று நான் சில கருத்துக்கள் கூற ஆசைப்படுகிறேன். சாதாரணமாக ஒரு நாட்டிற்கு படை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் போலீஸ் இலாகா என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். போலீஸ் இலாகா இல்லாமல் ஒரு நாடு சமாதான முறையில், அமைதியாக இயங்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாத நிலையில் இருப்பதை பிரத்தியட்சமாகக் காண்கிறோம். அந்த வகையில் பார்த்தால் போலீஸ் இலாகா சீரிய சிறப்பு வாய்ந்த ஒரு இலாகா என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். நம் இந்திய நாட்டில் எல்லா மாநிலங்களிலும் போலீஸ் இலாகா இருக்கின்றன. அதில் தமிழ்நாட்டில் போலீஸ் இலாகா நடைபெறும் முறையைப் பற்றி பல மாநிலத்தவரும் புகழ்கிறார்கள். அவற்றைக் கேட்கும்போது,—

“ மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ் சொல் ”

என்று வள்ளுவர் பெருந்தகை கூறியிருப்பதுபோல் இது கேட்டு தமிழ் மாநில மக்களும், சர்க்காரும் நிச்சயம் பெருமை அடைவார்கள், அடைகிறார்கள், அடையவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். திரு. சசிவர்ண தேவர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். வளமான பகுதிகளில் போலீஸ் இலாகாவே தேவையில்லை அல்லது குறைவாக இருந்தால் போதும் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. அப்படியிருந்தால் தஞ்சை மாவட்டத்தில் நிச்சயமாக போலீஸை எப்போதோ ஒழித்திருந்திருக்கலாம். எனது ஈரோடு தொகுதியை எடுத்துக் கொண்டால் அங்கு புதிதாக கீழ்பவானி பாசனத்தால் வந்துள்ள வளப்பமான பகுதி அது. அங்கு போலீஸ் இல்லாமல் ஒரு நாள்கூட மக்கள் அமைதியாக வாழ முடியும் என்ற நிலை நிச்சயமாகக் கிடையாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களிடத்திலுள்ள தீய குணங்கள் ஏழ்மையையோ அல்லது வளப்பத்தையோ நாடி வருவதில்லை. ஏழைகள், தரித்திரர்கள்தான் குற்றங்கள் செய்கிறார்கள் என்பது சரியல்ல. அவர்களை உபயோகித்துக் கொண்டு ஆக்கம் வாய்ந்தவர்கள் பெரிய குற்றங்கள் செய்கிறார்கள் என்பதை நாம் பார்த்துவருகிறோம். உலக நியதிக்கும் அது சரியாகத்தான் இருக்கிறது. ஆகவே வளப்பமான இடங்களில் போலீஸ் தேவையில்லை அல்லது குறைத்துக்கொள்ளலாம் என்று சொல்வதை நான் மறுக்கிறேன். இந்த மாநிலத்தில் மதுவிலக்கையும் போலீஸ் இலாகாவிடம் ஒப்படைத்துள்ளனர். அதுபற்றி பல்வேறு அபிப்பிராயங்கள் இருப்பதைப் பார்க்கிறோம். மதுவிலக்கு குற்றங்கள் அதிகமாயிருக்கிறது, திருட்டுச் சாராயம் காய்ச்சுவது அதிகரித்திருக்கிறது என்றெல்லாம் சொல்லப்பட்டது. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 400, 500 ரூபாய் என்று அபராதம் விதிக்கும் முறை வந்ததில் இருந்து அக்குற்றங்கள் மிக மிக குறைந்து விட்டன என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏழைகளைத்தான் மிகுதியாக பாதித்திருந்தது மது அருந்தக்கூடிய நிலைமை. நிச்சயமாக ஏழைகள்



இதிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பாராட்டுதலோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் பார்த்தாலும் இந்த இலாகா நல்ல முறையில் சிறந்த சேவையைச் செய்து வருகிறது. போலீஸ் இலாகாவில் இருக்கிறவர்கள் மது அருந்துகிறார்கள் என்றால், மக்களிடம் இருக்கிற பழக்கம்தான் அங்கேயும் வருகிறது. போலீஸ் இலாகா என்றால் பரிசுத்தமான வெட்ட வெளியிலிருந்துகொண்டு வந்து இயங்க வைக்கவில்லை. நம்மிடத்தில் இருக்கிறவர்களைக் கொண்டதுதான் இந்த போலீஸ் இலாகா. நம்மிடத்தில் இருக்கிற குற்றங்கள் அங்கே பிரதிபலிக்கலாம். அப்படிப் பிரதிபலித்தால் போலீஸ் இலாகா பூராவும் குற்றம் செய்யும் இலாகா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. போலீஸ் இலாகா இல்லாமல் நிச்சயமாக நாடு நடக்காது. அதை உணர்ந்தால் தமிழ்நாட்டு போலீஸ் இலாகா சிறந்த முறையில் செயல்படுகிறது என்பதைப் பாராட்டவும் வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக இப்போது நம் தமிழ்நாட்டில் போலீஸ் கிராமப் பணி ஏற்பாடு இருப்பதாகக் கேள்விப் பட்டேன். ஆங்கில அரசாங்கத்தில் போலீஸ் இலாகா அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிற இலாகா மாதிரி ஜனங்களுக்கு இருந்தது. சுதந்திரச் சர்க்கார் ஏற்பட்ட பிறகு போலீஸ் இலாகா மக்களுக்குப் பணியாற்றுகிற, மக்களுக்காகச் செயல்படுகிற இலாகா என்பதைத் தெரிவிக்கும் வகையில் அந்தந்த மக்களிடத்தில் அணுகி, கிணறு வெட்டுதல், பள்ளிகள் கட்டுதல், சாலைகள் அமைத்தல் போன்ற பணிகளில் மக்களை ஊக்குவித்து அவர்களோடு உடன் நின்று செயல்படும் முறையில் புதிய அமைப்பை ஏற்படுத்தியதன் பொருட்டு தமிழ்நாடு சர்க்காரைப் பாராட்டுகிறேன் என்று தெரிவித்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. சா. கணேசன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சமர்ப்பிக்கப் பெற்றிருக்கிற போலீஸ் மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சொல்ல முன்வந்திருக்கிறேன். போலீஸ் என்பது ஒரு தவிர்க்கப்பட முடியாத, அல்லது குறைத்து மதிப்பிடப்பட முடியாத, ஒரு இன்றியமையாத சேவையைப் புரிகின்ற அருமையான துறை. ஒரு தேசத்திலே அல்லது ஒரு பகுதியிலே அங்கே ஒழுங்கு இருக்கிறதா, சட்டம் இருக்கிறதா, நீதி இருக்கிறதா என்பதை எல்லோருக்கும், எப்போதும் நினைவிலே உறுத்திக் கொண்டிருக்கிற ஒரு இலாகா அது. தெருவிலே போனாலும், பெரிய கூட்டங்களில் போனாலும், எங்கும் இப்படி ஒன்று இருக்கிறது என்று நம்மைப் போன்ற எல்லோருக்கும் எப்போதும் சுட்டிச் சுட்டிக் காண்பிக்கிற அருமையான இலாகா அது. செங்கோலின் சின்னமாக, காட்சிப் பிரமாணமாக விளங்கும் இலாகா போலீஸ் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள், மறுக்கவும் முடியாது. அத்தகைய ஒப்பற்ற நல்ல பணியைச் செய்கிற இலாகாவின் மீது இங்கே இருக்கிற உறுப்பினர்கள் குறைகளை—குற்றம் சுமத்த இல்லை—குறைகளைத் தெரிவித்தால் இந்த இலாகாவைக் குறை கூறுவதாக யாரும் கொள்ளக் கூடாது. அந்த இலாகாவிலே பதவி வகிக்கிற குறிப்பிட்ட ஊழியர்களின் செயலால் அந்த இலாகாவிற்கு ஏற்படுகிற கெட்ட பெயரை—பழியை—விலக்கவேண்டுமென்ற ஆர்வத்திலேதான் சொல்லுகிறார்கள் என்பதை ஆட்சியாளர்களும், இலாகாவைச் சேர்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று முதலிலேயே கூறி நான் மேலே சொல்லுகிறேன்.

இந்தத் துறையிலே ஏன் இவ்வளவு அக்கறையோடு குற்றங்களைக் கண்டு சொல்லுகிறோம் என்றால், அந்தத் துறை அவ்வளவு புனிதமாக இருக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தினாலேதான். அந்த இலாகாவில் லஞ்ச ஊழலைப் பற்றிச் சொன்னார்கள்; கள்ளச்சாராயங்கள் முழுதும் நிறுத்தப் பெறவில்லை என்று சொன்னார்கள்; அரசியல் காரணத்திற்காக முறை துறந்துகூடச் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள், பல—அல்லது சில—அங்கத்தினர்கள். இன்றைய

*** திரு. ஆர். ரெங்கசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது இங்கே வைக்கப்பட்டிருக்கும் மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாம் போலீசாரைப் பற்றிக் குறை சொல்லும்போதும், போலீஸ்காரர்களுக்கு ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை எடுத்துச் சொல்லும்போதும், குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பேசும்போதும் ஓர் உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மாண்பும், மதிப்பும்கொண்ட நமது முதல் அமைச்சர் அவர்களுடைய தலைமையின்கீழ் இன்று இயங்கிவரும் இந்தப் போலீஸ் இலாகாவானது சமநிலை நோக்கோடு, யாரும் பாதிக்கப்படாத வகையில், சீரிய பணியாற்றி வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் யாரும் மறுக்க முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக போலீஸ்துறை என்றால் யாருக்குமே பிடிப்பது இல்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த போலீஸ்காரர்களை விரோதக் கண்ணோடு பார்த்துப் பார்த்துப் பழகின காரணத்தினால்—கடந்த பதினைந்து ஆண்டுகளில் போலீஸ்காரர்களின் மனோபாவம், செயல் ஆகிய அத்தனையும் மாறிவிட்டது என்றாலும்—இன்னும் ஒரு சிலர் ஏதோ ஒருவிதமாக நினைத்தே பேசுகிறார்கள். இருந்தாலும் பெரும்பான்மையோர்கள் போலீஸ் இலாகாவினர் செய்கின்ற அரிய சேவையைப் பாராட்டி அவர்களுடைய குறைபாடுகளை சர்க்கார் இன்னும் நீக்கவில்லையே என்பதாகப் பேசினார்கள். இங்கே நடந்து கொண்டிருக்கும் விவாதத்தைப் பார்க்கிறபோதே போலீஸ் இலாகாவினர் எவ்வளவு கண்ணியமாகவும், நேர்மையாகவும் செயல்படுகிறார்கள் என்பது தெரியும்.

இன்னும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்பதாகக் குறிப்பிட்டார்கள். உண்மையில் லஞ்சம் வாங்கிக்கொண்டு வழக்கை எடுக்காமல் விடுவது என்றால் இன்று நம் மாநிலத்தில் போலீஸ்காரர்களால் தொடரப்பட்டிருக்கும் வழக்குகள் இவ்வளவு இருக்காது. லஞ்சம் வாங்கிக் கொண்டு சலுகை அளிப்பதோ, அரசியல் காரணமாகச் சலுகை அளிப்பதோ அவர்களிடத்தில் இல்லை என்பதைப் பல வழக்குகளைப் பார்த்தாலே விளங்கும். கோயம்புத்தூர் மார்க்கெட்டிங் சொஸைட்டி கேஸ், ராமநாதபுரம் வழக்கு, இன்னும் பல பல ஆபீசர்களின் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு எல்லாம் அவர்கள் கண்ணியத்தோடும் நேர்மையோடும் நடந்துகொள்கிறார்கள் என்பதற்குச் சான்றாகும். உண்மையில் நாம் ஒன்றை கவனிக்கவேண்டும். போலீஸ்காரர்களுக்கு வழக்குகளைக் கண்டுபிடிக்க உதவி செய்கிற மனப்பான்மை இன்னும் நாட்டில் வளரவேண்டும். இதில் உறுப்பினர்களாகட்டும் பொதுமக்களேயாகட்டும் எத்தனை வழக்குகளில் உதவி செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் தெரியும், அத்தகைய மனப்பான்மை இன்னும் வளரவில்லை. மாறாக குற்றவாளிகளுக்கே உதவி செய்கிற மனப்பான்மைதான் இருக்கிறது. குற்றம் செய்பவர்களைக் காட்டிக்கொடுக்கிற தைரியம் யாருக்கும் இல்லை. அது வராது என்பது என்னுடைய எண்ணம். இதனால் எல்லாம் போலீஸ்காரர்களுக்கு ஒரு குற்றத்தை கண்டுபிடித்து ருசுப்படுத்துவதற்குப் பல சங்கடங்கள் உண்டாகின்றன. அப்படியிருக்க அவர்கள் பல குற்றம் செய்கிறார்கள், அவர்களைத் தண்டிப்பது இல்லை என்று சொல்வது சரியாகாது. சப் இன்ஸ்பெக்டர்களை எடுத்துக்கொண்டால் சாதாரணமாக ஒருசில ரூபாய் கடன் வாங்கினார் என்பதற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு மக்களுக்குள்ள ஒரேஒரு குறை என்னவென்றால் நகரங்களிலேயே போலீஸ் பாதுகாப்பு அதிகமாக இருக்கிறதே தவிர கிராமங்களில் தக்க பாதுகாப்பு ஏற்படுத்தப்படவில்லை என்பதுதான். கிராமங்களில் சமூக விரோதிகள் செய்கின்ற கொடுமைகளில் இருந்து, ஏழைகளைப் பாதுகாக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவேண்டும். (மணி அடிக்கப்பட்டது)

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** கனம் உதவி சபாநாயகர்
12-00 அவர்களே, போலீஸ் மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை
noon நான் கூற விழைகின்றேன். போலீஸ் துறையானது நமது நாட்டிலே ஒரு பெரும் பொறுப்பு வாய்ந்த துறை என்றுதான் சொல்லவேண்டும்.





நாட்டில் குழாய் அடியில் ஏற்படுகின்ற சண்டையிலிருந்து நாட்டின் எதிரியைத் துரத்தி நாட்டிலே பாதுகாப்பை ஏற்படுத்துகின்ற வரையிலே அவர்களுக்குப் பொறுப்புண்டு என்று சொன்னால், இந்த நாட்டிலே இருக்கின்ற அத்தனை பொறுப்புகளும் அவர்களைச் சார்ந்தது என்றுதான் சொல்லவேண்டும் அந்தத் துறை எவ்வளவு கஷ்டமான துறை, எவ்வளவு சிக்கல்களுக்கு இடையில் அவர்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, அந்தத் துறையிலே ஏற்படுகின்ற சில குற்றங்குறைகளை நாம் பெரிதாக நினைக்கக்கூடாது என்பதைத்தான் நான் தங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நாட்டில் சீனர்களுடைய ஆக்கிரமிப்பு ஏற்பட்டபோது, முதன் முதலாகப் பாதுகாப்பு நிதிக்குப் போலீஸ் துறையினர் தான் தங்களுடைய ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்து மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார்கள் என்று சொன்னால் அவர்களை நாம் பாராட்டுவது நம்முடைய கடமையாகும். அவர்கள் பல பணிகளைச் செய்து வருகிறார்கள், குற்றங்களைக் கண்டுபிடிக்க குற்ற இலாகா, தீ அணைக்கும் இலாகா, சி. ஐ. டி. இலாகா போன்ற பல இலாகாக்கள் அவர்கள் பொறுப்பில் இருக்கின்றன. நாட்டிலே சட்டத்தை நிலைநாட்டவும், அமைதியை நிலை நாட்டவும், மக்கள் சமூகத்தில் பயமின்றி சுமுகமான முறையிலே வாழ்க்கை நடத்தவும் அவர்களுடைய பணி பயன்படுகிறது. அவர்கள் நாட்டிலே நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பாராட்டாமல் விட்டு விட்டால் நாம் நமது கடமையைச் செய்ய மறந்தவர்களாவோம். கீழ் நிலையில் இருந்து வேலை பார்த்து வருகிற போலீஸ் கான்ஸ்டபிள் கால் கடுக்க நாள் முழுவதும் நின்று கொண்டு தங்களுடைய பணியை ஆற்றுகிறார்கள். நமக்கெல்லாம் குடும்பப் பொறுப்பு, இன்பங்கள் அத்தனையும் அனுபவிக்கும் உரிமை இருக்கிறதென்று சொன்னால், போலீஸ் இலாகாவிலே, கீழ்த் தரத்தில் இருக்கிறவர்கள் மட்டுமல்ல, அத்தனை அதிகாரிகளும், தங்களுடைய குடும்பத்தைப் பற்றிய உணர்ச்சியை எல்லாம் மறந்துவிட்டு எந்த எந்த நேரத்தில் எங்கெங்கு செல்லவேண்டுமோ அங்கெல்லாம் உடனடியாகச் சென்று தங்களுடைய கடமையைச் செய்கிறார்கள். அதற்காக நாம் அவர்களைப் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மது விலக்கு சம்பந்தமான குற்றங்களை எதிர்க்கட்சியினர் சாட்டினார்கள். மதுவிலக்கைப் பொறுத்தவரையில் அவர்களால் முடிந்த அளவுக்குத் துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள். மதுவிலக்குக் குற்றங்கள் தற்போது நாட்டிலே குறைந்து கொண்டுதான் வருகிறது. மது விலக்குச் சட்டம் கொண்டு வருவதற்கு முன்னால் மது அருந்தும் பழக்கம் இருந்த அளவுக்கு இப்போது மது அருந்தும் பழக்கம் இல்லை என்றுதான் சொல்ல ஆசைப்படுகிறேன். கும்பக்கரையில் நடந்த பெரிய கொள்ளைக் கேசில் கொள்ளையடித்துக் கொண்டுபோன ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகளை எல்லாம் நம்முடைய போலீசார் கண்டுபிடித்துத் திருப்பிக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள். இந்த அளவுக்குக் குற்றங்களைக் கண்டுபிடிக்கக்கூடிய திறமை நம்முடைய போலீஸ் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

*** திரு. எஸ். மாதவன் :** மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, காவலர் மானியத்தின் மீது பேசும்போது கனம் அங்கத்தினர்கள், எதிர்க்கட்சிகள் போலீஸ் துறையை ஆதரித்துப் பேசுவதாகக் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய சூழ்நிலையில் நம்முடைய நாட்டில் சேவை செய்யக்கூடிய ஒரு பிரிவினரை எதிர்கட்சியினர் புகழத்தான் வேண்டுமென்பது எங்களுடைய கருத்து. அந்த முறையிலே இன்றைக்கு நம்முடைய நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய இக்கட்டான நிலையிலே காவல் துறையினர் ஆற்றி வரக்கூடிய பணிகளை நாங்கள் மனப்பூர்வமாகப் போற்றி வரவேற்கிறோம். நம்முடைய நாட்டு மக்களுக்கு எல்லாம் சீனாவை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டபோது

யெல்லாம் நாம் மறந்து விடப்படாது. இதற்குச் சமாதானம் சொல்லுவது மட்டும் கூடாது—சமாதானம் சொல்லவேபடாது என்று சொல்ல இல்லை. இந்தத் தவறுகள் எவ்வளவுக்குக் குறைக்கப்பட முடியுமோ அவ்வளவுக்குக் குறைக்கப்பட வேண்டும். முற்றிலும் நிவர்த்தி செய்ய முடியும் என்று நம்புகிறவன் அல்ல நான்; கூட்டக் கூட்டக் குப்பை சேர்ந்து கொண்டுதான் இருக்கும்; குப்பை சேரச் சேரக் கூட்டித்தான் ஆகவேண்டும்; அதுதான் உலக நியதி. இருக்கின்ற தவறுகளைக் களைவதற்கு, அடியோடு போக்கவேண்டுமென்ற லட்சியத்தில் முயலுவதற்கு அந்தத் துறையினரும் நாமும் முன் வரவேண்டுமென்பதைத் தான் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கள்ளச் சாராய விஷயங்களையெல்லாம் பற்றிப் பேசிக்கொண்டு போனால் நேரம் அதிகம் ஆகும். வீட்டிலே காப்பி போடுவது போன்று அவ்வளவு அதிகமாகப் பரவி விட்டது என்று சொன்னால் போதும்; அதுதான் நிலைமை. விற்பனைக்கு மட்டும் அல்லாமல் சொந்த உபயோகத்திற்கும் காய்ச்சிக் கொள்ளும் பலரை நான் கண்டே இருக்கிறேன். உயர்ந்த நிலையில் இருக்கிறவர்கள், தகுதியுள்ளவர்கள், வெளியிலிருந்து வாங்கி வருவதில் மான உணர்ச்சி காரணமாகத் தங்கள் சொந்த வீட்டிலேயே காய்ச்சிக்கொள்ளும் நிலையே வந்து விட்டது. இதையெல்லாம் எப்படித் தவிர்ப்பது, எவ்வளவு கடுமையாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நன்றாகச் சிந்திக்கவேண்டும். கனம் முதல் அமைச்சர் அவர்களோடு நான் பேசிக்கொண்டிருந்த போது, இதைப் பற்றி நன்றாக யோசித்து, செம்மையான, உறுதியான கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் நெறிகளை வகுக்க வேண்டும் என்று சொன்னார். நல்ல உணர்ச்சியோடு கூடிய அந்த அபிப்பிராயத்திற்கு நான் நன்றி தெரிவித்து அவர்களுடைய நல்ல முயற்சியைப் பாராட்டுகிறேன்—எங்களால் முடிந்த எல்லா ஒத்துழைப்பையும் தரச் சித்தமாக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு மேலே, இந்தத் தவறுகள் ஏற்படுவதற்கு என்னென்ன காரணங்கள் என்று ஆராய்ந்து, போலீஸிலே இருக்கிற அத்தகைய குற்றங்களை அவ்வளவு பேரும் என்று நான் சொல்லவில்லை,—சிலர் செய்கிறார்கள் என்றாலும், இப்படித் தவறான காரியங்களைச் செய்யக் காரணம் என்ன என்று கணித்து அதையும் கெல்ல முயலவேண்டும். அவர்களுக்குப் போதிய—வாழ்க்கையைச் செம்மையாக நடத்துவதற்குரிய—சம்பளம் கொடுக்கவேண்டும். அதற்குமேலே பணி செய்கிறபோது போதிய அளவுக்கு —போலீஸ் கான்ஸ்டபிள்களுக்குப் படி கிடைக்கச் செய்யவேண்டும். மேலதிகாரிகளுக்குக் கிடைக்கிறதோ இல்லையோ, அதைப் பற்றி நான் சொல்லவில்லை. இரவு பகலாக தலைவர்கள் வரும்போது நடுக் காட்டிலே நிறுத்தி விடுகிறோம் இவர்களை. அப்படி அவர்களை நிறுத்தி விட்டு, ஒரு ரூபாய் அல்லது முக்கால் ரூபாய் படி என்று சொன்னால், அது தான் சட்டம் என்று சொன்னால், அது தர்மம் அல்ல, சட்டமாக இருந்தாலும், அது நீதி அல்ல. இதையெல்லாம் கவனிக்கவேண்டும். அந்தத் துறையினருக்கு தியாக எண்ணம் வேண்டும், கட்டுப்பாடு வேண்டும் என்று வற்புறுத்தி அவர்கள் பரிபூர்ண தந்திரத்தோடு இயங்க அவர்களுக்கு முழு உரிமை வழங்கிவிடவேண்டும். அதற்குமேலே அவர்கள் தவறு செய்தார்கள் என்று கண்டுபிடித்தால்—தவறு என்றால் பிழை என்று சொல்லவில்லை; தவறி விடுவது இயற்கை; குற்றம் செய்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால்—குற்றங்களைச் செய்தவர்களுக்கு அதிகத் தண்டனை கொடுக்கவேண்டும். குற்றம் செய்யாமல் தடுக்க வேண்டியவர்களே குற்றம் செய்தார்களென்றால் அவர்களுக்கு நிச்சயமாக அதிக தண்டனை கொடுக்கவேண்டும். மேலதிகாரிகள் கீழே இருக்கிறவர்கள் செய்யக்கூடிய பிழையினை—தவறுகளை—கொஞ்சம் சப்பைக் கட்டுகட்டி காப்பாற்ற முயலுவது சரி; நியாயம் என்றுகூடச் சொல்லுவேன். ஆனால் குற்றத்தை மறைக்க மேலதிகாரிகளும் இணங்க மாட்டார்கள்; இணங்கப்படாது என்று சொல்லிக்கொள்கிறேன். அதைப்





போலவே கடமைக்காக, அஞ்சாமல் உறுதியோடு பாடுபடக் கூடியவர்களுக்குச் சன்மானம் கொடுக்கவேண்டும். அது எந்த மாதிரியாக இருந்தாலும் சரி. இப்போது இல்லை என்று நான் சொல்லவில்லை அதை நாம் வளர்த்துப் பலப்படுத்தி அதற்கு ஆக்கம் கொடுக்கவேண்டும்.

அதற்கு மேலே நகரப் போலீஸ், நாட்டுப் போலீஸ் என்று இரண்டு பிரிவாக ஏன் இருக்கவேண்டும் என்று தெரியவில்லை. பழைய காலத்தில் 4 வகைகளாக வைத்திருந்தார்கள்—மெய் காவல், வீடு காவல், பாடி காவல், நாடு காவல் என்று வைத்திருந்தார்கள். மெய் காவல் என்பது ஏ.டி.ஸி.; பாடி காவல் என்பது போலீஸ்; நாடு காவல் என்பது டிஃபென்ஸ் ஃபோர்ஸஸ் வெளியேயிருந்து போர்மேல் வருகிறவர்களை எதிர்த்துத் தாக்குவார்கள். மிலிட்டரியிலிருந்துதான் இந்த ஏ.டி.ஸி. மெய் காவல் தேர்ந்தெடுக்கப்படும் என்று சொல்லுவார்கள். இந்த உணர்ச்சி பெருக வேண்டும். எல்லாவற்றையும் ஒரு குடையின்கீழ், ஒரே துறைக்குக் கொண்டுவந்து, ஐ. ஜிக்குக் கீழே நாட்டுப் போலீஸும் நகரப் போலீசும் இருந்தால் அது தவறாக ஆகாது என்பது எனது ஆலோசனை.

அதற்குமேலே, முக்கியமான நிகழ்ச்சிகளைப் பார்க்கும்பொழுது, 12·30 p.m. போலீஸ்காரர்கள் எவ்வளவு செம்மையாக நடக்கவேண்டுமென்று நாம் கருதுகிறோமோ, தவறு செய்பவர்களை எந்த அளவுக்குக் கண்டிக்கிறோமோ அந்த அளவுக்கு அவர்களைப் பாராட்டுவதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம். அதிலே கொஞ்சம்கூடக் கஞ்சத்தனம் கூடாது. 1962-ல் ஒரு சிறப்பான செய்தி என்னவென்றால், போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் கூடிய நிலை ஏற்படவில்லை என்பதுதான். அது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால், அதற்கான பாராட்டுதல் முழுவதையும் போலீஸ் இலாகா பெற்றுவிடவேண்டும் என்று நாங்களும் சரி, நீங்களும் சரி, ஒப்புக் கொள்ளமாட்டோம். நம்மைப் போன்றவர்கள் அதற்கு மூலகாரணம். அவர்கள் கடுமையாகவும், கொடுமையாகவும் எதையும் செய்யவில்லை, அவ்வாறு செய்து அப்படிப்பட்ட நிலையை போலீஸ்காரர்களுக்கு உண்டாக்கவில்லை. அவர்களுக்கு வந்த நல்ல பெயர் நமக்கும் வந்தது தான். இரு சார்புக்கும் பாராட்டு என்று, அந்த நிலையிலே பாராட்டுகிறேன்.

அடுத்து, சிறு குற்றங்களைப் பொறுத்தவரையில், 1959-ல், 50,893 குற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 1960-ல் 300 குற்றங்கள் குறைந்திருக்கின்றன, அதாவது 50,595 குற்றங்கள். 1961-ல் 2,100 குற்றங்கள் குறைந்து காணப்படுகின்றன, அதாவது 48,468 குற்றங்கள்தான். இது விஷயமும் அப்படித்தான். குற்றங்கள் குறைந்திருக்கின்றன என்றால் மக்களும் திருந்தியிருக்கிறார்கள். மக்கள் திருந்தும்படியாகக் கொஞ்சம் போலீஸாரும் அச்சப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், பயமுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இரண்டு வழியிலும் இருவரும் பாராட்டத் தக்கவர்கள். குற்றம் புரிகிறவர்கள் அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள். நல்லவர்கள் கெட்டவரைக் கண்டு, அஞ்சவேண்டாம் என்று அபயஹஸ்தம் கொடுக்கத்தக்க நிலையிலே இருக்கும் போலீஸாரை நாம் மனமாரப் பாராட்டவேண்டும்.

அதற்குமேலே, குற்றங்கள் கண்டுபிடிக்கிற நெறி வளர்ந்துவருகிறது, அந்தத் திறமை பெருகி வருகிறது, உயர்ந்து வருகிறது என்று இன்னமும் புள்ளிவிவரங்கள் சான்று தருகின்றன. 1959-ல் சிறு குற்றங்கள் 48 சதமானம்தான் கண்டுபிடிக்கப்பட்டன. அதாவது, 100 'கம்ப்ளெண்டுகள் வருமானால், 48 குற்றங்கள்தான் கண்டுபிடிக்கப்பட்டு ஏதோ பலன் பெற்றிருக்கின்றன. 52·7 சதமானம் பெரிய குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. 1960-ல் சிறிய குற்றங்கள் கண்டுபிடிப்பது ·3 சதமானம் கூடியிருக்கிறது, அதாவது 48·3 சதமானம். 1960-ல் பெரிய குற்றங்கள் கண்டுபிடிப்பது ·1 சதமானம்தான் கூடியிருக்கிறது, அதாவது 52·8-ஆகக் கூடியிருக்கிறது. 1961-ல் சிறு குற்றங்கள் கண்டுபிடிப்பது 50·4 சதமானம். அதற்கு முன் வருஷத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, 2 சதமானம் கிட்டத்தட்ட, அதாவது 2·1 சதமானம் கூடி

[திரு. சா. கணேசன்] [12th March 1963

யிருக்கிறது. அதேமாதிரி பெரிய குற்றங்கள் கண்டுபிடிப்பது 3·2 சதமானம் கூடியிருக்கிறது, அதாவது 56·0 சதமானம். இம்மாதிரி போயிருக்கிற நிலைமையைப் பார்க்கிறபொழுது, துப்புத் துலக்குவதிலே நம்முடைய இலாகாவின் திறமை வளர்ந்து வருகிறது என்று சொல்லுகிறபொழுது நாம் எல்லோரும் திருப்திப் பட்டுக்கொள்ளத்தான் வேண்டும். அதற்காகப் பாராட்டவும் வேண்டும். அவர்களை மட்டுமல்ல, ஆட்சியையும் நம்மையும் கூட பாராட்டிக்கொள்வதிலே கொஞ்சமும் குறைப்பது வேண்டாத ஒன்று.

இந்த நிலையிலே இன்னும் மேலே செய்யவேண்டிய சில காரியங்களையும் நான் சொல்லத் தொடங்குகிறேன். நகரத்தைப் பொறுத்த வரையிலே, ஸ்பீட் லிமிட்டைக் கண்டிப்பாகக் கையாண்டுவரவேண்டும். இன்றைக்கு நான் டாக்ஸியில் வந்தேன். நானே பார்த்துக்கொண்டிருந்தேன். 50 மைல் ஸ்பீடில் டாக்ஸி சென்றுகொண்டிருந்தது. சர்க்கார் ஆறு வழிப்பாதை போட்டிருக்கிறார்களே அந்த இடத்தில்தான். நான் யாரையும் குறை கூறவில்லை. டாக்ஸி டிரைவரை மட்டும் நான் சொல்லவில்லை. பஸ்ஸும் அதற்குமேலே வேகமாக ஓடுகிறது. தனிப்பட்டவர்கள் அதற்குமேலே போகிறார்கள். எங்கும் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுத்துவிடமாட்டார்கள். ஆகவே, நகர எல்லைக்குள் 25 மைல்களுக்குமேல் ஸ்பீட் போகக்கூடாது என்ற விதியைக் கட்டாயமாக அமல்நடத்தவேண்டும்.

அதற்குமேலே, 'ரைட்டில் சைடு வாங்குவது' சாதாரணமாகப்போய் விட்டது ஸிடியைப் பொறுத்தவரையிலே. வெளியிலே ஒன்றும் அப்படியில்லை. 'கீப் டு தி லெப்ட்' என்று சொல்லக்கூடியது நடப்பவர்களுக்குத்தான் பொருந்தும் என்று எண்ணக்கூடிய நிலையில், கார்களில் வருபவர்கள் பெரும்பாலும் மற்றவர்கள் தங்களை சைடு வாங்கிவிடக்கூடாமல் இருப்பதற்கு என்ன வழி வகைகள் செய்யவேண்டுமோ அத்தனை வகைகளையும் செய்யக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். ஆறு வழிப்பாதை இருக்கும் இடத்தில் மட்டும் இம்மாதிரி நடக்கிறது என்று சொல்லவில்லை. பொதுவாகவேதான் சொல்லுகிறேன்.

அதற்குமேலே, போலீஸ்காரர்கள் இன்னொரு ஆபத்தையும் தடுக்க வேண்டும். ரோடுகளில் 'ஆக்ஸிடெண்டுகள்' பெருகுவதற்குப் பல பேர்கள் காரணமாக இருக்கலாம். ரோடுகளில் பள்ளம், படுகுழிகள் நிறையக் கிடக்கின்றன. அதற்குமேலே பாதையில் நடக்கவேண்டிய மக்கள் ரோடில் நடக்கிறார்கள். அதையெல்லாம் நாம் கவனிக்கவேண்டும். நடைபாதை 'புட் பாத்' என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதை விட்டு விட்டு மக்கள் ஏன் ரோடுகளில் நடக்கத் தொடங்குகிறார்கள் ? நானும் நடக்கிறேன். இங்கு இருக்கிற பலரும் நடக்கிறார்கள். யாரையும் குறை சொல்லவில்லை. காரணம் ரோடு சுத்தமாக இருக்கிறது. ஐந்தடி நடைபாதையில் மண்ணைக் கொட்டிவைத்திருக்கிறார்கள், கல்லைக்கொட்டி வைத்திருக்கிறார்கள், பள்ளம் படுகுழிகள் இருக்கின்றன. கால்வைத்தால் தடுக்கி விழுந்து பல் போய்விடுமோ என்று அஞ்சுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, நூற்றுக்கணக்கானவர்கள் நடைபாதைகள் இருந்தும் அவைகளை விட்டுவிட்டு ரோடுகளில் நடந்துகொண்டிருக்கிறார்கள். ரோடுகளில் நடக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர்களை ஆளாக்கிவிட்டு, அதனால் ஏற்படக்கூடிய அபாயத்தைக் கணிக்காமல் விட்டுவிடுதல் செம்மையான ஒன்று ஆகமாட்டாது. பள்ளங்கள் இருந்தால் அதைச் சுட்டிக் காட்டிச் சம்பந்தப்பட்டவர்களுக்கோ, கார்ப்பரேஷனுக்கோ அல்லது வேறு இலாகாவுக்கோ அவர்கள் தெரிவிக்கின்ற உரிமை போலீஸ்காரர்களுக்கு இருக்கவேண்டும். ஏதோ ரோடுகளில் 'ஒன்றுக்கு' இருந்தால் 'பிராஸிக்யூஷன்' செய்யக்கூடிய உரிமையை மட்டும் போலீஸ்காரர்களுக்குக் கொடுத்துவிடுவது போதாது. இப்படிப்பட்ட பள்ளங்களைச் சுட்டிக்காட்டிய பிறகும், இவைகளை நிவர்த்தி செய்யாதவர்களை 'ப்ராஸிக்யூஷன்' செய்வதற்கான தகுதியும் போலீஸ்காரர்களுக்கு அளிக்கப்படவேண்டும். பத்து நாட்களுக்கு முன்பு பார்த்தேன். புது ரோடு போடப்பட்டிருந்தது, நான்கு நாளுக்குமுன் குறுக்கே வெட்டப்பட்டிருக்கிறது. பைப் லைன் போடுவதற்கோ, அல்லது எலக்டிரிக் கேபிள் போடுவதற்கோ அம்மாதிரி



12th March 1963] [திரு. சா. கணேசன்]

குறுக்கே வெட்டுவதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. அம்மாதிரி தோண்டியவுடன் அதைச் செம்மையாக மூடவேண்டும். வருகிறபோகிற வண்டிகள் அதன்மீது போகும்பொழுது 'டொம், டொம்' என்று விழ வேண்டிய நிலைமையில் ஸ்பிரிங் என்ன ஆகுமோ என்று எண்ணக் கூடிய வகையில் பள்ளங்கள் செம்மையாக மூடப்படாமலிருக்கின்றன. அவ்வாறு நிலைமை இருந்தால் அதுபற்றி சம்பந்தப்பட்ட இலாகாவுக்கோ அல்லது நபருக்கோ அறிவிக்கக்கூடிய ஒரு தகுதியை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குமேலே, 'மே ஐ ஹெல்ப் யு' ஸ்குவாடு ஒன்று தோன்றியிருக்கிறது. அது நல்ல அழகான முறை. அதை வலிய வந்து உதவும் அணி என்று சொல்லலாம். அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்க வேண்டும். அவர்களுக்கு மட்டுமல்ல. பொதுவாக போலீஸில் உள்ள எல்லோருக்கும் அந்தப் பயிற்சி கொடுக்கவேண்டும். போலீஸ்காரர்களுக்கு சட்ட ஞானம் வேண்டும் என்று ஒரு அன்பர் குறிப்பிட்டார். அவர்களுக்குச் சட்ட ஞானம் மட்டும் போதாது. மக்களோடு பழகுகிற ஹிருதயம் அவர்களுக்கு வளரும்படியாகச் செய்யவேண்டும். வெறும் கண்டிப்பு மட்டும் போதாது. மக்களை அவர்கள் அணுகி, சுவை ஒழுகப் பேசி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யக்கூடிய தகுதி உடையவர்களாக அவர்களை நாம் செய்யவேண்டும். அந்த முறையில் கிடைக்கிற அனுபவத்தை வைத்து, எல்லாப் போலீஸ்காரர்களுக்கும் இந்தப் பயிற்சியை அளிக்கவேண்டும். வெளிநாடுகளில் சில இடங்களில் பார்க்கிறோம், வீடு தெரியவில்லையென்றால், அங்கு இருக்கும் போலீஸ்காரர் 'இதுதான் வீடு' என்று மாடி வரையிலும் இட்டுச்சென்று வீட்டில் விடக்கூடிய நிலையைக் கண்டிருக்கிறோம், படித்திருக்கிறோம். சுதந்திரம் பெற்றநாட்டில் இந்த உணர்ச்சி வளருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அதற்குமேலே, திரு. கரியமாணிக்க அம்பலம் ஒரு யோசனை சொன்னார்கள். சப்-ஜெயிலில், லாக்கப்பில் ஒருவர் செத்துப்போனால், அந்தப் பிணத்தை உடனே தூக்கிப் புதைக்கிற நிலைமை இல்லாமல், கலெக்டரோ, கலெக்டர் இல்லாவிட்டால் அவருக்கு சமதையாக உள்ள அதிகாரி டெப்யூடி கலெக்டரோ யாரையாவது கூப்பிட்டு, டி. எம். ஓவையும் கூப்பிட்டு, பிணத்தைச் சோதித்து, சர்டிபிகேட் பெற்ற பிற்பாடுதான் (கஸ்டம்ஸ் ஆபீஸிலிருந்து சர்டிபிகேட் பெற்றால்தான் சாமான் வெளியே போவதுபோல்) பிணம் வெளியே போகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், அட்டூழியங்கள், அக்கிரமங்கள், அநியாயங்கள் நிகழாமல் தடுக்க முடியும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அதற்கு வழிவகைகள் செய்யவேண்டும்.

மக்களுக்குக் கஷ்டங்கள், தொல்லைகள் ஏற்பட்டால், உடனடியாகப் போலீஸ் அதிகாரியிடம் சொல்லுவதற்கு வசதிசெய்து தரவேண்டும். ஒவ்வொரு சர்கிள் இன்ஸ்பெக்டருக்கும் டெலிபோன் இருந்துவர வேண்டும். டெப்யூடி சூபரிண்டெண்டுக்கு கண்டிப்பாக வேண்டும் என்று சொல்ல வேண்டியதில்லை. சர்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு மேல் இருக்கும் எல்லா அதிகாரிகளுக்கும் டெலிபோன் வேண்டியதுதான். அதேமாதிரி ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் டெலிபோன் இருக்கவேண்டும். நகரத்தை மட்டும் மனத்திலே வைத்துக்கொண்டு பேசக்கூடாது. சில சில கிராமங்களிலே டெலிபோன் வசதி செய்து தரமுடியாது. அங்கெல்லாம் கட்டாயமாகச் செய்துதர வேண்டுமென்றும் நான் சொல்லவில்லை. அந்த லட்சியத்தை மனத்திலே கொண்டு, டெலிபோன் வசதி இருக்கிற பகுதிகளில் அங்கே இருக்கிற போலீஸ் ஸ்டேஷன்களுக்கும், சர்கிள் இன்ஸ்பெக்டர்களுடைய வீடுகளுக்கும் நிச்சயம் டெலிபோன் வைக்கும்படியான ஏற்பாட்டை நாம் செய்யவேண்டும்.

அதற்குமேலே மதுவிலக்கைப்பற்றி எங்கள் தரப்பு உறுப்பினர் ஒருவர் சொல்லியதைப்பற்றி, மதுவிலக்கையே எடுத்துவிடச் சொல்லுகிறார்கள் என்று அங்கலாய்த்துக்கொண்டார்கள். "மதுவிலக்கை எடுத்துவிட்டால் கூடத் தேவலை" என்று சொன்னதை, எடுத்துவிடவேண்டும் என்று

அவர் விண்ணப்பித்துக்கொண்டதாக ஆட்சியாளர்கள் கொள்ளமாட்டார்கள். ஆனால், ஆளும் கட்சியில் இருக்கும் உறுப்பினர்கள் அவர் சொன்னதைத் திருத்தி வியாக்கியானம் பேசக்கூடாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றைப்பற்றி அழுத்தமாகச் சொல்லுவதற்காக, அது "இல்லாமல் தொலைந்து விட்டால் கூட நல்லது" என்று சொன்னால் அதை எடுத்துவிட வேண்டுமென்று கூறினார்கள் என்று திருத்திச் சொல்வது நேர்மையான, நியாயமான, தர்மமான, முறையான வாதம் ஆகமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ்காரர்களுக்கு நல்ல வழிமுறைகளை, நெறிகளை வகுத்து, நாட்டிற்குப் பெருமை தரக்கூடிய முறையில், அவர்களுடைய தகுதியும் அவர்களுடைய தரமும் உயர்ந்து, அவர்களுடைய வாழ்க்கை அச்சம் இல்லாத நிலையில், கவலையில்லாத நிலையில் இருக்கவேண்டும், பணி செய்கிறவர்களுக்கு இவற்றையெல்லாம் செய்யவேண்டும் என்று உதவி சபாநாயகராகிய தங்கள் மூலம் வேண்டிக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே! இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள காவல் துறை பற்றிய மானியத்தின்மீது, கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஒட்டிச், சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

காவல் துறையினருடைய கடமைகளும், பொறுப்புகளும், பணிகளும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்தப் படை சீரிய முறையில் நாட்டினைக் காக்கவேண்டிய இன்றியமையாத நிலையில் இருக்கிறது என்பதையும் இந்த மன்றத்திலுள்ள அத்தனை உறுப்பினர்களும் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். வேறு எந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிற அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பொறுப்புகள், அதிகாரங்கள், கடமைகள் ஆகியவற்றைவிட, காவல் துறையிலே இருப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகளும், பொறுப்புகளும், அதிகாரங்களும், உரிமைகளும் மிகவானவையாகும். அவர்கள் செய்து தீரவேண்டிய பணிகளும் ஏராளமாக வளர்ந்து இருக்கின்றன. ஒரு நாட்டைப் பாதுகாப்பதற்கு நிலப் படை, நீர்ப் படை, வான்படை, ஆகிய பல்வேறு படைகள் இருக்கின்றன. நாட்டிற்கு ஏற்படுகின்ற வெளியார் தீங்குகளைப் போக்குவதற்கு, அப்படைகளை வைத்து நாம் காப்பாற்றுவது போல, நாட்டுக்குள்ளே இருக்கின்ற தீங்குகளை அகற்றவும் தொல்லைகளை நீக்கவும், ஒவ்வொருவரின் உயிர், உடல், உடைமை ஆகியவை பாதிக்கப்படாமல் காத்து நிற்கவும், ஊரினுடைய உடைமைகளுக்கும், நாட்டினுடைய உடைமைகளுக்கும், ஊரினுடைய வசதிகளுக்கும் வாய்ப்புகளுக்கும், நாட்டினுடைய வசதிகளுக்கும் வாய்ப்புகளுக்கும் எவ்விதமான கேடும் வராமல் காப்பாற்றவும் வேண்டிய பெரும் படையினராகக் காவல் துறையினர் இருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், காவல் துறையினர் சிறப்பான முறையில், நாம் மகிழத்தக்க வகையில், பணியாற்றி வருகிறார்கள் என்று சொல்லுகிற பொழுது, யாரும் அதை மறுக்க முடியாது. இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களிலே சென்று பார்த்தவர்கள், மற்ற மாநிலங்களிலே காவல் துறையினர் செயல்படுகின்ற முறையையும், தமிழகத்திலே காவல் துறையினர் செயல்படுகின்ற முறையையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கூறும்பொழுது, மிகச் சிறப்பான முறையிலே இருக்கிறது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆண்ட காலத்திலிருந்தே சென்னை காவல் துறையினருக்குத் தமிழகத்திலே இருக்கும் காவல் துறையினருக்கு, நல்லதொரு சிறப்பான இடம் இருந்து வருகிறது என்பதை நாம் நன்றாக உணர்கிறோம்.

சென்ற 50 ஆண்டு காலத்திற்கு முன்னர் காவலரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகளும், கடமைகளும், இப்பொழுது மிகவாக நாளுக்கு நாள் உயர்ந்து, கொண்டே போகின்றன. இன்றைக்கு நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியிலே, தங்களுடைய பங்கை மிகத் தீவிரமாகச் செலுத்தவேண்டிய அளவிலே அந்தப் படையினர் இருக்கிறார்கள். அந்த முறையிலே வடக்கு எல்லையிலும், வடகிழக்கு எல்லையிலும், ஏற்பட்டிருக்கிற நெருக்கடியிலே தங்களால் ஆன பணியைச் செய்ய வேண்டுமென்று தமிழகத் தனி ஆயுதம் தாங்கிய காவல் துறையினரையும் மலபார் சிறப்புக் காவல் துறையினரையும், அனுப்பி வைத்து அரும்பணி ஆற்றுவதற்கான வழி வகைகளைச் செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இந்த நாட்டினுடைய வீரம் முன்பெல்லாம்கூட, இமயம்போய் நிலைநாட்டப்பட்டு வந்தது என்பதை இலக்கியங்களிலிருந்து நாம் நன்றாக அறிகிறோம். இமயத்தில் தன்னுடைய விற்கொடியை நாட்டிய இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், புலிக் கொடியைப் பொறித்த கரிகால் சோழன், மீன் கொடியைப் பொறித்த பாண்டிய மன்னன் இவர்கள் பரம்பரையில் வந்தவர்கள்தான் தாங்கள் என்பதை உணர்த்துகிற வகையிலே இன்றைக்குக் காவல் துறையின் ஒரு பகுதியினர், இமயமலையின் எல்லையில் தங்களுடைய வீரத்தை நிலை நாட்டச் சென்றிருப்பது பாராட்டத் தக்கதாகும்.





பொதுவாகக் காவல் துறையினருடைய சிறப்பையும், பெருமையையும் நாம் பாராட்டினாலும், சில பல குறைபாடுகள், சில பல அதிகாரிகளிடத்திலே சில பல இடங்களில் இருக்கின்றன என்ற உண்மையை யாரும் மறுப்பதற்கு இல்லை. ஆளுங் கட்சியினரும் சரி, எதிர்க் கட்சியினரும் சரி, ஆங்காங்கு இருக்கிற சில பல குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். நாட்டிலே ஏற்பட்டிருக்கிற குற்றங் குறைகளைப் போக்கவேண்டிய கட்டுப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள் காவல் துறையினர். காவல் துறையில் காணப்படும் குறைகளை நீக்கிச் செம்மையாகச் சீர்படுத்த வேண்டிய பொறுப்பு நம் அமைச்சரவையிடத்தில் இருக்கிறது. அந்தக் குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டி, இவை இவை நீக்கப்பட வேண்டியவை, இவை இவை மாற்றப்பட வேண்டியவை, இவை இவை, திருத்தப்பட வேண்டியவை என்று சொல்லுகிற முறையிலேதான் இந்த மன்றத்திலே இரு பக்கங்களையும் சார்ந்த உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஒரு சில அதிகாரிகளுடைய குறைபாடுகளையும் நிகழ்ச்சிகளையும் சொல்லுவதன் காரணமாக, அந்தத் துறை முழுவதுமே அந்தக் குறைபாடுகளுக்கு இலக்காகி இருக்கிறது என்ற பொருளில் யாரும் குறிப்பிடவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆங்காங்கு ஏதோ ஒரு சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அத்தகைய குறைபாடுகளைப் போக்குவதற்கான வழி முறைகளை எப்படி எப்படி மேற்கொள்ளுவது என்பதற்கான முயற்சிகளை நாம் மிகத் தீவிரமாகக் காண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பாதுகாப்புப் பணிகளை ஏற்றுக் கொண்டிருக்கிற காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களும், பணிகளும் அதிகமாக இருக்கின்றன. அத்தகைய அதிகாரங்களைக் கொண்டுதான், அவர்கள் பணிகளை ஈடேற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற கடமைகள் ஏராளம், பணிகள் ஏராளம், கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களும் ஏராளம், சில பல தவறுகள் ஆங்காங்கு ஏற்படுவதற்குக் காரணமாக இருப்பது, பொதுவாக எல்லோரும் உணர்கிற மாதிரி இருப்பது அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியம், அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள், பொறுப்பு, கடமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகக்குறைவாக இருப்பதுதான். அதனால் சில பல தவறுகள் ஏற்படுகின்றன நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது. அவர்களுடைய பொறுப்பை மறந்து, கடமையை மறந்து, தங்களுடைய வாழ்வையும், வசதியையும் பெருக்கிக் கொள்ளும் முறையில் லஞ்ச ஊழல்களில் ஈடுபட வேண்டிய சூழ்நிலைக்கு அவர்கள் ஆளாகிறார்கள் என்ற உண்மையை யாரும் மறுப்பதற்கு இல்லை. வசதியோடு இருப்பவர்களும் வாங்குகிறார்கள் என்று சொன்னால், பேராசையும் அதிக ஆசையும்தான் அதற்குக் காரணமாக இருக்க முடியும். சாதாரணமாகக் காவலர்கள் அந்த நிலைமையில் இருப்பதற்கு வறுமைதான் காரணம், ஊதியத்தின் அளவையும், அதிகாரத்தின் அளவையும் பார்க்கும்பொழுது, மன்றத்திலே இருக்கிற அத்தனை பேரும் நிலைமையை நன்கு உணர்வார்கள். அந்த அடிப்படையில், இப்பொழுது இருக்கிற நெருக்கடி நிலைமையில், செலவு வகைகளைப் பார்க்கிறபொழுது,

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [12th March 1963

அந்த ஊதியத்தின் அளவைப் பெருக்குவதற்கு வாய்ப்பு, வசதி இல்லையென்றாலும், எதிர்காலத்தில் வாய்ப்பு, வசதி ஏற்படுகின்ற நிலைமையில் இந்தப் பிரச்சினை கவனிக்கப்படவேண்டும். காவல் துறையினரின் எண்ணிக்கையைப் பெருக்காவிட்டாலும், அவர்களுடைய திறமை, வேலைத் திறனைப் பெருக்குவதிலே கவனம் செலுத்தி, அவர்களின் ஊதியத்தைப் பெருக்கிக் காட்டுகின்ற வகையில் ஒரு திட்டத்தை அமைச்சரவை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

தமிழகத்திலே மட்டும் சென்ற ஆண்டுக் கணக்குப்படி 28,700-க்கு மேற்பட்ட காவலர்கள் இருக்கிறார்கள் என்றும், சப்-இன்ஸ்பெக்டர்கள் 1,306 பேர் இருக்கிறார்கள் என்றும், இன்ஸ்பெக்டர்கள் 286 பேர் இருக்கிறார்கள் என்றும், தலைமைக் காவலர்கள் 3,400 பேர் இருக்கிறார்கள் என்றும் கூறினார்கள். இவ்வளவு அதிகமானவர்களைக் கொண்டிருக்கிற படையின் பணி மிக மிகத் தேவைப்படுகிறது என்பதை நாம் உணர்கிறோம். அவர்களுடைய திறமையையும், பணிகளையும் செம்மையாக ஆக்க வேண்டும். அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தி, வாழ்க்கையில் ஏற்படுகிற வசதிகளைப் பெருக்கிக்காட்ட முயலுதல் வேண்டும். அப்படிப்பட்ட முறைகளைக் கையாண்டு ஊதியத்தைப் பெருக்கிக் காட்டுவதன் மூலம் இந்தக் குறைபாடுகளைச் சிறிது சிறிதாகத் தவிர்ப்பதற்கான வழி வகைகளைக் காணுதல் வேண்டும். அவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும், அவர்களுடைய பண்பாடு எப்படி இருக்க வேண்டும், முறைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை மற்ற துறையிலே இருக்கிறவர்கள் அத்தனை பேர்களும் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். இந்த அரசின்கீழ் இயங்குகிற மற்ற எல்லாத் துறையினரும் மிகச் செம்மையாக, ஒழுங்காக, கட்டுப்பாடோடு, அவர்களுடைய வேலைகளைச் சிறப்புறச் செய்ய வேண்டுமென்றால், இந்தத் துறை செம்மையாகப் பணி ஆற்றவேண்டும். இந்தத் துறையின் பணியைப் பொருத்துதான் மற்றைய இலாகாக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற பணிகள் சிறப்பாக நிறைவேறுவதற்கு வழிவகை ஏற்படக்கூடும். "வேலியே பயிரை மேயும்" என்ற பழமொழி நமது நாட்டிலே நிலவி வருகிறது. மற்றைய துறைகளிலே இருக்கின்ற குறைபாடுகளைக் கண்டுபிடித்து, நிலைமைகளைக் காப்பாற்றித் தர வேண்டிய பொறுப்பு காவல் துறையினரைச் சார்ந்தது. அவர்களைக் காப்பாற்றித் தீர வேண்டிய பொறுப்பு அரசினருக்கு இருக்கிறது.

காவல் துறையிலே உள்ளவர்கள் எப்படிப்பட்ட பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று கூற வந்த அமெரிக்கக் காவல் துறை அதிகாரி ஒருவர் அழகுபடக் கூறியிருக்கிறார். அமெரிக்க நாட்டின் போலீஸ் துறையில் மிக முக்கியமானவர் என்று கருதப்படுகிற ஆகஸ்ட் ஒளிமர் என்பவர் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார் :

"The average Police Officer, is expected to have the wisdom of Solomon, the courage of David, the patience of Job, the leadership of Moses, the kindness of the Good Samaritan' the strategy of Alexander, the faith of Daniel, the diplomacy of Lincoln, the tolerance of the Carpenter of Nazareth and finally an intimate knowledge of every branch of the natural, biological and social sciences."

இப்பொழுது குறிப்பிடப்பட்டிருக்கிற பண்புகள் அவ்வளவையும் இவர்களிடத்தில் மட்டும்தானா எதிர்பார்க்கவேண்டும் என்றால், எல்லாத் துறைகளிலுந்தான் இப்படிப்பட்ட பண்புகளை எதிர்பார்க்கவேண்டும். அரசியல் துறையில் இருக்கக்கூடிய அத்தனைப்பேர்களும்கூட இந்தப் பண்புகளை கடைப்பிடிக்க வேண்டியதுதான். இவைகளில் இரண்டொரு பண்புகள் குறைந்தாலும் பரவாயில்லை. எல்லோரிடத்திலும் இத்தகைய பண்புகள் இருக்கவேண்டியது அவசியம்தான். குறிப்பாகக் காவல் துறையினரின் பண்புகள் வளர்ந்து வரவேண்டியது அவசியமாகும். இத்தகைய பண்புகள் முறையாகக் காப்பாற்றப்படவேண்டும். காவல்துறையினர் ஒவ்வொருவரிடத்திலும் இவைகள் இருக்கும்படிச் செய்ய எல்லோரும் முயற்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.



12th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையையொட்டி காவல் துறைக்கு உதவியாக அகப்படைகளை அமைக்க அரசினர் முன்வந்துள்ளனர். காவல் துறையினர்க்கு உதவியாக இருக்கவேண்டும் என்று அப்படை அமைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் கிராமத் தொண்டர் படைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சிற்றூர்களில் அமைத்து கிராம மக்களுக்கு உதவி புரிவதற்கும் காவல் துறையினர்க்கு உதவியாக இருக்கவும், ஏற்பாடு செய்துள்ளார்கள். சிற்றூர்களில் உள்ள மக்களுக்கு தீங்குகள் தொல்லைகள் ஏற்படாமல் இருக்க இவைகள் அமைக்கப்படுகின்றன. நாட்டு மக்களைக் காப்பாற்ற, இந்த நெருக்கடியான நிலையில், அத்தகைய படைகள் தேவைப்படுகின்றன. இது எப்படி நடக்கவேண்டும் என்பதைப்பற்றி இதன் ஆரம்ப விழாவில் காவல் துறையினர் எடுத்துக் காட்டினார்கள். அந்த மாதிரி எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சி பாராட்டத் தக்கவற்றில் ஒன்றாகும். நாட்டு மக்களுக்கு எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட்டால், அவர்களை எப்படிக் காப்பாற்றவேண்டும், எப்படி அவர்களுக்கு உதவி புரியவேண்டும் என்றெல்லாம் அந்த ஆரம்ப விழாவில் காட்டப்பட்டன. எதிர்பாராத நிகழ்ச்சிகள் எவையாகிலும் ஏற்பட்டால், அவற்றிலிருந்து மக்களை எப்படிக் காப்பாற்றுவது என்பனவெல்லாம் அப்பொழுது காட்டப்பட்டன. இதைப்பற்றியெல்லாம் கனம் முதலமைச்சர் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். சென்னையின் பல்வேறு பகுதிகளில், அந்தக் காட்சிகள் நடைபெறவேண்டும் என்ற எண்ணத்தைத் தெரிவித்தார்கள். இப்படியே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் காட்டப்படவேண்டும் என்பதையும் தெரிவித்தார்கள். அப்படிச் செய்து காட்டுவதன் மூலம் சங்கொலி கேட்டால் என்ன செய்வது, விமான ஓசை கேட்டால் என்ன செய்வது என்பதைப்பற்றியெல்லாம் தெரிந்துகொள்ள வழி ஏற்படுகிறது. அதற்கு வேண்டிய முயற்சிகளெல்லாம் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். குண்டு வீச்சுக்கள் நடந்தால் என்ன செய்வது, தீப்பிடித்துக்கொண்டால் என்ன செய்வது, அவைகளை எல்லாம் எப்படிச் சமாளிப்பது என்பனவெல்லாம் காட்டப்படவேண்டும். ஆண்கள், பெண்கள். வாலிபர்கள், வயோதிகர்கள் இப்படி எல்லோருக்கும் காட்டப்படவேண்டும். அகப்படையினரைப் பத்தாயிரம், இருபதாயிரம் என்ற முறையில் சேர்க்கவேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும். அதிகப்படியான விபத்துக்களை எதிர்பார்க்கக்கூடிய பெரும்பெரும் நகரங்களில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

கள்ளக் கடத்தல், பதுக்கல், கள்ளச் சந்தை முதலியவைகள் நடைபெறுவதாகச் செய்திகள் வருகின்றன. இவைகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வாங்கிக்கொடுக்கக்கூடிய பொறுப்பு காவலர்களிடத்தில் இருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய பொறுப்புக்களை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற காவல் துறையில் உள்ளவர்கள் அத்தனைப்பேர்களும் லஞ்ச ஊழலில் ஈடுபட்டவர்கள் என்று நான் சொல்ல வரவில்லை. இப்படிப்பட்ட சீர்கேடான நிலைமை எல்லாக் காவலரிடத்திலும் இருக்கிறது என்றும் சொல்லமுடியாது. உண்மையாகவே தங்களுடைய கடமைகளைச் செய்யக்கூடியவர்களும் இருக்கிறார்கள். எல்லோரும் தங்களுடைய கடமைகளைச் செய்யாமல் இருக்கிறார்கள் என்றும் சொல்ல முடியாது. தங்களுடைய கடமைகளுக்குக் கட்டுப்பட்டு தங்களுடைய பணியைச் செய்கிறவர்களும் இருக்கிறார்கள். இருந்தாலும் காவல் துறையினர் எவ்வளவு வழக்குகளைக் கொண்டுவந்தாலும் கள்ளக் கடத்தல், கள்ளச் சந்தை நடக்கிறது என்ற செய்தி காதில் விழுந்துகொண்டுதான் இருக்கிறது. பதுக்குகிறார்கள் என்ற செய்தியும் காதில் விழுந்துகொண்டுதான் இருக்கிறது. ஆங்காங்கு பதுக்கல் பேச்சு இருந்துகொண்டுதான் இருக்கிறது. கள்ளக்கடத்தல் பண்டங்கள் நடமாடுவதாகத்தான் தெரியவருகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளில் சில இடங்களில் காவல் துறையினரும் அவைகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்றுதான் சொல்லப்படுகிறது. இதைக் காவல் துறை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. சிலர் இதைக் கண்டுபிடித்தாலும், குற்றவாளிகளுக்குச் சரியானபடி தண்டனை கிடைக்கவில்லை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [12th March 1963

என்ற செய்தியும் காதில் விழுகிறது. பொதுமக்கள் இதைக் கண்டுபிடித்துக் கொடுத்தாலும், குற்றவாளிகள்மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதாகவும் தெரியவில்லை. அப்படி வழக்குகளைக் கண்டுபிடித்து நீதிமன்றங்களுக்குச் சென்றாலும், அங்கு வழக்கறிஞர்களுடைய சட்ட நுணுக்கத் திறமையினாலும், வாதாடும் திறமையினாலும் அவர்களுக்குத் தகுந்த தண்டனை கிடைப்பதில்லை. அதனால் பொதுமக்கள் இவைகளைக் கண்டுபிடிக்கத் தாராளமாக வருவதில்லை. சில சமயங்களில் குற்றவாளிகளுக்கு காவலதிகாரிகளால் சலுகைகள் காட்டப்படுகின்றன. சில சமயங்களில் குற்றங்களைக் கண்டுபிடித்து வழக்குகளைத் தொடர்ந்தாலும், அவை கடைசிவரைக்கும் நீடிக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. அப்படி நீடித்தாலும்கூட, அதற்குக் கொடுக்கப்படுகின்ற தண்டனை கடைசி வரையில் நீடிக்குமா என்ற சந்தேகம் வேறு இருக்கிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்கவேண்டுமானால், இரகசிய போலீஸ் துறையிலிருந்து நல்ல அனுபவம் பெற்றவர்களையும் திறமையுள்ளவர்களையும் எடுத்து, அவர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுத்து நியாயமான முறையில் நடக்கும்படி செய்யவேண்டும். இப்படிப்பட்டவர்கள் உண்மை மனம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். இப்படிப்பட்டவர்களைப் பொறுக்கி எடுத்து இரகசிய தனி உளவாளிப்படையாக அமர்த்தவேண்டும். இவர்கள் நேரடியாக அமைச்சர்களுடனும் அரசாங்கத்துடனும் தொடர்புகொள்ள வேண்டும். அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கவேண்டும். இவர்கள் போலீஸ் உயர்தர அதிகாரிகளுடைய பொறுப்பின்கீழ் இருக்கக் கூடாது. அவர்களுடைய பணிகள் இலாகா மூலமாக இல்லாமல் நேரடியாக அமைச்சரவைக்கும் அரசாங்கத்திற்கும் வந்துசேருகிற முறையில் இருக்கவேண்டும். இந்த முறையில் இரகசியப் படையை மாற்றி அமைக்க வேண்டும். மேற்கொண்டும் தவறுகள் நடைபெறாத முறையில், அரசினர் சீரிய கண்காணிப்பை மேற்கொள்ளவேண்டும்.

நாட்டில் குற்றங்களைக் கண்டுபிடிக்க க்ரிமினாலஜி, பாரன்சிக் சயன்ஸில் நல்ல பயிற்சி கொடுக்க, இந்த அரசாங்கம் மருத்துவக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது. குற்றங்களை நல்ல முறையில் கண்டுபிடிக்க முயற்சி எடுத்துக்கொள்வதற்கு இது நல்ல வழி. இது பாராட்டத்தக்கதுதான்.

மற்றப்படி குற்றங்களை உடனுக்குடன் கண்டறிந்து தக்க நடவடிக்கைகளை எடுக்க, கண்ட்ரோல் ரூம் என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். அது உண்மையிலேயே நல்ல ஏற்பாடுதான். குற்றங்கள் புரிவதற்குமுன், உடனடியாகச் செய்தியைக் காவல் துறைக்கு தெரிவிப்பதற்கு என்று அது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வசதி சென்னை போன்ற பெரிய நகரங்களில் இருக்கிறது. இதேபோன்று மற்ற பெரிய நகரங்களிலும் அமைக்கவேண்டும். மேற்கொண்டு கோயம்புத்தூர், சேலம், தஞ்சை, மதுரை, திருச்சி போன்ற பெரும் நகரங்களிலும் இதை அமைக்கவேண்டும். அதற்கு வேண்டிய வாய்ப்பு அங்கெல்லாம் இருக்கிறது.

அடுத்தபடியாக, வீட்டு வசதி சம்பந்தமாக சென்னை நகரத்திலுள்ள 65 சதவிகிதத்தினருக்கு வீட்டு வசதி செய்துகொடுக்கப்பட்டுவிட்டதாகவும் மேற்கொண்டு இருப்பவர்களுக்கு கட்டிக்கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. இதைப்பற்றி பல கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே அரசாங்கம் காவல் துறையில் உள்ளவர்களுக்குச் சலுகைகள் காட்டிக்கொண்டு வருகிறார்கள். இருந்தாலும் காவல் துறையில் இருக்கக்கூடியவர்களுக்கு இன்னும் அதிகப்படியான முக்கியத்துவம் கொடுத்து கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்ற துறையினர்க்குக் கொடுக்கக்கூடிய சலுகையைவிடக் காவல் துறையிலுள்ளவர்களுக்கு அதிகப்படியான சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மதுவிலக்குத் திட்டம். இதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். மதுவிலக்குத் திட்டம் தீவிரமாக நிலைநாட்டப்பட வேண்டும். இதில் கருத்து வேறுபாடு இருக்கவேண்டிய நியாயம் இல்லை. இந்த



12th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மதுவிலக்குத் திட்டம் தீவிரமாக செம்மையாக சீராக நடைபெற வேண்டுமானால், உள்ளபடியே தக்க முயற்சி எடுக்கப்படவேண்டும். குற்றங்களைக் கண்டுபிடித்தாலும் நடைமுறையில் அது சீராக நடைபெற நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இருந்தபோதிலும் அங்கங்கே குற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் அதைப்பற்றித்தான் பேசிக்கொண்டு வருகிறார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்களும் இதைப்பற்றித் தெரிவித்தார்கள். சர்வ கட்சி சேர்ந்து உட்கார்ந்து இதற்குத் ஒரு முடிவு காணவேண்டும். குற்றங்களைக் கண்டுபிடித்துத் தண்டனை கொடுப்பதைவிடக் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால் ஓரளவு நாம் எதிர்பார்த்த அளவு பலன் கிடைக்கலாம். இல்லாவிட்டால் நாம் எதிர்பார்த்த பலனைப்பெற முடியாது. ஆகவே இந்தத் திட்டம் நல்ல முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும். இனி வருங்காலத்தில் காவல் துறையினர் அங்கங்கே குற்றங்கள் நடைபெறாமல் இருக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

சாதாரணமாகப் போலீஸ் அதிகாரிகளில் சிலர் நல்லியல்பை இழந்து விடுகிறார்கள். அதன் காரணமாக வல் வழக்குகளும், வீண் வழக்குகளும் தொடரப்படுகின்றன. ஆகாதவர்கள் மீதும் வேண்டாதவர்கள் மீதும் வீண் வழக்குகள் தொடரப்படுவதால், காவல் துறையினர்க்கும் மக்களுக்கும் இடையே நல்லுறவு இருப்பதில்லை.

சூழ்நிலை காரணமாகவோ வேறு நிலைமைகள் காரணமாகவோ, 1-00 p. m.
தொடர்ந்து தொல்லைகளுக்கு ஆட்பட்டதன் காரணமாகவோ, 'டெம்பர்' என்று கூறப்படுகிற நன்னிலையை இழந்துவிடுவதன் காரணமாகவோ பேச்சுக்கள் முற்றி, வேறு வகையில் தொடுத்திருக்கும் வழக்கு வல் வழக்காக மாறும் அளவுக்குப் பல்வேறு நிலைமைகள் ஏற்பட்டுவிடுகின்றன. அத்தகைய சமயங்களில் காவல் துறையினர் நல் இயல்புகளை அதிகமாக்கிக்கொண்டு, பொறுமையை அதிகமாகக் கடைப்பிடித்து, அமைதியை அதிகமாகக் கொண்டு, தளர்ச்சியோ, நலிவோ, சோர்வோ கொள்ளாமல் நிலைமைகளைச் சரிசெய்ய முன்வருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

வருவாய் பெருகுவதற்கான சூழ்நிலை இல்லை, சம்பளம் பெருகுவதற்கு வழிவகை இல்லை என்றாலும், குடும்பத்தின் வருவாயைப் பெருக்குவதற்குச் சிலபல திட்டங்களை உருவாக்கியிருப்பதாக கூறப்படுகிறது. தையல் தொழில், பாய் முடைதல், கூடை பின்னுதல் போன்ற திட்டங்களையெல்லாம் நடைமுறைக்குக் கொண்டுவந்திருப்பதாக அரசினர் சொல்லுகிறார்கள். அவற்றினை இன்னும் விரிவுபடுத்தவேண்டும். பல இடங்களில் அதனால் ஏற்படும் பலன்கள் உடனடியாக அவர்களுடைய ஊதியத்தைப் பெருக்கத்தக்க நிலையில் வசதிகள் பெருகவேண்டும். அத்தகைய நிலைமைகளைச் செய்து தரவேண்டும்.

ஒலிபெருக்கி லைசன்ஸ் வாங்கும் முறையில் பல சங்கடங்களும் தொல்லைகளும் ஏற்படுகின்றன. வெளி மாவட்டங்களில் ஒலிபெருக்கிக்கு அனுமதி பெறவேண்டுமென்றால், டெபுடி சூபரிண்டெண்டினிடம் போய்த்தான் ஒலிபெருக்கிக்கு அனுமதி வாங்கிக்கொண்டு, சிற்றூரில் ஒலிபெருக்கி வைக்க வேண்டியிருக்கிறது. ஒலிபெருக்கி லைசன்சுக்காக 15 மைல், 20 மைல், 30 மைல் சென்று, டெபுடி சூபரிண்டெண்டு ஊரில் இருக்கிறாரா என்று கண்டறிந்து, மூன்று, நான்கு நாட்கள் காத்து இருந்து, அதற்குப்பிறகு ஒலிபெருக்கிக்கு அனுமதி பெற்றுவருகின்ற நிலைமை இருக்கக்கூடாது. ஒலிபெருக்கி வைக்கலாமா, வைக்கக்கூடாதா என்று பார்த்துச் சொல்லவேண்டியவர்கள் அந்தந்தப் பகுதியிலே இருக்கும் சப்-இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருப்பதால், அவர்களுடைய ஆலோசனையை வைத்துக் கொண்டுதான் மேலே இருக்கும் அதிகாரிகள் அனுமதி வழங்குவதா, இல்லையா என்று முடிவு எடுக்கிறார்கள். ஆகவே, அந்தந்தப் பகுதியில் இருக்கும் இன்ஸ்பெக்டரிடத்திலேயே ஒலிபெருக்கி லைசன்ஸ் வாங்கக்கூடிய வகையில், அவர்களுக்கு அதிகாரங்களைக் கொடுத்துவிடலாம். பாதிக்கப்பட்டவர்கள் வேண்டுமானால் டெபுடி சூபரிண்டெண்டினிடம் 'அப்பீல்' என்ற

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [12th March 1963

வகையில் செய்துகொள்ளலாம் என்ற முறையை ஏற்படுத்தினால், அதிலிருக்கும் சங்கடங்கள் ஏற்படாமலிருக்கும். பல ஊர்களில் கூட்டத்திற்குப் போகும் போது, லைசன்ஸ் வரப்பெறாமல் பஸ்ஸையும் காரையும் எதிர்நோக்கியிருக்க வேண்டிய நிலையில், லைசன்ஸ் வந்த பிறகுதான் மேடை ஏறிப் பேசவேண்டிய அளவுக்குச் சில பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே, ஒலி பெருக்கி லைசன்ஸ் வழங்கும் அதிகாரத்தை ஆங்காங்கு இருக்கும் இன்ஸ்பெக்டர்களுக்கும், 'அப்பீல்'களைக் கேட்டு முடிவு செய்யும் அதிகாரத்தை டெபுடி சூபரிண்டெண்டுக்கும் கொடுக்கவேண்டும் என்று நான் யோசனை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சென்னை நகரத்தில் இரண்டாவது காட்சி—சினிமாப்படம்—பார்த்துவிட்டு வருகிறவர்களில் நல்லவர்களும் இருப்பார்கள். சந்தேகிக்கப்படுகிறவர்களும் இருக்கக்கூடும். நல்லவராக இருந்தாலும் சில பல நேரங்களில் வழக்குகள் வேண்டும் என்பதற்காக அவர்களைப் பிடித்துக்கொண்டுபோய், 'சந்தேகப் பேர்வழி' என்று உள்ளே போட்டுவிடுகிறார்கள். சிலருக்குக் கார் வசதி இருக்கும். சிலர் பஸ்களில் போவார்கள். இன்னும் சிலர் நடந்தே செல்லவேண்டியிருக்கும். அந்த நேரத்தில் வேடிக்கையாகப் பேசிக் கொண்டு போவார்கள். சினிமாக் காட்சிகளில் கண்டதையே கூட தீவிரமாகவும், அழகாகவும் பேசக்கூடும். அதைப் பார்த்து, ஏதோ நடக்கப் போகிறது என்றோ, பேசுகிறவரைப் பார்த்தால், சந்தேகத்திற்குரியவனாக இருக்கிறான் என்று கருதியோ சந்தேகத்தின் பேரில் உள்ளே அடைத்துவிடுகிறார்கள். சந்தேகத்திற்குரியவர்களைப் பிடிக்கவேண்டியது அவசியந்தான் என்றாலும், அவர்களை நீண்ட நாட்களுக்கு 'ரிமாண்டி'ல் வைக்கவேண்டியது அவசியம் இல்லை. அந்த நபர் தன்னுடைய முகவரியைக் கொடுத்தால், அவருடைய வீட்டுக்கு உடனே சென்று, அந்த முகவரியில் உள்ளவர் சந்தேகத்திற்குரியவரா, இல்லையா என்று கண்டறிந்து, சந்தேகத்திற்குரியவராக இல்லையென்றால், காவல் துறையினர் அவரை உடனே விடுவிக்க வேண்டும். அத்தகைய முறை இல்லாத நிலையில், இரண்டு, மூன்று நாட்கள் அடைத்துவைப்பதனால், யார் யார் மூலமாகவோ செய்திவந்து, அதற்குப் பிறகு ஒருவர், இருவர் போய் முயன்று கொண்டிருக்கும் நெருக்கடி நிலை இருக்கிறது. முகவரி கொடுத்தால், அந்த முகவரியில் சென்று விசாரித்து, நல்லவரா, சந்தேகத்திற்குரியவரா என்று கண்டறிந்து, ஐயத்திற்குரியவர் அல்ல என்று தெரிந்தால் உடனே காவல் துறையினர் அவரை விடுவிக்கும் நிலைமை ஏற்படவேண்டும். சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில், இப்படிப்பட்ட தொல்லைகள் அடிக்கடி ஏற்படுகின்றன. இரவு 12 மணி, இரண்டு, மூன்று மணிக்குக்கூட, தொகுதி எம். எல். ஏ. என்ற முறையில், அப்படிப்பட்ட நிலைகளை என்னிடம் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஐயத்திற்குரியவர் அல்ல என்று தெரிந்தால் உடனே விடுவித்துவிடும் நிலை ஏற்படவேண்டும். இந்தத் தொல்லை சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் ஏற்படாத அளவுக்கு நிலைமைகளை உருவாக்கும் பணிகளை அமைச்சரவை மேற்கொள்ளவேண்டும்.

இப்படிப்பட்ட பணிகளை மேற்கொள்ளுவதன் மூலமாக, இந்தத் துறை மேலும் மேலும் செம்மைப்படவேண்டும், இருக்கும் குற்றங்கள் அகற்றப்படவேண்டும் என்றெல்லாம் சட்ட மன்ற உறுப்பினர்கள் பலர் கருத்தை எடுத்துத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்துக்கள் மிக நியாயமான கருத்துக்கள். அந்தக் கருத்துக்களை எதிர்த்தரப்பில் உள்ளவர்களும் எடுத்துச் சொன்னார்கள். ஆயிரம் குற்றம் செய்கிறவரை விட்டுவிட்டாலுங்கூட, குற்றம் செய்யாத ஒருவரைத் தண்டனைக்குள்ளாக்கக் கூடாது என்பது ஆங்கிலேயர்கள் கொண்ட அடிப்படைக் கருத்து என்று சொல்லுவார்கள். குற்றம் செய்யாதவரும் தண்டனைக்கு ஆளாகும் சூழ்நிலை சில நேரங்களில் ஏற்பட்டுவிடுகிறது. அந்த நேரங்களில் தக்க கவனம் செலுத்தி, குற்றம் செய்யாதவரைத் தண்டனைக்குள்ளாக்காத அளவு நியாயம் வழங்கும் முறையில் அந்தத் துறை செம்மைப்படுத்தப்படவேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.



12th March 1963]

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் திரு மூக்கையா தேவர் அவர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கும் 'சிறிது நேர விவாதத்தை' நாளை பிற்பகல் 12–30 மணிக்கு—'லேபர்' மானியக் கோரிக்கை விவாதம் முடிந்த பிறகு—எடுத்துக் கொள்ளலாம் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று 12-30 மணிக்கு எடுத்துக்கொள்வதாக இருந்த 'சிறிது நேர விவாதத்தை' நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நாளை லேபர் மானியக் கோரிக்கைக்குப் பிறகு 12-30 மணியிலிருந்து 1-30 மணிக்குள்ளாக இதை வைத்துக் கொள்ளலாம். எதிர்க் கட்சிகளின் தலைவர்களும் இதற்குச் சம்மதித்திருக்கிறார்கள். ஆகவே நாளைக்கே வைத்துக் கொள்ளலாம்.

கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் மானியத்தைப் பற்றிய இந்த விவாதம் புதிய முறையில் நடைபெற்றது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் யாவரும் உணருவார்கள். இந்த விவாதம் சுமுகமான முறையில் நடைபெற்றதோடு, எல்லோரும் போலீசாருடைய அரிய சேவைகளைப் பாராட்டிப் பேசியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. போலீசார் செய்கின்ற சேவை அரிய சேவை என்பது மட்டுமல்ல ; அவர்கள் செய்யும் வேலை கஷ்டமான வேலையாகும். நான் முன்பு குறிப்பிட்டது போல, கயிற்றின் மேல் நடப்பது போன்ற ஒரு கஷ்டமான வேலையை அவர்கள் செய்கிறார்கள். அவர்கள் பல சங்கடங்களைச் சமாளிக்க வேண்டும். போதிய பாதுகாப்பை மக்களுக்கு உடனடியாக அளிக்க வேண்டும். நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும். கனம் எதிர்க் கட்சித் தலைவர் கூட, பல பெரியார்களுடைய அரிய குணங்களை எடுத்துக் காட்டி, அந்தக் குணங்களெல்லாம் போலீஸ் இலாகாவில் பணி புரிகின்றவர்களுக்கு இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த இலட்சியத்தைப் போலீசார்கள் ஏற்றுக் கொள்வார்கள் ; அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளும். அந்த இலட்சியத்தை எவ்வளவு தூரம் அடைவது என்பது முயற்சி செய்து பார்க்க வேண்டிய விஷயம். அந்த இலட்சியத்தைப் போலீசார்கள் அடைந்துவிட்டார்கள் என்று வெறும் பெருமைக்காக நான் சொல்லமாட்டேன். ஆனால், ஒன்று. உறுதியாகக் கூறுவேன்—நம்முடைய போலீசார் அந்த இலட்சியங்களை எவ்வளவு தூரம் அடைய முடியுமோ அவ்வளவு தூரம் அடைவதற்குப் பாடுபட்டுக் கொண்டே இருப்பார்கள் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

கனம் எதிர்க்கட்சித் தலைவரும், சுதந்திராக் கட்சித் தலைவரும், ஏதோ சில குற்றங் குறைகளையும் குறைபாடுகளையும் சொன்னால் போலீஸ் துறையைப்பற்றி நாங்கள் குறை சொல்வதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள். அதை நான் அப்படியே ஏற்றுக் கொள்ளுகிறேன். போலீசாரும் அவ்வாறே ஏற்றுக்கொள்ளுவார்கள். குறைகளை எடுத்துச் சொல்லலாம். ஆனால் உள்ள குறைகளைச் சொல்ல வேண்டும். மிகைப்படுத்தாமல் சொல்லவேண்டும். குறைகளைக் களைவதற்குச் சீரான வழிவகைகளை எடுத்துச் சொல்லலாம். இதைப் போலீசாரும் வரவேற்பார்கள். 'குறை ஒன்றும் இல்லை' என்று அவர்களும் கூற மாட்டார்கள். யாராயிருந்தாலும் அவரவருக்குள்ள குறைகளை உணர்வதுதான் அந்தக் குறைகளை அகற்றுவதற்கும், மேலும் சிறப்பாகப் பணியாற்றுவதற்கும் உகந்ததாக இருக்கும் என்பதை நாமெல்லோரும் உணர வேண்டியிருக்கிறது. ஆகவே இதிலே குறிப்பிடப்பட்ட குறைகளைக் கவனித்து அந்தக் குறைகள் ஏற்பட்டனவா இல்லையா என்று ஆராய்ந்து, உள்ள குறைகளை எவ்வளவு தூரம் அகற்றுவது என்பதிலே போலீசார் கவனம் செலுத்துவார்கள்.

சில அரிய யோசனைகள் கூறப்பட்டன. அந்த யோசனைகளையெல்லாம் போலீசார் கவனம் செலுத்தி, அவைகளை எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு தூரம் நிறைவேற்றுவார்கள்.

குறிப்பாக, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஒலி பெருக்கிக்கு லைசன்ஸ் வாங்குவதிலுள்ள சிரமங்களைச் சொன்னார்கள். சில சமயங்களில் அவ்வாறுகூட ஏற்பாடு செய்திருக்கிறோம். டெபுடி சூபரின்டெண்டு ஆஃப் போலீஸ் வரையில் போகாமல், இன்ஸ்பெக்டரே இத்தகைய லைசன்ஸ் கொடுக்கலாம், அப்படிக் கொடுப்பதிலே ஒன்றும் தவறுதல் இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். லைசென்ஸ் சுலபமாகக் கொடுக்கலாம். தவறுதல் இருந்தால், மேல் இருக்கும் அதிகாரிகள் கவனிக்கலாம். இதையெல்லாம்கூட அரசாங்கம் மேலும் பரிசீலனை செய்து, எந்த வகையிலே உத்தரவுகளை மாற்றியமைக்க வேண்டுமோ அவ்வாறு மாற்றியமைப்பார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் இரு பக்கங்களிலும் உள்ள கனம் உறுப்பினர்கள் எல்லோரும் போலீசாருடைய சேவையைப் பெரிதும் உணர்ந்து பாராட்டித்தான் பேசினார்கள். என்றாலும், சில கனம் உறுப்பினர்கள் சில குறைகளையும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் பழைய சம்பவங்களை நினைவுபடுத்திக்கொண்டார். அதை மறந்துவிட வேண்டும். எல்லோரும் மறந்து விடுவது நல்லது. ஜூலை 19-ந் தேதி நடந்த சம்பவங்களையும் அதற்குப் பின்னால் ஏற்பட்டதையும் குறிப்பிடாமலே இருப்பது நலம் என்றுதான் நான் கருதுகிறேன். எதிர்க் கட்சியில் இருக்கும் பல கனம் உறுப்பினர்களும் அப்படித்தான் கருதியிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும், அவர்களுடைய நிலையை நான் உணர்கிறேன். அதற்குப் பிறகு அவர்கள் அதைப்பற்றி இங்கே பேசுவதற்கு அவகாசம் இல்லை. ஆகையால் அதைக் குறிப்பிட்டாகள். ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஜூலை 19-ம் தேதி நடந்த சம்பவங்கள், பின்னால் அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் ஆகியவை எல்லாம் பற்றி அப்போது பேசப்பட்டது. இதிலே ஒரு பக்கத்தில் சென்னை நகர மக்கள் போலீசாரின் மீது குறை கூறினார்கள். "சரியான முறையில் போலீசார் பாதுகாப்பு அளிக்கவில்லை" என்றுகூடச் சொன்னார்கள். போலீசார் மீது அவ்வாறு குற்றம் சாட்டுவதற்கு இடமில்லை. தங்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்தை கூடப் பொருட்படுத்தாமல் பலாத்காரத்தைக்கூடப் பொருட்படுத்தாமல் நிலைமை மோசமாகப் போகாதவாறு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். மிகச் சிறந்த வகையில் சென்னை நகர மக்களைப் பாதுகாத்திருக்கிறார்கள். ஆகவே குற்றம் சொல்வதற்கு இட மில்லையென்று நான் அப்போதே குறிப்பிட்டேன். அதைப்பற்றி மேலும் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. எல்லோரும் அதை மறந்துவிட வேண்டும். இனி அத்தகைய சம்பவம் நடைபெறாது இருக்குமாறு நாம் எல்லோரும் நடந்து கொள்வது என்று உறுதி எடுத்துக் கொள்வது நலம் என்று இந்தச் சமயத்தில் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இங்கே சட்டசபையில் நாங்கள் எது குறிப்பிட்டாலும் உடனே சமாதானம் கூறிவிடுவதனால் அதிகாரிகளுக்கு அத்துமீறி நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்போது கூட அச்சம் ஏற்படுவதில்லை, அவ்வாறு சமாதானம் கூறுவது சரியல்ல என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சமாதானம் கூறிவிடுகிறோம் என்றால் நல்ல முறையில் அவர்கள் நடந்துகொள்ளும்போது சமாதானம் கூறாது, அவர்களுடைய செயல்களுக்குப் பாதுகாப்பாக இல்லாது இருப்பதும் சரியல்ல. அவர்கள் தங்கள் கடமைகளை ஆற்றுகிறார்கள். பெரும்பாலும் சிறப்பாக ஒழுங்காக தங்கள் கடமைகளை ஆற்றுகிறார்கள். ஆகவேதான் வீணான புகார் சொல்வது சரியல்ல என்று நாங்கள் சொல்கிறோம். ஒன்றிரண்டு இடத்தில் ஒருவர் இருவர் தவறாகவே நடந்து கொண்டார்கள் என்றாலும்கூட அதையெல்லாம் இங்கே சொல்வதற்கு முடியாது. யார் தவறாக நடந்து கொண்டார்களோ அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுதான் வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். சில அங்கத்தினர்கள்கூட இப்படி மிகக் கடுமையாக—அவர்களை டிஸ்மிஸ் செய்கின்ற நடவடிக்கையை மேற்கொண்டுவிட்டீர்களே என்று என்னிடம் வந்து சொல்லுகிறார்கள். தவறு என்றால் தவறுதான். அந்தத் தவறுக்கு ஏற்றபடி தண்டிக்கப்படத்தான் வேண்டும். தண்டிக்கப்பட்டும் வருகிறார்கள். கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் இங்கே பேசும்போது "விற்பனைக்கு என்று மட்டும் அல்லாமல் சொந்த உபயோகத்திற்காகக் கள்ளச் சாராயம் காய்ச்சிக் கொள்ளும் நிலைமை வளர்ந்துவிட்டதாகக் குறிப்பிட்டு, தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார். சொந்த உபயோகத்திற்கென்று காய்ச்சுகிறவர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்றே அவர் சொல்வதாக நான் கருதுகிறேன்.





**திரு. சா. கணேசன் :** ஆம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் அதை வரவேற்கிறேன். சொந்த உபயோகத்திற்கு என்று காய்ச்சினாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டும். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த அவர்களுடைய மாபெரும் தலைவர் பம்பாயில் பேசுகின்ற காலத்தில் சொந்த உபயோகத்திற்கு என்று சாராயம் காய்ச்சிக் கொள்வதாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும், அதற்கு அனுமதி அளிக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் தலைவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளாமல், இந்தச் சபையில் இருக்கும் சுதந்திராக் கட்சித் தலைவர் சொந்த உபயோகத்திற்கு என்று காய்ச்சுகிறவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டதற்கு நன்றி. அதுதான் சர்க்காருடைய கொள்கையும்.

**திரு. சா. கணேசன் :** பர்மிட் என்று குடிப்பதற்கு லைசென்சு பெற்றவர்கள் கடையில் வாங்கிச் சாப்பிடுவதற்கு அனுமதிக்கப்படுவது போலவே, குடிப்பதற்கு லைசென்சு பெற்றவர்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்கு என்று சாராயம் காய்ச்சிக் கொள்வதாக இருந்தால் அதை அனுமதிக்க வேண்டும் என்ற கருத்து வெளியிடப்பட்டதே தவிர, பர்மிட் இல்லாமல், குடிப்பதற்கு அனுமதி இல்லாமல் சொந்த உபயோகத்திற்கோ, விற்பனைக்கோ கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடை செய்யக் கூடாது என்று சொல்லவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பர்மிட் வைத்துக்கொண்டிருப்பவர்கள் கூடச் சொந்த உபயோகத்திற்கு என்று காய்ச்சிக் கொள்வதை இங்குள்ள சுதந்திராக் கட்சித் தலைவர் ஒப்புக்கொள்ளமாட்டார் என்றே நான் நினைக்கிறேன். எத்தனையோ போலீஸ் அதிகாரிகளின் மீதே குடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். லஞ்சக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகளும் பலர். ஆகவே குற்றம் எங்கிருந்தாலும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் ஒன்று இருக்கிற குற்றத்தை மிகைப்படுத்துவதால் பிரயோசனமில்லை. எந்தக் குற்றம் எந்த இடத்தில் ஏற்பட்டாலும் அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு, களையப்பட்டு வருகிறது என்று கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போலீஸ் லாக்கப்பில் ஒருவர் இறந்தது பற்றி திரு. சசிவர்ண தேவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவரைக் கொன்றே விட்டார்கள் என்று நாங்கள் நினைக்கின்றோம் என்று குறிப்பிட்டார்கள். லாக்கப்பில் யார் இறந்தாலும் விசாரணை நடத்தாமல் பிணத்தை மறைத்துவிட அனுமதிப்பதில்லை. இந்தச் சம்பவம் பற்றியும் உடனே ஆர். டி. ஓ. வந்து விசாரணை செய்து கொண்டிருக்கிறார் என்று முன்பே குறிப்பிட்டேன். இந்தப் பாண்டியன் என்பவர்—லாக்கப்பில் கொலை செய்யப்பட்டார் என்கிற புகார் முழுப் பொய் என்று முடிவு செய்திருக்கிறார். அதற்கு ஒன்றும் ஆதாரம் இல்லையென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

கனம் மதியழகன் அவர்களுக்கு ஜூலை 19-ஆம் தேதி நடந்த சம்பவம் ஒன்றினால் மட்டும்தான் போலீஸ்காரர்களிடத்தில் சிறிது அதிருப்தி என்றால்

[திரு. எம். பக்தவத்சலம்] [12th March 1963

திரு. சசிவர்ண தேவர் அவர்களுக்கு ரொம்ப காலமாகவே போலீஸ்காரர்களிடத்தில் ஒரு குறை உண்டு. எதற்காக போலீசைப் பாராட்டவேண்டும், எதற்காக அங்கங்கே போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்த வேண்டும் என்றே அவர்கள் குறிப்பிடுவார்கள். அவர் அபிப்பிராயம் அப்படி இருக்கலாம். ஆனால் நாங்கள் எந்த இடத்திற்குப் போனாலும் எங்களிடம் கொடுக்கப்படுகிற மனுக்களில் பெரும் பகுதி, எங்கள் ஊரில் போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்தித் தர வேண்டும். ஒரு அவுட் போஸ்டாவது அமைத்துத் தர வேண்டும் என்றுதான் வருகின்றன. மக்களுக்கு போலீஸ் இலாகாவிடம் அத்தனை நம்பிக்கை இருக்கிறது. சமூக வாழ்க்கைக்கு அவர்களுடைய சேவை இன்றியமையாதது என்று நம்புகிறார்கள்.

இன்னொன்று வாழ்க்கைத்தரம் உயர்ந்துகொண்டே போவதாகச் சொல்கின்றீர்களே, ஆனால் குற்றங்கள் அதிகப்பட்டுக்கொண்டே போவதில் இருந்து வாழ்க்கைத் தரம் சீரழிந்து வருகிறது என்பது தெரியவில்லையா என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்வேன், குற்றங்கள் செய்வதற்கு வறுமை ஒன்றுதான் காரணம் என்று சொல்ல முடியாது. மற்ற நாடுகளைப் பார்த்தால் தெரியும் எவ்வளவுக்கு எவ்வளவு வாழ்க்கைத்தரம் உயர்ந்துகொண்டே போகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு குற்றங்களும் பெருகிக்கொண்டேதான் இருக்கின்றன. மிக்க செழிப்புள்ள நாடு எனற அமெரிக்காவில் குற்றங்களுக்கு ஒன்றும் குறைவில்லை. ஆகவே வறுமைக்கும், குற்றத்திற்கும் தான் நேரிடையான சம்பந்தம் என்று சொல்வதற்கில்லை. நாட்டில் செழிப்பு வளர வளர குற்றங்களும் வளருகின்றன.

பொதுவாக நம் நாட்டைப் பார்த்தால் குற்றங்கள் குறைந்து கொண்டு தான் வருகின்றன. மேலும் குற்றங்களைக் கண்டு பிடிக்கும் திறனும் உயர்ந்து வருகின்றன. எதிர்கட்சி அங்கத்தினர்களே குறிப்பிட்டார்கள். இன்னும் என்ன என்ன முறையில் குற்றங்களைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யலாம், குற்றங்களே நடைபெற ஒட்டாமல் தடுக்கலாம் என்பது எல்லாம் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இன்னொன்று கூடச் சொல்வேன். போலீஸ் வழக்குத் தொடர்ந்த கேஸ்களில் 50% ருசுவாக்கப்பட்டு தண்டனை கிடைத்திருக்கிறது. மதுவிலக்குக் குற்றங்கள் என்று எடுத்தால் எண்பது, எண்பத்தைந்து சதம் கூடக் குற்றம் ருசுபிக்கப்பட்டிக்கிறது. காரணம் குற்றங்களை கண்டுபிடித்தாலும் கோர்ட்டாருக்குச் சந்தேகமற நிரூபித்தாக வேண்டியிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்களே, ஆயிரம் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டாலும் ஒரு நிரபராதி தண்டனை பெறக்கூடாது என்று, அந்த உயர்ந்த முறையில் நீதிபதிகள் சாட்சிகளை எல்லாம் துருவித் துருவி ஆராய்கிறார்கள். சிறிது சந்தேகம் ஏற்பட்டாலும் அந்த சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கிவிடுகிறார்கள். வழக்கு அறிஞர்கள் எல்லாம் தங்களுடைய புத்தி சாதுர்யத்தைக் காட்டுகிறார்கள். குற்றம் செய்கிறவர்கள் யாரும் சாட்சி வைத்துக்கொண்டு செய்வதில்லை. ஆகவே வழக்குகளை நடத்துவது ரொம்பச் சங்கடமான காரியம். இந்த அளவு போலீஸ்காரர்கள் தொடர்ந்த வழக்குகளில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால் இது அவர்களுடைய திறனைத் தான் காட்டும். அவ்விலாகா குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் மேற்கொள்கிற சீரிய நடவடிக்கைகளின் திறனைத் தான் காட்டும்.

எந்தச் சட்டம் கொண்டுவந்தாலும் அதை மீறுகின்ற இயல்புடையவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள். மதுவிலக்குக் குற்றங்கள் சரியான முறையில் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. ஆகவேதான் மறுபடியும் இதை போலீஸ் இலாகாவின் பொறுப்பில் இருந்து மாற்ற நான் விரும்பவில்லை. இன்றைக்கு எத்தனையோ பேர்கள் குடியில் இருந்து பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் பலனை அவரவர்களுடைய குடும்பங்கள் அனுபவித்துக் கொண்டுதான் வருகிறது.



12th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

நான் ஒன்று கூற விரும்புகிறேன். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள், இந்த மாதிரிக் குற்றங்களைக் கண்டுபிடிக்கப் போலீசாருக்கு உதவி அளிக்க வேண்டும். எங்கு இந்த மாதிரிக் குற்றங்கள் நடைபெறுகின்றன என்பதை எந்த முறையிலே போலீசாரிடத்தில் எடுத்துச் சொல்லவேண்டுமோ அந்த முறையிலே சொல்லி போலீசார் அந்தக் குற்றங்களை கண்டுபிடிக்க உதவி அளிக்க வேண்டும். போலீசார் ஒரு இடத்தில் ' ரெய்டு ' செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் ' ரெய்டு ' செய்து, குற்றவாளிகளைக் கண்டு பிடித்து வழக்குப் போடுகிறார்கள். இந்த மாதிரிக் குற்றங்களைக் கண்டு பிடிக்க உருப்படியான வகையில் போலீசாருக்கு உதவி அளிக்க வேண்டும். இப்போது அவர்கள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. அந்த வகையில் அவர்கள் உதவி அளித்தால் இந்தக் குற்றங்களைக் கண்டுபிடிப்பது எளிதாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு ஊர்களுக்கு இடையில் கட்சி அடிப்படையில், அரசியல் வித்தியாசத்தின் காரணமாகச் சண்டைகள் ஏற்படுகின்றன என்று கூறினார்கள். அப்படிக் கூறுவது அரசியலையே அவதூறுக்குவதாகும். அவர்களுடைய பிராந்தியத்திலே அரசியல் அடிப்படையில் சண்டை போடுவதாகக் கூறுகிறார்கள். மற்ற இடங்களில் அப்படி இல்லை. ஊரில் அமைதியை நிலைநாட்டுவது போலீசாருடைய பொறுப்பு. போலீசார் ஜாமீன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஜாமீன் நடவடிக்கை எடுத்துக் கொள்வது ஒரு முறை. ஒரு சாராரின் மீது மட்டுந்தான் ஜாமீன் நடவடிக்கை எடுத்துக் கொண்டதாகச் சொன்னார்கள். ஒரு சாராரில் இத்தனை பேர், இன்னொரு சாராரில் இத்தனை பேர் என்று அரசியல் வகையில் கணக்குப் பார்த்துச் சொன்னார்கள். யார் பொறுப்பாக இருந்தாலும் இரு சாரார் மீதும் ஜாமீன் நடவடிக்கை அமைதியை நிரந்தரமாக ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

கன்னியாக் குமரியைச் சார்ந்த கனம் அங்கத்தினர் சுவாமிதாஸ் அவர்கள், கன்னியாகுமரியில் ஏற்கனவே இருந்த போலீசாரை மாற்றி விட்டுப் புதிதாக நியமித்து விட்டதாகக் கூறினார்கள். ஏற்கனவே அங்கு இருந்தவர்கள் அனுசரித்து வந்த முறைக்கும், நம்முடைய போலீசார் அனுசரிக்கக் கூடிய முறைக்கும் வேறுபாடு இருந்த காரணத்தினால்தான் ஏற்கனவே அங்கிருந்தவர்கள் மாற்றப்பட்டார்கள்.

யாராக இருந்தாலும் போலீசார் மரியாதையுடன்தான் நடந்து கொள்வார்கள். சட்டசபை அங்கத்தினர்கள் மட்டுமல்லாது, பிரஜைகளிடத்திலும்கூடப் போலீசார் மரியாதையுடன்தான் நடந்துகொள்கிறார்கள். ஆனால் அதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது. போலீசாரிடம் சென்று புகார் செய்யலாம். ஆனால் தாங்கள் சொல்லுவதுதான் சரி என்ற முறையில் பிடிவாதமாக அங்கே விவாதிக்கத் தொடங்குவார்களானால் அவர்களைப் பார்த்து ' போ ' என்றுதான் போலீசார் சொல்லுவார்கள். தங்களைப் பெருமிதமாக நினைத்துக்கொண்டு போலீசாரிடம் தாறுமாறாகப் பேச ஆரம்பித்தால் அவர்கள் ' போ ' என்று சொல்வதைத் தவிர வேறு வழி இல்லை. இனிமேல் வேண்டுமானால், ' நீங்கள் தயவு செய்து போங்கள் ' என்று சொல்ல வேண்டுமென்று போலீஸ்காரர்களையும் சப்-இன்ஸ்பெக்டர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நாம் எப்படிப் போலீசாரிடம் நடந்துகொள்ள வேண்டுமென்பதும் நமக்குத் தெரியவேண்டும். போலீசாரிடம் நிலைமையை எடுத்துச் சொல்வதில் தவறு இல்லை. அவர்களிடம் சண்டை போடக் கூடாது, தகராறு செய்யக் கூடாது.

மதுவிலக்குச் சோதனை போடப்படுவதைப் பற்றிக் கனம் அங்கத்தினர் அரங்கண்ணல் அவர்கள் கூறினார்கள். ஏழை மக்கள் வாழும் குடிசைகளில் சோதனை போடப்படுகிறது என்பதற்காக ஆட்சேபிக்கக் கூடாது. ஏழை மக்கள், பணக்காரர்கள் என்ற வித்தியாசம் இந்த அரசாங்கத்துக்கு இல்லை. பணக்காரர்கள் அகப்பட்டுக்கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு

அந்த அவசியமும் இல்லை. பணக்காரர்களுக்குச் சலுகை காட்ட வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்துக்குக் கிடையாது. யாராக இருந்தாலும் போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளத்தான் செய்கிறார்கள். பச்சையாகக் குற்றம் செய்தவர்கள்கூடத் தாங்கள் குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்வதில்லை. அக்கிரமமாகச் சோதனை போட்டார்கள் என்றுதான் சொல்வார்கள். வேண்டுமென்றே அப்படிச் செய்வதாக இருந்தால் அதுபற்றிக் கவனம் செலுத்தலாம்.

போலீசாரின் குடும்ப நலன்களைப் பொறுத்து அவர்களுக்கான தொழில்கள் எல்லாம் அமைக்கப்பட்டு வருகின்றன. அதைப் பற்றியெல்லாம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதோடு, குழந்தைகள் விஷயத்திலும், ஓய்வு பெற்ற போலீசாரின் குழந்தைகள் படிப்பு சம்பந்தப்பட்ட விஷயங்கள் எல்லாம்கூடக் கவனிக்கப்பட்டு வருகிறது. அதற்காகவே 'பெனவலன்ட் பண்ட்' ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே போலீசாரும் அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். அரசாங்கமும் உதவி அளிக்கிறது. பொது மக்களும் நன்கொடை அளிக்கிறார்கள். போலீஸ் துறையிலேதான் இன்றைய தினம் அவர்களுடைய குடும்ப நலன், குழந்தைகள் நலன், ஓய்வு பெற்றவர்கள் நலன் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. சம்பளத்தையும், அலவன்சையும் அவர்களுக்கு உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே உயர்த்தப்பட்டிருக்கிறது. எவ்வளவு தூரம் உயர்த்த முடியுமோ அந்த அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிப் போலீசாரும் நன்கு உணருவார்கள். அதைப் பற்றியெல்லாம் இப்போது பேச வேண்டிய அவசியமில்லை. அவர்கள் திருப்திக்காக வேண்டுமென்றால் பேசலாம். மற்றத் துறையில் இருப்பவர்களைவிட போலீஸ் துறையில் இருப்பவர்களைப்பற்றி அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. வீடுகள் கட்டும் வகையிலும் அப்படித்தான். எஸ். ஏ. பி.-இல் இருப்பவர்களுக்கு வீட்டுக்காக அலவன்ஸ் கொடுப்பதைவிட வீடு கட்டிக் கொடுப்பதுதான் நல்லது. அவர்களுக்காகச் சிறந்த வீடுகள் கட்டித் தருகிறோம். எஸ். ஏ. பி.-க்கு வீடுகள் கட்டும் வகையில் 1962–63-இல் 18 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. எஸ். ஏ. பி.-க்கு மாத்திரம் இந்த ஆண்டு 1963–64-இல் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கனம் மணி அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திருச்சிக்கு மட்டும் எஸ். ஏ. பி.-க்காக 1963–64-இல் ஏழு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நெற்குப்பையில் வீடு கட்டுவதற்காக அதிக விலை கொடுத்து மனை வாங்கியது பற்றி மாதவன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அங்கிருக்கும் ரெவின்யூ அதிகாரியால் மதிப்புப் போடப்பட்டு அந்த மதிப்பின் பேரில் அந்த விலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றிய புகார் அந்த ஊரிலிருந்து வந்தது. கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்வியும் வந்தது. இப்போது அதுபற்றி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. எதற்காக அந்த ரெவின்யூ அதிகாரி இந்த விலையை நிர்ணயம் செய்தார்கள், அதிலே நியாயம் இருக்கிறதா என்பதெல்லாம் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதிலே தவறுதல் இருக்கிறதா இல்லையா என்பதை நான் இப்போது கூற முடியாது. விசாரணை முடிந்த பிறகு நிலை என்ன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியும்.

தீ அணைக்கும் படையை ஆங்காங்கு அமைப்பது பற்றிக் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். தற்போது தீ அணைக்கும் படையை நகர்ப் பிராந்தியங்களிலேதான் அமைத்துக்கொண்டு வருகிறோம். பஞ்சாயத்துக்களில்—பஞ்சாயத்து டவுனாக இருந்தாலும்கூட இப்போது அந்தப் படையை அமைப்பதற்கில்லை. கிராமப் புறங்களிலும் இப்போது தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. தற்போது தீ விபத்தைத் தவிர்க்க ஒரு பயிற்சி கிராம மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. தீ விபத்து ஏற்படவொட்டாமல் கிராம மக்களுக்குப் பயிற்சி அளிக்க எந்த வகையில் கவனம் செலுத்தப்பட வேண்டுமோ அந்த வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.





மதுவிலக்கை மீறுகின்ற குற்றங்களைப் போல், கள்ளக் கடத்தலும் பெரிய குற்றந்தான். அதைப் பற்றிக் கண்டுபிடிப்பதிலே போலீசாருக்கும் கடமை இருக்கிறது. அதற்காகத் தனியாக எக்சைஸ் டிப்பார்ட்மெண்டும் இருக்கிறது. போலீசாரைப் பொறுத்தவரை எவ்வளவோ தூரம் கவனம் செலுத்திக் குற்றங்களைக் கண்டுபிடித்து வருகிறார்கள் என்பதை அப்போதைக்கப்போது பத்திரிகைகளில் வரும் செய்திகளில் இருந்து அங்கத்தினர்கள் உணருவார்கள்.

இரு சாராருக்கிடையே தகராறு ஏற்பட்டு, போலீசார் வழக்குத் தொடரமுற்பட்ட பிறகு 'நாங்கள் சமாதானமாகப் போகிறோம்' என்று சொன்னால் அதைப் போலீசார் ஏற்றுக்கொள்ள முடியாது. வழக்கு என்று போட்ட பிறகு கோர்ட்டுதான் தீர்ப்புச் சொல்ல வேண்டும். வழக்குப் போடுவதற்கு முன்னாலேயே தாங்கள் சமாதானமாகப் போவதாகக் கூறிவிட்டால் போலீசார் ஏற்றுக்கொள்ள முடியும்.

கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் ஸிட்டி, ரூரல், 1-30 p.m.
நகரம், கிராமாந்திரம்—என்று தனிப் பாகுபாடு இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஒன்றும் இல்லை. பெரிய நகரங்களைக் கவனிக்க போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்களேதவிர போலீஸ் அமைப்பைப் பொறுத்தமட்டில் நகரப் போலீஸ், கிராமப் போலீஸ் என்று ஒன்றும் இல்லை. ஸிட்டியில் கமிஷனர் இருக்கிறார். பெரிய இடங்களில் டிஸ்ட்ரிக்ட் சூப்பரின்டென்டெண்ட் ஆப் போலீஸ் இருக்கிறார். அப்படியல்லாது வேறு ஒன்றும் இல்லை. ஹோம் கார்ட்ஸ் படை பற்றி குறிப்பிட்டார்கள். இதில் மக்கள் உற்சாகத்தோடு ஒவ்வொரு மாவட்டத்திலும் சேர்ந்திருப்பதை நானே இரண்டு மூன்று மாவட்டங்களில் கண்டேன். அப் படை நல்ல பயிற்சி பெற்று சீரிய முறையில் இப்போதுள்ள நெருக்கடி நிலைக்கு ஏற்றவாறு போலீஸுக்கு உதவியாகப் பணி புரியும் என்று நான் நம்புகிறேன். இந்த ஹோம் கார்ட்ஸ் படையில் சேருவதற்குப் பல துறைகளில் இருப்பவர்களும், வழக்கறிஞர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், ஆசிரியர்கள் இன்னும் வெவ்வேறு துறைகளில் உள்ளவர்கள், பெண்கள்கூட இதில் சேர்ந்திருக்கிறார்கள். இது உத்தியோகம் இல்லை என்று எடுத்துக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு சம்பளம் இல்லை என்றும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆக நாட்டிற்கு பணியாற்ற வேண்டுமென்று அவர்கள் பயிற்சி பெற உற்சாகத்தோடு முன்வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம்கூட இந்தச் சமயத்தில் நான் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் தைரியமாகச் சொல்ல முடியும், இந்த மன்றத்தின் சார்பாகவும், என் சார்பாகவும், அரசாங்கம் சார்பாகவும் சொல்கிறேன். போலீஸார் இந்த கஷ்ட நிலையை எப்படியோ சமாளித்துச் சீரிய முறையில் மக்களுக்கு உற்சாகத்துடன் பணியாற்றி வருகிறார்கள். அதுவும் அவர்கள் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல்—உயிர்ப்பலிகூட ஏற்படுகிறது—அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். இந்த வெட்டுப்பிரேரணையைக்கூட வற்புறுத்தாமல் எல்லோரும் இந்த மானியத்தை ஏகமனதாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்பி என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI K. A. MATHIALAGAN : Regarding the friction between the taxi-drivers and the Police . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டாக்ஸி டிரைவர்களுக்கும் போலீஸுக்கும் ஆகாது என்றால், போலீஸாரும் டாக்ஸி டிரைவர்களும் விரோதிகள் அல்ல. அவர்களுக்கு "அலர்ஜி" ஒன்றும் இல்லை. டிரைவர்கள் சில சமயங்களில் தவறுதலாக நடக்கிறார்கள் என்றால் அப்போதும் டிரைவர்களுக்குச் சாதகமாகப் பேசுவது மன்ற அங்கத்தினர்களுக்கு அழகு அல்ல. அவர்கள் வந்து ஏதாவது புகார் சொன்னால் உடனே

[திரு. எம். பக்தவத்சலம்] [12th March 1963

அதை எடுத்துக்கொண்டு போலீஸார் டிரைவர்களுக்கு விரோதிகளாக இருக்கிறார்கள், ரிக்ஷாக்காரர்களுக்கு விரோதமாக இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்வது சரி அல்ல. நம்மைப்போன்று போலீஸ்காரர்களும் அவர்கள் சேவையை உணர்வார்கள். ஆனால் டிரைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். சில சமயம் டாக்ஸி டிரைவர்கள் தவறுதலாக நடத்து கொள்கிறார்கள். சுதந்திராக் கட்சி தலைவர்கள் அவர்கள் கூறினார்கள் அந்த டிரைவர்கள் வேகமாக போகிறார்கள் என்று. டிரைவர்கள் தவறு செய்தால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இது மக்கள் உயிரைப்பற்றிய விஷயம். டாக்ஸி டிரைவர்கள் கோபித்துக் கொள்வார்கள் அல்லது ஸ்ட்ரைக் செய்வார்கள் என்று அவர்கள் தவறுதல் செய்தால்கூட அதைப் போலீஸார் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அது நல்லதும் அல்ல. ஆகவே போலீஸுக்கும் டாக்ஸி டிரைவர்களுக்கும் ஒரு தகராறும் இல்லை.

Mr. SPEAKER : The question is—

'That the allotment of Rs. 8,10,79,400 under Demand No. XII—Police be reduced by Rs. 100 '.

The cut motion was put and lost.

Mr. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 8,10,79,400 under Demand No. XII—Police '.

The Demand was put and carried and the Grant was made.

Mr. SPEAKER : The House will now adjourn and meet
1-35 p. m. again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

117. *Notification issued with G.O. Ms. No.* 225, *Public (General-M), dated* 13*th February* 1963 *regarding the use of Tamil as official language in respect of all official communications from certain Government offices with effect on and from* 1*st March* 1963. [*Laid on the table of the House under section* 6 *of the Madras Official Language Act,* 1956 (*Madras Act XXXIX of* 1956).]

118. *Notification issued with G.O. No.* 46, *Revenue, dated* 2*nd January* 1963 *amending the Revenue Department Notification S.R.O. No. A.* 1966 *of* 1959, *dated the* 28*th March* 1959, *published at pages* 488–490 *of Part I of the* Fort St. George Gazette, *dated the* 1*st April* 1959 *relating to the sales of consumer goods in addition to oil produced by Co-operative Societies.* [*Laid on the table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act* 1 *of* 1959).]



12th March 1963]

119. *Notification issued with G.O. Ms. No.* 175, *Rural Development and Local Administration, dated* 22*nd January* 1963 *amending the rules of procedure in regard to transaction of business and conduct of meetings of District Development Councils, published with the Rural Development and Local Administration Detartment Notification S.R.O. No.* 717 *of* 1960, *at page* 691 *of the* Fort St. George Gazette, *dated the* 21*st December* 1960. [*Laid on the table of the House under section* 14 (3) *of the Madras District Development Councils Act.* 1958 (*Madras Act XVIII of* 1958).]

### B. Reports, Notifications and other papers.

* 58. *Speech of the Hon. Minister for Agriculture on Demand Nos. XVI—Agriculture and XXXIX—Capital Outlay on Agriculture.*

---

* Circulated to Members on 9th March 1963.

# INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

SECOND SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

**6th, 7th, 8th, 9th, 11th and 12th March 1963.**

**Volume IX (Nos. 1 to 6).**


PAGES

A

ABDUL KHALEEL, SRI R.—

English Text Books, Government Publication .. .. .. .. 1–5

ACCIDENTS—

Accidents at Railway level crossing .. .. .. .. .. 430–432

Fire .. .. .. .. .. .. .. .. .. .. 329–332

ADMINISTRATION REPORT—

*See* Papers laid on the table of the House—

AGRICULTURE—

Approved nurseries .. .. .. .. .. .. .. .. 335–337

Potato crops, ' Late Blight ' disease .. .. .. .. .. 131–133

ALAGAMUTHU, SRI T. P.—

Budget, 1963–64, Voting—

Agriculture .. .. .. .. .. .. .. ..
Animal Husbandry .. .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading .. .. } 439, 467–468

Fire accidents .. .. .. .. .. .. .. .. 329–332

Handloom Weavers, plight of (C. A.) .. .. .. .. .. 437

Lands (poramboke) assigned to Ramakrishna Home, Thirupparaithurai .. .. .. .. .. .. .. .. .. 415

Text Books, Government Publication .. .. .. .. .. 1–5

Uniforms to students .. .. .. .. .. .. .. 113–114

ALAGIRISWAMY, SRI M.—

Budget for 1963–64,—G.D. .. .. .. .. .. .. 62–64

Voting—

Agriculture .. .. .. .. .. .. .. ..
Animal Husbandry .. .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading .. .. } 462–463

PAGES

A—*cont.*


AMBIKAPATHI, SRI C. M.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 155-7

ANANDAN, SRI L.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 203-4

ANANDANAYAKI, SRIMATHI T. N.—
Budget, 1963-64, Voting—
Agriculture .. .. .. .. .. .. .. ..
Animal Husbandry .. .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. .. ..
Capital Outlay on Schemes of Government T ading .. .. } 499
Elections .. .. .. .. .. .. .. ..
Head of State, Ministers and Head-quarters Staff .. ..
Pensions .. .. .. .. .. .. .. ..
State Legislature .. .. .. .. .. .. .. } 373-6, 379, 380, 382-3
Police .. .. .. .. .. .. .. .. .. 551-3
Central Jail, Madras .. .. .. .. .. .. .. 332
Liberalised Pension Scheme, Government press workers .. .. 505-6

ANGAMUTHU NAICKER, SRI S.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 175-8
Voting—
Police .. .. .. .. .. .. .. .. 542-4

APPAVOO THEVAR, SRI A.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 28-9

ARANGANNAL, SRI RAMA—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. 253-7
Voting—
Police .. .. .. .. .. .. .. .. 529-31

ARUMUGAM, SRI A.—
Budget, for 1963-64, G.D. .. .. .. .. .. .. 94-8

ARUNACHALAM, SRI V.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 74-6

ASSEMBLY CONSTITUENCIES—
See Blocks

ATOMIC POWER—
Atomic Power Plant, location .. .. .. .. .. .. 513
Atomic Power Station, Kalpakkam .. .. .. .. .. 513


B


BALAKRISHNAN, SRI A. G.—
Budget, 1963-64, Voting—
Police .. .. .. .. .. .. .. .. .. 519-21

BASIC EDUCATION—
Working .. .. .. .. .. .. .. .. .. 238-41

BHAKTAVATSALAM, SRI M.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 68, 294-327




PAGES

B—*cont.*


BHAKTAVATSALAM, SRI M.—*cont.*
Voting—
Elections .. .. .. .. .. .. .. .. } 347, 349
Head of State, Ministers and Head-quarters Staff .. .. } 373, 377
Pensions .. .. .. .. .. .. .. .. } 379, 380
State Legislature .. .. .. .. .. .. .. } 397-408
Police .. .. .. .. .. .. .. .. 518-9, 525, 536, 573-80

Gold Control Regulations, plight of goldsmiths (C.A.st.) .. .. 20-22

Point of Information—
State Administration Report and Budget of State Electrical Board, delay in placing on the table of the House .. .. .. 22-23
Report in 'Viduthalai'; (Privilege Matter) .. .. .. .. 517-8

BLOCKS—
Blocks formation, Assembly Constituencies .. .. .. .. 345-6

BOOVARAGHAN, SRI G.—
Budget, 1963-64, Voting—
Elections .. .. .. .. .. .. .. ..
Head of State, Ministers and Head-quarters Staff .. .. ..
Pensions .. .. .. .. .. .. .. ..
State Legislature .. .. .. .. .. .. } 379

BRIDGE(S)—
Marmalong Bridge .. .. .. .. .. .. .. 334

BUSINESS OF THE HOUSE .. .. .. .. .. .. 518


C


CALLING ATTENTION—
Gold Control Regulations, plight of goldsmiths .. .. .. 20-22
Handloom Weavers, plight .. .. .. .. .. .. .. 437-439

CHAIR—
B.O.H. .. .. .. .. .. .. .. .. .. 518
Report in 'Viduthalai' (Privilege Matter) .. .. .. .. 433-7
Rulings and observations—
*Calling Attention Statement*—Immediately after the statement by a Minister, neither questions should be put nor clarification of doubts sought .. .. .. .. .. .. .. .. 21-2
No point of information can be raised on the statement by a Minister in response to a Calling Attention Notice under Rule 41 .. .. .. .. .. .. .. .. .. 439
*Debate*—Chair has discretion to allow a member to interrupt another member's speech on a point of information .. .. 383
Clarification of doubts can be sought only after the Minister finished his reply, and not in the middle .. .. .. 313
Members should confine their remarks to the subject under discussion .. .. .. .. .. .. .. .. .. 25
Reference to pending cases in Law Courts should be avoided .. 534
Reference should not be made to questions disallowed by the Speaker .. .. .. .. .. .. .. .. 373

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and observations—*cont.*

Debate—*cont.*

*Speeches—Time-limit.*—It will be against the rules and regulations for a member to exceed the time allotted to him .. .. 144

*Decorum.*—It is for the Chair to rule whether a particular remark is relevant or irrelevant, and it is not for a member to pass a judgment over that .. .. .. .. .. .. 380

Officers should not be referred to by their names .. .. 536

Members desirous of rising on a point of order, or information or clarification can do so only with the permission of the Chair. 445

Personal reference should be avoided .. .. .. .. .. 377

*Visitors, Gallery*—Visitors in the Visitors' Gallery should maintain silence, as otherwise they will be asked to vacate the Gallery.. 391

Privilege Matter—

*Report of the proceedings of the Assembly in the 'Viduthalai' relating to a question about State Transport*—Ruling reserved for the next day .. .. .. .. .. .. .. .. .. .. 433–437

RULED that there was no *prima facie* case of breach of privilege on the grounds that nothing of material value had been omitted resulting in the creation of a wrong impression, that the publication was not distorted and that the statement need not be given any importance.

RULED that criticising a party could not be held to be objectionable as the path of criticism was a public way. As long as improper motives were not attributed to a Member, the House need not proceed any further. Appealed to the Press to use dignified language and avoid fanciful or irresponsible epithets while publishing proceedings of the House .. .. 516–517

Questions and Answers—

Supplementary Questions—

It is desirable to avoid supplementaries about particular Blocks, when the main question is of a general nature .. .. 330

Supplementaries containing derogatory references to lady Members should be avoided .. .. .. .. .. .. 343

Supplementaries should be specific and not vague .. .. 422

CHEEMAICHAMY, Sri K.—

Budget, 1963–64, Voting—

Agriculture .. .. .. .. .. .. .. .. }
Animal Husbandry .. .. .. .. .. .. .. } 460–462
Capital Outlay on Agriculture .. .. .. .. .. } 495
Capital Outlay on Schemes of Government Trading .. .. }

Emergency search of Communist Party offices by Police .. .. 223–224

Paddy, price fixation .. .. .. .. .. .. .. .. 415–418

CHELLIAH, Sri M.—

Budget, 1963–64, Voting—

Agriculture .. .. .. .. .. .. .. .. }
Animal Husbandry .. .. .. .. .. .. .. } 466–467
Capital Outlay on Agriculture .. .. .. .. .. }
Capital Outlay on Schemes of Government Trading .. .. }



PAGES

C—*cont.*

CHINNAMUNISAMY CHETTY, Sri N.—

Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. 53–54

CHINNARAJE GOUNDER, Sri C. K.—

Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 93–94

CHIRANJEEVULU NAIDU, Sri C.—

Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 245–247

Voting—

Agriculture .. .. .. .. .. .. .. }
Animal Husbandry .. .. .. .. .. .. } 452–454
Capital Outlay on Agriculture .. .. .. .. }
Capital Outlay on Schemes of Government Trading .. }

COLLEGE(S)—

Medical Colleges, Increase in number of seats .. .. .. .. 511

Medical College Students, Interneeship Training .. .. .. 511

COMMITTEE(S)—

Estimates, Report on action by Government on recommendations re—Small-Scale Industries, presentation .. .. .. .. .. 244

State Transport (Nationalised) presentation .. .. .. 244

Lakshmanaswamy Mudaliar Committee, implementation of recommendations .. .. .. .. .. .. .. 514–515

D

DAM(S)—

Madallappallam Dam, Dharmapuri taluk .. .. .. .. 134–5

DHAKSHINAMOORTHY GOUNDER, Sri A. S.—

Budget, 1963–64, Voting—

Elections .. .. .. .. .. .. .. }
Head of State, Ministers and Headquarters Staff .. } 369–372
Pensions .. .. .. .. .. .. .. }
State Legislature .. .. .. .. .. .. }
Police .. .. .. .. .. .. .. .. 560–561

DHANDAYUTHAPANI, Sri M.—

Budget, 1963–64, Voting—

Police .. .. .. .. .. .. .. .. .. 537–538

DHARMALINGAM, Sri A. P.—

Budget, 1963–64, Voting—

Agriculture .. .. .. .. .. .. .. }
Animal Husbandry .. .. .. .. .. .. } 471–473
Capital Outlay on Agriculture .. .. .. .. } 498
Capital Outlay on Schemes of Government Trading .. }

Police .. .. .. .. .. .. .. .. .. 538–540

DURAISWAMY, Sri A.—

Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 196–198

DURAIYARASAN, Sri A.—

Brick Kiln (Electric), Arantangi taluk .. .. .. .. .. 506–7

PAGES

**E**

EDUCATION—
- Interest-free Loan Scheme .. .. .. .. .. .. 427–429
- Rural Service Diploma, Co-operation .. .. .. .. .. 241
- Secondary Education, Pattern of syllabus .. .. .. .. 19–20

EFFIGIES—
- Burial .. .. .. .. .. .. .. .. .. 332–333

ELECTRICITY—
- Power-supply, Pennagaram .. .. .. .. .. .. 419

ELECTRICITY BOARD BUDGET—
- *See* Papers laid on the Table of the House.

ELLAMA NAIDU, Sri V.—
- Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 50–53

ELUMALAI, Sri T. P.—
- Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 257–259

EMERGENCY—
- Communist Party Offices, Search by Police .. .. .. .. 223–224

EXAMINATIONS—
- E.S.L.C. .. .. .. .. .. .. .. .. .. 243–244

**F**

FINANCIAL BUSINESS—
- Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 23–98, 135–220, 245–327
- Voting—
  - Agriculture; Animal Husbandry; Capital Outlay on Agriculture; Capital Outlay on Schemes of Government Trading .. .. 439–500
  - Elections; Head of State, Ministers and Headquarters Staff; Pensions .. .. 347–411
  - Police .. .. .. .. .. .. .. .. .. 518–580
  - State Legislature .. .. .. .. .. .. .. .. 347–411

FISHERIES—
- Development, Norwegian collaboration .. .. .. .. .. 234–238

FOOD ADULTERATION ACT—
- Licence fee .. .. .. .. .. .. .. .. 221, 223

FOODGRAINS—
- Paddy, price fixation .. .. .. .. .. .. .. 415–418

FOREST(S)—
- Farm Forestry Scheme, water facilities .. .. .. .. .. 418–419
- Survey of resources .. .. .. .. .. .. .. 333



PAGES

**F—*cont.***

GANESAN, Sri SAW.—
- Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 261–277
- Voting—
  - Agriculture; Animal Husbandry; Capital Outlay on Agriculture; Capital Outlay on Schemes of Government Trading .. .. 440, 480–483, 494
  - Elections; Head of State, Ministers and Headquarters Staff; Pensions; State Legislature .. .. 348, 392–397, 401, 407
  - Police .. .. .. .. .. .. .. .. .. 547, 561–566, 575

**G**

GOLD CONTROL ORDER—
- Plight of goldsmiths (C.A.) .. .. .. .. .. .. 20–22

GOLDSMITHS—
- Plight due to Gold Control Order (C.A.) .. .. .. .. 20–22

GOMATHI SANKARA DIKSHITHAR, Sri G.—
- Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 64–67
- Voting—
  - Police .. .. .. .. .. .. .. .. .. 528–9

GOVERNMENT OFFICES—
- Supply of paper .. .. .. .. .. .. .. .. 503–5

GOVINDAN, Pulavar K.—
- Bhaktavatsalam Polytechnic, Kancheepuram .. .. .. .. 429–30
- Budget, 1963-64, Voting—
  - Agriculture; Animal Husbandry; Capital Outlay on Agriculture; Capital Outlay on Schemes of Government Trading .. .. 456–457, 492
  - Elections; Head of State, Ministers and Headquarters Staff; Pensions; State Legislature .. .. 372–373
  - Farm Forestry Scheme, water facilities .. .. .. .. 418–9

HAJA SHERIFF, Sri K. S. G.—
- Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. 35–38
- Voting—
  - Police .. .. .. .. .. .. .. .. .. 531–533

HANDLOOM(S)—
- Weavers, plight (C.A.) .. .. .. .. .. .. .. 437–9

PAGES

H

HOSPITAL(S)—
Erskine Government Hospital, Madurai, Neuro-Surgery Unit .. 515-6
Headquarters Hospital, Chingleput .. .. .. .. .. 127-128
Operation Theatres .. .. .. .. .. .. .. 129

I

INAM VILLAGES—
Mitta and Inam Villages, Salem district .. .. .. .. 134

INDUSTRIES—
Brick Kiln (Electric), Arantangi taluk, .. .. .. .. .. 506-7
Cycle Assembly Unit, Salem .. .. .. .. .. .. 513-4
New licences .. .. .. .. .. .. .. .. 420-7
Training Centre for manufacture of glass bangles, Salem .. .. 420

J

JAILS—
Central Jail, Madras .. .. .. .. .. .. .. 332

JAYARAJ, Sri P.—
Budget, 1963-64, Voting—
Agriculture .. .. .. .. .. .. .. } 473-4
Animal Husbandry .. .. .. .. .. .. }
Capital Outlay on Agriculture .. .. .. .. }
Capital Outlay on Schemes of Government Trading .. .. }

JEEVARATHNAM, Sri R.—
Budget, 1963-64, Voting—
Agriculture .. .. .. .. .. .. .. } 457-8
Animal Husbandry .. .. .. .. .. .. }
Capital Outlay on Agriculture .. .. .. .. }
Capital Outlay on Schemes of Government Trading .. .. }

K

KADAMBAVANASUNDARAM, Sri T.—
Yarn, Voluntary Distribution Scheme .. .. .. .. .. 507-10

KAKKAN, Sri P.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 90
Voting—
Agriculture .. .. .. .. .. .. .. } 439
Animal Husbandry .. .. .. .. .. .. } 440-441
Capital Outlay on Agriculture .. .. .. } 444-445
Capital Outlay on Schemes of Government Trading .. } 489-499, 500
Elections .. .. .. .. .. .. .. } 377
Head of State, Ministers and Headquarters Staff .. } 380
Pensions .. .. .. .. .. .. .. }
State Legislature .. .. .. .. .. .. }

KALIAPPA GOUNDER, Sri A. K.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 85-88



PAGES

K—*cont.*

KALYANASUNDARAM, Sri M.—
Atomic Power Plant, location .. .. .. .. .. .. 513
District Board High Schools, administration .. .. .. .. 16-19
Package Scheme, Thanjavur district .. .. .. .. .. 6-9
Secondary Education, pattern of syllabus .. .. .. .. 19-20
Sri Ranganathar Temple, Srirangam .. .. .. .. 114-122
Sugarcane-Cess Fund, amount collected in 1961-62, etc. .. .. 224-227

KAMALANATHAN, Sri M.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. 439
Elections .. .. .. .. .. .. .. } 352-354
Head of State, Ministers and Headquarters Staff .. }
Pensions .. .. .. .. .. .. .. }
State Legislature .. .. .. .. .. .. }

KANCHI MANIMOZHIAR, Sri—
Budget, 1963-64, Voting—
Elections .. .. .. .. .. .. .. } 366-369
Head of State, Ministers and Headquarters Staff .. }
Pensions .. .. .. .. .. .. .. }
State Legislature .. .. .. .. .. .. }

KARCHA GOWDER, Sri T.—
Budget, 1963-64, Voting—
Agriculture .. .. .. .. .. .. .. } 474-5
Animal Husbandry .. .. .. .. .. .. }
Capital Outlay on Agriculture .. .. .. .. }
Capital Outlay on Schemes of Government Trading .. .. }

KARIAMANICKAM AMBALAM, Sri Kr. Rm.—
Budget, 1963-64, G. D. .. .. .. .. .. .. .. 23-28
Voting—
Police .. .. .. .. .. .. .. .. .. 544-547

KARIVENGADAM, Sri M. V.—
Budget, 1963-64, G. D. .. .. .. .. .. .. .. 168-172
G. C. I. M. Medical course, Status of Students after abolition .. 510
Memorials to Patriots .. .. .. .. .. .. .. 123-127
Pension to teachers .. .. .. .. .. .. .. 339-341
Power-Supply, Pennagaram .. .. .. .. .. .. 419

KARUNANITHI, Sri M.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 135-146
Voting—
Agriculture .. .. .. .. .. .. .. } 444, 445
Animal Husbandry .. .. .. .. .. .. } 475-478
Capital Outlay on Agriculture .. .. .. .. }
Capital Outlay on Schemes of Government Trading .. }
Elections .. .. .. .. .. .. .. } 386-391
Head of State, Ministers and Headquarters Staff .. } 401-402
Pensions .. .. .. .. .. .. .. } 406
State Legislature .. .. .. .. .. .. }
Report in 'Viduthalai' (Privilege Matter) .. .. .. .. 435

PAGES

K—*cont.*


KOLANDAIAMMAL, SRIMATHI C.—

Budget, 1963-64, Voting—

Agriculture .. .. .. .. .. .. .. .. } 458-460
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading

Elections .. .. .. .. .. .. .. .. } 363-366
Head of State, Ministers and Headquarters Staff
Pensions
State Legislature

KOSALRAM, SRI K. T.—

Budget, 1963-64, G.D., .. .. .. .. .. .. .. .. 54-59

KOTHANDARAMA BAGAVATHAR, SRI C.—

Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. .. 76-77

KRISHNAMOORTHY, SRI V.—

All-India Service officers and State Government servants, Retirement age .. .. .. .. .. .. .. .. 337-338

Budget, 1963-64, Voting—

Elections .. .. .. .. .. .. .. .. } 376-379, 380-381
Head of State, Ministers and Headquarters Staff
Pensions
State Legislature

Effigies, burial .. .. .. .. .. .. .. .. 332-333
Industries, New licences .. .. .. .. .. .. .. 420-427
Medical Colleges, increase in number of seats .. .. .. 511
Medical College, students. Interneeship Training .. .. .. 511
Panchayat Union works, execution .. .. .. .. .. .. 242-243
Vegetables, high prices .. .. .. .. .. .. .. .. 227-234

KRISHNASAMY NAIDU, SRI R.—

Budget, 1963-64, Voting—

Agriculture .. .. .. .. .. .. .. } 447-450
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading

KULANDAISWAMY GOUNDER, SRI M.—

Budget, 1963-64, G. D. .. .. .. .. .. .. .. 217-220


L


LAKSHMIKANTHAM, SRIMATHI P.K.R.—

Budget, 1963-64, Voting—

Agriculture .. .. .. .. .. .. .. } 468-469
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading

Police .. .. .. .. .. .. .. .. 556-557




PAGES

L—*cont.*


LANDS—

Poramboke lands assigned to Ramakrishna Home, Thirupparaithurai .. .. .. .. .. .. .. .. .. 415

LOANS—

Agricultural Loans for pumpsets .. .. .. .. .. .. .. 346-347


M


MADHAVAN, SRI S.—

Budget, 1963-64, Voting—

Elections .. .. .. .. .. .. .. } 355-360
Head of State, Ministers and Headquarters Staff
Pensions
State Legislature

Police .. .. .. .. .. .. .. .. .. 557-9

Co-operative Printing Press, Ramanathapuram District .. .. 19
Examinations, E.S.L.C. .. .. .. .. .. .. .. 243-244
Fisheries Development, Norwegian collaboration .. .. .. 234-238
Forests, survey of resources .. .. .. .. .. .. .. 333
Gold Control Regulations, plight of goldsmiths (C.A.) .. .. 20
Scholarships (State), Backward communities .. .. .. 9-13

MANI, SRI K.S.—

Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 33-35

Voting—

Agriculture .. .. .. .. .. .. .. } 439, 441-447
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading

MANI, SRI M.S.—

Budget for 1963-64, G.D., .. .. .. .. .. .. .. 67-72

Voting—

Elections .. .. .. .. .. .. .. .. } 348-351
Head of State, Ministers and Headquarters Staff
Pensions
State Legislaure

Police .. .. .. .. .. .. .. .. .. 553-555

MANI, SRI V. S. S.—

Budget, 1963-64, Voting—

Agriculture .. .. .. .. .. .. .. } 464-465
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading

MATHA GOWDER, SRI J.—

Budget, 1963-64, Voting—

Elections .. .. .. .. .. .. .. } 381-384
Head of State, Ministers and Headquarters Staff
Pensions
State Legislature

Police .. .. .. .. .. .. .. .. 547-9

PAGES

M—*cont.*

MATHIALAGAN, SRI K.A.—
Accidents at Railway level crossing .. .. .. .. .. 430-432
Basic Education, working .. .. .. .. .. .. 238-241
Budget, 1963-64, Voting—
Elections .. .. .. .. .. .. .. .. } 348, 384, 386, 408
Head of State, Ministers and Headquarters Staff .. .. ..
Pensions .. .. .. .. .. .. .. .. ..
State Legislature .. .. .. .. .. .. ..
Police .. .. .. .. .. .. .. .. .. 533-537, 574, 579
Education, Interest-free Loan Scheme .. .. .. .. .. 427-429
Lakshmana swamy Mudaliar Committee, Implementation of recommendations .. .. .. .. .. .. .. .. 514-5
Report in 'Viduthalai' (Privilege Matter) .. .. .. .. 433-437
Sanskrit, study in High Schools .. .. .. .. .. .. 13-15
Tuticorin port, development .. .. .. .. .. .. 333-334

MEDICAL—
G.C.I.M. Medical Course, status of students after abolition .. 510

MILLS—
Spinning Mill, Salem .. .. .. .. .. .. .. .. 432-433

MINING —
Diploma .. .. .. .. .. .. .. .. .. .. 429

MOOKIAH THEVAR, SRI K.—
Budget, 1963-64, Voting.—
State Legislature .. .. .. .. .. .. .. .. 347
Water-supply to Chinnalapatti .. .. .. .. .. .. .. 127

MUNU ADHI, SRI.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. .. 178-182
Government Offices, supply of paper .. .. .. .. .. .. 503-5
Headquarters Hospital, Chingleput .. .. .. .. .. .. 127-128
Hospitals, Operation theatres .. .. .. .. .. .. .. 129
Marmalong bridge .. .. .. .. .. .. .. .. 334
Quarry, metal quarried from Pallavaram Hills .. .. .. .. 432
State Transport, long distance Buses— .. .. .. .. .. 511-13

MURUGAIYAN, SRI. P.—
Budget, 1963-64 G.D. .. .. .. .. .. .. .. ..
Voting—
Elections .. .. .. .. .. .. .. .. .. } 88-90
Head of State, Ministers and Headquarters Staff .. .. ..
Pensions .. .. .. .. .. .. .. .. ..
State Legislature .. .. .. .. .. .. .. .. .. 361-363

MUTHUKARUPPANNASWAMI GOUNDER, SRI M.P.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. .. 90-93

MUTHULINGAM, SRI S.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. .. 77-79



PAGES

M—*cont.*

MUTHUVELAPPA GOUNDER, SRI P.K.—
Budget, 1963-64, Voting—
Agriculture .. .. .. .. .. .. .. .. } 465-466
Animal Husbandry .. .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading .. ..

N

NALLAMUTHU, SRI R.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 212-213

NALLASAMY, SRI T. M.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 247-251
Estimates Committee, Report on action by Government on recommendations—*re* :
Small Scale Industries, presentation .. .. .. .. .. 244
State Transport (Nationalised), presentation .. .. .. 244

NANJUNDA RAO, SRI S.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 251-253

NARAYANAN, SRI R.
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 194-196
Panchayat, Agaramsikoor .. .. .. .. .. .. .. 129-130

NARAYANASWAMI PILLAI, SRI K.—
Budget, 1963-64, Voting—
Police .. .. .. .. .. .. .. .. .. 522-23

NATIONAL CADET CORPS.—
Compulsory training for College students .. .. .. .. 335

NEDUNCHEZHIYAN, SRI V.R.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 277-294
Voting—
Agriculture .. .. .. .. .. .. .. .. } 483-488
Animal Husbandry .. .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading .. ..
Elections .. .. .. .. .. .. .. .. } 348, 402, 408-409
Head of State, Ministers and Headquarters Staff .. .. ..
Pensions .. .. .. .. .. .. .. ..
State Legislature .. .. .. .. .. .. ..
Police .. .. .. .. .. .. .. .. .. 566-72
Point of Information—
State Administration Report and Budget of the State Electricity Board, delay in placing on the table of the House. .. .. 22-23
Report in 'Viduthalai' (Privilege Matter) .. .. .. .. 436

PAGES

P

PACKAGE SCHEME—
Thanjavur district .. .. .. .. .. .. .. .. 6-9

PALANI, Sri K.B.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. 38-42

PALANISAMY, Sri K. P.—
Budget for 1963-64, G.D. .. .. .. .. .. .. 30, 32

PALANISWAMY GOUNDER, Sri K.N.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 260-61

Voting—
Agriculture } 454-456
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading

Elections } 351-52
Head of State, Ministers and Headquarters Staff
Pensions
State Legislature

PANCHAYAT—
Agaramsikoor .. .. .. .. .. .. .. .. .. 129-130

PANCHAYAT UNION—
Execution of works .. .. .. .. .. .. .. 242-243

PAPER—
Supply to Government Officers .. .. .. .. .. .. 503-5

PAPERS LAID ON THE TABLE—
Administration Report of Madras State, 1961 .. .. .. .. 328
Agricultural Produce Markets Act, 1959, notification .. .. .. 220, 500
Animal Husbandry Department, Note on policy underlying activities 501
Budget, 1963-64, Voting—
Agriculture and Capital outlay on Agriculture, speech of Minister.. 581
Committee on Estimates, Report on action taken by Government on recommendations—re.—
Small Scale Industries .. .. .. .. .. .. .. 328
State Transport (Nationalised) .. .. .. .. .. 328
District Development Councils Act, 1958, notification .. .. 581
District Municipalities Act, 1920, notification .. .. .. .. 328
Electricity Board Budget and State Administration Report, delay in placing on table of the House .. .. .. .. .. .. 22-23
General Sales-tax Act, 1959, notification .. .. .. .. .. 220, 580
General Sales Tax (Amendment) Bill, 1963 .. .. .. .. 501
General Sales Tax Rules, 1959, notification .. .. .. .. 220
Indian Stamp Rules, 1925, notification .. .. .. .. .. 220
Khadi and Village Industries Board Rules, 1960, notification .. 412
Money Lenders Rules, 1959, notification .. .. .. .. .. 99
Motor Vehicles Taxation Act, 1931, notification .. .. .. 328



PAGES

P—cont.

PAPERS LAID ON THE TABLE—cont.
Muthuchippi Parkal Fishing Rules, 1963 .. .. .. .. 501
Official Language Act, 1956, notification .. .. .. .. 580
Panchayats (Election of Presidents and Vice-Presidents) Rules, 1961, notification .. .. .. .. .. .. .. .. .. 328
State Electricity Board, 34th Annual Administration Report for 1960-61 .. .. .. .. .. .. .. .. .. 501

PARTHASARATHI, Sri K.—
Budget, 1963-64, Voting—
Agriculture } 450-452
Animal Husbandry
Capital outlay on Agriculture
Capital outlay on Schemes of Government Trading

PATRIOTS—
Memorials .. .. .. .. .. .. .. .. 123-127

PENSION—
Liberalised Pension Scheme, Government Press workers .. .. 505-6
Old-age pension to disabled destitutes .. .. .. .. .. 341-343
Teachers .. .. .. .. .. .. .. .. .. .. 339-341

PERIANNAN, Sri V. R.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 60-62

PERUMAL, Sri A.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 198-199

POLYTECHNIC—
Bhaktavatsalam Polytechnic, Kancheepuram .. .. .. .. 429-430

PONNAMMAL, Srimathi A. S.—
Budget, 1963-64, Voting—
Agriculture } 478-479
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading

PONNAPPA NADAR, Sri R.—
Government servants (State), retirement age .. .. .. .. 338-339

PONNUSAMY, Sri S.—
Budget, 1963-64, G. D. .. .. .. .. .. .. .. 46-50

PORT(S)—
Tuticorin Port, development .. .. .. .. .. .. 333-334

PRINTING PRESS—
Co-operative Printing Press, Ramanathapuram district .. .. 19

PRIVILEGE—
Report in 'Viduthalai' .. .. .. .. .. .. .. 433-4378
516-

PAGES

Q

QUARRY—
Metal quarried from Pallavaram Hills .. .. .. .. .. 432

R

RAGHAVA REDDI, Sri A.—
Budget, 1963–64, G. D. .. .. .. .. .. .. .. 153–155

RAJAGOPAL, Sri P.—
Budget, 1963–64, G. D. .. .. .. .. .. .. .. 189–192

RAJANGAM, Sri M.—
Budget, 1963–64, G. D. .. .. .. .. .. .. .. 206–209

RAJARAM, Sri G.—
Budget, 1963–64, G. D. .. .. .. .. .. .. 199–202
Voting—
Elections .. .. .. .. .. .. ..
Head of State, Ministers and Headquarters staff ..
Pensions .. .. .. .. .. .. .. ..
State Legislature .. .. .. .. .. .. .. } 354–55
Police .. .. .. .. .. .. .. .. .. 540–42

RAJATHI KUNCHITHAPATHAM, Srimathi—
Budget, 1963–64, G. D. .. .. .. .. .. .. .. 146–153
Elections .. .. .. .. .. .. ..
Head of State, Ministers and Head-quarters staff .. ..
Pensions .. .. .. .. .. .. .. ..
State Legislature .. .. .. .. .. .. .. } 391–392
Food Adulteration Act, Licence fee .. .. .. .. .. 221–223

RAJENDRAN, Sri S. S.—
Budget, 1963–64, G. D. .. .. .. .. .. .. 42–46

RAMACHANDRA REDDY, Sri N—
Budget, 1963–64,—G. D. .. .. .. .. .. .. 213–215

RAMAKRISHNA HOME—
Thirupparaithurai, Assignment of poramboke lands .. .. .. 415

RAMAKRISHNA NAIDU, Sri A. L.—
Budget, 1963–64, G. D. .. .. .. .. .. .. .. 172–175

RAMASAMI, Sri S.—
Budget, 1963–64, Voting—
Police .. .. .. .. .. .. .. .. .. .. 519

RAMALINGAM, Sri S.—
Budget, 1963–64, G. D. .. .. .. .. .. .. .. 72–74

RANGASAMY, Sri R.—
Budget, 1963–64, Voting—
Agriculture .. .. .. .. .. .. ..
Animal Husbandry .. .. .. .. .. ..
Capital Outlay on Agriculture .. .. .. ..
Capital Outlay on Schemes of Government Trading .. } 480



PAGES

R—*cont.*

RANGASAMY, Sri R)—*cont.*
Budget, 1963–64—Voting—*cont.*
Elections .. .. .. .. .. .. .. ..
Head of State, Ministers and Head quarters staff .. ..
Pensions .. .. .. .. .. .. .. ..
State Legislature .. .. .. .. .. .. } 360–361
Police .. .. .. .. .. .. .. .. 556

RETIREMENT AGE—
*See* Services

S

SADASIVAM, Sri S.—
Budget, 1963–64, G. D. .. .. .. .. .. .. .. 192–194

SAGO—
Laboratory, Salem district .. .. .. .. .. .. 433

SAMPANGHI, Sri R.—
Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 82–84
Voting—
Police .. .. .. .. .. .. .. .. .. 549–551

SANKARAN, Sri V.—
Atomic Power Station, Kalpakkam .. .. .. .. .. 513
Erskine Government Hospital, Madurai, Neuro-Surgery Unit .. 515–6
Fisheries Development, Norwegian collaboration .. .. .. 234–238
Government servants (State), retirement age .. .. .. 338–339
High Schools, re-introduction of Forms .. .. .. .. 15
Madurai University, establishment .. .. .. .. .. 343–345
Mining, Diploma .. .. .. .. .. .. .. .. 429
N.C.C., Compulsory training for College students .. .. .. 335
Potatoe crops in Nilgiris district 'Late Blight' disease .. .. 131–133

SANSKRIT—
Study in High Schools.. .. .. .. .. .. .. 13–15

SASIVARNA THEVAR, Sri T.L.—
Budet, 1963-64, Voting—
Police .. .. .. .. .. .. .. .. 523–6

SCHOLARSHIPS—
State Scholarships, backward communities .. .. .. .. 9–13

SCHOOL (S)—
Adult Schools, functioning .. .. .. .. .. .. 15–16
District Board High Schools, administration .. .. .. .. 16–19
High Schools, re-introduction of Forms .. .. .. .. 15

SELVARAJAN, Sri M. S.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. 157–162

PAGES

S—*cont.*

SENGALIAPPAN Sri R.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 215–217

SENGOTTUVELU, Sri N. P.—
Cycle Assembly unit, Salem .. .. .. .. .. .. 513–514
Drinking Water-Supply, Rasipuram .. .. .. .. .. 244
Industries, Training, Centre for manufacture of glass bangles, Salem. 429
Rural Service Diploma Co-operation .. .. .. .. .. 241

SERVICES.—
All-India Service Officers and State Government Servants, retirement age .. .. .. .. .. .. .. .. .. 337–338
Government servants, retirement age .. .. .. .. .. 338–339

SIVASUBRAMANIAM, Sri S.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. .. 185–188

SRINIVASAN, Sri C.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. .. 79–82

STATE TRANSPORT—
Long distance buses .. .. .. .. .. .. .. .. 511–13

STUDENTS—
Uniforms .. .. .. .. .. .. .. .. .. 113–114

SUBBIAH, Sri A.K.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. .. 162–165

SUBBIAH MUDALIAR, Sri A.R.—
Budget, 1963-64, Voting—
Agriculture
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading .. } 499–471

SUBRAMANIA CHETTIAR, Sri N.—
Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. .. 59–60

SUGAR-CANE CESS FUND—
Amount collected in 1961–62, etc. .. .. .. .. .. .. 224–227

SWAMIDHAS, Sri A.—
Budget, 1963-64, Voting—
Police .. .. .. .. .. .. .. .. .. 526–8

T

TEACHERS.—
Pension .. .. .. .. .. .. .. .. .. 339–341
Training, age limit .. .. .. .. .. .. .. .. 242

TEMPLE—
Sri Ranganathar, Srirangam .. .. .. .. .. .. .. 114–122



PAGES

T—*cont.*

TEXT BOOKS.—
Government Publication .. .. .. .. .. .. .. .. 1–5

THANGAVELU, Sri R.—
Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 209–212

THIAGRAJAN, Sri A.—
Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 204–206

THIRUVENGADAM, Sri K.—
Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 182–185

U

UNIVERSITY—
Madurai University, establishment .. .. .. .. .. 343–345

URKAVALAN, Sri P.—
Budget, 1963–64, G.D. .. .. .. .. .. .. .. 165–167

V

VEERAPPA CHETTIAR, Sri R. S.—
Adult Schools, functioning .. .. .. .. .. .. .. 15–16
Agricultural loans for pumpsets .. .. .. .. .. .. 346–347
Approved nurseries .. .. .. .. .. .. .. 335–337
Blocks formation, Assembly Constituencies .. .. .. 345–346
Budget, 1963–64, Voting—
Police .. .. .. .. .. .. .. .. .. 559–60
Education, Interest free Loan Scheme .. .. .. .. 427–429
Madallappallam Dam, Dharmapuri taluk .. .. .. .. .. 134–135
Mitta and Inam Villages, Salem district .. .. .. .. .. 134
Pension, old age to disabled destitutes .. .. .. .. .. 341–343
Sago Laboratory, Salem district .. .. .. .. .. .. 433
Spinning Mill, Salem .. .. .. .. .. .. .. 432–433
Teachers Training, age limit .. .. .. .. .. .. 242

VEGETABLES—
High prices .. .. .. .. .. .. .. .. .. .. 227–234

VENKATARAMAN, Sri R.—
Budget, 1963–64, Voting—
Agriculture
Animal Husbandry
Capital Outlay on Agriculture
Capital Outlay on Schemes of Government Trading .. .. } 446–459
Handloom Weavers, plight (C.A. St.) .. .. .. .. 437–439

PAGE

V—*cont.*

VENKATARAMAN, SRI R.—*cont.*

Budget, 1963-64—Voting—*cont.*

Point of Information—

State Administration Report and Budget of State Electricity Board, delay in placing on the Table of the House .. .. 22–23

Report in 'Viduthalai' (Privilege Matter) .. .. .. .. 435–436

VENKIDUSAMY GOUNDER, SRI C.—

Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 259–260

VENUGOPAL KRISHNASWAMI, SRI N.V.—

Budget, 1963-64, G.D. .. .. .. .. .. .. .. 167–168

W

WATER-SUPPLY—

Chinnalapatti .. .. .. .. .. .. .. .. 127

Drinking water-supply, Rasipuram .. .. .. .. .. 244

Y

YARN—

Voluntary Distribution Scheme .. .. .. .. .. .. .. 507–10

137881